THE
WAR IN EUROPE
ITS HISTORY AND PROGRESS
IN TAMIL

T.6613



Published by
THE SWADESAMITRAN OFFICE,
MADRAS.

ஐரோப்பிய
யுத்த சரித்திரம்.

அதன் வரலாறும் தடவடிக்கைகளும்,



அநேக சித்திரப்படங்களுடன்


சென்னை சுதேசமித்திரன் ஆபீஸில்

பிரசுரிக்கப்பட்டது.


1914.

(Copy Right Registered.)


பாகம் 1.] விலை அணா 12.]




(9) பிரிட்டிஷ் சப் மரீன் கப்பல் (இது முழுகிச் செல்லும் கப்பல். ஜலத்தில் முழுகாமல் மேல் மட்டத்தில் வேகமாய்ச் சென்றுகொண் டிருக்கிறது)



(10) 12 அங்குல பீரங்கி சுடப்படுகிறது.



(11) யுத்தகப்பலின் மேடையிலிருந்து 'டார்பிடோ' வெடியை பிரயோகித்தல்.



(12) சப்மரின் கப்பல் ஜலத்தில் முழுகிச் செல்வதை காண்பிக்கிறது

முகவுரை.

ஆதிகால முதல் நம்மிந்தியா உலகத்து மற்ற பாகங்களினின்று தனிப்பட்டிருக்காமல் அவைகளுடன் பலவழிகளில் சம்பந்தப்பட்டிருந்தது. இக்காலத்திலுங்கூட அது அந்நியதேசங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதை ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு இதுவரையில் தாமஸ்பட்டிருக்கிறது. 10 வருஷங்களுக்கு முன்னுல் ஜப்பான் ருஷியாவோடு யுத்தஞ்செய்தபோது, நம்தேசத்தில் முதன் முதலாக நூதன விளர்ச்சி தோன்றிற்று; ஆசியா கண்டத்திலுள்ள ஒரு ராஜ்யம் ஒரு ஐரோப்பிய வல்லசை யுத்தத்தில் முறியடிக்கும் வன்மை பெற்றிருக்கிறதை ஜனங்கள் கவனித்துத் தங்களுடைய நிலைமையைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினர்கள். அது முதல் ஜனங்கள் அந்நிய விவகாரங்களில் அக்கரை காட்ட ஆரம்பித்தார்கள். அவைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அப்போதுண்டான பிறகு பல காரணங்களால் வர வர அதிகப்பட்டு, துருக்கி பால்கன் யுத்தம் நடைபெற்றபோது, அந்நிய விவகாரங்களில் நாம் நேராக சம்பந்தப்பட்டிருக்கிறோமென்பது தெளிவாய்த் தோன்றிற்று. நம் தேசத்துக்கும் ஐரோப்பிய தேசங்களுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறதென்று தெரியவந்தது. இப்போது நடை பெற்று வருகிற மகா யுத்தத்தில் 6000 மைல்களுக்கப்பாலுள்ள கிரேட்பிரிட்டனோடு இந்தியா எவ்வாறு பிணைக்கப்பட்டிருக்கிறதென்பதும், பிரிட்டிஷாருடைய லாப நஷ்டங்களால் நாம் பாதிக்கப்படுவோமென்பதும், மகம்மதியர் இந்துக்கள் முதலிய எல்லா இந்தியரும் தெளிவாய் அறிந்துகொண்டிருக்கிறார்கள். நம் தேசத்துச் சரித்திரத்தைச் சிறப்பாய் அலங்கரித்துப் பேர்பெற்ற இந்தியத் துருப்புகள் இப்போது ஐரோப்பாவுக்குச் சென்று நேச கவர்ன்மெண்டுகளுக்கு நேராக உதவி செய்து, யுத்த களங்களில் நம் வீரத்தைக் காத்து வருவதைப் பார்க்கிறோம். கோடிக் கணக்காயுள்ள இந்தியர்கள் தைரியத்தாலும் தேசாபிமானத்தாலும் ஐரோப்பிய யுத்தத்துக்குச் சகாயஞ் செய்து வருவதையும் நாம் அனுவரும் பார்த்து வருகிறோம். சத்துருவினுடைய யுத்த கப்பல்களின் சேஷ்டையாலும், வியாபாரந் தடைப்பட்டு வருவதாலும் உண்டாகிற பலன்களை நாம் தினவாழ்க்கையில் அனுபோகப்பட்டு வருகிறோம். ஜீவனோபாயமின்றிக் கஷ்டப்படுகிறவர்களும் வியாபாரிகளும், தொழிலாளிகளும் அவற்றை உணர்வதோடு, ராஜாங்கபாரத்தை வகித்தவர்களும், பொதுவாய் எல்லா அறிவாளிகளும் யுத்தத்தின் போக்கைக்

கவலையாய்ப் பார்த்து வருகிறார்கள். ஆகையால் ஐரோப்பிய யுத்தத்தின் விவரங்களை இந்தியரனைவரும் வெகு ஆவலாய்க் கவனித்து வருவதில் யாதொரு ஆச்சரியமுமில்லை.

நம் தேசத்துக்கும் உலகத்து மற்ற பாகங்களுக்குமுள்ள சம்பந்தம் இந்த மகா யுத்தத்தால், இந்தியருக்கு இப்போது நன்றாய் விளங்குகிறதாயினும், சமாதான காலங்களில் நம் தேசத்துப் பொருளாதார நிலைமையும், வியாபாரம் கைத் தொழில் • இவைகளின் விருத்தியும் இதர தேசங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதைக் கவனிக்க சமயம் வாய்க்காமலில்லை. பிரான்ஸ் தேசத்திலுள்ள செல்வம் படைத்த ஜனங்கள் இந்தியாவிலுள்ள மணிலாக் கோட்டையை விரும்பி வாங்கியதால், இந்திய ஜனங்களுக்கு அவசியமான உணவுப் பொருள்களின் விலைவாசிகள் பாதகப்பட்டதை அநேகர் கவனித்திருக்கிறார்கள். இக்காலத்து நாகரீக விருத்தியானும், போக்கு வரத்து சாதனங்களானும், வேவ்வேறு இடமும் காலமும் வித்தியாசத்தை உண்டுபண்ணுமல், பண்டங்களை வாங்குவோரும் விற்போரும் நேராக வந்து கூடினாற்போல உலக முழுவதும் ஒரே விஸ்தாரமான வியாபார ஸ்தலமாய் மாறியிருக்கின்றது. அதேமாதிரி மற்ற உலக விவகாரங்களில் எல்லா தேசங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய யுத்தத்தின் விவரங்களை அறியவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிருந்தாலும், உலக விவகார மனிதையும் அறிய வேண்டுமென்ற ஆவல் நம்மவர்களுள் இன்னும் பொதுவாய்ப் பரவவில்லை. ஆனால் இதீரட் பிரிட்டனுடன் நாம் பிணைக்கப்பட்டிருப்பதால், நம் நிலைமையை நாம் அறிந்து விருத்தி செய்வதற்கு பிரிட்டனுடைய விவகாரங்களைச் செவ்வையாய்த் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இங்கிலாந்தில் தலைமை ஸ்தானத்தைப் பெற்று உலக முழுவதும் பரவியிருக்கிறபடியால், உலக விவகாரங்களனைத்தையும் நாம் அறிய வேண்டியது அவசியமெனப் புலப்படும். ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தின் இளவரசரை ஒரு லெர்விய தேசத்தான் கொலை செய்து விட்டபடியால், இதீரட் பிரிட்டன் யுத்தத்துக்குச் செல்லவும் நம் மிகுதியார்கள் போர்க்களத்தை உற்சாகமாய் நாடிச் செல்லவும் நேர்ந்திருக்கிறது ஆச்சரிய மெனத்தோன்றலாம். உண்மையில், உலக விவகாரங்களை அறிந்தவர்களுக்கு அவ்வாறு தோன்றுதல் தோடு, இம்மாதிரியான மகா யுத்தத்தை அவர்கள் எதிர்பார்த்து வந்தார்களென்றே சொல்ல வேண்டும்.

இந்த 'ஐரோப்பிய யுத்த சரித்திரம்'' என்ற புஸ்தகத்தில் அந்த சரித்திரத்தைச் சொல்லி, உலக விவகாரங்களின் சம்பந்தத்தை விளக்க முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. இந்த

மகா யுத்தத்தின் காரணங்களையும் விவரங்களையும் அறியவேண்டு மென்று பொது ஜனங்களுக்குள் மிகுந்த ஆவல் உண்டாயிருந்த தாயினும் அவ்வாறு அறியவேண்டியது அவசியமாகு மென்றும் அது நமது கடமை யென்றும் நம்மவரில் மிகவும் சிலரே உணர்ந் திருக்கிறார்கள். ஜனங்களின் நன்மையைக் கோரும் அனைவரும் அவ்வாறே அறிய வேண்டும். ஜன சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் அந்த அக்கரை கொண்டிருக்க வேண்டும். அதிகம் பேர் சேர்ந்து பொதுவான அக்கரைகளை மேற் கொண்டு அவைகளால் கட்டுப்பட்டிருந்தால்தான் அவர்கள் உண்மையான ஜன சமூகமா வார்கள். ஜன சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் பொது நன்மையில் அக்கரை கொண்டாலல்லவோ சமூக முழுவதும் விருத்தி யடையும்? அவ்வாறு அக்கரை கொண்டவர்களும் கொள்ளாதவர்களும் விருத்திக்குற்ற சின்னங்களைச் சீக்கிரத்தில் எதிர்பார்த்து ஏமாற்ற மடைகிறார்கள். ஒரு மனிதனுடைய விவகாரத்தில் இன்று செய்த காரியத்தற்குப் பல வருஷங்களுக்குப் பிறகு பிரதி பலனை எதிர் பார்க்கவேண்டி யிருப்பதுபோல், ஜன சமூகத்தின் வாழ்க்கையில் ஒரு தலைமுறைசெய்கிற காரியங்களின் பலனை மறு தலைமுறை அனுபவிப்பதே அரிதாகி, அந்த பலனைப் பெறுவதற்கு நூற்றாண்டு கணக்காகத் தாமதப்படுவது இயல்பே. ஜனசமூகத்தின் ஒழுங்குகளிலுள்ளதன் அங்கத்தினர் நீதி நெறியைப் பின் பற்றுவதும் அதனால் உண்டாகும் பலன்களை அனுபவிப்பதும், அமைதியாய் வாழ்வதும் சாத்திய மாகின்றன. ஜனங்கள் அவ்வாறு பயன் பெறும்போது அந்த சமூகத்தை விருத்திசெய்யும் பொறுப்பையும் ஏற்கத் தயாராயிருக்கவேண்டு மென்பதை அதிகர் அறிவதில்லை. இந்த யுத்த சரித்திரத்தைப் படிப்பதால், உலக விவகாரங்களைச் செவ்வையாய் அறியவேண்டு மென்றும் அவ்வாறு அறிய வேண்டியது கடமையாகுமென்றும் படிப்போர் மனதில் சிறந்த நோக்கங்கள் உண்டாகுமானால், இப்புத்தகத்தை எழுதியதற்கு அதுவே போதுமான கைம்மாறாக மதிக்கப்படும். நம்முன்னோர்கள் வாழ்ந்த இப்புண்ணிய பூமி மறுபடியும் உன்னத நிலைமைக்கு வளர்ந்தோங்கி, பூர்வீகப் பெருமையைவிட மேன்மை பெற்று பிரகாசித்து, உலகத்துக்கு ஞானதீபமாக விளங்கவேண்டு மென்ற ஒரே விருப்பங்கொண்டு இப்புத்தகம் எழுதப்பட்டிருக் கிறது.

இப்போது நடைபெற்றுவருகிற மகா யுத்தத்தின் காரணங்க ளைப் பற்றி இப் புஸ்தகத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கி றது. ஒரு ராஜகுடும்பத்தவர் கொலை செய்யப்பட்ட பழியைத் தீர்ப்ப தற்காக இந்த மகாயுத்தம் செய்யப்பட்டு வருகிறதென்றும், மகுடா திபதிகளுக்குள் தோன்றிய விரோத உணர்ச்சிகளே முன்னிட்டுஜோ

ப்பிய ஜனங்கள் போர்க்களத்தில் மடிகிறார்களென்றும் நிகழ்கிறது பிசகு. அந்தந்த தேசத்து ஜனங்களுக்குள் அநேக வருஷங்களாய் பலமான உணர்ச்சிகள்தோன்றி அவைகள் இச்சமயத்தில் அடங்காமல் பொங்கிவிட்டதால் இந்த மகா யுத்தம் கிளம்பியிருக்கின்றது. சென்ற நூற்றாண்டில் ஆரம்பமாகிய விரோத உணர்ச்சிகள் தொடர்ச்சியாய் இதுவரையில் வளர்ந்துவந்த விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் 1815-ம் வருஷத்தில் பிரஞ்சு சக்கரவர்த்தியாகிய நேப்போலியனுடைய ஆட்சி முடிந்தவுடன் எல்லாத் தேசங்களிலும் நூதனகிளர்ச்சி யுண்டாகி அவைகள் கீழ்க்கிரமத்தில் இப்போதுள்ளபடி உருக்கொண்டன. ஜெர்மன் ஏகாதிபத்தியம் நிர்மாணிக்கப்பட்டபோது வல்லரசுகளுக்குள் போட்டி செய்யும் உணர்ச்சி தோன்றி அது கடைசியில் விரோதத்தைக் கொண்டுவிட்டது.

இவ்விஷயங்களை சரித்திர பூர்வமாய்விளக்கி, ஐரோப்பிய தேசங்களின் பரஸ்பர சம்பந்தத்தைப்பற்றிய விவகாரங்களை இதில் எடுத்துச்சொல்லியிருக்கிறது. சென்ற நூறு வருஷங்களாக நடந்த சரித்திரத்தை இச்சிறு புத்தகத்தில் அடக்க முயற்சிசெய்யும்போது, விஷயங்களைச் சுருக்கமாய்ச் சொல்ல வேண்டியதின் அவசியம் புலப்படும்; ஆயினும் படிப்பில் பிரியங்கொண்ட சாதாரண ஜனங்களும் அறிந்து கொள்ளுமாறு தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் ஐரோப்பாவின் 100 வருஷத்துச் சரித்திரமும் இதில் அடங்கியிருக்கிறதென்று நினைக்கக்கூடாது. ஒரு தேசத்துச் சரித்திரத்தில், ராஜாங்க ஸ்தாபனங்களைப் பற்றிச்சொல்லும் பாகமிருக்கிறது; ராஜாங்க சம்பவங்களை விவரமாய்க் கூறும் பாகமுமிருக்கிறது; ஜன சமுகத்தின் நிலைமையைப் பற்றிச் சொல்லும்பாகமுமிருக்கிறது; பொருளாதார நிலைமைபைப்பற்றி விவகரிக்கும் பாகமுமிருக்கிறது. இவைகளைப்பற்றி இந்த புத்தகத்தில் பிரஸ்தாபிப்பது நோக்கமல்ல. பல தேச சம்பந்தத்தைப் பற்றிய சரித்திரம் மாத்திரம் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய சரித்திரத்தின் மிகவும் கடினமான பாகத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறபடியால், அதை எவ்வளவு தெளிவாக எழுதினாலும் அவ்விஷயங்களைப் படிப்பதில் பழக்கமில்லாதவர்கள் ஊன்றி வாசிப்பது அவசியமென்று இங்கு வற்புறுத்த வேண்டும்.

யுத்தம் ஆரம்பமாவதற்குமுன், வல்லரசுகளுக்குள் நடந்த கடிதப்போக்குவரத்தைப்படிப்பதற்கு அநேகர் விரோஷப்பிரியங் கொள்வார்களென்று எண்ணி அது 10-வது அத்தியாயத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால், யுத்தம் தொடங்குவதற்கு முன்னிருந்த வல்லரசுகளின் மனநிலைமையையும், யுத்தத்தை ஆரம்பித்ததற்கு வல்லரசுகள் ஏற்றுக்கொண்டபொறுப்பையும் அறிந்து கொள்

ளலாம். அந்த அத்தியாயத்தில், ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு, ஸைர்வீய கவர்ன்மெண்ட்டுக்கு அனுப்பிய இறுதிக் கடிதம் முழுவதும், அதற்கு ஸைர்வீய கவர்ன்மெண்ட்டு அனுப்பிய பதில் கடிதம் முழுவதும் மொழி பெயர்க்கப்பட் டிருக்கின்றது; அந்த கடிதங்களின் முழு விவரங்களும் வெளியாவது இதுதான் முதல் தடவை என்று நம்புகிறோம். இக்காலத்து கவர்ன்மெண்ட்டு அனுப்புகிற இறுதிக் கடிதத்தின் தன்மையை அறிஞர்கள் அறிய விரும்புவார்களென்று நினைத்து அது முற்றிலும் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது. அந்த அத்தியாயத்திலுள்ள விஷயங்கள், பிரிட்டிஷ் ஜெர்மன் கவர்ன்மெண்ட்டுகளும், ஆக்ஸ்பர்ட் கலாசாலையைச் சேர்ந்த சரித்திர சங்கத்தினரும் வெளிபிட்டிருக்கிற பிரசுரங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட் டிருக்கின்றன.

யுத்த சரித்திரத்தின் முதல் பாகம் ஆரம்பத்தில் எதிர் பார்த்தபடி 100 பக்கங்களுக்குள் அடங்காமற்போனதும், அதற்காக மிகவும் அருமையான விஷயங்களைச் சொல்லாமல் விட்டுவிட மனம் வரவில்லை; அவைகளை இப்போது விவரமாய்ச் சொல்லத் தவறி விட்டால் பிறகு அவைகளைப் பற்றி விஸ்தரிக்க சமயம் எப்போது வாய்க்குமோ அறியக்கூடவில்லை; ஆகையால் இந்த பாகம் சற்று பெரிதாயிருக்கிறது; ஆயினும் அதன் விலை உயர்த்தப்படவில்லை.

கடைசி அத்தியாயத்தில் கடற்படையைப்பற்றிச் சிறிது சொல்லி நிறுத்தப்பட் டிருக்கிறது; யுத்த கப்பல்களைப் பற்றிய விவரங்கள் விஸ்தாரமாய் எழுதப்பட் டிருக்கிறபடியால் அவை யனைத்தையும் இதில் சேர்ப்பது சாத்தியமல்ல.

இப்புத்தகத்தில் உயர்ந்த சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. யுத்த கப்பல்களைப்பற்றி இதில் சேர்க்கப்பட் டிருக்கிற படங்களின் விவரம் இரண்டாம்பாகத்தில் சொல்லப்படும். சித்திரப் படங்களின் விவரங்களை பொருளடக்கத்தில் பார்த்துக்கொள்ளலாம். புத்தகத்திலுள்ள விஷயங்களைத் தெளிவாய் அறிந்துகொள்வதற்கு பூகோளப் படங்களும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. அவைகளைத் தேவையானபோதெல்லாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

தி. சு. விசுவநாதன்,

மானேஜிங் ப்ரொப்ரைட்டர்,

15-12-14. சுதேசமித்திரன் ஆபீஸ்.

பொருளடக்கம்.

1-வது அத்தியாயம்

பக்கம்.

ஐரோப்பாவில் புதியகாலந் தோன்றுவது:—சுதந்தரப்பிரியம்—ஒற்றுணர்ச்சி—ஜாதீய உணர்ச்சி—பிரான்ஸில் ராஜாங்கப் புரட்சி ... 5

2-வது அத்தியாயம்.

ஜர்மன் ஏகாதிபத்தியத்தின் பிறப்பு:—அக்காலத்தில் ஜர்மனியிருந்த நிலைமை — 'கவுன்ட்வான் பிஸ்மார்க்'— பிரவித்திபெற்ற ராஜதந்திரி—டென்மார்க் தேசத்துடன் யுத்தம்—ஆஸ்டிரியாவுடன் யுத்தம்—பிரான்ஸுடன் யுத்தம்—பிரஞ்சுக்காரர் விடாமுயற்சியுடன் யுத்தஞ் செய்தல்—ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஸ்தாபிக்கப்பட்டது... 18

3-வது அத்தியாயம்.

இடாலி தேசம் ஒருமைப்பட்ட ஆச்சரியம்:—இடாலி தேசம் பிளவுபட்டிருந்த நிலைமை—மன்னர்களின் கொடுங்கோன்மை—ஜனங்களின் மனநிலை—இடாலியரின் கலகம்—உண்மையானதேசாபிமானிகள்—இடாலியருக்காக ஸர்டினிய அரசர் செய்த யுத்தங்கள்—புதிய ஸர்டினிய அரசரின் முயற்சிகள்—இடாலியருக்கு பிரஞ்சு சக்ரவர்த்தி செய்த உதவி—இடாலியரனைவரும் ஒரு ஜனமானுர்கள்—ரோம் நகரம் சேர்த்துக்கொள்ளப்பட்டது—வல்லரசுகளுக்குள் ஆரூவதாகக் கருதப்படுகிறது. ... 31

4-வது அத்தியாயம்.

ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தில் மாறுதல்கள்:—1848-ம் வருஷத்தில் உண்டான கலகங்கள்—ஹங்கேரியரின் கலகம்—கிரிமியா யுத்தத்தில் ஆஸ்டிரியாவின் நடவடிக்கை—ஜெர்மனியிலும் இடாலியிலும் இருந்த அதிகாரத்தை இழந்துவிட்டது. ஹங்கேரிய நாடு சுயாட்சி பெற்றது. ... 38

5-வது அத்தியாயம்.

ஜர்மன் ஏகாதிபத்தியம் வளர்ந்தோங்கிய சிறப்பு:—ராஜதந்திரியின் முக்கியநோக்கம்—ஆஸ்டிரியாவினிடத்தில் பகுபாதம்—ருஷியாவின் மனநிலை—பால்கன் நாடுகளின் விவகாரங்களில் ருஷியாவும் ஆஸ்டிரியாவும் பிரவேசித்தல்—ஜெர்மனி ஆஸ்டிரியாவுடன் செய்துகொண்ட இரகஸ்ய உடன்படிக்கை—ஜெர்மனி இடாலியுடன் செய்துகொண்ட உடன்படிக்கை—ராஜதந்திரம் பூரண பிரகாசம் பெற்றது—மறுபடியும் பால்கன் நாடுகளில் தொந்தரவு—ருஷியாவின் கொள்கையில் மாறுதல் ... 49

6-வது அத்தியாயம். பக்கம்.

ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் செல்வச்செருக்கும் ராணுவக் கோழைப்பும்—வில்லியம்சக்ரவர்த்தி—ராஜதந்திரியில்லாத ராஜாங்கம்—அந்நிய விவகாரங்களில் ஜெர்மனியின் புதிய கொள்கை—ஆசியா கண்டத்தில் ஜெர்மனியின் நடவடிக்கை—துருக்கியில் ஜெர்மனியின் நடவடிக்கை—ருஷியாவுக்கு ஆசியாகண்டத்தில் கேர்ந்த ஆபத்து—ருஷியாவும் இங்கிலாந்தும் உடன்படிக்கை செய்துகொண்டன—ஜெர்மனியின் நிலைமை பலஹீனப்பட்டது ... 58

7-வது அத்தியாயம்.

கிரேட்பிரிட்டனும் ஜேர்மனியும் செய்த போட்டி:—பிரிட்டிஷாருடைய தேச அமைப்பில் ஓர் விசேஷம்—அக்நியரின் படை யெடுப்புகள் பயன்படவில்லை—கடற்படையில் பிரிட்டனுக்கு இருக்கிற அக்கரை—கடற்படை விஷயமாய் ஜெர்மனியின் கொள்கை—ஐரோப்பிய கடல்களில் பிரிட்டிஷாரின் நிலைமை பலப்பட்டது—ஆசியா கண்டத்தில் புதிய ஏற்பாடுகள்—ஜெர்மனியின் நோக்கம் பயன்படவில்லை. ... 72

8-வது அத்தியாயம்.

பால்கன் நாடுகளில் நடந்த யுத்தங்களின் பலன்கள்:—துருக்கியின் நிலைமை—சிறு துருக்கியரின் ராஜாங்கப் புரட்சி—சிறு துருக்கிக் கட்சியாரின் கொள்கை—தாராளக் கட்சியாரின் கொள்கை—பால்கன் பிரதேசத்தில் நடந்த யுத்தங்கள்—ஆஸ்டிரியாவும் இடாலியும் வேறுபட்டன—துருக்கிக்கு நேர்ந்த மனஸ்தாபம்—பால்கன் நாடுகளில் உண்டான விரோத உணர்ச்சி ... 81

9-வது அத்தியாயம்.

வல்லரசுகளுக்குள் யுத்த முயற்சிகள்—ருஷியா—ஜெர்மனி—ஆஸ்டிரியா—பிரான்ஸ்—கிரேட்பிரிட்டன் ... 87

10-வது அத்தியாயம்.

யுத்த மேகங்கள் முடுகின்றன:—ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்கு மிருந்த மனஸ்தாபம்—ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டின் இறுதிக் கடிதம்—ஸெர்விய கவர்ன்மெண்ட்டின் பதில்—ஸெர்வியாவின் சமாதான உணர்ச்சி—ஆஸ்டிரியாவின் உள்நோக்கம்—ருஷியாவின் அக்கரை—ருஷியாவை விலக்கிவைக்க ஜெர்மனி செய்த முயற்சி—பிரிட்டிஷாரின் நோக்கம்—சமாதான முயற்சிகள்—யுத்த முயற்சிகள்-பிரிட்டனுக்கு ஜெர்மனி சொன்ன யோசனை—மறுபடியும் சமாதான முயற்சிகள்—மறுபடி யுத்த முயற்சிகள்—கடைசியான சமாதான முயற்சிகள்—பிரிட்டிஷார் யுத்தத்தில் சேர்க்க நிச்சயித்தல்—ஜெர்மானியர் கட்டின விரோத உணர்ச்சி—தொடர்ந்தியப் பேச்சுகளில் வல்லரசுகளின் நடவடிக்கை-முக்கிய சம்பவங்களின் சுருக்கம்... 127

11-வது அத்தியாயம்.

பக்கம்.

மஹா யுத்தத்தின் விசேஷங்கள்:—சென்ற நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியாய் ஏற்பட்ட காரணங்கள்—மகாயுத்தத்தில் ஜாதீய உணர்ச்சி மேலிட்டிருக்கிறது—சுதந்தரப்பிரியமும் ராணுவ ஆதிக்யமும்—ஜெர்மானியர் செய்த தவறுகள் ... 138

12-வது அத்தியாயம்.

கடற்படை—சண்டைக் கப்பலேப்பற்றிய விவாங்கள்:—இரும்புக் கப்பலைக் கட்டத்தொடங்கிய காலம்—யுத்த கப்பலின் முக்கியலக்ஷணங்கள்—யுத்த கப்பலின் அளவுக்கு எல்லையுண்டோ— ... 142

சித்திரப்படங்களின் விவரம்.

'சப்மரின்' யுத்த கப்பல் (ஜலத்தில் முழுகிச் செல்லும் கப்பல்)—பெரிய பீரங்கி சுடப்படுகிறது—டார்ப்பிடோ வெடி பிரயோகிக்கப்படுகிறது—சப்மரின் கப்பல் ஜலத்தில் முழுகிச்செல்லுகிறது ... 1

பிரவித்திபெற்றஎப்போலியன்சக்ரவர்த்தி—ஸுடான்சண்டைக்கு மறுகாட் காலே பிஸ்மார்க்கும் 3 வது நெப்போலியனும் சந்தித்தல்—பிரவித்திபெற்ற பிரிட்டிஷ் கடற்படைத் தலைவராகிய லார்ட் நெல்ஸன்—டிரபால்கரில் நடந்த கடற் சண்டை ... 12

இடாலியதேசாபிமானிகளாகிய கரிபால்டி,—கவூர்—மஸ்ஸினி—திருக்கி சுல்தான் 5 வது முகம்மத்—அன்வர்பே ... 24

கவுன்ட்வான் மோட்கி—கவுன்ட்வான் பிஸ்மார்க்— இப்போதுள்ள ஜெர்மன் சக்ரவர்த்தி 2 வது வில்லியம் ... 48

பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்—ஜெர்மன் சண்டைக் கப்பல் ... 62

பிரிட்டிஷ் அரசரும் இந்திய சக்ரவர்த்தியுமாகிய 5 வது ஜார்ஜ்—ருஷிய சக்ரவர்த்தியாகிய 2 வது நிகலஸ் ... 70

பெல்ஜிய அரசர்—ஜப்பான் சக்ரவர்த்தி—பிரஞ்சு பிரஸிடென்ட்—ஸ்பெயின அரசர்—ஆஸ்டிரிய சக்ரவர்த்தி. ... 104

சண்டைக் கப்பலிலுள்ள கோபுரங்களில் ஏற்றப்பட்ட பீரங்கிகள்—கப்பலின் பீரங்கிகள்பக்கவாட்டில் திரும்பிச் சுடுகின்றன—டார்ப்பிடோ வெடி—யுத்தகப்பல் சோதனைவிளக்குகள் உபயோகித்தல்—பெரிய பீரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டு.

பூகோளப்படங்கள்.

ஐரோப்பாகண்டம் 1

ஜெர்மன் ஏகாதிபத்தியம் 17

இடாலியும் பால்கன் நாடுகளும் 18

பூலோகப்படம் 64

ஐரோப்பாவின் மத்தியபாகம் 66


மத்தியதரைக்கடல் 68

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
1	11	தன் அதிகாரத்தை	தம் அதிகாரத்தை
2	18	வந்ததைக்	வந்தைக்
6	2	கலக்கம் செய்வதும்	கலக்கம் செய்தும்
10	30	சேர்ந்திருந்தை கலைத்து	சேர்ந்திருந்ததைக்கலைத்து
18	11	சம்மந்தப்பட்ட	சம்பந்தப்பட்ட
19	28 & 29	ரகஸ்யப் ஸால்	ரகஸ்யப் போலீஸால்
21	6	இளம்பிற்று	இளம்பின
39	21	ருக்குபிற	பிறருக்கு
48	31	மீதுயெடுக்க	மீது படையெடுக்க
55	31	ருவியாருக்கு	ருவியாவுக்கு
84	15	கடத்தப்படுகிருர்க ளென்று	கடத்தப்படுகிறதாக
86	14	தொகை ...	தொகை
87	21	முயர்ச்சிகள்	முயற்சிகள்
103	12	அறத்து கொள்ள	அறிந்துகொள்ள
105	6	ஜூலை 28	ஜூலை 28
123	25	ருகிய	ருவிய
130	32	ராணு கடவடிக்கை	ராணுவ கடவடிக்கை
133	17	ருவியாலுக்கூட	ருவியாவிலுக்கூட
	30	பெறுக்கி	பெருக்கி
135	3	உடமை	உடைமை
139	33	2 மைல்	32 மைல்

குறிப்பு:—இப்புத்தகத்தில், உபயோகிக்கப்பட் டிருக்கும் "தௌத்தியப் பேச்சுகள்" என்ற சொற்கள், தூதர்கள் மூலமாய் நடைபெறும் பேச்சுகள் என்று பொருள் படும். ராஜ்யங்களுக்குள் பேச்சுகள் நடக்கும்போது அலை தூதர்கள் மூலமாய் நடைபெறும்.

ஐரோப்பா கண்டம்.



முக்கிய கவனிப்பு:—எப்போதும் பூகோளப் படத்தின் தலைப்பக்கம் வடக்கு, அடிப்பக்கம் தெற்கு, வலது பக்கம் கிழக்கு, இடது பக்கம் மேற்கு.

ஐரோப்பிய யுத்த சரித்திரம்

1-வது அத்தியாயம்.

ஐரோப்பாவில் புதியகாலம் தோன்றுவது.

ஐரோப்பிய சரித்திரத்தில் ஒவ்வொரு ஜாதியார் வெவ்வேறு காலங்களில் சிறப்புற்று விளங்கினர். ரோமானியர், முகமதியர், ஸ்பெயின் தேசத்தவர், பிரஞ்சுக்காரர் முதலிய பற்பல ஜாதியார் ஒவ்வொரு காலத்தில் மேம்பாடடைந்து பிறகு க்ஷீணமாயினர். 18-ம் நூற்றாண்டு * முடிவில் பிரன்ச் சக்கரவர்த்தியாகிய பிரசித்திபெற்ற நெப்போலியன் ஐரோப்பாக் கண்டமுழுவதையும் கலக்கிப் பயமுறுத்தினர். அச்சமயம் பிரான்ஸ் உன்னத தசையை அடைந்திருந்தது. ஒப்பற்ற கியாதிபெற வேண்டுமென்ற அடங்காத ஆசையால் இரண்டொரு ராஜ்ஜியங்களைத் தவிர மற்றெல்லா ஐரோப்பிய தேசங்களையும் வென்று தன் அதிகாரத்தைச் செலுத்திவந்தார். அவருடைய ஆட்சி முடிந்தவுடன், ஐரோப்பாவில் புதிய காலம் தோன்றி, ஜனங்கள் நூதன உணர்ச்சிகளையும் சுறுசுறுப்பையும் காட்ட ஆரம்பித்தார்கள்.

---

* 1-வது வருஷம் ஜனவரி மாதம் முதல், 100-வது வருஷம் டிசம்பர் மாத முடிய 1-வது நூற்றாண்டாகும். ஆகையால் 18-வது நூற்றாண்டு என்பது, 1701-வது வருஷ முதல் 1800-வது வருஷம் முடியவுள்ள காலத்தை குறிப்பிடும். 18-வது நூற்றாண்டைச் சேர்ந்த வருஷங்களில், 1800-வது வருஷத்தைத் தவிர மற்ற வருஷங்களெல்லாம் ஆயிரத்து எழுநூற்றச் சொச்சம் இலக்கத்தை யுடையவை. 1914-ம் வருஷம் 20-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

சுதந்தரப் பிரியம்.

நெப்போலியன் சக்கரவர்த்தி தோன்றுவதற்கு முன்னுல் 1789-ம் வருஷத்தில் பிரான்ஸில் பெரிய புரட்சி யொன்று உண்டாயிற்று. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" இம் மூன்று கருத்துக்களையும் புரட்சிக்காரர்கள் போதித்தனர். ஜனங்கள் அதிக சுதந்திரம் பெற்றும் தாராள நோக்கங்கொண்டும் வாழ வேண்டுமென்பது அந்தப் புரட்சியின் முக்கிய கொள்கை. இந்தக் கொள்கை ஐரோப்பிய ஜாதியாரின் மனதில் வலுவாய்ப் பதிந்து அநேக மாறுதல்களையும் புதிய உணர்ச்சிகளையும் உண்டுபண்ணிற்று.

ஒற்றுணர்ச்சி.

அவ்வாறிருக்க, நெப்போலியன் சக்கரவர்த்தி ஐரோப்பா கண்டத்தின் பெரும் பாகத்தையும் பிரஞ்சு ஏகாதியத்துக்குள் அடக்கி வைத்தார். அதனுல் ஜனங்களுக்கு நன்மையுண்டாகாமலிருக்கவில்லை. ஜாதிமத வித்தியாசம் பாராட்டாமல் எல்லா ஜன சமூகங்களிலிருந்தும் தருப்புகளைப் பொறுக்கி பிரஞ்சுசேனையில் சேர்த்து ஒரேவிதமான ஒழுங்குகளுக்கு உட்படும்படிப் பழக்கி ராணுவபலத்தை ஒப்பற்ற நிலைக்கு விருத்திசெய்து காட்டினர். அக்காலத்துஐரோப்பிய ராஜ்ஜியங்கள் தாறுமாறுய் பிரிந்துபோய்ஆளப் பட்டு வந்ததைதைக்கண்டு, பழைய எல்லைப் புறங்களைத் துடைத்து நீக்கி, அந்நிய தேசங்களில் அபிமானம் வைத்த சொந்த பிரஜைகளின் வெறுப்பைப்பெற்ற மன்னர்களைச் சிம்மாஸனத்தினின்றும் இறக்கி, புதிய ராஜியங்களை நிர்மாணித்தார். பழைய காலத்துக் கொள்கைகளையும் ராஜாங்க ஸ்தாபனங்களையும் பிடுங்கி யெறிந்து ஒரேவிதமான சட்டதிட்டங்களையும் இன்னும் பலவிதமான நூதன நிர்வாகமுறைகளையும் அவர் ஏற்படுத்தினர். முக்கியமாய் ஜனங்களுக்குள் பழையகாலத்து ஏற்பாடுகளில் பைத்தியம் நீங்கி, புதுமையிற் பற்றுண்டாகி நூதனமுறைகளைத் தீர ஆலோசிக்கவும் பரீக்ஷிக்கவும் புத்தி விசாலித்தது. இவைகளால் ஜனங்களுக்குள் பரஸ்பர அபிமானம் புதிதாய்த் தோன்றிற்று.

நெப்போலியன் சக்கரவர்த்தி செய்த நன்மைகள் ஜனங்களுக்குள் ஒற்றுணர்ச்சியை எவ்வளவு உண்டாக்கினவோ அதைவிட அதிகமாய், அவருடைய கொடுமைகள் ஒற்றுமையைத் தூண்டிவிட்டன.

ஜாதிய உணர்ச்சி.

நெப்போலியன் ஐரோப்பிய ராஜ்ஜியங்களின்மீது படையெடுத்து அங்கிருந்தவர்களின் நுட்பமான ஜாதிய உணர்ச்சிகளையும் ஆரூடமான விருப்பங்களையும் லக்ஷியம் செய்யாமல் மிதித்துத் தள்ளி 1815-ம் வருஷம் வரை சுமார் 20 வருஷமாக ராணுவ பலத்தால் ஜனங்களை யடக்க முயற்சிசெய்தார். ஜனங்கள் தங்கள் சத்துருக்களினின்று தங்களைக் காத்துக்கொள்ளவும் அதற்குத் தங்கள் முழுவல்லமையையும் காட்டி உபயோகிக்கவும் அனேவரும் ஒருமைப்பட்டிருத்தல் அவசியம் என்ற பெரிய உண்மையை உணர்ந்தார்கள்.

ஐரோப்பிய ராஜ்ஜியங்களெல்லாம் தாங்கமுடியாத வேகங்கொண்டு பொதுப் பகைவரை எதிர்க்கக் கிளம்பின. அரசர்களெல்லாரும் தங்கள் பிரஜைகளுக்குள் தோன்றிய நூதன கிளர்ச்சியை மூட்டிவிட்டு தற்காப்புக்காக ஒற்றுமையா யிருக்கும்படி அவர்களுக்குக் கற்பித்துப் பெரிய சேனைகளைத்திரட்டி நெப்போலியனை எதிர்த்து வந்தார்கள். பிரிட்டிஷார் தங்கள் கடற்படையையும் ராணுவத்தையுங் கொண்டு நெப்போலியனை எதிர்த்து, நேச கவர்ன்மெண்டுகளுக்கு பணத்தாலும் வேறு விதங்களாலும் உதவி செய்து யுத்தத்தை ஓயாமல் நடத்தி வந்தார்கள். நெப்போலியன் சென்ற விடமெல்லாம் அடங்காப் பகைவர்களை எதிர்க்க வேண்டி வந்தது. மெல்லிய மயிலிறகே யானையும் அதை அளவு மிஞ்சி ஏற்றினால் தாங்கமுடியாமற் போய்விடும். பிரஞ்சு ஏகாதிபத்தியம், ஜனங்களின் நுட்பமான உணர்ச்சிகளைத்தன் சக்கரங்களுக் கடியில் துவைத்துப் பற்பல ராஜ்ஜியங்களின் மீது படையெடுத்துச் சென்று, எல்லாருடைய பகையையும் மிதமிஞ்சி மேற்கொள்ள, கடைசியில் 1813-ம்-வருஷத்தில் வாட்டர்லு போர்க்களத்தில் முறிந்து விழுந்தது. போர்க்களத்தில் தோற்றுப்போன நெப்போலியன் தன் ராஜ்ஜியத்தினின்று விலகி பிரிட்டிஷாரிடம் சரணமடைய, லெஸ்ட் ஹெலினு தீவுக்கு வெளியேற்றப்பட்டு அடைக்கப்பட்டுப் போனார். நெப்போலியனுடைய ஏகாதிபத்தியத்தை வேருடன் பகைத்த எல்லா ஐரோப்பிய ஜாதியாரும் தங்களுக்குப் பொதுவாய் ஏற்பட்ட சத்துருவைத் தொலைக்க வேண்டுமென்ற ஒரே சிந்தை கொண்டு ஜாதிய அபிமானம் மேலிட்டு அவ்வுணர்ச்சியால் தங்களைக்கட்டுப் படுத்தி அது வரையில் வெளிப்படு

டாத வன்மையைக் காட்டினர்கள். சத்துருவினின்றும் காத்துக் கொள்ள ஒருமைப்பட் டிருப்பதால் அதிகவன்மை பெறலா மென்பதை அறிந்து, ஜாதீய உணர்ச்சியால் அவ்வாறு கட்டுப்பாடு அடையலாமென்பதை நன்கு உணர்ந்தார்கள். இவ்வாறு, பிரான்ஸில் 1789-ம் வருஷத்தில் நடந்த பெரிய புரட்சியாலும், நெப்போலியன் அனுஷ்டித்த ராஜாங்க முறைகளாலும் ராணுவக்கொடுமைகளாலும், நெப்போலியனைத் தொலைக்கவேண்டுமென்ற ஒரே சிந்தையினாலுண்டான பொதுக்கிளர்ச்சியாலும், ஐரோப்பியஜனங்களுக்குள் புதிய உணர்ச்சிகள் தோன்றின. சுதந்தரப் பிரியமும், ஒற்றுணர்ச்சியும் ஜாதீயக் கிளர்ச்சியும் ஜனங்கள் மனதில் மூண்டன.

ஆகையால் நெப்போலியனுடைய அட்டகாசம் நின்றவுடனே, திடீரென்று ராணுவ ஆட்சியினின்று விடுவிக்கப்பட்ட பற்பல ஜாதியார் அதுவரையில் அடக்கிவைத்த தேசாபிமானத்தையும் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் பிறகு தாராளமாய் வெளியிட்டு தங்கள் சுதந்திரத்தில் அதிகப் பற்று வைத்தார்கள். பற்பல காரணங்களால் ஐரோப்பிய ஜாதிகளுக்குள் புதிதாய்த் தோன்றிய தேசாபிமான உணர்ச்சியும் சுதந்திர விருப்பமும் அதிகவேகங் கொண்டன. அதன் பலனாக ஐரோப்பிய ராஜ்ஜியங்கள் மாறுதலடைந்து ஜாதீய உணர்ச்சிகளால் வளர்ந்து வந்து இப்போதுள்ள படி உருக்கொண்டன. ஜெர்மனி, ஆஸ்டிரியா—ஹங்கேரி, இட்டாலி, பெல்ஜியம், ஹாலண்ட், இந்த ராஜ்ஜியங்க ளெல்லாம் அந்தக்காலத்துக்குப் பிறகு உண்டானவை.

பிரான்ஸில் ராஜாங்கப் புரட்சி.

நூதனக்கொள்கைகளையும் உணர்ச்சிகளையும் ஐரோப்பா முழுதும் பரவச்செய்த தேசமாகிய பிரான்ஸில், ஜனங்கள் தங்கள் சுதந்திரங்களை வெகுவாய்ப் பாராட்டிக் காத்துவந்தனென்று சொல்ல வேண்டியதில்லை. 1830-ம் ஹுத்தில் பிரஞ்சு அரசனை ஒழுங்கான ஆட்சிக்காக சிம்மாசனத்தினின்றும் இறக்கி வேறொருவரை அரசனாக ஏற்றனர். 1848-ம்ஹுத்தில் அத் தேசத்தில் மற்றொரு புரட்சி நடந்தது. பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் அரசனை மறுபடியும் ஒழுங்கான ஆட்சிக்காக விலக்கி ஜனநாயகமாகிய குடியரசை ஸ்தாபித்து முன்போல வேறொரு அரசனை ஏற்றுக்கொள்ளா

மல் லூயி நெப்போலியனை* அந்தக் குடியரசுக்குப் பிரஸிடென்டாக நியமித்துக்கொண்டார்கள். 1848-ம் வருஷம் ஐரோப்பிய சரித்திரத்தில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் பிரான்ஸில் நடந்த அந்தக் காலத்துச் சம்பவங்கள், ஐரோப்பிய ஜாதியாருக்குள் முக்கியமாய் ஜெர்மனியிலிருந்த ஜனங்களுக்குள், சுதந்திரப் பிரியத்தையும் பரஸ்பர அபிமானத்தையும் அதிகமாய்க் கிளப்பிவிட்டன.

2-வது அத்தியாயம்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின பிறப்பு.

அந்தக்காலத்தில் ஜெர்மனி யிருந்த நிலைமை.

அந்தக் காலத்தில் ஜெர்மனி ஒரே ஏகாதிபத்தியமாக ஒரு சக்கரவர்த்தியின் மேலதிகாரத்துக்குட்பட்டிருக்கவில்லை. அதில் 39 ராஜ்ஜியங்கள் 'கான்பிடரேஷன்' என்று ஒரு கூட்டமாகச் சேர்ந்திருந்தன. அந்தக் கான்பிடரேஷனில் அடங்கிய ஒவ்வொரு ராஜ்ஜியமும் சுயேச்சாதிகாரம் பெற்ற மன்னரால் ஆளப்பட்டுவந்தது. ஆஸ்டிரியாவும் பிரஷ்யாவும் அதில் சேர்ந்தவை. நிரந்தரமாக ஒரு பார்லிமென்ட் (சபை) ஸ்தாபித்து அதற்கு ஒவ்வொரு ராஜ்ஜியத்திலிருந்தும் ஒரு பிரதிநிதி அனுப்பப்பட்டது. ஆஸ்டிரிய சக்கரவர்த்தி அந்த சபைக்குப் பிரஸிடென்டாக யிருந்தார். எல்லா ராஜ்ஜியங்களையும் பாதிக்கக்கூடிய பொதுவான விஷயங்களை யோசிப்பதும் அவைகளுக்குள் ஏற்படுகிற தகராறுகளைத் தீர்ப்பதுந் தவிர வேறு எவ்வித அதிகாரமும் அந்தச் சபைக்குக் கொடுக்கப்படவில்லை. பிரான்ஸில் நடந்த ராஜாங்கப் புரட்சியைக் கண்டு தைரியங்கொண்டு ஒவ்வொரு ஜெர்மன் ராஜ்யத்திலும் ஜனங்கள் தங்கள் சுதந்திரத்துக்காகக் கலகம் செய்தார்கள். ஆனால் ஜெர்மன் கான்பிடரேஷனைச் சேர்ந்த மன்னர்கள் ஒருவர் மேலொருவர் பொறுமையும் பகையுங்கொண்டு சுய கலத்தைக் கருதினார்களே யொழிய ஜனங்களின் விருப்பங்களுக்கு இணங்கவில்லை. பெரிய ராஜ்ஜியங்களாகிய ஆஸ்டிரியாவும், பிரஷ்யாவும் ஜெர்மன் ராஜ்ஜியங்களுக்குள் முதன்மை ஸ்தானத்தை வகிக்க

* லூயி நெப்போலியன், பிரசித்திபெற்ற முதலாவது நெப்போலிய னுடைய மருமகன்.

வேண்டுமென்று போட்டி போட்டுப் பொருமையாலும் வெறுப்பாலும் வேறுபட்டிருந்தன. ஜனங்கள் விடாமல் கலக்கஞ்செய்வதும் மன்னர்கள் சுதந்திரங்களை வாக்களித்து அவைகளை நிறைவேற்றாமலும் சிலகாலம் சென்றது. ஆனால் 1835-ம் வருஷத்தில் வியாபார வரி விஷயமாய் ஜெர்மன் ராஜ்ஜியங்கள் ஒன்று சேர்ந்துகொண்டன. ஒவ்வொரு சிறு ராஜ்ஜியத்திலும் இஷ்டப்படி வியாபாரச் சரக்குகளுக்குப் பலவிதமான வரி விதிக்கப்பட்டிருந்த படியால் வியாபார விருத்திக்குத் தடையாயிருந்தது. ஆசையால் எல்லாராஜ்ஜியங்களும் ஒரேவிதமான வரியை விதிக்கவேண்டுமென்று பிரஷ்யா மற்ற ராஜ்ஜியங்களோடு ஏற்பாடுசெய்தது. ஆஸ்டிரியா மாத்திரம் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கவில்லை. இதனால் ஒற்றுமை எவ்வளவு அவசிய மென்று ஜனங்கள் முன்னேவிட அதிகமாய் உணர்ந்ததோடு, பிரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்து ஆஸ்டிரியாவைப் பற்றி இளப்பமான அபிப்பிராயமும் உதித்தது. மேலும் அந்தக் காலத்திலிருந்த பிரஷ்ய அரசர் சற்று தாராளநோக்கங் கொண்டவராய் ஜனங்களின் விருப்பங்களை மதிக்க, ஜனங்களும் பிரதிநிதி சபை ஸ்தாபித்து ராஜ்ஜியம் நடத்த முயற்சி செய்து வருகையில் பிரஷ்யாவில் ஒரு முக்கியமான சம்பவம் நேர்ந்தது.

கவுண்ட் வான் பிஸ்மார்க்—பிரஸித்திபெற்ற ராஜதந்திரி.

1862-ம் வருஷத்தில் கவுண்ட் வான் பிஸ்மார்க் முதன் மந்திரியாக நியமனம் பெற்றார். ஜெர்மன் சரித்திர முழுவதிலும் அவரைவிட பிரபலமானபேர் தோன்றியதே கிடையாது. பிரசித்திபெற்ற ராஜதந்திரிகளுள் அவர் முதன்மையாகக் கருதப்படுகிறார். அவர் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை நிர்மாணித்து நன்றாய் வளுப்படும் வரையில் வளர்த்து ஐரோப்பாவில் முதன்மை பெறும்படி அதைத் தூக்கி விட்டார். 28-வருஷங்களாகவுள்ள ஐரோப்பிய சரித்திரத்தின் முக்கியபாகம் அவருடைய சரித்திரமாகும். அவர் 1862-ம் வருஷத்தில் முதல்மந்திரியாக நியமிக்கப்பட்டவுடன், பிரஷ்யாவின் அதிகாரத்தைப் பெருக்கி, ஜர்மன் ராஜ்ஜியங்களை ஐக்கியப்படுத்தி, தலைமை ஸ்தானத்தை பிரஷ்யா வகிக்கவேண்டுமென்று வலுவான தீர்மானங்கொண்டார். அந்தச் சமயத்தில் பிரஷ்ய அரசராகிய முதலாவது வில்லியம், முதன் மந்திரியின் சாமர்த்தியத்தில் முழு நம்பிக்கை கொண்டு அவருடைய யோச

னைகளுக்கெல்லாம் இலகுவாய் இணங்கி வந்தார். ஜனங்கள் சத்துருக்களின் மேல் யுத்தஞ்செய்து தங்களிடம் மறைந்து கிடக்கிற சக்திகளை வெளியிட்டு, தன்னம்பிக்கையும் தன் மதிப்பும் பெறவேண்டு மென்று பிஸ்மார்க் நோக்கங் கொண்டார். ஒற்றுமை யுண்டாக்குவதில் "இரும்பும் உதிரமும்" ஒப்பற்றவை என்பது பிஸ்மார்க்கினுடைய கொள்கை. "இரும்பும் உதிரமும்" என்றால், யுத்தத்தில் உபயோகப்படுகிற இரும்பாயுதங்களையும் சொரியப்படுகிற உதிரத்தையும் குறிப்பிடும், அதாவது யுத்தஞ் செய்வது என்று அர்த்தமாகும். பிரஷ்ய ஜனங்களுக்குள் ஐக்கியத்தை அதிகப்படுத்தி, முழுவல்லமையையும் அவர்கள் உணரும்படி செய்து, ஜெர்மென் ராஜ்ஜியங்கள் வேறுபட்டுத் தனியாயிருப்பதால் பெறக்கூடிய பலன்களைவிட, பிரஷ்யாவின் தலைமையின் கீழ் ஒருமைப்படுவதால் அந்த ராஜ்யங்கள் பெறக்கூடிய செல்வமும் செல்வாக்கும் அளவற்றன வென்பதைக் காட்டவேண்டு மென்று கருதினர். அவ்வாறே இப்போதுள்ள ஜர்மென் ஏகாதிபத்தியம் ஸ்தாபிக்கப்பட்டது.

டென்மார்க் தேசத்துடன் யுத்தம்.

1863ம்-ஞ்ஹுத்தில் பிஸ்மார்க்கினுடைய யோசனை நிறைவேறுவதற்கு நல்ல சமயம் வாய்த்தது. பிரஷ்யாவுக்கும் டென்மார்க் தேசத்துக்கும் இடையேயுள்ள ஷ்லஸ்ஸிக், ஹால்ஸ்டின் என்ற இரண்டு சிறு நாடுகள் டென்மார்க் அரசரைச் சேர்ந்தவை. ஆனால் அந்நாடுகளிலுள்ள ஜனங்களில் சிலர் ஜெர்மானியர். ஜெர்மன் ஜனங்களும் டென்மார்க் ஜனங்களும் அடிக்கடி சச்சரவு செய்துவந்தனர். பலதடவை அங்கிருந்த ஜெர்மானியர் கலகம் செய்தும் பயன்படவில்லை. 1863-ம்ஞ்ஹுத்தில் டென்மார்க் அரசர் சந்ததி இல்லாமல் இறந்துபோனவுடன் அவருடைய நெருங்கின பந்துவுக்குக் கிரீடம் அளிக்கப்பட்டது. ஆனால் பிஸ்மார்க்கினுடைய தூண்டுதலினால் பிரஷ்ய அரசர் அந்த பந்துவுக்குக் கிரீடம் அளிக்கக்கூடாதென்று சொல்லி, ஜெர்மன் ஜனங்கள் வசிக்கிற ஷ்லஸ்விக், ஹால்ஸ்டின் இவ்விரண்டு நாடுகளைப்பற்றினமட்டில் வேறொரு பந்துவைத் தாம் அரசராக அங்கீகரிப்பதாக வாதாடினர். உண்மையான நோக்கம் என்னவென்றால் அவ்விரண்டு நாடுகளையும் பிரஷ்யாவுடன் சேர்த்துவிடவேண்டுமென்பது. இந்த விவாதத்தினால் பிஸ்மார்க் எதிர்பார்த்தபடி, பிரஷ்யாவினுள்ள ஜனங்க

ஞக்கு டென்மார்க்காகிய அன்னியநாட்டரசரின் கீழுள்ள தங்கள் சகோதரர்களிடத்தில் அனுதாபம்பொங்கி, தேசாபிமானமும்ஜாதிய ஒற்றுணர்ச்சியும் அதிகரித்தன. ஜெர்மானியரெல்லோருக்கும் ஒரே அரசரின்கீழ் இருக்கவேண்டுமென்ற விருப்ப முண்டாயிற்று. டென்மார்க்கும் பிரஷ்யாவும் 1864-ம் வருஷத்தில் யுத்தம் செய்யத்தொடங்கின. இந்த யுத்தத்தில் கலப்பதைப்பற்றித் தயங்கி நின்ற ஆஸ்டிரியாவை பிஸ்மார்க் தன் கட்சியில் சேரும்படி செய்தார். பிரஷ்யாவையும் ஆஸ்டிரியாவையும் எதிர்க்க டென்மார்க் அரசருக்கு சாத்தியப்படவில்லை. யுத்த முடிவில் (1864) ஷ்லஸ்விக், ஹால்ஸ்டின் நாடுகள் ஜெர்மானியருக்குச் சொடுக்கப்பட்டன. ஆனால் அந்தக்காலத்தில் ஜெர்மானியரென்றால் 39 அரசர்களின் கீழுள்ள பிரஜைகளாகும். ஆகையால் அந்தப் புதிய நாடுகளை யார் வசப்படுத்திக்கொள்வது என்ற கேள்வியுண்டாயிற்று. அந்தச் சமயத்தில் ஆஸ்டிரியா பலவீன ஸ்திதியிலிருந்தது. அதில் அநேக ஜாதிஜனங்கள் வசித்துவந்தனர். சிலகாலத்துக்குமுன், 1848-ம்வருஷத்தில், ஹங்கேரிய ஜாதியாரும் ஸ்லாவ் ஜாதியாரும் சுய ஆட்சிவேண்டுமென்று பெரிய கலகம் செய்தார்கள். இடாலியர் வசித்து வந்த அநேக பிரதேசங்கள் ஆஸ்டிரியாவுக்கு உட்பட்டிருந்தன. இடாலியர்களும் கலகஞ்செய்து வந்தார்கள். 1848–ம் வருஷக் கடைசியில், பிரான்ஸிஸ் ஜோஸப் ஆஸ்டிரியச் சக்கிரவர்த்தியாக வந்தார். அவருக்கு அப்போது 18 வயதுதான். அவர்தான் இப்போதும் சக்கிரவர்த்தியாயிருக்கிறார். அந்தப் பாலவயதில் மந்திரிகளுடைய உதவியைக்கொண்டு தேசத்தில் கலகங்களைக் கடுமையாய் அடக்கினார். ஆயினும் அதுமுதல், மேற்கண்ட கலகங்கள் அடிக்கடி நேர்ந்துகொண்டிருந்தன. ஆஸ்டிரியாவின் நிலைமை அவ்வாறிருக்க, டென்மார்க் யுத்தத்தால் பிரஷ்யாவின் கௌரவம் அதிகப்பட்டு, பிரஷ்யாகளுக்குத் தங்கள் சாணுவபலத்தில் நம்பிக்கை யுண்டாயிற்று. வியாபார சம்பந்தமாய் எல்லா ஜெர்மன் நாடுகளையும் ஒன்று சேர்த்து அன்னிய அரசர்களுடன் உடன்படிக்கை செய்வித்ததனாலும் பிரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்தது.

டென்மார்க்கிடமிருந்து பிடுங்கிக்கொண்ட நாடுகளை ஆஸ்டிரியாவும்பிரஷ்யாவும்சேர்ந்து பங்கிட்டுக்கொள்ளலாமென்று ஆஸ்டிரிய அரசர் பிரஸ்தாபித்தார். ஆனால் அவ்வித ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள பிஸ்மார்க்குக்கு எள்ளளவு உத்தேசமுமில்லை. வெகு காலமாய்

39 ஜெர்மன் நாடுகளிலுள்ள ஜனங்கள் ஒன்று சேரவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்க, அவ்வாறு ஐக்கியமாகிற ஏகாதி பத்தியத்துக்கு யார் தலைமை வகிப்பது என்பதைப்பற்றி பிரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் பொறுமையும் விரோதமும் கொண்டபடியால், ஜெர்மன் ஏகாதிபத்தியம் உண்டாகாமலே இருந்தது. சில வருஷங்களுக்கு முன் ஜெர்மானியர்ஒருஜனமாகவேண்டுமென்று விரும்பிஜனப்பிரதிநிதிகளை நியமித்து ஏகாதிபத்திய கிரீடத்தை பிரஷ்ய அரசருக்குக் கொடுக்க, அவர் மற்ற மன்னர்களுக்குப் பொறுமை யுண்டாகுமென்று அஞ்சி, கிரீடத்தை ஏற்கமறுத்துவிட்டார். ஆகையால் ஜெர்மன் ஏகாதி பத்தியத்தின் தலைமை ஸ்தானத்தை ஆஸ்டிரியா வகிப்பதா அல்லது ஜெர்மனி வகிப்பதா? அநேக ஆண்டுகளாக இருந்துவந்த இந்தப் பிரசினை இப்போது மறுபடி தோன்றியபோது அதற்கு முடிவான உத்தரம் அளிக்க ராஜ தந்திர நிபுணர் பிரஷ்யாவில் தோன்றியிருந்தார். ஆஸ்டிரியாவைச் சண்டைக்கு இழுத்து ரணகளத்தில் தீர்மானிப்பதாக பிஸ்மார்க் நிச்சயித்து விட்டார்! ஆஸ்டிரியாவில் அநேக ஜெர்மானியர் வசிப்பது பிஸ்மார்க்குக்கு நன்றாய்த் தெரியும். பிரஷ்யாவிலுள்ள ஜனங்களுக்கு தன் நம்பிக்கையும் சகோதரபாவமும் வளர்ந்துவருகிறதென்பதையும் பிஸ்மார்க் நன்றாய் அறிவார். பிரஷ்ய சைன்யம் ஒப்பற்ற வன்மை கொண்டிருக்கிறதென்பதையும் ஆஸ்டிரியாவில் பற்பல ஜாதியார் கலகம் செய்து வருகிறார்க ளென்பதையும் நன்றாய் உணர்ந்தார். ஆகையால் அநேக சிறிய ஜெர்மன் நாடுகள் ஆஸ்டிரியாவுடன் சேர்ந்துகொண்ட போதிலும் அவர் சிறிதும் சஞ்சலப்படவில்லை. ஏற்கெனவே இட்டாலி தேசம் ஆஸ்டிரியாவின் சொந்நிலங்களைச் சுகிக்கமாட்டாமல் அதோடு சண்டை செய்து பெரும்பாகமும் ஐக்கியமாய்விட்டபோதிலும், சிறுபாகம் இன்னும் ஆஸ்டிரியாவின் கீழிருப்பதைக்கண்டு பழய விரோதத்தை விட்டுவிடவில்லை. இட்டாலிக்கு அந்தச் சிறியபாகத்தையும் பிடுங்கிக் கொடுத்துவிடுவதாக பிஸ்மார்க் ஆசைகாட்டி அத்தேசத்தை ஆஸ்டிரியாவுக்கு விரோதமாக தன்கட்சியில் சேரும்படி ஒரு உடன் படிக்கைசெய்து கொண்டார்.

ஆஸ்டிரியாவுடன் யுத்தம்.

1866-ம் வருஷம் பிரஷ்யா இடாலியுடன் சேர்ந்து ஆஸ்டிரியா மீது யுத்தம் தொடர்ந்தது. 39 ஜர்மென் நாடுகளில் பெரும்

பாகமும் ஆஸ்டிரியா பக்கம் சேர்ந்துகொண்ட தென்று மேலே சொல்லப்பட் டிருக்கிறது. ஆயினும், ஆஸ்டிரியாவும் மற்ற ஜெர்மன் நாடுகளும் வழக்கம்போல தாமசமாய் யுத்தத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்க, பிரஷ்யசேனை வெகு விரைவாய் ஆஸ்டிரியாவின்மீது படையெடுத்து ஆஸ்டிரியத் துருப்புகளோடு ஸாடோவா என்ற ஸ்தலத்தில் பெரிய சண்டைசெய்து சத்துருவை நசுக்கிவிட்டன. போர்க்களத்தில் ஆஸ்டிரிய சேனையில் 2, 20,000 துருப்புக ளிருந்தன; பிரஷ்யசேனையில் 2, 40, 000 துருப்புகளிருந்தன. இருகக்ஷியாரும் மிகவும் தைரியமாய் பிடிவாதத்துடன் வெகு கோரம் சண்டை செய்தனர். கடைசியில் ஆஸ்டிரிய சேனை பிளவுபட்டு பின்னிடைந்து விட்டது. ஆஸ்டிரிய சேனையில் 44, 200 பேர் சேதமானார்கள் அவர்களில் 19, 800 பேர் சிறையாக்கப் பட்டார்கள். பிரஷ்ய சேனையில் 9153 பேர் சேதமானார்கள். பிரஷ்யர்கள் அதி வேகமாய் முன்சென்று இடைவிடாமல் ஆஸ்டிரியர்களை நிற்கு மிடங்களிலெல்லாம் தோற்கடித்து வெற்றி மேல் வெற்றிபெற்றதைக் கண்டு ஆச்சரியப்படாதவர் அப்போது எவருமில்லை. மற்றச்சிறிய ஜெர்மன் நாடுகளிலும் பிரஷ்யர்கள் ஜயம்பெற்றார்கள். பிறகு ஆஸ்டிரியத்தலை நகராகிய வியன்ன நகரத்தை நோக்கி முன்சென்றார்கள். பிரஷ்யாவுக்கு உதவி செய்ய வந்த இடாலியர்கள் ஆஸ்டிரியாவுடன் சண்டை செய்ததில் தோல்வியடைந்தார்களானும் அதனல் யுத்தம் சிறிதும் பாதிக்கப்படவில்லை. யுத்தம் ஆரம்பித்துச் சில காலத்துக்கெல்லாம் ஆஸ்டிரியா தேச முழுவதும் பணிந்துவிட்டபடியால் அதற்கு ஏழுவார யுத்தம் என்று சொல்லப்படுகிறதுண்டு. 1866-ம் வருஷம் ஜூன் மாசம் 7-ந்தேதி யுத்தம் ஆரம்பித்தது. ஜூலை 3-ந்தேதி ஸாடோவா சண்டையில ஆஸ்டிரிய சேனை சின்னபின்னமாகிவிட்டது. ஜூலை 26-ந்தேதி ஆஸ்டிரியா சமாதான நிபந்தனைகளை ஒப்புக்கொண்டது. இந்த உடன்படிக்கையால் பிரஷ்யா தேசம் முதன்மை ஸ்தானத்தை அடைந்து விட்டது. ஜெர்மன் நாடுகள் கான்பிடரேஷன் என்று ஒரு கூட்டமாய்ச் சேர்ந்திருந்தை கலைத்து விடுவதற்கும் அவைகளோடு எவ்விதமாயும் சம்பந்தப்படாம லிருப்பதற்கும் ஆஸ்டிரியா ஒப்புக்கொண்டது. டென்மார்க்கினிடமிருந்து பிடுங்கிக்கொண்ட இரண்டு மாகாணங்களும் பிரஷ்யாவின் வசத்தில் விட்டுவிட சம்மதித்தது, 4½ கோடி ரூபாய் நஷ்ட ஈடாகக் கொடுத்தது. ஆஸ்டிரியாவுடன் சேர்ந்து

சண்டை செய்த சிறிய நாடுகளிலிருந்து பற்பல பிரதேசங்களை பிரஷ்யா சேர்த்துக்கொண்டு விட்டது. யுத்த நஷ்ட ஈடுதொகையையும் பெற்றுக்கொண்டது.

இவ்வாறு பிரஷ்யாராஜ்ஜியம் விஸ்தீரணத்திலும் செல்வத்திலும் விர்த்தியடைந்தது. முன்பு பிரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் உள்பட 39 ஜெர்மன் நாடுகள் கான்பிடரேஷன் என்று ஒன்றுப்ச் சேர்ந்திருந்த கூட்டம் கலைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக வடக்கு கான்பிடரேஷன் என்று ஒரு கூட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி ஜெர்மனியின் வடபாகத்திலுள்ள நாடுகளெல்லாம பிரஷ்ய அரசரைத் தலைவராகக் கொண்டன. தெற்கு பாகத்திலுள்ள ஜெர்மன் நாடுகள் சுயேச்சாதிகாரத்துடன் முன்னிருந்த நிலைமையில் வைக்கப்பட்டு தெற்கு கான்பிடரேஷனுகத் தனியாயிருக்கவோ அல்லது வடக்குக் கான்பிடரேஷனோடு சேர்ந்துகொள்ளவோ இஷ்டப்படிச் செய்ய விட்டுவிடப்பட்டன. ஆனுல் பிற்காலத்தில் யுத்தம் நேரிடுமானுல் பிரஷ்யாவுக்கு சைன்யங்களை அனுப்பி உதவி செய்ய வேண்டுமென்று ஒரு இரகசிய உடன்படிக்கை தெற்கு நாடுகளுடன் பிஸ்மார்க் செய்துகொண்டதாக சில வருஷங்களுக்குப் பிறகு வெளியாயிற்று. இடாலி தேசமும் அது விரும்பிய பிரதேசத்தைப் பெற்றுகொண்டது. ஆஸ்டிரியாவுடன் செய்யப்பட்ட இந்த உடன்படிக்கையில் கண்ட இவ்வளவு நிபந்தனைகளில் ஆஸ்டிரியாவை ஜெர்மன் நாடுகளுடன் சேர்க்காமல் தனிபாக விலக்கி விட்டது கவனிக்கத் தக்கது. ஆகையால் முன்பு ஜெர்மன் நாடுகள் செய்து கொண்டிருந்த ஏற்பாடு 1866-ம் வருஷத்தில் முற்றிலும் மாறி, பிரஷ்யாவின் அதிகாரத்துக்குட்பட்ட வடக்கு ஜெர்மன் நாடுகளென்றும், தனியாக தெற்கு ஜெர்மன் நாடுகளென்றும், ஆஸ்டிரியாவென்றும் முன்று பாகங்களாகப் பிரிந்தன.


பிரஷ்ய சேனையை நூதன முறைகளில் சீர்ப்படுத்தி ஆஸ்டிரியாவை எதிர்த்தபோது அற்புத வன்மையைக் காட்டும்படிச் செய்தவர் கவுன்ட் வான் மோட்கி. அவர் சாணுவ தந்திர நிபுணரென்று பேர்பெற்றவர். இன்றைக்கும் ஜெர்மன் சேனையின் வன்மையையும் கட்டுப்பாட்டையும் பற்றிப் பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் மோட்கியினுடைய பேரைச் சொல்லாமலிருக்கமுடியாது. மற்றொரு பெரிய யுத்தத்தில் அவர் இன்னும் பிரபலமான கியாதிபெற்று

விளங்கினர். பிரஷ்ய அரசர் போர்க்களத்திலிருந்து திரும்பி ஜய சீலராய் பெர்லின் நகரத்துக்குள் பிரவேசித்தபோது ஜெர்மானிய ருக்குண்டான குதூகலத்துக்கு அளவில்லை.

வடக்கு ஜெர்மன் நாடுகள் கான்பிடரேஷனைச் சேர்ந்து, பொது விஷயங்களுக்கு பிரஷ்ய அரசரைத் தலைவராகக்கொண்டு அவருடைய சந்ததியார் அந்த ஸ்தானத்தை வகித்துவரச் சம்மதித்தன. ஆஸ்டிரியாவை உதறி எறிந்த பிறகு பிரஷ்யாவின் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்து விட்டபடியால், தெற்கு ஜெர்மன் நாடுகள் தனியாய் வெகுகாலம் பிரிந்திருக்கமுடியவில்லை. வியாபார விஷயமாக தெற்கு நாடுகள் வடக்கு நாடுகளுடன் சேர்ந்து பொதுச் சபை ஏற்படுத்தி ஆலோசனை செய்துவந்தன. ஆயினும் தெற்கு நாட்டு மன்னர்கள் பிரஷிய அரசரைத் தலைவராக ஏற்றுக் கொள்ள கொஞ்சமும் சம்மதிக்கமாலிருந்தார்கள். அவர்கள் அப்படிப்பட்ட மனோபாவத்துடன் வெகுகாலம்விடப்பட்டிருந்தால் ஜெர்மன் ஏகாதிபத்தியம் உண்டாவதற்கு அதிக தாமதப் பட்டிருக்கும். ஆனல் அன்னிய தேச விவகாரங்கள் உண்டாகி, எல்லா ஜெர்மன் நாடுகளும் ஒன்றுபட்டு சேருவதற்குச் சீக்கிரம் சமயம் வாய்ந்தது.

பிரான்சுடன் யுத்தம்.


பிரன்சுக்காரர்கள் 1848-ம் வருஷத்தில் ராஜாங்கக் கலகம் செய்து, தங்கள் அரசரை ஒழுங்கான ஆட்சிக்காக நீக்கிவிட்டு ஜன நாயகத்தை ஸ்தாபித்து, லூயி நெப்போலியனை முதல் பிரஸிடென்டாக நியமித்தார்கள் என்று முன்பு சொல்லியிருக்கிறோம். அவர் உலகப் பிரசித்திபெற்ற முதலாவது நெப்போலியனுடைய மருமகன். 1851-ம் வருஷத்தில் அவர் ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய சபையை பலாத்காரமாய்க் கலைத்துவிட்டு, மூன்றாவது நெப்போலியன் சக்கரவர்த்தி என்று தாமே பட்டம் வைத்துக்கொண்டு தம் அதிகாரத்தைப் பெருக்கிக்கொண்டார். ஜனபிமானத்தைச் சம்பாதிக்கும் பொருட்டு தன் மாமன் செய்ததுபோல் ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கி கியாதிபெறவேண்டுமென்று விரும்பினர். 1870-ம் வருஷத்தில் ஜெர்மனியுடன் யுத்தம்செய்யச்சமயம் வாய்த்தது. ஸ்பெயின் தேசத்தரசர் இறந்து போனவுடன் பிரஷ்ய அரசரின் பந்து ஒருவர் அதற்குரியவராக மூன்வந்தார். ஸ்பெயின்




பிரவித்திபெற்ற நெப்போலியன் சக்ரவர்த்தி 1-ம் பக்கம் பார்க்க.



வீடான் சண்டைக்கு மறுநாட் காலே பிஸ்மார்க்கும்
3-வது நெப்போலியனும் சந்தித்தல்.



லார்ட் நெல்ஸன்—பிரவித்திபெற்ற பிரிட்டிஷ் கடற்படைத் தலைவர்.



.. டிரபால்கர் என்னுமிடத்தில் நடந்த பிரபலமான கடற்சண்டை.

(62-ம் பக்கம் பார்க்க.)

தேசத்தையும் ஜெர்மன் தேசத்தையும் அவ்வாறுஒன்றுப் இணைப் பது அபாயமென்றுகருதி நெப்போலியன்அதற்கு ஆட்சேபித்தார்.. பிறகு பிரஷ்ய அரசரின் பந்து தன் பாத்தியத்தைக் கைவிட்டார். அப்படிச்செய்தும் நெப்போலியன் திருப்தி கொள்ளாமல் யுத்தத் தில் கீர்த்தி பெற்று விளங்கவேண்டுமென்று ஆசைகொண்டு பிரஷ் யாவுடன் யுத்தஞ்செய்யத் தீர்மானித்தார். இதைக்கேட்டவுடன் ஜெர்மானியருக்குள் உண்டான ஆத்திரத்தை பிஸ்மார்க் அதிகமாய் மூட்டி விட்டார். இடாலியும் ஆஸ்டிரியாவும் தமக்கு உதவி செய் யுமென்று நெப்போலியன் நினைத்தார் இடாலியர் முன்பு ஆஸ் டிரியாவுக்கு விரோதமாய்க் கலகம் செய்தபோது அவர்களுக்கு நெப்போலியன் உதவி செய்தாராகையால், இப்போது தமக்கு உதவிசெய்வார்களென்று நினைத்தார். ஆஸ்டிரியா பிரஷ்யாவினால் தோற்கடிக்கப்பட்டதால் இப்போது பிரஷ்யாவுக்கு விரோதமாய்க் கிளம்பி சண்டை செய்யுமென்று நெப்போலியன் எண்ணினார். மேலும், தெற்கு ஜெர்மன் நாடுகள் பிரஷ்யாவுக்கு விரோத மாய்க் கலகம் செய்யுமென்று அவர் பூரணமாய் நம்பியிருந்தார். இந்த நம்பிக்கைகளெல்லாம் முற்றிலும் ஏமாற்றமாய் முடிந்தன. யுத்தம் செய்வதாக நெப்போலியன் அறிவித்தவுடன் பிரஷியத்தருப் புகள் விரைவாக பிரஞ்சு எல்லைக்குள் சென்று ஆரம்பத்திலிருந்தே வெற்றிமேல் வெற்றிபெறவே, ஆஸ்டிரியாவும் இடாலியும் ஒதுங்கி நின்றவிட்டன. தெற்கு ஜெர்மென் நாடுகள் பிரஷ்யாவினிடத்தில் பூரணவிசுவாசங் கொண் டிருந்தபடியால் ஒருக்ஷணப் பொழுதும் தயங்கவில்லை முன்பு பிஸ்மார்க் செய்துகொண்ட இரகசிய உடன் படிக்கையை ரசணுவ உதவிசெய்து நிறைவேற்றின. பிரசித்திபெற்ற முதலாவது நெப்போலியன் முன்பு ஜெர்மன் நாடுகளுடன் யுத்தந் தொடர்ந்து அவைகளை அடக்குவதற்காகச்செய்த கொடுமைகள் ஜெர்மானியர் மனதில் ஆழப்பதிந்து கிடந்தென வெண்பதை மூன் றுவது நெப்போலியன் மறந்துவிட்டார். ஜெர்மன் நாட்டு மன்னர் கள் தங்களுக்குள் எவ்வளவு கசப்பும் விரோதமும் காட்டிச் சண் டைசெய்து வந்தாலும், பரம்பரை விரோதியாகக் கருதப்பட்ட பிரஞ்ச் சக்கரவர்த்தி யுத்தத்துக்குப் புறப்பட்டவுடன் தேசாபிமா னம் பொங்கி, எல்லா மன்னர்களும் ஒன்றுசேர்ந்துவிட்டனர். ஒரேஜாதியினர், ஒரே பாஷையும் சரித்திரமும் கொண்டவர், ஒரே பகையாகிய முதல் நெப்போலியனை இருபது வருஷகாலம் எதிர்த்

தவர்கள்; அப்படிப்பட்டவர்கள் இந்தச் சமயத்தில் ஒன்று சேரா மலிருக்க முடியுமா?

1870-ம் வருஷம் ஜூலை மாதம் 19-ந்தேதி பிரஞ்சுக் கவர்ன்மெண்ட் யுத்தம் தொடங்குவதாக அறிவித்தார்கள்.-ஆனால் பிரஞ்சு சேனை தயாராயிருக்கவில்லை! ஜெர்மனியிலோ, ராணுவ தந்திரியாகிய கவுண்ட் வான் மோட்கி சேனையை நூதன முறைகளில் சீர்ப்படுத்தி யுத்தத்துக்குத் தயாராக வைத்திருந்தார். அவர் ஜெர்மன் சேனையை மிகவும் சாமர்த்தியமாய் நடத்தி பிரஞ்சு சேனை முழுவதையும் வெகு சீக்கிரத்தில் நாசம்செய்துவிட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்த ராணுவ தந்திர நிபுணர்களில் அவர் முதன்மையானவரென்று கீர்த்தி பெற்றார். ஜெர்மன் சேனை மூன்று பெரிய பாகங்களாகப் பிரிந்து பிரான்சுக்குள் விரைவாகச் சென்று நாலா பக்கங்களிலும் வளைந்து பிரஞ்சுத்துருப்புகளை நெருக்கிக் கொண்டு வந்தன. பிரஞ்சு சேனையின் ஒரு பாகம் மெட்ஸ் கோட்டைக்குள் அடைக்கப்பட்டது. பிரன்சு சக்கிரவர்த்தி நடத்திய மற்றொரு பாகத்தை ஜெர்மானியர் நெருக்கி ஸிடான் என்னும் ஸ்தலத்தில் சிக்கிக்கொள்ளும்படி செய்தார்கள். செப்டம்பர் மாதம் 1-ந்தேதி முழுவதும் 500 ஜெர்மன் பீரங்கிகள் ஸிடான்மேல் நெருப்புப் பொழிந்தவண்ணமாயிருந்தன. பிரன்சு சக்கரவர்த்தி தமது சைன்யம் படுகொலை செய்யப்படுவதைக்கண்டு சகிக்கமாட்டாமல் மறுதினம் காலை வெள்ளைக்கொடியைத் தூக்கி தமது வாளை பிரஷ்ய அரசரிடம் கொடுத்துவிட்டார்.* சக்கரவர்த்தியோடு எல்லாத் துருப்புகளும் சரணமடைந்தன. சேனையின் கொடிகள் ஆயுதங்கள் யுத்த தளவாடங்கள் முதலியவாவும் கொடுத்துவிடப்பட்டன. 3,000-ராணுவ உத்தியோகஸ்தர்கள், 83,000 துருப்புகள், 558 பீரங்கிகள், 6,000 குதிரைகள், ஜயசீலர்கள் கையில் ஒப்புவிக்கப்பட்டன. சண்டை நடந்துகொண்டிருந்தபோதே 28,000 பிரஞ்சு துருப்புகள் சிறைபிடிக்கப்பட்டனர்; 14,000 பேர் போர்க்களத்தில் வீழ்த்தப்பட்டனர்; அநேகம்பேர் பெல்ஜிய நாட்டுக்குள் தப்பியோடி அங்கு சிறையாக்கப்பட்டனர்; பிரான்சுதேசம், ஸிடான் சண்டையில், மொத்தம் 1,35,000 பேர்கொண்ட பிரஞ்சு சேனையையும்

* வெள்ளைக் கொடியைத் தூக்குவதும் வாளைக் கொடுப்பதும் சரணமடைவதற்கு அடையாளங்கள்.

சக்கிரவர்த்தியையும் இழந்து விட்டது. பிரஞ்ச் சக்கிரவர்த்தி ஜெர்மென் கோட்டை யொன்றில் சிறையாக வைக்கப்பட்டார்.

இந்த துக்ககரமான சம்பவம் பாரிஸ் நகரத்தில் தெரிய வந்தது மும் ஜனங்கள் ஆத்திரங்கொண்டு 4-ந்தேதியே சக்கிரவர்த்தியின் ஆட்சியை நீக்கி குடியரசை ஸ்தாபித்து யுத்தத்தை நடத்தத் தீர்மானித்தார்கள். இதற்குள் ஜெர்மன் சேனை பாரிஸ் நோக்கிவந்து 15-ந் தேதியன்று அதை முற்றுகை போட்டது. ஜெர்மானியருக்கு அதிசீக்கிரத்தில் வெற்றிமேல் வெற்றி கிடைத்ததைக் கவனிக்கவேண்டும். 1870-ம் வருஷம் ஜூலைமாதம் 19-ந்தேதி பிரான்ஸ் திடீரென்று யுத்தம்செய்வதாக அறிவித்தது. அப்போது சுகவாசத்துக்காக வெளியூர்களுக்குப் போயிருந்த பிரஷ்ய அரசரும் மந்திரிகளும் பெர்லின் நகரத்துக்கு விரைந்து சேனையை யுத்தத்துக்குத் தயார்செய்து ஆகஸ்டு 2-ந்தேதி பிரஞ்ச் சேனையைத் தாக்கினார்கள். அந்த மாசத்தில் 4-ந்தேதியும் 6-ந்தேதியும், 14 முதல் 18-ந்தேதி வரையிலும், ஜெர்மானியர் ஓயாமல் போர் விளைத்து வெற்றிபெற்றனர். செப்டம்பர் 1-ந்தேதியும்2-ந்தேதியும் ஸிடானில் பிரபலமாய்ச் சண்டை நடந்தது. 15-ந்தேதி பாரிஸ் முற்றுகை போடப்பட்டது. இவ்வளவு சீக்கிரமாய் வெற்றி கிடைக்குமென்று ஜெர்மானியர் எதிர்பார்க்கவில்லை யாகையால் முற்றுகைக்குவேண்டிய யுத்ததளவாடங்களை போர்க்களத்துக்குக்கொண்டுவரவில்லை.மேலும்,பிரெஞ்சுத் துருப்புகள் பாரிஸ்கோட்டைகளில் மிகவும் உக்கிரமாய்ச்சண்டைசெய்து காத்துவந்தன. காலைமாதங்களாக பாரிஸ் நகரத்தை பீரங்கி நெருப்பும் பஞ்சமும் அழித்துவந்தன.


பிரஞ்சுக்காரர் லிடாமுயற்சியுடன் யுத்தம் செய்தல்.

பிரன்ச் சக்கிரவர்த்தியும் தலைநகரமும் இந்த கதியாய் விட்டபோதிலும், பிரஞ்சு ஜனங்கள் தேசாபிமானம் மூண்டு சத்துருவை எதிர்க்க மறுபடியும் இளம்பினர்கள். கவர்ன்மெண்ட் மெம்பராகிய காம்பெட்டா முற்றுகையிடப்பட்ட பாரிஸ் நகரத்திலிருந்து ஒரு புகைக்கூண்டில் ஏறி ஆகாயமார்க்கமாய் வெளியே வந்து ஜனங்களை உற்சாகப்படுத்தி யுத்த தளவாடங்களை அன்னிய நாடுகளிலிருந்து தருவித்து புதியசேனைசேர்த்து யுத்தத்தை நடத்தினர். இந்தப் புதியசேனை தோச்சிபெற்ற ஜெர்மன் துருப்பு

களுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. பலமுறை புதிய பிரன்சுப் படைகள் சேர்க்கப்பட்டு சண்டைக்கு அனுப்பப்பட்டன, ஒவ் வொருதடவையும் தோல்வியடைந்து வீணன உயிர்சேதம் உண்டாயிற்று. அக்டோபர் மாதம் 27-ந்தேதி மெட்ஸ் கோட் டையிலிருந்த பிரஞ்சுச்சேனை முழுவதும் சரணமடைந்துவிட்டது. 3 சேனுபதிகள், 6000 ரணுவ உத்தியோகஸ்தர்கள். 173,000 ருப்புகள், 1340 பீரங்கிகள், மெட்ஸ கோட்டைகள், இவையெல் லாம்ஜெர்மனியரைச் சரணமடைந்தன. நவம்பர் டிசம்பர் மாதங்களி லும், 1871-ம் வருஷம் ஜனவரிமாதத்திலும்,புதிய பிரஞ்சு சேனைக ளெல்லாம் யுத்த களத்தில் சண்டை செய்து அடியோடு அழிந்து போயின. கடைசியாக ஜனவரிமீ 29-ந் தேதி பாரிஸ் நகரம் பிடி பட்டுவிட்டது. அச்சமயம பாரிஸுக் கருகிலுள்ள வேர்ஸெல்ஸ் நகரத்தில் சமாதான நீபந்தனைகள் பிரேரிக்கப்பட்டன. மே மாதம் 10-ந்தேதி ஓர் உடன்படிக்கையில் அவைகள் உறுதி செய்யப்பட் டன. அந்த உடன்படிக்கையின்படி, எல்லைப்புறத்திலிருந்த அல் ஸேஸ், லோரேன் இவ்விரண்டு பிரஞ்சு மாகாணங்கள் ஜெர்மானிய ருக்குக் கொடுக்கப்பட்டன. இதைத்தவிர ஜெர்மானியர் யுத்த நஷ் டத்தொகை யென்று யாவரும் திடுக்கிடும்படியாக 300 கோடி ரூபாய் விதித்தார்கள். இந்தத் தொகை கொடுக்கப்படும் வரையில் சில பிரன்சுப் பிரதேசங்களையும் பாரிஸ் நகரத்திலுள்ள சில கோட் டைகளையும் ஜெர்மானியர் வசப்படுத்திக்கொண்டிருந்தார்கள். 18-ம் நூற்றாண்டில் மூதலாவது நெப்போலியன் சக்கரவர்த்தியாக இரு ந்த காலத்தில் உன்னத நிலையை யுற்ற பிரன்சுஜாதியார் 19 - ம் நூற்றாண்டில் தங்கள் வீரத்தையும் கௌரவத்தையும் அவ்வாறு இழந்துவிட்டார்கள். அவைகளை மறுபடி பெறவேண்டு மென்று பிரஞ்சுக்காரர் உறுதிகொண்டதும், ஜெர்மனியர் அந்த யுத்தத்தால் ராணுவத் திமிர் கொண்டதும் இப்போது ஐரோப்பாவில் நடைபெற்றுவருகிற மகா யுத்தத்துக்கு மூலகாரணம் என்று அறிய வேண்டும்.

ஜேர்மன் ஏகாதிபத்யம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த பிரஞ்சு—ஜெர்மன் யுத்தத்தால் ஜெர்மனியில் உண் டான பலன்கள் பிரமாதமா யிருந்தன. யுத்தகளத்தில் ஜெர் மன் பீரங்கிகள் ஜயமுழக்கஞ் செய்தபோதெல்லாம் ஜெர்மா



ஜெர்மனி.

அந்த ஏகாதிபத்தியத்திலுள்ள நாடுகளைக் குறிப்பிட்டிருக்கிறது. அவைகளில் மிகப் பெரிது பிரஷ்யா. வெண்மையான பாகமெல்லாம் பிரஷ்யாநாடு. மற்ற நாடுக ளெல்லாம் கோடுகள் போட்டுக் குறிக்கப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமானவை களுக்குப் பேரிடப்பட்டிருக்கிறது. ஆஸ்டிரியாவுக்கு வடக்கில் ஸாக்ஸனி, அதற்கு மேற்கில் வரிசையாக பவேரியா, வர்ட்டம்பர்க், பேடன், அல்ஸேஸ் லொரேன் இவைகளைக் காண்க. நதிகள் வளைந்த கோடால் குறிக்கப்பட்டுள்ளன. ஜெர்மனிக்கு வடக்கில் குறுகிய பூமியொன்று நீண்டிருக்கிறது. அங்கு ஷ்லஸ்விக், ஹால்ஸ்டின் இவைகளைக் காணலாம். அங்கு பால்டிக் கடற்கரையில் கீல் துறைமுகமிருக்கிறது. அங்கு அந்தக் குறுகிய பூமிக்குக் குறுக்கே கால்வாய் வெட்டப்பட்டு இருபுறங்களிலுள்ள கடல்களைச் சேர்க்கிறது.

னியர் மனதில் அளவற்ற ஆரவாரம் பொங்கிற்று. ஜெர்மானி யாருக்குத் தேசாபிமானமும் ஒற்றுமையுணர்ச்சியும் அந்த யுத்தகாலத்தில் உண்டானதுபோல் அதற்கு முன்னுல் எக்காலத் திலும் உண்டானதில்லே. ஒவ்வொரு வெற்றியும் ஜெர்மானியரின் ஜாதீய உணர்ச்சியை அதிகப் பிரகாசமாய் மூட்டி விட்டது. ஜெர்மானியர் அனைவரும் உற்சாகங்கொண்டு ஜாதீயப் பெருமை யைக்கொண்டாடிய காலத்தில் ஒரே ஏகாதிபத்தியத்தில் உட்பட்டி ருப்பதற்கு அது வரையில் இருந்த சில ஆக்ஷேபங்கள் சடுதியில் மறைந்து விட்டன. பிரஷ்ய அரசர் பாரிஸ் முற்றுகையை நடத் திக்கொண்டிருக்கும்போதே, 1871-ம் வருஷம் ஜனவரி மாதம் 18-ந்தேதி யன்று, வெர்ஸேல்ஸ் நகரத்தில், பிரஞ்சு அரசர்கள் கட்டிய பெரிய அரண்மனையில், ஜெர்மன் நாட்டு மன்னர்களனை வரும் உத்தியோகஸ்தர்களும் பிரஷ்ய அரசரின்கீழ் பெரிய சபை கூடி, அவரை ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்குச் சக்கிரவர்த்தியாக ஒரே மனதாய் அங்கீகரித்தார்கள். இவ்வாறு வடக்கு நாடுகளும் தெற்கு நாடுகளும் பொதுவான ஏகாதிபத்தியத்தில் ஐக்கியமாயின. இவ்வாறு பிஸ்மார்க் மந்திரியின் ஆழ்ந்த நோக்கம் நிறைவேறியது. இப்போதுள்ள ஏகாதிபத்தியம் அந்தக்காலத்தில்தான் ஸ்தாபிக்கப் பட்டது. இந்த புதிய ஏகாதிபத்தியத்தில் 26-ஜெர்மன் நாடுகள் இருக்கின்றன. அவைகளில் 22-நாடுகள் மன்னர்களால் ஆளப்பட்டு வருகின்றன; மூன்று நாடுகளில் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; மற்றொன்று (அதாவது, அல்ஸேஸ், லோரேன் மாகாணங்கள்) பொது வாய் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்தது. பிரஷ்ய அரசர் உட்பட, எல்லா மன்னர்களும் பொதுவாக தங்கள் உள்நாட்டு விஷயங்களே நிர்வகிக்கத் தனித்தனி கவர்ன்மெண்ட் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த கவர்ன்மெண்டுக்குள்ளே சுதந்திரங்கள் சிற்சில நாடுகளில் வித்தியாசப்படும். எல்லா நாடுகளுக்கும் பொதுவாயுள்ள ஏகாதிபத்திய விஷயங்களேயும் அன்னிய நாட்டு விவகாரங்களேயும், ஜெர்மன் நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய இம பீரியல் (ஏகாதிபத்திய) சபையார் நிர்வகிக்கிறார்கள்.

அவ்வாறு 1864, 1866, 1870 இவ்வருஷங்களில் ஜெர்மானி யர் மூன்று பெரிய யுத்தங்களே வலுவில் கிளப்பி அவைகளில் அடைந்த வெற்றிகளால் தேசாபிமானம் முதிர்ச்சிபெற்றவர்களாகி தங்களுக்குள்ளிருந்த பழைய வித்தியாசங்களே மறந்து ஒருமைப்

பட்டார்கள். 1870-ம் வருஷத்தில் நடந்த பிரஞ்சு யுத்தத்துக்குப் பிறகு ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஐரோப்பாவில் முதன்மை பெற்றது. பிஸ்மார்க்கினுடைய ராஜதந்தரத்தால் ஏகாதிபத்தியம் அந்த நிலையிலிருந்து தாழாதபடி காக்கப்பட்டு உன்னத பதவியில் உறுதியாய் நிறுத்தி வைக்கப்பட்டது. ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கு நூதனமாய் உண்டான வன்மையும் செல்வாக்கும் ஐரோப்பிய விவகாரங்களில் வெளிப்பட்டு விருத்தியாயின. பிஸ்மார்க் தம் முழு வல்லமையையும் சாமார்த்தியத்தையுங் கொண்டு அன்னியதேச விவகாரங்களை அதுமுதல் இருபது வருஷகாலம் நடத்திவந்தார். அவ்வாறு ஜெர்மன் ஏகாதிபத்தியம் வளர்ந்தோங்கிய சரித்திரத்தைச் சொல்வதற்கு முன்னால், அதோடு சம்மந்தப்பட்ட அந்நிய ராஜ்ஜியங்களின் நிலைமையை விளக்கவேண்டும்.

3-வது அத்தியாயம்.

இடாலிதேசம் ஒருமைப்பட்ட ஆச்சரியம்.

19-ம் நூற்றாண்டின் ஐரோப்பிய சரித்திரம் எழுதப்படும் போது இடாலிய நாடுகள் ஐக்கியமாகி சுயேச்சை பெற்று ஒரே தேசமாக மாறிய ஆச்சரியமான சரித்திரத்தைச் சொல்லாமல் பூர்த்தியாகாது. ஐரோப்பா கண்டத்தில் 19-ம் நூற்றாண்டு முழுவதும் சுதந்திர உணர்ச்சி பெரும் புயல்போல் அதிவேகங்கொண்டு வீசி, கொடுங்கோன் மன்னர்களின் ஆட்சியை வேருடன் வீழ்த்திய அதிசயங்கள் நிரம்பியிருக்கின்றன. ஜெர்மானியர் எவ்வாறு ஜாதீய உணர்ச்சியால் கட்டுப்பாடடைந்து ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனினும் அற்புதமானது இடாலியர்கள் ஒருமைப்பட்ட சரித்திரமாகும். இப்போது நடந்து வருகிற மகா யுத்தத்தில் சேராமல் இடாலி ஒதுங்கியிருப்பதற்கு முக்கிய காரணங்கள் அதன் சரித்திரத்தில் நன்கு விளங்கும்.

இடாலிதேசம் பிளவு பட்டிருந்த நிலைமை.

1815-ம் வருஷத்தில் பிரசித்திபெற்ற முதலாவது நெப்போலியன் வாட்டர்லூ சண்டையில் வீரத்தைக் களத்திற்போட்டு, தலைநகரத்தில் தன் கிரீடத்தைக்கைவிட்டு, பிரிட்டிஷாரிடம் தன்


ஆஸ்டிரியா
ஹங்கேரி
ரஷியா
ஜெர்மனி
சுவிட்ஜர்லாண்ட்
பவேரியா
பாடன்
ஸ்ட்ராஸ்பர்க்
பாரிஸ்
பெல்ஜியம்
ஹாலண்ட்
ஹனோவர்
பிரஷ்யா
போலந்து
பெல்கிரேட்
ரொமேனியா
புகாரஸ்ட்
பல்கேரியா
சோபியா
கருங்கடல்
துருக்கி
சுவிட்சர்லாந்து
ஜெனிவா
பெர்ன்
இத்தாலி
மிலான்
வெனிஸ்
ரோம்
நேபிள்ஸ்
கார்சிகா
சார்டினியா
சிசிலி
சைராகியூஸ்
அட்ரியாடிக் கடல்
மத்தியதரைக்கடல்
ஏஜியன் கடல்
கிரீஸ்
ஏதென்ஸ்
அல்பேனியா
மான்டி நீக்ரோ
ஸ்கூடரி
ஸ்கோடரா
ஸ்கூட்டரி
ஸ்கூட்டரி ஏரி
ஸ்கூட்டரி ஏரி
ஸ்கூட்டரி ஏ

இடாலியும், பால்கன் நாடுகளும்.

இடாலி தேசம் 1815-ம் வருஷத்தில் பற்பல நாடுகளாகப் பிரிந்திருந்த நிலைமையைப் புள்ளி போட்ட கோடுகளால் காட்டியிருக்கிறது. வடக்கில் கோடுகள் போட்ட பிரதேசங்களாகிய மிலானும் வெனிஸும் முதலில் ஆஸ்டிரியாவுடன் சேர்ந்திருந்து, பிறகு இடாலிக்குச் சொந்தமாயின. இடாலிக்குக் கிழக்கில் அட்ரியாடிக் கடலிருக்கிறது. இக்கடலுக்குக் கிழக்கில் ஆஸ்டிரியப் பிரதேசமும், அல்பேனியாவு முள்ளன.

பால்கன்நாடுகள் 1913-ம் வருஷத்துக்கு முன்னும் பின்னுமிருந்த நிலைமைபைக் காட்டியிருக்கிறது. அவ்வருஷத்துக்கு முன்னுள் அவைகளிருந்த நிலைமையை வெண்மையான பாகங்கள் குறிக்கின்றன. அக்காலத்தில் கோடுகளிட்ட பூமிகள் துருக்கிக்குச் சொந்தமாயிருந்து 1913-வருஷத்து யுத்தத்துக்குப் பிறகு பால்கன் நாடுகளால் பங்கிடப்பட்ட விவரங்களைக் காட்டியிருக்கிறது.

ஸெர்வியாவுக்கு மேற்கில் பாஸ்னியா ஹெர்ஸிகோவினு ஆகிய இரண்டு ஆஸ்டிரிய மாகாணங்களைக் காணலாம். பாஸ்னியாவின் முக்கிய ஸ்தலமாகிய ஸராஜிவோ நகரம் குறிக்கப்பட்டிருக்கிறது. பாஸ்னியாவுக்குத் தென்கிழக்கில் நோவிபஸாருள்ளது. அது 1913-ஜூன் துக்குமுன், ஆஸ்டிரியாவின் அதிகாரத்துக்கு உட்பட்டு பிறகு ஸெர்வியாவுக்குச் சொந்தமாகியது. இதற்குத் தென்கிழக்கில் சற்று தூரத்தில் எஜியன் கடற் கரையிலுள்ள ஸலோனிகா துறை முகத்தைக் காணலாம். அது இப்போது கிரீஸுக்குச் சொந்தமானது. பாஸ்னியாவிலிருந்து நோவிபஸார் வழியாய் ஸலோனிகாவரையில் ஆஸ்டிரியா தன் அதிகாரத்தை நாட்ட வேண்டுமென்று கோர்க்கங்கொண்டிருந்தது. இடாலி, பால்கன் நாடுகள் இவைகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்படும்போதெல்லாம் இப்படத்தைப் பார்த்துக்கொள்ளலாம்.

சுவாதீனத்தையும் ஒப்புவித்து ஐரோப்பிய விவகாரங்களி னின்றும் விலகிவிட்டார். அதன் பிறகு, ஜன சுதந்திரத்துக்கு அவர் வினைத்துவந்த பெரிய ஆபத்து முடிவாய் நீங்கியவுடன் ஐரோப் பிய ராஜ்யங்கள் பெருமூச்சு விட்டன. அவரால் வெல்லப்பட்ட பிரதேசங்களை முன்னிருந்த ஐரோப்பிய அரசர்கள் பங்கிட்டுக் கொண்டு தங்கள் ராஜ்ஜியங்களை புதிதாய் நிர்மாணித்தார்கள். அதற்காக 1815-ம் வருஷம் வியன்னாவில் ஒரு காங்கிரஸ் கூடி ஏற் பாடுகள் செய்யப்பட்டன. அந்த ஏற்பாடுகளின்படி ஆஸ்டிரிய சக்ரவர்த்தி இடாலியின் வடகிழக்கு மூலையிலுள்ள வெனிஸ், மிலான் என்ற பிரதேசங்களைப் பெற்றார். இடாலியில் அநேக சுயேச்சாதிகாரம் பெற்றநாடுகள் ஸ்தாபிக்கப்பட்டன. இடாலிய தேசாதிபதிகளுள் ஒருவராகிய ஸர்டினியா அரசர் இடாலியின் வடமேற்கு மூலையிலுள்ள பயட்மான்ட், ஜினோவா என்ற பிரதே சங்களைப் பெற்றார். இடாலியின் மத்திய பாகத்தில் அநேக சிறு நாடுகள் ஸ்தாபிக்கப்பட்டன; அந்தமத்தியபாகத்தில், காதலிக் கிருஸ்தவர்களின் ஆசார்யராகிய போப் அநேக பிரதேசங்களைப் பெற்றார். இடாலியின் தெற்குப்பாகம் முழுவதும் லிலிவித் தீவுடன் சேர்த்து ஒரு நாடாகச் செய்யப்பட்டது.

மன்னர்களின் தொடுங்கோன்மை.

இடாலி நாடுகளின் மன்னர்களில் அனேகர் ஆஸ்டிரிய ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் இடாலி நாடுகளில் ஆஸ் டிரிபாவின் அதிகாரம் மேலிட்டிருந்தது. நெப்போலியனல் தூரத் தப்பட்ட அந்த மன்னர்கள் இப்போது திரும்பி வந்தபோது, முன்னிலும் அதிகமாய் அதிகாரப் பிரியங் கொண்டு பிரஜைகளை அடக்கிக் கொடுமைகள் செய்யும் கடும் நோக்கத்துடன் கிரீடம் தரித்தார்கள். ஜனங்களுக்குள் ஜாதிய உணர்ச்சி பரவாமல் தடுத்து கல்வி ஸ்தாபனங்களைக் குறுக்கி, தாராளக் கொள்கைகளையுடைய கல்வி போதகர்களை நீக்கி, பத்திரிகைகளின் சுதந்திரங்களை அடக்கினார்கள்; தேசாபிமானங் கொண்டவர்களைப் பற்றி ரகஸ்யப் போலீஸ் துப்பறிந்து அவர்களைத் தொந்தரவு செய்து, இன்னும் பலவாறுங் கொடுங்கோல் செலுத்தினார்கள். இடாலியரின் தேசாபிமானத்தையும் ஏற்றுணர்ச்சியையும் நசுக்கிவிடும் பொரு ட்டு பயங்கரமான ஆட்சி புரிவதாக நிச்சயித்த மன்னர்கள் ஆஸ்டி ரிய சக்ரவர்த்தியின் சம்மதத்தையும் உதவியையும் பெற்று வந்

தார்கள். ஆஸ்டிரிய சக்கரவர்த்தி யிட்ட கட்டளைகளை ஒரு புறம் இடாலிய மன்னர்கள் ஏற்றுக்கொள்ள, அம்மன்னர்களின் கிரீடத் தைக்காப்பதாக மற்றொருபுறம் சக்ரவர்த்தி ஒப்புக்கொண்டார். ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு தங்களுக்குட்பட்டிருந்த இடாலிய பிர தேசங்களில் கோட்டைகளைக்கட்டி ராணுவத்தை நிரப்பி ஜனங்களை அடக்குவதற்குச் செய்த கொடுமைகளை, இடாலிய மன்னர்கள் பின்பற்றுவதில் ஆவலாயிருந்தார்கள்.

ஜனங்களின் மனநிலை

ஜனங்களின் மனப்பான்மையோ, அக்கொடுமைகளைத் தாங் காமல் எதிர்த்து நிற்கத் துணிந் திருந்தது. நெப்போலியன் சக்கிரவர்த்தி ஆண்டகாலத்திலேயே இடாலியர்களுக்கு ஜாதிய உணர்ச்சி உண்டாயிற்று. நெப்போலியன் சக்கிரவர்த்தி தாம் படையெடுத்து வென்ற எல்லா ஐரோப்பிய ராஜ்யங்களில் அனுஷ் டித்த முறைகள் அநேகம் ஒற்றுமை யுணர்ச்சியை யுண்டுபண்ணக் கூடியவையா யிருந்தன வென்று முன்பு சொல்லப்பட் டிருக்கிறது. அவ்வாறே இடாலியிலும் உண்டாயிற்று. ஜாதிமத வித்தியாச மின்றி எல்லாவித ஜனங்களிலிருந்தும் பிரஞ்சு சைன்யத்துக்குத் தருப்புகளைச் சேர்த்து ஸேவித ஒழுங்குகளுக்கு உட்படுத்தி ராணுவத்தின் வன்மையை ஒப்பற்றதாய் விருத்திசெய்து வெளிப் படுத்தவே, அதனால் ஜனங்களுக்கு நூதனமாய் தன்னம்பிக்கையும் ஒற்றுணர்ச்சியும் உண்டாயின. பழயகாலத்து எல்லைப்புறங் களை நீக்கி புதிய ராஜ்யங்களாய் நிர்மாணித்து, ஜனப் பிரியத்தைப் பெறுத தேசமன்னர்களை விலக்கி, ஜனங்களுக்கு ஒரேவிதமான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி இன்னும் பலவித மாய் தேசநிர்வாகத்தில் அநேக நூதனமுறைகளை நெப்போலி யன் வெளிப்படுத்தினார். முக்கியமாய் ஜனங்களுக்குப் பழமை யில் மூட நம்பிக்கை தளர்ந்து, புதுமையை ஏற்று பரீக்ஷிக்க வேண்டுமென்ற விசால புத்திஉதித்தது. பிரான்சில் 1789-ம் வருஷத்தில் உண்டான பெரும் புரட்சியால் எங்கும் வியாபித்த 'சுதந்திரம் சமத்வம் சகோதரத்வம்' என்ற முக்கொள்கைகளும் இடாலியர் மனதிலும் பதிந்து கிடந்தன. நெப்போலியனை எதிர்ப்பதற்காக இடாலியருக்குள் தோன்றிய புதுக்கிளர்ச் சியை நேச வல்லரசுகள் தூண்டிவந்தார்கள். ஆஸ்டிரியர்களும், ஆங்கிலேயரும், தேச அதிகாரிகளும் இடாலியரைச் சுயேச்

சைபெற்று வாழும்படிச் சொல்லி, பொதுப்பகையை எதிர்க்கும்படி வெளிப்படையாய்த் தூண்டினார்கள். இப்பொழுதோ இடாலிய ஜனங்கள் கொடுங்கோன் மன்னரிடம் வல்லரசுகளின்* சம்மதத்தின்பேரில் ஒப்புவிக்கப்பட்டார்கள்.

இடாலியரின் கலகம்.

ஆகையால் மன்னர்களின் கொடுங்கோலை எதிர்க்க ஜனங்களுக்குள் சதியாலோசனைகள் கிளம்பிற்று. தேசமெங்கும் சதியாலோசனைச் சங்கங்கள் ரகஸ்யமாய் ஸ்தாபிக்கப்பட்டு கலக உணர்ச்சியை பரவச்செய்தன. 1820-ம் வருஷம் இடாலியின் தெற்கு நாட்டில் ஜனங்கள் கலகஞ் செய்து ராஜாங்க சுதந்தரங்களைப்பெற்று அந்நாட்டு அரசனை ஆஸ்டிரியாவுக்கு ஓடிப்போகும்படி செய்தார்கள். இக்கலகத்தை அடக்கும் பொருட்டு, இங்கிலாந்தும் பிரான்ஸும் தங்கள் கடற்படையை அனுப்ப, ஆஸ்டிரியா தன் சேனையைச்செலுத்திக் கலகத்தைக் கொடுமையாய் அடக்கியது. உடனே ராஜாங்க யந்திர முழுவதும் கொடுமைகளைச் செய்ய முடுக்கி விடப்பட்டது. கவர்ன்மெண்டால் கிரிமினல் குற்றங்கள் சாட்டப்பட்டு ஜனங்கள் கொடுமையாய்த் தண்டிக்கப்பட்டார்கள். குற்றஞ்செய்தவர்களும் செய்யாதவர்களும் ஒருங்கே துவைத்துத் தள்ளப்பட்டார்கள். 1830-ம் வருஷம் பிரான்ஸில் ஜனங்கள் தங்கள் அரசனை ஒழுங்கீன ஆட்சிக்காக நீக்கி விட்ட விவரங்கள் இடாலியில் பரவியவுடன், இடாலியர் அவ்வருஷமே மறுபடியும் மும்முரமாய்க்கலகஞ்செய்யத் தொடங்கினார்கள். ராணுவ பலத்தின் உதவி பெறுத இந்தக் கலகங்களை அடக்குவதற்கு வெகு காலம் தேவையாயில்லை. இடாலியின் மத்திய பிரதேசத்திலிருந்த நாடுகளில் இந்தக் கலகங்கள் பரவ, ஆஸ்டிரிய சேனைகளால் உடனே அடக்கப்பட்டன.

உண்மையான தேசாபிமானிகள்.

1831-ம் வருஷமுதல் 1846-ம் வருஷம் வரையில் இடாலியருக்குள் அதிர்ச்சியும் கலக உணர்ச்சியும் உள்ளே புகைந்துகொண்டிருந்தன; ஆனால் வெளிவிட்டு மூளவில்லை. பிற்காலத்தில் ஜனத்

* கிரேட்பிரிட்டன், ஜெர்மனி, ருஷியா, பிரான்ஸ், ஆஸ்டிரியா ஆகிய இவ் வைந்து ராஜ்ஜியங்களும் வல்லரசு என்று சொல்லப்படும். இடாலிதேசம் ஒருமைப்பட்டு வல்லமை யடைந்தபிறகு ஆறாவது வல்லரசாக்கக் கருதப்படுகிறது.

தலைவர்களாய்க் கீர்த்தியைப் பெற்ற பெரிய மனுஷர்கள் இச்சமயம் தோன்றினர்கள். மஸ்ஸினி (Mazzini) 1808ம்-வருஷம் ஸர்டினியா ராஜ்யத்துப் பிரஜையாகப்பிறந்தார். சிறுஇடாலி (Young Italy) என்ற பேர்கொண்ட ஒரு கக்ஷிக்குத் தலைவரானர். தேசாபிமானங்கொண்ட இடாலியரை ஒன்று சேர்த்து, அவர்களின் முயற்சியால் இடாலியை சுயஆட்சி பெற்ற தேசமாகச்செய்து குடியரசு கவர்ன்மெண்டை ஸ்தாபிக்கவேண்டுமென்று நோக்கங்கொண்டார். உலகத்துப் பழைய ஸ்தாபனங்களை யெல்லாம் கடுமையாய்க் கண்டித்து ஜனங்களுக்குப் புதுமையிற் பற்று உண்டாகும்படி செய்தார். இடாலியருக்குள் தீவிர உணர்ச்சியை உண்டாக்குவதில் அவரைப்போல் வேறெவரும் உழைத்ததில்லை. ஆனால் சுயஆட்சி பெறும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குச் சதியாலோசனைகளையும் கொலைகளையுங்கூடச் செய்யலாமென்று அபிப்பிராயப்பட்டார். அதனால் அவருடைய கொள்கைகள் பொறுப்பேற்ற ராஜதந்திரிகளுக்குச்சம்மதமாயில்லை. அக்காலத்தில் இடாலியர் தங்கள் சுதந்தரத்துக்காகச் சண்டைசெய்யவேண்டியிருந்ததோடு, எம்மாதிரியான கவர்ன்மெண்ட், ஜனநாயகத்தியமா ராஜாதிபத்தியமா, ஸ்தாபிப்பது என்பதை நிச்சயிக்கும் படியாயிற்று. எவ்விதமான ராஜாங்க ஸ்தாபனம் தங்கள் தேவைகளுக்கு ஏற்றதாயிருக்குமென்று ஆராய்ந்து நிர்மானிக்கவேண்டியிருந்தது. சுயேச்சாதிகாரம்பெற்ற கவர்ன்மெண்டை ஸ்தாபித்து அதற்கு அரசர் ஒருவரை அதிபதியாக அங்கீகரிப்பதா, அல்லது அரசரினில்லாமல் ஒரு பார்லிமெண்டை ஸ்தாபித்து அதற்கு ஒரு பிரஸிடென்டை குறித்தகாலத்துக் கொருமுறை நியமித்துக்கொள்வதா, அல்லது பற்பல இடாலிய நாடுகளையெல்லாம் கான்பிடரேஷன் என்று ஒரு கூட்டமாகச் சேர்த்து சக்கரவர்த்தியால் நடத்தப்படும் ஒரு பொது ஏகாதிபத்யத்தை ஸ்தாபிப்பதா என்று பல பிரசினைகள் தேசாபிமானிகளுக்குள் உதித்தன. அனுபோகம் பெற்ற அநேக தேசாபிமானிகள் ராணுவபலத்தின் சகாயமின்றி ஆஸ்டிரியாவின் வல்லமையை எதிர்த்துச் சுயஆட்சி ஸ்தாபிப்பது சாத்தியமில்லையென்று நினைத்தார்கள். அச்சமயம் இடாலிய நாடுகளுள் ஒன்றுகிய ஸர்டினியா ராஜ்யத்தின் அரசர் தாராள நோக்கங்கொண்டவராயும் ஜன சுதந்தரங்களை மதிப்பவராயும் காணப்பட்டார். அவர் தம்முடைய அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று

ஆசைப்பட்டு மற்ற இடாலிய நாடுகளிலிருந்த தேசாபிமானிகளுக்கு உதவிசெய்ய முன்வந்தாரென்று சொல்லப்படுகிறது. அதெப்படியாயினும், அவ்வரசரின் உதவியைப் பெற்று ஜனங்களைக் கொடுங்கோன்மையினின்று விடுவிக்கலாமென்ற எண்ணம் அகேகர் மனதில் உறுதிப்பட்டது. ஆகையால், மஸ்ஸினி பெரும் புரட்சியை உண்டுபண்ணி அரசர்களில்லாமலே குடியரசை ஸ்தாபிக்க எண்ணங்கொண்டதை அகேகர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் மஸ்ஸினி தமக்கிருந்த அடங்கா தேசாபிமானத்தின் வேகத்தாலும் அளவிறந்த பிரசங்க சக்தியாலும் எழுத்துவன்மையாலும் ஜனங்களுக்குள் புதிய உணர்ச்சிகளை மூட்டிவிட்டு, ஐரோப்பிய ஜாதியாருள் உயர்பதவியை வகிக்கவேண்டுமென்ற சிறந்த நோக்கத்தை ஒவ்வொருவர் மனதிலும் பதியச்செய்தார். அந்த நோக்கத்தை அடைவதற்கு ஒவ்வொருவரும் எல்லாவிதமான உதவியுஞ் செய்யக் கடமைப்பட்டவர்களென்ற உறுதியும் மனதில் உண்டாகும்படி செய்தார். ஜனங்களின் மனப்பான்மையை உன்னதமான வழியில் திருப்பிவிட்ட பெருமை அவரைச்சேர்ந்தது. ஆயினும் அனுபோகத்துக் கேற்காத சில முறைகளை அவர் கைப்பற்றியதால் மற்ற தேசாபிமானக் கோஷ்டிகளிலிருந்து பிரிந்துவிடும்படி நேர்ந்தது. சுயஆட்சி பெறவேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்றும்போது இவ்வாறு முற்றிலும் மாறுபாடான கக்ஷிகளும், ஜனசமூகத்துக்கு ஆபத்தான கூட்டங்களும் தோன்றிப் பொது நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் உண்டாகாமலிராது. 1833-ம் வருஷம் மஸ்ஸினி பற்பல ஜாதியாரிலிருந்து துருப்புகளை பொறுக்கியெடுத்துச் சிறுபடை சேர்த்து ஸர்டினிய ராஜ்ஜியத்தின் ஒருபாகமாகிய லேவாய் பிரதேசத்தின் மீது படையெடுத்தார். இதனால் அவருக்கு யாதொரு பயனுங்கிடைக்கவில்லை. பிறகு ஸர்டினிய அரசரைக் கொலைசெய்ய எத்தனிக்கப்பட்டது. இவைகளால் ஸர்டினிய அரசரிடம் ஜனங்களுக்கு அதிக பிரியம் உண்டாகி, மஸ்ஸினி கக்ஷியாரின் கொள்கைகளில் நம்பிக்கை குறைந்துபோய், அவ்வரசரின் உதவியைப் பெறுவது முக்கியமென்று புலப்பட்டது.

அச்சமயம் கவூர் என்ற மற்றொரு தேசாபிமானி முன்வந்தார். அவர் நல்லகல்விமான்; பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதி மஸ்ஸினியின் முறைகளைக் கண்டனஞ்செய்து ஸர்டி

னிய அரசனின் ராணுவ உதவியால் இடாலிதேசம் சுய ஆட்சிபெற வேண்டுமென்று வற்புறுத்தினர். சில வருஷங்களுக்குப் பிறகு அவர் ஸர்டினிய ராஜாங்கத்தின் முதன் மந்திரியானர். அவர் அன்னிய தேசங்களில் சஞ்சாரஞ்செய்து, தேச ஸ்தாபனங்களையும் தேச விருத்திக்குற்ற மற்ற விஷயங்களையும் தீர ஆராய்ந்து அனுபோகம் பெற்றார். அவர் உண்மையான ராஜ தந்திரங்கொண்டவர். சாத்தியமான காரியங்கள் இன்னவையென்று அறிந்து அவைகளை சாமர்த்தியமாய் செய்துமுடிக்கும் குணத்தைப் பெற்றவர்.


மற்றொரு பெரிய தேசாபிமானியின் பேரையும் சொல்ல வேண்டும். பேர்பெற்ற கரிபால்டி சாமான்ய ஜனங்களிடத்தில் அதிக அபிமானம் வைத்து அவர்களுடைய பூரண விசுவாசத்தைப் பெற்றிருந்தார். அவர், ஜனங்கள் மனதில் போர்க் குணங்களை பரவச்செய்து, அவருடைய தேசாபிமான நெருப்பைத் தீண்டியவர்களுக்குள் அளவிறந்த பௌருஷத்தை மூட்டிவிட்டார். மஸ்ஸினி, கவூர், கரிபால்டி இம்மூன்று தேசாபிமானிகளும் ஸர்டினியா நாட்டில் பிறந்தவர்களாயினும் வெவ்வேறு வழிகளில் தேச ஊழியஞ்செய்து இடாலியை வல்லரசுகளில் ஒன்றுக இப்போதுள்ள நிலைமைக்கு உயர்த்தினர்கள். அந்த தேசாபிமானிகளின் முயற்சிகளால் இடாலியர் வெகு விரைவாய் முற்போக் கடைந்தார்கள்.

இடாலியருக்காக ஸர்டினிய அரசர் செய்த யுத்தங்கள்.

1846-ம் வருஷத்தில் போப் ஆசார்யரின் ஸ்தானத்தில் பயஸ் என்பவர் அதிகாரத்துக்கு வரவே, அவர் தாராள நோக்கங்களை வெளியிட்டு ஜன சுதந்தரங்களில் அபிமானங்காட்டி தம் நாட்டிலுள்ள ஜனங்களுக்கு சில ராஜாங்க சுதந்தரங்களைக் கொடுத்தார். இதைக்கண்டு இன்னுஞ் சில நாடுகளில் அரசர்கள் அவ்வாறு செய்யும்படி யாயிற்று.


1848-ம் வருஷத்தில் பிரான்ஸில் ஜனங்கள் தங்கள் அரசனை ஒழுங்கின ஆட்சிக்காக விலக்கி குடியரசை ஸ்தாபித்து பிரஸிடென்டை நியமித்துக்கொண்டபோது அந்த புரட்சியின் விவரங்கள் இடாலியில் பரவியவுடன் ஜனங்கள் நாலாபக்கங்களிலும் மும்மூமாய்க் கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். ஆஸ்டிரியாவுக்குட் பட்டிருந்த இடாலியர் மிகவும் உக்கிரமாய்க் சண்டை செய்யக் கிளம்பி ஆஸ்டிரியக் கவர்னரைப் பிடித்துக்கொண்டு ஆஸ்டிரியர்

இடாலிய தேசாபிமானிகள்.



காரிபால்டி

21-ம் பக்கம் பார்க்க.



கவூர்



மஸ்ஸினி



துருக்கி சுல்தான்—5-வது முகம்மது.
73-ம் பக்கம் பார்க்க



என்வர்பே

கனைத் துரத்தி குடியரசை ஸ்தாபித்தார்கள். இடாலி நாடுகள் பலவற்றில் இருந்த ஜனங்கள், ஸர்டினிய அரசரை அதிபதியாக அங்கீகரிப்பதாய் வெளியிட்டார்கள். இடாலிக்குத் தெற்கிலுள்ள நாட்டினும் கலகம் உண்டாயிற்று. ஜனங்களின் மனதில் அதிக வேகம் உண்டாயிருப்பதைக்கண்டு ஸர்டினிய அரசர் யுத்தஞ் செய்யத்தொடங்கினர். போப் ஆசாரியருடைய சேனையும் உதவிக்கு வந்தது.

ஆனல் ஆஸ்டிரியத் துருப்புகள் எங்கும் வெற்றி பெற்றன. போப்பினுடைய சேனை சரணமடைந்தது. ஸர்டினிய அரசர் தோல்வி யடைந்தார். இந்தத் தோல்விகளைக் கேட்டதும் இடாலிய நாட்டு மன்னர்கள் சிந்திக்க முடியாத கோரமான கொடுமை களைச்செய்து கலகத்தை அடக்கினர்கள். போப் தம்முடைய ராஜ்யத்திலிருந்த ஜனங்களை அடக்க முடியாததைக் கண்டு, இடாலியர் ஆஸ்டிரியாவுடன் யுத்தம் செய்ததைக் கண்டித்து அபிப்பிராயம் வெளியிட்டார். அதனல் ஜனங்களுக்கு இன்னும் அதிகமாய் ஆத்திரம் உண்டானதினல் போப் ஊரைவிட்டு ஓடிப்போகும் படி நேர்ந்தது. ஸர்டினிய அரசர் 1849-வருஷத்தில் மறுபடியும் ஆஸ்டிரியாவுடன் யுத்தஞ்செய்து தோல்வி யடைந்தார். போர்க்களத்திலேயே அவர் மனம் நொந்து தன் மகனுக்குக் கிரீடத்தைக் கொடுத்துவிட்டார். இடாலி தேசம் பற்பல பாகங்களாகப் பிளவுபட்டு, நூதன உணர்ச்சிகளால் பலவாறு மாறுதலடைந்து, பலவித கட்சிகளின் சுறுசுறுப்பால் மிகவும் கலக்கமடைந்திருந்தகாலத்தில், அவருடைய நடவடிக்கைகள் சிலருக்கு திருப்தியையும் சிலருக்கு அதிருப்தியையும் உண்டுபண்ணின. அவர் தம்முடைய அதிகாரத்தை இடாலி தேச முழுவதும் பரவச்செய்ய லாமென்று சுய நலங் கருதி மற்ற நாடுகளிலிருந்த கலகக்காரர்களுக்கு உதவி செய்து வந்தாரென்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். அது சரியல்ல வென்று சீக்கிரத்தில் வெளியாயிற்று. ஏனெனில் அவர் இறந்து போனதும் அவருடைய தாராள நோக்கங்களையும் ஜனபிமானத்தையும், அவர் சமய மறிந்து செய்த பெரிய உதவியையும் ஞாபகப்படுத்தி இடாலியரனைவரும் அவரை ஒப்பற்ற தேசாபிமானியெனத் தொழுதார்கள். தேச சுதந்தரத்துக்காக யுத்த களங்களில் உயிர் கொடுத்தவர்களும், கொடுங்கோன் மன்னர்களின் வதையால் உதிரஞ் சிந்தியவர்களும் மகான்களாக இடாலிதேச முழுவதி

லும் கொண்டாடப்பட்டனர். ஆகையால் ஜனங்கள் தங்கள் முயற்சிகள் அடக்கப்பட்டதைக் கண்டு அதைரியப்படவில்லை; ஸ்டினிய அரசர் தோல்வியுற்றதைக் கண்ட ஜனங்கள் சோர்வடைய வில்லை; கிறிஸ்தவ ஆசாரியராகிய போப் துறத்தப்பட்டதைக் கண்ட காதலிக் அரசர்கள் மூக்கியமாய் பிரஞ்சு சக்கரவர்த்தி, ராணுவ பலத்தைக்கொண்டு போப்பை மறுபடி சிம்மாசனத்தில் இருத்தி கரிபால்டியின் சிறிய படையை முறியடித்ததும், இடாலீய நாடுகளில் கொடுமையான அடக்குமுறைகள் உபயோகிக்கப்பட்டதும், இவைகள் போது ஜனங்களின் தேசாபிமான உணர்ச்சிகளை முற்றிலும் நசுக்கி விடவில்லை. உண்மையான மகான்கள் சொரிந்த உயிரும் உதிரமும் ஜனங்களின் தேசாபிமானச்சுடரை வளர்த்து வந்தன. ஜனங்கள் மற்றொரு முக்கியமான விஷயத்தில் திடமான அபிப்பிராயங் கொண்டு பயனடைந்தார்கள். கலகம் நடந்த காலத்தில், அநேக ஸ்தலங்களில் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டும், வலுவில்லாமல் எளிதில் அழிக்கப்பட்டுப் போனதை ஜனங்கள் கண்டார்கள்; அநேக மன்னர்கள் நெருக்கடியான சமயங்களில் ஜனசுதந்திரம் கொடுத்து பிறகு கூச்சமின்றி அதைப்பிடுங்கிக் கொண்டுவிட்டதும், மதாபிமானத்தால் போப் பிடமிருந்து சுதந்திரங்களைப் பெற்று ஒரு ஜனமாகலாமென்றிருந்த எண்ணம் பயனற்றுப் போனதும், எல்லா ஜனங்களுக்கும் வெளிப்படையாய்த் தோன்றின. அதனால் ஸ்டினியா அரசரின் ராணுவ உதவியினாலேயே சுய ஆட்சிபெற்று அவருடைய ஆதிபத்தியத்தின் கீழ் ஒரு ஜனமாகவும் ஒரு தேசமாகவும் வாழ வேண்டுமென்று எல்லாரும் உறுதிகொண்டு கக்ஷிவேறுபாடுகள் விரிய இடங்கொடுக்காமலிருந்தார்கள். எல்லா மன்னர்களையும் நீக்கி குடியரசைத்தான் ஸ்தாபிக்க வேண்டுமென்று மஸ்ஸினி கக்ஷிக்காரர்கள் அநேகர் இன்னும் பிடிவாதமாயிருந்தார்களென்பது உண்மையே. ஆயினும் அவர்களுக்கு முன்னிருந்த செல்வாக்கும் ஜனாதரவும் இப்போதில்லை.

புதிய ஸ்டினிய அரசரின் முயற்சிகள்.

புதிதாய் வந்த ஸ்டினிய அரசர் ஆஸ்டிரியர்களை இடாலியிலிருந்து தூரத்திவிட வேண்டுமென்று தன் பிதாவைவிட உற்சாகமாய் அபிப்பிராயங் கொண்டார். அவருடைய மனைவியும் தாயாரும் ஆஸ்டிரிய தேசத்தவர்களாயிருந்தும் அவர்மனம் சிறிதும் பாதிக்கப்படவில்லை. சேனையின் நிலையை

யும் பொக்கிஷ நிலையையும் விருத்தி செய்தார். 1853 ம்–வருஷத்தில் பிரசித்திபெற்ற தேசாபிமானியாகிய கவுர் ஸர்டினியாவில் முதன் மந்திரியானர். அவர் பற்பல ராஜாங்கக்கஷ்டகாலை ஒற்றுமையா யுழைத்துவரும்படிச் செய்தார். அவருடைய ராஜதந்திரமும் சீக்கிரத்தில் வெளிப்பட்டது. ஐரோப்பிய வல்லரசுகளுள் இங்கிலாந்தும் பிரான்ஸும் இடாலியரின் தேசாபிமானத்தில் உண்மையான அனுதாபங்கொண் டிருந்ததை அறிந்தார்; அவ்விரு தேசங்களில் இங்கிலாந்து ஸ்தொரு இடைஞ்சலும் செய்யாமல் தன் அபிப்பிராய பலத்தைக் கொடுப்பதன்றி வேறெவ்வித பலத்தாலும் உதவி செய்யக் கூடியதல்ல வென்பதை நன்றாய் உணர்ந்தார். ஆகையால் பிரஞ்சு சக்கரவர்த்தியாயிருந்த லூயிநெப்போலியனுடைய அபிமானத்தையும் நேசபாவத்தையும் விருத்தி செய்து,பிரஞ்சு ராணுவத்தை இடாலியருக்கு உதவும்படி 1858–ம் வருஷத்தில் ஏற்பாடு செய்தார்.

இடாலியருக்கு பிரஞ்சு சக்கரவர்த்தி செய்த உதவி.

1859-ம் வருஷத்தில் பிரஞ்சுத் துருப்புகளும் ஸர்டியனித் துருப்புகளும்,ஆஸ்டிரியாவுக்குச் சொந்தமான இடாலியர் வசிக்கும் பூமியின்மீது படையெடுத்து ஆஸ்டிரிய சேனையை இரண்டு முறை முறியடித்தன. இடாலியின் மத்யபாகத்திலிருந்த மன்னர்கள் வழக்கம்போல் ஓடிப்போனார்கள். பிறகு பிரஞ்சு சக்கரவர்த்தி யுத்தத்தை திடீரென்று நிறுத்திவிட்டு ஆஸ்டிரியாவுடன் சமாதானஞ் செய்துகொண்டார். ஆஸ்டிரியாவுக்குச் சொந்தமாயிருந்த இரண்டு இடாலிய மாகாணங்களில் மிலானே மாத்திரம் விடுவிக்க வெனிஸ் மாகாணம் ஆஸ்டிரியாவினிடத்திலே விட்டுவிடப்பட்டது. இடாலிதேச முழுவதையும் ஆஸ்டிரியரின் ஆட்சியினின்றும் விடுவிப்பதாக முதலில் வாக்களித்த பிரஞ்சு சக்கரவர்த்தி பிறகு இவ்வாறு செய்துவிட்டதைக் கண்டு ஸர்டினிய கவர்ன்மெண்டும் இடாலிய தேசாபிமானிகளும் பெரிய ஏமாற்ற மடைந்தார்கள். இடாலி பலங்கொண்ட தேசமாகிவிட்டால் அபாயகரமானதென்றும் ஆஸ்டிரியாவில் யுத்தத்தை விஸ்தாரமாய் நடத்தினால் பிரஷ்யா அச்சமயமறிந்து பிரான்ஸின்மீது படையெடுக்குமென்றும் நினைத்து பிரஞ்சு சக்கரவர்த்தி திரும்பிப் போய் விட்டார்.

இடாலியர் அனைவரும் ஒருஜன மானுர்கள்.

1860–ம்வருஷம் இடாலியின் மத்யபாகத்திலிருந்த நாடுகளெல் லாம் ஸர்டினியாவுடன் சேர்ந்துகொண்டன. இடாலிக்குத்தெற்கி லிருந்த நாட்டில் கரிபால்டி தமது சிறிய வாலண்டியர் படையைச் செலுத்தி வெகு உக்ரமாய் யுத்தஞ்செய்து ஸர்டினிய அரசரின் பே ரால் நாடுமுழுவதையும் வசப்படுத்திக்கொண்டார். ஸர்டினியசேனை அந்நாட்டின் காப்புக்கு அனுப்பப்பட்டது. டைபர் இருக்கும் முக் கிய ஸ்தானமாகிய ரோம் நகரத்தில் குடியரசு ஸ்தாபிக்கவேண்டு மென்ற கட்சிக்காரர்களுக்கு உதவிசெய்ய கரிபால்டி தீர்மானித்தார். ஆனல் ராஜதந்திரமறிந்த கவூர் அவ்வாறு கிறிஸ்துவமதாசாரியாரை அப்புறப்படுத்தினல் ஐரோப்பிய வல்லரசுகளின் அனுதாபத்தை நிச் சயமாய் இழந்து போகும்படி நேரிடுமென்றும், ரோமில் குடியரசு ஸ்தாபித்தால் மற்ற இடாலிய பிரதேசங்களைப்போல அந்நகரம் ஸர் டினிய அரசரின்கீழ் ஐக்கியமாகாம லிருக்குமென்றும் நிணத்தார் ஆகையால் தேசநன்மையைக் கருதி கரிபால்டியின் முயற்சி தற் போது நிறைவேறக்கூடாதென்று ஸர்டினிய மந்திரியாகிய கவூர் நிச் கயித்தார். ஆகையால் அங்கு கரிபால்டி படையெடுத்துச்செல்வதற்கு முன்னதாக அவர் ஸர்டினிய சேனையை அனுப்பி, போப்பினுடைய வாசஸ்தலமாகிய ரோம்நகரத்தை நெருங்காமல் போப்புக்குச் சொந் தமான மற்ற பிரதேசங்களில் செலுத்தி அவைகளை வசப்படுத்திக் கொண்டு,ஸர்டினிய ராஜ்யத்துடன்அவைகளை சேர்த்துவிட பிரஞ்சு சக்கரவர்த்தியின் அனுமதியையும் பெற்றார். 1861–ம் வருஷத்தில், ஸர்டினிய அரசராகிய விக்டர் இமானுவேல் இடாலிதேசத்தரச ராக டியூரின் நகரத்தில் பயிரங்கமாய் அங்கிகரிக்கப்பட்டார். பூர்வ காலமுதல் ரோம் நகரம் மகாக்கியாதிபெற்று இடாலியின் தலைந க ராக விளங்கிவந்தது. அச்சமயத்தில் அந்த நகரம் போப்பினு டைய வசத்திலும்,மற்றெரு சரித்திரப் பிரஸித்தி வாய்ந்த வெனிஸ் நகரம் ஆஸ்டிரியாவின் வசத்திலும் இருந்தன. இவை இரண்டுந் தான் இனி இடாலி தேசத்துடன் சேர்க்கப்பட வேண்டியவை. கியாதிபெற்றதேசாபிமானியாகிய கவூர் 1861-ம் வருஷத்தில் இறந்து போகுமுன், ரோம் நகரத்தை சமாதான வழிகளில் வசப்படுத்திக் கொள்ள கிறிஸ்துமதாசாரியரின் சம்மதத்தையும்பிரஞ்சுசக்கரவர்த்தி பின்சம்மதத்தையும்பெறவேண்டுமென்றுருக்குபிறமனஸ்தாபம்உண்

டாகாமல் முயற்சிசெய்துவந்தார்.பூர்வகாலமுதல் கியாதிபெற்ற ரோம் நகரத்தைப் பெறுமல் எந்த இடாலிய தேசாபிமானியும் திருப்தியடைய மாட்டான்.

இடாலிதேசத்தை ஒருமைப்படுத்துவதில் முழுசாமர்த்தியமும் தேவையாயிருந்தது. இடாலியின் தெற்கு பாகத்திலுள்ள ஜனங்கள் சரித்திர பூர்வமாகவும் பழக்க வழக்கங்களிலும் குணதிசையங்களிலும் மனோபாவங்களிலும் வடக்கு, பாகத்து ஜனங்களோடு வித்தியாசப்பட்டிருந்தார்கள். சமர்த்தியமான நிர்வாகமுறைகளால் ஒற்றுமையை விருத்தி செய்யவேண்டியிருந்தது. இடாலியைப்போல ஜெர்மனியிலும்,தெற்குப்பாகத்தில் வசிப்பவர்களுக்கும் வடக்குபாகத்தில் லிருப்பவர்களுக்கும்,பழக்க வழக்கங்களிலும் மதத்திலும் வித்தியாசங்கள் இருந்தன. பிரான்ஸில், தெற்கிலும் வடக்கிலும் இருந்தவர்கள் பாஷையிலுங்கூட ஒருவாறு வேறுபட்டிருந்தனர். தென் ஆப்பிரிக்கா பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டில், ஆதியில் டச்சு ஜாதியாரைச் சேர்ந்தவர்களான போவர்களுக்கும் பிறகு வந்த பிரிட்டிஷாருக்கும் அநேக வித்தியாசங்களிருந்தன. அத்தேசங்களிலெல்லாம் ஜனங்கள் ஒரே ஆட்சிக்கு உட்பட்டு சட்டதிட்டங்களால் சமத்வமாய்ப் பராரட்டப்பட்டபடியால் காலக்கிரமத்தில் ஒருமைப்பட்டு வந்தார்கள். நம் இந்தியாவில் இந்துக்களும் முகம்மதியரும் ஒரேவிதமான பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்து சமத்துவ உணர்ச்சியைப் பெற்று, படிப்பும் அனுபோகமும் கொண்டவர்கள் ஒற்றுமையாய் வாழ்வதின் அவசியத்தையும் பலன்களையும் வர வர அறிந்துவருகிறார்களல்லவா?

1866-ம் வருஷத்தில் பிரஷ்யா, ஆஸ்டிரியா மீது யுத்தம் தொடங்குவதற்கு முன்னுல் இடாலி கவான்மெண்டின உதவியை அடைய விரும்பிற்று. இடாலியர்கள் இச்சமயத்தைக் கைவிடக் கூடாதென்று ஆஸ்டிரியாவின்மீது படையெடுக்க நிச்சயித்தார்கள். ஆனுல் மூன்று முறைகடமையாய்த் தோல்வியடைந்தார்கள். ஆயினும் அந்த யுத்தமுடிவில் பிரஷ்யா வெற்றியடைந்து விட்டபடியால் முதலில் செய்துகொண்ட ஏற்பாட்டின்படியே இடாலியருக்கு வெனிஸ் நகரத்தையும் வெனிஸ் மாகாணத்தையும் வாங்கிக்கொடுத்தது. இடாலியர்கள் இதுவரையில் செய்து வந்த யுத்தங்களில் கரிபால்டி தமது வாலன்டியர் படையையும் ஸர்டினிய படைகள் சிலவற்

றையும் செலுத்தி அநேக சமயங்களில் ஆஸ்டிரியப் படைகளை முறி யடித்திருக்கிறார்.

ரோம் நகரம் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

கரிபால்டி அடக்க முடியாத தேசாபிமானம் மேலிட்டவராய் ரோம் நகரத்தைப் பிடிக்காத வரையில் க்ஷணபோதும் சும்மா யிருப் பதில்லை என்று உறுதி செய்து தம்முடைய வாலண்டியர் படையைச் செலுத்தி 1862-ம் வருஷம் அந்நகரதின் மேல் படையெடுத்தார். யுத்தத்தில் தோல்வி யடைந்தும் காயமடைந்தும் மனந்திடன் சிறி தும் குன்றுதவராய் ரோம் நகரத்தைப் பிடித்தே தீருவது அல்லது இறந்துபோவது என்று சபதஞ்செய்தார். பிரஞ்சு சக்கரவர்த்தி ரோம் நகரத்தைக் காக்கும்படி தமது சேனையை அனுப்பினர். அவ் வாறு பிரஞ்சு சக்கரவர்த்தியின் அனுதாபத்தை யிழந்து விரோ தத்தை சம்பாதிப்பது உசிதமல்ல வென்று நினைத்த இடாலிய அரசர், தேசாபிமானங் கொண்ட வாலண்டியர்களை சண்டை செய் யாமல் தேசத்தின் கௌரவத்தைக் காக்கும்படி வேண்டினர். வாலண்டியர் படை தோல்வி யுற்றபோதிலும் கரிபால்டியின் சப தத்தைக்கேட்ட அரசர் அவரை அரெஸ்ட் செய்து அவருடைய கௌரவத்தையும் தேசத்தின் நன்மையையும் காத்தார். பிறகு பிரஞ்சு சக்கரவர்த்தி 1870-ம் வருஷத்தில் லிடானில் தோல்வி யுற்று சரணமடைந்தபோது, போப் வேறுவித ஆதரவுபெறுத தால் ரோம் நகரத்தை இடாலிய அரசரிடம் ஒப்புவிக்க சம்மதித் தார். ரோம்நகரம் சேர்த்துக்கொள்ளப் பட்டவுடன் இடாலிதேசம் பூரணம் பெற்றது.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு கரிபால்டி ரோம் நகரத்துப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு (இடாலிப்) பார்லிமென்டுக்கு மெம்பராக அனுப்பப்பட அவருடைய அடங்காத் தேசாபிமானம் திருப்தியடைந்தது.

வல்லரசுகளுக்குள் 6-வதாகக் கருதப்படுகிறது.

இடாலிதேசம் அவ்வாறு பிறந்து வளர்ந்து இப்போது ஆறு வல்லரசுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதற்குமுன், கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, ருஷியா, பிரான்ஸ், ஆஸ்டிரியா இவ்வைந்தும் வல்லரசாகக் கருதப்பட்டது. இப்போது இடாலி தன் கடற்படை தரைப்படைகளின் வன்மையாலும் அதன் செல்வாக்கினாலும்

ஆறுவதுவல்லரசாக கடைசி ஸ்தானத்தை வகிக்க உரிமைகொண்டிருக்கிறது. அதோடு என்று மழியாத பூர்வ சரித்திரத்துப் பெருமையையும் பெற்றிருக்கிறது. அது உலகப் பிரஸித்தி பெற்ற ரோம் ஏகாதிபத்யம் தோன்றிய ஸ்தானமாகும். பூர்வ காலத்தில் ரோம் நகரம் பெரிய ராஜ்ஜியமாகி பிறகு பெரிய ஏகாதிபத்யமாக மாறி, ஐரோப்பா கண்டத்தில் காலா பக்கங்களில் இருந்த இருள் திணிந்த ஜாதியாருக்குள் நாகரிக ஒளியைப் பரவச்செய்து, ராஜாங்க ஸ்தாபனங்களையும் சட்ட திட்டங்களையும் கற்பித்து, மகாக் கியாதி பெற்று விளங்கிற்று. பிறகு அதன் நிலைமை விபரீதமான மாறுதல்களடைந்து 19-ம் நூற்றாண்டில் மேலே சொல்லப்பட்டு வந்தபடி மிகவும் கேடு கெட்டிருந்தது. கொடுங்கோன் மன்னர்களின் மனோ பாவங்களுக்கு முற்றிலும் இரையாகி படாத பாடுபட்டு உயிரும் உதிரமும் தாராளமாய்ச் சொரிந்து, இழந்த கண்களை மறுபடி அருமையாய்ப் பெற்ற ஏழை தேசம். உலக சரித்திரத்தில் ஒவ்வொரு காலத்தில் சில ஜாதியார் அடிமைகளின் நரகத்தில் அகப்பட்டு உழன்று, அதனின்றும் ஈடேறுவதற்காக, இயற்கையாகவே மானிடப்பிறவிகளுக்குரிய சுதந்தரத்தைப் பெறவிரும்ப, மகா பரிசுத்தமான சுதந்தர தேவதை அளவு கடந்த வேதனையை யுண்டுபண்ணி கோரமான உதிரவெள்ளத்தில் உதிப்பது விதியின் விநோதமாகு மன்றே ?

1848 ப-வருஷத்தில் ஐரோப்பாவில் சுதந்தரப் புசல் வீசியடித்தபோது இடாலியரைப் போல ஆஸ்டிரியாவிலுள்ள அநேக ஜாதியார் ஒயாமற் போராடினர்கள். அவ்வாறு போராடியும் சுதந்தரக் கண்களைப்பெறுதஜாதிகளுள் ஆஸ்டிரியாவிலுள்ள ஸ்லாவ்ஜாதியரை சேர்க்கவேண்டும். அவ்விஷயம் இப்போதுநடந்துவருகிற பகாயுத்தத்துக்கு முக்கியமாயுள்ள சில காரணங்களுள் ஒன்று. ஆஸ்டிரிய ஏகாதிபத்யத்தில் சுதந்தரத்துக்காக நடந்த கலகங்களைப்பற்றி இனி சொல்லப்படும்.

4-வது அத்தியாயம்.

ஆஸ்டிரிய ஏகாதிபத்யத்தில் மாறுதல்கள்.

1815-ம் வருஷத்தில் நெப்போலியனுடைய ஆட்சி முடிந்தவுடன் ஆஸ்டிரியத் தலைநகராகிய வியன்னாவில் வல்லரசுகள் ஒரு காங்கிரஸ் கூடி அவரால் வெல்லப்பட்ட பிரதேசங்களைப் பங்கிட்டுக்கொண்டபோது, ஆஸ்டிரியா அதன் வடமேற்கிலுள்ள இரண்டு ஜெர்மன் பிரதேசங்களையும் அதற்குத் தென்மேற்கிலுள்ள மிலான், வெனிஸ் என்ற இடாலியப்பிரதேசங்களையும் பெற்றுக்கொண்டது. அதுமுன்னல் ஜெர்மன்நாடுகளில் ஒன்றாயிருந்து அப்போதுவிஸ்தரணத்திலும் செல்வாக்கிலும் விருத்தியடைந்தது. ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தில் ஜெர்மானியர், ஹங்கேரியர், இடாலியர், ஸ்லாவ்கள் ஆக நான்கு வெவ்வேறுஜாதியார் இருந்துவந்தார்கள். ஆஸ்டிரியகவர்ன்மெண்டு, தங்கள் பிரஜைகள்கலகஞ் செய்யாத அமைதியாய் வாழும்படி ஆட்சிபுரிவதேதடுநிற்காமல்ஜெர்மன்நாடுகளுக்குத்தலைமைவகிக்கவேண்டுமென்றும் இடாலிய நாடுகளிலெல்லாம் மேலதிகாரம்செலுத்தவேண்டுமென்றும் எண்ணினார்கள். அம்மூன்றுவிதமான வழிகளிலும் முயற்சி செய்யத் தொடங்கியதில்,எவ்வழியிலும் பயன்பெறாமல்,ஜெர்மன் நாடுகளுடனிருந்த சம்பந்தம் முற்றிலும் அற்றுப்போய், இடாலியில் தனக்குச் சொந்தமாயிருந்த மாகாணங்களையும் அத்தேசத்தில் தான் செலுத்திய அதிகாரத்தையும் இழந்து, ஏகாதிபத்திய முழுவதும் ஜனங்கள் செய்த கலகங்களால் கொதித்துக் கொண்டிருந்தது.

1848-ம் வருஷத்தில் உண்டான கலகங்கள்.

1789-ம் வருஷத்தில் பிரான்சில் நேர்ந்த பெரும் புரட்சியாலும், பிறகு நெப்போலியனுடைய ஆட்சியாலும், எல்லா ஐரோப்பிய ராஜ்ஜியங்களில் நூதன உணர்ச்சிகள் தோன்றினாற் போல் ஆஸ்டிரியாவிலும் உண்டாயின. ஜனங்கள் தங்களை ஆள்கிற ராஜாங்கத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் பிரதிநிதிகளைக் கொண்டு தங்கள் விருப்பங்களுக் கேற்றவாறு ராஜ்யத்தை நடத்த வேண்டுமென்றும் மூச்சிய நோக்கங் கொண்டு கலக்கஞ் செய்தார்கள்.

ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தில் நான்கு முக்கிய ஜாதியார் இருந்தார்கள்.

(1) ஜெர்மானியர்.—இவர்கள் ஆஸ்டிரியா தேசத்திலும் அதன் தலை நகராகிய வியன்னாவிலும் இருந்தவர்கள். இப்போது ஆஸ்டிரியர்கள் என்று சொல்லப் படுபவர்கள் அவர்கள்தான். அவர்கள் ஜனச்சுதந்தரங்களைக் காக்கும்படியான சட்ட திட்டங்களின்படி ராஜாங்கத்தை அமைத்துப் பிரதிநிதிச் சபைகளைக்கொண்டு பரிபாலனம் செய்ய வேண்டுமென்று விரும்பினர்கள். அந்த காலத்தில் ஆஸ்டிரிய அரசர்கள் தங்கள் இஷ்டப்படி நிர்வாகஞ் செய்து வந்தார்கள்.

(2) ஹங்கேரியர்.—இவர்கள் மாக்யார் என்றும் சொல்லப் படுவார்கள். தங்களைப் பற்றினமட்டில், ஆஸ்டிரியாவின் அதிகாரத்தை முற்றிலும் நீக்கி சுய ஆட்சி ஸ்தாபிக்கவேண்டுமென்று விரும்பினர்கள்.

(3) ஸ்லாவ்.—இவர்கள் ருஷியர் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஹங்கேரி பிரதேசத்திலும் அதற்குக் கிழக்கிலும் ருஷிய எல்லைக்கருகிலுள்ள பாகங்களிலும் இருப்பவர்கள். அவர்கள் ஹங்கேரியரைப் போல சுய ஆட்சிபெற விரும்பி, முடிவில் ருஷியருடனாவது, பால்கன் பிரதேசத்தைப் போன்ற சுற்றுப்பாகங்களிலுள்ள தங்கள் இனத்தாருடனாவது சேர்ந்து தனியாய், வாழவேண்டுமென்று நோக்கங்கொண்டவர்கள்.

(4) இடாலியர்.—இப்போதுள்ள இடாலி தேசத்தின் வடகிழக்குப்பாகம் (மிலான், வெனிஸ்), 1848-ம வருஷத்தில் ஆஸ்டிரிய ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. அவர்கள் மற்ற இடாலியர்களுடன் ஒன்றுப்சேர்ந்து ஒரே அரசரின்கீழ் ஒரே ராஜாங்கத்தில் வாழவேண்டுமென்று விருப்பங்கொண்டார்கள்.

1848-ம் வருஷத்தில் பிரான்ஸில் நடந்த ராஜாங்கப் புரட்சியின் விவரங்கள் ஆஸ்டிரியப்பிரஜைகளுக்குத் தெரிந்தவுடனே அவர்களுள் புகைந்துகொண்டிருந்த கலக உணர்ச்சிகளை நாலாப்பக்கங்களிலும் மூளும்படி விசிறிவிட்டன. ஆஸ்டிரியத் தலை நகராகிய வியன்னாவில், மார்ச்சு மாதம் 13-ந்தேதி, ஜனங்கள் கலாசாலை மாணவர்களின் தலைமையின் கீழ் மும்முரமாய்க் கலஞ்செய்து

நகரத்தை வசப்படுத்திக்கொண்டு, ஆஸ்டிரிய சக்கரவர்த்தியை சுய ஆட்சி கொடுத்து ஒடிவிடும்படி செய்தார்கள்.

இடாலிய கலகக்காரகளும் ஸர்டினிய அரசரும் ஏப்ரல் மாதம் முதற்கொண்டு ஆஸ்டிரிய சேனையை எதிர்த்து யுத்தஞ் செய்தார்கள். வடமேற்கிலுள்ள பொஹீமியா மாகாணத்திலிருந்த ஸ்லாவ் ஜனங்களும் கிளம்பினர்கள். ஆஸ்டிரிய சக்கரவர்த்தி வியன்னாவை விட்டு விலகியவுடன் ராணுவத்தைத் திரட்டிக் கலகத்தை அடக்க ஏற்பாடு செய்தார்.

ஹங்கேரியின் கலகம்.

ஆஸ்டிரிய சேனை, தயாரான உடன் ஸ்லாவ் ஜனங்களை அடக்கி விட்டது. வியன்னா நகரத்தை முற்றுகை போட்டுப் பிடித்து கலகக் காரர்களை பயங்கரமாய்த் தண்டித்து, அடக்கிவிட்டது. ஆஸ்டிரிய சக்கரவர்த்தியும் ஜூன் மாதத்தில் வியன்னாவுக்குத் திரும்பி வந்தார். இடாலிய கலகக்காரர்களும் ஸர்டினிய அரசரும் ஜூலை மாதம் 25-ந் தேதி முற்றிலும் தோல்வியடைந்து பின் சென்றார்கள். இவ்வாறு கலகம் சிறிது தணிந்தவுடன், ஹங்கேரிய ஜனங்கள் பெரிய சபை யொன்று கூடிச் சுதந்தரம் பெறவேண்டுமென்ற விருப்பத்தை அறிவிக்க, சக்கரவர்த்தி அதை நிறைவேற்றச் சம்மதித்தார். ஹங்கேரியர் இவ்வாறு சாதகமடைந்ததைக் கண்டு சென்கிழக்குப் பாகத்திலிருந்த ஸ்லாவ் ஜாதியார் ஹங்கேரியர் பேரில்பொறுமையும் விரோதமும் கொண்டு, ஆஸ்டியாவின், தூண்டுதலால் அவர்களின் கலக முயற்சிகளை அடக்க முன்வந்தார்கள். அந்த ஸ்லாவ் சேனையை எதிர்க்கும் பொருட்டு ஹங்கேரிய சேனை யொன்று திரட்டப்பட்டது. சக்கரவர்த்தி முன்பு ஹங்கேரியருக்கு வாக்களித்த சுதந்தரங்களை மறுத்து ஆஸ்டிரியசேனை ஒன்றையும் அனுப்பினார். ஹங்கேரிய சபையார் சக்கரவர்த்தியின் அதிகாரத்தை ஒப்புக்கொள்ளாமல் மறுத்து யுத்தம் தொடங்கினர்கள். செப்டம்பர் மாதத்தில் ஸ்லாவ்சேனையுடன்போர் செய்து ஹங்கேரியர் தோல்வியடைந்தார்கள். வியன்னாவிலிருந்த ஆஸ்டிரிய ஜனங்கள் ஹங்கேரியரின் மேல் அபிமானங்கொண்டு கலகஞ்செய்ய, சக்கரவர்த்தி மறுபடியும் நகரத்தை விட்டு விலகும்படி நேர்ந்தது. வியன்னா நகரத்தை ஆஸ்டிரிய சேனையும் ஸ்லாவ் சேனையும் முற்றுகைபோட்டுத் தாக்கிக்கொண்டிருந்த போது, ஹங்கேரிய சேனை முற்றுகையை விடுவிக்க விரைந்து

வந்தது. ஆனல் அக்டோபர் 30-ந்தேதி ஹங்கேரிய சேனை தோல்வியடைந்ததால், மறுதினம் வியன்னு நகரமும பிடிபட்டது. டிசம்பர் 2-ந்தேதி ஆஸ்டிரிய சக்கரவர்த்தி பர்டினன்ட், சிம்மாசனத்தினின்றும் விலகிவிட, அவருடைய மருமகன் பிரான்ஸிஸ் ஜோசப் சக்கரவர்த்தியானர். ஹங்கேரியர் அவரைச் சக்கரவர்த்தியாய் ஏற்க மறுத்துவிட்டு, 1849-ம் வருஷ ஆரம்பத்தில் யுத்தம் தொடங்கினர்கள்.

அதே வருஷத்தில் இடாலியரும் ஸர்டினிய சேனையும் மற்றொருபுறத்தில் யுத்தஞ்செய்துவந்தார்கள். ஸர்டினிய அரசர் தோல்வியடைந்து மார்ச்சு மாதத்தில் யுத்தத்தைக் கைவிட்டார். ஆனல் வெனிஸ் நகரத்திலிருந்த இடாலியர் பின்னும் 5 மாத காலம் எதிர்த்துச் சண்டை செய்தார்கள்.

ஹங்கேரியர் ஏப்ரல் மாதம் முடிய வெகு தீரத்துடன் ஓயாமல் சண்டை செய்து ஆஸ்டிரிய சேனையைத் துரத்தியடித்து வியன்னு நகரத்தை நோக்கிச் சென்றார்கள். ஆஸ்டிரிய சக்கரவர்த்தி ஹங்கேரியரை அடக்கமுடியாமல் ருஷியாவின் உதவியைப் பெற்றுக் கொண்டார். ஜூன் மாதத்தில் ருஷிய சேனை ஹங்கேரியரோடு யுத்தஞ் செய்து ஆகஸ்ட்டுமாத முடிவில் கலகத்தை அடக்கிவிட்டது. ஹங்கேரியர் மிகவும் கொடுமையாய்த் தண்டிக்கப்பட்டார்கள். ஹங்கேரிய ராணுவத் தலைவர்களையும், பார்லிமெண்ட் தலைவர்களையும் ருஷியர் சுட்டுக் கொன்று ஜனங்களை அடக்கினர்கள்.

கிரிமியா யுத்தத்தில் ஆஸ்டிரியாவின் நடவடிக்கை.

1853-ம் வருஷம் அக்டோபர் 23-ந்தேதி, துருக்கியிலுள்ள கிருஸ்தவர்களின் சுதந்தரத்தைக் காப்பதாக ருஷியா முன் வந்து துருக்கியுடன் யுத்தந்தொடங்கிற்று. ருஷியாவின் நடவடிக்கைகளை, ஆஸ்டிரியா பிரான்ஸ் இங்கிலாந்து இம்மூன்று தேசத்து சுவர்ன்மெண்டுகளும் கண்டித்தன. பிரான்ஸும் இங்கிலாந்தும் துருக்கியுடன் சேர்ந்து ருஷியாவின்மீது யுத்தஞ்செய்து கருங்கடலிலுள்ள கிரிமியா என்ற ருஷிய மாகாணத்தைத் தாக்கின. ஆஸ்டிரியா முன்பு வாக்களித்தபடி துருக்கிக் கஷியில் ஆரம்பத்தில் சோமநம்போனுமும், ரொமேனியாவுக்கு வடக்கில் கருங்கடலின் கரையிலுள்ள பெஸ்ஸாபியா என்ற ருஷிய மாகாணத்தில்

தன் சேனையை துருக்கிக்கு உதவியாய் அனுப்பி, அந்த பிரதேசத்தில் யுத்தத்தை அடக்கி விட்டது. யுத்த முடிவில் அந்த மாகாணத்தை ருஷ்யா இழக்க விட்டது. இதனால் ருஷ்யாவுக்கு ஆஸ்டிரியாவின்மீது தீராப் பகையுண்டாயிற்றென்பதை பின்னால் சொல்லப்படும் சரித்திரத்தில் கவனிக்கும்படி நேரும்.

ஜேர்மனியிலும் இடாலியிலுமிருந்த அதிகாரத்தை இழந்து விட்டது.

பிறகு 1859-ம் வருஷத்தில் ஸர்டினிய அரசரும் பிரஞ்சு சக்கரவர்த்தியாகிய நெப்போலியனும் ஆஸ்டிரியாவின்மீது படையெடுத்துச் செல்ல, ஆஸ்டிரியா, மிலான் பிரதேசத்தை இடாலிக்குக் கொடுத்துவிட்டதென்று முன்பு சொல்லப்பட்டிருக்கிறது.

பிறகு 1866-ம் வருஷத்தில் பிரஷ்யா இடாலியுடன் சேர்ந்து கொண்டு ஆஸ்டிரியாவின் மீது படையெடுக்க, ஆஸ்டிரியர் ஸாடோவா சண்டையில் முறியடிக்கப்பட்டு ஜெர்மன் நாடுகளிலிருந்த செல்வாக்கை இழந்து, வெனிஸ் பிரதேசத்தை இடாலியருக்குக் கொடுத்த விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹங்கேரிநாடு சுய ஆட்சி பெற்றது.

அதற்கு முன், 1861-ம் வருஷத்தில் ஆஸ்டிரியாவிலுள்ள பற்ப ஜாதியர் ராஜாங்க விஷயங்களில் கலக்க கொள்ள வேண்டுமென்று அதிகமாய் விரும்பினபடியால், ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் பிரதிநிதியை பார்லிமெண்ட் சபைக்கு அனுப்பவேண்டுமென்று ஆஸ்டிரிய சக்கரவர்த்தி அறிவித்தார். ஆனால் ஹங்கேரியர் அந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்க மறுத்து, ஆஸ்டிரிய ஏகாதிபத்திய கவர்ன்மெண்டில் ஆலோசனை செய்வதோடு, அதனுடன் சம்பந்தப்படாமல் பிரத்தியேகமாகத் தங்களுக்கு சுயஆட்சிகொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். உள்நாட்டு நிர்வாகம் முழுவதும் ஆஸ்டிரியாவுடன் சம்பந்தப்படாமல் நடத்தப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். ஹங்கேரியர் ஆஸ்டிரிய கவர்ன்மெண்டுக்கு வரிகளைக் கொடுக்காமலும் இன்னும் பலவீதமாயும் தொந்தரவு செய்து வந்தார்கள். கடைசியில் 1865-ம் வருஷம் அவர்களுக்கு சுயஆட்சி கொடுத்துவிடுவதாக பிரான்ஸிஸ் ஜோசப் சக்கரவர்த்தி நிச்சயித்தார். பிரான்ஸிஸ் ஜோசப் ஆஸ்டிரிய அரசராக முன்பு மகுடாபிஷேகம் செய்யப்பட, 1867-ம் வருஷம் ஜூன் 8-ந் தேதி மறுமுறை ஹங்கேரிய அரசராக, ஹங்கேரிய நாட்டு முக்கிய ஸ்தலமா

கிய பெஸ்த் நகரத்தில் அவருக்கு மகுடாபிஷேகம் நடந்தது. ஆஸ்டிரிய – ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின் அமைப்பில் அந்த விசேஷத்தைக் கவனிக்க வேண்டும். ஏகாதிபத்ய சக்கரவர்த்தி, ஆஸ்டிரிய அரசராகவும் ஹங்கேரிய அரசராகவும் இரண்டுமுறை வெவ்வேறு காலங்களில் வேவ்வேறு இடங்களில் மகுடாபிஷேகம் செய்துகொண்டார். அவர் ஹங்கேரிய அரசராக அந்நாட்டு விவகாரங்களைப் பிரத்தியேகமாக நடத்துவார். ஆஸ்டிரிய அரசராக ஆஸ்டிரியா தேசத்தை நிர்வகிப்பார். ஏகாதிபத்யம் சம்பந்தமாகவுள்ள பொதுவான விஷயங்களை ஏகாதிபத்ய மந்திரிகளடங்கிய சபையின் உதவியைக் கொண்டு சக்கரவர்த்தியாகவிருந்து கவனிப்பார்.

ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தில், ஹங்கேரிய கவர்ன்மெண்டு ஆஸ்டிரிய கவர்ன்மெண்டைவிட அதிக செல்வாக்குப் பெற்றிருக்கிறது. ஹங்கேரிய நாட்டில் ஹங்கேரிய ஜனத் தொகை அதிகமாயிருப்பதோடு, அதிக கட்டுப்பாடும் ஒற்றுமையும் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்டிரியா தேசத்தில், 1890-ம் வருஷத்தில் எடுத்த ஜனத்தொகைக் கணக்கின்படி, ஆஸ்டிரியர்கள் 100-க்கு 37 வீதம் இருக்கிறார்கள். ஸ்லாவ் ஜனங்கள் 100-க்கு 59 வீத மிருக்கிறார்கள். இந்த ஸ்லாவ்ஜனங்களுக்குள் அதிகஒற்றுமையில்லையாயினும்அவர்கள் மொத்த ஜனத்தொகையில் ஆஸ்டிரியரைவிட அதிகமாயிருப்பதால் அந்த ஆஸ்டிரியர் பார்லிமெண்ட்சபையில்அதிக செல்வாக்குப் பெறுவதில்லை. ஹங்கேரிதேசத்தில், 1890-ம் வருஷத்துக் கணக்கின்படி, ஹங்கேரியர்100-க்கு 48 வீத மிருக்கிறார்கள். ஸ்லாவ் ஜனங்கள் 100-க்கு 19வீதமும் ஆஸ்டிரியர்100-க்கு13 வீதமு மிருக்கிறார்கள். ஆகையால் ஹங்கேரிய கவர்ன்மெண்டில் ஹங்கேரியருக்குச் செல்வாக்கு அதிகம். அதனால் ஹங்கேரியிலிருக்கும் மற்ற ஜனங்களும் ஹங்கேரிய ஜாதியாரின் நடையுடைபாவனைகளையும் பாஷையையும் வரவரப் பின் பற்றி வருகிறார்கள். 1901-ம் வருஷம் ஜனத்தொகை கணக்கெடுத்த போது 100-க்கு 52 பேர் ஹங்கேரிய பாஷை பேசுபவராகத் தெரிவித்துக்கொண்டார்கள். ஸ்லாவ்களும் ஆஸ்டிரியரும் குறைந்துவிட்டார்கள்.

ஆஸ்டிரிய கவர்ன்மெண்டின் தந்திரங்களால் ஸ்லாவ் ஜனங்கள் ஒற்றுமையில்லாமலிருந்து வந்தார்கள். தங்களைப்போல் ஒரே ஏகாதிபத்தியத்திலுள்ள ஆஸ்டிரியரும் ஹங்கேரியரும் சுய ஆட்சிபெற்று

வாழ்வதைக்கண்டு ஸ்லாவ்கள்பொறுமைகொண்டார்கள். ஸ்லாவ்களுக்குள் பரஸ்பர அபிமானம் இல்லாமையால் அவர்கள் சுய ஆட்சி பெறவேண்டுமென்று செய்து வந்த முயற்சிகள் பயன்படவில்லை. ஆனல் வரவரப் படிப்பும் விசாரமும் புத்தியும் பரவி அவர்கள் ஒற்றுமையாயிருப்பதின் அவசியத்தையும் பலன்களையும் உணர்ந்து, ஹெர்சியா, பல்கேரியா மாண்டினிக்ரோ ஆகிய இந்த பால்கன்நாட்டு ஸ்லாவ்களைப் போல சுய ஆட்சிபெற்று வாழவேண்டுமென்று உறுதியான நோக்கம் கொண்டார்கள். இந்தநோக்கத்தைஅடக்கவேண்டுமென்று ஆஸ்டிரிய கவர்ன்மெண்டும், அதை அதிகமாய் மூட்டிவிடவேண்டுமென்று பால்கன் நாடுகளும் ருஷியாவும், முயற்சி செய்து வந்தன. அவ்வாறுஏற்பட்ட மாறுபாடான நடவடிக்கைகளால் ருஷியாவிலும் ஆஸ்டிரியாவிலும் அடிக்கடி மனஸ்தாபம் உண்டாகி, கடைசியாக இப்போது நடந்துகொண்டிருக்கிற மகா யுத்தம் கிளம்பி யிருக்கிறதென்று பின்னால் சொல்லப்படும்போது தெரியவரும்.

5-வது அத்தியாயம்.

ஜெர்மன் ஏகாதிபத்தியம் வளர்ந்தோங்கிய சிறப்பு.

ராஜதந்திரியின் முக்கிய நோக்கம்.

1864, 1866, 1870 ஆகிய இவ் வருஷங்களில் பிரஷ்யா மூன்று பெரிய யுத்தங்கள் செய்து, ஏகாதிபத்தியம் ஸ்தாபித்ததைப் பற்றி முன்பு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஸ்தாபித்த ராணுவ பலத்தால் உண்டான ஏகாதிபத்தியத்தை அந்த ராணுவ பலத்தாலேயே ஐரோப்பாவில் நிலைநிறுத்த வேண்டுமென்ற உண்மையை பிஸ்மார்க் மறந்துவிடவில்லை. ஜெர்மானியர் ராணுவத் திமிர் பூரணமாய் ஏறப்பெற்ற ஜனமாகி விட்டார்கள். ஆனல் அதைக்கண்டு மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் அச்சமும் விரோதமும் கொள்ளாதபடி, பிஸ்மார்க் தம்முடைய ராஜதந்தரத்தால் காத்து வந்தார். வல்லரசுகளின் நேச சம்பந்தத்தைச் சம்பாதித்து, நேசத்தை வலுப்படுத்துவதற்காக உடன்படிக்கைகள் செய்து கொண்டு, விரோதிகளை வேறுபடுத்தி வைக்க

மூயர்சி செய்தார். பிரான்ஸ் தேசத்தை ஜெர்மானியர் தயை தாக்ஷண்யமின்றி மிதித்து நசுக்கியவுடனே அவர்களே அதை நினைத்து திடுக்கிட்டுப் போனார்கள்! பிரான்ஸ் தேசம் மானத்தைப் புழுங்கி பழிதீர்த்துக்கொள்ளும் ஆத்திரத்தால் புகைந்துகொண்டே யிருக்குமென்பதை உணர்ந்து, அதை வல்லசகளோடு சேர்ந்து கொள்ள விடாமல் கடுமையாய் விலக்கி வைப்பதாக பிஸ்மார்க் தீர்மானித்தார். பிரான்ஸ் பழிவாங்கவேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள மற்ற ஐரோப்பிய அரசர்களின் உதவியை நாடிச் செல்லுமாகையால், அப்படிப்பட்ட சம்பவம் ஒருக்காலும் நேராக்கூடாதென்று பிஸ்மார்க் உறுதியான நேரக் கங்கொண்டிருந்தார். ஐரோப்பாவில் திடீரென்று ஜெர்மனி மூதன்மையான ஸ்தானத்துக்கு உயர்ந்துவிட்டது. அந்தஉன்னத ஸ்தானத்தில் அந்த ஏகாதிபத்தியத்தை வலுவாய்க் கட்டுப் படுத்தி வேரூன்றும்படி செய்யும் வரையில், பொறுமைகொண்ட விரோதிகள் ஒரு கட்சியாகச் சேர்ந்துவிடாமல் காக்கவேண்டும். அதுவே ஜெர்மன் ராஜதந்திரத்தின் முக்கிய நோக்கமும் கடமையு மாயிற்று. ஐரோப்பிய ராஜாங்க விவகாரங்களில் பிரவேசித்து அந் நோக்கத்தை நிறைவேற்ற அச்சமயம் ராஜதந்திர நிபுணர்களில் சிறந்தவராகிய பிஸ்மார்க் ஏகாதிபத்தியத்தைச் செலுத்திவந்தார்.

பிஸ்மார்கின் முதல் நோக்கம் என்னவென்றால், ஆஸ்டிரியா ருஷியா அவ்விரு தேசங்களின் நேசத்தை புதிய ஜெர்மன் ஏகாதி பத்தியம் சம்பாதிக்கவேண்டும்.

ருஷிய மாகாணமாகிய போலன்டில் ஜனங்கள் (இவர்கள் போல்ஸ் என்று சொல்லப்படுவார்கள்.) சுதந்திரம் பெறவேண்டு மென்று ருஷிய சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கிளர்ப்பிக் கலகஞ் செய்தபோது, பிரஞ்சு கவர்ன்மெண்டும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் கலகக்காரர்களுக்குச் சாதகமாயிருக்க, பிஸ்மார்க் அந்தக் கவர்ன் மெண்டுகளின் யோசனைக்கு இணங்க மறுத்துவிட்டதோடு, கலகத் தை அடக்குவதில் உதவிசெய்வதாக ருஷிய சக்கரவர்த்திக்கு உறுதி மொழி கொடுத்தார். அதற்குப்பிறகு ருஷியா ஜெர்மனியிடத்தில் பொதுவாய் நேசம்பாராட்டி வந்தது. அடிக்கடி அந்த நேசம் விடு பட்டுப்போம்போலிருந்தாலும், ஜெர்மனியிலுள்ள ராஜதந்திர நிபு ணர் சாதுர்யமானவார்த்தைகளாலும்சாமர்த்தியமான வாதத்தாலும் இரண்டு சக்கரவர்த்திகளையும் நேசமாகவே இருக்கச்செய்து ருஷிய

ருக்கு ஒவ்வாத காரியங்களே தம் இஷ்டப்படி முடித்துக்கொள்வதில் தவறுவதில்லை. பிஸ்மார்க் தம்முடைய துணிகரமான சூழ்ச்சிகளை நிறைவேற்றியபோது ருஷியாவில் சஞ்சலமுண்டாகாம லிருக்க வில்லை. ஆயினும் டென்மார்க் தேசத்தின் ஒரு பாகத்தைப் பிடுங்கிக் கொண்டதும் ஆஸ்டிரியாவை வீழ்த்தியதும் பிரான்ஸைப் பணிய வைத்ததும், ருஷியாவில் கவலையை யுண்டுபண்ணின போதிலும் அவைகள் விக்கினமின்றி நடந்தேறின. பிரஞ்சு ஜெர்மானிய யுத்தம் நடந்தபோது, ருஷியா நேசபாவத்துடன் நடுநிலைமையில் இருந்ததினால், ஆஸ்டிரியாவும் இடாலியும் எதிர்க்கட்சியில் சேரா மல் ஒதுங்கிநின்று விட்டன. ஆகையால் ருஷியாவைப் பற்றின மட்டில், ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் மீது விரோதமுண்டாகாமல் தற்போது காப்பது அவ்வளவு கஷ்டமாயில்லை.

ஆனால் ஆஸ்டிரியா, பிரஷ்யாவுடன் சமத்துவமாக வெகு காலம் சேர்ந்திருந்து பிறகு விலக்கப்பட்டு, ஸாடோவா போர்க் களத்தில் நசுக்கப்பட்டது அதன் ஞாபகத்தில் உறுத்திக் கொண் டிருக்க, அதை எவ்வாறு சமாதானப் படுத்துவது? ஜெர்மானியில் திடீரென உன்னத ஸ்தானத்தில் வந்துவிட்ட புதிய ஜெர் மென் ஏகாதிபத்தியத்துக்கு, ஆஸ்டிரியாவின் நிரந்தரமான சம்ம தத்தை எவ்வாறு சம்பாதிப்பது? சாதாரண ராஜதந்திரிக்கு அப்ப டிப்பட்ட காரியம் அதிகமாய் அசாத்தியமென்றே தோன்றி யிருக் கும். ஆனால் பிஸ்மார்க் கொஞ்சமும் பின் வாங்கவில்லை. ஆஸ்டிரியா வுடன் (1866-ம்வருஷம்) யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போதே அதைப்பற்றி யோசனை செய்திருந்தார். அவர் ஒரு சமயத்தில் பின்வருமாறு சொல்லி யிருந்தார்:—"ஆஸ்டிரியாவைத் தோற்கடித்த பிறகு எனக்கு இரண்டு வழிகளுண்டு; ஒன்று, அதை முற்றிலும் அழித் துவிடலாம்; மற்றொன்று, அத்தேசத்தின் பூரணத்தைத்தாது அதற் குத்தாபம் அடங்கி விட்ட பிறகு அதோடு சமாதானமாகி விடலாம். இரண்டாவது சொல்லிய வழிதான் அனுசரிக்கப்பட்டது; ஏனெ னில், முதலில் சொல்லியபடி நடந்தினால் அதை விடப்பெரிய பிசகு வேறெதுவுமில்லை; நாம் நிலைத்திருக்க வேண்டுமானால், ஆஸ்டிரியா உயிருடன் இருக்கவேண்டும்." ஏனெனில், ஆஸ்டிரிய ஏகாதிபத்தி யம் எந்த சமயத்திலாவது சிதறிப்போகுமானால், அதிலுள்ள ஸ்லாவ் பிரஜைகளையும் ஸ்லாவ் பிரதேசங்களையும் ருஷிய சுவர்ன்மெண்டு தங்கள் ஆட்சியில் சேர்த்துக்கொள்வார்கள். அந்த ஏகாதி பத்தியத்

திலுள்ள ஜெர்மன் பிரஜைகள் ஜெர்மனியுடன் சேர்ந்துகொள்ளுமானாலும், அவர்கள் ஜனத்தொகையில் ஸ்லாவ்களைவிட குறைவாயிருப்பார்கள். அந்த ஏகாதிபத்தியத்தில் 206 லக்ஷம் பேர் ஸ்லாவ்கள் இருக்க, 111 லக்ஷம் பேர்தான் ஜெர்மானியராயிருக்கிறார்கள். ஆகையால் ருஷியாவின் பலம் அதிகரிக்காமலிருப்பதற்கும், அதனால் ஜெர்மனிக்கு கெடுதலுண்டாகமலிருப்பதற்கும், ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் நிலைத்திருக்கவேண்டும். ஜெர்மன் நாடுகளுக்குத் தலைமையாகயிருக்கவேண்டுமென்று ஆஸ்டிரியா முன்பு வைத்திருந்த ஆசையை இப்போது அடியோடு ஒழித்து விட்டதால், ஜெர்மனிக்கு நேரக்கூடிய அபாயம் ஒன்றுமில்லையென்பதில் இனிச் சந்தேகமில்லை. ஜெர்மானியரின் ஒப்பற்றவன்மை பலமுறை வெளியாயிருக்கிறது. மேலும் ஆஸ்டிரியா பெரிய ராஜ்ஜியமாயிருந்தபோதிலும், வெவ்வேறு ஜாதியர் இருப்பதினால் அவர்களுடைய கலகத்தால் அடிக்கடி பலவீனப்பட்டுவிடும். ஜெர்மனியைப் போன்ற வல்லமையுடைய ஒரு ராஜ்ஜியத்தின் உதவி அதற்கு எப்போதும் தேவையாயிருக்கும். ஜெர்மனியைத் தவிர வேறெந்த வல்லரசாவது அதற்கு உதவிசெய்யுமா? பெரிய யுத்தத்தில் அடிபட்டுக் கிடந்த பிரான்ஸிடமிருந்து ஆஸ்டிரியா எவ்விதஉதவியும் எதிர் பார்ப்பதற்கில்லை. ருஷியா, கிரிமியா யுத்தத்தில் ஆஸ்டிரியாவின்மேல் கொண்ட விரோதம் இன்னும் மறைந்துபோகவில்லை. * ருஷிய மந்திரி பல முறை ஆஸ்டிரியாவின் பேச்சுகளுக்கு இடங்கொடுக்க மறுத்துவிட்டார். ஆகையால் பிஸ்மார்க் நேசவார்த்தைகளுடன் முன் வந்தபோது ஆஸ்டிரியாவும் அம்மாதிரியான உணர்ச்சியைக் காட்டியது.

ஆஸ்டிரியாவினிடத்தில் பக்ஷபாதம்.

ஆஸ்டிரிய சக்கரவர்த்தி ஜெர்மன் தலைநகராகிய பெர்லினுக்கு விஜயம்செய்வதாகஅறிவித்தார். ருஷியசக்கரவர்த்தியும்அங்கு வந்து போவதாகத் தெரிவித்தார். 1872-ம் வருஷத்தில் ஆஸ்டிரிய, ருஷிய, ஜெர்மன், சக்கரவர்த்திகள் பெர்லின் நகரத்தில் சந்தித்தார்கள். ஐரோப்பாவில்சமாதானத்தைக்காத்துவரவேண்டுமென்றும்,முக்கியமான அன்னிய தேச விவகாரங்களில் ஒருவரையொருவர்ஆலோசனை கேட்டு ஒற்றுமையாய் நடக்கவேண்டுமென்றும், அச்சமயம் பொது

* 4-வது அத்தியாயத்தில் "கிரிமியா யுத்தத்தில் ஆஸ்டிரியாவின் நடவடிக்கை" என்று தலைப்பிட்ட விஷயத்தைப் பார்க்க.

வாய்ப் பேசிக்கொள்ளப்பட்டது. ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் பால்கன் நாடுகளிருந்த திசையில் இனி விசாலித்து விருத்தியடையலாமென்று பிஸ்மார்க் இரகசியமாய் ஆஸ்டிரிய கவர்ன்மெண்டுக்கு அறிவித்தார். ஆனல் அத்திசையி லிருப்பவர்கள் ஸ்லாவ் ஜாதியார்; ருஷியர் அவ்வினத்தா ராகையால், ஆஸ்டிரியாவின் நடவடிக்கைகள் ருஷியாவுக்கு மனஸ்தாபத்தை உண்டாக்குமென்று தெளிவாய்ப் புலப்படும். அப்படி யிருக்க, ருஷியருக்கு ஜர்மானிய ரிடத்தி லுள்ள நிஜ சம்பந்தம் ஆஸ்டிரியாவின் நடவடிக்கையால் எவ்விதத் திலும் கெட்டுப் போகக்கூடா தென்று, முதலில் சொல்லியதற்கு விரோதமாக பிஸ்மார்க் சொன்னர். ருஷியருக்கு மனஸ்தாபமுண்டாகாமல் ஸ்லாவ் பிரதேசத்தில் ஆஸ்டிரியா எவ்வாறு பிரவேசிப்பது? உண்மையில் பிஸ்மார்க்கினுடைய நோக்கம் என்னவென்றால், பால்கன் நாட்டு விவகாரங்களில் ஆஸ்டிரியாவும் ருஷியாவும் போட்டியாகப் பிரவேசிக்க, ஜெர்மனி மத்தியஸ்தஞ்செய்து அவ்விரு தேசங்களின் நடவடிக்கைகளையும் அடக்கிச்செலுத்த வேண்டும். ஐரோப்பாவில் பலமான விரோதக்கூடி எதுவும் சேர்ந்து விடாமல் காப்பதினால், ஜெர்மனி விருத்தியடைய வேண்டுமென்று எண்ணினர். ஆனல் ஆஸ்டிரியாவினிடத்தில் நேசப்பற்று அதிகமாயிருக்க வேண்டும். ஏனெனில் ஆஸ்டிரியாவுக்கு ஜெர்மனியின் உதவி இன்றியமையாத தாகையால் அதன் நேசபாவம் நாட்பட நிலைத்திருக்கும். ஆனல் ருஷியா விரோதங்கொண்டு பிரான்ஸின் வார்த்தைகளுக்கு இணங்கிவிடும்படி அவ்வளவு தூரம் ஜெர்மனி பக்ஷபாதங் காட்டக்கூடாது என்று பிஸ்மார்க் தம் நடவடிக்கையில் ஜாக்கிரதையா யிருந்தார்.

ருஷியாவின் மனநிலைமை.

ருஷியா நிரந்தர நேசப்பான்மையைக் காட்டக்கூடிய தேசமல்லவென்பது பிஸ்மார்க் நினைத்தபடியே சீக்கிரத்தில்வெளியாயிற்று. பிரான்ஸ் தேசம் யுத்தத்துக்குப் பிறகு சீக்கிரத்தில் தென்பு கொண்டு ராணுவ நிலைமையையும் பொருளாதாரநிலைமையும் விருத்திசெய்தது. அதைக் கண்டு, பிரஞ்சு யுத்தம் நடந்து நாலுவருஷங்களேயாயினும் (அதாவது 1875 ம்-வருஷத்தில்) ஜெர்மனியில் பொதுஜன அபிப்பிராயம்மறுபடியும் பிரான்ஸிடம்விரோதங்காட்டி கலக்கங்கொண்டு விட்டது. பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் மறுபடி

யுத்தம் நடக்கும் போலிருந்தது. அவ்வாறு நேர்ந்தால், ருஷியாவின் நடவடிக்கை எவ்வாறு இருக்குமென்று ருஷியாவிலுள்ள பிரஞ்சு தூதரும் ஜெர்மென் தூதரும் தனித்தனியே அறிய விரும்பினார்கள். ஜெர்மனி மறுபடி யுத்தம் செய்தால் அதன் வன்மை இன்னும் பல மடங்கு அதிகரிக்குமாகையால் ருஷிய எல்லைக் கருகில் பலங்கொண்ட ஜெர்மன் நாடு இருப்பது அபாயகரமான தென்று ருஷிய கவர்ன்மெண்ட் எண்ணினார்கள். ஆகையால் ருஷிய சக்கரவர்த்தி ஜெர்மன் தூதருக்குத் திருப்திகரமான பதில் அளிக்காமலே, ஐரோப்பாவில் சமாதான நிலைமைக்குக் கேடு வராமல் காப்பதாக பிரஞ்சு தூதருக்கு உறுதி மாத்திரம்கூறினர். ருஷிய கவர்ன்மெண்டின் மன உறுதியால், ஐரோப்பிய யுத்தம் இளம்பாமல் தடுக்கப்பட்டு ஜெர்மானியரின் யுத்த உணர்ச்சி அடக்கப்பட்டது.

பால்கன் நாடுகளின் விவகாரங்களில் ருஷியாவும் ஆஸ்டிரியாவும் பிரவேசித்தல்.

1877-ம் வருஷத்தில் பால்கன் நாடுகளின் விஷயங்களில் ருஷியாவும் ஆஸ்டிரியாவும் பிரவேசிக்க சமயம் நேர்ந்தது. அக்காலத்தில் பால்கன் நாடுகள் அனைத்தும் துருக்கி ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. பல்கேரியாவில் ஸ்லாவ் ஜனங்கள் துருக்கிக்கு விரோதமாய்க் கிளம்பி கலகம் செய்பவே, துருக்கி கவர்ன்மெண்ட் கலகத்தை மிகவும் கடுமையாய் அடக்கி விட்டார்கள். ஸ்லாவ் ஜனங்களை துருக்கியர் கொடுமைகளுக்கு உட்படுத்தியதாக, ருஷியர்களுக்குள் சுஜாதி அபிமானத்தால் பெரிய கிளர்ச்சியுண்டாயிற்று. ருஷிய கவர்ன்மெண்ட் துருக்கியுடன் யுத்தஞ்செய்யத் தீர்மானித்தார்கள். ஆனால் அவ்விஷயமாய் முன்னதாகவே வல்லரசுகளின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டார்கள். ருஷியா துருக்கியுடன் யுத்தஞ் செய்து பலவீனப்பட்டு ஆஸ்டிரியாவின் மனஸ்தாபத்தை முடிவில் சம்பாதித்து அவ்விரு தேசங்களும் எப்போதும் வேறுபட்டிருக்கும் என்று எண்ணி, பிஸ்மார்க் அந்த யுத்தத்துக்கு ஆட்சேபிக்கவில்லை. ஆஸ்டிரியாவுக்கு பாஸ்னியா ஹெர்ஸிகோவினா என்ற பிரதேசங்களை (ஸெர்வியா எல்லைக்கு மேற்கிலுள்ளவை) கொடுப்பதாக ருஷியா அறிவித்த தன்மேல், ஆஸ்டிரியாவும் நடுநிலைமை வகிக்கச் சம்மதித்தது. 1877-ம் ஹு ஏப்பிரல் மாதம்

24-ந்தேதி ருஷியத் துருக்கி யுத்தம் ஆரம்பித்தது. ருஷியர்கள் முதலில் எதிர் பார்த்தபடி ஜயம்பெற்று விடவில்லை. பிளிவ்னு என்ற ஸ்தலத்தில் * துருக்கிச்சேனை ஊஸ்மான் பாஷாவால் நடத்தப்பட்டு ஆகஸ்டு மாசம் முதல் டிசம்பர் 10 – ந் தேதி வரையில் மிகவும் உக்கிரமாய்ச் சண்டை செய்து ருஷிய சேனை முழுவதையும் மூன் செல்ல விடாமல் தடித்து உலகப் பிரசித்தி பெற்றது. படை பெடுத்து வருகிற சத்துருக்களை வெகு காலம் தடித்து நிற்பதற்கு பிளிவ்னுச் சண்டையை உதாரணமாகச் சொல்வது வழக்கமாகிவிட்டது. ருஷியருக்கு ஏராளமான பொருட் சேதமும் உயிர்ச்சேதமும் உண்டாகி யுத்தம் ஆரம்பமானது முதல் 8 மாசகாலம் ருஷியப் படை யெடுப்பு விருத்தியடையாமல் தடைப் பட்டது. ஆயினும், ருஷியத்துருப்புகள் ஏராளமாய் அனுப்பப்பட்டு துருக்கித் தலைநகராகிய கான்ஸ்டாண்டி நோபிளுக்கு அருகிலுள்ள ஸான் ஸ்டிடானே என்ற ஸ்தலத்துக்கு நெருங்கிவிட்டன. ஆகையால் 1878-ம்ஷ்த்தில் அந்த ஸ்தலத்தில் துருக்கி ஒரு உடன்படிக்கை செய்து பால்கன் நாடுகளின் பெரும்பாகத்தையும் இழந்துவிடும் படியாயிற்று. ஆனல் ருஷியாவின் நோக்கம் என்னவென்றால், பல்கேரியாவை விசாலப்படுத்தி பெரிய ஸ்லாவ் ராஜ்ஜியமாகச் செய்து, செர்வியாவையும் மாண்டிநீக்ரோவையும் ஆஸ்டிரியாவின் செல்வாக்குக்கு உட்படாமற் காத்து, பால்கன் நாடுகளை மற்றொரு ருஷியாவாக மாற்றிவிடவேண்டும். பெரிய ஸ்லாவ் நாடு அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்படுவதை ஆஸ்டிரியா கண்டிப்பாய் ஆக்ஷேபித்தது. அதற்குச் சில பிரதேசம் கொடுக்கப்படுமென்றாலும், ருஷியர்கள் பால்கன் பிரதேசம் முழுவதிலும் தங்கள் மேலதிகாரத்தை ஸ்தாபித்துக் கொள்வது மிகவும் அபாயகரமான காரியமென்று தோன்றிற்று. அவ்வாறே ஜர்மனி உள்பட மற்ற வல்லரசுகளும் ஆட்சேபித்து, அவர்களின்பிரதிநிதிகளடங்கிய ஒரு காங்கிரஸ் சபைகூடி மறுஆலோசனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தின. அதற்குச் சம்மதிப்பதைத் தவிர ருஷியாவுக்கு வேறு வழியில்லை. 1878-ம்ஷ் ஜூலைமீ 13-ந் தேதி வல்லரசுப் பிரதிநிதிகள் பெர்லினில் காங்கிரஸ் கூடிச் செய்த முடிவான ஏற்பாட்டின்படி, பல்கேரியா துருக்கிசுல்தானுக்கு கப்பங் கட்டுகிற அரசாக ஸ்தாபிக்கப்பட்டு, அதற்குத் தெற்கி

* இது பல்கேரியாவில் உள்ளது; அந்தப் பிரதேசம் துருக்கியருடையதா யிருந்ததால் அங்கே யுத்தம் நடந்தது.

உள்ள பாகம் துருக்கியால் நியமிக்கப்பட்ட ஒரு கிறிஸ்துவக் கவர்னரின் கீழுள்ள சுயாட்சி பெற்ற மாகாணமாகச் செய்யப்பட்டது. செர்வியா மாண்டினிக்ரோ ரொமேனியா இவைகள் புதிய பூமிகள் பெற்று சுயேச்சை பெற்ற ராஜ்ஜியங்களாகச் செய்யப்பட்டன. ஸ்லாவ் ஜாதியாரின் வல்லமை அதிகரித்துவிட்டதென்று அதற்கு மாற்றாக அந்த ஜாதியரைச் சேராத கிரீஸுக்கும் புதிய பிரதேசங் கொடுக்கப்பட்டது. பால்கன் பிரதேசத்திலுள்ள மற்றப் பாகங்கள் துருக்கி ஆட்சியின் கீழ் முன்போல வைக்கப்பட்டன. பாஸ்னியா ஹெர்ஸிகோவினா பிரதேசங்கள் ஆஸ்டிரியாவின் மேற் பார்வையில்விட்டு வைக்கப்பட்டன. அதேதடுகூட, செர்வியாவுக்கும் மாண்டினிக்ரோவுக்கும் இடையேயுள்ள நோவி பஸார் பிரதேசத்தில், ஆஸ்டிரியா தன்துருப்புகளை வைத்திருக்க அதிகாரம் பெற்றுக்கொண்டு அவ்விரண்டு ராஜ்ஜியங்களில் தன் செல்வாக்கை விருத்தி செய்தது. அந்த துருக்கி யுத்தத்தால் ருஷியாவுக்கு பால்கன் பிரதேசத்தில் அதிகமாய்ப் பலன் கிடைக்கவில்லை.

ஜெர்மனி ஆஸ்டிரியாவுடன்
செய்துகொண்ட ரகஸ்ய உடன்படிக்கை.

பெர்லின் காங்கிரஸில், பிஸ்மார்க் பக்ஷபாதமின்றி மத்தியஸ்தம் செய்வதாகச் சொன்னாரே யொழிய ருஷியாவினிடத்தில் விசேஷ நேசபாவம் காட்டுவதாகச்சொல்லவில்லையென்று ருஷியாவில் கோபம் உண்டாயிற்று. ஜெர்மனி, ருஷியாவைவிட ஆஸ்டிரியாவையே அதிகமாய் நம்பியிருக்க வேண்டுமென்று பிஸ்மார்க் முன்பே மனதில் தீர்மானித்து ஆஸ்டிரியாவிடமே சார்பு காட்டிவந்தார். அதன்படியே ஆஸ்டிரியாவின் செல்வாக்கு பால்கன்காட்டில் அதிகரித்தது. ருஷியாவின் மனவருத்தம் ஆபத்தாய் முடியக்கூடுமென்று பிஸ்மார்க் எண்ணி 1879–ம் வருஷத்தில் ஆஸ்டிரியாவுடன் இரகசியமாய் உடன்படிக்கை செய்து கொண்டார். அதனால் ருஷியாவுக்கு விரோதமாய் ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் கட்டுப்பாடு செய்துகொண்டன. இதை முக்கியமான சம்பவமாகக் கருதவேண்டும். ஏனெனில், இந்த உடன்படிக்கை தான் இன்னும் அவ்விரு தேசங்களையும் கட்டுப்படுத்திவருகிறது. ஆயினும் ருஷியா பிரான்ஸுடன் சேர்ந்துவிடக்கூடாதென்று நினைத்து, ருஷியச் சக்கரவர்த்திக்கும் ஜெர்மன் சக்கரவர்த்திக்கும் வெகு காலமாயிருந்த நேசபான்மை கெடாமே

விருக்க பிஸ்மார்க் முயற்சிசெய்தார். ருஷியாவில் புதிய சக்கரவர்த்தி சிம்மாசனம் ஏறிய சமயத்தை உடனே கைப்பற்றி அவ்விரு சக்கரவர்த்திகளைச் சந்திக்கச் செய்து பழைய காலத்துச் சம்பந்தங்களை எடுத்துச் சொல்லி சிநேகபாவத்தை விருத்திசெய்தார்.

ஜேர்மனி இடாலியுடன் செய்துகொண்ட உடன்படிக்கை.

பிஸ்மார்க் இவ்வாறு ஒருபுறம் முயற்சி செய்துவர, மற்றொரு புறம் அவர் வேறொரு ஐரோப்பிய அரசின் உதவியைச் சம்பாதிக்கத் தொடங்கினர். இடாலி தேசத்தின் நிலைமை அந்த நேரத்துக்குச் சாதகமாயிருந்தது. அச்சமயம் இடாலியில் இரண்டு மாறுபாடான ராஜாங்கக் கொள்கைகள் பிரபலமாயிருந்தன. ஒன்று, அட்ரியாடிக் கடலில் இடாலியை ஒட்டினாற் போல் ஆஸ்டிரியக் கடற்கரை இருக்கிறபடியால், அந்த பாகத்தை இடாலி சம்பாதிப்பதற்கு ஆஸ்டிரியாவுக்கு விரோதமாய் மற்ற ஐரோப்பிய அரசுகளுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டுமென்பது. மற்றொன்று, பால்கன் நாடுகளில் ருஷியா பிரவேசித்து அட்ரியாடிக் கடலை வசப்படுத்திக் கொள்ளக்கூடுமாதலாலும், பிரான்ஸ் மத்தியதரைக் கடலில் மிதமிஞ்சின அதிகாரத்தைப் பெற்றுவிடக் கூடுமாதலாலும், இவைகளைத் தவிர்ப்பதற்கு ஆஸ்டிரியாவைப் படைபடுத்தி அதற்குச் சாதகமாக உடன்படிக்கைகள் செய்து கொள்ள வேண்டுமென்பது.

ஆனால், ஆப்பிரிக்காவில் குடியேற்ற நாடுகளை ஸ்தாபித்து இடாலி தேசம் விருத்தியடையவேண்டுமென்று அவ்விரண்டு கட்சிகளும் ஒரே மனதாய் அபிப்பிராயப்பட்டன. இடாலிய ராஜாங்கத்தின்கொள்கை அவ்வாறு வேறுபட்டு உறுதிப்படாமலிருக்கும்போது பிரென்சுக் கவர்ன்மெண்டின் நடவடிக்கை இடாலியில் மிகுந்த கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று. இடாலிதேசத்துக் கெதிரில் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள டூனிஸ் பிரதேசத்தின்மேல் இடாலியர் வெகுகாலமாய்க் கண் வைத்திருந்தார்கள். அப்படியிருக்க, அந்தப் பிரதேசத்தின்மேல் பிரஞ்சு கவர்ன்மெண்டு படையெடுத்து அதை வசப்படுத்திக்கொண்டனர். அதனால் இடாலி குடியேற்ற நாடுகளை விருத்தி செய்யவேண்டுமென்று வைத்த ஆசை கெட்டுவிடும்போலிருந்தது. அதோடு இடாலிதேசத்துக் கருகில் பிரஞ்சுக்காரர் நெருங்கி வந்துவிட்டது அபாயமெனத் தோன்றிற்று. மேலும் பிரான்ஸ்தேசம் ஜெர்மனியுடன் யுத்தஞ்செய்துதோல்வியடைந்த பிறகு குடியேற்ற

நாடுகளைப் பெறுவதில் அதிக கவனம் செலுத்திவந்தபடியால், அதே நோக்கங்கொண்ட இடாலி அதற்குப் போட்டியாக முந்தவேண்டி வந்தது. ஆகையால் 1882-ம் வருஷத்தில், ஆஸ்டிரியா ஜெர்மனி இவைகளுடன் இடாலி கவர்ன்மெண்ட் உடன்படிக்கைசெய்து கொண்டார்கள். அந்த உடன்படிக்கை அப்போதப்போது புதுப்பிக்கப்பட்டு இதுவரையில் இருந்துவருகிறது. அவ்வாறு ஜெர்மனி ஆஸ்டிரியா இடாலி இம்மூன்று வல்லரசுகளும் உடன்படிக்கைகளால் ஏற்படுத்திக்கொண்ட கட்டுப் பாட்டுக்கு டிரிப்பிள் அலியன்ஸ் (Tripple Alliance) என்று பெயர். இதனால் ஜெர்மனியின் நிலைமை ஐரோப்பாவில் மிகவும் பலப்பட்டது.

ராஜ தந்தரம் பூரணபிரகாசம் பெற்றது.

பிரான்ஸும் ருஷியாவும் சேர்ந்துவிடுமென்ற பயம் பிஸ்மார்க் மண்திலிருந்து இன்னும் நீங்கவில்லை. ஆகையால் ருஷிய கவர்ன்மெண்டின் நேச சம்பந்தத்தைப் பெறுவதற்கு இன்னும் முயற்சி செய்து வந்தார். அச்சமயம் ருஷியாவில் அராஜகக் கட்சியார் மும்முரமாய் கலக்கம் செய்து வந்தார்கள். ருஷிய சக்கிரவர்த்தி உள் நாட்டு விஷயங்களில் அதிக கவனஞ்செலுத்தி, பால்கன் நாடுகளில் ஆஸ்டிரியாவின் தூண்டுதலால் தொந்தரவு உண்டாகாமலிருக்கவேண்டுமென்று கவலைப்பட்டார். ஆகையால் ருஷிய கவர்ன்மெண்ட் பிஸ்மார்கின் யோசனையை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டார்கள். 1884-ம் வருஷம் ஜெர்மனி ருஷியா ஆஸ்டிரியா இவைகளின் சக்கிரவர்த்திகள் மூவரும் சந்தித்து, 12-வருஷங்களுக்கு முன்னம் செய்ததுபோல அன்னிய நாட்டு விவகாரங்களை எல்லோருமாகக் கலந்து நடத்தவேண்டுமென்று உடன் படிக்கை செய்துகொண்டார்கள். ஜெர்மெனி ஆஸ்டிரியா இடாலி இம்மூன்று தேசங்களுக்குள் செய்துகொண்ட டிரிப்பிள் அலியன்ஸ் என்ற கட்டுப்பாட்டை ருஷியாவுக்கு விரோதமாக ஏற்படுத்தியிருக்க, ருஷியாவைச் சேர்த்து மற்றொரு கட்டுப்பாட்டை பிஸ்மார்க் உண்டு பண்ணினார். பிஸ்மார்கினுடைய ராஜதந்திரம் அந்தச்சமயத்தில் உச்சதசை அடைந்ததாகக் கருதப்படவேண்டும். அதனால் பிரான்ஸ் முற்றிலும் விலக்கி வைக்கப்பட்டது. ருஷியாவை ஆஸ்டிரியாவுடன் சேர்த்துப் பூட்டி பால்கன் தொந்தரவுகளில் சிக்கவைத்து, அவ்விரு ராஜ்ஜியங்களையும் வேறுபட்டிருக்கச் செய்து, ருஷி

யாவின் பலத்தைக்குறைக்க வேண்டுமென்றும் ஜெர்மனி மத்தி யஸ்தம் செய்து தன் செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டு மென்றும், பிரான்ஸ் தேசம் மற்ற ஐரோப்பிய வல்லரசுகளிட மிருந்து உதவி பெறுமல் தனிமைப்பட் டிருக்க வேண்டுமென்றும் பிஸ்மார்க் தம்முடைய பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தார். அந்த நோக்கம் இப்போது முற்றிலும் நிறைவேறிற்று.

மறுபடியும் பால்கன் நாடுகளில் தே ந்தரவு.

இதற்கு முன்னுல் 1877-ம் வருஷத்தில் ருஷியாவும் ஆஸ்டிரி யாவும் பால்கன் விஷயங்களில் பிரவேசித்தபோது விரோத மூண்டானதைப் பற்றிச் சொல்லப்பட் டிருக்கிறது. ஆகையால் அவ் விரண்டுதேசங்களும் போசுனியில் எவ்வளவு ஒற்றுமைகாட்டினலும் காரியத்துக்கு வந்தவுடன் வேறு பட்டன. ருஷியத் துருக்கி யுத்தத் துக்குப் பிறகு, பல்கேரிய ராஜாங்க விஷயங்களில் ருஷிய கவர்ன் மெண்டு மிதமிஞ்சித் தலையிட்டு வந்ததை பல்கேரியர் வெறுக்கத் தொடங்கினர்கள். மேலும் ஆஸ்டிரியாவின் செல்வாக்கு மெதுவாய்ப் பரவ ஆரம்பித்தது. 1885 - ம் வருஷத்தில் பல்கேரியாவுக்குத் தெற்கிலுள்ள சுய ஆட்சி பெற்ற பால்கன் ஜனங்கள் (இவர்களும் பல்கேரிய இனத்தார்) பெரிய கலகம் செய்து, துருக்கியால் சட்டப் படி நியமிக்கப்பட்ட கவர்னரைத் தூத்தி, பல்கேரிய ராஜ்ஜியத் துடன் சேர்த்துவிடத் தீர்மானித்தார்கள். ஆனுல் வல்லரசுத் தூதர் கள் துருக்கியை யுத்தம் செய்ய விடாமல் சமாதானப்படுத்திவிட் டார்கள். பல்கேரியா, அதற்குத் தெற்கிலுள்ள இந்த மாகாணத்தைச் சேர்த்துக்கொண்டுவிட்டது. பல்கேரியர் அவ்வாறு கலகஞ் செய்த போது ருஷிய கவர்ன்மெண்டின் அனுமதியைப் பெற்றுச் செய்ய வில்லை. பால்கன் நாடுகளின் விஷயங்களில் தங்களுக்கு மேலதிகாரம் நியாயமாய் ஏற்பட்டிருக்கிறதென்று ருஷியகவர்ன்மெண்டுநினைத்து, தங்களை பல்கேரியர் லக்ஷியம்செய்யாமல் அந்தக் காரியத்தைச்செய் தார்களென்று மனவருத்தங் கொண்டார்கள். மேலும், ஆஸ்டிரியாவின் தூண்டுதலால் அவ்வாறு பல்கேரிய கவர்ன்மெண்டு மனம்வேறுபட் டார்களென்று ருஷியர் நினைத்தார்கள். புதிய பிரதேசத்தைப் பல்கேரியர் பெற்றுவிட்டதைக் கண்டு செர்வியா புதுப் பிரதேசத் தின் மீது யெடுக்க, பல்கேரிய சேனை வெற்றி பெற்று செர்வியத் தலை நகரைப் பிடிக்க முன் சென்றது. அப்போது ஆஸ்டிரியக் கவர்ன்



கவுன்ட் வான் மோட்கி—
பேர்பெற்ற ஜெர்மன் ராணுவதந்திரி.



கவுன்ட் வான் பிஸ்மார்க்—
பேர்பெற்ற ஜெர்மன் ராஜதந்திரி



ஜெர்மன் சக்ரவர்த்தி—இரண்டாவது வில்லியம்.

மெண்ட்டு யுத்தத்தை நிறுத்தித் தங்கள் அதிகாரத்தைக் காட்டினார்கள். ஆஸ்டிரியாவோடு ருஷியா உடன்படிக்கை செய்து கட்டுப்படுத்திக்கொண்டதனால்தான் பால்கன் பிரதேசத்தில் அது தன் செல்வாக்கை இழந்து விட்டதென்று ருஷியர்களுக்குள் பலமான அபிப்பிராயம் பதிந்து விட்டது. பல்கேரிய அரசர் ராஜ்யத்தை விட்டு விலகிவிட ருஷியச் சக்கரவர்த்திக்குச் சொந்தமான ஒரு வரை அந்த ஸ்தானத்துக்கு ருஷியக் கவர்ன்மெண்டு கொர்ல் செய்தார்கள். அதை ஆஸ்டிரியா பலமாய்த் தடுத்தது. ருஷிய ஜனங்களுக்கு பிஸ்மார்கினிடத்திலும் சந்தேகந் தோன்றி வர வர அதிகப் பட்டது.

ருஷியாவின் கொள்கையில் மாறுதல்.

ருஷியக் கவர்ன்மெண்டு பால்கன் நாடுகளில் தங்கள் செல்வாக்கை உண்மையாய் இழந்து விட்டு, தங்கள் அருமையான விருப்பங்களெல்லாம் ஏமாற்ற மடைந்ததைக்கண்டு பெரிய கவலை கொண்டார்கள். பிரான்ஸ் தேசத்துடன் உடன் படிக்கை செய்து கொள்ளலாமென்ற எண்ணம் பலமுறை உதித்தது. ருஷியர் ஜெர்மானியருடைய ராஜதந்திரவலியின் சிக்கலை அறுத்தெறிந்து ஆஸ்டிரியாவின் உட்பகையை வெளிப்பட எதிர்த்துத் தங்களுடைய நோக்கங்களைத் தாராளமாய் நிறை வேற்றத் தீர்மானித்தார்கள். ருஷியாவும் ஜெர்மனியும் செய்துகொண்டிருந்த ஒரு இரகசிய உடன்படிக்கையின் காலாவதி 1890-ம் வருஷத்தோடு முடிந்து போயிற்று. அதைப் புதுப்பிக்க ருஷியச் சக்கிரவர்த்தி மறுத்து விட்டார். அது முதல் ஜெர்மானியரிடத்தில் ருஷியச் சக்கரவர்த்தி மாறுப்பகைகொண்டிருந்தார். அச்சமயம் பிஸ்மார்க் மந்திரிஸ்தானத்தினின்றும் நீங்கி விட்டார்—ராஜ தந்திரியை இழந்து விட்ட ஜெர்மனி, இருகண்களையும் இழந்து விட்டது.

6-வது அத்தியாயம்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் செல்வச்செருக்கும் ராணுவக் கொழுப்பும்.

வில்லியம் சக்ரவர்த்தி.

1888-ம் வருஷம் மார்ச்சு மாதம் 9-ந்தேதி ஜெர்மன் சக்கிரவர்த்தியாகிய முதலாவது வில்லியம் இறந்து போனார். அவருடைய குமாரன் பிரடரிக்சக்கிரவர்த்தி ஜூன் மாதம் 15-ந்தேதி இறந்துபோனார். பிரடரிக்கினுடைய குமாரனான இரண்டாவது வில்லியம் சிம்மாசனம் ஏறினார்; அந்த ராஜவம்சத்து வழக்கப்படி அவர் 10-வது ஆண்டுநிறைவின் போது சைனியத்தில் சேர்க்கப்பட்டார். அதை வெறுங் கவுரவமாக நினைக்காமல் ராணுவ விஷயங்களில் மிகுந்த அக்கரையும் சாமர்த்தியமும் காட்டினார். இவருடைய தாயார், பிரிட்டிஷ் அரசியும் இந்திய சக்ரவர்த்தினியுமாகிய காலஞ் சென்ற விக்டோரியா மகாராணியின் மூத்தகுமாரத்தி. ஜெர்மன் சக்கிரவர்த்தி தம்முடைய ராஜாங்கக் கொள்கைகளில் தாயார் வமிசத்தையாவது தகப்பனார் பாட்டனார் இவர்களையாவது கொள்ளவில்லை. அவர் வலுவான மனோதிடங்கொண்டு சுயேச்சையாய் அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்தார். தம்மிடத்தில் பூரண நம்பிக்கை கொண்டும், தம்முடைய தேசத்தையும் வமிசத்தையும் கடவுள் விசேஷப் பிரீதியுடன் காத்துவருவதாக பக்தி கொண்டும் அவர் ராஜ்யத்தை நடத்திவந்ததால் பிஸ்மார்க்கைப்போன்ற ராஜதந்திர யூகி அதில் இடம்பெற முடியவில்லை. ஆரம்பத்திலிருந்தே இரண்டாவது வில்லியம் தாம் சக்கரவர்த்தியா யிருப்பதுபோல தாமே மந்திரியாகவும் இருந்துவிட நிச்சயித்தார். அதற்குமுன்னால் அவருடைய பாட்டனார் முதலாவது வில்லியம் ஒப்புக்குச் சக்கரவர்த்தியா யிருந்தாரேயொழிய, அவருடைய பூரண நம்பிக்கையைப் பெற்ற பிஸ்மார்க்கினுடைய கையில் தான் ராஜாங்க அதிகாரம் முழுவதும் அடங்கியிருந்தது. அநேக வருஷங்களாக

ஜெர்மன் சக்கரவர்த்திகள் தங்களுடைய பிரதம மந்திரியின் மூல மாகவே மற்ற மந்திரிகளுடன் போக்கு வரத்துகடத்தி வந்த வழக்கத்தை இப்போது நிறுத்திவிடவேண்டுமென்று இரண்டாவது வில்லியம் ஆக்ஞாபித்தார். பிஸ்மார்க் அதற்குச் சம்மதிக்காமல் 1890-ம் வருஷத்தில் ராஜிகாமாச் செய்துவிட்டார். பிரசித்தி பெற்ற ஐரோப்பிய ராஜதந்திரிகளுள் ஒருவராகிய பிஸ்மார்க் அது முதல் ஜெர்மன் சரித்திரத்தினின்றும் மறைந்து விட்டார். ஐரோப் பிய சரித்திரம் உலகத்தாரின் ஞாபகத்திலிருக்கும் வரையிலும் அவருடைய பெயரும் அழியாமலிருக்கத்தே தீரும். ஜெர்மானியர் அனைவரும் அவரைப் பூஜிப்பதோடு, அவரைவிலக்கி விட்ட சக்கர வர்த்தியும் அவருடைய கடைசிக்காலத்தில் மனப்பூர்வமாக மரியா தைகளைச் சொரிந்து வியப்பைக் காட்டினார். ஜெர்மன் நாடுகள் பற்பல துண்டுகளாகப் பிரிந்து சண்டை சச்சரவுகளால் வேறுபா டடைந்த கலவரப்பட்டிருந்த காலத்தில், பிஸ்மார்க் தம்முடைய ஒப்பற்ற சக்தியாலும், அந்த சக்தியில் தமக்கிருந்த திடமான நம் பிக்கையாலும், விசேஷ சாமர்த்தியத்தாலும், ரணகளங்களை வலு வில் நாடிச்சென்று அங்கு ஜாதிய ஒற்றுமையைக் கற்றுக்கொடுத் தார். பிறகு புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட ஜெர்மன் ஏகாதிபத் தியத்தை முழுப்பொறுப்பையும் தாமே ஏற்று நடத்தி, புசலடித்த காலங்களில் சிறிதும் சஞ்சலப்படாமல் ராஜாங்கத்தைத் துணி வாய்ச் செலுத்தி, அபாயமான வழிகளை சாமர்த்தியமாய்க் கடத்து தம் தேசத்தை மகோன்னத நிலைமைக்குக் கொண்டு வந்து சேர்த் தார்.

ராஜதந்திரியில்லாத ராஜாங்கம்.

ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஐரோப்பாவில் மாத்திரமல்ல, உலக முழுவதிலும் மேலோங்கி நிற்கவேண்டுமென்று இப்போது வில்லி யம் ஆசை கொண்டார். ஜெர்மனியில் 1870-ம் வருஷம் முதல் யாதொரு சஞ்சலமுமின்றி சமாதானமே நிலை பெற்றிருந்தால், ஜெர்மானியர் இயல்பாய்ப் பெற்ற சாமர்த்தியத்தாலும் அறிவாலும் உலகத்து காரீகத்தை விருத்திசெய்து தங்கள் செல்வத் தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொண்டார்கள். அதைக் கண்டு ஜெர்மன் சக்கரவர்த்தியின் ஆசை இன்னும் அதிகமாய் மூண்டது. சக்கரவர்த்தி வழக்கப்படி மந்திரிகளை நியமித்தா

ராயினும் தாமே ராஜாங்க லக்ஷியங்களையும் கொள்கைகளையும் நிச்சயிக்க முன் வந்ததோடு அவைகளின்படி விவகாரங்களையும் தாமே நடத்தத் தொடங்கினர். தம் சொந்த அதிகாரத்தை தாராளமாய் உபயோகப்படுத்தவும், தேசாதிபதிகளுக்கு சகஜமாய் ஏற்பட்டுள்ள கூச்சத்தை விட்டு ராஜாங்க விஷயங்களைத் தாமே பகிரங்கமாய் வெளியிடவும் ஆரம்பித்தார். ராஜாங்கத்தில் மந்திரிமார்களுக்கு முக்கியமான ஸ்தானம் ஏற்பட்டிருப்பதும், ராஜதந்திரம் விசேஷ பொறுப்பைக் கொண்டிருப்பதும், சக்கரவர்த்திக்குப் புலப்படவில்லை. உண்மையில், பிஸ்மார்க்கினுடைய காலத்தில் அன்னியநாட்டு விஷயங்கள் எவ்விதத்திலும் சஞ்சலப்படாமல் எளிதாய் நடந்து வந்ததைப்பார்க்க ஜனங்களுக்குச் சகஜமாய்விட்டபடியால், வரவர அவைகளிலுள்ள விசேஷம் புலப்படாமல் அவைகளை நடத்திய சூத்திரதாரியின் அமிசம் முக்கியமான தென்பதை மறந்துவிடத் தொடங்கினர்கள். பிஸ்மார்க் காலத்தில் ஜெர்மன் சுவர்ன்மெண்டு காட்டிய தைரியம் இப்போது அகம்பாவமாக மாறிவிட்டது; மனவுறுதி இப்போது பிடிவாதமாக மாறிவிட்டது; சாமர்த்தியம் இப்போது சிக்கலையுண்டு பண்ணும் சூழ்ச்சியாய் மாறிவிட்டது. பிஸ்மார்க் காலத்தில் ஜெர்மனிக்கு விரோதமாய் யாதொரு கட்சியும் சேர்க்கப்படாம லிருக்கும் பொருட்டு, ஐரோப்பிய ராஜாங்கபரஸ்பர நிலைமையில் ஏற்றத்தாழ்வு உண்டாகமல் ஜெர்மனி காத்து வந்தது போக, அது இப்போது பிரிட்டிஷார் உள்பட ஒரு பலமான விரோதக் கட்சியைக் கிளப்பி விட்ட சரித்திரத்தை இனிச் சொல்லி வரவேண்டும்.

அன்னிய விவகாரங்களில் ஜெர்மனியின் புதிய கொள்கை.

ஜெர்மன் சக்கரவர்த்தி அடிக்கடி ஐரோப்பியத் தலை நகரங்களுக்கு விஜயஞ்செய்து பிரயாணம் செல்வதில் அதிகப்பிரியங்காட்டினர். அவர் ஒருசமயத்தில் பிரஞ்சு சுவர்ன்மெண்டுக்குக்கூட நேசவார்த்தைகள் சொல்லத் தொடங்கினர். எல்லா ஐரோப்பிய அரசுகளையும் வித்தியாசமின்றி பார்த்து வந்ததால் அந்த வாலிய சக்கரவர்த்தியின் புதிய உணர்ச்சிகளை விசேஷமாகப் பாராட்டி நம்புவதற்கில்லையென்று பிரஞ்சு சுவர்ன்மெண்டு சுவனிக்கவில்லை. ருஷியா சுவர்ன்மெண்டின் மனப்பான்மை முன்போலில்லாமல், பிரான்ஸினிடத்தில் சார்புகொண்டிருந்தது. சில வருஷங்களாய் ருஷியா

வுக்கும் பிரான்சுக்கும் நேசபாவம் முதிர்ந்து 1891-ம் வருஷம் ஆல் விருதேசங்களும் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டன. பிரான்ஸ் 1870-ம் வருஷத்தில் செய்த யுத்தத்தால் மிகவும் பலஹீன ஸ்திதியிலிருந்தபடியாலும், அந்த விரோதஉணர்ச்சியால் ஜெர்மனியுடன் திடீரென்று மறுபடி யுத்தஞ் செய்ய அவசரப்பட்டு விடக் கூடுமாகையாலும், பிரான்ஸின் உதவியை ருஷியா அதிகமாக மதிக்கவில்லை. அதனால்தான் ருஷியப் பிரஞ்சு உடன் படிக்கை கையெழுத்தாவதற்கு 1886-ம் வருஷ முதல் தாமலப்பட்டு வந்தது. பிறகு பிரான்ஸினுடைய ராணுவநிலைமையும் பொருளாதார நிலைமையும் விரைவாய் விருத்தியாகி வந்ததைக்கண்டு ருஷியாவின் நேசபாவம் முதிரத்தலைப்பட்டது.

ஆசியாகண்டத்தில் ஜெர்மனியின் நடவடிக்கை.

பிஸ்மார்க் வெகு கவலையாய் சோதித்தறிந்த பழய வழிகளில் அக்கிய விவரங்களே முன் போல செலுத்துவதற்கு வில்லியம் சக்கர வர்த்தி மனங்கொள்ளவில்லை. நூதன வழிகளைத் தேடிச் சென்று உலகமுழுவதும் ஜெர்மானியரின் செல்வாக்கைபரப்பவேண்டுமென்று ஆசை மேலிட்டு, ருஷிய சக்கரவர்த்தியின் நேச சம்பந்தத்தை பெறுவ தற்கு முயற்சி செய்தார். ருஷியாவின் கவனத்தையும் சுறு சுறுப் பையும் ஐரோப்பாவிலிருந்து ஆசியா கண்டத்துக்குத் திருப்பி விட்டு, சைனு தேசம்இருக்கிற திசையில் செலுத்த இப்போது ஜெர்மனி முயற்சி செய்தது. 1895-ம் வருஷத்தில் சைனுவுடன் ஜப்பான் யுத்தஞ் செய்து முடிந்ததும், ருஷியாவும் ஜெர்மனியும் சேர்ந்து கொண்டு ஜப்பானே பயமுறுத்தி வெற்றியின் பலன்களை அனுபவிக்கவிடாமல் அவைகள் தடுத்துவிட்டன. சைனுவைச் சேர்ந்த மாகாணமாகிய மஞ்சூரியாவில் ருஷியா தன்செல்வாக்கை ஸ்தாபித் துக்கொண்டது. 1897-ம் வருஷத்தில் சைனுவிலுள்ள கயோசௌ துறை முகத்தை ஜெர்மனி வசப்படுத்திக்கொண்டது.

துருக்கியில் ஜெர்மனியின் நடவடிக்கை.

ஐரோப்பாவில் பால்கன் நாடுகளில் ருஷியாவின் செல்வாக் கைக் குறைக்கவேண்டுமென்று ஜெர்மன் சக்கரவர்த்தி மற்றொரு புதிய வழியிலும் முயற்சிசெய்தார். அவர் 1898-ம்வருஷத்தில் துருக்கி சுல்தான் அப்துல் ஹமீத்தைப்பார்க்கஸான்ஸ்டாண்டிநோபி

ளுக்கு இரண்டாம் முறை விஜயம் செய்தார். அதற்கு முன்னால் 1889–ம் வருஷத்தில் அவர் துருக்கித் தலைநகருக்கு சென்றபோது ஒரு கிருஸ்தவ மன்னன் பாதுஷாவைப் பார்க்கப்போனது அதுதான் முதல் தடவை. ஆனால் ஜெர்மன் சக்கரவர்த்தி இரண்டாந் தடவைசுல்தானைப்பார்க்கப்போனசமயத்தைக் கவனிக்கவேண்டும். துருக்கிமாகாணமாகிய அர்மீனியாவி லிருந்த கிறிஸ்தவர்கள் படு கொலை செய்யப்பட்டதாக ஐரோப்பா முழுவதிலும் பெருங்கிளர்ச்சி உண்டாயிருந்தது. அந்த சமயத்தில் அவர் சென்றதால் ஜெர்மனியின் வெளிப்படையான நோக்கங்கள் அச்சத்தை உண்டுபண்ணின. ஆயினும், ஜெர்மன் சக்கரவர்த்தியின் நடவடிக்கையால், துருக்கியிலும் அதைச் சுற்றியுள்ள ஆசியாப் பிரதேசங்களிலும் ஜெர்மனியின் விபசாரம் விருத்தியாகி, துருக்கியில் ரெயில் பாதை முதலியவைகளில் மூலதனம்போட்டு ஜெர்மனியின் செல்வாக்கு அதிகரித்து, துருக்கி ராணுவத்தை ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் நூதனமுறைகளில். திருத்தி, இன்னும் பலவாறுப் ஜெர்மனியின் அதிகாரம் பரவத் தொடங்கியது.

ருஷியாவுக்கு ஆசியா கண்டத்தில் நேர்ந்த ஆபத்து.

ஆனால் இவ்விரண்டு நூதன முயற்சிகளால் ருஷியாவைப்பற்றினமட்டில் ஜெர்மனியின் நோக்கம் நிறைவேறவில்லை. ருஷியாவின் விரோதம் அதிகரித்ததே யொழிய தணியவில்லை. 1904-ம் வருஷத்து ஆரம்பத்தில் மஞ்சூரியாவில் ருஷியாவின் நடவடிக்கைகள் அதற்கு ஆபத்தாய் முடிந்தன.

ஜப்பான் 1895-ம் வருஷம் சைனுவுடன் யுத்தஞ் செய்து முடித்த சமயத்தில், ருஷியா ஜெர்மனி ஆகிய இவ்விரண்டு ஐரோப்பிய வல்லரசுகள் சேர்ந்து சைனுவுக்குச் சொந்தமான பிரதேசங்களைப் பற்றிக்கொண்டதைப்பார்த்து, ஜப்பான் திடுக்கிட்டது. அவைகள் ஆரம்பத்திலேயே வசப்படுத்திக்கொண்ட மஞ்சூரியா, காயசௌ என்ற பிரதேசங்கள் ஜப்பானுக்கு மிகவும் அருகி லிருந்தபடியால் அதற்கு மிகுந்த ஆபத்தை விளைவிக்கக்கூடியவை. அந்த வல்லரசுகள் ஜப்பானை நோக்கி மற்றொரு அடி எடுத்துவைத்தால் அத் தேசமே நசுங்கிவிடும்போலிருந்தது. ஜப்பானிய ராஜதந்திரிகள் அந்த அபாயத்தைஉடனே அறிந்து வேறு வல்லரசின் நேச சம்பத்தைத் தேட ஆரம்பித்தார்கள். இங்கிலாந்தினுடைய மன நிலைமை மாறுபா

டைந்ததை ஜப்பான் கவர்ன்மெண்டு கவனித்தார்கள். பிரிட்டிஷார் 1900ம் வருஷம் தென்ஞப்பிரிக்காவில் போவர்யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தபோது அவர்களுடைய சமூசயத்தையும் விரோதத் தையும்ஜெர்மனி கிளப்பிவிட்டது. போவர் கவர்ன்மெண்டுக்குச்சாத கமாய் ஜெர்மன்சக்ரவர்த்தி யாதொன்றும் செய்யக்கூடாதைக்கண்டு, அச்சமயம் வலுவானகடற்படை ஜெர்மனிக்கு இல்லாததைப் பெருங் குறையாகவும் பெரும்பிழையாகவும்எடுத்துச்சொன்னர். அதுமுதல் ஜெர்மன் கடற்படை வெகு விரைவாய் அபிவிருத்தி செய்யப் படவே, இங்கிலாந்தின் ராஜதந்திரிகள் யோசனையில் ஆழ்ந் தார்கள். பிரிட்டிஷ் கடற்படை வேறு பிரதேசதங்களைக் காக்கும் பொருட்டுப் பிரிந்துபோகாம லிருக்கவேண்டுமென்று எண்ணி, ஆசியாக் கண்டத்திலுள்ள இந்தியா முதலிய பிரிட்டிஷ் பிரதேசங் களைக் காப்பதற்கு, 1902-ம் வருஷம் போவர் யுத்தம் நடந்துகொண் டிருந்தபோதே, ஜப்பானுடன் இங்கிலாந்து உடன்படிக்கை செய்து கொண்டது. அந்த உடன்படிக்கையின்படி அன்னியநாடுகள் ஒன்றுக் கதிகமாகக் கூடி இங்கிலாந்தையாவது ஜப்பானையாவது ஆசியாக் கண்டத்தில் தாக்கினால் இவ்விருதேசங்களும் ஒன்றுக்கொன்றுஉதவி செய்யவேண்டும். அச்சமயம் ஜப்பான் இங்கிலாந்தின் உதவியைப் பெற்று முதலில் ருஷியாவைத் தனியாய் யுத்தத்தில் தாழ்த்து முறி யடித்து, பிறகு சமயம் சேர்ந்தவுடன் ஜெர்மனியையும் அப்புறப் படுத்த வேண்டுமென்று எண்ணங் கொண்டு அந்த உடன்படிக் கையைச் செய்துகொள்ள ஆவலாயிருந்தது. அவ்வாறே தைரிய மாய் எதிர்த்து 1904-ம் வருஷத்தில் ருஷியாவை முறியடித்துவிட் டது. அப்போது ஜெர்மனி மறுபடியும் ஜப்பானை பயமுறுத்த முய ன்றபோது, இங்கிலாந்தின் உடன்படிக்கையைப் பற்றி ஜெர்மனி சிந்திக்க வேண்டி யிருந்தது.

ருஷியாவும் இங்கிலாந்தும் உடன்படிக்கை செய்து கொண்டன.

ருஷியா 1904-ம் வருஷம் ஜப்பானுடன் யுத்தஞ்செய்து தன் கடற்படை அடியோடு அழிந்து போனதையும் ராணுவப்பலம் சின்ன பின்னமாகியதையும் கண்டு, தன்னுடைகொள்கைகளை மாற்றிக் கொண்டது. ஜெர்மனியின் உள் நோக்கம் மறுபடியும் ருஷியா ருக்கு ஞாபகம்வந்தது. ஆசியாகண்டத்தில் ருஷியாவின் ஆதிக்யத் தை விருத்தி செய்ய வேண்டுமானால் ஜெர்மனியின் உதவி சிறிதும்

பயனில்லை என்பதையும் அறிந்தது. யுத்தம் முடிந்தவுடன் தன் னுடைய ராணுவ ஏற்பாடுகளை நீரசோதித்து சீர்ப்படுத்தவும், முற் றிலும் அழிந்துபோன கப்பற்படையை புதுதாய்க்கட்டவும் தொடங் கிற்று. முக்கியமாய் ஜெர்மனி ஆஸ்டிரியா இவைகளுக்கு கருகி லுள்ள ருஷிய எல்லைப் புறங்களை பலப்படுத்துவதில் முழுக்கவ னத்தை செலுத்தியும் ஏராளமாய் பொருட் செலவு செய்தும் தன் நிலைமையை சீக்கிரத்தில் விருத்தி செய்து கொண்டது. ஜெர்மனி யின் நேச சம்பந்தத்தைக் கைவிட நிச்சயித்தது. இங்கிலாந்தின் மனோபாவத்தையறிந்த ருஷிய கவர்ன்மெண்டு 1907ம்-வருஷத்தில் இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்துகொண்டு ஆசியா கண்டத்தில் நேசபாவத்துடன் சேர்ந்து வேலை செய்வதாக ஏற் பாடு செய்து கொண்டார்கள். ஜப்பானுடைய வல்லமையைப்பற்றிய சரியான அபிப்பிராயத்தை எளிதில் மறந்துபோன ருஷிய கவர்ன் மெண்டு, யுத்தத்துக்குப் பிறகு, அதைநன்றுய்த் தெரிந்துகொண்டா ர்கள். சைனுவில் ருஷியா தன் செல்வாக்கை நாட்டும் பொருட்டு ஜப் பானுடன் பகைத்துக் கொள்ளக் கூடாதென்று ருஷிய ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்ததற்கு முன்னதாகவே, ஒரு கட்சியார் ருஷியா வில் சொல்லிவந்தார்கள். ஜப்பானுடன் யுத்தம் செய்யவேண்டு மென்ற நோக்கம் ருஷிய சக்கரவர்த்திக்கு இருந்ததில்லை யென் றும் சொல்லப்படுகிறது. அவ்வாறு யுத்தம் செய்தது பெரிய ராஜாங் கப் பிழையென்று கருதப்பட்டது. ருஷியாவைப்போல் ஜப்பானும் புதிய பிரதேசங்களில் குடியேற்ற நாடுகளை ஸ்தாபித்து விருத்தி யடைய வேண்டுமென்று நோக்கங்கொண்ட தேசம். ஆகையால் ஜப்பானுடன் பகைத்துக்கொள்வதைவிட சேர்ந்து கொள்வதே ருஷியாவின் நோக்கத்துக்குச் சாதகமாயிருக்கும். சைனு தேசம் புதிய நாகரித்தைப் பெற்று மூற்போக் கடைந்தால் அதனிடத் தில் மறைந்து கிடைக்கிற செல்வமும் வன்மையும் வெளிப்பட்டு ஜப்பானுடன் பலமாய்ப் போட்டிபோட்டு நிற்கக்கூடியது. ஆகை யால் சைனுவைப்பற்றின மட்டில், ருஷியாவும் ஜப்பானும் ஒன்றுக் கொன்று உதவிசெய்துகொள்ள வேண்டிய நிலைமையிலிருப்பவை யென்று ருஷியாவில் ஒரு கொள்கை பரவியிருந்தது. மேலும் ஆசியா கண்டத்தில் பெரிய பிரதேசங்களை வசப்படுத்தி அவை களைக் காக்கும் பொறுப்பையும் கவலையையும் மிகுதியாய்க்கொண்ட தேசம் இங்கிலாந்து. ஆகையால் ருஷியா அதோடு சேர்ந்து

கொள்வதால் அதன் சந்தேகத்தையும் விரோதத்தையும் இளப்பாம விருப்பதோடு ஆசியா பிரதேசங்களில் ஒரேவித அக்கரைகொண்டு ஒற்றுமையாய் நடக்கலாம். இவ்வாறு ஆசியர் கண்டத்து விவகாரங்களைப் பற்றி ருஷியா முடிவான ஏற்பாடுகள் செய்து கொண்டதை கவனிக்கவேண்டும். ஏனெனில், அதுமுதல் ருஷியா ஐரோப்பிய விவகாரங்களில் தன் முழு கவனத்தையும் செலுத்தத் தொடங்கியது.

ஜோர்மனியின் நிலைமை பலஹீனப்பட்டது.

இந்த சம்பவங்களால், ருஷியாவின் வன்மையை வேறு வழிகளில் திருப்பி ஐரோப்பாவில் தொந்தரவுசெய்யாமல் தடுக்க வேண்டுமென்று ஜெர்மானியர்கொண்ட நோக்கமும் செய்த முயற்சிகளும் முற்றிலும் பயனற்றவையாய்ப்போனதோடு தங்களுக்கு நேர்விரோதமாகவும் முடிந்தன. மேலே சொல்லியதிலிருந்து ஜெர்மனியின் நடவடிக்கைகள் எத்தகைய பலன்களை உண்டுபண்ணினவென்பது விளங்கும். ஜெர்மனி இங்கிலாந்தை எதிர்க்கையில் சேரும்படி துரத்தாமலிருந்தால், ஜப்பான் ருஷியாவைத் துணிவாய் எதிர்த்ததையும், ருஷியா ஜெர்மனியைத் தூரவிலக்கிவைத்ததையும், ஒருக்கால் ஜெர்மனி தடுத்திருக்கக்கூடும். ஜெர்மன் ஏகாதிபத்தியம் வளர்ந்துவந்து கன்றாய் வலுப்படும்வரையில், ருஷியாவின் நேசம் அவசியம் என்று முன்பு பிஸ்மார்க் கருதியதாக ஜெர்மன் சக்கிரவர்த்தி நினைத்து, தம் தேசம் அதன்பிறகு விரைவாய் திரவிய பலத்திலும், ராணுவபலத்திலும் விருத்தியடைந்துவிட்டதைக் கண்டு, ஜெர்மன் சக்கிரவர்த்தி ருஷியாவின் உதவி இனித் தேவையில்லை என்று எண்ணி யிருக்கலாம்.

ஆனல் இங்கிலாந்தையும் பகைத்துக்கொண்டதால் ஐரோப்பாவில் ஜெர்மனியின் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. .எதிர்க்கக்கூடியின் பலம் நிச்சயமாய் அதிகப்பட்டுவிட்டது.1891,1904,1907 ஆகிய இந்த வருஷங்களில் பிரான்ஸ், இங்கிலாந்து, ருஷியா இம்மூன்று தேசங்களும்உடன்படிக்கை செய்துகொண்டனவென்றுசொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுப்பாட்டுக்கு டிரிப்பிள் என்டன்ட்டி(Triple Entente) என்று பெயர். ஆகையால் ஜெர்மனி ஐரோப்பாவில் முதன்மை ஸ்தானம் பெற்று மேம்பாடடைந்ததை உலகமுழுவதிலும் ஸ்தாபிக்கவேண்டுமென்ற போராசையாலும், ராஜ தந்திரமின்மையாலும் அகம்பாவத்தாலும் நாலாப்பாகங்களில் வலுவான விரோ

தங்களைக் கிளப்பி விட்டது. ஆகையால், ஜெர்மனியிடம் விரோதங்கொண்ட தேசங்களை ஒன்றுஞ்சேரவிடாமல் பிரித்து வைக்க வேண்டுமென்று 20-வருஷகாலமாக பிஸ்மார்க் செய்த காரியங்களெல்லாம் வீணாயின.

தருக்கியில் ஜெர்மானியர் செய்த முயற்சிகள் எவ்வாறாயின? ஆஸ்டிரியக்கவர்ன்மெண்டு ஸெர்வியாவுக் கருகிலுள்ள பாஸ்னியா ஹெர்ஸிகோவினு என்ற பிரதேசங்களை ஆரம்பத்தில் தங்கள் மேற்பார்வையில் வைத்திருந்து 1908-ம்வருஷத்தில் அவைகளை தங்கள் ஏகாதிபத்தியத்தோடு முற்றிலும் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள். ஸெர்வியாவும் ருஷியாவும் ஆக்ஷேபிக்கத் தொடங்கினவுடன் ஜெர்மனி யுத்தம் செய்வதாகப் பயமுறுத்தவே ருஷியா பின்வாங்கியது. இச்சம்பவங்களை ஸெர்வியாவும்ருஷியாவும் எந்நாளும் மறக்கவில்லை. இதனால் ருஷியாவுக்கு, பிரான்ஸினிடத்திலும் இங்கிலாந்தினிடத்திலுமிருந்த உணர்ச்சி பலப்பட்டது. இனி இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் நேச சம்பந்தம் வர வர முதிர்ந்துவந்ததைப்பற்றி சொல்ல வேண்டும்.

7-வது அத்தியாயம்.

கிரேட்பிரிட்டனும் ஜெர்மனியும் செய்த போட்டி.

பிரிட்டிஷாருடைய தேச அமைப்பில் ஓர் விசேஷம்.

பிரிட்டிஷாரிடத்தில் விரோதங் கொண்டு அவர்களுக்குச் சமமாக கடற்படையில் வல்லமை பெறவேண்டுமென்று ஜெர்மானியர் இப்போது முயற்சி செய்ததுபோல இதற்குமுன் சில ஐரோப்பிய அரசுகள் முயற்சி செய்து பயன்படவில்லை. கிரேட்பிரிட்டன் * நாலு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட சிறு தீவு.

* இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் இம்மூன்று பிரதேசங்களும் சேர்ந்து ஒரு தீவு ஆகும். அதற்கு கிரேட்பிரிட்டன் என்று பெயர். அதற்கு அருகில் மேற்கே அயர்லாந்து என்ற தீவு இருக்கிறது. அதையும் சேர்த்து பிரிட்டிஷ் அயல்ஸ் (பிரிட்டிஷ் தீவுகள்) என்ற சொல்லப்படும் ஆனால் வழக்கத்தில் இங்கிலாந்து என்றால் பிரிட்டிஷ் தீவுகள் அனைத்தையும் குறிப்பிடும்.

இந்த விசேஷ அமைப்பினால் பிரிட்டிஷார் சரித்திர முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. கிரேட் பிரிட்டன், அதன் சரித்திரம் ஆரம்பமானது முதல், ஆறுமுறைதான் அந்நியரால் படையெடுக்கப்பட்டது. முதலாவது, ரோமானியர் கி.மு. 55-ம் வருஷம் *படையெடுத்தார்கள். இரண்டாவது, ஆங்கிலோ ஸாக்ஸன் என்ற ஜாதியர் 449-ம் வருஷத்தில் படையெடுத்தார்கள். அதனால் அத்தீவுக்கு இங்கிலாந்து என்ற பெயர் உண்டாயிற்று. மூன்றாவது கிருஸ்தவ மதாசார்யர்கள், 597-ம் வருஷத்தில் அத்தீவில் பிரவேசித்து தேசத்தை வெல்லாமல் மனதை வென்றார்கள். ஆங்கிலோ ஸாக்ஸன் ஜனங்கள் கிருஸ்துவர்களாகி நாகரிகம் பெற்று மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களோடு சமமாக நின்று போக்கு வரத்து நடத்தத் தொடங்கினர்கள். நான்காவது, ஐந்தாவது தடவைகள், டேன்ஸ் ஜாதியர் 9-வது, 11-வது நூற்றாண்டுகளில் படை யெடுத்தார்கள். (இப்போது ஐரோப்பாவிலுள்ள டென்மார்க் தேசத்திலுள்ள ஜனங்கள் டேன்ஸ் என்று சொல்லப்படுவார்கள்.) ஆறாவது, நார்மன்ஸ் என்ற ஜாதியர் பிரான்ஸின் வடபாகத்திலிருந்து புறப்பட்டு கிரேட்பிரிட். டன்மீது படை யெடுத்தார்கள். இது 1066-ம் வருஷம் நடந்தது அதன் பிறகு அதாவது 848 வருஷகாலமாக அங்கு எந்த சத்துருவும் காலடி வைத்ததில்லை. தங்கள் தேசத்தில் அவ்வளவு காலம் சத்துருவின் முகத்தையே பார்த்தறியாத பிரிட்டிஷாரின் நடவடிக்கைகளும் சரித்திரமும் அதனால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்?

அவ்வாறு ஆறுமுறை படை யெடுத்தவர்களில் அநேகர் அத்தீவிலிருந்தவர்களைப் போன்ற ஜாதியாகவேயிருந்தனர். அக்காலத்தில் கடல் கடந்து செல்வது கஷ்டமானகாரியமாயிருந்ததோடு அவ்வாறு செல்லக்கூடிய சத்துருக்கள் தொகையில் கொஞ்சமாகவே யிருப்பார்களாகையால் அத்தீவு அடிக்கடி படை யெடுக்கப்பட வில்லை. அவ்வாறு அந்நியர்கள் பிரவேசிக்காமலிருந்ததினால், அத் தீவிலுள்ளவர்கள் மற்ற ஐரோப்பிய ஜனங்களி

---

* கிருஸ்து சகாப்தம் தொடங்கி இப்போது 1914 வருஷம் ஆகிறது. கிருஸ்து பிறப்பதற்கு 55 வருஷங்களுக்கு முன்னால் ரோமானியரின் படை யெடுப்பு நடந்தது. கி. மு. என்பது கிருஸ்து பிறப்புக்கு முன் என்று குறிப்பிடும்.

லிருந்து தனியாய் பிரிக்கிருந்து காலக்கிரமத்தில் தங்கள் வித்தியா சங்களை எளிதில் மறந்து சிக்கிரத்தில் ஒருமைப் பட்டார்கள். நம் இந்தியா தேசம் மூன்று பக்கங்களில் கடலால் சூழப்பட்டு, காலாவது பக்கமாகிய வடபுறத்தில் இமையமலைத் தொடரால் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறபடியால், முகம்மதியரைப்போல் புதிதாய் படையெடுத்து வந்தவர்கள் அந்நியதேசங்களுடன் போக்கு வரத்து வைத்துக்கொள்வது கஷ்டமாயிருந்ததைக்கண்டு, காலக்கிரமத்தில் தேசவாசிகளோடு ஒன்றுப்பக் கலந்துபோக ஆரம்பித்தனர். ஆயினும் அவர்கள் முற்றிலும் ஐக்கிய மாகாமலிருந்ததற்கு ஒரு காரணம், இந்தியாவின் வடமேற்கு மூலையில் சில கணவாய்களின் வழியாய் அந்தியர்களோடு சிறிது சம்பந்தம் இருந்துகொண்டே வந்தது. மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களிலோ அயல் நாடுகளிலிருந்த அந்தியர்கள் அடிக்கடி படையெடுப்பதும் வேறு விதங்களாய் பிரவேசிப்பதுமாயிருந்தபடியால் ஜனங்கள் ஒருமைப்படுவது கஷ்டமாக யிருந்தது. இப்போது ஆஸ்டிரிய ஏகாதி பத்தியத்தின் நிலைமையைப் பார்த்தால் அந்த உண்மை செவ்வையாய் விளங்கும். ஆஸ்டிரியாவில் அந்திய ஜாதியாகிய ஸ்லாவ்கள் ஏராளமாயிருப்பதால், அவர்களை யொட்டினாற் போலுள்ள ஹங்கரியா, ருஷியா போன்ற சுஜாதியபிமானங்கொண்ட ராஜாங்கத்தின் உதவியை எதிர் பார்த்த வண்ணமாயிருந்து, கவர்ன்மெண்டுக்கு அடங்காமலும் இதர ஜனங்களோடு ஐக்கியமாகாமலுமிருந்து தங்கள் தேசத்தை பல ஹீனப்படுத்தி வருகிறார்கள். அவ்வாறு எவ்வித தொந்தரவுகளும் கிரேட் பிரிட்டனில் உண்டாகாம லிருந்தது பெரிய விசேஷ மல்லவா? ஜெர்மனி, இடாலி இவைகளும், பக்கத்திலுள்ள வல்லமை கொண்ட அரசர்களுக்கு உட்பட்டு சுதந்தரம் பெறுவதற்கு எவ்வாறு போராடவேண்டியிருந்ததென்பதும் தெரியுமல்லவா? ஆகையால் கிரேட்பிரிட்டன் 800-வருஷங்களுக்கு மேலாக அந்தியரால் படையெடுக்கப் படாததால், ஜனங்கள் எளிதில் ஒருமைப்பட்டு வாழ்ந்ததோடு, தங்கள் ராஜாங்க சுதந்தரங்களை சொந்த அரசர்களோடு சாவகாசமாய்ப் போராடி அடைந்தார்கள். மேலும் அந்தியர்களின் யுத்தங்களாலும் உள் நாட்டுக் கலகங்களாலும் அதிகமாய் கலக்கமடையாமலு மிருந்ததால், ஜனங்கள் சமாதான நிலையைப் பெற்று கடல் வியாபாரத்தை விருத்தி செய்து பொருள் சம்பாதிப்பதில் தேர்ச்சி பெற்றார்கள்.

மேலும், பெரிய சேனையைச் சேர்த்து ராணுவபலம் பெற வேண்டிய அவசியமில்லாததால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் பொருளீட்டுவதில் செலவழித்தார்கள். அந்திய நாடுகளில் ஏற்பட்டது போல் ஒவ்வொரு பிரஜையும் ராணுவத்தில் வீணுய்ச் சிலகாலம் செலவு செய்ய வேண்டிய அவசியம் நேரவில்லே. மேலும் ஐரோப்பிய விவகாரங்களில் அடிக்கடி இழுக்கப் படாமல் பிரிட்டிஷார் தங்களுடைய பலத்தையும் காலத்தையும் குடியேற்ற நாடுகளஸ்தாபிப்பதில் செலவு செய்தார்கள். ஆனல் இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விஷயமென்னவென்றல், கிரேட் பிரிட்டன்மீது அந்தியர்கள் படை யெடுப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல வென்பதும், பிரிட்டிஷார் தங்கள் கடற்படையின் பலத்தினல் தேசத்தை காத்து வருகிறார்களென்பதும் சரித்திர பூர்வமாய் ஏற் பட்ட உண்மை. பிரிட்டிஷ் சரித்திரத்தில் 1066-ம் வருஷத்துக் குப் பிறகு இது வரையில் இரண்டு முறை அந்தியர்கள் படை யெடுக்க முயற்சி செய்ய, பிரிட்டிஷ் கடற்படையின் வன்மையால் அது சிறிதும் பலிக்காமல் போயிற்று.

அந்தியரின் படையெடுப்புகள் பயன்படவில்லே.

கிரேட் பிரிட்டன் ஐரோப்பா கண்டத்தினின்றும் தனியாய் விலகி ஒரு தீவா யிருக்கிறபடியால், ஐரோப்பிய விவகாரங்களில் அடிக்கடி பிரவேசிப்பதில்லே. ஆனல் அந்த தீவு வெகுதூரம் விலகி யிருக்காமல் 30 மைலி லேயே யிருப்பதால், ஐரோப்பா கண்டத்தில் எந்த வல்லரசாவது மிதமிஞ்சிய அதிகாரத்தைப் பெற்று அதனல் பிரிட்டிஷாருக்கு அபாயத்தை விளேக்கும்போது, ஐரோப்பிய யுத் தத்தில் அவர்கள் கலந்து கொள்ள நேரிடுகிறது. வல்லரசுகளின் அதிகாரம் ஏற்றத் தாழ்வின்றி இருந்த நிலேமையிலேயே இருக்கும் படி பிரிட்டிஷார் முயற்சி செய்தார்கள். அவ்வாறு, ஸ்பெயின், பிரான்சு இந்த தேசங்களின் வன்மை அந்தந்தகாலத்தில் குறைக்கப் பட்டது.


1588-ம் வருஷம் ஸ்பெயின் கவர்ன்மெண்டு பெரிய முயற்சிகள் செய்து வலுவான யுத்த கப்பல்களேக் கட்டி பேரெற்ற ஸ்பானிஷ் அர்மெடா என்று சொல்லப்படும் கப்பற்படையை இங்கிலாந்தின்மீது அனுப்ப, அந்தப்படை முழுவதும் பிரிட்டிஷ் கப்பல்களால் இங்கிலீஷ் கடலில் சிதறடிக்கப்பட்டது. 18-ம் நூற்றாண்டில் அதைவிட பிரமாத

மான பிரயத்தனம் பிரசித்தி பெற்ற நெப்போலியன் சக்கரவர்த்தியால் செய்யப்பட்டது. கடற் சண்டையில் ஒப்பற்ற கியாதி பெற்ற நெல்ஸன் பிரிட்டிஷ் கப்பற்படையைச் செலுத்தி, நெப்போலியனுல் ஏவப்பட்ட படைகளைப் பல முறை அழித்துவிட்டார். 1805-ம்வருஷத்தில் பேர்பெற்ற டிரபால்கர் சண்டையில், நெப்போலியனுடைய பெரிய முயற்சியால் கடைசியாக பிரஞ்சு கடற்படையும் ஸ்பெயின் கடற் படையும் சேர்க்குகொண்டு எதிர்க்க, பிட்டிஷ் அட்மிரல் நெல்ஸன் சத்துருவை அடியோடு அழித்து, அச்சமயம் அவர் இழந்த உயிருக்குப் பதிலாய் தமக்கு அழியாப் புகழையும் பிரிட்டிஷ் தீவுகளுக்குச் சாவதானத்தையும் தேடிவைத்தார்.


நெப்போலியன் சக்கரவர்த்தி ஐரோப்பாகண்ட முழுவதையும் கலக்கி வென்றபோது, இங்கிலாந்தின் மீது ஏன் படையெடுக்கவில்லை என்று கேட்கப்பட, "இங்கிலீஷ் கடலின் மேல் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்தால், தக்ஷணமே இங்கிலாந்து முழுவதையும் பணியச் செய்வேன்" என்று பதிலளித்ததாகச் சொல்லப் படுகிறது. பாலத்தைக் கட்டுதல் சாத்தியமாகவில்லை; இங்கிலாந்தும் பணியவில்லை. 1910-ம் வருஷத்தில் இங்கிலீஷ் கடலைக் கடக்க பாலம் கட்டுவதாக சிலர் முன்வந்தபோது, அது ஜெர்மனியின் தூண்டுதலின் மேல் செய்யப்பட்ட யோசனை யென்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அதைக் கண்டிப்பாய்த் தடுத்து விட்டது. இக்காலத்தில் பாலங்கட்டுவது சாத்தியமானலும், பிரிட்டிஷார் அதைச் செய்ய விடமாட்டார்கள். இந்தியாவில், மைசூர் ராஜ்யத்தை 18-ம் நூற்றாண்டில் ஆண்ட ஐதர் ஆலி, பிரிட்டிஷாருக்குப் பட்ட தென்னிந்தியா முழுவதையும் சூறையாடி, சில பிரிட்டிஷ் படைகளையும், படைத் தலைவர்களையும் பிடித்த போதிலும், பிரிட்டிஷாருடைய வல்லமை குறையாததைக் கண்டு, "பிரிட்டிஷாருடைய வல்லமையைத் தரையில் அழித்து விட்டாலும், கடலை வற்றவைக்க என்னல் முடியாதன்றே?" என்று சொன்னதாகத் தெரிகிறது. *

ஆகையால் கிரேட் பிரட்டன் ஒரு ராஜ்யமாக நிலைத்திருப்பத

* இந்தியாவிலிருந்த பிரிட்டிஷார் தங்கள் தாய்நாட்டிலிருந்து கடல் வழியாய் திரவியபலத்தையும் ராணுவ பலத்தையும் பெருக்கி வந்தார்கள் என்பது கருத்து.



(1) பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்.



(2) ஜெர்மன் சண்டைக்கப்பல்.

ற்கு அதன் கடற்படையின் வன்மை ஒப்புயர்வற்றதாய் இருக்கவேண்டிய அவசியம் வெளிப்படும்.

கடற்படையல் பிரிட்டனுக்கு இருக்கிற நெக்கரை.

அது முதல் பிரிட்டிஷாரின் முக்கிய கொள்கை என்னவென்றால், இரண்டு பெரிய வல்லரசுகளின் கடற்படைக்குச் சமமாக எப்போதும் பிரிட்டிஷ் கடற் படையிருந்து வரவேண்டும். ஒருக்கால் இரண்டு வல்லரசுகள் சேர்ந்து தாக்கினால் அவைகளையும் எதிர்ச்சமாய் படியாயிருக்கவேண்டும். கிரேட்பிரிட்டனுக்கு அடுத்த படியாயுள்ள வல்லரசின் கடற்படையைப்போல இருமடங்கு பலங்கொண்டு பிரிட்டிஷ் கடற்படை கட்டப்பட்டு வரவேண்டுமென்பதே நெடுநாளாகவுள்ள பிரிட்டிஷாரின் ஏற்பாடு. இதற்கு விரோதமாய் ஜெர்மனி செய்யும் முயற்சிகளை பிரிட்டிஷார் எவ்வாறு பார்த்திருக்கமுடியும்? ஜெர்மனி செல்வத்தை ஒரு பொருட்டாக எண்ணுமல் வாரிவீட்டு கடற்படையைத் தீவிரமாகக் கட்டி வந்தது. இந்தப் போட்டியில், கிரேட் பிரிட்டனுக்கு இருக்கிற அபாரமான பொறுப்பும் அக்கரையும் ஜெர்மனிக்கு இல்லை. கிரேட் பிரிட்டன் கடலால் சூழப்பட்ட தீவாகையால் தற்காப்புக்கு வன்மைகொண்டகடற்படை அவசியமாயிருக்கிறது. ஜெர்மனிக்கு ஏராளமான சைன்ய பலமிருப்பதால் சத்துருவை எதிர்ப்பதற்கு அவ்வளவு வன்மைகொண்ட கடற்படை இருப்பது அவசியமில்லை. அதுவன்றி, வியாபாரத்தையாவது குடியேற்ற நாடுகளையாவது விருத்தி செய்யவோ அல்லது காத்து வரவோ அவ்வளவு பெரிய கடற்படை ஜெர்மனிக்குத் தேவையா?


இக்காலத்து ஐரோப்பிய தேசங்கள் விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் எவ்வளவு சிறியவையாயிருந்தாலும், உள்நாட்டுப் பொருள்களை அதிகமாய் விளைவித்து தேசத்தைத் தொழில்களையும் செயற்கைப் பண்டங்களையும் விருத்தி செய்து வியாபாரத்தை அந்நிய பிரதேசங்களில் நடத்தி ஐஸ்வர்யம் படைத்த ராஜ்யங்களாயிருக்கின்றன. உண்மையில் இக்காலத்து தேசங்களின் செல்வம் கடலிலும் கடலுக் கப்பாலும் உள்ளன வென்று சொல்லலாம். அவ்வாறு ஜெர்மனி பிரிட்டனுடன் போட்டிபோட்டு தன் வியாபாரத்தை உலகமுழுவதும் பரவச்செய்திருக்கிறது. இந்த வியாபாரப் போட்டியில் பிரிட்டிஷார் ஜெர்மானியரிடம் கொஞ்ச மேனும் பொறுமையாவது பகைமையாவது காட்டவில்லை. அப்படி

யிருக்க ஜெர்மனி தன் வியாபாரத்தைக் காப்பதற்கு பிரிட்டனுக்கு அடுத்த படியாயுள்ள வல்லரசுகளைவிட அதிக பலங்கொண்ட கடற் படை எப்படி அவசியமாகும்? மற்ற வல்லரசுகள் தங்கள் வியாபாரத்தைக் காப்பதற்கு மிதமான கடற்படையைக் கட்டிவரவில்லையா? பிரிட்டனுக்கு தற்காப்புக்காக அதிக பலங்கொண்ட கடற்படை அவசியமாகையால் அதை ஒரு கணக்காகமற்றவல்லரசுகள் பார்க்கக் கூடாது.

ஜெர்மானி தன் குடியேற்ற நாடுகளைக்காக்கவோ அல்லது புதி தாய்ப்பெறவோபிரிட்டனைப்போல பெரிய கடற்படைகட்டத்தேவை யில்லை. ஜெர்மனிக்கு பிரிட்டிஷாரைப்போல அவ்வளவு விஸ்தார மான குடியேற்ற நாடுகளில்லை. ஜெர்மனியைக் காட்டிலும் அதிக விஸ்தாரமான குடியேற்ற நாடுகளையுடைய பிரான்ஸ் தேசம் மித மான கப்பல்பலங் கொண்டிருக்க வில்லையா? புதிய குடியேற்ற நாடுகளைச் சேர்க்க வேண்டுமென்று ஜெர்மனிக்கு ஆசையிருந் தாலும், நாகரிகமில்லாதஜாதியர் வசிக்கும் அன்னியபிரதேசங்களைக் கைப்பற்றிக் குடியேறுவதற்கு ஏராளமாக யுத்த கப்பல்கள் தேவை யில்லை. நாகரிகம் பெற்ற ஐரோப்பிய தேசங்களுக்குச் சொந்தமான வெளி நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்றாலும், அந்த ராஜ்யங் களைத் தாக்குவதற்கு அவசியமாயுள்ள கப்பல் பலம் ஜெர்மனிக்கு ஏற்கெனவே போதுமானது. ஆகையால், குடியேற்ற நாடுகளின் விருத்திக்கும், வியாபாரப்பெருக்குக்கும், தற்காப்புக்கும், போது மான கடற்படையை ஜெர்மனி ஏற்கனவே பெற்றிருக்க, பிரிட்டிஷ் கப்பற்படையின் வன்மையை அளவாகக்கொண்டு அதைவிட அதிக பலங்கொண்டபடையைக்கட்டும்படி ஜெர்மனி திட்டஞ் செய்வதற்குக் காரண மென்ன?

கடற்படை விஷயமாய் ஜெர்மனியின் கொள்கை.

கிரேட்பிரிட்டன் தன் கடற்படையின் வன்மையால் உலகெங் கும் தன் கைகளை நீட்டி அங்கங்கே குடியேற்ற நாடுகளையும் வியா பாரத்தையும் பெருக்கி, செல்வமும் செல்வாக்கும் நாளோறும் அதிகமாய்ப் பெற்று வருகிறது; இதைக்கண்டு ஜெர்மனி பொறுமை கொண்டு தன் தேசத்தினர் தொகையில் அதிகமா யிருந்தும், நிற மையில் சிறிதும் இளப்பமற்றவர்களா யிருந்தும், ஒப்பற்ற சைன்ய



பூலோகம் உருண்டை வடிவமானது. அது இங்கே மட்டமாகக் காட்டப்பட்டிருக் கிறது. கம்பி வளையல் ஒரே நீள்மாக நிமிர்த்திப் பிடிப்பதுபோல் காண்பிக்கப்பட் டிருக்கிறது. ஆகையால் இடது பக்கத்திலும் வலதுபக்கத்திலும் பசிபிக் மகா சமுத் திரமே யிருக்கிறதைக் காணலாம். ஆசியா, ஆப்பிரிக்கா ஐரோப்பா, (வடக்குதெற்கு) அமெரிக்கா, பசுபிக்மகா சமுத்திரத்திலுள்ள தீவுகள் ஆக ஐந்து கண்டங்களாக பூபா கத்தைப் பிரித்துக்கொள்ளலாம், பிரிட்டன் ஜெர்மனி இவைகளின் குடியேற்ற நாடு கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த கண்டங்களின் படங்கள்வெளியாகும்போது, அவைகளைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம். பிரிட்டிஷ் பூமி இடைவெளி விட்ட கோடுகளாலும், ஜெர்மன் பூமி மிகவும் மெல்லிய கோடுகளாலும் குறிக்கப் பட்டுள்ளன.

பலத்தைப் பெற்றிருந்தும், கிரேட்பிரிட்டனுக்கு ஒரு படி தாழ்ந்திருப்பதைப் பார்க்க சகியாதவர்களானார்கள்.


சமாதான வழிகளில் ஜெர்மனி போட்டி செய்வதைவிட்டு, பிரிட்டிஷாரின் வியாபார பலத்துக்கும் கப்பல் பலத்துக்கும் சக்தேதகமில்லாமல் விரோதங் காட்டி; ஜெர்மனி யுத்த கப்பல்களைத் தீவிரமாய்க் கட்ட ஆரம்பித்தது. அவ்விஷயத்தில் ஜெர்மன் சக்கரவர்த்தி தமக்கு இயல்பாயுள்ள மனவுறுதியையும் பிடிவாதத்தையும் இன்னும் விசேஷமாய் வெளிப்படுத்தினார். கடற்படை விஷயத்தில் ஜெர்மனி புதிதாய்க் கைக்கொண்ட அந்தக் கொள்கை சமீப காலத்தில், அதாவது 1900-வருஷத்தில்தான், ஆரம்பமாயிற்று. அச்சமயம் ஜெர்மன் சக்கரவர்த்தி சொன்னதாவது:— "ஜெர்மன் கடற்படை எவ்வளவு பலங்கொண் டிருக்கவேண்டுமென்றால், ஒப்பற்ற கடற்படை வன்மைகாண்ட எந்த வல்லரசேனும் ஜெர்மனியோடு யுத்தஞ் செய்தால் அதன்வன்மைக்கே ஆபத்துண்டாகும்படியாயிருக்க வேண்டும்." குடியேற்ற நாடுகளைப் பெற்று அவைகளைக் காக்கும் பொருட்டு கப்பற்படையில் நம்பிக்கை வைத்துள்ள எல்லா வல்லரசுகளுக்கும் அவ்வாறு ஜெர்மன் சக்கரவர்த்தி சொன்ன வார்த்தைகள் பெருங்கலக்கத்தை யுண்டுபண்ணின; அவ்வார்த்தைகளை அபாய சமிக்ஞையாக மற்ற வல்லரசுகள் நினைத்து தங்கள் யுத்த முயற்சிகளை முன்னிலும் பலமடங்கு தீவிரமாய் நடத்தத் தொடங்கின. ஜெர்மன் சக்கரவர்த்தி தாம் எடுத்த முயற்சியையே பிடிவாதமாய் நிறைவேற்றி 1906, 1908, 1912 இவ் வருஷங்களில் மேன்மேலும் கப்பற் படையை விருத்திசெய்ய ஏராளமான தொகையைச் செலவிட்டார். பிரிட்டிஷாரும் அந்தப் போட்டியில் சிறிதும் சளைக்காமல் ஜெர்மானியரைவிட அதிகமாக ஒவ்வொரு வருஷமும் செலவு செய்தார்கள். தேசத்துச் செல்வ மெல்லாம் அவ்வாறுபயங்கரமான யுத்தமுயற்சிகளில் விரயஞ் செய்யப்படுவதைக் கண்டு திடுக்கிடாதவர் எவருமில்லை. ஆயினும் பிரிட்டிஷார் உலகத்தில் நிலைத்திருப்பதற்கே இன்றியமையாத கடற்படை விஷயத்தில் கொஞ்சமும் பின்வாங்க அவர்களுக்கு உத்தேசமில்லை. ஜெர்மனி கடற்படையை மும்மூரமாய்க்கட்டி வெளிப்படையாய்ப் பிரிட்டிஷாரிடம் விரோதங் காட்டியபோது, கிரேட்பிரிட்டன் கடலில் முதன்மைபெற்றிருப்பதற்கு இயற்கையமைப்பிலேயே உரிமைகொண்டிருக்கிறதென்பதை ஜெர்மனி முற்றிலும் மறந்துவிட்டது. செல்வச்

செருக்காலும் ராணுவத்திமிராலும் ஜெர்மனி பல வருஷங்களாகத் தலைதெரியாமல் இளப்பிவிட்டுக் கொண்டிருந்த அநேக விரோதிகளுள் இப்போது ஒப்பற்ற கப்பல் வன்மைகொண்ட மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தையும் சேர்த்து விட்டது. பிரிட்டிஷார் அது வரையில் இருமடங்கு பலங்கொண்ட கடற்படையைக் கட்டி வந்த ஏற்பாட்டை இன்னும் அதிகமாய்ப் பலப்படுத்தி, ஜெர்மனியின் நோக்கமும் முயற்சியும் நிறைவேறு வென்பதைச் சீக்கிரத்தில் வெளிப்படுத்தினர்கள்.

ஐரோப்பிய கடல்களில் பிரிட்டிஷாரின் நிலைமை பலப்பட்டது.

பிரிட்டிஷ் கடற்படையின் வன்மை இரண்டு விதமாய் விருத்தி செய்யப்பட்டது. குடியேற்ற நாடுகள் சொந்தத்தில் கப்பற்படை கட்டி தங்கள் நாடுகளைக் காத்துக்கொள்ள முயல்வதோடு தாய் நாடாகிய கிரேட் பிரிட்டனுக்குத் தேவையான போது உதவிசெய்வதாக நிச்சயித்தன. மற்றொன்று, கிரேட் பிரிட்டன் பிரான்ஸோடு கடற்படை விஷயமாய் ஓர் ஏற்பாடு செய்து கொண்டது. ஜெர்மனி கடற்படை கட்டுவதற்குச் செய்துவந்த முயற்சிகளைக்கண்டு பிரான்ஸின் மன நிலைமை எவ்வாறிருந்ததென்று சொல்லவேண்டியதில்லை. கிரேட் பிரிட்டனுக்குச் சமானமாக கடற்படை வன்மையைப் பெறவேண்டு மென்று ஜெர்மனி செய்து வந்த முயற்சிகள் பிரான்ஸினுடைய கடற்படைக்கும் அதன் குடியேற்ற நாடுகளுக்கும் அதிக ஆபத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. குடியேற்ற நாடுகளின் விஸ்தீரணத்தில் பிரான்ஸ் தேசம் பிரிட்டனுக்கு அடுத்தபடி யானது. பிரான்ஸ் தேசம் 1870-ம் வருஷத்தில் ஜெர்மனியுடன் யுத்தஞ்செய்து பலஹீனப்பட்டபிறகு, தன் கவனத்தைக் குடியேற்ற நாடுகளில் செலுத்தி ஆப்பிரிக்காவில் விஸ்தாரமான நாடுகளை வசப்படுத்திக் கொண்டதால் அதன் செல்வமும் செல்வாக்கும் விரைவாய் அதிகரித்து வந்ததைக் கண்டு ஜெர்மனி அளவற்ற பொறாமைகொண்டது. 1900-ம் வருஷ முதல் ஜெர்மனி குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றுவதில் அதிக கவனஞ் செலுத்தத் தொடங்கிற்று.

ஜெர்மனி புதிதாய் அங்கிய பிரதேசங்களை வசப்படுத்த நோக்கங் கொண்டால், பிரான்ஸின் கப்பற் படையை எளிதாய்



ஐரோப்பாவின் முக்கியபாகம்,—வடகடல் பால்டிக்கடல் இவைகளிருக்கும் ஸ்தானக்கைக் காண்பிக்கிறது. வடகடலில் ஜெர்மன் கரையில் ஹெலிகோலண்ட் என்ற சிறு ஜெர்மன் தீவு இருக்கிறது. ஜெர்மனியைச் சேர்ந்த கீல் கால்வாயினல் ஜெர்மனியர் இரண்டு கடல்களிலும் எளிதாய்ப் போக்கு வரத்து நடத்தலாம். அந்த கால்வாய் கடற்படைக்கு மிகவும் உபயோக முள்ளது. மற்ற தேசங்கள் ஒரு கடலிலிருந்து மற்றொரு கடலுக்குப் போகவர, டென்மார்க் தேசத்தைச் சுற்றவேண்டும், ஜெர்மனிக்கு கடற்கடை ஒரே பக்கத்தில் கிறிதாயிருக்க, பிரான்ஸுக்கு மூன்று பக்கங்களிலும், பிரிட்டனுக்கு நான்கு பக்கங்களிலு முள்ளன.

அழித்து பிரஞ்சு குடியேற்ற நாடுகளைச் சுளுவாய்க் கைப்பற்றிக் கொள்ளலாம். இதையறிந்து பிரான்ஸ் தன் குடியேற்ற நாடுகளை முன்னிலும் பலமாகக் காக்கவேண்டிய அவசியத்தை உணர்க்தது. ஐரோப்பா கண்டத்துப் படத்தைப் பார்த்தால், பிரஞ்சு கடற்கரைக்கும் பிரிட்டிஷ் கடற்கரைக்கும் 300 மைல் தூரத்தில் தான் ஜெர்மன் தரைமுக மிருக்கிறது தெரியவரும். மேலும் ஜெர்மன் கடற்கரையின் நீளம் மிகவும் குறைவாயிருக்கிறது. ஆகையால் ஜெர்மனி கட்டுகிற ஒவ்வொரு யுத்தக் கப்பலையும் ஒரே இடத்தில் ஏராளமாய்க் குவித்து தனக்குச் சொந்தமாயுள்ள குறுகிய கடற்கரையை எளிதில் காத்து, சத்துருவுக்கு அளவற்ற ஆபத்தைச் சுளுவாய் விளைவிக்கலாம். மேலும் ஜெர்மனிக்கு அதிக விஸ்தாரமான குடியேற்ற நாடுகளில்லையாதலால் அவைகளைப் பற்றி முன்னதாகவே கவலை கொள்ள வேண்டியதில்லை. பிரான்ஸுக்கு மூன்று பக்கங்களில் கடற்கரை யிருக்கிறது; பிரிட்டனுக்கு நாலு பக்கங்களிலுமிருக்கிறது.


ஆகையால் ஜெர்மனி தன் யுத்தக் கப்பல்களை யெல்லாம் ஒன்றுச் சேர்த்து வடகடல் வழியாய் முன் சென்று, பிரான்ஸை யாவது கிரேட் பிரிட்டனையாவது முழு வல்லமையுங்கொண்டு தாக்கக்கூடும். இதைத் தடுப்பதற்கு, கிரேட் பிரிட்டன் தன் யுத்த கப்பல்களில் சிலவற்றை வேறிடங்களுக்கு அனுப்பிப் பிரித்து விடாமல் கடற்படையை முழுப்பலத்துடன் தன்னிடத்த இங்கிலிஷ் சானலில் (கடலில்) வைத்திருத்தல் அவசியம். இங்கிலிஷ் கடல், பிரான்ஸுக்கும் கிரேட் பிரிட்டனுக்கும் இடையிலிருப்பதால், அந்த ஸ்தானத்திலிருந்து கொண்டு பிரான்ஸையும் கிரேட்பிரிட்டனையும் சேர்த்தாற் போல் காத்து வரலாம். கிரேட்பிரிட்டன் தன்னுடைய கடற்படை முழுவதையும் இங்கிலிஷ் கடலில் வைத்திருக்க, பிரான்ஸ் தன் கடற்படையைக்கொண்டு மத்தியதரைக்கடலைக் காக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. மத்தியதரைக்கடலானது, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா இம்மூன்று கண்டங்களுக்கும் இடையில் இருக்கிறது. அந்தக் கடலில் பிரஞ்சு கடற்படை காவல்செய்து ஜெர்மனியின் நேசர்களாகிய இடாலி ஆஸ்டிரியா ஹங்கரியின் கடற்படைகளை அவசியமான போது எதிர்த்து அடக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் ஆசியா ஆப்பிரிக்கா இவ்விரு கண்டங்களிலுள்ள பிரிட்டிஷ் பிரஞ்சு குடியேற்ற நாடுகள் காக்கப்படும்.

ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள குடியேற்ற நாடுகளைக் காக்கும் விஷயமாய் பிரிட்டனும் பிரான்ஸும் அந்த உடன்படிக்கையில் பிரத்தியேகமான ஏற்பாடு செய்துகொண்டன. ஈஜிப்ட் தேசத்தில் பிரிட்டிஷாருக்குள்ள அதிகாரத்தை பிரஞ்சு கவர்ன்மெண்டு அங்கீகரித்தார்கள். மொராக்கோ தேசத்தில் பிரஞ்சுக்காரருக்குள்ள செல்வாக்கை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அங்கீகரித்தார்கள். ஆப்பிரிக்காவிலுள்ள அத்தேசங்களைப்பற்றி இருவருக்கு மிருந்த பல தகராறுகள் சமாதானமாய்த் தீர்த்துக்கொள்ளப்பட்டன. அத்தேசங்களைப்பற்றிய விவகாரங்களில் அந்திய அரசுகள் பிரவேசித்து ஏதேனும் ஆக்ஷேபம் செய்தால், பிரான்ஸும் பிரிட்டனும் ஒருவரையொருவர் தெளத்தியப் பேச்சுகள் மூலமாய் ஆதரிக்கவேண்டும். மொராக்கோ, ஈஜிப்ட் இவ்விரு தேசங்களைப்பற்றி செய்துகொள்ளப்பட்ட ஏற்பாடு மிகவும் முக்கியமானது. ஏனெனில் மத்தியதரைக்கடலில் பிரான்ஸும் பிரிட்டனும் சங்கள் அதிகாரத்தை நாட்டி, வேறு அரசுகள் அதற்குக் கெடுதிசெய்யாமல் காத்துக்கொண்டார்கள். மத்தியதரைக் கடலுக்கு மேற்குக் கோடியில் மொராக்கோவும் கிழக்குக் கோடியில் ஈஜிப்ட்டும் இருப்பதைக் கவனிக்கவேண்டும்; அந்த முக்கியமான கடலின் இருபுறங்களிலுள்ள வாசற்படிகள் அவ்வாறு காக்கப்பட்டன.

தவிர, செல்வம்படைத்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் சொந்தத்தில் கப்பற்படைகட்ட ஆரம்பித்தன. இதனால் பிரிட்டிஷ் கடற்படையின் பொறுப்பு குறைவுபட்டதோடு அபாயகரமான சமயங்களில் குடியேற்ற நாட்டுப் படைகளின் உதவியையும் பெறலாம்.

ஆசியா கண்டத்தில் புதிய ஏற்பாடுகள்.

ஐரோப்பா கண்டத்தில் அவ்வாறு பிரிட்டிஷார் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக்கொண்டதுபோல, ஆசியா கண்டத்திலும் சில ஏற்பாடுகள் செய்துகொண்டார்கள். ஆசியா கண்டத்தில் வல்லமை கொண்ட அரசுகள், பிரிட்டனைத் தவிர, இரண்டு உள்ளன. அவை, ஜப்பானும் ருஷியாவுமாகும். ஆசியா கண்டத்திலுள்ள கடல்களில் ஜப்பானுடைய கடற்படையின் உதவியைப் பிரிட்டிஷார் பெற்றதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். ஜப்பானிடத்திலாவது பிரிட்டனிடத்திலாவது விரோதங்கொண்ட அரசுகள் ஒன்றுக்கதிகமாகக் கூடிக்கொண்டதாலும், ஒருவருக்கொருவர் ஆசியா கண்டத்தில் உதவி



மத்திய தரைக்கடல்:—அது மூன்று கண்டங்களுக்கு மத்தியிலிருக்கிறது. இதன் மேற்குக் கோடியில் ஜிப்ரால்டர் ஜலசந்தி வாசற்படி போல் இருக்கிறது. அங்கு ஒரு புள்ளியினல் குறிக்கப்பட்ட டிருக்கிற அப்பேருடைய ஸ்தலம் பிரிட்டிஷாரைச் சேர்ந்தது. அக்கடலுக்குக் கிழக்குக்கோடியில் டார்டனல்ஸ் கால்வாயிருக்கிறது. இது செங்கடலுடன் சேர்கிறது. இங்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஈஜிப்ட் நாடு பிரிட்டனுடைய மேற்பார்வையிலுள்ளது; இதற்கு மேற்கில், வரிசையாக, இடாலியைச் சேர்ந்த டிரிப்போலி நாடும், பிரான்ஸைச் சேர்ந்த டியுனிஸ்நாம் அல்ஜிரியாவும், பிரான்ஸின் மேற்பார்வையிலுள்ள மொராக்கோவும் உள்ளன.

செய்யவேண்டுமென்று இரண்டு தேசங்களும் ஏற்கெனவே ஒரு உடன்படிக்கை செய்திருந்தன. 1907-ம் வருஷத்தில் கிரேட்பிரிட்டன் ருஷியாவுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. இந்தியாவின் வடமேற்கு மூலையைச் சுற்றியுள்ள பெர்ஷியா, ஆப்கனிஸ்தான், திபேத் ஆகிய இம் மூன்று தேசங்களைப்பற்றி பிரிட்டனும் ருஷியாவும் ஒரு முடிவான ஏற்பாடு செய்துகொண்டன. அவ்வாறு பிரிட்டிஷார் உடன்படிக்கைகள் செய்துகொண்டு இதற்குமுன்னால் தங்கள் விவகாரங்களில் இதர அரசுகளுடன் உண்டான தகராறுகளை இப்போது முடித்துக்கொண்டு அவைகளுடைய நேச சம்பந்தத்தை உடன்படிக்கைகளால் வலுப்படுத்திக்கொண்டார்கள்.

அவ்வாறு ஜெர்மனியின் நடவடிக்கையால், பிரிட்டன் ஐரோப்பிய விவகாரங்களில் மெதுவாய்ப் பிரவேசிக்கும்படி நேர்ந்தது. ஆயினும் அந்த உடன்படிக்கைகள் ராணுவத்தால் உதவி செய்யவேண்டுமென்று எந்தக் கட்சியையும் கட்டுப்படுத்தவில்லை. தௌதத்தியப் பேச்சுகளில் ஒருவரை யொருவர் ஆதரிக்கவேண்டும்; உடன்படிக்கை செய்துகொண்ட எந்த அரசேனும் தன் நிலைமை பாதகப்படுமென்று நினைத்து இஷ்டப்பட்டால் ராணுவ உதவி செய்யலாமேயொழிய செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. இவ்வாறு, கிரேட்பிரிட்டன், பிரான்ஸ், ருஷியா, இம்மூன்று தேசங்களுக்குள் டிரிப்பிள் என்டன்டி என்ற கட்டுப்பாடு உண்டாயிற்று. ஆனால் டிரிப்பிள் அலியன்ஸ் என்ற கட்டுப்பாட்டைச் சேர்ந்த ஜெர்மனி, ஆஸ்டிரியா இடாலி இம்மூன்று தேசங்களும் ஒன்றுக்கொன்று ராணுவ உதவி செய்யவேண்டுமென்று ஏற்பாடுசெய்துகொண்டன. டிரிப்பிள் என்டன்டி கட்சியில், பிரிட்டனுடைய நிலைமை வலுப்பட்டதுபோல, பிரான்ஸ் ருஷியா இவைகளின் நிலைமையும் விருத்தியடைந்தது. பிரான்ஸ் தன்னுடைய குடியேற்ற நாடுகளையும் கடற்படையையும் ஜெர்மனியின் பொருமையினின்றும் காத்துக்கொண்டது. ருஷியா, ஆசியா கண்டத்தில் தனக்கிருந்த தகராறுகளைத் திருப்திகரமாய் முடித்துக்கொண்டு, ஐரோப்பிய விவகாரங்களில் தன் முழுக்கவனத்தையும் வன்மையையும் திருப்புவதற்குச் சாத்தியப்பட்டது.

ஜெர்மனியின் விரோதத்தை அறிந்தவுடன் பிரிட்டிஷார் செய்த நடவடிக்கைகளைச் சுருக்கமாய்ச் சொன்னால் நன்றாய் விளங்கும். போவார் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது 1900-ம் வருஷத்தில்

ஜெர்மன் சக்கரவர்த்தி பெரிய கடற்படை கட்டுவதாக அறிவித்தார். பிரிட்டிஷார் 1903-ம் வருஷத்தில் போவர் யுத்தம் முடிவதற்குமுன்னதாகவே ஜப்பானுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். 1904 ம் வருஷத்தில் பிரான்ஸுடன் உடன்படிக்கையும், 1907 -ம் வருஷத்தில் ருஷியாவுடன் உடன்படிக்கையும் செய்து கொண்டார்கள். பிறகுபிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் சொந்தத்தில் கடற்படை கட்ட ஆரம்பித்தன. பிரிட்டிஷார் ஜெர்மானியரைவிட அதிகமாக யுத்த கப்பல்களை ஒவ்வொரு வருஷமும் கட்டி வந்ததோடு, மேற் சொல்லியபடி செய்து கொண்ட ஏற்பாடுகளால் அவர்களுடைய நிலைமை மிகவும் பலப்பட்ட தென்று சொல்லத் தேவையில்லை.

ஜெர்மனியின் நோக்கம் பயன்படவில்லை.

அந்த ஏற்பாடுகளினால் ஜெர்மனியின் நோக்கம் மிகவும் தடைப் பட்டு விட்டது. அதனை ஜெர்மன் சக்கரவர்த்தி அறிந்து கொள்வ தற்கு அதிக தாமஸமாகவில்லை. 1905-ம் வருஷத்தில் ஆப்பிரிக்கா வுக்கு வடபாகத்திலுள்ள மொராகோ விஷயமாய் பிரான்ஸினுடைய நடவடிக்கைகளைக் கண்டித்து ஜெர்மனி அதுவரையிலில்லாததோர் அக்கரையைப் பாராட்டி யுத்தம் தொடங்குவதாகப் பயமுறுத்தி யது. அதற்கு மூந்திய வருஷத்தில்தான் பிரான்ஸுடன் உடன்படிக்கை செய்துகொண்ட கிரேட் பிரிட்டன் தன் நேச கவர்ன்மெண்டை ஆதரிக்க முன் வந்தது. அப்போது ஜெர்மனி அந்த விவகாரத்தில் பின் வாங்கும்படி நேர்ந்தது. மறுபடியும் 1911–ம் வருஷம் மொராகோ விஷயத்தில் ஜெர்மனி பிரவேசித்து தன் யுத்த கப்பலொன்றை அங்குள்ள அகடிர் துறை முகத்துக்கு அனுப்பி பிரான்ஸை யுத்தத்துக்கு இழுக்க முயன்ற போது, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பிரான்ஸுக்கு உதவியாக வந்ததால் ஜெர்மனியின் போர்க்குணம் அச்சமயம் அடக் கப்பட்டது. ஆப்பிரிக்கா கண்டத்தின் வடக்குக் கடற்கரையி லுள்ள பிரஞ்சு குடியேற்ற நாடுகளைக் காப்பதில் கிரேட் பிரிட்டன் அதிக அக்கரைகொண்டிருக்கிறது. ஜெர்மனி அவ்விடத்தில் தன் செல்வாக்கையும் அதிகாரத்தையும் ஸ்தாபிக்குமானால் மத்தியதரைக் கடலின் சாவதானம் ஆபத்துக்கு உட்படும். அந்த கடல் பிரதான ஸ்தானத்திலிருக்கிறபடியாலும் முக்கியமாய் ஆயிரகண்டத்துக்குப் போகும்வழியாயிருப்பதாலும் அவ்விடத்தில் பிரிட்டிஷாரின் சுதந் திரம் சிறிதும் குறைபடக்கூடாது. அவ்விடத்தைக் காப்பதற்கு



பிரிட்டிஷ் அரசரும் இந்திய சக்ரவர்த்தியுமாகிய
ஐந்தாவது ஜார்ஜ்.



ருஷிய சக்கரவர்த்தி—இரண்டாவது நிகலஸ்

பிரிட்டிஷ் கடற்படையிலிருந்து பெரும்பாகத்தைப் பிரித்து அதை அனுப்பவுமே சாத்தியப் படாதென்றே அது பிரான்ஸின் பாதுகாப்பில் உட்படிக்கையின்பேரில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆப்பிரிக்கா கண்டத்து வடகரையிலுள்ள பிரஞ்சு குடியேற்ற நாடுகள் விஷயத்திலும் பிரஞ்சு கடற்படையைப் பாதிக்கக்கூடிய எந்த விஷயத்திலும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் விட்டுக் கொடுப்பதில்லை யென்று தீர்மானித்தார்கள். 1912-ம் வருஷத்தில், பிரஞ்சு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுகள், தங்கள் கடற்படை தரைப்படை உத்தியோகஸ்தர்களைக் கொண்டு, யுத்தகாலத்தில் இரண்டு தேசங்களும் ஒன்றுப்சேர்ந்து செய்யவேண்டிய ராணுவ ஏற்பாடுகளைப்பற்றி ஆலோசனை நடத்தினார்கள். அவ்வாறு யோசனைகள் செய்ததால் ஒருவருக்கொருவர் ராணுவ உதவி செய்ய உடன்படிக்கையால் கட்டுப்பட்டிருக்கிறார்களென்று நினைக்கக்கூடாது. அந்த உடன்படிக்கையின்படி அப்படி ஏற்படவில்லை யாயினும், அவ்விரு தேசங்களிலெதுவேனும் வேறொரு அரசால் அகாரணமாய் வலுவில் தாக்கப்பட்டாலும், அதனால் பொதுவாய்ச் சமாதான நிலைமைக்குக் கேடு வரும்போலிருந்தாலும் ஒன்றுக்கொன்று உதவிசெய்யக் கட்டுப்பட்டன. ஒரு தேசம் அகாரணமாய்த் தாக்கப்படும்போது, அதோடு உடன்படிக்கை செய்துகொண்ட மற்ற தேசம் அதனால் தன் நிலைமை பாதகப்படுமென்று நினைக்குமானால் உதவிசெய்ய முன்வருமென்பது அந்த உடன்படிக்கையின் கருத்து.

மத்தியதரைக் கடலிலுள்ள பிரஞ்சு குடியேற்ற நாடுகளை ஜெர்மனி தாக்க உத்தேசித்தபோது, பிரிட்டிஷார் தங்கள் நிலைமைக்கும் ஆபத்து வரக்கூடுமென்று நினைத்ததால் பிரான்ஸை ஆதரிக்க முன்வந்தார்கள். அதுமுதல் ஜெர்மனி பிரஞ்சு விவகாரங்களில் தலையிடும்போது, பிரிட்டிஷாரின் விரோதத்தைக் கிளப்பாமலிருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தது. ஆஸ்டிரியா எவ்வாறு ஜெர்மனியின் உதவியை எதிர்பார்த்திருந்ததோ, அவ்வாறு பிரான்சு கிரேட் பிரிட்டனுடைய ஆதரவை நம்பி பிருந்தது. ஆயினும், அளவில்லாமல் திரவியம் யுத்த முயற்சிகளில் வீணாகச் செலவிடப்பட்டு போர்க் குணம் பலமாய்த் தூண்டப்படுவதைக் கண்ட புத்திமான்கள் அதேகர் விரும்பியபடி, பிரிட்டிஷார் யுத்தப் பிரயத்தனங்களுக்கு ஓர் எல்லை கற்பிக்கலா மென்று பல முறை பிரஸ்தாபித்தார்கள்; ஜெர்மனி சம்மதிக்கவில்லை. ஜெர்மனியின் விரோத உணர்ச்சி

இவ்வாறு பலப்பட்டுவர, பிரான்ஸ், ருஷியா, கிரேட் பிரிட்டன் இம் மூன்று நேச கவர்ன்மெண்டுகளின் சம்பந்தம் முதிர்ந்தது. உதாரணமாக, 1912-ம் வருஷத்தில் சைனாவில் பெரிய புரட்சி நேர்ந்து குடியரசு ஸ்தாபிக்கப்பட்டபோது, நேச கவர்ன்மெண்டுகளும் ஜப்பானும் மிகுந்த கட்டுபாட்டை வெளிப்படுத்தின. மங்கோலியாவில் ருஷியரும், திபேத்தில் பிரிட்டிஷாரும் தங்கள் செல்வாக்கை ஸ்தாபித்துக்கொண்டார்கள். ஜெர்மனியின் செல்வாக்கு அங்கு ஓங்கவில்லை. அந்த வருஷம் (1912) ஜெர்மனி தன் கடற்படையை அதிகரித்தபோது நேச கவர்ன்மெண்டுகள் தங்கள் கடற்படைகளைப் பலப்படுத்தி யுத்தத்துக்குத் தயாராயிருந்தன. 1912-ம் வருஷத்தில் பால்கன் நாடுகளில் நடந்த சில முக்கியமான சம்பவங்கள் வல்லரசுகளின் யுத்த முயற்சிகளை அதிகமாய்ப் பலப்படுத்தியதைப்பற்றி இனி சொல்லப்படும்.

8-வது அத்தியாயம்

பால்கன் நாடுகளில் நடந்த யுத்தங்களின் பலன்கள்.

துருக்கியின் நிலைமை.

துருக்கிக்குச் சொந்தமாயிருந்த பால்னியா ஹெர்ஸிகோவினா என்ற பிரதேசங்களை ஆஸ்டிரியா முதலில் தன் மேலதிகாரத்துக் குட்படுத்தி பிறகு 1908-ம்வருஷத்தில் தன் ஏகாதிபத்தியத்துடன் சேர்த்துக்கொண்டு விட்டதென்று சொன்னோம். * ஆஸ்டிரியா இவ்வாறு அவச்சப்பட்டு அவைகளைச் சேர்த்துக்கொண்டதற்குக் காரணம், துருக்கியில் பெரிய ராஜாங்கப் புரட்சி நடந்து நூதனமுறையில் திருத்தப்பட்ட கவர்ன்மெண்டு ஸ்தாபிக்கப்பட்டது. துருக்கி ராஜாங்கம் புதிய சக்தியடைந்த பிறகு, தனியாயிருந்த அந்த இரண்டு பிரதேசங்களையும் திரும்ப தன்னுடன் சேர்த்துக் கொள்ளக் கூடுமென்று கிளைத்து ஆஸ்டிரியா அவைகளை தன்னுடன் சேர்த்துக்கொண்டது.

* ஆறுவது அத்தியாயத்தின் கடைசியில் பார்க்க,

சிறு துருக்கியரின் ராஜாங்க புரட்சி.

பிரான்ஸ் தேசத்துத் தலைநகரமாகிய பாரிஸில் 1908-ம்ஹிஜத்தில் சில வாலிப துருக்கியர் ஒரு சங்கம் ஸ்தாபித்துத் தங்கள் தேசத்து ராஜாங்க விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்து, நூதன ஐரோப்பிய நாகரீகத்தையும் முறைகளையும் தங்கள் தேசத்தில் பரவச் செய்யவேண்டு மென்று முயன்று வந்தார்கள். அச்சமயத்தில் அவர்களுடைய நோக்கங்களும் முயற்சிகளும் நிறைவேறுவது சாத்தியமில்லை யென்று அநேகர் கருதினர்கள். ஆயினும் ஆசியாகண்டத்து ராஜ்ஜியமாகிய ஜப்பான் மேனாட்டு முறைகளை அமைத்து விருத்தி யடைக்திருப்பதைக் கண்டு பாரிலிலிருந்த துருக்கி வாலிபர்கள் தென்பு கொண்டார்கள். இடாலி தேசாபிமானியாகிய மஸ்ஸினி செய்தது போல, "சிறு துருக்கி" என்ற சங்கத்தை ஸ்தாபித்து, தங்களுடைய நூதன கொள்கைகளைத் துருக்கி தேசமெங்கும் பரவச் செய்தார்கள். இடாலியர் நினைத்தது போல, ராஜாங்கப் புரட்சிக்கு சேனையின் உதவி இன்றியமையாத தென்று சிறு துருக்கியர் உறுதி கொண்டார்கள். ஆனால் இடாலியர் அனுசரித்த முறைகளில் ஒன்றை சிறு துருக்கியர் கண்டிப்பாய் விலக்கிவிட நிச்சயித்தார்கள். கொலைக்குற்றங்களைச் செய்யவே கூடாதென்று தீர்மானித்து அப்படிப்பட்ட பாதகச் செயல்களால் தங்களுடைய நோக்கங்களும் முயற்சிகளும் உலகத்தாருடைய அனுதாபத்தை இழந்துவிடுமென்பதைச் செவ்வையாய் உணர்ந்தார்கள். அப்படிப்பட்ட கொடுமைகள் முற்றிலும் அவசியமென்றும், தங்களுடைய நோக்கங்கள் சமாதான வழிகளில் நிறைவேறுவதாயிருந்தால் அவ்வாறு நிறைவேறுமல் தடுத்துவிடுமென்றும் நினைத்தார்கள். 1908-ம் வருஷத்தில் துருக்கியின் நிலைமை அவர்களுடைய முயற்சிகளுக்கு சாதகமாயிருந்தது. துருக்கிக்குச் சொந்தமாயிருந்த பால்கன் பிரதேசத்தில், துருக்கி கவர்ன்மெண்டு பலவான வரிகளை விதித்து ஜனசுதந்தரங்களை அடக்குப்படியான சட்டங்களை ஏற்படுத்தி ஜனங்களுக்குள் அமைதியின்மையைக் கிளப்பிவிட்டிருந்தார்கள். இதை அறிந்த சிறு துருக்கியர் தங்கள் தலைமை ஸ்தலத்தை பாரிஸிலிருந்து மாற்றி பால்கன் பிரதேசத்திலுள்ள ஸலோனிகா நகரத்தில் ஏற்படுத்தினர்கள். அவர்கள் கட்சியில் முக்கியமாய ராணுவ உத்தியோகஸ்தர்கள் அநேகர்சேர்ந்தார்கள். மேனாட்டு ராஜாங்கங்களில் ஜனங்கள் பிரதிநிதிகளை நியமித்து தேச நிர்வாகத்தில்

கலப்பதுபோல, துருக்கியிலும் அவ்வாறுசெய்ய பார்லிமெண்ட்ஸ்தாபிக்கவேண்டுமென்று சிறுதுருக்கியர் பிரதான நோக்கமாகக் கொண்டார்கள். ராணுவ உத்தியோகஸ்தர்களாகிய மேஜர் அன்வர்பே, மேஜர் நியாசிபே ஆகியஇவ்விருவரும் தலைவர்களாயிருந்தார்கள். 1908-வருஷம் ஜூலை 23-ந்தேதி அன்வர்பே ஸலோனிகா நகரத்தில் துருக்கிப் பார்லிமெண்டு ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று பயிரங்கமாய் வெளியிட்டார். துருக்கித் தருப்புகளெல்லாம் அவ்வாறே தங்கள் விருப்பத்தை அறிவிக்க, ஸுல்தான் அப்துல் ஹமித் அதற்குச் சம்மதித்தார். அதன் பிறகு, ராஜாங்க முறையில் அநேக திருத்தங்கள் செய்யப்பட்டன. பழைய ராஜாங்கத்தில் ஜனங்களை இம்சித்த உத்தியோகஸ்தர்களில் சிலர் கொல்லப்பட்டதைத் தவிர, மற்றப்படி பெரிய கலகங்களாவது சண்டைகளாவது நடந்து உயிர்ச் சேதம் எதுவும் ஆகவில்லை.

1909-ம் வருஷத்தில் ஸுல்தான் அப்துல் ஹமித் பழைய ராஜாங்கமுறைகளை மறுபடி ஸ்தாபித்து சுயேச்சையாய் அதிகாரம் செலுத்த முயன்றதால், சிறுதுருக்கியர் கலகஞ்செய்து தலைநகரமாகிய கான்ஸ்டாண்டிநோபிளை * முற்றுகைபோட்டுப்பிடித்து, அப்துல்ஹமிதை சிம்மாஸனத்தினின்றும் இறக்கி அவருடைய சகோதரர் ஐந்தாவது முகம்மதை ஸுல்தானாக அங்கீகரித்தார்கள். அது முதல் சிறுதுருக்கியர் ரகஸ்ய சங்கத்தினரா யிராமல் ஒற்றுமையும் முற்போக்கும் நோக்கமாகக்கொண்ட கட்சியாக (Committee of union and Progress) ராஜாங்க விஷயங்களில் பிரவேசித்து வந்தார்கள்.

சிறு துருக்கிக் கட்சியாரின் கொள்கை.

ஜனங்களுக்குள் நூதன நாகரீக முறைகளையும் உணர்ச்சிகளையும் பரவச்செய்து ஜன சமூகத்தை முற்றிலும் சீர்ப்படுத்த வேண்டுமென்று சிறு துருக்கிக் கட்சியர் நோக்கங் கொண்டார்கள். இந்தக் கட்சியார் ஆரம்பத்திலேயே அளவற்ற ராஜாங்க அதிகாரம் பெற்றுவிடவே ராஜாங்க விவகாரங்களில் அதிக கவனஞ் செலுத்தி, சீர்ப்படுத்தவேண்டிய மற்ற வழிகளில் தங்கள் ஊக்கத்தைக் குறைத்துவிட்டார்கள். பொதுவாய்த் துருக்கியருக்குப் பழைமையிற் பற்றுதளர்ந்து புதுமையில் விருப்பம் உண்டான படியால், சிறு துருக்கிக் கட்சியார் தங்கள் தேசத்துக்கு அந்தப்

* ஸ்தாம்புல் என்று மற்றொரு பேருமுண்டு.

பெரிய நன்மையைச் செய்தார்களென்பதை எவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ராஜாங்க விஷயத்தில், ஐரோப்பா கண்டத்தில் துருக்கிக்குச் சொந்தமாயுள்ள பால்கன் நாடுகளைச் செவ்வையாய் நிர்வகித்துக் காக்கவேண்டுமென்று சிறு துருக்கியர் நோக்கங்கொண்டார்கள். அதனால் ஜெர்மெனியின் நேச சம்பந்தத்தை நாடினார்கள். ஜெர்மானியரின் உதவியைப்பெற்று, துருக்கியின் ராணுவபலம் விருத்தி செய்யப்பட்டது. பால்கன் நாடுகளில் நிர்வாக முறைகளைச் சீர்ப்படுத்துவதற்குத் தாமஸப்பட்டபடியால், அங்கிருந்த ஸ்லாவ் ஜனங்களுக்குள் அதிருப்தியும் கலக உணர்ச்சியும் விரைவாய் அதிகரித்துவிட்டன. மேலும் அந்தக் காலத்தில் ஐரோப்பிய விவகாரங்களில் ஆஸ்டிரியாவும் ருஷியாவும் விரோத உணர்ச்சியை அதிகமாய்க் கொண்டு பால்கன் நாட்டு விஷயங்களில் மும்முரமாய்ச் சுறுசுறுப்பு காட்டி வந்தன. அதைப் பற்றி முன்பு விவரமாய்ச் சொல்லி இருக்கிறோம். பால்கன் நாட்டுப் பிரஜைகள் துருக்கி கவர்ன்மெண்டுக்கு கண்ணில் தைத்த முள் போல, ஓயாமல் தொந்தரவு செய்து வந்தார்கள். மன வெறுப்பு கொண்டு அடங்காத ஸ்லாவ்களை ஆட்சி புரிவதால் யாதொரு பலனும் கிடைக்கவில்லை யென்றும், கலகத்தை அடக்கி ஆள்வதினும், அந்நிய அரசுகளைப் பிரவேசிக்காமல் தடுப்பதினும் துருக்கி கவர்ன்மெண்டு தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டியிருந்தபடியால், உள்நாட்டு நிலைமையை விருத்தி செய்வதற்குப் போதுமான சாவகாசமும் பலமும் பெற்றிருக்கவில்லை யென்றும் துருக்கிஜனத்தலைவர்களில் அநேகர்எண்ணினார்கள். ஆகையால், சிறு துருக்கியரைச் சேர்ந்த சிலரும் வேறு ஜனத்தலைவர்களும் சிறுதுருக்கியரின் அப்பிராயங்களிலிருந்துவேறுபட்டு, தேசத்தை விருத்திசெய்து உன்னத நிலைக்குக் உயர்த்துவதற்கு வேறு முறைகளை அனுசரிக்கவேண்டியது அவசியமென்று கருதினார்கள். இவர்கள் தாராளக் கட்சியார் (Liberal Union) என்று சொல்லப்படுவார்கள்.

தாராளக்கட்சியாரின் கொள்கை.

ஆசியா கண்டத்தில் துருக்கிக்கு நல்ல வளப்பம் படைத்த பூமிகளிருக்கின்றன. விவசாயம், சுரங்கம் வெட்டுதல், தொழில்கள் இவைகளை யெல்லாம் இக்காலத்து நூதன வழிகளில் விருத்தி செய்து, ரயில் பாதைகள் போட்டு வியாபாரத்தைப் பெருக்கி, தேசத்

தின் திரவிய நிலையைப் பலப்படுத்தவேண்டி யிருக்கின்றது. ஆகையால் ஆசியா கண்டத்திலுள்ள பெரிய ராஜ்யத்தை விருத்தி செய்து, துருக்கி, வல்லமையும் செல்வாக்கும் பெறவேண்டு மென்று தாராளக் கட்சியார் அது முதல் பலமாய் வற்புறுத்தினர் கள். ஜப்பான் தேசம் ஆசியாக் கண்டத்தி லுள்ளதுதான்; ஒரு அங்குல நிலமும் ஐரோப்பாக் கண்டத்தில் பெற்றிருக்க வில்லை; அப் படியிருக்க, அந்தச் சிறு தேசம் அடைந்திருக்கிற செல்வமும் செல் வாக்கும் வியக்கத்தக்கதா யிருக்கின்றன; அது கண் வைக்குந்திசை களிலெல்லாம் ஐரோப்பிய தேசங்களின் கவனத்தைக் கிளப்பு கிறது. ஆகையால் ஜப்பானைப்போல் துருக்கியும் தன் திரவியபலத் தையும் ராணுவபலத்தையும் வீண் செய்யாமல் ஆசியாக் கண்டத்தி லுள்ள பிரதேசங்களை விருத்தி செய்து உன்னத நிலையை அடைய வேண்டுமென்று தாராளக் கட்சியார் கோக்கங்கொண் டார்கள். ஆனல் சிறு துருக்கிக் கட்சியார் அவ்வாறு நினைக் காமல், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளைக் கைவிடாமல் காக்க வேண்டு மென்று எண்ணினர்கள். அவர்களுடைய கொள்கைகள் மேலிட்டபோதெல்லாம், துருக்கி ஐரோப்பிய யுத்தங்களைத்தொடர வேண்டியதாயிற்று.

1912-ம்வருஷத்தில்இடாலிகவர்ன்மெண்டு துருக்கியுடன்யுத் தந்தொடர்ந்து,ஆப்ரிக்காவில்,இடாலி தேசத்துக்கெதிரிலுள்ள டிரிப் பொலி நாட்டை வசப்படுத்திக் கொண்டது. இடாலி கவர்ன்மெண்டு முன்பு ஜர்மனியோடு உடன்படிக்கை செய்து கொண்ட காலத்தில், டியூனிஸ் என்ற ஆப்ரிக்கா பிரதேசத்தை அடைய வேண்டுமென்று அவர்களுக்கு வெகுகாலாயிருந்தவிருப்பத்தை பிரஞ்சு கவர்ன் மெண்டு இடையே புகுந்து கெடுத்துவிட்டு அதை வசப்படுத்திக் கொண்டதால் அது முக்கிய காரணமாக ஏடுத்துச் சொல்லப் பட் டிருக்கிறது. குடியேற்ற நாடுகளை ஸ்தாபித்து செல்வத்தையும் செல்வாக்கையும் விருத்திசெய்ய வேண்டுமென்பது இடாலியரின் முக்கிய நோக்கம். ஆகையால் இடாலியர் துருக்கி யிடமிருந்து டிரிப் போலியைப் பற்றிக் கொண்டபோது, ஜர்மனிக்கு இன்ன கஷிக் குச் சாதகமா யிருப்பதென்று தெரியவில்லை. ஜர்மனியின் நேசர்க ளாகிய அவ்விரு தேசங்களுக்கும் கோர் விரோதமான உணர்ச்சி கள் உண்டானதை வில்லியம் சக்கரவர்த்தி பார்த்திருக்க நேர்ந்தது.

பால்கன் பிரதேசத்தில் நடந்த யுத்தங்கள்.

அதே வருஷத்தில் (1912) பால்கன் நாடுகள் துருக்கியுடன் யுத்தஞ்செய்து வெற்றி பெற்று ஐரோப்பாவிலுள்ள துருக்கிப் பிரதேசங்களைப் பங்கிட்டுக்கொள்ள முயன்றன. அவ்விஷயமாய்த் தகாறுகள், உண்டாகி, மற்றொரு யுத்தம் 1913–ம் வருஷத்தில் நடந்தது. ஸெர்வியா, மாண்டிநிக்ரோ கிரீஸ், ரொமேனியா இந்நாடுகள் பல்கேரியாவுடன் யுத்தந்தொடர்ந்து முடிவில் சமாதானஞ்செய்துகொண்டன. அப்போது ஜெர்மன் கக்ஷிக்கும் ருஷிய கக்ஷிக்கும் பலத்த மனஸ்தாபம் நேரிடும் போலிருந்தது. நல்ல வேளையாய் ஜெர்மன் கக்ஷியில் இடாலியர் அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை. அதேமாதிரி ருஷிய கக்ஷியை பிரிட்டிஷார் அவ்வளவு ஊக்கமாக ஆதரிக்கவில்லை. அதனால் அச்சமயம் நடந்திருக்கவேண்டிய ஐரோப்பிய யுத்தம் தவிர்க்கப்பட்டது.

ஆஸ்டிரியாவும் இடாலியும் வேறுபட்டன.

ஆஸ்டிரியாவின் மூயற்சியால் ஐரோப்பாவிலுள்ள துருக்கியைச் சேர்ந்த அல்பேனியா மாகாணம் சுயேச்சைபெற்ற ராஜ்யமாக ஸ்தாபிக்கப்பட்டு ஒரு கிருஸ்தவஅரசர் தெரிந்தெடுக்கப்பட்டார். அட்ரியாடிக்கடலுக்கு மேற்குக் கரையில் இடாலிதேசமிருக்க, அதற்குக் கிழக்குக் கரையில் அல்பேனிய ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆஸ்டிரியாவின் செல்வாக்குக்கு உட்படுத்திவைப்பது அபாயகரமானதென்று இடாலி ஆக்ஷேபித்தது. இடாலியர் அட்ரியாடிக்கடல் முழுவதும் நியாயமாய்த் தங்கள் அதிகாரத்துக் கடங்கி யிருக்கவேண்டிய தென்று வெகு காலமாய் நினைத்துக்கொண் டிருக்கிறார்கள். ஏற்கெனவே அட்ரியாடிக் கடற்கரையின் ஒரு பாகத்தை ஆஸ்டிரியா வசப்படுத்திக்கொண் டிருப்பதைக் கண்டு இடாலியில் ஒரு கக்ஷியார் விரோதங் கொண்டு பலமாய்க் கலகஞ்செய்து வந்தார்கள் என்று முன்பு சொன்னோம். * பால்கன் நாடுகள் செய்துகொண்ட யுத்தத்துக்குப் பிறகு, ஆஸ்டிரியா அல்பேனிய கடற்கரையிலும் தன் அதிகாரத்தை நாட்ட முயன்றதால், இடாலியில் பலருக்கு ஆஸ்டிரியாவின்மீது விரோதமான உணர்ச்சி கிளம்பிற்று. 50–வருஷங்களுக்கு முன்னல் ஆஸ்டிரியாவின் கொடுங்கோன்மை

---

* 5-வது அத்தியாயத்தில் 46-ம் பக்கம் பார்க்க.

யைத் தாங்கமுடியாமல் .தவித்துக்கொண்டிருந்த காலமெல்லாம் இப் போது பலமடங்கு அதிக கோரமாய் இடாலியருக்கு ஞாபகம் வந் தது.இவ்விஷயங்கள் மிகவும் முக்கியமானவையென்பதைஇங்குகுறிப் பிடவேண்டும்: ஏனெனில் இப்போது நடந்துவருகிற மகாயுத்தத்தில் இடாலி ஆஸ்டிரியாவுடன் சேர்ந்து சண்டை செய்ய விரும்பாத தற்கு அது முக்கியகாரணமாகும். ஜெர்மனி தன் கட்சியில் வேறுபா டுண்டானதைக் கண்டு செயலற்றுப்போய் மற்ற வல்லரசுகளுடன் சேர்ந்து சமாதான முயற்சிகளைச் செய்ய முன் வந்தது. ஆகையால் அல்பேனிய விஷயங்களில் ஆஸ்டிரியாவும் இடாலியுமாசச் சேர்ந்து மேலதிகாரம் செலுத்தவேண்டுமென்று, ஜெர்மனியின் செல்வாக்கி னல், ஏற்பாடுசெய்யப்பட்டது. ஆயினும் ஆஸ்டிரியாவின் உள்நோக் கங்களைப்பற்றியும் அவற்றால் உண்டாகக்கூடிய அபாயங்களைப்பற்றி யும் இடாலியில் பெருங்கவலை யுண்டாயிற்று. இடாலி, ஆஸ்டிரியா வினிடத்தில் விரோதங் கொண்டது துருக்கி பால்கன் யுத்தத்தின் முக்கிய பலன்களில் ஒன்று; டிரிப்பிலிஅலேயன்ஸ் கட்சியைத் தாங்கிய தூண் ஒன்று முறிந்தது; அதனால் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரம் இடி விழுந்தாற்போல ஆட்டங் கொடுத்துவிட்டது.

துருக்கிக்கு நேர்ந்த மனஸ்தாபம்.

இந்த விவகாரங்கள் ஒரு புறமிருக்க, பால்கன் நாடுகளில் அக்கரை கொண்ட தேசங்களாகிய இடாலி, ஆஸ்டிரியா, ருஷியா, துருக்கி, இந்நான்கு அரசுகளின் அதிகாரம் அந்தநாடுகளில் ஏற்றத்தாழ் வில்லாமல் கூடிய வரையில் சமநிலையில் இருக்கும்படி செய்யவேண்டு மென்று இங்கிலாந்தும் பிரான்ஸும் நிச்சயம் செய்து கொண்டன. முக்கியமாய் இங்கிலாந்து அவ்விஷயத்தில் மிகுந்த அக்கரை கொண்டது. ஏனெனில் ஆசியாக் கண்டத்தி லுள்ள இந்தியா போன்ற பிரிட்டிஷ் பிரதேசங்களுடன் போக்கு வரத்து நடத்தும் வழி மத்யதரைக் கடல். அந்தக் கடலின் கிழக்குக் கோடியில் பால்கன் நாடுகளும் துருக்கியு மிருக்கின்றன. அவை களிருக்கும் ஸ்தானத்தில் எந்த அரசும் மிதமிஞ்சிய அதிகாரம் பெற்று விடக்கூடாது. பெற்றுவிட்டால் பிரிட்டிஷ் போக்கு வரத் துக்கு அபாயம் நேரிடும். ஆகையால் பால்கன் பிரதேசம் முழுவதும் ஸ்லாவ் ஜாதியர் வசப்படித்திக் கொள்ள வேண்டுமென்று ருஷியா வுக்கிருந்த நோக்கம் மட்டுப்படும்படி நேர்ந்தது. ஐரோப்பிய

துருக்கியில் அட்ரியானோபிள் என்ற ஸ்தலம் வரையில் துருக்கிக்கு விட்டு விடப்பட்டது. மேலும் ஸ்லாவ் ஜாதியாரல்லாத கிரீஸ் தேசத்தவர்களுக்கு, எஜியன் கடலிலுள்ள ஸலோனிகா என்ற முக்கிய துறைமுகமும் அக்கடலிலுள்ள அநேக முக்கியமான துருக்கித் தீவுகளும் கொடுக்கப் பட்டன. எஜியன் கடலில் துருக்கிக்குச் சொந்தமான அநேக முக்கியமான தீவுகளை கிரீஸ் வசப்படுத்திக் கொண்டதைப் பற்றித் துருக்கிக்கு அதிக வருத்தமுண்டாயிற்று. ஐரோப்பாவில் தனக்குச்சொந்தமாயிருந்த பால்கன் பிரதேசங்களைப் பெரும்பாலும் இழந்துவிட்டதோடு அந்தத் தீவுகளையும் இழந்துவிட்டதால், அது முன்பு ஐரோப்பாவிலுள்ள அரசுகளுள் ஒன்றுப் நிலை பெற்று வகித்திருந்த ஸ்தானத்தினின்றும் விலகிப் போனதாகக் கருதப்பட்டது. அவ்வாறு விலக்கப்படுவதற்கு மனம் ஒவ்வாமல் துருக்கி கவர்ன்மெண்ட்டு தங்கள் கடற்படையை விருத்திசெய்யத் தொடங்கினார்கள். அதற்கு விரோதமாய் கிரீஸும் கடற்படையை அதிகப்படுத்தி வந்தது.

துருக்கியிலிருந்த இரண்டு கட்சியாரும் ராஜாங்க விவகாரத்தில் வேறுபட்டிருந்தாலும், ராணுவபலத்தை விருத்தி செய்வதில் ஒரே மனதாயிருக்கிறார்களென்று சொல்லவேண்டியதில்லை. ஆப்பிரிக்கா கண்டத்தில்துருக்கியின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த டிரிப்போலி காட்டின் மேல் அதற்கு எதிரிலிருக்கிற இடாலிதேசம் படையெடுத்த போது, துருக்கிகவர்ன்மெண்ட்டு தங்களுக்கு வன்மைகொண்ட கடற் படையில்லாமையால் டிரிப்போலியைக் காக்க முடியாமற் போயிற்று. டிரிப்போலி யுத்தம் முடிந்தவுடன் பால்கன் யுத்தம் ஆரம்பித்த போது, சுடற்படையில்லாத குறையைத் துருக்கியர் மிகவும் கூர்மையாய் உணர்ந்தார்கள். ஆகையால் துருக்கிபருக்குப் பெரியகடற்படை யிருக்கவேண்டுமென்று இரண்டு கட்சியாரும் உறுதிகொண்டார்கள். மேலும் கிரீஸ்தேசம் தன்னுடைய கடற்படை வன்மையால் எஜியன் கடலில் தன் அதிகாரத்தை ஸ்தாபிக்க முயற்சி செய்து வந்தது. அதைத் துருக்கி கவர்ன்மெண்ட்டுதடுக்கவேண்டியதுஅவசியமாகும். ஏனெனில் துருக்கி ராஜ்யத்தின் கடற்கரை எஜியன் கடலோரத்திலிருக்கிறது. ஆகையால் துருக்கியர் கடற்படையை விருத்தி செய்யத் தொடங்கினார்கள். அது நிறைவேறுவதற்குமுன் ஐரோப்பாவில் இப்போது நடை பெறுகிற மகா யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

துருக்கி ராஜாங்கத்தில் சிறு துருக்கிக் கட்சியாரின் அதிகாரம் மேலிடவே துருக்கி தேசம் மகா யுத்தத்தில் கலந்துகொண்டது.

பால்கன் நாடுகளில் உண்டான விரோத உணர்ச்சி.

ஸொர்வியா, மாண்டினீக்ரோ இவ்விரு நாடுகள் யுத்தத்தில் வெற்றியடைந்த பிறகு அல்பேனியாவைப் பங்கிட்டுக் கொள்ள மிகுந்த விருப்பங் கொண்டிருந்தபடியால் அவ்வாறு செய்யவிடாமல் ஆஸ்டிரியா தடுத்துவிட்டபோது, அவ்விரண்டு நாடுகளும் ஆஸ்டிரியாவினிடத்தில் தீராப்பகை கொண்டன.

மேலும் பால்கன் நாடுகள் யுத்த முடிவில் புதிய பிரதேசங்களைப் பங்கிட்டபோது, பல்கேரியா அகம்பாவமும் பிடிவாதமும் காட்டி மற்ற சகோதர நாடுகளைச் சமத்துவமாய் நடத்த மறுத்துவிட்டதானது ஆஸ்டிரியாவின் தூண்டுதலாலும் ரகஸ்ய ஏற்பாட்டினாலும் நடந்ததென்று ஸ்லாவ் ஜாதியாருள் பலமான அபிப்பிராயம் தோன்றிற்று. முன்பு 1885ம் வருஷத்தில் ஆஸ்டிரியாவின் செல்வாக்கு அதிகரித்ததின் பயனாக, பல்கேரியாவில் நேர்ந்த சம்பவங்கள் அப்போது ஞாபகத்துக்குவந்தன.* பால்கன் நாடுகள் வெற்றிபெற்றதென்ற பொறுமையால் ஆஸ்டிரியா அவைகளுக்குள் சண்டை மூட்டிவிட்டதென்று ஸொர்வியர்கள் உறுதியாய் நம்பினார்கள். மேலும் பால்கன் நாடுகளுக்குள் சண்டை யுண்டாவதற்கு மூலகாரணம், அவைகள் விசாலமாகப்பரவி விருத்தியடைவதற்குச் சிறிய நெருக்கமான பால்கன் நாடுகளைத் தவிர வேறு பூமியில்லை. அந்த பால்கன் நாடுகளினுங்கூட அல்பேனிய மாகாணம் ஆஸ்டிரியாவுக்கு உட்பட்ட அது மற்ற ஸ்லாவ் பிரதேசங்களில் பெரும்பான்மையும் ஆஸ்டிரியாவுக்குச் சொந்தமாயிருந்தன. ஸொர்வியாவுக்கு மேற்கிலும் வடக்கிலும் முள்ள பிரதேசங்கள் ஆஸ்டிரியாவைச் சேர்ந்தவை. அங்குள்ள கிரோவாஷியா, ஸ்லவோனியா, டால்மேஷியா, பாஸ்னியா, ஹெர்ஸிகோவினு என்ற ஆஸ்டிரிய மாகாணங்களிலெல்லாம் ஸ்லாவ் ஜாதியாரே வசிக்கிறார்கள். அவைகளெல்லாம் ஸொர்வியாவுக்குச் சுற்றப்பக்கங்களில் உள்ளவை. அவைகளில் 50 லக்ஷம் ஸ்லாவ்களிருக்கிறார்கள்.* ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின் தென் கிழக்குப் பாகத்திலுள்ள ஸ்லாவ்களைப்பற்றி மாத்திரம் இங்கு பிரஸ்

* 48 ம் பக்கம் பார்க்க.

தாபிக்கிறோம். அந்த ஏகாதிபத்தியத்தில் மொத்தம் 206 லக்ஷம் ஸ்லாவ் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் மதத்திலும் பாஷையிலும் பழக்கவழக்கங்களிலும் பேதப்பட்டிருக்கிறார்கள். மேலும், வடக்கிலுள்ள ஸ்லாவ்கள் ஒரே பிரதேசத்தில் சேர்ந்தாற்போல் வசிக்கவில்லை; இடையிடையே இதர ஜாதியார் வசிக்கிற பிரதேசங்கள் குறுக்கிடுகின்றன. ஆகையால் அவர்கள் ஒருமைப்படுவது தடைப்பட்டுவருகிறது. ஆனல் தென்கிழக்கு பாகத்தில் மேலே சொல்லப்பட்ட அரசாக ஸ்லாவ் மாகாணங்கள் ஒன்றுச் சேர்ந்திருக்கின்றன. கிரோவாஷியா மாகாணத்தில், ஸ்லாவ் பாஷைதான் ராஜாங்க பாஷையாயிருந்து வருகிறது. அங்கு ஸ்லாவ்களின் செல்வாக்கு வரவர பலப்பட்டு வருகிறது.

சொந்த ஜாதிஜனங்கள் வசிக்கிற அந்த பிரதேசங்களில் ஸொர்வியா தேசம் நியாயமாய் விசாலம் பெறவேண்டுமென்று ஸொர்வியர்கள் நினைத்தார்கள். ஸொர்வியா அந்தத் திசையில் பால்கன் நாடுகளுக்கப்பால் விஸ்தரித்துப் பாவினுல், பல்கேரியாவுக்கு பால்கன் நாடுகளுக்குள்ளேயே விருத்தியாக இடம் உண்டாகும். அவ்வாறு விருத்தியடைவதற்கு இடமில்லாத காரணத்தால்தான் ஸொர்வியா, பல்கேரியாவுடன் யுத்தஞ்செய்து மனஸ்தாபம்கொண்டது.

9-வது அத்தியாயம்

வல்லரசுகளுக்குள் யுத்த முயற்சிகள்.

ருஷியா

பால்கன் நாடுகளில் 1878-ம் வருஷத்தில் ஆஸ்டிரியா பிரவேசித்து, தன் செல்வாக்கை ஸ்தாபித்து, மறுமுறை 1908ம்வருஷத்தில் பாஸ்னியா, ஹெர்ஸிகொவினு என்ற ஸ்லாவ் பிரதேசங்களை வசப்படுத்திக்கொண்டதுந் தவிர, துருக்கி பால்கன் யுத்தத்துக்குப் பிறகு (1913) மற்றொருமுறை ஆஸ்டிரியாபிரவேசித்து அல்பேனியாவை அடக்கிக்கொண்டதென்று, ருஷியாவுக்கு அடங்காத ஆத்திரம் பொங்கிற்று. பால்கன் நாடுகளில் ஸ்லாவ் ஜாதியரே மிகுதியாயிருப்பதால் அங்கு தன் செல்வாக்கை நாட்ட விசேஷ உரிமை கொண்டிருக்கிறதென்று ருஷியா நினைத்தது. ஸ்லாவ் நாடுகளுக்குத் தலைமை வஹித்து அவைகளைக் காத்துவந்தது. ஆகையால் அந்த நாடுகளில் மறுமுறை ஆஸ்டிரியாவினுல் தொந்தரவுகள் ஏற்படுமானுல் அத்தேசத்தை யுத்தகளத்தில் முறியடித்து பால்கன் பிரச்னையைத் தீர்மானமாய் முடிவுக்குக்கொண்டு வருவதாக ருஷியா ஒரே உறுதி கொண்டது. உடனே தன் ராணுவத்தை விருத்திசெய்வதில் தீவிரமான முயற்சி காட்டிற்று.

ஜெர்மனி

இவ்வாறுன உணர்ச்சிகள் ருஷியாவில் தோன்று மென்றறிந்த ஜெர்மன் சக்கரவர்த்தி தமது ராணுவத்தை பலப்படுத்துவதில் வழக்கம்போல் முந்திக்கொண்டார். பால்கன் நாடுகளில் துருக்கி ஆட்சி புரிந்தவரையில் ஜெர்மனிக்குச் சாதகமாயிருந்த நிலைமை, பிறகு அந்த ஸ்தானத்தில் ஸ்லாவ் அரசுகள் பரவிவிட்டபடியால் பாதகப் பட்டது. துருக்கியில் ஜெர்மன் வியாபாரத்தைப் பெருக்கி, செல்வமும் செல்வாக்கும் சம்பாதிப்பதற்கு முன்னுல், அத்தேசத்தை ஸ்லாவ் ஜாதியர் பலஹீனப்படுத்தி தூர விலகச்செய்து, ஜெர்மனியின் பிடியினின்றும் நழுவச்செய்தார்களென்று வில்லியம் சக்கரவர்த்திக்குத் தெளிவாப்ப் புலப்பட்டது. அதன் பிறகு பால்கன்

நாடுகள் ருஷியாவின் தலைமையின்கீழ் ஒன்று சேர்ந்து ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தை அழித்து அதைப் பங்கிட்டுக்கொள்ளலாமென்று யோசனை செய்ததாக ஜெர்மன் சக்கரவர்த்தி நினைத்தார்.

அந்த நாடுகளில் ருஷியாவின் வன்மையும் அதிகாரமும் அதிகரித்தன. பொதுவாய், ஸ்லாவ் ஜாதியரின் செல்வாக்கு அதிகரித்தது. துருக்கி–பால்கன் யுத்தத்துக்கு முன்னால், ஆஸ்டிரியாவிலிருந்து துருக்கித் தலை நகராகிய கான்ஸ்டாண்டிநோபிள் வரையில் துருக்கிப் பிரதேசமாயிருந்தபடியால் அந்த வழியாய் துருக்கியுடனும் ஆசியாக்கண்டத்து மற்றப் பாகங்களுடனும் தாராளமாய்ப் போக்குவரத்து நடத்தலாம். பால்கன் யுத்தத்துக்குப் பிறகு அந்த சாதகம் இல்லாததோடு விரோதங் கொண்ட ஸ்லாவ் நாடுகள் ஆபத்து விளைவிக்கக்கூடிய ஸ்தானத்தி லிருக்கின்றன * ஆகையால் ஐரோப்பாவில் வல்லரசுகளுக்குள் யுத்தம் நேரிட்டால் அப்போது ஜெர்மனியின் நிலைமை பலஹீனமாயிருக்கு மென்ற காரணத்தைச் சொல்லியே ஜெர்மனி தன் ராணுவத்தைப்பலப்படுத்தியது. 1913-ம் வருஷத்தில், 100 கோடி ரூபாய் ராணுவத்தில் செலவிட நிச்சயித்திருந்ததோடு, நிரந்தரமாயுள்ள அதாவது சமாதான காலத்திலுள்ள ஜெர்மன் சேனையில்1,50,000 பேர் அதிகரிக்கப்பட்டது.

ஆஸ்டிரியா

ஸெர்வியாவுக்கு அருகிலுள்ள பாஸ்னியா, ஹெர்ஸி கோவினு என்ற பிரதேசங்களை ஆஸ்டிரியா வசப்படுத்தி, அதன் பிறகு அவைகளை யொட்டியிருக்கிற நோவி பஜார் என்ற பிரதேசத்தையும் முன்னதாகவே தன் அதிகாரத்துள் அடக்கிவைத்துக்கொண்டிருந்த படியால், தொடர்ச்சியாய் மற்ற பால்கன்பூமிகளையும் தன் செல்வாக்குக்கு உட்படுத்தி எஜியன் கடலிலுள்ள ஸலோனிகா துறைமுகத்தை எட்டிப் பிடிக்க வேண்டுமென்று ஆஸ்டிரியா வெகு காலமாய்

---

* இப்போது நடந்து கொண்டிருக்கிற மகா யுத்தத்தில் அவ்விஷயம் கன்முய் விளங்கும். ஜெர்மனி உலகத்திலுள்ள மற்ற பிரதேசங்களோடு போக்கு வரத்துச்செய்ய முடன்றதில், பிரிட்டிஷ் பிரஞ்சு கடற்படைகள் கடலிலுள்ள வழிகளைத் தடுத்து நிற்க, தரைவழியாய் போக்குவரத்து நடப்பதை ஸெர்வியாவும் மாண்டிநீக்ரோவும் தடை செய்கின்றன. ஆகையால் துருக்கியுடன் போக்கு வரத்து நடத்துதல் வெகு கஷ்டமாயிருந்தது. ரொமேனியா வழியாய் இரகஸியமாக பணமும் தளவாடங்களும் துருக்கிக்கு முதலில் அனுப்பப்பட்டு, பிறகு அவை நிறுத்தப் பட்டதாகச் சொல்லப்படுகிறது.

நோக்கங்கொண் டிருந்தது. அந்த துறைமுகத்தின் வழியாய் வியா பாரத்தை விருத்தி செய்து எஜியன் கடலிலும் தன் செல்வாக்கை ஸ்தாபிக்கவேண்டுமென்று கோரி யிருந்தது. பால்கன் யுத்தத் துக்குப் பிறகு ஸ்லாவ் நாகிகள் அந்த வழி முழுவதையும் நிரந்த ரமாய் மறைத்து விட்டன. முன்பு ஸெர்வியாவும் மாண்டினிக்ரோ வும் தன் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது போய், அதிக விரோதங் கொண்டிருந்ததும் ஆஸ்டிரியாவுக்கு வெளிப்பட்டது. ஆஸ்டிரியா இனி விசாலமாகி விருத்தியடைவதற்கு எங்கும் வழியில்லாமற் போயிற்று. அவ்வாறு ஏதாவது வழியுண்டாகவேண்டுமானால் அது பெரிய யுத்தத்தால் நடக்கவேண்டுமென்று உணர்ந்து ராணுவத்தைப் பலப்படுத்தத் தொடங்கிற்று.

ஸ்லாவ் பிரஜைகளுள் ஜாதிய உணர்ச்சி.

மேலும், ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்திலிருந்த ஸ்லாவ் பிரஜை கள் ஜாதிய உணர்ச்சி மேலிட்டு ஏகாதிபத்தியத்தையே பிளந்து விடுவார்கள் என்று தோன்றிற்று. ஆஸ்டிரியாவின் கீழுள்ள ஸ்லாவ் ஜாதியார் தங்கள் கொடுமையாய் நடத்தப்படுகிறார்களென்று நினைத்தார்கள். முன்பு ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு இடாலியர்களை சகிக்கமுடியாத கொடுங்கோன்மைக்கு உட்படுத்திவந்ததுபோல இப் போது தங்களைத் துவைத்துக்கொண் டிருக்கிறார்களென்று ஸ்லாவ் பிரஜைகள் எண்ணினார்கள். இந்த ஸ்லாவ்களும் ஸெர்வியர்களும் மதத்தில் வித்தியாசப்பட்டிருப்பதால் அவர்களுக்குள் விரோத உண ர்ச்சியைக் கிளப்பிவிட ஆஸ்டிரியா முயற்சிசெய்து வந்தது. ஆனால் அவர்களுக்குள் சகோதர உணர்ச்சியை விருத்திசெய்ய ஸெர்வியர் முயன்றார்கள். சகோதர உணர்ச்சி பரவவிடாமல் ஸ்லாவ் பிரஜை களின் ஜனத்தலைவர்களைச் சிறையிலடைத்து பீதியையுண்டுபண்ணி ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு ஆட்சி புரிகிறார்களென்று ஸ்லாவ்கள் வருத்த முற்றார்கள். ஸ்லாவ் ஜனங்கள் முன்பு நாகரிகமற்றவர்களா யிருந்துவந்து இப்போது ஆஸ்டிரிய ஆட்சியால் மாறி யிருக்கிறார் களென்பது உண்மையே. ஆனால் இக்காலத்து நாகரிகத்தோடு கொடுங் கோன்மையும் சேர்ந்தாற்போல பரவியிருத்தல் அரிதல்ல. நாகரிக மற்றுக் காடாயிருந்த பாஸ்னியா, ஹெர்ஸிகோவினு என்ற பிரதேசங் களில் நல்ல சோட்டுகளும் ரெயில் பாதைகளும் தந்திக் கம்பிகளும் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் ஜனங்களின் நன்மையை மாத் திரம் உத்தேசித்து செய்யப்பட்டவையல்ல. ஆஸ்டிரியசவர்ன்மெண்டு

அந்த பிரதேசங்களை அடக்கியாள்வதற்கும் அந்திய சத்துருவினின்று காப்பதற்கும் போக்கு வரத்துச்சாதனங்கள் அவசியம் பெற்றிருக்க வேண்டும். ஏராளமான மூலதனம் போட்டுப் பொருள் சம்பாதிப்பதற்கும் வியாபார விருத்திற்கும் நல்ல வழிகளாகும். இவைகளெல்லாமிருந்தும் கொடுங்கோன்மையைச் சகிக்கமுடியாமல் ஸ்லாவ்ஜனங்கள் அமைதியின்றி யிருந்தார்கள்.

ஏகாதிபத்தியத்துக்கு நேராக்கூடிய ஆபத்து.

இடாலியில் லாடினிய அரசர் செய்ததுபோல, ஸைவிய அரசர் ஸ்லாவ் ஜனங்களின் சுதந்தரங்களைக்காத்து ஆஸ்டிரியாவின் கொடுங்கோன்மையினின்றும் அவர்களை மீட்டு, ஸ்லாவ் ஜனங்களையெல்லாம் ஐக்கியப் படுத்தி, சுற்றுப்பக்கங்களிலுள்ள ஸ்லாவ் பிரதேசங்களை ஒரு தேசமாகச் செய்யவேண்டுமென்ற பெரியநோக்கம் ஸைவிய ருக்கு உண்டாயிருப்பதாகத் தெரியவந்தது. ரகஸ்யச் சங்கங்களும் சதியாலோசனைகளும் பரவின. ஆஸ்டிரியாவுக்குட் பட்டிருக்கிற ஸ்லாவ் பிரதேசங்களை ஸைவியா தன்னுடன் சேர்த்துக்கொண்டு மாண்டினிக்ரோ நாட்டையும் அதில் பிணைத்து பெரிய ஸ்லாவ் தேசத்தை ஸ்தாபித்து, மற்ற பால்கன் நாடுகளை பல்கேரியாவுக்கு விட்டு விடுவதாக ஸைவிய ராஜ தந்திரிகள் நோக்கம் கொண்டிருக்கிறார்களென்று ஆஸ்டிரியா உறுதியாய் நம்பிற்று.

ஆகையால் ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் நிலைக்கவேண்டுமானால், ஸைவியாவுடன் யுத்தந்தொடங்கி, அதற்கிருந்த முக்கிய நோக்கத்தைத் தீர்மானமாய்க் கைவிடும்படிச் செய்ய ஆஸ்டிரியா சமயம் பார்த்திருந்தது.

பிரான்ஸ்.

ஜெர்மனி செய்துவந்த யுத்தப் பிரயத்னங்களைக்கண்டு, பிரான்ஸ் 1870-ம் வருஷமுதல் செய்து வந்த ராணுவ முயற்சிகளை இன்னும் தீவிரமாய் நடத்தத் தொடங்கியது. வல்லரசுகளுக்குள் லிருந்த விரோத உணர்ச்சிகளை பால்கன் விஷயங்கள்மாத்திரம் மூட்டிவிட்டதென்று சொல்வதற்கில்லை. ஜெர்மனியின் யுத்தப்பிரபத்னங்களைக் கண்டு பிரான்ஸ் தனது ராணுவ முயற்சிகளைத் தீவிரமாய்ச் செய்யத் தொடங்கியதோபாது, அதன் காரணம் பால்கன் விஷயமாய் அது ருஷியாவுக்கு உதவிசெய்யக் கட்டுப்பட்டிருக்கிறதெனபது மாத்திரமல்ல; 1870-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசமானது தன் சக்கரவர்த்தியை இழந்தது மல்லாமல் கௌரவத்தையும் இழந்ததோபான

வருத்தத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டு மென்பதும் முக்கியமா யிருந்தது.

ராணுவத்தை அதிகப்படுத்தி ஜெர்மனியுடன் முதலில் போட்டி செய்யத் தொடங்கியது பிரான்ஸ்தேசம். 1871-ம் வருஷத்துக்குப் பிறகு ஜெர்மனி ஜனத்தொகையிலும் செல்வத்திலும் விரைவாய் விருத்தி யடைந்ததைக் கண்டு, பிரான்ஸ் அச்சங் கொண்டது 1886-ம் வருஷத்தில் பிரஞ்சு கவர்ன்மெண்டு தங்கள் நிரந்தரமான சேனையில் மொத்தம் ஐந்து லக்ஷம் துருப்புகளிருக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அச்சமயம் ஜெர்மனியின் நிரந்தரமான சேனையில் 4,27,000 துருப்புகள்தா னிருந்தன. ஜெர்மனி அதுமுதல் தன் சேனையை விரைவாய் அதிகரிக்கத் தொடங்கிற்று. ஜெர்மனியுடன் போட்டி செய்வது சாத்திய மில்லையென்று பிரான்ஸ் சிக்கிரத்தில் தெரிந்துகொண்டது. ஜெர்மனியில் ஜனத்தொகை அதிகரித்துவர, பிரான்ஸ் தேசத்தில் ஜனத்தொகை வரவரக் குறைந்து கொண்டு வந்தது. ஆகையால் 1896–ம் வருஷத்தில் ருஷியாவின் சைன்ய உதவியை நாடும்படி நேரிட்டது. அவ்வருஷம் பிரான்ஸ் ருஷியா வுடன் உடன்படிக்கை செய்துகொண்டதென்று முன்பு சொல்லி யிருக்கிறோம். பிறகு பிரிட்டனுடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன் குடியேற்ற நாடுகளைக் காக்கவேண்டி வந்தது. 1905, 1911–ம் வருஷங்களில் ஜெர்மனி மொராக்கா விவகாரத்தில் பிரவேசித்தபோது, பிரான்ஸின் நிலைமை எவ்வளவு தூரம் விருத்தி யடைந்த தென்பது விளங்கிற்று.

கிரேட் பிரிட்டன்.

இங்கிலாந்துகூட, பிரான்ஸின் கடற்படைக்கும் தன் குடியேற்ற நாடுகளுக்கும் கெடுதிவராமல் காக்கவேண்டுமென்று கவலைகொண்டு யுத்தப்பிரயத்னங்களைச் செய்தது. ஜெர்மனி, இங்கிலாந்தினிடத்தில் விரோதங்காட்டி வந்ததால் பிரிட்டிஷ் கடற்படை இன்னும் விரைவாய்க் கட்டப்பட்டு வந்தது.

1913-ம் வருஷத்திலிருந்து அவ்வாறு வல்லரசுகள் சற்றுந் தளராமல் யுத்த முயற்சிகளைச் செய்து வந்தார்கள். யுத்தம் திடீரென்று ஐரோப்பா முழுவதும் பரவுதற்கு எங்ஙனவது சிறு பொறி கிளம்பினாலும் போதுமானதா யிருந்தது. 1914 ம் வருஷம் ஜூன்மாதம் 28 ந் தேதி ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தின்

இளவரசரும் அவருடைய மனைவியும் பாஸ்னியாவின் முக்கிய ஸ்தல மாகிய ஸராஜிவோ நகரத்தில் ஒரு ஸெர்வியனால் கொல்லப்பட்ட வுடன், வல்லரசுகளுக்கிருந்த பலவித உணர்ச்சிகள் வெளிவிட்டு மூளத் தொடங்கின.

10-வது அத்தியாயம்.

யுத்த மேகங்கள் மூடுகின்றன.

ஆஸ்டிரிய சக்கிரவர்த்தியின் மருமகனும், ஆஸ்டிரிய ஏகாதி பத்தியத்தின் இளவரசரும், ஆஸ்டிரிய சேனாதிபதியுமாகிய ஆர்ச் டியூக் பிரான்ஸிஸ் பர்டினன்ட், 1914-ம் வருஷம் ஜூன் மாசம் 23-ந் தேதி வியன்னா நகரத்தை விட்டுப் * புறப்பட்டு, 6-வருஷங்களுக்கு முன் ஏகாதிபத்தியத்துடன் சேர்க்கப்பட்ட ஸ்லாவ்கள் வசிக்கிற பாஸ்னியா மாகாணத்தில், துருப்புகளைப் பார்வையிடப் போனார். 28-ந் தேதி அந்த மாகாணத்தின் முக்கிய ஸ்தலமாகிய ஸராஜிவோ நகரத்துக்கு விஜயஞ் செய்து இளவரசரும் அவருடைய மனைவியும் தெருவில் ஊர் வலஞ்சென்று கொண்டிருக்கையில், ஒரு கொலை யாளியால் சுடப்பட்டு மாண்டு போனார்கள். அதைப்போல வேறெந்த சம்பவமும் ஐரோப்பா முழுவதையும் திடுக்கிடும்படிச் செய்ததில்லை. ஆஸ்டிரியாவினிடத்தில் எங்கும் அனுதாபம் காட்டப் பட்டது. சில காலமாய், ஆஸ்டிரியாவைச் சேர்ந்த ஸ்லாவ் பிரஜை களே, முக்கியமாய் பாஸ்னியா ஹெர்ஸிகோவினா மாகாணங்களில் வசிக்கிற ஸெர்விய ஜாதியாரை, கலகமூட்டுவதற்காக முயற்சிகள் செய்யப் பட்டனவென்றும், ஸெர்விய கவர்ன்மெண்டுக்குத்தெரிந்தே அம்முயர்ச்சிகள் நடத்தப்பட்டனவென்றும், ஆஸ்டிரியாவிலுள்ள பத்திரிகைகளும் பொது ஜன அபிப்பிராயமும் நிரூபித்துவந்தன. ஸராஜிவோவில் நடந்த கொலை, அந்த முயற்சிகளால் வெளிப்படை யாய்த் தோன்றிய முதலாவது பலன் என்று ஆஸ்டிரிய கவர்ன் மெண்டு நிச்சயித்தார்கள்.

ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்கு மிருந்த மனஸ்தாபம்.

ஜாதிய உணர்ச்சி வெகு காலத்துக்கு முன்னால் ஐரோப்பாவின் தென் கிழக்கு பாகத்தில், ஸ்லாவ் ஜனங்களுக்குள் தோன்றி பலப்

* ஆஸ்டிரிய-ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின் தலைநகரம்.

பட்டுவந்தது. அந்த ஜாதிய உணர்ச்சியால் பால்கன் நாடுகளி லிருந்த ஸ்லாவ் ஜனங்கள் துருக்கி கவர்ன்மெண்டுக்கு விரோத மாய்க் கலகஞ் செய்து 1877-ம் வருஷத்தில் ருஷியத்துருக்கி யுத்தத்தைக்கொண்டுவிட்டார்க ளென்று சொல்லி யிருக்கிறோம். 1878-ம் வருஷத்தில் துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாஸ் னியா ஹெர்ஸிகோவினு என்ற மாகாணங்களே செவ்வையாய் நிர்வாகஞ் செய்வதற்காக ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு தங்கள் மேற் பார்வையில் வைத்துக்கொண்டார்களென்றும் சொல்லி யிருக்கிறோம். அச்சமயத்தில் துருக்கி சுல்தானுடைய அதிகாரம் அந்த மாகாணங் களில் குறைவுபடாதென்று ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு அறிவித்த போதிலும் 30 வருஷங்களுக்குப் பிறகு (அதாவது 1908-வருஷம்) அவைகளைத் தங்கள் ஏகாதிபத்தியத்துடன் சேர்த்துக்கொண்டு விட்டார்களென்றும் சொல்லி யிருக்கிறோம். அந்த மாகாணங்கள் ஸெர்வியாவுக்குப் பக்கத்திலுள்ளவை; அவைகளில் ஸ்லாவ் ஜனங் கள் வசிப்பதோடு அனேக ஸெர்வியரு மிருக்கிறார்கள். ஆகையால், அவ்வருஷம் அக்டோபர் 8-ந்தேதி அந்த மாகாணங்கள் ஏகாதி பத்தியத்துடன் சேர்க்கப்பட்ட விசேஷ சம்பவத்தை ஆஸ்டிரியகவர்ன் மெண்டு கொண்டாடினபோது, பால்னியாவின் முக்கிய ஸ்தலமா கிய ஸராஜிவோ நகரத்தில் பிரங்கிகள் அதிர, கேடயில் மணிகள் குலுங்க, ராஜாங்க அதிகாரிகள் ஆவாரஞ் செய்ய, பொது ஜனங் கள் மவுனமாயிருந்தனர். அதன் பிறகு ஸெர்விய ஜனங்களுக்குள் ஜாதிய உணர்ச்சி மேலிட்டது. அந்த மாகாணங்களை ஆஸ்டிரியா சேர்த்துக் கொண்டதைப் பற்றி ஸெர்விய கவர்ன்மெண்டு கண்ட னஞ் செய்து அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட தால், "ஸெர் விய ஜனங்களின் உணர்ச்சிக்கும் நன்மைக்கும் உரிமைகளுக்கும் தீங்கு செய்யப்பட்டது" என்று அறிவித்தார்கள். ஆஸ்டிரியா வின் நடவடிக்கையை ருஷியா பலமாய் ஆக்ஷேபித்தது. ஆனல் அவ்விஷயமாய் ருஷியா பிரவேசித்தால், ஜெர்மனி யுத்தஞ் செய்வ தாக பயமுறுத்திற்று. நல்ல வேளையாய் மற்ற வல்லரசுகள் மத்தி யஸ்தஞ் செய்ததால், 1909-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதி, ஸெர்வியா, அந்த மாகாணங்களில் யாதொரு பாத்தியதை யும் கொண்டாடுவதில்லை யென்றும் விரோதம் காட்டுவதில்லை யென்றும் ஆஸ்டிரியாவுடன் நேசமாயிருந்து வருமென்றும் ஆஸ் டிரிய கவர்ன்மெண்டுக்கு உறுதி கூறிற்று. ஆயினும் பால்னி

யாவிலுள்ள ஜனங்களுக்குள் ஜாதிய உணர்ச்சி பலப்பட்டு வந்த தென்பதில் சந்தேகமில்லை. ஸெர்வியாவிலுள்ள ஜனங்களுக்குள் பரஸ்பர அபிமானம் தோன்றி 1912-ம் வருஷத்தில் நடந்த பால்கன் யுத்தத்தில் வெற்றி யடைந்த பிறகு அவ்வுணர்ச்சி வலுப்பட்டது. ஸெர்வியாவின் செல்வாக்கு அதிகரிக்கவே, அதன்மீது ஆஸ்டிரியாவுக்கு சந்தேகமும் அதிகரித்தது.

ஸெர்வியாவுக்கும் ஆஸ்டிரியாவுக்கு முள்ள சம்பந்தம் அவ்வாறிருக்கும்போது, ஸராஜிவோவில் நடந்த கொலை ஸெர்வியாவுக்கு விரோதமான உணர்ச்சிகளை ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தில் கிளப்பி விட்டது ஆச்சரிய மல்ல.

சிலதினங்களுக்குள் ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு ஸெர்விய கவர்ன்மெண்ட்டுக்கு அல்டிமேடம் அதாவது இறுதிக்கடிதம் அனுப்பிவிட்டது. இறுதிக்கடிதமென்றால், இரண்டு தேசங்களுக்கு முள்ள சமாதானப் போக்குவரத்து விடுபட்டுப் போவதற்குமுன்னால் கடைசியாய் அனுப்பப்படும் கடிதம். அந்தக் கடிதத்தில் முடிவாகச் சிலநிபந்தனைகள் சொல்லப்பட்டு, குறித்த காலத்துக்குள் அந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளாமலோ அல்லது வேறு திருப்திகரமான பதில் அளிக்காமலோ இருந்தால் சமாதான சம்பந்தம் விடுபட்டுப் போகுமென்று அறிவிக்கப்படும்.

ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு தங்கள் அனுப்பிய இறுதிக்கடிதத்தில், தங்களுக்கு விரோதமாய் ஸெர்விய ஜாதியர் கொண்டுள்ள உணர்ச்சிகளை நீக்கவேண்டுமென்ற கருத்துடன் அநேக விஷயங்களை அறிவித்தார்கள். ஸெர்விய கவர்ன்மெண்ட்டு, பால்னியா மாகாணத்தில் யாதொரு உரிமையுங்கொண்டாடுவதில்லை யென்றும், அதற்காக எவ்விதமாயும் விரோதங்காட்டுவதில்லையென்றும், 1909-ம் வருஷம் மார்ச்சு 31-ந் தேதி உறுதி கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறோம். மேற் சொல்லிய உறுதி மொழியைக் குறிப்பிட்டு, இப்போது ஸெர்விய கவர்ன்மெண்ட்டின் நடத்தை அதற்கு மாறுகயிருக்கிறதென்று இறுதிக் கடிதத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு 10-நிபந்தனைகளைச் சொல்லி அவைகளின்படி செய்ய ஸெர்வியா மதிக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன:—

1. ஆஸ்டிரியாவுக்கு விரோதமான பிரசுரங்களை அடக்கவேண்டும். 2. விரோதங்காட்டுகிற சங்கங்களைக் கலைக்கவேண்டும்.

5. கல்விஸ்தாபனங்களில் மாறுதல் செய்யவேண்டும். 4. சேனையிலிருந்து சில உத்தியோகஸ்தர்களை நீக்கவேண்டும். 5. ஸெர்வியாவில் நீதி விசாரணை நடத்தும்போது ஆஸ்டிரிய உத்தியோகஸ்தர்களும் கலந்துகொள்ள வேண்டும். 6. ஸெர்வியாவில் விஸ்தாரமாய் விசாரணை நடத்தவேண்டும். 7. குறிப்பிட்ட இரண்டு பேர்களை அரெஸ்டு செய்யவேண்டும். 8. ஆயுதங்களையும் வெடி குண்டுகளையும் எல்லைப்புறத்தில் வியாபாரஞ் செய்வதைத் தடுக்கவேண்டும். 9. ஸெர்விய உத்தியோகஸ்தர்கள் விரோதங் கொண்ட வார்த்தைகளைச் சொன்னதற்கு சமாதான மளிக்கவேண்டும். 10. மேற் சொன்ன நிபந்தனைகளை நிறைவேற்றியவுடன் அறிவிக்கவேண்டும்.

ஆஸ்டிரிய–ஹங்கேரி கவர்ன்மெண்டின் இறுதிக்கடிதம்.

கடிதத்தின் முழுவிவரங்கள்.

ஆஸ்டிரிய–ஹங்கேரி கவர்ன்மெண்டு 1914-வது ஜூலைமீ 23-ந்தேதி பின் வருமாறு இறுதிக்கடிதம் ஸெர்விய கவர்ன்மெண்டுக்கு அனுப்பினார்கள்:—

வியன்னாவிலிருந்த ஸெர்விய தூதர், 1909-ம் வருஷம் மார்ச்சுமீ 31-ந்தேதி, தமக்கு ஸெர்விய கவர்ன்மெண்டு அறிவித்தபடி, பின் வரும் விஷயங்களை ஆஸ்டிரிய--ஹங்கேரி கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்தார்.

"பாஸ்னியாவைப் பற்றின முடிவான ஏற்பாட்டினால், தன்னுடைய உரிமைகள் பாதிக்கப்படவில்லையென்று ஸெர்வியா ஒப்புக் கொள்கிறது.*

பாஸ்னியா விஷயமாய் ஸெர்வியா சென்ற மாரிகால முதல் ஆக்ஷேபித்துக் காட்டிவந்த விரோதத்தைக் கைவிடுவதாக, வல்லரசுகளின் யோசனைக்கு இணங்க, இப்போது ஒப்புக்கொள்கிறது. ஆஸ்டிரிய—ஹங்கேரி விஷயமாய் அனுசரித்துவந்த தன்கொள்கையைத் திருத்தி அதோடு சரியான சம்பந்தமுள்ள அயல் நாடாக வாழ்ந்திருக்கவும் ஒப்புக்கொள்கிறது"

சென்ற சில வருஷங்களாகவுள்ள சரித்திரத்தையும் முக்கிய

---

*ஸெர்வியாவுக்குமேற்கில் திருக்கிக்குச் சொந்தமாயிருந்த பாஸ்னியாஎன்ற வல்லாவ் பிரதேசத்தை ஆஸ்டிரியா முதலில் தன் மேற்பார்வையில் வைத்திருந்து பிறகு 1908-ம் வருஷத்தில் தன்னுடன் சேர்த்துக்கொண்டு விட்டதென்று சொல்லியிருக்கிறோம். இந்தக் கடையான மாறுதலைப்பற்றி அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி 88-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கவும்.

மாய் ஜூன் 28-ந்தேதி நடந்த விசனகரமான சம்பவங்களையும்* பார்த்தால், ஆஸ்டிரிய—ஹங்கேரியைச் சேர்ந்த சில பிரதேசங்களை அதன் சக்கரவர்த்தியின் ஆட்சியினின்றும் விலக்கிவிடும் நோக்கத்துடன் ஒரு விரோதமான கிளர்ச்சி உண்டாயிருக்கிறதாகத் தெரிய வருகிறது. ஸெர்வீய கவர்ன்மெண்ட்டின்பார்வையில் உதித்த அந்தக் கிளர்ச்சி, ஸெர்வீய எல்லைக்கு இரண்டு புறத்திலும் கொலைகளையும், கொடுமைகளையும், பீதியுண்டுபண்ணும்படியான காரியங்களையும் செய்யும்படியாக அவ்வளவு தூரம் பலப்பட்டது.

ஸெர்வீய கவர்ன்மெண்ட்டு 1909-ம்வருஷம் மார்ச்சு 31-ந்தேதி ஒப்புக்கொண்ட விஷயங்களை நிறைவேற்றுவதோடு, (மேற் சொல்லிய) அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எதுவும் செய்யவில்லை. (ஆஸ்டிரிய—ஹங்கேரி) ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் நடத்தப்பட்ட பற்பல சங்கங்கள், கூட்டங்கள், இவைகளின் காரியங்களை ஸெர்வீய கவர்ன்மெண்ட்டு தடுக்காமல் விட்டார்கள். பத்திரிகைகள் நிந்தித்தபடிவார்த்தைகளை உபயோகிப்பதையும், பாதகங்கள் செய்பவர்களைப்பற்றிப் புகழ்ச்சியாய் பேசுவதையும் தடுக்காமல் விட்டார்கள். புரட்சி யுண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் கலகத்தில் உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் சேர்ந்து கொள்வதையும் தடுக்காமல் விட்டு விட்டார்கள். பொதுக்கல்வி போதனையில் தகாதமுறைகளை அனுஷ்டிக்கவும் இடங்கொடுத்தார்கள். சுருங்கச் சொல்லில், (ஆஸ்டிரிய—ஹங்கேரி) ஏகாதிபத்தியத்தின் மீது விரோதமும், அதிலுள்ள ஸ்தாபனங்களிடத்தில் இகழ்ச்சியும் ஸெர்வீய ஜனங்களுக்குள் தூண்டிவிடும்படியான எல்லாவித நடவடிக்கைகளையும் (ஸெர்வீய கவர்ன்மெண்ட்டு) தடுக்காமல் விட்டார்கள்.

ஸெர்வீய கவர்ன்மெண்ட்டின் குற்றமுள்ள நடத்தையால் உயிருக்குக் கேடான பலன்கள் உண்டாயின வென்று ஜூன் 28-ந் தேதி நடந்த சம்பவங்கள் உலகமுழுவதுக்கும் வெளிப்படுத்திய போதும், அவர்களுடைய நடவடிக்கை நின்றபாடில்லை.

ஜூன் 28-ந் தேதி கொலைபாதகஞ் செய்த குற்றவாளிகளின் வாக்கு மூலங்களாலும் ஒப்பந்த வாக்கு மூலங்களாலும் சில விஷயங்கள் தெரிய வருகின்றன. ஸராஜீவோவில் சம்பவித்த கொலைகள், பெல்கி ரேட்டில் † செய்யப்பட்ட யோசனையின் பேரில்

*ஆஸ்டிரிய இளவரசரும் அவருடைய மனைவியும் கொல்லப்பட்ட சம்பவங்கள்

†ஸெர்வீய ராஜ்ஜியத்தின் தலைநகரம்.

நடந்திருக்கின்றன. கொலையாளிகள் வைத்திருந்த ஆயுதங்களும் வெடிகுண்டுகளும், 'நரோட்ஞ ஒப்பிரானே' என்ற சங்கத்தைச் சேர்ந்த ஸெர்வீய உத்தியோகஸ்தர்களாலும் அதிகாரிகளாலும் கொடுக்கப்பட்டவை. ஸெர்வீய எல்லையில் வேலைபாயுள்ள தலைவர்கள் செய்த ஏற்பாட்டின் பேரில் குற்றவாளிகள் தங்கள் ஆயுதங்களுடன் பாஸ்னியாவுக்குச் சென்றிருக்கிறார்கள்.

மேற்சொன்ன விஷயங்கள் மாஜிஸ்டிரேட்டின் விசாரணையில் வெளியானபிறகு, அந்த சதிபாலோசனைகள் முதலில் பெல்கிரேட்டில் ஆரம்பித்துப் பிறகு ஆஸ்டிரியஹங்கேரி ஏகாதிபத்தியப் பிரதேசங்களில்பரவுவதை ஆஸ்டிரிய—ஹங்கேரியகவர்ன்மெண்டுபொறுமையாய் மேன்மேலும் பார்த்திருக்க முடியவில்லை. அதோடு நிற்காமல் ஏகாதிபத்தியத்தின் அமைதிக்கு நிரந்தரமான அபாயத்தைவிளைக்கக் கூடிய அந்த கெட்ட யோசனைகளை நிறுத்தவேண்டுமென்ற கடமையும், ஆஸ்டிரிய ஹங்கேரிய கவர்ன்மெண்டின்மீது ஏற்படுகிறது.

அந்த எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு, ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாயுள்ள அந்த அபாயகரமான நடவடிக்கைகளை ஸெர்வீய கவர்ன்மெண்டு கண்டனஞ் செய்வதாக உறுதிமொழி கொடுக்குமாறு, ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்டுகேட்கும்படி இப்போது நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதாவது, ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த பிரதேசங்களை ஏகாதிபத்தியத்தினின்றும் பிரித்துவிடவேண்டுமென்று முடிவான நோக்கங்கொண்ட எல்லாவித உணர்ச்சிகளைக் கண்டனஞ் செய்வதாக ஸெர்வீய கவர்ன்மெண்டு உறுதிசொல்லவேண்டும்; பீதியை உண்டுபண்ணக்கூடிய குற்றமுள்ள நடவடிக்கைகளை அடக்கிவிட ஒப்புக்கொள்வதாகவும் ஸெர்வீய கவர்ன்மெண்டு உறுதிசொல்லவேண்டும்

அவ்வாறு ஒப்புக்கொண்ட விஷயம் கிரமமான வழியில் ஏற்படுவதற்காக, ஸெர்வீய கவர்ன்மெண்டு, உத்தியோகமுறையில் வெளியாகும் தங்கள் பத்திரிகையில் பின்வருமாறு பிரசுரிக்கவேண்டும்.

"ஆஸ்டிரிய—ஹங்கேரிக்கு விரோதமாய்ச் செய்யப்படுகிற நடவடிக்கைகளை ஸெர்வீய கவர்ன்மெண்டு கண்டனஞ்செய்கிறார்கள். அதாவது ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்துக்குச் சொந்தமான பிரதேசங்களை அதனின்றும் பிரித்துவிடவேண்டுமென்று

மூடிவான நோக்கங்கொண்ட பொது உணர்ச்சியை லெர்வீய கவர்ன்மெண்ட்டு கண்டனஞ் செய்கிறார்கள். அந்த குற்றமுள்ள நடவடிக்கைகளில் உயிருக்குக் கேடான சம்பவங்கள் நடந்தன வென்று அவர்கள் மனப்பூர்வமாய் வருத்தப்படுகிறார்கள்.

"லெர்வீய உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் மேற்சொன்ன நடவடிக்கைகளில் கலந்துகொண்டு, 1909-ம் வருஷம் மார்ச்சு 31-ந்தேதி லெர்வீய கவர்ன்மெண்ட்டு உண்மையாய் வாக்களித்தபடி அயல் நாட்டுடன் இருக்கவேண்டிய சரியான சம்பந்தத்தை பாதகப் படுத்தியதற்காக லெர்வீய கவர்ன்மெண்ட்டு வருத்தமடைகிறார்கள்.

"ஆஸ்டிரிய-ஹங்கேரியைச் சேர்ந்த எந்த பாகத்து வாசிகளின் நிலைமையும் பாதிக்கப்படுமாறு பிரசேவிசிப்பதையும் பிரசேவிசிக்க முயல்வதையும் லெர்வீய கவர்ன்மெண்ட்டு கண்டனஞ்செய்கிறார்கள்; அவைகளைப்பற்றித் தங்கள் அசம்மதத்தையும் அறிவிக்கிறார்கள். அம்மாதிரியான குற்றம் யார்மேல் ஏற்படுமோ அவர்களை லெர்வீய கவர்ன்மெண்ட்டு இனிமேல் மிகவும் கடுமையாய்த் தண்டிப்பார்கள்; அந்த நடவடிக்கைகளை முன்னதாகக் கண்டுபிடிக்கவும் அடக்கவும் தங்களாலான முயற்சிகளை யெல்லாம் லெர்வீய கவர்ன்மெண்ட்டு செய்வார்கள். உத்தியோகஸ்தர்களையும், அதிகாரிகளையும், ராஜ் ஜியத்திலுள்ள எல்லா ஜனங்களையும் அவ்வாறு எச்சரிக்கை செய்யவு தங்கள் கடமையென நினைக்கிறார்கள்."

மேலே சொல்லப்பட்ட விஷயங்களை லெர்வீய அரசர் தம் சேனைக்கு அனுப்புகிற உத்தரவு மூலமாய் அறிவித்து, உத்தியோக முறையில் வெளியாகும் ராணுவப்பத்திரிகையில் பிரசுரம் செய்ய வேண்டும்.

அவைகளைத் தவிர கீழே சொல்லப் பட்டவைகளையும் செய்ய லெர்வீய கவர்ன்மெண்ட்டு ஒப்புக்கொள்ள வேண்டும்:—

1. ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின் மேல் விரோத மும் நிந்தையும் உண்டாகும்படித் தூண்டி ஏகாதிபத்தியத்தின் க்ஷேமத்தை பாதிக்க வேண்டுமென்ற நோக்கமுடைய எந்த பிர சுரங்களையும் அடக்கவேண்டும்.

2. "நரோட்னை ஒட்பிரானை" என்ற பேருடைய சங்கத்தை உடனே கலைத்து அதன் நடவடிக்கைகளுக்கு ஆதாரமானவற்றை யெல்லாம் லெர்வீய கவர்ன்மெண்ட்டு பறிமுதல் செய்ய வேண்டும்.

ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்துக்கு விரோதமான காரியங்களை மேற்கொண்ட மற்ற சங்கங்களின் பேரிலும் அவைகளின் கிளைச் சங்கங்களின்பேரிலும் அம்மாதிரியே நடவடிக்கை நடத்தவேண்டும். அவ்வாறு கண்டிக்கப்பட்ட சங்கங்கள் மறுபடியும் வேறு பேரும் உருவமும்கொண்டு தோன்றுவதைத் தடுக்கத் தேவையான ஏற்பாடுகள் லெர்விய கவர்ன்மெண்ட்டு செய்ய வேண்டும்.

3. லெர்வியா தேசத்துப் பொதுக்கல்வி போதனையைச் சேர்ந்த போதகர்கள், போதனை முறைகள், ஆகிய இவைகளிலிருந்து ஆஸ்டிரியா—ஹங்கேரியின் மேல் விரோதத்தைத் கிளப்பக் கூடியவையாயுள்ள எல்லா விஷயங்களையும் லெர்விய கவர்ன்மெண்ட்டு தாமஸமின்றி நீக்கிவிடவேண்டும்.

4. ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின்மீது விரோதத்தைக் கிளப்பமுயன்ற குற்றமுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களையும் அதிகாரிகளையும், ராணுவ இலாகாவிலிருந்தும் பொதுநிர்வாக இலாகாவிலிருந்தும் லெர்விய கவர்ன்மெண்ட்டு நீக்கவேண்டும். அந்த குற்றவாளிகளின் பேரையும் குற்றச் செயல்களையும் பின்னல் அறிவிப்பதற்கு ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு சுதந்தரம் கொண்டிருக்கிறார்கள்.

5. ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதி பத்தியத்தின் பூரணத்தைக் குறைக்க வேண்டுமென்று நோக்கங் கொண்ட கிளர்ச்சியை அடக்குவதற்கு ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டின் பிரதிநிதிகளும் லெர்வியாவில் கூட யிருந்து முயற்சி செய்வதற்கு லெர்விய கவர்ன்மெண்ட்டு சம்மதிக்கவேண்டும்.

6 ஜூன் 28-ந்தேதி நடந்த சூழ்ச்சிக்கு உடந்தையாயிருந்து இப்போது லெர்வியப் பிரதேசத்திலிருக்கிறவர்களின்மீது சட்டப்படி நடவடிக்கைகள் நடத்தவேண்டும். அதுசம்பந்தமாய் நடத்தப்படும் விசாரணையில் ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டின் பிரதிநிதிகள் கலப்பார்கள்.

7. ஸராஜிவோவில் நடந்த மாஜிஸ்டிரேட் விசாரணையில் வெளியான குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட மிலான் ஸிகனுவிட்ச் என்ற லெர்விய கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தன் ருவனையும், மேஜர் வாய்ஜா டங்கோஸிட்ச் என்பவனையும் தாமஸமில்லாமல் அரெஸ்டு செய்யவேண்டும்.

8. எல்லைப் புறத்தைக்கடந்து ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் எல்லைப்புறத்துக் கப்பால் சட்ட விரோதமாய் அனுப்பப்படுவதில் ஸெர்வியா அதிகாரிகள் உதவி செய்யாமலிருக்க ஏற்பாடு செய்யவேண்டும்; ஸாஜிவோ நகரத்தில் கொலை செய்தவர்களை எல்லைப் புறத்துக் கப்பால் செல்லுப்படி விட்டு அவர்களுக்கு அவ்வாறு உதவிசெய்த எல்லைப்புறத்து இலாகா உத்தியோகஸ்தர்களை வேலையினின்றும் நீக்கிக் கடுமையாய்த் தண்டிக்கவேண்டும்.

9. ஸெர்வியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள உயர்தர ஸெர்விய அதிகாரிகள் நியாயவிரோதமான வார்த்தைகளைப் பேசினதற்கு ஸெர்விய கவர்ன்மெண்ட்டு சமாதானஞ் சொல்லவேண்டும். ஆந்த அதிகாரிகள் தாங்கள் கவர்ன்மெண்டு உத்தியோகங்களிலிருப்பதைக் கவனிக்காமல், ஜூன் 28-ந்தேதி நடந்த கொலைக்குப்பிறகு, தங்களைப் பார்க்கவந்தவரிடத்தில் ஆஸ்டிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டுக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லத் தயங்கவில்லை.

10 கடைசியாக, மேலே சொல்லப்பட்ட விவரங்களை நிறைவேற்றியவுடன் அவைகளைப்பற்றித் தாமஸமில்லாமல் ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

ஜூலை 25-ந் தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்குள்ளாக ஸெர்விய கவர்ன்மெண்ட்டின் பதிலை ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு எதிர் பார்த்திருக்கிறார்கள். *

ஸெர்விய கவர்ன்மேண்ட்டின் பதில்.

பதில்கடிதத்தின் முழுவிவரங்கள்.

மேற்கண்ட இறுதிக் கடிதத்துக்கு ஸெர்விய கவர்ன்மெண்ட்டு பின் வரும் பதிலை ஜூலை 25-ந் தேதி அறிவித்தார்கள்:—

ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு 23-ந்தேதி அனுப்பிய கடிதத்தை ஸெர்விய கவர்ன்மெண்ட்டு பெற்றுக்கொண்டார்கள். ஆஸ்டிரிய—ஹங்கேரிக்கும் ஸெர்வியாவுக்கும் உள்ள நேச சம்பந்தத்தைக் கெடுக்கக்கூடிய தப்பெண்ணங்களை இந்த பதில் கடிதம் நீக்கிவிடுமென்று ஸெர்விய கவர்ன்மெண்ட்டு நம்புகிறார்கள்.

* 7-வது 8-வது பிரிவில் சொல்லப்பட்ட ஸெர்விய உத்தியோகஸ்தர்களைப் பற்றி ஸாஜி வோவில் நடந்த விசாரணையில் வெளிப்பட்ட விவரங்கள் பிரத்தியேகமாய் மேற்கண்ட இறுதிக் கடிதத்துடன் சேர்த்து அனுப்பப்பட்டன.

(பாஸ்னியா பிரதேசத்தை ஆஸ்டிரியா தன்னுடன் சேர்த்துக் கொண்ட விஷயமாய்) பொறுப்பேற்ற லெர்வியர் ராஜாங்கத்துப் பிரதிநிதிகள் தங்கள் பேச்சுகளிலும் நடவடிக்கைகளிலும் கண்டனஞ் செய்த போதிலும், லெர்வியர் பார்லிமெண்ட்டு மெம்பர்களும் கண்டனஞ் செய்த போதிலும், 1909-ம் வருஷம் மார்ச்சு 31-ந் தேதி லெர்வியர் கவர்ன்மெண்ட்டு ஆஸ்டிரியா—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டுக்கு கொடுத்த உறுதிக்குப் பிறகு, அந்த கண்டனங்கள் நிறுத்தி விடப்பட்டன. அதன் பிறகு, பாஸ்னீயா ஹெர்ஸிகோவினு பிரதேசங்களின் புதிய ராஜாங்க நிலைமையை மாற்றும்பொருட்டு, லெர்வியர் கவர்ன்மெண்ட்டாவது அவர்களுடைய ஸ்தாபனங்களாவது எவ்வித முயற்சியும் செய்யவில்லை. ஆகையால் மேற்சொல்லிய விஷயமாய் ஆஸ்டிரிய-ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு, அது முதல் ஒரு கடவை செய்த புகாரைத் தவிர, எந்த விதமான பிரஸ்தாபங்களும் செய்யவில்லை என்பதை லெர்வியர் கவர்ன்மெண்ட்டு குறிப்பிடுகிறார்கள். அந்த ஒரு சமயத்தில் ஸ்கூல் புத்தகமொன்றைப்பற்றி ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்டு ஆலோசித்ததபோது அவர்களுக்கு முற்றிலும் திருப்திகரமான சமாதானம் கொடுக்கப்பட்டது. பால்கன்நாடுகளில் நேர்ந்த நெருக்கடியான காலங்களில், சமாதானத்தைக் கோரிய மிதமான கொள்கையை லெர்வியா அனுஷ்டித்து வந்த தென்பதற்கு அநேக அத்தாக்ஷிகள் வெளிப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் சமாதானம் நிலைக்க வேண்டுமென்றே லெர்வியா தன் சொந்த நன்மையையும் கைவிட்டிருக்கிறது. சங்கங்கள் சமாதானமாய் வேலை செய்வதும், பத்திரிகைகள் வியாசங்களைப் பிரசுரிப்பதும் போன்ற நடவடிக்கைகள் உத்தியோக முறையில் சம்பந்தப்படாதவை; அவ் விஷயங்களுக்கு, லெர்வியர் கவர்ன்மெண்ட்டு பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. அம்மாதிரி எல்லா தேசங்களிலும் வழக்கமாய் நடைபெற்று வருகின்றன. சாதாரணமாய் அப்படிப்பட்ட விஷயங்கள் கவர்ன்மெண்ட்டின் பார்வைக்கு வருவதில்லை. லெர்வியர் கவர்ன்மெண்ட்டின் பொறுப்பு இன்னும் குறைவு பட்டதென்று சொல்லலாம். ஏனெனில், அவர்களுக்கும் ஆஸ்டிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டுக்கும் ஏற்பட்ட அநேக தகராறுகளைத் தீர்த்தபோது, லெர்வியர் கவர்ன்மெண்ட்டு ஆஸ்டிரிய ஹங்கேரி கவர்ன்மெண்ட்டை திருப்தி செய்ய

வேண்டு மென்று மிருக்க அக்கரைகாட்டி அவ்வாறே இருவருக்கும் திருப்திகரமாய் முடிவு செய்திருக்கிறார்கள்.

அந்தக் காரணங்களால், ஸாஜிவோவில் நடந்த கொலைக்கு முன்னதாகச் செய்யப்பட்ட சதியாலோசனைகளில், லெர்வியப்பிரஜைகள் கலந்திருக்கிறார்களென்று அறிவிக்கப்பட்டதைக் காண, லெர்விய கவர்ன்மெண்டுக்கு ஆச்சரியமாயும் வருத்தமாயு மிருக்கிறது. மேலேசொல்லிய காரணங்களால், அந்தகொலை சம்பந்தமாக இரண்டு கவர்ன்மெண்ட்டுகளும் சேர்ந்து விசாரணை செய்யுமாறு லெர்விய கவர்ன்மெண்டு கேட்டுக்கொள்ளப் படுவார்களென்று அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். லெர்விய கவர்ன்மெண்டு தங்களுடைய உண்மையான மனநிலைமையைக் காட்டுவதற்காக, எவர்கள் குற்றஞ் செய்ததாக அறிவிக்கப்படுகிறார்களோ, அவர்களின்மேல் நடவடிக்கை நடத்தத் தயாராயிருந்தார்கள். ஆகையால், ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டின் விருப்பத்துக்கு ஏற்றபடி, ஸரோஜிவோ கொலையில் சம்பந்தப்பட்டதாக ருஜூ ஏற்படுகிறவர்களை எந்த அந்தஸ்திலும் உத்தியோகத்திலு மிருந்தாலும் ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்டிடம் விசாரணைக்கு ஒப்புவிக்கத் தயாராயிருக்கிறார்கள். அதோடு, ஜூலை 26-ந் தேதி பிரசுரமாகும் உத்தியோக முறைப் பத்திரிகையில் பின்வரும் விஷயங்களை வெளியிட ஒப்புக் கொள்கிறார்கள்:—

"ஆஸ்டிரிய—ஹங்கேரிக்கு விரோதமாய்ச் செய்யப்படுகிற நடவடிக்கைகளை லெர்விய கவர்ன்மெண்டு கண்டனஞ் செய்கிறார்கள்; அதாவது, ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்துக்குச் சொந்த மான பிரதேசங்களை அதனின்றும் பிரித்துவிட வேண்டு மென்பதை முடிவான நோக்கமாக வுடைய எல்லா உணர்ச்சிகளையுங் கண்டனஞ் செய்கிறார்கள். அந்த குற்ற முள்ள நடவடிக்கைகளால் கேடான சம்பவங்கள் நேர்ந்ததைப் பற்றி அவர்கள் மனப்பூர்வமாய் வருத்தப்படுகிறார்கள். ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன் மெண்ட்டின் அறிவிப்பின் படி சில லெர்விய உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் மேற்சொன்ன நடவடிக்கைகளில் கலந்து கொண்டபடியால், 1909ம் வருஷம் மார்ச்சு 31-ந்தேதி லெர்விய கவர்ன்மெண்டு உண்மையாய்வாக்களித்தவாறு இருக்க வேண்டிய அயல் நாட்டு சம்பந்தம் பாதகப் பட்டதற்காக, லெர்விய

கவர்ன்மெண்ட்டு வருத்தமடைகிறார்கள். ஆஸ்டிரிய—ஹங்கேரியி லுள்ள எந்த பாகத்து வாசிகளின் நிலைமையும் பாதகப்படுமாறு பிரசேகிக்க நினைப்பதும் முயல்வதும் அந்த வாக்குறுதியால் கண் டனஞ் செய்யப்பட் டிருக்கின்றன; அவைகளைப்பற்றி அசம்மதமும் அறிவிக்கப்பட் டிருக்கிறது. அம்மாதிரியான குற்றம் ஏற்படுகிறவர் களை ஸ்விய கவர்ன்மெண்ட்டு இனிமேல் கடுமையாய்த் தண்டித்து, அக்குற்றங்களைத் தடுக்கவும் அடக்கவும் தங்களாலானமுயற்சிகளெல் லாம் செய்வார்கள். உத்தியோகஸ்தர்களையும் அதிகாரிகளையும் ராஜ் யத்தினுள்ள எல்லா ஜனங்களையும் அவ்வாறு எச்சரிக்கைசெய்வது தங்கள் கடமையென ஸ்விய கவர்ன்மெண்ட்டு நினைக்கிறார்கள்."

மேலே சொல்லப்பட்ட விஷயங்களை ஸ்விய சேனைக்கு தினப் படி அனுப்புகிற உத்தரவு மூலமாய் ஸ்விய இளவரசர், அரசரின் பேரால், அறிவிப்பார். அவ்விஷயங்கள், உத்தியோகமுறையில் வெளி யாகிற அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இவைகளைத் தவிர,ஸ்விய கவர்ன்மெண்ட்டு கீழ்சொல்லப் பட்டவைகளையும் செய்ய ஒப்புக்கொள்ளுகிறார்கள்:—

1. ஸ்விய பார்லிமெண்ட் கிரமப்படி கூட்டப்பட்டவுடன் பத்திரிகைச்சட்டத்தில் ஒரு நிபந்தனை சேர்க்கப்படும். ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின்மேல் விரோதமும் நிந்தையும் உண் டாகும்படித் தூண்டுவதை மிகவும்கடுமையாய் தண்டிக்கவும்,ஏகாதி பத்தியத்தின் பூரணத்தை பாதிக்க வேண்டுமென்ற கோக்கமுடைய பிரசுரங்களின் மீது நடவடிக்கை நடத்தவும் ஏற்பாடு செய்யப்படும். அப்படிப்பட்ட பிரசுரங்களைப் பறிமுதல் செய்வது இப்போதுள்ள சட்டப்படி முடியாதாகையால், சட்டத்தை மாற்றும்போது அதற் குத் தகுந்த ஏற்பாடுசெய்யப்படும்.

2. "நரோட்னை ஓட்பிரானை" என்ற சங்கமும் அதைப்போன்ற வேறு சங்கங்களும், அவைகளுடைய மெம்பர்களின் நடவடிக்கை களால், குற்றங்களைச் செய்தன வென்பதற்கு ஸ்விய கவர்ன்ட் டிடம் ருஜுக்கள் இல்லை; ஆஸ்டிரிய—ஹங்கேரிய கவர்ன்மெண்ட் டின் கடிதத்திலும் ருஜுக்கள் காணப்படவில்லை. ஆயினும், ஆஸ்டி ரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு கேட்டிருப்பதற்கு இணங்கி, நரோட்னை ஓட்பிரானை சங்கத்தையும், ஆஸ்டிரிய—ஹங்கேரிக்கு விரோதமாய் முயற்சிகள் செய்யும் ஒவ்வொரு சங்கத்தையும் கலைத்து விட ஸ்விய கவர்ன்மெண்ட்டு ஒப்புக்கொள்கிறார்கள்.

3. ஆஸ்டிரிய—ஹங்கேரியின்மீது லெர்வியாவில் விரோதத் தைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றி ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டுதேவையானருஜுக்கள் தெரிவிக்கும்போது, லெர்வி யப் பொதுக்கல்வி ஸ்தாபனங்களி லிருந்து அம்மாதிரியா யுள்ளவற் றையெல்லாம் தாமஸமின்றி நீக்கிவிட லெர்வியகவர்ன்மெண்ட்டு ஒப் புக்கொள்கிறார்கள்.

4 ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின் பூரணத்துக்கு விரோதமான குற்றக்களைச் செய்ததாக கோர்ட் விசாரணையில் ருஜு ஏற்படுகிறவர்களை ராணுவ வேலைபிலிருந்து நீக்கிவிட லெர்விய கவர்ன்மெண்ட்டு ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களின்மீது நடவடிக்கை நடத் துவதற்காக, அவர்களின் பேரையும் குற்றச்செயல்களையும் பின்னல் ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு அறிவிப்பார்களென்று லெர் வியக கவர்ன்மெண்டு எதிர்பார்க்கிறார்கள்.

5. ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டின் பிரதிநிதிகள் லெர்விய நாட்டுக்குள்வந்து அங்கு நடக்கும் விசாரணையில் கலந்து கொள்ள லெர்விய கவர்ன்மெண்ட்டு சம்மதிக்கவேண்டுமென்று ஆஸ் டிரிய ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு கேட்டிருக்கிறார்கள். அதன் கருத் தும் விவரமும் லெர்விய கவர்ன்மெண்டுக்கு விளங்கவில்லை என்று சொல்லவேண்டும். ஆனல் பல தேச சட்டத்துக்கும், குற்றவிசாரணை முறைக்கும், அயல்நாட்டு நேச சம்பந்தத்துக்கும் ஒத்துவருகிறபடி கலந்துகொள்ள லெர்விய கவர்ன்மெண்ட்டு ஒப்புக்கொள்ளு கிறார்கள்.

6. ஜூன் 28-ந் தேதி நடந்த கொலையில் சம்பந்தப்பட்டு அல்லது சம்பந்தப்பட்டதாக இனித் தெரியவந்து லெர்வியாவில் வசிக்கிறஜனங்களைப்பற்றி விசாரணை நடத்தப்படும்; அவ்வாறு நடத்த வேண்டியது தங்களுடைய கடமையாக லெர்விய கவர்ன்மெண்ட்டு நினைத்திருக்கிறார்களெனச் சொல்லத் தேவையில்லை. அந்த விசாரணை யில் ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்டின் ஏஜெண்டுகளாவது அதிகாரிகளாவது கலந்துகொள்ள வேண்டுமென்பதை லெர்விய கவர்ன்மெண்ட்டு ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில், அது ராஜாங்க அமைப்புக்கும், கிரிமினல் நடவடிக்கையின் முறைகளுக்கும் விரோதமானது. ஆயினும், நிச்சயமாய் ஏற்படுகிற கேஸ்களில், விசா

ரணையில் வெளியாகிற விஷயங்களை ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏஜெண்டு களுக்கு அறிவிக்கலாம்.

7. ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டின் கடிதம்கிடைத்த அன்று மாலையே வாய்ஸ்ராவ் டங்கொலிட்ச் என்பவனை ஸெர்வீய கவர்ன்மெண்டு அரஸ்ட் செய்யத் தொடங்கினார்கள். மற்றொரு வன், மிலான் லிகனவிட்ச், ஆஸ்டிரிய—ஹங்கேரி ஏகாதிபத்தியத் தின் பிரஜை. ஜூன் 28-ந்தேதி வரையில் அவன் ரயில்வேயில் வேலை பார்த்துவந்தான். அவனை அரெஸ்டுசெய்ய இதுவரையில் சாத்தியப் படவில்லை.

ஸராஜிவோ விசாரணையில் சேர்த்து வைக்கப்பட்ட சாக்ஷியங் களை, பின்னால் நடைபெற வேண்டிய விசாரணைக்காக, கூடிய சீக்கி ரத்தில் அனுப்பும்படி ஸெர்வீய கவர்ன்மெண்டு ஆஸ்டிரிய— ஹங்கேரி கவர்ன்மெண்ட்டை கேட்டுக் கொள்கிறார்கள்.

8. எல்லைப் புறத்துக்கு அப்பால், ஆயுதங்கள், வெடிகுண்டுகள், இவைகளில் சட்டவிரோதமாய் வியாபாரம் செய்வதைத் தடுப்பதற் காக, இப்போதுள்ள ஏற்பாடுகளை இன்னும் விஸ்தாரமாகச் செய்ய வும் அதிகப்படுத்தவும் ஸெர்வீய கவர்ன்மெண்டு ஒப்புக் கொள் ளுகிறார்கள். ஸராஜிவோ கொலையாளிகளை எல்லைக்கு கப்பால் போகும்படி விட்டு தங்கள் கடமையில் தவறிய எல்லைப் புறத்து அதிகாரிகளை உடனே விசாரித்து கடுமையாய் தண்டிக்கும்படி ஸெர்வீய கவர்ன்மெண்டு உத்தரவு செய்வார்க ளென்று சொல்லத் தேவையில்லை.

9 ஸெர்வியாவிலாவது மற்ற இடங்களிலாவது, ஸெர்வீய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள், ஸராஜிவோ கொலைக்குப் பிறகு தங்களைப் பார்க்க வந்தவர்களிடத்தில் வெளியிட்ட அபிப்பி ராயங்களைப்பற்றி ஸெர்வீய கவர்ன்மெண்டு சமாதானஞ் சொல்லத் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் வெளியிட்ட அபிப்பிராயம் ஏகாதி பத்தியத்துக்கு விரோதமானவையென்று ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்டு அறிவித்திருக்கிறார்கள். அதுவிஷயமாய் ஸெர்வீய கவர்ன்மெண்டு தாங்களே சாக்ஷியங்களைச் சேகரிப்பார்கள்; ஆனா லும், அந்த உத்தியோகஸ்தர்கள் வெளியிட்ட அபிப்பிராயங்களில் ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்டு தாங்கள் குறிப்பிடுகிற வாக்கி யங்களைத் தெரிவித்து அவைகளை அந்த உத்தியோகஸ்தர்கள் உண்

மையில் வெளியிட்டார்க ளென்பதைக் காண்பித்தவுடன், லெர்வில கவர்ன்மெண்ட்டு அவைகளுக்கு சமாதானஞ் சொல்லத் தயாரா யிருக்கிறார்கள்.

10 மேலே சொல்லப்பட்ட ஏற்பாடுகளில், இந்த கடிதத்தின் படி ஏற்கனவே செய்யப்பட்டாம லிருக்கிறவற்றை ஒவ்வொன்றாய் உத்தரவு செய்து நிறைவேற்றும் போது, ஆஸ்டிரிய—ஹங்கேரிய கவர்ன்மெண்ட்டுக்கு லெர்வில கவர்ன்மெண்ட்டு அறிவிப்பார்கள்.

இந்தபடிக்கொண்டு ஆஸ்டிரிய—ஹங்கேரி கவர்ன்மெண்ட்டு திருப்தி அடையாமற்போனால், அதற்காக அவசரமான முடிவுக்கு வருவது இருவருடைய நன்மைக்கும் உற்றதல்ல டென்பதை லெர் வில கவர்ன்மெண்ட்டு அறிந்து, எப்போதும்போல சமாதானமான முடிவை ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கிறார்கள். 1909-ம் வருஷம் மார்ச்சு 31-ந் தேதி லெர்வில கவர்ன்மெண்ட்டு கொடுத்த உறுதி மொழிகளைத் தீர்மானிப்பதில் உதவிசெய்த வல்லரசுகளுக்காவது, அல்லது ஹேக் கோர்ட்டுக்காவது, * இந்த இரண்டு தேசங்களுக் கும் நேரிட்ட வேற்றுமையைத் தீர்க்க விடுவதற்கு லெர்வில கவர்ன் மெண்ட்டு தயாரா யிருக்கிறார்கள்.

ஸெர்வியாவின் சமாதான உணர்ச்சி.

லெர்வில கவர்ன்மெண்ட்டு மேற்கண்டவாறு அனுப்பிய பதி வில் அநேகமாய் எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக் கொண்டார் கள். ருஷியா, கிரேட் பிரிட்டன் இவைகளின் போதனையின் மேல் லெர்வியா அவ்வாறு சமாதான பதில் அனுப்பியது. ஆஸ்டிரியா வின் இறுதிக் கடிதத்திலுள்ள அநேக வார்த்தைகளும், லெர்வில ராஜ்யத்தில் ஆஸ்டிரிய அதிகாரிகள் பிரவேசித்து விசாரணை நடத்த வேண்டு மென்று 5-வது பிரிவில் கண்ட நிபந்தனையும் சுயேச்சாதிகாரம் பெற்ற எந்த ராஜாங்கமும் ஒப்புக் கொள்ளக் கூடியவையல்ல. பிரிட்டிஷ் அந்திய விஷய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் கிரே, வியன்னாவிலிருந்த பிரிட்டிஷ் தூதருக்கு ஜூலை 24-ந் தேதி அனுப்பிய தந்தியில் இவ்வாறு சொல்லி

* ஹேக் என்பது ஹாலண்ட் தேசத்திலுள்ளஒரு முக்கிய ஸ்தலம். அங்கு வல்லரசுகளின் பிரதிநிதிகள் கூடி, தங்கள் ராஜாங்கங்களுக்குள் நேரிடும் தகராறுகளை அங்குள்ள கோர்ட்டுக்கு அறிவிக்க, அந்தக் கோர்ட்டு அவைகளைத் தீர்மானிக்கும்.

யிருக்கிறார்:— "ஆஸ்டிரிய இளவரசர் கொலை யுண்ட சம்பவமும், இறுதிக் கடிதத்தில் லெர்வியாவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களும் ஆஸ்டிரியாவினிடத்தில் இயல்பாகவே அனுதாபத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. ஆயினும், ஒரு ராஜாங்கம் மற்றொரு சுயேச்சை பெற்ற ராஜாங்கத்துக்கு அவ்வளவு கடுமையான பத்திரமொன்றை அனுப்பி நான் பார்த்ததே கிடையாது. 5-வது பிரிவில் கேட்கப்பட்டிருக்கிற விஷயம் லெர்வியாவினுடைய சுயேச்சை பெற்ற ராஜாதிபத்தியத்துக்கு உற்றதென்று சொல்வது சாத்தியமல்ல," லார் எட்வர்ட் கிரே சொன்னதுபோல, ஆஸ்டிரியாவினிடத்தில் எல்லோரும் அனுதாபங் கொள்வது இயல்பே. ஆனல் லெர்விய கவர்ன்மெண்டு 5-வது நிபந்தனையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதும் இயல்பாய் எதிர்பார்க்க வேண்டியதுதான். ஸாரஜிவோவில் கொலை நடந்து அநேக தினங்களானபிறகு ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு இறுதிக் கடிதம் அனுப்பினர்கள். இடையிலிருந்த காலத்தில், ஆஸ்டிரிய கவர்ன்மெண்டின் மனநிலை கலவரப்பட்டதாகத் தோன்றவில்லை

தேசம்.	தேசாதிபதி.	அதிகாரத்துக்கு வந்த காலம்.	தலைநகரம்.
கிரேட் பிரிட்டன்	5-வ ஜார்ஜ்	1910	லண்டன்
ஜெர்மனி	2-வது வில்லியம்	1888	பெர்லின்
ருஷியா	2-வது நிகலஸ்	1894	ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க்
பிரான்ஸ்	பிரஸிடெண்ட் பாய்ன்கேர்	1913	பாரிஸ்
ஆஸ்டிரிய-ஹங்கேரி	பிரான்ஸிஸ் ஜோஸப்	1848	வியன்னு
இடாலி	3-வது இமானுவல்	1900	ரோம்
பெல்ஜியம்	ஆல்பர்ட்	1909	ப்ருஸல்ஸ்
ஸெர்வியா	பீட்டர்	1903	பெல்கிரேட்

அக்கொலே சம்பந்தமாய் ஸாலிவோவில் விசாரணே நடந்து வந்த தால், அதன் முடிவை எல்லா கவர்ன்மெண்ட்டுகளும் ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டைப்போலவே, எதிர் பார்த்திருந்தார்கள். ஆகையால், ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு முதலில் ஸெர்வியாவின் மீது ஏற்படக்கூடிய குற்றங்களே எல்லா விவரங்களுடன் பயிரங்கமாய் வெளியிட்டு, பிறகு தேவையான நடவடிக்கைகளேத் தொடங்குவார்களென்று வல்லரசுகள் நினைத்தார்கள். ஆஸ்டிரியா அவ்வாறு செய்யாமல், ஸாலிவோவில் நீதி விசாரணேயை இரகஸ்ய மாய் நடத்தி, திடீரென்று இறுதிக் கடிதம் அனுப்பிவிட்டது. ஸெர்விய கவர்ன்மெண்ட்டு ஸாலிவோவில் வெளியான விவரங்களே வைத்துக்கொண்டு,சொந்தமாகத்தங்கள் தேசத்தில்விசாரணேநடத்தி உண்மையான விஷயங்களே அறிந்துகொள்ள வேண்டியது அவசிய மாகும். ஆனல் ஸெர்விய கவர்ன்மெண்ட்டு ஸாலிவோவில் நடந்த விசாரணேயின் விவரங்களே எதிர் பார்த்திருந்தது வீணுகிவிட்டது. லண்டனிலுள்ள ஸெர்வியமந்திரி பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டுக்கு ஸாலிவோ கொலேயாளிகளேப்பற்றி இவ்வாறுஅறிவித்தார்:—"ஆஸ்டிரிய இளவரசைக்கொன்ற கொலேயாளிகள் பாஸ்னியாவிலுள்ள ஆஸ்டிரியப் பிரஜைகள். அவர்களில்ஒருவன்ஸெர்வியதேசத்துக்குள் வந்தபோது ஸெர்விய அதிகாரிகள் அவனே அபாயகரமான பேர்வழி யென்று நினைத்து அப்புறப்படுத்த விரும்பினர்கள். அவனேப்பற்றி ஆஸ்டிரிய அதிகாரிகளே விசாரித்தபோது அவன்மீது யாதொரு சந்தேகமும் குற்றமுமில்லே யென்று அவர்கள் அறிவித்தார்கள்." ஆகையால், கொலே சம்பவத்தைப் பற்றி மாறுபாடான அபிப்பிரா யங்களிருக்கும்போது, ஸெர்விய கவர்ன்மெண்ட்டு தங்களுக்கு அனுப்பப்பட்ட இறுதிக் கடிதத்துக்கு அறிவித்த பதில் மிதமா யிருந்ததென்றே சொல்ல வேண்டும்.

ஆஸ்டிரியாவின் உள்நோக்கம்

ஸெர்விய கவர்ன்மெண்ட்டு அனுப்பிய பதில் திருப்திகரமா யில்லே என்று ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு சொன்னர்கள். ஆஸ்டிரி யப் பிரஜைகளாயுள்ள ஸ்லாவ்களின் விஷயத்தில், இனிமேல் ஸெர் வியப்பிரஜைகள் எவ்விதமாயும் பிரவேசிக்காம லிருப்பதற்கு ஸெர் வியகவர்ன்மெண்ட்டு போதுமானபொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லே என்றும், தற்காலத்துக்கு அந்த நிபந்தனேகளுக்கு சம்மதங்கொடுத்

தார்களே பொழிய, அவைகளின்படி பிற்காலத்தில் நடப்பதாகஸொர் வேருக்கு எண்ணமில்லை யென்றும், ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு நினைத்து அதிருப்திகொண்டார்கள். கொடுமைகளைச் செய்வதாக நோக்கங் கொண்ட சங்க ஸ்தாபனங்களைக் கலைத்து அம்மாதிரி யான செய்கைகள் இனி நடைபெறுவதைத்தடுப்பதாக ஸெர்வியகவர் ன்மெண்ட்டு உறுதி கொடுத்தார்கள். ஆனல் தங்களுடைய ராஜாங் கக் கொள்கைகளையும் ஜாதிய நோக்கங்களையும் அன்னிய அரசர்க ளின் விருப்பத்திற் கேற்றபடி மாற்றிக்கொள்வது முடியாதென்று சொன்னர்கள். சுயஆட்சி பெற்ற ஒரு ராஜாங்கம் பொதுஜனங்களுக் குள் நியாயமாய்த் தோன்றியிருக்கிற ஜாதிய அபிமானத்தையும் ஒற் றுணர்ச்சியையும் அடக்கமுயன்றல் அது நிலைப்பதே அரிதாகிவிடும். ஒவ்வொரு ராஜாங்கமும் சில முக்கியமான லக்ஷியங்களை மேற் கொண்டு அவைகளை நிறைவேற்றுமாறு சரியான வழிகளில் விவகா ரங்களை நடத்திவருவதுபோல, ஸெர்விய கவர்ன்மெண்ட்டும் சில பிர தான நோக்கங்களைப் பின் பற்றுவதற்கு சுதந்தரம் பெற்றிருப் பதை இழந்து விடமுடியாது.

ஆகையால் ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டின்மீது விரோதத்தைத் தூண்டக்கூடிய கிளர்ச்சிகளை, ஸெர்வியாவில் தோன்றவிடாமல் காப் பதாக, ஸெர்வியகவர்ன்மெண்ட்டு உறுதிசொல்லியுங்கூட, ஆஸ்டிரியா அதிருப்தி கொண்டு யுத்தந் தொடங்கியதின் காரணம் என்ன? ஆஸ்டிரியாவின் உள் நோக்கத்தை அறியவேண்டியது அவசியமா யிற்று. முக்கியமாய்ருஷியா,ஸ்லாவ்அரசுகளுக்குள்முதன்மைபெற்று அவைகளைக் காத்துவருகிறபடியால் ஆஸ்டிரியாவின் முடிவான நோக்கம் என்னவென்பதை அறிய அது பாத்தியங்கொண்டிருக்கி றது. ருஷியாவின்மனநிலையை ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும்அறியாம லிருக்கவில்லை. ஆகையால் அவ் விரு தேசங்களும் ருஷியாவுக்குச் சமாதானஞ் சொல்லுவது அவசியமாயிற்று. ஸெர்வியாவுக்குச் சொந் தமாயுள்ள பிரதேசங்களை வசப்படுத்திக்கொள்ளத் தனக்கு உத் தேசமில்லையென்று ஆஸ்டிரியா அறிவித்தது. ஜெர்மனியும் அவ் வாறே சொல்லி, ஆஸ்டிரியாவின் நோக்கம் இன்ன தென்று வெளி யிடப்பட்ட பிறகு, ருஷியா அவ்விவகாரத்தில் பிரவேசிப்பது நியாயமில்லை என்று அறிவித்தது. ஆனல் ருஷியா அவ்வளவு எளிதாய் ஏமாந்துபோகக்கூடியதல்ல.



பெல்ஜிய அரசர்
முதலாவது ஆல்பர்ட்



ஜப்பான் சக்ரவர்த்தி—யோஷி ஹீட்டோ



பிரஞ்சு பிரஸிடன்ட்—
ரேமன்ட் பாய்ன்கேர்.



செர்விய அரசர்—முதலாவது பீட்டர்



ஆஸ்டிரிய ஹங்கேரி சக்கரவர்த்தி—
பிரான்ஸிஸ் ஜோசப்.

ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டுகொடுத்த உறுதிமொழி எவ்வாறு இருந்தது ? லைர்வியதேசத்தின்பூரணத்தைக்குறைப்பதில்லைஎன்று உறுதி சொன்னபோதிலும், லைர்விய ராஜாதிபத்தியத்தின் சுயேச்சைக்குக் கேடுவராமலிருக்குமென்று ஆஸ்டிரியகவர்ன்மெண்ட்டுஅறிவிக்காம லிருந்துவிட்டதை, ருஷியா குறிப்பிட்டது. பாரிஸிலிருந்த பிரிட்டிஷ்தூதர்,லர் எட்வர்ட் கிரேக்கு* ஜூலை 28-ந்தேதிஅனுப்பிய தந்தியில் இவ்வாறு சொல்லுகிறார்: —"லைர்வியாவின் பூரணத்தை ஆஸ்டிரியா மதிக்குமென்று (அங்குள்ள) ஜெர்மன்தூதர்சொல்லியிருக்கிறார். ஆனால் லைர்வியாவின் சுயேச்சாதிகாரம் மதிக்கப்படுமாவென்று கேட்கப்பட்டபோது அவர் யாதொரு உறுதியும் கூறவில்லை." லைர்விய ராஜாதிபத்தியத்தின் சுயேச்சையைக் கெடுப்பதில்லையென்று ஆஸ்டிரியா உறுதிகொடுத்தபோதிலும், அதுமாத்திரம் பயன்படாது. லர் எட்வர்ட் கிரே தாம் லண்டனிலுள்ள ஆஸ்டிரிய தூதருடன் ஜூலை 29-தேதி பேசியதைப்பற்றி இவ்வாறு சொல்லுகிறார். "பிரதேசங்களைப் பற்றிக்கொள்ளும் எண்ணம் ஆஸ்டிரியாவுக்கு இல்லையென்றும், அது தன் சொந்த நன்மையைக் காத்துக் கொள்ளத்தான் விரும்புகிறதென்றும் (ஆஸ்டிரிய தூதர்) சொன்னார். லைர்வியாவின் சுயேச்சாதிகாரத்தில் பிரவேசிக்காமலும், பூமிகளைக்கைப்பற்றாமலும் இருந்தாலுங்கூட, அதைச் சார்பு (Vassal) நாடாக அடக்கிவிடச் சாத்தியப்படுமென்று நான் சொன்னேன். நான் சொன்னதை அவர் கண்டித்தார். ஆஸ்டிரியாவின் நடவடிக்கையால் பால்கன்நாடுகளில் ருஷியாவின் நிலைமை பாதகப்படுமென்று சொல்லிப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அவர், பால்கன் யுத்தத்துக்கு ‡ முன்னால் லைர்வியதேசம் ஆஸ்டிரியாவின் செல்வாக்குக்கு எப்போதும் உட்பட்டிருந்ததென்று சொன்னார்." ஆஸ்டிரியதூதர் கடைசியாய்ச் சொன்ன வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை; ஆஸ்டிரியாவின் மனதில் இரகஸியமாய்ப் பூட்டி வைக்கப்பட்ட எண்ணங்களை அறிவதற்கு அதுவே திறவுகோலாகும். சிலவருஷங்களுக்குமுன் பால்கன் நாடுகளில் ஆஸ்டிரியா தன் செல்வாக்கைப் பரவச் செய்து பிறகு இழந்துவிட்டதைப்பற்றி

* அவர் பிரிட்டிஷ் அந்நிய மந்திரி அதாவது அன்னிய அரசுகளுடன் விவகாரங்கள் நடத்துகிற மந்திரி.

‡ 1912-ம் வருஷம் பால்கன் நாடுகளும் துருக்கியும் செய்த யுத்தத்தைக் குறிப்பிடுகிறது.

ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். ருஷியாவின் அதிகாரம் பால்கன் நாடுகளில் வேரூன்றிவிட்டதை அடியோடு அறுக்கவேண்டுமென்பதே இப்போது ஆஸ்டிரியாவின் முக்கியமான நோக்கம். ஆகையால், லெர்வியாவில் ஆஸ்டிரியாவின் ராணுவ நடவடிக்கைகள் எவ்விதமாயிருக்குமென்றும் எம்மாதிரியாய் முடிவடையுமென்றும், தெளிவாய் அறிவிக்கப்படாத வரையில், ருஷியா வலுவான சக்தேகங் கொண்டது.

ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் கொண்டிருந்த முக்கிய நோக்கம் என்னவென்றால் இந்த சமயத்தில் ருஷியாவின் செல்வாக்கை அடியோடு அழித்துவிடவேண்டும், அல்லது ராணுவ பலத்தால் லெர்வியாவைத் தண்டிப்பதற்கு ருஷியா சம்மதங்காட்டித் தாழ்ந்து போகவேண்டும். மேலும் அநேக லெர்விய தேசாபிமானிகள் ஆஸ்டிரியாவின் கீழுள்ள ஸ்லாவ் ஜனங்களின் மனதைக் கலைத்து, அவர்களுக்குள் சுதந்தரப் பிரியத்தையும் ஜாதியபிமானத்தையும் கிளப்புவதற்கு விஸ்தாரமான ஏற்பாடுகள் செய்துவர, அதற்கு லெர்விய கவர்ன்மெண்ட்டு உடந்தையாயிருக்கிறார்களென்று ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு தவறுகவோ சரியாகவோ நம்பினார்கள். ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் இனி நிலைத்திருப்பதற்கு லெர்வியாவை. யுத்தத்தில் முறியடித்தே தீரவேண்டு மென்று நினைத்தார்கள்.

ருஷியாவின் அக்கரை.

ஆஸ்டிரியாவின் நோக்கத்துக்கு நேர்மாறாய் ருஷியாவின் மனநிலையிருந்தது. லெர்வியாவை முற்றிலும் பணியச்செய்யவேண்டுமென்று ஆஸ்டிரியா கொண்டிருந்த நோக்கத்தை அழிக்க ருஷியா தீர்மானித்தது. ஆனால் ஆஸ்டிரியா, லெர்வியாவின்மீது ராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதைப்பற்றி எவரும் ஆக்ஷேபிக்கவில்லை யென்பதைக் கவனிக்கவேண்டும். ருஷியாவும் மற்ற வல்லரசுகளைப்போலவே அதற்கு ஆக்ஷேபியாமலிருந்தது; ஆனால் அந்த ராணுவ நடவடிக்கைகள் எவ்விதமாயிருக்குமென்றும் எம்மாதிரியாய் முடிவு பெறுமென்றும் முன்னதாகவே தெரிவிக்கப்படாமலிருப்பதை ருஷியா ஆக்ஷேபித்தது. அவைகளை முன்னதாக அறியவேண்டியது அவசியமென்று ருஷியா நினைத்தது. ருஷியா, ஸ்லாவ் ராஜ்யங்களுள் முதன்மை பெற்று அவைகளைக் காத்துவரும் கடமையை மேற்கொண்டிருக்கிறது. லெர்வியாவைக் காக்கவேண்டு

மென்று ஐரோப்பாவில் கோடிக்கணக்காயுள்ள ஸ்லாவ் ஜனங்கள் மிகுந்த உணர்ச்சி காட்டினார்கள். ஆகையால் ருஷியா, ஸெர்வியாவின் சுயேச்சாதிகாரத்தைக் காப்பதோடு, ஸ்லாவ் நாடுகளுள் மதிக்கப்பட்ட தன் செல்வாக்கைத் தாங்கவேண்டுமென்று நினைத்தது. கடைசியாக, பால்கன் நாடுகளில் ஆஸ்டிரியாவின் அதிகாரம் பரவுவதற்கு ருஷியா இடங்கொடுத்து தன் செல்வாக்கை இழந்துவிடச் சிறிதும் சம்மதிக்கவில்லை. ஆகையால், ஆஸ்டிரியாவின் முடிவான நேரக்கங்களைப்பற்றி ருஷியா தனக்கிருந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பிற்று. ஆனால் அதற்கு ஆஸ்டிரியா இடங்கொடுக்கவில்லை. ஆஸ்டிரியா, ஸெர்வியாவுக்கு இறுதிக்கடிதம் அனுப்பி 48 மணி நேரத்துக்குள் அதற்குப் பதில் வரவேண்டுமென்று கேட்டதோடு, அந்த பதில் கிடைத்ததும் அது திருப்திகரமாயில்லையென்று சொல்லி, ஸெர்வியத் தலைநகரிலிருந்த ஆஸ்டிரியத் தூதரை அதை விட்டு வந்துவிடும்படி உத்தரவு செய்தது. ஆகையால் ருஷியா, தன்னுடைய சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள சவகாசம் கொடுக்கப் படாதபோது, அது ஸெர்வியயுத்தத்தில் பிரவேசிக்கும்படி நேரிடுமென்று வல்லரசுகளுக்கு அறிவித்தது.

ருஷியாவை விலக்கி வைக்க ஜெர்மனி செய்த முயற்சி.

ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் நிலைக்க வேண்டு மென்று கவலை கொண்ட ஜெர்மனி, ருஷியாவைப் பிரவேசிக்கவிடக் கூடாதென்று தீர்மானித்தது. ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம், ஜனங்களின் கலகங்களைத் தாங்கமுடியாமல் வீழ்ந்துபோனால், அதிலுள்ள பெரும் பாகத்தினராகிய ஸ்லாவ்கள் ருஷியாவுடன் சேர்ந்து அதன் பலத்தை அதிகரித்துவிடுவார்கள்; அது ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கு அபாயகரமான தென்று எண்ணி ஜெர்மன் சக்கரவர்த்தி ஆஸ்டிரியாவை முற்றிலும் ஆதரிப்பதாக நிச்சயித்தார். அவர் மேலும் உடன்படிக்கையின்படி அவ்வாறு செய்யக் கட்டுப்பட்டிருக்கிறார்.

ஆயினும் ஆஸ்டிரியாவும் ஸெர்வியாவும் செய்துவந்த யுத்தத்தில் வேறொந்த வல்லரசும் சேராமலிருக்கும்படி ஜெர்மனி முதலில் முயற்சி செய்தது. ஆகையால் ஸெர்விய தேசத்தின் பூரணத்தைக் காப்பதாக ஆஸ்டிரிய கவர்ன்மெண்டுஉறுதிசொன்னபிறகு, ருஷியா பிரவேசிப்பது அனவசியமென்று ஜெர்மனி அறிவித்தது. ஆனால்

ஆஸ்டிரியா, அந்த ஸ்லாவ் தேசமாகிய ஸெர்வியாவின் வன்மையை வதித்துத் தன் செல்வாக்கை ஸ்தாபிக்கக் கூடுமாகையால், ருஷிய கவர்ன்மெண்ட்டு சும்மா இருப்பதாக உத்தேசிக்கவில்லை. ஆயினும் ருஷிய ஜனங்களின் உணர்ச்சிகளே ஜெர்மனி லக்ஷியஞ் செய்பவில்லை. ஸெர்வியரின் யுத்தத்தில் ருஷியா பிரவேசிக்குமானால், ஆஸ்டிரியா வுடன் தாங்கள் சேர்ந்து கொள்வதாக ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு அறி வித்தார்கள். ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டின் நடவடிக்கை நியாயமான தென்றும் அவர்களின் நியாயத்தை ராணுவபலத்தால் ஆதரிக்க உடன் படிக்கையின்படி தாங்கள் கட்டுப்பட் டிருக்கிறார்களென்றும் ஜெர் மன் கவர்ன்மெண்ட்டு அறிவித்தார்கள். ருஷியா இப்போது யுத்தஞ் செய்யஆயத்தமாயில்லையென்றும், ஆறுவருஷங்களுக்குமுன் அதைப் பயமுறுத்தினாற்போல இப்போதும் செய்யலாமென்றும்ஜெர்மன் சக்ர வர்த்தி நினைத்திருப்பாரானால் அவர் மூற்றிலும் ஏமாற்ற மடைந் திருப்பரென்பதில் சந்தேகமில்லை. ருஷிய கவர்ன்மெண்ட்டு ஜெர் மனியின் நோக்கத்தை சிக்கிரத்தில் அறிந்துகொண்டார்கள்.

உடனே ருஷிய கவர்ன்மெண்ட்டு தங்களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட பிரஞ்சு கவர்ன்மெண்ட்டின் அபிப்பிராயத்தைக் கேட்க, தங்களே ஆதரிக்க பிரஞ்சு கவர்ன்மெண்ட்டு தயாராயிருந்தார் கள் என்று வெளிப்பட்டது. ஜெர்மன் சக்கரவர்த்தி, ஸெர்வியரின் யுத்தத்தில் எந்தவல்லரசும் பிரவேசிக்கக்கூடாதென்று செய்த முயற்சி பயனபடாதென்பதை எளிதில் அறிந்துகொண்டார். பிரான்ஸை யும் ருஷியாவையும் எதிர்ப்பதற்கு ஜெர்மன் சக்கரவர்த்தி தயாரா யிருந்தபோதிலும் பிரிட்டிஷார் அவைகளுடன் சேர்ந்துகொண்டால் அது யோசனைக்கிடமானதென்று உணர்ந்தார். ஆகையால் ஜெர் மன் சக்கரவர்த்தி யுத்தஞ்செய்யத் தயாரா யிருந்தாலும், அவ்வாறு செய்வதாக அவர் இன்னும் நிச்சயிக்கவில்லை. அவ்வாறு வல்லரசு களுக்குள் யோசனையும் தௌத்தியப் பேச்சுகளும் நடந்துகொண் டிருந்தனவே யொழிய, அதுவரையில் ஆஸ்டிரியாவும் ஸெர்வியாவுந் தவிர வேறெந்தத்தேசமும் யுத்த நிலைமையிலில்லை என்பதை அறிய வேண்டும். அதினுங்கூட, ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு தங்களுடைய தூதரை ஸெர்பீத் தலைநகரைவிட்டு வந்து விடும்படி உத்தரவு செய்தார்களே யொழிய யுத்தம் தொடங்காமலிருந்தார்கள்.

25-ந் தேதி யன்று ஜெர்மனியின் உத்தேசத்தைப் பற்றி ருஷிய மந்திரி தம் அபிப்பிராயத்தைச் சொன்னார். ருஷியா இந்த யுத்

தத்தில் கலப்பதாக அறிவித்தபடியால் அதோடு சேரக்கூடிய நேசர்கள் இன்னுஞ்சென்று அறிவது அச் சமயம் ஜெர்மனியின் நோக்கமாயிருந்தது. அச்சமயத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு தங்களுடைய உறுதியான எண்ணத்தை உடனே வெளியிட வேண்டியதின் அவசியத்தை ருஷிய மந்திரி எடுத்துச்சொன்னார். ஜெர்மனியின் எதிர்க் கஷியில் உறுதியாய் நிற்பதாக பிரிட்டிஷார் அறிவித்தால் யுத்தம் நடைபெறுமலே யிருக்குமென்றும், அவ்வாறு பிரிட்டிஷார் செய்யத் தவறினால் ஐரோப்பா முழுவதிலும் உதிரவெள்ளம் பெருகி, யுத்தமத்தியில் பிரிட்டிஷ் தேசமும் நிச்சயமாய் இழுக்கப்படுமென்றும் ருஷிய மந்திரி பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டுக்கு அறிவித்தார்.

பிரிட்டிஷாரின் நோக்கம்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு பால்கன் விவகாரத்தில் அதிக அக்கரைகொண்டிருக்க வில்லையாகையால், அதில் பிரவேசித்து யுத்தஞ் செய்வதாக அறிவிக்க முடியாதென்றும் அவ்வாறு அறிவிப்பதால் சமாதான நிலைமைக்கு இன்னும் சீக்கிரமாய்க் கெடுதி நேரிடுமென்றும், ருஷிய கவர்ன்மெண்டுக்கு அறிவித்தார்கள். ஆயினும் தௌத்திய மூலமாய் ருஷிய கவர்ன்மெண்ட்டை ஆதரித்து சமாதானம்நிலைக்கச்செய்யவேண்டியது அவசியமென்று பிரிட்டிஷ்கவர்ன்மெண்ட்டு நிணைத்தார்கள். ருஷியாவுக்கும் ஆஸ்டிரியாவுக்குமுள்ள தகராறுகள் ஒவ்வொரு நிமிஷமும் பலப்பட்டுவந்ததை பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் அறிந்தார்கள். ருஷியாவுக்குத் தகுந்த சமாதானம் சொல்லாவிட்டால், ருஷியா யுத்தம் தொடங்குமென்றும், அதனால் மற்றவல்லரசுகள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து ஐரோப்பா முழுவதையும் பெரிய ரணகளமாகச் செய்துவிடுவார்களென்றும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குத் தெளிவாய்ப்புலப்பட்டது. பிரிட்டிஷ்கவர்ன்மெண்ட்டு பால்கன் விவகாரங்களில் நேராக அக்கரை கொள்ளாவிட்டாலும், அவைகளின் பயனாக ஐரோப்பாவின் சமாதான நிலைமை கெட்டுப்போனால் அவர்களுடைய நிலைமையும் பாதகப்படும். ருஷியா யுத்தஞ் செய்ய ஆரம்பித்தால் அதோடி உடன்படிக்கையால் கட்டுப்பட்டபிரான்ஸும் யுத்தந் தொடங்கும். பிரான்ஸ் அந்த யுத்தத்தின் முடிவில் அழிந்துபோனால், பிரிட்டிஷாருடைய நிலைமை பலஹீனமடையும். ஆகையால், பால்கன் விவகாரங்கள் வரவர ஐரோப்பிய விவகாரங்களாக மாறிவிட்டால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு அவைகளில் பிர

வேசியாமல் விலகி நிற்க முடியாது. ஆகையால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு, ஆரம்பத்தில் தொடத்துப் பேச்சுகள் மூலமாய் லெர்வீய யுத்தம் லெர்வியாவைக் கடந்து வேறெங்கும்பரவாமல் காக்க முயன்றார்கள். ஜெர்மனியும் ஆரம்பத்தில் இதே நோக்கங்கொண்டு முயற்சி செய்தபோது, ருஷியாவின் விருப்பங்களைப் பொருட் படுத்தாமையால் அது சாத்தியமில்லாமற் போயிற்று. இப்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு, ஆஸ்டிரியாவின் இறுதிக் கடிதத்திலுள்ள விஷயங்களையும், அவைகளால் ருஷியாவின் நிலைமை எவ்வாறு பாதிக்கப்படுமென்பதையும் வல்லரசுகள் ஒரு கான்பரன்ஸ் கூடி ஆலோசனை செய்ய வேண்டுமென்று நினைத்தார்கள். ருஷியா தன் தகராறுகளைப்பற்றி வல்லரசுப் பிரதிநிதிகள் ஆலோசனை செய்வதற்குச் சம்மதித்தது. அந்த கான்பரன்ஸ் கூட்டம் ஏற்பாட்டுக்கு ருஷியாவை இணங்கும்படி செய்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு முயன்றார்கள்; அதுபோல, ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு ஆஸ்டிரியாவைச் சம்மதிக்கச் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு பிரிட்டிஷார் அறிவித்தார்கள்.

சமாதான முயற்சிகள்.

வல்லரசுகளின் பிரதிநிதிகளடங்கிய கான்பரன்ஸ் லண்டனில் கூடி, லெர்வீய யுத்தத்தைப் பெரிதாய்ப் பரவ விடாமல் தடுத்து, ஆஸ்டிரியாவுக்கும் ருஷியாவுக்குமுள்ள மனஸ்தாபங்களை நிவர்த்தி செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் மந்திரி 26-ந்தேதி மற்ற வல்லரசுகளுக்கு அறிவித்தார். பிரான்ஸும் இடாலியும் சம்மதித்தன. ஜெர்மனி மாத்திரம் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் பிரிட்டிஷ்கவர்ன்மெண்ட்டுக்கு யுத்தஞ்செய்ய மனமில்லை என்று ஜெர்மனி தவறாய் எண்ணி, அந்த கான்பரன்ஸினால் யாதொரு பலனும் உண்டாகாதென்று சாக்குகள்சொல்லி, ஆஸ்டிரியாவும் ருஷியாவும் நேராகப் பேச்சுகள் நடத்தி அதன் பலனை எதிர்பார்த்திருப்பது நலமென்று 27-ந்தேதி ஜெர்மனி பதில் தெரிவித்தது. ருஷியா அன்றுதினமே அவ்வாறு பேச்சுகள் நடத்தச் சம்மதித்தது. ஆனால், ஜெர்மனிக்குத் தெரிந்தோ தெரியாமலோ, ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு ருஷிய கவர்ன்மெண்ட்டுடன் நேராகப் பேச்சுகள் நடத்த மறுதினம் (28-ந்தேதி) மறுத்து விட்டார்கள்.

யுத்த முயற்சிகள்.

அன்றுதினமே (28-ந்தேதி) ஆஸ்டிரியகவர்ன்மெண்ட்டு லெர்வியாவின் மீது யுத்தம் தொடர்ந்தார்கள். யுத்தந் தொடர்ந்தபிறகு ஆஸ்டிரியாவுடன் ருஷியா எவ்வாறு பேச்சுகள் நடத்துவது? உடனே (29-ந்தேதி) ருஷியா, ஆஸ்டிரியஎல்லையிலுள்ளதன்னுடைய சேனையை யுத்தத்தக்குச் சேர்க்க ஆரம்பித்தது. பிரான்ஸும் யுத்த முயற்சிகள் செய்யத் தீர்மானித்தது; அச்சமயம் பிரஞ்சு மந்திரி பிரிட்டிஷாருடைய முடிவான எண்ணத்தை அறிய விரும்பினர்.

பிரிட்டிஷ் அந்திய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் கிரே மற்ற தேசத்து மந்திரிகளைப் போல் அக்காட்டு விவகாரங்களை நடத்துவதற்கில்லை. அதிலும் ஐரோப்பிய யுத்தத்தைப்போன்ற பிரமாதமான காரியத்தில் அவர் பிரிட்டிஷ்ஜன அபிப்பிராயத்தை முன்னதாக அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும். மொராக்கோ விஷயமாய் ஏற்பட்ட தகராறில், பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு குடியேற்ற நாட்டு விஷயத்தில் விசேஷ அக்கறைகொண்டிருக்கிறபடியால் தாமதமின்றி பிரான்ஸுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். ஆனல் இப்போது ஐரோப்பாவில் நேரிட்டிருக்கிற விவகாரமோ ஆஸ்டிரியாவையும் லெர்வியாவையும் பற்றியது. ஒருக்கால் ஆஸ்டிரியாவும் ருஷியாவும் யுத்தஞ் செய்வதா யிருந்தாலும் பிரிட்டிஷார் அதில் பிரவர்த்திப்பதற்கு நியாயம் ஏற்படாது. பிரான்ஸுங்கூட அந்த யுத்தத்தில் இழுக்கப்பட்டால், அது ருஷியாவுடன் செய்துகொண்ட கட்டுப்பாட்டைக் காப்பதற்காக அவ்வாறு நேரிட்டதென்று பாவிக்கவேண்டும். அவ்வாறு நேரிடுகிற யுத்தத்தில் கலப்பதைப்பற்றி பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு யாதொரு உடன்படிக்கையாலும் கட்டுப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பிரான்ஸும், ருஷியாவும், லெர்வியா விஷயமாய் யுத்தத்துக்குக் கிளம்பினுல் அவைகளுடன் சேர்வதைப்பற்றி இனியோஜனைசெய்து தீர்மானிக்கவேண்டுமென்று பிரிட்டிஷ் மந்திரி 29-ந் தேதி பிரஞ்சு கவர்ன்மெண்ட்டுக்கு அறிவித்தார்.

ஆஸ்டிரியாவும் ருஷியாவும் நேராகப் பேச்சுகள் நடத்தவேண்டுமென்று ஜெர்மனி சொன்ன யோசனை சிறைவேறவில்லையாகையால், வல்லரசுகள்காண்பரன்ஸ்கூடியோ, மற்றெவ்விதமாயோ, சமாதானம் நிலைப்பதற்கு ஜெர்மனி எவ்வித பிரயத்தனஞ் செய்தாலும், தாம் ஆதரிப்பதாக பிரிட்டிஷ் அந்திய மந்திரி அறிவித்தார்.

பிரிட்டனுக்கு ஜெர்மனிசொன்ன யோஜனை.

அதற்குப் பதில் தெரிவிப்பதற்குமுன் ஜெர்மன் சக்கரவர்த்தி அன்றினமே யுத்த சபையைக் கூட்டினர். ஏனெனில், ருஷிய கவர்ன்மெண்ட்டு பிரான்ஸின் ஆதரவைப்பெற்றுத் தங்கள் நியாயத்தைக் கை விடுவதில்லை என்று தீர்மானித்து ஆஸ்டிரிய எல்லையில் சேனையைத் திரட்டியதை ஜெர்மனி அறிந்து கொண்டது. ருஷியா, பிரான்ஸ், ஆகிய இவ்விரு தேசங்களோடு யுத்தஞ் செய்ய ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு இச்சமயம் நிச்சயித்திருக்க வேண்டும். ஆனல், பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு தங்கள் தௌத்தியப்பேச்சுகளால் ருஷியரின் கட்சியைத்தாங்குவ தல்லாமல் ராணுவ பலத்தாலும் ஆதரிக்க முன்வருவார்களாளன்பதை இப்போதுஜெர்மனி அறியவிரும்பிற்று. உடனே (ஜூலை 29-ந் தேதி) ஜெர்மன் மந்திரி பிரிட்டிஷ் தூதரிடம் சில விஷயங்களைச் சொல்லி அவைகளுக்குப் பதில் தெரிய வேண்டுமென்று விரும்பினர். பிரிட்டிஷார் இனி நேரிடக் கூடிய யுத்தத்தில் கலக்காம லிருப்பதற்காக ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு அவர்களுக்குச் சில சாதகங்களைச் செய்யத் தயாராயிருப்பதாக ஜெர்மன் மந்திரி சொன்னர். பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு பிரான்ஸினுடைய வல்லமைக்குக் கெடுதி நேராமல் காக்க அதிக அக்கரை கொண்டிருக்கிறார்கள்; பிரிட்டிஷார் இந்த யுத்தத்தில் கலப்பதில்லை யென்று நிச்சயமாய் அறிவித்தால், பிரான்ஸ் தேசத்தின் எந்தப் பாகத்தையும் பற்றிக் கொள்ளும் நோக்கம் ஜெர்மனிக்கு இல்லை என்று உறுதிகூறுவதாக ஜெர்மன் மந்திரி சொன்னர்.

ஆனல் பிரிட்டிஷாருடைய பிரதான நோக்கம் அதைப் பற்றின தல்ல; யுத்தத்தால் பிரஞ்சு கடற்படை எவ்வாறு பாதிக்கப்படுமென்பதே அவர்களுடைய முக்கியகவலை. பிரான்ஸ் தேசத்துக் கடற்கரைகளைக் காப்பதில் பிரிட்டிஷார் பொறுப்பேற் றிருக்கிறார்கள். மத்தியதரைக் கடலை பிரஞ்சுகடற்படை காப்பதாக ஏற்றுக்கொண்டதின் பேரில் மற்றபாகங்களைக் காக்கும் பொறுப்பை பிரிட்டிஷார் ஏற்றிருக்கிறார்களென்றுமுன்பு சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் யுத்தத்தில் பிரஞ்சு குடியேற்ற நாடுகளைப் பிரஞ்சு கடற்படை காக்கவேண்டிவரும். அவ்விஷயத்தில் ஜெர்மன் கடற்படை பிரஞ்சு கடற்படையை எவ்வளவுதூரம் பலஹீனப்படுத்துமென்பதை பிரிட்டிஷார் அறியவேண்டியது அவசியமாயிற்று. மத்தியதரைக்கடலுக்கு

அருகிலுள்ள பிரஞ்சு குடியேற்ற நாடுகளை ஜெர்மனி வசப்படுத்திக் கொண்டால், அந்த முக்கியமான கடலில் பிரிட்டிஷாருடைய ஆதிக்கியம் குறையும். ஆகையால் பிரஞ்சு குடியேற்ற நாடுகள் விஷயமாக பிரிட்டிஷ்தூதர் ஜெர்மன் மந்திரியைக்கேட்க, அவைகளைப்பற்றி யாதொன்றும் உறுதியாய்ச் சொல்வதற்கில்லை யென்று ஜெர்மன் மந்திரி அறிவித்தார்.

பெல்ஜியத்தின் நடுநிலைமை.

பெல்ஜிய தேசம், ஐரோப்பிய யுத்தத்தில் கலக்காம லிருக்கக் கட்டுப்பட் டிருக்கிறது. அந்த சிறிய தேசத்தின் நடுநிலைமையைக் காப்பதைப்பற்றி ஜெர்மன் மந்திரி உறுதி கொடுக்க வில்லை.

மேலும் பெல்ஜியத்தின் நடுநிலைமையைக் காப்பதில் பிரிட்டிஷார் விசேஷ அக்கறைகொண் டிருக்கிறார்கள். கிரேட்பிரிட்டனுக்கு அருகில் பெல்ஜிய தேசம் மிகவும் முக்கியமான ஸ்தானத்தில் அமைந் திருக்கிறது. பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலிருக்கிறது. ஆகையால் தரைவழியாய் ஒரு தேசத்தி லிருந்து மற்ற தேசத்துக்கு வரவேண்டுமானால், சக்தியற்ற பெல்ஜிய தேசத்தில் புகுந்து எளி தாய் வந்து விடலாம். கடல்வழியாய்ச் சென்றால், பெல்ஜியத் துறைமுகங்களைப் பிடித்துக்கொண்டு உபயோகப் படுத்தலாம். யுத்தகாலத்தில் சத்துருவின் துறைமுகம் அருகில் இல்லாமலிருப் பது மிகவும் அவசியமானது. ஏனெனில் அருகிலிருக்கிற துறை முகத்தை ஆதாரஸ்தலமாகக்கொண்டு, அங்கிருந்து யுத்தகப்பல்கள் நிடீரென்று வெளியே வந்து தாக்கிப் பிறகு அதற்குள் பத்தோபஸ் தாய்ப் புகுந்துகொள்ளும். ஆகையால் பிரான்ஸும் ஜெர்மனியும் அவ்விஷயத்தில் அக்கரை கொண் டிருக்கிறது. தவிர, கிரேட் பிரிட்டனுக்கு மிகவும் அருகில் பெல்ஜியம் இருக்கிற தென்று சொன்னேம். பெல்ஜியத்திலுள்ள நல்ல துறைமுகங்களைச் சத்துரு வசப்படுத்திக்கொண்டால் கிரேட்பிரிட்டனுக்குக்கிட்ட இருந்துகொண்டு கப்பற்படையாலும் ஆகாயப் படையாலும் அதைத் தாக்கலாம். இந்தக் காரணங்களால் வல்லரசுகள் பெல்ஜி யத்துடன் எவ்வித உடன் படிக்கையும் பிரத்தியேகமாய்ச் செய்து கொள்ளக்கூடாதென்றும், அவைகளுக்குள் யுத்தம் மூண்டால் பெல்ஜியத்தில் தருப்புகளை அனுப்பக்கூடா தென்றும் எல்லா வல்லரசுகளும் சேர்ந்து அநேக வருஷங்களுக்குமுன்பு ஏற்பாடு செய்

திருந்தார்கள். அந்த வல்லரசுகளுள் ஜெர்மனியும் சேர்ந்தது என்று சொல்ல வேண்டியதில்லை.

பிரான்ஸின் நடவடிக்கையின் பேரில் பெல்ஜியத்தின் நடுநிலை மையைப்பற்றி நிச்சயிக்கவேண்டுமே யொழிய முன்னதாக ஏதுவும் உறுதியாய்ச் சொல்வதற்கில்லை யென்று ஜெர்மன் மந்திரி பதில் சொன்னார். ஜெர்மனி பெல்ஜியத்தின் நடு நிலைமையைக் காக்க உடன் படிக்கையால் கட்டுப்பட்ட திருந்தாலும் அவ்வாறு உறுதி கொடுக்க முடியாதென்று ஜெர்மன் மந்திரி அறிவித்தார். ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்குமுள்ள நேச சம்பந்தத்தைப்பற்றி அவர் கண்டிப்பாகச் சில வார்த்தைகள் சொன்னார். அவ்விரு தேசங்களின் நேச சம்பந்தம் முதிரவேண்டுமென்று அவர் மந்திரி ஸ்தானத்துக்கு வந்தது முதல் முயற்சி செய்ததாகவும், பிற்காலத்தில் அவ்விரு தேசங்களும் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு ஒற்றுமையாய் உழைக்கவேண்டுமென்று நினைத்திருப்பதாகவும். பிரிட்டிஷ் தூதருக்கு ஜெர்மன் மந்திரி அறிவித்தார்.

பிரிட்டிஷார் யுத்தத்தில் சுலக்காமலிருப்பதற்காக ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு சொன்ன யோசனைகள் பயன்படவில்லை. பிரஞ்சு குடியேற்ற நாடுகளையும் பெல்ஜியத்தின் நடுநிலைமையையும் காக்கமறுத்து விட்டபடியால் பிரிட்டிஷார் அந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளமுடியாதென்று 30-ந்தேதி அறிவித்தார்கள். பிரான்ஸ் தேசத்தில் எந்த பாகத்தையும் வசப்படுத்திக்கொள்வதில்லை யென்று ஜெர்மனி அறிவித்தாலும் வேறு வழிகளில் பிரான்ஸின் நிலைமையைக் கேவலமாகச் செய்துவிடக்கூடும். இப்படிப்பட்ட சமயத்தில் பிரிட்டிஷார் ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பிரான்ஸைக் கைவிட்டு ஒதுங்கி நிற்க உத்தேசிப்பது மானக்கேடான காரியமென்று ஸர் எட்வர்ட் கிரே பதில் சொன்னார். பெல்ஜியத்தின் நடு நிலைமையைக் காக்கவேண்டிய கடமையை ஜெர்மனியின் தாக்ஷண்யத்துக்காகக் கைவிட முடியாதென்றும், ஸர் எட்வர்ட் கிரே சொன்னார். பிரிட்டிஷார் தங்களை எவ்விதமாயும் முன்னதாகக் கட்டுப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை.

பிரிட்டிஷ் அந்நிய மந்திரி அவ்வாறு ஏற்க மறுத்ததோடு ஜெர்மன்கவர்ன்மெண்ட்டுக்கு ஒரு யோசனையும்சொன்னார். ஐரோப்பாவில் சமாதானம் நிலைக்கவேண்டுமென்று எல்லாரும் பொதுவாய்க்

கோருகிறார்கள். அவ்விஷயமாக கிரேட்பிரிட்டன் இதுவரையில் உழைத்துவந்ததுபோல இந்த நெருக்கடியான சமயத்திலும் அதே நோக்கத்தோடு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. சமாதானம் நிலைக்கவேண்டுமென்ற அக்கரையினால்தான், இப்போது கிளம்பியிருக்கிற ஐரோப்பிய விவகாரங்களில் அது பிரவேசிக்க நேரிட்டிருக்கிறது. ஆகையால் ஜெர்மனியும் அதே உணர்ச்சிகொண்டிருக்கிறதென்பதை அதன் நடவடிக்கையில் இச்சமயம் காட்டினால், இந்த நெருக்கடியான சமயம் தீர்ந்துவிட்ட பிறகு, பிரிட்டன் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு பிற்காலத்தில் ஒற்றுமையாய் உழைத்து வரலாமென்று லார் எட்வர்ட் கிரே யோசனை சொன்னர். பிற்காலத்தில் பிரிட்டன், ஓர் ஏற்பாடுசெய்து அதில் ஜெர்மனியையும் சேர்த்து, மற்ற வல்லரசுகளால் ஜெர்மனிக்குக் கெடுதி வராமல் காப்பதாக அவர் சொன்னர்.

கிரேட் பிரிட்டனுடைய நடுநிலைமை அவசியமென்று நினைத்தது. ஜெர்மனி விரும்பியிருந்தது உண்மையென்றாலும், ஐரோப்பாவில் சமாதானம் நிலைக்க வேண்டுமென்று அது அக்கரை கொள்ளவில்லை. ருஷியாவையும் பிரான்ஸையும் யுத்தகளத்தில் முறியடிக்க வேண்டுமென்று ஜெர்மனி நோக்கங்கொண்டு, அது சாதகமாய் முடிவதற்கு கிரேட் பிரிட்டனுடைய நடுநிலைமை அவசியமென்று நினைத்தது.

மறுபடியும் சமாதான முயற்சிகள்.

பிரஞ்சு குடியேற்ற நாடுகள் விஷயமாயும் பெல்ஜியத்தின் நடுநிலைமை விஷயமாயும் பிரிட்டிஷார் இந்த யுத்தத்தில் சேர்ந்துகொள்ளும்படி ஒருக்கால் நேரிடக்கூடுமென்று லார்எட்வர்ட் கிரே லண்டனிலுள்ள ஜெர்மன் தூதருக்கு 29-ந்தேதி அறிவித்த சமாசாரம் 30-ந்தேதி யன்று ஜெர்மன் கவர்ன்மெண்டுக்குக் கிடைத்திருக்க வேண்டும். ருஷியா, ஆஸ்டிரிய எல்லையிலுள்ள தன்சேனையை 29-ந் தேதியிலிருந்து யுத்தத்துக்குத் தயார் செய்துவந்து தனக்கும் ஆஸ்டிரியாவுக்குமுள்ள தகராறுகளை மத்தியஸ்தஞ்செய்ய, ஜெர்மனியைப் பிரவேசிக்கும்படி கேட்டது. சமாதான முயற்சிகளுக்கு ஆஸ்டிரியாவை இணங்கும்படி செய்யும் பொறுப்பை ஜெர்மனியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் வற்புறுத்தினர்கள். கான்பரன்ஸ் மூலமாகவோ வேறெந்த வழியிலோ ஜெர்மன் கவர்ன்மெண்டு முயற்சிசெய்யவேண்டுமென்று அந்தக் கவர்ன்

மெண்ட்டுக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு அறிவித்தார்கள். 30-ந் தேதியன்று ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு, தாங்கள் இளப்பிவிட்ட யுத்தம் பிரமாதமாய் வீளையும்போலிருந்ததைக்கண்டு ருஷியாவுடன் தளத்தியப் பேச்சுகள் நடத்த மறுபடி சம்மதித்தார்கள்.

மறுபடி யுத்த முயற்சிகள்.

ஆனல் அன்றினமே 30-ந்தேதி ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு ஏகாபத்திய சேனைமுழுவதையும் யுத்தத்துக்குத் தயாராயிருக்கும் படி உத்தரவுசெய்தார்கள். ஆஸ்டிரிய சேனை பெல்கிரேட் நகரத்தைப் பிரங்கிகளால் தகர்க்கவும்ஆரம்பித்தது. இவைகளைக்கண்டும், ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு இரகஸ்யமாய் யுத்தமுயற்சிகள் செய்கிறார்களென்று நினைத்தும், ருஷியகவர்ன்மெண்ட்டு 31-ந்தேதி தங்கள் ஏகாதிபத்தியத்திலுள்ள துருப்புகளை யெல்லாம் யுத்தத்துக்குத் தயார் செய்யும் படி உத்தரவு பிறப்பித்தார்கள். பிரான்ஸும் ஜெர்மனியும் யுத்த முயற்சிகள் செய்து வந்தாலும் தங்கள் சேனைகளுக்கு பஹிரங்கமான உத்தரவு இன்னும் பிறப்பிக்கவில்லை. ஆகையால் ருஷிய கவர்ன்மெண்ட்டின் ராணுவ உத்தரவைக் கண்டவுடன், ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு யுத்தஞ்செய்யத் தீர்மானித்தது. ஜெர்மனியில் யுத்தக் கிளர்ச்சி பலமாய்த் தோன்றியது. ஜெர்மன் சேனை சீக்கிரத்தில் யுத்தத்துக்குத் தயாராகு மென்பதில் எவரும் சந்தேகங் கொள்ளவில்லை.

இச்சமயம் பிரிட்டிஷார் பிரஞ்சு கட்சியில் நிச்சயமாய்ச் சேர்வதாக அறிவித்தால் யுத்தத்தைத் தவிர்க்கக் கூடுமென்று லண்டனிலுள்ள பிரஞ்சு தூதர், பிரிட்டிஷ் அங்கிய மந்திரிக்குச் சொன்னர். பிரிட்டிஷார் யுத்தத்தில் கலக்காமலிருப்பதற்கு ஜெர்மனி சில யோசனைகள் சொன்னதை பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு ஒப்புக்கொள்ள முன்பு மறுத்திருக்கிறதும் மறுபடியும் (31-ந்தேதி) ஜெர்மன் தூதரிடம் இங்கிலாந்து யுத்தத்தில் கலக்கும்படி கேரிடலாமென்று சொன்னதும் ஜெர்மன் கவர்ன்மெண்ட்டுக்கு நன்றூய்த் தெரிந்திருக்க வேண்டுமென்று ஸர் எட்வர்ட் க்ரே பதில் சொன்னர். பிரிட்டிஷாருடைய முடிவான தீர்மானத்தை பிரஞ்சு கவர்ன்மெண்ட்டு அறிய விரும்புகிறார்களென்றும், லண்டனிலுள்ள பிரஞ்சு தூதர் பிரிட்டிஷ்மந்திரிக்குச் சொன்னர். பிரிட்டிஷார் இந்த யுத்தத்தில் பிரான்ஸுடன் சேர்ந்துகொள்வதைப்பற்றியும் சேர்ந்து

கொள்ளாததைப்பற்றியும் பிரிட்டிஷ் மந்திரி சபை ஆலோசித்து இப்போது உறுதியாய் எதுவும் சொல்வதற்கில்லை என்று அச்சபை தீர்மானித்திருக்கிறதாக ஸர் எட்வர்ட்கிரே பிரஞ்சு கவர்ன்மெண்ட்டுக்கு (31-ந்தேதி) அறிவித்தார். ஜெர்மன் சேனை யுத்தத்துக்குத் தயாராகும்போ லிருந்ததால், பெல்ஜியத்தின் நடு நிலைமையைக் காப்பதாக யுத்தத்தில் சேர்ந்த கட்சிகள் உறுதி கூறவேண்டுமென்று ஸர் எட்வர்ட் கிரே அறிவித்தார்; அதற்கு பிரான்ஸ் அவ்வாறே காப்பதாக உறுதி சொல்லிற்று; ஜெர்மன் மந்திரி அதற்குப் பதில் சொல்லாமல் அதைப்பற்றி ஜெர்மன் சக்ரவர்த்தியுடன் யோசனை செய்யவேண்டுமென்றும் ஏதேனும் இச்சமயம் பதில் சொன்னால் ஜெர்மனியின் ராணுவயோசனைகள் வெளிப்பட்டு விடுமென்றும் பிரிட்டிஷ் தூதருக்கு அறிவித்தார். உண்மையில், ஸர் எட்வர்ட் கிரே பெல்ஜியத்தின் நடுநிலைமையைப்பற்றிக் கேட்டிருந்த சமாசாரம் பெர்லினுக்குவந்து சேர்வதற்கு முன்னால், ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு ருஷியாவுக்கும் பிரான்ஸுக்கும் இறுதிக் கடிதம் அனுப்பிவிட்டார்கள். ஆயினும் அச்சமயம் ஆஸ்டிரியாவுக்கும் ருஷியாவுக்கும் தௌத்தப் பேச்சுகள் நடந்துகொண்டிருந்தன வென்பதைக் கவனிக்கவேண்டும்; ஆகையால் ஜெர்மனியின் நடவடிக்கை அந்த பேச்சுகளுக்குப் பெருந்தடையாய் முடிந்தது. இன்னும் சமாதான முயற்சிகளை முற்றிலும் கைவிடவேண்டியதில்லை; அவ்வாறே ருஷிய சக்கரவர்த்தி அபிப்பிராயப்பட்டு, சைனியங்களை யுத்தத்துக்குத் திரட்டினாலும் சமாதான முயற்சிகளைக் கைவிடாமலிருக்கும்படி அவர் ஜெர்மன் சக்கரவர்த்திக்குத் தந்தி அனுப்பினர். ஜெர்மன் சக்கரவர்த்தி அவ்வாறு அபிப்பிராயப் படவில்லை.

ஜெர்மனி (31-ந்தேதி யன்று) ருஷியாவுக்கு அனுப்பிய இறுதிக் கடிதத்தில், 12 மணி நேரத்துக்குள் ஜெர்மன் எல்லையிலும் ஆஸ்டிரிய எல்லையிலும் யுத்தத்துக்குச் சேர்க்கப்பட்ட ருஷியப் படைகளைக் கலைத்துவிடவேண்டுமென்று கேட்டது. அதே நேரத்தில் ஜெர்மனி, பிரான்ஸுக்கும் இறுதிக் கடிதம் அனுப்பி, ஜெர்மானிய–ருஷிய யுத்தத்தில்* அது சேருமா சேராதா என்பதற்கு 18மணி நேரத்திற்குள் பதில் அறிவிக்கும்படி ஜெர்மனி கேட்டது. பிரான்

* "ஜெர்மானிய—ருஷிய யுத்தம்" என்றால் ஜெர்மனியும் ருஷியாவும் ஒன்றோடொன்று செய்கிற யுத்தம் என்று பொருள்படும்.

ஸும் ருஷியாவும் தங்கள் நன்மையைக் காப்பதற்காகயுத்தத்துக்குத் தயாராவதைத் தவிர இறுதிக் கடிதத்துக்கு வேறு பதில் அனுப்பச் சாத்தியமா யில்லை.

கடைசியான சமாதான முயற்சிகள்.

பெல்ஜியத்தின் நடு நிலைமையைப்பற்றி பிரிட்டிஷ் ஜனங்கள் பலமான உணர்ச்சி கொண்டிருக்கிறார்க ளாகையால் அது விஷய மாப் ஜெர்மனி உறுதிகொடுக்க வேண்டியது அவசியமா யிருக்கிற தென்று ஸர் எட்வர்ட் கிரே ஜெர்மன் தூதருக்கு மறுபடியும் 31-ந் தேதி வற்புறுத்தினர். பெல்ஜியத்தின் நடுநிலைமையை ஜெர்மனி கெடுக்காம லிருந்தால் பிரிட்டிஷார் யுத்தத்தில் கலக்காமலிருப்பார் களா என்று லண்டனிலிருந்த ஜெர்மன் தூதர் தம்முடைய கவர்ன் மெண்டின் உத்தரவு பெறுமல் தாமாகவே ஸர் எட்வர்ட் கிரேயை 31-ந் தேதி கேட்டார். அதற்கு ஸர் எட்வர்ட் கிரே, பிரஞ்சு குடியேற்ற நாடுகளைப்பற்றி ஜெர்மனி உறுதி கொடுக்காம லிருக்கும் போது, ஜெர்மன் தூதரின் யோசனையை ஏற்கமுடியா தென்று பதில் சொன்னர். பிறகு, பிரான்ஸுக்கும் பிரஞ்சு குடியேற்ற நாடுக ளுக்கும் கெடுதிவராமல் காப்பதாக ஜெர்மனி உறுதி கொடுத்தால், பிரிட்டிஷார் நடுநிலைமையை வகிப்பார்களா என்று யோசனை கேட் கப்பட்ட போதும், ஸர் எட்வர்ட் கிரே அதை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். ஏனெனில் பிரான்ஸ் தேசத்தின் பூரணத்தைக் குறைக்காமலே அதன் வன்மையை அழித்துவிடுதல் சாத்திய மாகும். மேலும், லண்டனிலிருந்த ஜெர்மன் தூதர் சொன்ன யோசனைக ளெல்லாம் ஜெர்மன் கவர்ன்மெண்டின் உத்தரவைப் பெறுமல் சொல்லப்பட்டன. மூன்று தினங்களுக்குப் பிறகு ஜெர்மன் கவர்ன்மெண்டு பெல்ஜியத்தின் நடுநிலைமையைக் காக்க முற்றிலும் மறுத்துவிட்டதைக் கவனிக்க வேண்டும். ஜெர் மன் கவர்ன்மெண்டின் யோசனைகள் சஞ்சலபடைந்து மாறிய தைக் குறிப்பிடவேண்டும்

ஸர் எட்வர்ட் கிரே, சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு, கடைசியாக ஒரு முயற்சிசெய்தார். பிரான்ஸ் தேசம் இந்த யுத்தத் தில் கலக்காமல் விலகிவிட்டால் அதனுடன் ஜெர்மனி யுத்தஞ் செய்யாமலிருக்குமா என்று அவர் ஜெர்மன் தூதரைக் கேட் டார். பிரான்ஸ் இந்த யுத்தத்தில் கலக்காவிட்டால் பிரிட்

டிஷார் யுத்தத்தில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்படாது. இந்த சமாசாரம் ஜெர்மன் சக்கரவர்த்திக்கு அனுப்பப்பட்டது. ஜெர்மானிய—ருஷிய யுத்தத்தில் பிரான்ஸ்தேசம் பிரவேசிக்காமலிருந்தால் அதன் மீது யுத்தஞ்செய்யாமலிருக்கத் தயாராயிருப்பதாக உடனே ஜெர்மன் சக்கரவர்த்தி பிரிட்டிஷ்அரசருக்கு அறிவித்து, பிரிட்டிஷாருடன் நேச சம்பந்தம் நிலைபெற்றிருக்கும்போல் தோன்றுவதைக் கண்டு தமக்கு முன்பிருந்த பெரிய கவலை நீங்கிற்றென்றும் சக்கரவர்த்திசொன்னார். ஆனால் அந்த விருப்பம் நிறைவேறவில்லை. ஏனெனில் பிரான்ஸ் ருஷியாவுடன் சேராமல் நடுநிலைமையிலிருப்பதைப் பற்றி, பிரிட்டிஷார் பிரான்ஸுடன் முன்னதாக ஆலோசனை செய்யவில்லை. அவ்வாறு நடுநிலைமையிலிருக்குப்படி பிரஞ்சு கவர்ன்மெண்ட்டைப் பலவந்தம் செய்யும் எண்ணமும் பிரிட்டிஷாருக் கில்லை.

பிரிட்டிஷார் யுத்தத்தில் கலக்க நிச்சயித்தல்.

1-ந் தேதி பிரான்ஸும் ஜெர்மனியும் தங்கள் சேனைகளை யுத்தத்துக்குத் தயாராகும்படி உத்தரவு செய்தன. ஆகஸ்ட் 2-ந் தேதி ஜெர்மன் சேனை லக்ஸம்பர்க் நாட்டுக்குள் பிரவேசித்து யுத்தந் தொடர்ந்தது. அன்று தினம் பிரிட்டிஷ் காபினட் அதாவது மந்திரி சபைகூடிற்று. ஜெர்மன் கடற்படை இங்கிலீஷ் கடலிலாவது வட கடலிலாவது வந்து பிரஞ்சு கடற்கரையையும் வியாபாரக் கப்பல்களையும் தாக்கினால், பிரிட்டிஷ் கடற்படை பிரான்ஸுக்கு உதவிசெய்யும் என்று ஸர்எட் வர்ட்கிரே, மந்திரி சபையின் தீர்மானத்தை பிரஞ்சுக் கவர்ன்மெண்ட்டுக்கு அறிவித்தார். 3-ந்தேதி யன்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட்கூட்டப்பட்டு, அச்சபைக்கு ஸர்எட்வர்ட்கிரே ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றியும் அதில் பிரிட்டிஷார் கலக்கும்படி நேரிடக் கூடியதைப்பற்றியும் அறிவித்தார். பிரிட்டிஷ்பார்லிமெண்ட்டிலுள்ள கக்ஷிகள் அனைவரும் கவர்ன்மெண்ட்டை ஆதரிக்கத் தயாராயிருந்தார்கள். 4-ந்தேதி ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு பெல்ஜியத்துக்கு இறுதிக் கடிதம் அனுப்பி ஜெர்மன் துருப்புகளை பெல்ஜியத்துக்குள் விடாவிட்டால் அவைகள் பலாத்காரமாய் நுழைந்து செல்லும் என்று அறிவித்தார்கள்.

ஆகஸ்டு 4-ந் தேதி யன்று பெல்ஜியத்தில் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்த உடனே, பெல்ஜிய அரசர் பிரிட்டிஷாரின் உதவியை

நாடினர். ஆகையால் 4-ந்தேதி யன்று பிரிட்டிஷ் மந்திரி மறுபடியும் பெல்ஜியத்தைப்பற்றி உறுதி கொடுக்கும்படி ஜெர்மன் கவர்ன்மெண்டைக் கேட்டார். ஜெர்மன் தூருப்புகள் பெல்ஜியத்துக்குள் நுழைந்தபிறகு, பிரிட்டிஷ் மந்திரி கேட்ட கேள்விக்குப் பின் வரும் நியாயத்தை ஜெர்மன் மந்திரி சொன்னர்:—"இப்போதுள்ள நிலைமையில் நமக்குத் தீராத அவசியம் நேர்ந்திருக்கிறது. அவ்வாறு நேர்ந்துவிட்டால் சட்டதிட்டமென்பது கிடையாது. லக்ஸம்பர்க், பெல்ஜியம் ஆகிய இவ் விரு தேசங்கள் நம்மைக் கண்டித்தது நியாயமானலும் நாம் கவனிக்காமலிருக்கும்படி நேர்ந்திருக்கிறது. அந்தப் பிசகு,—நான் வெளிப்படையாய்ப் பேசுகிறேன்—நாம் செய்துவந்தாலும் நம் முடைய ராணுவ நோக்கம் நிறைவேறியபிறகு ஈடு செய்துகொடுக்க முயல்வோம். நமக்கு ஆபத்து நேர்ந்திருப்பதுபோல வேறெவருக்கு நேர்ந்தாலும் அவர் தமக்குள்ள மிகச்சிறந்த உடைமைகளைக் காப்பதற்குச் சண்டைசெய்யும்போது ஒரேஒரு யோசனைதான் கொள்வார், அதாவது எவ்வாறு தம்வழியை உண்டுபண்ணிக்கொண்டு செல்வது." பெல்ஜியத்துக்குள் பிரவேசிக்கத் தீராத அவசியம் நேரிட்டுவிட்டதென்று ஜெர்மன் மந்திரி சொன்ன நியாயம் விளங்கவில்லை. அவ்வாறு தீராத அவசியம் நேரிடக்கூடுமென்றும் அதைமுன்னிட்டு எந்த வல்லரசும் அதில் பிரவேசிக்க முயல்வதைத் தடுக்கவேண்டுமென்றும் எண்ணியே, பெல்ஜியம் நடுநிலைமையிலிருக்கும்படி முன்னதாகவே உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

அதற்குள்ளாக, பிரான்ஸ், ஜெர்மனி, ருஷியா ஆஸ்டிரியா இவைகளுக்குள் யுத்தம் ஆரம்பமாகி, ஜெர்மன் தூருப்புகள் லக்ஸம்பர்க், பெல்ஜியம் ஆகிய நடுநிலைமையிலுள்ள அவ்விரண்டு நாடுகளின்மேல் படையெடுத்துவிட்டன. 4-ந்தேதியன்று இரவு 7-மணிக்கு ஜெர்மன் கவர்ன்மெண்டுக்கு இறுதிக் கடிதம் கொடுக்கும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பெர்லினிலுள்ள தங்கள் தூதருக்குத் தெரிவித்தார்கள். பெல்ஜியத்தின் நடுநிலைமையைப் பற்றித் திருப்திகரமான பதில் அன்றிரவு 12-மணிக்குள் கிடைக்காவிட்டால் பிரயாணச் சீட்டை வாங்கிக் கொள்ளும்படி பிரிட்டிஷ் தூதர் அறிவிக்கப்பட்டார்.

ஜெர்மானியர் காட்டின விரோத உணர்ச்சி.

பிரிட்டிஷாருடைய இறுதிக் கடிதத்தின் காலவரை முடிவதற்குள்ளாகவே பிரிட்டிஷார் யுத்தந்தொடங்கி விட்டதாக ஜெர்மன்

கவர்ன்மெண்ட்டு அறிவித்தார்கள். பிரிட்டிஷ் தூதர் பெர்லின் நகரத்தைவிட்டுப் புறப்படுவதற்குமுன் ஜெர்மன் முதன்மந்திரியைப்பார்க்கச் சென்றார். அப்போது ஜெர்மன் மந்திரி மிகுந்தகோபத்துடன் 20 நிமிஷம் பேசினர். பெல்ஜியத்தின் "நடுநிலைமை" என்ற ஒருவார்த்தைக்காக பிரிட்டிஷார் ஜெர்மனியுடன் யுத்தஞ்செய்து, இரண்டு தேசங்களும் நேச சம்பந்தத்தை நாடிச் செய்துவந்த காரியங்களை வீணுக்கி விட்டார்கள். யுத்தகாலங்களில் தீராத நிர்ப்பந்தம்நேரிட்டால் நடுநிலைமையைப் பற்றிய உடன்படிக்கைகளைச் சாதாரணமாய்க் கவனிப்பதில்லை; அப்படி யிருக்க அந்த உடன்படிக்கையைப் பிரிட்டிஷார் வெகுவாய்ப் பாராட்டி அந்தத் துண்டுக் காகிதத்துக்காக ஜெர்மானியரின் நேச சம்பந்தத்தைக் கெடுத்தார்கள். ஜெர்மனி இரண்டு பக்கங்களிலும் சத்துருக்களை எதிர்த்துக் கொண்டிருக்கிற போது, பின் பக்கமாய் வந்து குத்துவதுபோல் பிரிட்டிஷார் இப்போது செய்திருக்கிறார்கள். இவ்வாறு ஜெர்மன் மந்திரி பேசிய வார்த்தைகளுக்குப் பிரிட்டிஷ் தூதர் ஆக்ஷேபித்து, பெல்ஜியத்தில் பிரவேசிப்பது ஜெர்மனிக்குத் 'தீராத அவசியம்' நேரிட்டிருப்பது போல, முன்பு மனப்பூர்வமாய்ச் செய்த உடன்படிக்கையை ஆதரிப்பது பிரிட்டிஷாருடைய கௌரவத்துக்குத் 'தீராத அவசியமா' யிருக்கிறதென்று சொன்னர். பிரிட்டிஷாருடைய நடவடிக்கையைப் பற்றி ஜெர்மன் ஜனங்களும் அவ்வாறே தவறுப் நினைத்தார்கள். பெர்லின் நகரத்தில் பிரிட்டிஷ் தூதரின் இருப்பிடத்தில் ஜனங்கள் கோபங் கொண்டு அட்டகாசம் செய்தார்கள். சென்ற பத்து தினங்களாக ஜெர்மானியர், அந்நிய தேச விவகாரங்களை அறியாமலே, தங்கள் கவர்ன்மெண்ட்டில் முழு நம்பிக்கை வைத்துக் கடைசியாகச் சேனையில் சேர்ந்து யுத்தத்துக்குத் தயாராகும்படி உத்தரவிடப்பட்ட போது தங்களுடைய வழக்கமான வேலைகளைக் கைவிட்டு உற்சாகத்துடன் ஆயுதபாணிகளாய்க் கிளம்பினர்கள்; ராணுவ முயற்சிகளை ஓயாமல் எதிர்த்துவந்த அமைதி வாதக் கட்சியாரும் அச்சமயத்தில் ராணுவத்தில் ஆவலாய்ச் சேர்ந்து இன்னும் பலவாறுப்பொது ஜனங்கள் தேசாபிமானமும் பொறுமையும் நிதான புத்தியுங் காட்டினர்கள். ஆனால் பிரிட்டிஷார் நடுநிலைமையை மீறுகிறார்களென்று ஜெர்மானியர் தவறுப் நினைத்து இப்போது ஏமாற்ற மடைந்தார்கள்; அவர்கள் யுத்தஞ்

செய்யத் தொடங்கினர்கள் என்று தெரிந்தவுடன், வெகுகாலமாய் அவர்களிடத்தில் விரோத உணர்ச்சியை வளர்த்து வந்த ஜெர்மானியர் அடங்கா ஆத்திரம் காட்டினர்கள். பெர்லின் நகரத்திலுள்ள பத்திரிகைகளாலும் உத்தியோகஸ்தர்களாலும் தூண்டப்பட்டு ஜனங்களின் மனம் கொதிப்படையவே, பொதுவாய் அங்கிய தூதர்களிடத்தில் அவ்விரோத உணர்ச்சி வெளிப்படையாய்க் காண்பிக்கப்பட்டது. பிரஞ்சு, ருஷிய, பிரிட்டிஷ் தூதர்களின் இருப்பிடத்துக்கு ஜனங்கள் கூட்டமாகச் சென்று அவர்களை அவமதித்து தூஷணையான வார்த்தைகளைப் பேசிக் கலகஞ் செய்தார்கள். நகரிம் முதிர்ந்த ஜனங்கள் தங்கள் தேசாபிமானத்தால் அவ்வாறு கேவலமாய் நடந்து கொண்டார்கள். தேசாபிமானச் சுடர் அடங்கி எரிகிற வரையில் புகழத்தக்க விதமாய்ப் பிரகாசித்த போதிலும், அது அளவு கடந்து மூளத்தொடங்கினால் பயங்கரமாய் மாறிவிடுகிறது.

தௌத்தியப் பேச்சுகளில் வல்லரசுகளின் நடவடிக்கை.

இவ்வளவு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டு வந்த தௌத்திய நடவடிக்கைகளில் அந்தந்த வல்லரசுகளின் மனப்பான்மையைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்வோம்.

1. ஆஸ்டிரியா, ஸெர்வியாவுக்கு இறுதிக்கடிதம் அனுப்பின போதே அக்கடிதத்துக்கு சம்மதம் கொடுக்க முடியாதபடி அவ்வளவு கடுமையாய் எழுதி அனுப்பியது. பால்கன் நாடுகளில் முக்கியமானதாய்க் கருதப்படுகிற ஸெர்வியா தேசத்தின் வன்மையை அழித்து விட நிச்சயித்திருப்பதை விளக்கிற்று. ருஷியாவின் விரோதத்தைப்பற்றி ஆஸ்டிரிய கவலைகொள்ளவில்லை; ஏனெனில் ருஷியா யுத்தந் தொடர்ந்தால், ஜெர்மனி யுத்தஞ்செய்ய உடன் படிக்கையால் கட்டுப்பட்டிருக்கிறது. ஆஸ்டிரியா, ஜெர்மனியின் செல்வாக்குக்கு முற்றிலும் உட்பட்டிருந்தது.

2. ஜெர்மனி, ஆரம்பத்திலிருந்து ஆஸ்டிரிய—ஸெர்விய யுத்தம் பரவாமலிருக்க விரும்பிற்று. 1908-ம் வருஷத்தில் நடந்தது போல, ஜெர்மனி யுத்தஞ் செய்வதாக ருஷியாவுக்கு அறிவித்து அதைப் பய்முறுத்திவிடலாமென்று நினைத்தது; அது சாத்தியப்படவில்லை. ஆனால் ஸ்லாவ் ஜனத்தின் செல்வாக்கு நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக்கண்டு ஸ்லாவ் ராஜ்ஜியங்களுக்குள் மிகப்பெரிதாகிய

ருஷிய ஏகாதிபத்தியத்தின் வல்லமையை அழிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டது. ஜெர்மனி தன் எண்ணம் சாதகமாய் முடிவதற்கு, கிரேட் பிரட்டன் அந்த யுத்தத்தில் கலக்காமல் விருக்க வேண்டுமென்று விருப்பி அதற்காகப்பலவித முயற்சிகள் செய்தும் பயன்படவில்லை.

வல்லரசுகள் ஜெர்மனிக்கு எத்தனையோ சமாதான வழிகளைக் காட்டிவந்ததோதிலும் அவைகளைப் பின்பற்ற ஜெர்மனிமறுத்துவிட்டது. அந்தக்குற்றத்தை ஜெர்மனி சுமக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஜெர்மனியின் செல்வாக்குக்கு ஆஸ்டிரியா உட்பட்டிருக்கிறது. ஆகையால், தௌத்திப் பேச்சுகளை நடத்துவதற்கு ஆஸ்டிரியாவைச் சம்மதிக்கும்படிச் செய்யும் பொறுப்பை ஜெர்மனி ஏற்றுக்கொள்ள வேண்டும். ருஷியாவுடன் ஆஸ்டிரியா நேராக தௌத்தியப் பேச்சுகள் நடத்தவேண்டுமென்று ஜெர்மனி ஆஸ்டிரியாவுக்குப் போதித்ததாகவும் ஆனல் அதற்குள் ஆஸ்டிரியத் தூருப்புகளின் நடவடிக்கைகள் ஆரப்பமாகி விட்டதால், அந்த முயற்சி பயனில்லாமற் போனதாகவும் ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு அறிவித்தார்கள். இந்த காலதாமதத்துக்கு ஜெர்மனியைத் தவிர வேறெந்த வல்லரசு பொறுப்பேற்றுக் கொள்வது? ருஷியாவும் பிரான்ஸும் யுத்த முயற்சிகளைச் செய்து வந்தபடியால் ஜெர்மனியும் அதன் பிறகு யுத்தத்துக்குத் தயாராகும்படி நேரிடுமென்று அறிவித்தது. உண்மையில் அவ்விரண்டு தேசங்களும் ஜெர்மனிக்கு விரோதமாய் யுத்த முயற்சிகள் செய்யவில்லை; ஆயினும் அவ்வாறு அவைகள் செய்ததாக வைத்துக்கொண்டாலும், ஜெர்மனி தற்காப்புக்காக தன் சேனையைத் திரட்டிய பிறகு சமாதான முயற்சிகளைக் கைவிடவேண்டிய அவசியமில்லை. ருஷிய சக்கரவர்த்தி அவ்வாறே சொல்லி ஜெர்மன் சக்கரவர்த்திக்குத் தந்தி அனுப்பினார். ஆகையால், கடைசி நேரத்திலுங்கூட சமாதானப் பேச்சுகள் நடந்துகொண்டிருந்ததை தடை செய்தது ஜெர்மனியன்றோ?

இந்த மகா யுத்தத்தைக் கிளப்பிவிட்ட பொறுப்பை ஜெர்மனி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்கு மற்றொரு அத்தாக்ஷியோதானது. ஜெர்மனி ஆஸ்டிரியா ஆகிய இவ்விரு தேசங்களுடன் உடன்படிக்கையால் கட்டுப்பட்ட இடாலி தேசம் அவைகளோடு சேர்ந்து கொள்ள காரணம் ஏற்படவில்லையென்று நடுநிலைமையை வகித்தது.

அம்மூன்று தேசங்களில் ஏதேனுமொன்று சத்துருவால் வலுவில் தாக்கப்பட்டால், உடன்படிக்கைசெய்து கொண்ட மூன்று தேசங் களும் ஒன்றுக்கொன்று ராணுவ உதவி செய்யவேண்டும். ஆனல் இந்த மகா யுத்தத்தில், ஜெர்மனியாவது ஆஸ்டிரியாவாவது சத்துரு வால் வலுவில் தாக்கப்படவில்லே. இவ்விரண்டு தேசங்களும் தாங் களாகவே யுத்தத்தை நாடிச்சென்றன வென்று இடாலிய கவர்ன் மெண்டு அபிப்பிராயப்பட்டார்கள்.

3. கிரேட் பிரட்டன் ஐரோப்பாவில் சமாதானம் நிலேக்க வேண்டுமென்று உண்மையான அக்கரை கொண்டு கடைசிவரையில் உழைத்து வந்த தென்பதில் சந்தேகமில்லே. ஐரோப்பிய வல்லரசுக ளின் அதிகாரம் அதிக ஏற்றத் தாழ்வின்றி முன்னிருந்த நிலேமை யிலேயே யிருக்க வேண்டுமென்று அது பிரார்த்த கவலே கொண்டது. ஜெர்மனி சமாதான வழிகளேப் பின்பற்ற கண்டிப்பாய் மறுத்து விட்ட பிறகுதான் கிரேட் பிரிட்டன் இந்த யுத்தத்தில் கலக்க நிச்ச யித்தது.

4. ருஷியா, டால்கன் நாடுகளில் தன்செல்வாக்கு நியாயமாய் நிலேத்திருக்கவேண்டுமென்று கருதி, ஸ்லாவ் ராஜ்யங்களுக்குத் தலே மை வகித்து அவைகளேக் காத்துவரும் பொறுப்பை இச்சமயத்தில் கைவிடச் சிறிதும் மனங்கொள்ளவில்லே. ருஷியா தன் செல்வாக்கை நிலே நிறுத்தும்பொருட்டுச் சமாதான வழிகளேத் தேடுவதற்கு ஆரம் பத்திலிருந்தே சம்மதித்தது. அது சாத்தியமில்லேயென்று தோன் றியவுடன் தாமதஞ் செய்யாமல் யுத்தத்துக்கு ஆயத்தமாயிற்று.

5. பிரான்ஸ் சமாதானத்தையே விரும்பியிருந்தபோதிலும் ருஷியா யுத்தந் தொடங்கினுல் அதற்கு உதவிசெய்து உடன்படிக்கை யின்படி ஏற்பட்ட கடமையைச் செலுத்தத் தயாரா யிருக்கது

முக்கிய சம்பவங்களின் சுருக்கம்.

ஜூலே 23-ந்தேதி—ஆஸ்டிரியா ஸெர்வியாவுக்கு இறுதிக் கடி தம் அனுப்பி, அதற்கு 48-மணி நேரத்துக்குள் பதில் வரவேண்டு மென்று அறிவித்தது.

24-ந்தேதி—ருஷிய மந்திரிகள் சபைகூடி ஆஸ்டிரிய கவர்ன் மெண்டின் இறுதிக்கடிதம் தங்களேப் பாதிக்கக்கூடியதென்று நிச்சயித்தார்கள்.

25-ந்தேதி—ஸெர்வியகவர்ன்மெண்ட்டு ஆஸ்டிரியாவுக்குப்பதில் அனுப்பியது. ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு திருப்தி கொள்ளவில்லை; ஸெர்வியத் தலை நகராகிய பெல்கிரேடி லிருந்து ஆஸ்டிரியத் தூதர் புறப்பட்டு விட்டார்.

26-ந்தேதி—பிரிட்டிஷ் அந்திய மந்திரியாகிய ஸர் ஸட்வர்ட் கிரே, பிரான்ஸ், இடாலி, ஜெர்மனி இவைகளின் பிரதிநிதிகள் லண்டனில் கான்பரன்ஸ் கூடி சமாதானம் நிலைப்பதற்குத் தேவையான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று அந்த வல்லரசுகளுக்கு அறிவித்தார்.

ஆஸ்டிரிய—ஹங்கேரி ஸாகாதிபத்தியத்தின் சேனையில் ஒரு பகுதி யுத்தத்துக்குத் தயாராகும்படி அதற்கு உத்தரவு செய்யப்பட்டது.

ருஷிய மந்திரி ஸெர்வியாவின் விஷயத்தில் அலக்ஷியமாயிருக்க முடியாதென்று ஜெர்மன் தூதருக்கு அறிவித்தார்.

27-ந்தேதி—லண்டனில் கான்பரன்ஸ் கூடுவதற்கு பிரான்ஸும் இடாலியும் சம்மதித்தன. ஜெர்மனி சம்மதிக்க மறுத்து, ஆஸ்டிரியாவும் ருஷியாவும் நேராகப் பேச்சுகள் நடத்தலாமென்று அறிவித்தது.

ருஷிய மந்திரி, ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டுடன் நேராகப் பேச்சுகள் நடத்த சம்மதித்தார்.

28-ந்தேதி—ஆஸ்டிரியா ஸெர்வியாவின் மீது யுத்தந்தொடங்குவதாக அறிவித்தது

ஸெர்வியா அனுப்பின பதிலைப்பற்றி ருஷியாவுடன் பேச்சுகள் நடத்த ஆஸ்டிரியா மறுத்துவிட்டது.

29-ந்தேதி—ருஷியா, ஆஸ்டிரியஸல்லேக்கருகிலுள்ள தன் தருப்புகளை யுத்தத்துக்குத் தயாராகும்படி உத்தரவுசெய்தது.

ஜெர்மனி, பிரிட்டிஷ் தூதருக்கு சில யோசனைகள் சொல்லிற்று. பிரிட்டன் யுத்தத்தில் கலக்காமல் நடுநிலைமையிலிருக்கச் சம்மதித்தால், பிரான்ஸ் தேசத்தின் பூரணத்தைக் குறைக்காமலிருக்க ஜெர்மனி சம்மதித்தது. ஆனல் பிரஞ்சு குடியேற்ற நாடுகளைப்பற்றியும் பெல்ஜியத்தின் நடுநிலைமையைப் பற்றியும் யாதொரு உறுதியும் கொடுக்கமுடியாதென்று ஜெர்மனி அறிவித்தது.

ஸர் எட்வர்ட் கிரே லண்டனிலுள்ள ஜெர்மன் தூதரிடத்தில், சமாதானம் நிலைப்பதற்கு முயற்சி செய்து வருவதால் பின்னல் நடக்கக்கூடிய யுத்தத்தில் பிரிட்டிஷார் கலக்காமலிருப்பார்க ளென்று நினைக்கக் கூடாதென்றார்.

30-ந்தேதி—ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டு ருஷியாவுடன் நேராகத் தொலைத்தியப்பேச்சுகள் நடத்த சம்மதித்தார்கள்.

ஆஸ்டிரிய—ஹங்கேரி சேனை முழுவதும் யுத்தத்துக்குத் தயாராகும்படி உத்தரவு செய்யப்பட்டது.

ஆஸ்டிரியத் துருப்புகள் பெல்கிரேட் நகரத்தை பீரங்கிகளால் தகர்த்தன.

31-ந்தேதி—ருஷியா தன் சேனை முழுவதையும் யுத்தத்துக்குத் தயாராயிருக்கும்படி உத்தரவு செய்தது.

பெல்ஜியத்தின் நடு நிலைமையைக் காப்பதைப்பற்றி பிரான்ஸும் ஜெர்மனியும் அறிவிக்கவேண்டுமென்று ஸர் எட்வர்ட் கிரே அவ்விரண்டு கவர்ன்மெண்ட்டுகளையும் கேட்டார்.

ஆஸ்டிரியா ஸெர்வியாவுக்கு அனுப்பிய தீர்ந்திக்கடிதத்திலுள்ள விஷயங்களைப்பற்றி ருஷியாவுடன் நேராக தொலைத்தியப் பேச்சுகள் நடத்துவதாக அறிவித்தது.

ஜெர்மனி ருஷியாவுக்கும் பிரான்ஸுக்கும் இறுதிக் கடிதம் அனுப்பிற்று.

பிரான்ஸ் பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதிப்பதாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டுக்கு அறிவித்தது. ஜெர்மனி சரியான பதில் அறிவிக்கவில்லை.

ஆகஸ்டு 1-ந்தேதி—பிரான்ஸும் ஜெர்மனியும் தங்கள் சேனைகளை யுத்தத்துக்குத் தயாராகும்படி உத்தரவு பிறப்பித்தன.

ஜெர்மனிக்கும் கிரேட் பிரிட்டனுக்கும் யுத்தம் நடக்காமலிருக்கும் பொருட்டு முயற்சிகள் செய்யப்பட்டு பயன்படாமற் போயின.

2-ந்தேதி—ஜெர்மன் துருப்புகள் லக்ஸம்பர்க் நாட்டின் மீது படையெடுத்தன.

பிரான்ஸின் வடகரையை ஜெர்மன் கடற்படை தாக்காமல் பிரிட்டிஷ் கடற்படை காக்குமென்று ஸர் எட்வர்ட் கிரே பிரஞ்சு கவர்ன்மெண்டுக்கு உறுதி சொன்னார்.

ஜெர்மன் துருப்புகள் பிரஞ்சு ஸ்தலத்துக்குள் புகுந்தன.

3-ந்தேதி—இடாலிய கவர்ன்மெண்ட்டு நடுநிலைமை வகிப்பதாக அறிவித்தார்கள். அதற்கு, ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் தங்கள் தற்காப்புக்காக இந்த யுத்தத்தை தொடத்தவில்லை யென்று காரணம் சொன்னார்கள்.

ஜெர்மனி பெல்ஜியத்துக்கு இறுதிக் கடிதம் அனுப்பிற்று.

லார் எட்வர்ட் கிரே, பிரிட்டிஷ் பார்லிமெண்டைக் கூட்டி, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நடவடிக்கையை அறிவித்து அச்சபையின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டார்.

4-ந்தேதி—ஜெர்மன் துருப்புகள் பெல்ஜியத்துக்குள் புகுந்து விட்டன.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டு ஜெர்மனிக்கு இறுதிக் கடிதம் அனுப்பி இரவு 12-மணிக்குள் பதில் அனுப்புப்படி கேட்டார்கள்.

11-வது அத்தியாயம்

மகா யுத்தத்தின் விசேஷங்கள்.

ஆகஸ்ட்டு 4-ந் தேதிக்குப் பிறகு, சில தினங்களாக ஐரோப்பாவில் கர்ஜித்துக்கொண்டிருந்த யுத்த மேகங்கள் மிகவும் உக்கிரமாய் கெருப்பும் உதிரமும் பொழிய ஆரம்பித்தன; ஐரோப்பாவில் மாத்திரமல்ல, உலகத்து நாலா பக்கங்களிலும் இப்படி நேரிட்டது. இடாலியைத் தவிர மற்ற ஐந்து வல்லரசுகளும், ஸெர்வியாவும், பெல்ஜியமும் உடனே ரணகளங்களாக மாறி விட்டன.

அவ்வாறு, அநேக வருஷங்களாக ஐரோப்பிய வல்லரசுகள் விரோத உணர்ச்சி கொண்டு ஏராளமான திரவியம் செலவிட்டு அவசரமாயும் தீவிரமாயும் யுத்த முயற்சிகள் செய்து வெகு நாளாய்க் கொண்டிருந்த உணர்ச்சிகள் அடங்கார்த்தபடி பொங்கின. வெவ்வேறு காரணங்களாலும் வெவ்வேறு உணர்ச்சிகளாலும் இந்த மகாயுத்தம் கிளம்பிற்றென்பதைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறோம். இங்கு அவற்றை சுருக்கமாய்ச் சொல்வோம்.

பிரான்ஸ் தேசம் 18-ம் நூற்றாண்டில் உன்னதஸ்தானத்தை வகித்து, 1870-ம் வருஷத்தில் ஜெர்மனியுடன் செய்த யுத்தத்தால் அந்த நிலையிலிருந்து விழுந்து விட்ட பிறகு, அது ஐரோப்பாவில் ஒருராஜ்யமாக நிலைத்திருப்பதற்கும், இழந்த கௌரவத்தைத் திரும்பப் பெறுவதற்கும், தீராப்பழியைத் தீர்த்துக் கொள்வதற்கும் ஜெர்மனியுடன் மறுமுறை யுத்தஞ் செய்யத் தீர்மானித்து, ருஷியா கிரேட்பிரிட்டன் இவைகளோடு உடன்படிக்கை செய்து கொண்டு, எப்போது எவ்விதமாய் சமயம் நேரிட்ட போதிலும் ஜெர்மனியுடன் கைகலப்பதென்றே தீர்மானித்தது.

ஜெர்மானியர், 1870-ம் வருஷத்து யுத்தத்தக்குப்பிறகு பிஸ்மார்க்கினுடைய யோசனையின்படி தங்கள் ஜாதிய அபிமானத்தையும் ஒற்றுணர்ச்சியையும் ராணுவ பலத்தில் ஒப்பற்றவிதமாய் வெளிப்படுத்திப் புதிய ஏகாதிபத்தியம் ஸ்தாபித்ததுமுதல், ஒப்பற்ற ராணுவபலத்தால் அதை நிலை நிற்கச் செய்வதை மூக்கிய கொள்கையாகக் கொண்டனர். 1870-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தினின்றும் பெருகிய உதிர வெள்ளத்தில் பிரஷ்ய அரசர் கண்டெடுத்த ஏகாதிபத்தியக் கிரீடத்தை மற்றொரு உதிர வெள்ளம் புரண்டு வந்து அக்கிரீடத்தை அடித்துக் கொண்டு போகாமலிருக்க வேண்டுமென்றே? ஜெர்மன் ஏகாதிபத்தியம் நிலைத்திருக்க வேண்டுமானால், ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் அழியாமலிருக்க வேண்டுமென்று பிஸ்மார்க் சொன்ன வார்த்தை மறக்கவில்லை. ஆஸ்டிரிய ஏகாதிபத்தியம் முறிந்து விழுந்தால் அதிலுள்ள ஸ்லாவ்க ளெல்லாம் ருஷியாவுடன் சேர்ந்து அதன் வன்மையைப் பலமடங்கு அதிகரிக்கச் செய்வார்கள். அப்போது ஜெர்மனி அடங்கிப் போகவேண்டு மென்பதில் சந்தேகமில்லை. 1870-ம் வருஷத்தில் முதன் முதலாக ஏகாதிபத்தியத்தை வகித்த ஜெர்மன் சக்கரவர்த்தி அந்திய காலத்தில், ஆஸ்டிரியா, இடாலி இவைகளின் நேசத்தைக் கைவிடக் கூடாதென்று சொல்லிப் போக, அவருடைய பேரன் வில்லியம் சக்கரவர்த்தி இடாலியின் நேசஸ்தானத்தை இழந்தார்; பிஸ்மார்க் சாமர்த்தியமாய்த் தேடி வைத்த வழிகளிருக்க, அவைகளைக் கைவிட்டு மூன்று விரைவாய் முற்போக்கடைந்த ஏகாதிபத்தியத்தை இப்போது தலை தெரியாமல் புரண்டோடச் செய்தார். காலாபக்கங்களிலும் சத்துருக்களைக் கிளப்பிவிட்டு, ஆஸ்டிரியாவைத் தவிர வேறுநேசர்க

ளின்றி அதை எக்காலத்திலும் எவ்வாறுயினும் காப்பதாக உறுதி கொண்டு ஐரோப்பிய வல்லரசுகளை யெல்லாம் யுத்த ஸன்னத்த ராய் எப்போதும் நிற்கும்படிச் செய்தார்.

ஜெர்மன் கவர்ன்மெண்ட்டு இந்த மகா யுத்தத்தை ஆரம்பித்த வுடன், இடாலிதேசம் சேர்ந்துகொள்ளாததைக் கண்டு தாங்கள் 20 வருஷங்களாகத் தவறுன நோக்கங்களைக் கொண்டு நிறை வேற்ற முயன்றதின் பலன் அதுவாகு மென்று அறிந் திருக்க வேண்டும். நயபயங்களால் செய்த முயற்சிக ளெல் லாம் இடாலியின் உறுதியை அசைக்க முடியவில்லை. பால் கன் யுத்தத்திற்குப் பிறகு அட்ரியாடிக் கடலில் ஆஸ்டிரியா தன் செல்வாக்கை நாட்ட வேண்டு மென்று அல்பேனியாவை வச மாக்கிக்கொள்ள முயற்சிசெய்தபோது, இடாலியர் தங்கள் தேசத்து வாசற்படியிலேயே பெரிய ஆபத்து வினைகிறதென்பதை உணர்ந் தார்கள். அந்தக் கடல் தங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டுமென்று இடாலியர் உரிமைகொண்டாடுகிறார்கள். இடாலியர் டிரிப்போலிநாட் டைப் பெற்றார்களென்ற பொறுமையால் அல்பேனியா விஷயத்தில் அவர்களை ஜெர்மனி சரியானபடி ஆதரிக்கவில்லை. ஜெர்மனி ஆஸ்டிரியா இவைகளின் உள் நோக்கத்தைப் பற்றி இடாலியருக்குச் சந்தேகம் வலுப்பட்டது. முக்கியமாய் ஆஸ்டிரியாவினிடத்தில் விரோத உணர்ச்சி அதிகரித்தது. அநேக வருஷங்களுக்கு முன்பு இடாலியர் ஆஸ்டிரியாவின் கொடுங்கோன்மைக்கு உட்பட்டு அந்த காலத்தில் சகித்த கொடுமைகளெல்லாம் இப்போது மிகைப்பட்டுத் தோன்றி, ஆறிவந்த புண்களை மறுபடி அறுக்கத்தொடங்கின. இந்த மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னல், ஜெர்மனியும் ஆஸ்டிரி யாவும் தௌத்திரப்பேச்சுகள் நடத்திவந்தபோது, இடாலியகவர்ன் மெண்ட்டைச் சேர்த்து ஆலோசிக்காமலும் மதிக்காமலு மிருந்து, கடைசியில் யுத்தத்தையும் தொடங்கி விட்டன. அந்த யுத்தத் தால் இடாலி தனக்கு கிடைக்கக்கூடிய பலனை அறிந்து கொள்ள முடியாமல், ஜெர்மனி கிளப்பிய மகா யுத்தத்தின் தன்மையை உணர்ந்து அது தன் கடி நிலைமையினின்றும் ஆவை மறுத்து விட்டது.

ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்திலுள்ள பிரஜைகள் ஜாதிமதங்க ளால் பேதப்பட்டு ராஜ்ஜியத்தை பலஹீனப்படுத்தி, முக்கியமாய்

ஸ்லாவ் ஜனங்கள் அந்நிய அரசுகளாகிய ருஷியா லெர்வியா இவை களிடத்தில் அபிமானம் பெற்றுத் தென்புகொண்டு ஒருமைப்படாம விருந்தார்கள்; ஆகையால் அந்த ஏகாதிபத்தியம் நாள்பட நிலைக்க வேண்டுமானால் ஸ்லாவ் ராஜ்ஜியங்களின் அதிகாரத்தையே அழிக்க வேண்டுமென்று அது தீர்மானித்தது. ஆஸ்டிரியா சக்கரவர்த்தி தம் தேசத்து ஐஸ்வர்யத்தையும் விஸ்தீரணத்தையும் பால்கன் பிர தேசத்தில் பெருக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியின்றி அங்கு ராணுவ பலத்தால் அதிகாரத்தை நாட்டத் தீர்மானித்தார்.

ருஷியா தன் வியாபாரம் செல்வாக்கு அதிகாரம் இவைகளை விருத்தி செய்வதற்கு நல்ல கடற்கரைகளின்றி, ஆசியா கண்டத்தி லும் மற்றத் திசைகளிலும் முற்போக்க கடைவதற்கு வழியின்றி சுஜாதியார் வசிக்கிற ஸ்லாவ் பிரதேசத்தில் தனக்கு விசேஷ உரிமை ஏற்பட்டிருப்பதாக நினைத்து அங்கு சுயேச்சைபெற்ற ஸ்லாவ் ராஜ் ஜியங்களை நிர்மாணிக்க உதவி செய்தது. * ஆஸ்டிரிய கவர்ன் மெண்ட்டு, அவ்விவகாரங்களில் ஜெர்மனியின் உதவியைப்பெற்று பிரவேசித்து ருஷியாவின் நடவடிக்கைகளுக்கு இடைவிடாமல் செய்து வந்த இடையூறுகளை முடிவாய்த் தொலைத்துவிட வேண்டு மென்று ருஷியா தீர்மானித்தது. ஆஸ்டிரியசேனை லெர்வியாவின் மீது படையெடுத்தபோது அதன்நோக்கம் லெர்வியரை அடக்குவ தற்கல்ல, ருஷியரை மானபங்கம் செய்வதற்கே என்று ருஷியர் நினைத்துக் கோபங்கொண்டார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செல்வப் பெருக்கையும் உலக மளாவிய செல்வாக்கையும் பார்த்து ஜெர்மானியர் பொறுமையும் பகையுங் காட்டி பெரிய கடற்படை கட்டுவதில் தீவிரங்கொண் டார்கள். பிரிட்டிஷார் தங்கள் சரித்திர ஆரம்பத்தி லிருந்தே

* ருஷிய ஏகாதிபத்தியம் ஐரோப்பிய, ஆசிய கண்டங்களில் பெரும்பாகத்தையும் அடக்கிக்கொண்டிருந்தாலும், பால்டிக் கடலைத்தவிர மற்ற கடல்களெல்லாம் மாதக் கணக்காய் பனியினால் உறைந்து போகக்கூடியவை. அதனால் கப்பல் வியாபாரம் விருத்தியாவதற்குச் சாதகங்களில்லை. பால்டிக்கடல் உலகத்துப் பலூராகங்களோடு வியாபாரஞ் செய்வதற்கு சௌகரியமாய் மத்திய ஸ்தானத்திலில்லை. அத்தக்கடலிலிருந்து வெளியே வரக் கூடிய வழி குறுகிய ஜலசந்தியா யிருப்பதால் ராணுவ நடவடிக்கைகளுக்குச் சாதகமாயில்லை. ஆகை யால் பால்கன் பிரதேசத்தின் வழியாய் அட்ரியாடிக் கடல் அல்லது எஜியன் கடலில் செல்வாக்கடைய வேண்டுமென்று நோக்கங்கொண்டிருக்கிறது.

சுதந்தர உணர்ச்சியில் அளவற்ற வீருப்பங்கொண்டு அதை வெகு அருமையாய் வளர்த்து, கண்ணிமையினுங் கவலையாகக் காத்துவந்தார்க ளென்பது பிரஸித்தி பெற்ற உண்மை. சுதந்தரப் பிரியத்தை தங்கள் சரித்திரப் பெருமையெனவே கொண்டாடுகிற ஜாதியாரை அவ்வாறு பயமுறுத்தல் எளிதல்ல. ஏகாதிபத்தியத்தின் வன்மை சமாதான பாவத்தாலும் அபிமான உணர்ச்சியாலும் வீருத்தியாகக் கூடிய தென்று, பிரிட்டிஷார் அறிந்தமாதிரி, ஜெர்மன் சக்கரவர்த்தி அறியவில்லை. அவருடைய ஆட்சியில் ஜெர்மானியர் இயல்பாய்ப் பெற்ற அறிவாலும் சாமர்த்தியத்தாலும் மேல் செல்வம் படைத்தவர்களாகி தேசம் வீருத்தியான தென்பதை அவர் செவ்வையாய் அறியவில்லை. வியாபாரக் கப்பல்களுக்குப் பதிலாக யுத்த கப்பல்களையும், தொழிற்சாலைகளுக்குப்பதிலாக ஆயுதச் சாலைகளையும், வியாபாரத் துறைகளுக்குப் பதிலாக ராணுவத் துறைகளையும், அறிவுள்ள தொழிலாளிகளுக்குப் பதிலாகத் திமிர்கொண்ட துருப்புகளையும் முக்கிய கருவிகளாக கம்பீரமாகிய ஏகாதிபத்தியத்துடன் போட்டி செய்தார். பிரிட்டிஷார் தங்கள் கடற்படையைப் பல வழிகளில் பலப்படுத்தி ஜெர்மானியரின் முயற்சிகள் வீண் என்பதைத் தெளிவாய்க் காட்டினார்கள். யுத்தத்தை பிரிட்டிஷார் எவரும் கோரவில்லை; ஆனால், ஜெர்மனி செருக்கடைந்து வலுவில் யுத்தத்தை நாடினால், வேண்டிய அளவுக் கதிகமாக "இரும்பும் உதிரமும்" அதற்குக் கிடைக்க வேண்டுமென்று பிரிட்டிஷார் உறுதி கொண்டார்கள்.

சென்ற நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியாய் ஏற்பட்ட காரணங்கள்.

ஆனபடியால் 19-ம் நூற்றாண்டில் உண்டான பலவித கிளர்ச்சிகள் இப்போது 20-ம் நூற்றாண்டில் தொடர்ச்சியாய் சம்பவித்து வலுவாயும் விசாலமாயும் வளர்ந்து வந்து இந்த மகா யுத்தத்தைக் கொண்டு விட்டிருக்கின்றன.

1870-ம் வருஷத்தில் பிரஞ்சு ஜெர்மனிய யுத்தத்தால் அவ்விரு தேசங்களிலும் உண்டான உணர்ச்சிகள் இன்று வரையில் மறையாமல் அதிகரித்துக்கொண்டே வந்தன. 1877-ம் வருஷத்தில் பால்கன்பிரதேசத்தில் ஆஸ்டிரியாவும் ருஷியாவும் தலையிட்டபோது அவ்விரு தேசங்களும் கொண்டிருந்த நோக்கமும் கொள்கையும் நிறைவேறுவதற்கு இன்று வரையில் முயற்சி செய்யப்பட்டு வந்தது.

ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்திலிருந்த ஸ்லாவ் பிரஜைகள் 1848–ம் வருஷத்தில் கொண்டகலக்க உணர்ச்சியை இன்றுவரையில்ஆஸ்டிரிய கவர்ன்மெண்ட்டாவது, (ருஷியா ஸொர்வியாபோன்ற) ஸ்லாவ் கவர்ன் மெண்ட்டுகளாவது மறந்துவிடவில்லை. ருஷியாவும் ஸொர்வியாவும் தங் கள் செல்வாக்கை அதிகரித்து ஸ்லாவ் ஜனங்களின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தை சென்ற நூற்றாண்டி லிருந்து இன்று வரையில் கைவிடவில்லை. அதற்கு கோர்விரோத மாக, சுயேச்சை பெற்ற ஸ்லாவ் தேசங்கள் அடங்கினாலொழிய ஆஸ்டிரியப் பிரஜைகளாயுள்ள ஸ்லாவ்கள் அடங்கமாட்டார்களென் றும் ஆஸ்டிரிய ஏகாதிபத்தியமே நிலைப்பதரி தென்றும் ஆஸ்டிரி யாவும் ஜெர்மனியும் நினைத்து வந்தன. பிரிட்டிஷார் அனேக நூற் றாண்டுகளாக அனுசரித்து வந்த கொள்கையை இன்றுவரையில் நிறைவேற்றத் தவறவில்லை. ஸ்பெயின் தேசம் முன்னொரு காலத் தில் ஐரோப்பாகண்ட முழுவதையும் அடக்கி ஆளவேண்டுமென்று ஆசைபிடித்து இளம்பியபோது அதை அடக்கியது பிரிட்டிஷார் தான். பிரஞ்சு ஏகாதிபத்தியம் ஐரோப்பா முழுவதையும் அளாவி நிற்க வேண்டுமென்று பிரஸித்தி பெற்ற நெப்போலின் சக்கர வர்த்தி முயன்றபோது, அதை வேரறுத்தது பிரிட்டிஷார் தான். பிரிட்டிஷாருடைய சரித்திரத்தில், அவர்கள் ஐரோப்பிய ஸிவ காரங்களிலிருந்து விலகியிருந்து, அந்தக் கண்டத்தில் ஜன சுதந்த ரத்துக்கே ஆபத்து நேரும் போலிருந்த சமயங்களில் பெரு முயற்சி செய்து வல்லரசுகளின் ஆதிக்கியம் ஏற்றத்தாழ் வில்லாமல் நிதாஷ நிலையிலிருக்கும்படி காத்தது முக்கிய விசேஷமாகும். எந்த வல்ல ரசும் மிதமிஞ்சிய அதிகாரத்தை யடைந்தவுடனே பிரிட்டிஷார் தங்களுடைய நிலைமையைக் காத்துக்கொள்ள அவ்வாறு முன்வந் தார்கள். இப்போதும் அவ்வாறே ஜெர்மானியரின் அகந்தையை அடக்குவதற்கு இந்த மகா யுத்தத்தில் கலக்கும்படி நேர்ந்தது. அளவு மிஞ்சி செருக்கடைந்த வல்லரசு மற்ற வல்லரசுகளை அடக்கி, சிறிய ராஜ்யங்களின் பூரணத்தை அழித்து, பொதுவாய் ஜன சுதந்தரத்துக்கே கேடுவிளைப்பது சகஜமா யிருக்கிறது. அப்ப டிப்பட்ட சமயங்களில் பிரிட்டிஷார் சிறியராடுகளின் சுதந்தரத்தைக் காக்க முன் வந்ததுபோல், இப்போது பெல்ஜியத்தின் கடு நிலைமை யை ஜெர்மனி அழிக்கத்தொடங்கியவுடன் அதைத் தடுப்பதற்காக இந்த யுத்தத்தில் கலந்தார்கள்.

மகா யுத்தத்தில் ஜாதீய உணர்ச்சி மேலிட்டிருக்கிறது.

இம்மாதிரியான மகா யுத்தம் பேற்பெற்ற நெப்போலீயன் காலத்தில் நடந்தபிறகு இப்போது ஒரு நூற்றாண்டுகாலம் சென்று விட்டது. அந்த காலமெல்லாம் ஐரோப்பாவில் ஜாதீய உணர்ச்சி வேரூன்றி முதிர்ந்து நூதன நாகரிகத்தால் வரவர பலப்பட்டு வந்தது. இக்காலத்து நாகரிக விருத்தியில் எப்போதும் பின் தங்கிய ஸ்லாவ் ஜனங்களுக்கு அந்த உணர்ச்சி சற்று தாமமாய்த்தோன்றி பரவிற்று. ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்திலிருந்த ஸ்லாவ் ஜனங்கள் பரஸ்பர அபிமானமின்மையால் எவ்விதபயனுமடையத் தவறிவிட்டார்கள். ஆயினும் ஆஸ்டிரியாவிலுள்ள ஸ்லாவ் பிரஜைகளுக்குள் தோன்றிய அந்த ஜாதீய உணர்ச்சி முற்றிலும் மறைந்து போகாமல் பால்கன் நாடுகளில் நடந்த சம்பவங்களால் அடிக்கடி தூண்டப்பட்டு வந்தது. பால்கன் நாடுகளிலிருந்த ஸ்லாவ் ஜனங்கள் துருக்கியின் அதிகாரத்தை விலக்கிவிட்டு, சுயேச்சாதிகாரம் பெற்ற ராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள். அந்நாடுகளிலுள்ள ஸ்லாவ்கள் இக்காலத்து நாகரிகத்தை மேற்கொண்டு, தங்களினத்தாராகிய ருஷியரைப்போலல்லாமல், சுய ஆட்சியில் பிரியங்காட்டி ஜனப்பிரதிநிதி சபைகளைத் தங்கள் ராஜாங்கத்தில் ஸ்தாபித்தார்கள். ருஷியாவுங்கூட 10 வருஷங்களுக்கு முன்னல் பார்லிமெண்ட்டு சபை ஸ்தாபிக்கப்பட்டதென்றால், இக்காலத்து நாகரிகத்தின் வன்மை எப்படிப்பட்ட தென்று அறிந்து கொள்ளலாம். அவ்வாறு ஸ்லாவ் ஜனங்களின் செல்வமும் செல்வாக்கும் விரைவாய் அதிகரித்து, ருஷியாவிலிருந்து ஐரோப்பாவின் தென் கிழக்கு பாகம் வரையில் பரவத் தொடங்கின. இவைகளைக் கண்டு ஜெர்மானியர் கவலையுற்றனர். ஜெர்மானியர், டியூடான் என்ற ஜாதியார்; நாகரிகத்தில் முதன்மை பெற்றவர்கள்; ஆஸ்டிரியரும் அவ்வினத்தார்தான். ஆகையால் ஜெர்மனிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் கிழக்கில், ஸ்லாவ் ஜனங்கள் விஸ்தாரமாய் வளர்ந்து கொண்டு தங்கள் அதிகாரத்தை வர வரப் பலப்படுத்தியதை யறிந்து அவ்விரண்டு தேசங்களும் அச்சங்கொண்டன. ஸ்லாவ் ஜனங்கள் நாளுக்கு நாள் தொகையில், அதிகரித்து நாகரிகத்தில் விருத்தி யடைந்து செல்வத்தைப் பெறுக்கி அதிகாரத்தை நாலா பக்கங்களிலும் பரவச் செய்து வந்ததால், ஐரோப்பாவில் டியூடான் ஜாதியரின் செல்வாக்கு முதன்மை ஸ்தானத்தை இழந்து விடும்படி நேரிடுமென்று ஜெர்மானியர் நினைத்தார்

கள். ஐரோப்பாவில் யாருடைய ஆதிக்யம் மேலோங்கி யிருக்க வேண்டு மென்ற பிரச்னையை தீர்மான முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஜெர்மானியர் இந்த மகா யுத்தத்தைக் கிளப்பி யிருக்கிறார்கள். ஸ்லாவ் ராஜ்யக்களுள் முதன்மை பெற்ற ருஷியாவும் அந்த பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு ஆபத்தமா யிருந்தது.

ருஷியா ஜெர்மனி இவ்விரு தேசங்களின் நிலைமையும் எவ்வளவு நெருக்கமாய் சம்பந்தப்பட்டிருக்கின்றன வென்பதை இப்போதுள்ள வில்லியம் சக்ரவர்த்தி பிஸ்மார்க் காலத்திலேயே அறிந்திருக்க வேண்டும். ஆனால் பிஸ்மார்க் ருஷியாவின் நேச சம்பந்தத்தை நாடி முயற்சி செய்ய, வில்லியம் சக்ரவர்த்தி அதற்கு விரோதமான வழியைப் பின் பற்றினார். ருஷியாவின் நேச சம்பந்தம் முதிர்ந்த காலத்தையும், அதன் விரோதம் இப்போது யுத்த களத்தில் வெளிப்படுவதையும் அவர் பார்த்திருக்கிறார். அதே மாதிரி, ஆஸ்டிரிய சக்ரவர்த்தியாகிய பிரான்ஸிஸ் ஜோசப், 1848-ம் வருஷத்தில் தமது பிரஜைகளின் சுதந்தரக் கலகங்களால் ஏகாதிபத்தியம் நடுக்க முற்ற போது ஸ்லாவ் ஜனங்களும் விரோதங் கொண்டு கிளம்பியதைக் கண்டிருக்கிறார். ஆகையால், அவ்விரண்டு சக்ரவர்த்திகளும் ஸ்லாவ் ஜனங்களால் ஐரோப்பாவின் நிலைமை மாறுபட்டு வந்ததை வெகு காலமாய்க் கவலையுடன் கவனித்து வந்திருக்கிறார்கள். ஆகையால் ஜெர்மனி ஆஸ்டிரியா ஆகிய இவ்விரண்டு ஏகாதிபத்தியத்திலுள்ள டியுடான் ஜாதியாரும், ருஷியா, பால்கன் நாடுகள் இவைகளிலுள்ள ஸ்லாவ் ஜாதியாரும் இந்த மகா யுத்தத்தில் முக்கியமான கக்ஷிகளாய்ப் பிரிந்து எதிர்த்து வருகிறார்களென்பதை கவனிக்கவேண்டும். இந்த யுத்தத்தில் ஜாதீய உணர்ச்சி மேலிட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. அவ்விரு ஜாதியருக்குமிருந்த விரோத உணர்ச்சிகள் வெகுகாலமாய் அதிகரித்து ஐரோப்பா கண்டத்தை இருள்போல் மூடிக்கொண்டு வந்தபோது, பால்கன் நாடுகளில் அடிக்கடி நேர்ந்த நெருக்கடியான சமயங்கள் மின்னல் ஒளி போல ஐரோப்பாவின் அபாயகரமான நிலைமையை விளக்கிக்காட்டி உடனே மறைந்துவிட்டன. ஆகையால் ஐரோப்பாவில் இம்மாதிரியான மகாயுத்தமொன்று கடைபெறுமென்பதை அதேகர் எதிர்பாராமலிருக்கவில்லை. அது கடைபெறும்போது, இக்காலத்து நாகரிகத்தால் விருத்திசெய்யப்பட்ட ராணுவ முறைகள் யுத்தத்தின் கடுமையை1

பலமடங்கு மிகைபடுத்துமென்பதில் சந்தேகமில்லை. யுத்தஞ்செய்யுங் கட்சிகளுக்குள் ஜாதீய உணர்ச்சி மேலிட்டு, அவர்கள் உயிர் உடல் உடமைகளைப்பொருட் படுத்தாமல் ரணகளத்தின் உக்கிரத்தை இன்னும் அதிகப்படுத்துகிறார்கள். ஸ்லாவ்ஜாதியாரின் கவரவத்தை உயர்த்தவேண்டுமென்று ஒரு வல்லரசும், அவர்களின் கர்வத்தை அடக்க வேண்டுமென்று ஒரு வல்லரசும், உலகமளாவி நிற்க வேண்டுமென்று ஒரு வல்லரசும், அவ்வாறு அதிகாரத்தில் வெறிபிடித்துச் செய்கிற துஷ்டத்தனங்களை அடக்கவேண்டுமென்று ஒருவல்லரசும், பூர்வத்தில் சேர்ந்த பழியை நிவர்த்திக்குந்தோறும் எரிக்கின்ற வருத்தத்தைத் தீர்த்துக்கொள்ள ஒரு வல்லரசுமாக இந்த மகா யுத்தத்தைத் தொடங்கியிருக்கின்றன. அவ்வாறு ஆழப்பதிந்த உணர்ச்சிகளின் வேகமும் தேசாபிமான நெருப்பும் யுத்தகளத்தில் நெருப்பாயுதங்களின் வன்மைக்குதவியாயிருக்கின்றன. முற்காலத்தில் யுத்தஞ்செய்வதற்கென்று ஜனங்களுக்குள் ஒரு வகுப்பார் தனியாய் ஏற்பட்டிருந்தது இப்போதில்லை; பொருளுக்காக ஆசைப்பட்டு சம்பளம்பெற்ற துருப்புகள் மாத்திரம் யுத்தஞ் செய்வதென்பதும் இப்போதில்லை. ராஜாங்கத்தில் இடகரத்திராமுள்ள பிரஜைகளெல்லாவரும் இப்போது யுத்தஞ் செய்யுந் துருப்புகளாவார்கள். அவர்கள் தங்கள் ஜாதீய கவரவத்துக்காகவும் சுதந்தரத்துக்காகவும் சண்டை செய்கிறார்கள். அவ்வித உணர்ச்சிகளால் சென்ற சில வருஷங்களாக ஐரோப்பிய ராஜ்யங்கள் தூண்டப்பட்டு தேசத்து ஜீவரத்தை வற்றப் பிழிந்து ராணுவத்தை வளர்த்து வந்து இப்படிப்பட்ட மகா யுத்தங்களில் இரையாகக் கொடுக்கத் தயார் செய்து வந்தன. அவ்வித ராணுவ முயற்சிகள் ஓர் அளவில்லாமல் செய்யப்பட்டு, உலகத்தில் நியாயமென்பதும் சுதந்தரம் என்பதும் ராணுவ பலத்தைப் பொருந்திய தாகி விட்டன. ஏராளமான திரவியத்தைச் செலவிட சக்தியில்லாத சிறிய ராஜ்யங்களின் நிலைமை என்னகும்? பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலகமில்லை என்பது இதுவரையில் சற்று சந்தேகமாயிருந்து இப்போது விதியாக ஏற்படும்போல் விருக்கிறது. பெரிய வல்லரசுகளுங்கூட ஒவ்வொரு நாம்பையும் முழுக்கி ராணுவத்தை நிர்மாணிப்பதென்றால் எவ்வளவு காலந்தான் அவ்வாறு செய்ப முடியும்? ஆகையால், இந்த மகா யுத்தத்தின் முடிவில் ராணுவ முயற்சிகள் கைவிடப்படுமா அல்லது இன்னும் தீவிரமாய்ச் செய்யப்படுமா என்பது நிச்சயப்படும். அது உலகத்து க்ஷேமத்தையே

பாதிக்கக் கூடிய தீர்மானமாகு மென்பதில் ஐயமில்லை. இந்த மகா யுத்தத்தில் தோல்வியடைந்த தேசங்கள் மறுபடி தலையெடுக்க முடியாமலும் மறுபடி ராணுவ முயற்சிகளைச் செய்ய முடியாமலு மிருக்கும் பொருட்டு, தோல்வியுற்ற தேசங்களின் ஐஸ்வர்ய பலம் முற்றிலும் அழித்துவிடப்படு மென்று தோன்றுகிறது.

சுதந்தரப்பிரியமும் ராணுவ ஆதிக்யமும்.

நேசக் கட்சியாரின் மனப்பான்மை எவ்வாறென்பதைச் சொல்வோம். பிரான்ஸ்தேசம் எவ்வாறு சுதந்தரப் பிரியத்தை ஐரோப்பா முழுவதும் பரவச்செய்த தென்று முன்பு விவரமாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது. கிரேட்பிரிட்டனுடைய சரித்திரமோ, ஜன சுதந்தரத்தை அஸ்திவாரமாகக் கொண்ட ராஜாங்க ஸ்தாப னத்தின் அற்புதத்தைச் சொல்லுகிற சிறந்தநூல் என்றே கருதப் படுகிறது. இவ்விரு தேசங்களின் நேசராகிய ருஷியகவர்ன்மெண்ட்டு சுவேச்சாபத்திய (Autocracy) ஸ்தாபனமா யிருந்துங்கூட இந்த மகாயுத்தத்தை ஸ்லாவ் ஜனத்தின் சுதந்தரத்துக்காக நடத்துகிற விஷயம் சற்று விநோதமாயிருந்தாலும் கவனிக்கத் தக்கது. ஸெர்வி யர், ருஷியரைப்போலல்லாமல் இக்காலத்து நாகரித்தை மேற் கொண்டு சுய ஆட்சியில் விருப்பம் பெற்று தங்கள் சுயேச்சையைக் காப்பதற்கும் மற்ற ஸ்லாவ்களின் நிலைமையை உயர்த்துவதற்கும் யுத்தம் செய்கிறார்கள். ஆகையால் இந்த மகா யுத்தத்தில் நேச கவர்ன்மெண்ட்டுகள் ஜன சுதந்தரத்தைத் தாங்கி நிற்கும் ராஜ்யங்க ளாகக் கருதப்படுகின்றன.

ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் அதற்கு மேர் விரோதமான நிலை மையில் இருக்கின்றன. முன்பு ஜெர்மனி பிரான்ஸுடன் யுத்தஞ் செய்தபோதே சுதந்தரத்தின் வன்மையை அதுகன்றுய் உணர்ந்தி ருக்கவேண்டும். பிரஞ்சு சக்கரவர்த்தியும் சேனையும் தலைநகரும் சரணமடைந்தவுடன் பிரஞ்சு ஜாதியார் தலைகுனிந்த போதிலும், மிகவும் திடமான மன உணர்ச்சிகளைக் கொண்ட அந்த ஜாதியருங் கூட, துக்கத்தால் அறிவழிந்து அயர்ந்துபோகாமல் ஆயிரக்கணக் காய் சத்துருவுக்கு இரையாகி, 5 மாதகாலம் யுத்தத்தை நடத்தி னர்கள்; ஜாதீய உணர்ச்சியும் சுதந்தரப் பிரியமும் அவர்கள் மனதில் அவ்வளவு வலுவாய் ஊன்றி யிருந்தன. ஜன சுதந்தரம் ராணுவ பலத்தால் நசுக்கப்பட்டாலும் முற்றிலும் அழித்து

விடக்கூடியதல்ல. அதற்கு இடாலியரும், ஹங்கேரியரும், போயர்களும் அத்தாக்ஷிகளாவார்கள். பிரான்ஸைப்போன்ற வல்லரசையும், ஸெர்வியா பெல்ஜீயம் போன்ற ராஜ்ஜியங்களையும், ஆஸ்டிரியாவிலுள்ள ஸ்லாவ்களைப்போன்றஜாதியாரையும், அலக்ஷியமாய் அடக்கி விடுவதற்காகக் கிளம்பிய ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் தங்கள் நோக்கத்தைஎவ்வாறு நிறைவேற்றமுடியும்? ஜெர்மனியின் சரித்திரமே அதற்கு உத்தரம் அளிக்கிறதல்லவா? அகந்தைகொண்ட பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை வீழ்த்தியதும், ஆஸ்டிரியாவை உதறி எறிந்து ஒருமைப்படடைத்ததும், இடாலியரின் ஒற்றுமைக்கு உதவி செய்ததும், ஆகிய இவ் விஷயங்களை அது மறந்துபோனலும் மற்ற தேசங்கள் மறந்துபோகா. ஐரோப்பியர் அளவிறந்த துக்கங்களைச் சகித்து அருமையாய் அடைந்த சுதந்தரப் பேற்றை எந்நாளும் லக்ஷியமாக ஞாபகத்தில் வைத்திருக்கும் ஜாதியார், அவர்களுடைய சுதந்தர உணர்ச்சி எளிதில் அடங்கிப் போகக் கூடியதல்ல. சுதந்தரத்தை ஆவேசம் போல் மேற்கொண்ட காட்டு ஜாதியார் நாகரிகமின்மையால் எளிதில் அழிந்து போகக் கூடியவர்கள்; நாகரிகம் பெற்றிருந்தாலும் அது பாழடைந்த காரணத்தால் பௌருஷமடங்கிய ஜாதியார் பல்லிப்பிடுங்கிய பாம்பு போல ஆடக் கூடியவர்கள். ஐரோப்பியர் அப்படிப்பட்டவர்களல்ல. ஆகையால் அந்த ஜனங்களை ஜெர்மானியர் தங்கள் ராணுவ பலத்தால் பயமுறுத்தி அழிப்பதற்கோ அடக்குவதற்கோ முயற்சி செய்தால் அது எவ்வாறு சாத்தியமாகும்?

ஜெர்மானியர் செய்த தவறுகள்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்துடன் 1871-ம் வருஷத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அல்ஸேஸ், லொரேன் என்ற இரண்டு பிரஞ்சு மாகாணங்களிலுள்ள பிரஞ்சுக்காரரை அடக்கி யாள்வதற்காக ஜெர்மானியர் செய்த முயற்சிகள் எவ்வாறுயின? இன்று வரையில் 40-வருஷங்களுக்கு மேலாகியும் அங்குள்ள பிரஞ்சுக்காரர் ஜெர்மானிய ராஜாங்க முறைகளுக் கிணங்காமல் அமைதியின்றி யிருக்கிறார்கள். ஜெர்மானியர் இதை யறிந்தபோதிலும், பெல்ஜியம் ஸெர்வியா போன்ற சிறிய ராஜ்யங்களின் சுயேச்சாதிகாரத்தை அவர்கள் சற்றும் மதிக்கவில்லை. அப்படிப்பட்ட ராஜ்யங்களிலுள்ள ஜனங்கள் தங்கள் சுதந்தரத்தில் அளவற்ற பிரியங்கொண்டிருக்கிறார்களென்பதை ஜெர்மானியர் அறிந்து கொள்ளத் தவறி விட்

டார்கள். ஜெர்மானியர், மூன்று பெரியயுத்தங்களால் ஜாதீய உணர்ச்சியை அஸ்திவாரமாகக் கொண்டு, ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்த பிறகு, அம்மாதிரியாய் ஸ்லாவ் ஜாதியருக்கிருக்கிற உணர்ச்சிகளைத் துவைக்கத் தொடங்கியபடியால், ஜாதீய உணர்ச்சிக்கு உள்ள சக்தியை அறிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள். ஜெர்மானியர், தாங்கள் விசேஷமாய் விருத்தியடைந்ததைக் கண்டு செருக்குற்று நாலாபக்கங்களிலும் சத்துருக்களைக் கிளப்பினதோடு, தங்களுடன் உடன்படிக்கையால் கட்டுப்பட்ட நேசதேசமாகிய இடாலியின் உதவியைப்பெற முடியாமலிருந்தபடியால், ராஜதந்திரத்தை அறிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். ஜெர்மானியர், 19–ம் நூற்றாண்டில் வல்லரசுகளுடன் சேர்ந்து பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் ராணுவக் கொடுமையைத் தொலைத்த பிறகு, 20-ம் நூற்றாண்டில் தங்கள் ஏகாதிபத்தியமும் அந்தக் கொடிய நிலைமைக்கே வந்துவிட்டபடியால், தம்மையே அறிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள்.


12-வது அத்தியாயம்.

கடற்படை—
சண்டைக் கப்பலைப்பற்றிய விவரங்கள்


இரும்புக் கப்பலைக் கட்டத்தொடங்கிய காலம்.

சரித்திரம் தொடங்கிய காலமுதல் கடலில் யுத்தஞ் செய்வதற்காக கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன. 1800–ம் வருஷம் வரையில் யுத்தகப்பல மரத்தினால கட்டப்பட்டு, பாய்மரத்தினால் ஓடிக்கொண்டிருந்தது. அந்த காலத்தில் இரும்பினைச்செய்த பீரங்கிகளை உபயோகித்த போதிலும், யுத்தகப்பல் மரத்தினைச் செய்யப்பட்டு வந்தது. 1801-ம் வருஷத்தில் விருந்து, நீராவி யந்திரங்கள் கப்பல்களில் அமைக்கப்பட்டன. 1854-ம் வருஷத்தில், துருக்கி, கிரேட்பிரிட்டன், பிரான்ஸ் இம்மூன்று தேசங்களும் ருஷியாவுடன் யுத்தம் தொடங்கியபோது * அநேகமாய் பெரிய யுத்த கப்பல்களெல்லாம் நீராவி யந்திரத்தால் செலுத்தப்பட்டன. ஆயினும் சிறிய யுத்த கப்பல்கள் பாய் மரத்தைக் கொண்டும் செலுத்தப்பட்டு வந்தன. அந்த யுத்தத்தில் சண்டை செய்த கப்பல்களெல்லாம் மரத்தினால் கட்டப்பட்டவை. துருக்கிக்

* கிரிமியாயுத்தம் என்று சொல்லப்படும்




(13) சண்டைக் கப்பலிலுள்ள கோபுரங்களில் ஏற்றப்பட்ட பீரங்கிகள்.




(14) சண்டைக்கப்பலிலுள்ள பீரங்கிகள் பக்கவாட்டில் திரும்பி சுடுகின்றன.



(15) "டார்ப்பிடோ" என்று சொல்லப்படும் வெடி.



(16) பெரியபீரங்கியில் உபயோகிக்கப்படும் குண்டு.



(17) யுத்த கப்பல் சோதனை விளக்கை உபயோகித்தல்.

கடற்படையோடு ருஷியர் சண்டை செய்தபோது, ருஷியக் கப்பல்களிலிருந்த பீரங்கிகள் நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்ட குண்டுகளைச் சுட்டன. அந்தக் குண்டு எதன்மேலாவது தாக்கினால் அவ்விடத்தில் உடனே வெடித்து மிகுந்த சேதத்தை உண்டுபண்ணக்கூடியது. அவ்வாறு தாக்கியின் யுத்த கப்பல்கள் எளிதில் அழிக்கப்பட்டன. ஆகையால், புதிதாய் உபயோகிக்கப்பட்ட குண்டுகளைத் தாங்குவதற்கு மரக் கப்பல்கள் வன்மைகொண்டிருக்கவில்லையென்றும் இரும்புத்தகடால் அவைகளைச் சுற்றி மூடவேண்டுமென்றும் வல்லாரகள் அப்போது அபிப்பிராயப்பட்டார்கள். 1855-ம் வருஷத்தில் பிரஞ்சு கவர்ன்மெண்டு முதன் முதலாக இரும்புக் கப்பல்களைக் கட்டி அப்போது கடைபெற்று வந்த கிரிமியா யுத்தத்தில் அவைகளை உபயோகித்தார்கள். 1861-ம் வருஷத்தில் பிரிட்டிஷார் முதன்முதலாக இரும்புக் கப்பல் ஒன்றைக் கட்டினார்கள். அப்போது அநேகமாய் பெரிய யுத்த கப்பல்களெல்லாம் நீராவி யந்திரத்தால ஓட்டப்பட்டபடியால், அந்த இரும்புக்கப்பலிலும் நீராவி யந்திரம் அமைக்கப்பட்டது. அந்தக் காலமுதல் இன்று வரையில், இரும்புக் கவசத்தின் உறுதியையும் பீரங்கிகளின் வன்மையையும் அதிகரிப்பதற்கு அநேக முயற்சிகள் செய்யப்பட்டு இன்னும் அவை நின்றபாடில்லை.

பீரங்கியின் வன்மை அதிகரித்ததால், மரக்கப்பல் பயன்படாமற்போக, இரும்புக் கப்பல் கட்டப்பட்டதென்று சொன்னோம். அதைத் தவிர இன்னும் பல மாறுதல்கள் உண்டாயின.

பீரங்கிகளின் பளுவும் வேகமும் அதிகரிக்கவே, முன்பு சண்டைக்கப்பலில் 130 பீரங்கிகளிருந்ததற்குப் பதிலாக, இப்போது மிகவும் பயங்கரமான சண்டைக்கப்பலிலுங்கூட 30 பீரங்கிகளும் அதற்குக் குறைவாகவும் இருக்கின்றன. இந்த 30 பீரங்கிகள் செய்யக்கூடிய காசத்தில் நூற்றில் ஒரு பங்குகூட முன் இருந்த 130 பீரங்கிகளும் சேர்ந்து உண்டுபண்ணு. முன் பிருந்த யுத்த கப்பல்களில் மிகப் பெரியது 6000 டன் நிறைக்கு மேலில்லை. (90 மணங்கு கொண்டது ஒரு டன்.) இப்போது செய்யப்படுகிற சண்டைக் கப்பல 30,000 டன் பளுவுள்ளது. முன்பு பாய்மரம் போட்டு ஓடினபோது மணிக்கு 14 மைல்களுக்கு மேல் ஓடவில்லை. இப்போது நூதன யந்திரவிசையால் தள்ளப்பட்டு 26,000 டன் நிறையுள்ள சண்டைக் கப்பல் மணிக்கு 22-மைல் ஓடுகிறது.

யுத்த கப்பலின் முக்கிய லக்ஷணங்கள்.

ஆகையால் இக்காலத்தில் கட்டப்படும் யுத்த கப்பல்களில் முக்கியமான அம்சங்களைக் கவனிக்க வேண்டும். கப்பல் ஓடக்கூடிய வேகம் அதாவது எஞ்ஜின் திலக்கரி (சீமைக்கரி) முதலியவை, கப்பலிலுள்ள பீரங்கிகளின் வன்மை, சத்துருவின் பீரங்கிகளால

சேதமடையாமல் காப்பதற்குத் தேவையான இரும்புக் கவசம், ஆகிய இவைகள்தான் யுத்த கப்பலுக்குள்ள முக்கியமான லக்ஷணங்க ளாகும். அம்மூன்று விதங்களிலும் ஒரு கப்பலில் சுமை ஏற்றப்படுகிறது. அவைகளை அமைக்க வேண்டிய இடங்களும், கப்பலிலுள்ள மனிதர்களுக்கு வேண்டிய இடங்களும் சேர்ந்து கப்பலின் கட்டடமாகும். ஆகையால் ஒரு கப்பலின் மொத்த பளுவுக்குத் தகுந்தபடி அதன் அம்சங்கள் அமைக்கப்பட் டிருக்கும. அதன் மொத்த பளுவு இவ்வளவுக்கு மேலிருக்க வேண்டியதில்லை யென்று திட்டஞ் செய்து கொண்டால், அதிலிருக்க வேண்டிய அம்சங்களை இவ்வளவு நிறமை கொண்டதாய் அமைக்க லாமென்று நிச்சயஞ் செய்யலாம். யுத்தகப்பலின் ஒவ்வொரு பாகமும் சிறிதுகூடப் பிசகில்லாமல் குறித்த நிறையும் உறுதியுங் கொண்டதாய்க் கட்டப்படுகிறபடியால், அதை முன்னதாகவே நிறுத்து இவ்வளவு பளுவு கொண்டதென்று நிச்சயிக்கப்படுகிறது. ஏராளமான பளுவுள்ள யுத்தகப்பலை ஒரு யந்திரத்தைக்கொண்டு தூக்கவும் இறக்கவுஞ் செய்யலாம்; யுத்த கப்பலின் அடிப்பாகத்தில் பழுது பார்க்கும்போதும் அவ்வாறே கப்பலைத் தூக்கிவிடுகிறார்கள்.

இரண்டு பெரிய சண்டைக் கப்பல்களை உதாரணமாக எடுத்து அவைகளிலுள்ள முக்கிய அம்சங்களை விளக்குவோம். சண்டைக் கப்பல் தான் யுத்த கப்பல்களில் மிகப் பெரிய சினை. உலகத்தில் இது வரையில் கட்டப்பட்டிருக்கிற சண்டைக் கப்பல்களில் மிகப் பெரியது 30,000 டன் நிறைகொண் டிருக்கிறது. அதற்கும் அதிகமான பளுவுடைய கப்பல் இது வரையில் கட்டப்பட வில்லை. ஆகையால் அந்த நிறையுள்ள சண்டைக் கப்பலை உதாரணமாகக் கொள்வோம.

கப்பலின் மொத்த நிறை.	ஓட்டம். மணிக்கு.	கப்பலின் கட்டடம், எஞ்ஜின், நிலக்கரி, இவைகளின் நிறை.	பீரங்கிகள், இரும்புக்கவசம், இவைகளின் நிறை.
30,000 டன்	23 மைல்	17,155 டன்	12,845 டன்
30,000 டன்	30 மைல்	20,930 டன்	9070 டன்

இரண்டாவது சொல்லப்பட்டிருக்கிறகப்பலின் ஓட்டம் ஒரு மணிக்கு 7-மைல் வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஓட்டம் அதிகப்படுவதற்காக, எஞ்ஜின் நிலக்கரி இவைகளின் நிறை அதிகமாக்

கப்பட் டிருக்கிறதைக் கவனிக்கவும். பீரங்கிகள் இரும்புக்கவசம் இவைகளின் நிறை குறைக்கப்பட்டிருக்கிறதையும் கவனிக்கவும். கப்பல் அதிகவேகமாய்ச் செல்ல வேண்டுமானால், அதன் எஞ்ஜின் பெரிதாகவோ அல்லது அதிகமாகவோ அமைக்கப்பட வேண்டும். ஆகையால் எஞ்ஜினுடைய பளுவு அதிகமாகும். பெரிய எஞ்ஜினில் தீமூட்டுவதற்காக நிலக்கரி அதிகமாய் வேண்டும்; இதன் பளுவும் அதிகமாகும். பெரிய எஞ்ஜினையும் அதிக நிலக்கரியையும் வைப்பதற்குக் கப்பலில் அதிக இடம் தேவையாயிருக்கும். ஆகையால் கப்பலின் கட்டடத்து விஸ்தீரணமும் பளுவும் அதிகரிக்கும். ஆகையால் கப்பலின் ஓட்டத்தை அதிகரிப்பதற்காக, எஞ்ஜின், நிலக்கரி, கப்பலின் கட்டடம், இவைகளில் பளுவு அதிகப்படுவதால், மற்ற அம்சங்களில் பளுவைக் குறைக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், பீரங்கிகள் இரும்புக் கவசம் ஆகிய இவைகளின் நிறை குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு சண்டைக் கப்பலின் ஓட்டம் அதிகமாயிருக்கவேண்டுமானால், இரண்டாவது சொல்லப்பட்ட கப்பலைப் போல அதன் அம்சங்களை அமைக்கவேண்டும்; கப்பலின் பீரங்கி வன்மை அதிகமாயிருக்க வேண்டுமென்று விரும்பினால், முதலில் சொல்லப்பட்ட கப்பலைப்போல அதன் அம்சங்களின் நிறையைத் திட்டஞ் செய்ய வேண்டும். யுத்த கப்பல்கள் கட்டப்படும்போது அந்தந்த அம்சங்களின் முக்கியத்துக்குத் தகுந்தபடி கட்டப்படும்.

யுத்த கப்பலின் அளவுக்கு எல்லையுண்டு.


ஒரு சண்டைக் கப்பலைக் கட்டுவதற்கு சுமார் 3-கோடியே 75-லக்ஷம் ரூபாய் செலவாகிறது. ஆகையால் பெரிய சண்டைக் கப்பல்களை ஏராளமாய்க் கட்டி விடுவது இலேசான காரியமல்ல. அதற்கு ஏற்படும் செலவு முக்கியமாய் யோசிக்க வேண்டிய அம்சமாகும். ஒரு யுத்த கப்பலில் ஒரு அம்சத்தைக் குறைத்து மற்றொன்றை அதிகப் படுத்துவதைவிட எல்லா வற்றையும் மிகுந்த வன்மை கொண்டவையாய்க் கட்டக்கூடாதா? அவ்வாறு செய்வதால் கப்பலின் மொத்த நிறை பலமடங்கு அதிகமாகும். அது சாத்தியமானாலும், உசிதமல்ல. கப்பலின் மொத்த பளுவு ஏற்கெனவே 30,000 டன் ஆகியிருக்கிறது. ஆகையால், இன்னும் பெரிய கப்பல் கட்டுவதென்றால் அதைவிட அதிகச் செலவாகும் அவ்வளவு செலவு செய்து சில கப்பல்களையே கட்ட முடியும்; அதிகமாகக் கட்ட முடியாது. இரண்டாவது, கப்பல்கள் மிகப் பெரிதாயிருந்தால், இப்போதிருக்கிற துறை முகங்களில் சில கப்பல்கள் தான் தங்கியிருக்க முடியும். யுத்த காலங்களில் அருகிலுள்ள துறைமுகங்களில் திடீரென்று புகுந்து பர்தோபஸ்தாய்த் தங்கியிருக்கும்படி கோரிடும். அப்போது சாதாரண துறைமுகங்களில் அதிக கப்பல்கள் தங்கி நிற்க இடமிராது. மேலும் மிகப் பெரிய

கப்பலுக்குச் சேதம் நேரிட்டால், பழுது பார்ப்பது கஷ்டம். மூன்றாவது, மிகப் பெரிதாய் ஒரே கப்பல் கட்டுவதைக் காட்டிலும் சற்று சிறிதாய் இரண்டு கப்பல்களாகக் கட்டலாம். கப்பலின் நிறை வர வர அதிகமானால், அவ்வாறு அதிகமாவதற்குத் தகுந்தபடி எவ்வளவு செலவு ஆகவேண்டுமோ அதற்கு மதிகமாகச் செலவாகும். அதாவது, 20,000 டன் நிறை கொண்ட ஒரு கப்பலைக் கட்டுவதற்கு 3-கோடி ரூபாய் செலவானால், 40 000 டன் நிறையுள்ள கப்பலைக் கட்டுவதற்கு அதைப்போல இரண்டு பங்கு செலவுக்கும் அதிகமாகும், 6-கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவாகும். மேலும், இப்போது யுத்த நடவடிக்கைகளில் வர வர ஆபத்துக்கள் அதிகமாகி வருகின்றன. ஜலத்தில் மூழ்கிச் செல்லும் கப்பல்களும், ஜலத்துக்கடியில் செல்கிற டார்ப்பிடோ என்ற பயங்கரமான வெடிகளும், ஜலத்துக்குக்கீழ வைக்கப்படுகிற வெடிமருந்துச்சுரங்கங்களும் உபயோகிக்கப் படுவதால், கடல்யுத்தத்தில் ஆபத்துகள் எதிர்பாராத விதமாய் நேரிடுவதோடு, ஏராளமான சேதத்தையும் விளைவிக்கின்றன. ஆகையால், மிகப் பெரிதாய் ஒரே கப்பலாகக் கட்டினால், அது எதிர்பாராத ஆபத்துக்கு உள்ளாகும்பக்ஷத்தில் கூடுமானபோதில் ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் உண்டாகி விடும். அதிலுள்ள ஏராளமான பிரங்கிகளும், 1000 - பேருக்கு மேலுள்ள தேர்ச்சி பெற்ற மானுஷிகளும் போய், அதனால் கடற்படையின் மொத்த வன்மையே திடீரென்று குறைவுபடும். ஒரு கப்பலுக்குப் பதிலாய் மிதமான அளவுள்ள இரண்டு கப்பல்களாக் கட்டினால், ஒன்று சேதமானாலும் மற்றொன்று பின் தங்கும். மூன்றாவது, அதிக ஒட்டமும் அதிக பிரங்கிவன்மையும் ஒரே கப்பலில் அமைத்து விட்டால், அநேக சமயங்களில் முழுப்பலனையும் அடைய முடியாமற் போய் விடும். யுத்தகளத்தின் ஓர் பாகத்தில் அதிக ஒட்டங்கொண்ட கப்பல்களால் செய்யப்பட வேண்டிய வேலைகளிருக்கும்; மற்றொரு பாகத்தில் அதிக பிரங்கி வன்மை கொண்ட கப்பல்களால் நடக்க வேண்டிய வேலைகளிருக்கும்; அச்சமயத்தில் ஒரே கப்பல் எகாலத்தில் வேவ்வேறான இடங்களில் காரியத்தைச் செய்து முடிப்பது சாத்திய மல்ல. ஆகையால், அந்தந்தக் காரியங்களுக்குத் தகுந்தபடி அந்தந்த அம்சங்களில் பலப்படுத்திப் பிரத்தியேகமாய்க் கப்பல்கள் கட்டப்பட வேண்டும்.


இந்தக் காரணங்களால் யுத்த கப்பல்களின் மொத்த நிறையை அளவில்லாமல் அதிகப்படுத்துவது உசிதமல்ல அவைகள் பலவித மாய்ச்செய்யப்பட்டு, அந்தந்த வேலைகளுக்குத் தகுந்தவாறும், செலவுக்குத் தகுந்தவாறும் கப்பல்கள் ஒவ்வொரு தினுசில் அதிகமாகவோ குறைவாகவோ கட்டப்படுகின்றன.

(இதன் தொடர்ச்சி 2-ம் பாகத்தில் வெளியாகும்.)


K. CHIDAMBARANATHA MUDALIAR,
5 FEB 1815
SHIYALI.



சண்டைக் கப்பலிலுள்ள பீரங்கிகள் முனைப்புறத்தை நோக்கிச் சுடுவதற்குத் தயாராயிருப்பதை இந்த கோர்த்தியான படம் காண்பிக்கிறது.




இது கடலில் மிதந்து செல்லக்கூடிய கப்பல்துறை. அந்தத்துறையில் ஒரு யுத்த கப்பல் பழுதுபார்ப்பதற்காக தூக்கி நிறுத்தப்பட்டிருக்கிறது.




யுத்த கப்பல் கட்டப்பட்டு வருகிறது.



ஆகாய விமானங்களைச் சுடுவதற்காக யுத்த கப்பலில் ஏற்றப்படும் பீரங்கி.



டார்ப்பிடோ ஜலத்துக் கடியில் பாயுமபோது அதன்மேல் காணப்படுகிற நுரை.



யுத்த கப்பலில் கடல் மட்டத்துக் கடியிலிருந்து டார்ப்பிடோ சுடப்பட்டு, அ தி ஜலத்துக்குக் கீழாக ரயிலைவிட வேகமாய்ப் பாய்கிறது.

பலசீனுசான யுத்த கப்பல்கள்.

கடலில் யுத்தம்செய்யும்போது பலவிதமான காரியங்கள் நிறை வேறும்படியா யிருக்கின்றன. இரண்டு கூஷிகளின் கடற் டைகளும் சண்டையை நடத்தத் தொடங்கிவிட்டால் பீரங்கிகளின் திறமையும் இரும்புக் கவசத்தின் உறுதியும் சத்துருவை அழிப்பதற்குச் சாதக மா யிருக்கும்.. அச்சமயம் கப்பலின் ஓட்டம் அவ்வளவாகப் பயன் படாது. யுத்த களத்துக் கப்பால் வெகு தூரத்திலிருந்து வீரை வாய்த் துணைக்கு வருவதற்கும், கோல்ஷி யடைந்து ஓடுகிற சத் துருவைத் தீர்த்து வதற்கும், வேறுவிதமான கப்பல்கள் தேவையா யிருக்கும். அவ்வேலைகளுக்குப் பீரங்கியின் வன்மை சிறிது குறை வா யிருந்தாலும், ஓட்டத்தை அதிகமாகவுள்ள கப்பல்கள் மிகவும் உபயோகமா யிருக்கும். சத்துருவின் இருப்பிடத்தைத் தேடிச் சென்று இரகஸ்யமாகவும் சீக்கிரமாகவும் அறிந்துகொண்டு வருவ தற்கும், சத்துருவின் கடற்படைக்குப் பலவிதங்களில் இடைஞ்சல் களைச் செய்துகொண் டிருப்பதற்கும், சத்துருவின் வியாபாரக் கப்பல்களை அழிப்பதற்கும் வேறுவிதமான கப்பல்கள் தேவையா யிருக்கும். அந்தக் காரியங்களுக்கு இரும்புக் கவசத்தால் அதிக பயனுண்டாதாகையால் பீரங்கிகளால் அதிக வேலையைச் செய்யக் கூடிய கப்பல்கள் கட்டப்படவேண்டும்.

ஆகையால் ஒரு தேசத்துக் கடற்படையில் பலவிதமான யுத்த கப்பல்கள் இருக்கின்றன. யுத்த கப்பல்களை நான்கு பெரிய பாகங்களாகப் பிரிக்கலாம். (1) சண்டைக் கப்பல், (2) குரூஸர் கப் பல், (3) டார்ப்பிடோ கப்பல், (4) சப்மரின் (நீரில் முழுகும்) கப்பல். ஒவ்வொரு தினுசப்பற்றி விவரமாய்ச் சொல்வோம்.

டிரேட்னூட் என்ற சண்டைக் கப்பல்.

யுத்த கப்பல்களைப் பற்றி இனிச் சொல்லப்படும் விவரங்கள் அநேகமாய் பிரிட்டிஷ் கப்பல்களைப்பற்றியவை யாகும். பிரிட்டிஷ் கடற்படையைப்பற்றி எல்லா விவரங்களும் தெரிவதுபோல் மற்ற தேசத்துக் கடற்படையைப்பற்றித் தெரிவதில்லை. மேலும் பிரிட்டி ஷார் கடற்படையில் அனேக நூற்றாண்டுகளாக முதன்மை பெற் றிருப்பதால் அநேகமாய் அவர்களுடைய முறைகளை யெல்லாம் மற்ற தேசங்கள் அனுசரிக்கின்றன. அவ்வாறில்லாமல் விதிவிலாசங்கள காணப்படும்போது அவைகளைப்பற்றி அங்கங்கே சொல்லப்படும்.

சண்டைக்கப்பலென்பது யுத்த கப்பல்களில் மிகப்பெரிய தினுசாகும். 1905வருஷத்தில் பிரிட்டிஷ் கடற்படை ஆபீஸ், டிரெட்னூட் என்ற பேருடைய மிகப்பெரிய சண்டைக் கப்பலைக் கட்ட ஆலோசனை செய்து 1907–ம் வருஷத்தில் கட்டி முடித்தார்கள். அதன் பிறகு கட்டப்பட்ட பெரிய சண்டைக் கப்பல்கள் அந்த கப்பலைப் போலிருக்கிறபடியால் அவைகள் டிரெட்னூட் தினுசைச் சேர்ந்த தென்று சொல்லப்பட்டு வருகின்றன.

1907-ம் வருஷம் முதலில் கட்டப்பட்ட டிரெட்னூட் கப்பலின் விவரம் பின்வருமாறு:—

கப்பலில் ஏற்றப்பட்ட பெரிய பீரங்கிகள்:—12 அங்குலம்குறுக்களவுள்ள குழாய் கொண்ட பீரங்கிகளில் 10 வைக்கப்பட்டன.

சிறிய பீரங்கிகள்:—12 பவுண்ட் நிறையுள்ள குண்டுகளைச் சுடுகிற பீரங்கிகளில் 24 வைக்கப்பட்டன. (25 பவுண்ட் கொண்டது ஒரு மணங்கு)

இரும்புக் கவசம்:— 11 அங்குல கனமுள்ள இரும்புத்தகடால் கப்பலின் பெரும்பாகமும் மூடப்பட் டிருந்தது. கப்பலின் மூணியில் அந்த இருப்புத் தகடின் கனம் குறைக்கப்பட்டது.

ஓட்டம்:—மணிக்கு 23 மைல் வேகம் செல்லக்கூடியது. இந்தக் கப்பலில் 2700 டன் நிறையுள்ள நிலக்கரி ஏற்றக்கூடும்; அவ்வளவு கரியை எரிப்பதால், மிதமான வேகத்தில் அது 5800 மைல் சுற்றலாம். மணிக்கு 21 மைல் வீதம் ஓடிக்கொண்டே பிருந்தால், 3500 மைல் செல்லக்கூடும்.

டிரெட்னூட் கப்பலின் விசேஷமென்ன ?

டிரெட்னூட் கப்பல் செய்யப்படுவதற்குமுன், சண்டைக் கப்பல்களில், பெரிய பீரங்கிகளிலுள்ள எல்லாவித தினுசுகளும் கலந்து வைக்கப்பட்டன அதாவது 12 அங்குலம், 10 அங்குலம், 9 அங்குலம் குழாய்களைக் கொண்ட பலதினுசான பெரிய பீரங்கிகள் வைக்கப்பட்டன. ஆனல் டிரெட்னூட் கப்பலில், எல்லாப் பெரிய பீரங்கிகளும் 12 அங்குல தினுசாகவே வைக்கப்பட்டன. டிரெட்னூட் கப்பலில் வைக்கப்பட்ட எல்லா பீரங்கிகளின் நிறையும், அதற்கு முன்னிருந்த சண்டைக் கப்பலில் ஏற்றப்பட்ட எல்லாபீரங்கிகளின் நிறையும் ஒன்று தான். மொத்த பளுவு ஒன்றுபிருந்தாலும், டிரெட்னூட்டில் சிறிய பீரங்கிகள் அதிகமாய்த் தேவையில்லை யெனக் கருதி, பீரங்கிகளுள் மிகப் பெரிய தினுசில் எவ்வளவு ஏற்ற முடியு

மோ·அவ்வளவும் ஏற்றப்பட்டது. இது தான் டிரெட்னுட் கப்பலில் முக்கியமான விசேஷம். அதனால் சண்டைக் கப்பலின் பீரங்கி வன்மை பல மடங்கு அதிகரித்தது; அது முதல், எல்லா தேசங்களும் டிரெட்னுட் தினுசில் சண்டைக் கப்பல்களைக் கட்ட ஆரம்பித்தன.

1907-ம் வருஷம் டிரெட்னுட் என்ற சண்டைக் கப்பல் கட்டப்பட்ட பிறகு, அநேக திருத்தங்களைச் செய்து, வலுவிலும் அளவிலும் அதைவிட அதிகமாயுள்ள 'டிரெட்னுட்' கப்பல்களை வல்லரசுகள் கட்டியிருக்கிறார்கள். அவைகள் சூப்பர்—டிரெட்னுட் என்று சொல்லப்படுகின்றன. அதாவது, உயர்தரமான டிரெட்னுட், பெரிய தினுசான டிரெட்னுட் என்று அர்த்தம். சண்டைக் கப்பலின் விவரங்களைத் தனித்தனியாய் எடுத்துச் சொல்லி அவைகளை விருத்தி செய்ததின் நோக்கமும் விதமும் இனிக் கூறுவோம்.

முதல்தரமான பீரங்கிகள்

பெரிய பீரங்கிகள் அதாவது முதல் தரமான பீரங்கிகள் சத்துருவின் கப்பலை அழிப்பதற்காக ஏற்றப்படுகின்றன. சத்துருவின் கப்பலை உடைப்பதற்கு எவ்வளவு பெரிய பீரங்கிகள் வேண்டும்? முதலில் சத்துருக்கள் எவ்வளவு தூரத்திலிருந்துகொண்டு சண்டை செய்வார்களென்று நிச்சயித்தால் பிறகு அவர்களுடைய கப்பலை அழிப்பதற்கு எவ்வளவு பெரிய பீரங்கிகள் தேவையென்பதைத் திட்டஞ் செய்யக்கூடும். நீர்மட்டத்திலிருந்து 30-அடி உயரத்தில் ஒருவன் நின்று கொண்டால் சுமார் 10,000-ம் கஜம் தூரத்துக்கு மேல் எந்த வஸ்துவும் கண்ணுக்குப் புலப்படாது. (1760-கெஜங் கொண்டது ஒரு மைல்) ஒரு சண்டைக் கப்பலின் மேடை அதாவது மேல்தளம் நீர்மட்டத்திலிருந்து சுமார் 30-அடி உயரத்தில்தானிருக்கும். மேலும், கடலில் மேகம், பனி முதலியவைகளால் தோற்றம் குறைந்து போவது சகஜம். ஆகையால் 9000-கெஜத்துக்கு அதிக தூரத்தில் இருந்து கொண்டு சண்டை செய்ய முடியாது. பீரங்கிகளைக் குறிபார்த்துச் சுடுவதற்கு அநேக தூதன உபாயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால்தான், அந்த 9000-கெஜ தூரத்திலிருந்து பீரங்கிகளைத் தவறில்லாமல் சுட்டுச் சண்டைசெய்வது இக்காலத்தில் சாத்தியமாகிறது. ஆகையால் 9000 கெஜ தூரத்திலுள்ள யுத்தகப்பலின் இரும்புக் கவசத்தைத் துளைத்துவிடக்கூடிய பீரங்கியிருந்தால் போதுமானதென்று

ஏற்படுகிறது. ஆனல் பீரங்கிகளைப் பெரிதாய்ச் செய்யத்தொடங்கிய வுடன், அது ஒரு அளவோடு நிற்கவில்லே. சத்துருவின் கப்பலைச் சிக்கிரத்தில் எளிதாய் அழிப்பதற்கு வரவரப் பெரிதாகப் பீரங்கிகள் செய்யப்பட்டன.

பீரங்கியின் வன்மை.

பீரங்கிகளின் வன்மையை இரண்டு வழிகளில் விருத்தி செய்ய லாம். முதலாவது பீரங்கிகளிலிருந்து சுடப்படுகிற குண்டுகளை அதிக உறமாயச் செய்யலாம். இரண்டாவது. பீரங்கிகளின் குழா யைப் பெரிதாகச் செய்து அதில் அதிக கனமுள்ள குண்டுகளைச் சுட லாம். ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் உபயோகித்த 12-அங்குல பீர ங்கி, 650 பவுண்டு நிறையுள்ள குண்டைச் சுட்டு, 5000-கெஜ தூரம் சென்று 18½ அங்குல கனமுள்ள இருப்புத் தகடைத் துளைக் கக் கூடியது. அந்த 12-அங்குல பீரங்கியின் வன்மை இப்போது விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. அந்த பீரங்கியின் நீளம் 40-அடியி லிருந்து 50-அடியாகச் செய்யப்பட்டது. அதில் சுடப் படுகிற குண்டைச் சிறிது நீளமாக்கி, அதனுள்ளே வடிமருந்தை அதிகமாகவைத்து அதன் பருமன் 850 பவுண்டாக அதிகரிக்கப் பட்டது. அதனல் அந்த 12 அங்குல பீரங்கி 5000 கெஜ தூரத்தில் 16 அங்குலத் தகடைத் துளைத்து விடுகிறது. அதன் பிறகு அந்த குண்டு மற்றொரு விதமாய்ச் செய்யப்பட்டது. அதன் நிறையை 850-பவுண்டுக்கு மேல் அதிக மாக்காமல், அதற்குள் வைக்கப் படுகிற வெடி மருந்தின காரம் அதிகரிக்கப் பட்டது. ஆகையால் அதே 12 அங்குலக் குழாயுள்ள பீரங்கி, இப்போது 5000 கெஜ தூரத்தில 19 அங்குலத் தகடைத் துளைத்துவிடும். அந்த பீரங்கியால் சுடப்படுகிற குண்டின் நிறை 850 பவுண்ட்; அது மாற்றப்படவில்லே. அந்த குண்டில் அதிகவேகக்கொண்ட வெடி மருந்து வைக்கப்பட்டது. ஆனல் அதற்கு மேல் அந்தப் பீரங்கியின் வன்மையை அதிகரிக்க முடியவில்லே. அந்த குண்டின் வேகத்தை இன்னும் அதிகப் படுத்தினல பீரங்கி சிக்கிரத்தில் உஷ்ணமடைந்து அதிக நேரம் உபயோகிக்கப் பயன்படுவதில்லே. அதசிக்கிரத்தில் பழு தாகிவிடுகிறது. இப்போதுள்ள 12 அங்குல பீரங்கி, 5000 கெஜதூர த்திலுள்ள 19 அங்குல கனமுள்ள இரும்புத் தகடைத் துளைத்து விடும்; 10,000 கஜதூரத்தில் சுட்டால், 13½ அங்குல கனமுள்ள தகடைத்துளைக்கும். (தூரச்செல்லச்செல்ல குண்டின் வேகம் குறை

யுமென்று சொல்லவேண்டியதில்லை.) ஆகையால், ஒரு பீரங்கியின் வன்மையை அறிந்துகொள்வதற்கு, அது எவ்வளவு தூரம் சுடக் கூடுமென்று கணக்கிடுவதில் பயனில்லை. அதன் குண்டு துளைக்கக் கூடிய சக்தியைத் தெரிந்துகொள்ளவேண்டும். இது வரையில் கட்டப்பட்ட சண்டைக்கப்பலின்மேலுள்ள இரும்புக்கவசம் 12 அங்குல கனத்துக்கு மேலில்லை. இவ்வநுஷம் கட்டப்பட்டு வருகிற கப்பலுக்கு 13½ அங்குலத் தகடுபோடப்படும். ஆகையால் இக்காலத்தில் கட்டற்சண்டை 9000 கஜதூரத்தில் நடக்குமாகையால் 12 அங்குல பீரங்கியால் இது வரையில் கட்டப்பட்ட சண்டைக் கப்பல்களை அழிப்பதற்குப்போதுமானதென்று ஏற்படுகிறது. ஆனல் முன்புசொல்லிய படி, சத்துருவின் கப்பலை சிக்கிரத்தில் எளிதாய் அழிப்பதற்கு மற்றும் பெரிய பீரங்கிகள் செய்யப் பட்டுவந்தன.

ஆகையால், 13½ அங்குலக் குழாயுள்ள பீரங்கிகள் செய்யப்பட்டன. பிறகு 14 அங்குல பீரங்கிகளும் செய்யப்பட்டன. இவ்வருஷத்தில், 15 அங்குல பீரங்கியும் செய்யப்பட்டு உபயோகத்திலிருக்கின்றன. ஆனல் 15 அங்குல பீரங்கி மிகவும் பளுவாயிருப்பதால், சண்டைக் கப்பலில் அந்த இனுசு பீரங்கிகள் குறைவாய் ஏற்றப்படுகின்றன.

பெரிய பீரங்கிகளின் விவரம்.

பீரங்கி.	அதன் நிறை.	அதன் நீளம்.	குண்டின் நிறை.	10,000 கஜதூரத்தில் துளைக்கக்கூடிய தகடு.
15 அங்குலக் குழாயுள்ளது.	—	45 அடி	1950 பவுண்ட்	18 அங்குல கனமுள்ள இரும்புத்தகடு
14 அங்குலம்.	—	45 அடி	1400 ,,	16 அங்குலம் ,,
13½ அங்குலம்.	67 டன்	45 அடி	1250 ,,	14 ,, ,,
12 அங்குலம்.	50 டன்	50 அடி	850 ,,	13½ ,, ,,

இந்த 12 அங்குல பீரங்கியில் ஒரு நிமிஷத்தில் இரண்டுமுறை குண்டுகளைக் கெட்டித்துச் சுடலாம். அதாவது ஒரு நிமிஷத்துக்கு இரண்டு குண்டுகள் வீதம் சுட்டுக்கொண்டிருக்கலாம்.

மற்ற பீரங்கிகள் ஒரு நிமிஷத்தில் ஒரு முறைதான் சுடக் கூடியவை.

பீரங்கிகள் அதிகப் பெரிதாயிருந்தால் அதைச் சுமிவதற்கு அதிக நேரஞ்செல்லும்.

13½ அங்குல பீரங்கியில் சுடப்படுகிற ஒரு குண்டின் விலை சுமார் 15,000 (பதினைந்தாயிரம்) ரூபாய். ஆகையால் இத்தப் பெரிய பீரங்கிகள் யுத்தத்தில் சுடும்போது, எவ்வளவு செலவாகிறதென் பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இந்தப்பெரிய பீரங்கிகளிலிருந்து சுடப்படும் குண்டின் பரும னும் உயரமும் நமது சித்திரப்படத்தில் (முதலாவது பாகத்தில்) காட்டப்பட் டிருக்கின்றன. அது ஏறக்குறைய ஒரு ஆள் உயரமிருக் கிறது. ஒரு ஆளின்நிறை சுமார் 120 பவுண்ட் இருக்கும். ஒரு குண்டு சுமார் 16 ஆள் பளுவு கொண் டிருக்கிறது. அந்த குண்டைக் கை யினால் எடுத்துப் பீரங்கியில் நுழைக்க முடியா தாகையால் அந்த வேலை யந்திரத்தால் செய்யப்படுகிறது.

சண்டைக் கப்பலில் எத்தனை பீரங்கிகள் ஏற்றப்படுகின்றன?

சண்டைக் கப்பலில் அந்த பெரிய பீரங்கிகளில் இத்தனை ஏற் றுவதென்பது இன்னும் திட்டப்படவில்லை. சண்டைக் கப்பலில் ஏற்றக்கூடிய சுமைக்குத் தக்கவாறு அதில் பீரங்கிகள் ஏற்றப்படு கின்றன. பீரங்கிகளைத்தவிர, அதிநேக யந்திரங்களும் ஆயுதங்களும் கட்டடங்களும் அதில் அமைக்கவேண்டி மாகையால், அதில் ஏற்றக் கூடிய பீரங்கிகள் குறித்த பளுவுக்கு மேற்படாமலிருக்க வேண்டும். பீரங்கிகளோடுகூட, அவைகளிலிருந்து சுடவேண்டிய குண்டுகளை யும் தேவையான அளவு ஏற்றவேண்டும். ஒவ்வொரு குண்டும் 1000 பவுண்டுக்குமேல் பளுவாயிருப்பதைக் கவனிக்கவேண்டும். ஆகை யால், மூன்றுருஷங்களுக்கு முன்னிலிருந்த சண்டைக் கப்பலில் 130 பீரங்கிகள் ஏற்றப்பட, அக்கப்பலைவிடப் பலமடங்கு பெரிதாய் இக்காலத்தில் கட்டப்படுகிற சண்டைக்கப்பலில் 40 பீரங்கிகளுக்கு மேலில்லை. பீரங்கியின் பளுவு அதிகமானால், அவைகளைக் கப்பலில் குறைவாகவே ஏற்றவேண்டும். மேலும், சண்டைக்கப்பலின்மேடை யில் எவ்வளவு இடமிருக்கிறதோ அதற்குள்ளாகவே பீரங்கிகளை அமைக்க வேண்டும். அந்தமேடையின் அகல நீளத்துக்குத் தகுந்த படிதான் பீரங்கிகளை அமைக்கலாம். பெரிய பீரங்கிகளை

மேடையின்மீதுதான் வைக்கவேண்டும்; கப்பலின் உள் புறத்தில் வைத்தால், பீரங்கிகளை நாலாப்பக்கங்களிலும் திருப்பி சுட முடியாது. ஒவ்வொரு பீரங்கியின் நீளம் 45 அடியாகிறதென்பதைக் கவனிக்கவேண்டும். கப்பலின் மேடைபின்மீது பீரங்கிகளை நெருக்கமாய் வைக்கக்கூடாது. ஏனெனில், பீரங்கியைச் சுடும்போது உண்டாகிற பயங்கரமான அதிர்ச்சியும் சப்தமும் நெருப்பும் அருகிலிருப்பவர்களால் தாங்க முடியாது. பீரங்கியைச்சுடுகிறவர்கள் காதுகளை மூடிக்கொள்வதற்காக அநேக உபாயங்கள் இருக்கின்றன. ஆயினும் அவர்களுடைய நரம்புகள் அதிர்ச்சியடையாமலிருப்பது அவசியமாகு மாகையால், பீரங்கிகளை அதிக இடைவெளி விட்டு அமைக்கவேண்டும்.


8 முதல் 12 பீரங்கிகள்வரையில் ஒரு சண்டைக்கப்பலில் ஏற்றுகிறார்கள். சண்டைக்கப்பலென்பது யுத்த கப்பல்களில் மிகப் பெரிய தினுசாகும். இங்கு நாம் பெரிய டிரேட்நாட் என்ற சண்டைக் கப்பல்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறோம். முன்பு சொல்லப்பட்டபடி அதன் விசேஷமென்னவென்றால் பீரங்கிகளுள் மிகப்பெரிதாயுள்ள தினுசில் எவ்வளவு ஏற்றமுடியுமோ அவ்வளவும் அதில் ஏற்றப்படுகின்றன. மிகவும் சமீப காலத்தில் கட்டப்பட்ட மிகப்பெரிய சண்டைக் கப்பல்களைப்பற்றிச் சொல்வோம். இவ்வருஷத்தில் கட்டப்படும் ஒரு பிரிட்டிஷ் சண்டைக் கப்பலில் 15-அங்குலக் குழாயுள்ள எட்டு பீரங்கிகள் ஏற்றப்படும். ஒரு பிரஞ்சு சண்டைக் கப்பலில் 13½-அங்குலக் குழாயுள்ள 12-பீரங்கிகள் ஏற்றப்பட்டன. ஒரு ஜப்பான் சண்டைக் கப்பலில் 14-அங்குலக் குழாயுள்ள 10-பீரங்கிகள் ஏற்றப்பட்டன. அந்த மூன்று சண்டைக் கப்பல்களிலுள்ள பீரங்கிகளின் சக்தி வெவ்வேறு பிரகாரமிருக்கிறது. பீரங்கிகளின் சக்தியைக் கணக்கிடுவதற்கு ஒரு முக்கியமான வழி, அவைகள் சுடக்கூடிய குண்டுகளின் நிறையைத் திட்டஞ் செய்வதாகும். மேற்சொல்லிய பிரிட்டிஷ் கப்பலில், ஒவ்வொரு 15-அங்குல பீரங்கியும் 1950 பவுண்ட் நிறையுள்ள குண்டைச் சுடுமாகையால், அவ்விதமான 8 பீரங்கிகள், 15,600 பவுண்ட் நிறையுள்ள குண்டுகளை ஒரு குறித்த நிமிஷத்தில் சத்துருவின் மீது எறியும். அதே மாதிரி கணக்கிட்டால், பிரஞ்சுகப்பல் 15000 பவுண்ட நிறையுள்ளகுண்டுகளையும், ஜப்பான் கப்பல், 14,000 பவுண்ட் நிறையுள்ள குண்டுகளையும் எறியும். ஆகையால், பிரிட்டிஷ் கப்பலில் பீரங்கிகள் எண்ணிக்கையில்

குறைவா யிருந்தாலும் அவைகளின் சக்தி அதிகமா யிருப்பதைக் கவனிக்க வேண்டும். யுத்த கப்பலின் வன்மையை அறியவேண்டு மானால், அதிலுள்ள பீரங்கிகளின் தொகையை மாத்திரம் கணக் கிட்டால் போதாது; அவைகள் சுடக்கூடிய குண்டுகளின் மொத்த நிறையைக் கவனிக்கவேண்டும்.


பீரங்கிகள் சக்தியில் குறைவுபடாமல் எண்ணிக்கையில் குறைவு பட்டிருந்தால் அது விசேஷ சாதகமாகக் கருதப்படும். ஏனெனில் பீரங்கிகள் குறைவா யிருந்தால் அவைகளைச் சுடுவதற்கு வேண்டிய ஆள்களும் குறைவுபடும். இக்காலத்திலுள்ள பெரிய பீரங்கிகளின் யந்திரம் மிகவும் நுட்பமாயும் சிக்கலாயு மிருப்ப தாலும், இக்காலத்துச் சண்டைகள் வெகு தூரத்தில், ஓட்ட நடையில் செய்யப்படுவதாலும், மிகவும் தேர்ச்சி பெற்ற ஆள்கள் தான் பீரங்கிகளைக் கையாடவேண்டும். அப்படிப்பட்ட ஆள் கள் கிடைப்பது அரிது. ஒரு பெரிய சண்டைக் கப்பலில் 1200 முதல் 900 பேர் வரையில் இருப்பார்கள். கப்பலிலுள்ள ஆள்களைக் கூடுமான வரையில் குறைத்துவிட இக்காலத்தில் முயற்சி செய்யப் பட்டு வருகிறது. மேலும், கப்பலில் பீரங்கிகளைச் சுடுபவர்கள் குறைவாயிருந்தால், சண்டை நடக்கும் போது கப்பற் றலைவர்கள் பீரங்கி யாட்களுக்கு எளிதாய் யுக்தி யோஜனைகளைச் சொல்லிக் கொடுத்து அவர்களைச் சுலபமாய் ஆளலாம்.

பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்களில் சாதாரணமாக மற்ற தேசத் தாரின் கப்பல்களைவிடப் பெரியபீரங்கிகளின் தொகை சிறிது குறை வாகவே யிருக்கும். இதற்கு முக்கியமான காரணம் பிரிட்டிஷ் கப்ப லின் ஓட்டம் அதிகரிக்கப் படுகிறது. பிரிட்டிஷார் தங்கள் கப்பல் களின் ஓட்டம் அதிகமாயிருப்பது அவசியமென்று கருதுகிறார்கள். இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் செல்லி யிருப்பதை ஞாபகப் படுத்திப் பார்த்தால், கப்பலின் ஓட்டத்தை அதிகரிக்க வேண்டு மானால் பீரங்கிகளின் பளுவு குறையவேண்டுமென்பது விளங்கும். ஓட்டத்துக்கு வேண்டிய அம்சங்களே அதிகப் படுத்தினால் அதற் கேற்றபடி பீரங்கி முதலியவைகளின் பளுவு குறையவேண்டும்.


இக்காலத்தில் யுத்த கப்பல்கள் 9000-கெஜ தூரத்தில் விலகி யிருந்து சண்டை செய்யுமென்றும், அந்த தூரத்தில் 12 அங்குலக் குழாயுள்ள பீரங்கி சத்துருவின் கப்பலைச் சேதப்படுத்தக் கூடியதா னும், வர வர பெரிய பீரங்கிகளைச் செய்து வருகிறார்களென்றும், அந்த பெரிய பீரங்கிகள் மிகவும் பளுவா யிருப்பதால் எண்ணிக் கையில் குறைவாய் ஏற்றப்படுகின்றன வென்றும், பெரிய பீரங்கி



(3) பிரஞ்சு சண்டைக் கப்பல்.



(4) முதல் வகுப்பு குரூப்ஸர் கப்பல்.




(5) இரண்டாம் வகுப்பு குரூப்ஸர் கப்பல்.

கள் அவ்வாறு குறைவாயிருக்காலும் அதிக சக்திகொண்டிருக்கின்றன வென்றும் சொல்லி வந்தார். ஆகையால் 15-அங்குல பீரங்கிகளை யுடைய கப்பல் சத்துருவின் கப்பலைச் சீக்கிரத்தில் அழிக்கக் கூடிய சக்திபெற் றிருக்கின்றது.

பீரங்கிகள் எவ்வாறு ஏற்றபடுகின்றன.

இப்போது அந்தப் பெரிய பீரங்கிகள் சண்டைக் கப்பலில் எவ்வாறு ஏற்றப்பட் டிருக்கின்றன வென்பதைப் பற்றிச் சொல்வோம். சண்டைக்கப்பலில் பீரங்கிகளை அமைக்கும்போது, முக்கியமாய்க் கவனிக்கப்படுகிற தென்னவென்றால், அவைகள் நாலா பக்கங்களிலும் திரும்பிச்சுடக்கூடியவையா யிருக்கவேண்டு மென்பதுதான். முக்கியமாய்க் கப்பலின் இரண்டுபக்கவாட்டிலும் திரும்பிச் சுடும்படியாகப் பெரிய பீரங்கிகளனைத்தும் அமைக்கப்படுகின்றன.

இரும்புக் கவசத்தால் மூடப்பட்ட சிறிய கோபுரங்களில் அந்த பீரங்கிகள் வைக்கப்படுகின்றன. அவ்வாறு வைக்கப்பட்டிருப்பதை முதல் பாகத்தில் 183-ம் பக்கத்தில் வெளியான சித்திரப் படத்தில் காணலாம். அந்த கோபுரத்தின் மேல்பாகம் வட்டமாய்ச் சுற்றக்கூடியது. அந்த சக்கரத்தில் மூன்றில் இரண்டு பாகம் வரையிலிருக்கும். அதிலுள்ள பீரங்கிகளும் கூடச் சுழலும். இவ்விஷயம் பின்வரும் படங்களில் விளக்கப்பட் டிருக்கிறது.



1-வது படம்:

ஒரு சக்கரத்தை 3 சரி பாகங்களாகப் பிரித்துக் காட்டப்பட் டிருக்கிறது.

2-வது படம்:

கோபுரத்திலுள்ள பீரங்கிகள் மத்திய ஸ்தானத்தில் நிறுத்தப்பட் டிருக்கிறது. (கோபுரத்தின் சித்திரப்படத்தை முதல்பாகத்தில் 183-ம்பக்கத்தில்பார்க்க) பீரங்கிகள் இரண்டுபக்கங்களில் திரும்பக்கூடியதூரத்தை இங்கே மெல்லிய கோட்டால் காட்டப்பட் டிருக்கிறது. இந்த மெல்லிய வட்டமான கோட்டுக் குள்ளே ஒரு சக்கரம் கனமான கறுப்புக்கோட்டால் போடப்பட் டிருக்கிறது. இது கோபுரத்தின் அடிப்பாகம். அந்த பாகம் கப்பலில் உறுதியாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கறுத்த சக்கரத்துக்குள்ளே, ஒரு வளைந்த கறுப்புக் கோட்டால் போடப்பட்ட உருவமிருக்கிறது. அது கோபுரத்தின் மேல் பாகம். இந்த பாகந்தான் சுழலக்கூடியது. இந்த பாகத்துக்குமேலே இரண்டு பீரங்கிகளும் ஏற்றப்பட் டிருக்கின்றன இந்த கோபுரமும் பீரங்கிகளும் எவ்வாறுதிரும்பி நிற்கக்கூடுமென்று பின்னால் காட்டப்பட்டிருக்கிறது.





3-வது படம்:

மேலே சொல்லிய அதே கோபுரத்திலுள்ள பீரங்கிகள், நம்மைப்பார்த்து எவ்வளவு தூரம் திரும்பக் கூடுமோ அவ்வளவு தூரம் திருப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.




4-வது படம்:

அதே பீரங்கிகள் நமக்கு எதிர் பக்கத்தில் திருப்பி நிற்கக்கூடிய விதத்தைக் காட்டியிருக்கிறது

பீரங்கி 40-அடி நீள மிருப்பதால் அது திரும்புகிற வழியில் கப்பலின் கட்டடங்கள் தடை செய்யாம லிருக்கவேண்டும். கோபுரத்திலுள்ள பீரங்கியைச் சிறிது மேலும் கீழுமாகத் தூக்கியிறக்கலாம்.

1913-ம் வருஷக்கில் கட்டிமுடிந்த "ஐரன்டியூக்" என்ற பிரிட்டிஷ் சண்டைக்கப்பலின் சித்திரப்படத்தை முதல் பாகத்தில் (62-ம் பக்கத்தில்) காணலாம். அக்கப்பலின் மொத்த நிறை, 25,000-டன். அதில் 13½ அங்குலக் குழாயுள்ள பீரங்கிகளில் பத்து ஏற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் ஐந்து கோபுரங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு பீரங்கிகள் வீதம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த கோபுரங்கள் கப்பலின் மத்தியபாகத்தில் வீலவாட்டில் வரிசையாய் வைக்கப்பட்டிருக்கின்றன. கப்பலின் இரண்டு முனைகளிலும், ஒன்றின்மேலொன்றாக இரண்டு கோபுரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கப்பலின் மத்திய பாகத்தில் ஒரு கோபுரமிருக்கிறது. அந்த கோபுரங்களையும் பீரங்கிகளையும் முதல் பாகத்திலுள்ளசித்திரப்படத்தில் தெளிவாய்க் காணலாம். அந்த படத்துக்கடியில் குறிப்பிட்டிருக்கிற புள்ளிகளுக்கு நேர் மேலாக கப்பலின் உருவத்தில் அந்த பீரங்கிகளைக் கண்டுகொள்ளலாம். அந்த சண்டைக்கப்பலில் பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கிற மாதிரியை இங்கு அடுத்த பக்கத்திலுள்ள படத்தில் எழுதி குறிப்பிட்டிருக்கிறது. அந்த ஐரன்டியூக் என்ற சண்டைக் கப்பலில்தான் பிரிட்டிஷ் கடற்படை முழுவதற்கும் தலைவராயுள்ளவர் இருந்து வருகிறார். கடற்படைத் தலைவர் இருந்துவருகிற கப்பல், பிளாக்ஷிப் என்று சொல்லப்படும். அதாவது கொடிபறக்கும் கப்பல் என்று பொருள்படும். அதன் பிறகு சென்ற வருஷத்தில் குயின் எலிஸபத் என்ற சண்டைக் கப்பல் கட்டப்பட்டு வந்தது. இதில்தான் 15 அங்குல பீரங்கிகளில் எட்டு ஏற்றப்படும்.

பிரிட்டிஷ் சண்டைக் கப்பலின் விவரங்கள். 1




முதல் பாகத்தில் 62 ம் பக்கத்தில் பிரிட்டிஷ் சண்டைக் கப்பலின் சித்திரப்படம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கப்பலின் வீரர்களைக் காட்டுவதற்காக இந்த படமும் அடுத்த பக்கத்திலுள்ள படமும் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த சண்டைக் கப்பலுக்கு 'ஐரன் டியூக்" என்று பெயர். இந்தக் கப்பல் 1914-ம் வருஷ ஆரம்பத்தில் கட்டி முடிக்கப்பட்டது. கப்பல் முழுவதும், அதாவது, ஜலத்தில் மறைந்திருக்கிற கப்பலின் அடிபாகமும் சேர்த்து இந்த படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

கப்பலின் மூனைகளில் கீர்மட்டம் காட்டப்பட்டிருக்கிறது. கப்பலின் வெளிப்புறத்தில் கறுப்புக்கோடுகள் போடப்பட்டிருக்கிற பாகம் இரும்புக் கவசத்தைக் குறிப்பிடுகிறது. அந்த இரும்புத் தகடின் கனம், 12 அங்குல முதல் 6 அங்குலம் வரையில் வித்தியாசப் படுவதையும் அதில் காட்டப்பட்டிருக்கிறது.

கப்பலின் ஒவ்வொரு மூனையிலும், இரண்டு கோபுரங்கள் ஒன்றின் மேலொன்றாய் அமைக்கப்பட்டு, மத்தியில் ஒரு கோபுரமும் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கப்பலில் மொத்தம் ஐந்து கோபுரங்களிருக்கின்றன. ஒவ்வொரு கோபுரத்திலும் இரண்டு பெரிய பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒன்றுதான் நமது கண்ணுக்குப் புலப்படுகிறது. மற்ற விவரங்களை அடுத்த பக்கத்தில் பார்க்கலாம்.

பிரிட்டிஷ் சண்டைக் கப்பலின விவரங்கள்.

II




இந்தப்படமும் "ரான்டிபூல்" என்ற பிரிட்டிஷ் சண்டைக்கப்பலின் விவரங்களைக் காண்பிக்கிறது. அந்த கப்பலின் மடையிலுள்ள பீரங்கிகள் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்தக் கப்பலின் விவரங்களாவன:—அதன் மொத்த நிறை 25,000 டன்; நீளம் 575 அடி. அகலம் 89 அடி. அதிலுள்ள பெரிய பீரங்கிகள் 13½ அங்குலம் குறுக்களவுள்ள குழாய்களை யுடையவை. அம்மாதிரியான 10 பீரங்கிகள், ஒவ்வொரு கோபுரத்தில் இரண்டுவீதம் ஏற்றப்பட்டிருப்பதைக் காணலாம். அதில் இரண்டாந்தர பீரங்கிகளில் 16 ஏற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் 6 அங்குலக் குழாயுள்ள பீரங்கிகள் பன்னிரண்டு ஏற்றப்பட்டிருக்கின்றன. இடது புறத்தில், கப்பலின் இரண்டு பக்கங்களிலும் 6 அங்குல பீரங்கிகளிருப்பதைப் பார்க்கலாம். வலது புறத்தில் கப்பலின் மூனையில் இரண்டு 6 அங்குல பீரங்கிகளிருக்கின்றன. இவைகளை விடச் சிறிய பீரங்கிகளில் நான்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை இந்தப் படத்தில் காட்டவில்லை. கப்பலின் இடது மூலையிலுள்ள கோபுரங்களுக்கும், மத்தியிலுள்ள கோபுரத்துக்கும் இடையே பலவித கோடுகள் போடப்பட்டிருக்கின்றன. அவ்விடத்தில் அமைக்கப்படுகிற கட்டடங்களின் அஸ்திவாரத்தைக் காண்பிக்கின்றன. அங்குள்ள இரண்டு வெள்ளைச் சக்கரங்கள், கப்பலின் புகைபோக்கிகளின் இருப்பிடத்தைக் குறிப்பிடுகின்றன.

இந்த சண்டைக் கப்பலில் நான்கு டார்ப்பிடோக் குழாய்களிருக்கின்றன. ஆகாய விமானங்களைப் பார்த்துச் சுடுவதற்காக இரண்டு பீரங்கிகள் இருக்கின்றன. அவை இந்தப்படத்தில் காண்பிக்கப்படவில்லை.

கோபுரங்களில் பீரங்கிகளை அமைக்கும் விதம்.

பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்களில் ஒவ்வொரு கோபுரத்தில் இரண்டுபீரங்கிகள் வைக்கப்படுகின்றன. கப்பலின் மத்தியபாகத்தில் நீளவாக்கில் ஐந்து கோபுரங்கள் கட்டப்பட்டு ஒவ்வொன்றிலும் 2 - பீரங்கிகள் வீதம் மொத்தம் 10 - பீரங்கிகள் வைக்கப் படுகின்றன. 15 - அங்குல பீரங்கிகள் மிகவும் பளுவாயிருப்பதால் 4 கோபுரங்கள் கட்டி அவைகளில் மொத்தம் எட்டுபீரங்கிகள் ஏற்றப்படுகின்றன. ஜெர்மன் சண்டைக் கப்பலிலும் ஒவ்வொரு கோபுரத்தில் இரண்டு பீரங்கிகள் வீதம் ஏற்றப்படுகின்றன. ஜப்பானிய கப்பலிலும் அவ்வாறே. ஆனால் மற்ற தேசத்துக் கப்பல்களில் ஒவ்வொரு கோபுரத்தில் மூன்று அல்லது நான்கு பீரங்கிகள் வைக்கப்படுகின்றன. பிரஞ்சுக் கப்பலில், மூன்று கோபுரங்கள் கட்டப்பட்டு ஒவ்வொரு கோபுரத்திலும் நான்கு பீரங்கிகள் வீதம் மொத்தம் 12 - பீரங்கிகள் ஏற்றப் படுகின்றன. பிரஞ்சு சண்டைக் கப்பலின் சித்திரப் படத்தைப் பார்க்கவும். இடாலி, ஆஸ்டிரியா ருஷியா. யூனைடெட் ஸ்டேட்ஸ் இத்தேசத்துக் கப்பல்களில் மூன்று பீரங்கிகள் ஒரு கோபுரத்துக்குள் வைக்கப்படுகின்றன. சிலவருஷங்களாக அவ்வாறு 3 அல்லது 4 பீரங்கிகள் சேர்ந்தாற்போல ஒரு கோபுரத்தில் வைக்கும் வழக்கம்பரவிவந்தாலும்,பிரிட்டிஷார் தங்கள் முறையை மாற்றவில்லை. ஒவ்வொரு தேசத்துச் சண்டைக் கப்பல்களில் பீரங்கிகள் எவ்வாறு ஏற்றப்பட்டிருக்கின்றன வென்பது பின்வரும் படங்களில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.



1-வது படம்.

இந்தப் படம்,ஆஸ்டிரிய சண்டைக் கப்பலில் பீரங்கிகளும் கோபுரங்களும் எவ்வாறு அமைக்கப்பட் டிருக்கின்றன வென்பதைக் காட்டுகிறது: இந்த சண்டைக் கப்பல் 1911-ம் வருஷம் கட்டப்பட்டது. ஒவ்வொரு கோபுரத்தில் மூன்று பீரங்கிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன.



2-வது படம்.

இது, 1914-ம் வருஷம் கட்டப் பட்ட இடாலிய சண்டைக் கப்பலில் பீரங்கிகள் எவ்வாறு அமைக்கப்பட் டிருக்கின்றன வென்பதைக் காட்டு கிறது.இரண்டுகோபுரங்களில் மூன்று பீரங்கிகள் வீதமும், மற்ற கோபுரங்களில், இரண்டு பீரங்கிகள் வீதமும் ஏற்றப்பட்டிருக்கின்றன. பீரங்கிகள் கப்பலின் பக்கவாட்டில் திருப்பிக் காண்பிக்கப்பட் டிருக்கின்றன.



3-வது படம்.

இது, 1914-ம் வருஷம் கட்டப்பட்ட பிரஞ்சு சண்டைக் கப்பலில் பீரங்கிகள் ஏற்றப்பட் டிருக்கிற மாதிரியைக் காண்பிக்கிறது. இக்கப்பலில் மொத்தம் 12பெரியபீரங்கிகளிருக்கின்றன. ஒவ்வொரு கோபுரத்திலும்நான்கு பீரங்கிகள் வீதம் அமைக்கப்பட் டிருக்கின்றன. இந்த விவரங்களை யுடைய பிரஞ்சு சண்டைக் கப்பலின் சித்திரப்படம் இப்புத்தகத்தில்வெளியாகிறது.

அவ்வாறு 3 அல்லது 4 பீரங்கிகளை ஒரு கோபுரத்தில் ஏற்றினுல், மொத்தம் 3 கோபுரங்கள் போதுமானவை, ஆகையால் கப்பலில் அந்தக் கோபுரங்களைக் கட்டுவதற்குத் தேவையா யுள்ள யிடம் குறைவு படுகிறது. அதனல் கப்பலில் இடம் கூடி வரும். இரண்டு பீரங்கிகள் வீதம் ஏற்றினுல் மொத்தம் 6 கோபுரங்கள் கட்டவேண்டி வரும். அவைகளுக்குத் தேவையான இடம் கப்பலில் கிடைப்பது அரிது. பிரிட்டிஷ் கப்பலில் 5 கோபுரங்களுக்குமேல் கட்டப்படுவதில்லை. நமது சித்திரப் படங்களைப் பார்த்தால் பீரங்கிகள் கோபுரத்திலிருந்து வெகு தூரம் நீண்டிருப்பது தெரியவரும். அந்த பீரங்கிகளை மூன்று பக்கங்களிலும் திருப்புவதற்குத் தேவையான இடம் வேண்டி யிருக்கும். பீரங்கி சுழலுகிற இடம் காலியா யிருக்கவேண்டும். ஆகையால் கோபுரங்களைச் சுற்றினுமுள்ள இடம் பீரங்கி சுழலுவதற்காகக்காலியாய் வைக்கப்படும். ஒரு கப்பலில் அம்மாதிரி ஐந்து கோபுரங்களைச் சுற்றினும் காலியாய் விட்டுவைக்கச் சாத்தியப்படுகிறது. மீதியாயுள்ள இடங்களில் பலவிதமான கப்பற் கட்டங்கள் கட்டப்படவேண்டும். ஆகையால் ஒரு கோபுரத்தில் 4 பீரங்கிகள் வீதம் ஏற்றினுல், 3 கோபுரங்களே போதுமானதா யிருப்பதால் கப்பலில் இடம் அதிகமாய்க் கூடி வருகிறது. ஒரு கோபுரத்தில் இரண்டுக்கதிகமாய்ப் பீரங்கிகளை வைப்பதில் அது ஒரு சாதகம். மற்றொரு சாதகம் கோபுரங்கள் குறைந்தால் அவைகளில் பீரங்கிகளைச் சுமப்பதற்காகவுள்ள ஆள்களை ஆள்வது சுலபம். 5 கோபுரங்களை விட 3 கோபுரங்களைக் கப்பற் தலைவன் எளிதாயும் அதிகமாயும் கவனித்து வரலாம்.

ஆனல் அவ்விரண்டு சாதகங்களிருந்தாலும், சில முக்கியமான குறைகளிருப்பதால் அந்த முறையை பிரிட்டிஷார் அனுசரிக்கவில்லை. ஒரு கோபுரத்தில் நான்கு பீரங்கிகளிருந்தால் ஒரு குறிப்பான இடத்தைப் பார்த்து நான்கு பீரங்கிகளையும் திருப்பும்போது ஏதேனும் மயிரிழை தவறி விட்டால் அவை நான்கும் குறி தப்பிப்போகும். மற்றொருகுறை, நான்கு பீரங்கிகளுக்கும் ஒரேயிடத்தில் குண்டுகளைச் சேகரித்து வைத்து அவைகளுக்கு ஒருக்ஷணப் போதும் தவறமல் குண்டுகளை அப்போதைக் கப்போது கொடுத்து வரவேண்டும். இரண்டு பீரங்கிகளுக்கு குண்டுகளை சப்ளை செய்வது அவ்வளவு கஷ்டமல்ல. மற்றொரு முக்கியமான குறை, ஒரு கோபுரத்தின்மேல் சத்துருவின் குண்டு பாய்ந்து விடுமானல், நான்கு பீரங்கிகளும் பயன்படாமற் போய்விடும். இரண்டு பீரங்கிகளுடைய கோபுரம் சேதமானல் இரண்டுதான் உபயோக மற்றுவிடும். ஆகையால் சண்டை நடந்துகொண் டிருக்கும்போது திடீலென்று நான்கு பீரங்கிகளின் உதவியையும் இழந்துவிட நேரிடுவது கவலைக்குற்ற விஷயமாகும். ஆயினும் முதலில் சொல்லியபடி, கோபுரங்களில் எவ்வளவு பீரங்கி வைப்பதென்ற விஷயம் இன்னும் தீர்மான முடிவுக்கு வரவில்லை. பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான் இம்மூன்று தேசங்களும் இரட்டை பீரங்கிக் கோபுரத்தையே அனுசரித்து வருகின்றன. மேலும் இம்மாதிரியான அநேக நூதன முறைகளைப்பற்றி ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமான அபிப்பிராயம் இருந்து வருகிறது. அந்த நூதனமுறைகள் அனுஷ்டிக்கப்பட்டபிறகு கடல் யுத்தம் நடக்காதபடியால், அவைகளின் சாதக பாதங்கள் இந்த யுத்தத்தின் அனுபோகத்தில்தான் நிச்சயிக்கப்படவேண்டும்.

பீரங்கிகள் ஒரேபக்கமாய்த் திரும்பிச் சுடுகிற விதம்.

கோபுரங்கள், அவைகளிலுள்ள பீரங்கிகளுடன் மூன்று புறமும் சுழலும் என்று சொல்லியிருக்கிறோம். அவ்வாறு சுற்றினால், கப்பலில் நான்கு புறங்களிலும் திரும்பி எவ்வளவு பீரங்கிகள் சுடக்கூடுமென்பதைக் கவனிக்க வேண்டும். கடற்சண்டையில், யுத்த கப்பலிலுள்ள பீரங்கிகள் சத்துருவை நோக்கித் திரும்பி சுட வேண்டுமல்லவா? அவ்வாறு ஒரு குறித்த வஸ்துவின்மீது ஒரு யுத்த கப்பலில் எவ்வளவு பீரங்கிகள் சேர்ந்தாற்போல் குண்டுகளை எறியக்கூடுமென்பதை அறியவேண்டும். சண்டைக் கப்பலின்மேடையில்

கோபுரங்களே அமைக்கும்போது அதுவே முக்கிய நோக்கமாகக் கொள்ளப் படுகிறது. கப்பலின் இரண்டு பக்கங்களிலும், முன் முனையிலும், பின் முனையிலும், எவ்வளவு பீரங்கிகள் சேர்ந்தாற்போல் சுடக்கூடுமென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஜெர்மன் கப்பலின் விவரத்தைக் காட்டும் படத்தைப் பார்க்கவும்.


ஒரு ஜெர்மன் சண்டைக் கப்பலின் விவரங்களே அடித்த பக்கத்தில் காணலாம். இடது பக்கத்து முனையில் ஒரு கோபுரமிருக்கிறது. வலது பக்கத்து முனையில் ஒன்றின்மேலொன்றாய் இரண்டு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு பக்கவாட்டிலும், ஒவ்வொரு கோபுரமிருக்கிறது. கப்பலிலுள்ள எல்லா பீரங்கிகளும் பக்கவாட்டில் திரும்பும். ஏனெனில் நமக்கு இடதுகைப் பக்கத்து முனையிலுள்ள பீரங்கி நம்மைப் பார்த்துத் திரும்பக் கூடுமென்று தெளிவாய்த் தெரிகிறது. அதற்கு அடுத்தாற்போலுள்ள கோபுரம் வலது பக்கமாய்ச் சுற்றி நம்மைப் பார்த்துத் திரும்பும். ஒரு கோபுரம் தன்னைச் சுற்றி வட்டமிடுவதற்கு அந்த சக்கரத்தில் மூன்றிலிரண்டு பாகம் திரும்புமென்று சொல்லியிருக்கிறோம். அந்தச் சக்கரத்தில் ஒரு பாகத்தில் தான் திரும்பாது. மேற்சொன்ன கோபுரத்துக்கு இடது பக்கத்தில் கப்பலின் கட்டடமிருக்கிறதைக் கவனிக்கவும். அந்த கட்டடமிருக்கிற திசைதான் அந்த கோபுரத்தைத் திருப்பக்கூடாத பாகமாகும். ஜெர்மன் கப்பலிலுள்ள மற்ற கோபுரங்களும் பீரங்கிகளும் மேற்சொல்லியவாறு திரும்பக்கூடியவை. ஆகையால் ஜெர்மன் கப்பலிலுள்ள எல்லா பீரங்கிகளும் (மொத்தம் 10-பீரங்கிகள்) கப்பலின் பக்கவாட்டில் திரும்பிச் சுடும். நமக்கு எதிர் புறத்திலுள்ள பக்கவாட்டிலும் அம்மாதிரியே திரும்பும். *

---

* "12 அங்குல பீரங்கி" என்று சொன்னால், பீரங்கியின் முன் புறத்து முனையிலுள்ள துவாரம் 12 அங்குலம் குறுக்களவுள்ளது என்று பொருள் படும். (○) இம்மாதிரியாய் ஒரு சக்கரத்தின் மத்தியில் நேராகக் கோடு இழுத்தால், அந்தக் கோடு அந்த சக்கரத்தின் குறுக்களவைக் குறிப்பிடுகிறது. வட்டமாயுள்ள கோட்டின் அளவை அறிய வேண்டுமானால், அந்த குறுக்களவை 22-ஆல் பெருக்கி 7-ஆல் வகுத்துக் கணக்கிடவேண்டும். உதாரணமாக, அவ்வாறு கணக்கிட்டால், 21 அங்குலம் குறுக்களவுள்ள ஒரு குழாயின் சுற்றளவு 66 அங்குலமாகும்; அதாவது 5½ அடியாகும்.

ஜெர்மன் சண்டைக் கப்பலின் விவரங்கள்.

I




முதல் பாகத்தில் 63-ம் பக்கத்தில் ஜெர்மன் சண்டைக் கப்பலின் சித்திரப்படம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அத்தக் கப்பலின் விவரங்களை விளக்குவதற்காக இந்தப் படமும் அடுத்த பக்கத்திலுள்ள படமும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த சண்டைக் கப்பலின் பெயர் "கெய்ஸர்" இத்தக் கப்பலைக் கட்ட ஆரம்பித்தது 1911-ம் வருஷம்.

கப்பலின் வெளிப்புறத்தில் கறுப்புக் கோடுகள் போடப்பட்டிருக்கிற பாகம் இரும்புக் கவசத்தைக் குறிப்பிடுகிறது. இக்கப்பலிலுள்ள மொத்தம் பதினாறு கோபுரங்கள் எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பதை அறிந்து கொள்ளலாம். மற்ற விவரங்களை அடுத்த பக்கத்திலுள்ள படத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

ஜெர்மன் சண்டைக் கப்பலின் விவரங்கள்

II



இந்தப் படமும் முன் பக்கத்தில் சொல்லப்பட்ட ஜெர்மன் சண்டைக் கப்பலைப்பற்றிய விவரங்களைக் காண்பிக்கிறது.

இந்த கப்பலின் விவரங்களாவன:—அதன் மொத்த நிறை 24,700 டன். நீளம் 564 அடி. அகலம் 95 அடி. அதிலுள்ள பெரிய பீரங்கிகள் 12 அங்குலம் குறுக்களவுள்ள குழாய்களை யுடையவை. அம்மாதிரியான 10 பீரங்கிகள், ஒவ்வொரு கோபுரத்தில் இரண்டு வீதம் எற்றப்பட்டிருக்கின்றன. அதில் இரண்டாந்தர பீரங்கிகளில் 26 எற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் அனைத்தையும் இந்த படத்தில் காணலாம்.

இந்த கப்பலில் 8ந்து டார்ப்பிடோக் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகாய விமானங்களைத் தாக்குவதற்காக ஆகாயத்தை நோக்கிச் சுடக்கூடிய சிறு பீரங்கிகள் நான்கு எற்றப்பட்டிருக்கின்றன. அவை இந்த படத்தில் காண்பிக்கப்படவில்லை.

இடது பக்கத்து முனையை நோக்கி எவ்வளவு பீரங்கிகள் திரும்பும்? அந்த முனையிலுள்ள கோபுரத்தின் பீரங்கிகள் திரும்பக்கூடியவை. பக்கவாட்டில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கோபுரங்களும் அவ்வாறே திரும்பும். ஆகையால், மொத்தம் 6 பீரங்கிகள் இடது முனையை நோக்கிச் சுடக்கூடியவை. வலது பக்கத்து முனையை நோக்கி, எட்டு பீரங்கிகள் சுடக்கூடும். ஏனெனில், வலது முனையில் ஒன்றின்மேலொன்று அமைக்கப்பட்ட இரண்டு கோபுரங்களும், பக்கவாட்டிலுள்ள இரண்டு கோபுரங்களும் அதே திசையை நோக்கித் திரும்பும். இந்த ஜெர்மன் சண்டைக் கப்பலில் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கிற முறை பழமையானது. 5-வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்களில் அவ்வாறே கோபுரங்கள் அமைக்கப்பட்டு, பிறகு வேறுவிதமாய் (பிரிட்டிஷ் கப்பலின் படத்திலுள்ளபடி) மாற்றப்பட்டது. ஜெர்மன் கப்பலின் வலது பக்கத்து முனையில் ஒரு கோபுரத்தின் மேல் மற்றொரு கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும். அம்மாதிரி பிரிட்டிஷ் கப்பலில் 5 வருஷங்களுக்கு முன்னால் முதன் முதலாகப் பரீக்ஷிக்கப்பட்டு, பிறகு இரண்டு முனைகளிலும் அவ்வாறு ஒன்றின்மேலொன்றுய்க் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. அதனால், கப்பலின் மேடையில் மற்ற கட்டடங்களை விஸ்தாரமாய்க் கட்டுவதற்கு இடம் ஏற்பட்டது.

பிரிட்டிஷ் கப்பலின் விவரத்தைக் காட்டும் படங்களைப் பார்க்கவும். கப்பலிலுள்ள எல்லா பீரங்கிகளும் அதாவது 10 பீரங்கிகளும் இரண்டு பக்கங்களிலும் தாராளமாய்த் திரும்பிச் சேர்ந்தாற்போல் சுடக்கூடும். முன்முனையையும் பின்முனையையும் நோக்கி எவ்வளவு பீரங்கிகள் சுடக்கூடுமென்பதைக் கவனிக்க வேண்டும். முனைகளிலுள்ள இரண்டு கோபுரங்கள், அதாவது, 4 பீரங்கிகள் அந்தந்த முனையை நோக்கிச் சுடக்கூடும். ஒரு முனையிலுள்ள பீரங்கிகள் எதிர் முனையை நோக்கிச் சுடமுடியாது. கப்பலிலுள்ள கட்டடங்கள் தடை செய்கின்றன. பக்கவாட்டில் கப்பலிலுள்ள எல்லா பீரங்கிகளும் தாராளமாய்ச் சுழன்று சுடவேண்டுமென்பது பிரிட்டிஷாருடைய முக்கியநோக்கம். இக்காலத்துச் சண்டைகளில் முனைகளை நோக்கிச் சுடவேண்டிய அவசியம் நேரிடாதென்று எண்ணி, எல்லா வல்லரசுகளும் கப்பலின் மத்திமில் மேலவட்டிஷ்

கோபுரங்களை வைத்து வருகிறார்கள். 1913-ம் வருஷத்திலிருந்து ஜெர்மன் சண்டைக் கப்பல்களிற் சிலவற்றில் அவ்வாறு அமைக்கப் பட்டிருகின்றன. அந்த கோபுரங்களை வைக்கும் ஒழுங்கு முதலில் பலவிதமாய்ப் பரீக்ஷிக்கப்பட்டு, இப்போது கப்பலின் மத்திய பாகத் தில் நீளமாய் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனகயால் இக்காலத்துச் சண்டைக் கப்பல் ஒரு குறித்த நிமிஷத்தில் அதில் அமைக்கப்பட்டுள்ள எல்லா பெரிய பீரங்கிகளும் பக்கவாட்டில் திரும்பி ஒரு குறிப்பான வஸ்துவின்மீது சுமார் 15000 பவுண்ட் எடையுள்ள குண்டுகளை எறியும். 1805-ம் வரு ஷத்தில் பேர்பெற்ற பிரிட்டிஷ் கடற்படைத் தலைவராகிய அட்மிரல் நெல்ஸன், டிரபால்கர் சண்டையில் 'விக்டரி' என்றசண்டைக் கப்பலை உடையேற்றினார். அக்கப்பலில் பக்கவாட்டில் சுடக்கூடிய பீரங்கி களெல்லாம் சேர்ந்து 1160 பவுண்ட் எடையுள்ள குண்டுகளைச் சுட்டன. இந்த காலத்தில் ஒரே ஒரு பெரிய பீரங்கி அதைவிட அதிக பளுவான குண்டைச் சுடுகிறது; சண்டைக்கப்பலில் அம்மா திரியான பெரிய பீரங்கிகள் 10 அல்லது 12 ஒன்றுமட்டுச் சேர்ந்துசுடு மானால், இந்த காலத்துச் சண்டைக் கப்பலின் வன்மை எத்தன்மை யானதென்று நன்றாய் விளங்கும்.

இரண்டாந்தர பீரங்கிகள்.

சண்டைக் கப்பல்களில், இது வரையில் சொல்லப்பட்ட பெரிய பீரங்கிகளைத் தவிர, அநேக இரண்டாந்தர பீரங்கிகள் வைக்கப் படுகின்றன. சத்துருவின் ''டார்பிடோக் கப்பல்''கள், சண்டைக் கப் பலை அதி விரைவாய் நெருங்கித் தாக்குவது வழக்கம். ''டார்ப்பிடோ படகு'' ''டார்ப்பிடோ டெஸ்டிராயர்'' என்ற கப்பல்களை ஆழிப்பதற் காக, சண்டைக் கப்பல்களில் இரண்டாந்தர பீரங்கிகள் வைக்கப் பட்டிருக்கின்றன. முதல்தர பீரங்கிகள் ஒரு நிமிஷத்தில் ஒன்று அல்லது இரண்டு குண்டுகளைச் சுடும்; ஆனால் இரண்டாந்தர பீரங்கி கள் நிமிஷத்துக்கு 20 அல்லது 30 குண்டுகளைச் சுடும். விரை வாய்ச் செல்லக்கூடிய டார்ப்பிடோக் கப்பல்களைத் தாக்குவதற்கு, விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகளை உபயோகமுள்ளவை. 1907-ம் வருஷத்தில் டிரெட்னட் என்ற கப்பல் கட்டப்பட்ட போது, இந்த இரண்டாந்தர பீரங்கிகளைப் பற்றி அதிகமாய்க் கவனஞ் செலுத்தாமல் சண்டைகளில் அந்தச் சிறிய பீரங்கிகள்

உபயோகப்படா வென்று நினைத்து, 12 பவுண்ட் நிறையுள்ள குண்டைச் சுடக்கூடிய மிகச் சிறிய தினுசுப் பீரங்கிகளில் 24 ஏற்றினார்கள். ஆனால் இப்போது கட்டப்படுகிற டார்ப்பிடோக் கப்பல்களின் இரும்புக் கவசம் அதிக கனமுள்ளதாயிருக்கிறபடியால், இவைகளைச் சேதப்படுத்துவதற்கு அந்தச் சிறிய பீரங்கிகள் பயனில்லை. டார்ப்பிடோ கப்பல்கள் வர வரப் பெரிதாகவும் அதிக ஓட்டங்கொண்டதாயும் கட்டப்படுகிறபடியாலும், டார்ப்பிடோ வெடிகள் வர வரப் பெரிதாய்ச் செய்யப்பட்டு அதிக தூரத்திலிருந்து சுடப்படுகிறபடியாலும், இப்போதுள்ள சண்டைக் கப்பல்களில் 5-அல்லது 6-அங்குல பீரங்கிகள் வைக்கப்படுகின்றன. இந்தச் சிறிய பீரங்கிகள், சத்துருவின் டார்ப்பிடோக் கப்பல் கிட்டத்தாக்க விடாமல் தடுப்பதற்காக உபயோகிக்கப் படுகின்றன. இரண்டாந்தர பீரங்கிகளில் சுமார் 26-பீரங்கிகள் ஒரு சண்டைக் கப்பலில் வைக்கப்படுகின்றன.

டார்ப்பிடோ வெடிகள்.

அநேகமாய் எல்லா யுத்த கப்பல்களிலும் டார்ப்பிடோ வெடிகள் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சண்டைக் கப்பலிலும் டார்ப்பிடோ வெடிகள் வைக்கப்பட்டிருக்கு மென்று சொல்ல வேண்டியதில்லை. பீரங்கிகளைப்போல அவைகளும் ஒவ்வொரு கப்பலிலும் இருக்கவேண்டிய ஆயுதங்களாகக் கருதப்படுகின்றன. டார்ப்பிடோ என்பது இரும்பினுல் செய்யப்பட்ட பெரிய தூண் போன்ற உருவமுடைய பயங்கரமான வெடி. புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட டார்ப்பிடோ வெடி 21 அடி நீளம் இருக்கிறது. இன்னும் நீளமான டார்ப்பிடோ புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறதென்றும் சொல்லப்படுகிறது. அந்த வெடியில் மிகவும் பருமனுயுள்ள பாகத்தில் அதன் சுற்றளவு 5½ அடியிருக்கும். அதைவிடப் பருமனுள்ள டார்ப்பிடோ செய்யப்படுவதாக இதுவரையில் தெரியவில்லை.

டார்ப்பிடோவின் உருவத்தை நமது படத்தில் பார்க்கவும். வலது புறந்தான் அதன் முன் பாகம், இடது புறம் பின் பாகம். அது பெரிய நீளமான மீன் போலத்தோன்றுகிறது. அதன் பின் புறத்தில் மீன் வாலைப்போல் விசிறிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. டார்ப்பிடோவுக்குள் பல யந்திரங்களிருக்கின்றன. அதன் உள் புறத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். மூன்பாகத்தில் வெடிமருந்து

வைக்கப்பட்டிருக்கிறது. அதன் முனையில் சிறிய ஊசிபோல ஒன்றிருப் பதைக் கவனிக்கவும். அந்த முனை எதன்மேலாவது பட்டால் அந்த ஊசி மடங்கிக்கொள்ளும்; அவ்வாறு அது மடங்கியவுடன் டார்ப்பி டோவின் உள்புறத்திலுள்ள வெடி மருந்து தீப்பிடித்துக் கொள் கிறது. இந்த வெடி மருந்துள்ள பாகத்துக்கு அடுத்தாற்போ லுள்ள இரண்டாவது அறையில் காற்று இறுக அடைத்து வைக் கப்பட் டிருக்கிறது. அவ்வாறு அடைத்து வைக்கப்பட்ட காற் றின் விசையால், இதற்கு அடுத்த மூன்றுவது அறையிலுள்ள எஞ் ஜின் வேலை செய்கிறது. இந்த எஞ்ஜின்தான் டார்ப்பிடோவை வெகு விரைவாய் ஓடச்செய்கிறது. இந்த எஞ்ஜினில் சில உபாயங்கள் சேர்க்கப்பட் டிருப்பதால், அந்த வெடி ஓடும் போது, கோணலாயும் ஆடிக்கொண்டும் போகாதபடி காக்கப்பட் டிருக்கிறது. ஒரு டார்ப் பிடோவின் மொத்த பளுவு 2000 பவுண்ட் ஆகிறது. அது மணிக்கு 54 மைல் வீதம் விரைவாய்ப் பாயக்கூடியது. அதாவது தென்னிங் தியாசெயிலிலிட இருமடங்கு வேகமாய்ஓடக்கூடியது. 12 000 கஜ தூரத்திலுள்ள வஸ்துவைத் தாக்கக்கூடியது. அதாவது கொஞ்சங் குறைய ஏழுமைல் தூரம் பாய்கிறது. பெரிய பீரங்கிகளிலிட அதிக தூரம் அந்த வெடி செல்கிறதென்பதைக் கவனிக்கவும்.

இந்த டார்ப்பிடோ வெடிகள் ஜலமட்டத்துக்கு மேலிருந்தும் ஜலமட்டத்துக்கடியிலிருந்தும் இரண்டுவிதமாய்ச்சுடப்படுவது வழக் கம். அந்த டார்ப்பிடோவை பீரங்கிபோன்ற ஒரு குழாய்க்குள் போ ட்டு அந்தக் குழாயிலிருந்து வெளியே பாயும்படி சுடுகிறார்கள். அந்தக் குழாய்க்கு "டார்ப்பிடோக் குழாய்" என்று பெயர். அந்தக் குழாயைக் கப்பலின் மேடையில் வைத்து அங்கிருந்து டார்ப் பிடோவைச் சுட்டால், அதுஜலத்தில் விழுந்து ஜலத்துக்குள் கொஞ் சம் அமுங்கிய வண்ணமாய் நேராகச் சென்றுகொண் டிருக்கும். அது கோணலாயும் அங்குமிங்கும் அசைந்து கொண்டும் செல்லாம லிருக்க அதில் உபாயங்க ளிருக்கின்றன. அது ஜலத்துக்குள் விழுந்தவுடன் தானுகவே ஓடுவதற்கு அதில் எஞ்ஜின் வைக்கப்பட் டிருக்கிறது. அந்த டார்ப்பிடோ எதன் மேலாவது மோதினுல் அவ் விடத்தில் அது வெடித்து விடும்.

மற்றொரு விதமாய் டார்ப்பிடோவைச் சுடுவதைப் பற்றிச் சொல்லுவோம். ஜலத்தில் மிதக்கிற கப்பலில், அதன் ஒரு பாகம்

ஜலமட்டத்துக்கு மேலும், மற்ற பாகம் ஜலமட்டத்துக்குக் கடியிலும் இருக்கின்றன வல்லவா? ஜலமட்டத்துக் கடியிலுள்ள பாகத்தில், கப்பலுக்கு உள்புறத்தில் ஒரு குழாய் வைக்கப்பட்டிருக்கிறது. கப்பலின் உள் புறத்திலுள்ள அந்தக் குழாயின் ஒரு முனை கப்பலின் இரும்புச் சுவரைத் துளைத்து வெளிப்புறத்திலுள்ள சமுத்திர ஜலத்தைத் தொட்டுக்கொண் டிருக்கும்படி வைக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு முனை கப்பலினுள்ளே நீண்டிருக்கிறது. இந்த முனை வழியாய் கப்பலினுள்ளே யிருப்பவர்கள் டார்ப்பிடோ வெடியை நுழைத்து, சமுத்திர ஜலத்தின் வழியாய்ப் பாய்ந்து செல்லும்படி சுடுகிறார்கள்.

டார்ப்பிடோக்களைப் பிரயோகஞ் செய்வதே முக்கிய காரியமாகக் கொண்ட யுத்த கப்பலுக்கு டார்ப்பிடோக் கப்பல் என்று பெயர். அந்த டார்ப்பிடோக் கப்பல்கள் சத்துருவின் யுத்த கப்பல்களுக்கு அருகில் விரைவாய்ச்சென்று டார்ப்பிடோவைப் பிரயோகஞ் செய்து தாக்கும். இத்த வேலையைச் செய்வதற்குப்பிரத்தியேகமான யுத்த கப்பல்களிருந்தாலும், மற்ற யுத்த கப்பல்களும் டார்ப்பிடோக்களை உபயோகிக்க நல்ல சமயங்கள் வாய்க்கக்கூடும். ஆகையால் அநேகமாய் எல்லா யுத்த கப்பல்களிலும், டார்ப்பிடோக் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த "டார்ப்பிடோக்குழாயில்" தேவையானபோது டார்ப்பிடோவென்ற வெடியை நுழைத்துச் சுடுவார்கள். சண்டைக் கப்பலில், 5 அல்லது 6 டார்ப்பிடோக் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற இரண்டொருவருஷங்களாகக் கட்டப்பட்டு வருகிற சண்டைக் கப்பல்களில் இருபுறங்களிலும் டார்ப்பிடோக் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் 3 குழாய்களிருக்கின்றன மொத்தம் 6 குழாய்களிருக்கும். சண்டைக் கப்பலில் 6-குழாய்களுக்கு அதிகமாக வைப்பதற்கு இடமிருப்பதில்லை. சில கப்பல்களில் அந்தக் குழாய்கள் இரண்டு மூன்று களிலும் வைக்கப்படுவதுண்டு.

இரும்புக் கவசம்.

சண்டைக் கப்பலின் வெளிப்புற மெல்லாம் இரும்புக் கவசத்தால் மூடப்பட்டிருக்கிறது. அதன் வெளிப்புறம் முழுவதும் மிகவும் கனமான இரும்புத் தகடால் மூடப்பட்டால் கப்பலின் பளுவு ஞாளமாய் அதிகரித்து அது விரைவாய் ஓடமுடியாமற்போய்விடும்.

ஆகையால் கப்பலின் முக்கியமான பாகங்களுக்குமாத்திரம் கனமான தகடும், மற்றபாகங்களுக்கு இலேசான தகடும், போடப்பட்டிருக்கின்றன. ஒரு யுத்தகப்பலிலுள்ள பற்பல அம்சங்கள் இவ்வளவுபளுவு கொண்டதா யிருக்கவேண்டு மென்பதற்கு ஒரு திட்ட மூண்டென்று மூன்பு சொல்லி யிருக்கிறோம். கப்பலின் ஓட்டத்துக்காக எஞ்சின், கரி முதலியவைகளும், சத்துருவை அழிப்பதற்காக பீரங்கிகள், குண்டுகள், டார்ப்பிடோ வெடிகள் முதலியவைகளும், கப்பலைச் செலுத்திச் சண்டை செய்வதற்காகவுள்ள சுமார் 1000 பேருக்குத் தேவையான ஆகாரம் இருப்பிடம் முதலிய வசதிகளும் ஒரு யுத்த கப்பலில் அவசியமா யிருக்கவேண்டுமல்லவா? ஆகையால் கனமான இரும்புத் தகட்டைக் கொண்டு கப்பல் முழுவதையும் மூடிவிட்டால் பிறகு அதில் எவ்வளவு பளுவு ஏற்ற முடியும்? அதனால் கப்பலின் முக்கியமான பாகங்களாகிய, எஞ்சின் பூட்டப்பட்டிருக்கும் இடம், வெடி மருந்து வைக்கப்பட்டிருக்கும் இடம், பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கும் இடம், முதலியவைகளில் மட்டும் கனமான இரும்புத் தகடு போடப்பட்டிருக்கிறது. நீர் மட்டத்திலிருந்து கப்பலின் மேல்மைடை சுமார் 27 அடி யிருக்கும். அதாவது, சண்டைக்கப்பல் ஜலத்தில் மிதச்சும் போது ஜலத்துக்கு மேல் கண்ணுக்குப் புலப்படுகிற கப்பலின் வெளிப்புறம் சுமார் 27 அடி உயரமிருக்கும். ஜலத்துக்குள் மறைந்திருக்கிற கப்பலின் அடிப்பாகமும் சுமார் அந்த அளவு இருக்கும். நீர் மட்டத்துக்குக் கீழ் 5 அடியிலிருந்து கப்பலின் மேலை வரையில் கனமான இரும்புக் கவசம் போடப்பட்டிருக்கும். பிரிட்டிஷ் ஜெர்மன் சண்டைக் கப்பல்களின் விவரங்களைக் காட்டும் படங்களில் இரும்புக்கவசம் போடப்பட்டிருக்கிற விதத்தைக் காணலாம் (153, 159-ம் பக்கங்களைப் பார்க்க.) அந்த தகடு 12 அங்குல கனமிருக்கும். ஆனால் நீளவாட்டில் கப்பலின் மூணை வரையில் அதே கனமுள்ள தகடு போடப்படுவதில்லை. மூணைகளில் ஆறு அங்குல கனமும் நாலு அங்குல கனமுமாக வரவர இரும்பின் கனம் குறைந்து கொண்டுவரும். அந்த 12 அங்குலத் தகடு போடப்படுகிற இடங்களில்தான் எஞ்ஜினும் வெடிமருந்தும் கப்பலின் உள்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும். பீரங்கிக் கோபுரங்களின் அடிப்பாகம் 12 அங்குலத் தகடால் மூடப்பட்டிருக்கும். கோபுரத்தைச்

சேர்ந்த சுழலுகிற பாகம் 13 அங்குலத் தகடால் மூடப்பட்டிருக்கும். சுழலும் பாகத்தில் பீரங்கிகளிருப்பதால் அங்கு சற்று அதிக கனமுள்ளதகடு போடப்படுகிறது. இரண்டாந்தர பீரங்கிகள் ஏற்றப்பட் டிருக்கிற பாகங்களில் 6 அங்குல கனமுள்ள தகடுபோடப்படும். இவைகளைத் தவிர கப்பலின் நீளவாட்டிலும் அகலவாட்டிலும் மெல்லிய இரும்புத்தகடு கப்பல் மூழுவதையும் மூடி யிருக்கும்.

சமுத்திர ஜலத்தில் மறைந்துள்ள கப்பலின் அடிப்பாகத்தில் கனமான இரும்புத் தகடு போட்டும் பயனில்லை. ஏனெனில் அந்த பாகத்தில் டார்ப்பிடோ வெடிகள் தாக்குமாகையாலும், ஜலத்தில் மறைந்திருக்கிற வெடிமருந்துச் சுரங்கம் வெடிக்கக் கூடுமாகையாலும், எவ்வளவு கனமான தகடு போட்டாலும் பயன்படாது. ஆகையால் அவ்வாறு சேதப்படாமலிருப்பதற்கு கப்பலின் அடி பாகத்தில் வேறொரு உபாயம் செய்யப்பட் டிருக்கிறது. கப்பலின் உள்புறத்தில், இரும்புச் சுவருக்குப் பக்கத்தில் 15 அடி தூரம் காலியாக விட்டு, பிறகு கப்பலைச்சேர்ந்த கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. அதாவது சமுத்திர ஜலத்தில் நீணந்து கொண்டிருக்கிற கப்பலின் வெளிப்புறத்துத் தகடுக்கும் கப்பலின் உள்பாகத்துக் கட்டடத்துக்கும் இடையே 15 அடிதூரம் காலியாக விடப்படும். அவ்வாறு காலியாயுள்ள அடிப் பாகம் வெவ்வேறு அறைகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. அப்படிச் செய்தால், கப்பலின் இரும்புச்சுவரில் டார்ப்பிடோ வந்து தாக்கி வெடிக்கு மானுல் அந்த வெடியால் நேரிடுகிற அதிர்ச்சியும் நெருப்பும் இரண்டொரு அறைகளில் பாவிப் பலஹீனப்பட்டு விடும். அதாவது அந்த வெடியால் ஏற்படுகிற விசை இரண்டொரு அறைகளுக்குள் பரவினவுடன் ஒய்ந்து போகிறது; அந்த அறைகள் காலியாயிருப்பதால் அங்கு சேதமாகக் கூடிய தெதுவுமில்லை. மற்ற அறைகளைச் சேதப்படுத்துவதற்குப்போதுமான வேகம் அந்த வெடியில் இருக்காது. சேதமடைந்த பாகத்தின் வழியாய் சமுத்திர ஜலம் கப்பலுக்குள் புகுந்தாலும் மற்ற பாகங்களிலெல்லாம் பாவாமலிருக்கும். அதற்காகத்தான் கப்பலின் அடிப்பாகம் தனித்தனி அறைகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. அந்த அறைகள் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாமலிருக்கும். கப்பலின் அடிப் பாகத்தை வெவ்வேறு அறைகளாகப் பிரிப்பதால், இரண்டொரு

அறைகள் சேதப்பட்டாலும் அதன் காரணமாக சமுத்திர ஜலம் கப்பலின் மற்ற பாகத்துள் பரவாம லிருக்கும். கப்பலைப் பழுது பார்த்து மறுபடியும் சண்டையில் உபயோகிக்கலாம். டார்ப்பிடோ வெடிகள் கப்பலைத் தாக்காம லிருப்பதற்கு கப்பலைச்சுற்றி இரும்பு வலை போடுவதுண்டு. கப்பல் ஓரிடத்தில் தங்கி யிருக்கும்போது அவ்வாறு செய்யலாம். ஆனால் கப்பல் ஓடிக்கொண் டிருக்கும் போது அந்த வலை போட முடியாது.

இந்த இரும்புக் கவசத்தால் சண்டைக் கப்பலுக்கு எவ்வித மான சாவதானம் ஏற்படுகிறது? சத்துருவின் பீரங்கிகள் அந்தக் கவசத்தைத் துளைத்துவிட முடியாதா? சென்ற வருஷம் வரையில் எல்லா பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்களுக்கும் 11 அல்லது 12 அங்குல கனமுள்ள தகடுகள்தான் போடப்பட்டன. இவ் வருஷந் தான் 13½ அங்குலத் தகடு போடப்பட்டிருக்கிறது. மற்ற வல்லரசு களின் சண்டைக் கப்பல்கள் இன்னும் 11 அல்லது 12 அங்குல கனமுள்ள தகட்டால்தான் மூடப்பட்டு வருகின்றன. யூனைடெட் ஸ்டேட்ஸ் தேசத்தைத் தவிர மற்றெந்த தேசமும் பிரிட்டிஷ் கப்பல்களைப் போன்ற கனமான தகட்டை உபயோகிக்க வில்லை. அவ்வாறு கனமான தகடு போட்டாலுங்கூட, நூதன மாய்க் கண்டு பிடிக்கப்பட்ட, 12, 13½, 14, 15 அங்குல பீரங்கிகள் அதை எளிதாய்த் துளைத்துவிடக்கூடும். ஆயினும், அந்தப் பெரிய பீரங்கிகளுக்குப் பயந்து இரும்புக் கவசத்தை கனமாகச் செய்து கொண்டுபோவது சாத்தியமல்ல. சண்டைக்கப்பல்கள் சத்துருவினிட மிருக்கிற அதே மாதிரியான சண்டைக் கப்பல்களுடன் யுத்தஞ் செய்து, சேதமடையவோ, சேதமுண்டு பண்ணவோ தயாராயிருக்க வேண்டும். ஆனால் சத்துருவிடமிருக்கிற இரண்டாந்தர யுத்த கப்பல் கள், அதாவது சண்டைக் கப்பல் தினுசுக்கு அடுத்தபடியாயுள்ள கப்பல்கள், சண்டைக் கப்பலைத் தாக்கி எவ்வித சேதமும் உண்டு பண்ணமுடியாம லிருக்கவேண்டும். சாதாரணமாய் எல்லாசண்டைக் கப்பல்களிலும் 11-அல்லது 12-அங்குல கனமுள்ள இரும்புத்தகடு போடப்பட்டிருக்கிறது. 12 அங்குலக் குழாயுள்ள பீரங்கிகளுக்கு மட்டமான பீரங்கிகள் எவையும் அந்த இரும்புத் தகட்டைத் துளைக்க முடியாது. சண்டைக் கப்பல்களில்தான் 12 அங்குல பீரங்கியும் அதற்கு உயர்ந்த தினுசுகளும் ஏற்றப்படுகின்றன. சண்டைக் கப்பலுக்கு

அடித்தபடியா யுள்ள யுத்த கப்பல்களில் 12 அங்குல பீரங்கிக்கு மட்டமான தினுசுகள் ஏற்றப்படுகின்றன. ஆகையால் சண்டைக் கப்பல்கள், சத்துருவின் முதல்தரமான கப்பல்களா லன்றி வேறு மட்டமான கப்பல்களால் சேதமடையா. இரும்புக் கவசத்தின் கனத்தைத் திட்டஞ் செய்யும்போது, இரண்டாந்தர பீரங்கிகளால் சேதமாகாம லிருக்கவேண்டு மென்பதே முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

கப்பலின் ஓட்டம்.

10-வருஷங்களுக்கு முன் நூதனமான எஞ்ஜின்கள் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு மிகவும் பளுவான யுத்த கப்பல்கள் மணிக்கு சுமார் 24 மைல் வீதம் ஓடுதல் சாத்தியமா யிருக்கிறது. கப்பலின் ஓட்டத்தை அதிகரிக்க வேண்டுமானால் எஞ்ஜின்களைப் பெரிதாயும் அதிகமாயும் வைக்க வேண்டும்; அல்லது கப்பலின் பளுவைக் குறைக்க வேண்டும்.

கப்பலின் ஓட்டத்தை அதிகரிப்பதற்கு எஞ்ஜினைப் பலப் படுத்தினால் மாத்திரம் போதாது; எஞ்ஜினில் எரிக்கவேண்டிய நிலக்கரியை, எண்ணெயை அவைகளையும் அதிக மாக்க வேண்டும். அவைகளைக் கப்பலுக்குள் வைப்பதற்கு அதிக இடம் தேவையாயிருக்கு மாகையால், கப்பலின் சுற்றளவும் அதிகப் படும். அதாவது கப்பலின் கட்டடத்தின் நிறையும் அதிகப் படும்.

சில வருஷங்களுக்கு முன் நீராவியந்திரம் கண்டு பிடிக்கப்பட்டு அதன் விசையால் கப்பல்கள் ஓட ஆரம்பித்தது முதல், எஞ்ஜினில் எரிப்பதற்கு நிலக்கரியே சிரேஷ்டமாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் நான்கு வருஷங்களுக்கு முன்னால் எண்ணெயை எரிப்பதால் எஞ்ஜினுடைய விசை அதிகப் படுகிறதென்று தெரியவந்தது. அதற்குத் தகுந்தமாதிரி எஞ்ஜினும் செய்யப்பட்டன. உதாரணமாக, 100 மணங்கு நிறையுள்ள நிலக்கரியையும் அதேநிறையுள்ள எண்ணெயையும் தனித்தனியாய் எரித்துப் பார்த்தால் எண்ணெயால் எஞ்ஜின் அதிக வேலை செய்கிறதென்று தெரியவந்தது: ஆகையால் யுத்த கப்பலில் முன்பு நிலக்கரியால் நடந்த வேலையை இப்போது எண்ணெயைக்கொண்டுசெய்வதானால், அந்த வேலைக்குத்தேவையாயுள்ள எண்ணெயின் அளவும் நிறையும் குறைவுபடும். அதாவது கப்பலின்

மொத்த பளுவு குறைவுபடும். எண்ணெயைக் குழாய் வழியாய் எஞ் ஜினுக்குள் வார்க்கலாம்; ஆனல் நிலக்கரியை எஞ்சினுக்குள் போடு வதற்கு அநேகம்பேர் தேவையாயிருக்கும். ஆகையால் எண்ணெயை உபயோகிப்பதால் யுத்த கப்பலில் ஆள்களின் தொகை குறைவுபடும். இன்னும் பலவிதங்களில் சாதங்க ளிருக்கின்றன. ஆனல் எண்ணெய் யுத்த கப்பல்களுக்குத் தேவையான அளவு கிடைப்பது அரிது. எண்ணெய் எடுக்கும் தொழில் உலகத்தில் இன்னும் விஸ்தாரமாய்ப் பரவவில்லே. ஆகையால் இப்போது யுத்த கப்பல்களில் எண்ணெ யும் நிலக்கரியும் சேர்த்து உபயோகிக்கப்படுகின்றன. புதிதாய்க் கட்டப்பட்ட சண்டைக் கப்பலில் சுமார் ஆயிரம் டன் நிறையுள்ள கரியும் எண்ணெயும் வைப்பதற்கு இடம் இருக்கிறது. அவைகளைக் கொண்டு சாதாரண ஓட்டத்தில் சென்றல் சுமார் 9000 மைல் அக் தக் கப்பல் ஓடக்கூடும். அதாவது அவ்வளவுதூரம் ஓடுவதற்குத் தேவையான கரியும் எண்ணெயும் ஒரு சண்டைக்கப்பலில் ஏற்றப் படும்.

பிரிட்டிஷ் யுத்த கப்பல்கள் மற்ற தேசத்துக் கப்பல்களைவிட அதிக ஓட்டங்கொண்டவை. அவ்வா றிருக்க வேண்டுமென்பது பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகளின் முக்கிய கொள்கை. சண்டை நடக்கும்போது அதிக ஓட்டங்கொண்ட கப்பல் தன் னிஷ்டப்படி சண்டை செய்வதற்குச் சாத்தியமாகும். அதிக ஓட்டங் கொண்ட கப் பல் யுத்த நடவடிக்கைகளில் சாதகம்பெறுகிறது. மேலும் பிரிட்டிஷ் தீவுகள் நாலாப்பக்கங்களிலும் கடலால்சூழப்பட்டு காக்கப்படவேண் டியிருக்கிறபடியாலும், உலக முழுவதும் பரவியிருக்கிற ஏகாதிபத்தி யத்தைக் காவல் செய்யவேண்டி யிருக்கிறபடியாலும் அதிக ஓட்டங் கொண்ட கப்பல்கள் இருப்பது அவசியமாகும். பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்கள் அதிக ஓட்டங்கொண் டிருப்பதால் அவைகளில் ஏற்றப் படும் பீரங்கிகள் சிறிது குறைவாகவே யிருக்கின்றன. சென்ற வரு ஷத்தில் கட்டப்பட்டுவந்த புதிய சண்டைக் கப்பல்களைப்பற்றிப் பின் வரும் விவரங்களைக் கவனித்துப் பார்க்கவும்.

	பிரிட்டிஷ்கப்பல்	பிரஞ்சு கப்பல்	ஜப்பான் கப்பல்
ஓட்டம். ஒரு மணிக்கு	28 மைல்	23½	25¼
பீரங்கிகள்	எட்டு 15அங்குல பீரங்கிகள்	பன்னிரண்டு 14 அங்குல பீரங்கிகள்	பத்து 15 அங்குல பீரங்கிகள்
பீரங்கிகள் சுடக் கூடிய குண்டுகளின் மொத்த நிறை	15,600பவுண்ட்	16,800பவுண்ட்	19,500பவுண்ட்
இரும்புக் கவசம்	13½ அங்குலம்	12¾ அங்குலம்	12 அங்குலம்
மொத்த நிறை	27,500 டன்	24,797 டன்	30,000 டன்

மேற் கண்ட விவரங்களின்படி பிரிட்டிஷ் கப்பல் பீரங்கியின் எண்ணிக்கையில் சற்றுக் குறைவாயிருக்கிறதே யொழிய மற்ற அம்சங்களில் சிறந்ததாயிருக்கிறது. பிரிட்டிஷ் கப்பலின் பீரங்கிகள்தொகையில் குறைவாயிருக்கிறது; பீரங்கிகளின் சக்தி, அதாவது அவை ஒரு குறித்த நிமிஷத்தில் சுடக்கூடிய குண்டுகளின் மொத்தநிறை,குறைவாயிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், பிரிட்டிஷ் கப்பலின்ஒட்டம் மற்றதேசத்துக்கப்பலிலிடஅதிகமாயிருக்கிறது. அதோடுகூட, இரும்புக் கவசத்தின் கனமும் அதிகமாயிருக்கிறது. பீரங்கிகள் குறைவாயிருப்பதால் பிரிட்டிஷ் கப்பலின் வன்மை பாதகப்படுமென்று சந்தேகம் உண்டாகக்கூடும். பீரங்கிகள் மாத்திரம் குறைவுபடுவதால் சிறிதும் பாதகமில்லை; ஏனெனில், சத்துருவின் ஒரு கப்பலுக்கு பிரிட்டிஷார் இரண்டு கப்பல்களையுத்தகளத்தில் கொண்டு வருவார்களாகையால், மொத்தத்தில்பீரங்கிகளின்வன்மை அதிகப்படுமே ஒழியக் குறைவுபடாது. மற்றலக்ஷணங்களிலோ பிரிட்டிஷ் கப்பல் ஏற்கெனவே சாதகம் பெற்றிருக்கின்றது. பீரங்கிகளின் விஷயத்தில் தான் அவ்வாறு ஒன்றுக்கிரண்டு கப்பலாகக்கட்டுவதால் அந்தக்குறை

நீங்கும். ஒட்டத்தில் குறைவுபட்டால், ஒன்றுக்குப் பத்து கப்பல்கள் அதிகமாயிருந்தாலுங்கூட கப்பல்களின் ஒட்டம் அதிகரிக்க முடியாது; இரும்புக் கவசத்தின் வன்மையும் அதிகரிக்க முடியாது; இவைகளை அதிகரிக்கவேண்டுமானால் கப்பலைக் கட்டும் போதே அதன் அமைப்பில் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆனால் அதிக கப்பல்களிருந்தால் பீரங்கிகளின் மொத்தத்தொகை அதிகரித்துவிடுமென்பதைக் கவனிக்கவேண்டும். ஆகையால் யுத்த கப்பல்களில் பீரங்கிகள் உயர்தரமாயிருந்து எண்ணிக்கையில் குறைவு பட்டிருந்தால் பாதக மில்லை; கப்பல்களின் தொகை அதிகப்படுமானால் அந்தக் குறை நீங்கிவிடும். மற்ற தேசங்களைவிட பிரிட்டனுக்கு அதிக கப்பல்களிருக்கின்றன. ஆகையால் பீரங்கிகளின் திறமை (எண்ணிக்கையல்ல), கப்பலின் ஒட்டம், இரும்புக் கவசத்தின் கனம், இவைகள் தான் உயர்தரமாயிருக்கவேண்டும்.

சில பொது விஷயங்கள்.

இது வரையில் கட்டப்பட்டு வந்த சண்டைக் கப்பலின் நிறை 31,000 டன்னுக்கு அதிகப்படவில்லை. கப்பலின் பற்பல அம்சங்கள் அவைகளின் முக்கியத்துக்குத் தக்கபடி அமைக்கப்பட்டு அந்த மொத்த நிறைக்கு அதிகப்படாமலிருக்கிறது. ஆனால் யுத்த கப்பலை வரவர பெரிதாய்க் கட்டவேண்டுமென்பது இக்காலத்து நோக்கமாயிருக்கிறது. அவ்வாறு பெரிதாய்க் கட்டுவதால் யுத்த கப்பலுக்கு ஏற்பட்டிருக்கிற முக்கிய வேலைகளுக்குச் சாதகமுண்டாகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். கப்பலின் மொத்த நிறை அதிகப்படுவதால், அதன் ஒட்டம் அதிகரிக்கவேண்டும். அல்லது அதன் இரும்புக் கவசம் அதிக கனமாயிருக்கவேண்டும். கப்பலின் ஒட்டம் அதிகரிப்பதாயிருந்தாலும், அதன் இரும்புக் கவசம் அதிகமாய் உறுதிப்படுவதாயிருந்தாலும், இப்போதைவிட அதிகப் பெரிதான பீரங்கிகளை ஏற்றுவதாயிருந்தாலும், கப்பலின் மொத்த நிறையை அதிகரிப்பதில் பாதகமில்லை. ஆனால் கப்பலில், பீரங்கிகளை எண்ணிக்கையில் அதிகமாய் ஏற்றுவதற்காக கப்பலின் நிறையை அதிகப்படுத்தவேண்டிய தில்லையென்று முன்பே சொல்லியிருக்கிறோம். ஒரே கப்பலில் 12 பீரங்கிகள் ஏற்றுவதும், இரண்டு கப்பல்களில் ஆறு பீரங்கிகள் சீதம் ஏற்றுவதும் ஒன்றுதான். ஆகையால் சண்டைக்கப்பலின் சுற்றளவையும் நிறையையும் தகுந்த காரணமில்

லாமல் அதிகப்படுத்துவதைவிட, இரண்டு சிறிய கப்பல்களாகக் கட்டுவது நல்லதென்று அனேகர் நினைக்கிறார்கள். இப்போது பிரிட்டிஷ் யுத்த கப்பல்களில் மிகப் பெரிய சண்டைக்கப்பல் ஒன்றைக் கட்டுவதற்கு 3 கோடியே 75 லக்ஷம் ரூபாய் செலவாகிறது. அந்தப் பிரிட்டிஷ் கப்பலைவிட இரண்டு பீரங்கிகளை அதிகமாய்க்கொண்ட சற்றுப் பெரிய கப்பல் ஒன்றை இடாலிய கவர்ன்மெண்டு கட்டிக் கொண் டிருக்கிறார்கள். இந்த இடாலிய கப்பலைக் கட்டுவதற்கு 1 கோடி 65 லக்ஷம் ரூபாய் அதிகமாய்ச் செலவாகிறது. இவ்வளவு தொகையை அதிகமாய்ச் செலவு செய்ததில் என்ன பயன்? இரண்டு பீரங்கிகள் அதிகமா யிருப்பதைத் தவிர வேறு விசேஷமில்லை. அந்த இரண்டு பீரங்கிகளின் விலை, அதிகப்படியான செலவில் நூற்றிலிரண்டு பாகங்கூட யிராது. ஆகையால் கப்பலைப் பெரிதாய்க் கட்டுவதால் அதன் அளவுக்குத் தகுந்தபடி செலவாகிறதென்று நினைக்கக்கூடாது. கப்பல் இரண்டு பங்கு பெரிதா யிருந்தால் அதன் செலவு இரண்டு பங்குக்கும் அதிகமா யிருக்கும்.

இப்போதுள்ள பிரிட்டிஷ் கப்பல்களில் மிகப்பெரிய சண்டைக் கப்பலின் நிறை 27,500 டன். அதற்கு மதிகமான பளுவுடைய சண்டைக் கப்பல் பிரிட்டிஷ் கடற்படையி லில்லை. ஆனல் யூனெடெட் ஸ்டேட்ஸ், ஜப்பான், இடாலி இம் மூன்று தேசங்கள் 31,000 நிறையுள்ள சண்டைக் கப்பலை இப்போது கட்டிவருகின்றன. அதற்கும் அதிகமான நிறையுள்ள சண்டைக் கப்பல் உலகத்தி லில்லை.

சண்டைக் கப்பலின் மேடையினுடைய நீளம் சுமார் 600 அடியிருக்கும். நீர்மட்டத்தில் கப்பலின் நீளம் சுமார் 10 அடிகுறை வாயிருக்கும். ஏனெனில், நீர்மட்டத்துக்குமேல் கப்பலின் மூனைகள் சிறிது நீண்டிருக்கும். நீர்மட்டத்துக்குக் கீழே கப்பலின் அடிப்பாகம் சுமார் 28 அடி ஆழம் அமிழ்ந்திருக்கும். கப்பலின் அகலம்சுமார் 90 அடி யிருக்கும். கப்பலின் ஓட்டம் மணிக்கு 25மைல்; சண்டைக் கப்பலின் ஓட்டம்அதற்குமேலிராது. மற்றவிதமான யுத்தகப்பல்களுக்கு ஓட்டம் அதிகமாயிருக்கும். 1914-ம்வருஷம் வரையில் கட்டி முடிந்த பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்களில் 25 மைலுக்குமேலேடக்கூடியது தெதுவுமில்லை. மற்ற தேசத்துச் சண்டைக் கப்பலின் ஓட்டம் குறைவாயிருக்குமென்று சொல்லத்தேவையில்லை. ஆனல் இவ்வருஷம் கட்டப்பட்டவருகிற "குவீன் எலிஸபத்" என்ற பெரிய சண்டைக் கப்

பல் மணிக்கு 28 மைல் வீதம் ஓடக்கூடியதா யிருக்கும். ஒரு டிரெட்னூட் கப்பலைக் கட்டுவதற்கு மூன்றரைகோடி ரூபாய்க்குமேல் செலவாகிறதென்று சொல்லியிருக்கிறோம். ஆகையால் அம்மாதிரி யான பெரிய சண்டைக்கப்பல்களே அதிகமாய்க்கட்டமுடியாதென்று சொல்லத் தேவையில்லை. 1914-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில், பிரிட்டிஷ் கடற்படையில் 32-டிரெட்னூட் கப்பல்களிருந்தன. அது அவ்வளவு பெரிய எண்ணிக்கை யல்லவென்று அநேகர் நினைக்கக் கூடும். ஆனால், அந்த வருஷத்தில் உலகத்தில் மொத்தம் 89-டிரெட் னூட் கப்பல்கள்தான் கட்டப்பட்டிருந்தன. கிரேட் பிரிட்டனைப் போல மற்றெந்த தேசமும் யுத்த கப்பல்களே அவ்வளவு அதிகமாகப் பெற்றிருக்கவில்லை. மேலும், டிரெட்னூட் கப்பலைக் கட்டத்தொடங்கி யது 6 வருஷங்களுக்கு முன்னல் தான்.

பிரிட்டிஷ் சண்டைக் கப்பலில் சாதாரணமாய் 900-பேர் இருப் பார்கள். இரண்டொரு கப்பல்களில் 1000-பேருமிருக்கிறார்கள். பிரிட்டிஷ் கடற்படை முழுவதிலும், 1,46,000-பேர் இருக்கிறார் கள். ஆனால் இக்காலத்தின் முக்கிய நோக்கம் கப்பல்களில் ஆள் களைக் குறைக்க வேண்டு மென்பது. அதற்கு மூன்று முக்கிய காரண ங்களிருக்கின்றன. (1) ஆள்கள் குறைந்தால் செலவு குறைவு தோடு, அதனால் கப்பலில் மிகுதியாகக் கூடிய இடத்தை வேறு பயனுள்ள விதங்களில் உபயோகிக்கலாம். (2) இக்காலத்து யுத்த முறைகளில் எதிர் பாராத ஆபத்துகள் அதிகப்படுவ தால், கப்பல் சேதமாகும்போது அதனால் உண்டாகக் கூடிய உயிர்ச் சேதத்தைக் கூடிய வரையில் குறைக்கவேண்டும். இக் காலத்தில் மனிதர்களால் செய்யப்படுகிற வேலைகளைக் கூடியவரையில் யந்திரங்களால் செய்துவர முயன்று வருகிறார்கள். ஆயினும் முன்னே விட இப்போது யுத்த கப்பலில் அதிக ஆள்கள் தேவையாயிருக்கி றார்கள். ஒரு யுத்த கப்பலை மறுபடி ஒரு வருஷத்துக்குள் கட்டிவிட லாம், ஆனால் ஆயிரம் மாலுமிகள் அதற்குள் கிடைப்பது அரிது. (3) இக்காலத்தில் யுத்தகப்பல்கள் வருஷந் தவறாமல் மிகவும் விரைவாய்க் கட்டப்பட்டு வருகிற படியால், எல்லாக் கப்பல்களுக்கும் தேர்ச்சி பெற்ற ஆள்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இக்காலத்து யந் திரங்களும் யுத்த முறைகளும் மிகவும் நுட்பமாயும் சிக்கலாயுமிருப் பதால், யுத்த சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்று யுத்த முறைகளில் அனுபோகங்கொண்ட ஆள்களே சண்டையில்ஜெயத்தைச்சம்பாதிப்

பவர்கள். யுத்த கப்பலுக்கு அப்படிப்பட்ட ஆள்களைப் பழக்குவதற்கு அநேக வருஷங்களாகும். யுத்த கப்பல்களைச் சிரமப்பட்டுக் கட்டிவிடாலாமாயினும், அவைகளைச்சாமர்த்தியமாய் நடத்துவதற்கு ஆள்களைத் தயார் செய்வது அதனினும் கஷ்டமான காரியம். ஒரு சண்டைக்கப்பலில், 1000பேர் இருப்பார்களென்றால், அவர்களுக்கு இருப்பிடம், ஆகாரம் முதலிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கு மென்பதை அறிந்து கொள்ளலாம். அவர்களுக்குக் குறைந்தது ஒரு மாதத்துக்குத்தேவையான ஆகாரம் கப்பலில் இருக்க வேண்டும்.

யுத்த கப்பலில், பீரங்கிகள், டார்ப்பிடோக்கள் ஆகிய இவைகளைத் தவிர சண்டையில் உபயோகிக்கப்படுகிற வேறு சில ஆயுதங்களு மிருக்கின்றன. இப்போது நூதனமாய்த் தோன்றியிருக்கிற ஆகாய விமானப் படைகளினின்றும் காத்துக் கொள்ளும் பொருட்டு, யுத்த கப்பல்களில் ஆகாயத்தில் சுடக்கூடிய பீரங்கிகள் ஏற்றப்பட் டிருக்கின்றன.

கப்பற்படைகள், சாதாரணமாய், சத்துருவின் டார்ப்பிடோக் கப்பல்களால் இரவில் தாக்கப்படுவது வழக்கம். இருட்டு நேரங்களில் அந்த டார்ப்பிடோக் கப்பல்கள் மிகவும் அருகே சென்று டார்ப்பிடோ என்ற ஆயுதத்தைச் சுட்டுத் திரும்பிப்போய்விடும். இதற்காக, யுத்த கப்பல்களில் சோதனை விளக்குகள் (Search Lights) வைக்கப்பட் டிருக்கின்றன. அது மிகவும் பிரகாசமான விளக்கு; கனமான பூதக்கண்ணாடிகளை அந்தவிளக்கில் வைப்பதால், அதன் வெளிச்சம் வெகு தூரத்தில் செல்வதோடு விசாலமாய் விசிறிபோலும் பரவுகிறது. இந்த வெளிச்சத்தால் சமுத்திரத்தில் மிதக்கக் கூடிய எல்லா வஸ்துக்களையும் காணலாம். இந்த விளக்கின் வெளிச்சத்தை இப்போது ஆகாயத்திலும் வீசும்படிச் செய்து, ஆகாய விமானங்களின் நடமாட்டத்தையும் கண்டு கொள்கிறார்கள்.

ஒவ்வொரு யுத்த கப்பலிலும் கம்பியில்லாத் தந்தி யந்திரம் வைக்கப்பட் டிருக்கும். கடற்படைத் தலைவர்க ளிருக்கிற முக்கிய ஸ்தலத்துடன் எல்லா யுத்த கப்பல்களும் எவ்விடத்தில், எவ்வளவு தூரத்திலிருந்தாலும் சமாசாரப் போக்கு வரத்தை நடத்துகின்றன.

13-வது அத்தியாயம்.

சண்டைக் குருப்ஸர்க் கப்பல்.

இது வரையில் யுத்த கப்பல்களில் மிகப் பெரிதாகிய சண்டைக் கப்பல் தினுசைப் பற்றிச் சொல்லி வந்தோம். சண்டைக் கப்பலின் முக்கியமான வேலை என்னவென்றால், அதன் பெயர் குறிப்பிடுகிறபடி சத்துருவின் யுத்த கப்பல்களுடன் சண்டை செய்து சத்துருவின் வன்மையை அழிக்கவேண்டும். ஆனால் சண்டை செய்வதற்கு முன்னால், அநேக முக்கியமான காரியங்கள் ஆகவேண்டி யிருக்கின்றன. சத்துருவின் கடற்படை எவ்விடங்களில் பிரிந்து சஞ்சரித்துக்கொண் டிருக்கிறதென்பதை அறிய வேண்டும். அவ்வாறு சத்துருவின் வன்மையையும் இருப்பிடத்தையும் அறிந்த பிறகு, அவைகளிருக்குமிடத்துக்குச் சென்று சண்டை செய்யவேண்டும். அதற்குள் சத்துருவின் யுத்த கப்பல்கள் ஓடிவிடாமலும், வெவ்வேறிடங்களில் பிரிந்திருந்த கப்பல்கள் ஒன்றுப்க் கூடிவிடாமலும், அல்லது ஒன்றுப்க் கூடியிருந்த கப்பல்கள் பிரிந்து போய் விடாமலும், ஓரிடத்தில் நின்று சண்டை செய்யும் படியாகச் சாமர்த்தியமாயும் தந்திரமாயும் நடவடிக்கைகளைத் தொடங்கவேண்டும். அதன் பிறகுதான் சண்டை கடை பெறும். அவ்வாறு சண்டை ஆரம்பித்த சமயத்தில் சத்துருவின் வன்மை அதிகமாயிருந்தால், அதற்கு ஈடு செய்ய அதி சீக்கிரத்தில் துணைப் படைகள் வந்து சேரவேண்டும். ஆகையால் சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவும் ஆரம்பித்தபோதும், விரைவான ஓட்டங் கொண்ட கப்பற்படை தேவையாயிருக்குமென்பது புலப்படும். சண்டை முடிந்த பிறகு சத்துருவைத் தூத்தவும், அல்லது தூத்திக் கொண்டு வருகிற சத்துருவைத் தடுக்கவும், விரைவான யுத்த கப்பல்கள் அவசியமாகும். ஆகையால் விரைவான நடவடிக்கைகளுக்குப் பிரத்தியேகமானகப்பற்படை இருக்கவேண்டும். இதற்காக சண்டைக் குருப்ஸர் கப்பல்கள் கட்டப்படுகின்றன. இது சண்டைக்கப்பலுக்கும் குருப்ஸர்க் கப்பலுக்கும் நடுத்தரமாயுள்ள தினுசாகும். குருப்ஸர்க் கப்பல்கள் அதிக ஓட்டத்தை விசேஷமாக வுடையவை.

ஆகையால் சண்டைக் குருப்ஸர்க் கப்பல்கள், சண்டைக் கப்பலேவிட அதிக ஓட்டங்கொண்டும் குறைந்த பீரங்கிவன்மை கொண்டு மிருக்கின்றன; ஆனல் அவை, குருப்ஸர்க் கப்பல்களேவிடக் குறைந்த ஓட்டமும் அதிக பீரங்கி வன்மையுங் கொண்டிருக்கின்றன.

கப்பலின் தினுசு.	மொத்த நிறை	இரும்புக் கவசம்.	பீரங்கிகள்.	ஓட்டம்
சண்டைக் கப்பல்.	17,900	11 அங்குல தகடு	12 அங்குல பீரங்கிகள் 10	24
சண்டைக் குருப்ஸர் கப்பல்.	17,250	7 அங்குலத் தகடு.	12 அங்குல பீரங்கிகள் எட்டு.	29¼

இவ்விரண்டு கப்பல்களும் ஒரே காலத்தில் கட்டப்பட்டவை, ஏறக்குறைய ஒரே பளுவுடையவை. ஆனல் சண்டைக் குருப்ஸர்க் கப்பலின் ஓட்டம் மணிக்கு 5¼ மைல் அதிகமாயிருக்கிறது. அவ்வாறு ஓட்டத்தை அதிகப் படுத்துவதற்காக, இரும்புக் கவசத்தின் பளுவும், பீரங்கிகளின் தொகையும் பளுவும், குறைக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். இந்த அம்சங்களில் பளுவைக் குறைத்தால் தான், கப்பலின் மொத்த நிறையையும் பொருட்செலவையும் அதிகப்படுத்தாமலே, ஓட்டத்தை மாத்திரம் அதிகரிப்பதற்குச் சாத்தியப்படும். பீரங்கிகள் தொகையில் குறைவுபட்டிருந்தாலும் அவை அதீத தினுசைச் சேர்ந்தவையாகையால், திறமையில் குறைவுபடவில்லே என்று சொல்லவேண்டும். அம்மாதிரியான கப்பல்களின் மொத்தத்தொகையை அதிகரிப்பதால், அவைகளிலுள்ள மொத்த பீரங்கிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திவிடலாம்.

ஆகையால் சண்டைக் குருப்ஸர்க் கப்பல் அநேக அம்சங்களில் சண்டைக் கப்பல்களேயே ஒத்திருக்கின்றன. பீரங்கி, இரும்புக் கவசம் இவைகளின் வன்மை சிறிது குறைந்திருக்கிற படியால் அதை முற்றிலும் சண்டைக் கப்பலெனச் சொல்வதற்கில்லே. ஆனல் பீரங்கி, இரும்புக் கவசம் இவைகளின் பளுவைக் குறைக்காமல், கப்பலின் ஓட்டத்தை அதிகப்படுத்த முடியாது.

ஆனல் சண்டைக் குருய்ஸர்க் கப்பல்கள் அதிக ஓட்டங் கொண் டிருப்பதற்காகச் சில சமயங்களில் சண்டைக் கப்பலிலிட அதிக பளுவுகொண்டதா யிருக்கின்றன.

கப்பலின் தினுசு	மொத்தகிறை	இரும்புக் கவசம்	பீரங்கிகள்	ஓட்டம்
சண்டை குருய்ஸர்க் கப்பல் ('லயன்' என்று பெயர்.)	26,350	9 அங்குலத் தகடு.	$13\frac{1}{2}$ அங்குல பீரங்கிகள் எட்டு.	32 மைல்
சண்டைக் கப்பல் ('ஐன்டியூக்')	25,000	12 அங்குலத் தகடு.	$13\frac{1}{2}$ அங்குல பீரங்கிகள் பத்து	மணிக்கு $24\frac{3}{4}$ மைல்

ஐரன்டியூக் என்ற பேர் கொண்ட சண்டைக் கப்பல் சென்ற வருஷந்தான் கட்டிமுடிந்தது. அதைப்பற்றி ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறோம். அந்தக் கப்பலோடு அதேமாதிரியான மூன்று கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனல் இவ்வருஷத்தில் இன்னும் பெரிய சண்டைக் கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனல் அவைகள் இன்னும் கட்டி முடியவில்லே யாதலால் அவைகளேப்பற்றி இங்கு நாம் கவனிக்கவேண்டிய தில்லே.


"ஐரன் டியூக்" கப்பல் கட்டப்படுவதற்கு 2 வருஷங்களுக்கு முன்னல், "லயன்" என்ற பேருடைய அந்த சண்டைக் குருய்ஸர்க் கப்பல் கட்டப்பட்டதாயினும், அதன் மொத்த பளுவு அதிகமா யிருப்பதைக் கவனிக்கவேண்டும். இரண்டு பீரங்கிகள் குறைவா யிருப்பதால் கப்பலில் ஏற்றப்பட்ட பளுவு அந்த அம்சத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது. இரும்புக் கவசத்தின் கனத்தைக் குறைவுப் படுத்தி, அந்த அம்சத்திலும் கப்பலின் பளுவு குறைக்கப்பட்டிருக்கிறது. இவைகளேத் தவிர கப்பலின் மொத்த பளுவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இம் மூன்று விதங்களால் கப்பலின் ஓட்டம் மணிக்கு $1\frac{1}{4}$ மைல் வீதம் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. 'ஐரன்டியூக்" என்ற சண்டைக் கப்பலில் 30,000 குதிரையோட்டங் கொண்ட எஞ்சின் பூட்டப்பட்டிருக்கிறது. "லயன்" என்ற சண்டைக் குருய்ஸர் கப்பலில் 75,600 குதிரை யோட்டங் கொண்ட எஞ்சின் வேலே செய்கிறது.

இந்த சண்டைக் குருப்ஸர்க் கப்பல்கள், சத்துருவின் கடற்படையின் இருப்பிடத்தை அறிந்து சத்துருவுக்குச் சௌகரிய மில்லாத விடங்களில் அவர்களுடைய கப்பற்படையைச் சண்டை யிடும்படி செய்ய மிகவும் உபயோகமுள்ளவை. தேசத்து வியாபாரக் கப்பல்களும் வழிகளும் துறைகளும் அதிக தூரங்களில் இருந்தாலும் அங்கு விரைவாய்ச் சென்றுசத்துருவின் கப்பலால் அபாய மூண்டாகாமல் காப்பதற்கு சண்டைக் குருப்ஸர்க் கப்பல்கள் இன்றியமையாதவை.

அம்மாதிரியான வேலையை குருப்ஸர்க் கப்பல்கள் செய்துவந்தாலும், அவைகள் சத்துருவின் சண்டைக்கப்பல்களோடு சண்டை செய்ய முடியாது. ஆனால் சண்டைக் குருப்ஸர்க் கப்பல், வியாபார வழிகளைக் காத்து அவைகளுக்குத் தடை செய்கிற எந்த யுத்த கப்பலையும் தாக்கக்கூடிய வன்மை பெற்றிருக்கிறது.

சண்டைக் குருப்ஸர்க் கப்பல்கள் தங்கள் பீரங்கி வன்மையில் சண்டைக் கப்பலுக்கு அடுத்தபடியா யிருந்தாலும் மற்ற இனுசு யுத்த கப்பல்களைவிட மேலானவை; அவைகள் தங்கள் பீரங்கி வன்மையில் சண்டைக் கப்பலை ஒத்திருப்பதுபோல ஓட்டத்தில் குருப்ஸர்க் கப்பலை ஒத்திருக்கின்றன.

பிரிட்டிஷ் கடற்படையில், சண்டைக் குருப்ஸர்க் கப்பலைக் கட்டத்தொடங்கியது 1908-ம் வருஷத்தில்தான். ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்தபோது, ஏழு கப்பல்களிருந்தன. அதைத் தவிர, இரண்டு கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன. பிரிட்டனைப்போல மற்ற தேசங்கள் அவ்வளவு வலுவான சண்டைக் குருப்ஸர்களைக் கட்டுவதாகத் தெரியவில்லை.



14-வது அத்தியாயம்

குரூஸர்க் கப்பலும் அதன் முக்கிய லக்ஷணங்களும்.

யுத்தகப்பல்கள் இரண்டு முக்கியமான வேலைகளைச்செய்யவேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். முதலாவது, சத்துருவின்யுத்தகப்பல் களை அடக்கவேண்டும்; இரண்டாவதுதேசத்து வியாபாரக்கப்பல்களை யும், வியாபாரப் போக்குவரத்து நடக்கும் வழிகளையும், துறைமுகங் களையும் காக்கவேண்டும். எல்லாவிதமான யுத்த நடவடிக்கைகளும் திரவிய பலத்தையே முக்கிய ஆதாரமாகக்கொண் டிருக்கின்றன. தேசத்து ஜனங்களுக்கு ஆகாரமும் யுத்த தளவாடங்களைச் சேர்ந்த அநேக சாமான்களும் அந்நியதேசங்களிலிருந்து வரவேண்டியவை யாயிருக்கின்றன. அந்நிய தேசங்களுடன் போக்குவரத் தில்லாமல் ஜனங்கள் தங்கள் ராஜியத்துக்குள்ளே அடைபட்டுக்கிடந்தால், அந்த ராஜ்யம் யுத்த காலத்தில் முற்றுகையிடப்பட்ட ஒரு பெரிய பட்டணத்தைப்போல கஷ்ட நிலைமைக்கு வந்து விடும். ஆகையால் வியாபாரப் போக்கு வரத்து யுத்த காலத்தில் தடையில்லாமல் நடை பெற வேண்டும். முக்கியமாய் அந்நிய தேசங்களுடன் நடத்தும் வியாபாரத்தையே ஜீவாதாரமாகக் கொண்டிருக்கும் கிரேட்பிரிட் டன் தன் வியாபாரப் போக்கு வரத்தைக் காப்பதில் மிகுந்த அக் கரைகொண் டிருக்கிறது. ஆகையால் விஸ்தாரமான வியாபார வழிகளையும் வெகு தூரத்திலிருக்கிற முக்கியமான துறைகளையும் காப்பதற்கு விரைவாய்ச் செல்லக்கூடிய யுத்த கப்பல்கள் தேவை யாயிருக்கும்; தனிர அம்மாதிரியான கப்பல்கள் ஏராளமாயிருக்க வேண்டும். ஐரோப்பாவுக்கு மேற்கேயுள்ள அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் காவல் செய்யவேண்டுமென்றால்.எத்தனைக் கப்பல் கள் தேவையாயிருக்கும்? மேலும், தேசத்தின் வியாபாரத்தைக் கெடுப்பதற்கு சத்துருவின் கப்பல்கள் முயற்சி செய்து வருமாகை யால் அவ்வாறு செய்வதைத் தடுப்பதற்கும் விரைவாய்ச் செல்லக் கூடிய கப்பல்கள் தேவையாயிருக்கும். சண்டைக் குரூஸர்களைப் போன்ற கப்பல்கள் ஒவ்வொன்றுக்கும் 3 கோடி. ரூபாய் செலவு செய்து எத்தனை கட்ட முடியும்? ஆகையால் குறைந்த செலவில் வலுவான யுத்த கப்பல்கள் கட்டப்பட்டன. அவைகளுக்குக்

'குருய்ஸர்' என்று பெயர். குறைந்தசெலவில் வலுவான யுத்தக் கப்பலைக் கட்டவேண்டுமானால், கப்பலைச் சேர்ந்த எந்த அம்சங்களைக் குறைப்பது ? யுத்த கப்பலில் மூன்று முக்கியமான அம்சங்களைக் கவனிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். முதலாவது கப்பலின் ஓட்டம் கவனிக்கப்பட வேண்டும். அதற்கு எஞ்சின்களும் அவைகளில் எரிப்பதற்கு நிலக்கரி எண்ணெய் இவைகளும் தேவையாயிருக்கின்றன. இரண்டாவது, பீரங்கிகளின் வன்மை யுத்த கப்பலுக்கு அவசியமானது; மூன்றாவது சத்துருவினால் கப்பல் சேதமாகாமலிருப்பதற்கு கனமான இரும்புக் கவசம் போடப்பட வேண்டும். குருய்ஸர்க் கப்பல்கள் விஸ்தாரமான கடல்களில் சஞ்சாரஞ் செய்து காக்கவேண்டியிருக்கிறபடியால், அதற்கு நல்ல ஓட்டமிருப்பது அவசியமாகும்: பீரங்கிகளின் வன்மையும் அதிகமாயிருக்க வேண்டும். ஆனால் கப்பல் சிறிதாயிருக்கிறபடியால், முதல்தரமான பீரங்கிகளை ஏற்றமுடியாது. ஆகையால் இரண்டாந்தர பீரங்கிகளை அதிகமாய் ஏற்றவேண்டும். கப்பலின் சுற்றளவு கப்பலின் செலவு இவைகளுக்குத் தகுந்தபடி பீரங்கிகள் ஏற்றப்பட வேண்டும். கடைசியாக சிறிய கப்பலில் அதிக பீரங்கிகள் ஏற்ற வேண்டுமானால் இரும்புக் கவசத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவும் குறைத்துவிட வேண்டும். இவைகள்தான் குருய்ஸர்க் கப்பலின் முக்கிய லக்ஷணங்கள். குருய்ஸர்க் கப்பலின் வெளிப்புறத்தில் மெல்லிய இரும்புக் கவசம் போடப்பட்டிருக்கிறது; அது நீளவாட்டில் போடப்பட்டிருக்கிறதே யொழிய குறுக்கில்லை. கப்பலின் மேடையிலிருந்து நீர்மட்டம் வரையிலும் முழுவதும் போடப்படுவதில்லை. அதில் முக்கால் பாகந்தான் இரும்புத்தகடால்மூடப்படுகிறது. பீரங்கிகள்வைக்கப்படுகிற இடமாகிய கப்பல் மேடையின் வெளிப்புறத்தில்மாத்திரம் கனமான இரும்புக் கவசம் போடப்பட்டிருக்கிறது. அவ்வாறு இரும்புத் தகடுகளைக் குறைத்துவிட்டபடியால் கப்பலின் பளுவும் சுற்றளவும் குறைந்துபோய் செலவும் குறைவுபடுகிறது. குருய்ஸர்கள் அவைகளின் அளவுக்குத் தக்கபடி மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

முதல் வகுப்புக் குருய்ஸர்க் கப்பல்.

1894-ம் வருஷத்தில் முதல்வகுப்பு தினுஸில் இரண்டு பெரிய


குருய்ஸர்கள் கட்டப்பட்டன. அவைகளில் ஒன்றை நமது சித்திரப் படத்தில் காணலாம். அதன் மொத்த நிறை 14,200 டன். 9 அங்குல பீரங்கிகளில் இரண்டும், 6 அங்குல பீரங்கிகளில் பன்னிரண்டும், வேறு சிறிய பீரங்கிகளில் முப்பத்தொன்பதும் ஏற்றப்பட்டன. கப்பலின் உள்புறத்தில் அடிப்பாகத்தில் 4 டார்ப்பிடோக்குழாய்கள் அமைக்கப் பட்டன. 9 அங்குல பீரங்கிகளைச் சுற்றி 6 அங்குல கன முள்ள இரும்புத் தகடுபோடப்பட்டன கப்பலின் ஓட்டம் மணிக்கு 24½மைல் அந்தக் காலத்தில் (1894) கட்டப்பட்ட சண்டைக் கப்பல்கள் மணிக்கு 20 மைல்தான் ஓடிக்கொண் டிருந்தன வென்பதை மறக்கக் கூடாது. மேலும் அவ்வளவு பெரிய குருய்ஸரைக் கட்டி அதன் ஓட்டத்தை இன்னும் அதிகப்படுத்துவதற்கு, ஏராளமாய்ச் செலவா கிறதைக் கண்டு, அம்மாதிரியான பெரிய குருய்ஸர்கள் அதன்பிறகு கட்டப்படவில்லை. 1900 வருஷம், 11,000 டன் நிறைகொண்ட மூன்று குருய்ஸர்கள் கட்டப்பட்டபின், முதல் வகுப்புக் குருய்ஸர் கட்டுவது நிறுத்தப்பட்டது.

இரண்டாந்தர பீரங்கிகள்.


பீரங்கி	மொத்த நிறை	சுடக்கூடிய குண்டின் நிறை	ஒரு நிமிஷத்தில் சுடக்கூடிய குண்டுகள்
9 அங்குல பீரங்கி	28 டன்	380 பவுண்ட்	4 குண்டுகள்
6 அங்குல பீரங்கி	7¾ டன்	100 பவுண்ட்	10 குண்டுகள்
4½ அங்குல பீரங்கி	3 டன்	45 பவுண்ட்	12 குண்டுகள்
4 அங்குல பீரங்கி	2 டன்	31 பவுண்ட்	15 குண்டுகள்
12 பவுண்ட் பீரங்கி	1 டன்	12 பவுண்ட்	25 குண்டுகள்
6 பவுண்ட் பீரங்கி	½ டன்	6 பவுண்ட்	28 குண்டுகள்
3 பவுண்ட் பீரங்கி	¼ டன்	3 பவுண்ட்	30 குண்டுகள்




இரவில் பிரிட்டிஷ் கப்பற்படை முழுவதும் சோதனை வெளிச்சங்களை உபயோகிக்கிறது.




பிரஞ்சு குரூஸர்—கடல் மண்டலத்தில். மொத்த நிறை 12,870 டன். மணிக்கு 26 மைல். அதிலுள்ளவை 2-ந்தர பீரங்கிகள்.



மற்றொரு தினுசான டார்ப்பிடோ டெஸ்டிராயர்.



மூதல் வகுப்பு ஜெர்மன் குருய்ஸர்—மொத்த நிறை 15,500 டன். ஓட்டம் மணிக்கு 28 மைல். 2-ந்தர பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன.





யுத்த கப்பலில் ஏற்றப்படும் 4½ அங்குல பீரங்கி. மெஷின் பீரங்கி.

9 அங்குல பீரங்கி இப்போது அதிகமாய் உபயோகிக்கப்படுவ தில்லை. மற்ற பீரங்கிகளைத்தான் யுத்த கப்பல்களில் ஏற்றுகிறார்கள். கடையாகவுள்ள மூன்று பீரங்கிகளைப்பற்றி, அவைகளின் குழாயின் அளவைக் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் சுடக்கூடிய குண்டின் நிறையைக்குறிப்பிட்டுச்சொல்லப்படுகின்றது. 12 பவுண்ட் பீரங்கியென்றால், 12 பவுண்ட் நிறையுள்ளகுண்டைச் சுடுகிற பீரங்கி என்று பொருள்படும். அந்த பீரங்கிகள் ஒரு நிமிஷத்துக்குள் எவ் வளவு குண்டுகளைச் சுடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பீரங்கி யின் நிறை குறையக்குறைய, அது ஒரு நிமிஷத்தில் சுடக்கூடிய குண்டுகள் அதிகரிக்கின்றன. ஆகையால் 9 அங்குல பீரங்கியைத் தவிர மற்றவையெல்லாம் விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகள் (Quick Firers) என்று சொல்லப்படும். மெஷீன் பீரங்கி என்று சொல்லப்படுகிற மிகவும் சிறிய பீரங்கி ஒரு நிமிஷத்தில் 600 சிறு குண்டுகளைச் சுடும். அதன் நிறை 30 பவுண்ட் முதல் 90 பவுண்ட் வரையிலிருக்கும். 6 அங்குல பீரங்கிகளும், 4 அங்குல பீரங்கிகளும் சண்டைக் கப்பல்களில் ஏற்றப்படுகின்றன வென்று முன்பு சொல்லி யிருக்கிறோம். சத்துருவின் டார்ப்பிடோக் கப்பல்கள் விரைவாய் மூன் வருவதைத் தடுப்பதற்கு அந்த பீரங்கிகள் உபயோகிக்கப்படு கின்றன. முதல்தர பீரங்கிகள் ஒரு நிமிஷத்தில் 2 குண்டுகள்தான் சுடுகிறபடியால், சிறிய டார்ப்பிடோக் கப்பல்களை அழிப்பதற்கு அந்த முதல்தர பீரங்கிகள் பயன்படாதெனக் கருதி, விரைவாய்ச் சுடுகிற இரண்டாந்தர பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது வகுப்பு மூன்றுவது வகுப்பு குரூஸர்கள்.

இரண்டாம் வகுப்புக் குரூஸர்களின் படம் ஒன்று பிரசுரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். 4000 டன் முதல் 7000 டன் வரை யில் மொத்த நிறையுள்ள கப்பல்கள் இரண்டாம் வகுப்பைச்சேர்ந்த வையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 4000 டன் முதல் 4500 டன் வரையில் மொத்த நிறையுள்ள கப்பல்கள் 3-வது வகுப்பாகப் பிரிக் கப்பட்டிருக்கின்றன. அவ்விரண்டு வகுப்பைச் சேர்ந்த ஒரு கப்பு லைப்பற்றிய விவரங்களைச் சொல்வோம்.

	மொத்த நிறை	பீரங்கிகள்	ஓட்டம்
2-வது வகுப்புக் குருப்ஸர்	4800-டன்	6-அங்குல பீரங்கி இரண்டு 4-அங்குல பீரங்கி பத்து. 4-மெஷின் பீரங்கி	மணிக்கு 31½-மைல்
3-வது வகுப்புக் குருப்ஸர்	3800-டன்	6-அங்குல பீரங்கி இரண்டு 4-அங்குல பீரங்கி எட்டு	மணிக்கு 32½-மைல்

மணிக்கு 32½ மைலுக்கு அதிகமாக ஓடக்கூடிய குருப்ஸர்கள் பிரிட்டிஷ் கடற்படையில் இல்லை. அவைகள் புதிதாய்க் கட்டப்பட்டு வருகின்றன. இந்த குருப்ஸர்கள் செய்யவேண்டிய வேலைகளுக்குத் தக்கபடி அவைகள் கட்டப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். விஸ்தாரமான கடல்களில் திரிந்து கொண்டு அங்கியதேசக்களுடனுள்ள போக்கு வரத்து வழிகளைக் காக்கவேண்டும். அந்த வேலை மிகவும் முக்கியமானது. ஜெர்மன் குருப்ஸராகிய எம்டன், வங்காளக்கடலில் எவ்வளவு வியாபாரக் கப்பல்களை அழித்திருக்கின்றது. அதனால் சேதமான நிரவியத்தைக்கொண்டு ஒரு பெரிய சண்டைக் கப்பல் கட்டலாமென்று சொல்லப்பட்டது. எம்டன் கப்பல் மூன்றாந்தர குருப்ஸர். அதன் மொத்த நிறை 3600 டன். அதில் பன்னிரண்டு 4 அங்குல பீரங்கிகள் ஏற்றப்பட்டிருந்தன. மணிக்கு 28 மைல் வீதம் செல்லக்கூடியது. பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய ஆஸ்டிரேலியா நாட்டுக் குருப்ஸர் ஒன்றால் எம்டன் அழிக்கப்பட்டதையும் கவனிக்கவேண்டும். எம்டனுடைய நடவடிக்கைகளையும், அதை அழிப்பதற்காகக் வங்காளக் கடல் முழுவதும் தேடிய முயற்சிகளையும் அந்த கடைசியில் அழிந்தபோன விதத்தையும் பற்றிக் கவனித்தால், குருப்ஸர்கள் செய்யவேண்டிய முக்கியமான வேலைகள் இன்னவென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இந்த 3-ஆம் வகுப்புக் குரூப்ஸ்களை முக்கியமானதாகக் கருதவேண்டும். முக்கியமாய் ஜெர்மனி தன் வியாபாரத்தைக் காக்கவும் சத்துருவின் வியாபாரத்தை அழிக்கவும் அம்மாதிரியான குரூப்ஸர்கள் கட்டி வந்தன. பிறகு சென்ற ஐந்து வருஷங்களாக வல்லரசுகள் 3-ம் வகுப்புக்குரூப்ஸர்களை அதிகமாய்க்கட்டிவருகிறார்கள். அம்மாதிரியான குரூப்ஸரைக்கட்டுவதற்குச்செலவு குறைவாயிருப்பதோடு, அதில் தேவையான பிரங்கிவன்மை யிருப்பதைக்கவனிக்கவேண்டும். அவைகளில் 6 அங்குல பீரங்கிகளும் 4அங்குல பிரங்கிகளும் ஏற்றப்படுகின்றன. அவைகள் மணிக்கு 30 மைலுக்கு அதிகமாக ஓடுகின்றன. ஆகையால் விஸ்தாரமான கடல்களைக் காவல் செய்ய அம்மாதிரியான குரூப்ஸர்கள் ஏராளமாய்க் கட்டப்படுகின்றன.

மேலே சொல்லப்பட்ட குரூப்ஸர்களைத் தவிரத் துப்பறியும் குரூப்ஸர் (Scout) என்ற சிறிய கப்பல்களும் கட்டப்பட்டிருக்கின்றன. அவை 2700 டன் நிறை கொண்டு, மணிக்கு 29½ மைல்வீதம் ஓடக்கூடியவை. அவை 370 அடி நீள மிருக்கின்றன. 2-வது வகுப்புக் குரூப்ஸர் 350 அடி நீளமும் 3-வது 370 அடி நீளமு மிருக்கின்றன. மொத்த அவை, நிறையில் மற்றக் குரூப்ஸர்களை விடக் குறைவாயிருந்தாலும், நீளத்தில் குறையாம லிருப்பதைக் கவனிக்கவேண்டும். கப்பல் வீரைவாய் ஓடுவதற்கு நீளமா யிருந்தால்தான் சௌகரியமாயிருக்கும். இந்தச் சிறு கப்பல்கள் கடற்படைக்குத் தேவையான சில்லரை வேலைகளைச் செய்யும். இவற்றில் மூன்றரை பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கும். 2 பவுண்ட் பீரங்கிகளில் பத்தும் 3 பவுண்ட் பீரங்கிகளில் எட்டும் ஏற்றப்பட்டிருக்கும். கடலில் மறைக்குள்ள வெடி மருந்துச் சுரங்கங்களைச் சாதாரண கப்பல்கள் கண்டெடுக்கும் போது துப்பறியும் குரூப்ஸர்கள் காவலிருக்கும். சத்துருவினுடைய சப்மரின் கப்பல்கள் (ஜலத்தில் முழுகிச் செல்லும் கப்பல்கள்) இரகசியமாய் உலாவுவதை அவை கண்டு பிடித்து அறிவிக்கும். அவசரமான கடிதங்களைக் கடற்படையின் முக்கிய ஸ்தலத்துக்கும் முக்கிய ஸ்தலத்திலிருந்தும் கொண்டுபோகும்.

இந்த மகா யுத்தத்தின் ஆரம்பத்தில், மொத்தம் 85 குரூப்ஸர்கள் பிரிட்டிஷ் கடற்படையி லிருந்தன. அவைகளைத் தவிர, மணிக்கு 32½ மைல் ஓடக்கூடிய 3-வது வகுப்புக் குரூப்ஸர்களில் 15 கட்டப்பட்டு வந்தன.

மற்றொரு விதமான குரூய்ஸர்.

இதுவரையில் பிரஸ்தாபித்த குரூய்ஸர்களில், இரும்புக் கவசம் ஒரு பாகத்தில் மாத்திரம் போடப்பட்டிருந்ததென்று சொன்னேனும், குரூய்ஸர்க் கப்பல்களில் பெரும் பான்மையும் அம்மாதிரியானவை. ஆனால் சண்டைக் கப்பலிலிருப்பது போல, வெளிப்புறமுழுவதையும் இரும்புக் கவசத்தால் மூடிய குரூய்ஸர்களும் கட்டப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு ஆர்மர்டு (Armoured) குரூய்ஸர் (கவசம் பூண்ட குரூய்ஸர்) என்று பெயர். கப்பலின் முக்கியமான பாகதத்தில் மாத்திரம் கவசம் போடப்பட்ட முதலில் சொல்லிய குரூய்ஸருக்கு, பரொடெக்டட் குரூய்ஸர் என்று பெயர்; காக்கப்பட்ட குரூய்ஸர் என்று பொருள்படும்; அதாவது முக்கியமான பாகம் மாத்திரம் கவசத்தால் காக்கப்பட்ட குரூய்ஸர் என்று விளங்கும்.

ஆறுவருஷங்களுக்கு முன்பு, பிரிட்டிஷார், கவசம் பூண்ட கப்பல்கள் கட்டுவதை முற்றிலும் நிறுத்திவிட்டார்கள். ஆனால் மற்ற தேசங்கள் அம்மாதிரியான குரூய்ஸர்களைக்கட்ட அரம்பிக்கவே, பிரிட்டிஷ் கடற்படையில் சில கப்பல்கள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டு வந்தன. பிரிட்டிஷார் கவசம்பூண்டகுரூய்ஸர்களைக் கட்டாமலிருந்ததற்கு முக்கிய காரணம், அவை அநேகமாய் எல்லா அம்சங்களிலும் சண்டைக் கப்பலைப்போன்றவையாயிருந்தன. சண்டைக்கப்பல்களிருந்ததால் கவசப்பூண்ட குரூய்ஸர்கள் தேவையில்லை யென்று பிரிட்டிஷார் எண்ணினார்கள். 1899ம் வருஷத்தில் கட்டப்பட்ட பிரிட்டிஷ் குரூய்ஸரின் (கவசம்பூண்ட தினுசு) விவரங்களைச் சொல்வோம். அதன் மொத்த நிறை14,100டன். நீர்மட்டத்துக்கு 5அடிகீழிருந்து கப்பலின் மேடை வரையில் 6 அங்குல கனமுள்ள இரும்புத் தகடு போடப்பட்டது. அந்தத் தகடு கப்பலின் முனைகளில் 2 அங்குல கனமாகக் குறைக்கப்பட்டது. இந்த கவசம் சண்டைக் கப்பலுக்குப் போர்ப்படுவது போலவே யிருக்கிறதைக் கவனிக்கவும். கப்பலின் ஓட்டம் மணிக்கு 27 மைல். 9 அங்குல பீரங்கியில் இரண்டும், 6 அங்குல பீரங்கியில் பதினைஞும், 12 பவுண்ட் பீரங்கியில பதினைஞு; இன்னும் சிறிய பீரங்கியில் பன்னிரண்டும் ஏற்றபபட்டன. இரண்டு டார்ப்பிடோக் குழாய்களும் அமைக்கப்பட்டன. ஆகையால் இந்தக் கவசம் பூண்ட குரூய்ஸரில் இரண்டாந்தர பீரங்கிகளும், சண்

டைக் கப்பலில் முதல் தரமான பிரங்கிகளுமிருப்பதைத் தவிர வேறெந்த வித்தியாசமும் அவைகளுக்குள் காணப்படவில்லை. உண்மையில், 20 வருஷத்துக்கு முன்னுல் கட்டப்பட்ட சண்டைக் கப்பலை விட, 1899-ம் வருஷம் கட்டப்பட்ட அந்தக் கவசம்பூண்ட குருப்ஸர் அதிக வன்மையுடையதென்றே சொல்லவேண்டும். முதல் தரமான பிரங்கிகள் அதில் ஏற்றப்படவில்லை யென்பதுதான் ஒரு வித்தியாசம். ''சண்டைக் குருய்ஸர்''க் கப்பல்கள், சண்டைக் கப்பலோடு சேர்க்கப்படவேண்டும்; ஏனெனில் அவைகள் முதல்தரமான பிரங்கிகளை ஏற்றிக்கொண்டிருக்கின்றன வென்று சொல்லியிருக்கிறோம். அம்மூன்றுவித கப்பல்களுக்குமுள்ள வித்தியாசமென்னவென்றால், சண்டைக் கப்பலில் முதல் தரமான பிரங்கிகள் அதிகமாயும், சண்டைக் குருப்ஸரில் முதல்தரமான பிரங்கிகள் எண்ணிக்கையில் சிறிது குறைவாயும், கவசம்பூண்ட குருப்ஸரில் முதல்தர பிரங்கிகளே யில்லாமல் இரண்டாந்தர பிரங்கிகளையே முற்றிலும் ஏற்றப்பட்டுமிருக்கின்றன. மற்ற அம்சங்கள் சிறிது வித்தியாசப் பட்டாலும் அந்தந்தக் கப்பலின் அளவுக்குத் தகுந்தபடி கவனித்து அமைக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண குருப்ஸர்க் கப்பல்களில் இரண்டாந்தர பிரங்கிகள் ஏற்றப்பட்டுச் சில பாகங்கள் மாத்திரம் கவசத்தால் சூழ்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில், பிரிட்டிஷ் கடற்படையில், கவசம்பூண்ட குருப்ஸர்கள் 34-இருந்தன.

பீரங்கிப் படகு

நதிகளிலும், வாய்க்கால்களிலும் சிறு தீவுகளிலும், மீன் பிடிக்கும் கடல்துறைகளிலும் காவல் செய்வதற்காகச் சிறிய கப்பல்களைக் கட்டி அதில் சிறிய பிரங்கிகள் ஏற்றப்படுகின்றன. இப்மாதிரியான ஆஸ்டிரியக் கப்பல்கள் டான்யூப் நதியில்சென்று, அந்நதிக்கரையிலுள்ள பெல்கிரேட் நகரத்தைத் தகர்த்தன. பெரிய நதிகளுள்ள தேசங்களில் அவை உபயோகப்படுகின்றன. ஒரு கப்பலின் விவரங்களை மாத்திரம் சொல்வோம். பீரங்கிப்படகின் மொத்த நிறை 120 டன்; நீளம், 145 அடி அகலம்; 23 அடி. மணிக்கு 17 மைல் ஓட்டம். 6 பவுண்ட் பிரங்கியில் இரண்டும் இன்னுஞ் சிறிய பீரங்கியில் நான்கும் ஏற்றப்பட்டன. சில பீரங்கிப் படகுகளில் 4 அங்குல பீரங்கியில் இரண்டொன்று ஏற்றப்படுவது முண்டு.

15-வது அத்தியாயம்.

டார்ப்பிடோக் கப்பல்.

டார்ப்பிடோப் படகு.

டார்ப்பிடோக் கப்பல் என்பது, அதன் பெயரால் தெரிய வருகிறபடி, டார்ப்பிடோ என்ற வெடியைப் பிரயோகிப்ப தற்காகக் கட்டப்படும் கப்பலாகும். அதில், டார்ப்பிடோப் படகு என்றும் டார்ப்பிடோ டெஸ்டிராயர் என்றும் இரண்டு வகுப்புக ளிருக்கின்றன. 34 வருஷங்களுக்கு முன்னல், வேகமாய்ச் செல்லக் கூடிய ஒரு சிறு கப்பல் கட்டப்பட்டு அதன்மேல் ஒரு டார்ப்பிடோக் குழாய் அமைக்கப்பட்டது. மற்ற யுத்த கப்பல் கள் நாளுக்கு நாள் பெரிதாகவும் புதுமாதிரியாகவும் கட்டப் பட்டு வந்ததுபோல, டார்ப்பிடோக் கப்பல்களும் விரைவாய் மாறுத லடைந்தன. டார்ப்பிடோப் படகில், டார்ப்பிடோ என்ற வெடியைச் சுடுவதற்காகவுள்ள குழாய்கள் அதிகமாக அமைக்கப்பட்டு, சத்துரு வின் படகுகளால் சேதமாகாம லிருப்பதற்கு அதில் சிறு பீரங்கி களும் ஏற்றப்பட்டன. டார்ப்பிடோப் படகுகள் சத்துருவின் கப்பற் படைக்கு அருகில் விரைவாய்ச் சென்று டார்ப்பிடோ வெடியைப் பிரயோகித்துத் திரும்பி வந்துவிடும். ஆனால் டார்ப்பிடோ என்ற பயங்கரமான வெடியால் ஏராளமான சேத முண்டாகுமென்பதை உத்தேசித்து, அந்தப் படகுகளை அழிப்பதற்காக டார்ப்பிடோ டெஸ்டிராயர் என்ற கப்பல்கள் கட்டப்பட்டன.

டார்ப்பிடோ டெஸ்டிராயர்.

டார்ப்பிடோப்படகு மிகவும் சிறிதாகவும் வேகமாய் ஓடக்கூடி யதாயு மிருக்கிறபடியால், பெரிய யுத்த கப்பல் அதைத் தாக்குவ தற்குக் கஷ்டமா யிருந்தது. ஆகையால் அந்தப் படகுகளைத் தாக் குவதற்கென்றே அம்மாதிரி அதிக ஓட்டங்கொண்ட சில கப்பல் கள் கட்டப்பட்டன. அவைகளுக்கு டார்ப்பிடோ டெஸ்டிரா யர் என்று பெயர். டார்ப்பிடோ டெஸ்டிராயர் என்னுஞ் சொல் டார்ப்பி


டோவை அழிக்கும் கப்பல் என்று அர்த்தம். அதாவது டார்ப்பி டோப் படகை அழிக்கும் கப்பல் என்று பொருள்படும். ஆகையால் டார்ப்பிடோப் படகைவிட, டார்ப்பிடோ டெஸ்டிராயர் அதிக வன்மை கொண்டதாய்க்கட்டப்பட்டது. அவைகள், டார்ப்பிடோப்படகுகளைவிட, அதிகப் பெரிதாயும், அதிக பிரங்கி வன்மை கொண்டதாயும் அதிக ஓட்டமுடையதாயும் கட்டப்பட்டு, டார்ப்பிடோப்படகுகளைத் திரும்ப ஓடவிடாமல் தடுத்து அழிப்பதற்காக ஏற்பட்டவை. இந்தத் தொழிலை ஏற்றுக்கொண்ட டெஸ்டிராயர்க் கப்பல் டார்ப்பிடோப் படகின் வேலையையும் சேர்த்துச் செய்யலாமென்று என்னப்பட்டது. ஆகையால், டார்ப்பிடோப் படகுகளைப்போல, டார்ப்பிடோ வெடியைப் பிரயோகிக்கும் வேலையை டெஸ்டிராயர்களும் செய்யத் தொடங்கின. ஆகையால் டார்ப்பிடோப் படகுகள் சென்ற 5-வருஷங்களாகக் கட்டப்படுவதில்லை. அதிக வன்மைகொண்ட டார்ப்பிடோ டெஸ்டிராயர்கள்தான் கட்டப்பட்டு வருகின்றன.

ஆனல் ஏழு வருஷங்களுக்கு முன்னல் கட்டப்பட்ட டார்ப்பிடோக் கப்பல்கள் மிகவும் சிறியவையா யிருந்தபடியால், கடல் கொந்தளிக்கும் போதும் புசலடிக்கும் போதும் வைவாய்ச் செல்ல முடியவில்லை. ருஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில், கடலில் பெரும்புசல் வீசியபோது, அநேக டார்ப்பிடோக் கப்பல்கள் கடலில் முழுகிச் சேதமாயின. 100-அடி நீளத்துக்குக் குறைந்த எந்தக் கப்பலும் பெரிய கடல்களைக் கடந்துசெல்வது கஷ்டமாகும். இக்காலத்தில் கடல்களைக் கடந்து நடுச் சமுத்திரத்தில் சண்டை செய்யும்படி நேரிடுமாகையால், சென்ற ஏழு வருஷங்களாக டார்ப்பிடோ டெஸ்டிராயர்கள் புசற்காற்றை எதிர்த்துச் செல்லக் கூடியவையாய்க் கட்டப்பட்டு வருகின்றன. இப்போது கட்டப்படுகிற டெஸ்டிராயர்களும் கடலில் புசலடிக்கும் போது வைவாய்ச் சென்றால், பெரிய அலைகள் டெஸ்டிராயர்களின்மீது மோதிக்கப்பலுக்குள்ளே சமுத்திர ஜலம் புகுந்து விடும். ஆயினும் கப்பல் சேதமாகாமல் வைவாய்ச் செல்லும்படி வலுவாகக் கட்டுப்படுகின்றன. இரண்டு டெஸ்டிராயர்களின் விவரங்களைச் சொல்வோம்.


மொத்த நிறை	அளவு	ஓட்டம்	ஆயுதங்கள்
1000 டன்	280 அடி நீளம்; 27 அடி அகலம் 9 அடி உயரம்	மணிக்கு 37 மைல்	4 அங்குல பீரங்கியில் இரண்டு. டார்ப்பிடோக் குழாய்கள் இரண்டு
430 டன்	228 அடி நீளம். 21 அடி அகலம். 8½ அடி உயரம்	மணிக்கு 35 மைல்	12 பவுண்ட் பீரங்கி ஒன்று. 6 பவுண்ட் பீரங்கி ஐந்து. டார்ப் பிடோக் குழாய்கள் இரண்டு

இரண்டாவது சொல்லப்பட்ட விவரங்களை யுடைய டார்ப்பி டோ டெஸ்டிராயரின் சித்திரப்படம் இந்தப் புத்தகத்தில் பிர சுரிக்கப்பட் டிருக்கிறது. இரண்டாவது சொல்லப்பட்ட விவரங்களை யுடைய கப்பல் முதல் கப்பலின் மொத்த நிறையில் ஒரு பாதி கூட இல்லை; அப்படி யிருந்தும் அது எவ்வளவு நீளமாகக் கட்டப்பட் டிருக்கிற தென்பதைக் கவனிக்கவேண்டும். அவ்வளவு நீளமிருந் தால் வேகமாய் ஓடுவதற்குச் சௌகரியமாயிருக்கும்.


1913-ம் வருஷத்தில் அநேக டெஸ்டிராயர்கள் பிரிட்டிஷ் கடற்படைக்காகக் கட்டப்பட்டன. அவைகள் ஒவ்வொன்றும் 965 டன் நிறை கொண்டன. அவைகளில் 4 அங்குல பீரங்கிகள் மூன்று ஏற்றப்பட்டன. ஆகையால், டார்ப்பிடோ டெஸ்டிராயர் 1000 டன் நிறைக்கு மேற்படாமல் கட்டப்பட்டு வந்தன வென்பதைக் கவனிக்க வேண்டும். அதற்கு மதிகமான பளுவுள்ள டார்ப்பிடோக் கப்பல் கட்டப்படுவதில்லை. ஏனெனில், அவைகள் டார்ப்பிடோவைப் பிர யோகிக்கும் வேலையை மாத்திரம் செய்கின்றன. டெஸ்டிராயர் அதா வது நாசகாரி என்று பேர் கொண்டபோதிலும், அந்த வேலையை அது இப்போதுமேற்கொள்ளவில்லை. அந்தநாசகாரிகளை நாசஞ்செய் யுந்தொழில் 3-ஆம் வகுப்புக் குருஸர்கள் இப்போதுமேற்கொண் டிருக்கின்றன. ஆகையால், டெஸ்டிராயர்களின் அளவு அதிகரிக்கப்பட வில்லை. டார்ப்பிடோவைப் பிரயோகிப்பதற்கு வேண்டிய அளவில் அவைகள் கட்டப்படுகின்றன. எம்டன் என்றஜெர்மன் குருஸரைப்



(6) மூன்றாவது வகுப்பு **குரூஸர்** கப்பல். இது ஒரு ஜெர்மன் கப்பல். எம்டன் என்ற ஜெர்மன் யுத்த கப்பல் இந்த இனத்தைச் சேர்ந்தது.




(7) சண்டைக் கப்பலிலிருக்கிற பெரிய (13½ அங்குல) பீரங்கி. இந்த பீரங்கியின் நீளம் 45 அடி; ஒரு பீரங்கியின் நிறை 67 டன்.



(8) பிரிட்டிஷ் டார்பிடோ டெஸ்டிராயர். (முழுவேகத்துடன் சென்றுகொண் டிருக்கிறது.)

போன்ற 3-ஆம் வகுப்புக் குரூப்ஸர்களைப்பற்றி முன்பு சொல்லியிருக்கிறோம். அவைகள் யுத்த களத்தில் சத்துருவின் டார்ப்பிடோ டெஸ்டிராயர்களைத் தாக்கிச் சண்டை செய்யும். ஆதியில், டார்ப்பிடோப் படகு, டார்ப்பிடோவெடியைப் பிரயோகிப்பதற்காகக் கட்டப்பட்டது. பிறகு அந்தப படகைப் யுத்தகளத்தில் அழிப்பதற்காக அவைகளை விடப் பெரிதாக டார்ப்பிடோ டெஸ்டிராயர் என்ற கப்பலைக்கட்டி அதில் 4 அங்குல பிரங்கிகளை ஏற்றினார்கள். பிறகு, கடிச்சமுத்திரத்தில் புசல்களையும் அலைகளையும் எதிர்த்துச் செல்வதற்காகப் பெரிய கப்பல்கள் தேவையாயிருந்தபடியால் டார்ப்பிடோப் படகைக்கட்டாமல், டெஸ்டிராயர்களை மாத்திரம் பெரிதாகக் கட்டி அவைகளிலிருந்து டார்ப்பிடோ என்ற வெடி பிரயோகிக்கப்பட்டது. இந்த டெஸ்டிராயர்களை யுத்த களத்தில் அழிப்பதற்காக 3-ஆம் வகுப்புக் குரூப்ஸர்கள் இப்போது உபயோகிக்கப்படுகின்றன. அந்தக் குரூப்ஸர்கள் டெஸ்டிராயர்களை அழிப்பதற்காக, 6 அங்குல பிரங்கிகளை ஏற்றிக்கொண்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் கடற்படையில் மிகவும் பழமையான டார்ப்பிடோப் படகுகளை விலக்கி, 10-வருஷத்துக்கு முன்னிலிருந்து கட்டப்பட்டு வந்தவைகளை மாத்திரம் கணக்கிட்டால், இந்த மகா யுத்தத்தின் துவக்கத்தில் மொத்தம் 36-படகுகள் இருந்தன; டார்ப்பிடோ டெஸ்டிராயரில் 147-இருந்தன; 15-புதிய டெஸ்டிராயர்கள் கட்டப்பட்டு வந்தன.



16-வது அத்தியாயம்.

டார்ப்பிடோ வெடி

பூலோக வினோதங்களில் ஒன்று.

யுத்த கப்பலிலிருந்து டார்ப்பிடோக் குழாய் வழியாக எவ்வாறு டார்ப்பிடோ பிரயோகிக்கப்படுகிறதென்று முன்பு சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறோம். சமுத்திரத்தில் டார்ப்பிடோ பாய்ந்தவுடன் அது தானாகவே வெகுதூரம் விசையாய் ஓடுகின்றது. அது குறிதவறாமல் சரியாக ஓடுவதற்காக, அதனுள்ளே அநேக அற்புதமான யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது தானாகவே ஓடுவதோடு, தன் ஓட்டத்தைத் தானே ஒழுங்குபடுத்திக்கொள்கிறது. டார்ப்பிடோவைப் பூலோக வினோதங்களுள் ஒன்றாகக் கருதுவது சரியென்றே சொல்லவேண்டும். அதனுள்ளே அவ்வளவு அதிசயமான யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றி இங்கு விவகரிப்போம்.

பழையகாலத்து டார்ப்பிடோ

ஜலத்துக்குக்கீழே மறைந்துள்ள கப்பலின் அடிப்பரிசத்தில், இரும்புச் சுவரில் வெடிமருந்து வைத்துக் கப்பலைச் சேதப்படுத்தலாமென்று 1805-ம் வருஷத்தில் ஒருவர் பரீக்ஷைசெய்து காண்பித்தார். ஆனால் அந்த வெடிமருந்தை ஜலத்திற்கடியில் கொண்டு போய் கப்பற் சுவரின்மேல் வைப்பதுதான் கஷ்டமாயிருந்தது. சத்துருவின் கப்பலுக்கு அருகில் வெடிமருந்தை எவ்வாறு கொண்டு போவது என்பதைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. அந்த காலத்தில், வெடிமருந்தை ஒரு இரும்புக் கலசத்தில் நிரப்பி அதில் வெடிக்கக்கூடிய உபாயத்தை அமைத்துக் கடலின்கீழ் மறைவாய் வைக்கப்பட்டது. அது கடற்சுரங்கம் என்று இப்போது சொல்லப்படுகிறது. அந்த சுரங்கத்தின்மேல், கப்பல் மோதினால், அது வெடித்துவிடும். ஆனால், கப்பல் அந்தச் சுரங்கத்தின்மேல் வந்து தாக்குவதிற்குப் பதிலாக, அந்த சுரங்கம் கப்பலிருக்குமிடத்துக்குச் சென்று கப்பலின்மீது மோதி வெடிக்க வேண்டுமென்பதைப் பற்றி அநேக வருஷங்களாய் யோஜனை செய்யப்பட்டது. ஒரு சிறிய படகின் முன்புறத்தில் நீண்ட கொம்பைக்

கட்டி, அந்தக் கொம்பின் முன் புறத்து மூனையில் வெடி மருந்தைத் தொங்கவிட்டு, அந்தப் படகு சத்துருவின் கப்பலுக்கருகில் விரைவாய்ச் செலுத்தப்பட்டது. அந்தக் கொம்பின் மூனையிலுள்ள வெடிமருந்து சத்துருவின் கப்பலைத்தொட்டவுடன், அந்தப் படகிலுள்ள மின்சார யந்திரத்தால், வெடி மருந்தை வெடிக்கச் செய்தார்கள். அவ்வாறு, சத்துருவினுடைய கப்பலின்மேல் வெடிமருந்தைக் கொண்டுபோய் வெடிக்கச்செய்தார்கள். அந்த வெடி மருந்துக்கு அக்காலத்தில் டார்ப்பிடோ என்று பெயர் வைத்தார்கள். டார்ப்பிடோவுக்கும் கட்டற் சுரங்கத்துக்கும் வித்தியாசம் என்னவெனில், ஒன்று ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செலுத்தப் படுகிறது, மற்றொன்று ஒரேயிடத்தில் வைக்கப்படுகிறது. அந்தச் சிறிய படகு சத்துருவுக்கருகில் செல்வதற்குள்ளாக அழிக்கப்படாமற்போனால் அந்த உபாயம் பலிக்கக்கூடும். அவ்வாறு 1868-ம் வருஷம் வரையில், டார்ப்பிடோ பிரயோகிக்கப்பட்டது. ஒரு சிறிய படகு சத்துருவின் கப்பலுக்கு அவ்வளவு அருகில் சென்று எவ்வாறு தாக்குகிறது என்று இந்தக் காலத்தில் நமக்கு ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் அந்த காலத்தில், பீரங்கிகள் மிகவும் மெதுவாய் சுடக்கூடியவை. பீரங்கியில் குண்டைக் கெட்டிப்படுத்த வெகு நேரம் பிடிக்கும். பீரங்கியைச் சுட்டவுடன் வெடி மருந்தின் புகை அடர்த்தியாய் மூடிக்கொள்ளும். ஆகையால் எதிரிலுள்ள வஸ்துக்கள் எவையும் கண்ணுக்குப் புலப்படாது. மேலும் இருட்டு நேரங்களில் சிறிய படகின்மேலாட்டத்தை அறியக்கூடவில்லை. ஆகையால் அந்த காலத்தில் சத்துருவினருகில் செல்வது அவ்வளவு அசாத்தியமான காரியமல்ல. ஆனால் இக்காலத்தில், பீரங்கியிலிருந்து ஒரு நிமிஷத்துக்கு 20 குண்டுகளைச் சுடலாம். வெடி மருந்திலிருந்து புகை உண்டாவதில்லை. பீரங்கிகள் சுடப்படுவதைக் காட்டுகிற சித்திரப்படங்களில், புகைபோல் காணப்படுகிற தோற்றத்தை முற்றிலும் புகையெனக்கொள்ளக் கூடாது. பீரங்கிவாயிலிருந்து கிளம்புகிற கெருப்புச் சுவாலையும் கலந்திருக்கிறது. ஒரு குண்டில் ஏராளமான வெடிமருந்து அடைக்கப்படுவதைப் பார்த்தால், உண்மையாய் உண்டாகிற புகை சொற்பமென்றே சொல்லவேண்டும். மேலும் பிரகாசமான மின்சார விளக்குகளைக்கொண்டு, கடலில் சிறிய படகுகளை எளிதில் கண்டு கொள்ளலாம். ஆகையால், டார்ப்பிடோவைத் தூரத்திலிருந்துகொண்டு சுடவேண்டியதற்கு அநேக

உபாயங்கள் செய்யப்பட்டன. சிறிய படகில் ரீண்ட இரும்புக் கம்பியைக்கட்டி அதன் ஒரு முனையில் டார்ப்பிடோவை அமைத்து, மின்சார வீசையை அந்தக் கம்பியில் செலுத்தி டார்ப்பிடோவை ஓடச் செய்தார்கள். ஆனால் அந்த டார்ப்பிடோ அதைச் சுடுகிற படகுடன் கம்பியால் சம்பந்தப்பட்டிருந்ததால் அந்த உபாயம் திருப்திகரமாயில்லை. அந்தப்படகு இடத்தைவிட்டு நகர்ந்தால், அதோடுகம்பியால்பிணைக்கப்பட்டிருக்கிற டார்ப்பிடோகோணலாய் நகர்ந்துவிடும். அதற்காக அந்தப் படகு இடத்தை விட்டு நகராமலிருந்தால், சத்துருக்கள் அதை எளிதில் அழித்துவிடுவார்கள். ஆகையால் படகிலிருந்து டார்ப்பிடோவைச் செலுத்தியபிறகு அவை பிரிண்டும் எவ்விதமாயும் சம்பந்தப்பட்டிருக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது டார்ப்பிடோ ஜலத்துக்குக் கீழே தானுகவே ஓட வேண்டுமேயொழிய, ஓரிடத்திலிருந்து அதை ஒட்டிக்கொண்டிருக்கக்கூடாது.

புதுமாதிரியான டார்ப்பிடோ.

1868-ம் வருஷத்தில், வைட்ஹெட் என்ற கியாதிபெற்ற எஞ்சினியரால், தானுகச் செல்லக்கூடிய டார்ப்பிடோ கண்டுபிடிக்கப்பட்டது. அவர் கண்டுபிடித்த உபாயங்களைத்தான் இப்போது பலவிதங்களில் விருத்தி செய்து டார்ப்பிடோவில் அமைத்திருக்கிறது. 1877-ம் வருஷத்தில், தென் அமெரிக்காவில் நடந்த ஒரு யுத்தத்தில், தானுகச் செல்லக்கூடிய 'வைட்ஹெட் டார்ப்பிடோ' முதன் முதலாக உபயோகிக்கப்பட்டது. பிறகு, டார்ப்பிடோவில் அநேக திருத்தங்களைச் செய்யும்படி நேர்ந்தது. யுத்த கப்பல்களின் அடிப்பாகத்தில் இரும்புக்கவசம் போடப்பட்ட படியால், அதை உடைப்பதற்கு டார்ப்பிடோவில் அதிக வெடிமருந்து வைக்கப்பட்டது. அதனுல் டார்ப்பிடோவின் சுற்றளவும் பளுவும் அதிகரித்தன. பிறகு யுத்தகப்பல்கள் அதிக ஓட்டங்கொண்டவையாய்க் கட்டப்பட்டு, ஓடின வண்ணமாகச் சண்டைசெய்து வந்தபடியால், அவ்வாறு ஓடிக்கொண்டிருக்கிற கப்பலின்மீது குறிபார்த்துச் சுடுவதற்கு, டார்ப்பிடோ அதிக ஓட்டங்கொண்டதாய்ச் செய்யப்பட்டது. பிறகு, வெகுதூரத்தில் விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகள் கண்டு பிடிக்கப்பட்டு, அவைகள் யுத்தகப்பல்களில் ஏற்

றப்பட்டபடியால், டார்ப்பிடோவைப் பிரயோகிக்கும் படகுகள் சத்துருவை நெருங்கமுடியாமலிருந்தன. ஆகையால், டார்ப்பிடோ வெகுதூரம் ஜலத்தில் செல்வதற்கு நூதன உபாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வாறு, அநேகவிதமாய் டார்ப்பிடோ விருத்தி செய்யப்பட்டது. அந்தந்த காலங்களில் உபயோகிக்கப்பட்ட டார்ப்பிடோவின் விவரங்கள் பின்வரும் குறிப்பில் சொல்லப்பட் டிருக்கின்றன. அதுவிருத்தியடைந்து வந்ததைத் தெளிவாய்க் கண்டு கொள்ளலாம்.

உபயோகிக்கப்பட்ட வருஷம்.	ஓட்டம் மணிக்கு	செல்லக்கூடிய தூரம்.	வெடி மருந்தின் நிறை.
	மைல்.	கெஜம்	பவுண்ட்
1877	11	200	30
1889	25	1650	105
1892	28	2200	206
1906	45	3380	220
1912	54	6600	220
1913	54	7600	330

1877-ம் வருஷத்தில், தானேசெல்லக்கூடிய டார்ப்பிடோ முதன் முதலில் உபயோகிக்கப் பட்டபோது அதற்கிருந்த வன்மையும் இப்போது அதற்குள்ள வன்மையும் எவ்வளவு வித்தியாசப் படுகிற தென்பது நன்றாய் விளங்கும். ஆனால், 1889-ம் வருஷத்து டார்ப்பிடோவின் பளுவு 930 பவுண்ட் தானிருந்தது; 1913-ம் வருஷத்து டார்ப்பிடோ 2000 பவுண்ட் பளுவுள்ளது. அதன் கனம் அதாவது சுற்றளவு 4 அடியிலிருந்து 5½ அடியாக அதிகரித்திருக்கிறது. அதன் வன்மையை அதிகரிப்பதற்கு அநேக நூதன யந்திரங்கள்

சேர்க்கப்பட்டபடியால், அதன் பளுவு இரண்டு மடங்குக்கு மேல் அதிகமாகி விட்டது. 1877-ம் வருஷத்து டார்ப்பிடோவின் விலை 3000 ரூபாய்; 1913-ம் வருஷத்து டார்ப்பிடோவின் விலை 15000 ரூபாயாகிறது. அந்த செலவுக்குத்தக்கபடி, டார்ப்பிடோவினுள்ளே அநேக நுட்பமான யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறிய கெடியாரத்தைவிட அதிக மென்மையான கருவிகள் அதில் அமைக்கப்பட்டுக் கொஞ்சங்கூடத் தவறில்லாமல் வேலை செய்கின்றன.

டார்ப்பிடோவைப்பற்றிய விவரங்கள்.

யுத்த கப்பலிலிருந்து டார்ப்பிடோ எவ்வாறு சுடப்படுகிறதென்று சொன்னேனும், கப்பலில் எந்த இடத்திலிருந்து டார்ப்பிடோவைப் பிரயோகித்தாலும் அந்த வெடி ஜலத்துக்குக் கீழாகத்தான் செல்லவேண்டும். அது அவ்வாறு ஜலத்துக்கு அடியில் பாய்வதற்கு அநேக ஆச்சரியமான யந்திரங்கள் அதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் உள் புறத்தின் அமைப்பைக் காட்டுகிற சித்திரப் படத்தைப்பார்க்கவும்.

அது இரும்பினால் செய்யப்பட்ட பெரியகுழாய்; அதனுள்ளே அநேக யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது உருவத்தில் நீண்ட புகையிலைச் சுருட்டைப் போலிருக்குமென்று சொல்லலாம்; அதை ஒரு நீண்ட மீனுக்கும் ஒப்பிடலாம். அதன் பின் புறத்தில் மீன் வாலைப்போல் விசிறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; அது மீனைப்போலவே உயிருள்ளஜந்துவின் நடவடிக்கைகளைப் பெற்றிருக்கிறது. அது தானாகவே ஓடக்கூடியது; அலைகளாலும் காற்றாலும் பாதிக்கப்படாமல் குறித்த திசையில் சென்று கொண்டிருக்கும். அவைகளைப்பற்றி இங்கு விவகரிப்போம்.

டார்ப்பிடோவுக்குள்ளே நான்கு அறைகளிருக்கின்றன. அவைகள், ஒன்றோடொன்று திருகு ஆணிகளால் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

(1) முதல் அறையில் அதாவது முன்புறத்திலுள்ள அறையில் வெடிமருந்து வைக்கப்பட்டிருக்கிறது. டார்ப்பிடோவின் முன் புறம் ஏதன்மேலாவது மோதினால் அதனுள்ளே யிருக்கிற வெடிமருந்து வெடிக்கும்படியாக அந்த அறையில் உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது.

(2) அந்த அறைக்கு அடுத்தாற்போலுள்ள 2-வது அறையில் காற்று பலமாய் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பம்ப் குழாயைக் கொண்டு அந்த அறைக்குள் மிகவும் பலமாய்க் காற்றை அடைத்து வைக்கிறார்கள். அவ்வாறு அடைக்கப்பட்ட காற்றுக்கு ஏராளமான விசை உண்டாகிறது. சாதாரணமாய் ஓர் அறையில் இருக்கக் கூடிய காற்றைவிட 150-மடங்கு அதிகமான காற்றை இந்த அறைக்குள் சேலுத்துகிறார்கள். அவ்வாறு அடைக்கப்பட்ட காற்றுக்கு ஏராளமான விசையுண்டாகுமல்லவா? அந்தக் காற்றை ஒரு சிறு குழாய் வழியாகக் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியே போகவிட்டால், அந்தக் குழாய் வழியாய்ப் பீச்சுகிற காற்று எவ்வளவு வேகமாய் அடிக்கும்? ஒரு ரப்பர் பந்துக்குள் வாயினால் காற்றை அடைத்தால் எவ்வளவு பெரிதாய் உப்புகிறது. அதில் அதிகமாய் அடைத்தால் ரப்பர் வெடித்துவிடுகிறது. ஆனால் டார்ப்பிடோவுக்குள் இருக்கிற அறை இரும்பினால் செய்யப்பட்டதாகையால், 150-மடங்கு அதிகமான காற்றை அடைக்கலாம். டார்ப்பிடோவுக்குள்ளே 3-வது அறையிலுள்ளகாற்று மற்ற பாகத்தில் அமைக்கப்பட்ட யந்திரங்களை ஓட்டுகிறது.

(3) மூன்றாவது அறையில் டார்ப்பிடோவைச் செலுத்துகிற எஞ்ஜின் இருக்கிறது. மேலே சொல்லப்பட்ட காற்று விசையால் இந்த எஞ்ஜின் வேலை செய்கிறது.


(4) டார்ப்பிடோவுக்குப் பின்புறத்து மூலையில் மீன் வாலைப் போன்றுள்ள விசிறிகளைச் சுற்றுவதற்காக 4-வது அறையில் சில உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 3-வது அறையிலுள்ள எஞ்ஜினிலிருந்து இரண்டு இரும்புக் கழிகள் 4-வது அறையில் நீட்டப்பட்டுக் கடைசியிலிருக்கிற விசிறிகளோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதாவது அந்த இரும்புக் கழிகள் ஓர் மூலையில் எஞ்சினோடும் மற்றொரு மூலையில் விசிறிகளோடும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் எஞ்சின் அந்த இரும்புக் கழிகளைச் சுற்றினால் மூலையிலுள்ள விசிறிகளும் சுழலும். ஜலத்தில் டார்ப்பிடோ அமிழ்ந்து செல்லும்போது, அதனுள்ளேயிருக்கிற எஞ்ஜின் வேலை செய்வதால் அந்த விசிறிகள் ஜலத்தில் சுழலுகின்றன. அதனால் டார்ப்பிடோ முன்செல்கிறது. சாதாரணமாய் ஒரு படகு ஜலத்தில் எவ்வாறு செல்கிறது? படகின் இரண்டு புறங்களிலும்

துடுப்புகளைப் போட்டுத் தள்ளுவதால், அது ஜலத்தில் ஓடுகிறது. டார்ப்பிடோவிலுள்ள விசிறிகளின் இலைகள் துடுப்புகளைப்போல வேலை செய்கின்றன. எல்லா நீராவிக் கப்பல்களும் அம்மாதிரியான விசிறிகளால்தான் தள்ளப்படுகின்றன. எஞ்ஜினுடைய விசையால் அந்த விசிறிகள் மிகவும் விரைவாய்ச் சுற்றப்படுவதால் கப்பல்கள் விரைவாய் ஓடுகின்றன.


டார்ப்பிடோவின் பின்புறத்தில் இரண்டுவிசிறிகளிருக்கின்றன. ஒன்று டார்ப்பிடோவை முன்னுல் ஓடும்படி செய்யும்; மற்றொன்று மேலுங் கீழும் பக்கங்களிலும் அசைக்கப்பட்டால் டார்ப்பிடோவை அந்தந்த திசைகளில் திருப்பும். ஒரு படகைப் பல திசைகளில் திருப்புவதுபோல, டார்ப்பிடோவையும் திருப்பலாம்.

டார்ப்பிடோ எவ்வாறு ஓடுகிறது.

டார்ப்பிடோவில் எஞ்ஜின் அமைக்கப்பட்டிருக்கிற அறைக்கு மேலே, வெளியில் தெரியும்படியாகச் சிறு கொக்கி ஒன்றிருக்கிறது. கப்பலிலிருந்து குழாய் வழியாக டார்ப்பிடோ வெளியே பாயும் போது அந்த கொக்கி மடங்கி விடுகிறது. அதனுல் காற்று அறைக்கும் எஞ்ஜின் அறைக்கும் இடையேயுள்ள சிறு கதவு திறக்கப்படுகிறது. உடனே எஞ்ஜின் அறைக்குள் காற்று நுழைகிறது. காற்றின் விசையால் எஞ்ஜின் வேலைசெய்யத் தொடங்குகிறது. அதனுல் அந்த எஞ்ஜினுடன் பிணைக்கப்பட்டுள்ள இரும்புக்கழி சுற்றுகிறது. அந்த இரும்புக் கழியின் முனையிலுள்ள விசிறியும் சுழலுகின்றது. இந்த விசிறி டார்ப்பிடோவின் பின்புறத்தைக்கோடியில் மீன் வாலைப் போல் காணப்படுவதைப் பார்க்கலாம். விசிறி சுழன்றவுடன், டார்ப்பிடோ தானுகவே ஓடத்தொடங்குகிறது. கப்பலிலிருந்து சுடப்படுகிற வேகத்தால் டார்ப்பிடோ ஓடுகிறதென்று நினைக்கக்கூடாது. பீரங்கியிலிருந்து பாய்கிற குண்டு, சுடப்படுகிற வேகத்தால் தூரச் செல்கிறது. ஆனுல் கப்பலிலிருந்து பாய்கிற டார்ப்பிடோ அந்தவித மாய்ச் செல்வதில்லை. டார்ப்பிடோக்குள்ளே அமைக்கப்பட்டிருக்கிற எஞ்ஜின் அதை ஓடச்செய்கிறது. பீரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டுக்கும், டார்ப்பிடோக் குழாயிலிருந்து சுடப்படுகிற டார்ப்பிடோவுக்கும் அதுதான் முக்கியமான வித்தியாசம். குண்டும், டார்ப்பிடோவும் தூரச்சென்று எவ்விடத்தில் மோதுகிறதோ அவ்விடத்தில் வெடிக்கக்கூடிய கருவிகள் தான். அந்த விஷயத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை. ஆனுல் ஜலத்தைக்குக் கீழாக டார்ப்பிடோ பாய்




டார்ப்பிடோ.



இது டார்ப்பிடோவின் உள்புறம். இதிலுள்ள நெம்பர்கள் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன.


கீழேயுள்ள கோட்டுக்குள் நெம்பர்கள் எழுதப்பட்டிருக்கிற இடங்களுக்குச் சரியாக மேலேயுள்ள சித்திரப்படத்தில் அந்த நெம்பர்களைக் காணலாம். 1-வது நெம்பர் வெடிமருந்துக்குத் தீ வைக்கும் ஊசி. அந்த ஊசி மடங்கியவுடன், 4 நெம்பருள்ள குழாயில் தீ உண்டாகிறது. 3-வது நெ. வெடிமருந்துள்ள பாகம். வெளுப்பாயுள்ள பாகமெல்லாம் வெடிமருந்தாகும். 2-வது நெ: காற்று அடைக்கும் அறை. 5-வதுநெ, எஞ்ஜினையும் வால் புறத்து விசிறியையும் பிணைக்கிற இரும்புக்கழி. 6, 7-வது நெ. விசிறிகளைத்திருப்புகிற இரும்புக் கழிகள். 11-வது நெ டார்ப்பிடோ பக்கங்களில் திரும்பாம லிருப்பதற்காகவுள்ள "சக்கரம்" 12-வது நெ டார்ப்பிடோ கோணலாய்ச் சென்றால் அதை சரியாய்த் திருப்புகிற விசிறி. 14-வது நெ, டார்ப்பிடோவை ஓடச் செய்கிற விசிறிகள். அவை ஜலத்தில் மிகவும் விரைவாய்ச் சுற்றுவதால், டார்ப்பிடோ விரைவாய்த் தள்ளப்படுகிறது.

1		3		2					6		12		
						எஞ்ஜின்.		5					14
		4					11		7		12		



RECORD PRESS.

யுத்த கப்பலின் மேடையில் அமைக்கப்பட்ட
டார்ப்பிடோக் குழாயில் டார்ப்பிடோவை தூழைக்கத்
தயாராயிருக்கிறார்கள். அதற்காக பின் புறத்தக்கதவு திறக்கப்பட் டிருக்கிறது.



கப்பலின் உள்புறத்தில் அமைக்கப்பட்ட டார்ப்பிடோக் குழாயில்
டார்ப்பிடோ தூழைக்கப்பட் டிருக்கிறது. டார்ப்பிடோவின்
வால்புறத்திலுள்ள விசிறிகளைப் பார்க்கவும்.

கிறது. குண்டு ஆகாயமார்க்கமாய்ப் போய் விழுகிறது, டார்ப்பிடோ தானுகவே ஒட்டிக்கொள்கிறது; குண்டு அது ஆரம்பத்தில் வீசி எறியப்படுகிற விசையால் முன் செல்கிறது.

ஒரே அளவாய் அமிழ்ந்து செல்கிறது.

கப்பலிலிருந்து டார்ப்பிடோ புறப்பட்டுக்கொண் டிருக்கையில் அதன் மேலுள்ள ஒரு கொக்கி தள்ளப்படுவதால் எஞ்சின் வேலை செய்கிறது. அது ஜலத்தில் வந்தவுடன், ஜலத்துக்குக் கீழே ஒரே ஆழத்தில் அது சென்று கொண் டிருக்கவேண்டும். அது ஜலத்தில் அதிகமாய் ஆழ்ந்துவிட்டால், சத்துருவினுடைய கப்பலின் அடிப்பாகத்தில் படாமல் அதற்குக் கீழாகப் போய் விடும். கப்பலின்மேல் மோதாவிட்டால், டார்ப்பிடோ வெடிக்காது. ஆகையால், டார்ப் பிடோவைச் சுடுவதற்கு முன்னுல்,சத்துருவின் கப்பலுக்குறிப்பாய்த் தாக்கவேண்டுமானுல் அது இவ்வளவு ஆழத்தில் அமிழ்ந்து செல்ல வேண்டுமென்று கணக்குப்பார்த்து அதில் ஒரு யந்திரத்தை அந்த அளவுக்கு முடுக்கி வைப்பார்கள். அந்த யந்திரம் எந்த அளவுக்கு முடுக்கப்பட் டிருக்கிறதோ, அந்த அளவுக்கு அது ஜலத்தில் அமிழ்ந்து செல்லும். சாதாரணமாய் 10 அடி ஆழத்தில் டார்ப்பிடோ அமிழ்ந்து செல்கிறது.

ஆனல், கப்பலிலிருந்து டார்ப்பிடோசுடப்படும்போது,சரியாய் அந்த 10 அடி ஆழத்தில் விழுந்து செல்லுமென்பது நிச்சயமில்லை. கப்பல் விரைவாய் ஓடிக்கொண்டிருக்கும்போதும்,கடல் கொந்தளித் துக்கொண் டிருக்கும்போதும், டார்ப்பிடோவைச் சுடக்கூடுமாகை யால், அதுகுறித்த ஆழத்துக்குக்குறைவாயும் அல்லது அதிகமாயும் செல்லக்கூடும். ஆகையால், அது அவ்வாறு தவறுய்ச் சென்றலும் சரியான ஆழத்தில் திருத்திக்கொள்ளும்படி அதில் ஓர் உபாயம் செய்யப்பட் டிருக்கிறது. சாதாரணமாய்ப் கப்பலை அங்குமிங்கும் திருப்புவதற்கு வைக்கப்பட்டுள்ள விசிறியைப்போல, அந்த டார்ப்பி டோவிலும் அதன் வால்பக்கத்தில் ஒரு விசிறி அமைக்கப்பட் டிருக் கிறதென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அந்த விசிறியைச் சிறிது தூக்கினுல் டார்ப்பிடோ சிறிது மேலேஎழும்பும்; விசிறியைச் சிறிது இறக்கினுல் டார்ப்பிடோ சிறிது கீழே இறங்கிச்செல்லும். டார்ப்பிடோவுக்கு உள்ளே ஒரு இரும்புக்கம்பி வைக்கப்பட்டிருக் கிறது. அதன் ஒரு முனை, டார்ப்பிடோவின் வால் பக்கத்திலுள்ள

விசிறியோடு பல உபாயங்களால் பிணைக்கப்பட் டிருக்கிறது. ஆகையால் அந்தக் கம்பி மேலுங் கீழும் அசைந்தால் அந்த விசிறியும் அவ்வாறே அசையும். அந்த விசிறி அவ்வாறு மேலுங் கீழும் அசைந்தால், டார்ப்பிடோவும் மேலுங் கீழும் செல்லும். அந்தக்கம்பியின் மற்றொரு முனை எவ்வாறு எவ்விடத்தில் பிணைக்கப்பட் டிருக்கிறதென்பதைச் சொல்வோம். அதன் மற்றொருமுனை டார்ப்பிடோவின் சுவரைத்துளைத்து சமுத்திர ஜலத்தைத்தொட்டுக்கொண் டிருக்கிறது. ஆனல் அந்தத் துளை வழியாய் சமுத்திர ஜலம் டார்ப்பிடோவுக்குள்ளே புகாமலிருக்கும்படி அங்கு ஒரு மெல்லிய ரப்பர் மூடி போடப்பட் டிருக்கிறது. இந்த ரப்பர்மூடியில் அந்தக்கம்பியின் முனை உதைத்துகொண் டிருக்கிறது. ஆகவே, அந்த இரும்புக் கம்பியின் ஒரு முனை விசிறியில் மூட்டிக்கொண்டும், மற்றொரு முனை சமுத்திர ஜலத்தைத் தொட்டுக்கொண் டிருக்கிற ரப்பர் மூடியில் மூட்டிக்கொண்டு மிருக்கின்றன. யுத்த கப்பலிலிருந்து சுடப்படும் டார்ப்பிடோ, ஜலத்தில் 10 அடி ஆழம் அமிழ்ந்து செல்லவேண்டியது அவசிய மென்று சொல்லியிருக்கிறோம். அதைச் சுடுவதற்கு முன்னல், அது அவ்வாறு 10 அடி ஆழத்தில் அமிழ்ந்து செல்வதற்குத் தக்கவாறு, அதற்குள் லிருக்கிற அந்தக் கம்பியும் விசிறியும் ரப்பர் மூடியும் சரியான நிலைமையில் கணக்காய் அமைக்கப்படுகின்றன. இந்த ஏற்பாடுகளே டார்ப்பிடோவினுள்ளே முன்னதாகவே செய்துவைக்கிறார்கள். அதன் பிறகு தான், அது கப்பலிலிருந்து சுடப்படுகிறது. ஒருக்கால், அலைகளாலும் அதிர்ச்சியாலும் டார்ப்பிடோ 10 அடி ஆழத்தில் செல்லாமல் அதிகமாய் அமிழ்ந்து விட்டதென்று வைத்துக்கொள்வோம்.

அது 10 அடி ஆழத்துக்கு அதிகமாக ஜலத்தில் அமுங்கும் போது சமுத்திர ஜலம் அந்த ரப்பர் மூடியை அதிகமாய் அழுத்துகிறது. ரப்பர்மூடி அழுந்தும்போது, அந்த இரும்புக்கம்பி உள்புறமாய்த் தள்ளப்படுகிறது. உடனே, அந்தக் கம்பியின் மற்றொரு முனையிலுள்ள விசிறி தூக்கப்படுகிறது. விசிறி மேலே தூக்கப்பட்டவுடன் டார்ப்பிடோ மேலே கிளம்புகிறது. ஆகையால் அது ஆரம்பத்தில் அதிகமாய் அமிழ்ந்துவிட்டால், மறுபடியும் மேலே வந்த 10-அடி ஆழத்தில் செல்லும். ஒருக்கால், டார்ப்பிடோ அதிகமாய் மேலே கிளம்பிவிட்டால், சமுத்திரஜலம் அந்த ரப்பர்

மூடியைப் போதுமானபடி அழுத்துவதில்லை. அதனால், அந்த இரும்புக்கம்பி தளர்ந்துவிடுகிறது. உடனே, விசிறி கீழ்ப்புறமாய்ச் சாய்ந்துவிடுகிறது. டார்ப்பிடோவும் கீழே அமுங்குகிறது. இவ்வாறு, அந்த டார்ப்பிடோ, அதி சீக்கிரத்தில், 10-அடி ஆழத்தில் நிதானப்பட்டு அந்த ஆழத்திலேயே சரியாய் ஓடுகிறது. அது மேலுங்கீழுமாய் அசையாமல் ஓடுவதற்காக, மேற்சொல்லிய ஆச்சரியமான யோசனையின்படி, மிகவும் நுட்பமான அநேக கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. டார்ப்பிடோவினுள்ளே இருக்கிற காற்று, கொஞ்சங் கொஞ்சமாய் எஞ்ஜினில் உபயோகிக்கப்பட்ட பிறகு வெளியேவந்துவிடுகிறது. ஆகையால் டார்ப்பிடோ ஓடிக்கொண்டிருக்கும்போது அந்தகாற்று வரவரக் குறைந்துபோகும்; அதனால் டார்ப்பிடோவின் பளுவு குறைவுபட்டு மேலே எழும்ப முயற்சிசெய்யும். அதைத் தடுப்பதற்கு அந்த உபாயம் அவசியமாகும்.

பக்கங்களில் திரும்பாமல் நேராகச் செல்லுவதற்கு உபாயம்.

டார்ப்பிடோ ஜலத்தில் செல்லும்போது மேலுங் கீழுமாய்ப் போகாமல் ஒரே ஆழத்தில் செல்வதோடு, அந்த ஆழத்தில் பக்கவாட்டில் இரண்டுபக்கங்களில் திரும்பாமல் ஜலத்தில் நேராகச் செல்லவேண்டும். இதற்கு வேறொரு உபாயஞ்செய்யப்பட்டிருக்கிறது. ஒரு வட்டவடிவமானஎஃகு விசைவரய்ச் சுற்றிக்கொண்டிருந்தால், அது சுற்றுகிற நிலைமையிலேயே அசையாமல் இருக்கும். இந்த முக்கியமான உண்மையைக் கவனிக்கவேண்டும். உதாரணமாக, ஒரு பம்பரம் விசைவாய்ச் சுற்றினால், அது ஒரே நிலைமையில் அசையாமல் சுற்றுகிறதைக் கவனித்திருக்கலாம். அந்த பம்பரத்தைச் சிறிது அசைத்தி விட்டாலுங்கூட அது மறுபடியும் நிதானப்பட்டு அசையாமல் சுற்றிக்கொண்டிருக்கும். ஒரு காலணாகாசை பூமியில் நிற்கவைத்தால் அது நிற்காமல் படுத்துக்கொண்டுவிடும். ஆனால் அதை விசைவாய் உருட்டிவிட்டால், அது வண்டிசக்கரம் நிற்கிற நிலைமையிலேயே இருந்துகொண்டு ஓடிக்கொண்டிருக்கும். அதற்கு ஓட்டமிருக்கிற வரையில் அது கீழே படுத்துக்கொள்ளாது. பைஸிகில் வண்டியில் ஆள் ஏறிச்செல்வதைப் பார்க்கிறோம். அந்த வண்டியை நிற்கவைக்க முடியாது. ஆனால் அதை ஓடச்செய்தால், அதன் மேல் இரண்டு ஆள் ஏறிக்கொண்டாலுங்கூட, அது கீழே விழுவதில்லை. மேலே சொல்லப்பட்டவைகளுக்குக் காரணம், ஒரு சக்கரம்

சுற்றிக்கொண் டிருந்தால், அது சுற்றுகிற வேகத்தில் ஒரே நிலைமையி லிருக்கும். டார்ப்பிடோவில் அம்மாதிரியான உபாயஞ் செய்யப்பட் டிருக்கிறது, டார்ப்பிடோவினுள்ளே ஒரு கம்பி அமைக்கப்பட்டு, அந்த கம்பியில் நுழைக்கப்பட்ட சக்கரம் விரைவாய்ச் சுற்றப்படு கிறது.

அந்த சக்கரம் விரைவாய்ச் சுற்றுவதால், அது ஒரே நிலைமை யில் சுழன்றுகொண் டிருக்கும். டார்ப்பிடோ எந்த காரணத்தினால வது ஒரு பக்கத்தில் திரும்பினால், அதனுள்ளே விரைவாய்ச் சுற் றிக்கொண் டிருக்கிற சக்கரம் முன்பிருந்த நிலைமையில் சுழன்று கொண் டிருக்குமேயொழிய, டார்ப்பிடோவின் நிலைமைமாறுவதற் குத் தக்கவாறு திரும்பாது. ஆகையால், சக்கரம் முன்பிருந்த நிலை மையிலேயே யிருக்கும்போது டார்ப்பிடோ மாத்திரம் ஒரு பக்க மாய்த் திரும்பினால், டார்ப்பிடோவும், அதனுள்ளே யிருக்கிற சக்கரமும் முன்பு வைக்கப்பட்ட நிலைமையிலில்லாமல், கோண லாகிவிடும். அவ்விதகோணல் ஏற்படும்போது, அந்த சக்க ரத்துக்கும் எஞ்சினுக்கும் பிணைக்கப்பட் டிருக்கிற ஒரு கம்பி அசைகிறது. அதனால், டார்ப்பிடோவின் வால்பக்கத்திலுள்ள விசிறி திருப்பப்படுகிறது. உடனே, டார்ப்பிடோ முன்பிருந்த நிலை மைக்குத் திரும்பவருகிறது. மேற் சொல்லிய உபாயத்தால், டார்ப் பிடோவைக்குறிபார்த்துச் சுட்டால், அதுஜலத்துக்கடியில் பாய்ந்து குறித்த இடத்துக்குச் செல்லுமேயொழிய, இடது பக்கத்திலாவது வலது பக்கத்திலாவது திரும்பி வேறெங்கும் செல்லாது.

டார்ப்பிடோவின் விசையை அதிகரிப்பதற்கு உபாயம்.

இதுவரையில் சொல்லப்பட்டுவந்த உபாயங்களெல்லாம் டார்ப் பிடோவின் உள்ளே அமைக்கப்பட்ட எஞ்ஜினோடு பிணைக்கப்பட் டிருக்கின்றன. அந்த எஞ்ஜினுடைய விசையால் டார்ப்பிடோவி னுள்ள யந்திரங்களெல்லாம் வேலைசெய்கின்றன. அந்தஎஞ்ஜின்காற்று விசையால் ஓட்டப்படுகிறதென்று சொன்னோம். சாதாரணமாய் எண்ணெயாலும் நிலக்கரியாலும் மின்சாரத்தாலும் எஞ்ஜின்கள்ஓட் டப்படுவது போல டார்ப்பிடோவில் காற்று விசையால் எஞ்ஜின் ஓட்டப்படுகிறது. ஆகையால் டார்ப்பிடோவில் எவ்வளவு காற்று அடைக்கப்பட் டிருக்கிறதோ, அவ்வளவு வேலைதான் எஞ்ஜின் செய்யக்கூடும். ஆகையால் டார்ப்பிடோவினுள்ளே அதிக காற்று

அடைத்தால், டார்ப்பிடோ அதிக தூரம் செல்லக்கூடும். ஆனல் அதிக காற்று அடைக்கவேண்டுமானல் டார்ப்பிடோவில் அதிக இடம் தேவையா யிருக்கும். ஏற்கெனவே காற்று அறையில், 150 மடங்கு அதிகமான காற்றைப் பலவந்தமாய் அடைத்திருக்கிறார்கள். அதைவிட அதிகமாக அடைத்தால் டார்ப்பிடோவின் இரும்புச்சுவர் வெடித்துவிடும். ஏற்கெனவே டார்ப்பிடோ 21 அடி நீளமிருக்கிறது. அதைவிட அதிகநீளமாயும் கனமாயுமிருந்தால் அதைக் கையாடுவது கஷ்டமாகிவிடும். ஆகையால் காற்றின் விசையை அதிகரிப்பதற்கு வேறொரு யோசனை செய்யப்பட்டிருக்கிறது. காற்றைச் சூடு செய்து அதன் விசையை அதிகரிக்கிறார்கள். எந்த வஸ்துவையும் சூடு செய்தால் பெரிதாகுமென்பது ஒரு முக்கியமான விஷயம். வண்டி சக்கரத்தின்மேலுள்ள இரும்பு உருளை உஷ்ணமடைந்தால் கழுவி விடுவதை அநேகர் கவனித்திருக்கலாம். உஷ்ணத்தால் அந்தஉருளை பெரிதாகிவிடுகிறது; அதன்மேல் குளிர்ந்த ஜலத்தை வார்த்தால் சுருங்கிவிடும். அவ்வாறே உஷ்ணத்தால் காற்றும் விஸ்தரிக்கும். சோடாபுட்டிசிலசமயங்களில் தானகவே உடைந்துவிடுவதைப்பார்த்திருக்கலாம்; உஷ்ணத்தால் சோடாபுட்டிக்குள்ளேயிருக்கிற காற்று பெரிதாகி வெளியே வர முயற்சி செய்யும்போது புட்டி உடைந்து போகிறது. சோடா புட்டியை உஷ்ணமான இடத்தில் வைத்தால் அவ்வித ஆபத்துண்டாகும். டார்ப்பிடோவில் எஞ்ஜின் அறைக்குக் காற்று வரும்போது, காற்றை உஷ்ணஞ்செய்வதால் காற்றின் விசை அதிகமாகிறது. அவ்வாறு சூடு செய்வதற்காக ஒரு சிறு யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த யந்திரம் வீரல் நீளந்தானிருக்கும். அவ்வளவு சிறிய இடத்தில் டார்ப்பிடோவினுள்ளே அதை அமைத்துவிடலாம். இந்த யந்திரம் 1907-ஆம் வருஷத்திலிருந்து டார்ப்பிடோவினுள்ளே அமைக்கப்பட்டு வருகிறது. காற்றைச் சூடு செய்வதால், டார்ப்பிடோவின் ஓட்டம் அதிகப்பட்டிருக்கிறது. குளிர்ச்சியான காற்றை உபயோகித்தபோது, டார்ப்பிடோ, கப்பலிலிட்டுப் புறப்பட்டவுடன் மணிக்கு 40-மைல் வீதம் 1000-கஜ தூரம் ஓடியது; காற்றை உஷ்ணப்படுத்தி உபயோகித்தால், அது மணிக்கு 49-மைல் வீதம் 1000-கஜ தூரம் ஓடுகிறது. ஆகையால், டார்ப்பிடோவின் ஓட்டம் மிகவும் அதிகப்பட்டிருக்கிறது. அதோடு கூட, குளிர்ந்த காற்றால் அது மொத்தம் எவ்வளவு தூரம் செல்லு

மோ, அதைவிட இரண்டுமடங்கு தூரம் அதே அளவுள்ள காற்றை உஷ்ணப்படுத்துவதால் செல்கிறது.

டார்ப்பிடோவின் ஓட்டம்.

கப்பலிலிருந்து டார்ப்பிடோவைச் சுட்டவுடன், அது ஆரம்பத்தில் அதிக வேகமாய்ச் சென்று பிறகு அதன் ஓட்டம் வரவரக் குறைந்துபோகும். ஏனெனில், டார்ப்பிடோவில் ஓர் அறையில் இறுக அடைக்கப்பட்டுள்ள காற்று கொஞ்சம் கொஞ்சமாக எஞ்ஜினில் உபயோகிக்கப்படும்போது, காற்று குறைந்துபோகிறது; அதனால் காற்றின் விசையும் குறைந்துபோகிறது. அந்த அறையில் காற்றை 150-மடங்கு அதிகமாய் அடைத்துவிட்டு, பிறகு அதைக் கொஞ்சமாய் வெளியே போகவிட்டால், அது வேகமாய் வெளியே வரும்; ஆனால் அந்த அறையில் காற்று குறைந்துபோனால், அது அவ்வளவுவேகமாய் வெளியே அடிக்காது. வாயிலிருந்து காற்றை ஊதினால், காற்றின் விசை வரவரக் குறைந்துபோவதைக் கவனிக்கவும். ஆகையால் டார்ப்பிடோவின் வேகம் வரவரக் குறைந்துபோகிறது. 1913-ம் வருஷத்திலிருந்து புதிதாய்ச் செய்யப்படுகிற 21-அடி நீள முள்ள டார்ப்பிடோவின் ஓட்டம் பின்வருமாறு:—

கப்பலிலிருந்து புறப்பட்டவுடன் மணிக்கு 54-மைல் வீதம் 1000-கெஜதூரம் செல்கிறது; 2000-கெஜதூரத்தில் அதன் ஓட்டத்தைக் கணக்கிட்டால், மணிக்கு 51-மைல் வீதமாகிறது; 7600-கெஜதூரத்தில் அதன் ஓட்டத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், மணிக்கு 34-மைல் வீதமாகிறது. அதாவது சுமார் 6-நிமிஷத்துக்குள் 4-மைல் தூரம் பாய்ந்துவிடுகிறது.

டார்ப்பிடோ 4 மைல் தூரம் செல்லக்கூடியது; அதைவிட அதிக தூரம் அது ஓடக்கூடுமானாலும் 4 மைல் தூரத்துக்குப்பிறகு, டார்ப்பிடோ அங்குமிங்கும் அசையாமலிருப்பதற்காக செய்யப்பட்டுள்ள யந்திரங்கள் சரியானபடி வேலை செய்வதற்குப் போதுமான காற்று விசை யிருப்பதில்லை. ஆனால் சமீபத்தில், பிரிட்டிஷ் கடற்படையில் புதிதாய் உபயோகிக்கப்படுகிற டார்ப்பிடோ 12,000 கெஜதூரம் (சுமார் 7 மைல்) செல்லக்கூடியதென்று சொல்லப்படுகிறது. இந்த புதிய டார்ப்பிடோவைப்பற்றிய விவரங்கள் இரகஸ்யமாய் இருந்து வருகின்றன. ஆகையால் பிரங்கிகளிலிருந்து

சுடப்படுகிற குண்டுகளுக்குச் சமானமாய் இப்போது டார்ப்பிடோ கருதப்படுகிறது. டார்ப்பிடோ அதிக தூரம் செல்வதால் பீரங்கிக்குச் சமமாகக் கருதப்பட்டாலும், அது ஜலத்துக் கீழே செல்வதாலும், இரும்புக்கவசத்தால் வலுவாய்க் காக்கப்படாத கப்பலின் அடிப் பாகத்தில் தாக்குவதாலும், டார்ப்பிடோ அதிக பயங்கரமான தென்று சொல்லவேண்டும்.

டார்ப்பிடோ எவ்வாறு வெடிக்கிறது.

டார்ப்பிடோவின் முன் புறத்து மூணியில் ஒரு சிறு ஊசி நீட்டிக்கொண் டிருக்கிறதை நமது படத்தில் காணலாம். முன் புறத்து அரையில் வெடி மருந்து வைக்கப்பட் டிருக்கிறது. அந்த அரையின் மூணியில் தான் அந்த ஊசி வைக்கப்பட் டிளுக்கிறது. அந்த ஊசி எந்தக் காரணத்தாலாவது தள்ளப்பட்டால் வெடி மருந்து தீப்பற்றி வெடித்துவிடும். கப்பலில் டார்ப்பிடோ வைக்கப்பட்டிருக்கும்போது அந்த ஊசியால் யாதொரு ஆபத்தும் நேரிடாதபடி காக்கப்பட் டிருக்கிறது. அந்த ஊசியில் ஒருவிதமான ஸ்க்ரு (திருகு) ஆணி திருகப்பட் டிருக்கிறது. அந்த ஊசியின்மேல் ஆணியைத் திருகி விட்டால், அந்த ஊசி அசையாது; அதனல், அந்த ஊசி தவறுதலாய் எதன் மேலாவது பட்டாலும் யாதொரு ஆபத்தும் நேரிடாது. டார்ப்பிடோவைச் சுடும்போதுகூட அந்த ஊசியின் மேல் ஆணியைத் திருகிவைக்கிறார்கள். ஜலத்தில் டார்ப்பிடோ ஓடிக் கொண்டிருக்கும் போது, அந்த வேகத்தால், அந்த ஆணி மெது வாய்ச் சுற்றிக் கழன்றுவிடுகிறது. அந்த ஆணி கழன்ற பிறகு, அந்த ஊசி எளிதாய் மடங்கக்கூடிய நிலைமையிலிருக்கும். எதன் மேலாவது தாக்கினுல், அது உள்ளே தள்ளப்படும். உடனே வெடிமருந்து தீப் பற்றிக் கொள்ளும். ஊசியின்மேல் ஆணியைத் திருகிவைப்பதால், சாதாரண காலங்களில், டார்ப்பிடோவைக் கப்பல்களில் வைத்திருக் கும்போது, எவ்வித தவறுதலாலும் ஆபத்து நேராமல் காக்கப்படுவ தோடு மற்றொரு சாதகமுமிருக்கிறது. கப்பலிலிருந்து டார்ப்பி டோ புறப்பட்டவுடன் கடலில் மிதந்துகொண் டிருக்கிற எந்த வஸ் துவின் மேலாவது தாக்கினபோதிலும் அது வெடிக்காது. ஊசி யின்மேல் திருகப்பட்டிருக்கிற ஆணி கழலுவதற்குச் சிறிது நேரம் ஆகும்; கொஞ்ச தூரம் டார்ப்பிடோ ஓடினுல்தான், அந்த ஆணி முற்றிலும் கழன்று கொள்ளும். அந்த ஆணி எவ்வளவு தூரத்துக்

கப்பால் கழலவேண்டுமோ அதைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடி திருகிவைக்கலாம். திருகு ஆணி கழன்றபிறகுதான், அந்த ஊசி வெடிமருந்துக்குத் தீவைக்கத் தயாரான நிலைமையில் இருக்கிறது.

கப்பல் எவ்வாறு சேதமாகிறது.

ஜலத்தில் மறைந்துள்ள சத்துருவினுடைய கப்பலின் அடிப்பாகத்தில் டார்ப்பிடோ தாக்கியவுடன், அதன் மூனையிலுள்ள ஊசி தள்ளப்பட்டு டார்பிடோவுக்குள்ளே யிருக்கிற வெடிமருந்து தீப்பற்றி வெடிக்கிறது. கப்பலின்மேல் டார்ப்பிடோ வேகமாய்ச் சென்று மோதுவதாலும், வெடியின் அதிர்ச்சியாலும் கப்பலின் சுவர் பிளந்து விடுகிறது. ஆனல் அந்தப் பிளவு அவ்வளவு பெரிதாயிராது. வெடிமருந்து தீப்பற்றிக்கொள்வதால், அதிலிருந்து பலவித உஷ்ணமான காற்றுகள் உண்டாகின்றன. அந்த உஷ்ணமான காற்றுகள் மிகவும் சிறிய இடத்தில் திடீரென்று ஜலத்துக்குள்ளே உண்டாகி ஜலத்தால் நாலாப்பக்கங்களில்நெருக்கப்படுவதால் அக்காற்றுகள்ஏராளமான வேகத்துடன் வெளியே செல்வதற்காகக் கிளம்புகின்றன. அதேவேகத்துடன் காற்றுகளைச் சுற்றியிருக்கிற ஜலம் நாலாபக்கங்களிலும் வீசி எறியப்படுகிறது. காற்று வெளியே போன பிறகு, நாலாப்பக்கங்களிலும் ஒதுக்கப்பட்ட தண்ணீர் அதிக வேகத்துடன் திரும்பிவந்து கூடுவதால், பிரம்மாண்டமான இரும்புச் சுத்தியை விடப் பலமாகக் கப்பலின்மேல் அந்த ஜலம் மோதியடிக்கின்றது. கப்பலில் ஏற்கெனவே செய்யப்பட்ட பிளவு பெரிதாய்க் கிழிந்துவிடுகிறது. டார்ப்பிடோவிலுள்ள வெடிமருந்து ஜலத்துக்குக் கீழே வெடித்த பிறகு, அதிலிருந்து கிளம்புகிற காற்று வெளியே போவதற்கு இடமில்லாமையால் அதிக சேதம் உண்டாகிறது. அதே அளவுள்ள வெடிமருந்து ஆகாயத்தில் வெடித்தால், அதிலிருந்து உண்டாகிற காற்று தாராளமாய் வெளியே பரவிவிடுகிறபடியால் அவ்வளவு சேதமுண்டாகாது. அவ்வாறு கப்பலின் அடிப்பாகம் டார்ப்பிடோவால் சேத மடைந்தால், கப்பல் கடலில் அமுங்கிப்போகும். ஐந்து நிமிஷத்தில் மிகப் பெரிய யுத்த கப்பலும் இருந்தயிடம் தெரியாமல் நாசமாகிவிடும். ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட டார்ப்பிடோக்கள் சத்துருவின் கப்பலி 17 முதல் 21 சதுர கெஜ அளவு வரையில் பிளந்துவிட்டன. இப்போது உபயோகிக்கப்படுகிற டார்ப்பிடோக்கள் இன்னும் பயங்கரமானவையென்று

சொல்லத் தேவையில்லை. அந்தக் காலத்தில் 206 பவுண்ட் நிறையுள்ள வெடிமருந்து டார்ப்பிடோவுக்குள் வைக்கப்பட்டது; இக் காலத்து டார்ப்பிடோவில் 330 பவுண்ட் நிறையுள்ள வெடிமருந்து வைக்கப்படுகிறது.

டார்ப்பிடோவின் வன்மை.

அவ்வளவு பயங்கரமான சக்தியையுடைய டார்ப்பிடோ கடற் படையின் முக்கிய ஆயுதமாகக் கருதப்படுகிற தென்பது ஓர் ஆச்சரிய மல்ல. ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில் அதன் உபயோகம் அவ்வளவாக வெளிப்பட வில்லை. ஆனால் அந்த யுத்தத்துக்குப் பிறகு அநேகவழிகளில் அந்த வெடி விருத்தி செய்யப்பட்டிருக்கிறபடியால், அது பிரங்கியை விட அதிகப் பயன் உண்டுபண்ணக் கூடிய தென்று இப்போது கருதப் படுகிறது. பிரிட்டிஷ் கடற்படையிலுள்ள டார்ப்பிடோ மற்ற தேசங்களிலுள்ளவைகளை விட அதிக வேகமாய்ப் பாய்வதோடு, அதிக தூரம் செல்லக் கூடியது. ஆனால், ஜெர்மனியில், டார்ப்பிடோவுக்கிருக்கிற வெடிக்குஞ் சக்தியை அதிகரிப்பதில் அதிக கவனஞ் செலுத்தப் படுகிறது. அதனால், ஜெர்மன் கடற்படையில் உபயோகிக்கப்படும் டார்ப்பிடோவில், அதிக வெடி மருந்து வைக்கப் படுகிறது. ஜெர்மன்கடற்படையில், டார்ப்பிடோவின் ஓட்டத்தைப் பிரதானமாய்க் கொள்ளாமல், வெடி மருந்தின் வன்மை அதிகரிக்கப்பட் டிருக்கிறது. வெடிமருந்தின் பளுவு அதிகப் பட்டதால் அதன் ஓட்டம் குறைவுபட் டிருக்கிறது. எனினில், டார்ப்பிடோவின் அளவுக்கு ஓர் எல்லையுண்டு. ஏற்கெனவே அதன் சுற்றளவு 5½ அடியாகிவிட்டது; அதன் நீளம் 21 அடியிருக்கிறது; அதைவிட அதிக நீளமாகவு மிருப்பதாகச் சொல்லப்படுகிறது; அதன் பளுவு 2000 பவுண்ட். ஆகையால், அதன் பளுவை இன்னும் அதிகரித்தால், அந்த வெடிகளை யுத்த கப்பலில் அதிகமாய் ஏற்றிக்கொள்ள முடியாது. முக்கியமாய், சிறிய டார்ப்பிடோக் கப்பல்களிலும், குருஸர்க் கப்பல்களிலும், சப்மரின் கப்பல்களிலும், அவ்வளவு பளுவுள்ள டார்ப்பிடோவை அதிகமாய் ஏற்றமுடியாது. அதன் நீளத்தை 21-அடிக்குமேல் அதிகமாக்கினால், அவைகளைச்சிறியயுத்தகப்பலுக்குள்ளேவைத்துச் சுடுவதற்குகொள்கரியமாயிராது; விஸ்தாரமான இடமும்கிடைக்காது. டார்ப்பிடோவைப்பரிதாகச்செய்வது ஒருகஷ்டமல்ல; ஆனால், இந்த

முக்கியமான காரணங்களால், டார்ப்பிடோவின் அளவையும் பலுவை யும் அதிகரிப்ப தென்றால் அது யோசிக்கிடமான காரியமாகும். ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில், டார்ப்பிடோவினால் தாக்கப்பட்ட கப்பல்களில் அநேகம் எளிதில் பழுது பார்க்கப்பட்டு மறுபடியும் யுத்தகளத்துக்கு அனுப்பப்பட்டன. ஆனால் இப்போது ஜெர்மன் டார்ப்பிடோவால் தாக்கப்பட்ட கப்பல்கள் மூற்றிலும் நாசமாகிவிடு கின்றன.

டார்ப்பிடோவைப்பிரயோகித்தபிறகுஅதுகுறித்தப்பிப்போனால், அதனுள்ளே யிருக்கிற காற்று விசை தானாக அடங்குகிற வரையில் அது ஓடிச்சென்று கடைசியில் எங்காவது கடலில் முழுகிவிடும்.

டார்ப்பிடோவினின்றும் தப்பித்துக்கொள்ள உபாயங்கள்.

அவ்வளவு பயங்கரமான டார்ப்பிடோ வெடி உபயோகத்துக்கு வந்தவுடன், அதனின்றும் தப்பித்துக்கொள்ள அநேக உபாயங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அவைகள் அவ்வளவு திருப்தி கரமானவைக ளல்ல. சாதாரணமாய்ச் செய்யப்படக்கூடிய உபாயம் என்னவென்றால், கப்பலைச்சுற்றி இரும்பு வலை கட்டப்படுகிறது. கப் பலின் இரண்டு பக்கங்களிலும் நீண்ட கழிகளைநீட்டி, அவைகளின் மூனையில் இரும்பு வலையைக் கட்டித் தொங்க விடுகிறார்கள். அந்த வலை கப்பலுக்கப்பால் சற்றுத் தூரத்தில் தொங்குவதால், அதன் மேல் டார்ப்பிடோ தாக்கி வெடித்தாலும் கப்பல் சேதமாகாது. கப்பல் ஓரிடத்தில் தங்கி யிருக்கும்போதுதான், அந்த வலையைக் கட்டமுடியும். கப்பல் ஓடிக்கொண் டிருந்தால் அவ்வாறு செய்ய முடியாது; ஏனெனில், அந்த வலை தொங்கிக்கொண் டிருந்தால் கப்பலின் ஓட்டம் மிகவும் குறைந்துவிடும். சண்டைகளில், கப்பலின் ஓட்டம் மிகவும் முக்கியமான அம்சமாகக் கருதப் படுகிறதென்று ஏற்கனவே சொல்லி யிருக்கிறோம். கப்பல் ஓரிடத்தில் தங்கி யிருக்கும்போது அந்த வலையைக் கட்டினாலும் பயன்படாது. ஏனெனில், டார்ப்பிடோவின் முன்புறத்து மூனை யில் கத்திபோன்ற கூர்மையான கருவியை அமைத்து விட்டால், டார்ப்பிடோ வேகமாய் வந்து தாக்கும்போது இரும்பு வலையை எளிதில் அறுத்துக்கொண்டு முன் செல்லும்.

மற்றொரு விதமாயும் கப்பல்கள் தப்பித்துக் கொள்ளலாம். டார்ப்பிடோ ஜலத்துக்குக் கீழே செல்லும்போது அது செல்கிற

வழியில் ஜலத்தின்மேல் நுரை கிளம்புவதைக் காணலாம். டார்ப்பிடோ அதனுள்ளே இறுக அடைக்கப்பட்ட காற்று விசையால் ஓடுகிற தென்றும் சொன்னேனும். அந்தக் காற்று, எஞ்ஜின் அறைக்குள் வந்து எஞ்ஜீனை மூடுக்குகிறது. அதன் பிறகு அந்தக் காற்று, ரயில் எஞ்ஜினி லிருந்து புகை கிளம்புவதுபோல வெளியே வருகிறது. டார்ப்பிடோவி லுள்ள எஞ்ஜினி லிருந்து இரும்புக் கழிகள் வால்பக்கம் வரையில் நீண்டு அவைகளின் மூனையில் விசிறிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன வென்று சொல்லி யிருக்கிறோம். அந்த இருழ்புக் கழிகள் குழாய்கள்போல் குடையப்பட் டிருக்கின்றன. எஞ்ஜினறையி லிருந்து புறப்படுகிற காற்று அந்த இரும்புக் குழாய்வழியாக வால்புறத்தில் வெளியேவருகிறது. அதனால் டார்ப்பிடோ செல்கிறவழியெல்லாம் ஜலத்தின்மேல் நுரைகாணப்படுகிறது அவ்வாறு ஜலத்தின்மேல் காணப்படுகிற நுரையைப் பார்த்துக் கொண்டு, டார்ப்பிடோவினின்றும் யுத்த கப்பல் விலகிக்கொள்ளலாம். ஆனல், சண்டை மும்முரமாய் நடந்துகொண் டிருக்கும் போது, யுத்த கப்பல்கள் டார்ப்பிடோவுக்காகஅஞ்சி, அணிவகுத்து நிற்கிற வரிசையை விட்டு விலகுவது சரியல்ல. அவ்வாறு விலகினுல், சத்துருவின் கப்பல்கள் தங்கள்பீரங்கிகளால் அதிகசேதத்தை யுண்டுபண்ணிவிடும். யுத்தகளத்தில் எப்படிப்பட்ட ஆபத்து சேர்வதா யிருந்தாலும், தருப்புகளானலும், யுத்த கப்பல்களானலும் தாங்கள் அணிவகுத்து நிற்கிற வரிசையை விட்டு எள்ளளவும் அசையக்கூடாது. ஆகையால் சண்டை நடந்துகொண் டிருக்கும்போது, டார்ப்பிடோவுக்கு அஞ்சி யுத்த கப்பல்கள் திரும்ப முடியாது. ஆனல், சண்டை நடைபெறுத காலங்களில் யுத்த கப்பல் ஓரிடத்தில் தங்கிக்கொண் டிருக்கும்போதும், காவல் செய்துகொண் டிருக்கும்போதும், வேறு காரியமா யிருக்கும்போதும், டார்ப்பிடோவின் தடத்தைக் கண்டு ஒதுங்கிக் கொள்ளலாம். ஆனல் டார்ப்பிடோக் கப்பல்கள் பகல் வேளத்தில் தாக்குவதில்லே. இரவில் தான் முன்வந்து டார்ப்பிடோவைப் பிரயோகிக்கின்றன. ஆகையால் இருட்டி வேளத்தில் டார்ப்பிடோ செல்கிற வழியைக் கண்டு கொள்ளமுடியாது. ஒருக்கால் பகல் வேளையில் தாக்கினுலும், பனியால் மூடப்பட்டிருக்கிற சமயம் பார்த்துச் சத்துருவுக்குத்தெரியாத படி டார்ப்பிடோ பிரயோகிக்கப்படும். மேலும், கடல் கொந்த

ளித்து கலக்கமுற்றிருக்கும்போது டார்ப்பிடோவின் தடம் தெரிய வராது; சாந்தமாயிருக்கும்போதுதான் தெரியும்.

மற்றொரு விதமாய் டார்ப்பிடோவால் சேதமடையாமலிருப்பதற்கு யுத்த கப்பலில் உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. யுத்த கப்பல் கட்டப்படும்போது, அதன் அடிப்பாகத்தை அநேக அறைகளாகத் தனித் தனியாய்ப் பிரித்துவிடுகிறார்கள். கப்பலின் அடிப்பாகத்தை டார்ப்பிடோ தாக்கும்போது இரண்டொரு அறை சேதமானாலும், மற்றப் பாகத்தில் சமுத்திர ஜலம் புகுந்து கொள்ள முடியாது. ஆனால் இந்த உபாயம் சேதத்தைக் குறைக்குமே யொழிய சேதமுண்டாவதைத் தடுக்காது. இதைப்பற்றி ஏற்கெனவே விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறோம்.

கப்பலின் அடிப்பாகத்தைப் பல அறைகளாய்ப் பிரிப்பதால், அது முற்றிலும் கடலில் முழுகிப் போகாதென்றாலும், அதன் ஒட்டம் குறைந்து போகுமாகையால், சண்டை நடந்துகொண்டிருக்கும் போது அந்தக் கப்பல் எவ்விதத்திலும் பயன்படாது. மேலும், இப்போது டார்ப்பிடோக்களை ஜலத்துக்கடியில் அதிக ஆழத்தில் செலுத்துவதில்லையாகையால், பல அறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற பாகத்துக்குமேல் மோதும்படி டார்ப்பிடோ சுடப்படுகிறது.

மேற் சொல்லிய உபாயங்களைவிட, டார்ப்பிடோவைப் பிரயோகிக்கும் கப்பல்களை நேராக எதிர்ப்பதே மேலானது. டார்ப்பிடோக் கப்பல்களைத் தாக்கி, அருகே நெருங்கவிடாமல் காப்பதற்காக், சிறிய குரூய்ஸர்க் கப்பல்கள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. அந்தக் குரூய்ஸர்க் கப்பல்களில் நல்ல பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் அதிக விரைவாய்ச்சென்று தாக்கும். மேலும், பெரிய சண்டைக் கப்பல்களில், டார்ப்பிடோக் கப்பல்களின்மேல் சுடுவதற்கென்றே இரண்டாந்தர பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றனவென்று சொல்லியிருக்கிறோம்.



17-வது அத்தியாயம்.

டார்ப்பிடோவைப் பிரயோகிக்கும் விதம்.

டார்ப்பிடோ என்று சொல்லப்படுகிற வெடி ஒரு பெரிய இரும்புத் தூணைப்போல் 24 அடி நீளமும் 5½ அடி சுற்றளவு முள்ளதென்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். அது கப்பலி லிருந்து எவ்வாறு சுடப்படுகிற தென்பதைப் பற்றி இப்போது விவரமாய்ச் சொல்வோம். அவைகள் விளங்கும்பொருட்டு அநேக சித்திரப்படங்கள் பிரசுரிக்கப்பட் டிருக்கின்றன. அவைகளைப் பார்த்துக்கொண்டு வரவேண்டும். யுத்த கப்பலிலிருந்து டார்ப்பிடோ எவ்வாறு சுடப்படுகிறதென்று சுலபமாய் அறிந்துகொள்ளலாம். டார்ப்பிடோவை ஒரு குழாய்க்குள் தழைத்துச் சுடுகிறார்கள். அந்தக் குழாய்க்கு டார்ப்பிடோக் குழாய் என்று பெயர். அந்தக் குழாய் யுத்த கப்பல்களில் பலவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. முதலில் டார்ப்பிடோக் கப்பல்களில் எவ்வாறு அமைக்கப்பட் டிருக்கிறதென்பதைப்பற்றிச் சொல்வோம்.

டார்ப்பிடோக் கப்பலிலிருந்து சுடுகிற விதம்.

சமுத்திரத்தில் ஒரு கப்பல் மிதக்கும்போது, அதன் ஒரு பாகம் நீர்மட்டத்துக்குமேல் கண்ணுக்குப்புலப்படுகிறது; மற்ற அடிப்பாகம் ஜலத்தில் மறைந்திருக்கிறது, டார்ப்பிடோக் கப்பலில் நீர் மட்டத்துக்கு மேல் கண்ணுக்குத் தெரிகிற பாகத்தில் டார்ப்பிடோக் குழாய்கள் இரண்டு விதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. நீர் மட்டத்துக்கு மேல் கண்ணுக்குத் தெரிகிற கப்பலின் இரும்புச் சுவரில் ஒரு துவாரம் செய்யப்பட்டு அதில் டார்ப்பிடோக் குழாயின் ஒரு முனையைப்பதித்து, அதன் மற்றொருமுனை கப்பலின் உள் புறத்தில் நீட்டப்பட் டிருக்கிறது. அதாவது டார்ப்பிடோக் குழாயின் முன் புறத்து முனை கப்பலின் சுவரில் அமைக்கப்பட்டு, பின் புறத்து முனை கப்பலின் உள் புறத்தில் நீண்டிருக்கிறது. அந்தக் குழாயை அசைக்கவும் திருப்பவும் முடியாது. கப்பலுக்குள்ளே

யிருப்பவர்கள் டார்ப்பிடோ என்ற வெடியை அந்தக் குழாய்க்குள் பின்புறத்தை முனை வழியாய் நுழைக்கிறார்கள். அந்த டார்ப்பிடோ, கப்பலை விட்டு நீங்கிச் சமுத்திர ஜலத்தில் செல்லவேண்டுமானால், அந்தக் குழாய் வழியாகச் சென்று கப்பலின் சுவரிலுள்ள துவாரத்தை விட்டு வெளியே தாவி ஜலத்தில் விழும். மற்றொருவிதமாய் டார்ப்பிடோக் கப்பல்களில் அந்தக் குழாய் அமைக்கப்படுவதுண்டு. கப்பலின் மேடையின் மேல் அந்தக் குழாய் வைக்கப்பட் டிருக்கும். பெரிய பீரங்கிகளும் கோபுரங்களுமிருக்கிற தளம் கப்பலின் மேடையாகும். அந்தக் குழாய் சக்கரமாய்த் திரும் பும். ஒரு சக்கரத்தைக் கீழே படுக்கவைத்து அதன் மேல் அந்த குழாயை அமைத்தால், அந்த சக்கரத்தைச் சுற்றும்போதெல்லாம் அதன் மேலுள்ள குழாயும் திரும்புகிறது. இந்த உபாயத்தை நமது சித்திரப்படத்தில் காணலாம். அந்தக் குழாய் திரும்புவதற்கு வேறு வித உபாயங்களும் செய்யப்படுவதுண்டு.

அவ்வாறு டார்ப்பிடோக் குழாய்கள், கப்பலின் உள்புறத்தி லும் மேல் மேடையிலும் இரண்டு விதமாய் அமைக்கப்பட்டாலும் அவைகளைச் சுடுவது ஒரே மாதிரிதான். அந்தக் குழாய் முற்றிலும் இரும்பால் * செய்யப்பட் டிருக்கிறது. அது பீரங்கியின் குழாயைப் போலிருக்கும். அந்தக் குழாய்க்குள் டார்ப்பிடோ என்ற வெடி நுழைக்கப்படுகிறது. அந்த டார்ப்பிடோவைத் திருகினால் குழாய்க் குள் அது சுற்றுமல்லவா? அவ்வாறு சுற்றுமல் டார்ப்பிடோ அந்த குழாய்க்குள் ஒரே நிலைமையில் படிமானமா யிருப்பதற்கு ஒரு உபா யஞ் செய்யப்பட் டிருக்கிறது. அந்தக் குழாய்க்குள்ளே அதன் மேல் பாகத்தில் ‡ ஆழமான கீறல்கள் போடப்பட்டிருக்கின்றன. டார்ப்பி டோ வெடியின் வெளிப்புறத்தில் ஊசி ஒன்று அமைக்கப்பட் டிருக் கிறது. ஒரு பலகையில் நீளமாக ஒரு கீறல் போட்டு, ஒரு ஊசியை

---

* இந்த புத்தகத்தில் இரும்பு என்ற வார்த்தையே முற்றிலும் உபயோகிக் கப்பட்டிருக்கிறது. ஆனால் இரும்பைப் பலவிதமாய்க் காய்ச்சி அது எஃகு என்றும் இன்னும் பலவிதமாகவும் சொல்லப்படுகிறது. அந்த வித்தியாசங்களை இங்கேகுறிப்பிடாமல் விடப்பட் டிருக்கிறது.

‡ மேல்பாகம் கீழ்பாகம், வெளிப்புறம் உள்புறம் ஆகிய இவ்வார்த்தை களுக்குள்ளடங்கிய அர்த்தத்தை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

அந்தக் கிறலில் வைத்து இழுத்தால் அந்த ஊசி கிறல் வழியாகச் செல்லுமேயல்லாது அக்கம் பக்கத்தில் திரும்பிச்செல்லாது. ஆகையால் டார்ப்பிடோவை அந்த குழாய்க்குள் போடும்போது, அந்த ஊசி, கிறலில் பதிந்திருக்கும்படி நழைத்தால், டார்ப்பிடோ அதன்குழாய்க்குள் அசையாமலிருக்கும். ரயில்வண்டியின் சக்கரம் அங்கு மிங்கும் திரும்பாமல் தண்டவாளத்தின்மேலேயே செல்லுகிறதல்லவா? அம் மாதிரியாக டார்ப்பிடோ அந்தக்குழாய் வழியாக வெளியேபோகும் போது டார்ப்பிடோவின் மேலுள்ள ஊசி குழாய்க்குள்ளிருக்கிற கிறலில் சரிந்து செல்லும். அவ்வாறு அந்த ஊசிக்குப் பதிலாக வேறு விதமான கருவிகளை அமைப்பதுண்டு. டார்ப்பிடோ அந்தக் குழாய்க்குள் அங்கு மிங்கும் அசையாமல் நேராகப் போகவேண்டு மென்பது நோக்கம். குழாய்க்குள் அதன் பின்புறத்துமூன்வழியாய்டார்ப் பிடோவை நுழைத்தபிறகு பின்புறத்துக்கதவை இறுக மூடிவிடுகிறார்கள். இந்தக் கதவுக்குள் வெடி மருந்து வைத்து அதை மூடிய பிறகு ஓர் உபாயத்தால் வெடிமருந்து தீப்பற்றிக்கொள்ளும்படி செய்கிறார்கள். அதற்கு முன்னதாக, முன்புறத்துக் கதவுத் திறந்து வைக்கப்படுகிறது. வெடிமருந்துக்குத் தீ வைத்த வுடனே அந்தக் குழாயிலிருந்து டார்ப்பிடோ வெளியே பாய்கிறது. ஆனால் அவ்வாறு டார்ப்பிடோ வெளியே பாயும்போது, அது 21 அடி நீளமிருப்பதால், மேற்புறமாய் எங்காவது பாய்ந்து விடக்கூடும், அல்லது கீழாய்த் திரும்பிவிடக்கூடும். ஆகையால் டார்ப்பிடோ ஒரே நிலையில் நேராக ஜலத்தில் விழுவதற்காக ஓர் உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது.

அந்தக் குழாயின் முன் புறத்து மூனியில் நீளமான இரும்புச் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த சட்டம்ஓடுபோல் குழிந்திருக்கும். ஒரு மூங்கிற் குழாயை நீளவாட்டில் இரண்டு பாகமாய்ப் பிளந்தால் அவ்விரண்டு மூங்கில் சட்டங்களும் எவ்வாறு குழிவாயிருக்குமோ, அவ்வாறு மேலே சொல்லப்பட்ட இரும்புச் சட்டமும் ஒரு புறம் பள்ளமாயும் மற்றொரு புறம் மேடாயுமிருக்கும். அந்த இரும்புச் சட்டம் டார்ப்பிடோக் குழாயின் முன் புறத்து மூனியில், அதன் மேல் வைக்கப்படுகிறது; மேடாயுள்ள பக்கம் வெளியில் தெரியும்படி அந்த சட்டம் வைக்கப்படுகிறது; அதாவது கூரையில் ஓடு எவ்வாறு வைக்கப்படுகிறதோ


அவ்வாறு மேடாயுள்ள பக்கம் வெளிப்புறத்தில் தெரியும். குழாயை விட்டு டார்ப்பிடோ வெளியே வரும்போது, மூணியிலுள்ள இரும்புச் சட்டம் அதைப் படிமானமாய் அணைத்து ஜலத்தில் விழும்படி செய்கிறது. அந்த இரும்புச் சட்டத்தின் உள்புறத்தில் கீறலிருப்பதால் டார்ப்பிடோ அந்தச் சட்டத்திலுள்ள கீறலில் உறைந்து செல்லும்போது, அங்கு மிங்கும் அசையாமல் ஒரே நிலைமையில் ஜலத்தில் விழுகிறது. அதன்பிறகு ஜலத்தில் 10 அடி ஆழத்தில் அமிழ்ந்த வண்ணமாய் அது நேரே பாய்கிறது.

டார்ப்பிடோக் கப்பல்களில் மேற் சொன்னவாறு டார்ப்பிடோ சுடப்படுகிறது; நீர்மட்டத்துக்குமேல் தெரிகிற கப்பலின் சுவரில் டார்ப்பிடோக் குழாய் அமைக்கப்படுகிறது; கப்பலின் மேடைமேல் அந்தக் குழாய் வைக்கப்படுவது முண்டு. மேடையிலிருந்து சுடப்பட்ட டார்ப்பிடோ கடலில் விழுவதை முதல் பாகத்தில் முதற் பக்கத்திலுள்ள சித்திரப்படத்தில் காணலாம். ஆனால் பெரிய யுத்தகப்பல்களில், நீர்மட்டத்துக்குக் கீழே அதாவது ஜலத்தில் மறைந்திருக்கிற கப்பலின் சுவரில் அந்தக்குழாய் அமைக்கப்படுகிறது.

பெரிய யுத்த கப்பலிலிருந்து சுடுகிறவிதம்.

சமுத்திர ஜலத்துக்கு மேல் கப்பலின் ஒரு பாகம் கண்ணுக்குத் தெரிகிறது; சுமார் அதே அளவுகொண்ட அதன் அடிப்பாகம் ஜலத்தில் மறைந்திருக்கிறது. அந்த அடிப்பாகத்தில் கப்பலின் உள்புறத்தில் ஒரு குழாய் அமைக்கப்பட்டு, அந்தக் குழாயின் ஒரு மூணை கப்பலின் இரும்புச் சுவரைத் துளைத்து சமுத்திர ஜலத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் சமுத்திரஜலம் அந்தக் குழாய் வழியாக கப்பலுக்குள்ளே செல்லாதபடி, அந்தக் குழாயின் முன் புறத்து மூணியில் ஒரு கதவு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழாயின் பின் புறத்து மூணை கப்பலின் உள்புறத்தில் நீண்டிருக்கிறது. இந்தப் பின்புறத்து மூணியிலும் ஒரு கதவு இருக்கிறது. இந்தக் கதவைத் திறந்து குழாயி னுள்ளே டார்ப்பிடோ நுழைக்கப்படுகிறது. பின் புறத்துக் கதவினுள்ளே சிறிது வெடிமருந்து வைத்து அதை இறுக மூடிவிடுகிறார்கள். பிறகு முன்புறத்துக் கதவைத் திறக்கிறார்கள். உடனே குழாயிலிருந்து ஜலத்துக்கு வழி ஏற்படுகிறது. உடனே சமுத்திர ஜலம் குழாய்க்குள்ளே புகுந்து கொள்கிறது. ஆனால் பின்

டார்ப்பிடோவைச் சுடுகிற விதம்.



முதலாவது படம்:— டார்ப்பிடோக் குழாயி னுள்ளே டார்ப்பிடோவை நுழைத்துவைத்திருப்பதைக் காட்டுகிறது. அந்தக் குழாவை இரண்டாய்ப் பிளந்து பார்த்தால் அதன் உள்புறம் எவ்வாறு தோன்றுமோ அவ்வாறு காட்டப்பட் டிருக்கிறது.

2-வது படம்:—அந்த டார்ப்பிடோக் குழாயி லிருந்து டார்ப்பிடோ சுடப்பட்டு வெளியே செல்வதைக் காட்டுகிறது. குழாயின் முன்பாதி மாத்திரம் பிளந்து காட்டப்பட் டிருக்கிறது. இரும்புச் சட்டம் குழாய்க்கு வெளியே தள்ளப்பட் டிருப்பதும், வெளியே பாய்கிற டார்ப்பிடோவை அது பக்கவாட்டில் அணைத்துக் காப்பதும் தெளிவாய்க் காட்டப்பட் டிருக்கின்றன. மற்ற விவரங்கள் 2-வது படத்தில் 1 முதல் 8 வரையிலுள்ள இலக்கங்களால் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. 1-வது நெம்பருள்ள இடத்தில் சிறு குழா யிருக்கிறது. அது வெடி மருந்து வைத்துச் சுடுகிற இடம். அந்தச் சிறு குழாயினுள்ளே காற்று விசையைச் செலுத்துவது மூண்டு. 2-வது நெம்பர் டார்ப்பிடோக் குழாயின் பின்புறத்துக் கதவைக் குறிப்பிடுகிறது. 3-வது நெம்பர் டார்ப்பிடோக் குழாயின் முன்புறத்துக் கதவு. 4-வது நெம்பர் இரும்புச் சட்டம். 5-வது நெம்பர் டார்ப்பிடோ. 6,7,8-வது நெம்பர்கள், டார்ப்பிடோக் குழாயினுள்ளே புகுந்துகொள்கிற சமுத்திர ஜலத்தை வடிப்பதற்குள்ள துவாரங்கள். இவ்வீரண்டு படங்களும் நீர் மட்டத்துக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள டார்ப்பிடோக் குழாயின் விவரங்களைக் காண்பிக்கின்றன.

புறத்துக் கதவுமூடப்பட் டிருப்பதால், கப்பலுக்குள்ளே ஜலம் பர வாது. ஆகையால், பின் புறத்துக் கதவுக்குள்ளேயிருக்கிற வெடி மருந்துக்குத் தீவைத்தால், டார்ப்பிடோ முன்புறத்துவழியாய்ஜலத் தில் பாய்ந்து செல்லும். டார்ப்பிடோக் குழாயினுள்ளே யிருக்கிற டார்ப்பிடோவும் ஜலமும் சேர்ந்து சமுத்திரத்தில் தள்ளப்படு கின்றன. அந்த டார்ப்பிடோ நேராகச் செல்வதற்காக, முன்பு சொல்லப்பட்டது போல, ஓடி போன்ற குழிந்த இருப்புச் சட்டம் அந்தக் குழாயினுள்ளே வைக்கப்பட் டிருக்கிறது. அந்த இரும்புச் சட்டம் டார்ப்பிடோக் குழாயினுள்ளே ஒரு பக்கமாய் ஒட்டி னற்போல் வைக்கப்பட்டிருக்கும். ஆனால் டார்ப்பிடோவை டார்ப் பிடோக் கப்பலிலிருந்து சுடும்போது, அந்த சட்டம் குழாய்க்கு மேலே வைக்கப்படுகிறது. எனெனில், டார்ப்பிடோக் கப்பலில் நீர் மட்டத்துக்கு மேலிருந்து சுடுகிற படியால், டார்ப்பிடோ வெளியே பாயும்போது ஆகாயத்தில் எங்காவது போய்விடாமல் காக்கப்படவேண்டும்; பெரிய யுத்த கப்பலில் நீர் மட்டத்துக்குக் கீழிருந்து சுடுவதால், ஜலத்தில் எங்காவது அடித்துக்கொண்டு போகாமல் காக்கவேண்டும். கப்பல் வேகமாய்ஓடும்போதும் இரண்டு பக்கங்களில் ஜலத்தைப் புரண்டோடச் செய்யும்போதும், கப்பலின் இரும்புச் சுவரிலிருந்து வெளிக்கிளம்புகிற வஸ்து பக்கவாட்டில் தான் அடித்துக்கொண்டு போகப்படும். ஆகையால் ஜலத்துக்கடியி லிருந்து டார்ப்பிடோவைச் சுடும்போது, பக்கவாட்டில்தான் இரும் புச்சட்டம் வைக்கப்படவேண்டும். நீர் மட்டத்துக்கு மேலிருந்து சுடும்போது, மேற்புறத்தில்தான் சட்டத்தை வைக்கவேண்டும். ஆகையால் நீர் மட்டத்துக்கடியில் அமைக்கப்பட்டுள்ள குழாயில், அந்த சட்டம் ஒரு பக்கமாய் வைக்கப்பட் டிருக்கிறது. ஓர் உபாயத் தால் அந்த இரும்புச் சட்டத்தை கப்பலுக்கு வெளிப்புறத்தில் அதாவது சமுத்திர ஜலத்தில் நீண்டிருக்கும்படி தள்ளுவார்கள். டார்ப்பிடோக் குழாய் கப்பலின் இரும்புச் சுவர் வரையில் தான் நீண்டிருக்கிறது. இரும்புச் சுவருக் கப்பால் ஜலத்தில் அந்த இரும்புச் சட்டம் தள்ளப்படுகிறது. கப்பலை விட்டு வெளியே டார்ப்பிடோ வரும்போது இரும்புச் சட்டம் அதைப் பக்கத்தில் அணைத்துக் காக்கிறது. அவ்வாறு அதைக் காக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

கப்பலின் சுவரிலிருந்து டார்ப்பிடோ வெளியே வந்து, ஜலத்தில் பாய்கிற சமயத்தில் கப்பலின் ஓட்டத்தால் எங்காவது ஜலத்தில் அடித்துக்கொண்டு போகப்படலாம். பரிசலில் ஏறிச் செல்கிறவன் தன் கையை ஜலத்தில் நீட்டினால் பரிசல் ஓடும் போது தன் கை எவ்வளவு பலமாய் ஜலத்தில் தள்ளப்படுகிறதோ, அம்மாதிரி, டார்ப்பிடோவின் ஒரு பாகம் கப்பலுக்குள்ளும் மற்ற பாகம் கப்பலிலிட்டு ஜலத்திலும் இருக்கிற சமயத்தில் கப்பலோட்டத்தின் விசையால் தள்ளப்பட்டால் அது முறிந்துபோகக்கூடும். ரயில் வண்டி ஓடும்போது வெளியே கையை நீட்டினால், காற்று எவ்வளவு விசையுடன் அடிக்கிறது. கப்பல் ஜலத்தில் ஓடும்போது, அதன் இரண்டு பக்கங்களில் எவ்வளவு வேகமாய் சமுத்திர ஜலம் புரண்டு அடிக்குமென்பதை அறிந்துகொள்ளலாம். கப்பலின் வேகமும் ஜலத்தின் விசையும் பக்கவாட்டில் பாதிக்கும். ஒரு கப்பல் மணிக்கு 23 மைல் வீதம் ஓடிக்கொண்டிருந்தால் கப்பலிலிட்டுச் செல்கிற ஒரு வஸ்து கூஷணத்தில் 33 அடி வீதம் ஜலத்தில் இழுக்கப்படுகிறது. ஆகையால் கப்பலிலிருந்து டார்ப்பிடோ முற்றிலும் விலகும் வரையில் அது முறிந்துபோகாமலும் பக்கவாட்டில் திரும்பிவிடாமலும் காக்கப்படவேண்டும். அதற்காகத்தான் டார்ப்பிடோக் குழாயில் ஒருபக்கமாய் அந்த இரும்புச்சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது கப்பலுக்கப்பால் சிறிதுதூரம் ஜலத்தில் நீண்டிருப்பதால், அவ்வளவு தூரத்தில் ஜலத்தின் விசை குறைவாயிருக்கும். ஆகையால் டார்ப்பிடோ அந்த சட்டத்தைவிட்டு விலகும்போது, ஜலத்தின் விசையால் பாதகப்படாது. அதைத்தவிர, முன்புசொல்லப்பட்டதுபோல, இரும்புச்சட்டத்தில் நீளவாட்டில் சற்று ஆழமானகீறல் போடப்பட்டிருக்கிறது. டார்ப்பிடோவின் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்ட ஒரு ஊசி அந்த கீறலில் பதிந்து விடுகிறது. இரும்புச் சட்டத்திலிருந்து டார்ப்பிடோ உருவிச் செல்லும்போது அந்தக் கீறலானது அதைச் சரியான நிலைமையில் பாயும்படிச்செய்கிறது. சமுத்திரத்தில் டார்ப்பிடோ பாய்ந்தவுடன், இரும்புச் சட்டம் உள்ளுக்கு இழுக்கப்படுகிறது; முன் புறத்தைக் கதவு மூடப்படுகிறது. அந்தக் கதவை எவ்வளவு சீக்கிரமாய் மூடினாலும், சமுத்திர ஜலம் அந்தக் குழாய்குள் நிரம்பிவிடும். ஆனால் அந்தக் குழாயின் பின்புறத்தைக் கதவு ஏற்கெனவே மூடப்பட்டிருப்பதால், சமுத்திர ஜலம் குழாய்க்குள் சென்றாலும் கப்பலுக்குள் பாயாது; அந்த ஜலம் குழாய்க்குள்

லேயே யிருக்கும். குழாயினுள்ள ஜலத்தை அதினுள்ள சிறு துவாரங்களின் வழியாய் வடித்து விடுகிறார்கள். ஜலம் வடிந்த வுடனே, அந்தக் குழாயில் மற்றொரு டார்ப்பிடோவை நுழைத்துச் சுடலாம். அவ்வாறு குழாயிலிருந்து ஜலத்தை வடிப்பதற்குச் சிறிது நேரம் செல்லும். அந்தக் காலதாமதத்தைக் குறைத்து, இடைவிடாமல் டார்ப்பிடோவை நுழைத்துச் சுடுவதற்கு, முக்கிய மாய் ஜெர்மனியில் யோஜனை செய்து வருகிறார்கள்.

சில முக்கியமான உபாயங்கள்.

டார்ப்பிடோ சுடப்பட்டவுடனே, இரும்புச் சட்டம் உள்ளுக் கிழுக்கப்படுகிற தென்றுசொன்னேம். டார்ப்பிடோவைச்சுடுவதற்கு முன்னால் அந்த சட்டம் வெளியே தள்ளப்பட்டிருந்தது இவ்வாறு அந்தச் சட்டம் ஜலத்தில் இரண்டொருக்ஷணம் நீண்டிருப்பதால் கப்பலின் வேகம் குறைவுபடும். கப்பல் அதிக வேகமாய் ஓடிக்கொண் டிருக்கும் போதே டார்ப்பிடோவைச் சுடுகிறார்களென்பதை மறக் கக்கூடாது. கப்பல் விரைவாய் ஓடிக்கொண் டிருக்கும்போது, அந்த இரும்புச்சட்டத்தைக் கப்பலிலிருந்து வெளியேஜலத்தில் நீட்டினால் கப்பலின் ஓட்டம் குறைவுபடுமல்லவா? அவ்வாறு கப்பலின் ஓட்டம் பாதகப்படு தைக் குறைக்கும் பொருட்டு, டார்ப்பிடோ வெடியைச் சுடும்போதே அந்த சட்டமும் அதன் கூடத் தள்ளப்படுகிறது. முன்பு சொல்லப்பட்டதுபோல, டார்ப்பிடோவைச் சுடுவதற்கு முன்னால் சட்டத்தைத் தள்ளுவதில்லை.

டார்ப்பிடோக் குழாய்க்குள் அதன் பின்புறத்து மூன்று வழி யாய் டார்ப்பிடோவை நுழைக்கிறார்களென்று சொன்னேம். இப் போது புதிதாய்ச்செய்யப்படுகிற டார்ப்பிடோக் குழாயில் பின்புறத் தில் கதவுவைப்பதற்குப் பதிலாகப் பக்கவாட்டில் வைக்கப்பட்டிருக் கிறது. அதெப்படியெனில் அந்தக் குழாயை நீளவாட்டில் இரண்டா கப்பிளந்து அவ்விரண்டுபாகங்களில் ஒன்றை கதவுபோலமூடித் திறக் குப்படியாய் அதில் பூட்டும் தாழ்ப்பாளும் அமைக்கப்பட்டிருக்கின் றன. குழாய்க்குப் பக்கவாட்டில் கதவுவைப்பதால் டார்ப்பிடோ அறையில இடம் கூடிவருகிறது. டார்ப்பிடோக் குழாய்க்குப் பக்கத் தில் டார்ப்பிடோக்களை வைத்திருந்து தேவையானபோது குழாய் க்குள் அப்படியே உருட்டிவிடலாம். சுமார் 22 அடி நீளமுள்ள ஒரு அறையில் டார்ப்பிடோக் குழாயையும் அதற்குப் பக்கத்தில்

டார்ப்பிடோவையும் வைக்கலாம். குழாய்க்குப் பின்புறத்தில் கதவு இருந்தால் பின்புறத்தை பொட்டினற்போல் சீளமாக டார்ப்பிடோக்களை அடுக்கி வைக்கவேண்டும். குழாயின் பின் புறத்து மூணியில் டார்ப்பிடோவை நுழைக்கும் போது, குழாயின் நீளமும் டார்ப்பிடோவின் நீளமும் சேர்ந்து 44 அடி நீளங்கொண்டதாய் அந்த அறை கட்டப்படவேண்டுமல்லவா. பெரிய சண்டைக் கப்பலில் ஐந்தாறு டார்ப்பிடோக் குழாய்களுக்குமேல் அமைப்பதற்கு இடம் கிடைப்பதில்லை யென்பதை அறியவேண்டும். இன்னும் விஸ்தாரமான இடம்கப்பலிலிருக்குமானால் இன்னும் அதிகமான குழாய்களை அமைப்பார்கள்.

டார்ப்பிடோவைச் சுடுவதில் மிகவும் ஜாக்கிரதையாயும் ஒரு க்ஷணப்போது வீணுக்காமலும் மயிரிழை தவறுதல் ஏற்படாமலு மிருக்கவேண்டியது அவசியமாகும். டார்ப்பிடோவெடி மிகவும்அபாயகரமானது. அதைச்சுடும்போது ஏதாவதுதவறுஏற்பட்டு, கப்பலுக்குள்ளேயேவெடித்து விடுமானால், கப்பல்முழுவதும் நாசமாகிவிடும். மேலும் சத்துருவின் கப்பலை நோக்கிச் சுடுவதற்கு நல்ல சமயம் வாய்ப்பது அரிது; அவ்வாறு ஏற்ற சமயம் வாய்க்குமானால் அதைக் கைவிடாமல் உபயோகிக்கவேண்டும். ஒரு க்ஷணப்போது தாமதமானால் சமயம் தவறிவிடும். யுத்தத்தில் அவ்விதத் தவறுகள் உண்டாகாமல் அரிமையாய்த் தோன்றுகிற சமயங்களை முற்றிலும் பயன்படுத்தும் சக்திதான் ஜயபடைவர்க ளென்பதை அறியவேண்டும். நூதன உபாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஏராளமான செலவு கொண்ட யந்திரங்களும் ஆயுதங்களும் எல்லா தேசத்தாராலும் உபயோகிக்கப்படுகிற இக்காலத்தில் மிகுந்த சாமர்த்தியம் காட்டுகிற சக்திதான் பயன் பெறுவார்கள். டார்ப்பிடோவைக் குறிபார்த்துச்சுடும் போது, ஒரு கஜதூரம் குறி தப்பினால், சத்துருவின் கப்பல் தப்பித்துக்கொள்ளலாம்; சரியானபடி சுட்டால், கப்பல் முழுவதும் சேதமாகிவிடும். அவ்விரண்டுக்கு முள்ள வித்தியாசம் அப்படிப்பட்டது. ஆகையால் டார்ப்பிடோவை விரைவாய்ச் சுடும்போது ஜாக்கிரதையா யிருப்பதற்காக அநேக உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. டார்ப்பிடோக் குழாயின் முன் புறத்து மூணியிலுள்ள கதவு திறக்கப்பட்டா லொழிய டார்ப்பிடோவைச் சுட முடியாம லிருக்கும்படி ஒரு உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு வேளை தவறிப்போய் ஜலத்துக்குள் செல்வதற்கு வழியாயுள்ள மூன் புறத்துக் கதவு மூடியிருக்கும் போது டார்ப்பிடோவைச் சுட்டு விட்டால் பெரிய ஆபத்து நேரிடு மென்பதை உத்தேசித்து அதைத் தடுக்க அந்த உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மூன் புறத்துக் கதவை இறுகமூடினாலன்றி, பின் புறத்துக் கதவைத் திறக்கமுடியாதபடி உபாயஞ்செய்யப்பட்டிருக்கிறது. அழாக்கிரஸ்தையினால் மூன் புறத்துக் கதவு அதாவது சமுத்திர ஜலத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிற கதவுத் திறந்திருக்கும் போது, பின் புறத்துக் கதவையும் திறந்துவிட்டால் சமுத்திர ஜலம் கப்பலுக்குள் பரவிவிடுமல்லவா? இந்த விபத்தைத் தடுப்பதற்காக அந்த உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. டார்ப்பிடோவெடி மிகவும் அவசரமாயும் இரகஸ்யமாயும் சத்துருவின் மீது பிரயோகிக்கப் படுகிறது. டார்ப்பிடோ கப்பல் மிகவும் சிறிய உருவமுள்ளது. அது சத்துருவின் பெரிய சண்டைக் கப்பல்களைத் தாக்குவதற்காக விருக்கிறது. இரகஸ்யமாய் சத்துருவைநெருங்கிக்ஷணப் போதில் வேலையை முடித்துத் திரும்பிவிட்டால் ன்றி தனக்கே ஆபத்தை விளைவித்துக்கொள்ளும். அநேகமாய் தண்ணீவிட அதிக பலங்கொண்ட சத்துருவைத்தாக்கும்படி நேரிடும். ஆகையால்டார்ப்பிடோக்கப்பல் இரவில்தான் அநேகமாய்த் தாக்கும். இந்தகாரணங்களால் டார்ப்பிடோவைச் சுடுவதில் மிகுந்த தேர்ச்சியும் சாமர்த்தியமும் பெற்றிருக்கவேண்டுமென்பது விளங்கும். மேலும், டார்ப்பிடோசுடப்படுகிற விதத்தைப்பற்றி மேலே சொல்லப்பட்ட வேலைகள் எல்லாம் மின்சார சக்தியால் ஒருக்ஷணப்போதில் நடந்து முடிகின்றன.

மின்சாரத்தால் வேலை செய்யப்படுகிறது.

ஆனால் ஒரு பெரிய சந்தேகம் தோன்றக்கூடும்; அதாவது, நீர்மட்டத்துக்குக் கீழே கப்பலின் உள்புறத்தில் அடைத்துகிடக்கிற மனிதர்கள், யுத்தஞ் செய்கிற இரண்டு சக்திகளின் நிலைமை சமுத்திரத்தின்மேல் எவ்வாறிருக்கிற தென்பதை எப்படி அறிவார்கள்? உண்மையில் யுத்த கப்பலிலுள்ள ஆயுதங்களை உபயோகிக்கிறவர்கள் தாங்கள் குறிபார்த்துச் சுடுகிற எந்த வஸ்துவையும் நேரில் பார்ப்பதில்லை. கப்பலின் மேடையில் ஓர் கோபுரத்திலாவது அல்லது மற்றோபஸ்தான இடத்திலாவது உத்தியோகஸ்தர்கள் தூரதிருஷ்

டிக் கண்ணாடி முதலிய கருவிகளைக் கொண்டு காலா பக்கங்களிலும் கவனமாய்ப் பார்த்திருப்பார்கள். தந்திக் கப்பிகளில் சமிக்ஞை செய்வதுபோல, அவர்கள் மின்சாரக் கம்பிகள் மூலமாய் ஆயுதங்களை உபயோகிப்பவர்களுக்கு சமிக்ஞை செய்வார்கள். அந்த சமிக்ஞைபின்படி ஆயுதங்கள் உபயோகிக்கப்படும். அவ்வாறே டார்ப்பிடோ வெடியும் பிரயோகிக்கப்படுகிறது. கப்பலின் மேடையிலுள்ள உத்தியோகஸ்தர் சமிக்ஞை செய்தவுடன், அதன்படி டார்ப்பிடோ அறையிலுள்ளவர்கள் அந்த வெடியை குழாய்க்குள் போட்டுசுடுவதற்குத் தயாராய்வைத்திருப்பார்கள். டார்ப்பிடோ சுமார் 2000பவுண்ட் எடையிருப்பதால் அதைக் கையால் தூக்கி நுழைக்க முடியாது. பீரங்கியினுள்ளே கெட்டிக்கப்படுகிற பெரிய குண்டு ஏறக்குறைய அதே பளுவுகொண்டதால் அதையும் கையால் எடுத்துப்போடமுடியாது. அந்த வேலைகளை யந்திரங்கள் செய்கின்றன. கப்பலின்மேடையிலுள்ள உத்தியோகஸ்தர் அங்கிருந்தபடியே ஒரு கொக்கியை விரலால் அழுத்தியவுடனே மின்சார வசையால் டார்ப்பிடோவைச் சுடுவதற்காக உள்ள யந்திரங்களெல்லாம் தாமாகவே வேலை செய்யத் தொடங்கி டார்ப்பிடோவை ஜலத்தில் பாயப்படிச் செய்கின்றன.

வெடிமருந்தால் எப்படி சுடப்படுகிறது?

டார்ப்பிடோவைச் சுடுவதற்கு வெடிமருந்துஉபயோகிக்கப்படுகிறதென்று சொன்னோம். குழாய்க்குள் டார்ப்பிடோவைபின்புறத்து வழியாய் நுழைத்து அங்குள்ள கதவுக்குப் பக்கத்தில் வெடி மருந்து வைக்கிறார்கள். பிறகு அந்தக்கதவு மூடப்படுகிறது. மற்றொரு முறை டார்ப்பிடோவை நுழைக்கும்வரையில் அந்தக் கதவு திறக்கப்படுவதேயில்லை. கதவின் உள்புறத்திலுள்ள வெடி மருந்துக்குத் தீ வைக்கும்போதும் அவ்வாறு மெல்லிய மின்சாரக் கம்பியால் செய்யப்படுகிறதே யொழிய அதற்காகக் கதவு திறக்கப்படுவதில்லை. வெடிமருந்துக்குப் பதிலாக, காற்று விசை உபயோகிக்கப்படுகிற தண்டு. கதவை இறுகமூடியபிறகு, அதனுள்ளே காற்றுவிசையைச் செலுத்துவார்கள். பின்புறத்துக் கதவை இறுக மூடினால்தான், முன்புறத்து வழியாய் நுழைகிற சமுத்திரஜலம் கப்பலுக்குள் பரவாமலிருக்கும். தவிர, டார்ப்பிடோவைச் சுடுவதற்கு பின்புறத்துக் கதவு இறுக மூடியிருப்பது அவசியமாகும். அந்த கதவு இறுக மூடப்பட்டிருந்தால்தான் காற்றுவிசை வேலைசெய்யும். குழாய்க்

குள் காற்றுவிசை செலுத்தப்பட்டவுடன், அந்த காற்று வெளியே செல்ல முயற்சி செய்கிறது. அப்போது, பின்புறத்துக் கதவு அடைக்கப்பட் டிருப்பதால் அந்தக்காற்று முன்புறத்தில் திறக்கப் பட்ட கதவுவழியாய் மிகுந்த விசையுடன்செல்கிறது. அப்படி அந்த காற்று முன் புறத்தில் விசையாய்ச் செல்லும்போது டார்ப் பிடோவையும் முன் புறத்தில் அடித்துக்கொண்டு போகிறது. வெடி மருந்து வைத்து சுட்டாலும் அவ்வாறே வேலை செய்கிறது. வெடி மருந்து தீப்பற்றியவுடன் அதிலிருந்து உண்டாகிற பலவிதமான காற்றுகள் மிகுந்த வேகத்துடன் கிளம்பி வெளியே செல்ல முய லும்போது, அந்த காற்றுகள் முன்புறத்தில் ஒரே ஒரு வழிபிருப்ப தால் அதை நோக்கிப் பலமாய்வீசுகின்றன. அவ்வாறுதான் பீரங்கி களும் வேலை செய்கின்றன. பீரங்கிக் குழாயில் முன் புறத்திலுள்ள ஒரு துவாரத்தைத் தவிர மற்ற பாகமெல்லாம் காற்று வெளியே செல்லக்கூடாத விதமாயிருக்கிறது.

சிரஷ்டமான முறை.

யுத்தகப்பலில், நீர் மட்டத்துக்குக் கீழிருந்தும், மேல் மேடை யிலிருந்தும் இரண்டு விதமாய் டார்ப்பிடோ சுடப்படுகிறதென்று சொன்னோம். பெரிய யுத்த கப்பல்களில் நீர் மட்டத்துக் கடியி லிருந்து சுடும்படியாகவே குழாய்கள் அமைக்கப்படுகின்றனவென் றும் சொன்னோம். கப்பலின் மேடையிலிருந்து சுடுவதால் சில சாத கங்களிருக்கின்றன. மேடையில் அமைக்கப்பட்ட டார்ப்பிடோக் குழாயை எந்த திசையில் வேண்டுமென்றாலும் திருப்பிக்கொள்ள லாம். ஆகையால் கப்பல் எந்தபக்கமாய்ச் சென்றுகொண் டிருந்தா லும், நாம் நினைத்ததிசையில் குழாயைத்திருப்பி டார்ப்பிடோவைச் சுடுவது சாத்தியமாகும். ஆனால் நீர் மட்டத்துக் கடியில் அமைக் கப்பட்டுள்ள குழாய் அவ்விதமாய்த் திரும்பாது. அந்தக் குழாய் கப்பலின் எந்தபாகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த பாகம் சத்துருவுக்கு எதிரில் இருக்கும்படி. கப்பலைத் திருப்பிக்கொள்ள வேண்டும். கப்பலின் மேடையில் குழாயை அமைத்தால் இந்தகுறை நீங்குகிறது. மற்றொரு சாதகமென்னவென்றால், நீர் மட்டத்துக்குக் கீழே குழாயை அமைத்தால், டார்ப்பிடோவைச் சுட்டவுடன் சமுத் திர ஜலம் அந்த குழாய்க்குள் புகுந்துவிடுகிறது. அதை வடிப்பதற் குச்சிறிது தாமஸமாகும். நீர்மட்டத்துக்கு மேலிருந்து சுட்டால்

அந்தத் தாமஸம் நேரிடாது. ஆகையால் டார்ப்பிடோவை இடைவிடாமல் ஒவ்வொரு க்ஷணமும் சுட்டுக்கொண்டேயிருக்கலாம். ஆனால் கப்பலின் மேடையிலிருந்து டார்ப்பிடோவைச் சுடுவதால், சில முக்கிய மான குறைகளிருக்கின்றன. டார்ப்பிடோக் குழாயும் டார்ப்பிடோவும் கப்பலின் மேடையில் வைக்கப்பட்டிருந்தால் சத்துருவின் பீரங்கிகளால் அவைகள் எளிதாய்ச் சேதமாகிவிடும். முக்கியமாய், பெரிய யுத்த கப்பல்கள் பீரங்கிகளைக்கொண்டு சத்துருவோடு சண்டை செய்யுமாதலால் கப்பலின் மேடையில் குண்டுகள் வந்துவிழும். ஆகையால் டார்ப்பிடோக் குழாய் பந்தோபஸ்தான இடத்திலிருக்க வேண்டும். கப்பலின் மேடை அபாயகரமான இடமாகும். மேலும் மேடையின்மேலிருந்து டார்ப்பிடோவை ஜலத்தில் பாயும்படி சுட்டால், கப்பலிலிருந்து சத்திரஜலம் வரையில் தாவி விழுந்த பிறகு ஜலத்தில் அமுங்குகிறது. அவ்வாறு அதுசெய்யும்போது அதன் வேகம் குறையும். ஆகாயத்தில்தாவி ஜலத்தில் விழும்போது ஒருசமயம் கோணலாய்த் திரும்பிப் போகக்கூடுமாதலால் குறிதப்பிப்போகலாம். டார்ப்பிடோவை எவ்வளவு சீக்கிரமாயும் குறிப்பாயும் சுட வேண்டுமென்பதைக் கருதும்போது, தவறுதல் ஏற்படாமலிருப்பதற்கு எல்லா விதத்திலும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஜலத்தில் விழுந்த பிறகு டார்ப்பிடோ நேராகச்செல்லக்கூடியதானாலும், தவறுண்டாகாமலிருப்பதற்கு, நீர்மட்டத்துக் கடியிலிருந்து சுடுவதே மேலானதென்று கருதப்படுகிறது.

டார்ப்பிடோக் கப்பல்கள், குருஸர்கள், இவைகளைப்போன்ற சிறிய யுத்தகப்பல்களில், அவற்றின்கீழ்ப்பாகத்தில்உள்புறமாய்டார்ப்பிடோக்குழாயை அமைப்பதற்குத்தீர்மானமான இடம் இருப்பதில்லை. ஆகையால்தான், அது மேடையின் மேல் அமைக்கப்படுகிறது. எப்போதும், கப்பலின் அடிப்பாகம், மேல்பாகத்தைவிடக் குறுகலாயிருக்கும். சண்டைக் கப்பலைப் போன்ற பெரிய யுத்த கப்பல்களில் அவைகளின் குறுக்கே ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் வரையில் நீண்டஅறைகள் டார்ப்பிடோவுக்காகக்கட்டப்படுகின்றன.

18-வது அத்தியாயம்

சப்மரின் கப்பல்.

சப்மரின் கப்பல் என்றால் ஜலத்துக்கு கீழே செல்லும் கப்பல் என்று பொருள்படும். சுமார் 300 வருஷங்களுக்கு முன்னால் ஹாலண்ட் தேசத்தவர் ஒருவர் சிறுபடகு ஒன்றில் ஏறிக்கொண்டு ஜலத்துக் கடியில் முழுகியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆயினும், 1775-ம் வருஷத்தில் அமெரிக்காவிலுள்ள யூனிடெட் ஸ்டேட்ஸ் தேசத்தார் தங்கள் சுதந்திரத்துக்காக பிரிட்டிஷாருடன் யுத்தஞ் செய்த காலத்தில், புஷ்னேல் என்பவர் ஒரு சிறு படகில் முழுகிச்சென்று பிரிட்டிஷ் யுத்த கப்பலைக் சேதப்படுத்த முயன்றார். அந்த காலத்திலிருந்து சப்மரின் கப்பல் பிரபலம் பெற்றது. ஆமையைப்போல ஒரு சிறு படகு செய்து அதில் புஷ்னெல் மட்டும் உட்கார்ந்துகொண்டு அரை மணி நேரம் ஜலத்தில் அமுங்கியிருந்தார். அவர், பிரிட்டிஷ் யுத்த கப்பலின் சுவரில் வெடி மருந்தை வைத்தார்; ஆனால் கப்பலின் சுவரில் வெடி மருந்தைச் சரியானபடி அமைக்காததால், அது சற்று தூரத்தில் வெடித்தது. அதனால் பிரிட்டிஷ் யுத்த கப்பலுக்குச் சேத முண்டாகவில்லை. அந்தக் கால முதல் அநேகம் பரீக்ஷைகள் செய்யப்பட்டு வந்தன. 1801-ம்வருஷத்தில் ராபர்ட் பல்ட்டன் என்ற பேர்பெற்ற எஞ்ஜினியர் பிரான்ஸில் ஆராய்ச்சி செய்து வந்தார். அந்தக் காலத்தில் பிரான்ஸில் பிரஸித்திபெற்ற முதலாவது நெப்போலியன் சக்ரவர்த்தியா யிருந்தார். நெப்போலியன் இங்கிலாந்தின் மீது படையெடுப்பதற்குப் பெரிய கடற்படை கட்டிக்கொண் டிருந்தபோது, ராபர்ட்பல்ட்டன், ஜலத்தில் முழுகிச் செல்லும் கப்பலைக் கட்டித்தருவதாகச்சக்ரவர்த்திக்கு அறிவித்தார். அச்சமயம் பிரான்ஸில் சப்மரின் கப்பல்களைக் கட்டுவதற்கு முயற்சி செய்யப்பட்டதைக் கேட்டவுடன் இங்கிலாந்தில் பெரியகலக்கம்உண்டாயிற்று. ஆனால் ராபர்ட் பல்ட்டனுடைய பரீக்ஷைகளைச்சோதித்து அவைகளின் பலனைச் சக்ரவர்த்திக்கு அறிவிப்பதற்காக நியமிக்கப்பட்ட பிரஞ்சு உத்தியோகஸ்தர்கள் சாதகமான அபிப்பிராயங் கொள்ளவில்லை. இரண்டொரு முறை செய்யப்பட்ட பரீக்ஷைகள்

பலிக்காமற்போனதால் அது முதல் நெப்போலியன் அவ்விஷயத்தில் அலக்ஷியமா யிருந்து விட்டார். நெப்போலியன் அக்காலத்தில் அலக்ஷியமாய்க் கைவிட்ட அந்த ஆச்சரியமான கப்பல்தான் இப்போது கடற்படைகளுக்குக் கலக்கமுண்டுபண்ணி வருகிறது. பிறகு ராபர்ட்பல்ட்டன் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டார். அங்கிருந்து கொண்டு அவர் பிரஞ்சு யுத்த கப்பல்களை அழிப்பதற்குப் பலவித முயற்சிகள் செய்தும் பயன்படாமற் போனதால், அவர் தமது ஜென்மதேசமாகிய அமெரிக்காவுக்குச் சென்றார். அமெரிக்காவில் அவர் நீராவிக் கப்பலைக் கட்டுவதற்கு முயற்சி செய்து வந்தார். டார்ப்பிடோ வெடி, சப்மரின் கப்பல், நீராவிக்கப்பல் ஆகிய இவைகளை விருத்தி செய்ய ஆரம்பித்தவர்களுள் அவர் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். அவர் சப்மரின் கப்பலைக் கட்டுவதற்கு பிரான்ஸில் செய்த விசித்திரமான முயற்சிகளுள் இரண்டொன்றைப் பற்றிச் சொல்வோம்.

ராபர்ட் பல்ட்டனும் வேறு மூன்றுபேரும் சிறு கப்பலில் ஏறி, ஜலத்தில் 25 அடி ஆழத்தில் ஒருமணி நேரம் அமுங்கி யிருந்தார்கள். ஆனால் கப்பலுக்குள் இருட்டாயிருந்ததால், மறுமுறை ஒரு மெழுகு வர்த்தியைக் கப்பலுக்குள் ஏற்றிவைத்து ஜலத்தில் அமுக்கினார். ஆனால் மெழுகு வர்த்தி எரியும்போது சுத்த காற்று குறைவு பட்டுச் சுவாசிப்பது கஷ்டமாகிவிட்டது. ஆகையால் அந்தச் சிறு கப்பலின் சுவரில் சிறிய கனத்த கண்ணாடியை அமைத்து, அதன் வழியாய்க் கிடைத்த வெளிச்சத்தைக் கொண்டு அவர் தமது கைக் கெடியாரத்தைப் பார்ப்பதற்குச் சாத்தியமா யிருந்தது. பிறகு அவர் பெரிய ரப்பர் மூட்டையில் இறுகக் காற்றை அடைத்துவைத்து, அதைக் கப்பலுக்குள் கொண்டுபோய், அதிலுள்ள கல்ல காற்றைத் தேவையான போது சுவாசித்தார். அதனால் ஜலத்துக் கடியில் அவருடன் சேர்ந்த மூன்று பேர்களும் சுமார் நான்கு மணி நேரம் அமுங்கியிருக்கச்சாத்தியப்பட்டது. அந்தக் கப்பலுக்குள்ளே யிருந்தவர்களில் இரண்டு பேர் ஒரு சக்கரத்தைக் கையினால் விரைவாய்ச் சுற்றிக்கொண்டிருக்க, அந்த சக்கரத்தோடு கப்பலின் பின்புறத்தில் பிணைக்கப்பட்ட விசிறிபோன்ற தடுப்புகள் விரைவாய்ச் சுழன்று கப்பலை ஓடச்செய்தன. ஆனால் அவர் நீராவி யந்திரத்தில் பரீக்ஷை செய்து வந்தபடியால் 1803-ம் வருஷத்தில் அவர் கட்டிய சப்மரின் கப்பலில் நீராவி எஞ்ஜின் அமைத்தார். ஆனால் அந்தக் கப்பல் மிகவும் சிறிதா

யிருக்தபடியால் அதனுள் அமைக்கப்பட்ட எஞ்ஜினுடைய பளுவைத் தாங்க முடியாமல் அது உடைந்துபோயிற்று. ஆயினும் அவர் சிறிதும் அதைரியப்படாமல், வலுவான சப்பலொன்றை மறுபடியுங் கட்டி நீராவி எஞ்ஜின் அதில் அமைத்து, கப்பலை ஓட்டிக் காண்பித் தார். ஐரோப்பா முழுவதிலும் மும்முரமாய் யுத்தஞ் செய்துகொண்டிருந்த காலத்தில், சப்மரின் கப்பலைப்பற்றிய பரீ க்ஷைகள் செய்யப்பட்டபடியால், அதைக் கடற்சண்டையில் எவ்வாறு உபயோகிப்பதென்று சாஸ்திர நிபுணர்கள் ஆராய்ச்சிசெய்யத் தொடங்கினர்கள். ராபர்ட் பல்டன் சப்மரின் கப்பலைக்கொண்டு சத்துருக்களைக் தாக்க முயன்றபோ தெல்லாம் தவறிப்போனர். அதற்கு முக்கிய காரணம், சப்மரின் கப்பலில இருந்தவர்கள் சத்து ருவினுடைய யுத்தகப்பல்கள் எவ்விடத்திலிருந்தன என்பதை அறி யக்கூடவில்லை. சப்மரின் கப்பல் ஜலத்தக்கடியில் அமுங்கினுல், கடலின்மேலுள்ள தோற்றத்தை எவ்வாறு அறிவது? அதை அறிவ தற்கு சப்மரின்கப்பல் கடலின்மேல் எழும்பினுல் அக்கப்பல் உடனே சத்துருவின் பீரங்கிகளுக்கு இரையாகிவிடும். ஆகையால் பெரிஸ் கோப் என்ற ஆச்சரியமான கண்ணுடிக்கருவி கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் சப்மரின்கப்பல் யுத்தத்தில் உபயோகிப்பதற்குத்தகுதியா யிருந்தது. ராபர்ட் பல்டன்பயன்பெறுததற்கு மற்றொரு காரணம், சத்துருவின் கப்பலை எளிதில் சேதப்படுத்த முடியாதேத. சப்மரின் கப்பலிலிருந்தவர்கள் சத்துருவினுடைய யுத்தகப்பலின் இருப்பிடத் தைத்தெரிந்துகொண்டபோதிலும், அதைச்சேதப்படுத்துவது கஷ்ட மாக விருந்தது. ஏனெனில், பீரங்கிகளைக்கொண்டு சுடலாமென்றல், சப்மரின் சிறிதாயிருந்ததால் அதில் சிறிய பீரங்கிகளை மட்டுமே ஏற் றக்கூடும். மேலும் பீரங்கியை ஜலத்துக்குக் கீழிருந்து சுட முடி யாதாகையால், அதைச் சுடுவதற்காக சப்மரின் கப்பல் கடலின் மேற்புறத்துக்கு எழும்பினுல் சத்துருவின் பெரிய பீரங்கிகளால் நாசமாகி விடும். அந்தக் காலத்தில், கடலின் கீழே தானுகச் செல் லக்கூடிய டார்ப்பிடோ கண்டுபிடிக்கப்படவில்லை. யுத்த கப்பலின் இரும்புச்சுவரின்மேல் வெடி மருந்தை வைத்துச் சுடுகிற வழக்கம் அந்த காலத்தில் இருந்து வந்தது. அது எளிதாய் கடக்கக்கூடிய காரியமல்ல. ஆகையால் சப்மரின் கப்பல் நூறு, வருஷங்களுக்கு முன்னுல் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும், அது பயன்படாமற் போயிற்று. கடலின் கீழே கப்பல் அமுங்கி யிருக்கும்போது, கட

வின்மேலே காணப்படுகிற தோற்றதை அறிந்து கொள்வதற்கு ஓர் ஆச்சரியமான கருவிகண்டு பிடிக்கப்பட்ட பிறகும், பீரங்கியிலிருந்து குண்டைச் சுடுவதுபோல ஜலத்துக் கடியிலிருந்துசுடக்கூடிய டார்ப் பிடோ என்ற வெடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகுந்தான், சப்மரின் கப்பல் யுத்தகப்பல்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

அதன்பிறகு சப்மரின்கப்பல்அநேகவழிகளில் விருத்திசெய்யப் பட்டு, இப்போது எல்லா யுத்தகப்பல்களைவிட அதிக ஆபத்தை விளை விக்கக்கூடியதாயிருக்கிறது. டார்ப்பிடோ என்பது பீரங்கியைவிட அதிக பயங்கரமான வெடி என்று சொல்லியிருக்கிறோம். சாதாரண கப்பல்களைப்போலுள்ள டார்ப்பிடோப்படகுகள் அந்தவெடியை உப யோகித்தபோதே, யுத்தகப்பலுக்கு நேரக்கூடிய ஆபத்து பெரிதாகி விட்டது. இப்போது, கண்ணுக்குத் தெரியாமல் ஜலத்துக்கடியில் ஒரு கப்பல்சென்று யுத்தகப்பலுக்கு அடியில் நுழைந்துஓடும்போது டார்ப்பிடோ வெடியைச் சுட்டுவிடக்கூடுமென்றால், அதனால் யுத்த கப்பல்களுக்கு நித்தியகண்டம் உண்டாகி, கடல் யுத்தமே வேறு விதமாய் மாறிவிடும்போல் தோன்றுகிறது. வீரர்கள் சத்துருக்க ளோடு நேரே நின்று சண்டை செய்யும்போது வியக்கத்தக்க சௌ ரியமும் உக்கிரமும் காட்டுவது வழக்கம்; ஆனால், கண்களுக்குத் தோன்றுத சத்துருக்களால் கூடுமானபோதில்மாண்டுபோவதென்றால் பழுத்தவீரர்களுங்கூடச் சஞ்சலமடைவார்கள். டார்ப்பிடோ என்ற பளுவான ஆயுதம் கடலில் நுழைந்தவுடன் மனிதனுடைய சகாய மின்றி, குறித்த கிலேமையிலின்றுந் தவறாமல் தானாக ஓடுகி றது. அதை விடப் பலமடங்கு பெரிதாயும் பளுவாயுமுள்ள கப்பல் அனேக மனிதர்களை ஏற்றிக்கொண்டு ஜலத்துக் கடியில் அவர்களிஷ் டப்படி செல்லுகிறது. ஜலத்திலும் ஆகாயத்திலும் சஞ்சரிப்பதற்கு இயற்கையில் சக்தி பற்றவனுய்ப் படைக்கப்பட்ட மனிதன் இப் போது ஜலத்துக் கடியிலும் ஆகாயத்தின்மேலும் நடமாடச் சாத்திய மா யிருக்கிறது. அதோடு சப்மரின்கப்பல் மனிதனுடைய சாமர்த்தி யத்துக்கும் யுக்திக்கும் ஏற்றபடி திசைந்து ஜலத்துக்குக் கீழே யிருந்துகொண்டு போர் வீரனைக்கின்றது. ஆகாய விமானம் ஆகாயத்தி லிருந்த வண்ணமாய்ப் போர் விளைக்கிறதென்றாலும், அது ஆகாயத்தி லிருந்து எறியக்கூடிய வெடி குண்டு சொற்ப சேதத்தையே உண்டு பண்ணக்கூடும். ஏனெனில், தரைச்சண்டையில் துருப்புகளும் ஆயு தங்களும் விஸ்தாரமாய்ப் பரவி யிருப்பதால், குறித்த இடத்தில்

சேதமாகக்கூடிய பொருளும் உயிரும் அவ்வளவா யிரா. ஆனல் 200 கெஜ தூரத்துக்குள் அடங்கக்கூடிய ஒரு கப்பல் ஏராளமான பொருட் செலவையும் ஆயுத வன்மையையும் ஏற்றுக்கொண்டிருப்பதால், கடல்களில் குறித்த இடத்தில் அபரிமிதமான சேதம் உண்டாகக்கூடும். சப்மரின் கப்பல் சென்ற ஐந்தாறு வருஷங்களில் மிகவும் விருத்தி செய்யப்பட்டு, யுத்த கப்பல்களுக்குள் மிகவும் பயங்கரமானதாகக் கருதப்படுகிறது.

கப்பலின் வாசற்படி.

கடலுக் கடியிலுள்ள மூத்துச் சிப்பியை ஏடுப்பதற்கு மனிதன் முழுகிச் செல்லக் கூடுமானல், அநேக மனிதர்கள் கொண்ட கப்பலொன்று ஏன் முழுகிச் செல்லக் கூடாது? அவ்வாறு அநேக வருஷங்களாக சாஸ்திர நிபுணர்கள் யோசனை செய்து இந்த ஆச்சரியமான யுத்த கப்பல்களைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கப்பல் முழுவதும் ஜலத்துக் கடியில் முழுகி விட்டால் அதற்குள் ஜலம் போவதற்கு வழியிருக்கக் கூடாதல்லவா? ஆகையால் காற்றும் உள்ளே போக இடைவெளி யிருக்கக் கூடாது. அவ்வாறு கப்பல் கட்டப்பட்டால் அதற்குள் மனிதர்கள் எப்படிப் பிரவேசிக்கிறார்கள்? அவர்கள் எப்படி நல்ல காற்றைச்சுவாசிக்கிறார்கள்? கடலின் மேலுள்ள வஸ்துக்களை எவ்வாறு பார்க்கிறார்கள்? இவைகளுக்காகச் செய்யப்பட்டுள்ள அநேக ஆச்சரியமான உபாயங்களைப் பற்றிச் சிறிது விவரிப்போம்.

சப்மரின் கப்பல், ஒரு பெரிய மீனைப்போலும் டார்ப்பிடோ வெடியைப்போலும் பெரிதாய் நீண்டு முனைகளில் குறுகியிருக்கும். முதல் பாகத்தில் முதல்பக்கத்தில் வெளியான பெரிய சப்மரின் கப்பலின் சித்திரப்படத்தைப் பார்க்கவேண்டும். அந்தக் கப்பலின்மேல் ஒரு சிறு கோபுரமும் அதன் மத்தியில் உயரமான ஸ்தம்பமும் இருக்கிறன. அந்தச் சிறிய கோபுரத்தின் வழியாகத்தான் அந்தக்கப்பலிலுள்ள மாலுமிகள் கப்பலுக்குள்ளும் வெளியிலும் செல்வார்கள். இதைக் காண்பிக்கிற நமது சேர்த்தியான சித்திரப்படத்தை இந்தப் புத்தகத்தில் பார்க்கவும். அந்தக் கோபுரத்தின் மேலுள்ள மூடியைத் திறக்கவும் மூடவும் செய்யலாம். சப்மரின் கப்பல் அவசியமான போதுதான் ஜலத்துக் கடியில் முழுகிச்செல்லும். மற்ற காலங்களில் சாதாரண கப்பல்களைப்போல ஜலத்தின்மேல் மிதந்துசெல்லும். இதற்கு ஒரு முக்கியமான காரணம் சொல்லலாம். ஜலத்துக்கடியில்


செல்வதைவிட ஜலத்துக்கு மேலே சென்றால், அந்தக் கப்பல் அதிக வேகமாய் ஓடும். முழுகிச் சென்றால், அந்தக் கப்பல் ஜலத்தைப் பிளக்து கொண்டும், ஜலத்தின் பளுவைத் தாங்கிக்கொண்டும் போக வேண்டியிருக்கிறபடியால் அதன் ஓட்டம் குறையும்.

ஆகையால், சப்மரின் கப்பல் ஜலத்தின்மேல் மிதந்து செல்லும் போது, அதிலுள்ள மானுஷிகள் அந்த கோபுரத்தின் வழியாய் வெளியே வந்திருக்கலாம். முதல் பாகத்தில் முதல் பக்கத்திலுள்ள பெரிய சப்மரின் கப்பலின் சித்திரப்படத்தில் அவ்வாறு நின்று கொண் டிருப்பதைப் பார்க்கலாம். அந்தக் கப்பல் முழுகவேண்டு மானால் எல்லா மானுஷிகளும் கப்பலுக் கோபுரத்தின் வழியாய் குள் சென்று, கோபுரத்தின்மேலுள்ள கதவை நன்றாய் மூடிவிடு வார்கள். அந்த கோபுரத்துக்கு அடியில் மற்றொரு கதவு இருக்கி றது. அதையும் நன்றாய் மூடிவிட்டு மானுஷிகள் கப்பலுக்குள் போய் விடுவார்கள். இரண்டு கதவுக ளிருப்பதற்குக் காரணம், முதல் கதவு தற்செயலாய்த் திறந்துகொண்டு சமுத்திரஜலம் உள்ளே புகுந்துவிட் டால், கப்பலுக்குள் ஜலம் பரவாமலிருப்பதற்கு இரண்டாவது கதவு வைக்கப்பட் டிருக்கிறது.


ஆச்சரியமான கண்ணாடிக் குழாய்.

அந்தக் கோபுரத்துக்குமேல் உயரமான ஸ்தம்பம்போன்ற குழாய் இருப்பதைக் கவனிக்கவும். அந்தக் குழாயின் உச்சியில் பெரிஸ்கோப் என்று சொல்லப்படுகிற விசித்திரமான கண்ணாடி வைக்கப்பட் டிருக்கிறது. விசாலமான சமுத்திரத்தின்மேலுள்ள தோற்றத்தை அந்தக் கண்ணாடி காண்பிக்கும். அத்தோற்றத்தின் பிரதி பிம்பம், அந்தக் குழாய் வழியாய், கப்பலுக்குள்ளே யிருக்கிற வேறொரு கண்ணாடியில் தெளிவாய்த்தெரியும். கப்பலுக்குள்ளே யிருக்கிறவர்கள் பின்னால்சொல்லிய கண்ணாடியில் பார்த்துத்தெரிந்து கொள்வார்கள். அந்தக் குழாயின் மேல்முனையிலுள்ள கண்ணாடி ஓர் யந்திரத்தால் வெகு விரைவாய்ச் சுற்றப்படும். அப்போது சமுத்திரத்தில் நாலாப் பக்கங்களிலுள்ள தோற்றம் அந்த கண்ணாடி யில் விழும். அந்தக் கண்ணாடியிலுள்ள தோற்றம் கப்பலுக்குள்ளே யுள்ள மற்றொரு கண்ணாடியில் தெரியவரும். சப்மரின் கப்பல் ஜலத்தில் முழுகிச்செல்லும்போது, அந்தக் கண்ணாடிக் குழாயின் முனை ஒன்றரை அடி நீளத்துக்கு நீர்மட்டத்துக்குமேல் வெளி


யே தெரியும். அந்த முனையின் சுற்றளவு சுமார் 1½ அடி யிருக்கும்; அந்த ஒன்றரை அடி நீளமுள்ள முனையைத் தவிர, கப்பலின் மற்ற பாகமெல்லாம் முற்றிலும் ஜலத்தில் மறைந்திருக்கும். அந்தக் கண்ணுடிக்குழாயின் முனை வெளியே நீட்டிக்கொண் டிருப்பது மிகவும் அவசியமாகும்; அந்த முனையிலுள்ள "பெரிஸ்கோப்" என்ற கண்ணுடி மூலமாய்ச் சமுத்திரத்தில் மிதக்கும்வஸ்துக்களைக் கப்ப லுக்குள்ளே யிருக்கிறவர்கள் தெரிந்து கொள்ள முடியும். புதி தாய்க் கட்டப்பட்ட சப்மரின் கப்பலில் இரண்டு கண்ணுடிக் குழாய் கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அந்த கண்ணுடிக்குழாயை மேலுங் கீழுமாய்த் தள்ளலாம். சப்மரின் கப்பலும் அதன்மேலுள்ள கோபுரமும் ஜலத்தில் அமுங்கிய பிறகு அந்தக் கண்ணுடிக்குழாய் ஜலத்தின் மேலே நீண்டிருக்கும்படி தள்ளப்படுகிறது. ஆகை யால் சில சமயங்களில் சத்துருவின் பீரங்கிகளுக்குப் பயந்து, "பெரிஸ்கோப்" என்ற கண்ணுடியோடுகூட கப்பல் முழுவதும் ஜலத்தில் மறையும்படி நேரிட்டால், கப்பலிலுள்ளவர்கள் கண்களை யிழந்தவர்கள்போ லாவார்கள். தான்கு திசைகளை மாத்திரம் அறிந்துகொள்ளலாம் காந்த ஊசி அமைக்கப்பட்ட கருவி ஒன் றால் திசைகளைத் தெரிந்துகொள்ளலாம். கப்பலுக்குள் எப்போ தும் மின்சாரவினைக்கு எரிந்துகொண்டிருக்கு மாகையால், கப்பலின் உள்புறமெல்லாம் தன்னுய்த்தெரியும். ஆனால் "பெரிஸ்கோப்" கண் ணுடி நீர்மட்டத்துக்குமேலில்லாமற்போனால், வெளித்தோற்றத் தைக் காணுவது சிறிதும் சாத்தியமில்லை. சத்துருவின் யுத்தகப்ப லைத் தாக்கும்போது அவ்வாறே ஜலத்துக்கடியில் முற்றிலும் மறைந்துபோகும். சப்மரின் கப்பல் வெகுதூரத்தில் விலகியிருந்து "பெரிஸ்கோப்" என்ற கண்ணுடி மூலமாய், சத்துருவினுடைய யுத்த கப்பலின் இருப்பிடத்தை அறிந்துகொண்டு, பிறகு சப்மரின் முழுவ தையும்கண்ணுடிக்குழாயைபுஞ்சேர்த்துமுழுசக்செய்துசத்துருவை நெருங்கி டார்ப்பிடோ வெடியைப் பிரயோகித்துவிட்டு மறுபடியும் தூர விலகிவிடும். சப்மரின் கப்பல் யுத்த கப்பலை நெருங்கும் போது, ஜலத்தில் முற்றிலும் மறைந்து விடுவதால் அதைப் பீரங்கி களால் தாக்கமுடியாது. வெகு தூரத்திலிருக்கும்போதே அதைக் கண்டுபிடித்துத் தாக்கவேண்டும். முதல்பாகத்தில் வெளியான சிறிய சப்மரின் கப்பலின் சித்திரப்படத்தைப் பார்க்கவும். இரண்டு கொடி கள் பறக்கிற ஸ்தம்பங்கள் கப்பலின் இருப்பிடத்தைக் காண்பிக்கின்



சப்மரின் கப்பல் டார்ப்பிடோ என்ற வெடியை ஜலத்துக் கடியிலிருந்து சுடுகிறது.



சப்மரின் கப்பல் கண்ணடிக் குழாயுடன் கடலில் அமுங்கி யிருக்கிறது. இரண்டு கொடிகள் கப்பலிருக்கு மிடத்தைக் குறிப்பிடுகின்றன.



சப்மரின் கப்பலுக்குள்ளே யிருக்கிற உத்தியோகஸ்தர், கடல் மட்டத்துக்குமேலே நீண்டிருக்கிற "பெரிஸ்கோப்" என்ற கண்ணடியில் காணப்படுகிற சமுத்திரத்தின் தோற்றத்தை பார்க்கிறார். பெரிஸ்கோப் என்ற கண்ணடிதான் அந்த கப்பலின் கண்களாகும்.



ஒரு சிறு படகில் ஏறிச் சென்றுகொண் டிருந்த மாலுமிகள் ஒரு சப்மரின் கப்பலைக் கண்டவுடன் அதனருகே சென்று அவர்கள் சப்மரின் கப்பலுக்குள்ளே புகுவதை இந்த படம் காண்பிக்கிறது. இந்தபடத்தின் மேல்பாகம் சப்மரினுடைய கோபுரமாகும். அங்குதான் கப்பலுக்குள்ளே செல்வதற்குக் கதவு வைக்கப்பட் டிருக்கிறது. படத்தின் மத்திய பாகத்தில் சிறு படகிலுள்ள மாலுமிகள் கோபு ரத்தின்மேல் ஏறுவதைக் காணலாம். படத்தின் கீழ்பாகத்தில், கோபுரத்தின் வழியாய் நுழைகிறவர்கள் ஏணியில் இறங்கி சப்மரினுக்குள்ளே வருவதைப் பார்க்கலாம். இது, கடலில் அமுங்கியுள்ள சப்மரின் கப்பலினுடைய உள்புறத தைக் காட்டுகிறது. உண்மையில் அந்த உள்புறம் கண்ணுக்குத் தோன்றுது. நாம் கப்பலினுள்ளேயிருந்துகொண்டு பார்ப்பதுபோல இந்த படத்தின் கீழ்பாகத் தில் காட்டப்பட் டிருக்கிறது.

றன. இரண்டு கொடிகளுக்கும் இடையே பெரிஸ்கோப் கண்ணாடி மிகவும் சிறிதாய்க் காணப்படுகிறதைக் கவனிக்கவும். அந்தக் கண்ணாடியும் ஜலத்தில் மறைந்திருக்கிற தோற்றத்தைக் காட்டும் சிறிய சித்திரப்படம் இந்தப் புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சப்மரின் எவ்வாறு ஓட்டப்படுகிறது.

சப்மரின் கப்பல், ஜலத்துக்கு மேற்புறத்தில் செல்லும்போது, எண்ணெயினால் வேலை செய்கிற எஞ்ஜின் (ஆயில் எஞ்ஜின்) அதை ஓட்டுகிறது. இந்த எஞ்ஜின் வேலை செய்துகொண்டிருக்கும்போதே மின்சார சக்தியையும் உற்பத்தி செய்கிறது. ரெயில் எஞ்ஜின் ஓடும்போது அதனால் மின்சார சக்தியும் உற்பத்தியாகி, ரெயில்வண்டிகளிலுள்ள மின்சார விளக்குகளும் விசிறிகளும் வேலைசெய்வதைப் பார்க்கிறோமல்லவா? அம்மாதிரி, சப்மரினிலுள்ள எஞ்ஜின், ஜலத்துக்கு மேற்புறத்தில் கப்பலை ஓடச்செய்யும்போதே மின்சார சக்தியையும் உண்டுபண்ணுகிறது. இந்த மின்சார சக்தி சேகரித்து வைக்கப்படும். சப்மரின் கப்பல் ஜலத்துக்குள் முழுகியவுடன், அந்த மின்சார சக்தியால் வேலை செய்யக்கூடிய மோட்டார் யந்திரங்கள் கப்பலை ஓடச்செய்யும். மோட்டார் யந்திரத்தை அநேகர் பார்த்திருக்கக்கூடும். சென்னைப் பட்டணத்தில் டிராம் வண்டிகளில் வைக்கப்பட்டிருக்கிற யந்திரம் மோட்டார் யந்திரமாகும். மோட்டார்கார் வண்டியிலுள்ள யந்திரம் வேறு; அது எண்ணெயால் வேலை செய்வது. சப்மரின் கப்பல், ஜலத்துக்கு மேற்புறத்தில் ஓடும்போது ஆயில் எஞ்ஜின் வேலை செய்துகொண்டிருக்கும்; கப்பல் ஜலத்தில் முழுகினால், அந்த எஞ்ஜின் நிறுத்தப்பட்டு மோட்டார் யந்திரம் வேலை செய்யத்தொடங்கும். இவ்வாறு, கப்பலை ஓட்டுகிற யந்திரத்தை மாற்றுவதற்குக் காரணமென்ன? விளக்கு எரிவதற்குக் காற்று தேவையாயிருப்பதுபோல், ஆயில் எஞ்சின் வேலை செய்வதற்கும் காற்று அவசியமாகும். ஆகையால் சப்மரின் கப்பல் ஜலத்துக்கு மேற் புறத்தில் செல்லும்போது, வெளியேயுள்ள காற்றை ஒரு குழாய் வழியாய்க் கப்பலுக்குள்ளே செலுத்தி ஆயில் எஞ்ஜின் வேலை செய்யப்படுகிறது. ஆனால் கப்பல் ஜலத்துக்கடியில் முற்றிலும் முழுகி, காற்றும் ஜலமும் உள்ளே போகாமல் காக்கப்பட்டிருந்தால் ஆயில் எஞ்ஜின் எவ்வாறு வேலை செய்யும்? ஆகையால் மின்சார சக்தியைக் கொண்டு கப்

பலே ஓட்டுகிறார்கள். மின்சார சக்தி வேலே செய்வதற்குக் காற்று அவசியமில்லே. உதாரணமாக, ரயில் வண்டியில் மின்சார விளக்கு எரிவதைப் பார்த்திருக்கலாம். அந்த விளக்கு முழுவதும் கண்ணுடியால் இறுக மூடியிருப்பதைக் கவனித்திருக்கலாம். அவ்வாறு எண்ணெயால் எரிகிற விளக்கைக்கண்ணுடியால் இறுகமூடினுல் விளக்கு உடனே அணேந்துபோவதோடு கண்ணுடியும் வெடித்துவிடும். கல்லகாற்றில்லாமையால், எண்ணெய்எரிகிறதில்லே.உஷ்ணத்தால் கண்ணுடி வெடித்துவிடும். ஆனுல் மின்சார விளக்கின்மேலே மூடியுள்ள கண்ணுடியைத் தொட்டுப் பார்த்தால் கொஞ்சங்கூட உஷ்ணமிராது. அது காற்றில்லாமலே எரிந்துகொண் டிருக்கிறது. ஆகையால் மின்சார சக்தியினுல் வேலே செய்வதற்கு கல்லகாற்று அவசியமில்லே. அதனுல் சப்மரின் கப்பல் ஜலத்தில் முழுகிச் செல்லும்போது மின்சார சக்தியால் ஓட்டப்படுகிறது. ஆகையால் அந்த மின்சார விசையை ஏராளமாய்ச் சேகரித்துவைப்பது அவசியமாகும். அதற்கு அநேக நூதன உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கப்பலுக்குள் இருட்டாயிருக்கு மாகையால், மின்சார விளக்கு எரிந்துகொண்டிருக்கும்.

கப்பல் எவ்வாறு அமுங்குகிறது.

சப்மரின் கப்பலே முதலில் கட்ட ஆரம்பித்தபோது அந்தக் கப்பலேச் சாய்வாக ஓட்டி முழுகச் செய்தார்கள். அது முழுகிய பிறகு அவ்வாறு ஓட்டுவதை நிறுத்திவிட்டால், கப்பல் இயல்பாகவேமேலே மிதக்க முயற்சிசெய்து கடலின் மேற்புறத்துக்கு வந்துவிடும். ஆனுல் சப்மரின் கப்பல் வரவரப் பெரிதாயும் நீளமாயும் செய்யப்பட்டபடியால் கப்பலே அவ்வாறு சாய்த்து ஓட்டுவது அபாயகரமான தென்று எண்ணிவேறொரு உபாயஞ்செய்யப்பட்டது. கப்பலுக்குள் சில அறைகள் கட்டி அவைகளுக்குள் கடல் ஜலத்தை விட்டு நிரப்பினுல், ஜலத்தின் பளுவால் கப்பல் அமுங்கிவிடும். பிறகு கப்பல் மிதக்க வேண்டுமானுல், அந்த அறைகளில் நிரம்பியிருக்கிற ஜலத்தை ஒரு பம்ப்பு மூலமாய்த் தேவையான அளவு வடித்து விடுகிறார்கள். ஜலத்தின் பளுவு குறைந்தவுடன் கப்பல் மேலே எழும்பத் தொடங்கும். இந்த முறைதான் இப்போது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கப்பல் இவ்வளவு தூரம் எழும்புகிறதென்றும், அமுங்குகிறதென்றும் அறிவதற்குச் சில கருவிகள் இருக்கின்றன. கப்பலுக்குள்ளிருக்கிற மாலுமிகள் அந்தக் கருவிகளேப் பார்த்து, தேவையான கடல்

ஜலத்தை உள்ளேவிடவோ, வெளியே வடித்துவிடவோ சாத்திய மாகும். ஜலத்தை வடிப்பதற்கு பம்ப்புவேலை செய்யப்படுகிறதெனச் சொன்னேனே. அதைக் கையினுல் வேலை செய்வதில்லை; அதற்கு மின்சார விசையை உபயோகிக்கலாம். அல்லது காற்றை இறுக அமுக்கி அடைத்து வைத்திருப்பார்கள்; அவ்வாறு இறுக அடைத்து வைக்கப்பட்ட காற்றை மெதுவாய் வெளியே போகவிட்டால், அதனுல் உண்டாகிற விசையால் பம்ப்புக்குழாயை வேலை செய்ய லாம். அந்தக் காற்று விசையால் டார்ப்பிடோ வெடி சுடப்படுகிறது. சாதாரண யுத்த கப்பல்களில், காற்று விசையைக் கொண்டாவது, வெடி மருந்தின் விசையைக் கொண்டாவது டார்ப்பிடோவைச் சுடு கிறார்களென்று சொல்லி யிருக்கிறோம். ஆனல் சப்மரினில் காற்று விசையால் தான், டார்ப்பிடோ வெடியைச் சுடுகிறார்கள்.

சப்மரின் கப்பலில் அடைத்துவைக்கப்பட்ட காற்றைக்கொண்டு தான் அதினுள்ள ஜனங்கள் சுவாசிக்கிறார்கள். நல்ல காற்றை அடை த்துவைத்துச் சிறிது சிறிதாகக் கப்பலுக்குள் பாவச் செய்கிறார்கள். அந்தக் காற்று கெட்டுப்போனவுடன் அதை ஒரு பம்ப்பினுல் அப் புறப்படுத்துகிறார்கள். அவ்வாறு அடைத்துவைத்தகாற்றைக்கொண்டு சப்மரின் கப்பல் ஜலத்துக்கடியில் 48 மணி நேரம் அதாவது இரண்டு தினங்கள் வெளியேவராமல் கீழே இருந்துவிடலாம். ஆனல் இரண்டு தினங்கள் வெளியில் வராமலே அமுங்கி யிருக்கும்படி நேரிடுவ தில்லை. அப்போதைக் கப்போது ஜலத்தின் மேற்புறத்துக்கு வந்து புதிய நல்ல காற்றை அடைத்துக்கொள்ளலாம்.

சப்மரின் கப்பல் ஜலத்துக் கடியில் 120 அடி ஆழம் அமுங்க லாம். அதற்குமேல் அமுங்கினுல் பிறகு வெளியே வருவது கஷ்ட மாகிவிடும். ஆனல் அவ்வளவு ஆழங்கூட அமுங்குவது அவசிய மில்லை. ஏனெனில் பெரிய யுத்த கப்பல்களின் அடிப்பாகம் ஜலத்துக் குக் கீழே 30 அடிதான் ஆழ்ந்திருக்கும். அந்த யுத்த கப்பல்களுக் கடியில் எளிதாய் நுழைந்து செல்லலாம்.

சப்மரின் கப்பலின் முக்கிய விவரங்கள்.

1880-ம் வருஷ முதல் சப்மரின் கப்பலைக் கட்டுவதைப் பற்றி எல்லாத் தேசங்களிலும் முக்கியமாய் பிரான்ஸிலும் அமெரிக் காவிலும் விசேஷ கவனஞ் செலுத்தப்பட்டு வந்தது. ஆயினும் 1903-ம் வருஷத்தில் பிரான்ஸில் கட்டப்பட்ட ஒரு சப்மரின் கப்

பல் 60 டன் நிறைதா னிருந்தது. அக்காலத்தில் சப்மரின் கப்பலின் முக்கியமான அம்சங்களைப்பற்றி ஏதுவும் நிச்சயமாகவில்லை. அதன் முக்கியமான வேலை டார்ப்பிடோ வெடிகளைப் பிரயோகிக்கவேண்டியது. பீரங்கியிலிருந்து குண்டைச் சுடுவதுபோல ஜலத்துக்கடியிலிருந்து பிரயோகிக்கக் கூடிய ஆயுதம் டார்ப்பிடோவைத் தவிர வேறொன்றுமில்லை. டார்ப்பிடோக் கப்பல்கள் இரவில் சத்துருவின் கப்பல்களை நெருங்கித் தாக்குவதுபோல, சப்மரின் கீப்பல்கள் பகற் காலத்தில் ஜலத்துக் கடியில் மறைந்து தாக்கவேண்டும். ஆகையால் சப்மரின் கப்பலில் டார்ப்பிடோ வெடிகள்மாத்திரம் ஏற்றப்பட்டன. ஆனால் அந்த காலத்தில் செய்யப்பட்ட டார்ப்பிடோ வெடிகள் சிறிய வையாயிருந்தபடியால், சிறிய சப்மரின் கப்பல் கட்டினால் போதுமானதா யிருந்தது. ஆனால் இப்போது புதிதாய்ச் செய்யப்படுகிற டார்ப்பிடோ வெடியொன்று 21 அடி நீளமும் 5½ அடி சுற்றளவும், 2000 பவுண்ட் பளுவுமிருப்பதால், அவைகளை ஏற்றிச்செல்வதற்கு சப்மரின் கப்பல்கள் பெரிதாய்க் கட்டப்படும்படி நேர்ந்தது.

சப்மரின்	சுற்றளவு	மொத்த நிறை	ஓட்டம்	ஆயுதங்கள்
1906-ம் ஞ கட்டப் பட்டது.	135 அடி நீளம் 13½ அடி அகலம்	313 டன்	ஜலத்தின் மேல் மணிக்கு 15¾ மைல். ஜலத்துக் கடியில் மணிக்கு 11¼ மைல்	டார்ப்பி டோக் குழாய் இரண்டு
1912-ம் ஞ கட்டப் பட்டது	176 அடி நீளம். 22½ அடி அகலம்	800 டன்	ஜலத்தின் மேல் மணிக்கு 17 மைல். ஜலத்துக் கடியில் மணிக்கு 12 மைல்	டார்ப்பி டோக் குழாய் மூன்று

இவ்வருஷம் கட்டப்பட்டுமுடிந்த சப்மரின் கப்பல்கள் இன்னும் பெரிதாயிருப்பதோடு, அவைகளில் 3 அங்குல பீரங்கியில் நான்கு ஏற்றப்பட் டிருக்கின்றன. இந்த சப்மரின் கப்பல்களையும் டார்ப்பிடோ வெடிகளையும், பிரிட்டிஷார் அநேக நூதனமுறைகளில் விருத்திசெய் திருக்கிறார்கள். சப்மரின் கப்பலில் பீரங்கிகளை முதலில் ஏற்றியது பிரிட்டிஷார்தான். ஜலத்தில் அமுங்கிச்

செல்கிற கப்பலில் பீரங்கிகளை எவ்வாறு அமைத்து உபயோகிப்பது? அந்த பீரங்கிகள் கப்பலுக்குள் வைக்கப்பட்டிருக்கும். தேவையானபோது, கப்பலை ஜலத்தைக் தூமேல் நிலப்பச்செய்து உள்ளேயிருக்கிற பீரங்கிகளை ஓர் உபாயத்தால் கப்பலின் மேற்புறத்தக்கு எழும்பச் செய்யலாம். மறுபடியும் பீரங்கிகளை உள்ளுக்கு இழுத்தக்கொண்டு, சப்மரீன் கப்பலை அமுக்கச்செய்யலாம். சப்மரின் கப்பலில் பீரங்கிகள் ஏற்றப்படும் விதத்தை நமது சித்திரப்படத்தில் காணலாம் புதிதாய்க் கட்டப்பட்ட அந்த சப்மரின் கப்பலின் மொத்தநிறை 1200-டன்; ஜலத்தின்மேல் மணிக்கு 22½-மைல் வீதமும், ஜலத்துக்கடியில் 18-மைல் வீதமும் ஓடக்கூடியது. மேலே சொன்ன நான்கு பீரங்கிகளைத் தவிர, டார்ப்பிடோக் குழாயில் முந்திய கப்பல்களைவிட இரண்டு பங்கு அதிகமாய் அதாவது 6-குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சப்மரின் கப்பலின் ஓட்டத்தை இரண்டு விதமாகப் பிரித்துச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். ஜலத்தின்மேல் ஓடுவதைவிட ஜலத்துக்கீழே ஓடுவது அதிககஷ்டமாயிருக்கும். கப்பலின் மொத்த நிறையைப்பற்றிச் சொல்லப்பட்டது ஜலத்துக்கடியில் முழுகியபோதுள்ள நிறையைக் குறிப்பிடுகின்றது. அதாவது, கப்பல் முழுகியிருந்தால் அதற்குள் நிரப்பப்பட்ட சமுத்திரஜலத்தின் நிறையையும் சேர்த்து அந்த மொத்த நிறைகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. ஆகையால் நீர்மட்டத்தில் அந்தக் கப்பல்கள் மிதக்தால் அவைகளின் நிறை குறையும்.

1910-ம்வருஷம் வரையில் கட்டிமுடிந்த சப்மரின் கப்பலகளின் அகலம் 13½-அடிக்கு மேலில்லை. ஆகையால், 21-அடி நீளமுள்ள புதிய டார்ப்பிடோவெடிகளைக் கப்பலின் குறுக்கேவைத்துச்சுடமுடியாது. ஆகையால் கப்பலின் முனைகளில் டார்ப்பிடோக் குழாய்களை அமைத்து, டார்ப்பிடோவைக் கப்பலின் நீளவாட்டில் வைத்துச்சுடுகிறார்கள். மற்ற யுத்தகப்பல்களில் கப்பலின் இருபுறங்களிலும் முனைகளிலும் அந்தக் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சப்மரின்கப்பலில் அகலவாட்டில் டார்ப்பிடோக்குழாய்களை அமைக்க முடியவில்லை. இதனால், சப்மரின்கப்பல் சத்துருவின் யுத்தகப்பலைத் தாக்கும்போது தன் முனைப்பாகத்தை சத்துரு இருக்கிற திசையை நோக்கித் திருப்பிக்கொண்டு, டார்ப்பிடோவைப் பிரயோகிக்க வேண்டும். அதனால் சிறிது தாமஸமாகுமல்லவா? அப்படியில்லாமல் சப்மரின் கப்பலின் பக்கங்களிலும் குழாய்களை அமைத்

திருந்தால், சத்துருவை நெருங்கியவுடன் இருந்த நிலையிலேயே டார்ப்பிடோவைச் சுட்டு விடலாம். சென்ற நான்கு வருஷங்களாகக் கட்டப்பட்டு வருகிற கப்பல்களின் அகலம் 22½-அடியிருக்கின்றது இவைகளில் டார்ப்பிடோக் குழாய்களை அகல வாட்டில் அமைக்கலாம். டார்ப்பிடோக் குழாய்க்குப் பின் புறத்தில் கதவு வைப்பதற்குப் பதிலாக பக்கவாட்டில் கதவு வைக்கப்படுவதால், டார்ப்பிடோவை அதனுள்ளே நுழைத்துச் சுடலாம். ஆயினும் அந்தக்குழாயைச்சுற்றித் தாராளமான இடம் இருக்காதாகையால் அங்குள்ள மாலுமிகளுக்குப் பலவித இடைஞ்சல் உண்டாகும். இதுவரையில் சப்மரின் கப்பலில் அகல வாட்டில் டார்ப்பிடோக் குழாய்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு தேசமும் தங்கள் சப்மரின் கப்பல்களைப்பற்றிய விவரங்களை மாத்திரம் மிகவும் இரகஸ்யமாய் வைத்துக்கொண்டிருக்கின்றது. மற்ற யுத்த கப்பல்களைப்பற்றி அவ்வளவு இரகஸ்யம் பாராட்டப்படுவதில்லை.

ஒரு சப்மரின் கப்பலில் சுமார் 30 பேர் இருப்பார்கள். கப்பலைச் சரியான வழியில் ஓட்டுவதற்கும், சத்துருக்களின் இருப்பிடத்தைச் சோதிக்கவும் சில உத்தியோகஸ்தர்கள் "பெரிஸ்கோப்" கண்ணாடியிலுள்ள தோற்றத்தைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள் எஞ்ஜினை ஓட்டுவதற்குச் சிலரும், டார்ப்பிடோக் குழாய்களில் வேலை செய்யச் சிலரும், கப்பலின் மற்ற பாகங்களைக் கவனிக்கச் சிலரும் பீரங்கிக லிருந்தால் அவைகளில் வேலை செய்யச் சிலரு மிருப்பார்கள். கம்பியில்லாத் தந்தி யந்திரம், மற்ற யுத்த கப்பல்களில் இருப்பது போல, சப்மரின் கப்பலிலும் அமைக்கப்பட்டிருக்கும். அதைக் கவனிப்பதற்குச் சிலபேரு மிருப்பார்கள். மொத்தம் 30 பேருக்குமே லிருக்கமாட்டார்கள். மூன்பு சொல்லியபடி, யுத்த கப்பலில் வேலை செய்யும் ஆள்களைக் குறைக்கவேண்டு மென்பது இக்காலத்து முக்கிய நோக்கமாகும்.


ஒரு சப்மரின் கப்பலில் 15 டன் நிறைகொண்ட எண்ணெய் வைக்கப்பட்டிருக்கும்; அதைக் கொண்டுதான் ஆயில் எஞ்ஜின் வேலை செய்யவேண்டும். நிலக்கரியைவிட, எண்ணெய் அதிக பலனைத் தரக்கூடிய தென்றும், எண்ணெய் தேவையான அளவு கிடைப்பது அரிதாகையால் யுத்த கப்பல்களில் அவ்விரண்டையும்சேகரித்து


வைக்கிறார்களென்றும் சொல்லியிருக்கிறோம். ஆனல் சப்மரின் கப்பல் சிறிதா யிருப்பதாலும் அது மிகவும் அபாயகரமான வேலையைச் செய்ய மேற்கொண்டிருக்கிறபடியாலும் அவைகளில்முற்றிலும் எண்ணையே ஏற்றுகிறார்கள். முன்பு ஒரு சப்மரின் கப்பல் 1200 மைல் எங்கும் தங்காமல் பிரயாணஞ் செய்திருக்கிறது. புதிதாய்க் கட்டப்பட்ட சப்மரின் கப்பலில் 15 டன்னைவிட அதிகமாகஎண்ணெய் ஏற்றப்பட்டிருக்குமென்று தோன்றுகிறது ஏனெனில் இப்போது அந்த சப்மரின் கப்பல் எவ்விடத்திலும் தங்காமல் 4000 மைல் தூரம் கடலில் சஞ்சாரம் செய்யக்கூடுமென்று சொல்லப்படுகிறது. அவ்வளவு தூரம் பிரயாணம் போவதற்கு எஞ்ஜினுக்குவேண்டிய எண்ணெயும், மோட்டாருக்கு வேண்டிய மின்சாரமும், கப்பலிலுள்ள மானுஷிகளுக்கு வேண்டிய ஆகாரமும் அதில் சேகரிக்கப்பட்டிருக்கும். கப்பலுக்குள்ளே மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருக்குமென்று சொன்னோம். கப்பலுக்குள்ளே சமையல் செய்வதற்கு மின்சாரத்தால் எரிக்கப்பட்ட அடுப்பு உபயோகிக்கப்படுகிறது. எல்லாக் கப்பல்களிலும், சிறிய படகுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கப்பலின் மேடையில் அவைகள் உயரமான கொக்கியில் மாட்டி வைக்கப்பட்டிருக்கும். கப்பலுக்கு ஆபத்து நேர்ந்தால், அதிலுள்ள ஜனங்கள் அந்தச் சிறிய படகுகளைச் சமுத்திரத்திரஜலத்தில் மிதக்கவிட்டு அவைகளில் ஏறிக்கொண்டு தப்பித்துக் கொள்வார்கள். அந்தச் சிறிய படகுகள் யுத்தகப்பலில் தொங்கவிடப்பட்டிருப்பதை நமது சித்திரப்படங்களில் காணலாம். முதல் பாகத்தில் 138-ம் பக்கத்தில் வெளியான 2-வது படத்தைப் பார்க்கவும். அதில், பீரங்கிகளுக்குமேலே சிறு மூட்டைபோல் அந்தப் படகு மாட்டி வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இந்தப் புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள சித்திரப்படத்திலும் காணலாம். சப்மரின் கப்பல் மிகச் சிறிதா யிருந்தாலும் அதற்கு விபத்து நேரிட்டால் அதிலுள்ள ஜனங்கள் எவ்வாறு தப்பிப் பிழைப்பதென்று சில வருஷங்களாய் யோசனை செய்யப்பட்டு வந்தது. சிறிய படகுகளை சப்மரின் கப்பலுக்குள் வைப்பது சாத்தியமில்லை. ஆகையால், அந்தப் படகுகளை வழக்கம்போல மரத்தினல் கட்டாமல், ஜலத்தில் நனைந்துபோகாத கெட்டித்துணியால் செய்கிறார்கள். அவ்வாறு துணியால் செய்த படகைச் சிறிய பெட்டிபோல்மடக்கிவைக்கலாம் அந்தப்படகில் ஆறுபேர் ஏறிச்செல்லலாம். அவ்வித படகு சட்ம

ரின் கப்பலில் வைக்கப்பட்டிருக்கிறது. ஜலத்துக்குக் கீழ்முழுகி முத்துச்சிப்பியை யெடுக்கிறவர்கள் ஓர்வகை உடையைத் தரித்துக்கொண்டு ஒரு சிறு பெட்டியில் காற்றை அடைத்து அதைச் சுவாசிக்கிறார்கள். அம்மாதிரியான உடைகளும் சப்மரின் கப்பலில் இருக்கின்றன. கப்பலுக்கு ஆபத்து நேர்ந்தால் அந்த உடைகளைத்தரித்துக்கொண்டு நீர் மட்டத்துக்கு வரலாம். கப்பலின் அடிப்பாகத்தில் பழுதுபார்க்க வேண்டுமானால் அந்த உடையைத் தரித்துக்கொள்கிறார்கள்.


ஒவ்வொரு யுத்தகப்பலுக்கும் ஒரு பெயர் கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால் யுத்த கப்பல்கள் வர வர அதிகமாகி வருவதால் பெயரிடுவது அசௌகரியமா யிருப்பதைக் கருதி சப்மரின் கப்பலுக்கு ஒரு எழுத்தும் ஒரு நெம்பரும் கொடுக்கப்படுகின்றன. ஜெர்மனியில், டார்ப்பிடோக் கப்பல்களுக்கும் நெம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மகா யுத்தம் ஆரம்பித்தபோது, பிரிட்டிஷ் கடற்படையில், 76 சப்மரின் கப்பல்கள் இருந்தன. 1904-ம் வருஷத்திலிருந்துதான் அந்த கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன.







இந்த படத்தின் மேல் பாகமும் கீழ் பாகமும் வெவ்வேறு தோற்றங்களைக்காட்டு கின்றன. இந்த படம் புதிய சப்மரின் கப் பலில் ஏற்றப்பட்ட பீரங்கியைக் காட்டு கிறது. படத்தின் கீழ் பாகம், சப்மரின் கப்பலுக்குள்ளே யிருக்கிற பீரங்கி கப்ப லின் மேற்புறத்துக்கு எழும்பி யிருப்ப தைக் காட்டுகிறது. படத்தின் மேல்பாகம், அந்த பீரங்கி கப்பலுள்ளே இழுத்துக் கொள்ளப்பட்டிருப்பதைக் காண்பிக்கிறது.



சோதனை விளக்கு.



கடலின் கீழே வைக்கப்படுகிற வெடி மருந்துச் சுரங்கம். இது ஜெர் மானியரின் சுரங்கம்.



சப்மரின் கப்பலின் உட்புறம்.

கடல் மட்டத்தக்குக் கீழே அமுங்கியிருக்கிற சப்மரின் கப்பலின் உட்புறத்திலுள்ள விவரங்களை இந்தப் படம் காண்பிக்கிறது. மின்சார யந்திரம், ஆயில் எஞ்சின், காற்று அடைத்து வைக்கப்பட்ட குழாய்கள், டார்ப்பிடோ, வெடிகள், டார்ப்பிடோக் குழாய்கள், முதலிய வைகளைக் காணலாம். டார்ப்பிடோக் குழாய்கள் கப்பலின் வலதுபக்கத்து முனையில் நீளவாட்டில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயில் எஞ்ஜின் வேலை செய்யும்போது, மின்சார அறைகளில் மின்சாரம் சேகரித்து வைக்கப்படுகிறது: அந்த மின்சாரத்தைக்கொண்டு, மின்சார யந்திரம் வேலை செய்கிறது. கப்பலின அடிப்பாகத்தில் நீர் அறைகளும் நீர்த்தொட்டியு மிருக்கின்றன. அவைகளில் சமுத்திர ஜலத்தைத்தேவையான அளவு நிரப்பி, கப்பலை அமுங்கச் செய்கிறார்கள். ஜலத்தை வடி பதற்கு, ஓர் அறையில் பம்பு அமைக்கப்பட்டிருக்கிறது. கப்பலின் இடது பக்கத்து முனையில், திருப்பும் விசிறி அமைக்கப்பட்டிருக்கிறது. அது கப்பலை இரண்டு பக்கங்களில் திருப்புவதற்காக இருக்கிறது. மற்றொரு விசிறி, கப்பலை ஓடச்செய்கிறது. இந்த ஓட்டுப் விசிறி, விரைவாய்ச் சுற்றுவதால் கப்பலை முன்னுல் செலுத்துகிறது.

19-வது அத்தியாயம்.

சோதனை விளக்கு.

(SEARCH LIGHT.)

சத்துருக்கள் சிறிய கப்பலில் ஏறிக்கொண்டு இரவில் இரகஸ்யமாய் நெருங்கிவந்து வெடிமருந்தை ஏறியத் தொடங்கியபோது ஒவ்வொரு யுத்த கப்பலும் இரவில் விளக்கை வைத்துக்கொண்டு கடலின்மேல் சோதனை செய்யவேண்டியது அவசியமெனப் புலப்பட்டது. 1862-ம் வருஷத்தில் அமெரிக்காவில் நடந்த யுத்தத்தில் ஒரு சிறு கப்பலில் ஒருவன் ஏறிச்சென்று ஒரு நீண்ட கொம்பின் முனையில் வெடி மருந்தைக் கட்டிச் சத்துருவின் சண்டைக்கப்பலின்மேல் ஏறியவே, அந்த சண்டைக் கப்பல் உடைந்துபோயிற்று. அதுதான் டார்ப்பிடோவெடி ஆரம்பமானதற்குக் காரணமென்று சொல்லியிருக்கிறோம். அந்த காலத்திலேயே கடல்களில் சத்துருக்கள் இரகஸ்யமாய் வருகிறார்களா வென்பதை அறியும்பொருட்டு இரவெல்லாம் கடல்களில் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்று விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்போது சாதாரண மின்சார விளக்கு உபயோகிக்கப்பட்டது. ஆனால் 1871-ம் வருஷத்தில் ஓயிட்ஹெட் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட டார்ப்பிடோவெடி சுற்றுத் தூரத்திலிருந்து பிரயோகிக்கப்படலா மாதலால், அதிக தூரத்தில் வெளிச்சத்தை அனுப்பக்கூடிய விளக்கு தேவையாயிருந்தது.

சாதாரண மின்சாரவிளக்கில், அதன் வெளிச்சம் விளக்குக்கு அருகில் அதிகமாயும், தூரத்தில் செல்லச்செல்ல குறைவுபட்டுமிருக்கிறது. சாதாரண எண்ணெய்விளக்குகளின் குணமும் அவ்விதந்தான். மேலும், அந்த வெளிச்சம் விளக்கைச்சுற்றி காலாபக்கங்களிலும் வீசுகிறது. எவ்வளவு பிரகாசங்கொண்ட விளக்காயிருந்தாலும், அதிக தூரத்தில் அதன் ஒளி மங்கிவிடுகிறது. அவ்வாறு அந்த வெளிச்சம் எல்லாத் திசைகளிலும் பரவி விணாவதைவிட, தேவையாயுள்ள ஒரு குறிப்பான திசையில் அந்த வெளிச்சமெல்லாம் ஒன்று

கூடி வீசினால் அதிகப் பிரகாசம் உண்டாகும். அவ்வாறு செய்வ தற்காக அநேக உபாயங்களைக் கண்டுபிடித்துப் பரீக்ஷை செய்து கடைசியில் நிலக்கண்ணாடியை விளக்குக்குப் பின்னால் உபயோகிப் பது உசிதமென்று தெரியவந்தது. அந்தக் கண்ணாடியை, சிறுகுன் றின் வடிவத்தைப்போல் மேல்மூன்று கூர்மையாகவும் அடிப்பாகம் வட்டமாகவும் செய்து உபயோகித்தால் விளக்கின் வெளிச்ச மெல்லாம் ஒரே திசையில் சென்று பிரகாசிக்குமென்று கண்டு கொள்ளப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் அவ்விதம் உருவங் கொண்ட கண்ணாடியை ஒரே கனமுள்ளதாய் வார்க்கமுடியாம லிருந்தது. ஆகையால் கண்ணாடிக்குப் பதிலாக, ஒர்வித பிரகாச முள்ள உலோகம் உபயோகிக்கப்பட்டது. அந்த உலோகத்தைப் பளபளப்பாகச்செய்து தேவையான உருவத்தில் அமைத்து விளக் கில் உபயோகிக்கப்பட்டது. 1886-ம் வருஷத்தில் நல்ல உயர்ந்த கினுசுக்கண்ணாடிகள் செய்யப்பட்டு வந்ததால், அதுமுதல்சோதனை விளக்குகளில், உலோகத்துக்குப் பதிலாகக் கண்ணாடியே உப யோகிக்கப் படுகிறது. கண்ணாடியின் உருவம் சிறு குன்றைப்போல முன்பாகம் கூர்மையாயும் அடிப்பாகம் வட்டமாயும் இருக்குமென்று சொன்னோம். அந்த உருவத்தில் வேறு சில மாறுதல்கள் செய்யப் பட்டு அதனால் இன்னும் விசேஷமான பிரகாசம் உண்டாகிறதென்று தெரிய வந்தது. அந்தக் கண்ணாடியின் ஒரு புறத்தில் வெள்ளி முலாம் அல்லது கில்ட் பூசப்பட் டிருக்கும். சாதாரண நிலக்கண் ணாடி அல்லது முகக்கண்ணாடிக்கு அதன் பின் புறத்தில் பாதரசத் தினால் முலாம் பூசப்பட் டிருக்கிறது. சாதாரணமாய் வீடுகளில் உபயோகிக்கப்படுகிற சில விளக்குகளில், விளக்குக்குப் பக்கத் தில் பின் புறத்தில் பளபளப்பான தகடு ஒன்றிருப்பதை அநேகர் கவனித்திருக்கலாம். விளக்கின் முன் புறத்தில் அதிக பிரகாசத் தைக் கொடுப்பதற்கு அந்தத்தகடு பின்புறத்தில் வைக்கப்பட் டிருக் கிறது. பின் புறத்தில் செல்கிற வெளிச்சத்தை அந்தப் பளப்பளப் பான தகடு முன் புறத்தில் திரும்பிச் செல்லும்படி செய்கிறது. சாதாரண முகக்கண்ணாடிக்கு அதன் பின் புறத்தில் பாதரசத்தால் முலாம் பூசப்பட் டிருக்கிறதென்று சொன்னோம். ஆனால் அதிக பிரகாசத்தைக் கொடுக்கும்பொருட்டு, வெள்ளி முலாம் பூசப்படுகிற தண்டு, சோதனை விளக்கில் உபயோகிக்கப்படுகிற "கண்ணாடிக்கு

வெள்ளி மூலாம் பூசப்பட்டு வந்தது. ஆனால் நாள் பட்டால் வெள்ளி மூலாம் முக்கியமாய் உஷ்ண பிரதேசங்களில் பிரகாசத்தை யிழந்து முற்றிலும் மறைந்து போகிறது. ஆகையால் சமீபத்தில் தங்க மூலாம் பூசப்பட்ட கண்ணாடிகள் உபயோகிக்கப்பட்டுவருகின்றன. தங்க மூலாம் சீக்கிரத்தில் கெட்டுப்போகாதேதாம் அதிக பிரகாசத்தை உண்டு பண்ணுவதால், சமுத்திரத்தில் பனி அடர்த்தியாய் மூடிக்கொண் டிருக்கிற காலங்களிலும் சோதனை விளக்கை உபயோகப்படுத்தச் சாத்தியமாகிறது. மின்சாரத்தால் அந்த மூலாம் கண்ணாடியின்மேல் பூசப்படுகிறது *


ஆகையால், சோதனை விளக்கில் மின்சார சக்தியால் விளக்கு எரிக்கப்பட்டு அதன் பின்புறத்தில் 17 அங்குல தூரத்தில் மூலாம் பூசப்பட்ட பளபளப்பான கனமுள்ளகண்ணாடி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்ணாடி ஓர்விதஉருவங்கொண்டதென்றும் சொல்லியிருக்கிறோம். சோதனை விளக்கு அவ்வாறு எரிக்கப்படுகிறது. அந்த விளக்கின் மேலுருவத்தைப் பற்றியும், அதிலுள்ள முக்கியமான பாகங்களைப்பற்றியும் இனிச் சொல்லப்படும்.

விளக்கைப்பற்றிய விவரங்கள்.


அந்த விளக்கின் தோற்றத்தை நமது சித்திரப்படத்தில் பார்த்துக்கொள்ளலாம். அதை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம் (1) சோதனை விளக்கின் மேல் பாகம் உருண்டையான குழாயைப் போன்றிருக்கிறது. (2) அதற்கும் கீழே சற்று நீளமான பெட்டியொன்றிருக்கிறது. (3) அவ்விரண்டையும் தூக்கிக்கொண் டிருப்பதற்காக இரண்டு இரும்புக் கால்கள் இருக்கின்றன. (4) அவைகளுக் கடியில் அகண்ட பாதமிருக்கிறது. இவைகளைப்பற்றி ஒவ்வொன்றுச் சொல்லி வருவோம்.

நமது சித்திரப்படத்திலுள்ள சோதனை விளக்கைத் தனித்தனியாகப் பிரித்து அதனுடைய நான்கு பாகங்களும் தனித்தனி படங்களில் அடுத்த பக்கத்தில் காட்டப்பட் டிருக்கின்றன. அந்த நான்கு பாகங்களும் எவ்வாறு சேர்க்கப்பட் டிருக்கின்றனவென்றும், அவைகள் எவ்விதமாய் உபயோகப்படுகின்றன வென்றும் பின்னால் சொல்லப்பட் டிருக்கின்றன.


* இப்போது உபயோகிக்கப்படுகிற தங்க கில்ட் ரகைகள் அதிகமாய் மின்சாரத்தால் மூலாம் பூசப்படுகின்றன.



சோதனை விளக்கின் மேலுள்ள கூண்டு.



மேலேயுள்ள கூண்டின் அடிப்பாகத்தில் அமைக்கப்படும் பெட்டி.



சோதனை விளக்கைத் தூக்கி நிறுத்துகிற இரும்புக் கால்கள்.



மேலே சொல்லப்பட்ட மூன்று பாகங்களும் இந்த பாகத்தில் தாங்கப்படுகின்றன.

விளக்கின் மேல் பாகமாகிய கூண்டு, மெல்லிய இரும்புத் தக டால் செய்யப்பட் டிருக்கிறது. நமது சித்திரப்படத்தில் விளக்கின் முன்பாகமும் முன் பாகத்திலுள்ள மூடியும் அதாவது கதவும் காட் டப்பட் டிருக்கின்றன. அதன் பின்பாகத்தில் அம்மாதிரியாய் வட்ட மான கதவுமிருக்கிறது. அது இரும்புத் தகட்டால் செய்யப்பட்டிருக் கிறது. பின்புறத்துக் கதவுக்கு உள்புறத்தில் மேலே சொல்லப்பட்ட முலாம் பூசிய் கண்ணடி ஜாக்கிரதையாய் அமைக்கப்பட் டிருக் கிறது. முன் புறத்தில் (சித்திரப் படத்தில்) தெரிகிற வட்டமான கதவில் சாதாரண கண்ணடி போடப்பட் டிருக்கிறது. விளக் கின் வெளிச்சத்தை வெளியே விடுவதற்கு விளக்கினுள்ளே அழுக் குப் படியாம லிருப்பதற்கும் அந்தக் கண்ணடிக் கதவு போடப்பட் டிருக்கிறது. அது முலாம்பூசிய கண்ணடியல்ல. சாதாரணமாய் வீடுகளில் உபயோகிக்கப்படுகிற கண்ணடிக் கதவைப்போன்றது; வீடுகளில் கண்ணடிக் கதவு உபயோகிப்பதில் விசேஷ மென்ன வென்றால், அந்தக் கதவு வீட்டினுள்ளே புழுதியும் மழை ஜலமும் புகாம லிருக்கும்படி காப்பதோடு வெளிச்சத்தையும் தருகிறது. அதுபோல, அந்தச் சோதனை விளக்கின் முன்புறத்தில் சாதாரண கண்ணடிக் கதவு உபயோகிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் அந்தக் கதவின் கண்ணடி அடிக்கடி உடைந்துபோகாம லிருப்பதற்கு அத ற்கு முன்புறத்தில் இரும்புச் சட்டங்கள் போடப்பட் டிருக்கிறதை யும் சித்திரப்படத்தில் காணலாம். அந்தக் கண்ணடி கால் அங்குல கன மிருக்கும்.

அந்தக் கூண்டுக்கு அடியில் சற்று நீளவடிவமான பெட்டி அமைக்கப்பட் டிருக்கிறது. அந்தப் பெட்டியில்தான் மின்சார விள க்கு வைக்கப்பட் டிருக்கிறது. அந்தக் கூண்டுக்குக் கீழே துவாரஞ் செய்து அதற்குள் அந்தப்பெட்டி நுழைக்கப்பட்டிருக்கிறது. மரை யாணிகளாலும் வேறுவித பூட்டுகளாலும் உறுதியாய் அமைக்கப் பட் டிருக்கிறது.

அந்தக் கூண்டையும்பெட்டியையும் தாங்கி நிற்பதற்காக இரண் டாய்ப் பிரிந்த இரும்புக் கால்களிருக்கின்றன. அந்த கால்களின்மேல் அந்தக் கூண்டு அமைக்கப்பட் டிருக்கிறது. அந்தக் கூண்டு இரும்புக் கால்களின் மேல் ஆடும்படியாய் வைக்கப்பட் டிருக்கிறது. கட்டை வண்டியை அதன் இருசக்காங்களுக்கு மிடையில் தூக்கவும் இறக்க

வும் சாத்தியப்படுகிறதுபோல, அந்தக் கூண்டையும் சாய்க்கலாம். ஆனால் கட்டை வண்டியை நிற்கச் செய்தால், எதாவதொரு முனையில் பூமியின் மேல் முட்டிக்கொண்டு சாய்ந்து நிற்கும். கூண்டு அவ்வாறு நிற்பதில்லை. தூக்கிப்பிடித்த திராசுபோல் சமநிலைமையிலிருக்கும். அவ்வாறு சாய்ப்பதற்கு ஒரு கருவியில் அநேக அளவுகள் குறிக்கப்பட்டிருக்கிறது. தேவையான அளவுக்கு அந்தக் கூண்டை சாய்த்துக்கொள்ளலாம். சோதனை விளக்கில் அந்த விசேஷ அமைப்பை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சமுத்திரத்தில் விளக்கின் வெளிச்சத்தை நினைத்த இடத்தில் சாய்த்தும் தூக்கியும் காட்டவேண்டிவரும். விளக்கு வெளிச்சம் ஆகாயத்தில் பரவும்படி கூண்டைத் தூக்கலாம். கப்பலுக்கு நேராக வீசும்படிச் செய்யலாம்; கப்பலுக்குப் பக்கத்தில் ஜலத்தில் வெளிச்சம் தெரியும்படி விளக்கைச் சாய்க்கலாம். அவ்வாறு கணக்காய் அசைப்பதற்கு உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த இரண்டு கால்களும் அடிப்பாகத்தில் வந்து சேர்கின்றன. அவ்வாறு சேருகிற இடத்தில் ஒரு துவாரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத்துவாரம் பாதத்திலுள்ள முனையில் மாட்டப்பட்டிருக்கிறது. சாதாரணமாய் வீடுகளிலுள்ள அறைக்கும் கல் ஏந்திரத்தில் அடியேந்திரத்திலுள்ள முனையில் மேல் பாகத்தை அமைப்பதுபோல, இந்த விளக்கிலும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் சோதனை விளக்கிலுள்ள கூண்டு தன் கால்களுடன் நாலாப் பக்கங்களில் ஏந்திரத்தைப்போல, சுற்றக்கூடும். ஆகையால் சோதனை விளக்கை எந்தப் பக்கத்தில் வேண்டுமானலும் சுழற்றிக்கொள்ளலாம்.

ஆகையால் தேவையான திசையில் விளக்கின் வெளிச்சத்தையெல்லாம் ஒரு குறித்த இடத்தில் குவிந்துவிடும்படி அந்த சோதனை விளக்கில் உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. மூலாம் பூசிய கண்ணாடியின் விசேஷ மென்னவென்றால், அதிக பிரகாசந் தரக்கூடிய மின்சார விளக்கிலிருந்து வெளிப்படுகிற கிரணங்கள் நாலாப் பக்கங்களில் பரவி தூரத்தில் ஒளி மங்கி வீணாகாமல் ஒரே திசையில் குறித்த இடத்தில் வெளிச்சம் மூழுவதும் பாயும்படி அந்தக்கண்ணாடி செய்கிறது. சமுத்திரத்தில் வெகுதூரத்தில் மிதந்துகொண்டிருக்கிற சிறிய வஸ்துவை அறிந்துகொள்வது அவ்வாறே சாத்தியப்படும். சப்மரின் கப்பலின் உச்சியிலுள்ள சிறு கண்ணாடிக் குழாய் ஒன்றரை அடி உய

ரம். நீண்டிருப்பதைக் கண்டு கொள்ளவேண்டுமானால் அவ்வளவு வெளிச்சத்தையும் ஒரே இடத்தில் விழும்படி செய்யவேண்டியது அவசிய மென்பது விளங்கும் ஆனால் அநேக சமயங்களில் விஸ்தார மாய்ப் பரவிய வெளிச்சம் தேவையா யிருக்கும். குறிப்பான ஒரு சிறிய இடத்தில் வெளிச்சம் தெரிவதைவிட, விசாலமாய்விரிபோல் பரவிய வெளிச்சம் அவசியமா யிருக்கக்கூடிய சமயங்களு மிருக்கின்றன. விஸ்தாரமான கடலில் சத்துருவின் கப்பலிருக்கிறதா என்று சீக்கிரத்தில் தெரிந்து கொள்வதற்கு, விளக்கு வெளிச்சத்தை நாலாபக்கங்களிலும் விரிபோல வீசி சமுத்திரத்தில் சோதனை செய்யவேண்டும். ஒரு வஸ்து தென்பட்ட பிறகு, அந்த வஸ்துவின் மேல்வெளிச்சமெல்லாம் மிகவும் பிரகாசமாய்க் குவியச்செய்து அதன் நுட்பமான விவரங்களை அறிந்துகொள்ளலாம். விளக்கின் கிரணங்கள் விஸ்தாரமாய்ப் பரவிச்செல்வதற்காக ஒரு கதவில் ஓர் வகையான பூதக்கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேவையான போது அந்தக் கதவை விளக்கின் முன் புறத்தில் மாட்டிக்கொள்ளலாம்.

ஒவ்வொரு யுத்த கப்பலிலும் இரண்டு விளக்குகளுக்குக் குறையாமல் வைக்கப்பட்டிருக்கும். கப்பலில் உயரமாயிருக்கிற பாய்மரத்தின் நடுவில் அந்த விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும். வேறு தேவையான இடங்களுக்கும் அவைகளை மாற்றிக்கொள்ளலாம். இக்காலத்தில் ஆகாய விமானங்களால் ஆபத்து வினைகிறதாகையால், ஆகாயத்தில் சோதனை விளக்குகள் வீசுவது சகஜமாகி விட்டது. டார்ப்பிடோக் கப்பல்கள் உருவத்தில் சிறியவையாயிருந்து இராப்பொழுதில் இருண்ட கடலில் மறைந்து சத்துருவை நெருங்கி டார்ப்பிடோவை உபயோகிப்பதால் அவைகளைக் கண்டுகொள்வதற்காக ஆரம்பத்தில் சோதனை விளக்குகள் தேவையா யிருந்தனவென்று சொல்லியிருக்கிறோம். இப்போது டார்ப்பிடோ வெடிகள் மிகவும் பயங்கரமான சேதத்தை விளைக்கக்கூடியதாய்ப் பெரிதாக்கப்பட்டு அதிக விசை கொண்டதாகி விட்டபடியால் டார்ப்பிடோக்கப்பல்கள் அதிக தூரத்திலிருந்துகொண்டே டார்ப்பிடோவைச் சுடுகின்றன. ஆகையால் அதிக சக்திகொண்ட சோதனை விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன. மேலும் டார்ப்பிடோவைப் பிரயோகிப்பதற்குச் சிறிய டார்ப்பிடோக் கப்பல்களைத் தவிர அதனினும் சிறிய சப்மரின் கப்பல்கள் இப்போது சஞ்சரிக்கின்றன. டார்ப்பிடோக் கப்பல்கள் இர


வில் அபாயத்தை உண்டுபண்ணினால், சப்மரின்கப்பல்கள் இப்போது பகலேயும் இரவாகச்செய்து எக்காலத்திலும் ஆபத்தைஉண்டுபண்ணுகின்றன. இரவில் அந்த சப்மரின் கப்பல்களின் இருப்பிடத்தை அறியவேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது. ஆகையால் இக்காலத்தில் சோதனை விளக்கின் அவசியம் பல மடங்கு அதிகரித்துவிட்டது.

சோதனை விளக்கின் உபயோகங்கள்.

யுத்த கப்பல்களின் உபயோகத்துக்காக ஆரம்பத்தில் அந்த விளக்கு விருத்தி செய்யப்பட்டாலும், இப்போது சாதாரண வியாபாரக்கப்பல்களிலும் அது உபயோகிக்கப் படுகிறது. பிரயாணிகள் செல்லும் கப்பல்களில் அது அவசிய மிருக்கவேண்டுமென்று இப்போது அபிப்பிராயம் உண்டாயிருக்கிறது. முக்கியமாய், "டிடானிக்" என்ற பேருடைய மிகப்பெரிய கப்பல் 4000 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்தபோது இருட்டில் பனிப்பாறைகளில் மோதி ஏராளமான உயிர்ச்சேதத்தை உண்டு பண்ணிய பிறகு எல்லா கப்பல்களுக்கும் சோதனை விளக்கு இன்றியமையாததென்று விளங்கிற்று. ஆசியா ஐரோப்பா இவ்விரு கண்டங்களுக்கு மிடையே வழியிலுள்ள சூயஸ் வாய்க்கால் மிகவும் குறுகியதாகையால், அதன் வழியாய்ச் செல்கிற எல்லாக்கப்பல்களும் சோதனைவிளக்கை அங்கு உபயோகிக்கவேண்டும்; கப்பலில் அந்த விளக்கு இல்லாவிட்டால், அங்குள்ள அதிகாரிகளிடமிருந்து ஒரு விளக்கை வாடகைக்கு வாங்கி உபயோகிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்த மிருக்கிறது.

சோதனை விளக்கு கப்பற்சண்டைகளில் உபயோகப்படுவதோடு தரைச்சண்டைகளிலும் பயன்படுகிறது. ஒவ்வொரு கோட்டையிலும் அநேக சோதனை விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும். சத்துருக்கள் இரவில் கோட்டையின் அரண்களுக்கு அருகில் வர முயற்சிசெய்யும்போது, சோதனை விளக்கின் பிரகாசத்தால் அவர்களின் இருப்பிடம் தெளிவுபடுத்தி பீரங்கிகளால் நாசம் செய்யப்படுவார்கள். சாதாரண போர்க்களங்களிலும் அவ்வாறே அந்த விளக்குகள் உபயோகிக்கப்படுகின்றன. போர்க்களங்களில் கட்டப்படுகிற அரண்களுக்கு முன்னால் சத்துருக்கள் இரவில் இரகஸ்யமாய் நெருங்கிவிடாமலிருப்பதற்காக சோதனை விளக்கு உபயோகிக்கப் படுகிறது.

SHIYALI




மோட்டார் வண்டியிலுள்ள சோதனை விளக்கால் படைகளின் இருப்பிடம் தெரிந்துகொள்ளப்படுகிறது.




THE SPHERE.

லண்டன் மா நகரத்தில் இரவெல்லாம் சோதனை விளக்குகள் ஆகாயத்தில் வெளிச்சத்தை வீசியவண்ணமா யிருக்கின்றன.




கடலில் மிதந்துசெல்லும் பிரமாண்டமான கப்பல்துறையை இந்த அழகான சித்திரப்படம் காண்பிக்கிறது. அந்தத் துறையில் சமுத்திர ஜலம் நிரப்பப்பட்டிருக்கிறது. பழுது பார்க்கப்படவேண்டிய யுத்தகப்பல் துறைக்குள்ளே நுழைகிறது.



யுத்தகப்பல் கடற்சுரங்கத்தின் மேல் மோதி அழிந்துபோகிறது.

போர்க்களத்தில் மோட்டார் வண்டிகளில் சோதனை விளக்கை ஏற்றித் தேவையான இடங்களுக்கு விரைவாகக்கொண்டு போவார்கள். மோட்டார் வண்டியில் அந்த விளக்கு அமைக்கப்படுகிறது. இந்தக் காலத்து யுத்தம் மிகவும் விஸ்தாரமாய்ப்பரவி நடப்பதால், போக்கு வரத்துக்கு அவசியமான அநேக முக்கிய பாதைகளில் அந்த வண்டி காவல் செய்து தன் சோதனை விளக்கால் சுற்றுப்பக்கங்களில் சத்துரு விருக்கிறார்களா என்று சோதனை செய்யும். ஆகாயத்தில் அந்த விளக்கின் வெளிச்சத்தை வீசி ஆகாய விமானங்களின் போக்குவரத்தைக்கண்டுபிடிக்க முயற்சி செய்யப்படும். அவ்வாறு முக்கியமான பாதைகளில் 100 மைலுக்கு ஒரு மோட்டார் வண்டியும் சோதனை விளக்கு மிருந்தால் போதுமானது. அந்த சோதனைவிளக்குக்குத்தேவையாயுள்ளமின்சாரசக்தியைஅந்த மோட்டார் வண்டியிலுள்ள எஞ்ஜின் உற்பத்திசெய்கிறது. சோதனை விளக்குகள் மின்சாரத்தால் எரிக்கப்படுகிற தென்று முன்பு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மின்சார சக்தி மோட்டார் வண்டியிலேயே உற்பத்தியாகிற தென்பதை அறியவும். வண்டியில் உற்பத்தியாகிற மின்சாரம், ரீண்ட கம்பி மூலமாய் அந்த விளக்கினுள்ளே செலுத்தப்படுகிறது. ஆகையால், அந்த சோதனை விளக்கை வண்டியிலிருந்து யெடுத்து, அந்த மின்சாரக் கம்பி எவ்வளவு நீள மிருக்கிறதோ அவ்வளவுதூரம் எந்தத்திசையிலாவது விளக்கைக்கொண்டு போய் உபயோகிக்கலாம். "ஸெப்பலின்" என்ற ஜெர்மன் ஆகாய விமானத்திலும் சோதனை விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கின் வெளிச்சத்தால் இரவில் பூமியிலுள்ள கோட்டைகளின் இருப்பிடத்தையும் சத்துருக்களின் நடமாட்டத்தையும் அந்த ஆகாய விமானம் அறிந்து வெடி குண்டுகளை ஆகாயத்திலிருந்து எறியும். லண்டன், பாரிஸ் முதலிய பெரிய நகரங்களில் இப்போது சோதனை விளக்குகள் அமைக்கப்பட்டு இரவெல்லாம் ஆகாயத்தில் வெளிச்சத்தை வீசுகின்றன. சத்துருக்களின் ஆகாய விமானங்களால், அந் நகரங்கள் சேதமாகாம லிருக்கவேண்டும். ஆனல் சோதனை விளக்கு, பனி மிகுதியாய் மூடிக்கொண்டால் வெளிச்சங்காட்டாது, சோதனை விளக்கின் கிரணங்கள் மூடு பனிக்குள் பாய முடியா. மூடு பனியால் சூழப்பட்ட எந்த வஸ்துவையும் அந்த விளக்கால் தெரிந்து கொள்வது சாத்தியமாயில்லை. மற்

ஒரு குறை என்ன வென்றால், கடலில் நல்ல இருட்டில், திடீ ரென்று சோதனை விளக்கைக் காட்டிச் சிறிது நேரத்துக்குப் பிறகு அணைத்து விட்டால், வெளிச்சத்தைப் பார்த்த கண்கள் திடீ ரென்று இருட்டினவுடன் பார்வையை யிழந்துவிடுகின்றன. சோதனை விளக்கைக் காட்டுவதற்கு முன்னால், நல்ல இருட்டில் கண்கள் கூர் மையாய்ப் பார்க்கும் சக்தியைப்பெற்றிருக்கும். அவ்வாறு இருட்டில் பார்த்துவழக்கப்பட்ட மாலுமிகளுக்குக் கண்கள் மிகுந்த வன்மை கொண்டிருக்கின்றன. சோதனை விளக்கின் வெளிச்சத்தைப் பார்த்த பிறகு கண்களின் பார்வை சிறிது நேரத்துக்கு குறைந்துவிடுகிறது. சிறிது நேரத்துக்குப் பிறகு கண்கள் மறுபடி பழைய பார்வையைப் பெற்றுவிடுகிறதென்றாலும், யுத்த காலத்தில் கடற்சண்டையில் ஒரு க்ஷணப்போதும் வன்மை குறைவுபடக்கூடாதென்பது நன்கு விளங்கும்.



20-வது அத்தியாயம்.

கடலில் மிதக்கக்கூடிய கப்பல்துறைகள்.

கப்பல்கள் எவ்வளவு ஒழுங்காயும் ஜாக்கிரதையாயும் நேர்த்தியாயும் கட்டப்பட்டபோதிலும், காலக்கிரமத்தில் பழுது பார்க்கப்படும்படி நேரிடும். கப்பலின் கீழ்ப்பாகத்தி லிருந்து முழுமையும் வர்ணம் கொடுக்கும்படி நேரிடலாம்; கடலி லுள்ள பலவித அழுக்குகள் கட்டியாய்ப் படிந்துவிடுவதைச் சுரண்டியெடுக்கவேண்டும், அல்லாவிடில் அதன் ஓட்டம் குறைந்துபோகும். புசலில் அகப்பட்டுக் கொண்டு கடலில் மறைந்திருக்கிற பாறைகளில் மோதி பலவிதமாய் ஆபத்துக் குள்ளாகி கப்பலின் இரும்புச்சுவர் சேதமடைந்திருக்கலாம். கடைசியாக, யுத்த கப்பல் சண்டை செய்து சத்துருவின் நெருப்பாயுதங்களால் சேதப்பட் டிருக்கலாம். ஆகையால் கப்பல்களுக்கு நேரக்கூடிய சேதம் சொற்பமானலும் பெரிதானலும் அவைகளைச் சீர்ப்படுத்தும்படி நேரிடும். கப்பலைத் துறைகளுக்குக் கொண்டுபோய் அங்கு பழுது பார்க்கவேண்டும். ஆனல் இந்த காலத்தில் கட்டப்படும் யுத்த கப்பல்கள் சாமான்ய பளுவும் அளவுகொண்டவைகளல்ல. அதற்காக உள்ள கப்பற்துறைகள் இரண்டு வகைப்படும். ஒன்று கடற்கரையில் கல் கட்டடத்தால் ஆக்கப்பட்ட துறைகள்; மற்றொன்று, இரும்பினல் செய்யப்பட்டுக் கடலில் மிதந்து செல்லக்கூடிய துறைகள். கடலில் மிதக்கக்கூடிய துறைகள்தான் மிகவும் ஆச்சரியமானவை. அவைகள் மிகப் பெரிய இரும்புத் தொட்டிகள்போலக் கட்டப்பட்டு, அநேக துட்பமான யந்திரங்களை அமைக்கப் பெற்று, எவ்வளவு பெரிய யுத்த கப்பலையும் கொஞ்ச நேரத்தில் கடலிலிருந்து தூக்கிவிடக்கூடியவை. அவைகளைப்பற்றி சில விவரங்கள் சொல்வோம்.

யுத்த கப்பல் எவ்வாறு உயரத்தூக்கப்படுகிறது.

மிதக்கும் கப்பல்துறை ஒரு பெரிய பெட்டியைப் போலிருக்கிறது. பெட்டிக்கு ஆறு பக்கங்களிருக்கின்றன. கப்பல் துறைக்கு மூன்று பக்கங்கள்தானிருக்கின்றன. மேல் பாகமும் இரண்டு பக்கங்

களும் மூடப்படாமல் காலியாய் விடப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய பாலம்போல இரண்டு பக்கங்களில் சுவர் கட்டி, மேலே தளம் போடப்பட்டிருக்கிறது. இந்தத் தூறைகள் கடலின் மேல் மிதந்து கொண்டிருக்கும்; ஆனல் கப்பல்களைப்போல தானுக ஓடக்கூடியவை யல்ல; அவைகளைத் தேவையான இடங்களுக்கு கப்பல்கள் இழுத் துச் செல்லவேண்டும். அந்த அடிப்பாகம் அநேக படகுகளை வரிசையாய்ச் சேர்த்து வைத்து செய்யப்பட்டிருக்கிறது. அந்த படகுகளுக்குள் சமுத்திர ஜலத்தை நிரப்பி, அந்த ஜலத்தின் பளு வால் அடிப்பாகத்தை சமுத்திரத்தில் அமுங்கும்படிச்செய்கிறார்கள். பழுது பார்க்கவேண்டிய யுத்த கப்பலின் சுற்றளவுக்குத் தகுந்தபடி அந்தத் தூறையை ஜலத்தில் அமுங்கச் செய்கிறார்கள். அதனல் அந் தத் தூறையின் அடிப்பாகம் கடலில் தேவையான ஆழத்துக்கு அமுங்கிவிடுகிறது. அதன் பிறகு பழுது பார்க்க வேண்டிய கப்பல் அந்தத் தூறைக்குள் தாராளமாய் நுழைந்து அதன் தளத்தின் மேலுள்ள ஜலத்தில் மிதக்குகிறது. அப்போது அந்தத் தூறையின் மத்தியில் யுத்தகப்பல் நின்றுகொண்டிருக்கும். தூறையின் இருபுறங்களிலுள்ள பெரிய இரும்புச் சுவர்களின்மேல் வலுவான யந்திரங்களை வைத்து அவைகளைக்கொண்டு அந்த யுத்த கப்பல் தூக்கிப் பிடிக்கப்படுகிறது. பிறகு கீழ் தளமாயிருக்கிற பட குகளிலிருந்து சமுத்திர ஜலத்தை வடிக்கிறார்கள். அவ்வாறு ஜலத் தை வடிக்கும்போது ஜலத்தின் பளுவு நீங்குவதால், அந்த தூறை முழுவதும் மெதுவாய் மேலே கிளம்புகிறது. சமுத்திரத்தில் நன் ருப் அமுங்கியிருந்த தூறை, ஜலத்திலிருந்து மேலே மெதுவாய்க் கிளம்பிவருகிறது. தூறையின் மத்தியிலுள்ள யுத்தகப்பல் இரண்டு சுவர்களின் மேலுள்ள யந்திரங்களால் இறுகப்பிடிக்கப்பட் டிருக் கிறதென்று சொன்னேனும். அந்த தூறை ஜலத்துக்கு மேலே மெல்லக் கிளம்பும்போது, யுத்த கப்பலும் அந்தத் தூறை யோடுகூட மெல்லக் கிளம்புகிறது. அவ்வாறு யுத்த கப்பல் கடல் மட்டத்துக்கு மேலே வருகிற வரையில், அந்தத் தூறையை மேலே எழும்பும்படிச் செய்கிறார்கள். கீழ்தளமாயிருக்கிற படகுகளுக் குள்ளே யுள்ள ஜலத்தை வடிப்பதால் தேவையான உயரத்தில் யுத்த கப்பலை எழும்பச்செய்யலாம். யுத்த கப்பலின் பக்கவாட்டில் மூட்டுகள் கொடுத்து அதை வலுவாய் நிறுத்திவைக்கிறார்கள்.

மிதக்குந் துறையைப்பற்றிய விவரங்கள்.

பிரிட்டிஷ் கடற்படைக்குச் சொந்தமான பெரிய தொரு மிதக்குந் துறையின் சித்திரப்படம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். அதன் நீளம் 689 அடி ; அதன் வாசற்படியின் அகலம் 113 அடி; இருபுறங்களிலுள்ள சுவரின் கனம், அடிப்பாகத்தில் 18 அடியும் மேல் பாகத்தில் 13 அடியுமிருக்கின்றது. அந்தச் சுவர்களின் உயரம் 60 அடி. அந்தச்சுவர்களின் அளவை முக்கியமாய்க்கவனிக்கவேண்டும். ஏனெனில், அந்த சுவர்களில் தான், எல்லாவிதமான ஆயுதங்களும் யந்திரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் துறையில் வேலை செய்பவர்கள், சுவர்களினுள்ளே அமைக்கப்பட்டிருக்கிற அறைகளில் வசிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் அந்த அறைகளில் உறங்கவும் உண்ணவும் வேண்டிய வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சுவரின்மேல் சிறிய தண்டவாளம் போடப்பட்டு அதன் வழியாய் பெரிய யந்திரங்கள் தேவையான பாகங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. அந்தச் சுவர்களினுள்ளே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் பெரிய யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இரவில் வேலை செய்வதற்கு அந்தத் துறைமுழுவதும் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கப்பலினுள்ளே சென்று பழுதுபார்ப்பதற்குச் சிறு கைவிளக்குகள் மின்சாரத்தால் எரிக்கப்படுகின்றன. அந்தத் துறையைக் கட்டுவதற்கு 12,000 டன் நிறையுள்ள இரும்பு செலவாகியிருக்கிறது. பெரிய சண்டைக் கப்பல்களை அந்தத் துறை இரண்டரை மணி நேரத்தில் தூக்கியிருக்கிறது. அந்தக் கால தாமதங்கூட ஆவதற்குக் காரணம், கீழ் தளமாயுள்ளபடகுகளில் ஜலத்தைநிரப்பவும் வடிக்கவும்வேண்டியிருப்பதாகும். ஜலத்தை வடிப்பதற்கு அநேக வலுவான பம்ப் யந்திரங்களிருக்கின்றன. அடிதளமாயுள்ள படகுகள் ஒவ்வொன்றிலும் இவ்வளவு ஜலமிருக்கிற தென்பதை அறிவதற்கு அநேக நுட்பமான கருவிகளிருக்கின்றன. அந்தக் கருவிகள் இரும்புச் சுவரிலுள்ள ஓர் பெரியஅறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தஅறையிலிருந்து கொண்டு ஓர் உத்தியோகஸ்தர் அந்த மிதக்குந் துறை கடலில் எவ்வளவு அமிழ்ந்திருக்கிறதென்று அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு படகிலும் எவ்வளவு ஜலமிருக்கிறதென்றும் அறிந்து கொள்ளலாம். யுத்தகப்பலின் எந்தபாகத்தை அதிகமாய்த்தூக்கவேண்டுமோ அந்த

பாகத்துக்குக் கீழுள்ள படகி லிருந்த ஜலத்தை அதிகமாய் வடித்து விடலாம். இந்த மிதக்குந்துறை மொத்தம் 33,000 டன் நிறை கொண்டுள்ளது.

கப்பல்களுக்குச் சிகிச்சை செய்யும் ஆஸ்பத்திரி.

இந்தத் துறைகள் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்காக யிருந்தாலும், அத்துறைகளின் அடிப் பாகத்தை பழுது பார்ப்பதற்கு என்ன செய்வது? துறைகளின் அடி பாகத்தை அந்தத் துறையி லுள்ள யந்திரங்களாலேயே தூக்கி விடலாம். இப்படிப்பட்ட ஆச்சரியமான மிதக்குந் துறைகள் ஒவ்வொரு கடற்படையிலும் இருக்கவேண்டியது அவசியமென்று சொல்லவேண்டிய தில்லை. முக்கியமாய் யுத்த காலங்களில் அந்தத் துறைகள் மிகவும் உபயோக முள்ளவை. கப்பற்படை தங்கியிருக்கிற இடத்துக்கு அந்தத் துறையைக்கொண்டு போய் யுத்த கப்பலுக்கு வேறிடுகிற சேதத் தைப் பழுது பார்க்கலாம். நமக்கு இஷ்டமான கடற்கரைப் பட்ட ணத்துக்கு அந்தத் துறையைக்கொண்டு போவது சாத்தியமாயிருப் பதால் அதனுலுண்டாகும் சௌகரியங்கள் எவ்வளவோ யிருக்கின் றன. இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் ஒரு யுத்த கப் பலைத்தூக்கிவிடலாகையால், அதிசீக்கிரத்தில்அநேக கப்பல்களைப் பழுது பார்ப்பது சாத்தியமாகும். எவ்வளவு பெரிய யுத்த கப்பலை யும் அந்தத் துறையில் செலுத்திப் பழுதுபார்க்கலாம், எவ்விதமான சேதமுண்டாயிருந்தாலும், அது சீர்படுத்தக்கூடியதாயிருந்தால், அந்த மிதக்குந்துறையில் தாமஸமின்றிப்பழுது பார்க்கலாம். அந்தத் துறையை, யுத்த கப்பல்களுக்குச் சிகிச்சை செய்கிற பெரிய ஆஸ்பத் திரிக் கப்பல் என்றே சொல்லவேண்டும். ஆகையால், யுத்த கப்பல் களைப் பழுதுபார்ப்பதற்காக, யுத்த களத்திலிருந்து வெகு தூரத்தில் கட்டப்பட்டுள்ளதோர் துறைமுகப் பட்டணத்துக்குச் செல்லவேண் டிய நிர்ப்பந்தமில்லாதது பெரியவிசேஷ மல்லவா? யுத்தகளத்துக்கு அருகே பக்தோபஸ்தான இடத்திலாவது மிகவும் அருகிலுள்ள எந்த துறைமுகப்பட்டணத்திலாவது, அந்த மிதக்குந் துறையைத் தயாராய் வைத்திருக்கலாம்.

துறைகளை இழுத்துச் செல்வது ஆபத்தான வேலை.

கப்பல் கட்டும் ஸ்தலங்களில், அந்த மிதக்குந் துறைகள் கட்டப்படுகின்றன. கப்பல் கட்டும் ஸ்தலங்கள் எல்லாத் தேசங்களிலு மிருக்கின்றன வென்று நினைக்கக்கூடாது. யுத்த கப்பல்களைக் கட்டு


வதற்கு வெகு நுட்பமான ஆயுதங்களும் பிரமாண்டமான யந்திரங்களும் அளவிறந்த சாமர்த்தியமும் தேவையான படியால், எல்லாத் தேசங்களிலும் யுத்த கப்பல்கள் கட்டப்படுவதில்லை. எல்லா வல்லரசுகளும் யுத்த கப்பல்கட்டுவதற்குப் பெரிய யந்திரசாலைகளை அமைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு யுத்த கப்பல் கட்டி முடிவதற்கு ஒரு வருஷகாலமாகு மாதலால், அநேக யந்திரசாலைகளை அமைக்கவேண்டும். ஆஸ்டிரியாவிலும், ருஷியாவிலும், இரண்டொரு சாலைகளே யிருக்கின்றன. அந்த வல்லரசுகளுக்கு அதிக யுத்த கப்பல்கள் தேவையாயிருந்தால், அந்திய தேசங்களில் அவைகளைக்கட்ட வேண்டும். ஆகையால் மிதக்கும் துறைகளை எல்லாத் தேசங்களிலும் கட்டுகிறார்களென்று நினைக்கக்கூடாது. அந்த மிதக்கும் துறைகளைக் கட்டி அது சேர்க்கப்படவேண்டிய தேசத்துக்குக் கொண்டு போகவேண்டும். கப்பல்களைப்போல, அத்தத் துறைகள் தாமாகவே செல்லா வாகையால் அவைகளைக் சாதாரண கப்பல் இழுத்துக் கொண்டு செல்லவேண்டும். அந்த பிரமாண்டமான இரும்புத் துறைகளை சமுத்திரத்தைக் கடந்து அநேக மைல்கள் இழுத்துச் செல்லும்போது, பலவித ஆபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன. இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு மிதக்கும் துறையைவழக்கம்போலச் சாதாரண கப்பல்கள் கயிற்றால் கட்டி இழுத்து தென்னப்பிரிக்காவுக்கு அருகில் சென்றுகொண்டிருந்தபோது, பெரும் புயலடிக்கவே அந்தத் துறை அறுத்துக்கொண்டு கடற்கரையில் மோதி நாசமாகி விட்டது. அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசத்தில் கட்டப்பட்ட மிதக்கும் துறை யொன்று பிலிப்பைன் தீவுக்குக் கொண்டு போகப்பட்டது. அது ஜோப்பா, ஆசியா இவ்விரு கண்டங்களையும் சுற்றிக்கொண்டு சென்றது. அப்போது மத்திய தரைக்கடலில் புயல் வீசிய சமயத்தில், அந்தத் துறை எங்கேயோ அடித்துக் கொண்டு போகப்பட்டது; அதை யிழுத்துச் சென்ற கப்பல்கள் மூன்று தினங்களாய் அதைக் காண முடியாமல் தேடித்திரிந்து கடைசியில் புயல் நின்றவுடன் அதைப் பிடித்துக்கொண்டு போயின. அந்தத் துறையை மொத்தம் 14,000 மைல் தூரம். இழுத்துச் சென்றிருக்கிறார்கள். அம்மாதிரியாக, மிதக்கும் துறைகளை அநேக மைல் தூரம் சமுத்திரத்தில் இழுத்துக்கொண்டு செல்லும் படி கேரிடுகிறது.

மிதக்குந் துறையால் உண்டாகிற சாதகங்கள்.


கடற்கரையில் மிகவும் சௌகரியமான ஸ்தலத்தில் கப்பற் றுறைகள் கல் கட்டடத்தால் அமைக்கப்படுகின்றனவென்று சொல்லியிருக்கிறோம். ஆனால் கப்பற்றுறைகளைக் கற்களால்கட்டும் வழக்கம் வரவர குறைந்து வருகிறது. கடலில் மிதக்கக்கூடிய இரும்புத் துறைகள் அதிகமாய்க் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. முதலாவது காரணம், கடற்கரையிலுள்ள எல்லா பட்டணங்களிலும் துறைகளைக் கட்டமுடியாது. துறைகளைக் கட்டுவதற்கு சௌகரியமான ஸ்தலங்கள் கிடைப்பது அரிது. அவ்வாறு சௌகரியம் பெற்ற ஸ்தலங்களில் தான், துறைகளைக் கற்களால் கட்டலாம். அவ்வாறு சில பட்டணங்களே கடற்கரையில் சௌகரியமாய் அமைந்திருக்கு மாகையால், தேவையாயுள்ள துறைகளைக் கட்டுவதற்கு ஸ்தலங்கள் கிடைக்காம லிருக்கக்கூடும். அவ்வாறு அநேக தேசங்களிலுள்ள கடற்கரையோரம் துறைகளைக் கட்டுவதற்குச் சிறிதும் பயன்படாததா யிருக்கிறது. அப்படிப்பட்ட தேசங்களுக்கு மிதக்குந் துறைகள் எவ்வளவு உபயோகமா யிருக்கும்? இரண்டாவது காரணம், மிதக்குந் துறைகளைச் சீக்கிரத்தில் கட்டிவிடலாம். இப்போதுள்ள மிகப் பெரிய சண்டைக் கப்பலைத் தூக்கிவிடக்கூடிய மிதக்குந் துறை ஒன்றைக் கட்டுவதற்கு எட்டுமாதங்கள் அல்லது ஒரு வருஷத்துக்குமேலாகாது. ஆனால் கற்களால் கப்பற்றுறை கட்டுவதற்கு மூன்று அல்லது நான்கு வருஷங்களாகும். மூன்றாவது காரணம், மிதக்குந் துறைகளைக் கட்டுவதற்குச் செலவு குறைவு படுகிறது. பெரிய யுத்த கப்பலைக் கடலிலிருந்து மேலே தூக்கிப் பழுது பார்க்கக்கூடிய ஒரு மிதக்குந்துறையைக் கட்டுவதற்கு சுமார் 37½ லக்ஷம் ரூபாய் செலவாகும். கல், சுண்ணாம்பு, சிமண்ட் இவைகளால் கப்பற் றுறை கட்டுவதற்கு மேற் சொல்லியதைவிட இரண்டிபங்கு செலவாகும். நான்காவது காரணம் கடலில்மிதக்கக்கூடிய கப்பற்றுறையை எந்த யிடத்துக்கும்கொண்டு போகலாம். ஆனால்கற்களால் ஆக்கப்பட்ட கப்பற்றுறையை அது கட்டப்பட்டிருக்கிற இடத்தை விட்டுப்பெயர்க்க முடியாது. யுத்த காலத்தில் மிதக்குந்துறைகள் மிகவும் பயனுள்ளவை யென்று சொல்லத் தேவையில்லை. யுத்தத்தில் கப்பல்களுக்கு நேரிடக்கூடிய சொற்பச் சேதங்களைப் பழுது பார்ப்பதற்காக,வெகுதூரத்தி




யுத்த கப்பல் கட்டப்பட்டவுடன் இப்படத்திலுள்ளபடி மிதக்கவிடப்படும். பிறகு அதில் பீரங்கிகளும் மற்ற கட்டடக்களும் அமைக்கப்படுகின்றன. யுத்தகப்பல் தொழிற்சாலையில் கட்டப்படுவதை 2-ம் பாகத்தில் 143 பக்கத்திலுள்ள படத்தில் காணலாம்.




ஜலத்தில் மிதக்கும் கப்பல் துறையில் யுத்தகப்பல் தூக்கப்பட்டிருக்கிறது.




கடற் சுரக்கம் நீப்பற்றி வெடிக்கிறது.




கடலில் மிதக்கும் கப்பல் துறை.



இந்த படத்தில் மூன்று பாகங்களிருக்கின்றன. கப்பலிலுள்ள சுரங்கம் கடலில் போடப்படுகிறது. 2-வது, அந்த சுரங்கத்திலுள்ள கருவிகள் பிரிந்து கொள்கின்றன. 3-வது, சுரங்கம் சரியான நிலைமையில் மிதக்கிறது அதன்மேல் ஒரு கப்பல் தாக்குகிறது. 261-ம் பக்கம் பார்க்க



இரண்டு சுரங்கங்கள் கம்பியால் கட்டப்பட்டு மிதக்கின்றன. ஒரு கப்பல் அவ்வழியே வருகின்றது.




அந்த கப்பல் கம்பியை இழுத்துச் சென்று சுரங்கத்தின் மேல் மோதுகிறது. 262-ம் பக்கம் பார்க்க.

ஆள்ள துறைமுகப்பட்டணத்துக்கு அனுப்புவதென்றால், எவ்வளவு காலதாமஸமாகும். அவ்வாறின்றி, யுத்த களத்துக்கு அருகில் பந்தோபஸ்தான ஓரிடத்தில் மிதக்குந் துறையைத் தயாராய் வைத்திருந்தால் சேதமடைந்த யுத்த கப்பலை அருகிலுள்ள மிதக்குந் துறைக்கு அனுப்பி, கொஞ்சநேரத்தில் பழுதுபார்த்து, அந்த கப்பலை மறுபடியும் யுத்த களத்துக்கு அனுப்பி விடலாம். ஆகையால், மிதக்குந் துறைகளை எந்தக் கக்ஷி அதிகமாய்வைத்துக்கொண்டிருக்கிறதோ அந்தக்கக்ஷி யுத்தத்தில் விசேஷசாதகம் அடைகிறது. யுத்தம்நடை பெறுத சாதாரண காலங்களிலும் கப்பல் வியாபாஞ் செய்யும் பெரிய கம்பனிகள், வியாபாரக் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்காக, இப்போது மிதக்குந் துறைகளை அதிகமாய்க் கட்டி வருகிறார்கள். பழையதுறைமுகப்பட்டணங்களில் எந்தக்காரணத்தினுலாவது வியாபாரங் குறைந்து போய், புதிய துறை முகங்களில் வியாபாரம் விருத்தியானால், மிதக்குந் துறையை புதிய இடத்துக்குக் கொண்டுபோகலாம். ஆனால் கற்கட்டடத்தால் அமைக்கப்பட்ட துறையை அவ்வாறு இடம் விட்டுப் பெயர்க்க முடியாதாகையால், பெருத்த நஷ்ட முண்டாகிவிடுகிறது.

பெரிய கடற்படையையும் கப்பல் வியாபாரத்தையு முடைய தேசங்களெல்லாம் மிதக்குந் துறைகளிருக்கின்றன. கிரேட்பிரிட்டனில் அம்மாதிரியான துறைகள் அநேகமிருக்கின்றன. ஆயினும் 32,000 டன் நிறையுள்ள கப்பல்களைத் தூக்கக் கூடிய துறைகள் இரண்டுதானிருக்கின்றன. ஜெர்மனியில் 40,000 டன் நிறையுள்ள கப்பல்களைத் தூக்கக்கூடிய துறைகள் இரண்டிருக்கின்றன. சமீபத்தில் ஜெர்மனியில் இன்னும் பெரிய துறைகள் கட்டப்பட்டுள்ளன. அங்கு 46,000 டன் நிறையைத் தூக்கக்கூடிய துறைகளு மிருக்கின்றன. பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற ''டைடானிக்'' என்ற பெரிய கப்பலைப்பற்றி, அது அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் 4000 ஜனங்களுடன் முழுகிவிட்ட காலத்தில் கேள்விப்பட்டிருக்கலாம். அதைவிடப் பெரிய கப்பல்கள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்வதற்காக அரண்மனைகள்போல ஜெர்மனியில் கட்டப்பட்டு வருகின்றன. அம்மாதிரியான கப்பல்களில், 50,000 டன் நிறை கொண்ட ஒன்றை ஜெர்மனியிலுள்ள மிதக்குந்துறை யொன்று தூக்கிப் பழுது பார்த்ததென்றால், அந்தத்துறைகளின் வன்மையைப்பற்றி அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை. பிரயாணி

கனி ஏற்றிச் செல்வதற்காகச் சில வருஷங்களாய்க் கட்டப்பட்டுவரு கிற பிரமாண்டமான கப்பல்கள் சண்டைக் கப்பலிடப் பெரிதா யிருப்பதைக் கவனிக்கவேண்டும். அவைகள் சுமார் 900 அடி நீள மும், 100 அடி அகலமும் 64 அடி உயரமுமிருக்கின்றன. மிகப் பெரிய சண்டைக்கப்பலின் நிறை 31,000 டன்னுக்கு மேலில்லை அந்தப் பிரயாணக் கப்பல்களின் நிறை 50,000 டன்னுக்கு அதிக மாயிருக்கின்றது. அந்தக் கப்பலின் கீழ்பாகம் 34 அடி ஆழம் கடலில் அமிழ்ந்திருக்கிறது. சூயஸ் வாய்க்காலின் ஆழம் 31 அடிதா னிருக்கிறபடியால், அந்தக் கப்பல்கள் சூயஸ் வழியாய்ச் செல்லமுடி யாது. ஐரோப்பாவி லிருந்து ஆசியாக் கண்டத்துக்கு அந்த வாய்க் கால் வழியாகத்தான் வரவேண்டுமென்பதை அறியவும். ஆகையால் புதிதாய்க் கட்டப்படுகிற அந்த பிராமண்டமான பிரயாணக் கப்பல் கள் ஐரோப்பாவி லிருந்து அமெரிக்கா கண்டத்துக்கு பிரயாணஞ் செய்கின்றனவே யொழிய, ஆசியா கண்டத்துக்கு வருவதில்லை. அந்தப் பிரயாணக் கப்பல்களை ஜெர்மனியிலுள்ள மிதக்குந் துறை யில் பழுது பார்க்கலாமே யொழிய, மற்ற தேசத்துத் துறைகளுக் குக் கொண்டுபோவதில் பயனில்லை. தவிர சாதாரண துறைமுகப் பட்டணங்களுக்கு அந்தக் கப்பல்கள் வரமுடியா. சாதாரண துறைமுகங்கள் போதுமானபடி ஆழமாயும் விஸ்தாரமாயுமில்லை. நியூயார்க் என்ற பிரபலமான பட்டணத்தி லுள்ள சிறந்த துறை முகத்திலுங் கூட, அந்தக் கப்பல்கள் நுழையாமல், துறை முகத் துக்கு அப்பால் கடலில் தங்கியிருக்க நேர்ந்தன. அம்மாதிரியாக, யுத்த கப்பல்களை ஓர் அளவில்லாமல் மிகப் பெரிதாய்க் கட்டி னால், துறை முகங்களில் தங்குவது சாத்திய மில்லாமற் போகு மென்று ஓர் ஆக்ஷேபம் முன்பு சொல்லி யிருக்கிறோம். அந்த ஆக்ஷே பம் மிகவும் முக்கியமான தென்பதை இப்போது தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.



21-வது அத்தியாயம்.

கடற் சுரங்கம்.

சத்துருவின் கப்பலுக்குக் கீழே ஜலத்தில் வெடித்து சேதப் படுத்துவதற்காக வெடி மருந்து அடைக்கப்பட்ட கருவிகள் இருக்கின்றன. அவை ஜலத்தின்மீது மிதக்கும்படியும் அல்லது ஜலத்துக்குக் கீழே மறைந்திருக்கும்படியும் வைக்கப்படுகின்றன; அத்தகக் கருவிகளுக்குக் கடற்சுரங்கமென்று பெயர். டார்ப்பிடோ என்ற வெடியும் கடற் சுரங்கமும் அவைகளினுள்ளே யிருக்கிற வெடிமருந்து நீப் பற்றி வெடிப்பதால் சத்துருவின் கப்பலைச் சேதப்படுத்துகின்றன. ஆனல் அவைகளுக்குள் முக்கியவித்தியாசம் என்னவென்றால், டார்ப்பிடோ என்ற வெடி குறித்த இடத்துக்குத் தானகவே செல்லக்கூடியதா யிருக்க, கடற்சுரங்கம் வைக்கப்பட்ட இடத்திலேயே யிருக்கும். சில சுரங்கங்கள் கடலில் சுயேச்சையாய் மிதக்கும்படி விடப்பட்டால் அலைகள் மோதுவதாலும் காற்று அடிப்பதாலும், அவைகள் நகர்ந்து செல்லக்கூடும். ஆனல் அவைகள் நம்முடைய இஷ்டப்படி குறித்த இடத்துக்குச் செல்லுமென்பது நிச்சயமில்லை. கடலில் மிதக்கும்படி விடப்பட்ட கடற்சுரங்கத்தை நம்முடைய இஷ்டப்படி எவ்வாறு செலுத்துவதென்று பல வருஷங்களாய் ஆராய்ந்து பரிக்ஷை செய்து அதன் பலனகத்தான் டார்ப்பிடோ கண்டுபிடிக்கப்பட்டது. 1870-ம் வருஷத்துக்கு முன்பு, ஜலத்தில் சுடப்படுகிற எல்லா வெடிகளும் "டார்ப்பிடோ" என்று சொல்லப்பட்டது. பிறகு குறி பார்த்துச் செலுத்தக்கூடிய கருவியாகிய டார்ப்பிடோ கண்டு பிடிக்கப் பட்டபோது, ஜலத்தில் வெடிக்கக்கூடிய மற்றவகையான கருவிகள் கடற்சுரங்கம் என்று சொல்லப்பட்டன.

இரண்டுவகையான சுரங்கங்கள்.

இரும்பினல் செய்யப்பட்ட ஒரு பெரிய பூரத்திரத்துக்குள்ளே வெடி மருந்து வைத்து அது குறித்த சமயத்தில் வெடிக்கும்படி உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்யப்பட்டிருக்கிற உபாயங்கள் பலவிதமா யிருக்கின்றன. அவைகளை இரண்டு முக்கிய

வகைகளாகப் பிரிக்கலாம். சுரங்கத்தைக் கடலில் வைத்து அதன் மீது கப்பல் மோதும்போது அது உடனே தானாகவே வெடிக்கும் படி உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது சுரங்கத்தை வெடிக்கச் செய்யும் உபாயம் அதனுள்ளேயே அமைக்கப்பட்டிருக்கிறது; மற்றொன்று, அந்த சுரங்கம் நமக்கு இஷ்டமான சமயத்தில் வெடிக்கும்படி உபாயஞ் செய்யப்பட் டிருக்கிறது.

தானாக வெடிக்கக் கூடிய சுரங்கத்தில், துப்பாக்கியைச் சுடுவதற்காக வுள்ள கொக்கியைப் போன்ற ஒரு கருவி அந்த சுரங்கத்தின் வெளிப்புறத்தில் மீட்டிக்கொண் டிருக்கும். ஏதாவதொரு கப்பல் சுரங்கத்தின்மேல் மோதினுல் அந்தக் கொக்கி மடங்கிவிடுகிறது. உடனே சுரங்கம் வெடித்து கப்பலைச் சேதப்படுத்துகிறது. ஆகையால் தாமாகவே வெடிக்கக்கூடிய அந்த சுரங்கங்கள் சத்துருவுக்கும் நேசர்களுக்கும் வித்தியாசமின்றி ஒரே ஆபத்தை விளைக்கக்கூடியவை. இம்மாதிரியான சுரங்கங்களைப் பற்றிதான் யுத்தத்தில் காம்அடிக்கடி கேள்விப்படுகிறோம். நடுச்சமுத்திரத்தில் இஷ்டமான இடங்களில் அந்த சுரங்கங்கள் வைக்கப்படுகின்றன. ஆனல் பெரிய துறைமுகங்களைக் காப்பதற்காக அந்தத் துறைமுகத்துக்கப்பால் அதைச் சுற்றி கடலில் சுரங்கங்கள் வைக்கப்பட்டு அவைகளைச் சுடுவதற்கு வேறொரு உபாயஞ் செய்யப்பட் டிருக்கிறது. முதலில் சொல்லப்பட்டதுபோல, அந்த உபாயம் சுரங்கத்தினுள்ளே வைக்கப்படாமல், வேறொருஇடத்தில் நம்முடைய வசத்திலிருக்கும்படி அந்த உபாயம் அமைக்கப்பட் டிருக்கிறது. கடற்கரையிலிருந்து அந்த சுரங்கங்கள் வரையில் கம்பி போடப்பட் டிருக்கும். கடற்கரையிலிருந்து அந்தக் கம்பி மூலமாய் மின்சாரத்தை செலுத்தி அந்த சுரங்கத்தினுள்ளே யிருக்கிற வெடிமருந்துக்கு தீ வைக்கப்படுகிறது. ஆகையால், கடற்கரையிலிருக்கிற ஒருவன் மின்சாரத்தை முடுக்கிவிட்டால், அநேக மைல்களுக்கப்பால் ஜலத்தில் வைக்கப்பட்டுள்ள சுரங்கம் தக்ஷணமே வெடித்துவிடும். சுரங்கம் வக்கப்பட் டிருக்கிற பாகத்தில் சத்துருவின் கப்பல் செல்கிறதென்பதைக் கடற்கரையிலிருக்கிறவன் தெரிந்துகொண்டவுடன் மின்சாரத்தை முடுக்கிவிட்டால், சுரங்கம் வெடித்து சத்துருவின் கப்பல் சேத மடையும். ஆனல் சொந்தக் கப்பல்கள் பயமின்றிச் சஞ்சாரம் செய்யலாம். சொந்த கப்பல் வருவதாகத் தெரிந்தவுடன் கடற்கரை

யிலுள்ள மின்சாரத்தை மூடிக்கிவிடாமலிருந்தால், அந்த சுரங்கம் யாதொரு அபாயத்தையும் விளைக்காது; ஆகையால், தானுக வெடிக்கக்கூடிய சுரங்க மென்றும், நம்முடைய இஷ்டப்படி வெடிக்கக் கூடிய சுரங்கமென்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

நமது இஷ்டப்படி வெடிக்கக்கூடிய சுரங்கம்

நமது இஷ்டப்படி வெடிக்கக்கூடிய சுரங்கங்களைப் பற்றிச் சொல்வோம். அப்படிப்பட்ட சுரங்கங்கள் துறை முகங்களுக் கருகிலும், குறுகலாயுள்ள கடல்வழிகளிலும், வைக்கப்படுகின்றன. கரையில் மின்சார யந்திரம் அமைக்கப்பட்டிருக்கும். கடலின் கீழ் சுரங்கங்களை வைத்து அவைகளில் கம்பியைக்கட்டி, அந்தக் கம்பி கடற்கரையிலுள்ள மின்சாரயந்திரத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும். கரையில் மின்சார யந்திரத்துக்கருகில் ஒரு உத்தியோகஸ்தர் இருப்பார். கடலின்கீழ் எந்தெந்த யிடங்களில் சுரங்கங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன வென்பதை அறிவதற்கு ஒரு படம் எழுதி வைத்திருப்பார். கடலின் கீழே சுரங்கங்கள் மறைத்திருக்குமாகையால் அவைகள் நமது கண்களுக்குப் புலப்படா. அவர் அந்தப் படத்தைப்பார்த்து எந்தெந்த யிடங்களில் சுரங்கங்களிருக்கின்றன என்பதை அறிந்துகொள்வார். சத்துருவின் கப்பல் சுரங்கமிருக்கிற யிடத்தில் வந்துகொண்டிருந்தால், கப்பல் செல்கிற வழியைக் கண்ணுடியால் பார்த்துக்கொண்டு, பிறகு மேலே சொல்லிய படத்தில் கப்பலின் வழிபைக் குறித்துக்கொண்டு அந்த வழியிலுள்ள சுரங்கங்கள் இன்னின்னவை யென்று அறிந்து கொள்வார். அந்த வழிக்குக் குறுக்கே வரிசையாகச் சுரங்கங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வரிசைக்கும் ஒவ்வொரு மின்சாரக் கம்பிபோடப்பட்டிருக்கும். கப்பலின் குறுக்கேயுள்ள முதல் வரிசைச் சுரங்கங்கள்மட்டும் வெடிப்பதற்காக வுள்ள கொக்கியை அந்த உத்தியோகஸ்தர் அழுத்துவார். உடனே, கப்பலின் வழியிலுள்ளசுரங்கங்கள் வெடித்து கப்பலைச்சேதப்படுத்தும்.கப்பலின்போக்கைத்தூரத்திலிருந்துகொண்டு குறிப்பாய் அறியமுடியாதாகையால், ஒரு வரிசைமுழுவதும்வெடிக்கும்படி செய்யப்படுகிறது. இத்தச்சுரங்கங்களைச்சற்று ஆழத்தில்வைக்கப்படுகின்றன. கப்பலின் அடிப்பாகம் சுரங்கத்தின்மேல் மோதாமலிருக்கும்படி ஆழத்தில் வைக்கப்படுகின்றன. அதனால், வியாபாரக் கப்பல்கள் தாராளமாய் சுரங்கமண்டலத்தின் மேல் வந்துகொண்டும்

போய்க்கொண்டு மிருக்கலாம். அவைகளுக்குச் சுரங்கங்களால் எவ் வித இடைஞ்சலுமில்லை. ஆனல் சத்துருவின் கப்பல் வந்தால் கரை யோரத்திலிருந்து கப்பலின் போக்கை அறிந்து அந்த வழியிலுள்ள சுரங்கவரிசைக்கு மின்சாரத்தைச் செலுத்தித் தீ வைக்கலாம்.

ஆனல் கடலில் பனிமூடிக்கொண்டிருந்தால் கப்பல் வருவதைக் கண்டுகொள்ள முடியாது. அதற்கு வேறொரு விதமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சுரங்கம் கடலின்கீழ் மறைந்திருந்தாலும் கப்பலின் அடிப்பாகத்தில் மோதும்படிச் சற்று மேலாக வைக்கப்படு கிறது. பனி மூடிய காலங்களில் கரையிலுள்ள உத்தியோகஸ்தருக் குத் தெரியாமல் சத்துருவின் கப்பல் வந்துகொண்டிருந்தால், அதன் அடிப்பாகம் சுரங்கத்தின்மேல் படும். அவ்வாறு அந்த சுரங்கம் அசைக்கப்பட்டால் அதனுள்ளே மின்சாரம் உண்டாக்கப்படுகிறது. இந்த மின்சாரம் கம்பி வழியாய் கடற்கரைக்குச் செல்கிறது. கடற் கரையிலுள்ள உத்தியோகஸ்தர் அதைத் தம்முடைய மின்சாரக் கரு வியில் பார்த்துத்தெரிந்துகொள்வார். அவர்உடனே ஒரு கொக்கியை அழுத்தினல், மற்றொரு கம்பி வழியாக கப்பலால் மோதப்பட்ட அந்த சுரங்கத்துக்கு மின்சாரசக்தி ஓடுகிறது; உடனே சுரங்கம் தீப் பற்றி வெடிக்கிறது. முதலில்,சுரங்கத்திலிருந்து கடற்கரைக்கு மின் சாரம் வருகிறது. ஏதோ ஒரு கப்பல் சுரங்கத்தில் தட்டுவதாக அது னல் தெரிந்துகொள்ளப்படுகிறது. பிறகு கரையிலிருந்து சுரங்கத் துக்கு மின்சாரத்தை அனுப்பி தீ மூட்டப்படுகிறது.

சுரங்கத்தின் உருவமும் மற்ற விவரங்களும்.

சுரங்கம் வைக்கப்படுகிற பிடத்தில் கடல் அவ்வளவு ஆழமா யில்லாவிட்டால், கடலின் கீழே யுள்ள தரையில் சுரங்கம் உட்கா ர்ந்து விடும்படி வைக்கப்படுகிறது. அவ்வாறு கடலின் கீழே சென்று தங்கி விடுகிற சுரங்கம் சற்று நீளவடிவமாகச் செய்யப்படு கிறது. அவ்வாறின்றி, கடல் மிகவும் ஆழமாயிருந்தால், சுரங்கம் கடலின் கீழாக எங்காவது மிதந்த வண்ணமாய் வைக்கப்படுகிறது. அது மிதந்த வண்ணமாயிருக்கவேண்டுமாகையால், சற்றுஉருண்டை வடிவமாகச் செய்யப்படுகிறது. சுரங்கம் அவ்வாறு மிதப்பதற்காக, அதனுள்ளே சில அறைகள் காலியாக விடப்படுகின்றன. அந்த காலியறைகளில் காற்று யிருப்பதால், சுரங்கம் மிதக்கக்கூடிய தன்மையைப் பெறுகிறது. சுரங்கத்தினுள்ளே கடினவஸ்துக்களால்

முற்றிலும் நிரப்பி விட்டால், அதன் பளுவு அதிகரித்து ஜலத்தில் அமுங்கி விடும். ஆகையால் அதனுள்ளே சில அறைகள் காலியாக விடப்படுகின்றன. அதனுள்ளே சுமார் 100-பவுண்ட் நிறையுள்ள வெடி மருந்து வைக்கப்படும். அந்த சுரங்கத்தின் சுற்றளவு சுமார் 10-அடி யிருக்கும். கப்பல்களின் வருகையைக் குறிப்பாய் அறிந்து கொள்ள முடியாத இடங்களில், சுரங்கங்கள் விஸ்தாரமாய் வெடித்தால்தான், சற்று விலகிச் செல்கிற கப்பல்களும் சேதமாகும். அப்படிப்பட்ட இடங்களில் பெரிய சுரங்கம் வைக்கப்படுகிறது. அதில் 500-பவுண்ட் நிறையுள்ள வெடிமருந்து வைக்கப்படுகிறது. அதன் சுற்றளவு சுமார் 13-அடி யிருக்கும்.

மேலே சொல்லப்பட்ட சுரங்கங்களை கடற்கரையிலிருந்து கம்பிகள் மூலமாய் அனுப்பப்படுகிற மின்சாரத்தால் வெடிக்கச் செய்கிறார்கள். இந்த முறை தூரமுகங்களிலும் குறுகிய ஜலசந்திகளிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு வேண்டிய மின்சார யந்திரங்களை அமைப்பதும், கம்பிகளைப் பூட்டுவதும் சிரமமான காரியமாகும். மேலும், நமது வசத்திலில்லாத நடுச் சமுத்திரங்களில் அவ்விதச ஏற்பாடுகளைச் செய்ய முடியாது. ஆகையால் வேறொரு முறையும் அனுசரிக்கப்படுகிறது. சுரங்கம் கடலின்கீழ் குறித்த ஆழத்தில் மிதந்த வண்ணமாய் ஒரே நிலையில் யிருக்கும்படி அதில் ஒரு பளுவு கட்டித் தொங்கவிடப்படுகிறது. சுரங்கத்திலுள்ள வெடி மருந்து தானாகவே தீப்பற்றி வெடிப்பதற்கு அதனுள்ளே உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. கப்பல் சுரங்கத்தின்மேல் மோதிய வுடன் சுரங்கத்தினுள்ளே ஒரு குழாயில் வைக்கப்பட்டுள்ள திராவகத்தால் வெடி மருந்து தீப்பற்றிக்கொள்கிறது.


தானாக வெடிக்கக்கூடிய சுரங்கம்.

கடலின் கீழே சுரங்கங்கள் எவ்வாறு வைக்கப்படுகிறதென்று சொல்வோம். நமது சித்திரப்படத்தைப் பார்த்தால் கீழே சொல்லப்படுகிற விவரங்கள் தெளிவாய் விளங்கும். சுரங்கம் ஜலத்தில மிதக்கக்கூடிய தாகையால், அதைக் கீழாக அமுக்கி வைத்திருப்பதற்கு இரும்புக் குண்டைப் போன்ற ஒரு பளுவு கட்டப்படுகிறது. சுரங்கத்தைக் கடலில் போட்டவுடன் அதோடு கூடக் கட்டப்பட்டிருக்கிற குண்டு நழுவி ஜலத்துக்குக் கீழே விழுகிறது. அந்தக் குண்டுக்குள் மீளமான இரும்புக்கம்பி சுருட்டி


வைக்கப்பட்டிருக்கிறது. அத்தக் கம்பியின் ஒரு முனையில் பளுவான இரும்புக் கொக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த குண்டு ஜலத்தின் கீழே அமுங்கும்போது, அதிலுள்ள கம்பி பிரிந்து கொண்டு வருகிறது. கம்பியின் முனையிலுள்ள பளுவான கொக்கி தரையில் விழுந்து பதிந்துவிடுகிறது. அந்தக் கொக்கி கடலின் கீழ்ப் பாகமாகிய தரையில் வலுவாய்ப் பதிந்தவுடன் குண்டு கீழே யிறங்காமல் நின்று விடுகிறது. அந்த கம்பி எவ்வளவு நீளமிருக்கிறதோ அவ்வளவு தூரம் சுரங்கம் கடலின் கீழே அமுங்குகிறது. இரும்புக் குண்டு அந்த சுரங்கத்தை கீழாக அமுக்கி வைக்கிறது. அந்த பளுவு இல்லாவிட்டால், கடல் கொந்தளிக்கும்போது சுரங்கம் பல மாய் அசைந்து கம்பியை அறுத்துக்கொண்டு எங்காவது போய் விடும். ஆகையால் அது ஒரே யிடத்தில் நிலைத்திருப்பதற்கு மேற் சொல்லிய உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இரண்டு சுரங்கங்களை தூரவிலக்கி வைத்து அவ்விரண்டுக்கும் இடையே கம்பி கட்டப்படுவது முண்டு. இதன் விவரங்களை நமது சித்திரப்படத்தில் காணலாம். கப்பல் வந்து கொண்டிருக்கும் போது அந்த கம்பியில் மாட்டிக்கொண்டால், இரண்டு சுரங்கங்களும் இழுக்கப்பட்டு கப்பலின் பக்கங்களில் மோதும். கப்பல் செல்கிற வழிகள் விசாலமாயிருந்தால் அங்கு இரண்டொரு சுரங்கங்கள் தனித்தனியாப் வைப்பதில் பயனில்லை. ஏனெனில் கப்பல் சற்று ஒதுங்கிச்சென்றால் சுரங்கத்தில் மேல் படாமற்சென்று விடக்கூடும். அதற்காக, விசாலமாயுள்ள வழியில் இரண்டு ஓரங்களிலும் இரண்டு சுரங்கங்களை வைத்து இடையே கம்பியைக்கட்டி விட்டால், கப்பல் எவ்விதமாய் ஒதுங்கிச்சென்றாலும் வழியின் குறுக்கேயுள்ள கம்பியில் மாட்டி இழுத்துச்செல்லும்; அப்போது சுரங்கங்களும் பின்னோடி இழுக்கப்பட்டு கப்பலில் மோதி வெடிக்கும்.


மேலே சொல்லிய சுரங்கங்கள் தாமாக வெடிக்கக்கூடியவை. அவைகளிலுள்ள வெடி மருந்து தீப்பற்றிக்கொள்வதற்கு அவைகளினுள்ளே உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான சுரங்கங்களை கடலின்கீழ் வைப்பதில் எவ்வித சிரமமுமில்லை. கடற்கரையிலிருந்துகொண்டு, மின்சார சக்தியை கம்பி மூலமாய் செலுத்தி தேவையான சமயங்களில் மட்டும் சுரங்கத்தை வெடிக்கச்செய்யும் முறை அவ்வளவு எளிதானதல்ல. ஆகையால் விஸ்தாரமான கடல்களில்



இந்த கப்பல் கடற் சுரங்கங்களை ஏற்றிச்செல்கிறது. சுரங்கம் தண்ணீர்வாளத்தின் மேல் நகர்த்தப்படுகிறது. 263 பக்கம் பார்க்க.



கடலில் வைக்கப்பட்ட சுரங்கங்களை எடுக்கும் விதம் 264-ம் பக்கம் பார்க்க.



கம்பியில்லாத் தந்தியைச்சேர்ந்த கருவிகளை நான்கு பேர் தூக்கிக்கொண்டு செல்கிறார்கள். 281-ம் பக்கம் பார்க்க.



மேலே சொன்ன கருவிகளைப்பூட்டி யுத்தகளத்தில் கம்பியில்லாத் தந்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

சத்துருக்களின் கப்பல்கள் நடமாடிக்கொண்டிருந்தால், தானாக வெடிக்கக்கூடிய சுரங்கம் எளிதாயும் சீக்கிரமாயும் வைக்கப் படலாம். அதற்கு அதிக பணச்செலவு மாகாது. தாமாக வெடிக்கக்கூடிய சுரங்கங்களைப் பற்றித் தான் நாம் இந்த மகா யுத்தத்தில் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஜெர்மானியர் அம்மாதிரியான சுரங்கங்களை அதிகமாய் உபயோகித்துவருகிறார்கள்.

சுரங்கம் கடலில் எவ்வாறு வைக்கப்படுகின்றது.

சுரங்கங்களைக் கடலில் கொண்டுபோய் கடலின்கீழ் வைப்பதற்காக சில கப்பல்களிருக்கின்றன. ஒரு சுரங்கக் கப்பலில் சுமார் 100 சுரங்கங்கள் ஏற்றிக்கொண்டுபோகப் படுகின்றன. கப்பலின் தளத்தில் ரயில் தண்டவாளங்களை அமைத்து, சிறு வண்டிகளில் சுரங்கத்தை ஏற்றி அந்தவண்டிகள் தண்டவாளத்தில் இருந்து வரும். அந்த தண்டவாளங்கள் கப்பலின் முனைவரையில் போடப்பட்டிருக்கிறது. அந்த முனையில் பெரிய துவாரமொன்று கப்பற்சுவரில் செய்யப்பட்டிருக்கிறது. கப்பலிலுள்ள சுரங்கம் தண்டவாளத்தின் மேல் கொண்டுவரப்பட்டு முனையிலுள்ள துவாரத்தின் வழியாய் கடலில் போடப்படுகிறது. அவ்வாறு கப்பல் ஓடிக்கொண்டிருக்கும்போது, கப்பலின் முனையிலுள்ள துவாரத்தின் வழியாய் சுரங்கத்தைக் கடலில் போட்டுக்கொண்டே போகலாம். அல்லது சுரங்கம் கப்பலின் மேடையிலிருந்தபடியே கடலில் தள்ளிவிடப்படுகிறது முண்டு. கடலில்வீழுகிற சுரங்கம் தானிருக்கவேண்டிய நிலைமையில் அமுங்கி நிற்கிறது.

தறைமுகங்களிலிருந்து மின்சாரத்தால் கடப்படுகிற சுரங்கத்தைப்பற்றியும்தானாகவெடிக்கக்கூடிய சுரங்கத்தைப்பற்றியுஞ்சொன்னோம். தானாகவெடிக்கக்கூடியசுரங்கம்ஒருஇரும்புக்குண்டால்கீழாக இழுக்கப்பட்டு ஒரே நிலையில் இருந்து வருகிறதென்று சொன்னோம். அவ்வாறு ஒரே நிலையில் நிறுத்திவைக்கப்படாத சுரங்கங்கள் கடலில் மிதக்கும்படி விட்டுவிடப்படுவது முண்டு. அப்படிப்பட்ட சுரங்கங்கள் அலைகளாலும் காற்றுகளாலும் அடித்துக்கொண்டு போகப்பட்டு சுயேச்சையாய் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட சுரங்கம், சத்துருவென்றும் சினேகரென்றும்வித்தியாசமில்லாமல் எல்லா கப்பல்களுக்கும், நினைத்த இடங்களில் ஆபத்தை யுண்டுபண்ணும். அம்மாதிரியான சுரங்கம் சாதாரணமாய்உபயோகிக்கப் படுவதில்லை.

கடலிலுள்ள சுரங்கங்களை எவ்வாறு எடுப்பது.

சத்துருக்களால் வைக்கப் படுகிற சுரங்கங்களை எவ்வாறு அழிப்பது ? குறித்த இடத்தில் சத்துருக்கள் சுரங்கங்களை வைத்திருக்கிறார்களென்று தெரியவந்தால், அங்குள்ள சுரங்கங்களை எவ்வாறு எடுப்பது ? மின்சாரக் கம்பியால் வேலை செய்கிற சுரங்கங்களாயிருந்தால், ஜலத்தில் முழுகிச்சென்று அந்த கம்பி அறுத்து விடப்படுகிறது. அந்தக் கம்பி அறுக்கப்பட்டால், மின்சார சக்தி சுரங்கத்தினுள்ளே செல்லமுடியாது. அதனால் அந்தச் சுரங்கம் எவ்வித ஆபத்தையும் உண்டுபண்ண முடியாது. தாமாக வெடிக்கக் கூடிய சுரங்கங்களாயிருந்தால், அங்கு வேறு புதிய சுரங்கங்களை வைத்து வெகுதூரத்திலிருந்துகொண்டு அந்தப் புதிய சுரங்கங்களை வெடிக்கச்செய்ய வேண்டும்; அந்த வெடியின் அதிர்ச்சியால் அருகிலுள்ள எல்லா சுரங்கங்களும் தீப்பற்றி வெடித்து விடுகின்றன. அவ்வாறுஅந்தப்பிரதேசத்தில் சுரங்கங்களால்நேரிடக்கூடியஆபத்து நீங்கிவிடுகிறது.வேறொரு உபாயமும் செய்யப்படுகிறது. அதை நமது சித்திரப்படத்தைப் பார்த்துத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம். மிகவும் நீளமான இரும்புக்கம்பியின் ஒரு முனையை ஒரு கப்பலில் கட்டி, மற்றொரு முனையை மற்றொரு கப்பலில் கட்டி அந்தக் கம்பியை கடலின்மேலே போட்டு, இவ்விரண்டு கப்பல்களும் கம்பியை இழுத்துக்கொண்டு செல்கின்றன. அந்தக் கம்பியின் முன்னால் சுரங்கங்களெல்லாம் ஒன்றுக்கூட்டப்படுகின்றன. பிறகு அந்த சுரங்கங்களுக்குத் தீ வைக்கப்படுகிறது. அந்தக் கம்பி கடலின் மேலே அமுங்குவதற்கு அதில் பளுவுக்காக கனத்த இரும்புத்தகடு கட்டப்படுகிறது. அந்தக் கம்பி சுரங்கங்களின் அடிப்பாகத்தைப்பற்றி இழுக்கிறதாகையால், சுரங்கங்கள் வெடிக்காமலிருக்கும். தவறிப் போய் சுரங்கத்தின் மேல் பாகத்தில் அந்தக் கம்பி பட்டால் சுரங்கம் வெடித்துவிடும். எனெனில் சுரங்கத்தை வெடிக்கச் செய்யும் கருவி அதன் மேல்பாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும். தவறுதலால் நேரக்கூடிய அவ்வித ஆபத்தினால் சேதமாகாமலிருப்பதற்காக, அந்த கப்பல்கள் சுரங்கங்களைக் கூட்டும்போது வெகு தூரத்தில் விலகியிருக்கும். ஆயினும் அவ்வித ஆபத்துகள் அடிக்கடி நேரிடுவதால், சுரங்கங்களை யெடுக்கும் வேலை மிகவும் அபாயமானதாகக் கருதப்படுகிறது. அந்த வேலைக்கு மிகுந்த அனுபோகமும்

சாமர்த்தியமும் தேவை. அந்த அபாயமான வேலையைச்செய் வதற்கு பிரிட்டிஷ் கடற் கரையில் மீன் பிடிக்கும் தொழி லைச் செய்கிறவர்கள் பழக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் யுத்த காலத்தில் அந்த அபாயமான வேலையைச் செய்வதற்காக, சாதாரண காலங்களிலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண் டிடமிருந்து பண உதவி பெற்று வருகிறார்கள். மீன்பிடிக்கும் கப்பல்கள் அந்த அபாயமான வேலைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றன; அவைகள் நமது தேசத்திலுள்ள சாதாரண படகுகளைப்போலிரா. அவைகள் நமது சித்திரப்படத்திலுள்ளபடி நீராவி யந்திரத்தால் ஓட்டப்படு கின்றன. அக்கப்பல்கள் கம்பிபோட்டு சுரங்கங்களைக் கூட்டும்போது அவைகளுக்குத் தெரியாமல் வழியில் மறைந்திருக்கும் சுரங்கங் களின் மேல் மோதிச் சேதமாவதுண்டு. இந்தயுத்தத்தில், அவ்வித ஆபத்துகள் அடிக்கடி நேரிடுவதைப்பற்றிக் கேள்விப்படுகிறோம்.

22-வது அத்தியாயம்.

கம்பியில்லாத் தந்தி.

அந்தரத்தில் தந்திசமாச்சாரம் செல்வதெப்படி?

கம்பியின் உதவியில்லாமல், அந்தரத்தில் சமாசாரம் எவ்வாறு அனுப்பப்படுகிற தென்பதைப்பற்றிச் சொல்வோம். இந்த மகா யுத்தத்தில் கம்பியில்லாத் தந்தி உபயோகிக்கப்படுவதைப்பற்றி அடிக்கடி கேள்விப்பட் டிருக்கிறோம். ஜெர்மானியர் உலகத்து மற்ற பாகங்களோடு போக்குவரத்து செய்ய முடியாதபடி நேசக் கக்ஷி யாரின் யுத்த கப்பல்கள் முற்றுகை போட்டிருந்தும், கம்பியில்லாத் தந்தி மூலமாய் ஜெர்மானியர் உலகத்துக்குச் சமாசாரம் அனுப்பிக் கொண்டு வருகிறார்கள். ஜெர்மன் கவர்ன்மெண்டு இதர தேசத்துக் கவர்ன்மெண்டுகளுடன் கம்பியில்லாத் தந்தி மூலமாய் பேச்சுகள் நடத்துவது இப்போது சாத்தியமா யிருக்கிறது. கடலில் நடக் கும் சண்டைகளில், யுத்த கப்பல்கள் கம்பியில்லாத் தந்தி மூலமாகத் தான் சமாசாரப்போக்குவரத்து நடத்துகின்றன. தரைச்சண்டைகளி லும், சேனுபதிகள் 100,200 மைல் தூரத்துக்கு கம்பி யில்லாமலே பேசிக்கொள்கிறார்கள். சென்னைநகரத்தில், கோட்டையைச் சேர்ந்த மைதானத்தில் உயரமான ஸ்தம்பங்கள் நடப்பட்டிருப்பதைப் பார்க்

கலாம். அங்கு இந்த ஆச்சரியமான யந்திரம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆச்சரியமான யந்திரம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதென்றும் எவ்வாறு வேலை செய்கிறதென்றும் சொல்வோம்.

கம்பித் தந்தியும் கம்பியில்லாத் தந்தியும் ஏறக்குறைய ஒரே காலத்தில் யோஜனை செய்யப்பட்டதென்று சொல்லலாம். கம்பிகள் மூலமாய் மின்சார சக்தியைச் செலுத்தசக்தியைச்செய்யலாமென்று கண்டு பிடிக்கப்பட்டபோதே கம்பியின் உதவியில்லாமலே சமிக்ஞை செய்யக்கூடுமென்று சாஸ்திர நிபுணர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். 1838-ம்வருஷத்தில் ஜெர்மன் தேசத்தவராகிய ப்ரோபஸர் ஸ்டின்ஹில் என்பவர், கம்பியின் வழியாய் மின்சாரசக்தி செல்வது போல, பூமியின் வழியாயும் செல்லக்கூடும் என்று கண்டுபிடித்தார். அதன் பிறகு சாதாரண கம்பித்தந்தி உபயோகத்துக்கு வந்தது. பிறகு கம்பியின் உதவியில்லாமலே முற்றிலும்பூமியின் வழியாகவே மின்சாரத்தைச் செலுத்திவரக்கூடுமென்று யோஜனை தோன்றிற்று. 1842-ம் வருஷத்தில் அமெரிக்காவிலுள்ள யூனைடெட் ஸ்டேட் ஸைச்சேர்ந்த ப்ரொபஸர் மார்ஸ் என்பவர் பரிக்ஷை செய்து பார்த்தார். ஒரு வாய்க்காலின் அக்கரையில் மின்சாரயந்திரத்தை வைத்து இக்கரையில் தந்தி சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்ளும் கருவியை வைத்தார். இந்த சமிக்ஞை காட்டும் கருவிக்கும் எதிர்கரையிலுள்ள மின்சாரத்துக்கும் இடையே ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. ஜலத்தின் வழியாய் மின்சார சக்தி எதிர் கரைக்கு ஓடி தந்திக்கருவியில் சமிக்ஞைகள் உண்டாக்கிற்று. ஆகையால் கம்பி மூலமாய்த்தான் மின்சாரம் ஓடிச் செல்லவேண்டுமென்பதில்லை. வாய்க்காலின் இரண்டு கரைகளையும் கம்பியைக்கொண்டு சேர்க்காமலே சமாச்சாரம் அறிவிக்கலாமென்று தெரியவந்தது.

1880-ம் வருஷம் ப்ரொபஸர் டிரோபிரிட்ஜ் மற்றொரு பரிக்ஷை செய்தார். மின்சார யந்திரத்தைக்கொண்டு தரையில் மின்சார சக்தியைச் செலுத்தினார். மற்றோரிடத்தில் டெலிபோன் யந்திரம் வைத்தார் (பேச்சுவார்த்தைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் கேட்கச் செய்வதற்கு "டெலிபோன்" என்ற யந்திர மொன்றிருக்கிறது.) தரைவழியாய் மின்சாரசக்தி பாய்ந்துகொண்டிருந்த சப்தம் அந்த டெலிபோன் யந்திரத்தில நன்றாய்க்கேட்டது. இதனால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு கம்பியின் சம்பந்தமில்லாமலே தரைவழி

யாய் மின்சாரசக்தியைச் செலுத்தலாமென்று ஏற்பட்டது. 1882-ம் வருஷத்தில் கிரஹாம் பெல் என்பவர் யுனைடெட் ஸ்டேட்ஸி லுள்ள பேரட்டோமாக் நதியில், ஒரு படகிலிருந்து 1½-மைல் தூரத்திலுள்ள மற்றொரு படகுக்கு சமிக்ஞை செய்தார். இவ்வாறு 1887-ம் வருஷம் வரையில் இன்னும் அநேக சாஸ்திர நிபுணர்கள் பற்பலவிதமாய்ப் பரீக்ஷை செய்து பார்த்தார்கள். ஆனல் மின்சார சக்தியை அதிக தூரம் செலுத்த முடியாமலிருந்தது. அதன் பிறகு செய்யப்பட்ட பரீக்ஷையைப் பற்றிச்சொல்வதற்குமுன், இங்கு தந்தி யைப்பற்றி பொதுவாயுள்ள சில விஷயங்களைச் சொல்வோம்.

மின்சாரத் தந்திகள்—பொதுவாயுள்ள சில விஷயங்கள்.

மின்சாரத் தந்தி இப்போது இரண்டுவிதமா யிருக்கிறது. (1) சாதாரண கம்பித் தந்தி, அதாவது பூமியில் ஸ்தம்பங்கள் நட்டு, கம்பி மாட்டி தந்தி அனுப்புவது. ஜலத்துக் கடியிலும் கம்பி மாட்டி தந்தி அனுப்பப்படுகிறது. இப்போது சமுத்திரத்தின் கீழே இவ்வாறு கம்பிபோட் டிருக்கிறது. இவ்விரண்டிலும் கம்பி வழி யாகவே தந்தி அனுப்பப்படுவதால் யாதொரு வித்தியாசமுமில்லை என்று வைத்துக் கொள்ளலாம். இனி சொல்லப்படுவனவற்றில், ஜலத்தில் தந்தி அனுப்புவதென்றல் ஜலத்துக்கடியில் கம்பி போட்ட தந்தியைக் குறிப்பிடாது என்று அறியவும். (2) கம்பி இல்லா மல் மின்சாரத்தந்தி அனுப்புவது. இது ஜலத்தின் மூலமாயும் தரை மூலமாயும் கம்பியில்லாமலே சமிக்ஞை செய்வதாகும்.

சாஸ்திர ரீதியாய்ப் பார்த்தால், கம்பித் தந்தியும் கம்பியில் லாத் தந்தியும் வேலை செய்கிற முறைப்பாடு ஒன்று தான். தந்திக் கம்பியானது மின்சார சக்தியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் துக்குச் செலுத்துவதற்காக விருக்கிறது. அதேமாதிரியாக மின்சார சக்தியைச் செலுத்துவதற்கு சமுத்திர ஜலத்துக்கும் போதுமான சக்தியிருக்கிறது. தரைக்கும் அந்த சக்தி சற்று குறைவா யிருக் கிறது. மின்சார சக்தி ஜலத்தில் கம்பியில்லாமல் எப்படி செல் கிறது? காற்று அடிக்கும்போது எதிரே பற்பல தடைகளிருந்தா லும் அவைகளுக் கேற்றபடி அது இசைந்து தாவிச் சென்று கொண்டே யிருப்பதுபோல, மின்சார வீசையும் சமுத்திர ஜலத் தின் மேல்மட்டத்துக்கேற்றபடி இசைந்து ஜலத்தால் இழுக்கப் பட்டுச் செல்கிறது. மின்சார வீசை சிற்சில விடங்களில் சற்று

சிதறிப்போனலும், காற்றைப்போல, விசையின் பெரும்பாகமும் சென்றுகொண்டிதானிருக்கும். காற்றுனது போக்கிடங்களேயே நாடி நுழைந்து செல்வதுபோல, மின்சார விசையானது தன்னை இழுக்கும் சக்தி யுடைய ஜலம், தரை இவைகளேயே நாடிச் செல்லும். ஆகையால் மின்சார விசையானது கம்பியில் செல்வதுபோல ஜலத்திலும் செல்லும். தவிர, தந்தி அனுப்பும் முறையும் ஒன்று தான். தந்தி எவ்வாறு அனுப்பப்படுகிறது என்பதைப்பற்றிச் சொல்வோம்.

தந்தி அனுப்புவ தெப்படி?

கம்பியினுலாவது, கம்பி யில்லாமலாவது மின்சாரத் தந்தி அனுப்பவேண்டு மானால், ஓரிடத்திலிருந்து மற்ரோரிடத்துக்கு மின்சாரம் செல்வதற்கு வழி ஏற்படவேண்டும். மின்சாரம் அனுப்புவதற்கு வழி, கம்பி, ஜலம், தரை இவைகளா யிருக்கலாம். அந்த வழியே, ஒரு யந்திரத்தைக் கொண்டு மின்சார சக்தியை ஒரு பக்கத்திலிருந்து அனுப்பிவர, மற்றொரு பக்கத்தில் அதன் செயல்களை சமிக்ஞைக் கருவியைக் கொண்டு அறியலாம். இதுதான் மின்சாரத் தந்தி என்பது. தந்தி சமிக்ஞைகள் அனுப்பப்படும் விதத்தைப் பற்றிச் சொல்வோம்.

மின்சார சக்தி நிறுத்தி நிறுத்தி அனுப்பப்படுகிறது. கம்பித் தந்தியில், அந்த மின்சார சக்தி கம்பி மூலமாய்ச் சென்று சமிக்ஞைக் கருவிக்கு வருகிறது. அவ்வாறு மின்சாரம் இடையிடையே நின்றபின் செல்கிற காலத்தை அந்த சமிக்ஞைக் கருவி குறிப்பிடுகிறது. சமிக்ஞைக் கருவியில் எழுத்தாணிபோன்ற ஒரு முள் இருக்கிறது. மின்சாரவிசை தந்திக் கம்பி மூலமாய் சமிக்ஞைக்கருவிக்கு வந்தவுடன் எழுத்தாணியின் ஒரு முனையை கீழே இழுக்கிறது. அதனல் மற்றொரு முனை காகிதத்தில் ஒரு குறிபோடுகிறது; மின்சார விசை நின்றுவிடும் வரையிலும் அந்தக்கிறலைப் போட்டுக்கொண்டிருக்கும். மின்சாரம் இடைவிட்டு ஓடும் கால அளவை சிறியதென்றும் பெரியதென்றும் இரண்டுவிதமாகப் பிரித்து சிறிய குறியை "புள்ளி" என்றும் பெரியதை "கீறல்" என்றும் சொல்லப்படும். அம்மாதிரி 1-குறிப்பு முதல் 4 குறிப்புகள் வரை பலவிதமாய்ச் சேர்த்து, ஒவ்வொரு எழுத்தாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்ன குறிப்புகள் இன்ன எழுத்தாகு மென்று அடையாளங் காணப்படுகிறது. சமிக்ஞைக் கருவிகள் எழுத்தாணி யில்லாமல் வேறு விதமா

யும் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஆயினும் மின்சார சக்தி இடை விட்டு அனுப்பப்படும் காலத்தைக் குறிப்பிடுவதற்குத் தான் அக் கருவிகளெல்லாம் உபயோகிக்கப்படுகின்றன. தந்தி அனுப்பும் விதத்தைப்பற்றி இங்கு சற்று விவரமாய்ச் சொல்லியதற்குக் காரணம் என்னவென்றால், மேலே சொல்லிய முறையானது கம்பித்தந்தியில் அனுஷ்டிச்கப்படுவதோடுகூட கம்பியில்லாத் தந்தியிலும் அதே மாதிரி உபயோகிக்கப்படுகிறது. கம்பியில்லாத் தந்தியிலும் இவ்வாறே சமிக்ஞை செய்யப்படுகிறதைப்பற்றிப் பின்னால் சொல்லப்படும்.

முக்கியமான வேறுபாடு.

சாஸ்திரப்படி அவ்விரண்டுவித தந்திகளுக்கும் வித்தியாசமில்லை யென்றாலும், அனுஷ்டானத்தில் ஒரு முக்கியமான வேறு பாடு கவனிக்கப்படவேண்டும். தந்திக்கம்பியில் செலுத்தப்படும் மின்சாரம் கம்பியில் மாத்திரம் செல்வதால் அவ்வளவாக வீண்போகாது. மின்சாரத்தை ஜலத்தின் வழியாய் அனுப்பினால் ஜலமிருக்கு மிடத்திலெல்லாம் பரவிச் செல்லுமாகையால் மின்சாரத்தின் விசை வரவரக் குறைந்துபோகும். அதனால் மின்சார விசை ஜலத்தில் சற்றுதூரம் சென்று பலஹீனப்பட்டு சமிக்ஞைகளை யுண்டுபண்ணப் பயன் படாது.

ஆகையால், சாஸ்திர நிபுணர்கள் இரண்டு முக்கியமான வழிகளில் ஆராய்ச்சிசெய்தார்கள். 1 மின்சாரசக்திஜலமுழுவதும் பரவிப் பலஹீனப் படுவதால் அதற்குப் பரிகாரமாக மின்சாரத்தை ஏராளமான விசையுடன் உண்டுபண்ணவேண்டும். 2 அப்படிச் செய்தும் அந்த மின்சாரம் வெகு தூரம் சென்று பலஹீனமடைந்தாலும் அன்னிலைமையில் அதை கிரகித்துக் குறிப்பிடக் கூடிய அவ்வளவு நுட்பமான கருவி உண்டுபண்ணவேண்டும். முன்பு சொல்லியபடி தந்தி அனுப்புவதென்றால், ஓரிடத்திலிருந்து மின்சார சக்தியைச் செலுத்தி, மற்றோரிடத்தில் அதன் செயல்களை ஒரு சமிக்ஞைக் கருவியைக்கொண்டு அறிவதாகும். அதாவது, மின்சார சக்தியை அனுப்பும் ஸ்தலம் ஒன்றும், அதைப்பெற்றுக்கொள்ளும் ஸ்தலம் ஒன்றும் இருக்கவேண்டும். ஆகையால, அனுப்பும் ஸ்தலத்தில் மின்சாரத்தை மிகுந்த விசையுடன் அனுப்பவும், பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மிகுந்த நுட்பமான கருவியைக்கொண்டு ஒடிக்கொண்டிருக்கிறமின்சாரத்தைக் கிரகித்து சமிக்ஞை செய்யவும் வேண்டும். அவ்

வாறு சாஸ்திர நிபுணர்கள் கம்பியில்லாத்தந்தி விஷயமாய் யோசனை செய்தார்கள். மின்சார சக்தி கம்பிவழியாய்ச் செலுத்தப்பட்டால் விசையுடன் செல்வதால் அதைக் கிரகித்து சமிக்ஞையுண்டுபண்ணுவதுகஷ்டமல்ல. ஆனால் கம்பியில்லாத்தந்தியில், மின்சாரம் ஜலத்தின் வழியால் அனுப்பப்படும்போது அதன் சக்தியை இழந்துவிடுவதால், அதைக் கிரகிப்பதற்கு துட்பமான கருவி தேவையா யிருக்கிறது. கம்பி யில்லாத் தந்தி வெகுதூரம் சென்று வேலை செய்யவேண்டுமானால் இவ்வழிகளில் ஆராய்ச்சி செய்வது அவசிய மென்று சாஸ்திர நிபுணர்கள் உணர்ந்தார்கள்.

"மின்சார அலைகள்."

சாஸ்திர நிபுணர்கள் ஆரம்பத்தில் செய்த பரிக்ஷைகளில் மின்சார சக்தியைப் பலவிதமாய் உண்டு பண்ணிப் பார்த்தும், கம்பியின் உதவி யில்லாமல் வெகுதூரம் செல்லக்கூடவில்லை என்று அறிந்தார்கள். ஆனால் 1887-ம் வருஷத்தில் ஜெர்மன் ப்ரொபஸர் ஹெர்ட்ஸ் என்பவர் செய்த ஆராய்ச்சியானது, தற்போது வேலை செய்துவருகிற கம்பியில்லாத் தந்திக்கு முக்கிய ஆதாரமா யிருந்து வருகிறது. மின்சார சக்தியைக் கொண்டி நெருப்புப் பொறிகளைப்செய்தால், அந்தப் பொறியானது மின்சாரத்தை அலைகளாகச் சுற்றிலும் வீசுகிறதென்று கண்டுபிடித்தார். அதாவது அந்தப் பொறியா லுண்டாகும் மின்சார சக்தியானது அலைகள் போலத காவிச்செல்கிறது. மின்சாரப் பொறி விஷயமாய்ச் செய்யப்பட்ட இரண்டு பரிக்ஷைகளைப் பற்றிச்சொல்லுவோம். ஒரு வீட்டில் மின்சாரப் பொறியொன்று ஒரு அங்குல நீளத்துக்கு உண்டுபண்ணப் பட்டபோது, இரண்டு மைத்தைகளுக்கு மேல் 30 அடி உயரத்திலிருந்த ஊசிக்குக் காந்த சக்தி உண்டாயிற்று என்று தெரிய வந்தது. பிறகு அந்த ஊசிக்கு பதிலாகஒரு குழாயில் உலோகத்துண்டுகளைப் போட்டு பரிக்ஷை செய்ததில் 500 கஜத்தக்கபால் உண்டாக்கிய மின்சாரப்பொறி அந்த குழாயைப் பாதித்தது என்று தெரியவந்தது. இதனால் இரண்டு முக்கியமான விஷயங்கள் அறியப்பட்டன. முதலாவது, மின்சாரப் பொறி மின்சாரத்தை அலைகளாகச் செய்து விசேஷ விசையுடன் செலுத்துகிறது. இரண்டாவது, உலோகத்துண்டுகளையுடைய ஒரு குழாய் மின்சார அலைகளை எளிதில் கிரகிக்கக்கூடிய துட்பத்தை உடையதாயிருக்கிறது. ஆகையால் தந்தி அனுப்பும் ஸ்தலத்தில்

மின்சாரப் பொறியைக் கொண்டு மின்சாரத்தை அலைகள் போலச் செலுத்தினால் அதிக விசையுடன் அனுப்பலாமென்று ஏற்படுகிறது; மேலும் தந்தியைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மின்சாரத்தைக் கிரகிப்பதற்காக அந்த நுட்பமான குழாயை உபயோகிக்கலாமென்றும் ஏற்படுகிறது. இந்த உண்மைகளைத் தான் ஆதாரமாகக் கொண்டு இப்போதுள்ள கம்பியில்லாத் தந்தி வேலை செய்து வருகிறது. சாதாரண தந்தியை மின்சாரக் கம்பித்தந்தி என்று சொல்வதுபோல, கம்பியில்லாத் தந்தியை மின்சார அலைத்தந்தி என்று சொல்லலாம்.

மார்க்கோனி என்ற பேர்பெற்ற நிபுணர்.


கம்பியில்லாத் தந்தி சம்பந்தமாய் மார்க்கோனி என்ற நிபுணரின் பெயர்பிரபலமாயிருப்பதுபோல, வேறெவருடையபெயரும் அவ்வாறு வழங்குவதில்லை. இடாலி தேசத்தவராகிய அவர், 1875-ம்வருஷம் பிறந்துமின்சார சாஸ்திரத்தில் அநேக பரிக்ஷைகள் செய்து பிறகு இங்கிலாந்துக்குச் சென்று அந்த சாஸ்திரத்தில் தேர்ச்சி அடைந்தார். 1894-ம் வருஷ முதல் கம்பியில்லாத் தந்தியைப் பற்பலவித மாய்விருத்திசெய்துவருகிறார். அவருடைய முறைப்படிதான் அநேக மாய் எல்லாதேசங்களிலும் கம்பியில்லாத் தந்தி வேலை செய்யப் பட்டு வருகிறது. கம்பியில்லாத் தந்தியில் அது வரையிலும் செய்யப்பட்டு வந்த பரிக்ஷைகளும் உபயோகிக்கப்பட்ட கருவிகளும், சாஸ்திர ஆராய்ச்சிச் சாலையில் உபயோகிக்கக் கூடியவையே யன்றி, உலகவழக்கத்துக்குக்கொண்டு வரக்கூடியவையல்ல. இதனை உணர்ந்த ப்ரொபஸர் மார்க்கோனி அநேக பரிக்ஷைகள் செய்யத் தொடங்கினார்.

"ஆகாயக்கம்பி."

தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், மின்சாரப்பொறியை உண்டாக்கி மின்சாரத்தை அலைகள் போலச் செலுத்தினால் அதிகவிசையுடன் அனுப்பலாமென்று மேலே சொல்லப்பட்டது. தந்தியைப்பெற்றுக் கொள்ளும் ஸ்தலத்தில், மின்சார அலைகளைக் கிரகிப்பதற்காக அதி நுட்பமான குழாயை உபயோகிக்கலாமென்றும், மேலே சொல்லப் பட்டது. ஆனால் அந்தக் குழாயானது எவ்வளவு நுட்பமான சக்திபெற்றிருந்தாலும் அதிக தூரத்தில் கொண்டுபோகப்பட்டால் மின்சார அலைகளை அவ்வளவு தெளிவாகக்குறிப்பிடவில்லை. ஏனென்

மூல் அந்தச் சிறிய குழாயின் மேற்புறம் அவ்வளவு வின்சாரமா யில்லாதபடியால் மின்சார அலைகளை ஜால்தியாய்க்கிரகிப்பதற்கில்லை. இந்தக் குறையை நீக்கும்பொருட்டு ப்ரொபஸர் மார்க்கோனி 1896ம் வருஷத்தில் ஓர் உபாயஞ் செய்தார். உயரமான கம்பியை அந்தக் குழாயுடன் சேர்த்தால் அந்தக் கம்பியானது மின்சார அலைகளை மிகுதியாய்க் கிரகித்து அந்தக் குழாயில் செலுத்துகிறதென்று தெரிய வந்தது. அந்தக் கம்பியானது அந்தக் குழாய்க்கு உதவியா யிருக்கிறது. ஆகையால் நீளமான கம்பி ஒன்றை ஊடுவதற்கு ஏற் பாடு செய்தார். உயரமான ஸ்தம்பத்தை பூமியில் நாட்டி அதன் மேல் மூணியில் வெகு நீளமான கம்பியை நட்டார். இதற்கு "ஆகாயக்கம்பி" என்று பெயர். இந்த ஆகாயக்கம்பியைக்கொண்டு ஓரிடத்திலிருந்தமற்றோரிடத்துக்கு மார்க்கோனி தந்தி சமாச்சாரம் அனுப்பினதைப் பற்றிச் சொல்வோம். 1904-ம் வருஷத்தில் இங்கி லாந்துக்குத் தென் மேற்கேயுள்ள லிஜர்ட் என்ற தூறைமுகத்தி லிருந்து 200-மைல் தூரத்திலுள்ள ஐல் ஆப் வொயிட் என்ற தீவுக்கு கம்பியில்லாத் தந்தி மூறைப்படி சமாச்சாரம் அனுப்பப்பட்டது. தந்தி அனுப்பும் ஸ்தலத்திலும், தந்தியைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்திலும் உயரமான ஸ்தம்பங்களை நாட்டி அவைகளின்மேல் ஆகாயக்கம்பியை நட்டுமற்றயந்திரங்களையும் பூட்டி ப்ரோபஸர் மார்க் கோனி சமாச்சாரம் அனுப்பினார். தந்தி அனுப்பும் ஸ்தலத்தில் செய் யப்பட்ட ஏற்பாட்டைப் பற்றிச்சொல்லிய பிறகு தந்தி பெற்றுக் கொள்ளும் ஸ்தலத்தைப்பற்றிச் சொல்வோம்

தந்தி அனுப்பும் ஸ்தலம்.




1. மின்சாரப் பொறி உண்டுபண்ணும் யந்திரம்.
2. மின்சாரப் பொறி இளம்புல் இடம்.
3. ஆகாயக் கம்பி.
4. ஸ்தம்பம்.
5. மின்சார யந்திரம் தரையுடன் சேர்க் கப்படும் இடம்.

தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், ஆகாயக்கம்பி உயரமான ஸ்தம் பத்தின்மேல் நடப்பட்டது. அதற்கருகில் மின்சார சக்தியைக் கொண்டு பொறி இளம்பச் செய்வதற்கு ஒரு யந்திரம் வைக் கப்பட்டது. அந்த யந்திரம் ஆகாயக் கம்பியுடன் சேர்க்கப் பட்டது. பூமியுடனும் சம்பந்தப்படுத்தி யிருந்தது. அந்த யந்தி ரத்தில் மின்சாரப் பொறி யுண்டுபண்ணவேண்டும். மின்சாரப் பொறி, மின்சாரத்தை அலைகள்போல வீசும் தன்மை யுடைய தென்று மேலே சொல்லியிருக்கிறோம். அவ்வாறு மின்சார யந்திரத் தில் உண்டாகும் அலைகள் ஆகாயக் கம்பியால் காலா பக்கங்களிலும் செலுத்தப்படுகின்றன. ஏனெனில், மின்சாரப் பொறி யுண்டாகும் யந்திரத்துடன் ஆகாயக் கம்பி சேர்க்கப்பட் டிருக்கிறது.

மின்சாரப் பொறியால் உண்டாகும் அலைகளை ஆகாயக் கம்பி மூலமாய்ச் செலுத்தவேண்டுமென்று மார்க்கோனி ஏற்பாடு செய்த தில் என்ன விசேஷம்? மின்சார அலைகளை விசாலமாக்கிச் செலுத்து வதில், ஆகாயக் கம்பி மிகுந்த சக்தி யுடையது. அந்தக் கம்பியால் செலுத்தப்படும் அலையின் நீளம் கம்பியின் உயரத்தைப்பற்றியது. அலையின் நீளம் கம்பியின் உயரத்துக்கு நான்கு மடங்கா யிருக்கு மென்று மதிக்கப்படுகிறது. 200 அடி உயரமுள்ள ஆகாயக் கம்பியால் செலுத்தப்படும் அலையானது சுமார் ஒன்றரை பர் லாங்க் நீளமிருக்கும். ஆகையால் ஆகாயக் கம்பி அதிக உயரத்தி லிருந்தால் அதனால் செலுத்தப்படும் அலைகளும் அதிகப் பெரிதா யிருக்கும். ஆகாயக் கம்பியைக் கூடுமானவரையில் உயரமாய் வைப் பது நல்லது. மேலும் அந்தக் கம்பி பூமியுடன் சேர்க்கப்படவேண் டும். அவ்வாறு சேர்க்காவிட்டால் மின்சார அலைகள் அதிக தூரம் செல்லக்கூடவில்லை யென்று தெரியவந்தது. பூமியின் சம்பந்தத் தால் மின்சார அலைகளுக்குச் சக்தி அதிகரித்து வெகுதூரம் செல் லும். இந்த ஏற்பாடுகளைக் கொண்டு ஆகாயக் கம்பியால் காலா பக்கத் திலும் செலுத்தப்படுகிற மின்சார அலைகள் ஜலத்தினூலோ தரையி னூலோ இழுக்கப்பட்டு சென்று கொண்டிருக்கின்றன. இவ்வாறு "தந்தி அனுப்பும் ஸ்தலத்தி" லிருந்து சென்றுகொண் டிருக்கிற அலைகளை, "தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில்" எவ்வாறு கிர கித்துக் குறிப்பிட்டார்கள் என்பதைப்பற்றிச் சொல்வோம்.

தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலம்.



1. சமிக்ஞைக் கருவி.
2. உலோகத் துண்டுகளையுடைய நுட்பமான குழாய்.
3. ஆகாயக்கம்பி.
4. ஸ்தம்பம்
5. நுட்பமான குழாய்தரையுடன் சேர்க்கப்படும் [இடம்.

தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்திலும், உயரமான ஸ்தம்பத்தின் உச்சியில் நீளமான கம்பி நடப்பட்டது. உலோகத் துண்டுகளையுடைய சிறியகுழாய் ஒன்று அந்த ஆகாயக் கம்பியுடன் சேர்க்கப்பட்டது. அந்தக் குழாய் பூமியுடனும் சேர்க்கப்பட்டது. அந்தக் குழாயுடன் சற்று தூரத்தில் சமிக்ஞை செய்யும் கருவி யொன்று சேர்க்கப்பட்டது. தந்தி ஆபீஸ்களில் சாதாரணமாய் உபயோகிக்கப்படும் சமிக்ஞைக் கருவிதான் இங்கும் உபயோகிக்கப்பட்டது.

தந்தி அனுப்பும் ஸ்தலத்திலிருந்து காலாபக்கங்களிலும் சென்று கொண்டிருக்கிற மின்சார அலைகளை "பெற்றுக்கொள்ளும்ஸ்தலத்தி" லுள்ள இந்த ஆகாயக்கம்பி கிரகித்துக் கொள்கிறது. ஆகாயக் கம்பியால் கிரகிக்கப்பட்ட அலை அந்த நுட்பமான குழாயைத் தாக்குகின்றது. இந்தக் குழாய் மின்சார அலையால் தாக்கப்பட்டவுடன், மின்சார சக்தியைப் பெறுவதால் அதற்குச் சற்று தூரத்திலுள்ள சமிக்ஞைக் கருவியை வேலைசெய்யத் தூண்டுகிறது. சமிக்ஞைக் கருவி வேலை செய்யும் விதம் முன்பு சொல்லப்பட்டிருக்கிறமாதிரிதான். மின்சார அலையொன்று ஆகாயக் கம்பியால் கிரகிக்கப்பட்டு குழாயில் செலுத்தப்படுகிறது. அந்த குழாய் மின்சார சக்தியை அடைந்தவுடன் சமிக்ஞைக் கருவியிலுள்ள ஸ்ஃபாணி

யின் ஒரு முனையைக் கீழே யிழுக்கிறது. எழுத்தாணியின் மற்றொரு முனை ஒரு குறி போடுகிறது. மின்சார அலை நின்றவுடன் அந்தக் குழாய் மின்சார சக்தியை இழந்துவிடுகிறது. எழுத்தாணியும் குறிபோடுவதை நிறுத்திவிடுகிறது. மற்றொரு மின்சார அலை வந்த வுடன் மற்றொரு குறி போடப்படுகிறது. இவ்வாறு மூன்றுதரம் நிறுத்தி நிறுத்தி அலைகள் அனுப்பப்படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். சமிக்ஞைக் கருவியில் மூன்று குறிகள் காணப் படும். இந்த மூன்று குறிகள் கொண்டது ஒரு எழுத்தென்று பாவித்துக்கொண்டு தந்தி சமிக்ஞைகளால் வார்த்தைகள் அறியப் படுகின்றன.

ஆகாயக் கம்பியின் பிரதான்யம்.

ஆகாயக் கம்பி மின்சார அலைகளை விசாலமாய் அனுப்புவதற்கு அதிக சக்தி யுடைய தென்று முன்பு சொன்னேம். அதேமாதிரி, விசாலமாய்ப் பரவி வருகிற அலைகளைக் கிரகிப்பதற்கும், அந்தக் கம் பிக்கு விசேஷ சக்தி யிருக்கிறது. கம்பி மிகவும் நீண்டிருந்தால் விசாலமான அலைகளை அதிகமாய்ப் பிடித்துக் கிரகிக்கும். ஆகை யால் கம்பி எவ்வளவு உயரமா யிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய் மின்சார அலைகளைக் கிரகிக்கும். உலோகத் தூண்டுகளை யுடைய சிறிய குழாய் எவ்வளவு நுட்பமா யிருந்தாலும் அதன் மேற் புறம் அவ்வளவு விஸ்தாரமா யில்லாதபடியால் மின்சார அலைகளை ஜாஸ்தியாய்க் கிரகிப்பதற்கில்லை. ஆனால் நீளமாயுள்ள ஆகாயக்கம்பி யானது அந்த அலைகளை அதிகமாய்க் கிரகித்து, நுட்பமான குழாய்க் குள் செலுத்துகிறது. அப்போது தான் அந்தக் குழாய் மின்சார சக்தியை அதிகமாய்ப் பெற்றுக்கொண்டு, சமிக்ஞைக் கருவியை வேலை செய்யத் தூண்டுவதற்குப் போதுமான சக்தி அடையும். மின் சார அலைகள் ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலிருந்து அனுப்பப் படுமானால் மிகவும் பலஹீன மடைந்துவிடுமென்பதைக் கவனிக்க வேண்டும். அப்போது ஆகாயக் கம்பி யில்லாவிட்டால் அந்த நுட்ப மான குழாய் கொஞ்சங்கூட மின்சார சக்தியைப் பெற்றுக்கொள் ளாது. அப்போது சமிக்ஞைக் கருவியும், வேலை செய்யாது. ஆகையால் நீளமான ஆகாயக் கம்பி அவசியமாகிறது.

யந்திரத்தைப் பொருந்தச்செய்தல்.

மின்சார அலைகள் ஆகாயக்கம்பியால் நாலாபக்கங்களிலும்

செலுத்தப்படுகின்றன வென்று சொன்னேனும். உதாரணமாக, 150 அடி உயரமுள்ள ஆகாயக்கம்பியிலிருந்து புறப்படும் மின்சார அலைகள் சுற்றிலும் 200 மைல் வரையிலும் சென்றுகொண்டிருக்கும். அப்படி எல்லாத்திக்கிலும் குறிப்பிட்ட தூரம் வரையிலும் செல்லுமாறுல், அந்த வட்டத்துக்குள் காலாதிக்கிலும் வைக்கப்பட்டுள்ள "தந்தி பெற்றுக்கொள்ளும்" யந்திரங்களெல்லாம் சமிக்ஞைகளைத் தெரிவிக்கத்தொடங்கும். காலா பக்கங்களிலுள்ள யந்திரங்களெல்லாம் இவ்வாறு ஒன்றை யொன்று பாதிக்கக்கூடும். அதனுல் சமிக்ஞைகள் குழம்பிவிடும். தந்தி சமாச்சாரங்களும் ரகஸ்யமாயிருக்க முடியா. ஆகையால் தந்தி அனுப்பும் யந்திரமும் தந்தி பெற்றுக் கொள்ளும் யந்திரமும் ஒரே அளவுள்ள சக்தி கொண்டதாய்ச் செய்யப்படுகின்றன. அப்படிச் செய்வதால், அவைகள் மற்ற யந்திரங்களைப் பாதிக்காமலும் மற்ற யந்திரங்களால் பாதிக்கப்படாமலும் இருக்கின்றன. தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், மின்சாரப்பொறியை யுண்டுபண்ணும் யந்திரத்தில் சில உபாயங்கள் செய்து அதிலிருந்துண்டாகும் மின்சார அலைகள் குறிப்பிட்ட நீளமுள்ளதாய்ச் செய்யப்படுகின்றன. அதே மாதிரி தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மின்சார அலைகளைக் கிரகிக்கும் யந்திரத்தில் சில உபாயங்கள் செய்து குறிப்பிட்ட நீளமுள்ள அலைகளையே பெற்றுக்கொண்டு சமிக்ஞை செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதனுல் இவ்விரண்டு யந்திரங்களும் ஒன்றோடொன்று பொருந்திவேலை செய்யும்; மற்ற யந்திரங்களுக்குப் பதில் கொடுக்கா. உதாரணமாக பம்பாயிலிருந்து 300 கஜ நீளமுள்ள மின்சார அலைகளைக்கொண்டு சென்னைக்கு சமிக்ஞை செய்யப் படுகிறதென்று வைத்துக்கொள்வோம். சென்னையில், 300 கெஜ நீளமுள்ள அலைகளைக் கிரகித்துக் குறிப்பிடக்கூடிய யந்திரத்தைப் பூட்டவேண்டும். அது ஆகாயக் கம்பியுடன் பூட்டப்படவேண்டும். சென்னையில் வேறு யந்திரம்பூட்டப்பட்டால் பம்பாயிலிருந்துவரும்சமிக்ஞைகளை அதுகுறிப்பிடாது.

வெகுதூரம் தந்தி அனுப்புதல்.

மேற் சொன்னவாறு யந்திரங்களைப் பொருந்தும்படிச் செய்தால் சமிக்ஞைகளை அதிக தூரம் அனுப்பச் சாத்தியமாகு மென்றும் தெரியவந்தது. அட்லாண்டிக் மகாசமுத்திரத்துக்குச் குறுக்கே சுமார் 2000-மைல் தூரம் 1901-ம் வருஷம் டிசம்பர்மாதம் பேர்

பெற்ற நிபுணராகிய மார்க்கோனி சமாசாரம் அறிவித்தார். இங்கி லாந்துக்குத் தென் மேற்கிலுள்ள ஒரு தீபகற்பத்திலிருந்து மகா சமுத்திரத்துக்கு எதிர்க் கரையாகிய நியூபவுண்லாந்து என்ற தீவுக்குச் சமாசாரம் அனுப்பினார். இங்கிலாந்திலுள்ள தீபகற்பத்தில் இரண்டு ஸ்தம்பங்கள் நடப்பட்டு அவைகளுக்கு இடையே 150 அடி உயரமுள்ள 50-கம்பிகள் விசிறிபோல் மாட்டப்பட்டன. நியூ பவுண்லாந்து தீவில் 400-அடி நீளமுள்ள ஒரு கம்பியை ஒரு காற் றாடியில் உயரத்தூக்கி, சமிக்ஞைகளைக் குறிப்பிடும் யந்திரத்தை மாட் டி; சமிக்ஞை செய்யப்பட்டது. வெகுதூரம் என்பதை லக்ஷியஞ் செய்யாமல் ஆயிரக்கணக்கான மைலுக்குத் தந்தி அனுப்பச் சாத்திய மாயிருப்பதுபற்றி கம்பியில்லாத் தந்தி மிகுதியும் பாராட்டப்படு கிறது. அது எவ்வாறு அனுப்பப்படுகிறதென்று இதுவரையில் சொல்லி வந்ததை இப்போது சுருங்கக் கூறுவோம்.

மின்சாரசக்தி வெகுதூரம் செல்வதற்கு மிகுந்த வேகங்கொண் டிருக்கவேண்டும். இதற்காக, யந்திரத்தில் ஏராளமான மின்சார சக்தி சேகரித்து வைக்கப்படுகிறது. மின்சாரத்தைச் சாதாரணமாய் அனுப்புவதைவிட மின்சாரப் பொறியைக் கொண்டு அலைகள் ரூப மாகச் செலுத்துவதால் அதிக வேகம் உண்டாகிறது. தவிர அந்த மின்சார அலையை உயரமான கம்பிமூலமாய்ச் செலுத்தினால் அதன் வீசை இன்னும் அதிகரிக்கிறது. அந்த ஆகாயக் கம்பி மின்சார அலை களைச்சுற்றிலும் வீசுகிறது. அந்தஅலைகள் ஜலத்தாலும் தரையாலும் இழுக்கப்பட்டு நாலாபக்கங்களிலும் செல்கின்றன. அலைகள் ரூப மாயுள்ள மின்சாரத்தைக் கிரகிப்பதற்கு விசேஷ சக்தியுடைய கருவி யொன் றிருக்கிறது. அந்தக் கருவியைக் கொண்டு, மற்றெவ்வித தாலும் அறியக்கூடாதபடி எங்கும் வியாபித்துச்செல்கிற அந்த மின் சார அலைகள் கிரகிக்கப்படுகின்றன. கம்பியில்லாத்தந்தி அல்லது மின்சார அலைத்தந்தி என்பது அவ்வாறு வேலை செய்யப்படுகிறது.


அவ்வாறு வேலை செய்யப்பட்டு வருவதில் சில வேறு பாடுகள் தெரிய வந்திருக்கின்றன. மின்சார அலையானது ஜலத்துக்குக் குறுக்கே அனுப்பப்பட்டால் தரையின் குறுக்கே செல்வதைவிட அதிக தூரம் போகிறதென்று தெரிய வருகிறது. கல்லு ஜலத்தைக் காட்டிலும் சமுத்திர ஜலத்தில் அதிக தூரம் செல்கிறது. கரும்பாந்த தரையைக்காட்டிலும் ஈரமான தரையில் அதிக தூரம் செல்கிறது.

பகற்காலத்தைவிட இராக்காலத்தில் அதிக தூரம் செல்கிறது. கம்பியில்லாத் தந்தியில் இன்னும் பற்பல குறைகளிருக்கிறபடியால் சாஸ்திர நிபுணர்கள் வெகு ஊக்கமாய் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அது வேலை செய்யும் முறையை யாவரும் எளிதில் அறியும்பொருட்டு அதற்கு ஆதாரமாயுள்ள மூக்கிய அம்சங்களை மாத்திரம் இங்கு குறிப்பிட்டு மற்ற விவரங்களைச் சொல்லாமல் விட்டிருக்கிறோம்.


ஸ்தம்பத்தின் மேல் மாட்டப்படுகிற ஆகாயக் கம்பி வேறுவித மாயும் அமைக்கப்படுகிறது. ஸ்தம்பத்தின் மூனையில் அந்தக் கம்பியை உயரமாய் நடுவதற்குப் பதிலாக அநேக ஸ்தம்பங்கள் விசாலமாய் நடப்பட்டு அவைகளின் மூனைகள் ஒன்றொடொன்று கம்பிகளால் சேர்க்கப்படுகின்றன. ஆகையால் அந்த ஸ்தம்பங்களின் மேலே விஸ்தாரமான கம்பிவலை போடப்பட்டிருக்கும். அந்த விஸ்தாரமான வலை, ஆகாயமார்க்கமாய் வருகிற மின்சார அலைகளை ஏராளமாய்க் கிரகித்துக் கொள்ளுகிறது. அந்த வலைக்குக் கீழே தரையில், சிறு கட்டடத்துக்குள் சமிக்ஞை செய்யும் கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடமும் ஆகாயத்திலுள்ள வலையும் பல கம்பிகளால் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கப்பல்களில், அதிலுள்ள பாய்மரத்தின் மூன கப்பலின் இரண்டு மூனைகளோடு கம்பிகளால் கட்டப்படுகிறது. அம்மாதிரியாகப் பூமியில் ஒரே ஸ்தம்பத்தை நட்டு அதன் பக்கங்களில் கம்பிகள் கட்டப்படுகிறது முண்டு.

உபயோகங்கள்.


பொதுவாய் அதன் உபயோகம் தந்திக் கம்பிகள் போடமுடியாத இடங்களுக்கும் போட்டிராத இடங்களுக்கும் சமாசாரம் அறிவிப்பதாகும். உண்மையில், நினைத்த விடத்துக்குச் சமாசாரம் அனுப்பக் கூடுமென்றே சொல்லலாம். தந்திக்கம்பி போடுவதென்றால், முக்கிய மாய் சமுத்திரம், மலை, ஆறு இவைகளுக்குக் குறுக்கே கம்பிபோடுவதென்றால் எளிதில் ஆகக்கூடியதல்ல. மார்க்கோனி கண்டுபிடித்த முறைப்படிதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலும் எல்லாக் கப்பல்களிலும் உபயோகிக்கப்படுகிறது. கப்பல் விபத்துகளில், உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் தவிர்க்கப்பட்டும் குறைக்கப்பட்டு மிரு




யுத்த கப்பலில் கம்பியில்லாத் தந்தி யந்திரம் பூட்டப்பட் டிருக்கிறது. கப்பலின் மத்தியிலுள்ள பாய் மரச்தின் உச்சியிலிருந்து, கப்பலின் இரண்டு மூனைகளுக்கும் கம்பிகள் கட்டப்பட் டிருக்கின்றன. அந்த கம்பிகள் தந்தி யந்திரத்தைச் சேர்ந்தவை.



ஆகாயவிமானம் பரந்து செல்கிறது. விமானத்தின்மேல் முன்புறத்திலுள்ள மனிதனுக்கு முன்பாக, இரண்டு சிறு கொம்புகளில் கம்பிகள் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.




கடற்சுரங்கத்திலுள்ளகருவிகள் இப்படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. 1-வது நெம்பர்—கப்பல் மோதுகிற இடம். அந்த குழாய் மோதப்பட்டவுடன், 2-வது நெம்பருள்ள இடத்தில் தீ உண்டாகிறது. 3-வது நெம்பருள்ள இடங்களில் வெடி மருந்து இருக்கிறது. அது தீப்பற்றி வெடிக்கிறது. 4-வது நெ. பளுவுக்காக கட்டப்படுகிற பெட்டி. அதனுள்ளேநீளமான கம்பி சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. 5-வது நெ. இரும்புக்கொக்கி.




அந்த சுரங்கத்தை கடலில் போட்டவுடன் அது எவ்வாறு பிரிந்து நிலைபெறுகிறதென்பதை இப்படம் காட்டுகிறது. கடலின் ஆழம் 60 அடி என்று வைத்துக்கொள்வோம். சுரங்கள் 20 அடி ஆழத்தில் அமுங்கி யிருக்கவேண்டுமானால், சுரங்கத்திலுள்ள இரும்புக் கொக்கியை அக்க 20 அடி நீளத்துக்குக் கட்டிவிடவேண்டும். கடலின் ஆழம் 60 அடி என்று வைத்துக்கொண்டு, மற்ற விவரங்களை படத்தில் படித்துப் பார்க்கலாம்.



இது சிகிச்சைப்படையின் வேலைகளைக்காட்டுகிறது. படத்தின் வலது புறத்தில் காயம்பட்ட வீரனை இரண்டு கொம்புகளுக்கிடையில் கட்டப்பட்ட தணியின்மேல் வைத்துக்கொண்டு வருவதைக் காணலாம். பிரதம ஆஸ்பத்திரியிலிருந்து மோட்டார்களில் வியாதியஸ்தர்கள் கொண்டுபோகப்படுகிறார்கள். 364-ம் பக்கம் பார்க்க.



சோதனை விளக்கு மோட்டார்வண்டியின்மேல் வைத்துக்கொண்டுபோகப் படுகிறது. 247-ம் பக்கம் பார்க்க.



கம்பியில்லாத் தந்தி யந்திரம் எவ்வாறு வேலை செய்கிற தென்பது இங்கு காட்டப்பட்டிருக்கிறது. மிகவும் உயரமான ஸ்தம்பங்களுக்கு மத்தியில் தரையில் ஒரு கட்டடமிருக்கிறது. மின்சார சமிஞ்ஞைகள் அந்த கட்டடத்துக் குள்ளே செலுத்துவதற்காக, உயரத்திலிருந்த கம்பிகள் இரும்பாய் பூட்டப்பட் டிருக்கின்றன. உயரத்தில் நான்கு ஸ்தம்பங்களையும் சேர்த்துக்கட்டப்பட்டுள்ள கம்பிகள், அந்தரத்தில்செல்கிற மின்சார அலைகளைக் கிரகித்துக்கொள்கின்றன. அந்த மின்சாரம் ஒவ்வொரு பக்கத்திலும் ஆறு கம்பிகளின் வழியாய் கீழே இறங்குகிறது. கீழே நான்கு பக்கங்களிலிருந்தும் நான்கு கம்பிகள் சென்று கட்டடத்தின்மேல் மத்தியில் சேர்கின்றன. அவ்விதமாய், ஆகாயத்தில் பாய்கிற மின்சார சமிஞ்ஞைகளை கட்டடத்திலுள்ள உத்தியோகஸ்தர் அறிந்துகொள் கிறார். 278-பக்கம் பார்க்க.

கின்றன. யுத்தங்களில் மிகவும் உபயோக முள்ளதென்றும் தெரிய வந்திருக்கிறது.

உலகமுழுவதும் கம்பியில்லாத் தந்தி மூலமாய் சமாசாரப் போக்குவரத்து நடத்தவேண்டுமென்று உலகத்தைச் சுற்றிலும் முக்கிய ஸ்தலங்களேத் தெரிந்தெடுத்து அங்கங்கே வன்மை பொருந்திய பெரிய யந்திரங்களே ஐரோப்பிய வல்லரசுகள் ஸ்தாபிக்கத்தொடங்கினர்கள். இந்த மகாயுத்தம் ஆரம்பித்தபோது, அந்த ஏற்பாடுகள் அநேகமாய்ப் பூர்த்தியிபெற்று வந்தது. வலுவான பெரிய யந்திரமொன்றை ஸ்தாபிப்பதற்குச் சுமார் ஒன்பது லக்ஷம் ரூபாய் செலவாகிறது. ஆயினும் ஒரே யிடத்தில் அத்தனே லக்ஷம் ரூபாய் செலவாகிறதால் அது அதிகமெனத்தோன்றலாம். அந்த யந்திரத்தால் சமாசாரம் அறிவிக்கக்கூடிய தூரத்துக்கு கம்பித்தந்தி போடுவதென்றால் அதைவிடப் பலமடங்கு அதிகத்தொகை செலவாகுமென்பதை அறியவேண்டும். தென் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குச் சாதாரண கம்பித்தந்திமூலமாய் சமாசாரம் அனுப்புவதற்கு, ஒரு வார்த்தைக்கு 6 ரூபாய் சார்ஜ்செய்யப்பட்டுவருகிறது. ஆனால் கம்பியில்லாத் தந்தி மூலமாய் அனுப்பப்படும் ஒரு வார்த்தைக்கு ஒரு ரூபாய் தான் சார்ஜாகிறது. இந்தக் காரணத்தால், அமெரிக்காவிலுள்ள யூனெடெட் ஸ்டேட்ஸ் தேசத்தில் பிரசுரமாகும் "சியூயார்க் டைம்ஸ்" என்ற பேர்பெற்றபத்திரிகை ஒவ்வொரு வாரமும் தூரதேசத்துச் சமாச்சாரங்களேக் கம்பியில்லாத் தந்தி மூலமாய்ப் பெற்று வருகிறது. அந்தப் பத்திரிகை ஒவ்வொருவாரமும்சுமார்25,000 வார்த்தைகள் கொண்ட தந்தி வர்த்தமானம் அம்மாதிரி தருவிக்கிறது. மேலும், அரண்மனே போலக் கட்டப்படும் பெரிய பிரயாணக் கப்பல்கள் மகா சமுத்திரங்களில் பல தினங்களாகச் சஞ்சரிக்கவேண்டியிருப்பதால் அதிலுள்ள பிரயாணிகள் அந்த தினங்களில் தேச வர்த்தமானங்களே அறியக்கூடாமலிருந்தார்கள். இப்போது அந்தக் குறையும் நீக்கப்பட்டிருக்கிறது. சமுத்திரத்தில் பிரயாணஞ் செய்கையில் ஒவ்வொரு தினமும் பற்பல தேசத்து வர்த்தமானங்கள் கம்பியில்லாத் தந்திமூலமாய்த் தருவிக்கப்பட்டு, பத்திரிகைகளாகக் கப்பலில் அச்சடிக்கப்படுகின்றன. மேலும், மகா சமுத்திரங்களின் நடுவே, சிறிய தீவுகள் அநேகமிருக்கின்றன; அவைகளிலுள்ள சொற்ப ஜனங்கள் உலகத்தாரினின்றும் பிரிக்கப்பட்டு வருந்துகிறார்கள்;

சமாசாரங்கள் கம்பியில்லாத் தந்தி மூலமாய்த் தருவிக்கப்பட்டு பத்திரிகைகளில் பிரசுரமாவதைக்கண்டு அவர்கள் களிப்படைகிறார்கள். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் ஒரு சிறு தீவிலிருக்கிற சொற்ப ஜனங்களுக்காக சமுத்திரத்துக்கடியில் கம்பித்தந்திபோடப்பட்டால் மிகுந்த செலவு பிடிப்பதோடு, தகுந்த வரும்படி யிராதகையால் நஷ்டமுமாகும். மேலும், இந்த நூதனத்தந்தி கண்டு பிடிக்கப்படுவதற்குமுன்னுல, பிரயாணக்கப்பல்களும் வியாபாரக்கப்பல்களும் கடலகலைக் கடந்து சென்றபோது சில கப்பல்கள் மாயமாய் மறைந்துபோனதைப் பற்றி கேள்விப் பட்டு வந்தோம். இப்போது ஒவ்வொரு கப்பலும் கம்பியில்லாத் தந்தி யந்திரத்தை அமைத்துக்கொண் டிருப்பதால் கடுச் சமுத்திரத்தில் ஆபத்துக்குள்ளாகித் தவித்துக்கொண் டிருந்தாலும் அந்த நூதன யந்திரத்தைக்கொண்டு கடலெங்கும் அபாய சமிக்ஞைகளை அனுப்பி மற்றக் கப்பல்களின் உதவியால் தப்பித்துக்கொள்ளலாம். சில வருஷங்களுக்கு முன் ஆபத்துக்குள்ளான ஒரு கப்பல் தான் இன்ன விடத்தில் அபாய நிலைமையிலிருப்பதாகத் தந்தியனுப்ப, அந்த சமிக்ஞைகள் மின்சார அலைகளாகப் புறப்பட்டு காலாபக்கங்களிலும் கடலின்மேல் தாவிச்சென்றன. அங்கங்கே சாவதானமாய்ப் போய்க்கொண் டிருந்த கப்பல்கள் தங்கள் யந்திரங்களில் தோன்றிய அபாய அறிக்கையைத் தெளிவாய்த் தெரிந்து கொண்டன. உடனே ஆபத்து நேர்ந்த யிடத்தைநோக்கி விரைந்து சென்ற கப்பல்கள் ஒன்றிரண்டல்ல; பற்பலதேசத்துக் கப்பல்கள் அநேகம் அங்கு சென்று, முழுகிக்கொண்டிருந்த கப்பலைச் சூழ்ந்து கொண்டு உதவி செய்யத்தொடங்கிய தோற்றம் ஆச்சரியமா யிருந்தது.

ஒவ்வொரு யுத்த கப்பலிலும் அந்த யந்திரம் அமைக்கப்பட்டிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. ஜலத்தில் முழுகும் கப்பல்களும் அதை உபயோகிக்கின்றன. சண்டைக் கப்பலிலும், ஜலத்தில் முழுகுங் கப்பலிலும் அந்த யந்திரம் பூட்டப்பட் டிருப்பதைச் சித்திரப்படத்தில் காணலாம். கம்பியில்லாத் தந்தி கண்டு பிடிக்கப்பட்டதற்கு முன்பு யுத்த கப்பல்கள் சத்துருவின் தேசத்துக் கடற்கரையில் முற்றுகை போடலாம்; இக்காலத்தில் அவ்வாறு முற்றுகைபோட்டுக் கடலின் கீழ் போடப்பட்ட தந்திக் கம்பிகளை அறு

த்துவிட்டாலும் சமாசாரப்போக்குவரத்தைத் தடுக்க முடியாது. ஜெர்மனி யிப்போது இதர தேசங்களுடன் கம்பியில்லாத் தந்தி மூலமாய் சமாசாரப் போக்கு வரத்தைத் தாராளமாய் நடத்திவரு கிறது.

கரைச்சண்டைகளிலும் அந்த நூதன யந்திரம் உபயோகிக்கப் படுகிறது. சேணியிலுள்ள காலாட்படை, குதிரைப்படை முதலி யவைகள் அந்த் யந்திரத்தை எளிதாய்க் கொண்டுபோகின்றன. கம்பி யில்லாத் தந்தி கண்டு பிடிக்கப்பட்டபோது, ஆரம்பத்தில் சில வரு ஷங்களாக அந்த நூதன யந்திரம் மிகப்பெரிதாயிருந்ததோடு, மின் சாரசக்தியை உண்டுபண்ணுவதற்கு மிகவும் பளுவான கருவிகள் தேவையாயிருந்தன. ஆகையால் அந்தக் கருவிகள் பெரிய கப்பல்களி லும் சகல வசதிகளையுடைய இடங்களிலுமே அடைப்பது சாத்திய மாயிருந்தது. ஆனால் இப்போது, அந்தக் கருவிகள் மிகச்சிறிதாயும் இலேசாயும் செய்யப்பட்டு வருகின்றன. காலாட் படையில், அந்தக் கருவிகளனைத்தையும் கொண்டுபோவதற்கு நான்கு பேர் போது மானது. ஒருவன் ஆகாயக்கம்பியையும், மற்றொருவன் தந்தி யனுப்பும் கருவியையும் தந்தி பெற்றுக்கொள்ளுங் கருவியையும், மற்றொருவன், ஸ்தம்பங்களைத் தரையில் நிறுத்துவதற்குத் தேவை யான கம்பிகளையும், மற்றொருவன் ஸ்தம்பங்களையும் மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவியையும் கொண்டு போகிறான். அந்தக் கருவிகளைப் பூட்டித் தயார்செய்வதற்குச் சில நிமிஷங்களே யாகும். அவ்வளவு சீக்கிரமாக அந்தக் கருவிகளை மறுபடி கழற்றிக்கொண்டு போகலாம். காலாட்படையில் அந்தக் கருவிகள் அவ்வாறு நான்கு பேரால் கொண்டுபோகப்படுவதும் போர்க்களத்தில் அவைகள் பூட் டப்படும் விதமும் நமது சித்திரப்படங்களில் காண்பிக்கப்பட் டிருக்கின்றன. அந்தக் கருவிகள் மொத்தம் 120 பவுண்ட் நிறை யிருக்கும் (அதாவது சுமார் ஒரு ஆட் பளுவாகிறது). கம்பியில் லாத் தந்திக்கு நீளமான ஸ்தம்பம் தேவை யென்று சொல்லி யிருக் கிறோம். அவ்வளவு நீண்ட ஸ்தம்பத்தை ஒருவன் எப்படி கொண்டு போகிறான்? அந்த ஸ்தம்பம் குழாய்போல் செய்யப்பட்டு குழாய்க்குள் குழாயாக நுழைக்கப்பட் டிருக்கிறது. ஒன்றுக்குள் ஒன்றாக அநேக குழாய்கள் நுழைக்கப்பட்டிருந்தால், அந்தக்குழாய் களை ஒவ்வொன்றாய் உருவிக்கொண்டே போனால் சுமார் 30 அடி

நீண்டுவிடும். மேலும் அலுமினியமன்ற இலேசான உலோகத்தால் அவை செய்யப்படுகின்றன. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குச் சிறு கருவி போதுமானது. 30 அடி உயரமுள்ள ஸ்தம்பத்தின் மேலும் பக்கங்களிலும் மெல்லிய ஆகாயக் கம்பிகளைக் கட்டி, மின்சார அலைகளை அவைகளின் மூலமாய் அனுப்பவும் வேறிடங்களிலிருந்து வருகிற அலைகளை அவைகளின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளவும் சாத்தியமாகிறது. அவ்வாறு சுமார் 100 மைல் தூரம் சமிக்ஞை செய்யலாம். குதிரைப் படையிலும் சுமார் 200 பவுண்ட் பளுவுள்ள சற்றுப் பெரிய யந்திரம் ஒரு குதிரையின்மேல் கொண்டு போகப்படுகிறது. மோட்டார் வண்டிகளிலும் ஆகாய விமானங்களிலும் அம்மாதிரியான யந்திரம் கொண்டுபோகப்பட்டு யுத்தகளத்தில் உபயோகிக்கப்படுகிறது.

23-வது அத்தியாயம்

சேனை.

யுத்தத்தொழிலை ஜனங்கள் அனைவரும் செய்துவந்த காலம்.

நாகரீகமில்லாத ஜாதியார் கூட்டங்கூட்டமாக சஞ்சரித்துக் கொண்டிருந்த காலத்தில் யுத்தம்தொடங்கினால் ஜாதியாரனைவரும் போர்க்களத்துக்குச் செல்வது வழக்கம். அந்த ஜாதியைச் சேர்ந்த ஒவ்வொருவனும் வீரனாகக் கருதப்பட்டான். அதிலுள்ள ஸ்திரீகளும் குழந்தைகளும் புருஷர்களோடு கூடச்சென்று யுத்த காலத்தில் ஆகாரமளிப்பது, சாமான்களைச் சுமப்பது முதலிய சில்லரை வேலைகளைச் செய்து வந்தார்கள். அப்படிப்பட்ட ஜாதியார் சற்று நாகரீகம் அடைந்து ஓரிடத்தில் நிலைபெற்று நிரந்தரமான தொழில்களைச் செய்யத்தொடங்கிய காலத்தில், புருஷர்களனைவரும் போர்க்களத்துக்குச்செல்ல,ஸ்திரீகளும் குழந்தைகளும்கிழவர்களும் தங்கள் இல்லங்களில் இருந்து வந்தார்கள். அந்த காலத்தில் குடும்பத் தலைவராவது அல்லது புகழ்பெற்ற தீரர்களாவது புருஷர்களைப் போருக்குச் செலுத்தினர்கள். ஒரு ஜாதியாரனைவரும் அந்த ஜாதியைச் சேர்ந்தவரென்ற காரணத்தால் சண்டை செய்யக்கடமைப் பட்டிருந்தார்கள். ஜனத்தொகையிலும் நாகரீகத்திலும் வரவர விருத்

கியடைந்த ஜாதியார், தங்களுடைய சத்துருக்களை எதிர்ப்பதற்காக திடகாத்திரமுள்ளவர்களை மட்டும் யுத்தத்துக்கு அனுப்புவது போதுமானதாயிருந்தது. அவ்வாறு அடிக்கடி யுத்தங்கள் நேரிட்டுக் கொண்டிருந்ததால், அவைகளில் வரவரத்தேர்ச்சியடைந்தவர்கள் போர்த்தொழிலையே அடிக்கடி செய்துவந்து பிறகு அத்தொழிலைச் செய்வதற்கென்றே தனிவகுப்பாகப் பிரிந்துபோகத் தொடங்கினர்கள். அந்த ஜாதியாரில் தேர்ச்சிபெற்ற வீரர்களனைவரும் தனி வகுப்பாகக் கருதப்பட்டு வந்தார்கள். மற்ற புருஷர்கள் வழக்கமான இதர தொழில்களைச் சாவதானமாய்ச் செய்துவந்தார்கள்.

யுத்தத்தொழிலுக்காகத் தனிவகுப்பார் ஏற்பட்டது.

அவ்வாறு ஒரு ஜாதியில் யுத்தஞ் செய்வதற்காகத் தனி வகுப்பு ஏற்பட்டது. ஈஜிப்ட் தேசத்தில் வெகு காலத்துக்கு முன்பு அவ்வாறு தனி வகுப்பொன்று ஏற்பட்டு தேசத்தின் கீர்த்தியும் செல்வமும் விருத்தியடைந்தன. அவ்வாறு நம் இந்தியாவிலும் யுத்தத் தொழிலை நடத்துவதற்கு க்ஷத்திரிய வகுப்பார் ஏற்பட்டனர். மற்றொரு வழியிலும் அவ்வாறு ஒரு தனி வகுப்பு ஏற்படுவதுண்டு. ஒரு ஜாதியார் அந்திய தேசத்தின்மேல் படையெடுத்து அத்தேசத்தை வசப்படுத்தி அங்குள்ளவர்களை அடக்கியாளத்தொடங்குவதால், அத்தேசத்து வாசிகளைத் தாழ்ந்தவராகக் கருதுவது சகஜமே. ஆங்கிலோ சாக்ஸன் அரசு புரியும் ஜாதியென்றும், அவர்களுக்கு மற்றவர்கள் ஊழியஞ் செய்யும் ஜாதியென்றும் ஜனங்கள் இரண்டு வகுப்பாகப் பிரிந்தனர். அநேக நூற்றாண்டுகளுக்குமுன் ஐரோப்பாவில் நாகரீகமே யில்லாதிருந்தபோது கிரேக்கர்கள் மட்டும் மிகுந்த நாகரீகம் பெற்று விளங்கினர். அவர்கள் தனித்தனியாக சிறு ராஜ்யங்களை ஸ்தாபித்து வாழ்ந்தனர். ஸ்பார்ட்டா என்ற ராஜ்யத்திலிருந்த கிரேக்கர்கள் புதிய பிரதேசங்களை வென்று அங்கிருந்த வாசிகளை அடிமைகளாகப் பாவித்தார்கள். அப்போது ஸ்பார்ட்டாவிலிருந்த கிரேக்கர்கள் தாங்கள் ஸ்வாதீனம் பெற்ற உயர் வகுப்பினரென்றும், தாங்கள் ஆயுதமேந்திப் போர் செய்யும் உரிமையைப் பெற்றவர்களென்றும் மற்றவர்களுக்கு அவ்வித விசேஷ உரிமையில்லை யென்றும் தங்கள் ராஜ்யத்தில் சட்டம் விதித்தனர். ஆகையால், அவர்களுடைய ராஜ்பத்தில், ஸ்வாதீனம் பெற்ற பிரஜைகளென்றும் ஸ்வாதீனம் பெறாத பிரஜைகளென்றும் இரண்டு வகுப்பு

கள் இருந்தன. கிரேக்கர்க ளனேவரும் சுவாதீனம் பெற்ற பிரஜைக ளாகக் கருதப்பட்டனர். சுவாதீனம் பெற்ற பிரஜைகளென்ற காரணத்தால் அவர்கள் யுத்தஞ்செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள்; யுத்தஞ் செய்வது தங்கள் கடமையென்று மட்டும் அவர்கள் நினேக்கவில்லே; அதை ஒப்பற்ற கௌரவமென்றும், விசேஷ சுதந்திரமென்றும் பாராட்டினர்கள். ஆனல் ஸ்பார்ட்டாவிலிருந்த கிரேக்கர்கள் சண்டை செய்யும் வகுப்பென்று தங்களுக்குள் னே தனிப்பிரிவை ஏற்படுத்தவில்லே.

பூமிகளேப்பெற்று யுத்தத்தொழிலேச் செய்தது.

ஆகையால் மேலே சொல்லியபடி, இரண்டுவிதமாக, ஒரு ராஜ்யத்தில் யுத்தஞ் செய்வதற்கென்றே தனி வகுப்பினர் ஏற்பட்டார்கள். ஆனல் யுத்தத் தொழில் அழிக்குந் தன்மையை யுடையது. ஆதலால் அவ்விதத் தொழிலேயே செய்துவந்த தனி வகுப்பினர் சீக்கிரத்தில் தொகையில் குறைந்து கடைசியில் அழிந்தே போய்விட்டதானது ஒரு ஆச்சரிய மல்ல. கிரேக்கர்கள் கூணமடைந்த காலத்தில் தாழ்ந்த வகுப்பினருக்குச் சில சுதந்திரங்களேக் கொடுத்து அவர்களேச் சேனேயில் அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளத் தொடங்கினர்கள். பிறகு சில மூலட்டு ஜாதியார் ஐரோப்பாவில் தோன்றி ராகரீகத்தை அழிக்கத் தொடங்கியபோது, ராகரீகம் பெற்ற ஜனங்கள் புதிய ராணுவ முறையை அனுசரித்தார்கள். சாமான்ய ஜனங்கள் மிகுந்த சாமர்த்தியம் பெற்ற போர்வீரர்களேத் தங்களுக்குத் தலேவர்களாக மேற்கொண்டு, சத்துருக்களே னின்றும் காத்துக்கொண்டார்கள். அரசர்கள் தங்கள் கீழுள்ள படைத்தலேவர்களுக்கு ராஜ்யத்தைப் பல பாகங்களாகப் பங்கிட்டுக்கொடுக்க, அந்தப் படைத்தலேவர்கள் ஜனங்களே ராணுவத்தில் பழக்கி யுத்த காலத்தில் சைன்ய உதவி செய்யவேண்டுமென்று அந்த காலத்தில் ஒரு ஏற்பாடு உண்டாயிற்று. படைத்தலேவர்கள் ராஜ்யத்தின் ஒரு பாகத்தைப் பெற்ற காரணத்தால் சைன்ய உதவிசெய்யக் கடமைப்பட்டிருந்தார்கள். அதற்கு மூன் ஒவ்வொரு படைத்தலேவனும் ஒவ்வொரு ஜனமும், ஸ்வாதீனம் பெற்ற பிரஜைகளா யிருந்த காரணத்தால் சண்டை செய்யக்கடமைப் பட்டிருந்தார்கள். இந்தக் கருத்து மாறிப்போய், ராஜ்யத்தினுள்ள பூமிகளேப் பெற்றதால் சண்டை செய்யவேண்டுமென்ற ஏற்பாடு உண்டாயிற்று.

சம்பளம்பெற்ற நிரந்தரமான சேனை.

ஆனல் படைத்தலைவர்கள் தங்கள் சொந்த பலத்தை விருத்தி செய்துகொண்டு அரசர்களின் அதிகாரத்தைக் குறைக்க முயற்சி செய்தார்கள். ஆகையால் அரசர்கள் அன்னியரை சேனையில்சேர்த்துத் தங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களை அடக்கினர்கள். மேலும், ஜனங்கள் வரவர சமாதானவழிகளைக் கைப்பற்றி பொருள் சேர்க்க ஆசைப்படுவது இயல்பாதலால், அவர்கள் யுத்த காலத்தில் சேனையில் சேராமலிருக்க விரும்பினர்கள். அவர்கள் யுத்தஞ் செய்யக்கடமைப் பட்டிருந்தபடியால், சேனையில் சேராமலிருப்பதற்கு அபராதப் பணம் கொடுக்கும்படி நேர்ந்தது. அரசர்கள் தங்கள் பிரஜைகளை சேனையில் சேரும்படி நிர்ப்பந்தஞ்செய்யாமல் அபராதப்பணத் தையே தவறுமல் வசூல்செய்து அன்னியரைத் தூருப்புகளாகச் சேர்த்தார்கள். ஆகையால் அரசர்கள் சத்துருக்களோடு யுத்தஞ் செய்வதற்கு தங்கள் பிரஜைகளின்உதவியில்லாமல், சம்பளம்பெற்ற தூருப்புகளை உபயோகித்தார்கள். அடிக்கடி யுத்தம் நேர்ந்ததால், அவ்வித சேனையொன்று நிரந்தரமாய் ஏற்பட்டு விட்டது. அந்த காலத்துக்கு மூன்னுல், நிரந்தரமான சேனையென்பதே கிடையாது. யுத்தகாலத்தில் அரசர் தமது பிரஜைகளை சேனையாகச் சேர்த்து யுத்தஞ்செய்தார். யுத்தம் முடிந்தபின், ஜனங்கள் மூன் போல் தங் கள் தொழில்களைச் செய்து வரத்தொடங்கினர்கள். அந்த காலத் துக்கு மூன்னுல், சம்பளத்துக்காக சண்டை செய்வதென்ப துங் கிடையாது. ஸ்வாதீனம் பெற்ற பிரஜைகளா யிருந்ததற் காக சண்டை செய்யக் கடமைப்பட் டிருந்தார்கள். இந்த கருத்து கள் மாறிப்போய், போர்த்தொழிலில் பற்று கொண்டவர்களையும் பொருளுக்கு ஆசைப்பட்டவர்களையும் அரசர்கள் தங்கள் சேனையில் சம்பளங்கொடுத்து சேர்த்து நிரந்தரமாய் வைத்திருந்தார்கள். ஆகை யால் ஜனங்கள் யுத்த காலத்தில் சேனையில் சேர்ந்து தங்கள் தேசத் தைக் காக்கக் கடமைப்பட் டிருக்கிறார்க ளென்பதை மறந்துவிட்டார் கள். அப்படிப்பட்ட பிரஜைகளை புடைய ராஜ்யம், அன்னியருக்கு சம்பளங் கொடுத்து நிரந்தரமான சேனையை வைத்திருந்தபோதி லும் சீக்கிரத்தில் க்ஷீணமடைந்தது.

ஆனல் அனுகரிகமான ஜாதியார், பழய காலத்து வழக்கப்படி, சண்டை செய்வது தங்கள் கடமை யென்று மதித்து வந்தார்கள்.

அந்த ஜாதியார், நிரந்தரமான சேனையையுடைய ராஜ்யங்களே எளிதாய் வென்றூர்கள். மிகுந்த நாகரீகம் பெற்றிருந்த கிரேக்கர்கள் அன்னியர்களே தருப்புகளாகச் சேர்த்து நிரந்தரமான சேனைகளே ஸ்தாபித்தபோது அனுகரீகமான ஜாதியாரால் வெல்லப்பட்டார்கள். பிரஸித்தி பெற்ற ரோம் ஏகாதிபத்தியமும் அவ்வாறே அழிந்தது. நம் இந்தியாவில் ஹிந்துக்கள் தங்கள் ராஜ்யங்களே யிழந்ததற்கும் அது ஒரு காரணமாகும். இந்தியாவில் முகம்மதிய அரசர்கள் நிரந்தரமான சேனையை வைத்திருந்தபோது, புதிய முகம்மதிய ஜாதியாரால் வெல்லப்பட்டார்கள்.

இதநிற்க, அரசர்கள் தங்கள் நிரந்தரமான சேனையின் வன்மையால் கொடுங்கோல் செலுத்த ஆரம்பித்தார்கள். அதனுல்ஜனங்கள் தங்கள்தேசத்தில் நிரந்தரமானசேனையை ஏற்படுத்துவதற்கு ஆக்ஷேபித்து அரசர்களின் அதிகாரத்தை மட்டுப்படுத்த முயற்சி செய்தார்கள். அவ்வாறு செய்யப்பட்ட முயற்சிகளால் கிரேட்பிரிட்டனில் வெகுகாலமாய் நிரந்தரமானசேனையில்லாமல், பிறகு சிறிய சேனைமட்டும் நிரந்தரமாய் ஏற்படுத்தப்பட்டது. இந்த மகா யுத்தம் ஆரம்பித்தபோது, பிரிட்டிஷ் சேனை மிகவும் சிறிதாயிருந்ததற்கு மேலே சொல்லப்பட்டவைகளே காரணமாகும். பிரிட்டிஷார் தங்கள் ராஜ்யத்தில் பெரிய நிரந்தர சேனையொன்றை ஸ்தாபிப்பதற்கு வெகுகாலமாய் ஆக்ஷேபங்கொண் டிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள யூனைடெட் ஸ்டேட்ஸ் தேசத்திலும், நிரந்தரமான சேனை தொகையில் மிகவும் சொற்பமானது. அதற்கு வேறொரு காரணமு மிருக்கிறதென்பதைக் கவனிக்கவேண்டும். கிரேட்பிரிட்டனும், யூனைடெட் ஸ்டேட்ஸும் அன்னிய ராஜ்யங்களால் படையெடுக்கப்படுமென்ற அபாயத்துக் குள்ளாகாமலிருக்கின்றன. பிரிட்டிஷார் கடல்களால் சூழப்பட்ட தீவில் வசிப்பதால், அன்னிய தேசத்துச்சேனைகள் கடல்களில் வெற்றியடைந்தா லொழிய அவர்களின்மீது படையெடுக்க முடியா. யூனைடெட் ஸ்டேட்ஸ் தேசத்துக்கருகில் வல்லமைகொண்ட ராஜ்யங்கள் எதுவுமில்லை. ஆனுல் பிரான்ஸ், ஜெர்மனி இவைகளைப் போன்ற ராஜ்யங்களின்நிலைமை வேறு. ஜெர்மனிக்கு மிதக்கே ருஷியாவும், தெற்கே ஸ்விட் ஜர்லாந்தும் ஆஸ்டிரியாவும், மேற்கே பிரான்ஸும், வடமேற்கே பெல்ஜியமும் ஹாலண்டும், வடக்கே டென்மார்க்கு மிருக்கின்றன. அந்த ஏழு ராஜ்யங்களும் ஜெர்மன் தேசத்தை

பொட்டி யிருக்கின்றன. அந்த ராஜ்யங்களின் பகையை எதிர்ப்பதற்கு பெரிய சேனையை நிர்மாணிப்பது அவசியமாகிறது.

முற்காலத்துக் கொள்கை மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டது.

பிரான்ஸ் தேசமும் மூன்று பக்கங்களில் அன்னிய ராஜ்பங்களால் சூழப்பட் டிருக்கிறது. ஆகையால், 120 வருஷங்களுக்கு முன்னால், பிரான்ஸ் தேசம் அன்னிய தேசத்துச் சேனைகளால் படையெடுக்கப்பட்டபோது, பெரிய பிரஞ்சு சேனை தேவையாயிருந்தது. பிரஞ்சு ஜனங்கள் தேசாபிமானத்தால் சேனையில் சேர்ந்துகொள்ள முன் வந்தார்கள். அப்போது, ஒவ்வொரு பிரஞ்சு பிரஜையும் தன் தேசத்தைக் காக்கும் பொருட்டு சத்துருக்களோடு சண்டைசெய்ய கடமைப்பட் டிருக்கிறனென்ற கொள்கை உண்டாயிற்று. அந்த கொள்கை இன்று வரையில் அதிகமாய் எல்லா ஐரோப்பிய ராஜ்யங்களிலும் இருந்து வருகிறது. அந்த காலத்துக்கு முன்னால், போர்த்தொழிலில் பற்றுடையவர்கள் மட்டும் அன்னியராயிருந்தாலுங்கூட சேனையில் சேர்க்கப்பட்டு நிரந்தரமாய் சம்பளம் பெற்று வந்தார்கள். இம்மாதிரியான சேனைகளைக்கொண்டு ராஜ்யங்களை காக்கும் முறை இப்போது கைவிடப்பட் டிருக்கிறது. வெகு காலத்துக்குமுன்னால் ஜனங்களனைவரும் தங்கள் தேசத்துப்பிரஜையாயிருக்கிற காரணத்தால் தேசத்தைக் காக்கக்கடமைப்பட்டிருந்தது.போல, இப்போது ஒரு ராஜ்யத்திலுள்ளவர்கள் சேனையில் சேரவேண்டுமென்று சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. பழய காலத்துக்கொள்கை இப்போது மறுபடியும் அனுஷ்டானத்துக்கு வந்திருக்கிறது. இப்போது இராஜ்யங்கள் பெரிதாய் ஸ்தாபிக்கப்பட்டு ஏகாதி பத்தியங்களாக விஸ்தரிக்கப்பட்டிருப்பதால், யுத்தத்தில் ஒன்றை யொன்று வெல்வதற்கு பெரிய சேனைகள் தேவையாயிருக்கின்றன. அப்படிப்பட்ட ஏகாதிபத்தியத்திலுள்ளவர்கள் தங்கள் தேசாபிமானத்தால் சத்துருக்களை வெல்லாமேயன்றி நிரந்தரமான சேனையை சிறிதாய் ஸ்தாபித்து யுத்தஞ் செய்வதில் பயனில்லை.

யுத்தத்தால் உண்டாகும் நன்மைகள்.

யுத்தமென்பது அழிக்குந்தன்மையை மட்டும் கொண்டுள்ள தென்று சாதாரணமாய் நினைக்கப்படுகிறது. யுத்தத்தின் பலனுகநாசமுண்டாவது உண்மை யென்றாலும் சில நன்மைகளும் உண்டாகின்றனவென்பதை கவனிக்கவேண்டும். யுத்தக் தொடங்கினால்

ஜனங்கள் தங்கள் விவகாரங்களையும் விரோத உணர்ச்சிகளையும் தள்ளி வைத்து அனைவரும் தோளோடு தோள் நின்று தங்கள் மூழு பலத்தையும் திரட்டி சத்துருக்களுக் கெதிரில் குவிக்க வேண்டும். ஆகையால் ஜனங்கள் கூட்டுறவில் பிரியங் கொண்டு, கலை வர்களுக்குப் படிந்து, ஜாதீய சக்தியா லன்றி வேறெவ்விதமாயும் செய்ய முடியாதகாரியங்களைச் சாதிக்கிறார்கள். அதனால் ஜனங்களுக்கு தங்கள் சாமர்த்தியத்திலும் சக்தியிலும் நம்பிக்கை முதிர்ந்து ஒரு ஜனமாக வாழப் பிரியங் கொள்கிறார்கள். ஒற்றுமைச்சியாலும் தேசாபிமானத்தாலும் ஜனங்க ளனைவரும் கட்டுப்பட்டுத் தங்கள் தேசத்து சுயேச்சையையும் ஜாதீய கௌரவத்தையும் காக்கச் சாதித்தியப் படுகிறது. ஜனங்க ளனைவரும் ஒரேமனதாய் பெரு முயற்சி செய்தால், அவர்களுக்கு உண்டாகும் மனோதிடனும் தென்பும் எப்படிப்பட்ட தென்று சொல்லத் தேவையில்லை. உயிர் உடல் உடமை களைவிட மானமும் தன் மதிப்பும் பௌருஷமும் முக்கியமானவை என்பதை உணருகிறார்கள். அவ்விதவிசேஷ குணங்களே அடிமைகளல்லாத ஜாதிய ரென்பதற்கு முக்கிய சின்னங்களாகும். உண்மையில், சுயேச்சையுடன் ஒருஜனமாக வாழ்வதின் இரகஸ்யங்களையுத்தமே உபதேசிக்கின்றது. ஜெர்மன் ஏகாதிபத்தியம் அவ்வாறே ஸ்தாபிக்கப்பட்ட தென்பதைச்சொல்லியிருக்கிறோம். இந்தகாலத்தில் ராஜ்யங்கள் ஜாதீய ஒற்றுமையால் நிலை பெற்றிருப்பதால், அவைகள் அந்த ஒற்றுமையாலே காக்கப்படவேண்டும்; ஆகையால் காக்குந் தொழிலை ஏற்றுக்கொள்கிற சேனையும் அந்த ஜாதீய ஒற்றுமையால் இந்தகாலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இந்த காலத்து சேனைகள் யுத்தகாலத்தில் எவ்வாறுசேர்க்கப்படுகிறதென்று சொல்வோம்.

ராணுவப்பதிவு சட்டம்.

1792–ம் வருஷத்தில் ஐரோப்பிய அரசர்கள் பிரான்ஸில் தோன்றிய ராஜாங்கப் புரட்சியை அடக்குவதற்காகக் கிளம்பிய போது, பிரான்ஸின் ராணுவ நிலைமை கேவலமா யிருந்தது. ஆயினும் பிரான்ஸுக்கு நேர்ந்த அந்தப் பெரிய ஆபத்தைத் தடுக்கும் பொருட்டு, பிரஞ்சு ஜனங்கள் தாமாகவே சேனையில் சேர்ந்து கொள்ள முன்வந்தார்கள். அவ்வாறு ஜனங்கள் சட்டத்தின் நிர்ப்பந்தமில்லாமல் தாங்களாகவே சேனையில் சேர இஷ்டப்பட்டால் அவர்களுக்கு வாலண்டியர்கள் என்று பெயர். மூன்று வருஷத்தில் 12

லக்ஷம் பிரஞ்சு வாலண்டியர்கள் சேனையில் சேர்ந்தார்கள். அவ் வாறு சேர்க்கப்பட்ட பிரஞ்சு சேனை 5 வருஷகாலம் சத்துருக்களை எதிர்த்து ஜயம் பெற்று வந்தது. ஆயினும், பிரஞ்சு யுத்தங்கள் வெகு காலம் நீடித்து நடந்தபடியால், அவைகளை நடத்துவதற்கு வாலண் டியர்கள் போதுமானவையாயில்லை. 1798-ம் வருஷத்தில் பிரான் ஸில், கான்ஸ்கிரிப்ஷன் அதாவது ராணுவப்பதிவு சட்டம் ஏற்படுத் தப்பட்டது. எல்லாப் பிரஜைகளும் சில வருஷங்கள் ராணுவத்தில் அமர்வதற்காக அவர்களின் பெயரைக் கவர்ன்மெண்டு பதிவு செய்து கொண்டார்கள். அந்தப் பிரஞ்சு சட்டத்தின்படி, ஒவ்வொரு புருஷப் பிரஜையும் ராணுவத்தில் ஐந்து வருஷம் அமர்ந்து வேலை பார்க்க வேண்டும். 20-வயது முதல் 25-வயது வரையிலுள்ள பிரஜைகளின் பெயரைக் கவர்ன்மெண்டு பதிந்துகொண்டு, தேவையானபோது ராணுவத்தில் சேரும்படி உத்தரவு செய்வார்களென்று நிச்சயிக்கப்பட் டது. இந்த ராணுவசட்டத்தினால்தான், பிரஸித்திபெற்றநெப்போலி யன் சக்கரவர்த்தி ஏராளமான ராணுவபலத்தைப் பெற்று ஐரோப் பிய ராஜ்யங்களை யெல்லாம் எதிர்த்து போர் விளைத்தார். நெப்போ லியன் ருஷியாமீது படையெடுத்தபோது, தமது பெரிய சேனை முழுவதும் பனியாலும் பஞ்சத்தாலும் அழிந்து போக, அந்த ராணுவ சட்டத்தினால்தான் அவர் சில மாதங்களுக்குள் பற்பலபெரிய சேனையை நிர்மாணித்துப் போர்க்களத்தில் மறுபடியும் ஜய சீலராய்த் தோன்றினார்.

பிரான்ஸின் அளவற்ற ராணுவ பலத்தை எதிர்ப்பதற்காக, மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களும் அந்த ராணுவ சட்டத்தை அனு சரிக்கும்படி நேர்ந்தது. ஒரு தேசத்துப் பிரஜைகள் ஒவ்வொரு வரும் ராணுவத்தில் சேரவேண்டுமென்ற முறை அநேகமாய் ஐரோப்பா முழுவதிலும் பரவி விட்டது. ஆனால் ஜர்மன் நாடுக ளுள் முக்கியமானதாகிய பிரஷ்யாவில் அந்த ராணுவப்பதிவு சட்டம் நூதன வழியில் மாற்றப்பட்டு ராணுவ பலம் பல மடங்கு விருத்தி செய்யப்பட்டது. நெப்போலியன், பிரஷ்யா தேசத்தின்மீது படை யெடுத்து பிரஷ்ய சேனையை முறியடித்தபிறகு, அந்த சேனையில் அது முதல் 43,000 திருப்புகளுக்குமேல் சேர்க்கப்படக்கூடா தென்று ஒரு நிபந்தனை விதித்தார். அதன்பிறகு, பிரஷ்ய ராஜ தந்திரிகள் தங்கள் தேசத்தின் ராணுவ பலத்தை எவ்வாறு

விருத்தி செய்வதென்று ஆலோசனை செய்தார்கள். அவர்கள் செய்த யோசனை என்னவென்றால், பிரஷ்ய சேனையில் 43,000 ஜனங்களைச் சேர்த்துப் பழக்கியபிறகு அவர்களைச் சேனையினின்றும் நீக்கி, புதிதாய் 43,000 பேரை மறுபடியும் சேனையில் சேர்த்துப் பழக்கி வருவதாகும். நெப்போலியனுடைய சட்டத்தை மீறாமல் பிரஷ்யசேனையில் எப்போதும் 43,000 பேர் தான் இருந்து வந்தார்கள். அந்த சேனையிலிருந்த 43,000 ஜனங்களும் ராணுவத்தில் நன்றாய்த் தேர்ச்சி பெற்றபிறகு தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போகும்படி அனுப்பப்பட்டார்கள். மற்றப் பிரஜைகளிலிருந்து மறுபடியும் 43,000 பேர்களைத்தெரிந்தெடுத்து சேனையில்சேர்த்துப் பழக்கிய பிறகு, அவர்களையும் சேனையிலிருந்து நீக்கி வேறு 43,000 பேர்களைச் சேனையில் பயிற்சி செய்து வந்தார்கள். அவ்வாறு குறித்த காலத்துக்கு ஒருமுறை அந்த சேனையிலுள்ள ஆட்க ளெல்லாம் புதிதாய் மாற்றப் பட்டார்கள். அதனால் பிரஷ்ய ஜனங்களெல்லாரும் ராணுவத்தில் பழக்கி வைக்கப்பட்டார்கள். ஆகையால் பிரஷ்ய கவர்ன்மெண்டு நெப்போலியனுடைய சட்டத்தை மீறி நடக்காமல், நிரந்தரமாயுள்ள சேனையில் எப்போதும் 43,000 பேரையே வைத்துக்கொண்டு, பிரஷ்ய ஜனங்களனைவரையும் ராணுவத்தில் பழக்கி ராணுவப்பயிற்சி பெற்றவர்களெல்லோரும் யுத்த காலத்தில் சேனையில் சேர்த்துகொள்ளும்படி ஏற்பாடு செய்தார்கள். அதனால், பிரஷ்ய சேனை யுத்தத்துக்குக் கிளம்பினால் 43,000 தருப்புகள் அதிலிருப்பார்களென்று நெப்போலியன் நினைத்திருந்தபடி ஆகவில்லை. பிரஷ்ய மீதசத்தார்களெல்லோரும் ஒரு பெரிய சேனையாகச் சேர்ந்து யுத்தம் தொடர்ந்தார்கள். பிரான்ஸிலும் பிரஷ்யாவிலும் அனுசரிக்கப்பட்ட முறைகள் விதியாசப்படுவதைக் கவனிக்கவேண்டும். பிரான்ஸில் நெப்போலியன் நிரந்தரமான சேனையொன்றை வைத்திருந்தார். பெரிய யுத்தம் நடப்பதாயிருந்தால், நிரந்தரமான சேனை போதாமலிருக்குமாகையால், அப்போது பிரஞ்சு ஜனங்களிலிருந்து தேவையான ஆட்களைத் தெரிந்தெடுத்து ராணுவ பலம் அதிகரிக்கப்பட்டது. பிரஞ்சு சட்டத்தின்படி, ஒவ்வொரு பிரஞ்சுப் பிரஜையும் 5 வருஷம் சேனையில் அமர்ந்திருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களில் தேவையானபேர் யுத்த காலத்தில் மட்டும் ராணுவத்தில் பழக்கி வைக்கப்பட்டார்கள். கவர்ன்மெண்டு உத்

தரவு செய்கிற காலத்தில்தான் அவர்கள் சேனையில் சேரவேண்டும்; மற்றக் காலங்களில் எவ்வித நிர்ப்பந்தமுமில்லை. ஆனால் பிரஷ்யாவில் எந்தக் காலத்திலும், ஒவ்வொரு பிரஜையும் ராணுவத்தில் அமர்ந்து பயிற்சி பெறவேண்டும். மேலும் பிரஞ்சு சட்டத்தின்படி ஒருவன் சேனையில் 5 வருஷம் வேலை பார்த்துவிட்டால், பிறகு சேனையில் சேரவேண்டியதில்லை. 5 வருஷமான பிறகு கவர்ன்மெண்டு அவனை எவ்விதமாயும் நிர்ப்பந்தம் செய்வதற்கில்லை. ஆனால் பிரஷ்யாவில் ராணுவப்பயிற்சி பெற்றவன் யுத்தம் நடக்கிற காலங்களிலெல்லாம் சேனையில் சேர்ந்து சண்டை செய்ய வேண்டும். மற்றொரு வித்தியாசம் என்னவென்றால் பிரஷ்ய கவர்ன்மெண்டு சமாதான காலங்களில் 43,000 பேர் கொண்ட சிறிய சேனையின் சம்ரக்ஷணைக்குத் தேவையான சொற்பச் செலவையே செய்து வந்தார்கள். யுத்த காலத்தில் மட்டும் சேனைப்பெருக்கியபோது அதிகச் செலவு செய்யவேண்டி வந்தது. ஆனால் பிரான்ஸில் நெப்போலியன் சமாதான காலங்களிலும் பெரிய சேனையை வைத்திருக்கும்படி நேர்ந்தது; ஏனெனில் யுத்த காலத்தில் அவசரமாகப் பழக்கி வைத்த ஜனங்களை போர்க்களத்துக்கு அதிகமாய் அனுப்பினால் வெற்றி கிடைப்பது அரிதாகி விடும். ஆகையால் நெப்போலியனுடைய சேனையின் பெரும்பாகமும் நிரந்தரமாயுள்ள திருப்புகளாயிருக்கும்படி நேர்ந்தது. அதனால் ராணுவச்செலவு அதிகப்பட்டது. ஆகையால் பிரஷ்யாவின் ராணுவ முறை மிகவும் சிரேஷ்டமான தென்று அறிந்து எல்லா ஐரோப்பிய ராஜ்யங்களும் அதை அனுஷ்டிக்கத் தொடங்கினார்கள். நெப்போலியனுடைய காலத்துக்கு முன்னால், பொருளுக்கு ஆசைப்பட்டு சண்டை செய்கிறவர்களை மாத்திரம் சேர்த்து நிரந்தரமான சேனையை அரசர்கள் நிர்மாணித்து வந்தார்கள். பிறகு தேசத்துக்கு ஆபத்து நேர்ந்தால் அதைக் காக்கும்பொருட்டு அதிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் சண்டை செய்யக் கடமைப்பட்டிருக்கிறானென்ற கொள்கை ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் ஒரு தேசத்தின் ராணுவ பலம் எவ்வளவு விருத்தியடைந்ததென்பது நெப்போலியனுடைய காலத்தில் வெளிப்பட்டது பிறகு பிரஷ்யாவில், தேசத்துக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேராவிட்டாலும் ஒவ்வொரு பிரஜையும் ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெறவேண்டுமென்ற கொள்கைபரவிற்று. இந்தத்தேசத்தின்

கொள்கையினுல் ஒருதேசத்துச் சேனையின் அளவுக்குஜனத்தொகை யைத் தவிர வேறு எல்லே கிடையாது. ஒரு தேசத்தில் எவ்வளவு திடகாத்திர புருஷர்கள் வசிக்கிறார்களோ அவ்வளவு துருப்புகள் அதன் சேனேயில் அடங்கியிருக்கும். இவ்வளவு பெரிய சேனே யைத் தயார் செய்வதில் அந்த தேசத்தின் ராணுவச் செலவு அதிகரிப்பதில்லே. அது முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமா கும். ஒவ்வொரு வருஷமும் 2 லக்ஷம் துருப்புகளேச் சம்ரக்ஷிப்பதற் குத்தீர்வையான தொகையை செலவு செய்தால், இருபது வருஷங்க ளுக்குப்பிறகு சுமார் 20 லக்ஷம் துருப்புகள் சேனேயில் சேரத்தயாரா யிருப்பார்கள். ஆனுல் அவ்வாறு சாமான்ய ஜனங்கள் 2 அல்லது 3 வருஷம்மட்டும் ராணுவத்தில் அமர்ந்தால், அவர்கள் சொற்ப பயிற்சி யைப் பெறுவதுமல்லாமல், சொற்ப பயிற்சியையும் சில வருஷங்களுக் குள் மறந்துவிடுவார்களாதலால், அப்படிப்பட்டவர்களுடையராணு வத்திறமையைப்பற்றி சந்தேகம் உண்டாயிற்று. நிரந்தரமாய் சேனே யில் அமர்ந்து, சண்டை செய்வதையே தொழிலாகவும் ஜீவ ஜோபய மாகவும் பாவிக்கிற துருப்புகளுக்கு அவர்கள் ஈடாகமாட்டார்களென் றும் அநேக ஐரோப்பிய ராஜ்யங்களில் அந்த காலத்தில் கருதப்பட் டது. ஆனுல், நெப்போலியன் சமான்ய ஜனங்களே சொற்ப காலத் துக்குள் பயிற்சி செய்து போர்க்களத்தில் செலுத்தி வெற்றி பெற் ருர். பிறகு 1866-ம் வருஷத்திலும் 1870-ம் வருஷத்திலும் ஜெர் மானியர் செய்த பெரிய யுத்தங்களில் சாமான்ய ஜனங்களின் ராணு வத்திறமை தெளிவாய் வெளிப்பட்டது. அதன்பிறகு மற்ற ஐரோப் பிய ராஜ்யங்கள், பிரஷ்யாவின் ராணுவமுறையை, உடனே அனுஷ் டிக்காம லிருந்தாலும், காலக்கிரமத்தில் அதைப் பின் பற்றும்படி நேர்ந்தது.

அந்தகாலத்திலும் இரண்டுவிதமாய் துருப்புகள் சேர்க்கப்பட்டு வந்தன. ஒரு முறை, ஜனங்கள் தாமாகவே இஷ்டப்பட்டு சேனேயில் சேர்வது. மற்ருெரு முறை, ஜனங்கள் தேசத்துச்சட்டப்படி சேனே யில் சேரும்படி கட்டாயப்படுத்தப்படுவது. முதல்முறை, இப்போது இங்கிலாந்தில் மாத்திரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இரண்டா வதுமுறை மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கி றது.

இங்கிலாந்திலுள்ள ராணுவமுறை.

இங்கிலாந்திலுள்ள முறையைப்பற்றிச் சொல்வோம். சாதாரணமாய், கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் ஜனங்கள் அமர்வது போல சேனையிலும் சம்பளத்துக்காக வேலை பார்க்கிறார்கள். இதனால், தேசத்து ஜனங்களுக்கு எவ்விதத் நிர்ப்பந்தமுமில்லை. சேனையில் சேர்ந்து ஊழியஞ்செய்கிறவர்களுக்குப்பிரதிபலனாசம்பளங்கொடுக்கப்படுகிறது. கவர்ன்மெண்டு தங்கள் சேனையை ஆதரிப்பதற்காக மற்ற ஜனங்களிடமிருந்து வரி வசூல்செய்து அந்த வருமானத்திலிருந்து ராணுவச்செலவு செய்கிறார்கள். ஒருவன் தன் ஆயுள் பரியந்தம் அல்லது நீண்ட காலம் சேனையில் அமர்ந்து நிடகாத்திரமுள்ள வரையில் சம்பளத்துக்கு ழைத்துப் பிறகு பென்ஷன் பெற்று விலகிக் கொள்கிறான். மற்ற கவர்ன்மெண்டு உத்தியோகங்களைப் போலவே, ராணுவமும் கருதப்படுகிறது. அவ்வாறு நீண்ட காலம் சேனையில் இருப்பவர்களை னன்றாய்ப் பயிற்றுவித்து முதல்தரமான தருப்புகளாகச் செய்யலாம். அப்படிப்பட்டவர்கள் வாழ்காள் முழுவதும் ராணுவத்தில் கழித்து மிகுந்த தேர்ச்சி பெறுகிறார்கள்; தங்கள் பட்டாளத்தையே இருப்பிடமாகக் கருதுகிறார்கள்; ராணுவத்தலைவரின் வார்த்தையையே சட்டமாக பாவிக்கிறார்கள். ஆனால் அப்படி சேர்க்கப்படுகிற சேனை மிகவும் சிறியதாகவே யிருக்கும். ஏனெனில் சமாதான காலத்தில், மிகப் பெரிய சேனையை ஆதரிப்பதென்றால் அதற்கு ஏராளமான தொகை செலவாகும்; அவ்வாறு ஒவ்வொரு வருஷமும் ராணுவத்தில் நிரவியத்தைக் கொட்டுவது சாத்தியமல்ல. ஆகையால் யுத்த காலத்தில் அந்த சேனையைப் பெரிதாக்கவேண்டுமானால் யுத்தந் தொடர்ந்த பிறகு சாதாரண ஜனங்களை சட்டத்தின் கட்டாயத்தினாலாவது தேசாபிமானத்தை தூண்டுவதாலாவது சேனையில் சேரும்படிச் செய்யவேண்டும்; அவர்களை அசை குறையாய்ப் பயிற்சி செய்து யுத்தத்தை நடத்தவேண்டும். அதனால் ராணுவத்திறமைமிகவும்குறைவுபடும். மேலும் யுத்தம் நடை பெறும்போது, போர்க்களத்தில் இறந்து போகிற தருப்புகளுக்கு ஈடு செய்யவேண்டும். ஆகையால் யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் தேர்ச்சி பெறுத தருப்புகளை சேனையில் சேர்த்துக்கொண்டு வந்தால், முடிவில் ஜெயம் பெறுவது சாத்தியமல்ல.

மேலும், கவர்ன்மெண்டுக்குத் தேவையாயிருக்கிற துருப்புகள் சேனையில் சேர்வார்களென்பது நிச்சயமில்லை. சேனையின் தொகை ஜனங்களின் மனநிலையையும் இஷ்டத்தையும் பொருத்ததாயிருக்கிறது. ஜனங்கள் சேனையில் சேர இஷ்டப்படாவிட்டால், கவர்ன்மெண்டு யுத்தத்தை எவ்வாறு நடத்த முடியும். மேலும், சொற்ப சம்பளத்துக்காக ஆசைப்பட்டு துருப்புகளாகச் சேர்கிறவர்கள் ஜனங்களில் கீழ்த்தர வகுப்பினராகவே யிருப்பார்கள். ஆகையால் உயர்ந்தகுணமும் புத்தியுமுள்ளவர்கள் சேனையில் சேரமாட்டார்கள். தனிர, நிரந்தரமாய் ஆயுள்பரியந்தம் ராணுவத் தொழிலைச் செய்கிறவர்கள், தேசத்திலுள்ள மற்ற ஜனங்களுடன் ஸ்வதந்திரமாயும் சம்பந்தப்படாமல், ஒரு தனியான வகுப்பினராய் மாறிவிடக்கூடும். அதனால், ஜனங்கள், நிரந்தரமான துருப்புகளை அதிகமாய் நியமிக்கும்படி கவர்ன்மெண்டுக்கு அனுமதிகொடுப்பதில்லை. அப்படிப்பட்ட துருப்புகள் மற்ற ஜனங்களிடத்தில் அனுதாபங் கொள்ளாமலும், அந்தந்த காலத்தில் புதிதாய்த் தோன்றுகிற ஜாதிய உணர்ச்சிகளில் பற்றில்லாமலும் இருந்தால், தேசத்து ஜனங்களுக்குள் பெரிய வேறுபாடு உண்டாகிறது. அப்படிப்பட்ட துருப்புகளை கொடுங்கோன்மன்னர்கள் தேசத்துச் சேவகர்களாய் நினைக்காமல் தங்களுடைய சொந்தசேவகர்களாய் பாவித்தால், ஜனங்களுக்கு அளவிறந்த இம்சை உண்டாகும்.

இந்த காலத்தில் தேசத்து ஜனங்கள் தங்கள் விருப்பத்தின்படி ராஜ்ய பாலனம் செய்து வரும்போது அவர்களின் நன்மையை உத்தேசித்தே யுத்தங்கள் நடத்தப்படுவதால், அவர்களே யுத்தத்தை நடத்திமுடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த பொறுப்பை முற்றிலும் மேற்கொண்ட தேசத்தாரே வெற்றி அடைவார்கள். இந்த காலத்து சேனைகளின் முக்கிய லக்ஷணம் அவைகளுக்குள்ள ஜாதிய உணர்ச்சியே யாகும். கேவலம் சம்பளத்துக்காக ஆசைப்பட்டு சண்டை செய்யுந் தொழிலை ஏற்றுக்கொண்டு யுத்தத்தில் எவ்வித உணர்ச்சியும் உற்சாகமுங்கொள்ளாத துருப்புகள் இப்போது சேனைகளில் சேர்வதில்லை. நெப்போலியனுடைய காலத்திலிருந்தே ஐரோப்பிய ராஜ்யங்களில் ஜாதிய உணர்ச்சியும் தேசாபிமானமும் அதிகரித்து, தேசத்தைக் காக்குந்தொழிலை அந்தந்த ஜாதிய ஜனங்க

ரும் ஏற்றுக்கொண்டார்கள். இவ்விஷயத்தைப் பற்றி நமது புத்தகத்தின் முதல் பாகத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. 1870–ம் வருஷத்தில் ஜெர்மனி பிரான்ஸின் மீது படையெடுத்த போது, பிரஞ்சுக்காரர்கள் தங்களுடைய நிரந்தரமான சேனையை யிழந்துவிட்ட பிறகு, தேசாபிமானத்தால் புதிய சேனையில் அமர்ந்து, சிறிதும் ராணுவப் பயிற்சியில்லாமலிருந்தும் போர்க்களத்தில் அலக்ஷியமாய் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள்.

ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் அவ்விரண்டு தேசத்து ராணுவங்களின் திறமை தெளிவாய் விளங்கிற்று. ருஷிய ஜனங்கள் எந்த காரணங்களை உத்தேசித்து ஜப்பானுடன் யுத்தஞ்செய்ய நேரிட்டதென்று அறியக்கூடவில்லை; ருஷியர் ஜப்பானியருடன் எவ்விதமாயும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை; ஜப்பானியரிடத்தில் எதற்காக விரோதமும் ஆத்திரமும் காட்டுவதென்று சிந்தித்தார்கள்; சீன ஜாதியர் வசிக்கிற மஞ்சூரியா தேசத்தில் ருஷியர் உயிரைத் துறக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு கொஞ்சமும் விளங்கவில்லை. ருஷிய சேனாதிபதியாயிருந்த ஜெனரல் கியுரோபாட்கின் தமது தருப்புகள் தோல்வியுற்றதற்கு அவர்கள் யுத்தத்தில் சிறிதும் உற்சாகங்கொள்ளாததை முக்கிய காரணமாகச் சொன்னார். ஜப்பானியரோ, தங்கள் தேசத்துக் கருகில் ருஷியர் கிலே பெற்று நாளடைவில் தங்கள் தாய் நாட்டையே கைப்பற்றிக்கொள்வார்களென்று உறுதியாய் நம்பி மிருந்த ஆத்திரத்துடன் சண்டை செய்தார்கள். தென்ஞப்பிரிக்காவில் நடந்த போவர் யுத்தத்தில், இரண்டு பக்கத்திலும் ஜனத்தொகையிலும் குறைவாயிருந்த போவர்கள் அளவிறந்த தேசாபிமானங்கொண்டு சண்டை செய்ததால், அந்த யுத்தம் நீடித்து நடந்தது. நம் இந்தியாவில் சுமார் 200 வருஷங்களுக்கு முன் மராட்டியர் ஜாதிய உணர்ச்சியாலும் தேசாபிமானத்தாலும் ஒரு ஜனமாக வாழவேண்டுமென்று உறுதிகொண்டு மொகலாய ஏகாதிபத்தியத்தை அழித்து சொந்த ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தார்கள். இந்தியாவுக்கு வடக்கிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் லீக் என்ற ஜாதியர் தோன்றி அந்த ஜாதியைச் சேர்ந்த ஒவ்வொருவனும் தன்னைக் காக்கும்பொருட்டு சண்டை செய்யுக் கடமைப்பட்டிருக்கிறானென்ற கொள்கையைப் பின் பற்றி சிலகாலம் ஒரு ஜனமாக வாழ்ந்தார்கள். இப்போது நடக்கிற மகா யுத்தத்தில்,

ஸ்விஸ்யரும் பெல்ஜியரும் சத்துருக்களின் ஏராளமான வன்மையைக் கண்டு சற்றும் அஞ்சாமல் எவ்வாறு எதிர்த்துச் சண்டை செய்கிறார்கள்? அவைகளுக்கெல்லாம் காரணம், ஒரு தேசத்து ஜாதியரனைவரும் அத்தேசத்தைக் காக்கும் சேனையாக இருக்கிறார்கள். ஆகையால் இந்தச்காலத்தில் நடைபெறும் யுத்தங்களில் அந்தந்தத் தேசங்களின் ராணுவ பலத்தைக் கணக்கிடுவதோடு தேசாபிமானத்தையும் கவனிக்கவேண்டும். ஆகையால் ஒரு தேசத்தில் ராணுவத்தை ஸ்தாபித்தால் அதன் வன்மை யெல்லாம் தேசாபிமானத்தால் உண்டாக வேண்டும். அதற்காக ஜன சமூகத்தை அல்திவாரமாகக் கொண்ட சேனைகள் இப்போது ஸ்தாபிக்கப்படுகின்றன. இங்கிலீர்ந்தில் ஜனங்கள் யுத்தகாலத்தில் தாமாகவே இஷ்டப்பட்டு சேனையில் சேர்ந்து யுத்தத்தை நடத்துகிறார்கள். மற்ற தேசங்களில் ஜனங்கள் சேனையில் சேரவேண்டுமென்று சட்டப்படி கட்டாயமாக்கப்படுகிறது. இந்த முறைதான் இங்கிலாந்தைத் தவிர மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஐரோப்பிய தேசங்களிலுள்ள ராணுவ முறை.

ஒரு தேசத்திலுள்ள ஜனங்க ளெல்லோரையும் ஒரே காலத்தில் சேனையில் சேர்த்துப்பழக்குவது சாத்தியமல்ல. அதற்கு ஏராளமான பொருட்செலவாகும்; மற்ற அசௌகரியங்களும் அதற்குத் தடையாயிருக்கின்றன. ஜனங்க ளனைவரும் ராணுவத்தில் அமர்ந்தால், தேசத்தில் பொருள் விருத்தியாவது எப்படி? தேசத்து ஜனங்கள் பொருள் சம்பாதித்தா லல்லவோ, அவர்கள் கவர்ன்மெண்டுக்கு வரி கொடுப்பார்கள். அந்த வருமானத்தைக் கொண்டு தானே கவர்ன்மெண்டு சேனையை நிர்வகிக்க முடியும். ஆகையால் கவர்ன்மெண்டு, சேனையை நிர்வகிக்கும்போது, அதன் செலவையும் திறமையையும் கவனிக்கவேண்டும். பெரிய சேனையை ஸ்தாபிக்கவேண்டுமானால், கவர்ன்மெண்டு ஏராளமான வருமானம் பெறவேண்டும். அதற்கு, தேசத்து ஜனங்கள் பொருள் சம்பாதிக்கவேண்டுமென்று சொன்னோம். ஆகையால், ஜனங்கள் தொழில் களைச் செய்து பொருள் சம்பாதிப்பதற்கு அதிக இடையூறுகள் ஏற்படாமலிருக்கவேண்டும். ஆகையால் ஒவ்வொரு வருஷமும் இவ்வளவு ஜனங்களுக்குமேல் சேனையில் சேர்ப்பதில்லை என்று நிட்டஞ் செய்யப்படுகிறது. அதோடு அவர்களை ராணுவத்தில் நீண்ட

காலம் அமர்த்தக் கூடாது. அவர்கள் இரண்டு அல்லது மூன்று வருஷம் சேனையிலிருந்து விட்டுப் பிறகு சாமான்ய ஜனங்களைப் போல, காலங்கழித்துத் தொழில்களைச்செய்து பொருள் சம்பாதித்து வரவேண்டும். ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற ஜனங்களைப் போல பொருள் சம்பாதிக்காமல் பொருளை வீண் செய்யும் வகுப்பினராய்க் கருதப்படுவது வழக்கம்; ஏனெனில் ராணுவத்திலுள்ளவர்கள் அபூர்வமாய் நேரக்கூடிய காலங்களில் சண்டை செய்து ஜனங்களுக்கு உழைக்கிறார்களாயினும், மற்ற காலங்களில் உடுப்பதும் உண்பதுந் தவிர வேறெவ்விதமான ஊழியமும் செய்வதில்லை. ஆனால் ராணுவத்தைப் அவ்விதமாய் பாவிப்பது சரியல்ல. ஜனங்கள் பொருளைச் சம்பாதிப்பதைவிட அதைத் தங்கள் சுவாதினத்தில் வைத்துக்கொள்ளும் நிலைமையிலிருக்கவேண்டியது அவசியமாகுமல்லவா? நீதிநிர்வாகமும் போலீஸ் பந்தோபஸ்தும் உள்நாட்டு விவகாரங்களுக்கு எவ்வளவு அவசிய மெனக்கருதப்படுகின்றனவோ அவ்வாறே அந்நியநாட்டுவிவகாரங்களுக்குராணுவக்காப்பும் அவசியமாகும். ஆகையால் ராணுவச்செலவை முற்றிலும் வீணனதென்று கருதக்கூடாது. தேசத்தின் க்ஷேமத்துக்குச் செய்ய வேண்டிய செலவுகளுக்குள் அதையும் ஒன்றாகக் கருதவேண்டும். ஜனங்கள் பொருள் சம்பாதிப்பதற்கு ராணுவமும் உதவியாயிருக்கிறது. ஆதலால் ஒரு தேசத்திலுள்ள பிரஜைகளில் சிலர் ராணுவத்தில் அமர்ந்து 2 அல்லது 3 வருஷம் அமர்ந்திருப்பதால், அப்படிப்பட்டவர்கள் தாங்களாகப்பொருளைச் சம்பாதிக்காமலிருக்கும் படி நேரிட்டாலும், மற்ற ஜனங்கள் சுகமாய் வாழ்வதற்கு உதவி செய்கிறார்க ளென்று கருதவேண்டும். அந்த ராணுவ முறையால் தேசத்துச் செல்வம் குறைவுபடுவதற்குப் பதிலாக விருத்தியடைகிறதென்றே நினைக்கவேண்டும். ஆகையால் கவர்ன்மெண்டு தாங்கள் செலவு செய்யக்கூடிய சக்திக்குஏற்றபடி ஜனங்களைக்குறித்த காலத்துக் கொருமுறை சேனையில் சேர்த்துப் பழக்கி வருகிறார்கள், அதனால் தேசத்தின் செல்வம் குறைவுபடுவதில்லை.

கவர்ன்மெண்டு ராணுவச் செலவைக் கருதுவதோடு, ராணுவத் திறமையையும் கவனிக்கவேண்டுமென்று சொன்னேம். ஒருவன் ஆயுள் பரியந்தம் ராணுவத்தில் பயிற்சி பெற்றால் மிகவும் தேர்ச்சி பெற்றவனாவனென்பது உண்மையே; ஆனால் ராணுவச் சட்டப்படி

சில ஜனங்களேமாத்திரம் ஆயுள்பரியந்தம் ராணுவத்தில் காலங்கழிக்கும்படி கட்டாயப்படுத்தி, மற்றவர்களைச் சும்மாவிட்டுவிடுவது நியாயமாகாது. ஆகையால் ஜனங்களெல்லாரும் குறித்த காலங்களில் சேணியில் சேரும்படி கட்டாயஞ்செய்யப்படுகிறார்கள்; சாதாரணமாய் அவர்கள் இரண்டு அல்லது மூன்றுவருஷந்தான் சேணியில் பயிற்சி பெறுகிறார்கள். ஜனங்களுக்கு 3 வருஷத்து ராணுவப்பயிற்சி போதுமான தென்றும், அவ்வாறு தேற்றப்பட்ட திருப்புகள் நன்றாய் சண்டை செய்யத் தகுதியானவர்களென்றும் அனுபோகத்தில் தெரிய வந்திருக்கிறது. சமாதான காலத்தில் ஒவ்வொரு வருஷமும் ராணுவத்தில் செலவிடக்கூடிய தொகையைத் திட்டஞ்செய்து, அந்தச் செலவில் நிர்வகிக்கக்கூடிய ஜனங்களே ராணுவத்தில் சேர்த்துப் பழக்கி வைத்தால், காளடைவில் அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாயிருப்பார்கள். அவர்களெல்லோரையும் யுத்த காலத்தில் பலமடங்கு பெரிதான சேணியாகச் சேர்க்கலாம். யுத்தகாலத்தில் அவ்வளவு சைன்ய பலத்தைப் பெறுவதற்கு, சமாதான காலத்தில் ஒரு அளவு கொண்ட செலவே செய்யப்படுகிறது. அவ்வாறு செலவை அதிகப்படுத்தாமலே, ராணுவ பலத்தை விருத்தி செய்ய சாத்தியமாகிறது. மேலும் ஜனசமூகத்திலுள்ள பற்பல வகுப்பாரிலிருந்து திருப்புகள் தெரிந்தெடுக்கப்படுவதால் உயர்குணங்களும் நல்ல புத்தியும், அற்புதமாயிருக்கக்கூடிய திறமையும், ராணுவத்தில் கலந்து கொள்ளுகின்றன. சேணியிலுள்ள திருப்புகள் ஜனசமூகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்படுவதாலும், அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு ஜனசமூகத்திலேயே மறுபடியும் கலந்து விடுகிறபடியாலும், தேசத்து ஜனமும் சேணியும் வேறு படுவதில்லை. ஜனங்களுக்குள் தோன்றுகிற புதிய விருப்பும் வெறுப்பும் ராணுவத்திலும் வெளிப்படும். அப்படிப்பட்ட தேசம் ஜனங்களுக்கு சம்மதமான யுத்தங்களேயே ஆரம்பிக்கும்; அந்த யுத்தங்களில் தேசத்திலுள்ள பிரஜைகளேவரும் சண்டை செய்பவர்களாவார்கள். அவர்கள் ஒரே மனதாய் சத்துருக்களே எதிர்த்து எளிதில் வெற்றி பெறுவார்கள். மேலும் அப்படிப்பட்ட தேசத்தின் சேணிக்கு ஓர் அளவில்லை, அதன் ஜனசங்கைதான் அதற்கு முடிவான எல்லை. ஆகையால் ராணுவசட்டப்படி ஒவ்வொரு பிரஜையையும் சேணியில்சேரும்படி கட்டாயஞ்செய்யும் முறைதான் இப்போது (இங்கிலாந்தைத் தவிர) எல்லா ஐரோப்பிய ராஜ்யங்களிலும் அனுசரிக்கப்படுகிறது. அவ்

வரும ஜனங்களைக் கட்டாயஞ்செய்வதால் உண்டாகக்கூடிய கஷ்டங்கள் கூடுமான வரையில் குறைக்கப்படுகின்றன. மிகவும் ஏழையாயிருப்பவர்கள் ராணுவத்தில் அமரும்படி நேர்ந்தால், அவர்கள் ராணுவத்தில் பெற்றுக்கொள்ளுகிற சம்பளம் வேறு வழிகளில் சம்பாதிக்கக்கூடிய பொருளைவிட அவ்வளவாகக் குறைவுபடாது. ஆகையால் ஏழைகள் அந்த சட்டத்தால் வருந்த மாட்டார்கள். செல்வவான்களுக்கு இரண்டொரு வருஷம் சம்பாத்தியமில்லாதிருப்பதில் அதிக கஷ்டமிராது. மத்திய வகுப்பார் தான் இந்த ராணுவ சட்டத்தால் மிகவும் பாதிக்கப்படுகிறவர்கள். அதற்காக, ராணுவப் பயிற்சி பெறுவதற்குத் தேவையாயுள்ள காலத்தைக் கூடுமானவரையில் குறைக்கப்பட்டிருக்கிறது. 2 அல்லது 3 வருஷங்களுக்குமேல் ராணுவ முறைகளில் பழகவேண்டியதில்லை. மேலும், கல்வி படிப்பும் புத்தியுமுடையவர்களுக்கு அந்த காலங்கூட குறைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் குடும்ப அதிகாரியங்களையுடையவர்கள் சேனையில் சேர்க்காமல் விடுவிக்கப்படுகிறார்கள். கணவனையிழந்த ஸ்திரீக்கு ஒரே புத்திரனுயிருப்பவன், குடும்ப சம்ரக்ஷணைக்குத் தானொருவனே ஆதாரவாயிருப்பவன், தன்னுடைய சகோதரர்களெல்லாரையும் சேனையில் ஏற்கனவே அனுப்பியிருப்பவன், அல்லது சண்டையில் இழந்துவிட்டவன், ஆகிய இவர்கள் சில விசேஷ காரணங்களைக் கொண்டு தவிர்க்கப் படுகிறார்கள். இந்த ராணுவ சட்டத்தை ஐரோப்பிய ராஜ்யங்களில் எவ்வாறு நிறைவேற்றுகிறார்களென்று சொல்வோம். ஜெர்மனியிலுள்ள ராணுவமுறையை மற்ற தேசங்கள் பின்பற்றியிருப்பதால், ஜெர்மனியில் அந்த சட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறதென்று கூறுவோம்.

சேனையில் ஜனங்கள் எவ்வாறு பழக்கப் படுகிறார்கள்.

ஜெர்மனியிலுள்ள ராணுவச் சட்டத்தின்படி, ஒவ்வொரு புருஷப் பிரஜையும் ராணுவத்தில் ஊழியஞ்செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். அவன் ஊழியஞ்செய்வதற்குப் பதிலாக அபராதங்கொடுக்கவோ அல்லது வேறொருவனைத் தனக்குப்பதிலாகச் சேனையில்சேர்க்கவோ அனுமதி கொடுக்கப்படுவதில்லை. திடகாத்திரமில்லாதவர்கள் திரும்புகளாக ராணுவத்தில் அமர்விட்டாலும், ராணுவத்துக்

குத் தேவையாயுள்ள தச்சுவேலை தையல் வேலைமுதலிய தொழில்களும் ராணுவத்தைச் சேர்ந்த ஆஸ்பத்திரிகளிலுள்ள வேலைகளையும் தேவையானபோது செய்யவேண்டும். ஒவ்வொரு பிரஜையும் 20-ம் வயதிலிருந்து 45-ம் வயதுவரையில் சேனையில் ஊழியஞ் செய்யக் கடமைப்பட்டவனாகிறான். அவன் நிரந்தரமாயுள்ள சேனையில் சேர்ந்து இரண்டு வருஷம் பயிற்சி பெறவேண்டும்.

இரண்டு வருஷம் பயிற்சி பெற்றபிறகு அவர்கள் தங்கள் வீடுகளுக்குப்போய்விட அனுமதி கொடுக்கப்படுகிறார்கள். பிறகு அவர்கள் யுத்த காலத்தில்தான் சேனையில் சேரும்படி கோரிடும். யுத்தந்தொடங்கியவுடன் அவர்கள் தாமசமின்றிப் போர்க்களத்துக்கு அனுப்பப்படுவதற்காக, முன்னதாகவே சமாதானகாலத்தில் பற்பல ராணுவ வகுப்புகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். அவர்கள் வயதுக்குத் தக்கபடி அந்தந்த ராணுவ வகுப்புகளில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் இன்னின்ன ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களென்று ஜாப்தாவில் குறித்து வைக்கப்படுகிறார்களே யொழிய, சாதாரண காலங்களில் ஆயுதபாணிகளாய் படைகளில் சேர்க்கப்படுவதில்லை. யுத்தகாலத்தில்தான் அந்தந்த ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் பற்பல படைகளாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

20, 21-ம் வயதுகளில் நிரந்தரமான படையில் ஆயுதபாணிகளாகச் சேர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் யுத்த காலத்தில் பற்பல படைகளில் ஆயுதபாணிகளாய்ச் சேர்க்கப்படும்பொருட்டு, சமாதான காலத்தில் பின்வருமாறு ஜாப்தாவில் குறித்துவைக்கப்படுகிறார்கள்.

22 முதல் 28-ம் வயது வரையில் "ரிஸர்வ்" என்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களாக ஜாப்தாவில் குறித்துவைக்கப்படுகிறார்கள்.

28 முதல் 39-ம் வயது வரையில் "லான்ட்வர்" என்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களாக ஜாப்தாவில் குறித்துவைக்கப்படுகிறார்கள்.

39 முதல் 45-ம் வயதுவரையில் "லான்ட்ஸ்டிரம்" என்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களாக ஜாப்தாவில் குறித்துவைக்கப்படுகிறார்கள்.

ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும் கிராம

த்தி லிருந்தும் ஜனங்கள் சேனையில் சேர்க்கப்படுவதற்காகத் தெரிந் தெடுக்கப்படுகிறார்கள். ராணுவ நிர்வாகத்துக்காக, ஜெர்மன் பிரதே சமுழுவதும், ஜில்லா, தாலுக்கா போன்ற பலபாகங்களாகப் பிரிக் கப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் தாலுக்காவி லிருந்தும் இவ்வளவு படைகள் சேர்க்கப்படவேண்டுமென்று நிரந் தரமாய் ஏற்பாடுசெய்கிறார்கள். ஒவ்வொரு தாலுக்காவில் ஒவ்வொரு படை நிரந்தரமாய் வைக்கப்படுகிறது. தாலுக்காவிலுள்ள ஜனங்கள் அங்குவைக்கப்படுகிற படையில் சேர்க்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும், கிராமங்கள் பட்டணங்கள் இவைகளிலுள்ள ஜனங்களின் பெயர் வயது முதலிய விவரங்கள் ஜில்லா வாரியாகக் குறித்து வைக்கப்படுகிறது. திருப்புகளைச் சேர்ப்பதற்காக வுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஜில்லாவின் தலைமை ஸ்தலத்துக்கு வருவதாக அறிவிக்கிறார்கள். அவர்கள் அங்கு வந்து, 20-வயதுள்ள வர்களை முதலில் வைத்தியப் பரீக்ஷை செய்கிறார்கள். மிகவும் கேவ லமான தேக ஸ்திதியிலுள்ளவர்களின் பெயரை ராணுவ ஜாப்தாவி லிருந்து நீக்கிவிடுகிறார்கள். வளர்ச்சி பெறுத வாலிபர்களை மறுவரு ஷத்துப் பரீக்ஷைக்குத் தள்ளி வைக்கிறார்கள். இன்னுஞ் சில பேர் திடகாத்திரமா யிருந்தாலும் குடும்ப சம்பந்தமான காரணங்களால் விட்டுவிடப் படுகிறார்கள். அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் சமா தான காலத்தில் சேனையில் சேரவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆயினும் யுத்த காலத்தில் அவர்கள் ராணுவத்துக்குப் பலவித ஊழி யஞ்செய்யவேண்டும். இவர்கள் "எர்ஸட்ஸ் ரிஸர்வ்" என்ற ராணுவ வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள். எர்ஸட்ஸ் வகுப்பைச் சேர்ந்தவர் கள் சமாதான காலத்தில் ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெறுவ தில்லை; ஆனால் யுத்தகாலத்தில் சேனையில் சேர்ந்து கொள்ளவேண் டும். அவ்வாறு பல காரணங்களால் தவிர்க்கப்பட்டவர்கள் போக, மற்றவர்களெல்லாரும் புதிய ஜாப்தாவில் குறிப்பிடப் படுகிறார்கள். இவர்களிலிருந்து அவ்வருஷம் சேனையில் எவ்வளவு பேர் தேவை யோ அவ்வளவு பேர் தெரிக்தெடுக்கப்படுகிறார்கள். சீட்டு குலுக்கிப் போட்டு, அந்த சீட்டிலுள்ள பெயருடையவன் விட்டு விடப்படுகிறான். அதாவது அவன் சேனையில்பயிற்சிபெறுவதில்லை. அவன் "எர்ஸட்ஸ்" வகுப்பில் சேர்த்துவிடப்படுகிறான். கடைசியாக ஜாப்தாவிலுள்ளபேர் கள்மீதகவன்மைக்கும் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடி பலவித

மான படைகளில் சேர்க்கப்படுகிறார்கள். வன்மை கொண்ட மார்பும் கால்களும் உடையவர்கள் காலாட்படையில் சேர்க்கப்படுகிறார்கள். குதிரை சவாரியிலும், குதிரை வளர்ப்பதிலும் பழக்கமுடையவர்கள் குதிரைப்படையில் சேர்க்கப்படுகிறார்கள். காடுகளில் வேட்டையாடிப் பழக்க முடையவர்களும் வேட்டையாடுகிறவர்களுக்கு உதவியாகச்செல்லும் ஷிகாரிகளும் துப்பாக்கிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள். எல்லா அம்சங்களிலும் திடமாயுள்ள பேர்கள் "கார்ட்ஸ்" என்ற பிரஸித்தி பெற்ற படைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு தேசத்திலும், விசேஷ வன்மை கொண்டதாகப் பாராட்டப்படுகிற படைகளிருக்கின்றன. ஜெர்மனியில் "பிரஷ்யன் கார்ட்ஸ்" என்றபேர்பெற்றபடையைப்பற்றிக்கேள்விப்பட்டிருக்கிறோம். கல்ல தேகவன்மை பெற்றிராதவர்கள், ரயில்வேலே செய்யவும் இஞ்ஜினியர் படைகளில் தச்சு வேலே, கொல்லத்து வேலே முதலியவைகளேச் செய்யவும், தோல் தூணி இவைகளில் வேலே செய்யவும் படைகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அந்தந்த தாலுக்காவில் ஏற்படுத்தப்பட்ட காலாட் படையில் அங்குள்ள ஜனங்களே தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். குதிரைப்படை, பீரங்கிப்படை, துப்பறியும்படை, துப்பாக்கிப்படை இவைகளில், பெரிய ஜில்லாவிலிருந்து ஜனங்களேப் பொறுக்கி பெடுத்து சேர்க்கிறார்கள். "கார்ட்ஸ்" என்ற பேர் பெற்ற படையில் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் விசேஷ வன்மைகொண்ட பேர்களேத் தெரிந்தெடுத்துச் சேர்க்கிறார்கள்.

அவ்வாறு தெரிந்தெடுக்கப்படுகிறவர்களேக் கொண்டு சேனையின் பெருபாகமும் சேர்க்கப்படுகிறது. அவர்கள் நிரந்தரமான படைகளில் ஆயுதபாணிகளாய்ச் சேர்ந்து இரண்டு வருஷகாலம் ராணுவமுறைகளேயெல்லாம் செவ்வையாய்க் கற்றுக்கொள்கிறார்கள்.

அவ்வாறு சேனையில் சேர்க்கப்படுகிறவர்கள் நிரந்தரமான படையில் இரண்டு வருஷம் பயிற்சிபெற்ற பிறகு தங்கள் ஊர்களுக்குப்போய் வீடுகிறார்கள். அப்போது அவர்களுக்கு 22 வயதாகிறது. அவர்கள் "ரிஸர்வ்" என்ற ராணுவ வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள். ஆனல் அவர்களுடைய பெயர் நிரந்தரமான படையின் ஜாப்தாவில் குறித்துவைக்கப்பட்டிருக்கும். யுத்தந்தொடங்கியவுடன் அந்த ஜாப்தாவின்படி அவர்கள் எந்தெந்தப் படையில் பயிற்சிபெற்றார்களோ அந்தந்தப்படையில் சேர்ந்து கொள்ளவேண்டும். "ரிஸர்வ்" வகுப்பு

மிகவும் முக்கியமானது. ஏனெனில், யுத்தந்தொடங்கியவுடன், சமாதானகாலத்திலிருந்திறபடைகள்தங்கள் ஜாப்தாவின்படி ரிஸர்வ்வகுப்பிலுள்ளவர்களே உடனே சேர்த்துக்கொண்டு யுத்த களத்துக்குச் செல்லும். மற்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் யுத்தந்தொடங்கியவுடன் போர்க்களத்துக்குச் செல்வதில்லை. தேவையான போதுதான் அவர்கள் போர்முனைக்கு அனுப்பப்படுவார்கள். நிரந்தரமான படையில் இரண்டு வருஷம் பயிற்சிபெற்றவர்கள், ரிஸர்வ் வகுப்பில் சேர்க்கப்படுகிறார்களென்று சொன்னேம். அவர்கள் ஆறுவருஷம் ரிஸர்வ் வகுப்பில் அமர்ந்திருக்கவேண்டும். அதாவது அவர்கள் 6 வருஷகாலம் ரிஸர்வ் வகுப்பைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனல் அவர்கள் 6 வருஷமும் ஆயுதபாணிகளாய் பட்டாளங்களில் சேர்ந்து பயிற்சிபெறவேண்டுமென்று கருதக்கூடாது. அவர்களின் பெயர் ரிஸர்வ் வகுப்பின் ஜாப்தாவில் எழுதப்பட்டிருக்குமே யொழிய, அவர்கள் எவ்வித ஊழியமும் செய்யவேண்டியதில்லை. ஆனல் அவர்கள் ரிஸர்வ் வகுப்பில் சேர்ந்திருக்கவேண்டிய 6 வருஷகாலத்தில், 4 மாதங்களே ராணுவப்பயிற்சி பெறவேண்டும். வழக்கத்தில் அவர்கள் 15 தினங்களுக்குமேல் பயிற்சிபெறுவதில்லை.

அந்த 6 வருஷகாலமான பிறகு, அவர்கள் "லான்ட்வர்" என்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு அப்போது 28 வயதாகிறது. அந்த வகுப்பில் அவர்கள் 11 வருஷம் சேர்ந்திருக்கவேண்டும். முதல் 5 வருஷங்களில், அவர்கள் ஒருமுறை ராணுவப்பயிற்சி பெறும்படி உத்தரவிடப்படுவார்கள். ஒருவாரம் அல்லது 14 தினங்களுக்குமேல் அந்த பயிற்சி பெறவேண்டியதில்லை. அதன்பிறகு அவர்கள் எவ்வித ராணுவப் பயிற்சியும் பெறுவதில்லை. அவர்கள் 39 வயதிலிருந்து 45 வயதுவரையில் "லான்ட்ஸ்டிரம்" என்ற ராணுவ வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள்

ஆகையால் ஒவ்வொரு பிரஜையும் 20 வயதிலிருந்து 45 வயது வரையில் ராணுவத்தில் ஊழியஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கிறன். முதலிரண்டு வருஷங்கள் அவன் ஆயுதபாணியாய் பட்டாளத்தில் சேர்க்கப்படுகிறன். அப்போது நல்ல ராணுவப் பயிற்சி பெறுகிறன். அதன்பிறகு அவன் வயதுக்குத் தகுந்தபடி பற்பல ராணுவ வகுப்புகளிற் சேர்க்கப்படுகிறன். அவன் ராணுவ வகுப்பில்

சேர்க்கப்பட் டிருக்கும்போது எப்போதாகிலும் இரண்டொருமுறை பட்டாளத்தில் சேரும்படி உத்தரவிடப்பட்டு, 14 தினங்களுக்கு மேல் பயிற்சி பெறுவதில்லை. யுத்த காலத்தில் பற்பல ராணுவ வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் யுத்த ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு பட்டாளங்களாகக் கூட்டப்படுகிறார்கள். இந்தமுறைதான் ஐரோப்பிய ராஜ்யங்களி லெல்லாம் அனுசரிக்கப்படுகிறது.

ராணுவப் பயிற்சியை இரண்டுவருஷகாலம் பெற்றவர்கள் மேற் சொல்லியவாறு பல வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றனர்.

ராணுவப் பயிற்சியே பெறுதவர்களெல்லாரும் எர்ஸட்ஸ் ரிஸர்வ் என்ற ராணுவ வகுப்பில் சேர்க்கப் படுகின்றன ரென்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். அந்த வகுப்பில் மூன்றுவிதமாய் ஜனங்கள் சேர்கிறார்கள்.

1. ஒவ்வொரு வருஷமும் ராணுவத்தில் எவ்வளவு பேரை பயிற்றுவிக்க முடியுமோ அவ்வளவு பேரைச்சேர்த்தபிறகு மிகுதியாயுள்ளவர்கள் எர்ஸ்ட்ஸ் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அவர்கள் திடகாத்திரமுள்ளவர்கள்.

2. அநேகம்பேர் திடங்கொண்டவர்களா யிருக்கும் குடும்ப அசௌகரியங்களாலும் வேறு சில காரணங்களாலும், ராணுவத்தில் சேராம லிருக்க அனுமதி பெற்றுக்கொள்கிறார்கள். இவர்களும் எர்ஸட்ஸ் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர்.

3. தேகஸ்திதியில் அற்ப குறைகள் காணப்படுவதற்காக நீக்கப்படுகிறவர்கள். ஆகையால் எர்ஸட்ஸ் வகுப்பிலுள்ளவர்கள் அதேகமாய் திடகாத்திர மூள்ளவர்கள். இந்த வகுப்பினரை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். ஏனெனில், யுத்தகளத்தில் சேதமாகும் தூருப்புகளுக்கு ஈடு செய்வதற்காக இவர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

யுத்தகாலத்தில் சேனை எவ்வாறு தயார் செய்யப்படுகிறது.

யுத்த காலத்தில் தேசத்து ராணுவ முழுமையும் எவ்வாறு தயார் செய்யப்படுகிறதென்பதைப் பற்றிச் சொல்வோம். யுத்தந் தொடங்கியவுடன், ரிஸர்வ் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்தந்த தானுக்காவில் வைக்கப்பட் டிருக்கிற நிரந்தரமான படைகளில் சேர்ந்துகொள்வார்கள். இவ்வாறு அதிகரிக்கப்பட்ட படைகள் உடனே யுத்த களத்துக்கு அனுப்பப்படும். யுத்த களத்தில் சேத

மாகிறவர்களை ஈடு செய்வதற்காக, சில பிரத்தியேகமான திருப்புகள் சேர்க்கப்படுவார்கள். இவர்கள் எர்ஸ்ட்ஸ் வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள். பிறகு லாண்டவர் என்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்தந்த தாலுக்காவில் புதிய பட்டாளங்களாகச் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் யுத்தத்தொடங்கியவுடன் போர்க்களத்துக்கு அனுப்பப்படுவதில்லை. இவர்கள் தங்கள் தேசத்திலே யிருந்துகொண்டு தங்கள் கோட்டைகளைக் காக்கவும், சத்துருக்களைத் தங்கள் தேசத்தின்மேல் படையெடுக்க விடாமல் காக்கவும் சேர்க்கப்படுகிறார்கள். ஆயினும் போர்க்களத்திலுள்ள் தங்கள் சேனைக்குப் பின்புறத்தில் செல்லும்போக்கு வரத்து வழிகளைக் காப்பதற்காக அவர்கள் சாதாரணமாய் உபயோகிக்கப்படுகிறார்கள். அந்த வேலைகளைச் செய்து கன்றாய் பழக்கப்பட்ட லாண்ட்வர் திருப்புகள் சிக்கிரத்தில் ராணுவத்திறமையைப் பெற்று விடுவதால் அவர்கள் சில சமயங்களில் துணைப் படைகளைப்போலக் கருதப்பட்டு போர்க்களத்துக்கே அனுப்பப் படுவதுமுண்டு. லாண்ட்வர் திருப்புகள் அவ்வாறு போர்க்களத்துக்கு அனுப்பப்படும்படி நேர்ந்தால், தேசகாப்புக்காக லாண்ட்ஸ்டிரம் என்ற கடைசியான ராணுவ வகுப்பினர் பட்டாளங்களாகக்கூட்டப்படுகின்றனர். தேவையாயிருந்தால்தான் அவ்விதம் லாண்ட்ஸ்டிரம் வகுப்பினரைப் பட்டாளங்களில் சேர்ப்பார்கள். மேற் சொல்லிய பற்பல ராணுவ வகுப்பினர் அவரவர் திறமைக்குத் தக்கபடி உபயோகிக்கப்படுகின்றார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். நிரந்தர மான சேனையும் ரிஸர்வ் வகுப்பினரும் யுத்தத்தொடங்கிய உடனே போர்க்களத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். நிரந்தரமான சேனையின் திறமையைப்பற்றி எதுவும் சொல்லத்தேவையில்லை. ரிஸர்வ் வகுப்பினர் 22 முதல் 28 வயது வரையிலுள்ளவர்களாதலால், நல்ல பால்ய பர்வமுடையவர்கள். அவர்கள் யுத்தத்தொடங்குவதற்கு முன்னுல் 6 வருஷங்களுக்குள்ளாக ராணுவப் பயிற்சி பெற்றவர்கள். அதற்குள்ளாக ராணுவமுறைகளையும் ஒழுங்குகளையும் எளிதில் மறந்திருக்க மாட்டார்களாதையால், அவர்களைப் பட்டாளங்களில் சேர்த்து உடனே யுத்தகளத்துக்கு அனுப்பத்தகுந்தவர்களா யிருக்கிறார்கள். மேலும் அவர்கள் கல்லியாணமாகாதவர்களா யிருப்பார்கள். அவர்கள் போர்க்களத்தில் அதிகமாய்ச் சேதமானாலும் அவர்களுடைய குடும்பங்களுக்கு துக்கமும் கஷ்டமும் அதிகமா

யிராது. ஆனல் லாண்ட்வர், லாண்ட்ஸ்டிரம் வகுப்புகளைச் சேர்ந்த வர்கள் வாலிபத்தை இழந்து விடுவதோடு, ராணுவப்பயிற்சியையும் மறந்து விட்டிருக்கக் கூடுமாதலால், அவர்களை மறுமுறை ராணுவத்தில் பழக்கவேண்டும். நிரந்தரமான சேனை எல்லைப்புறத்திலிருந்து புறப்பட்டு அந்திய நாட்டுக்குள் புகுந்தால், அவர்கள் தேசக்காப்புக்காகத் தேவையா யிருப்பார்கள். மேலும் அவர்கள் பெரிய சம்சாரிகளா யிருப்பார்கள்; ஆகையால் தீராதபக்ஷத்தில் தான் அவர்கள் தூரதேசக்களில் சண்டைசெய்ய அனுப்பப்படுவார் கள். ராணுவப்பயிற்சியே பெறுத எர்ஸட்ஸ் வகுப்பினர் சீக்கிரத் தில் பயிற்றுவிக்கப்பட்டு, பட்டாளங்கள் சண்டையில்சேதமடைத்து குறையும்போது அந்தக்குறையைப் பூர்த்தி செய்ய அவர்கள் அனுப் பப்படுகிறார்கள்.

தேசத்துத் துருப்புகளை யுத்தத்துக்கு எவ்வாறு தயார் செய்வ தென்பதை சமாதான காலத்திலேயே ராணுவ அதிகாரிகள் பழக் கிக்கொள்கிறார்கள். யுத்த காலத்தில் தேவையாயிருக்கக்கூடிய எல்லாவிதமான ஏற்பாடுகளும் முன்னதாக தயார்செய்து வைக் கப்படுகின்றன; ராணுவ அதிகாரிகள் ஒவ்வொரு வருஷமும் துருப்புகளை யுத்தத்துக்குத் தயார்செய்வதுபோல உத்தரவுகள் அனுப்பி அதன்படி எல்லா ஏற்பாடுகளையும் நிறைவேற்றிப் பார்த்துக் கொள்கிறார்கள். ஆகையால் உண்மையாய் யுத்தம் ஆரம்பிக்குமானல், அச்சமயத்தில் புதிய உத்தரவுகளாவதுஏற்பாடு களாவது, செய்யப்படுவதில்லை. ராணுவ உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் அவரவர்கள் செய்யவேண்டிய கடமையின்னதென்று தெளிவாய் அறிந்துகொண்டு அவைகளின்படிச் செய்துமுடிக்கிறார் கள். ஆகையால் சேனையை யுத்தத்துக்குத் திரட்டும்படி கவர்ன் மெண்டிட மிருந்து ஒரே உத்தரவுதான் அறிவிக்கப்படும். அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் தாமாகவே கடைபெறும். யுத்தந்தொடங்குவதாக நிச்சயித்தவுடன், முதல் தினம் யுத்த மந்திரி எல்லா சேனைபதிகளுக்கும் தங்கள் சேனை கள் தயாராயிருக்கும்படி உத்தரவு பிறப்பிப்பார். அன்று தினமே, ஒவ்வொரு ஜில்லாவி லுள்ள ராணுவ அதிகாரிகளுக்கும் தங்கள் ரிஸர்வ் வகுப்பினரைப் பட்டாளங்களில் சேர்க்கும்படி தந்தி அனுப்பப்படும். இரண்டாந் தினமும் மூன்றாந் தினமும், ஜில்லாவி

உள்ள ராணுவ அதிகாரிகள் தங்கள் ஜில்லாவி லுள்ள ரிஸர்வ் வகுப் பைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் ஒரு உத்தரவு எழுதி அனுப்பு கிறார்கள். அவர்கள் எந்த யிடத்தில் எப்போது கூடவேண்டுமென்று அந்தஉத்தரவில் கண்டிருக்கும். பிறகு, அந்த ஜில்லாவி லுள்ள கலெக் டர் தாசில்தார் இவர்களைப் போன்ற நிர்வாக அதிகாரிகள் அந்த ரிஸர்வ் துருப்புகளைக் குறித்த காலத்தில் குறித்த இடத்துக்குச் சேர் ப்பிக்கிறார்கள். 4வது, 5வது தினங்களில், ரிஸர்வ் துருப்புகள் பட் டாளங்களாகக் கூட்டப்பட்டு அந்தஜில்லாவில் வைக்கப் பட்டிருக்கிற நிரந்தரமான படையில் சேர்ந்து கொள்ளும்படி அனுப்பப்படுகிறார் கள். இந்த 5 தினங்களில், சேனைபதிகள், தங்கள் நிரந்தரமான படை களில் புதிதாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டிய ரிஸர்வ் துருப்புகளு க்கு ஆயுதங்கள் உடைகள் ஆகாராதிகள் முதலியவைகளைத்தயாராய் வைத்திருப்பார்கள். ஆகையால், ரிஸர்வ் துருப்புகள் வந்தவுடன் அந்தந்தஜில்லா விலுள்ள படைகள் அவைகளைச் சேர்த்துக்கொண்டு தாமஸமின்றி யுத்த களத்துக்குப் புறப்பட்டு விடும். அவைகள் யுத்த களத்துக்குப் புறப்பட்ட வுடன் அந்தந்த ஜில்லாவிலுள்ள லாண்ட் வர் துருப்புகள் சேர்க்கப்பட்டுநிரந்தரமான படைகளிலிருந்த ஸ்தா னங்களில் வைக்கப்படுகின்றனர். இந்த ஏற்பாடுகளெல்லாம் ஜெர் மனியில் பலவழிகளில் விருத்தி செய்யப்பட்டு, ஒரே தினத்தில் சேனையை யுத்தகளத்துக்கு அனுப்பக்கூடுமென்று சொல்லப்படு கிறது.

யுத்தகாலத்தில் திடீரென்று ஏராளமான துருப்புகளைப் புதி தாய்ச் சேர்த்துவிடலா மாயினும், அவைகளுக்குத் தேவையான ராணுவ உத்தியோகஸ்தர்களைத் தயார் செய்வதே மிகுந்த சிரமமான காரியமாகும். படைகளின் வன்மை, அவைகளை யுத்தகளத்தில் செலுத்துகிற உத்தியோகஸ்தர்களைப் பொருந்தியதாகும். ஆகை யால் சமாதான காலத்தில், தேவையான ராணுவ உத்தியோ கஸ்தர்களைத் தயாராய் வைத்திருக்கவேண்டும். நிரந்தரமான சேனை யுத்த காலத்தில், திடீரென்று பலமடங்கு அதிகரித்துவிடுவதால் புதிய படைகளுக்குத் தேர்ச்சிபெற்ற தலைவர்கள் வேண்டியிருக்கும். செல்வம் படைத்த பெரிய மனுஷர்களின் பிள்ளைகளும் உயர்குலத்த வர்களும், மற்றவர்களைப்போல வயது வந்தவுடன் 2 வருஷம் ராணு வத்தில் உழைப்பதற்குப் பதிலாக, ஒரே வருஷம் உத்தியோகஸ்தர்

களாக வேலை பார்த்துவிட்டுப் பிறகு நீங்கிக்கொள்ளலாமென்று அனுமதி கொடுக்கப்படுகிறார்கள். ஆனல் அவர்கள் தங்களுக்கு வேண்டிய செலவுகளைச் சொந்தத்தில் செய்துகொள்கிறார்கள். இந்த முக்கியமான வகுப்பாரிலிருந்துதான் ரிஸர்வ் படைகளுக்கும் லான்ட்வர் படைகளுக்கும் யுத்தகாலத்தில் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ராணுவத்திலிருந்து பென்ஷன் பெற்று நீங்கியிருப்பவர்களும் உத்தியோகஸ்தர்களாக சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். மேலும் ராணுவ முறையில் பயிற்சி பெற்றவர்களில் அநேகர் ராணுவ இலாகாவில் உத்தியோகங் கொடுக்கப்படாமல் நிர்வாக இலாகாவில் பலவித வேலைகளில் அமர்ந்திருப்பது வழக்கம். இவர்களும் யுத்த காலத்தில் ராணுவத்தில் சேர்ந்துகொள்வார்கள்.

சேனைக்குத் தேவையான வசதிகள்.

பெரிய சேனையை யுத்த களத்தில் நடத்துவது சாமான்ய காரியமல்ல. அது பயங்கரமான புஜபலத்தையும் ஞாசத்தொழிலையும் மேற்கொண்டு சொன்னபடியெல்லாம் செய்யும்படி பயிற்சி பெற்று யுத்த களத்தில் சென்ற போதிலும், அதிலும் சில முக்கியமான ஜனங்கள் இருக்கின்றன. அது பகைவரை எதிர்ப்பதோடு பசியையும் பிணியையும் எதிர்க்கவேண்டும். உயிருள்ள ஜீவன்கள் தானே சேனையிலிருக்கிறார்கள். மனிதர்களும் மிருகங்களும் யந்திரங்களும் ஒவ்வொரு தினமும் ஊட்டம் பெற வேண்டும். ஆகாரமும் வெடி மருந்தும் பிரதி தினமும் போர்க்களத்துக்குச் சென்றுகொண்டிருக்கவேண்டும். யுத்ததந்திரின் முக்கிய நோக்கம் சத்துருவின் ராணுவ பலத்தை அழிப்பதாகும். அதற்காகச் செல்கிற சேனை எவ்வழியிலும் வருந்தாமல் திடமான நிலைமையிலிருக்கவேண்டும். ஆகையால் ஒரு சேனை யுத்தத்துக்குப் புறப்படும்போது தனக்கு ஆகாரம் வெடி மருந்து தளவாடங்கள் முதலியவை தவறாமல் தேவையானபோதெல்லாம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். சத்துருவினுடைய தேசத்தில் புகுந்து தூரச் செல்லச்செல்ல, ஆகாரம் முதலியவைகள் தவறாமல் கிடைக்கச் செய்வது கஷ்டமாகும். சத்துருவினுடைய தேசத்திலிருந்தே ஆகாரம் சேகரித்துக் கொள்ளலாமென்றால், அது சாத்தியப்படாது; ஏனெனில் சத்துருக்கள் யுத்த மண்டலத்தில் கிடைக்கக்கூடிய எல்லா பொருள்களையும் நாசஞ் செய்வது

வழக்கம். ஆகையால் சேனை சத்துருவுக்குச் சொந்தமாயுள்ள ஊரில் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஒருக்கால் அவைகள் கிடைக்கும்போலிருந்தாலும், அதையே நம்பிச் செல்வது உசிதமல்ல. மேலும், இந்த காலத்தில் சேனையில் லக்ஷக்கணக்கான துருப்புகளிருக்கிறார்கள். முன் காலத்தில் சிறிய சேனையை ஒரே தலைவன் யுத்த களத்தில் நடத்தி இரண்டொரு தினங்களில் அதன் முடிவை யறிந்துகொள்ள சாத்தியமாயிருந்தது. இப்போது, அநேக சேனைகள் பற்பல தலைவர்களால் பற்பல வழிகளில் செலுத்தப்பட்டு மாதக்கணக்காய் முடிவில்லாமல் சண்டை செய்கிறபடியால், சத்துருவினுடைய பிரதேசத்தில் ஆகாரத்தை தேவையான அளவு சம்பாதித்துக்கொள்வது சாத்தியமல்ல. சிறிய சேனையாயிருந்து மிகவும் செழிப்பாயுள்ள பிரதேசத்தில் சென்று ஒருக்கால் போதுமான ஆகாரத்தைத் தேடிக்கொள்ள சாத்தியமாயிருந்தாலும், அதற்கு வெடிமருந்து சொந்ததேசத்திலிருந்துதானே வரவேண்டும். சேதமான துருப்புகளுக்கு ஈடுசெய்யவும் யுத்த களத்தில் அவசியமானபோது உதவிசெய்யவும் புதியபடைகள் சொந்த தேசத்திலிருந்து தானே வந்துகொண்டிருக்கவேண்டும். யுத்த களத்தில் நோயால் வருந்துகிறவர்களையும் காயமடைந்து விழுகிறவர்களையும் உடனுக்குடன் பந்தோபஸ்தான இடத்துக்கு வீலக்கி விடவேண்டும். அசக்தர்களை தன்னோடு சுமந்துசெல்வதைப்போன்ற இம்சை வேறெதுவு மில்லை. திடகாத்திரமுள்ளவர்களே தங்கள் சௌகரியங்களைச்சரியானபடி கவனித்துக்கொள்ளசாத்தியமில்லாத போது, அசக்தர்களை ஒரு சேனையில் வைத்திருப்பது பெரும் பிழையாகும். மேலும், பிணியாலும் காயத்தாலும் வருந்துகிறவர்களை அலக்ஷியமாய் இறந்துபோகும்படி விட்டுவிட்டால், சேனையின் வன்மை சீக்கிரத்தில் குறைந்துபோகும். அப்படிப்பட்டவர்களை சரியானபடி சிகிச்சை செய்வதால், 100-க்கு 66 பேர் சுகமடைந்து சில மாதங்களுக்குள் மறுபடியும் யுத்தகளத்தில் வருவதுசாத்தியமாகையால், அப்படிப்பட்டவர்களை அலக்ஷியஞ் செய்து சர்ணுவபலத்தை விரயஞ்செய்யக்கூடாது. ஆகையால் யுத்தத்துக்குச் செல்கிற ஒரு சேனை, ஆகாரம் பெறுவதைப்பற்றி கவனிப்பதோடு,வெடிமருந்தும் புதியதுருப்புகளும் வந்துகொண்டிருக்கவும், அசக்தர்களை வீலக்கிக் கொண்டிருக்கவும் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். இந்த வசதிக

ளெல்லாம் சத்துருவினுடைய தேசத்தில் கிடைப்பதில்லை. மேலும் இந்த வசதிகளையெல்லாம் சொந்த பிரதேசத்திலிருந்து யுத்தப் பிரதேசம் வரையில் செய்து கொடுத்தால் மட்டுப் போதாது. ஒரு சேனையின் இருப்பிடத்துக்கு சாமான்களைக் கொண்டுபோய் சேர்த்த பிறகு அவைகளை அந்த சேனையிலுள்ள ஒவ்வொரு படையும் தருப்பும் பெற்றுச்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். லக்ஷக் கணக்கான தருப்புகளுக்கும் மிருகங்களுக்கும் சாமான்களை ஒழுங்காய்க் கொடுத்துவருவது சாமான்ய காரியமல்ல. இக் காலத்துச் சேனை நூற்றுக் கணக்கான மைல் விசாலித்து சண்டை செய்கிறது. ஆகையால் எல்லைப்புறத்திலிருந்து படைகளின் இருப்பிடமாகிய போர்முனை வரையில் போக்குவரத்து செய்வதற்கு எவ்வித இடைஞ்சலும் உண்டாகக்கூடாது. மேலும் அந்த ஏற்பாடுகளெல்லாம் மிகவும் விரைவாய்ச் செய்யப்படவேண்டும். படைகள் அடிக்கடி இடம்விட்டு இடம் மாறிக்கொண்டிருக்கும். ஆகையால் சேனையைப்பற்றிப் பேசும்போது, அதற்கு போக்கு வரத்து வழிகள் மிகவும் அவசியமானவை என்பதை அறியவேண்டும். இந்த முக்கியமான விஷயத்தை ஞாபகத்தில் வைத்தாலொழிய சேனைகள் யுத்தஞ் செய்வதைப்பற்றியும் நடமாடுவதைப்பற்றியும் தெரிந்து கொள்ள முடியாது. சேனையில் பீரங்கி, துப்பாக்கி, கத்தி, முதலிய ஆயுதங்களிருக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அதற்கு போக்கு வரத்து வசதிகளும் பிரதானமாகும். யுத்த ஆயுதங்கள் சேனையின் ஒரு அம்சமாகக் கருதப்படுவது போல, ஆள்களையும் சாமான்களையும் ஏற்றிச்செல்லக்கூடிய வண்டி குதிரை முதலியவைகள் சேனையின் ஒரு பாகமாக நிணைக்கப்படவேண்டும். ஒவ்வொரு படையிலும் அநேக வண்டிகளும் அவைகளை இழுத்துச் செல்வதற்குக் குதிரைகளும் பின்னோடு செல்கின்றன. ஒரு படை, ரயில் வண்டியில் ஏறிச்சென்ற போதிலும் அதனுடன் அநேக வண்டிகளும் குதிரைகளும் ரயிலில் ஏற்றிக்கொண்டு போகவேண்டும். 40,000 தருப்புகள் கொண்ட ஒரு சேனை அதன் பரிவாரங்களுடன் ஒரு பாதையில் போகும் போது 40 மைல் தூரம் நீண்டு செல்கிறதென்றால், சண்டை செய்கிற தருப்புகளுக்கு எவ்வளவு வசதிகள் தேவையா யிருக்கின்றனவென்பதை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். சேனைக்குக் கடைசியில் வருகிறவன் சேனையின் முன் வரிசைக்கு வரவேண்டுமென்றால், 40 மைல் தூரம் நடக்கவேண்டும்.

ஒரு சேனைக்குத் தேவையாயுள்ள ஆகாரம், வெடிமருந்து, ஆயுதம் வண்டி, குதிரை முதலியவைகள் மிகவும் அதிகமா யிருப்பதால், அவ்வளவு சாமான்களையும் ரயில் வண்டிகளில் ஏற்றி, பிறகு இறக்கி பிறகு ஒழுங்கு படித்துவதற்கு மிகவும் தாமஸமாகிறது. இக்கார ணத்தால்ஒருசேனை கொஞ்சதூரம் செல்லவேண்டுமானால், அச்சேனை தன் பரிவாரங்களுடன் ரெயிலில் ஏறிப் பின் இறங்குவதைவிடக் கால் நடையாகச் சென்றால் சீக்கிரத்தில் போய்ச் சேரலாம். ஆகையால் போக்குவரத்துக்கு ரயில்பாதைகள் இருந்தால் மட்டும் போதாது. ரயில் தண்டவாளங்களையும் பாலங்களையும் சத்துருக்கள் அழித்து விடக்கூடு மாதலால், சாதாரண ரோட்டுகளுமிருக்க வேண்டும். ரோட்டுகளில் செல்லக்கூடிய வண்டிகளும் அவைகளை இழுப்பதற்கு மிருகங்களும் ஒருசேனையில் அவசிய மிருக்க வேண்டும். *

யுத்தம் நடந்து முடிகிறவரையில் இடைவிடாமல் சேனைக்குத் தேவையாயுள்ள சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமாகை யால், போக்குவரத்து வழிகள் யுத்தகால முழுவதும் பந்தோபஸ் தாய்க் காக்கப் படவேண்டும். ஆகாரம் வெடிமருந்து முதலியவைக ளில்லாமல்தவித்துக்கொண்டிருக்கும்சத்துருப்புகளைச்சத்துருக்களுக்கு இரையாக்குவதைவிட அவர்களை யுத்தகளத்துக்கு அனுப்பாமலிருப் பதே நலம். ஆகையால், சேனைக்குப் பலவித வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டி யிருக்கிறதென்றும், அவைகளுக்காகப் போக்கு வரத்துவழிகள் பந்தோபஸ்தாய்க் காக்கப்படவேண்டுமென்றும் அறியவேண்டும்.

---

* சத்துருக்கள் ரோட்டுகளிலுள்ள பாலங்களையும் அழித்து விடக்கூடு மானலும், அந்தப்பாலங்களை மறுபடியும் கட்டும்போது அவ்வளவு பலங்கொண்ட தாயிருக்க வேண்டியதில்லை. ஏனெனில் பழுது பார்க்கப்பட்ட பாலத்தின் மேல் ஒவ்வொரு வண்டியாகச் செலுத்தலாம். பாலத்தில் அதிகச்சுமை யேற்ற மல் காக்கலாம். ஆனல் ரயில் பாலத்தில் ஒவ்வொரு வண்டியாக அனுப்பமுடி யாது; ஒரு எஞ்ஜின் அநேக ரயில்வண்டிகளை இழுத்துச் செல்லும்.

24-வது அத்தியாயம்.

சேனையிலுள்ள பலவிதமான படைகள்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த மொத்த சேனையில் 25 "ஆர்மி கோர்" என்ற சேனை வகுப்புக ளிருக்கின்றன. யுத்தந் தொடக்கியவுடன், 20 ஆர்மிகோர்கள் பிரஞ்சு எல்லைக்கும் 5 ஆர்மி கோர்கள் ருஷிய எல்லைக்கும் அனுப்பப்பட்டன. ருஷிய் எல்லையில் சண்டை செய்துகொண் டிருந்த ஆஸ்டிரிய சேனைக்கு உதவி செய்வ தற்காக ஜெர்மன் கவர்ன்மெண்டு தங்களுடைய சேனையிலிருந்து 5 ஆர்மிகோர்களேமட்டும் அனுப்பினார்கள். பிரஞ்சு எல்லைக்கு 20 ஆர்மிகோர்கள் சென்றன. யுத்த களத்திலுள்ள ஒரு கக்ஷியின் சேனை, வலதுபாகம், மத்தியபாகம், இடதுபாகம் என்று 3 பொது வான பாகங்களாகப் பிரிக்கப்படுவது வழக்கம். பிரஞ்சு எல்லைக் குச் சென்ற ஜெர்மன் சேனையை அவ்வாறு 3 பாகங்களாகப் பிரித்து அவைகளின் விவரங்களைச் சொல்வோம். ஜெர்மன் சேனை பிரஞ்சு எல்லையைப் பார்த்துக்கொண்டு நிற்குமாகையால், அதன் வலது பாகம் பெல்ஜியத்திலும், மத்தியபாகம் லக்ஸம்பர்க்கிலும், இடது பாகம் அல்ஸேஷியிலும் நிலைபெற்றிருந்தன. வலது பாகத்தில் சுமார் 10 ஆர்மிகோர்கள், மத்தியபாகத்தில் 6 ஆர்மிகோர்கள், இடது பாகத்தில் 4 ஆர்மிகோர்கள் சண்டை செய்யத் தொடங்கின. மூன்று பாகங்களில் ஜெர்மன் சேனை ஒரே அளவாய்ப் பிரிக்கப் படவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். அந்தந்த பாகம் செய்ய வேண்டிய வேலைக்குத் தகுந்தபடி அதன் சைன்ய பலம் திட்டஞ் செய்யப்பட்டது. பெல்ஜியத்திலிருந்த ஜெர்மன் படைகள் பிரஞ்சு தலை நகராகிய பாரிஸை நோக்கி விரைவாய்ச்செல்லவேண்டுமென்று சண்டை செய்ததால், அந்த திசையில் ஆர்மிகோர்கள் அதிகமாய் அனுப்பப்பட்டன.

சேனைத்தலைவர்களின் வேலை.

யுத்தஞ் செய்வதின் முடிவான நோக்கம் சத்துருவின் ராணுவ பலத்தை அழிப்பதாகும். அதை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு

பெரிய சேனையைத் திரட்டி யனுப்பமுடியுமோ அவ்வளவும் யுத்த களத்துக்கு அனுப்பப்படுகிறது. ஜெர்மானியருக்கு எராளமான துருப்புக ளிருப்பதால், அத்துருப்புகளை யுத்த களத்தில் செலுத்து வதற்கு பிரஞ்சு எல்லையின் விஸ்தீரணம் போதவில்லை. ஆகையால் யுத்தத்தில் சம்பந்தப்படாத லக்ஸம்பர்க், பெல்ஜியம் இவ் விரு தேசங்களின்மீது படை யெடுத்து அவைகளின் வழியாய் பிரான் ஸுக்குள் செல்லலாமென்று ஜெர்மானியர் தீர்மானித்தார்கள். ஆகை யால் இந்தக்காலத்து யுத்தங்களில் சேனையைக் கூடுமான வரையில் பெரிதாகத் திரட்டி விஸ்தாரமான பிரதேசத்தில் செலுத்தப்படு கிறது. சத்துருவின் சேனை முழுவதையும் ஒரேகாலத்தில் எதிர்த்து அதை யழிப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அவ்வாறு விஸ் தாரமாகச் செல்கிற சேனை, வலதுபாகம், மத்தியபாகம், இடது பாகம், என்று மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. யுத்தத்தின் முடிவான நோக்கத்தை நிறைவேற்றுவதற்குச் சேனை முழுவதுக் கும் தலைவராயுள்ள சேனுதிபதி அந்த மூன்றுபாகங்களையும் செலுத் துகிறார். அவர் சேனையின் மூன்று பாகங்களையும் வெவ்வேறு பாதை களில் செலுத்தி வெவ்வேறு பிரதேசங்களில் சண்டை நடத்தம்படிச் செய்து, சத்துருக்களை அழிப்பதற்குத் தகுதியான சமயத்தை உண்டுபண்ணுகிறார். சத்துருக்களை தகுந்த இடத்தில் தகுந்தகாலத் தில் அழிக்கவேண்டும். சத்துருவை அழிக்கவேண்டு மென்ற நோக்கம் வெவ்வேறுவிதமான நடவடிக்கைகளின் பலனை நிறை வேற்றப்படுகிறது. ஆகையால் சேனையின் மூன்று பாகங்களும் வெவ்வேறு பிரதேசங்களில் சண்டைசெய்து பலவிதமான நடவடிக் கைகளைத்தொடங்குகின்றன. ஒவ்வொரு பாகமும் அதற் கிடப் பட்ட காரியத்தைச் செவ்வையாய் நிறைவேற்றுவதற்காக ஒரு சேனு பதி நியமிக்கப்படுகிறார். ஒவ்வொரு பாகத்தையும் ஒரு சேனுபதி நடத்தி, அது செய்துமுடிக்கவேண்டிய காரியத்துக்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார். மூன்று பாகங்களின் சேனுபதிகள் தாங்கள் ஏற்றுக்கொண்ட காரியத்தை செவ்வையாய் நிறைவேற்றி விட்டால், சேனுதிபதியின் முடிவான நோக்கமும் நிறைவேறும். அதாவது சேனுதிபதி செய்த யோசனையின்படி சத்துருவின் சேனை அழி ந்து போகக்கூடிய நிலைமைக்கு வந்து விடும். ஜெர்மன் சேனை யுத் தத்தை ஆரம்பித்தவுடன், வலது பாகத்தில் 10 ஆர்மிகோர்களும், மத்தியபாகத்தில் 6 ஆர்மிகோர்களும், இடது பாகத்தில் 4 ஆர்மி

கோர்களும் அனுப்பப்பட்டன என்று சொன்னேம். ஒவ்வொரு ஆர்மிகோருக்கும் ஒரு சேனைத்தலைவர் இருக்கிறார். அவருக்குக் கீழே அநேக படைத்தலைவர்களிருக்கிறார்கள்; அவர் சமாதான காலத்திலும் தலைமை வகித்திருப்பார். அவர் தமது படைகளைப் போர்க்களத்தில் செலுத்துவார். ஆஸல் வலது பாகத்தில் அம் மாதிரியான 10 ஆர்மி கோர்கள் இருக்கின்றன. அந்த வலது பாகம் முழுவதும் ஒரு குறித்த காரியத்தை முடிப்பதற்காக யுத்தஞ் செய் கின்றது. ஆகையால் யுத்தந்தொடங்கியவுடன் அந்த வலது பாகம் முழுவதுக்கும் ஒரு சேனுபதி நியமிக்கப்படுகிறார். அவர் 10 ஆர்மி கோர்களின் உதவியைக்கொண்டு பாரிஸ் நகரத்தை நோக்கிச்செல்ல வேண்டும். மத்தியபாகத்துச்சேனுபதி வலது பாகத்துக்கு உதவியா யிருந்து பாரிஸ் நகரத்துக்கருகில் அந்த பாகத்தோடு சேர்ந்து கொள்ளவேண்டும். இடதுபாகத்துச் சேனுபதி தமக்கு எதிரிலுள்ள சத்துருக்களைச் சண்டைக்கு இழுத்து அவர்களை வேறிடங்களுக் குச் செல்லவிடாமல் தடுக்கவேண்டும். அவ்வாறு சேனுதிபதிதமது சேனை முழுவதையும் மூன்றுபாகங்களாகப்பிரித்து, ஒவ்வொரு பாகமும் இன்னின்ன நோக்கத்தைக்கொண்டு யுத்தம்நடத்தவேண்டு மென்று தீர்மானித்து அதை நிறைவேற்றும்படி மூன்று சேனுபதி களுக்கும் உத்தரவிடுவார். சேனுபதிகள், போர்க்களத்துக்கு அதா வது சண்டை நடக்கு மிடத்துக்குச் செல்வதில்லை. அவர்கள் போர்க் களத்துக்குப் பின்னல் வெகுதூரத்தி லிருந்துகொண்டு யுத்தத்தின் போக்கைக் கவனித்துக்கொண்டு வருவார்கள். சேனுதிபதியும் சேனுபதிகளும் அபாரமான பொறுப்பை ஏற்றுக்கொண்டு லக்ஷக் கணக்கான துருப்புகளை நடத்துவதால், அவர்களோடு கூட யிருந்து யோசனை சொல்வதற்கும், அந்த யோசனைகளை நிறைவேற்றுவ தற்குத் தேவையா யுள்ள பற்பல உதவிகளைச் செய்வதற்கும் சில ராணுவ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆகையால் சேனுபதியென்றால் அது ஒரு வரைமட்டும் குறிப்பிடாது; அநேக ராணுவ உத்தியோகஸ்தர்களையும் அவர்களுள் முக்கியஸ்தராய்க் கருதப்படுகிற சேனுபதியையும் குறிப்பிடும். இப்போது யுத்த களத்திலுள்ளபிரிட்டிஷ் சேனைக்கு ஸர்ஜான் பிரஞ்சு என்பவர் சேனு பதியாயிருக்கிறார். அவருக்கு யோசனை சொல்வதற்கும் உதவி செய் வதற்கும் அவருடன் சில ராணுவ உத்தியோகஸ்தர்களும் இருக்கி

ரூர்கள். பிரிட்டிஷ் சேனையுடன் பிரஞ்சு சேனையும் சேர்ந்து, சத்துருக்களை எதிர்த்து வருகிறது. சத்துருக்களை அழிப்பதற்கு இன்னின்னவிதமாய் நடவடிக்கைகளைத் தொடங்கவேண்டுமென்று சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்பேர உத்தரவுசெய்வார். அந்த உத்தரவின்படி பிரிட்டிஷ் சேனாபதியாகிய ஸர்ஜான் பிரஞ்சும், மற்ற பிரஞ்சு சேனாபதிகளும் யுத்தத்தை நடத்த வேண்டும். சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்பேர்க்கு யோசனைசொல்வதற்கும் உதவி செய்வதற்கும் அவருடன்கூட அநேக ராணுவ உத்தியோகஸ்தர்கள் இருந்து வருகிறார்கள்.

இனி சேனையிலுள்ள படைகளைப்பற்றிச் சொல்லுவோம். ஒரு தேசத்துச்சேனை ஆர்மிகோர் என்ற வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஆர்மிகோர் என்ற சேனை வகுப்பின் விவரங்கள் என்ன? இரண்டு 'டிவிஷன்' கொண்டது ஒரு ஆர்மிகோர். டிவிஷன் என்பது மிகச்சிறிய சேனை யென்று சொல்லலாம். ஒரு சேனையின் முக்கிய லக்ஷணம் என்னவென்றால், அதில் சகலவிதமான துருப்புகளும் ஆயுதங்களும் கலந்திருக்கவேண்டும். அவ்வாறே எல்லாவிதமான படைகளும் தளவாடங்களும் 'டிவிஷன்' என்ற சேனை வகுப்பில் இருக்கிறபடியால், ஒரு சேனைக்கு வேண்டிய எல்லா அமிசங்களிலும் அது பூர்த்தி பெற்றிருக்கிறது. ஆகையால், டிவிஷனிலுள்ள பலவிதமான படைகளின் விவரங்களை அறிந்து கொண்டால் போதுமானது. அம்மாதிரியான 2 டிவிஷன்கள் சேர்ந்து ஒரு ஆர்மிகோர் என்ற வகுப்பாகச் செய்யப்படுகிறது. ஒரு தேசத்துச் சேனை முழுவதும் அநேக ஆர்மிகோர்களாகப் பிரிக்கப்படுகிறது.

ஒரு சேனையில் சண்டை செய்கிறவர்கள் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை என்று மூன்று முக்கிய படைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த மூன்று முக்கியமான படைகளும் சண்டையில் ஒன்றுக்கொன்று உதவிசெய்து சத்துருக்களை எதிர்க்கின்றன. ''டிவிஷன்'' என்ற சேனை வகுப்பில் அம்மூன்று வகையான படைகளும் சேர்ந்திருக்கின்றன. அம்மூன்று படைகளும் சத்துருக்களோடு சண்டை செய்யும்போது, அவைகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக, வேறு அநேக படைகள் டிவிஷனில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இஞ்ஜினியர் படை, சமிக்ஞைசெய்யும்படை, ஆகாராதிகளைச் சப்ளைசெய்யும் படை

சிகிச்சைப்படை ஆகிய இவைகளும் டிவிஷனில் சேர்க்கப்பட் டிருக் கின்றன. அவைகள் சத்துருக்களோடு நேரில் சண்டை செய்யா விட்டாலும், அவ்வாறு சண்டையிடுகிற காலாட்படை, குதிரைப் படை பீரங்கிப்படை இவைகளுக்கு உதவி செய்யத்தேவையாயிருக் கின்றன. பின்னால் சொல்லப்படும் விவரங்கள், பிரிட்டிஷ் சேனை யிலுள்ள டிவிஷனைப்பற்றியவை. காலாட்படை குதிரைப்படை பீரங் கிப்படை ஆகிய இம்மூன்று முக்கியமான படைகளைப்பற்றி முதலில் சொல்வோம். ஒவ்வொரு படையைப்பற்றியும் முக்கியமாயுள்ள எல்லா விவரங்களையும் கூறுவோம்.

காலாட்படை.


ஒவ்வொரு படையும் அநேக சிறு பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. படைத் தலைவர்கள் துருப்புகளை செவ்வையாய் அடக்கி நடத்துவதற்கு ஒரு படையிலுள்ளவர்களை அவ்வாறு சிறு பிரிவுகளாகப் பிரிப்பது அவசியமாகும். ஒவ்வொரு சிறிய பிரிவுக் கும் ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட் டிருக்கிறார். காலாட் படையில் அவ்விதம் அநேக சிறிய பிரிவுகளிருக்கின்றன. அந்த சிறிய பிரிவுகளுள் ஒன்றாகிய பட்டாளத்தைப்பற்றி இங்கு சொல்லி வருவோம். ஆங்கிலத்தில் பட்டாலியன் என்று சொல்லப்படுவது இப்போது தமிழில் பட்டாளம் என்று வழங்கிவருகிறது.

ஒரு பட்டாளத்தில் சேர்ந்துள்ளவர்களை, துருப்புகளென்றும் துருப்புகளல்லாதவர்களென்றும் இரண்டு பாகமாகப் பிரிக்கலாம். ஒரு பட்டாளத்திலுள்ள துருப்புகளைப்பற்றி முதலில் சொல்வோம். பட்டாளத்தில் துருப்புகளும் அந்தத் துருப்புகளோடிருக்கிற தலை வர்களும் சேர்ந்து மொத்தம் 908 பேரிருக்கிறார்கள். 14 துருப்பு களுக்கு ஒரு தலைவன் நியமிக்கப்பட் டிருக்கிறான். காலாட் படையில் 25 பேர் கொண்டுள்ளதுதான் மிகச் சிறிய பிரிவாகும். அவ்வாறு நான்கு சிறிய கூட்டங்களைச்சேர்த்து வேறொரு சற்று பெரிய கூட்ட மாகச் செய்து 60 பேருள்ள அதற்கு ஒரு தலைவன் நியமிக்கப்பட் டிருக்கிறான். அவ்வாறு வரவர பெரிய கூட்டங்களாகச் சேர்த்து படிப்படியாய் தலைவர்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். 8 குதிரை கள் வெடி மருந்தைச் சுமந்து செல்வதற்கு ஒரு பட்டாளத்தில் சேர்க்கப்பட் டிருக்கின்றன. ஒரு பட்டாளத்தில் துருப்புகளும்

அவர்களே நடத்துபவர்களுமாயுள்ள 908 பேர்களைத் தவிர வேறு அநேகம் பேர் இருக்கிறார்கள்.

அவர்கள் பட்டாளத்திலுள்ள தருப்புக ளல்லாத பாகத்தைச் சேர்ந்தவர்கள். அதில் பட்டாளத்து அதிகாரிகள், சில்லரை வேலைகளைச் செய்பவர்கள், சமிக்ஞை செய்கிறவர்கள், மெஷின் பீரங்கிக் காரர்கள், ஆகிய இவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். பட்டாள முழுவதுக்கும் தலைமை வகிக்கும் ராணுவ உத்தியோகஸ்தரும், அவருக்கு உதவியா யிருக்கும் வேறு சில உத்தியோகஸ்தர்களும், பட்டாளத்தின் கணக்கு வழக்குகள் முதலிய நிர்வாக விஷயங்களைக் கவனிக்கும் சில உத்தியோகஸ்தர்களும, வைத்தியரும், சேர்ந்து பட்டாளத்து அதிகாரிகளாவார்கள். வைத்தியருக்குஉதவிசெய்யும்வேலைக்காரர்கள்,சமையற்காரன்,சக்கிலியன் முதலியவர்கள் சில்லரை வேலைகளைச் செய்வதற்காக பட்டாளத்தில் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். பட்டாளத்தில் பாண்ட்வாத்தியம் வாசிப்பவர்கள் சண்டை நடக்கும் போது காயம்பட்டவர்களையும், இறந்துபோனவர்களை தூக்கிக் கொண்டுபோவார்கள். இவர்களெல்லாரும் சேர்ந்து மொத்தம் 64 பேராகிறார்கள். ராணுவ உத்தரவுகளை அறிவிப்பதற்காக சமிக்ஞை செய்கிறவர்கள் ஒவ்வொரு பட்டாளத்திலும் இருக்கிறார்கள். பட்டாளத்திலுள்ள தருப்புகளின் தலைவர்களும் பட்டாளத்து அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் அறிவித்துக்கொள்ள வேண்டிய விஷயங்களை சமிக்ஞை செய்பவர்கள் அறிவிப்பார்கள். சில சமயங்களில் பட்டாளத்து அதிகாரிகளும் அவர்களுக்கு மேற்பதவியிலுள்ள படைத் தலைவர்களும், விஷயங்களைத் தெரிவித்துக்கொள்ளும்படி யிருந்தால் அவற்றையும் சமிக்ஞை செய்பவர்கள் அறிவிப்பார்கள். சமிக்ஞை செய்பவர்கள் பட்டாளத்தில் மொத்தம் 17 பேரிருக்கிறார்கள். ஒவ்வொரு பட்டாளத்திலும் இரண்டு மெஷின் பீரங்கிகள் இருக்கின்றன. அவைகளை உபயோகிப்பதற்காக 18 பேர் அந்த பட்டாளத்திலிருக்கிறார்கள். சாதாரணமாய்த் தருப்புகள் உபயோகிக்கும் துப்பாக்கிகளிலிருந்து சுடப்படுகிற குண்டுகளைத்தான், மெஷின் பீரங்கியும் சுடுகின்றது. ஆனால் மெஷின் பீரங்கி துப்பாக்கியைவிட அநேக மடங்கு விரைவாய்ச் சுடக்கூடியது; துப்பாக்கிகளை சுமார் 1900-கெஜ தூரத்திலிருந்துகொண்டு குறிப்பாய்ச் சுடலாம்; ஆனால் குறி தவறுமல் எண்ணாயும் விரைவாயும் சுடுவதற்கு இன்னும் அருகி

லிருக்க வேண்டும். துப்பாக்கியிலிருந்து சுடப்படுகிற சிறு குண்டுகள், 'ரவைகள்' என்று சொல்லப்படுகின்றன. மீரங்கியிலிருந்து சுடப்படுகிறவைகளுக்கு குண்டுகள் என்று பெயர். மெஷின் பீரங்கி ஒரு நிமிஷத்துக்கு 600 ரவைகளைச்சுடும். சில வருஷங்களுக்கு முன்னால் தான் மெஷின் பீரங்கி கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது எல்லா தேசத்துப் படைகளிலும் அது சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஐரோப்பிய யுத்தத்தில் மெஷின் பீரங்கி பிரபலம் பெற்று விட்டது. அது இரண்டு கக்ஷிகளாலும் அதிகமாய் உபயோகிக்கப் பட்டு அதிக சேதத்தை உண்டு பண்ணுகிறது. அந்த பீரங்கியின் பளுவு 40 முதல் 90 பவுண்ட் வரையிலிருக்கும். முக்காலியோல் செய்யப்பட்ட மூன்று சட்டங்களின் மேல் அது வைக்கப்பட்டு சுடப் படுகிறது. இரண்டாம் பாகத்தில் 183-வது பக்கத்தில் வெளியான சித்திரப் படத்தில் மெஷின் பீரங்கியின் விவரங்களைக் காணலாம். மெஷின் பீரங்கியும், முக்காலியும் அதிற் சுடப்படும் ரவைகளும் ஒரு வண்டியில் ஏற்றப்பட்டு இரண்டு குதிரைகளால் இழுத்துச் செல்லப் படுகின்றன. பட்டாளம் பிரயாணஞ்சென்றுகொண்டிருக்கும்போது அவ்வாறு வண்டியில் கொண்டுபோகப்படுகின்றன. சண்டை ஆரம் பிக்கும்போது, மெஷின் பீரங்கியையும் முக்காலியையும் கையில் தூக்கிக்கொண்டு போகிறார்கள்; வண்டியில் பூட்டப்படும் இரண்டு குதிரைகளை அவிழ்த்து அவைகளின் மேல் ரவைகளை வைத்து போர்க்களத்துக்குக்கொண்டு போகிறார்கள். ஒவ்வொரு மெஷின் பீரங்கியோடுகூட 3500-ரவைகள் கொண்டுபோகப் படுகின்றன. அவ்வளவு ரவைகளும் எப்போதும் பீரங்கியோடுகூடவே கொண்டு போகப் படுகின்றன. பட்டாளத்தில் அமேக சாமான் வண்டி கள் இருக்கின்றன. அந்த வண்டிக ளொன்றில் 8000 ரவைகள் மெஷின் பீரங்கியின் உபயோகத்துக்காக பிரத்தியேகமாய் வைத் துக் கொள்ளப்படுகின்றன. கான்கு பட்டாளங்கள் ஒரு பிரி கேட் என்ற வகுப்பாக சேர்க்கப்பட் டிருக்கின்றன. அந்த பிரி கேட்டைச் சேர்ந்த அதிகாரிகளிடம் அமேக சாமான்வண்டிகள் இருக்கின்றன. அந்த வண்டிகளில், பட்டாளத்திலுள்ள ஒவ் வொரு மெஷின் பீரங்கியின் உபயோகத்துக்காக 10,000 ரவைகள் கொண்டுபோகப் படுகின்றன. மெஷின் பீரங்கிக்காரர்கள் தங்களிட மிருக்கிற 3500 ரவைகளைச் செலவு செய்தபிறகு, பட்டாளத்து வண் டிகளில் வைக்கப்பட்டுள்ள 8000 ரவைகளைச் செலவு செய்வார்கள்.



பெல்ஜிய காலாட்படை.



இந்தியப்படை—பெங்கால் சுட்டிப்படை.



ஒரு பீரங்கியை ஆறு குதிரைகள் இழுக்கின்றன.



பிரஞ்சு பீரங்கிப்படை—காலாட்படையுடன் செல்கிற இலேசான பீரங்கிகள்.



பிரிட்டிஷ் குதிரைப்படை—துப்பாக்கி உபயோகிக்கப் படுகிறது.

இந்த ரவைகளையும் செலவழித்துவிட்டால் பிரிகேட்டைச் சேர்ந்த வண்டிகளிலிருந்து 10000 ரவைகள் வரையில் தருவித்துசெலவுசெய்வார்கள். ஒவ்வொரு மெஷின் பீரங்கிக்காகவும் மேற்சொல்லியரவைகள் சேகரித்துவைக்கப் படுகின்றன. ஒரு பட்டாளத்தில் இரண்டு மெஷின் பீரங்கிகளிருப்பதால், மேற்சொல்லிய ரவைகளைப் போல இரு மடங்கு கொண்டு போகப்படுகின்றன. ஒரு பட்டாளத்தில் மொத்தம் 16 வண்டிகள் கொண்டுபோகப்படுகின்றன. சமிக்கை செய்கிறவர்களின் உபயோகத்துக்காக 9 பைலிகள் வண்டிகளுமிருக்கின்றன. பட்டாளத்தில் மொத்தம் 56 குதிரைகளிருக்கின்றன. இதுவரையில் சொல்லப்பட்டுவந்த பட்டாளம் காலாட்படையைச் சேர்ந்தது. அதிலுள்ள வண்டிகளை இழுப்பதற்கும், வெடிமருந்தைச் சுமந்து செல்வதற்கும், உத்தியோகஸ்தர்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்கும் மொத்தம் 56 குதிரைகள் ஒரு பட்டாளத்தில் காணப்படுகின்றன. பட்டாளத்திலுள்ள தருப்புகள், தருப்புகளல்லாதவர்கள் குதிரைகள், வண்டிகள் இவைகளின் தொகை பின் வருமாறு:—

தருப்புகளும் அவர்களை நடத்துகிற தலைவர்களும் 908 பேர்.
மெஷின் பீரங்கிகளைச் சேர்ந்தவர்கள். 18 பேர்.
பெரிய உத்தியோகஸ்தர்களும் மற்ற சிப்பந்திகளும். 81 பேர்.

பட்டாளத்திலுள்ள மனிதர்களின் மொத்தத்தொகை 1007. 56 குதிரைகளும், 16 வண்டிகளும் 9 பைலிகள் வண்டிகளும் பட்டாளத்திலிருக்கின்றன.

பட்டாளத்திலுள்ள தருப்புகள் துப்பாக்கியையும், அதன் முனையில் மாட்டக்கூடிய சிறிய ஈட்டியையும் ஆயுதங்களாகக்கொண்டு போகிறார்கள். துப்பாக்கியும் ஈட்டியும் சேர்ந்து சுமார் 5 அடி நீளமிருக்கும். தருப்புகள், தங்கள் துப்பாக்கியைக் கொண்டுபோவதோடு ஒவ்வொரு தினமும் சண்டை செய்து காலங்கழிப்பதற்கு அவசியமாயுள்ள சகல சாமான்களையும் சுமந்து செல்லவேண்டும். தருப்புகள் படுத்துறங்குவதற்கு ஒவ்வொருவனுக்கும் சிறிய தணி ஒன்றுதான் வண்டியில் கொண்டு போகப்படுகிறது. அவனுக்கு வேண்டிய மற்ற சாமான்களெல்லாம்—பெரிய மேல் சொக்காய், தணியால் செய்யப்பட்ட பை, தண்ணீர், ஆகாரம், துப்பாக்கியில் சுடப்படுகிற ரவைகள், குழி தோண்டுவதற்கு வேண்டிய மண்வெட்டி

முதலிய சிறு ஆயுதங்கள்—இவைகளெல்லாம் அவனுல் சுமக்கப்பட வேண்டும். போர்க்களத்தில் தருப்புகள் சண்டை செய்துகொண் டிருக்கும்போது திடீரென்று பூமியில் அகழ் வெட்டி அந்தப் பள்ளத் தில் மறைந்துகொண்டு சத்துருவை எதிர்க்கும்படி நேரிடுவது வழக் கம். ஆகையால் தருப்புகள் சண்டை செய்துகொண் டிருக்கையில் தாங்கள் நின்ற விடத்திலேயே தங்களிடமுள்ள மண் வெட்டி முத லிய ஆயுதங்களைக்கொண்டு பள்ளந்தோண்டுவார்கள். பெரிய அகழ் கள் தோண்டவேண்டுமானல், அதற்குப் பெரிய ஆயுதங்கள் வண் டிகளில் கொண்டு வரப்படுகின்றன. ஒரு தினத்துக்கு வேண்டிய ஆகாரத்தையும் தருப்புகள் கொண்டு போகிறார்கள். ஏனெனில், புதிய ஆகாரம் ஒவ்வொரு நாளும் வந்துகொண்டிருக்குமானலும், அது பற்பல காரணங்களால் தேவையாயுள்ள சமயத்தில் வராம லிருக்கக்கூடும். தருப்புகள் ஓய்வு நேரம் கிடைக்கும்போது சாப்பி டும்படி நேரிடும். ஆகையால், நீண்டத நேரத்தில் புதிய ஆகாரம் கிடைப்பது சாத்தியமல்ல தினப்படி உண்ண வேண்டிய ஆகாரத் தைத் தவிர, மற்றொரு தினத்துக்கு வேண்டிய உணவையும் கொண்டு போகவேண்டும். எதிர்பாராத காரணங்களால் ஒரு சமயம் புதிய ஆகாரம் வரத் தவறிவிட்டால் அப்போது உபயோகிப்பதற் காக ஒரு பங்கு தனியாகக் கொண்டுபோகப் படுகிறது. ஒவ்வொரு தருப்பும் அப்பாக்கியில் சுமப்பதற்காக 150-ரவைகளை தன்னோடு கொண்டு போகிறான். ஒவ்வொருவனுக்கும் 100-ரவைகள் வீதம் பட்டாளத்து வண்டிகளில் கொண்டுவரப்படுகின்றன. ஆகவே, காலாட்படையிலுள்ள ஒவ்வொரு தருப்பும் மொத்தம் சுமார் 60-பவுண்ட் பளுவைச் சுமக்கவேண்டும். இவ்வளவு பளுவைச் சுமந்து கொண்டு இவ்வளவு சாமான்களைப் பின்னோடு கொண்டுபோகும் பட் டாளம் ஒருமணிக்கு 2½மைல் வீதந்தான் செல்லுகின்றது. ஒரு தினத்தில் 12-அல்லது 15-மைலுக்கு மேல் பிரயாணஞ் செய்ய முடி யாது. அவசரமான சமயங்களில் விசேஷ முயற்சி செய்து நடந்தால் 25-மைல் தூரம் பிரயாணஞ் செய்யக்கூடும்.

பட்டாளத்திலுள்ள எல்லாத் தலைவர்களும் உத்தியோகஸ்தர்க ளும் ஒரு கத்தியும் ஒரு கைத்துப்பாக்கியும் கொண்டுபோகிறார்கள். அவர்களும் தருப்புகளைப்போல, ஒரு பெரிய மேல் சொக்காயும் ஒரு பையும் தண்ணீர்க் குவளையும் கொண்டுபோகிறார்கள். அவை

களைத் தவிர, போர்க்களத்தைக் கவனித்துப் பார்ப்பதற்குச் சிறிய தூர திருஷ்டிக் கண்ணாடியையும், இரும்புக்கம்பியை வெட்டக்கூடிய ஒரு கத்திரியையும், சிசைகளைக் காட்டும் கருவியையும் கொண்டுபோகி ருர்கள். பனி, மேகம், இருள் இவைகள் மூடிக்கொள்ளும் காலத் தில் இசைகளை அறிவதற்கு உத்தியோகஸ்தர்கள் அந்த சிறு கருவி யை வைத்துக்கொண் டிருக்கிருர்கள். சத்துருக்கள் தங்கள் அரண் களுக்கு முன்னல் இரும்புக் கம்பி வலைபோட்டிருப்பது வழக்கமாத லால் அதை வெட்டிவதற்கு ஒரு கத்திரி அவசியமாகின்றது. பிரிட்டிஷ் துருப்புகளுடைய உடையின் நிறம் சற்று கறுத்த மஞ் சளாயிருக்கும். ஜெர்மானியரின் உடை சாம்பல் நிறமாயிருக்கும். அவ்வாறு துருப்புகளுடைய உடையின் நிறத்தைப்பற்றி ஒவ்வொரு தேசத்தாரும் விசேஷ கவனஞ் செலுத்துகிருர்கள். ஏனெனில், துருப்புகள் வெகுதூரத்தி லிருக்கும்போது சத்துருவின் கண்களுக் குத் தெளிவாய்த் தோன்றும வி்ருக்கவேண்டும். அதற்கு, பிரகாச மாயிராத மங்கலாகவுள்ள வர்ணந்தான் தெரிந் தெடுக்கப்படுகிறது. அவர்களின் உடைகள் பளபளப்பான வர்ணங்கொண் டிருந்தால், அவர்களைத் தூரத்திலிருப்பவர்கள் எளிதில் கண்டுகொள்வார்கள். இந்தக் காலத்துச் சண்டையில், மனிதர்களும் பீரங்கிகளும் குதிரை களும் வண்டிகளும் மற்றெவ்விதமான சாமான்களும் சத்துருவின் கண்களுக்குத் தெரியாமலிருக்கும்படி அவைகளை மறைத்து வைப்ப தே சாமர்த்தியமாகக் கருதப்படுகிறது. சாமான்ய மனிதன் சற்று தூரத்திலிருந்து கொண்டு போர்க்களத்தைப் பார்த்தால் அது ஜன சஞ்சாரமில்லாத பிரதேசம்போலத் தோன்றும்.

இதுவரையில் பட்டாளத்தைப்பற்றிய விவரங்கள் சொல்லப் பட்டன. பட்டாளமென்பது காலாட்படையிலுள்ள ஒரு சிறு பிரி வாகும். பிரிட்டிஷ் சேனையிலுள்ள டிவிஷன் என்ற சேனை வகுப் பில், மொத்தம் 12-பட்டாளங்களிருக்கின்றன. இனி குதிரைப் படையைப்பற்றிச் சில விவரங்கள் சொல்வோம்.

குதிரைப் படை.

"டிவிஷன்" என்ற சேனை வகுப்பில், காலாட்படை யிருப்ப தோடு குதிரைப்படையும் பீரங்கிப் படையு மிருக்கின்றன வென்று சொன்னேம். குதிரைப்படையின் விவரங்களைச் சொல்வோம். ஒரு ரிஜிமெண்ட் என்ற பிரிவைப்பற்றிய விவரங்களைக் கூறுவோம்.

ஒரு ரிஜிமெண்ட் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக் கிறது. அந்த பாகங்களுக்கு ஸ்குவாட்ரன் என்று பெயர். ஆகவே, ஒரு ரிஜிமெண்டில் மூன்று ஸ்குவாட்ரன்க ளிருக்கின்றன. மூன்று ஸ்குவாட்ரன் கொண்ட குதிரையாட்களைத் தவிர இரண்டு மெஷின் பீரங்கிகளு மிருக்கின்றன. ஒரு ரிஜிமெண்டில், மொத்தம் உத்தி யோகஸ்தர்களையும் சேர்த்து 550 மனிதர்களும், 600 குதிரைகளும் இருக்கின்றன. குதிரைப்படையில் ஒவ்வொருமனிதனும் ஒரு குதி ரையில் சவாரி செய்வதா யிருந்தால், 50 குதிரைகள் அதிகமாயிருப் பதற்குக் காரணமென்ன? ரிஜிமெண்டில் இருக்கிற வண்டிகளை இழு த்துச் செல்வதற்காக அதிகப்படியான குதிரைகள் தேவையா யிருக் கின்றன. வண்டிகள் எதற்காக வேண்டியிருக்கின்றன? வைத்தியஞ் செய்வதற்கு வேண்டிய மருந்துகளுக்கும் சமான்களுக்கும் ஒரு வண்டி, தண்ணீருக்கு ஒரு வண்டி, பாலங் கட்டுவதற்கு வேண் டிய சாமான்களுக்கு ஒரு வண்டி, சமயல் சாமான்களுக்கு ஒரு வண்டி, கூடாரம் கட்டுவதற்கு வேண்டிய சாமான்களுக்கும் மற்ற சில்லரை சாமான்களுக்கும் 4 வண்டிகள், மெஷின் பீரங்கி களுக்கும் அவைகளுக்கு வேண்டிய ரவைகளுக்கும் 4 வண்டிகள், குதிரையாட்களிடம் இருக்கிற துப்பாக்கிகளில் சுடப்படுகிற ரவை களுக்கு 3 வண்டிகள் ஆகமொத்தம் 18 வண்டிகள் ஒரு ரிஜிமெண் டில் தேவையா யிருக்கின்றன; தவிர 14 குதிரைகள் அதிகப்படி யாக இருப்பில் வைத்துக்கொள்ளப்படுகின்றன. ரிஜிமெண்டினுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்கள் சமாசாரங்களை அறிவித்துக்கொள்வ தற்கு 15 பைஸிகிள் வண்டிகள் கொண்டுபோகப்படுகின்றன. காலாட் படையிலுள்ள துருப்புகளைப்போலவே, குதிரை யாட்களில் ஒவ் வொருவனும் தனக்கு வேண்டிய சகல சாமான்களையும் சுமத்து செல்லவேண்டும். ஆகவே ஒரு குதிரையின்மேல், ஒரு ஆளும் அவ னிடமுள்ள சாமான்களும் சேணமும் சுமத்தப்படுகின்றன. ஒரு குதிரை சுமார் 250 பவுண்ட், அதாவது இரண்டாள் பளுவுசுமந்து செல்கிறது. குதிரையின்மேல் அதிகப் பளுவை ஏற்றினால் அது சீக்கிரத்தில் களைத்துப் போகும். ஆகையால் அதிகப் பளுவில்லாத ஆள்களைப் பொறுக்கியெடுத்து அவர்களிடம் அதிகப் பளுவில்லாத சாமான்களைக்கொடுத்து அவர்களைத் தனியான குதிரைப்படையாகச் சேர்க்கப்படுகிறது. அதற்கு "லைட் காவல்ரி" (Light Cavalry) இலே

சான குதிரைப்படை என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஈடுத்தர மாயுள்ளதும் அதிக பலமுள்ளதுமான குதிரைப்படைகளென்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இலேசான குதிரைப்படையிலுள்ளவர்கள் தங்கள் குதிரைகள் சிக்கிரத்தில் கனைத்துப்போகாமல் அதிக தூரம் பிரயாணஞ் செய்யக்கூடியவர்கள். அவர்கள் அப்படிப்பட்ட வேலை களில் அனுப்பப்படுவார்கள். குதிரையாட்கள் ஒரு துப்பாக்கியும் கத்தியும் வைத்துக்கொண் டிருக்கிறார்கள்; சிலர் ஈட்டியையும் கொண்டுபோகிறார்கள் ஒரு ரிஜிமெண்ட் என்ற குதிரைப்படையி லுள்ள 500 மனிதர்களும், 600 குதிரைகளும், 18-வண்டிகளும் ஒரு ரஸ்தாவில் ஒழுங்காய்ப் பிரயாணஞ்செய்தால், அந்தப் படையின் முன்புறத்திலிருந்து பின்புறம் வரையிலும் சற்றுக் குறைய முக்கால் மைல் நீளமிருக்கிறதென்பதை அறியவேண்டும்.


பீரங்கிப்படை.

பீரங்கியைப்போல வேறெந்த ஆயுதமும் அவ்வளவு ஆச்சரிய மான மாறுதல் அடையவில்லை. 100 வருஷங்களுக்கு முன்னுல், பிரஸித்திபெற்ற போர்வீரராகிய ஃபெப்போலியன் பால்பத்தில் பீரங் கிப்படையில் உத்தியோகஸ்தராயிருந்து பிறகு பிரஞ்சு சக்கரவர்த்தி யாகவும் சேனுதிபதியாகவும் பெரிய சேனையை நடத்தியபோது, பீரங்கியின் வேலைத்திறமையைப் போர்க்களத்தில் வெளிப்படுத்திப் பிரமிக்கத்தக்க வெற்றிகளை அடைந்தார். ஃபெப்போலியன் போர்க் களத்தில் தமது பீரங்கிகளை வெகு சாமர்த்தியமாய் உபயோகித்து தமது காலாள் துருப்புகள் சத்துருக்களை எளிதில் வெல்லும்படி செய்தார். அவர் தமது காலாள் துருப்புகளைச் சத்துருவின் மீது விழுந்துதாக்கும்படி ஏவினபோது அவர்களோடுகூடத்தமது பீரங்கி களையும் அனுப்பினர். சத்துருக்களுக் கிப்பால் சுமார் 600 கெஜ தூரத்தில் தமது பீரங்கிகளை நிறுத்தி பீரங்கியிலிருந்து சத்துருக் களின்மேல் குண்டுகளைப் பொழிந்தார். பீரங்கியின் கெருப்பைச் சத் துருக்கள் தாங்கமுடியாமல் கலங்கிக்கொண் டிருக்கையில் காலாள் துருப்புகள் அவர்களைத்தாக்கி நாசஞ்செய்தார்கள். அவ்வாறு பீரங் கியின் உதவியால் காலாட் துருப்புகள் எளிதாக வெற்றியடைந் தார்கள். ஃபெப்போலியன் தமது பீரங்கிகளை காலாள் துருப்பு களுக்கு உதவியாக அனுப்பின போது, அவைகளில் சாதாரண குண்டை உபயோகிக்க வில்லை. அதேகரவைகள் அடைத்து வைக்கப்


பட்ட குண்டை உபயோகித்தார். அந்தக்குண்டு சத்துருவின் மேல் விழுந்தவுடன் அதனுள்ளே வைக்கப்பட்ட ரவைகள் நாலாப் பக்கங்களிலும் சிதறியடித்தன. அதனால், சத்துருவின் துருப்புகள் நாலாப் பக்கங்களிலும் சேதமாகி விழுந்தனர். சாதாரண குண்டாயிருந்தால், அது விழுகிற இடத்துக்கு அருகிலிருப்பவர் மட்டும் சேதமாவார்கள். ஆனால் சாதாரண குண்டை வெகு தூரத்தி லிருந்து சுடலாம். ரவைகள் அடைத்து வைக்கப்பட்ட குண்டோ, 600 கெஜ தூரத்திற் குள்ளாகவே சுடவேண்டியிருந்தது. நெப்போலியன் காலத்தில் துருப்புகள் உபயோகித்த துப்பாக்கிகள் 600 கெஜ தூரத்திற்கு மேல் சுடாதவை. ஆகையால், நெப்போலியன் தமது பீரங்கிகளை 600 கெஜத்துக்கருகில் கொண்டுபோனபோது, தமது பீரங்கிக் காரர்கள் சத்துருவின் துப்பாக்கிகளால் சேதமாகாமலிருந்தார்கள். ஆனால் அவருடைய காலத்துக்குப் பிறகு வெகு தூரஞ் சுடக்கூடிய துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப் பட்டபடியால், பீரங்கிகளைச் சத்துருவுக் கருகில் கொண்டுபோக முடியவில்லை. அதனால், ரவைகள் அடைத்து வைக்கப்பட்ட குண்டுகளைப் பீரங்கியில் உபயோகிக்க முடியவில்லை. சாதாரண குண்டுகள் மட்டும் உபயோகிக்கப் பட்டன. சாதாரண குண்டுகளால் அதிக பலன் கிடைக்காததால் பீரங்கியின் உபயோகம் குறைவுபட்டது. ஆனால் சென்ற 15-வருஷங்களாகப் பீரங்கியிலும் குண்டுகளிலும் அநேக மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சாதாரண குண்டு எவ்வாறு செய்யப்படுகிறதென்றால், ஒரு இரும்புக் குழாய்க்குள் வெடிமருந்து வைத்து அந்தக்குழாயின் இரண்டு முனைகளும் இரும்பால் மூடப்படுகின்றன. அந்தக் குண்டு எந்த வஸ்துவின்மேலாவது பட்டால் அதனுள்ளே யிருக்கிற வெடி மருந்து தீப்பற்றிக்கொள்ளும்படி ஓர் உபாயம் அந்தக் குண்டுக் குள்ளே செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குண்டு ஏதாவதொரு வஸ்துவின்மேல் மோதினால் அதனுள்ளேயிருக்கிற வெடி மருந்து தீப் பற்றி வெடிக்கிறது. வெடி மருந்தை மூடிக்கொண்டிருக்கிற இரும்புக்குழாய் பல துண்டுகளாக உடைந்து சிதறி விழுகிறது. அந்த இரும்புத் துண்டுகள் துருப்புகளின்மேல விழுந்து சேத முண்டு பண்ணுகின்றன. சத்துருவின் துருப்புகள் தாக்குவதற்கு முன் செல்லும்போது நெருக்கமாய் அணிவகுக்காமல் விசாலமாய் விலகி


நிற்பது வழக்கம். ஆகையால் மேற்சொல்லியவாறு குண்டின் மேற்புறத்திலுள்ள இரும்புக்குழாய் பல துண்டுகளாக உடைந்து விழுந்தால் அதிகம்பேர் சேதமாக மாட்டார்கள். அதற்குக் காரணம், அந்த இரும்புத்துண்டுகளுக்கு வேகமில்லை என்பதல்ல; 40 அல்லது 50 துண்டுகளாக உடையும்போது அவைகள் 10 அல்லது 12 பேர்களை மட்டும் சேதப்படுத்த முடியுமென்பதே.



சாதாரண குண்டு. அதன் உள்புறம் இங்கு காட்டப்பட்டிருக்கிறது. ஒரு இரும்புக் குழாய்க்குள் வெடிமருந்து அடைக்கப்பட்டிருக்கிறது.



'ஷார்ப்னல்' குண்டு
ஒரு இரும்புக் குழாய்க்குள்
அநேக ரவைகள் அடைக்கப்பட்டிருக்கின்றன.



பெரிய குண்டு. இது சாதாரண குண்டைப்போலவே யிருக்கும். ஆனால் இதன் இரும்புக்குழாய் அதிக கனமுள்ளது

விசாலமாய்ப் பரவிச் செல்கிற துருப்புகளைச் சேதப்படுத்துவ தற்கு வேறொரு விதமான குண்டு செய்யப்படுகிறது. அதற்கு ஷார்ப் னல் என்று பெயர். அது எவ்வாறு செய்யப்படுகிற தென்றால், ஒரு இரும்புக் குழாயினுள்ளே கடலைப்பருப்பளவு கொண்ட சிறிய ரவை களை நிரப்பிக் கொஞ்சம் வெடிமருந்தும் வைத்து, குழாயின் இரண்டு மூளைகளும் இரும்பால் மூடப்படுகின்றன. அந்தக்குழாய்க்குள் சுமார் 250 ரவைகள் வைக்கப்படுகின்றன. குழாய்க்குள் நிரக்கிற வெடி மருந்து தீப்பற்றி, முன்புறத்திலுள்ள மூளைமட்டும் வெடித்து விடும் படிசெய்கிறது. உடனே குழாய்க்குள்ளிருக்கிற சிறிய ரவைகளெல் லாம் அதிக வேகத்துடன் விஸ்தாரமாய்ச் சிதறிவிழுகின்றன.. ஆனால் அந்த இரும்புக் குழாய் வெடிக்கிறதில்லை; அதனுள்ளே யிருக்கிற ரவைகள்மாத்திரம் வெளியே பாய்கின்றன. அவ்வாறு சுமார் 250 ரவைகள் சிதறியடிக்கும்போது, துருப்புகள் எவ்வளவு விஸ்தார மாய் விலகிச் சென்றாலும் அநேகம்பேர் சேதமாவார்கள். இந்த ஷார்ப்னல் குண்டுக்கும் சாதாரண குண்டுக்கு மூள்ள வித்தியா சத்தை அறிந்துகொள்ளவேண்டும். சாதாரண குண்டென்பது வெடி மருந் தடைத்துள்ள ஒரு இரும்புக்குழாய்; அதில் வேறொரு விசேஷமு மில்லை. அந்த இரும்புக் குழாய் சிறு துண்டுகளாக உடைந்து துருப்புகளைக் காயப்படுத்துகிறது. ஷார்ப்னல் என் பது அநேக சிறு ரவைகள் வைக்கப்பட்டுள்ள இரும்புக் குழாய். இந்தக் குழாய் உடையாமல் அப்படியே யிருக்கும்; அதன் முன் புறத்து மூளைமட்டும் துண்டித்து விழுந்து அவ்வழியாய் ரவைக ளெல்லாம் வெளியே வந்து விழுகின்றன. இவ்விரண்டுவிதமான குண்டுகளுக்கும் வேறொரு வித்தியாசமிருப்பதைக் கவனிக்கவேண் டும். சாதாரண குண்டு ஒரு வஸ்துவின் மேல் மோதின பிறகுதான் வெடிக்கின்றது. ஆனால் ஷார்ப்னல் குண்டு, குறித்தநேரத்துக்குப் பிறகு தானாகவே ஆகாயத்தில் வெடிக்கக்கூடியது. அது எந்தவஸ்து வின் மீதும் தாக்கவேண்டுமென்ற அவசியமில்லை; இவ்வளவு நேரத் துக்குப்பிறகு வெடிக்கவேண்டுமென்று நாம்நினைத்தால், அதற்கேற்ற படி அந்த குண்டின் மூளையிலுள்ள ஓர் கருவியை திருத்தி வைக்க வேண்டும்; அந்த குண்டு ஆகாயமார்க்கமாய்ப் பாய்ந்துகொண்டிருக் கையில், குறித்த நேரமானவுடன் அது அந்தரத்தில் எங்கிருந்த போதிலும் வெடித்துவிடும். அதிலுள்ள 250 ரவைகளும் மழைபோல

வந்து கொட்டும்; 150 கெஜ உயரத்திலிருந்து விழுந்து, தரையில் 20 கெஜ தூரத்துக்குச் சுற்றிலும் சிதறியடிக்கும். ஷார்ப்னல் குண்டை குறித்த கோரத்தில் வெடிக்கும்படிச் செய்கிற உபாயந் தான் மிகவும் விசேஷமானது. ஏனெனில் இரும்புக்குள் அதிக ரவைகளை வைத்துச் சுடுகிற வழக்கம் 100 வருஷத்துக்கு முன்னுல் நெப்போலியன் காலத்திலும் இருந்தது. ஆனுல் நாம் நிணைத்த சமயத்தில் அதை வெடிக்கச்செய்யும் உபாயந்தான் அந்தக் காலத் தில் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த உபாயம் கண்டு பிடிக்கப் படாததால், அந்த காலத்தில் ரவைகளை வைத்துச் செய்யப்பட்ட குண்டு தரையின்மேல் மோதிய பிறகு வெடித்தது; அதனுல் அந்த ரவைகளெல்லாம் தரையில் மோதி வேகத்தை யிழந்து அவ்வளவு விஸ்தாரமாய்ச் சிதறிவிழவில்லை. மேலும் முற்காலத்தில் ரவைகளை வைத்துச் செய்யப்பட்ட குண்டை அதிக தூரம் சுட முடியாம லிருந்தது. இப்போது செய்யப்படுகிற ஷார்ப்னல், சாதாரண குண்டைப்போல வெகு தூரம் பாய்ந்து செல்லக்கூடியது.

ஷார்ப்னல் குண்டு தூருப்புகளைச் சேதப்படுத்துவதற்காக உப யோகிக்கப்படுகிறது. அந்தக் குண்டினுள்ளே யிருக்கிற ஒரு சிறு ரவை ஒருவன்மேல் பட்டால் அவனைக் கொன்றுவிடுஞ் சக்தியைக் கொண்டிருக்கிறது, ஆனுல் சத்தருவின் தூருப்புகள் வெளியே வராமல் அரண்களுக்குப் பின்னுல் மறைந்துகொண் டிருந்தால் அரண்களைப் பிளந்துவிட்டு தூருப்புகளைச் சேதப்படுத்த வேண்டும். ஷார்ப்னல் குண்டினுள்ள ரவைகள் அவ்வாறு அரண்களினுள்ள கல் கட்டடம், இரும்பு சாமான் முதலியவைகளை உடைப்பதற்குப் போதுமான சக்தி பெற்றிருக்கவில்லை. ஆகையால் அரண்களை உடை ப்பதற்கு ஷார்ப்னல் குண்டு பயன்படாது. அந்த வேலைக்குச் சாதா ரண குண்டு உபயோகிக்கப்படுகிறது. சாதாரண குண்டு அரண்க ளின்மேல் மோதி வெடிக்கிறதாகையால், அரண்கள் உடைந்துபோ கும். சாதாரண குண்டின் மேற் புறமாகிய இரும்புக் குழாய் பல துண்டுகளாக உடையும்போது, அந்த இரும்புத் துண்டுகள் அரண்களினுள்ள சுவர்களைப் பிளந்துவிடும். சத்தருவின் அரண்கள் வலுவாய்க் கட்டப்பட் டிருந்தால், பெரிய குண்டுகள் உபயோகிக்கப் படுகின்றன. இந்தப் பெரிய குண்டு, சாதாரண குண்டைப் போலவே செய்யப்படுகிறது. ஆனுல் அதன் மேற் புறத்

திலுள்ள இரும்புக் குழாய் அதிக கனமுள்ளதாயிருக்கும். அது துண்டுகளாய் உடையும் போது, ஒவ்வொரு துண்டும் பருமனுவும் உறுதியாகவுமிருக்கும். கனமுள்ள இரும்புக்குழாய் பலதுண்டுகளாக உடைவதற்கு, அதனுள்ளே அதிக வேகமுள்ள வெடிமருந்து வைக்கப்படுகிறது. இந்தப் பெரிய குண்டுகளை எவ்வளவு கனமாக வேண்டுமானாலும் செய்யலாம். அவ்வளவு பலமுள்ள குண்டைச் சுடுவதற்குப் பீரங்கிகள்தான் தேவை. பெரிய குண்டுகளைச்சுடுவதற்கு பெரிய பீரங்கிகள்வேண்டும். பெரிய பீரங்கிகளை இஷ்டமான இடத்துக்கு இழுத்துக்கொண்டு போவது எளிதான காரியமல்ல. பெரிய முற்றுகைப் பீரங்கிகளில் அப்படிப்பட்ட பெரிய குண்டுகள் உபயோகிக்கப்பட்டு, கோட்டையிலுள்ள மதில் சுவர்களும் இரும்புக்கட்டடங்களும்உடைக்கப்படுகின்றன. அந்த முற்றுகைப்பீரங்கிகள் ரயில் வண்டிகளில்ஏற்றிக் கொண்டுபோகப் படுகின்றன. அவைகளைச் சுடவேண்டுமானால், பூமியில் வலுவான அஸ்திவாரம் போட்டு, அதன்மேல் அவைகளை ஊன்றவேண்டும். ஆகையால், அந்தப் பெரிய குண்டுகள், பீரங்கிகளின் அளவுக்குத் தகுந்தபடி செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட பீரங்கிகளைக்கொண்டுதான், ஜெர்மானியர் லீஜ் கோட்டைகளையும் ஆண்ட்வர்ப் கோட்டைகளையும் கொஞ்ச நேரத்தில் பொடிசெய்து விட்டார்கள்.

ஆகவே, சாதாரணகுண்டு, பெரியகுண்டு, ஷார்ப்னல்குண்டு ஆகிய இம்மூன்று வகையான குண்டுகள் பீரங்கிகளில் உபயோகிக்கப் படுகின்றன. முதலிரண்டுதினுசுக்குண்டுகளும் ஏதாவதொரு வஸ்துவின் மேல் மோதி பல துண்டுகளாக உடைந்து அந்தவஸ்துவைப் பிளந்து விடும் குணத்தை யுடையவை. ஷார்ப்னல் குண்டு குறித்த நேரத்துக்குப்பிறகு அதிக ரவைகளை வாரியெறிந்து தூரப்புகளையும் மிருகங்களையும் சேதப்படுத்தும்தன்மையை யுடையது. சிலதோசத்துச்சேனையில், குறித்த நேரத்துக்குப் பிறகு வெடிக்கச்செய்யும் உபாயம் சாதாரண குண்டிலும் அமைக்கப் பட்டிருக்கிறது. மேலும், ஷார்ப்னல்குண்டையும் சாதாரண குண்டையும்சேர்த்து ஒரேகுண்டாகச் செய்வதுமுண்டு. அதெப்படி யெனில், முன் சொல்லப்பட்டது போல ஷார்ப்னல் குண்டின் முன்புறத்து மூடிதனியாக விழும் போது, அந்தமூடி சாதாரண குண்டைப்போலப் பலதுண்டுகளாக உடைந்து விழுகின்றது. ஆனால் இம்மாதிரியான குண்டுகளால்

விசேஷ பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், முதலில் சொல்லிய மூன்று வகையான குண்டுகளே இப்போதுள்ள பீரங்கிப் படையில் விசேஷமாய் உபயோகிக்கப்படுகின்றன. முக்கியமாய் ஷார்ப்னல் என்ற குண்டுகள் கண்டி பிடிக்கப்பட்ட பிறகு, பீரங்கியின் வன்மை பல மடங்கு அதிகரித்து விட்டதென்பதைக் கவனிக்கவேண்டும்.

மற்றொரு முக்கியமான வழியில் பீரங்கியின் வன்மை அதிகரித்திருக்கிறதைச் சொல்லவேண்டும். பீரங்கிகள் எப்போதும் வண்டிகளில் ஏற்றித் தேவையான இடங்களுக்குக் கொண்டு போகப்படுவதோடு, வண்டிகளிலிருந்தபடி சுடப்படுவது வழக்கம். பீரங்கியிலிருந்து குண்டு அதிக வேகமாய் வெளியே பாய்ந்தவுடன், அதே வேகத்துடன் பீரங்கி பின்புறமாய் உதைந்து செல்லும். முற்காலத்தில், பீரங்கியும் வண்டியும் சேர்ந்து பின்புறமாய் ஓடும். குண்டைச்சுடும்போதெல்லாம் ஒவ்வொரு தரமும், அந்த வண்டியை முன்பிருந்த இடத்துக்கு மறுபடியும் கொண்டு வந்து வைக்கவேண்டும். இதனால் குண்டைச் சுடுவதற்கு மிகுந்த தாமஸ முண்டாயிற்று. இப்போது ஒரு நூதன உபாயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வண்டியில் இரும்புக்கலப்பையைப்போன்ற ஒரு கருவி பூட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கருவியின் முனையிலுள்ள கொக்கி பூமியில் புதைக்கப்படுவதால் வண்டி அசையாமல் நிற்கிறது. இந்த சாதாரண உபாயத்தை முற்காலத்தவர் செய்யாமலிருந்தது ஆச்சரியமாய்த் தோன்றலாம். ஆனால் அவ்வாறு வண்டியைமட்டும் பூமியில் பதியவைத்தால், பீரங்கி பின்புறமாய் உதையும்போது வண்டியையுஞ் சேர்த்துத் தூக்கி எறிந்து விடும். ஆகையால் பீரங்கியைமட்டும் பின்புறமாய்ச் செல்லும்படி விட்டால், வண்டி ஒரே நிலையில் அசையாமலிருக்கும். பீரங்கி அவ்வாறு சிறிது தூரம் உதைந்து சென்று மறுபடியும் முன் பிருந்த நிலைமைக்கு வருவதற்கு வேறொரு உபாயம் இப்போது செய்யப்பட்டிருக்கிறது. பீச்சுங்குழாயிலிருந்து ஜலம் பீச்சப்படுவதை எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். பீச்சுங் குழாயில் தழைத்துப்பட்ட கைப்பிடியை அழுத்துவதால் குழாயின் முனையிலுள்ள சிறு துவாரத்தின் வழியாய் ஜலம் வெளியே பாய்கிறது. பீச்சுங் குழாய் மிகப் பெரிதாகவும், அதன் முனையிலுள்ள துவாரம் மிகச் சிறிதாகவு

மிருக்கிற தென்று வைத்துக்கொள்வோம். குழாய் பெரிதா யிருப்பதால் அதிலுள்ள ஜலம் அதிகமாயிருக்கும். அவ்வளவு ஜலமும் மிகச் சிறிய துவாரத்தின் வழியாய் வெளியே செல்ல வேண்டுமாகையால் கைப்பிடியை நாம் எவ்வளவு வலுவாய் அழுத்தினாலும், ஜலமெல்லாம் வெளியே போவதற்கு அதிக நேர மாகுமல்லவா? அதாவது, பீச்சுங் குழாய் முற்றிலும் காலி யாகிற வரையில், அதிலுள்ள ஜலம் நம்முடைய பலத்தையெல் லாம் தாங்குகிறது. நாம் அழுத்துகிற கைப்பிடி கொஞ்சங்கொஞ்ச மாய் நம்முடைய பலத்துக்கு இடங்கொடுத்து நழுவிச் செல்வதால், அது உடையாமலிருக்கும். அம்மாதிரியான உபாயம் பிரங்கியில் செய்யப்பட்டிருக்கிறது. பிரங்கியின் அடிப்பாகத்தில் நீளமான பெட்டி யொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியில் ஒரு பாகம் காற்றும், ஒரு பாகம் எண்ணெயும் அடைக்கப்பட்டிருக்கின் றன. காற்றும் எண்ணெயும் கொஞ்சங்கூட வெளியே போவதற்கு வழியில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டிக்குள் மிகச் சிறு துவாரங்கொண்ட பீச்சுங்குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின் றன. அந்த பீச்சுங்குழாய்களில் நிரம்ப எண்ணெயிருக்கின்றது. பீரங்கி பின்புறமாய்ச் செல்லும்போது, பெட்டியிலுள்ள பீச்சுங் குழாய்களைத் தள்ளிக்கொண்டு செல்கிறது. பீச்சுங் குழாயிலுள்ள எண்ணெய் சிறு துவாரத்தின் வழியாய் கொஞ்சங் கொஞ்சமாய் பீச்சும்போது, பீரங்கியின் வேகம் வரவரத் தணிந்து போகிறது. பெட்டியில் ஏற்கெனவே எண்ணெய் அடைக்கப்பட் டிருப்பதால், பீச்சுங்குழாயிலிருந்து அதிகப்படியான எண்ணெய் பெட்டிக்குள் அடைந்து கொள்கிறது. அப்போது பெட்டியில் அதிகப்படியா யுள்ள எண்ணெய் வெளியே செல்ல முயற்சி செய்து பீச்சுங்குழாய் களைத் தள்ளுகிறது. அதனால் பீரங்கியும் முன்பிருந்த நிலைமைக்கு மறுபடியும் கொண்டுவரப்படுகிறது. இந்த உபாயத்தால் பீரங்கியி லிருந்து குண்டைச்சுட்டவுடன் வண்டி இருந்த யிடத்தை விட்டு அசையாமல் நிற்கிறது; பீரங்கியும் சிறிது பின் சென்று உடனே முன்பிருந்த நிலைமைக்கு வந்து விடுகிறது. ஆகையால், பீரங்கி களைச் சிறிதும் தாமதமில்லாமல் வைவாய்ச்சுடுவதற்கு இப்போது சாத்தியப்படுகிறது.


பீரங்கிகளில் மூன்று முக்கியமான தினுசுகளிருக்கின்றன.

ரோட்டுகளிலும் போர்க்களத்திலும் அதிக சிரமமில்லாமல் கொண்டு போகக்கூடிய இலேசான பீரங்கிகள் மிகவும் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. பிரிட்டிஷ்சேனையில் அந்த பீரங்கிகள் 18 பவுண்டு நிறையுள்ள குண்டைச் சுடுகின்றன. ஷார்ப்னல் என்ற குண்டுதான் அந்தப் பீரங்கியில் உபயோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு பீரங்கியோடு இரண்டு வண்டிகள் குண்டுகளே ஏற்றிக்கொண்டு போகின்றன. யுத்த களத்தில் பீரங்கியைச் சுடும்போது ஒரு வண்டிதான் அதன் பக்கத்தில் வைத்துக்கொள்ளப்படுகிறது. மற்றொரு வண்டி தூரத்தில் பந்தோபஸ்தான இடத்தில் வைக்கப்படுகிறது. ஒவ்வொரு பீரங்கியையும் எப்போதும் ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டுபோகிறார்கள். அந்த வண்டிக்கு நான்கு சக்கரங்க ளிருந்த போதிலும், முன் புறத்திலுள்ள இரண்டு சக்கரங்களுக்குமேல் தனி வண்டிபோலவும், பின் புறத்திலுள்ள இரண்டு சக்கரங்களுக்கு மேல் வேறொரு வண்டி போலவும் செய்த அவ்விரண்டு பாகங்களும் வெவ்வேறுப் திரும் புப்படி பூட்டப்பட் டிருக்கின்றன. மிகவும் நீளமாயுள்ள அந்த வண்டி அவ்வாறு பூட்டப்பட்டால் மூலைகளில் திரும்புவதற்கும் மேடுபள்ளங்களில் ஏறி யிறங்குவதற்கும் சௌகரியமா யிருக்கும். ஒரு பீரங்கியை 6 குதிரைகள் இழுத்துச் செல்கின்றன. பீரங்கியை ஏற்றிக்கொண்டு செலகிற வண்டியைப்போலவே, வெடி மருந்து வண்டிகளும் செய்யப்பட்டு, 6 குதிரைகளால் இழுக்கப்படுகிறது. இந்த இலேசான பீரங்கியி லிருந்து ஒரு நிமிஷத்துக்கு 20 முதல் 25 குண்டுகள் வரையில் சுடக்கூடும்; இரண்டு மைல் தூரத்தி லிருந்துகொண்டு அதிக சேதத்தை உண்டுபண்ணும்படியாய்ச் சுடலாம். சில சமயங்களில் அந்த பீரங்கி 3½ மைல் தூரத்துக் கப்பால் சேதத்தை விளைவிக்கக்கூடும். அதற்கும் அதிகமான தூரத்தில் சுட்டால், அந்த பீரங்கியி லிருந்து பாய்கிற குண்டுகள் வேகங் குறைந்துபோய் எவ்வித சேதத்தையும் உண்டுபண்ணுவ தில்லை. இந்த இலேசான பீரங்கிகள் காலாட்படை செல்கிற இடங்களுக் கெல்லாம் கொண்டுபோகப்படுகின்றன. காலாட்கள் தாருப்புகள் சத்துருவைத் தாக்குவதற்கு முன செல்லும்போது, அந்த பீரங்கிகள் தாருப்புகளுக்கு உதவிசெய்யும். இந்த பீரங்கி 18 பவுண்டு நிறையுள்ள குண்டைச் சுடக்கூடியதென்று சொல்லி யிருக்கிறோம். இந்த பீரங்கி 3 அங்குலம் குறுக்களவுள்ள வாயை யுடையது. யுத்த கப்பலில்


15 அங்குலம் குறுக்களவுள்ள பெரிய பீரங்கிகளை உபயோகிக்கும் போது, இந்த 3 அங்குல பீரங்கி மிகவும் சிறியதென்றே சொல்ல வேண்டும். ஆயினும், காலாட்படையோடு கூட, இந்த பீரங்கிகளை எவ்வித மூரட்டு சோட்டுகளிலும் அதிக மைல் தூரம் ஒவ்வொரு தினமும் இழுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் அதை விடப் பெரிய பீரங்கியை காலாட்படையில் சேர்த்துக்கொண்டு போவது சாத்தியமாயில்லை. இந்த 3 அங்குல பீரங்கி சுமார் 840 பவுண்ட் பளுவுள்ளது. அதோடு பீரங்கி ஏற்றப்பட்டிருக்கிற வண்டியையும் சேர்த்து இழுப்பதற்கு 6 குதிரைகள் தேவையாயிருக்கிறது. மேலும் சத்துருவினுடைய துருப்புகளை அழிப்பதற்கு இந்த பீரங்கியின் வன்மை போதுமானது. டிவிஷன் என்ற சேனை வகுப்பில், 54 பீரங்கிகள் கொண்டுபோகப் படுகின்றன. இந்த பீரங்கி தான் காலாட்படையில் மிகவும் அதிகமாய்க் காணப்படுகிறது. அதிலிருந்து சுடப்படுகிற குண்டு 2-மைல் தூரம் பாயக்கூடியது. அதை விட அதிக வேகங்கொண்ட சில பீரங்கிகளும், காலாட்படையோடு சேர்கப்பட் டிருக்கின்றன. இந்த பளுவான பீரங்கி 60 பவுண்ட் நிறையுள்ள குண்டைச் சுடக்கூடியது. "டிவிஷன்" என்ற சேனை வகுப்பில், அவ்வித பளுவான பீரங்கிகளில் நான்குதான் கொண்டுபோகப் படுகின்றன. ஒவ்வொரு பீரங்கியையும் 8 குதிரைகள் இழுத்துச் செல்கின்றன. இதற்கு முன் சொல்லப்பட்ட இலேசான பீரங்கியை மூரட்டு சோட்டுகளிலும் குறுக்குப் பாதைகளிலும், சில சமயங்களில் வயற்காட்டிலும் இழுத்துக்கொண்டு போகலாம். ஆனல் பளுவான பீரங்கியை எட்டுக் குதிரைகள் இழுத்துங்கூட கல்ல சோட்டுகளில் கால்நடைவேகத்தில்தான்கொண்டுபோகச் சாத்தியப்படுகிறது. பிரிட்டிஷ் சேனையிலுள்ள இந்த 60 பவுண்ட் பீரங்கிகள் வான்ஸ் சண்டையில் மிகவும் பிரபலம் பெற்றது. இந்த பீரங்கி சுமார் 4 மைல் தூரம் சுடக்கூடியது.

இந்த பளுவான பீரங்கியைத் தவிர, ஹவிட்ஸர் என்ற மற்றொரு தினுசான பீரங்கியும் காலாட் படையுடன் உபயோகிக்கப் படுகிறது. ஹவிட்ஸர் என்ற பீரங்கி அதிக பருமனுய் இருக்குமே யொழிய நீளமா யிராது. அது ஆகாயத்தை நோக்கி உயரத்தில் சுடப் படுகிறது. அதிலிருந்து சுடப்படுகிற குண்டு உயரத்தில் சென்று பிறகு கீழாக ஒரு குறித்த வஸ்துவின்மேல் வந்துவிழும். ஹவிட்


ஸர் பீரங்கி, கோட்டைகளையும் மற்ற அரண்களையும் உடைப் பதற்காக உபயோகிக்கப் படுகிறது. கோட்டைகளிலுள்ள பெரிய மதிற் சுவர்களுக்குப் பின்னல் சத்துருக்கள் மறைந்துகொண் டிருந்தால், அவர்களை எவ்வாறு தாக்குவது? சாதாரண பீரங் கியைச் சுட்டால் அதிலிருந்து புறப்படுகிற குண்டு நேராகச் சென்று மதிற் சுவரின் மேல் மோதுமே யொழிய அதற்குப் பின்னல் மறைந்து கொண்டிருக்கிற சத்துருக்களைப் பாதிக்காது. ஆகையால், ஹவிட்ஸர் பீரங்கியிலிருந்து குண்டை ஆகாயத்தில் சுட்டால் அந்த குண்டு உயரச்சென்று ஆகாயமார்க்கமாய் வளைந்துவந்து நேர்கீழாகப் பாய்ந்து மதிற் சுவருக்குப் பக்கத்தில் வந்தவிழும். கோட்டைக் குள்ளே யிருக்கும் பாதைகளிலும் இடைவெளியிலும் சத்துருக்கள் நடமாடிக்கொண் டிருந்தால், கோட்டையின் மத்தியில் குண்டுகள் விழும்படி ஹவிட்ஸர் என்ற பீரங்கியைச் சுடலாம். மேலும், சத்து ருக்கள் தங்கள் பீரங்கிகளைத் தரையில் குழிதோண்டி தரைமட்டத் துக்குப் புதைத்து மறைத்து வைத்திருப்பார்கள். சாதாரண பீரங் கிகள் நேராகச் சுடுமாகையால், தரைமட்டத்திலிருக்கிற சத்துருவின் பீரங்கியைச் சேதப்படுத்த முடியாது. ஹவிட்ஸர் பீரங்கியிலிருந்து குண்டைச் சுட்டால், அது உயரச்சென்று, செங்குத்தாய் பூமியின் மீது விழுந்து பூமியைப் பிளந்துவிடும்.




வெடி மருந்து வண்டி:—இந்த வண்டியில் ஷார்ப்னல் குண்டுகள் கொண்டு போகப்படுகின்றன. அந்த வண்டிக்குள்ளே சிறு சக்காங்களைப் போலுள்ள துவா ரங்களில் ஷார்ப்னல் குண்டுகள் நுழைத்து வைக்கப்பட் டிருக்கின்றன. அந்த வண்டிக்குப் பக்கத்தில் ஒரு கருவி தரையில் வைக்கப்பட் டிருப்பதைப் படத்தில் காணலாம். ஷார்ப்னல் குண்டு பீரங்கியிலிருந்து புறப்பட்ட பிறகு இவ்வளவு நேர மானவுடன் வெடிக்கும்படி செய்வதற்கு அந்தக் கருவி உபயோகிக்கப்படுகிறது.



ஷார்ப்னல் குண்டை சாதாரண பீரங்கியிலிருந்து சுட்டால், அந்த குண்டிலிருக்கிற 250 ரவைகளும் சத்துருக்களின் முகத்தில் வாரியடிக்கின்றன.




சாதாரண பீரங்கிக்கும் ஹவிட்ஸர் பீரங்கிக்குமுள்ள வித்தியாசம் அந்த படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. படத்தின் வலது புறத்தில் தருப்புகள் அரண்களுக்குப் பின்னல் இருந்து வருகிறார்கள். முன்புறத்தில் வெடிக்கிற ஷார்ப்னல் குண்டு சாதாரண பீரங்கியிலிருந்து சுடப்பட்டிருக்கிறது. அந்த குண்டு எதிர்புறமாய் நோக்கி நேராகப் பாய்கிறது. மற்றொரு ஷார்ப்னல் குண்டு ஹவிட்ஸர் பீரங்கியிலிருந்து சுடப்பட்டிருக்கிறது; அது உயரத்திலிருந்து கீழாக நோக்கி மழைபோலக் கொட்டுகிறது; அரண்களுக்குப் பின்னலுள்ள தருப்புகளின்மேல் அது பாய்கிறது.



இந்தப் படத்தின் வலது பக்கத்தில் இரும்புக் கவசத்துக்குள் பீரங்கிகள் மூடிவைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை உடைப்பதற்காகப்பெரிய குண்டுகள் அங்கு வந்து விழுகின்றன. முன் புறத்தில் வெடிக்கிற குண்டு சாதாரண பீரங்கியிலிருந்து சுடப்பட்டிருக்கிறது. அது இரும்புக்கவசத்துக்கு முன்புறத்தில் வந்து மோதி தெரித்து விடுகிறது. மற்றொரு குண்டு ஹவிட்ஸர் பீரங்கியிலிருந்து சுடப்பட்டிருக்கிறது. அது உயரத்திலிருந்து விழுந்து இரும்புக்கவசத்தின் மத்தியில் துளைத்துச்சென்று வெடிப்பதால், இரும்பு சாமான்களெல்லாம் உடைந்துபோகும்.



பீரங்கி சுடப்படுவதற்குத் தயாராயிருக்கிறது.




பீரங்கி சுடப்பட்டவுடன் பின்புறம் உதைகிறது. படத்தில் விவரங்கள் எழுதப்பட் டிருக்கின்றன. 329, 330-ம் பக்கங்களைப் பார்க்க.



THE SPHERE.


ஜெர்மன் படையிலுள்ள இலேசான பீரங்கியும் அதைச்சேர்ந்த ஆட்களும். 331, 336-ம் பக்கங்களைப் பார்க்க.



கம்பியில்லாத் தந்தி ஸ்தலம்:—அமெரிக்காவிலுள்ள கிளேஸ்பே என்ற ஸ்தலத்தில் மிகப் பெரிதாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து ஐரோப்பாவிலுள்ள நகரங்களுடன் சமாச்சாரப் போக்குவரத்து நடத்தப்படுகிறது.



கம்பியில்லாத் தந்தி மூலமாய் சமிக்ஞைனை அனுப்புவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும், அந்த அறை கப்பலுக்குள்ளே அமைக்கப் பட்டிருக்கிறது. படத்திலுள்ள உத்தியோகஸ்தர் காதுகளில் ஓர்வகைக் கருவியைமாட்டிக்கொண்டு சமிக்ஞைனை அறிகிறார்.



பெரிய குண்டு அரண்களின் மேல் மோதி பூமி வரையில் பிளந்துவிடுகின்றது.

காலாட்படையுடன் அம்மாதிரியான 18 ஹவிட்ஸர் பீரங்கிகள் கொண்டுபோகப் படுகின்றன. பிரிட்டிஷ் சேனையில், இந்த ஹவிட்ஸர் பீரங்கி, 5 அங்குலம் குறுக்களவுள்ள வாயையுடையது. இந்த ஹவிட்ஸர் பீரங்கியில் மிகப்பெரிய தினுசுகளுக்கு முற்றுகைப் பீரங்கியென்று பெயர். முற்றுகைப் பீரங்கிகள் கோட்டைகளை இடிப்பதற்கும், இரும்பு சாமான்களை உடைப்பதற்கும், சத்துருக்களின் பீரங்கிகளை நாசஞ்செய்வதற்கும் உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் முற்றுகை பீரங்கி மிகப் பெரிதாயும் பளுவுள்ளதாயுமிருப்பதால் அவைகளைக் குதிரைகள் எளிதாய் இழுத்துச் செல்லா. அவைகள் ரோட்டுகளில் மோட்டார் வண்டிகளால் இழுக்கப்படுகின்றன. இன்னுஞ் சில பெரிய தினுசுப் பீரங்கிகள் ரயில் தண்டவாளத்தில் எஞ்ஜின்களால் இழுக்கப்படுகின்றன. இந்தப் பெரிய முற்றுகைப் பீரங்கிகள் கோட்டைகளில் வைக்கப்படாமே யொழிய வெளியே ரோட்டுகளில் இழுத்துக்கொண்டு போக முடியாதென்று இது வரையில் கருதப்பட்டது. ரயில் பாதையுள்ள இடங்களுக்கு மட்டும், ரயில் எஞ்ஜின்களால் இழுக்கப்படலாமென்றும் நினைக்கப்பட்டது. ஆனால் இந்த யுத்தத்தில் ஜெர்மானியர், பெரிய மோட்டார் வண்டிகளில் முற்றுகை பீரங்கிகளில் சிலவற்றை ரோட்டுகளில் கொண்டுபோகிறார்கள்.

காலாட்படையோடு, இலேசான பீரங்கிகள் அதிகமாய்க் கொண்டு போகப்படுகின்றனவென்று சொன்னோம். அந்த பீரங்கி 18 பவுண்ட் நிறையுள்ள குண்டைச்சுடக்கூடியதென்றும் சொன்னோம். குதிரைப் படையோடு சில பீரங்கிகள் கொண்டு போகப்படுகின்றன. குதிரைப் படை விரைவாய்ப் பிரயாணஞ் செல்லு மாகை

யால், அதோடு கொண்டு போகப் படுகிற பீரங்கிகளும் விரைவாய்ச் செல்ல வேண்டும். அதற்காக, சற்றுக் குறைந்த பளுவுள்ள பீரங்கி உபயோகிக்கப் படுகிறது. இந்தக் குதிரைப் படையைச் சேர்ந்த பீரங்கி 12பவுண்ட் நிறையுள்ள குண்டைச் சுடக்கூடியது. மற்றொரு விதமாயும் பளுவு குறைக்கப் பட்டிருக்கிறது. காலாட் படையைச் சேர்ந்த பீரங்கியைக் கொண்டு போகும் போது பீரங்கி யாட்கள், பீரங்கி ஏற்றப் பட்டிருக்கும் வண்டியில் உட்கார்ந்து கொண்டு செல்வார்கள். குதிரைப் படையில், பீரங்கிக் காரர்கள், வண்டியில் உட்காராமல், தனியாக குதிரையில் சவாரி செய்வார்கள். ஆகையால், குதிரைப் படையைச் சேர்ந்த பீரங்கிகள், விரைவாய்ப் பிரயாணஞ் செய்யக் கூடியவை.

பீரங்கிப் படையில், மற்றப் படைகளைப் போல, அநேக சிறு பிரிவு களிருக்கின்றன. பீரங்கிப் படையில் மிகச் சிறிய பிரிவுக்கு பாட்டரி (battery) என்று பெயர். 6பீரங்கிகள் கொண்டது ஒரு பாட்டரி யாகும். ஆனல் பளுவான பீரங்கியில் நான்கு தான் ஒரு பாட்டரியில் இருக்கின்றன. 6 பீரங்கிகளை யுடைய ஒரு பாட்டரியில், 12 வெடி மருந்து வண்டிகளும் சில்லரை சாமான்களுக்கு 4 வண்டிகளும், மொத்தம் 140 குதிரைகளும் இருக்கின்றன. ஒரு பாட்டரியில் 204 பேர் இருக்கிறார்கள். அதாவது ஒவ்வொரு பீரங்கிக்கும் சராசரி 34 பேர் தேவையா யிருக்கிறது. பீரங்கியில் குண்டை தூழைப்பவர்களும், குறி பார்ப்பவர்களும், பீரங்கியைச் சுடுகிறவர்களும் வண்டிகளை ஓட்டுகிறவர்களும், சமிஞ்ஞை செய்கிறவர்களும், வைத்தியர்களும், சில்லரை வேலைக்காரர்களும், உத்தியோகஸ்தர்களும் எல்லோருமாகச் சேர்ந்து மொத்தம் 204 பேர் இருக்கிறார்கள்.

இஞ்ஜினியர் படை—
போர்க்களத்தில் கட்டட வேலைகள்
எவ்வாறு நடக்கின்றன.

ஒருசேனையிலுள்ள காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப் படை ஆகிய இம்மூன்று படைகளையும்பற்றிய விவரங்களைச் சொல்லி வந்தோம். இம்மூன்று படைகளும் போர்க்களத்தில் சென்று சண்டை செய்கின்றன. ஆனல் அந்தப் படைகளைப் போர்க்களத்தில் நிர்வகிப்பதற்கும், அவைகளைப் போர்க்களத்தில் நடத்துவதற்கும்

இன்னுஞ் சில சௌகரியங்கள் தேவையாயிருக்கின்றன. துருப்புகள் போர்க்களத்தில் சண்டை செய்வதற்கு, அகழ் வெட்ட வேண்டும்; அரண்களும் கட்டவேண்டும். நதிகளைத் தாண்டுவதற்குப் பாலங்கட்டவேண்டும். இவைகளைச் சாமர்த்தியமாகவும் சீக்கிரமாகவும் செய்வதற்கு, இஞ்ஜினியர் படை ஒன்று இருக்கிறது. ஒரு இஞ்ஜினியர் படையில் சுமார் 200 பேர் இருக்கிறார்கள்.

அரண்கட்டுதல்.

அகழ் வெட்டுவதற்காக, அதிக பளுவான சாமான்கள் அந்தப் படையில் கொண்டுபோகப்படுகின்றன. அரண்கட்டும்போது, சுவர் எழுப்புவதற்குப் பதிலாக, மணல் மூட்டைகள் ஒன்றின்மேல் ஒன்றுப் அடுக்கப்படுகின்றன. அரண்களுக்கு முன்னால் இரும்புக் கம்பி வலைகள் கட்டப்படுகின்றன. சத்துருக்கள் அரண்களுக்கு கருகில் வருவதற்கு முயற்சி செய்தால் அந்த இரும்பு வலைகள் தடை செய்யும். ஆகையால், இஞ்சினியர் படையில், மணல் மூட்டைகளும் இரும்பு வலைகளும், கொண்டுபோகப்படுகின்றன. கல் கட்டடத்துக்கு வேண்டிய சாமான்களும், தச்சுவேலைச் சாமான்களும், பழய கட்டடங்களை உடைப்பதற்கும் தரையில் சுரங்கம் வெட்டுவதற்கும் வெடி மருந்தும் மற்றக் கருவிகளும், கொண்டுபோகப் படுகின்றன. பீரங்கி, ஆப்பீரங்கி வண்டிகள் முதலியவைகளைப்பழுதுபார்ப்பதற்கு வேண்டிய சாமான்களும் கொண்டுபோகப்படுகின்றன. துருப்புகளுக்கும் குதிரைகளுக்கும் வேண்டிய தண்ணீர் வசதிகளுக்காக அதிக சாமான்களிருக்கின்றன. குழாய்கள், பம்புகள், தொட்டிகள் முதலிய அதிக சாமான்கள் தேவையாயிருக்கின்றன. போர்க்களத்தைக் காட்டுகிற பூகோளப்படங்களை எழுதி அச்சடிப்பதற்கு, சித்திரவேலை சாமான்களும், அச்சுவேலைச் சாமான்களும் கொண்டுபோகப்படுகின்றன. போர்க்களத்தின் விவரங்களைக் காட்டுவதற்கு அதிக படங்கள் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொரு படைத்தலைவருக்கும் கொடுக்கப் படுகின்றன. ஒவ்வொரு படைத் தலைவரும் அதிக மைலுக் கப்பாலுள்ள போர்க்களத்தை நேரில் சென்று பார்ப்பது சாத்தியமல்ல. ஆகையால், அவர்கள் போர்க்களத்தின் படத்தைப் பார்த்து ராணுவ நடவடிக்கைகளைப் பற்றி உத்தரவுகள் செய்வார்கள்.

பாலங்கட்டுதல்.

இஞ்ஜினியர் படையில், பாலங்கட்டுவதற்குத் தேவையான சாமான்கள் கொண்டுபோகப் படுகின்றன. பாலங்கட்டுவதற்கு இரண்டு முக்கியமான சாமான்கள் உபயோகிக்கப் படுகின்றன. சிறு படகுகள் நதிக்குக்குறுக்கே வரிசையாய் சேர்த்துக் கட்டப்படுகின்றன. அந்தப் படகின் அடிப்பாகம் தட்டையாயிருக்கும்; படகு அதிகமாய்க் குழிந்திருக்காது. அப்படிப் பட்ட படகுகள் அதிக பளுவைத் தாங்கி ஜலத்தில் முழுகாமலிருக்கும். சில சமயங்களில், பீப்பாய்களும் உபயோகிக்கப்படுகின்றன. பீபபாய்கள் ஜலத்தில் மிதக்கக்கூடியவை. பீப்பாய்களை நீளவாட்டில் இரண்டாய்ப் பிளந்தால், இரண்டு சிறிய படகுகளாகின்றன. பூமியில் உறுதியாய் நிற்கக்கூடிய சிறிய ஏணிகள் உபயோகிக்கப்படுகின்றன. அந்த ஏணிகள் மூன்று அல்லது நான்கு கால்களையுடையவை. ஏணியின் மேற் புறத்தில் பலகைபோடப்பட்டிருக்கும். இவைகள் கரைமீ பாரங்களில் ஊன்றப்படுகின்றன. ஒரு இஞ்ஜினியர் படையிலுள்ள சாமான்களைக்கொண்டு, 75 அடி நீளத்துக்கு ஒரு பாலங் கட்டலாம். அந்தப் பாலத்தின்மேல், தருப்புகள் செல்வதோடுகூட இலேசான பீரங்கிகளும், வண்டிகளும், சாமான்களைக்கொண்டு போகிற பெரிய மோட்டார் வண்டிகளும் சுலபத்தில் செல்லலாம். ஆனால் பளுவான பீரங்கிகளை அந்தப் பாலம் தாங்காது. இத்தப் பீரங்கிகளையும் தாங்கும்படி அதிக வலுவுள்ள பாலங்கட்டினால், அவ்வாறு 45 அடி நீளத்தான் கட்ட முடியும். காலாட் தருப்புகள் மாத்திரம் பாலத்தின்மேல் செல்வதாயிருந்தால், ஒரு இஞ்ஜினியர் படையிலுள்ள சாமான்களைக்கொண்டு 105 அடி நீளம் கட்டலாம். ஒரு இஞ்ஜினியர் படையிலுள்ள 300 பேர்கள் சேர்ந்து பளுவான பீரங்கிகளையுந் தாங்கக்கூடிய 350 அடி நீளமுள்ள ஒரு பாலத்தை நான்கு மணி நேரத்தில் கட்டிவிடுகிறார்களென்றால், அந்த வேலை எவ்வளவு சாமர்த்தியமாகவும் சீக்கிரமாயும் செய்யப்படுகிறதென்பதை அறிந்துகொள்ளலாம். அந்த பாலம் நதிக்கரையில் கட்டப்பட்டு பிறகு தண்ணீரில் மிதக்கவிடப்படுகிறது. பிறகு இரண்டு கரைகளிலும் அந்தப் பாலத்தை ஊன்றிப் பதிய வைக்கிறார்கள். இஞ்ஜினியர் படை அகழ்வெட்டுதல், சுரங்கம் தோண்டுதல் முதலிய வேலைகளைச் செய்வதோடு பாலங்களையும் கட்டுகின்றது. சேனைத்

தலைவரோடு பிரத்தியேகமாய் பெரிய இஞ்ஜினியர் படைகள் பாலங் கட்டுவதற்கென்றே செல்கின்றன. பெரிய பாலங்களைக் கட்டவேண்டுமானால் இந்தப் படைகள் போர்முனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்தப் படை பொன்றில் கொண்டுபோகப்படுகிற சாமான்களால் 10 கெஜ நீளத்துக்கு இலேசான பாலமும், 105 கெஜநீளத்துக்கு வலுவான பாலமும் கட்டமுடியும்.

ரயில் போர்தேல்.

ரயில் பாதையைக் கட்டுவதற்காக சில இஞ்ஜினியர்கள் சேனைகளில் சேர்க்கப்படுகிறார்கள். சமாதான காலத்தில் போடப்பட்டிருக்கிற ரயில் பாதையைச் சுற்றி அநேக மைல் தூரத்துக்கு திருப்புவதற்கள் விலகிபிருந்து சண்டை செய்யுமாதலால், அவ்வாறு பிரிந்திருக்கிற படைகளுடன் எளிதாய்ப் போக்கு வரத்து செய்வதற்குப் புதிய ரயில் பாதைகள் கட்டப்படுகின்றன. இப்போது நடக்கிற மகா யுத்தத்தில் சாமான்களை இழுப்பதற்கென்றே பிரத்தியேகமாய்ச் செய்யப்படுகிற புதுத் தினுசான மோட்டார் வண்டிகள் உபயோகிக்கப்படுகின்றன. இதற்கு முன்னுள் உதாரணமாக, ருஷிய, ஜப்பானிய யுத்தத்தில் சண்டை நடக்கிற பிரதேச மெங்கும் புதிய ரயில் பாதைகள் போடப்பட்ட பிறகுதான், சண்டைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த மகா யுத்தத்தில மோட்டார் வண்டிகளை உபயோகித்துங்கூட புதிய ரயில் பாதைகளின் அவசியம் நீங்கவில்லை. இவ்வாறு போர் முனையில் கட்டப்படுகிற ரயில் பாதைகளில், இலேசான தண்டவாளமும் இலேசான ரயில் வண்டிகளும் உபயோகிக்கப்படுகின்றன. இந்தப் புதிய ரயில் பாதைகள், முக்கியமாய் பெரிய பளுவான பீரங்கிகளை இழுத்துச் செல்வதற்கு உபயோகிக்கப்படுகின்றன. இந்த ரயில் பாதைகள் பந்தோபஸ்தாயுள்ள பிரதேசங்களில்தான் போடப்படுகின்றன. ரயில் பாதையில்லாத சில இடங்களில்தான் மோட்டார் வண்டிகள் ஓட்டப்படுகின்றன. இவ்வாறு புதிய ரயில் பாதைகளைக் கட்டுவதற்கும் பழுது பார்ப்பதற்கும், ராணுவ அதிகாரத்துக்குட்பட்ட ரயில் பாதைகளை யெல்லாம் நிர்வகிப்பதற்கும் சில இஞ்ஜினியர் படைகள் ஒவ்வொரு சேனையிலும் சேர்க்கப்படுகின்றன.

சமிக்ஞைசெய்யும் படை—
சண்டை நடக்கும்போது சமாசாரப்போக்கு வரத்து
எவ்வாறு நடத்தப்படுகிறது.

ஒரு சேனையில், இஞ்ஜினியர் படைகளைத் தவிர, சமிக்ஞை செய்யும்படைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காலத்து சேனையில், சமிக்ஞைசெய்யும் படை பிரதான அம்சமாகக் கருதப்படவேண்டும். ஒரு சேனையிலுள்ள குதிரைப்படை, பீரங்கிப்படை காலாட்படை இவைகளை தேகத்திலுள்ள சதை, எலும்பு உதிரம் இவைகளுக்கு ஒப்பிட்டால், சமிக்ஞைசெய்யும் படையை தேகத்திலுள்ள நுட்பமான நரம்புகளுக்கு ஒப்பிடவேண்டும். சேனையிலுள்ள குருப்புகளும், ஆயுதங்களும் சரியானபடி ஒழுங்காய் வேலைசெய்ய வேண்டுமானால், பற்பலவிதமாய்ப் பிரிந்து வேலைசெய்கிற பாகங்களுக்குச்சமாச்சாரங்களையும் உத்தரவுகளையும் சீக்கிரத்தில்சரியான படி அனுப்புவது அவசியமாகும். சேனைத்தலைவர்கள் தாங்களிருக்குமிடத்திலிருந்து தூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் நடமாடிக்கொண் டிருக்கிற படைகளின் நிலைமையை விவரமாய்த் தெரிந்து கொள்ளவும் அவைகளுக்கு சரியான உத்தரவுகளை அனுப்பவும் வேண்டும். இந்த நுட்பமான வேலையைத் தந்தி, டெலிபோன், கம்பியில்லாத்தந்தி, கொடிகள், விளக்குகள், ஆகாயவிமானங்கள், குதிரைகள், மோட்டார் வண்டிகள் முதலிய எவ்விதமான சாதனங்களைக் கொண்டு செய்தபோதிலும், சேனையிலுள்ள சமிக்ஞை செய்யும் படைகள் மிகுந்த திறமைபெற்றிருத்தல் அவசியமென்று ஏற்படுகிறது. இந்தக் காலத்து யுத்தம லக்ஷக்கணக்கான துருப்புகளைக் கொண்டு 100,200 மைல்களுக்கு விஸ்தாரமாய் வியாபித்து நடக்கின்றது. வெகு தூரத்திலிருந்து சுடக்கூடிய ஆயுதங்களும், வெகு வீரைவாய்ச் சுடக்கூடிய ஆயுதங்களும் யுத்தத்தில் உபயோகிக்கப்படுவதால், துருப்புகள் விசாலமாய்ப் பரவிச்சண்டைசெய்வது அவசியமாகிவிட்டது. போர்க்களத்தில் துருப்புகள் மங்கலானவர்ணமுடைய உடைகளைத் தரித்துக்கொண்டு, பீரங்கிகளுக்கும் வண்டிகளுக்கும் அம்மாதிரியான வர்ணத்தைக்கொடுத்து, பூமியில் குழிதோண்டி மறைத்துகொண்டு, நெருப்பாயுதங்களில் புகையாத வெடி மருந்துகளை உபயோகித்துச்சண்டைசெய்வதால், துருப்புகள் லக்ஷக்கணக்கா யிருந்தாலும் போர்க்கள முழுவதும் மனிதசஞ்சார

மற்ற ஒரே வயற்காடாய்த் தோன்றுகிறது. அவ்வாறுள்ள போர்க்களத்தில் எள்ளளவு தவறுதலில்லாமல், அங்கங்கே பதுங்கியுள்ள படைகள் இன்னின்னவை யென்று அறிந்து உத்தரவுகளைக் கொண்டுபோகவும் வரவும் வேண்டும். அந்த வேலை இப்போது மிகவும் கடினமாகிவிட்டது. சத்துருக்களும் அநேக நூதன உபாயங்களை அனுசரிப்பார்களாகையால், அதிகமுரைவாயும் ஒழுங்காயும் சாமர்த்தியமாயும் உத்தரவுகளைச் செய்கிற கக்ஷிக்குத்தான் ஜெயம் கிடைக்கும்.

சமிக்ஞைசெய்யும் படைகளுக்கு இரண்டுமுக்கியமான வேலைகளிருக்கின்றன. முதலாவது சேனபதி யிருக்கிற ஸ்தலத்திலிருந்து போர்க்களத்துக்குச் செல்லுகிற படைகளின் தலைவர்களுக்குச் சமாச்சாரங்களை அனுப்பவேண்டும். இரண்டாவது போர்க்களத்திலிருக்கிற படைகள் ஒன்றுக்கொன்று சமாச்சாரங்களை அறிவித்துக் கொள்ளவேண்டும்.


சேனபதிகள் எவ்வாறு உத்தரவு செய்கிறார்கள்.

போர்க்களத்துக்குப் பின்னால் வெகு தூரத்தில் ஒரு முக்கியமான ஸ்தலத்தில் சேனபதி இருந்து வருவார். இந்த காலத்தில் போர்க்களமென்பது 100 மைலுக்கும் அதிகமாயுள்ள விஸ்தீரணத்தைக் குறிப்பிடுகிறது. அந்த 100 மைல் விஸ்தீரணத்திலுள்ள எல்லா முக்கியமான ஸ்தலங்களுக்கும் போக்குவரத்து வழிகள் முன்னதாகவே தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும். அந்தப்பாதைகளில் தாராளமாய்ச் சமாச்சாரங்களை அனுப்பக்கூடிய மத்தியஸ்தானமாயுள்ள ஓரிடத்தில் சேனபதி இருந்து வருவார்.


உதாரணமாக, ஜெர்மன் துருப்புகள் பிரான்ஸிலுள்ள எய்ஸன் நதியிலிருந்து பெல்ஜியத்திலுள்ள ஈஸர் நதி வரையில் சுமார் 120 மைல் தூரத்துக்கு வியாபித்திருக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் நாலா பக்கங்களிலும் பிரிந்துள்ள படைகளுடன் போக்குவரத்து செய்வதற்கு அநேக ரயில் பாதைகளும் ரோட்டுகளுமிருக்கின்றன. இந்த ரயில் பாதைகளும்ரோட்டுகளும் அநேகமாய் பெல்ஜியத்தில் ஆரம்பிக்கின்றன. ஆனால் சில பாதைகள் ஜெர்மனியிலிருந்து எய்ஸன் நதியை நோக்கிச் செல்கின்றன. ஆகையால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள், பெல்ஜியத்திலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் எய்ஸனுக்குச் செல்கிற பாதைகளில் போக்கு வரத்துச்

செய்யவேண்டியிருக்கிறது. ஆனல் பெல்ஜியத்தில் சண்டை நடப்பதாலும், பாதைகளில் பெரும்பாகமும் பெல்ஜியத்திலிருந்து புறப்படுகிறபடியாலும், பெல்ஜிய எல்லேயிலுள்ள ஒரு மத்தியஸ்தானத்தில் தலேமைஸ்தலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பெல்ஜியத்திலுள்ள மான்ஸ் என்ற பேர் பெற்ற ஸ்தலத்தில் ஜெனரல் வான்கிளக் என்ற ஜெர்மன் சேனுபதியும் மற்ற ராணுவ அதிகாரிகளும் இருந்து வருகிறர்கள். இந்த தலேமை ஸ்தலம் சேணியின் இருப்பிடத்துக்குத் தக்கவாறு மாற்றப்படும். சேணிமுன் செல்லும்போதும் பின்செல்லும்போதும் தலேமை ஸ்தலமும் மாற்றிக் கொள்ளப்படுகிறது. இந்த தலேமை ஸ்தலத்திலிருந்து சண்டை நடந்துகொண்டிருக்கிற எல்லாப் பிரதேசங்களுக்கும் சமாச்சாரங்களே அனுப்பவேண்டும். எய்ஸன் நதியிலிருந்து ஈஸர் நதிவரையிலுள்ள பிரதேசத்தில் எந்த இடத்தில் எந்த கோரத்தில் சண்டை நடந்தாலும், சண்டை ஆரம்பமாவதற்கு முன்னுலிருந்தே தலேமை ஸ்தானத்துக்கு சமாச்சாரம் அறிவிக்கப்படவேண்டும். அங்கிருக்கிற ராணுவ அதிகாரிகள் போர்க்களத்தின் விவரங்களேப்பற்றி யோசனே செயத, துணேப்படைகளே அனுப்பலாம்; தோல்வியடைந்தால் மறுமுறை தாக்கச் சொல்லலாம்; அல்லது பின்னடையும்படி உத்தரவுசெய்யலாம்; ஜயமடைந்தால் இன்னின்ன பாதைகளில் முன் செல்லும்படி உத்தரவிடலாம். ஆகையால் அப்படிப்பட்ட முக்கியமான உத்தரவுகளேச் செய்கிறவர்களுக்கு சகல விவரங்களும் சிறிதும் தாமதமில்லாமலும் தவறில்லாமலும் தெரிவிக்கப்படவேண்டும்.

ஆகையால் அதிகார ஸ்தலத்திலிருந்து போர்முனேக்குச் சமாச்சாரம் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது. தந்திக் கம்பிகள் சமாதான காலத்தில் சில இடங்களுக்குத்தான் போடப்பட்டிருக்கும். மேலும் அந்தப் பிரதேசத்தில் சண்டை நடந்திருக்குமானல் அங்குள்ள தந்திக்கம்பிகளே சத்துருக்கள் அழித்திருப்பார்கள். ஆகையால், தந்திக்கம்பி போட்டிராத ஸ்தலங்களுக்குப் புதிதாய்ப் போடவேண்டும். ஆனல் சமாதான காலங்களில் சாவகாசமாய்க் கம்பிகள் போடுவதைப்போல, யுத்த காலத்தில் செய்ய முடியாது. சேணி நடமாடிக்கொண்டிருக்கும்போதே தந்திக்கம்பிகள் போட்டு முடித்துவிட வேண்டும் அந்த வேலேயை மிகவும் அவசரமாய் செய்யவேண்டியிருப்பதால் அதற்குத் தேவையான சாமான்கள் அளவி



ஜெர்மன் சேனையிலுள்ள ஹவிட்ஸர் பீரங்கி. இது பெரிய மூற்றுகை பீரங்கி நிலைசைச்சேர்ந்தது. இதை ரோட்டுகளில் இழுப்பதற்கென்றே புது மாதிரியான சக்கரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதை அவ்வாறு வண்டியில் அமைத்துக்கொண்டுபோகிறார்கள்.



பக்கத்திலுள்ள படத்தில் காணப்படும் ஹவிட்ஸர் பீரங்கி சுடப்படுவதற்காக உயரத்தூக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில்தான் அது சுடப்படுகிறது.



ஆஸ்டிரிய சேனையிலுள்ள பலவான பீரங்கியும் அதைச்சேர்ந்த 30 சிப்பர்களும்.



இது இஞ்ஜினியர் படையால் கட்டப்பட்ட பாலம். படகுகள் ஒன்றுய்ச்சேர்த்துக் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

னும் பளுவிலும் அதிகமா யிருக்கக்கூடாது. இலேசான குறுகிய ஸ்தம்பங்களே நட்டு அவைகளில் மெல்லிய கம்பிகள் கட்டப்படுகின்றன. இதற்குத்தேவையானஸ்தம்பங்கள் முன்னதாகவே லக்ஷக்கணக்காய்த் தயார் செய்யப்பட்டு வண்டிகளில் எப்போதும் சேணியோடு கூடவந்துகொண்டிருக்கும். அதிக பளுவில்லாத மெல்லிய கம்பிகள் வண்டிகள்நிரம்ப வந்துகொண்டிருக்கும். இந்த சாமான்களெல்லாம் அதிக பளுவா யிருந்தால், அவைகளை சேணியோடுகூட கொண்டு போவதற்கு 100 வண்டிகளுக்குப் பதிலாய் 200 வண்டிகள் தேவையாயிருக்கும். டெலிபோன் தந்தி அதாவது பேச்சு வார்த்தைகளை அப்படியே அறிவிக்கிற தந்தியும் ஸ்தாபிக்கப்படுகிறது. கம்பியில்லாத் தந்தியும் உபயோகிக்கப்படுகிறது. வெகு தூரத்திலிருந்து சமாச்சாரம் அனுப்பும்போதும், அவசரமாய் அனுப்பும்போதும் தந்திக்கம்பி போடப்படாத இடத்திலிருந்து அனுப்பும்போதும், கம்பியில்லாத்தந்தியந்திரம் உபயோகிக்கப்படுகிறது.

சண்டை செய்துகொண்டிருக்கிற படைகளுக்கு எவ்வாறு உத்தரவு செய்யப்படுகிறது.

போர்க்களத்திலுள்ள படைத்தலைவர்கள் நாலா பக்கங்களில் பிரிந்திருக்கிற தங்கள் படைகளுக்கு உத்தரவுகளை அனுப்பவேண்டும். இதற்குப் பிரத்தியேகமாய் சமிக்ஞை செய்யுந் தொழிற்புகளிருக்கின்றன. படைத்தலைவர்கள் போர்க்களத்துக்குக்கருகில் ஒரு முக்கிய ஸ்தலத்தில் இருந்து வருவார்கள். போர்க்களத்தில் சண்டை நடந்துகொண்டிருக்கும்போது சண்டையின் விவரங்களைத் தலைவர்களுக்கு அறிவித்துக்கொண்டிருக்கவேண்டும். போர்க்களம் நிமிஷத்துக்கொருமுறை மாறிக்கொண்டிருப்பது சகஜம். படைகள் முன் செல்வதும் பின் வாங்குவதுமாய் சண்டை செய்துகொண்டிருக்கும்.

சண்டை நடக்கும்போது தந்திக்கம்பி போடப்படும் விதம்.

ஆகையால் சண்டை நடக்கும்போது சமிக்ஞை செய்வதற்கு ஒரு உபாயஞ் செய்யப்பட்டிருக்கிறது. தந்திக்கம்பி ஒரு சக்கரத்தில், நூல்கண்டைப்போல, சுற்றிவைக்கப்பட்டிருக்கும். அத்தச் சக்கரம் ஒரு வண்டியில் வைக்கப்பட்டிருக்கும். அந்தக் கம்பியின் ஒரு முனை, படைத் தலைவரிருக்கிற இடத்தில் ஒரு ஸ்தம்பத்தில் கட்டப்பட்டிருக்கும். காலாட்படையாவது பீரங்கிப்படையாவது போர்க்களத்துக்குச் செல்லும்போது, அந்த வண்டியும் பின்னல்

சற்று தூரத்தில் வந்துகொண்டிருக்கும். அந்த வண்டி நகரும் போது, அதில் ஏற்றப்பட்டிருக்கிற பெரிய சக்கரமும் சுற்றுகிறது. அந்தப் பெரிய சக்கரம் சுழலுமபோது அதில் சுற்றிவைக்கப்பட்ட கம்பி நீண்டுகொண்டே வருகிறது. அந்தக் கம்பி ஸ்தம்பங்களில் கட்டப்படவுதில்லை; போர்க்களத்தில் துருப்புகள் முன்செல்லுவதும்பின் வாங்குவது மாயிருக்கும்போது, கம்பியை ஸ்தம்பங்களில் கட்டுவது சாத்தியமல்ல. ஆகையால் அந்தக் கம்பி சும்மா தரையில்விட்டுவிடப் படுகிறது. காலாட்படை முன்செல்லும்போது அந்த வண்டியும் கூடச்செல்வதால், தன்னிடத்திலிருந்து நீளமாய்த் தரையில் பிரிந்து கொண்டே வருகிறது. பிறகு காலாட்படை பின் வாங்கும்போது அந்த வண்டியில்வேறொரு உபாயஞ்செய்வதால் தன்னிடம் கம்பி மறுபடியும் சக்கரத்தில்சுற்றிக்கொள்கிறது. தரையில் நீளமாய்ப் பிரிந்துகிடக்கிற கம்பி யெல்லாம் வண்டி நகரும்போது மறுபடியும் சுருட்டிவிடப்படுகிறது. அந்த வண்டி எவ்வளவு விரைவாய் ஓட்டப் பட்டாலும் கம்பியை எளிதாய்ப் பிரிக்கவும் சுருட்டவும் செய்யலாம். போர்க்களம் அதிகவிஸ்தாரமா யிரவிட்டால் கம்பி சுற்றப்பட்டிருக் கிற சக்கரத்தை கையில் பிடித்துக்கொண்டும் செல்லலாம். அந்தக் கம்பி மிகவும் இலேசாய் செய்யப்படுகிறது. போர்க்களம் அதிக தூரமாயிருந்தால் அதற்கு மிகவும் நீளமான கம்பி தேவையா யிருக் கும். அவ்வளவு நீளமான கம்பியைபுடைய சக்கரம் கையினல் தூக்க முடியாத பளுவா யிருந்தால் வண்டியில் கொண்டுபோகப் படுகிறது.

டெலிபோன் என்ற பேசுங்கருவி.

டெலிபோன் என்ற பேசுங்கருவியைப்போல ஒரு நூதனயந்தி ரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது எவ்வளவுகுறைவான சத்த த்தையும் கேழ்க்கும்படிச்செய்கிறது. போர்முனையில் மெல்லியதந்திக் கம்பிகளைப் போடும்போது அந்தக் கம்பி முறிந்தும் அறுந்தும் போவதுண்டு. அறுந்துபோன கம்பிமூலமாய் சாதாரண தந்திக் கருவி சமிக்ஞைகளைச் செய்யாது. ஆகையால் அந்த நூதன கருவி யைக்கொண்டு அறுந்துபோன கம்பி மூலமாக சத்தங்களைக் கேட் குப்படி செய்யலாம். ஒவ்வொரு விதமான சத்தத்துக்கு இன்ன அர்த்தம் என்று தந்திபாஷையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதன் படி சமிக்ஞைகளை அறிந்துகொள்ளலாம். நீண்ட தந்திக்கம்பியில் இடையே 50 அடி நீளத்துக்கு கம்பியே யில்லாவிட்டாலும், சில

சமயங்களில் அந்த தூதன கருவியைக்கொண்டு சமிக்ஞை செய்யப் படுகிறது.

குதிரைப்படை உபயோகிக்கிற யந்திரம்.

குதிரைப்படை ஒவ்வொரு தினமும் வெகு தூரம் சென்று இடம் விட்டு இடம் மாறுவதால், தக்கிக்கம்பிகளைப் போடுவதற்கு சௌகரியப்படுகிறதில்லை. ஆகையால் சிறிய கம்பியில்லாத் தந்தி யந்திரம் ஒவ்வொரு குதிரைப்படையிலும் உபயோகிக்கப்படுகிறது. இந்த யந்திரத்தின் சாமான்களை மூன்று குதிரைகளின்மேல் ஏற்றிக் கொண்டு போகலாம். ஒரு நிமிஷத்துக்குள்ளாக அந்த யந்திரத்தின் சாமான்களை குதிரைகளினின்றும் இறக்கி வேலை செய்வதற்குத் தயா ராகப்பூட்டி விடலாம். மறுபடியும் ஒரு நிமிஷத்தில் யந்திரத்தைத் தனித்தனியாகப் பிரித்து குதிரையின் மேல் ஏற்றிவிடலாம். ஆனால் இந்த யந்திரத்தைக்கொண்டு அதிக தூரம் சமிக்ஞை செய்யமுடி யாதாகையால், இடைபிடையே முக்கியமான ஸ்தலங்களில் அம்மாதி ரியான சிறிய யந்திரங்கள் வைக்கப்படுவது வழக்கம். அல்லது, குதி ரைப்படைகளின் தலைவர் தம்மிடம் ஒரு பெரிய யந்திரத்தை வைத் திருப்பார். இந்த பெரிய யந்திரத்தைக்கொண்டு 150 மைலுக்குப் பால் சமிக்ஞைசெய்யப்படுவதை அறிந்துகொள்ளலாம். சுலபமாட் படையிலும், நான்குமைல் தூரத்திற்கொண்டு போகக்கூடிய கம்பியில் லாத் தந்தியந்திரம் உபயோகிக்கப்படுகிறது.

பார்வையால் அறியக்கூடிய சமிக்ஞைகள்.

தக்கிக் கம்பி, டெலிபோன், கம்பியில்லாத்தந்தி யந்திரம் இவை களை மூலமாய் மின்சார சக்தியால் உண்டாக்கப்படுகிற சத்தங்களைக் கொண்டு சமிக்ஞை செய்யப்படுகிறது. அவைகளைத் தவிர, பார்வை யால் அறிந்துகொள்ளும்படி, பலவித உபாயங்களால் சமிக்ஞை செய்யப்படுகிறது. கொடிகளாலும், கண்ணாடிகளாலும், விளக்கு களாலும் மூன்று விதமாய் சமிக்ஞை செய்யப்படுகிறது. கையில் கொடிகளைப் பிடித்துக்கொண்டு பலவிதமாய் கையையும் கொடி யையும் அசைப்பதால் சமிக்ஞை செய்யப்படுகிறது. இன்னின்ன விதமாய் அசைத்தால் இன்னின்ன அர்த்தம் ஏற்படுகிற தென்று அவர்களுக்குத் தெரியும். கண்ணுக்குத் தெரிகிற தூரத்திலிருப்பவர்கள் அவ்வாறு சமிக்ஞை செய்துகொள்ள லாம். அதிக தூரத்திலிருந்தால், பெரிய கொடியை உயரத்

தூக்கிப் பலவாறு அசைக்கிறார்கள். அந்த சமிக்ஞைகளை சுமார் 10 மைல் தூரத்தில் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். பளபளப்பான நிலைக் கண்ணாடியால் (அதாவது முகம் பார்க்கிற கண்ணாடி) சூரிய வெளிச்சத்தை தூரச் செலுத்தி சமிக்ஞை செய்யப்படுகிறது. சூரிய வெளிச்சத்தில் கொஞ்சநேரங் காட்டுவதாலும் அதிக நேரங்காட்டுவதாலும் பற் பலவிதமாய் வித்தியாசப்படுத்தி சமிக்ஞை செய்யப்படுகிறது. அந்தக் கண்ணாடிகள் யுக்தியாய் அமைக்கப்பட்டு, சூரிய வெளிச்சத்தை நினைத்த இடத்துக்குத் திருப்புகின்றன. கண்ணாடிகளின் முன்புறத்தில் ஒரு மூடிபோட்டு, அந்த மூடியைப் பல விதமாய் அசைத்து வெளிச்சத்தை சிறிதாகவும் பெரிதாகவும் காண்பிக்கலாம். 4அங்குலம் சதுர அளவுள்ள இரண்டு கண்ணாடிகளைக் கொண்டு சுமார் 40மைல் தூரத்துக்கு சமிக்ஞைகளை அனுப்புவது சாத்திய மாகிறது. ஆனால் இந்த உபாயத்தில் பெரிய குறை என்ன வென்றால், பனி, மேகம் இவைகளால் சூரிய வெளிச்ச மில்லா மற்போகிற பகல் நேரங்களில் சமிக்ஞை செய்ய முடிவதில்லை. மேலும் உயரமான காடுகள், குன்றுகள் இவை இடையே யிருக்தால், வெளிச்சத்தை அனுப்புவது கஷ்டமாகும். இராக்காலத்தில், மிகப் பிரகாசமான விளக்குகளால் சமிக்ஞை செய்யப் படுகிறது. சாதாரணமாய் மோட்டார் வண்டிகளிலும், சிலபைசிகில் வண்டிகளிலும் மிகப் பிரகாசமான விளக்கு களிருப் பதைப் பார்த்திருக்கலாம். அதில் உபயோகிக்கப்படுகிற நிராவகத்தை அதிகமாய் உபயோகப்படுத்தி மீருந்த பிரகாசம் உண்டாக்கப்படுகிறது. இந்த விளக்கு ஒரு மூக்காலியின்மேல் நிறுத்தப்படுகிறது. ஒருசிறு கொக்கியை விரலால் அழுத்துவதால் விளக்கு எரிக்கப் பட்டு, அழுத்தாமல் விடுவதால் அணைக்கப்படுகிறது. அவ்வாறு வினைக்கை இடைவிட்டு எரிப்பதாலும் அணைப்பதாலும் சமிக்ஞை செய்யப்படுகிறது. கல்ல சுத்தமான இரவில் அந்தவெளிச்சம் சுமார் 20 மைல் தூரத்தில் கண்டுகொள்ளப் படுகிறது. ஆனால் பனியும் மழையும் பெய்துகொண் டிருந்தால், அந்த வெளிச்சம் அவ்வளவு தூரம் செல்லாது.

ஒருசேணியில் மேற்சொல்லியவாறு பலவிதமாய் சமிக்ஞை செய்யப்படுகிறது. (1) அருகிலிருக்கும் போது கொடியை கையில்

பிடித்து அசைப்பது; (2) சற்றுதூரத்திலிருக்கும்போது பெரிய கொடியை அசைப்பது, நீலக்கண்ணாடியையும் விளக்கையும் உபயோகிப்பது. (3) பைலிகில், மோட்டார் பைலிகில், குதிரை, இவைகளின்மேல் ஏறிச் செல்வது (4) தந்திக்கம்பி, டெலிபோன் கம்பி இவைகளை ஸ்தம்பங்களில் கட்டியும், ஸ்தம்பங்களில் கட்டாமல் தரையில் போட்டும் உபயோகிப்பது, (5) கம்பியில்லாத்தந்தி யந்திரத்தை உபயோகிப்பது, ஆக இவ்வைந்து விதங்களாக, ஒருசேனையில் சமாச்சாரங்களையும் உத்தரவுகளையும்ஒருவருக்கொருவர்அறிவித்துக் கொள்கிறார்கள். ஆகாயவிமானங்களும் சமிக்ஞை செய்கின்றன. முக்கியமாய், பிரங்கிகளை வெகுதூரத்திலிருந்து சுடும்போது, ஒரு வஸ்துவின் இருப்பிடத்தை அறிந்து கொள்வதற்கு ஆகாயவிமானங்கள் உபயோகமாயிருக்கின்றன.

சாமான்களை சப்ளை செய்யும் படை—

சண்டை நடக்கும்போது ஆகாரமும் வெடிமருந்தும் எவ்வாறு கொண்டுபோகப்படுகின்றன.

நாகரீகம் பெற்ற எல்லா ஜாதியாரும் சண்டை செய்யுஞ் சக்தியை அதாவது தேகவன்மையை அதிகமாக ஒரே அளவாய்ப் பெற்றிருக்கிறார்களென்று சொல்லலாம். ஆயினும், இரண்டு கக்ஷி சேனைகளும் ஆள் பலத்தையும் ராணுவ ஒழுங்கையும் ஆயுத பலத்தையும் சமமாய்ப் பெற்று, சேனைபதிகளும் திறமைவாய்ந்த ராணுவ தந்திரிகளாயிருந்தால், ஆகாரமும் வெடிமருந்தும் போர் முனைக்கு அனுப்ப மிகவும் ஒழுங்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிற கக்ஷிதான் சாதகமடையும். அநேக சமயங்களில், ஆள்பலங் குறைந்த சேனை ஒழுங்கான போக்குவரத்தைப் பெற்றிருந்த காரணத்தால் ஜயம் அடைந்திருக்கிறது. மிகவும் யுக்தியாய் யோசனை செய்யப்பட்ட ராணுவ தந்திரங்களை நிறைவேற்றுவதற்கு, சண்டை செய்துகொண்டிருக்கிற சேனை விரைவாய் இடம்விட்டுப் பெயர்ந்து, திடீரென்று நேர்மாறான வழிகளில் திரும்பிச் சென்று சத்துருக்களுக்கு முகங்காட்ட திறமைபெற்றிருக்கவேண்டும். இந்த காலத்து சேனை பெரிய பட்டணங்களைப்போன்ற ஜனத்தொகையைக்கொண்டுள்ளது; திடீரென்று ஒரு பிரதேசத்தில் பெரிய நகரங்கள் தோன்றி அந்நகரங்கள் பிரதினமும் இடம் விட்டு இடம் மாறிச்செல்வ

தைப்போல இந்த காலத்துச் சேனைகள் நடமாடுவதால், அதை நிர்வகிப்பதற்கு அளவற்ற சாமர்த்தியமும் சக்தியும் தேவையாயிருக்கின்றன. பெல்ஜிய தேசத்தின் எல்லையிலிருந்து ஜெர்மன் சேனை, மலைச் சிகரம் சரிந்தாற்போலப்புரண்டு வந்ததோபோது, அங்கிருந்த பிரிட்டிஷ் சேனையும் பிரஞ்சுசேனையும் பாரிஸ் நகரம் வரையில் எதிர்த்துக்கொண்டே பின் வாங்கியதைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். 150 மைல் தூரம் ஒய்வில்லாமல் சண்டை செய்து பின் வாங்கியபோதிலும், சேனத்துருப்புகள் ராணுவத் திறமையைச் சிறிதும் இழந்து விடாதது ஆச்சரியமல்லவா? பாரிஸ் நகரத்துக்கு முன்னால் ஜய சீலராய் வந்துகொண்டிருந்த ஜெர்மன் துருப்புகள் திடீரென்று ஆற்றவெள்ளத்தை எதிர்ப்புறமாய்த் திருப்புவதுபோல், பின்புறமாய் செலுத்தப்பட்டபோது, ஜெர்மன்சேனையின் ராணுவக்கட்டு சற்றுங்குலையாமலிருந்தது ஆச்சரியமல்லவா? சேனைபைப்பற்றி பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் துருப்புகளும் குதிரைகளும் பிரங்கிகளும் சாமான்ய ஜனங்களின் மனதில்உதிக்கின்றனவேயொழிய சேனையின் உண்மையான வல்லமை வேறுவிதமாய் உண்டாகிறதென்பது தெரிவதில்லை. துருப்புகள் தங்களிடமுள்ள ஆயுதங்களைக்கொண்டு சண்டைசெய்கிறார்களென்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், துருப்புகள் தங்கள் வயிற்றைக்கொண்டும் சண்டைசெய்கிறார்களென்று பிரஸித்திபெற்ற போர் வீரராகிய நெப்போலியன் சொன்னார்; அவர் 100 வருஷங்களுக்குமுன் சொல்லிய வார்த்தைகள் இன்றைக்கும் மெய்ம்மையாயிருக்கின்றன. வயிற்றுக்கு ஆகாரமில்லாமல், எந்தத் துருப்புகளும் தங்கள் ஆயுதங்களைக்கொண்டு எந்தகாரியத்தையும்,செய்யமுடியாது. பிரஞ்சுக்காரர்கள் 1870-ம் வருஷத்தில் ஜெர்மானியரோடு யுத்தஞ் செய்தபோது இப்போதுள்ள திறமையே பெற்றிருந்தார்கள். ஆயினும் அவர்களுடைய ராணுவ ஏற்பாடுகள் மிகவும் ஒழுங்கீனமாயிருந்ததால், ஆயுதமும் ஆகாரமும் வெடிமருந்தும் உடைகளும் துருப்புகளுக்குக் கிரமமாய்க் கிடைக்காமல், அவர்களுடைய வீரமும் தேசாபிமானமும் போர்க்களத்தில் வீரியமாயின. யுத்தகளத்திலுள்ள துருப்புகளுக்கு சௌகரியஞ் செய்வதில் அற்ப விவரங்களையும் கவனிக்கவேண்டும். துருப்புகளுக்குப் புதிய செருப்பு (பூட்ஸ்)களைக்கொடுத்து அவர்கள்கால்கள் புண்பட்டுப்போவதுண்டு. சென்ற நூற்றாண்டில் நடந்த ஒரு யுத்தத்தில், போர்முனையிலிருந்த

துருப்புகளுக்கு ஒரு கப்பல் நிரம்ப புதிய பூட்ஸ்கள் வந்து சேர்ந்த போது, அந்த பூட்ஸ்க ளெல்லாம் ஓரே காலில் மாட்டிக்கொள்ளத் தக்கவையா யிருந்தன. மற்றொரு காலுக்குப் போடவேண்டியவை களே மறதியால் அனுப்பப்படவில்லை! ஆகையால் லக்ஷக் கணக்கான துருப்புகளும் குதிரைகளும் சண்டைக்குச் செல்லும்போது வேண் டிய சௌகரியங்களே மிகவும் ஒழுங்காய்த் தாமஸ்மின்றிச் செய்யவே ண்டும். பிரிட்டிஷ் துருப்புகள் சாப்பாட்டில் மிகப்பிரியமுள்ளவர்கள். பிரிட்டிஷ் சேனை பிரான்ஸில் வந்திறங்கியவுடன் அவர்களுக்கு வேண்டிய பற்பல வகையான ஆகாரம் மிகவும் ஒழுங்காய்க்கொண்டு வரப்பட்டதைக் கண்டு பிரஞ்சுக்காரர்கள் விபரப்படைந்தார்கள்.

உணவுப்பொருள்களை முன்னதாகவே சேகரித்து வைத்தில்.


துருப்புகளுக்கும் குதிரைகளுக்கும் ஆகாரம் சரிவர அனுப்பப் படுகிற விதத்தைப்பற்றி முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இந்த வேலை மிகுந்த அனுபோகமும் சாமர்த்தியமும் பெற்ற அதிகாரிக ளிடம் ஒப்புவிக்கப்படுகிறது. ராணுவ அதிகாரிகள் தங்கள் சொந்த தேசத்திலும் சத்துருவின் தேசத்திலும் உணவுப் பொருள் எவ்வளவு எவ்விடத்தில்எந்த காலத்தில் கிடைக்குமென்பதைப்பற்றி சமாதான காலத்திலேயே ஆலோசனை செய்கிறார்கள். ஆகையால் யுத்தம் எந்த காலத்தில் நடக்குமென்றும் கால நிலைமை எவ்வாறி ருக்குமென்றும் கவனிக்கப்படுகிறது. பிறகு யுத்தம் சத்துருவின் தேசத்தில் நடக்குமா அல்லது சொந்த தேசத்தில் நடக்குமா என் பதை ஆலோசிக்கவேண்டும். சத்துருவினுடைய தேசத்தின்மேல் படையெடுத்துச் செல்வதாயிருந்தால், சேனை வெகு தூரம் விலகிச் சென்றுகொண்டிருக்கும்; ஆகையால் போக்கு வரத்து வழிகள் அநேக மைல்களுக்கு வியாபித்திருக்கும். அவைகளைச் சத்துருவின் படைகளினின்றும் காக்கும் பொறுப்பு அதிகமாகிறது. சத்துருவின் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் விரோதங்கொண்டிருப்பார்களாகை யால், அவர்களைக் காவல் செய்துகொண்டிருக்கவேண்டும். சொந்த தேசத்தி லிருந்துகொண்டு, படையெடுத்து வருகிற சத்துருக் களைத்தடுத்து சண்டை செய்யும்போது அவ்வளவு கஷ்டமிராது. சொந்த தேசத்திலுள்ள ரயில் பாதைகளையும் ரோட்டுகளை யும் காக்கவேண்டிய அவசியம் அவ்வளவாயிராது. சண்டை நடக்கிற பிரதேசத்தில் ஆகாரங் கிடைப்பதா யிருந்தால் ஆங்

குள்ள ஜனங்களின் குணதிசயங்களையும் கவனிக்கவேண்டும். யுத்த காலத்தில், கவர்ன்மெண்டு தங்கள் சொந்ததேசத்திலும் சத்துருவினுடைய தேசத்திலுமுள்ள பொருள்களைச் சேனையின் உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ள அதிகார மிருக்கிறது. யுத்த காலத்தில், சத்துருவின் தேசத்திலுள்ள ஜனங்கள், படையெடுத்து வருகிற சேனைக்கு அவசியமான பொருள்களைக்கொடுப்பதோடு தேவையான ஊழியங்களையும் செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ராணுவத் தலைவர்கள் அந்தந்த பிரதேசத்திலுள்ள நிர்வாக அதிகாரிகள் மூலமாய் வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். வேண்டியவற்றை சத்துருக்கள் கொடுக்க மறுத்து விட்டால்தான் பலவந்தமாய்ப் பெற்றுக்கொள்ள லாமென்று பலதேசச்சட்டம் விதிக்கின்றது. ஆனல் வாங்கின பொருள்களுக்கு தகுந்த விலைகொடுக்கவேண்டும். ரொக்கப் பணம் அபூர்வமாகத்தான் கொடுக்கப்படுகிறது. 1870-ம் வருஷத்தில் பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடந்தபோது (இந்த யுத்தத் தைப்பற்றி முதல்பாகத்தில் விஸ்தாரமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது) ஜெர்மானியர் தங்கள் சேனைக்குத் தேவையாயிருந்த உணவுப்பொருள் களில் முன்றில் ஒரு பாகம் பிரஞ்சு ஜனங்களிடமிருந்து பெற்றார்கள். அந்தப் பொருள்களுக்கு ஜெர்மானியர் ரசீது கொடுத்த போது தோல்வியடைகிற கக்ஷியார் அந்தப் பணத்தைக் கொடுப் பார்களென்று எழுதிக்கொடுத்தார்கள். அது உண்மை யென்று சொல்லவேண்டும். ஏனெனில் யுத்தத்தில் தோல்வி யடைகிற கக்ஷி யார் வெற்றியடைகிற கக்ஷியாருக்கு யுத்தச்செலவைக் கொடுக்கும் படி நேரிடுகிறது. சமாதான காலங்களில் சொந்த தேசத்தின் வீணை பொருள்கள் ராணுவ அதிகாரிகளால் மதிப்பிடப்படுகிறது. யுத்தம் நடக்கும்போல் தோன்றுகிற பிரதேசங்களின் வீணை பொருள்களைப் பற்றி சொந்த தேசமா யிருந்தாலுஞ் சரி சத்துருவினுடையதேசமா யிருந்தாலுஞ்சரி, ஒவ்வொரு விபரமும் எழுதப்பட்டு ஒரு பூகோளப் படத்தில் குறித்துவைக்கப்படுகிறது. ஆனல் சண்டை நடக்கிற பிர தேசங்களில் வேண்டிய அளவு ஆகாரம் கிடைக்காது. ஆகை யால் போர் முனைக்குப் பின்புறத்திலுள்ள பிரதேசத்தில் எந் தெந்த உணவுப்பொருள்கள் கிடைக்கின்றனவோ அவைகளைச் சேகரித்து வைப்பதற்கும், கிடைக்காத பொருள்களை வேறிடங்களி

லிருந்து தருவித்துவைப்பதற்கும் சில ராணுவ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் சேனைக்குத் தேவையான உணவுப்பொருள்களை சேர்த்துவைக்க வேண்டும். சேனைக்குப் பின் புறத்திலிருக்கிற போக்கு வரத்து வழிகளைக்காத்துவரும் தலைவருக்கு அந்த உணவுப்பொருள்களை அவர்கள் அனுப்பவேண்டும். சேனையில் பின் புறத்திலுள்ள ரயில் பாதைகளையும் ரோட்டுகளையும் காப்பதற்காகவும் உணவுப்பொருள்களை ஒழுங்காய்ச் செலவு செய்வதற்காகவும் ஒரு சேனைத்தலைவர் பிரதியேகமாய் நியமிக்கப்படுகிறார். அந்தப் பாதைகளின் வழியாய் ஒவ்வொரு தினமும் போர் முனைக்குச் செல்கிற துருப்புகளுக்கும் குதிரைகளுக்கும் அந்த சேனைத்தலைவர் ஆகாரம் சப்ளை செய்யவேண்டும். அந்தப் பாதைகளில், சிறைபிடிக்கப்பட்ட சத்துருக்களும், காயம் பட்டவர்களும் வியாதியஸ்தர்களும் செல்வார்களாகையால், அவர்களுக்கும் ஆகாரம் வேண்டும். போர்முனையில் சண்டைசெய்கிற படைகளுக்கு ஆகாரத்தை ஒழுங்காய் அனுப்பும் வேலையையும் அவர் ஏற்றுக்கொள்ளுகிறார்; ஆகாரம் செலவழிந்தவுடன், புதிதாய்த் தருவித்து எப்போதும் தேவையான அளவு கையிருப்பில் அவர் வைத்துக்கொள்ள வேண்டும்.

சண்டை செய்கிற துருப்புகளுக்கு ஆகாரம் எவ்வாறு கொடுக்கப்படுகிறது.

போர்முனையிலிருக்கிற துருப்புகளுக்கு ஆகாரமும் வெடிமருந்தும் எவ்வாறுஅனுப்பப்படுகின்றன வென்பதைப்பற்றிச்சொல்வோம். சண்டை செய்கிற சேனை எப்போதும் ரயில் பாதை செல்கிற வழியிலேயே யிருந்து வருவது சாத்தியமல்ல. ஆகையால் ரயில் பாதைக் கப்பால் அதிகமைல்தூரத்தில் துருப்புகள்சண்டைசெய்து கொண்டிருப்பார்கள். யுத்தப் பிரதேசத்தில் ரயில் வண்டிகள் பந்தோபஸ்தான இடம் வரையில் ஓட்டப்படும். அதற்கப்பால் ரயில் போக்குவரத்து நடைபெறாது. ரயில் வண்டிகளின் போக்குவரத்து முடிவு பெறுகிற பந்தோபஸ்தான இடத்துக்கு ரயில் முனை என்று பெயர். அந்த பந்தோபஸ்தான ரயில் முனைக்கு ரயில் வண்டிகள் ஆகாரங்களை ஏற்றிக்கொண்டு காலை 3 மணிக்கு வந்து சேருகின்றன வென்றுவைத்துக்கொள்வோம். அந்தரயில்வே ஸ்டேஷனில் அதிக மோட்டார் வண்டிகள் தயாராய்வைக்கப்பட்டிருக்கும். ரயில் வண்டி



☞ இந்த படத்திலுள்ள அடையாளங்களைக் கண்டு கொள்வதற்கு, 360-ம் பக்கத்திலுள்ள படத்துக்குக் கீழே பார்க்கவும்.

களிலிருந்து ஆகாரத்தை அந்தமோட்டார்வண்டிகள் ஏற்றிக்கொண்டு மணிக்கு 10 மைல்வீதம் சேணைத்தலைவ ரிருக்கிற இடத்தை நோக்கிச் செல்லும். அந்த மோட்டார் வண்டிகள் எவ்வளவு தூரம் அவ்வாறு சென்றுகொண்டிருக்கும்? ஒரு மோட்டார் வண்டி ஒரு தினத்தில் 90 மைல் செல்லக்கூடியதென்று வைத்துக்கொள்வோம். அதாவது, அதற்கு மேல் ஓட்டப்பட்டால் வண்டி பழுதாகி விடும். அந்த வண்டிகள் அதில் பாதி அதாவது 45 மைல் தூரந்தான் செல்லும்; ஏனெனில் அவைகள் மறுபடியும் 45 மைல் திரும்பி வர வேண்டுமல்லவா? அந்த வண்டிகள் மறுநாட்காலை அதீத 3 மணிக்கு ரயில்வே ஸ்டேஷனில் காத்துக்கொண் டிருக்கவேண்டுமல்லவா? ஆகையால் மோட்டார் வண்டிகள் 45 மைல் தூரம் செல்கின்றன. இம்மாதிரியாகவே வேறு மோட்டார் வண்டிகள் 45 வது மைலில் தயாராய் வைக்கப்பட்டிருக்கும். இந்த வண்டிகள் ஆகாரத்தை ஏற்றிக்கொண்டு 45 மைல்தூரம் செல்லும். அங்கு போர்முனையில் சேணைத்தலைவர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். சேணைத்தலைவ ரிருக்கிற இடத்தில் அந்தந்தப்படைகளைச்சேர்ந்த குதிரைவண்டிகள் காத்துக்கொண்டிருக்கும். இந்தக் குதிரை வண்டிகள், மோட்டார் வண்டிகளிலுள்ள ஆகாரத்தை ஏற்றிக்கொண்டு ஒவ்வொரு படைக்கும் கொண்டுபோகும். சேணைத் தலைவரிருக்கிறஇடம்வரையில்தான் மோட்டார் வண்டிகள் ஓடுகின்றன. அங்கிருந்து, சேணையிலுள்ள படைகளின் இருப்பிடங்களுக்குக் குதிரைவண்டிகள் செல்கின்றன. ஒவ்வொரு படையிலும் சில குதிரைவண்டிகள் ஆகாரத்தைக் கொண்டு போவதற்கென்றே இருக்கின்றன. அந்தந்தப் படையைச் சேர்ந்த குதிரை வண்டிகள், மோட்டார் வண்டிகளிலிருந்து ஆகாரத்தைக்கொண்டுபோகின்றன. மறுநாள் இதே நேரங்களில் அந்தத் படையைச்சேர்ந்த குதிரை வண்டிகள் சேணைத்தலைவரிருக்கிற இடத்துக்கு வந்து மோட்டார் வண்டிகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். ரயில்வே ஸ்டேஷனில் ஒவ்வொரு தினமும் 3-மணிக்கு மோட்டார் வண்டிகள் ரயில் வண்டிகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். ரயில் வண்டி வந்தவுடன் மேலே சொல்லப்பட்டதுபோல ஆகாரம்கொண்டுபோகப்பட்டு, போர்முனையிலுள்ள துருப்புகள் ஒவ்வொரு தினமும் புதிய ஆகாரத்தை உண்பார்கள். துருப்புகள் ஆயுதபாணிகளாய்தங்கள் அரண்களில் இருந்தபடியே

ஆகாரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். தருப்புகளும் குதிரைகளும் தங்கள் இருப்பிடத்தை விட்டு விலகவேண்டியதில்லை. எந்தக் காரணத்தினாலும் அவ்வாறு விலகவுங் கூடாது. ஆனால் சண்டை மும்முரமாய் நடந்துகொண்டிருக்கும்போது, ஆகாரம் கொடுக்கப் படுவதில்லை. சண்டை முடிந்தபிறகு அதாவது மாலையில் ஆகாரம் கொடுக்கப்படுகிறது. அல்லது சண்டை எப்போதுஓய்ந்திருக்கிறதோ அப்போது கொடுக்கப்படும். சாதாரணமாய் இரவில் சண்டை நடப்பதில்லை. சில சமயங்களில் இரவிலும் சண்டை நடக்குமானால் மறுதினம் புதிய தருப்புகள் அவர்களை விடுவித்தபிறகு, பழய தருப்புகள் விலகிச் சென்று ஆகாரத்தைப் புசித்து இளைப்பாறுவார்கள். புதிய தருப்புகள் இருப்பில் இல்லாமற்போனால், பகலில் சண்டை செய்த தருப்புகள் இரவிலும் சண்டை செய்யத்தான் வேண்டும். இம்மாதிரியான அசந்தர்ப்பங்களை உத்தேசித்தே தருப்புகள் எப் போதும் கையிருப்பில் ஒரு வேளை ஆகாரம் வைத்திருக்கிறார்கள். அவரவர்கள் கூடுமான போதெல்லாம் கையிருப்பிலுள்ள ஆகா த்தை உண்பார்கள்.

தருப்புகளுக்கு ஆகாரம் கொடுப்பதில் ஒரு விசேஷத்தைக் கவனிக்கவேண்டும். ஒவ்வொருவனுக்கும் ஒரே அளவாய் இவ்வளவு ஆகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று ஒரு திட்டமிருக்கிறது. ஒவ்வொருவனும் வயிறுகொண்டமட்டும் உண்பதற்குச் சாத்தியப் படாது. ஒரு மனிதனுக்கு இவ்வளவு ஆகாரம் என்று நிட்டஞ் செய்து அதே அளவு ஒவ்வொருவனுக்கும் கொடுக்கப்படுகிறது. அவனுக்கு அந்த ஆகாரம் போதாவிட்டாலும் அதிகப்படியா யிருந்தாலும், அவனுக்குப் பசியாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் குறித்த அளவுதான் கொடுக்கப்படும். குதிரைகளுக்கும் அவ்வாறு ஆகாரம் அளந்து கொடுக்கப்படுகிறது. இத்தனை தருப்புகளை யுடைய ஒரு படைக்கு இவ்வளவு ஆகாரம் தேவையென்று கணக் கிட்டு மொத்தமாய் அனுப்பப்படுகிறது. பிறகு அந்த ஆகாரம் ஒரே அளவாய்ப் பங்கிட்டு ஒவ்வொருவனுக்கும் கொடுக்கப்படு கிறது. ஓரிடத்திலுள்ள ஒரு சேனைத்தலைவருக்கு திடீரென்று புதிதாய் 10,000 தருப்புகள் அனுப்பப்பட்டால், ராணுவ அதி காரிகள் அன்று தினமே 10,000 தருப்புகளுக்கு இவ்வளவு ஆகாரம் தேவையாயிருக்குமென்று கணக்கிட்டு அனுப்புவார்கள்.

இவ்வாறு ஆகாரத்தைத் திட்டஞ்செய்யாவிட்டால், பிரதினமும் நிகீனத்த இடங்களுக்கு மாறிக்கொண்டிருக்கிற லக்ஷக்கணக்கான துருப்புகளைப் போஷிப்பது அசாத்தியமாகிவிடும்.

மற்றொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். ஆகாரத்தைப் பிரதினமும் ரயில் வண்டி, மோட்டார் வண்டி, குதிரை வண்டி, ஆகிய இவைகளில் கொண்டுபோவதற்குப்பதிலாக ஓரிடத்தில் சேகரித்து வைக்கலாமென்று சிலர் யோசிக்கக்கூடும். ரயில் வண்டிகள் ஓர் பந்தோபஸ்தான இடம் வரையில் செல்கிறதென்றும் அதற்கப்பால் ஓட்டப்படுவதில்லை யென்றும் சொன்னேனும். அந்த பந்தோபஸ்தான ரயில் முனையில் ஆகாரத்தைச் சேகரித்து வைக்கக்கூடுமானாலும், அவ்வாறு செய்யப்படுவதில்லை. ஏனெனில், துருப்புகள் முன் செல்வதும் பின்செல்வதுமாயிருக்குமாகையால், ரயில் வண்டிகள் ஓடக்கூடிய தூரமும் அடிக்கடி மாற்றப்படும். இன்றைக்கு பந்தோபஸ்தா யிருக்கிற இடம் மறுநாள் ஆபத்தான இடமாக மாறிவிடலாம். அல்லது துருப்புகள் சண்டை செய்து ஓர் முக்கியமான ஸ்தலத்தைப் பிடித்துக்கொண்டால், மிகவும் சௌகரியமாயுள்ள வேறொரு இடம் கிடைக்கக்கூடும். அப்போது அவ்விடத்தில் சேகரித்து வைக்கப்பட்ட ஆகாரத்தை யெல்லாம் வேறிடத்துக்கு மாற்றுவது எளிதான காரியமல்ல. ஆகையால் ரயில் முனையில் ஆகாரம் சேகரித்து வைக்கப்படுவதில்லை. போர் முனைக்குப் பின்புறத்தில் வெகுதூரத்தக்கப்பால் ஓர் மத்தியஸ்தானத்தைத் தெரிந்தெடுத்து அங்கு ஆகாரமும் மற்ற சாமான்களும் சேகரித்து வைக்கப்படுகின்றன. அங்கிருந்து ஆகாரம் ரயில் வண்டிகளில் ஏற்றப்பட்டு ரயில் வண்டிகள் அபாயமின்றி எவ்வளவு தூரம் செல்லலாமென்று கருதப்படுகிறதோ அவ்வளவு தூரம் வரையில் ஆகாரம் ரயில் மார்க்கமாய்க் கொண்டுபோகப்படுகிறது. மோட்டார் வண்டிகளில் ஆகாரத்தைக் கொண்டுபோகும் முறை பிரிட்டிஷ் சேனையில் 1911–ம் வருஷத்திலிருந்து ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முன்னுல் குதிரைவண்டிகள்தான் ரயில்முனையிலிருந்து ஆகாரத்தைக்கொண்டு போயின.

மேலே சொல்லப்பட்ட மாதிரியே வெடிமருந்தும் துருப்புகளுக்குக் கொண்டுபோகப்படுகிறது. சத்துருவினுடைய பிரதேசத்தில் சில சமயங்களில் ஆகாரம் கிடைக்கக்கூடுமாதலால் அந்த ஆகார

மும் சேகரிக்கப்படுகிறதென்று சொன்னேம். ஆனால் வெடிமருந்து அவ்வாறு அன்னிய தேசத்தில் கிடைக்காதாகையால், தேவையான வெடி மருந் தனைத்தும் சொந்த தேசத்திலிருந்தே கொண்டுபோக வேண்டும். தருபுகள் சண்டை செய்து கொண்டிருக்கும்போது, தங்களிடங்களை விட்டு விலகவேண்டிய அவசியம் எந்த காரணத்தினாலும் உண்டாகக்கூடாது. அவ்வாறு உண்டாகாமலிருப்பதற்காக மேற்சொல்லியவாறு சகல சாமான்களும் தருப்புகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் குதிரைப்படைகளுக்கு ஆகாரமும் வெடிமருந்து கொண்டுபோகப்படுகிற முறையில் சிறிது வித்தியாசமிருக்கிறது. ரயில் வண்டிகளிலிருந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு போகிற மோட்டார்வண்டிகள் நேராகக்குதிரைப்படைகளிருக்கிற இடத்துக்குக் கொண்டுபோகின்றன. படையைச் சேர்ந்த குதிரைவண்டிகள் இடையில் வந்து சாமான்களை ஏற்றிக்கொள்வதில்லை. குதிரைப்படைகள் பிரதினமும் விரைவாய் இடம் விட்டுமாறுகிறபடியால், விரைவாய்ச் செல்லக்கூடிய மோட்டார் வண்டிகளே உபயோகிக்கப் படுகின்றன.

சிகிச்சைப்படை—

போர்க்களத்தில் காயமடைகிறவர்களின் கெதியென்ன.

தருப்புகள் போர்க்களத்தில் உக்கிரமாய்ச் சண்டை செய்து கொண்டிருக்கும்போது, காயம்பட்டு விழுகிறவர்களின் கெதி என்னாகிறது? படுகாயம்பட்டு ஸ்மசீணியின்றிக் கிடப்பவர்களும், சொற்ப காயம்பட்டு அவஸ்தைப்படுபவர்களும் எவ்வாறு கிவர்த்தியடைகிறார்கள்? படைகள் பிரதினமும் அதிக மைல்கள் கஷ்டப்பட்டு பிரயாணஞ்செய்வதும் சண்டை செய்வதுமாயிருக்கையில் பிணியால் பீடிக்கப்பட்டு, தள்ளாமையால் வருந்துகிறவர்கள் என்னசெய்கிறார்கள்? இவ்விஷயங்களைப்பற்றி நமக்கு யோசனை உண்டாவதோடு ராணுவ அதிகாரிகளும் மிகுந்த கவனஞ் செலுத்தும்படியாயிருக்கிறது. சமாதான காலங்களில், சாதாரண தொழில்களைப்பின்பற்றி ஜீவனஞ் செய்கிற ஜனங்கள்தான் யுத்த காலத்தில் ஆயுதபாணிகளாய் போர்க்களத்தில் செல்கிறார்கள். சாமான்ய ஜனங்கள் தங்கள் வாழ்காளில் சொற்ப தேக உபாதைகளுக்குப் பரிகாரந்தேடிப் பழக்கப்பட்டவர்களாயிருக்கிறார்களாகையால், போர்க்களத்திற்குப் புறப்படும்போது தேக சம்ரக்ஷணையைப்பற்றி யுத்த காலத்தில் வேண்

டிய சௌகரியங்கள் அமைந்திருக்கிறதா என்று யோசிப்பார்கள். அவர்கள் வீடுவாசலிலிட்டு உறவினரின்றும் பிரிந்து அந்நிய பிரதேசத்தில் அபாயமான வேலைகளைச்செய்யும்போது, தங்களுக்கு காயத்தாலும் பிணியாலும் நேரக்கூடிய வேதனையை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு மனதில் தென்பும் சாந்தமுமுண்டாகும். முதல்தரமான வைத்திய சிகிச்சை எப்போதும் தயாராயிருக்கிறதென்பதை உணர்ந்தால், ஜனங்கள் உற்சாகத்துடன் போர்க்களத்துக்குத் துணிந்துசெல்வார்கள். தருப்புகள் மனுஷிடங்கொண்டு சண்டை செய்யவேண்டுமாகையால், ஒவ்வொரு சேனையிலும் சிகிச்சைப்படைகளிருப்பது அவசியமாகும். ரணகளத்தில் காயம்பட்டுக்கிடப்பவர்கள் ஒருவருக்கொருவர் சத்துருக்களாயிருந்தாலுங்கூட மனிதனுக்கு இயல்பாயுள்ள ஜீவகாருண்யத்தால், அநேகசமயங்களில் நேசம்பாராட்டி ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்கிறார்கள். தருப்புகள் சண்டைசெய்த பிறகு காயம்பட்டவர்களை ரணகளத்தில் போட்டுவிட்டுப் பின்வாங்கினால், அது மிகவும் அகௌரவமான காரியமென்று கருதப்படுகிறது. சண்டை உக்கிரமாய் நடந்துகொண்டிருக்கையில் காயம்பட்டு விழுகிறவர்களைச் சத்துருவின்நெருப்புக்கு அஞ்சாமல்தூக்கிக்கொண்டு வருகிறவர்கள் சுத்தவீரர்களென்று மதிக்கப்படுகிறார்கள். மேலும் ராஜ்யத்தின் நன்மையைக் கருதினாலும், சிகிச்சைப் படை யிருக்க வேண்டிய அவசியம்விளங்கும். ஏனெனில், சண்டையில் காயம்பட்டவர்களில் 100-க்கு 96 பேர்வீதம்சௌக்கியமடைகிறார்கள்.100-க்கு 4 பேர்களே காயத்தால்இறந்துபோகிறார்கள். அவ்வாறுசௌக்கியப்படுகிற 96 பேர்களில் 60 பேர் மறுபடியும்போர்முனைக்குச் செல்லத்தகுந்தவர்களாயிருக்கிறார்கள். மற்ற 36 பேர்களும்மறுபடியும்சண்டைசெய்யத்தகுதியற்றவர்களாயினும்,தங்கள்தேசத்துக்குத் திரும்பச் சென்று தங்களுக்கு ஏற்ற தொழில்களைக்கைப்பற்றி வழக்கம்போல ஜீவனம் செய்யலாம். ஆகையால்பெரிய யுத்தங்களில் லக்ஷக்கணக்காய்ச் சேதமாகிற ஜனங்கள் எல்லோரையும் அந்தந்த தேசங்கள் முற்றிலும் இழந்துவிடுகின்றன வென்று நினைப்பது பிசகு. 100-க்கு சுமார் 4 பேர் தான் காயத்தால் இறந்துபோகிறார்கள். ராஜ்யத்தை உத்தேசித்து இங்கு முக்கியமாய்க்கவனிக்கவேண்டியதென்னவென்றால், 100 பேர் காயம்பட்டால், அவர்களில் 60 பேர் மறுபடியும் சண்டை செய்யப் புறப்படுகிறார்களென்பதே. இந்தக்


காரணங்களால், ஒவ்வொரு சேனையிலும் சிகிச்சைப் படைகள் இருப்பது அவசியமாகும். ஆனல் சிகிச்சைப்படைகளைச் சேனையில் சேர்ப்பதைப்பற்றி இவ்வளவு யோசனை செய்யப்படுவானேன்? தேவையான வைத்தியர்களையும் மருந்துகளையும் சிப்பந்திகளையும் தாராளமாய் சேர்த்துக்கொள்வதில் என்னகஷ்டமிருக்கிறது? சேனை யென்பது சண்டை செய்வதற்கு ஏற்பட்ட கூட்டமாகும். அவ்வா றிருக்க, சேனையில் சண்டைசெய்யக்கூடாதவர்களைச் சேர்த்து, சண் டையில் உபயோகிக்க முடியாத சாமான்களையும் வண்டிகளையும் சுமத்திக்கொண்டுபோர்க்களத்தை நோக்கிப்புறப்பட்டால்சேனையின் நடமாட்டத்துக்கும்போர்வன்மைக்கும் மிகுந்தகெடுதல்உண்டாகும். சேனையில், சண்டைசெய்யக்கூடாத அநேக படைகளிருக்கின்றன. ஆகாரம் வெடிமருந்து முதலிய பலவித சாமான்களைச் சப்ளைசெய்கிற படைகளும், சமிக்ஞைசெய்கிற படைகளும், இஞ்ஜினியர் படை களும், சிகிச்சைசெய்கிறபடைகளும் சேனையில் சேர்க்கப்படுகின்றன. அந்தப் படைகளில் சண்டைக்குத் தகுதியல்லாத அநேக மனிதர்க ளிருப்பதோடு, அநேக குதிரைகளும், வண்டிகளும் சாமான்களு மிருக்கின்றன. ஆயினும், நிறமையாய் சண்டை செய்வதற்கு அந்தப் படைகள் உதவியாயிருப்பதால், அவைகளை சேனையில் சேர்ப்பது அவசியமாகின்றது. அவைகள் கூடுமானவரையில் குறைக் கப்பட்டும் தொகையில் ஏராளமாயிருந்து வருகின்றன. உதாரண மாக, ஒரு சேனையில் மொத்தம் 40,000 மனிதர்களும், 12,000 குதிரைகளும், 1400 வண்டிகளும் இருந்தால், 25,000 மனி தர்களும், 3000 குதிரைகளும், 96 பீரங்கிகளுந்தான் சண்டை செய்யக்கூடியவை. ஆகையால் சேனையில் சண்டை செய்யத்தகாத பாகம் அதிகமா யிருப்பதைக் கவனிக்கவேண்டும். அதாவது, 25,000 காலாள் தருப்புகளும், 4000 குதிரை யாட்களும் 96 பீரங்கிகளும் சத்துருக்களோடு சண்டை செய்துகொண் டிருக்கும். அந்த சண்டை செவ்வையாய் நடைபெறும் பொருட்டு தேவை யான சௌகரியங்களையும் உதவியையுஞ் செய்வதற்காக 15,000 ஆள்கள், 9000 குதிரைகள், 1400 வண்டிகள், ஆகிய இவைகள் அந்தச் சண்டையில் நேராகக் கலக்காம லிருந்தாலுஞ் அவசியமா யிருக்கின்றன. ஒரு சண்டையை நடத்துவதற்கு இத்தனை சாத னங்கள் தேவையா யிருக்கின்றன. அவைகள் எவ்வளவு அவசியமா

யிருந்தபொதிலும் மிகுந்த இடைஞ்சலே யுண்டுபண்ணுகின்றனவென் பதில் சந்தேகமில்லே. போர்க்களத்தில் நெருக்கடியான சமயங்கள் தோன்றும்போது, சேனையிலுள்ள சண்டைசெய்யத்தகாதபாகத்தை ஒழுங்காய் நிர்வகிப்பது கஷ்டமாகி விடுகிறது. உதாரணமாக பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னுல் தென்னப்பிரிக்காவில் நட ந்த போவர் யுத்தத்தில், போவர் சேனுதிபதியாகிய ஜெனரல் கிராஞ்ஜே பிரிட்டிஷ் சேனையுடன் போர் விளேப்பதற்காக தமது சேனேயை நடத்திச் சென்ற போது தம்மிடமிருந்த ஏராளமான சாமான்களேயும் வண்டிகளேயும் விசைவாய்க் கொண்டுபோக முடி யாமல் பிரிட்டிஷ் படைகளுக்கு மத்தியில் சிக்கிக்கொண்டார். அவர் தமது வண்டிகளேயும் தளவாடங்களேயும் போட்டுவிட்டுச் செல்ல மனமில்லாமல், சேனேயை அபாய நிலேமையினின்றும் மீட்கக்கூடிய சமயங்களே வீணுக்கி,கடைசியில் பிரிட்டிஷாரிடம் சரணமடைந்தார்.

ஆகையால்,சேனையிலுள்ள தருப்புகளே லகூக்கணக்காய்க்கண க்கிடும்போது, அவர்க ளெல்லாரும் போர் முனேயில் சண்டைசெய்து கொண் டிருக்கிறார்களென்று நினேக்கக்கூடாது. ஆயினும், இரண்டு கைகளே நமது தேகத்தில் வேலேசெய்கின்றனவென்றாலும், மற்ற அங்கங்களும் திறமையுடன் வேலே செய்தல் அவசியமாவது போல, சேனேயில் சண்டை செய்யாத மற்றப்படைகள் ஒழுங்காயிருப்பதும் அவசியமாகும். இப்போது சிகிச்சைப்படைகள் செய்கிற வேலே யைப்பற்றிச் சொல்வோம்.

யுத்தகளத்திலிருந்து சொந்த தேசம் வரையில் சிகிச்சை செய்யப்படும் விதம்.

ஒவ்வொரு பட்டாளத்திலும் வைத்தியர் ஒருவர் இருக்கிறு ரென்றும் பாண்ட் வாத்தியம் வாசிப்பவர்கள் காயம்பட்டவர்களேத் தூக்கிக்கொண்டு போகிறார்களென்றும் சொன்னேம். அவர்கள் தொகையில் சொற்பமாயிருப்பதாலும், சண்டை நடக்கிற இடத்தி லிருப்பதாலும்,நிதானமாய் சிகிச்சை செய்யச் சாத்தியப்படுவதில்லே. இந்தப் பட்டாளங்கள் டிவிஷன் என்றபெரியசேனை வகுப்பில் சேர்க் கப்பட்ட சிறு பிரிவுகளாகும். ஒரு டிவிஷனில் சகலவிதமான படை களும் சேர்க்கப்பட்டிருப்பதால் அதை ஒரு சிறு சேனை யென்று சொல்லலாம். டிவிஷனில் அநேக சிகிச்சைப்படைகளிருக்கின்றன. சண்டை ஆரம்பித்தவுடன், அந்த சிகிச்சைப்படைகள் பற்பல பாகங்களாகப் பிரிந்து, சண்டை நடக்கிற இடத்துக்கருகில் பிரதம



குறிப்பு:—இத்த அடையாளம் சமாதான காலத்திலுள்ள ரயில் பாதையைக் குறிப்பிடுகிறது

இது ராணுவ அதிகாரிகள்போட்ட ரயில்பாதை.

இது ராணுவ அதிகாரிகள் போட்ட தந்திக்கம்பி.

இது ரோட்டுகள்.

இது சமாதான காலத்திலுள்ள தந்திக்கம்பி.

சிகிச்சைக்காக சில ஆஸ்பத்திரிகளையும், அதற்குப் பின்புறத்தில் சுமார் ஐந்து மைல்களுக்கப்பால் சில முக்கிய ஆஸ்பத்திரிகளையும் ஸ்தாபிக்கின்றனர். பிரதம சிகிச்சைக்காக ஸ்தாபிக்கப்படுகிற ஆஸ்பத்திரி சண்டை நடக்கிற இடத்துக்கு எவ்வளவு அருகே அபாயமின்றிச் செல்ல முடியுமோ அவ்வளவு அருகே கொண்டு போகப் படுகிறது. அங்கு ஒரு கூடாரம் அடிக்கப்பட்டு அதில் வைத்தியரும் வேலைக்காரர்களு மிருப்பார்கள். இந்த ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாய் சுமார் 5 மைல் தூரத்தில் முக்கிய ஆஸ்பத்திரி ஸ்தாபிக்கப்படுகிறது. அந்த இடத்தில் சத்துருக்களால் எவ்வித ஆபத்தும் நேரிடாது. அவ்விடத்தில் சாவகாசமாய்ச் சிகிச்சை செய்யப்படுகிறது. அவ்விடத்தில் ஏதாவது ஒரு கட்டட மிருந்தால் சரி இல்லாவிட்டால் பெரிய கூடாரங்களை அடித்து சிகிச்சை செய்யப்படுகிறது. பிரதம சிகிச்சைக்காகவுள்ள ஆஸ்பத்திரியிலும், முக்கிய ஆஸ்பத்திரியிலும், சேணையைச் சேர்ந்த வைத்தியர்கள் சிகிச்சை செய்கிறார்கள். ஆனால், சேணை அடிக்கடி இட்டம்விட்டு இடம்மாறிக்கொண்டிருக்குமாகையால், அதைச் சேர்ந்த வைத்தியர்கள் வியாதியஸ்தர்களை வெகு காலம் தங்கள் ஆஸ்பத்திரிகளில் வைத்திருக்கக்கூடாது. சேணை செல்கிற இடங்களுக்கெல்லாம் அந்த ஆஸ்பத்திரிகளும்கூடச் சென்றுகொண்டிருக்கும்; ஆகையால், வியாதியஸ்தர்களைப் பின்னுங் கொண்டுபோவது சாத்தியமல்ல. மேலும் பிரதினமும் சண்டை நடக்கக்கூடுமாகையால், காயம்பட்டவர்கள் புதிதாய்வந்துகொண்டிருப்பார்கள். அவர்களெல்லோருக்கும் ஆஸ்பத்திரியில் போதுமான இடமும் சௌகரியங்களும் கிடைக்காது. ஆகையால், சேணையைச்சேர்ந்த முக்கிய ஆஸ்பத்திரியிலிருக்கிற வியாதியஸ்தர்களை வேறொரு நிரந்தரமான ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடவேண்டும். வியாதியஸ்தர்களை அப்போதைக்கப்போது வேறெங்காவது அனுப்பிவிட்டால்தான், சேணையிலுள்ள வைத்தியர்கள் புதிதாய்க் காயம்பட்டுவருகிறவர்களைக் கவனிக்கவும் புதிய இடங்களுக்கு மாறவும் சாத்தியப்படும். சேணையிலுள்ள வைத்தியர்கள் வியாதியஸ்தர்களை எங்கு அனுப்புகிறார்கள்? சேணையின் பின்புறத்திலுள்ள ரயில் பாதையைக் காப்பதற்கும், அந்த ரயில் பாதை வழியாக ஆகாரம் வெடிமருந்து முதலிய வைகளைச் சப்ளை செய்வதற்கும் பிரத்தியேகமான சேணைத் தலைவர்

இருக்கிறார் என்று முன்பு சொல்லி யிருக்கிறோம். போர் முனையை நோக்கி வருகிற ரயில் வண்டிகள் பந்தோபஸ்தாயுள்ள ஓரிடம் வரையில் ஓடுகின்றனவென்றும் அதற் கப்பால் செல்வதில்லை யென்றும் சொல்லி யிருக்கிறோம். அந்த "ரயில்முனை"க்கருகில் நிரந்தரமான ஆஸ்பத்திரியொன்று ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த நிரந்தரமான ஆஸ்பத்திரியின் முக்கிய வேலை என்னவென்றால், சேனையில் சிகிச்சை செய்யப்படுகிறவர்களை உடனுக்குடன் கொண்டுவந்துவிட வேண்டும். அவ்விடத்தில் நிரந்தரமான ஆஸ்பத்திரியை ஸ்தாபிப்பதில் விசேஷமென்னவென்றால், போக்குவரத்து வழிகளைக் காக்கிற சேனைத்தலைவர் சகல சௌகரியங்களையும் பெற்றவராயிருக்கிறார். போக்குவரத்து வழிகளில், சகல சாமான்களும் தள வாடங்களும் குதிரைகளும் வண்டிகளும் வந்துகொண்டும் சென்று கொண்டும் இருக்குமாகையால், அங்குள்ள சேனைத்தலைவர் வியாதியஸ்தருக்குத் தேவையான வசதிகளைச்செய்துகொடுக்கக்கூடியவர். காயம்பட்ட தருப்புகளால் சேனைக்கு நேரக்கூடிய இடைஞ்சல்களைக் குறைப்பதற்காகவே இந்த நிரந்தரமான ஆஸ்பத்திரி ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த நிரந்தரமான ஆஸ்பத்திரியிலிருந்து மோட்டார் வண்டிகளும் குதிரைவண்டிகளும்சேனையைச்சேர்ந்தமுக்கிய ஆஸ்பத்திரிக்குச்சென்று அங்குள்ளவியாதியஸ்தர்களைஏற்றிக்கொண்டுவரும். இவ்வாறு செய்வதால், சேனையிலுள்ள வைத்தியர்கள் தங்கள் வேலையை தொந்தரவில்லாமல் சீக்கிரமாய்ச் செய்துகொண்டு சேனையோடு கூட தாராளமாய் போய்க்கொண்டிருப்பார்கள். மேலே சொல்லிய நிரந்தரமான ஆஸ்பத்திரி ரயில் முனைக்கருகில் ஸ்தாபிக்கப்படுவதால், அதிலுள்ள வியாதியஸ்தர்கள் ரயில் மார்க்கமாய்ச் சொந்த தேசத்திலுள்ள பெரிய பட்டணங்களுக்குச் சென்று, பட்டணங்களில் வழக்கமாயுள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சையை முடித்துக் கொள்வார்கள். போர்க்களத்தில் சண்டை செய்து காயம்பட்டவர்கள் மேற்சொல்லியவாறு தங்கள் சொந்ததேசத்துக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். இந்த ஏற்பாட்டின்படி போர்க்களத்தில் காயம்பட்ட ஒரு வீரன் எவ்வாறு சிகிச்சை செய்யப்படுகிறானென்பதை சுருக்கமாய்ச் சொல்வோம்.

சோற்ப காயம்பட்டவனுக்கு சிகிச்சை.

காலாட்சேனையிலுள்ள ஒரு வீரன் சண்டைசெய்து கொண்

டிருக்கும்போது காலில் ஒரு ரவைபாய்ந்து விட்டதென்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு வீரனும் தன்னிடம் சிறிது பஞ்சும் துணியும் வைத்துக்கொண் டிருப்பான். தோட்டாக்கள் யுத்தத்துக்குப் புறப்படுவதற்கு முன்னுல் ஆயுதங்களைப்பெற்றுக்கொள்ளும்போதே பஞ்சும் துணியும் கொடுக்கப்படுகிறார்கள். அவன் தன் காலில்காயம் பட்டவுடன் தன்னிடமிருக்கிற பஞ்சையும் துணியையும் வைத்துக் கட்டிக்கொண்டு, போர்க்களத்திலிருந்து மெல்ல நடந்து சென்று தன்னுடையபட்டாளத்தைச் சேர்ந்தவைத்தியரைப் போய்ப்பார்ப் பான். அந்த வைத்தியர் அவனை சீக்கிரமாய் பரிக்ஷைசெய்வார். அவன்காலில் ரவைபாயாமல், மேலாகத் தோல்மாத்திரம் பெயர்ந் திருந்தால், அவனிடம் ஒரு சீட்டில் 'சொற்பகாயம்' என்று எழுதிக் கொடுத்து, போர்க்களத்திற்குப் பின்புறம் செல்லும்படி உத்தரவு செய்வார். அவன் அந்த சீட்டைக்காட்டி போர்க்களத்தை விட்டு விலகி பின்புறமாய்ச் செல்வான். அந்த சீட்டைக் கண்பிக்காவிட் டால், அவனை ராணுவ அதிகாரிகள் போர்க்களத்தினின்றும் விலக விடமாட்டார்கள். அவன் பின்புறமாய்ச்சென்றுசற்றுதூரத்திலுள்ள தோர் சிறிய கூடாரத்துக்குள் போவான். இதுதான் பிரதம சிகிச்சை ஆஸ்பத்திரி. இங்குள்ள வைத்தியரும் சிப்பந்திகளும் பட் டாளத்தைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள பட்டாளங்களைச் சேர்த் துள்ள சேனையில் அவர்கள் இருந்துவருகிறார்கள். ஒரு சேனையில் சில சிகிச்சைப்படைகளிருக்கின்றனவென்று சொல்லியிருக்கிறோம். அந்த சிகிச்சைப் படைகளைச் சேர்ந்த சில வைத்தியரும் சிப்பந்தி களும் அந்தச் சிறிய கூடாரத்தை போர்க்களத்துக் கருகில் அமைக்கிறார்கள். அந்தச் சிறிய கூடாரத்துக்குள் காயம்பட்ட போர் வீரன் வந்தவுடன், அவன் காலிலிருக்கிற காயத்துக்கு மருந்து வைத்துக் கட்டப்படும். அவனுக்குச் சொற்பகாயமா யிருப்பதால், அவனை அந்த கூடாரத்துக்குள் வைக்காமல், அருகிலுள்ள ஒரு மர த்தினடியில் படித்திருக்கும்படிச் சொல்வார்கள். போர்க்களத்தில் சண்டை ஓய்ந்தவுடன் அவன்மறுபடியும் தன்பட்டாளத்தில் சேர்ந்து கொள்வான். அவனை கூடாரத்துக்குள் விட்ட காரணம், பலத்த காயம்பட்டவர்களுக்கு கூடாரத்தில் போதுமான இடம் வைத் திருக்கவேண்டும்.

பலத்த காயம்பட்டவனுக்கு சிகிச்சை.

மற்றொரு போர்வீரன்பலத்தகாயமடைந்துபோர்க்களத்தில்விழுந்துகிடக்கிறதாக வைத்துக்கொள்வோம். சண்டைநடந்துகொண்டிருக்கும்போது, சாத்தியமானால் அவனைக் கொண்டு வந்துவிடுவார்கள். அவ்வாறு சாத்தியப்படாவிட்டால், சண்டை அவ்விடத்தில் ஓய்ந்தவுடன், பட்டாளத்திலுள்ளசிப்பந்திகள் அந்தபோர்வீரனைத்தூக்கிக் கொண்டு போவார்கள். ஒருகான்வாஸ் துணியை நீளமாகவிரித்து இரண்டு பக்கங்களிலும் இரண்டுமூங்கில்களைக் கட்டி அந்தத் துணியில் காயம்பட்டவனை வைத்துத் தூக்கிக் கொண்டு போவார்கள். (இந்தசிப்பந்திகள், பட்டாளத்தில் சாதாரண காலங்களில் பாண்ட் வாத்தியம் வாசிப்பவர்கள்.) பட்டாளத்து வைத்தியர் அவனுக்குக் காயம் பட்டயிடத்தில் பக்குவமாய்த் துணியைக் கட்டி, சற்றுதூரத்திலுள்ள பிரதம ஆஸ்பத்திரிக்கு அவனை அனுப்பிவிடுவார். இங்குள்ள சிறிய கூடாரத்துக்குள் அவனைவைத்து, அவனுக்கு ஆபரேஷன் தேவையா யிருந்தால் அதைச்செய்து படுக்க வைத்திருப்பார்கள். அவனுக்கு வேண்டிய ஆகாரமும் கொடுக்கப்படும். இந்த பிரதமஆஸ்பத்திரி சண்டைநடக்கிற இடத்திலிருந்து 2அல்லது 3மைல் தூரத்திலிருக்கும். இவ்விடத்துக்கு அடிக்கடி மோட்டார் வண்டிகள் வந்துகொண்டிருக்கும், அந்தவண்டிகள் எங்கிருந்து அனுப்பப்படுகின்றன? சுமார்ஐந்து மைலுக்கப்பாலுள்ள முக்கிய ஆஸ்பத்திரியிலிருந்து அந்தவண்டிகள் அனுப்பப்படுகின்றன. ரணசிகிச்சை செய்யப்பட்ட வீரன்பிரயாணஞ் செய்வதற்குத் தகுதியா யிருந்தால் அந்தமோட்டார் வண்டியில் ஏற்றப்பட்டு, முக்கியஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் படுவான். வெவ்வேறிடங்களில் பிரிந்து சண்டைசெய்து கொண்டிருக்கிற பற்பல பட்டாளங் களிலிருந்து காயம் பட்டவர் களெல்லோரும் மேற்சொல்லிய விதமாய் மோட்டார் வண்டிகளில் இந்த முக்கிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் படுவார்கள். இவ்விடத்தில் அவனுக்கு புதிய உடைகளைக் கொடுத்து, வைக்கோல் அடைக்கப்பட்ட ஒருபடுக்கையை தரையில் விரித்து அவனை படுக்க வைப்பார்கள். இந்தமுக்கிய ஆஸ்பத்திரி, சேணைப் சேர்ந்தது. சேணைசெல்கிற இடங்களுக்கு அந்த ஆஸ்பத்திரியும் கூடப்போக வேண்டு மாகையால், அதிலுள்ள மியாஸ்தர்களை அங்கு வெகுகாலம் வைத்திருக்கக்கூடாது. ஆகையால்,

அவர்களை வேறெங்காவது நிரந்தரமாய் ஸ்தாபிக்கப் பட்டுள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட வேண்டும். நிரந்தரமாய் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரி வெகுதூரத்தில் பத்தோபஸ்தான ஓரிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். அவ்வளவுதூரம் காயப்பட்ட வர்களைக் கொண்டு போவதற்குப் போதுமானவண்டிகள், சேணியிலிருக்க முடியாது. சேணியோடுகூடச் செல்கிறவண்டிகள் அத்தியாவசியமான காரியங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் இருக்கும். ஆகையால், ரயில் முணையிலிருந்து அநேக மோட்டார் வண்டிகள் சேணியைச் சேர்ந்தமுக்கிய ஆஸ்பத்திரிக்கு வந்து சேரும். அந்த மோட்டார் வண்டிகள் வியாதியஸ்தர்களை ஏற்றிக்கொண்டு, ரயில் முணைக்கருகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிரந்தரமான ஆஸ்பத்திரிக்குக்கொண்டு போகும். ரயில் முணையிலிருந்து, ஆகாரம் வெடிமருந்துமுதலியவைகள் மோட்டார் வண்டிகளில் பிரதினமும் ஏற்றி, சேணித்தலைவரிருக்கிற இடத்துக்கு அனுப்பப்படுகின்றனவென்று சொல்லியிருக்கிறோம். அதைப்போலவே, வேறு பல மோட்டார் வண்டிகள் ரயில் முணையிலிருந்து அனுப்பப்பட்டு சேணியைச்சேர்ந்த முக்கிய ஆஸ்பத்திரியிலிருந்து காயம்பட்டவர்களை பிரதி தினமும் கொண்டு போகும்.

சண்டை நடக்கிற இடத்திலிருந்து காயம்பட்டவர்கள் மேற்சொல்லியவாறு பத்தோபஸ்தாய் ரயில் முணைக்குக்கொண்டு வரப்படுகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னல் ராணுவத்தில் இம்மாதிரியான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அக்காலத்தில் காயம்பட்டவர்கள் சேணியோடுகூடவே வெவ்வேறிடங்களுக்கு அடிக்கடி கொண்டுபோகப்பட்டு, ஒக்கிரத்தில் சொல்லமுடியாமலிருந்ததோடு, சேணியின் நடமாட்டத்துக்கு இடைஞ்சலாயுமிருந்தார்கள்.

சத்துருக்களைவிட பயங்கரமான சத்துரு.

இந்த சிகிச்சைப்படைகள் காயப்பட்ட தருப்புகளுக்கு வைத்தியஞ் செய்வதோடு, பொதுவாய் தருப்புகளின் சுகாதார நிலைமையையும் கவனித்து வரவேண்டும். ஆயிரக்கணக்கான தருப்புகள் நிண்ட இடங்களுக்குச் சென்று நெருக்கமாய்த் தங்கியிருக்கும்படி நேரிடுவதால், அவர்களுக்குள் தொத்து வியாதிகள் பரவாமலிருக்கச்செய்வது முக்கியமாகும். காலரா, பிளேக், டைபாயிட்

முதலிய தொத்து வியாதிகள் யுத்தத்தின் கொடுமையைவிட பயங்கரமாய் தருப்புகளே மடியச் செய்கின்றன. ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில், காயத்தால் இறந்தவர்களைவிட பிணியால் இறந்தவர்கள் இரு மடங்கு என்று கணக்கிடப்படுகிறது. அநேகமாய் எல்லா யுத்தங்களிலும் விஷக் கிருமிகளும் கலந்து கொள்ளாமலிருபதில்லே. சற்று அஜாக்கிரதையினுல் அந்த வியாதிகள் போர்க்களத்தில் எங்கேனும் தோன்றினுல் கூட்டங் கூட்டமாய்ச் செல்கிற படைகளுள் எளிதாய்ப் பரவிவிடும். தருப்புகள் தங்குகிற இடங்களையும், உட்கொள்ளும் ஆகாரம் தண்ணீர் முதலியவைகளையும், மற்ற சுகாதார வசதிகளையும் மிகுந்த கவலையுடன் சோதிக்கவேண்டிய கடமையைச் சிகிச்சைப் படைகள் ஏற்றுக்கொள்கின்றன.

டிவிஷன் என்ற சேனைவகுப்பு.


"டிவிஷன்" என்ற பெரிய சேனை வகுப்பில், சகலவிதமான படைகளும் மிருப்பதால், அதை ஒரு சிறு சேனையாகக் கருதவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அது எல்லாவிதமான தளவாடங்களையும் தருப்புகளையும் பெற்று ஒரு சேனைக்கு வேண்டிய எல்லா அம்சங்களிலும் பூர்த்தி பெற்றிருப்பதால், அது தனியாகப் போர்க்களத்தில் செலுத்தப்பட்டு எவ்விதச் சண்டையையும்செய்யத்தகுதியானது. காலாட்படை மட்டும் போர்க்களத்தில் சென்றால், அதில் பீரங்கிப்படையும் குதிரைப்படையு மில்லாததால் சண்டை செய்ய முடியாது. ஆகவே ஒரு டிவிஷனில், காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, இஞ்ஜினியர்படை, சமிக்ஞை செய்யும்படை, சாமான்களை சப்ளை செய்யும்படை, சிகிச்சைப்படை ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன. இவைகளைத் தவிர வெடிமருந்துப் படையும் சேர்ந்திருக்கின்றது. துப்பாக்கி, பீரங்கி, மெஷின் பீரங்கி இவைகளின் உபயோகத்துக்காக ஏராளமான வெடிமருந்து கையிருப்பில் வைத்துக்கொள்ளப் படுகிறது. அந்தந்தப் படையிலுள்ள வெடிமருந்து செலவானவுடன், இந்த வெடிமருந்துப் படையிலிருந்து கொடுக்கப்படும். அந்தப் படையில் 27 வண்டிகளும் 142 மனிதர்களும் 150 குதிரைகளும் இருக்கின்றன. ஒரு டிவிஷனிலுள்ள பலவிதமான படைகளைப்பற்றிச் சில பொதுவான விஷயங்களைச் சொல்வோம். காலாட்துருப்புகளில் 12 பட்டாளங்கள் ஒரு டிவிஷனில் சேர்க்கப்படுகின்றன. அந்த 12 பட்டாளங்களும் 3 சரி

பிரிட்டிஷ் படையிலுள்ள பளுவான பீரங்கி. அது 60 பவுண்ட் பளுவுள்ள குண்டைச்சுடக்கூடியது. அது யுத்த களத்தில் சுடப்படுவதை இப்படம் காண்பிக்கிறது. பீரங்கிக்குப் பக்கத்தில் வெடிமருந்து வண்டி யிருப்பதைக்காணலாம்.

பிரஞ்சுகாலாட் படையைச்சேர்ந்த திருப்பு. அவன் சுமந்துசெல்ல வேண்டிய சாமான்களோக் காணலாம்.

பிரிட்டிஷ் கடற்படையில் உபயோகிக் கப்படும் கடற்சுரங்கம். கடற்சுரங்கம் தயார் செய்யப்படுகிறது.

மற்றொரு பிரமாண கடற் சுரங்கம்.




THE SPHERE.

குதிரைப்படைச் சண்டை:—பிரஞ்சு எல்லைப்புறத்திலுள்ள ஓர் கிராமத்தில், பிரி டிஷ் ஜெர்மன் குதிரைப் படைகள் அகஸ்மாத்தாய் சந்தித்து, இரண்டு கக்ஷிகளும் சண்டை யைத் தொடங்கி விட்டனர்.

பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் பிரிகேட் என்று சொல்லப்படுகிறது. ஒரு பட்டாளத்தில் 844 காலாட்துருப்புகள் இருக்கிறார்கள். உத்தியோகஸ்தர்களையும், மற்ற சிப்பந்திகளையும் மெஷின் பிரங்கிக்காரர்களையும் சேர்த்து, ஒரு பட்டாளத்தில் 1007 பேரிருக்கிறார்கள். ஆகையால், 12பட்டாளங்களில் மொத்தம் 12,084 பேரிருக்கிறார்கள்; அவர்களில் துருப்புகளாயிருப்பவர்கள், 10,128 பேர். குதிரைப்படையில் ஸ்குவாட்ரன் என்று சிறு பிரிவு ஒரு டிவிஷனில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்குவாட்ரனில், சுமார் 150 குதிரைவீரர்களிருக்கிறார்கள். அவர்களைத் தவிர அதிகாரிகளும் சிப்பந்திகளும் இருக்கிறார்கள். பிரங்கிப்படையில், 13 பாட்டரிகள் ஒரு டிவிஷனில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு பாட்டரியில் 6 பீரங்கிகள் இருக்கின்றன. பலமான பீரங்கியாயிருந்தால், ஒரு பாட்டரியில் 4 பீரங்கிகளே சேர்க்கப்படுகின்றன. பாட்டரிகளில் மொத்தம் 54 இலேசான பீரங்கிகளும், 18 ஹவிட்ஸர் பீரங்கிகளும் (இவை முற்றுகைப் பீரங்கியின் இனத்தைச் சேர்ந்தவை, 4 பலமான பீரங்கிகளும் இருக்கின்றன. அதாவது, டிவிஷனில் மொத்தம் 76 பீரங்கிகள் பல இனங்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு டிவிஷனில், எல்லாப் படைகளையுஞ்சேர்த்துக் கணக்கிட்டால், 18,073 மனிதர்கள், 5592 குதிரைகள், 76 பீரங்கிகள், 24 மெஷின் பீரங்கிகள் இருக்கின்றன. அவைகளில், சண்டைசெய்யக்கூடிய காலாட் துருப்புகள் 10,128 பேரும், சண்டை செய்யக்கூடிய குதிரைகள் 150-க்குதான் இருக்கின்றன. ஒரு டிவிஷனிலுள்ள காலாட்படை, குதிரைப்படை பீரங்கிப்படை இவைகளில், காலாட்படைதான் அதிகமாயிருப்பதைக் கவனிக்கவேண்டும். அந்த காரணத்தால், இந்தச் சிறிய சேனை, "காலாள் டிவிஷன்" என்று சொல்லப்படுகிறது. அதிலுள்ள காலாட்படைகள் மற்றவிதமான படைகளின் உதவியைப்பெற்று சண்டை செய்கின்றன. "குதிரையாள் டிவிஷன்" என்று வேறொரு சிறு சேனை பிரத்தியேகமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் பீரங்கிப் படைகள் மட்டும் தனியான டிவிஷனுக்குச் சேர்க்கப்படுவதில்லை. குதிரையாள் டிவிஷனில், சுமார் 9500 மனிதர்களும், 10,000 குதிரைகளும், 24 குதிரைப்படை பீரங்கிகளும், 24 மெஷின் பீரங்கிகளும் இருக்கின்றன. இவைகளைத் தவிர, 600 வண்டிகளும், 23 மோட்

டார் வண்டிகளும், 18 மோட்டார் பைஸிகிள்களும் 370 சரதாரண பைஸிகிள்களும் இருக்கின்றன. இவ்வளவு ஆள்களையும், குதிரைகளையும் வண்டிகளையும் கொண்ட இந்த சிறு குதிரைச்சேனையில் குதிரைமேல் ஏறிச் சண்டை செய்யக்கூடியவர்கள் சுமார் 5000



பேர்களிருப்பார்கள். ஆனல் இவர்கள் செய்யக்கூடிய சண்டையில் 24 பீரங்கிகளின் உதவியையும் பெறுவார்கள். ஒரு குதிரை

யாள் டிவிஷன் ரோட்டில் பிரயாணஞ் சென்றால், அதன் முன்புறத் திலிருந்து பின்புறம் வரையில் 11½ மைல் நீள மிருக்கு மென்றால், அதிலுள்ள வண்டிகள், குதிரைகள், மனிதர்கள் இவைகளின் தொகையை செவ்வையால் அறிந்துகொள்ளலாம்.

குதிரைப்படைகள் யுத்தகளத்தில் சில விசேஷமான காரியங்களைச் செய்யவேண்டியிருக்கின்றன. அப்படிப்பட்ட காரியங்களுக்கு மட்டும் குதிரையாள் டிவிஷன்கள் அனுப்பப்படுகின்றன. சாதாரண சண்டைகளை நடத்துவதற்கு காலாள் டிவிஷன்கள் அனுப்பப்படுகின்றன. இந்த டிவிஷனிலுள்ள காலாட்படைகள் சண்டையை ஆரம்பித்து, அவைகளோடு சேர்க்கப்பட்டுள்ள மற்ற இனுசான படைகளின் உதவியைப் பெற்று சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டுவருகின்றன. டிவிஷன் என்று பொதுவாய்ச் சொன்னால் அது காலாள் டிவிஷனையே குறிப்பிடும். ஒரு டிவிஷனிலுள்ள தருப்புகள் பிரங்கிகள் இவைகளைப் பற்றிய விவரங்களை மேலே சொல்லியிருக்கிறோம். ஒரு டிவிஷனிலுள்ள தருப்புகளின் தொகை ஒவ்வொரு தேசத்து ராணுவத்திலும் வித்தியாசப்படும். உதாரணமாக பிரிட்டிஷ் சேனையிலுள்ள டிவிஷனில் மொத்தம் 18,000 மனிதர்களிருக்கிறார்கள். ஜர்மன் சேனையிலுள்ள டிவிஷனில் 20,000 மனிதர்களிருக்கிறார்கள். (வல்லரசுகளின் சேனைகளைப்பற்றி வேறொரு அத்தியாயத்தில் சொல்லப்படும்.) இரண்டு டிவிஷன்களைக் கொண்டது ஒரு ஆர்மிகோர் என்று சொன்னோம். ஒரு ஆர்மிகோர் என்ற சேனை வகுப்பு யுத்தத்துக்குப் புறப்படும்போது அதில் அதிகப்படியாக ஒரு குதிரைப்படையும், ஆகாயப் படையும், இஞ்ஜினியர் படையும், சமிக்ஞைப்படையும் சேர்க்கப்படுகின்றன.

25-வது அத்தியாயம்.

சேனையிலுள்ள படைகள் எவ்வாறு சண்டை செய்கின்றன.

குதிரைப்படை எவ்வாறு சண்டைசெய்கிறது.

குதிரைப்படைகளை மூன்றுவிதமாய்ப் பிரிக்கலாம். (1) 'குதிரையாள் டிவிஷன்' என்ற சேனைவகுப்பு, யுத்தத்தொடங்கியவுடன் யுத்த மண்டலம் முழுவதிலும் சுற்றித்திரிந்து சத்துருவின் பிரதேசத்தை நெருங்கி சத்துருக்களைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளும். (2) பிரத்தியேகமாக சில குதிரைப் படைகள் சேர்க்கப்படுகின்றன. பிரிகேட் என்ற வகுப்புகளாக சேர்க்கப் படுகின்றன. ஒவ்வொரு பிரிகேட்டிலும், சுமார் 1700 குதிரைபாட்ட ளிருக்கிறார்கள். இந்த குதிரைப்படைகள், காலாட்படைகளுக்கு எப்போதும் உதவிசெய்து கொண்டிருக்கும். (3) "காலாள் டிவிஷ"னில் சுமார் 150 குதிரையாட்களையுடைய சிறியதொரு குதிரைப்படை சேர்க்கப்பட் டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறோம். இந்த சிறிய குதிரைப்படை, காலாட்படைகள் ஓரிடத்தில் தங்கியிருக்கும்போது அந்த இடத்துக்கு முன்புறத்தில் பாரா கொடுத்துக்கொண் டிருக்கும். இந்த வேலைக்கு அவ்வளவு சிறிய குதிரைப்படை போதுமானது. இந்த மூன்று வகையான வேலைகளை குதிரைப்படைகள் எவ்வாறு செய்கின்றன வென்பதை வரிசையாய்ச் சொல்லி வருவோம்.

'குதிரையாள் டிவிஷன்' செய்கிற சண்டை.

குதிரைப்படை அதிக விசைவாய்ச்சென்று வெகு தூரம் பிரயாணஞ்செய்யக்கூடியதாகையால், அது செய்யவேண்டிய முக்கியமான வேலை சத்துருவின் இருப்பிடத்தையும் சைன்யபலத்தையும் அறிந்து கொள்வதாகும். ஒரு சேனை யுத்தகளத்தில் முன்செல்லவேண்டுமானால், சத்துருக்கள் எந்தெந்த இடங்களில் நிலைபெற்றிருக்கிறார்களென்றும், அந்தந்த இடங்களில் அவர்களுடைய சைன்யபலம் எவ்வளவு என்றும் முன்னதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வித சமாசாரங்களை அறிந்துகொண்டு வருவதற்கு குதிரைப்படை

தான் ஏற்றதாயிருக்கிறது. ஆகாயவிமானங்கள் ஆகாய மார்க்கமாய்ச் சென்று சத்துருக்களைப்பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளக்கூடுமாயினும், அவைகள் குதிரைப்படைக்குள்ள சில விசேஷங்களைப் பெற்றிருக்கவில்லை. காடுகளில் மறைந்துகொண்டிருக்கிற சத்துருக்களை ஆகாயவிமானத்திலிருந்து பார்க்கமுடியாது; இருட்டு நேரங்களிலும், பனி மூடியகாலங்களிலும், ஆகாயவிமானத்திலிருந்து பார்க்கமுடியாது. அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் குதிரைப்படை சத்துருவைப்பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளக்கூடும். ஆகாய விமானம் சத்துருக்களின் துருப்புகளோடு சண்டை செய்ய முடியாது. குதிரைப்படைகள் சத்துருக்களோடு சண்டை செய்து, அவர்களுடைய போர்வன்மையையும் ஆயுத பலத்தையும் அறிந்து கொள்ளும். மேலும், சத்துருவின் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வசதிகளையும் அங்குள்ள இதர விசேஷங்களையும் அது அறிந்துகொள்ளும். சத்துருவைப்பற்றின விவரங்களை அறிவதற்கு வழக்கமாய் குதிரைப்படைகளே உபயோகிக்கப்படுகின்றன வாயினும், இக்காலத்தில் அந்த வேலை மிகவும் கஷ்டமாகிவிட்டது. பிரங்கியும் துப்பாக்கியும் இப்போது விருத்தி செய்யப்பட்டு அதிக தூரம் சுடுகின்றனவாகையால், குதிரைப்படைகள் எளிதாய் சத்துருவுக்கருகில் செல்லமுடியவில்லை. சத்துருக்கள் தூர படைகளை முன்புறத்தில் அனுப்பி அவைகளுக்குப் பின்னால் தங்களுடைய சேனையின் முக்கிய பாகத்தை இரகஸ்யமாய் வைத்திருப்பார்கள். சத்துருக்களின் முன்படைகள் அவர்களுடைய நடவடிக்கைகளை மறைத்துக்கொண்டிருக்கும். ஆகையால் சத்துருவின் நடவடிக்கைகளை அறியவேண்டுமானால், அந்த முன்படைகளை வெல்லவேண்டும். ஆதலால் முற்காலத்தைப்போல, சத்துருவைப் பற்றிய விவரங்களை அறிவதற்கு குதிரைப்படையை மட்டும் உபயோகிப்பதில் பயனில்லை. குதிரைப்படை துப்பறியும் வேலையைச் செய்யும்போது பிரங்கிகளின் உதவியும் காலாட் துருப்புகளின் உதவியும் பெற்றுக்கொள்ளவேண்டும். சத்துருவின் நிலைமையை அறிவது மிகவும் கஷ்டமாகிவிட்டதால், குதிரைப்படையின் அவசியம் இப்போது அதிகமாகிவிட்டது. காலாட்படைகள் குதிரைப்படையோடு சேர்ந்து வேலை செய்து சத்துருவைப்பற்றிய விவரங்களை அறிந்துகொண்டால்தான் யுத்தத்தில் ஜெயம்பெற முடியும்.

குதிரைப்படை செய்யவேண்டிய மற்றொரு முக்கியமான காரிய மிருக்கிறது. குதிரைப்படை சத்துருவின் நிலைமையை அறிவதற்கு முயல்வதோடு தன் சொந்த சேனையின் நிலைமை சத்துருவுக்குத் தெரியாதபடி காக்கவும் வேண்டும். சத்துருக்கள் நமது கக்ஷியின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளமுயற்சி செய்வார்கள். ஆகையால் நமதுசேனையின் நடவடிக்கைகளை சத்துருவுக்குத் தெரியாம லிருக் கும்படி நம்முடைய குதிரைப்படைகள் முன்புறத்தில் சென்று, திரை போட்டாற் போல மறைத்துக்கொண் டிருக்கவேண்டும். இந்த வேலைகளை குதிரைவாள் டிவிஷன் செய்கின்றது.


குதிரைப்படை சத்துருவின் பிரதேசத்தில் இரகஸ்யமாயும் விரைவாயும் துணிந்துசெல்லவேண்டும். வெகுதூரம் விரைவாய்ப் பிரயாணஞ்செய்வதில், ஜெர்மன்சேனையிலுள்ள 'உலான்' என்ற குதி ரைப்படைகளும் ருஷ்ய சேனையிலுள்ள 'கோலாக்' என்ற குதிரைப் படைகளும் பேர் பெற் றிருக்கின்றன. அவ்வாறு செல்வதால், சத் துருக்களை எதிர்பாராத நேரங்களில் உக்கிரமாய்த்தாக்கி நாசஞ்செய் யலாம். குதிரைப்படைக்குள்ள அந்த விசேஷ சக்திதான் சத்துருக் களுக்கு அச்சத்தை உண்டுபண்ணுகிறது. குதிரையாட்கள் துப்பாக் கியை வைத்திருப்பதால், குதிரையி னின்றும் கீழே யிறங்கி காலாட் துருப்புகளைப்போல சண்டை செய்யலாம். ஆனால் கு திரையாட்கள் தங்கள் குதிரைகளி னின்றும் கீழே யிறங்கி சண்டை செய்ப வேண்டுமானால் தங்கள் குதிரைகளைப் பார்த்துக்கொண் டிருப்ப தற்குச் சிலபேர் பின் தங்கிவிடவேண்டும். ஆகையால் காலாட்படை யில் அதிலுள்ள துருப்புகள் அனைவரும் சண்டை செய்வதுபோல குதிரைப்படையில் அதிலுள்ள குதிரையாட்கள் அனைவரும் சண் டை செய்ய முடியாது. ஆட்கள் குறைவுபட்டாலும், அவர்களின் நடமாட்டம் விரைவா யிருப்பதால் குதிரைப்படையின் போர் வன் மை மொத்தத்தில் குறைந்திருப்பதாக நினைப்பதற்கில்லை. குதிரைப் படையோடு, பீரங்கிகளும் சேர்க்கப்பட்டிருப்பதால் பீரங்கியின் உத வியையும் அது பெற்றுக்கொள்ளுகிறது. குதிரைப்படை சத்துருவின் பிரதேசத்துக்குள் விரைவாய் நுழைந்து அவர்களின் இருப்பிடத்தை இரகஸ்யமாய்த் தெரிந்து கொள்கிறதென்று வைத்துக்கொள்வோம். 10 அல்லது 15 குதிரையாட்கள் முன்னதாகச்சென்று சத்துரு வுக்கருகிலிருக்கிற பூமி குதிரைகளின் ஓட்டத்துக்குச் சாதகமா

யிருக்கிறதா என்று அறிந்துகொள்கிறார்கள். கற்பாறைகளும் செடி மரங்களும் மேடு பள்ளங்களும் இல்லாமல் குதிரைகள் வேகமாய்ப் பாய்வதற்குச் சௌகரியமான பூமியா யிருக்கவேண்டும். அவ்விதச் சௌகரியங்கள் அமைந்திருந்தால், உடனே சண்டை ஆரம்பிக்கப் படும். குதிரைப் படையிலுள்ள பிரங்கிகள் மறைவான இடத்தில் ஒளித்து வைக்கப்பட்டு திடீரென்று சத்துருக்களின் மேல் நெருப்பைப் பொழிந்து அவர்களுக்குள் குழப்பத்தை உண்டு பண்ணிக் கொண் டிருக்கையில், குதிரையாட்கள் சத்துருக்களை நோக்கி வேகமாய்ச் சவாரி செய்து இடையிடையே குதிரையை நிறுத்தி துப்பாக்கியைச் சுட்டுக் கடைசியில் துப்பாக்கியை நன்றாய்ச் சுடுவதற்குத் தகுந்த தூரத்துக்கு வந்தவுடன் குதிரையாட் களிற் சிலர் கீழே யிறங்கி துப்பாக்கியி லிருந்து சிறிது நேரம் விடாமல் நெருப்பைப் பொழிந்துகொண்டிருப்பார்கள். மற்ற குதி ரையாட்கள் தங்கள் வாள்களை உருவி நாலு கால் பாய்ச்சலில் சவாரி செய்து சத்துருவின்மேல் விழுந்து தாக்கப் புறப்படுவார்கள். உடனே, பிரங்கிகளும் துப்பாக்கிகளும் சுடுவதை நிறுத்திவிடும்; பாய்ந்துசெல்கிறகுதிரையாட்கள்சத்துருக்களைப் புரட்டியடிப்பார்கள் சத்துருக்கள் கலக்க மடைந்து பின் வாங்கினால், குதிரையாட்கள் துரத்திச்செல்வார்கள். குதிரைப்படையிலுள்ள, குதிரை, பீரங்கி, காலாள் இம்மூன்று அம்சங்களும் இந்த சண்டையில் உபயோகிக்கப் பட் டிருக்கின்றன. குதிரைப்படை, சத்துருவின் குதிரைப்படையை எதிர்க்க நேர்ந்தால் சற்று பெரிய சண்டை நடைபெறும்; ஆனால் அநேகமாய் சத்துருவின் முன்படைகளோடு சில்லரைச் சண்டைகளே யே செய்யுட்படி நேரிடும். விரைவாய்ச் செல்வதாலும், சத்துருக்களை எதிர்பாராத சமயங்களில் திடீரென்று தாக்குவதாலுமே, குதிரைப் படை வெற்றியடையக்கூடும். பெரிய சண்டைகளில் குதிரைப்படை மேலே சொல்லியவாறு தலையிட்டுக்கொள்ளாது; ஒரு டிவிஷன் என்ற சேனை வகுப்பு போர் முனைக்கு வந்தால், அதில் சுமார் 10,000 துப் பாக்கிகளும் 76 பிரங்கிகளுமிருக்குமாகையால், அப்படிப்பட்டபெரிய படையைத்தாக்க எந்தக் குதிரைப்படையும் துணிந்துசெல்லாது.


பிரிகேட் என்ற தனிப்படைகளின் சண்டை.

நமது துருப்புகள் போர்க்களத்தை நோக்கிச் செல்லும்போது அவர்களுக்கு முன்னால் சுமார் 20 மைல் தூரத்தில் குதிரைப்படை


கள் சென்று, முன்புறத்திலுள்ள முக்கிய ஸ்தலங்களை வசப்படுத்திக் கொண்டு அங்கு நமது துருப்புகள் வந்து சேர்கிற வரையில் காவல் செய்துகொண்டிருக்கும். பிறகு நமது துருப்புகள் சத்துருக்களோடு சண்டை செய்யத்தொடங்கினால், குதிரைப்படைகளிற் சில போர்க் களத்துக்கு இரண்டு பக்கங்களிலும் பின்புறத்திலும் காவல்செய்து கொண்டிருக்கவேண்டும். வெகு தூரம் சுற்றித்திரிந்து, வழிநெடுகக் காவல் செய்வதற்கு குதிரைப்படை தான் மிகவும் சௌகரிய மானது. குதிரைப்படையின் மற்றொரு பாகத்தை இருப்பில் வைத் துக்கொண்டிருக்கவேண்டும். நெருக்கடியான சமயம் நேர்ந்து விட் டால், குதிரையாட்கள் குதிரையினின்றுமிறங்கி காலாட் துருப்பு களைப்போல தங்கள் துப்பாக்கிகளைக்கொண்டு உதவி செய்யும்படி கேரிடும். (பிரிட்டிஷ், பிரஞ்சு குதிரைப்படைகளுக்கு, துப்பாக்கி அல்லதுகத்தி ஆயுதங்களாகக் கொடுக்கப்படுகின்றன. ஜெர்மன் குதி ரைப்படையில்தான் ஈட்டி அதிகமாய் உபயோகிக்கப்படுகிறது.) சண்டை நடந்துகொண்டிருக்கும்போது ஏற்ற சமயம் வாய்த்தால், குதிரையாட்கள் குதிரையில் ஏறியபடியே சத்துருவின்மேல் பாய்ந்து தாக்குவார்கள். ஆனால் அப்படிப்பட்ட சமயங்கள் இக்காலத்துச் சண்டையில் வாய்ப்பது அரிது. சண்டையில் சத்துருக்கள் தோல்வி அடைந்து பின் வாங்கும்போதுதான் குதிரைப்படைகள் தங்கள் சாமர்த்திய முழுவதையும் காட்டவேண்டி வரும். சத்துருக்கள் போர்க்களத்தைவிட்டு விலகுவதாகத் தெரிந்தவுடன் நமது படைத் தலைவர் குதிரைப்படையைஏவிவிடுவார். உடனே குதிரைப்படை சத் துருக்களின் மேல் விழுந்து அவர்களை ஓயாமல் துரத்தி, ஒன்று சேரவிடாமல் தடுத்து, இரண்டு பக்கங்களில் வளைந்து கத்தியாலும் ஈட்டியாலும் தாக்கிக்கொண்டிருக்கும்; பிறகு அவர்களைத் தாண்டி முன்சென்று,வழியில் ஆற்றங்கரை அல்லது மலைக்கணவாய்போன்ற வலுவான ஸ்தலத்தில் நிலைபெற்று அவர்களை தப்பியோட விடாமல் தடுத்துச் சண்டைசெய்யும். அதற்குள்ளாக நமது காலாட்படையும் பீரங்கிப்படையும் வழி நடந்துசென்று சத்துருக்களைப் பிடித்து விடவேண்டும். போர்க்களத்தில் வெற்றியடைந்தால், அதன் முழுப் பலனையும் பெறும்படிச்செய்வது குதிரைப்படைதான்.




இப்படத்தின் இடதுபுறத்தில் பீரங்கியின் பின் புறத்துக்கதவு திறந்திருப்பதைக் காணலாம்.



பீரங்கியின் பின்புறத்தில் பீரங்கிக்காரன் குண்டைச் கையாலெடுத்து நுழைக்கிறான். 377-ம் பக்கம் பார்க்க.



இது 17 அங்குல ஜெர்மன் பீரங்கி. இப்படத்தின் வலதுபுறத்தில் பீரங்கியுடன் இடதுபுறத்தில் மற்ற கருவிகளும் தனித்தனி வண்டிகளில் ஏற்றப்படுகின்றன. 528-ம்பக்கம் பார்க்க.



இ. 11 அங்குல ஜேர்மன் பீரங்கி. இந்த வண்டியிலுள்ள பீரங்கி இடது புறத்தில் இழுக்கப்பட்டு, அங்கு வேறொரு வண்டியில்வைக்கப்பட்டுள்ள உபகரணங்களின்மேல் அமைக்கப்படுகிற ரு. 3-ம் பாகத்தில் 342-ம் பக்கத்தில் அவ்வாறு அமைக்கப்பட்டிருப்பதையும் பிறகு சுடப்படுவதையும் பார்க்கலாம். இந்தப்பீரங்கியைப்பற்றிய விவரங்களை 526-ம்பக்கத்தில் காணலாம்.



5 ரவைகள் ஒன்றுக்கோர்க்கப்பட்டுவருகாலத்தில் துப்பாக்கியில் நுழைக்கப்படுகின்றன. 399-ம் பக்கம் பார்க்க.

டிவிஷனிலுள்ள குதிரைப்படை.

காலாட் படைகள் போர்க்களத்தில் தங்கியிருக்கும்போது, குதிரைப்படை முன்புறத்தில் பாரா கொடுத்துக்கொண் டிருக்கும். சத்துருக்களின் அருகில் எங்காவது ஒளிந்துகொண் டிருந்தாலும், அல்லது இரகஸ்யமாய் வந்துகொண் டிருந்தாலும் அதைக் குதிரைப் படை கண்டுபிடிக்கவேண்டும். இந்த வேலையை காலாள் டிவிஷனி லுள்ள சிறிய குதிரைப்படை ஏற்றுக்கொள்கிறது.

இனி பீரங்கிப்படை எவ்வாறு சண்டைசெய்கிறதென்பதைப் பற்றிச் சொல்வோம்.

பீரங்கிப்படை எவ்வாறு சண்டை செய்கிறது.

காலாள் துருப்புகள் சத்துருக்களைத் தாக்குவதற்காக எளி தாய் முன்செல்லும்படி பீரங்கிப்படை உதவி செய்யவேண்டும். தவிர, சத்துருவின் காலாள்துருப்புகள் முன்வந்து தாக்காம லிருக்கும்படி அவர்களைத் தடை செய்வதும் பீரங்கிப் படையின் முக்கிய வேலையா கும். முற்காலத்தில் பீரங்கிகள் சத்துருவின் அரண்களையும் தளவா டங்களையும் உடைப்பதற்காக உபயோகிக்கப்பட்டன. அவ்வேலைகள் இப்போதும்செய்யப்படுகின்றன, என்றாலும் அவைகள் முக்கியமான வையாகக் கருதப்படுவதில்லை. நூதனமாய்க் கண்டு பிடிக்கப் பட்டபீரங்கிகள் வேறுவிதமாய் உபயோகிக்கப் படுகின்றன. காலாட் படைகள் எளிதாய் போர்க்களத்தைக் கடந்து சத்துருவின் அரண் களுக்கு அருகில் செல்வதற்கு பீரங்கிகள் உதவிசெய்கின்றன. இது தான் நூதனமான பீரங்கியின் விசேஷமாகும்.

புதிய பீரங்கிகளின் வன்மை.

அந்த வேலையைச் செவ்வையாய்ச்செய்யவேண்டுமானால்பீரங்கி முதலாவது குறிப்பாய்ச் சுடவேண்டும்; இரண்டாவது விரைவாய்ச் சுடவேண்டும். சென்ற 15 வருஷங்களாக பீரங்கிகள் பல நூதன முறைகளில் விருத்தி செய்யப்பட்டு அவ்விரண்டு குணங்களையும் விசேஷமாய்ப் பெற்றிருக்கின்றன. பீரங்கியில் செய்யப்பட்ட நூதன மாறுதல்களைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அந்தமாறு தல்களால் உண்டான இரண்டு முக்கிய பலன்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது, பீரங்கி ஏற்றப்பட்ட வண்டி இடத்தைவிட்டு அசைவதில்லை. இரண்டாவது, பீரங்கி, குண்டைச் சுட்டவுடன், 3½அடி தூரம் ஓழுங்காய்ப் பின் சென்று மறுபடியும் முன்பிருந்த

நிலைமைக்கு ஒழுங்காய் வந்து விடுகிறது. இவைகளால் ஏற்படுகிற சௌகரியங்களென்ன? முற்காலத்தில்குண்டைச் சுட்டவுடன்பிரங்கியும் வண்டியும் பின்புறமாய் உதைந்துசென்றன. குண்டைச்சுடும் போதெல்லாம் ஒவ்வொருதரமும் முற்காலத்தில் வண்டியைத்திரும்ப முன்னிருந்தஇடத்துக்கு இழுத்துக்கொண்டுவரவேண்டி யிருந்தது. அதனால் முன்பு ஏற்பட்ட கால தாமஸம் இப்போது கேரிடவதில்லை. ஆகையால் இப்போது பிரங்கியிலிருந்து குண்டுகளை விரைவாய்ச்சுட லாம். தவிர, முற்காலத்தில், வண்டியை ஒவ்வொரு தரமும் முன்திய நிலைமைக்குக்கொண்டி வந்தபடியால், ஒவ்வொருதரமும் குறிபார்க்க வேண்டியிருந்தது. அதனால் காலதாமஸமுண்டாயிற்று. பலமுறை குறிபார்ப்பதில் சில சமயங்களில் தவறுதல்களும் ஏற்படும். இப் போது வண்டி ஒரே யிடத்திலிருப்பதால், ஒரு தரம் குறிபார்த்து வண்டியை ஓரிடத்தில் அமைத்து விட்டால், பிறகு மறுமுறை குறி பார்க்க வேண்டியதில்லை. ஒரு முறை சிரமப்பட்டு சரியாய் குறி பார்த்துவைத்தால் பிறகு அது எள்ளளவும் மாறுவதில்லை. வண்டி யின்மேல் குறிபார்க்குங் கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. பிரங்கி பின்புறமாய்ச் சற்று சென்றபோதிலும் மறுபடியும் ஒழுங்காய் மூன் திய நிலைமைக்கே வந்து விடுவதால், குறி தவறுவதில்லை. பிரங்கிக் காரர்கள் வண்டிக்குப் பக்கத்திலிருந்துகொண்டு குறிபார்க்குங் கரு வியைக் கவனித்த வண்ணமாயிருந்து அதிவிரைவாய்க் குண்டு களைச்சுடலாம். மேலும் முற்காலத்தில் பிரங்கிக்காரர்கள் குண்டைச் சுட்டவுடன் வெகு தூரம் ஓடிப்போவார்கள். பிரங்கியும் வண்டி யும் பின்புறமாய் உதைந்து செல்லும்போது அருகிலிருப்பதுஅபாய கரமாகும். ஆகையால் ஓடிப்போனவர்கள் மறுபடியும் பிரங்கிக் கருகில் வந்து அவரவர்கள் தங்கள் வேலையைச்செய்ய ஆரம்பிக்க வேண்டும். இப்போது பிரங்கிக்காரர்கள் வண்டிக் கருகிலிருந்து கொண்டு பிரங்கியில் குண்டுகளை விரைவாய் நுழைத்துச்சுடலாம். தவிர, வண்டியின் முன் புறத்தில் ஒரு இரும்புப் பலகை அமைக்கப் பட்டிருக்கிறது. அதனால், வண்டிக்குப் பின்புறத்திலிருக்கிற பிரங் கிக்காரர்கள் சத்துருவின் துப்பாக்கிகளால் காயமடைவதில்லை. அந்த இரும்புப் பலகை, துப்பாக்கியிலிருந்து சுடப்படுகிற ரவை களைத் தாங்கிக்கொள்ளுகிறது. ஆகையால் பிரங்கிக்காரர்கள் பிரங் கிக்குப் பின்னால் நிர்ப்பயமாய் நின்றுகொண்டு தங்கள் வேலையை ஒழுங்காயும் விரைவாயுஞ் செய்யலாம். சத்துருவின் துப்பாக்கி

களுக்கு அஞ்சாமல் சத்துருவுக் கருகில் பீரங்கிகளைக் கொண்டுபோ கலாம். இவ்வாறு இரும்புப் பலகையை அமைக்கும் அற்ப உபா யத்தை முற்காலத்தவர் ஏன் செய்யவில்லை யென்று நினைக்கலாம். அதற்குக் காரணமென்னவென்றால், அக்காலத்தில் பீரங்கியின் முன்புறத்தில், அதாவது பீரங்கியின் வாயில், குண்டுகள் நுழைக்கப் பட்டன. இந்த காலத்தில் பீரங்கியின் பின்புறத்தை மூடியிருள்ள ஒரு கதவைத்திறந்து அங்கு குண்டுகள் நுழைக்கப்படுகின்றன. முற் காலத்தில் பீரங்கியின் வாயில் குண்டை நுழைப்பதற்காகப் பீரங்கி காரர்கள் வண்டியின் முன்புறத்துக்குச் செல்லவேண்டு மாகையால், வண்டியின்மேல் இரும்புப் பலகையை அமைப்பதில் யாதொரு பயனுமில்லை. இக்காலத்தில் பீரங்கியின் பின்புறத்திலுள்ள ஒரு கத வைத் திறந்து அதனுள்ளே குண்டு நுழைக்கப்படுகிறது; ஆகையால் பீரங்கிக்குமுன்புறத்தில் செய்யவேண்டியவேலைதுவுமில்லை. தவிர, முற்காலத்தில் பீரங்கியினுள்ளே நுழைக்கப்பட்ட குண்டு வெளியே பாய்வதற்காக வெடிமருந்தும்கெட்டிக்கவேண்டியிருந்தது. அதனால் கலாதாமஸமாயிற்று. இப்போது குண்டு பீரங்கியை விட்டு வெளியே பாய்வதற்கு, குண்டினுள்ளே வெடி மருந்து வைக்கப்பட்டிருக்கி றது. அதனால், பீரங்கியின் கதவைத் திறந்து, குண்டை நுழைத்து, கதவைமூடியவுடன் ஒருகொக்கியை அழுத்தினால், குண்டு தானாகவே பாய்ந்து செல்லும். துப்பாக்கியினுள்ளே ரவையைப் போட்டவுடன் ஒரு கொக்கியை அழுத்துவதால் ரவை வெளியே பாய்வது போல, இப்போது பீரங்கியிலும் உபாயம் செய்யப்பட் டிருக்கிறது. ஆகையால், இந்த காலத்தில் பீரங்கி அநேக வழிகளில் விருத்தி செய்யப்பட்டு, குறிதப்பாமலும் விரைவாயும் சுடக்கூடியதாயிருக் கிறது. பீரங்கியைப் போர்க்களத்துக்குக் கொண்டுவந்த பிறகு அதைச் சுடுவதற்குமட்டும் ஆறுபேர் தேவையா யிருக்கிறார்கள். பீரங்கியை இன்னவிதமாய் உபயோகிப்ப தென்பதைப்பற்றி ஒரு வன் உத்தரவு செய்வான், இரண்டுபேர், வெடிமருந்துவண்டியி லிருந்து குண்டுகளை எடுத்து அவைகளில் செய்யவேண்டிய உபாயங் களைச் செய்துவைப்பார்கள். மற்றொருவன் அந்த குண்டை கையில் வாங்கிக்கொண்டு பீரங்கியில்நுழைப்பான். மற்றொருவன் பீரங்கியின் பின்புறத்துக்கதவைத் திறக்கவும் மூடவும் செய்வான். மற்றொரு வன் பீரங்கியைக் குறிபார்த்துச்சரியான நிலைமையில்திருப்பிவைத்து

குண்டைச்சுடுவதற்காகவுள்ளகொக்கியை அழுத்துவான். இவ்வாறு பீரங்கிக்குப் பக்கத்திலும் வெடிமருந்துக்குப் பக்கத்திலும் மொத்தம் ஆறுபேர் போர்க்களத்தில் இருந்து வேலை செய்வார்கள்.

சத்துருவைத் தாக்கி சண்டை செய்தல்.

காலாள் துருப்புகள் தங்கள் துப்பாக்கியைக்கொண்டு சத்துருவின்மீது சுட்டுக்கொண்டிருக்கும்போது, பீரங்கிகளும் அவர்களுக்குப் பின் புறத்திலிருந்துகொண்டு சத்துருவின் மேல் குண்டுகளைப் பொழிந்து, துருப்புகளுக்கு உதவிசெய்துகொண் டிருக்கவேண்டும். ஒரு கிராமத்தில் பாளையம் போட்டுள்ள சத்துருக்களைத் தாக்குவதற்காக நமது காலாள் துருப்புகள் முன் செல்கின்றனவென்று வைத்துக் கொள்வோம். உடனே சத்துருவின் பீரங்கிகள், முன்சென்று கொண்டிருக்கிற நமது காலாள் துருப்புகளின்மேல் ஷார்ப்னல்குண்டுகளைப் பொழியும். நமது பீரங்கிகளில் சிலவை சத்துருவின் பீரங்கிகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை நோக்கி குண்டுகளைப்பொழிந்து கொண்டிருக்கும்; சத்துருவின் பீரங்கிகளைச் சரியானபடி சுடவிடாமல் தடுத்துக்கொண் டிருக்கும். நமது பீரங்கி எப்பொழுதும் சுட்டுக்கொண்ட வண்ணமாய் இருக்காது. திடீரென்று ஒரு நிமிஷம் 20 குண்டுகளைச்சுட்டுப் பிறகு நிறுத்திவிடும். காலாள் துருப்புகள் சிறிது தூரம் தாவிச்சென்று பிறகு தரையில் படுத்துக்கொள்வார்கள்; அவ்வாறு படுத்துக்கொண்டால், அவர்களை நோக்கிச் சத்துருக்களால் செவ்வையாய் குறிபார்க்க முடியாது. துருப்புகள் நின்றுகொண்டிருந்தால் தேக முழுவதிலும் குறிப்பார்த்துச் சுடுவது சத்துருவுக்கு எளிதாயிருக்கும். ஆகையால் நமது துருப்புகள் சிறிது தூரம் தாவிச்சென்று தரையில் படுத்துக்கொள்வார்கள். மறுபடியும் எழுந்து நின்று சிறிது தூரம் வினரவாய் ஓடிப் பிறகுபடுத்துக்கொள்வார்கள். அவ்வாறு நமது துருப்புகள் எழுந்து நிற்கும்போது சத்துருவின் பீரங்கிகள் வெகு சுறுசுறுப்பாய்ச் சுட ஆரம்பிக்கும். ஆகையால் நமது துருப்புகள் எழுந்து நிற்குஞ் சமயத்தில், நமது பீரங்கிகள் சத்துருவின் பீரங்கிகளை நோக்கி வினரவாய் 20 அல்லது 30 குண்டுகளைப்பொழிந்து சத்துருக்களின்கண்கள் அச்சமயம்இருண்டு போகும் படியாக ரவைகளை வாரி யிறைக்கும். நமது துருப்புகள் எழுந்து நின்று முன் செல்லும் சமயங்களில் சத்துருவின் பீரங்கிகள் வாயடைத்துப் போகும்படி நமது பீரங்கிகள் வேலை செய்து

கொண் டிருக்கும். அவ்வாறு நமது பிரங்கிகளில் சிலவை இடை விட்டுச் சுட்டுக்கொண் டிருக்கும். மற்ற பீரங்கிகள் சத்துருக் களின் துருப்புகளிருக்கிற இடத்தை நோக்கிச் சுட்டுக்கொண் டிருக்கும். சத்துருக்கள் தங்கள் துப்பாக்கிகளைச் செவ்வையாய் உபயோகிக்காதபடி செய்வது நமது பீரங்கிகளின் கடமையா கும். அல்லது சத்துருக்கள் நமது துருப்புகளின்மேல் விழுந்து தாக்குவதற்காகத்தங்கள் காலாள் துருப்புகளையும் குதிரையாட்களை யும்அனுப்பலாம். முன் சென்றுகொண்டிருக்கிற நமது துருப்புகளை எதிர்த்துத் தாக்குவதற்காக அவ்வாறு சத்துருக்கள் எழுந்து வந் தால், அவர்களைத் தடுப்பதும் நமது பீரங்கிகளின் கடமையாகும். நமது பீரங்கிகள் இந்த வேலைகளைச் செவ்வையாய்ச் செய்தால், நமது துருப்புகள் சத்துருவுக்கருகில் சுமார் 40 கெஜ தூரத்துக் கிப்பால் சென்று தரையில் படுத்தவண்ணமாயிருந்து, கடைசிமுறை தாவுவதற்காகக் காத்துக்கொண் டிருப்பார்கள். அந்த சமயத்தில் நம்மிடமுள்ள பீரங்கிகளெல்லாம் ஒன்று கூடி சத்துருவின் மேல் ரவைகளை உக்கிரமாய் வாரியடித்துக்கொண் டிருக்கும். இரண் டொரு நிமிஷத்துக்குப் பிறகு நமது பீரங்கிகளெல்லாம் திடீரென்று சுடுவதை நிறுத்திவிடும். உடனே நமது துருப்புகள் ஒரே பாய்ச்ச லாகச்சென்று தங்கள் துப்பாக்கி முனையிலுள்ள ஈட்டியை உப யோகித்து சத்துருக்களை அப்புறப்படுத்தி அந்த இடத்தை வசப் படுத்திக் கொள்வார்கள். நமது துருப்புகள் சத்துருக்களோடு கைகலக்கும்போது, நமது பீரங்கிகள் சுடுவதை நிறுத்திவிடவேண் டும். இல்லாவிடில், சத்துருவின்மேல் விழுகிற குண்டுகள் நமது துருப்புகளையும் சேதப்படுத்திவிடும். நமது துருப்புகள் புதிய இடத்தை வசப்படுத்திக்கொண்டவுடன் நமது பீரங்கிகள் அவ்வி டத்துக்கு அதிவிரைவாய்க் கொண்டு போகப்பட்டு பக்தோபஸ்தான இடத்தில் மறைத்து வைக்கப்படும். ஏனெனில் சத்துருக்கள் மறு முறை அந்த இடத்தை வசப்படுத்திக்கொள்ள நினைக்கலாம், அவ் வாறு எண்ணி சத்துருக்கள் அருகே வந்தால், நமது பீரங்கிகள் புதிய இடத்திலிருந்துகொண்டு நல்ல வேலை செய்யும்.

சத்துருவை முன்னேற விடாமல் தடுத்து சண்டைசெய்தல்.


சத்துருக்கள் இன்னுஞ் சில பீரங்கிகளைத் தருவித்து, உதவித் துருப்புகளையும் பெற்று, நாம் புதிதாய் வசப்படுத்திக்கொண்டிருக்

கிற இடத்தைப் பிடித்துக்கொள்ள மறுபடியும் முயற்சிசெய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சத்துருக்களின் பீரங்கிகள் அதிகமாயிருப்பதால், நமது பீரங்கிகள் சரியானபடி சுடமுடியா. அதனால், நமது பீரங்கிகள் வேறிடத்துக்கு விரைவாய்க் கொண்டுபோகப்பட்டு ஒரு சிறுகுன்றின் பின் புறத்தில் மறைவாய் வைக்கப்பட்டிருக்கும். நமது பீரங்கிக்காரர்கள் குன்றுக்குப் பின் புறத்திலிருப்பதால் சத்துருக்களைப் பார்க்கமுடியாது. ஆயினும் நமது பீரங்கிப் படைத்தலைவர் குன்றின்மேல் ஏறிச்சென்று அங்கிருந்து சத்துருவின் நடமாட்டத்தைப்பார்த்துக்கொண்டிருப்பார். அவர் தமது சிப்பந்திகள்மூலமாய் பீரங்கிக்காரர்களுக்கு சமிக்ஞை செய்வார். குன்றின்மேல் ஏறியிறங்குவது கஷ்டமாயிருந்தால், சிப்பந்திகளை அழைத்துக்கொண்டு போகாமல், தந்திக்கம்பியைப் போடச் சொல்வார். தந்தி வேலைக்காரர்கள், தந்திக்கம்பி சுருட்டிவைக்கப்பட்ட இரண்டொரு சுருளை எடுத்துக்கொண்டு, கம்பியைப் பிரித்துவிட்டுக் கொண்டே குன்றின் மேல் ஏறிச்செல்வார்கள். பீரங்கிப் படைத்தலைவர் ஒரு மரத்துக்கு நேராக குறி பார்க்கும் கருவியை வைத்துக் குறி பார்ப்பார். அந்த மரம் பீரங்கிக்காரர்களின் கண்களுக்குத் தெரியும் படியா யிருக்கும். அவர்களின் கண்களுக்குத் தெரியும்படியான ஓர் வஸ்துவைத் தெரிந்தெடுத்து அவ்விடத்தில் படைத் தலைவர் குறி பார்த்துக்கொண்டிருப்பார். அவர் அந்த மரமிருக்கிற இடத்திலிருந்து எவ்வளவு தூரம் தமது குறிபார்க்கும் கருவியை விலக்கி வைக்கிறாரோ அவ்வளவு தூரம் பீரங்கிக்காரர்களும் தங்கள் கருவியை அந்தமரமிருக்கிற இடத்திலிருந்து விலக்கி வைத்து பீரங்கியைச் சுடுவார்கள். அவர் தமது பீரங்கிக்காரர்களுக்கு சகல விவரங்களையும் தந்தி மூலமாய் அறிவிப்பார். 3-ம் பாகத்தில் 334-ம் பக்கத்திலுள்ள முதல் படத்தில் பீரங்கிக்காரர்கள் தங்கள் காதுகளில் தந்திக்கருவியை வைத்துக்கொண்டு சமாசாரம் அறிந்துகொள்வதைக் காணலாம். அநேகமாய் டெலிபோன் என்ற பேசுந் தந்திகளே பீரங்கிப்படையில் உபயோகிக்கப் படுகின்றன. இதற்குள்ளாக சத்துருவின் துருப்புகள் முன் செல்ல ஆரம்பித்திருப்பார்கள். நமது பீரங்கி மொன்று சுட ஆரம்பிக்கும். ஷார்ப்பனல்குண்டை தரையில் மோதி மண்ணைவாரி யிறைக்கும்படியாய்ச் சுடவேண்டுமென்று நமது படைத்தலைவர் உத்தரவுசெய்வார். ஷார்ப்பனல்குண்டு வெகு


நேரஞ் சென்று வெடிக்கும்படியாக அதன் முன்மூன் யிலுள்ள ஒரு கருவி திருத்தி வைக்கப்படும். அந்த குண்டு ஆகாயமார்க்க மாய் குன்றைத் தாண்டி தரையில் மோதுகிற சமயத்தில் வெடிக்கும். அவ்விடத்தில் புழுதி கிளம்பும். அந்த புழுதியைக் கொண்டு, சத்துரு இருக்கிற இடத்திலிருந்து இவ்வளவுதூரத்தில் குண்டு விழுந்திருக்கிறதென்று அறிந்து கொள்ள முடியும். அந்த குண்டு சத்துருக்களுக்கு முன் புறத்தில் வலது பக்கமாய் ஒதுங்கி விழுந்திருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அந்த குண்டு 3000 கெஜ தூரம் சென்று வெடித்திருக்கிற தென்று படைத்தலைவர் உத்தேசமாய்க் கண்க்கிடுவார். சற்று இடது பக்கமாய் 3400 கெஜதூரத்தில் விழும்படிச் சுடவேண்டுமென்று உத்தரவு செய்வார். இந்தத் தடவை சுடப்பட்ட குண்டு சத்துருவுக்கு நேராகச் சென்ற போதிலும் அவர்களுக்கு பின்புறத்தில் விழுந்திருக்கும். அதேத திசையில் 3200 கெஜ தூரத்தில் சுடும்படி உத்தரவு செய்வார். இந்தத் தடவையும் சத்துருக்களுக்குப் பின்புறத்தில் குண்டு விழுந்திருக்கும். ஆயினும், 3000 கெஜத்திலிருந்து 3200 கெஜத்துக்குள்ளாக சத்துருக்களின் துருப்புகள் சென்றுகொண்டிருக்கின்றன வென்று நிச்சயப் பட்டுவிடுகிறது. அதன்பிறகு அந்த 200 கெஜ விஸ்தீரணத்தில் மாற்றி மாற்றி விரைவாய்ச் சுடும்படி உத்தரவு செய்து சரியான குறி இன்னதென்று சீக்கிரத்தில் அறிந்து கொள்ளலாம். பிறகு ஷார்ப்னல் குண்டு 150 கெஜ உயரத்தில் வெடித்து சத்துருக்களின்மேல் ரவைகளை வீசி யெறியும்படி சுடப்படவேண்டுமென்று பீரங்கிக்காரர்கள் தந்தி மூலமாய் அறிந்துகொள்வார்கள். அந்த பீரங்கிக்காரர்கள் சத்துருக்களைப் பார்க்காமலிருந்தபோதிலும், குறிப்பாய்ச் சுட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்கள், பீரங்கி வண்டிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிற வெடி மருந்து வண்டியிலிருந்து குண்டை யெடுப்பதும், அது நேரஞ் சென்றபின் வெடிப்பதற்குத் தக்கவாறு அதிலுள்ள உபாயத்தைத் திருத்துவதும், படைத்தலைவர் அறிவிக்கிற விவரப்படி குறி பார்த்து வைப்பதும், பீரங்கியின் கதவைத் திறந்து குண்டை நுழைப்பதும், கதவை மூடி அதிலுள்ள கொக்கியை அழுத்தி குண்டைச் சுடுவதுமாகிய இவ்வேலைகளைத்தான் ஓயாமல் செய்துகொண்டிருப்பார்கள்.

சத்துருவின் பீரங்கிகள் குன்றை நோக்கிச் சுட ஆரம்பிக்கும்.


சத்துருக்கள் நமது பீரங்கிகளின் இருப்பிடத்தை செவ்வையாய் அறிந்துகொள்ள முடியாதபடியால், ஆகாய விமானத்தை அனுப்புவார்கள். ஆகாய விமானத்தி லுள்ளவர் நமது பீரங்கியின் இருப்பிடத்தை அறிந்துகொண்டு விமானத்தில் அமைக்கப்பட்ட சுரம்பியில்லாத் தந்தி மூலமாய் விவரங்களை சத்துருக்களுக்குத் தெரிவிப்பார். நமது பீரங்கிகள் சத்துருவின் துருப்புகள்மீது ரவைகளை வீசி யெறிந்து அவர்களை அருகில் வரவொட்டாமல் தடுத்துக்கொண் டிருக்கும். ஆனால் சத்துருவின் பீரங்கிகள் நம்முடைய துருப்புகளின்மீது சுடாமல் நம்முடைய பீரங்கிகளை அடக்கவேண்டுமென்று முயற்சி செய்யும் சத்துருவின் குண்டு குன்றை நோக்கிச் சுடப்பட்டால், குன்றின்மேல் படுமே மொழிய அதற்குப் பின்பக்கத்தி லுள்ள பீரங்கிகளின் மேல்விழாது. ஏனெனில், சாதாரண பீரங்கிகள் நேராகச் சுடக் கூடியவை. ஆகையால், சத்துருக்கள் ஹவிட்ஸர் என்ற பீரங்கியை உபயோகித்து குண்டை ஆகாயத்தில் செங்குத்தாய்ச் சுடுவார்கள்; அந்த குண்டு உயரச்சென்று ஆகாய மார்க்கமாய் வளைந்து வந்து பிறகு நேர்கீழாக விழுந்து பூமியில் பாய்ந்து வெடிக்கும். அம்மாதிரியாக சத்துருவின் ஹவிட்ஸர் பீரங்கிகள் சிறிது நேரம் சுட்டுக்கொண்டிருந்தால் நமது பீரங்கிகளுக்கு அதிக சேதமுண்டாயிருக்கும். சத்துருக்கள் தங்கள் ஆகாயவிமானத்தின் உதவியைக்கொண்டு பீரங்கிகளைச் செவ்வையாய் குறிபார்த்து சுடுவார்கள். ஆனால் அதற்குள்ளாக, நமது பீரங்கிகள் கடுமையாய் சுட்டுக்கொண்டிருந்ததால், சத்துருவின் துருப்புகள் அதிக மாய்ச் சேதமடைந்து பின்செல்லும்படி நேரிடும். ஆகையால் சத்துருக்கள் தங்கள் பீரங்கிச் சண்டையை நிறுத்திக் கொள்ளும்படி நேரிடும்.




குன்றுக்குப் பக்கத்தில் பீரங்கி வண்டி யிருப்பதைக் காணலாம். அந்த பீரங்கியின்மேல் சத்துருக்கள் குறி பார்த்துச் சுட முயற்சி செய்கிறார்கள். அந்த பீரங்கிக்குப் பின்புறத்திலும் முன் புறத்திலும் புழுதி கிளம்பும்படியாக சத்துருக்கள் குண்டுகளை எறிகிறார்கள். புழுதி கிளம்புகிற இவ்விரண்டு இடங்களுக்கும் இடையே குறி பார்த்துச் சுடப்படவேண்டிய வஸ்து இருக்கிறதென்று சத்துருக்கள் கணக்காய் நிச்சயஞ் செய்துகொள்கிறார்கள்.




ஹிரிட்டிஷ் படையிலுள்ள ஹவிட்ஸர் பீரங்கி.



பீரங்கிப்படை செய்கிற சண்டை.



இது இரும்புக்கவசம் போட்ட மோட்டார் வண்டி.
தவாரங்களில் மெஷின் பீரங்கிகள் பீட்டி வைக்கப்பட் டிருப்பதைக்காணலாம்



ஆகாயமானங்களைப் பார்த்துச்சுடுவதற்காக, ஜெர்மன் படையில்
ஓர்வகை பீரங்கி மோட்டார் வண்டியின் மேல் ஏற்றப்பட் டிருக்கிறது.

கடைசியாகச் சொல்லிய விவரங்களிலிருந்து அறிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், பிரங்கிகள் மட்டும் ஒன்றோடொன்று சண்டை செய்வதில் பயனில்லை. பிரங்கியை உபயோகிப்பதின் நோக்கம், துருப்புகள் எளிதாய் முன் செல்வதற்கு உதவிசெய்யவேண்டுமென்பதே. துருப்புகள்தான் முடிவில் சத்துருவின் இருப்பிடத்தை வசப்படுத்திக்கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்கள். ஆகையால் துருப்புகள் சத்துருக்களைத் தாக்கி புகிய இடத்தை வசப்படுத்திக்கொள்ள முன் செல்லும்போது, அந்த வேலை அதிக சிரமமும் சேதமுமில்லாமல் முடியும்படி பிரங்கிகள் உதவிசெய்யவேண்டும்.

பிரங்கிச் சண்டை.

ஆனால் முற்காலத்தில், ருஷிய—ஜப்பானிய யுத்தத்திலும், இரண்டு கக்ஷிகளின் பிரங்கிகள் ஒன்றோடொன்று சண்டைசெய்துவந்தன. ஆனால் இப்போது அவ்வித பிரங்கிச் சண்டை நடப்பதற்கு ஏற்ற சமயங்கள் அபூர்வமாய் நேரிடுகின்றது. இரண்டு கக்ஷித்துருப்புகளும் மிகவும் வலுவான அரண்களில் தங்கியிருந்து, பிரங்கிகளும் வலுவான இடங்களில் மறைத்து வைக்கப்பட்டு, சண்டையில் தீர்மானமாய் யாதொருமுடிவும் ஏற்படுவதுசந்தேகமாயிருந்தால், பிரங்கிகள்மட்டும் ஒன்றோடொன்று சண்டை செய்துகொண்டிருக்கும். போர்க்களம் மணல் பூமியாகவும் சேறாகவும் இருந்தால் பிரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டு பூமியில்புதைந்து சரியானபடி வெடிக்காது. குண்டு பூமியில் புதைந்துவிட்டால் நாலா பக்கங்களிலும் சிதறியடிக்காது; குண்டு பூமிக்குச்சிறிது உயரத்தில் வெடித்தாலும் தரையில் விழுகிறதுண்டுகளெல்லாம் புதைந்துவிடும்; காய்ந்த கடினபூமியாயிருந்தால், தரையில் விழுகிற துண்டுகள் மறுபடியும் மேலே பெரும்பியடிக்கும். ஆகையால், பூமிசேறுபிருந்தால், அங்குள்ள அரண்களை உடைக்கச் சாத்தியப்படாது. அதனால் அரண்களிலுள்ள துருப்புகளைச் சேதப்படுத்த முடிவதில்லை. ஆகையால், பிரங்கிகள் தங்கள் துருப்புகளுக்கு உதவி செய்ய முடியாமல் சத்துருவின் பிரங்கிகளோடு மட்டும் சண்டை செய்யும்.

பிரங்கிகளைச் சுடுவதில் பிரஞ்சு முறைக்கும்
ஜெர்மன் முறைக்குமுள்ள வித்தியாசம்.

பிரங்கிகள் போர்க்களத்தில் எவ்வாறு உபயோகிக்கப் படுகின்றன வென்றி மேலே சொல்லி வந்தபோது, பிரங்கிகள் திடீரென்று

இரண்டொரு நிமிஷம் விரைவாய்ச் சுட்டுப் பிறகு சுடுவதை நிறுத்திக்கொள்ளுமென்று சொன்னேனும். பிரஞ்சு சேணியிலும் பிரிட்டிஷ் சேணியிலும், பீரங்கிகள் அவ்வாறு நிறுத்தி நிறுத்திச் சுடப்படுகின்றன. பீரங்கிகளை வெகு தூரத்தில் வைத்துச் சுடுவதில்லை. அவைகள் 2½ மைல் தூரத்திலிருந்து கொண்டே சுடப்படுகின்றன. 2½ மைல்தூரம் வரையில் சத்துருக்கள் வராமலிருப்பதற்காக பிரஞ்சு பீரங்கிகள் திடீரென்று புசலடிப்பதுபோல் குண்டுகளை நாலாபக்கங்களில் எறிந்து நிறுத்திவிடுகின்றன. ஆனல் ஜெர்மன்சேனியில், வேறு முறை அனுசரிக்கப்படுகிறது. ஜெர்மன் பீரங்கிகள் ஆரம்பத்தில் மெதுவாகச்சுட்டு செவ்வையாயும் நிதானமாயும் குறிபார்த்துக்கொண்டு பிறகு வர வரக்கடுமையாயும் அதிகமாயும் குண்டுகளைப்பொழிகின்றன. பிரஞ்சுக்காரர்கள் அவ்வாறு நிதானமாய்க் குறிபார்த்து வர வரக்குண்டுகளின் உக்கிரத்தை அதிகரிக்கும் முறையை அனுசரிப்பதில்லை; ஓரிடத்தில் சத்துருக்கள் நடமாடுகிறார்களென்று தெரிந்தவுடன், திடீரென்று ஏராளமான குண்டுகளை எறிந்து அவ்விட முழுமையும் பெருக்கித் தள்ளி பிறகு நிறுத்தி விடுகிறார்கள்.



பிரஞ்சுப் பீரங்கிகள் ஷார்ப்னல் குண்டுகளைத் திடீரென்று புசற்காற்று வீசுவதுபோல எறிந்துபிறகு சுடுவதை நிறுத்திவிடுகின்றன. 2½ மைல் தூரத்துக் குள்ளாக சத்துருக்கள் நடமாடுவதாகத்தெரிந்தவுடன், அங்குபிரஞ்சுப் பீரங்கிகள் விஸ்தாரமாய்க் குண்டுகளை எறிந்து சத்துருக்களைப் பெருக்கித் தள்ளுகின்றன.

4-அடி நீளமுள்ள குண்டு அதிதூரத்தில் எவ்வாறு செல்கிறது.

பீரங்கிகள் அதிகமாய் ஷார்ப்னல் குண்டுகளையே உபயோகிக்கின்றன. ஆனல் அரண்களையும் இரும்பு சாமான்களையும் பிளப்பதற்கு சாதாரண குண்டாவது அல்லது பெரிய குண்டாவது உபயோகிக்கப்படுவதுமுண்டு. 'ஹவிட்ஸர்' பீரங்கிகுண்டுகளை உயரத்தில் சுட்டு கீழ் நோக்கி விழும்படிச் செய்கிறது. ஹவிட்ஸர் பீரங்கியில் ஷார்ப்னல் குண்டும் மற்ற விதமான குண்டுகளும் உபயோகிக்கப்படுகின்

றன. குண்டு நீளமாகவும் முனையில் கூர்மையாகவும் செய்யப்படுகிறது. அது சுமார் 2 அடி நீள மிருந்தால் ஆகாயத்தில் பாயும்போது நேரான நிலைமையில் எவ்வாறு சென்றுகொண்டிருக்கச் சாத்தியப்படுகிறது? தலைகீழாய்ப் புரண்டாவது கோணலாய்த் திரும்பியாவது பாயக்கூடாது. இதற்கு ஒரு உபாயஞ்செய்யப்பட்டிருக்கிறது. குண்டின் அடிப்பாகத்தில் திருகு ஆணிபைப்போல பள்ளங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால், பீரங்கி அதிலிருக்கிற குண்டை வெளியே தள்ளும்போது குண்டு வேகமாகத் திருகி அனுப்புகிறது. அதனால் அந்த குண்டு பம்பரம்போல் சுழன்றுகொண்டு ஆகாயமார்க்கமாய்ச் செல்கிறது. அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு செல்வதால், தலைகீழாய்ப் புரளாமல் ஒரே நிலைமையில் செல்கிறது. ஒரு வஸ்து வேகமாய்ச் சுற்றிக்கொண்டே செல்லுமானால், அது ஒரே நிலைமையில் சென்றுகொண்டிருக்கும்; ஒரு சக்கரத்தைக் கையிலெடுத்து வேகமாய்ச் சுற்றி பெறிந்தால் அது கையிலிருந்து புறப்படுகிற நிலைமையிலேயே சென்றுகொண்டிருக்கும். ஒரு ஓட்டாஞ்சில்லை சுழற்றி குளத்தில் எறிந்தால் அது பல இடங்களில் தட்டியபோதிலும் ஒரே நிலைமையில் தாவிச் செல்கிறது. அவ்வாறு சுமார் 4 அடி நீளமுள்ள பளுவான குண்டுக்கூட எள்ளளவும் கோணுமல் செல்கிறது. சாதாரண பீரங்கி பூமி மட்டத்துக்குச் சமமாக நேராய்ச் சுடுகின்றது. ஆகையால் சாதாரண பீரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டு பூமி, மட்டத்துக்குச் சமமாக நேரான நிலைமையில் பாய்ந்து, சுழன்ற வண்ணமாய்ச்செல்கிறது; பப்பரம் பூமியை நோக்கிச் சுற்றுகிறது; நேராகச் சுடப்படுகிற குண்டு நேரான நிலைமையில் சுற்றிக்கொண்டிருக்கிறது. அதனால் அந்தகுண்டு விலகிக்கும்போது, அதிலுள்ள ரவைகள் நேராகப் பாய்கின்றன. ஒருவன் மற்றொருவனுடைய முகத்தைப்பார்த்து மணலை யெறிந்தால், மணல் எவ்வாறு நேராக வீசுகிறதோ அவ்வாறு அந்த குண்டிலுள்ள ரவைகள் நேராக வீசுகின்றன. ஆனால் ஹவிட்ஸர் பீரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டு உயரச்சென்று பிறகு கீழ்நோக்கி நேராகவிழுகிறது. அதனால், அந்த குண்டிலுள்ள ரவைகள் மழைபோல கீழ்நோக்கி கொட்டுகின்றன. ஆகையால் ஒரேவிதமான குண்டு பீரங்கியின் வித்தியாசத்தால், இரண்டு விதமாய்ப் பாய்கின்றது. அரண்களுக்குப் பின்னுள்ள துருப்புகளைச் சேதப்படுத்த வேண்டுமானால், ஷார்ப்னல் குண்டை

ஹவிட்ஸர் பீரங்கியிலிருந்து சுடவேண்டும். அப்போது அந்த குண்டினுள்ள ரவைகள் மழை போல அரண்களின் மேல் விழுமாகையால், அங்குள்ள துருப்புகளின் மேலும் படக்கூடும். சாதாரண பீரங்கியிலிருந்து சுட்டால் அந்த ரவைகள் அரண்களின் மேல் மோதுமே யொழிய அவைகளுக்குப் பின்னுள்ள துருப்புகளைப் பாதிக்காது. பெரிய குண்டுகளை உபயோகிக்கும் போதும், அந்தந்த வேலைகளுக்குத் தக்கபடி அவைகள் வெவ்வேறு பீரங்கிகளிலிருந்து சுடப்படுகின்றன. ஆனால் பெரிய குண்டு அவ்வளவுவிஸ்தாரமாய்ச் சிதறியடிப்பதில்லை யாதலால், அதைச் சரியாய்க் குறிபார்த்துச் சுடாவிட்டால், அது குறித்த வஸ்துவின்மேல் படாமல் தவறிப்போகும். ஷார்ப்னல் குண்டு சிறிது குறிதப்பிவிழுந்தாலும், காலாபக்கங்களிலும் விசாலமாய்ப் பரவுகிறபடியால் சுற்றுப்பக்கங்களில் சேதத்தையுண்டு பண்ணுமலிராது. மேலும் பெரிய குண்டு மிகவும் பளுவாயிருப்பதால், ஒருவண்டியில்ஏற்றிக்கொண்டு போகக் கூடிய குண்டுகள் குறைவாகவே யிருக்கும். ஷார்ப்னல் குண்டு இலேசாயிருப்பதால், அதை ஒருவண்டியில் அதிகமாய் ஏற்றலாம். ஆகையால் பெரிய குண்டுகளை வீண்செய்யாமல் மிதமாய் உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

காலாட்படை எவ்வாறு சண்டை செய்கிறது?

குதிரைப்படை சமபூமியில் விரைவாய்ச் சென்று சண்டை செய்யக்கூடியது; பீரங்கிப்படை வெகுதூரத்திலிருந்து கொண்டு போர் விளைக்கக்கூடியது; ஆனால் காலாட்படை மூட்டு பூமியில் வெகு தூரத்திலும் அருகிலு மிருந்துகொண்டு சண்டையை நடத்தக் கூடியதாயிருக்கிறது. காலாட்படை துப்பாக்கிகளைக் கொண்டு வெகுதூரத்திலிருந்து சண்டைசெய்வதோடு, அருகில் சென்றும் சத்துருக்களோடு கைகலந்து சண்டைசெய்யக் கூடியது. ஆகையால் காலாட்படைகள் சேனையில் எப்போதும் அதிகமாயிருந்து வருகின்றன. யுத்தகளத்திலுள்ள ஒருசேனையில் 1000காலாட் துருப்புகளிருந்தால், சுமார்3பீரங்கிகளும், சுமார்100 குதிரை யாட்களு மிருப்பார்களென்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

காலாட்படைகள் தங்கள் இருப்பிடத்தை இழந்து விடாமல் காப்பதோடு, சத்துருவின் இருப்பிடத்தை வசப்படுத்திக்கொள்ளத் தாக்கவும்வேண்டும். எல்லாப்படைகளும் மறைவிடங்களைத்தேடி அங்

கிருந்து சண்டை செய்கின்றன. ஆயினும் முக்கியமாய் காலாட்படை சத்துருக்களால் சேதமாகாமல் சண்டை செய்வதற்கு மறைவிடங் களைத்தேடிக்கொள்வது அவசியமாகும். அதற்காக அரண்கள் கட் டப்படுகின்றன. துருப்புகள் முக்கியமான ஸ்தலத்தை இழந்துவிடா மல் காப்பதற்கு அரண்கள் தேவையா யிருக்கின்றன. ஒருஸ்தலத் தைக் காப்பதற்கு அவசியமாயுள்ள துருப்புகளை கூடுமான வரை யில் குறைக்க வேண்டும். துருப்புகள், தங்களைவிட தொகையில் பல மடங்கு அதிகமாயுள்ள சத்துருக்களைமுன்னேற விடாமல் எதிர்த்து நிற்கவேண்டுமானால் அரண்களைக் கட்டுவது அவசியமாகும். ஆகை யால் அரண்களைக் கட்டுவதால் உண்டாகக்கூடிய பலன் என்னவென் றால், அரண்களையுடைய ஸ்தலத்தை, தொகையில் மிகவும் குறைவு பட்ட படையால் காக்கலாம். அரண்களில்லாத ஸ்தலத்தைக்காப்ப தற்கு அதிக துருப்புகள் தேவையாயிருக்கும். அரண்களிலுள்ள துருப்புகள் தங்களைவிடமூன்று பங்கு பலங்கொண்ட சத்துருக்களை எதிர்த்து நிற்கமுடியும்.

அரண்கள் எவ்வாறு கட்டப்படுகின்றன.

அரண்களைக் கட்டுவதென்றால், சத்துருக்களால் தாண்டிச் செல்லமுடியாத சுவர்களையும் கட்டடங்களையும் அமைப்பதென்று அர்த்தமல்ல. அம்மாதிரி கட்டடங்களாலும் சுவர்களாலும் அகழ் களாலும் சத்துருக்களை தெருங்கவிடாமல் தடுக்கவேண்டுமென்று செய்யப்படுகிற உபாயங்கள் கோட்டைகளில் அனுசரிக்கப்படு கின்றனவேயொழிய போர்க்களங்களில்செய்யப்படுவதில்லை. போர்க் களத்தில் சத்துருக்கள் எளிதாய்ச் சூழ்ந்துகொள்ள முடியாத தோர் கல்ல இடத்தைத் தெரிந்தெடுத்து அங்கு ஆழமான குழி யைத்தோண்டி அதனுள்ளே துருப்புகள் நிலைபெற்றிருப்பார்கள். அந்த குழிகளுக்கு அகழ்களென்று பெயர்; பலவித பந்தோபஸ்து செய்யப்பட்ட அகழ்களுக்கு அரண்களென்று பெயர். சத்துருக்கள் தாராளமாய் முன் செலவதற்கு கட்டடங்களால் ஏற்படக்கூடிய தடைகள் போர்க்களத்தில் எதுவுமில்லை. ஆனால் அரண்களி லுள்ள ஆயுதங்களிலிருந்து கிளம்புகிற தெருப்புதான் சத் துருக்களைநெருங்கவிடாமல் தடைசெய்யும். ஆகையால் அரண்களைக் கட்டும் போது கவனிக்கப்படுகிறமுக்கியவிஷயங்களைச் சொல்வோம். அரண்களிலுள்ள துருப்புகள்சத்துருவின் ஆயுதங்களால் சேதமாகா மலிருக்கும்படி அந்த அரண்கள் கட்டப்படவேண்டும். அந்த அரண்

களும் அவைகளிலுள்ள துருப்புகளும் சத்துருவின் கண்களுக்குப் புலப்படாமல் கூடிய வரையில் மறைவாக இருக்கவேண்டும். ஒரு ஆள் ஆழமும் சுமார் 200 கெஜ நீளமுங்கொண்டஒரு குழியைத் தரையில் தோண்டி அதில் சுமார் 400 துருப்புகள் கிலேபெற்றிருக் கிறார்களென்று வைத்துக்கொள்வோம். அந்த அகழ் தரையோடு தரையாயிருக்கும். அவ்வாறு அது பார்வைக்குத்தரையோடு தரையா யிருப்பதாகத் தோற்றுவிட்டால், அவ்வாறிருக்கும்படிச் செய்யப் படும். அந்த குழி மிகவும் குறுகலாயிருக்கும்; இரண்டு ஆள் போக வரத்தான் அதில்இடமிருக்கும். சத்துருக்கள் வெகுதூரத்திலிருந்து பார்க்கும்போது அந்த குழி யிருக்கு மிடமும் அதிலுள்ள துருப்பு களும் தெரியவரா. மாஞ்செடிகள் அடர்ந்த இடத்தில் குறுக லான அகழைத் தோண்டினால், தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு மாஞ்செடிகள் தெரியுமே யொழிய அவைகளுக்கிடையில் பள்ள மிருப்பதாகத் தெரியாது. மேலும் சத்துருக்கள் தங்கள் துப்பாக்கி களைச் சுட்டால், பூமியில் புதைத்து நிற்கிற துருப்புகளின்மேல் ரவைகள் எவ்வாறு தாக்கும்? துருப்புகளின் தலே, தரைமட்டத் தோடிருக்குமாதலால் சத்துருவின் துப்பாக்கிகள்சேதத்தை உண்டு பண்ணு. மேலும், அரண்களிலுள்ள துருப்புகள் சிரமமில்லாமல் அரண்களை விட்டு வீலகிமுன்செல்லும்படியாக, அந்த அகழ்கள் வெட்டப் படவேண்டும். அகழ்களிலிருந்துவெளியே ஏறிவருவதற்கு சௌகரிய மாயிருக்கவேண்டு மென்று அர்த்தமல்ல. அகழ்களி லுள்ளவர்கள் வெளியே வருவதற்கு எளிதாய் எழும்பித்தாண்ட லாம். துருப்புகள் அவ்வளவு தேகதிடன் கூட இல்லாதவர்களல்ல. அல்லது அகழின் முன்புறத்தில் படிகளைப்போல் வெட்டிவிடலாம். அகழ்களை ஒன்றின் பின் ஒன்றாய் வெட்டிவிட்டால், பின்புறத்தி லுள்ள அகழில் இருப்பவர்கள் முன்புறமாய்ச் செல்லும்போது, வரி சையாயுள்ள அகழ்களில் விழுந்து விடக்கூடாது. முன்புறத்தி லுள்ள அகழ்களை ஜாக்கிரதையாய் கவனித்துத் தாண்டிச் செல்ல தென்றால் மிகவும் தாமஸமாகும். ஆகையால் கடைசியிலுள்ள அகழி லிருப்பவர்கள் தங்களுக்கு முன்னுல் இரண்டொரு அகழ்களுக்கு மேல் தாண்டிச் செல்லும்படியா யிருக்கக் கூடாது.

காலாள்துருப்புகள் சத்துருவைத்தாக்குவதற்காகமுன்சென்று கொண்டிருக்கையில், சத்துருவின் துப்பாக்கிகள் உக்கிரமான மொருப்


பைப் பொழிந்தால், தரையில் படுத்துக்கொண்டு தங்களிடமுள்ள சிறிய மண்வெட்டியை எடுத்துப் பள்ளந் தோண்டுவார்கள். அரை மணிநேரத்தில், படுத்த நிலைமையில் தங்கள் தலைகளைக் காப்பதற்குப் போதுமானதாய் சிறுமணல் மூட்டு குவிப்பார்கள். அந்தமணல் மூட்டின்மேல் துப்பாக்கியை வைத்துச் சுடுவார்கள். இன்னும் அரைமணி நேரம் மண்வெட்டியால் தோண்டினால், உட்கார்ந்த வண்ணமாய் துப்பாக்கியைச் சுடுவதற்கு மணல் மேடு செய்வார்கள். அந்தமணல் மேட்டுக்குப் பின்னல் உட்கார்ந்திருந்தால், சத்துருவின் துப்பாக்கியிலிருந்து சுடப்படுகிற ரவைகள் அந்தமணல் மேட்டில் புதைந்து விடுமே யொழிய அதன் பின்னுள்ள ஆளின்மேல் படா.



காலாள் தருப்பு போர்க்களத்தில் படுத்த வண்ணமா யிருந்து துப்பாக்கியை உபயோகிப்பதற்கு ஒரு பள்ளந் தோண்டுவது வழக்கம். பள்ளத்திலிருந்து எடுக்கப்படும் மண் முன்புறத்தில் குவிக்கப்படுகிறது. அவன் தன் மண்வெட்டியைக் கொண்டு அம்மாதிரியான பள்ளத்தை 30 நிமிஷத்தில் வெட்டிவிடலாம்.




காலாள் தருப்பு ஒருமணி நேரம் பள்ளந் தோண்டினால், உட்காரும் நிலைமையில் துப்பாக்கியைச் சுடலாம்.



காலாள் தருப்பு இரண்டு மணி நேரத்துக்குள் நின்ற நிலைமையில் துப்பாக்கியைச் சுடுவதற்குத் தேவையான பள்ளத்தைத் தோண்டிவிடலாம்.

அவ்வாறுதுருப்புகள்மிகவும் அவசரமாய் அகழ்தோண்டுகிறார் கள். துருப்புகள் போர்க்களத்துக்குச்சென்ற பின் கண்டைபை ஆரம் பிப்பதற்குமுன்னுல், 10 அல்லது 12மணிநேரம் சாவகாசமிருந்தால், சற்று ஆழமானபள்ளக் தோண்டுவார்கள். அந்தஅகழ் ஒரு ஆள் உயரமில்லா விட்டால், கோணிப்பைகளை எடுத்து அவைகளில் மண்ணைநிரப்பி அந்த மூட்டைகளை ஒன்றின்மேலொன்றும் அடுக்கி சுவரெடுப்பார்கள். அவசரமாய்த் தோண்டப்பட்ட பள்ளமும் மணல் மூட்டைச் சுவரும் சேர்ந்து ஒரு ஆள் உயரமிருக்கும் படிச் செய் யப்படும். கற்களால் சுவர்கட்டுவதைவிட மணல் மூட்டைகளால் சுவரெடுப்பது விசேஷமானது. பீரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டு கற்சுவரை உடைத்துவிடும். ஆனுல் மணல்மூட்டையின்மேல் அந்தகுண்டு விழுந்தால் அது மணலில் புதைந்து விடுமேபொழிய மணற்குவியலைப்பிளக்கமுடியாது. அகழ்வெட்டுவதற்குஇரண்டொரு தினம் சவகாசமிருந்தால், ஒரு ஆள் ஆழத்துக்கு பள்ளந்தோண்டி, அதற்கு முன்புறத்தில் இரும்புக் கம்பிபால் வலைகட்டுவார்கள். அந்த இரும்புக் கம்பியில் இடையிடையே இரும்புமுள்கள் அமைக்கப் பட்டிருக்கும். முன்புறத்தில் விஸ்தாரமாய் ஆப்புகள் அடித்து அவைகளில் அந்தக்கம்பி பெரிய வலைபோல் கட்டப்படுகிறது.


வலுவான அகழ்கள் நாட்பட நிலைக்கும்படியாயும் வெட்டப்படு கின்றன. ஒரு ஆள் ஆழத்துக்கும் அதிகமாகப் பள்ளந்தோண்டி பள் ளத்தின் முன்புறத்திலுள்ள சுவரில் சமையல் அடுப்புகளைப்போல வரிசையாய் குழி செய்யப்படுகிறது. ஒரு குழிக்கும் மற்றொரு குழி க்கு மிடையே மண்ணை யெடுக்காமல் விட்டு விடுவதால் இடையிடை யே சுவர்போலச் செய்யப்படுகிறது. ஒவ்வொரு குழியில் ஒவ்வொரு ஆள் நின்றுகொண்டு துப்பாக்கியைச் சுடுவான். குழிகளுக்கு இடை யில் மண்ணெடுக்காமல் சுவர்போல விட்டுவைத்தால் அதிலுள்ள துருப்புகள் சத்துருவின் பீரங்கிகளால் அதிகமாய்ச் சேதமாகமாட் டார்கள். உதாரணமாக, கிழக்கு மேற்காய் நீளமான பள்ளந் தோண் டப்பட்டிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம் கிழக்கிலிருந்து சத் துருவின் பீரங்கி பள்ளத்தை நோக்கி குண்டுகளைச்சுட்டால், அந்த குண்டுகள் பள்ள முழுவதும் நீளமாகப் பாய்ந்து அதிலுள்ள துருப்பு களையெல்லாம் சேதப்படுத்தும். அந்தப் பள்ளத்தில் இடையிடையே சுவர்களிருந்தால், அந்த சுவர்கள் அந்த குண்டுகளைத் தடுத்துவிடும்,



படத்தின் அடிப்பாகத்தின் இடதுபுறத்தில் ஆள்கள் இருப்புப் பலகைகளுக்குப் பின்னால் படுத்துக்கொண்டு அகழ் தோண்டுகிறார்கள். வலதுபுறத்தில் அகழில் மறைந்துகொண்டிருக்கும் தருப்புகள் சுடுகிறார்கள். இந்த அகழுக்கு முன்னால் வழிகள்வளைவாய்த் தோண்டப்பட்டு சற்றுதூரத்தில் மற்றொரு அகழ் வெட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறு சத்துருவுக்கருகில் நெருங்குகிறார்கள். 391-ம்பக்கம் பார்க்க.



அகழுக்குள்ளே ஜெர்மன் தருப்புகள் காலங்கழித்தல்.



காட்பட நிலைக்கும்படியாய் கட்டப்பட்டுள்ள அகழின் உள்புறம்
காட்டப்பட்டிருக்கிறது.



யுத்த கப்பலும் ஆகாய விமானமும் சண்டை செய்தல்
தூரத்திலிருந்து சோதனை விளக்கின் வெளிச்சம்
ஆகாயத்தில் காட்டப்படுகிறது.

மேலும், அகழின்மேலே கூரை போடப்படுகிறது முண்டு. அகழி யுள்ளகிறு சுவர்களின்மேல் பலகைகளை வைத்து அவைகளின்மேல் மணல்மூட்டைகள் அடுக்கப்படுகின்றன. இருப்புப்பலகைகள் மூனைப் புறத்திலும் மேற்புறத்திலும் அமைப்பதுண்டு. சத்துருவின் குண்டு களை ஆகாயத்திலிருந்து விழும்போது, அந்தக்கூரை அவைகளைத் தாங்கிக்கொள்கிறது. தருப்புகள் முன்புறத்தில் பார்ப்பதற்கும் துப் பாக்கிகளை வைத்துச் சுடுவதற்கும் சிறு துவாரங்கள் செய்யப்படுகின் றன.

அரண்களின் வழியாய் முன்செல்லும் விதம்.

சத்துருவின் பீரங்கிகள் வலுவான இடங்களில் அமைக்கப் பட்டு, குண்டுகளைக் கடுமையாய்ப் பொழிந்துகொண் டிருந்தால், அரண்களிலுள்ளவர்கள் வெளியே தலையைக் காட்ட முடியாமலிருக் கும். அப்போது நமது காலாள் தருப்புகள் எவ்வாறு முன்செல் வார்கள்? நமது தருப்புகள் அகழ்களின் வழியாகவே முன்செல்வார் கள். அதன் விவரங்களைச் சொல்வோம். அகழ்கள் நீளமாகவும் குறு கலாயும் கட்டப்படுகின்றன. அகழி யுள்ளவர்கள் தங்களுக்கு முன் புறத்தில் நேராக ஒரு பள்ளம் வெட்டிக்கொண்டு செல்வார்கள். அதுவே அவர்கள் முன் செல்லுவதற்கு வழியாகும். அந்த வழி பாம்பு போல வளைந்து வளைந்து செல்லும்படி வெட்டப்படுகிறது. தருப்புகளுக்கு முன்புறத்தில் வெட்டப்படுகிற அந்த வழிகள் வளை ந்து வளைந்து சென்றால், எதிரியுள்ள சத்துருக்களின் கண்களுக்கு அந்த வழி முழுமையும் தெரியவராம லிருக்கும். அவ்வாறு அநேக வழிகளை முன்புறத்தில் சிறிது தூரம் வெட்டிச்சென்று, கோடி யில் ஒரு அகழ் வெட்டப்படுகிறது. தருப்புகள் அந்த வழிகளில் புகுந்து சென்று சிறிது தூரத்தில் புதிதாய் வெட்டப்பட்ட அகழில் நிலைபெற் றிருப்பார்கள். அவ்வாறு தருப்புகள் அகழ்களை வெட்டிக் கொண்டே முன்செல்கிறார்கள். நமது சித்திரப் படத்தில் இந்த விவரங்கள் தெளிவாய் விளக்கப்பட் டிருப்பதைக் காணலாம். அவ் வாறுதான் பிரான்ஸில் இப்போது சண்டை நடந்து கொண்டிருக் கிறது. இரண்டு கக்ஷித்தருப்புகளும் பீரங்கிகளின் கடுமைக்கு அஞ்சி, தங்கள் அகழ்களிலிருந்தபடியே முன்புறத்தில் வழிகளை வெட்டிக்கொண்டு அங்கங்கே அகழ்களைப் புதிதாய் வெட்டி அவை களில் பந்தோபஸ்தாய் நிலைபெற்று முன்செல்ல முயல்கிறார்கள். அகழ்களும் வழிகளும் இரவில் இரகஸ்யமாய் வெட்டப்படுகின்றன.

இல்லாவிடில் வேலியாட்களைச் சத்துருவின் பீரங்கிகள் நாசஞ்செய்து விடும். இரவில், இரும்புப் பலகைகளை முன்புறத்தில் நிறுத்தி, பல கைக்குப் பின்னால் படுத்துக்கொண்டு மண் வெட்டிகளை உபயோகிக் கிறார்கள். இரவில் துருப்புகளின் நடமாட்டத்தை அறிவதற்கு, சோதனை விளக்குகள் உபயோகிக்கப்படுகின்றன. பீரங்கியிலிருந்து பிரகாசமான கெருப்புப்பந்துகள் எறியப்படுகின்றன. அவைகளின் வெளிச்சத்தைக் கொண்டு துருப்புகளின் நடமாட்டத்தைக் கண்டு கொள்ளலாம். ஆகாய விமானங்களிலிருந்து, பிரகாசமானவிளக்கு கள் கீழே எறியப்படுகின்றன.

கார்லாட்படைகள் எவ்வாறு முன்சென்று தாக்குகின்றன.

இனி, காலாள் துருப்புகள் சத்துருக்களை எவ்வாறு தாக்கிச் சண்டை செய்கின்றன என்பதைப்பற்றிச் சொல்வோம். முற்காலத் தில் போர்வீரன் சண்டை செய்துகொண் டிருக்குபோது எங்கா வது ஒளிந்துகொள்ளப் பார்ப்பானுகில் அவன் பயங்காளி யென்ற மானபங்கஞ் செய்யப்பட்டு கொல்லப்படுவான். ஆனால் இக்காலத் தில் ஒவ்வொரு வீரனும் சண்டை செய்யும்போது சாமர்த்தியமாய் மறைத்துகொள்ளும்படி கற்பிக்கப்படுகிறான். அவன் செவ்வையாய் ஒளிந்துகொள்ளாவிட்டால் கண்டிக்கப்படுகிறான். ஆனால் அவன் மறைத்துகொள்வது பயங்காளித் தன்மையாலல்ல; நிறமையாய்ச் சண்டையை நடத்துவதற்காகத்தான். துருப்புகள் எளிதில் மாண்டு போகாம லிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். துருப்புகள் சண்டை செய்யும்போது துப்பாக்கியை மட்டும் உபயோகிப்பதில்லை; சிறிய மண் வெட்டியும் கோடரியும் ஆயுதமாக உபயோகிக்கிறார்கள். நமது துருப்புகளில் ஒருபாகி சத்துருக்களின அகழ்களை நோக்கி முன்புறமாய்ச் செல்கின்றனரென்று வைத்துக்கொள்வோம். சிறிது தூரம் சென்றவுடன் சத்துருவின் பீரங்கிகள் குண்டுகளை எறியத் தொடங்குகின்றன. உடனே நமது படைத்தலைவர் 'விஸில்' என்ற ஒரு சிறு ஊதுகுழலை ஊதுகிறார். முற்காலத்தைப்போல பெரிய ஊதுகுழல்களை இப்போது உபயோகிப்பதில்லை; பீரங்கிகளின் இடி முழக்கத்தில், வாயினால் கூச்சலிடுவதிலும் பயனில்லை. அந்த விஸில் சப்தத்தைக் கேட்டதும், நமது துருப்புகள் ஒருவர் பின் ஒருவராய் நீளமான ரயில்வண்டி செல்வதுபோலச் செல்கிறார்கள்; ஒரு கெஜத் தக்கு ஒருவராக விலகிச்செல்கிறார்கள். சிறிது தூரஞ்சென்றவுடன்

சத்துருவின் பிரங்கிகள் மிகவும் குறிப்பாய்ச் சுடுவதோடு சத்துருவின் துப்பாக்கிகளும் ரவைகளைப் பொழியத் தொடங்குகின்றன. மற்றொரு விதமான விஸில் சப்தம் நமது படைத்தலைவரிடமிருந்து கேட்கிறது. 60 பேர் கொண்ட தனித்தனி கூட்டங்களாகப்பிரிந்து, ஒவ்வொரு கூட்டத்திலுள்ளவர்களும் ஒருவர்பின் ஒருவராய் முன் செல்கிறார்கள். அவ்வாறு ஒருவர் பின் ஒருவராய்ச் சென்றால், முன் முனையிலுள்ள ஒருவனே சத்துருவின் கண்களுக்குப் புலப்படுவான். அவனுக்குப் பின்னால் வரிசையாய் வந்துகொண்டிருக்கிறவர்களின் மேல் சத்துருக்களால் சுட முடியாது. ஆயினும் சத்துருவின் துப்பாக்கிகள் உக்கிரமாய்ச் சுட ஆரம்பித்ததைக்கண்டு நமது படைத்தலைவர் மற்றொருவிதமான விஸில் சப்தம் செய்கிறார். உடனே வரிசையாய் சென்றுகொண்டிருந்த துருப்புகள் திடீரென்று ஏககாலத்தில் படுத்துக்கொண்டு அவரவர்கள் தாங்கள் படுத்த இடத்தில் கைகளை நீட்டி மண்ணைச் சேர்த்துக் குவித்துக்கொண்டே ஊர்ந்து செல்கிறார்கள். அவ்வாறு சிறிதுதூரம் நகர்ந்தவுடன் கைகளுக்கு முன்னால் மணல் மூட்டை உண்டாகி விடுகிறது. சத்துருவின் துப்பாக்கிகளிலிருந்து பாய்கிற ரவைகள் மணல் மூட்டைகளின்மேல் விழுந்து புதைந்து விடுகின்றன. நமது படைத்தலைவரும் மற்ற துருப்புகளைப்போல் தம்மிடமுள்ள மண் வெட்டியை எடுத்து படுத்த நிலைமையில் பள்ளந்தோண்டிக்கொண்டிருக்கிறார். அவர் தமக்குப் பக்கத்திலிருக்கிற தந்தியாட்களுக்கு சமிக்ஞை செய்கிறார். தந்தியாட்கள் தந்திக்கம்பியை தரையில் பிரித்து விட்டுக்கொண்டே வந்திருக்கிறார்களாதலால் அவர்கள்நமது பிரங்கிப்படைக்கு தந்தி சமாசாரம் அனுப்புகிறார்கள். பிரங்கிகள் இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு சத்துருக்களின்மேல் குண்டுகளைப் பொழியத் தயாராயிருக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. பிறகு படைத்தலைவர் படுத்த நிலைமையில் விஸில் சப்தம் செய்கிறார். உடனே முன்புறத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்கள் முகத்தைத் திருப்பி படைத்தலைவரைப் பார்க்கிறார்கள். படைத்தலைவர் தமது கையினால் சமிக்ஞை செய்கிறார்.

உத்தியோகஸ்தர்கள் முன்புறமாய் எழுந்து செல்லவேண்டுமென்று அந்த சமிக்ஞையால் அறிந்துகொண்டு தங்கள் துருப்புகளுக்கு அவ்வாறே உத்தரவு செய்கிறார்கள். உடனே துருப்புகளனைவரும்

எழுந்து, ஒரு கெஜ தூரத்துக்கு ஒருவராக விலகி நின்று, ஒருவர் பின் ஒருவராய் வரிசையாய் ஓடுகிறார்கள். அவ்வாறு நமது துருப்புகள் எழுந்து நின்றாலும், சத்துருக்கள் அவ்வளவு குறிப்பாகச் சுட வில்லை. ஏனெனில், அச்சமயம் நமது பீரங்கிகள் சத்துருக்கள் கலங்கும்படி கடுமையாய்க் குண்டுகளைப் பொழிகின்றன. மறுபடியும் விசில் சப்தம் கேட்டதும், துருப்புகள் முன்னைப்போல படுத்துக் கொள்ளாமல் செடிமரங்களும் கற்பாறைகளும் முன்புறத்திலிருப்பதைக் கண்டு, அவரவர்கள், தங்களுக்கு கருகிலுள்ள கற்பாறைகள், செடிகள், பழையசுவர்கள், பள்ளங்கள், புல் அடர்ந்த தரைகள் முதலிய மறைவிடங்களைத் தேடிப்பதுங்குகிறார்கள். மறைவிடங்களிடைக் காதவர்கள் மண்வெட்டியை உபயோகிக்க வேண்டும்; முன்புறத்தில் மண்ணைக் குவிக்கவேண்டும்; பின்புறத்தில் கால்களால் குழிபறிக்க வேண்டும்; தரையோடு தரையாய்க் கிடக்கவேண்டும். நமது படைத்தலைவர் தந்திரமூலமாய் நமது அகழிகளுள்ள மற்ற துருப்புகளைப் புறப்பட்டு வரும்படி உத்தரவு செய்கிறார். அந்தத் துருப்புகள், முதலில் சென்றவர்களால் குவிக்கப்பட்ட மணல்மூட்டைகளில் பதுங்கி, அந்தந்த பள்ளங்களைப் பெரிதாகச் செய்துகொள்ளுகிறார்கள். அவர்கள் சற்று ஆழமான பள்ளங்களை விரும்தகொண்டு சேதமாகாம லிருப்பதால், தங்கள் துப்பாக்கிகளைக் கொண்டு சத்துருக்களின்மீது துரும்புய்ச் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சகாயத்தால் முன்புறத்திலிருக்கிற நமது துருப்புகள் இன்னும் முன்னால் செல்லப் பார்க்கிறார்கள்.

ஆனால் அவ்விடத்தில் சத்துருக்கள் இரும்புவலையை விஸ்தாரமாய்க் கட்டியிருக்கிறார்கள். நமது பீரங்கிகளிலிருந்து பாய்ந்த குண்டுகள் அந்த இரும்பு வலையை அநேக இடங்களில் அறுத்திருக்கின்றன. நமது உத்தியோகஸ்தர்கள் எப்போதும் கையில் வைத்துக் கொண்டிருக்கிற கத்தரிகளை எடுத்து, படுத்தவண்ணமாய் கம்பியை நேராய்க் கத்தரித்துக்கொண்டே நகர்கிறார்கள். வெடி குண்டுகளை எறிந்து கம்பியை அறுக்கப் பார்க்கிறார்கள். நமது துருப்புகளிற் சிலர் தங்களிடமுள்ள கோணிப் பைகளில் படுத்த வண்ணமாய் மணலை நிரப்பி அந்தப் பைகளைக் கம்பி அறுக்கப்பட்ட இடங்களில் நீளமாகப் போட்டு அதன்மேல் படுத்துச் செல்கிறார்கள். தரையில் சத்துருக்கள் குழி தோண்டி மறைத்துவைத்திருந்ததால் முன்புறஞ்

செல்லும் ஒருவன்மாத்திரம் அதனுள் விழுந்துவிடுகிறான். பின்னால் வரிசையாக வருகிறவர்களிற் சிலர் அந்தக் குழியில் ஜாக்கிரதையாய் இறங்கி ஸ்தம்பங்கள்போல் உள்ளே நின்றுகொண்டு மற்றவர் கூடத் தங்கள் தோளில் ஏறத்து செல்லும்படி விடுகிறார்கள். சத்துருக்களுக்கு 500 கெஜத்துக்கிப்பால் நமது துருப்புகள் இப்போது சென்று படுத்துக் கொண்டிருக்கிறார்கள். 500 கெஜதூரத்திலிருந்து நமது துப்பாக்கிகளைச் சத்துருக்களின்மீது நன்றாய்க்குறி பார்த்துச் சுடலாம். ஆகையால் நமது படைத்தலைவர் மறுபடியும் விசில் சப்தம் செய்கிறார். மற்ற உத்தியோகஸ்தர்கள் அவரைப்பார்த்து அவருடைய சமிக்ஞையை அறிந்துகொண்டு துருப்புகளுக்கு உத்தரவு செய்கிறார்கள். நமது துருப்புகள் இதுவரையில் ஒருவர் பின் ஒருவராய்ப் படித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது செய்யப்பட்ட உத்தரவைக்கேட்டதும் அவர்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவராய், போர்க்களத்தின் இடது புறத்திலிருந்து வலதுபுறம் வரையில் விசாலமாய் நிலை பெறுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு கெஜதூரம் விலகிக்கொள்கிறார்கள். அநேக சமயங்களில், துருப்புகள் படுத்தபடியே அவ்வாறு அணி வகுக்கவேண்டும். படுத்திருப்பவர்கள் பக்கங்களிலும் முன்புறத்திலும் உருண்டு சென்று வரிசைக் கிரமமாய் நிலைபெற வேண்டும். அவ்வாறு துருப்புகள் ஒருவர் பக்கத்தில் ஒருவர் படுத்துக்கொண்டு தங்கள் துப்பாக்கிகளிலிருந்து ரவைகளைப் பொழியவேண்டும். ஒரு கூட்டத்தார் துப்பாக்கியைச் சுட்டுக் கொண்டிருக்க, மற்றப்பேர் பள்ளந்தோண்டுகிறார்கள்; பிறகு அந்தக் கூட்டத்தார் பள்ளந்தோண்ட ஆரம்பிக்கும்போது மற்றப்பேர் சுட ஆரம்பிக்கிறார்கள். பின்புறத்தில் வந்துகொண்டிருப்பவர்கள் ஒருவர் பின் ஒருவராய் விரைவாக நகர்ந்து வந்து முன்புறத்திலிருப்பவர்களுக்கு கருகில் சென்று ஒருவர் பக்கத்திலொருவராய் அணி வகுக்கிறார்கள். இவர்கள் இரண்டாவது வரிசையாக நிலை பெறுகிறார்கள். இவர்களும் 500 கெஜ தூரத்திலிருந்து கொண்டு பள்ளந் தோண்டுவதும் சத்துருக்களின்மேல் ரவைகளைப் பொழிவதுமாயிருக்கிறார்கள். நமது அகழிலிருந்து புதிய வெடி மருந்து கொஞ்சங் கொஞ்சமாய்க் கொண்டு வரப்படுகிறது; அவ்வாறு கொண்டுவரத்தியமில்லாமற்போனால், தரையில் காயம்பட்டு விழுகிறவர்கள், கொல்லப்பட்டுக் கிடப்பவர்கள் இவர்களிடமிருந்து வெடி மருந்து

எடுத்தக்கொள்ளப் படுகிறது. இவ்வாறு பின்னுல் வந்துகொண் டிருந்த நமது துருப்புகளெல்லாரும் 500 கெஜ தூரத்தில் பல வரிசைகளாக அணி வகுத்துப் படுத்துக்கொள்கிறார்கள். இது வரையில் இரண்டொரு கூட்டங்களே சுட்டுக்கொண் டிருந்தன. இப்போது நமது துருப்புகளெல்லாரும் 500 கெஜ தூரத்துக்கு வந்தவுடன், ஏககாலத்தில் திடீரென்று ஆயிரக் கணக்காய் ரவைகளே எறிகிறார்கள். சத்துருக்கள் திடீரென்று புசலடித்தாற்போல ரவைகளால் அடிபடும்போது, ஒரு கூணப் போது கலங்கிவிடுகிறார்கள். தக்ஷணமே நமது துருப்புகள் தான்கு பாய்ச்சலாக 40 கெஜதூரம் முன்செல்கிறார்கள். பிறகு முன்போல நமது துருப்புகளில்சிலரே சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். சத்துருக்க ளும், தன்றுப்க் குறிபார்த்துச் சுடத் தொடங்குகிறார்கள். திடீ ரென்று ஒரு விஸில் சப்தம் கேட்டதும் நமது துருப்புக ளெல்லா ரும் ஏகபடியாய் ஆயிரக் கணக்கான ரவைகளே இரண்டொரு நிமி ஷம் வீசி படிக்க, சத்துருக்கள் சமரிலென்று தலைகளேப் பின்னுக்கு இழுத்துக்கொள்கிறார்கள். அச்சமயம் பார்த்து நமது துருப்புகள் மறுபடியும் கொஞ்சதூரம் முன்புறம் தாவுகிறார்கள். அவ்வாறு நமது துருப்புகள் நிணைத்து நிணைத்து ஸமாரியாக ரவைகளேப் பொழிந்து முன்சென்று சத்துருக்களுக்கு 50 கெஜ தூரத்துக் கிப் பால் நிலேபெறுகிறார்கள். அவ்வளவு அருகில் நமது துருப்புகள் வந்த தும் இரண்டொரு நிமிஷம் உக்கிரமாய் சுட்டுக்கொண் டிருக்க, பின் புறத்திலுள்ள நமது பீரங்கிகளும் இரண்டொரு நிமிஷம் குண்டுக ளேப்பொழிய, நமது படைத்தலேவர் சமிக்ஞை செய்கிறார் ; உடனே போர்க்கள முழுவதும் நிசப்தமாய் விடுகிறது ; நமது பீரங்கிகளும் துப்பாக்கிகளும் திடீரென்று சுடுவதை நிறுத்திவிடுகின்றன; இரண்டு கஷித் தூருப்புகளும் இப்போது 50 கெஜத்தில் நெருங்கிவிட்டதால் சத்துருவின் பீரங்கிகளும் ஒய்ந்தவிடுகின்றன. போர்க்களம் அவ் வாறு ஒரு கூணப்போதில் நிசப்தமாகி விட்டதென்றல், அடித்த கூணமே நமது துருப்புகள் ஒரே பாய்ச்சலாக அகழிலுள்ள சத் துருக்களின்மீது விழுந்து, துப்பாக்கிமுனேயால் தாக்கிச்செல்ல இரு கூஷிகளும் கைகலந்து விடுகிறார்கள்; துப்பாக்கிமுனேயீட்டியால் குத்து கிறவர்களும், துப்பாக்கியின் பின்புறத்தால்மோதுகிறவர்களும், கைத் துப்பாக்கியைச்சுடுகிறவர்களும், வெடிகுண்டைக் கையாலெறிகிறவர் களும், மல்யுத்தஞ் செய்கிறவர்களும், ஒரே கூக்குரலிட, குத்

தங் கொலியும் மும்முரமாய் நடக்கின்றன. நமது துப்பாக்கிகளும் பீரங்கிகளும் ஆரம்பத்திலிருந்து சரியானபடி வேலை செய்து சத்துருக்களைச் சேதப்படுத்தி மன மொடுங்கச் செய்திருந்தால், சத்துருவின் இருப்பிடம் நமது துப்பாக்கிமுனைக்கு வசமாவது நிச்சயம். புதிதாய்ப் பிடிக்கப்பட்ட அகழை அவசரமாய்ச் சீர்ப்படுத்தி நமது துருப்புகள் தேவையானபடி பக்தோபல்து செய்து கொள்வார்கள்.

மேலே சொல்லப்பட்டு வந்தபடி காலாள் துருப்புகள் சத்துருவைத் தாக்கும் முறையை 6 முக்கிய பாகங்களாகப் பிரிக்கலாம். (1) காலாள் துருப்புகள் முன் செல்ல ஆரம்பித்ததும் சத்துருவின் பீரங்கி நெருப்பை எதிர்த்துச் செல்லவேண்டும். (2) அதன் பிறகு சத்துருவின் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் சேர்ந்து குறிப்பாய்ச் சுடுகிற நெருப்பை எதிர்த்துச் செல்லவேண்டும். இது தான் மிகவும் அபாயகரமான வேலை. (3) நமது காலாள் துருப்புகள் குறிப்பாய்ச் சுடக்கூடிய தூரத்தில் வந்தவுடன் தங்கள் துப்பாக்கிகளின் நெருப்பால் சத்துருக்களை அடக்கவேண்டும். இச்சமயம் இருகூறிக்கும் துப்பாக்கிச்சண்டை உக்கிரமாய் நடக்கும். (4) அவ்வாறு சத்துருக்களின் சுறுசுறுப்பை அடக்கிக்கொண்டு, படிப்படியாய் முன்சென்று சத்துருக்களின்மேல் விழுந்து தாக்கக்கூடிய தூரத்துக்கு நெருங்கவேண்டும். (5) பிறகு சத்துருக்களின்மேல் விழுந்து துப்பாக்கிமுனை யீட்டியால் தாக்கி சத்துருக்களை அப்புறப்படுத்தவேண்டும். (6) பிறகு சண்டையில் காலாள பக்கங்களில் பிரிந்துபோன காலாள் துருப்புகளைபிடிபட்ட இடத்தில் ஒன்று சேர்த்து வலுவாய் நிலைபெற்றிருக்கச் செய்யவேண்டும்.

பிரஞ்சு முறைத்தும் ஜேர்மனீ முறைத்துமுள்ள வித்தியாசங்கள்.

மேலில சொல்லிய முறை பிரஞ்சு சேனையிலும், பிரிட்டிஷ் சேனையிலும் அனுசரிக்கப்படுகிறது. அதிலுள்ள முக்கிய விசேஷங்களைக் கவனிக்கவேண்டும். காலாள் துருப்புகள் வெகு தூரத்திலிருந்து கொண்டு துப்பாக்கிகளைச் சுடக்கூடாது. சிரமமில்லாமலும் குறி தவறாமலும் சுடக்கூடிய தூரத்தில் நெருங்குவதற்கு முன்னல் துப்பாக்கிகளை உபயோகிக்கக் கூடாது. துருப்புகள் பிரயாணஞ் செய்யும்போது ஒருவர் பின்னொருவராய்ச் செல்வது வழக்கம்; சண்டை செய்யும்போது ஒருவர் பக்கத்திலொருவராயிருப்பது வழக்கம். ஆகையால் காலாள் துருப்புகள் குறி தவறாமல் நன்றாய்ச் சுடக்கூடிய தூரத்தில் நெருங்குகிற வரையில் ஒரு

வர்பின் ஒருவராகவே பிரயாணஞ் செய்கிற ஒழுங்கில் செல்லவேண்டும்; அதனால் முன்புறத்திலிருக்கிற ஒருவனே சத்துருவுக்குத் தென்படுவான். துருப்புகள் அநாவசியமாய் சேதமாகக்கூடாதென்பதே அதன் நோக்கம். பிறகு குறிப்பாய்ச் சுடக்கூடிய தூரத்துக்கு வந்தவுடன் துருப்புகள் ஒருவர் பக்கத்திலொருவராயிருந்து துப்பாக்கிகளைச் சுடவேண்டும். அவ்வாறு முன்புறத்திலிருக்கிற துருப்புகள் முதல் வரிசையாக அணிவகுத்தவுடன், பின்னால் வருகிற மற்ற துருப்புகள் அவர்களுக்கருகில் வந்து முதல் வரிசையைப்போல அணிவகுத்து நமது துப்பாக்கிகளின் நெருப்பை அதிகரிக்கவேண்டும். சத்துருவுக் கருகில் செல்லச் செல்ல, அவ்வாறு அணிவகுத்துச் சுடுகிற நமது துருப்புகள் தொகையில் வரவர அதிகரித்துக் கொண்டுவர வேண்டும். அவர்கள் துப்பாக்கிகளை ஓயாமல் சுட்டவண்ணமாயிருக்கமாட்டார்கள். நமது துப்பாக்கிகளிலிருந்து ஆபிரக்கணக்கான ரவைகளை குறிப்பாயும் கடுமையாயும் இரண்டொரு நிமிஷஞ் சுட்டு நிறுத்திவிடுவார்கள். அவ்வாறு மிகவும் அருகிலிருந்து கொண்டு உக்கிரமான நெருப்பைப் பொழிந்து சத்துருக்களை அடக்கி, கை கலந்து சண்டை செய்யக்கூடிய தூரத்துக்கு நெருங்கிவிட வேண்டும். கைகலந்து சண்டை செய்வதற்குச் சௌகரியமாயுள்ள தூரத்தில் நெருங்கவேண்டுமென்றே அதுவரையில் நமது துருப்புகள் உக்கிரமாய் துப்பாக்கிகளைச் சுட்டார்கள். விரைவாய்த் தாவி முன் செல்வதானும் துப்பாக்கி மூணியிட்டியால் தாக்கிக் கைகலந்து சண்டைசெய்வதானும் சத்துருக்களை வெல்லவேண்டுமென்பது முக்கிய நோக்கம்.


ஆனால் ஜெர்மானியர் அனுசரிக்கிற முறை வேறுவிதமானது. ஜெர்மன் துருப்புகள் முன் செல்லும்போது ஆரம்பத்தில் ஒருவர் பின் ஒருவராய்ச் சென்றாலும் சத்துருக்களிருக்கிற இடத்திலிருந்து வெகு தூரத்துக் கிப்பால் ஒருவர் பக்கத்திலிருவராய் அணிவகுக்கிறார்கள். துப்பாக்கிகளைச் சுடுவதற் கேற்றவிதமாய் அவ்வாறு முன்னதாகவே அணிவகுத்துத் தயாராயிருந்து வருகிறார்கள். துருப்புகள் ஓயாமல் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். பின்புறத்தில் வந்துகொண்டிருக்கிற மற்ற துருப்புகள் தயாராய் அணிவகுத்திருப்பதால் முன்புறத்திலிருப்பவர்களோடு சேர்ந்துகொண்டு சுட்டவண்ணமாயிருக்கின்றனர். அவ்வாறு சுட்டுக்கொண்டே துருப்புகள் முன் சென்றுகொண்டிருக்கின்றனர். பின் புறத்தில் வந்து கொண்டிருப்

பவர்கள் அணிவகுத்தபடியே விரைவாய்ச் சேர்ந்துகொள்வதால், மழை அளி தளியாய்த் தூற ஆரம்பித்து வரவர அதிகமாகி கடைசியில் ஒரேபடியாய்க் கொட்டுவதுமே ல, துப்பாக்கிகளின் நெருப்பு வரவர அதிகமாகிக்கொண்டே ஓயாமற் பொழிகிறது. துருப்புகள் அதிகமாக வந்து தங்கள் துப்பாக்கிகளின் நெருப்பால் சத்துருக்களை நசுக்கவேண்டுமென்பது முக்கியநோக்கம். அப்பொழுதே சத்துருக்களின் இருப்பிடம் பிடிபட்டுப் போகும்படியான நிலைமைக்குவந்துவிடுகிறது; கடைசியாகத்துப்பாக்கி முனையால் தாக்குவதானது அந்தப் புதியஇடத்தில் நிலைபெறுவதற்காகும். ஜெர்மன்துருப்புகள் தங்கள் பொழிகிறநெருப்பின்பலத்தால் சத்துருக்களைவெல்லவேண்டுமென்று நோக்கங்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரஞ்சுத் துருப்புகள் தங்கள் நெருப்புப்பலத்தால் சத்துருக்களைக் கலங்கச்செய்து சத்துருக்களுக்கருகில் சிரமமில்லாமல் நெருங்கிச்செல்லவேண்டுமென்று நோக்கங்கொண்டிருக்கிறார்கள். பிறகு சத்துருக்களை வெல்வதற்குத்துப்பாக்கிமுனையிட்டியால் தாக்கிச் சண்டைசெய்வது அவசியமென்று பிரஞ்சுக்காரர்கள் கருதுகிறார்கள். பிரஞ்சுத் துருப்புகள் சத்துருக்களோடு கைகலந்து சண்டைசெய்யும்போது, சத்துருக்களைவெல்வதற்காகச்செய்கிறபிரயத்தனங்களில் அதுகடைசியானபிரயத்தனமென்று கருதுகிறார்கள். ஆனால் ஜெர்மன் துருப்புகள் சத்துருக்களோடு கைகலந்து சண்டைசெய்யும்போது அது ஏற்கெனவே நெருப்புவன்மையால் வெல்லப்பட்ட இடத்தை ஸ்வாதீனஞ் செய்துகொள்வதற்காகுமென்று கருதுகிறார்கள். அவ்வாறு வித்தியாசமான நோக்கங்களுக்கு ஏற்றபடி, ஜெர்மன் துருப்புகள்தங்கள் துப்பாக்கிகளைச் சுடஆரம்பித்தவுடன் இடைவிடாமல் சுட்டுக்கொண்டு துப்பாக்கிகளின் நெருப்பை வரவர அதிகமாகப் பொழிகிறார்கள்; பிரஞ்சுத் துருப்புகள் திடீரென்று ரவைகளை வாரிக்கொட்டி இடையிடையே நிறுத்தி முன்புறம் தாவிச் செல்கிறார்கள்.


பீரங்கிகள் காலாள் துருப்புகளுக்கு உதவி செய்வதற்காக இருக்கிறபடியால் காலாள் துருப்புகள் துப்பாக்கிகளை உபயோகிப்பது போலவே, பீரங்கிகளும் இரண்டு கஷ்டிகளால் வெவ்வேறு விதமாய் உபயோகிக்கப்படுகின்றன. இதைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். நெருப்பாயுதங்களின் நூதன வன்மை.

இந்த காலத்தில் உபயோகிக்கப்படும் துப்பாக்கியில் ஐந்து ரவைகள் ஒன்றுபோல் சேர்த்துவைக்கப்பட்டு ஏககாலத்தில் நுழைக்கப்படுகின்றன. ஆகையால் துப்பாக்கியிலிருந்து ஐந்து ரவைகளையும் ஒன்றின் பின் ஒன்றாய் அதிவிரைவாய்ச் சுடலாம். அவைகளைச் சுட்டபிறகு, ஐந்து ரவைகளைக்கொண்ட மற்றொரு ஸாம் துப்பாக்கியில் நுழைக்கப்படுகிறது.

மெஷின் பீரங்கியிலும் துப்பாக்கியில் சுடப்படுகிற ரவைகள் தான் உபயோகிக்கப்படுகின்றன. 50-க்கு அதிகமான ரவைகள் ஒரு ஸரம் போலத் தொடுத்து வைக்கப்படுகின்றன. அந்த ஸரம் மெஷின் பீரங்கியில் உபயோகிக்கப்படுகிறது. அந்த பீரங்கியினுள்ளே முதலி லுள்ள ரவையை நழைத்துவிட்டுச்சுட ஆரம்பித்தால், வரிசையாய்க் கோர்க்கப்பட்ட ரவைகளெல்லாம் ஒன்றின் பின் ஒன்றுப் நகர்ந்து வந்து, பீரங்கியில் நீ உண்டாகும் பாகத்துக்கு நேரே வந்து சேரு கின்றன. பீரங்கியிலிருந்து ஒருரவைசுடப்பட்டவுடன், அதில் இளம் புகிற உஷ்ணமான புகையின் வேகத்தால், பலநட்பமான கருவி கள் வேலைசெய்யப்படுகின்றன. அவ்வாறு பீரங்கியினுள்ள பலவித மான கருவிகள் தாமாகவே வேலைசெய்வதால், வரிசையாய்த்தொடுக் கப்பட்ட ரவைகள் ஒன்றின் பின் ஒன்றுப் நகர்ந்து வருகின்றன.




ரவைகள் :—ஸரம் போல வரிசையாய்க் கோர்க்கப்பட்ட ரவை களை இப்படம் காண் பிக்கிறது.



மெஷின் பீரங்கி :—வரிசையாய்க் கோர்க்கப்பட்ட ரவைகளை மெஷின் பீரங்கியில் நுழைத்துச் சுடும் விவ ரங்களை இப்படத்தில் காணலாம்.

பீரங்கியைச் சுடுகிறவன் ஒரு கொக்கியை அழுத்திக் கொண் டிருந்தால் போதும்; மற்ற வேலைகளெல்லாம் பீரங்கியினுள்ள கருவி கள் செய்துவிடுகின்றன. அதனால், மெஷின் பீரங்கியிலிருந்து ஒரு நிமிஷத்துக்கு 600 ரவைகள் வீதம் அதிவிரைவாய்ச் சுடுவதற்குச் சாத்தியப்படுகிறது. அந்த ரவைகள் சிறிய பித்தளைக் குழாய்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. அந்தப் பித்தளைக் குழாயினுள்ளே ஈயக்குண்டும் வெடி மருந்தும் அடைத்து வைக்கப்படுகின்றன. ஒரு

ரவை சுடப்பட்டவுடன் அதனுள்ளே யிருக்கிறவெடிமருந்து திப்பற்றி குண்டை வெளிப்பாயும்படிச் செய்கிறது. ஈயக் குண்டு வெளியே பாய்ந்த பிறகு பித்தளைச் குழாய் காலியாகி விடுகிறது. காலிசெய்யப் பட்ட பித்தளைக் குழாய்தானுகவே கீழேவிழுந்து விடும்படி மெஷின் பீரங்கியில் உபாயஞ்செய்யப்பட் டிருக்கிறது. மேலேயுள்ளபடத்தில், காலிசெய்யப்பட்ட பித்தளைக் குழாய்கள் கீழே விழுந்து கிடப்ப தைக் காணலாம். ஒரு மெஷின் பீரங்கி சுமார் 60 துப்பாக்கிகளுக் குச் சமானமென்று கருதப்படுவதால் அதன் வன்மை மிகுதியும் பாராட்டப்படுகிறது. மெஷின் பீரங்கி மிகவும் இலேசா யிருப்பதால் அது பலவிதமாய் உபயோகிக்கப்படுகிறது. ஆகாயவிமானமும் ஆகா யக் கப்பலும் அதை ஏற்றிக்கொண்டு உயரப் பறக்கின்றன. மோட் டார் வண்டியிலும் மோட்டார் பைஸிகிளிலும் அது கொண்டுபோகப் படுகிறது. குதிரைமேல் அதுஏற்றப்பட்டு அதிவிரைவாய் தூரஸ்தலங் களுக்குக்கொண்டுபோகப்படுகிறது. காலாட்படைகள் அதைத் தூக் கிக்கொண்டுசென்று, போர்க்களத்தில் ஒருமூக்காலிபோல்செய்யப் பட்ட சட்டங்களின்மேல்நிற்கவைத்துச்சுடுகின்றன. ஜெர்மன்காலாட் படையில் அந்த பீரங்கிக்கு அடிப்பாகத்தில் சாதாரண சட்டங்களை அமைத்து அதைத் தரையில் இழுத்துக் கொண்டுபோகிறார்கள். சப்மரின் (ஜலத்தில் முழுகிச்செல்லும்) கப்பல்களிலும் அந்த பீரங்கி அமைக்கப்பட் டிருக்கிறது.



இரும்புக் கவசம் பூண்ட மோட்டார் வண்டியில் தருப்புகள் மெஷின் பீரங்கிகளை ஏற்றிச் சுடுகின்றன.

இந்த காலத்துத் துருப்புகளுக்கு அவசியமான குணவிசேஷங்கள்.

இந்த காலத்தில் துருப்புகள் நிதான புத்தியுடன் சாமர்த்திய மாய்ச் சண்டை செய்யவேண்டும். சண்டை நடந்துகொண் டிருக் கும்போது எதிர் பாராத கஷ்டங்கள் நேரிடுவது சகஜமாதலால், அச்சமயங்களில் துருப்புகள் தங்கள் சொந்த புத்தியை உபயோ கித்து தங்கள் காரியத்தை யுக்தியால் நிறைவேற்றவேண்டும். எதிர்பாராத ஆபத்துகள் நேர்ந்தால் படபடப்பும் அவசரமும் காட்டாமல் நிதானமாய் யோசனை செய்யும்படி நேரிடும். இந்த காலத்தில் உபயோகிக்கப்படுகிற பயங்கரமான நெருப்பாயுதங் களுக்கு முன்னுல் சாமர்த்தியமும் தைரியமும் தேவையேயொழிய, மூரட்டுத்தனமும் வீராவேசமும் காட்டுவதில் பயனில்லே. ஆனல் முற்காலத்துச் சண்டைகளில் மிருகத்தனமும் ஆத்திரமும் பிர யோஜனமா யிருந்தன. அதனுல் அந்த காலத்தில் துருப்புகள் சண்டையைத் தொடங்குவதற்கு முன்னுல் மதுபானம் அருந்து வது வழக்கம். ஆனல் 10 வருஷங்களுக்கு முன்னுல் நடந்த ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில், நூதன ஆயுதங்களின் தன்மை வெளியாயிற்று. ஜப்பானியர் நூதன யுத்த முறைகளே நிதான புத்தியுடனும் யுக்தியாயும் அனுசரிக்க, ருஷியர் பழயவழக் கத்தின்படி மதுபானத்தை அதிகமாய் உபயோகித்ததால், ருஷியரின் போர்வன்மை பயன்படாமற் போயிற்று. வீரத்தில் ருஷியர் ஜப்பானியருக்கு இளப்பமானவர்க ளல்ல. ஆயினும் புத்திக் குறைவைக் குடி வெறியால் ஈடு செய்யப்பார்ப்பது மடமையென்று அக்காலத்தில் தெரிய வந்தது. ஜப்பானியரோடு யுத்தஞ் செய்த ருஷிய சேனுதிபதி தமது சேனையில் மதுபானம் தாராளமாய் உபயோகிக்கப்பட்டதைக் கண்டு பரிதாபப்பட்டு, தாம் தோல்வி யடைந்ததற்கு அது ஒரு முக்கிய காரணமாகுமென்றும், குடிவழக் கம் நின்றுலொழிய இக்காலத்து யுத்தத்தில் வெற்றி பெறுவது சாத் தியமல்லவென்றும் அபிப்பிராயப்பட்டார். ருஷிய சக்கரவர்த்தி அது முதல் தமது ராணுவத்தில் அந்த தூர வழக்கத்தை நிறுத்த முயற்சி செய்தார். இந்த மகாயுத்தம் தொடங்கியவுடன் ருஷிய ஏகாதிபத்தி யத்தில் மதுபானம் விற்கப் படக்கூடா தென்றே உத்தரவு செய்து விட்டார். மற்ற தேசங்களிலும், ருஷிய—ஜப்பானிய யுத்தத்தின் அனுபோகம் கவனிக்கப் பட்டது. இந்த காலத்துச் சண்டையில்

திருப்புகள் அவசரத்தாலும் முரட்டுத் தனத்தாலும் வேறெந்தக் காரணத்தாலும் அநாவசியமாய் உயிரை இழக்கக் கூடாதென்பது முக்கிய கொள்கை. நூதனமாய் விருத்தி செய்யப் பட்டு வெகு தூரம் சுடக்கூடிய பற்பலவெருப் பாயுதங்களின் வன்மையைக் கருதும் போது அவ்வித ஜாக்கிரதை மிகவும் அவசியமான தென்றுவிளங்கும். சண்டை செய்கிற ஒவ்வொரு வீரனும் சாமர்த்தியமாய் ஒளிந்துகொண்டு தன் உயிரைக் கூடுமான வழிகளில் காத்து சத்துருக்களிடம் நெருங்கி, தான் இறந்து போவதற்குமுன் சத்துருவின் உயிரை வாங்கவேண்டு மென்று கற்பிக்கப் படுகிறான். ஆகையால் சண்டைநடந்து கொண்டிருக்கும்போது, படைத் தலைவர்கள் வாள்களை உருவிக் கைகளை வீசி வீரவார்த்தைகளைப் பேசி, ஆரவாரஞ் செய்வதெல்லாம் இப்போதில்லை. படைத்தலைவர்கள் துணிகரச் செயல்களால் விசேஷ கீர்த்தி பெறவேண்டு மென்ற ஆசையாலும், தங்கள் திருப்புகளுக்கு வீராவேசத்தைத் தூண்டிவிட வேண்டு மென்ற எண்ணத்தாலும், யுத்தக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்ய இக்காலத்தில் விடப்படுவ தில்லை. திருப்புகள் அதிகமாய்ச் சேத மாகாமல் வெற்றி யடைவதே போர்த்திறமையின் முக்கிய லக்ஷணமென்று இப்போது கருதப் படுகிறது.

26-வது அத்தியாயம்

ஆகாய ரதங்கள்,

பக்ஷிகளைப் போல மனிதனும் ஆகாயத்தில் செல்லவேண்டு மென்று பற்பலமுயற்சிகள் அநேக நூற்றாண்டுகளாகச்செய்யப்பட்டு வந்தன. நமது புராணங்களில், புண்ணியவான்கள் தேவலோகத்திற்கு ஆகாய விமானங்களில் சென்றதாகவும், இராவணன் ஆகாய ரதத்தில் சீதா தேவியைக் கொண்டுபோனதாகவும், பல தேவதைகள் இறக்கைகளால் பறந்ததாகவும் சொல்லப்பட் டிருக்கின்றது. அந்த விசித்திர சம்பவங்கள் இருபதாம் நூற்றாண்டில் ஸர்வ ஸாதாரணமாக இருப்பதைக் காண்கிறோம். இக்காலத்தில் ஆகாயத்தில் பறக்கவேண்டுமென்று எவனுக்கேனும் விருப்ப மிருந்தால், அவன் பணத்தைச் செலவிட்டு உடனே திருப்திசெய்து கொள்ளலாம். ஆகாய விமானங்களில் இப்போது தபால்கள் கொண்டுபோகப்

படுவதோடு ஜனங்கள் பிரயாணமுஞ் செய்கிறார்கள். ஆகாய விமானங்களை அங்கீலமைக்கு விருத்தி செய்வதற்கு முன்னுள் அநேக நூற்றாண்டுகளாகப் பலவித பரிக்ஷைகள் செய்யப்பட்டன. பிரான்ஸ் தேசத்தில் 1660 ம் வருஷத்திலும் 1678ம் வருஷத்திலும் யந்திரங்களைக் கொண்டு பறக்க முயற்சி செய்யப்பட்டது. 1783-ம் வருஷத்தில் பெலூன் அல்லது ஆகாயக் கூண்டு கண்டுபிடிக்கப்பட்டது. காயிதத்தால் ஒரு கூடுசெய்து, அதனுள்ளே உஷ்ணஞ்செய்யப் பட்டகாற்றை அடைத்ததால்அந்தக்கூடு ஆகாயத்தில் மிதந்துமேலே எழும்பியதென்று கண்டுகொள்ளப்பட்டது. காற்றை சூடு செய்தால் அது விஸ்தாரமாகப் பரவிப் பளுவில் குறைவு படுகிறது. அவ்வாறு உஷ்ணஞ் செய்யப்பட்ட காற்று சாதாரண காற்றைவிட இலேசா யிருக்குமே. ஆகையால் இலேசான காற்றையுடைய கூடு, ஆகாயத்தி லுள்ள காற்றைவிட இலேசாயிருக்கிற காரணத்தால் மேலே கிளம்பு கிறது. தண்ணீரைவிட இலேசான கட்டையைத் தண்ணீருக்கடியில் அமுக்கினாலும் அது பிறகு மேலே கிளம்பி மிதக்கிற தல்லவா? அம் மாதிரியே பெலூனும் மேலே எழும்புகிறது. ஹைட்ரஜன் என்ற ஓர்வகை வாயு இருக்கிறது. அது எல்லாவித வாயுக்களை விட மிகவும் இலேசானது. ஹைட்ரஜன் என்ற வாயுவைக் கூண்டுக்குள் அடைத்தால் அது மேலே எழும்பிச் செல்லுமென்று கண்டுகொள் ளப்பட்டது. அதன்பிறகுபெலூனில் ஹைட்ரஜன் என்றவாயுஅடை க்கப்பட்டது. 1785-ம் வருஷத்தில் ஒரு பிரஞ்சுக்காரன் மேற்சொன் னவாறு ஒரு கூட்டில் ஹைட்ரஜன் நிரப்பி கூட்டின்கீழே ஒருபெட் டியைக் கட்டித்தொங்கவிட்டு அந்தப் பெட்டிக்குள் ஏறிக்கொண்டு 23 மைல் அகலமுள்ள இங்கிலீஷ்கடலைத்தாண்டினான். 50 வருஷங் களுக்குப் பிறகு மற்றொருவன் லண்டனிலிருந்து அமெரிகாவிலுள்ள ஆகாயக்கூண்டில் புறப்பட்டு இங்கிலீஷ் கடலைத்தாண்டினான். ஆனால் இந்த ஆகாயக் கூண்டுகள் காற்றடிக்கிற திசையில் தாமாகச் செல் லக்கூடியவையே யொழிய நமது இஷ்டப்படி செலுத்தப்படக் கூடி யவை யல்ல. முற்காலத்தில் கப்பல்கள் பாய்மரம் போட்டு, இயற் கையாய் வீசுகிற காற்றின் உதவியால் கடலில் பிரயாணஞ் சென்றது போல ஆகாயக்கூண்டுகளும் சுயேச்சையாய் ஆகாயத்தில் சென்றன. ஆனால் இப்போதுள்ள கப்பல்கள் நீராவி யந்திரத்தால் தள்ளப்பட்டு புசற்காற்றையும் அலைகளையும் லக்ஷியஞ் செய்யாமல் நமதிஷ்டப்படி


ஓட்டப்படுகின்றன. கப்பலிலுள்ள துளைகளால் தள்ளப்படுவதற்குப் பதிலாக, எஞ்ஜின் பலத்தால் அதிவிரைவாய்ச் சுற்றப்படுவதால், கப்பல் விரைவாய்ச் செல்கின்றன. அம்மாதிரியே ஆகாயக் கூண்டுகளையும் ஓட்டவேண்டுமென்று சாஸ்திர நிபுணர்கள் யோசனை செய்தார்கள். ஆனால் ஆகாய விமானத்தில் ஏற்றிக் கொண்டு போகக்கூடிய எஞ்ஜின் சிறிதாயும் இலேசாயு மிருக்க வேண்டும். ஆகையால் மோட்டார் வண்டிகள் உபயோகத்துக்கு வந்தபிறகு அவைகளுக்குத் தேவையான எஞ்ஜின்கள் மிகுந்த பலங் கொண் டிருப்பதோடு, உருவத்தில் சிறிதாயும் பளுவில் குறைவாயு மிருக்கும்படி கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வகையான சிறு எஞ் ஜின்கள், பெட்ரோல் என்ற ஓர்வகை மண்ணெண்ணெயால் வேலை செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட எஞ்ஜின்கள் மோட்டார் வண்டி களுக்காகச் செய்யப்பட்ட பிறகுதான் அவைகளை ஆகாயவிமானங்க ளில் அமைத்து நமது இஷ்டப்படி ஆகாயத்தில் பிரயாணஞ் செய்ய சாத்தியமாயிற்று.

ஆகாயக் கப்பல்.


காற்றைவிட இலேசாயுள்ள ஹைட்ரஜன் என்ற வாயுவை ஒரு கூண்டில் நிரப்பினால் அந்த கூண்டு ஆகாயத்தில்மிதந்துசெல்லு மென்றும், அதில் ஒரு எஞ்ஜின் அமைத்து நமதிஷ்டப்படி செலுத் தலாமென்றும் சொன்னேனும். கப்பலை இடதுபுறத்திலும் வலது புறத் திலும் திருப்புவதுபோலவே அந்த ஆகாயக்கூண்டுகளையும் திருப்ப லாம். அந்தவுபாயங்களெல்லாம் அமைக்கப்பெற்ற ஆகாயரதங்களுக்கு ஆகாயக் கப்பலென்றுபெயர். ஆகாயக்கப்பல் என்று ஏன் பெயரிடப் பட்டதென்றால், சாதாரண கப்பல்கள் ஜலத்தைவிட இலேசாயிருக்கும் காரணத்தால் ஜலத்தில் மிதந்துசெல்வதுபோல, ஆகாயக்கப்பல்களும் காற்றைவிட இலேசாயிருக்கும் காரணத்தால் ஆகாயத்தில் மிதந்து செல்கின்றன. ஆகாயக் கப்பல்கள் காற்றைவிட இலேசாயுள்ள கருவி கள் என்பதைக்கவனிக்கவேண்டும். மேலும் சாதாரண கப்பல்களைப் போல ஆகாயக் கப்பல்கள் மிகப்பெரிதாயும் அதிக பளுவை ஏற்றிக் கொள்ளக் கூடியதாயு மிருக்கின்றன.

ஆகாயக் கப்பல் ஆகாயத்தில் மிதந்த வண்ணமா யிருப்பதற் காக, பிரமாண்டமான ஒரு பை செய்து அதில் ஹைட்ரஜன் என்ற


வாயு நிரப்பப்படுகிறது. பருத்தியும் சணப்பும் கலந்த ஓர்வகைத் துணியால் அந்தப்பை இலேசாய்ச் செய்யப்படுகிறது. ஏராளமான வாயுவை அடைப்பதற்கு அந்தப்பை மிகப் பெரிதா யிருக்கவேண் டும். அவ்வளவு பெரிய பை எந்த உருவத்தில் அமைக்கப்படுவது நலமென்று சாஸ்திர நிபுணர்கள் யோசனை செய்தார்கள். அதை உருண்டை வடிவமாய்ச்செய்தால் காற்று எந்தத்திசையில் வேகமாய் அடித்தாலும், அந்த கூண்டின்மேல் மோதி அதை எங்காவது தள்ளி விடும். ஆகையால் அது புகைச் சுருட்டைப்போல் நீள வடிவமா கச் செய்யப்பட்டது. அவ்வாறு நீளமாயிருந்தால் அது ஆகாயத்தில் விரைவாய்ப் பிரயாணஞ் செய்யும்போது, எதிர்க் காற்றைத் தன் கூர்மையான மூனையால் பிளந்துகொண்டு எளிதாய்ச் செல்வது சாத் தியமாகும். சாதாரண கப்பல் தன் கூர்மையான மூனையால் தண் ணீரைப் பிளந்துகொண்டு விரைவாய்ப் பிரயாணஞ் செய்வதுபோல் ஆகாயக் கப்பலும் செல்கிறது. அந்தப்பிரமாண்டமான ஆகாயக்கூண் டின் கீழே ஒருதொட்டிலைக் கட்டி அதில் ஒரு எஞ்ஜினை அமைத்து அங்கு ஆள்கள் உட்கார்ந்துகொண்டு ஓட்டுகிறார்கள். இலேசானவாயு வால் நிரப்பப்பட்ட மிகப்பெரிய கூண்டுதான் ஆகாயக்கப்பலை மேலே மிதக்க வண்ணமா யிருக்கும்படி செய்கிறது. அந்தப் பையிலுள்ள வாயு மற்ற வஸ்துக்களைப்போல சீதோஷ்ணங்களால் பாதிக்கப்படும். முக்கியமாய் வாயு, கடினமான வஸ்துக்களைவிட அதிவிரைவாய் மாறுத லடைபக்கூடியது. வண்டிச் சக்கரத்திலுள்ள இரும்புஉருளை உஷ்ணத்தால் பெரிதாகிவிடுவதைக் காண்கிறோம். அம்மாதிரி வாயு வால் நிரப்பப்பட்ட பை, ஆகாயத்தில் பிரயாணஞ் செல்லும்போது சூரிய வெப்பத்தால் உஷ்ண மடைந்து அதனுள்ளே யிருக்கும் வாயு பெருகி வெளியே வர முயற்சி செய்யும். அந்த வாயு அதிகமாய்ப் பெருகுமானால் பையை உடைத்துவிடக்கூடும்; அல்லது மேகங்க ளுக் கிடையே சென்று குளிர்ச்சி யடைவதால், அந்தப் பை திடீ ரென்று சுருங்கிவிடவுங்கூடும். அந்தப் பை சுருங்கி மிருதுவாய்ப் போய்விட்டால் ஆகாயத்தைப் பிளந்துகொண்டு விரைவாய்ப் பிரயா ணஞ் செய்யமுடியாது. ஆகையால் அந்தப் பை சுருங்காமலும் பெரிதாகாமலும் ஒரே நிலைமையி லிருப்பதற்கு இரண்டு விதமான உபாயங்கள் செய்யப்பட் டிருக்கின்றன. வாயு அடைக்கப்பட்ட பெரிய பைக்குள்ளே வேறொரு சிறிய காற்றுப் பை வைக்கப்படு கிறது. காற்றுப் பையில் சாதாரண காற்று அடைக்கப் படுகிறது.




ஜெப்பலினைப்போன்ற வேறொரு ஆகாய விமானம்




மானோபிளேன் என்ற ஆகாய விமானம்.



வீ—பிளேன் என்ற கடல் விமானம்.




ஜெப்பலின் விமானம் கொட்டகைக்குள் செல்கிறது.



4½-அங்குல பீரங்கி.



மெஷின் பீரங்கி.



பை—பிளேன் என்ற ஆகாய விமானம்.

இந்தக் காற்றுப்பை, வாயுப் பையினுள்ளே வைக்கப்படுகிறது. அந்த சிறு காற்றுப்பையிலுள்ள காற்றை நமக் கிஷ்டமான போது எடுத்துவிடுவதற்கு உபாயஞ் செய்யப்பட் டிருக்கிறது; பிறகு அதனுள்ளே புதிதாய்க் காற்றை அடைப்பதற்கும் உபாயஞ் செய்யப்பட் டிருக்கிறது.



ஹைட்ரஜன் என்ற வாயு அடைக்கப்பட்ட பையினுள்ளே காற்றடைக்கப்பட்ட மற்றொரு பை அமைக்கப்பட் டிருக்கிறது.



ஹைட்ரஜன் வாயு உஷ்ணமாகி பெரிதாக உப்புச மடைந்தால், காற்றுப் பையிலுள்ள காற்று குறைத்துவிடப்படுகிறது. அப்போது காற்றுப்பை சுருங்கிவிடுகிறது. இந்த 2-வது படத்திலுள்ள காற்றுப்பை சிறிதாகிவிட்டதைக் கவனிக்கவும். அவ்வாறு காற்றுப் பையைக் குறுக்கிவிடுவதால் கூடிவருகிற இடத்தில், உஷ்ண மடைகிற வாயு விஸ்தாரமாய்ப் பரவிக்கொள்ளலாம்.

ஹைட்ரஜன் என்ற வாயு உஷ்ணமாகி,பெரிதாக உப்புச மடைகிறதென்று வைத்துக்கொள்வோம். அப்போது சிறுபையிலுள்ள காற்றை எடுத்துவிட்டால் அந்தச்சிறு பை சுருங்கிவிடுகிறது. அது சுருங்குவதால் உண்டாகிற இடத்தில் பெரிய பையிலுள்ள வாயு விஸ்தாரமாய்ப் பரவுகிறது இதற்கு மாறுகச் சீதளத்தால் வாயு குறுகி விடுமானால், குறுகிய இடத்தை நிரப்புவதற்காக காற்றுப் பையில் அதிக காற்றை அடைத்துப் பெரிதாக்கி, முன் பிருந்த உருவம் மாறுதபடிச் செய்யலாம். மற்றொரு உபாயமுஞ் செய்யப்படுகிறது. பிரமாண்டமான பையைச் சுற்றிலும் சட்டங்களை அமைத்து பெரிய கூடு ஒன்று கட்டப்படுகிறது. இந்தக் கூடு உறுதியாயும் விரைப்பாயு மிருப்பதால் சீதோஷ்ணத்தால் தன் உருவத்

நில் மாறுத லடைவதில்லை. அந்தக் கூட்டினுள்ளே யிருக்கிற வாயுப் பை மாறுத லடைந்தாலும், வெளிக் கூடு பாதிக்கப்படுவ தில்லை. ஆகையால் அது எவ்வித தடையு மின்றி ஒரே நிதானமாய் ஆகா யத்தில் பிரயாணஞ் செய்கிறது. சில ஆகாயக் கப்பல்களில் இந்தக் கூடு அடிப்பாகத்தில் மட்டும் கட்டப்படுகிறது.

ஆகையால் இப்போது மூன்று வகையான ஆகாய்க் கப்பல்க ளிருக்கின்றன. (1) வெளிப்புறத்தில் கூடு கட்டப்பட்டாமல் மிருது வான வாயுப் பை மட்டுமுள்ள ஆகாயக் கப்பலிருக்கின்றது. அந்த வாயுப் பையினுள்ளே ஒரு காற்றுப் பை மேற் சொல்லியவாறு அமைக்கப்பட் டிருக்கிறது. இதனுல் வாயுப்பை திடீரென்று பெரு காமலும் சுருங்காமலு மிருக்கும். இதில் என்ன சௌகரியமென் ரூல், இந்த ஆகாயக் கப்பலை நாம் நினைத்த இடத்துக்கு சிரமமின்றி கொண்டுபோகலாம். வாயுவை எடுத்துவிட்டு அந்த பிரமாண்ட மான பையை மடித்துச் சுருட்டி ஒரு வண்டியில் அடக்கமாய் வைத் துக்கொண்டு போகலாம். பிறகு தேவையானபோது அதில் ஹைட் ரஜன் வாயுவை அடைத்துக்கொள்ளலாம். அந்தப் பைக்குக் கீழே ஒரு தொட்டில் தொங்கவிடப் படுகிறது. அதில் எஞ்ஜின் அமைக்கப்பட்டு, ஆகாயக் கப்பல் ஓட்டப்படுகிறது. அந்தத் தொட் டில், பிரமாண்டமான வாயுப் பையையும் சேர்த்து இழுத்துச்செல் கிறது. அந்தத் தொட்டில் வெகுதூரம் கீழே தொங்கவிடப்பட் டிருப் பதால் வாயுப் பையைத் தன்கூட இழுத்துச் செல்வது சிரமமான காரி யமாகும். ஆகையால் அம்மாதிரியான ஆகாயக்கப்பல் அதிக விரை வாய்ச் செல்லாது; ஜெப்லின்ஸ்போன்றமற்றொரு ஆகாயவிமானம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிற சித்திரப்படம் இம்மாதிரியான ஆகாயக் கப்பலைக் காண்பிக்கிறது. (2) மற்றொரு வகையான ஆகாயக் கப்பலில் அடிப்பாகத்தில்மட்டும் சட்டங்களை அமைத்து உறுதியான கூடுகட்டி, அதில் தொட்டில் சற்று அருகே தொங்கவிடப்படுகிறது. அந்தத்தொட்டில் அதிக தூரம் தொங்காம லிருப்பதால், வாயுப் பையை தன்கூட இழுத்துச் செல்லும்கஷ்டமுறைவுபடுகிறது.வாயுப் பையின் மேல்பாகத்தில் கூடு கட்டப்படுவதில்லை யாகையால், அந்த மேல்பாகத்தை நிறுத்தாய் மடக்கிவிடலாம். அவ்வாறு அதை நாம் நினைத்த இடத்துக்குக்கொண்டுபோகலாம். இந்த இரண்டு தினு சானஆகாயக்கப்பல்கள் பிரான்ஸிலும் கிரேட்பிரிட்டனிலும் கட்டப்

பட்டிருக்கின்றன. (3) வாயுப் பை முழுவதும் சட்டங்களை அமைத்து கூடு கட்டப்படுகிறது. வாயுப் பையின் வெளிப்புற மெல்லாம் விரைப் பாயும் உறுதியாயு மிருப்பதால் அவ்வித ஆகாயக்கப்பல் ஆகா யத்தைப் பிளந்து கொண்டு எளிதாய்ப் பிரயாணஞ் செய்ய முடியும். மேலும் அந்தக் கூட்டை யொட்டினாற்போல் தொட் டில்களை அமைத்து அவைகளில் எஞ்ஜின்கள் வைக்கப்படுகின் றன. அதனால் இந்த ஆகாய விமானம் விரைவாய்ப் பிரயாணஞ் செய்யச் சாத்தியப்படுகிறது. ஆனால் இதில் பெரிய குறை யென்னவென்றால் அந்த பிரமாண்டமான வாயுப்பை உறுதியான கூட்டில் வைக்கப்படுவதால், அதை நிலைத்த இடங்களுக்குக் கொண்டு போவது சாத்தியமில்லை. அதை ஓரிடத்தில் வைத்தி ருப்பதற்கு, பிரமாண்டமான கொட்டகை ஒன்று கட்டி வைக்க வேண்டும். மற்ற தினுசான ஆகாயக் கப்பல்கள், வேலையில்லாத காலங்களில் பந்தோபஸ்தாய் ஓரிடத்தில் மடக்கி அடக்கமாய் வைக் கப்படலாம். ஆனால், முற்றிலும் கூடால் செய்யப்பட்ட ஆகாயக்கப் பலை அவ்வாறு மடக்கிவைக்க முடியாது. பேர்போன ஜெப்பலின் என்ற ஜர்மன் ஆகாயக்கப்பல்கள் இந்த மூன்றாவது தினுசைச் சேர்ந்தவை. ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பலில் வாயு அடைக் கப்பட்ட பை முழுவதும் உறுதியான கூடு கட்டப்பட் டிருக்கிறது. கடலில் கப்பல்களெவ்வாறு மிதந்து செல்கிறதோ அம்மாதிரி காற்றி லும் மிதந்துசெல்லக்கூடிய கூண்டுசெய்யப்படுகிறது. ஆகையால், ஆகாயக்கப்பல் காற்றைவிட இலேசாயிருக்கும்படிச் செய்யப்பட்டு அதில் எஞ்ஜினைப்பூட்டி ஓட்டப்படுகிறது. ஆகையால், ஆகாயக் கப்பல்கள், காற்றைவிட இலேசான யந்திரங்களென்று பெயரிடப் படுகின்றன. ஆனால், காற்றைவிட பளுவான யந்திரங்களும் உயரப் பறந்துசெல்லும்படி கட்டப்படுகின்றன. ஆகையால், ஆகாயரதங் கள் இரண்டு முக்கியமான வகைகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. காற்றைவிட இலேசான யந்திரங்களென்றும் காற்றைவிடப் பளு வான யந்திரங்களென்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. காற்றைவிட இலேசான ரதங்களுக்கு ஆகாயக் கப்பல்களென்று பெயர்; காற்றைவிடப் பளுவான ரதங்களை ஆகாய விமானங்களென்று சொல்லி வருவோம். இனி ஆகாயவிமானங் களைப்பற்றிச்சொல்வோம்.

ஆகாய விமானம்.

அது எவ்வாறு உயரப்பறக்கிறது.

காற்றடி ஆகாயத்தில் பறந்து செல்வதை ஆதாரமாகக்கொண்டு ஆகாயவிமானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காற்றடியானது காற்றைவிடப் பளுவுள்ள தென்பதைக் கவனிக்கவேண்டும். காற்றடியை உயரத்தூக்கிஎறிந்தாலும் அது பிறகுதரையில்வந்து விழுந்துவிடுகிறது. காற்றடி பளுவாயிருந்தாலும், அதைக் காற்றுக்கு எதிர்ப்புறமாக கயிற்றால் இழுத்துப்பிடிப்பதால், காற்றுஅந்தப்படத்தின்மேல் மோதி அதை மேலே எழும்பச்செய்கிறது. காற்றடியைக் கயிற்றால் இழுத்துப் பிடிப்பதுதான் மிகவும் முக்கியமாகும். அவ்வாறு அதை யிழுத்துப்பிடிப்பதால் தான், காற்றின் விசை படத்தைத் தூக்கிவிட்டுக்கொண்டே யிருக்கிறது. கயிற்றால் இழுத்துப் பிடிக்காவிட்டால், படத்தின்மேல் காற்று மோதி அதைக் கீழே தள்ளிவிடும்.

அதே மாதிரியாக, ஆகாயவிமானத்திலுள்ள எஞ்ஜின், விமானத்தை இழுத்த வண்ணமாய் ஒட்டுவதால், காற்றின் விசையானது விமானத்தில் மோதி அதைத் தூக்கிவிட்டுக்கொண்டே யிருக்கிறது. காற்றடியை ஆரம்பத்தில் சிறிது தூரம் இழுத்துக்கொண்டு ஓடி, பிறகு பறக்கச் செய்கிறோம்; படத்தின் மேல் விசையாய் காற்று மோதி அதைத்தூக்கிவிடச் செய்கிறோமல்லவா? அம்மாதிரியாக, ஆகாயவிமானத்தை ஆரம்பத்தில் தரையின்மேல் சிறிதுதூரம் விரைவாய் ஓட்டி, காற்றின்விசை அதன்மேல் மோதும்படிச்செய்து விமானத்தை உயரக்கிளப்புகிறார்கள். தரையின்மேல் சிறிது தூரம் அவ்வாறு ஓட்டுவதற்காக ஒவ்வொரு விமானத்திலும் சக்கரங்கள் அடிப்பாகத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். ஆகாயவிமானம் உயரக்கிளம்பிய பிறகு அதுஎஞ்ஜினுடைய விசையால் அதிவிரைவாய் பிரயாணஞ்செய்கிறது. எஞ்ஜின் விசையால் அது எவ்வாறு பிரயாணஞ் செல்கிறதென்று சொல்வோம்.

ஆகாயத்தில் எவ்வாறு பிரயாணஞ் செல்கிறது.

மோட்டார் வண்டிகளுக்காக மிகச் சிறியதும் அதிக பலங்கொண்டதுமான எஞ்ஜின்கள் செய்யப்பட்ட பிறகுதான், ஆகாயரதங்களில் அவைகளை உபயோகிக்கச் சாத்தியப்பட்டதென்றுசொல்லியிருக்கிறோம். அந்த எஞ்ஜினுக்கு முன்புறத்தில் விசிறிபோன்ற

துடுப்புகள் பிணைக்கப்பட்டிருக்கின்றன. கப்பலிலுள்ள துடுப்புகளை ஜலத்தில்போட்டுத் தள்ளுவதால் கப்பல் ஓட்டப்படுகிறது. இந்த காலத்து நீராவிக்கப்பலில் அந்த துடுப்புகள் எஞ்ஜினுடைய வசையால் அதிவிரைவாய் ஜலத்தில் தள்ளப்படுவதால், கப்பல் விரைவாய்ச் செல்லுகிறது. அதே மாதிரியாக, துடுப்புகளால் காற்றைத்தள்ளிக்கொண்டு ஆகாயவிமானம்முன்செல்கிறது. காற்றைநாம் கண்களால் பார்க்கமுடியாதானலும், அதற்கு ஜலத்துக்குள்ள அநேக லக்ஷணங்களும் இருக்கின்றன. ஜலத்தைப்போல, காற்று குறித்தபளுவுகொண்டது; தன்னைவிட இலேசான வஸ்துக்களைத் தாங்கி மிதக்கும்படிச்செய்யும் சக்தியையுடையது; தன்னிடத்தே நுழைந்து செல்லும் வஸ்துக்களை எதிர்க்கக்கூடியது; தான் மற்ற வஸ்துக்களைப்போல் ஓரிடத்தில் வியாபித்திருக்கக் கூடியது. காற்றுக்கு விசையுண்டென்றும் காற்றை எதிர்த்துச்செல்வது எளிதல்ல வென்றும் யாவரும் அறிந்திருக்கிறார்கள். காற்று நிலைபெற்றிருக்கிற இடத்தில் அதை நீக்கினலன்றி வேறெந்த வஸ்துவும் நிலைபெற முடியாது. ஒரு பாத்திரத்தைத் தலைகீழாய்க் கவிழ்த்து ஜலத்தில் அமிழ்த்தினல், அதற்குள்ளே ஜலம் புகுந்துகொள்ளமுடியாது; ஏனெனில் பாத்திரத்தில் காற்றுஇருப்பதால் அந்தஇடத்தில்ஜலமும் புகுந்துகொள்ளமுடியாது. பாத்திரத்தைச்சற்று சாய்த்துப்பிடித்து ஜலத்தில் அமிழ்த்தினல், அதிலுள்ள காற்றை வெளியே தள்ளிக்கொண்டு ஜலம் புகுந்து கொள்கிறது. ஆகையால், ஆகாய விமானம், காற்று நிரம்பிய இடத்தில் புகுந்துசெல்லவேண்டுமானல், தான் செல்கிற வழியிலுள்ள காற்றை அப்புறப்படுத்தவேண்டும். வழியிலுள்ள காற்றை அப்புறப்படுத்துவதற்காக எஞ்ஜினுடைய துடுப்புகள் விரைவாய்ச் சுற்றப்படுகின்றன. ஒரு திருகுஆணி மரத்துக்குள் எவ்வாறு செலுத்தப்படுகிறது? திருகுஆணியை மரத்தின்மேல் வைத்துத் திருகுவதால், ஆணியின் முன்புறத்திலுள்ள மரம் தூளித்தள்ளப்படுகிறது; அவ்வாறு காலிசெய்யப்பட்ட இடத்தில் ஆணிமுழுவதும் மெல்லப் புகுந்துகொள்கிறது. அவ்வாறே எஞ்ஜினுடைய துடுப்புகள் வீரைவாய்ச்சுழன்று முன்புறத்திலுள்ள காற்றை இருபுறங்களிலும் தள்ளிவிடுவதால், காலிசெய்யப்படுகிற இடத்தில் துடுப்புகளும் அவைகளோடு சேர்க்கப்பட்டுள்ள விமானமும் புகுந்து செல்கின்றன.

விமானத்தின் உருவம்.

ஆகாயவிமானம் காற்றைப் பிளந்துகொண்டு செல்ல வேண்டியிருப்பதால், அதன் உருவம் காற்றுக்குத் தடைசெய்யாமலிருக்கும்படி அமைக்கப் பட்டிருக்கிறது. ஆகாய விமானத்தின் உருவம் பக்ஷியைப் போலிருப்பதைக் கவனிக்கவும். பக்ஷியின் உடலைப்போல அது நீண்டிருக்கிறது ; அதற்கு இரண்டு பக்கங்களிலும் பக்ஷியைப்போல இறக்கைகளிருக்கின்றன. சில விமானங்களுக்கு இறக்கைகளைப்போல இரண்டு மேடைகள் அல்லது தளங்கள் இருக்கின்றன. சில விமானங்களுக்கு ஒரே தளமிருக்கிறது. அதனால், பைபிளேன் என்றும் மானோபிளேன் என்றும் இரண்டு வகையாக விமானங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பைபிளேன் என்றால் இரட்டைத்தளம் என்றும், மானோபிளேன் என்றால் ஒன்றைத் தளமென்றும் பொருள்படும். இத்தத் தளங்கள் ஆகாயவிமானத்தை மிதந்த வண்ணமாயிருக்கும்படிச் செய்கின்றன; காற்று இத்தத்தளங்களுக்கடியில் சென்று அமுந்துவதால் விமானம் மிதந்த நிலைமையிலிருக்கிறது. இந்தத்தளங்கள் மெல்லிய சட்டங்களால்செய்யப்பட்டுத் துணியால் மூடப்பட்டிருக்கின்றன.

இரண்டுவிதமான விமானங்கள்.

பைபிளேன் தினுசைச் சேர்ந்த விமானத்தின் சித்திரப்படத்தைப்பார்த்தால் அதிலுள்ள விவரங்களை எளிதாய் அறிந்துகொள்ளலாம். அதில் இரண்டு தளங்கள் ஒன்றின்மேலொன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்களை இன்னுந்தெளிவாய் அறிந்துகொள்வதற்கு வேறொரு படம் அடித்த பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.


அவ்விரண்டு தளங்களும் அந்த விமானத்தை மிதக்கச் செய்கின்றன. அடியிலுள்ள தளத்தின்மேல் முன்புறத்தில் எஞ்ஜினும் அதைச் சேர்ந்த தூடுப்புகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்ஜினுக்கு முன்னுலுள்ள தூடுப்புகள் இரண்டு அல்லது நான்கு இலைகளைக் கொண்டவையாயிருக்கும். அவைகள் எஞ்ஜினுடைய விசையால் விரைவாய்ச் சுற்றப்படுகின்றன. எஞ்ஜினுக்குப்பின்னுல விமானத்தைச் செலுத்துகிறவன் உட்கார்ந்துகொண்டிருப்பான். எஞ்ஜினுக்குப் பின்னுல் நீளமான வால்போல ஒரு பாகம் நீண்டிருக்கிறது. அந்த வாலின் முனையில் சில விசிறிகள் அமைக்கப்பட்

இந்த இலக்கங்கள் இருக்கிற இடத்துக்கு சோர அவைகளைப் படத்தில் காணலாம். இப்படம் பிரேனே அல்லது இரண்டு தனங் கொண்ட விமானம்:— 1 முதல் 6 வரையிலுள்ள இலக்கங்களை படத்தில் காணலாம். 1-வது இலக்கம் இரண்டு பக்கங்களில் விமானத்தைத் திருப்பக்கூடிய விசிறி. 2 விமானத்தை மேலுங் கீழும் எறியும்படி செய்கிற விசிறி. 3, 4-வது இலக்க முள்ள இடங்களில் ஆகாய விமானிகள் உட்கார்ருவார்கள். ஒருவன் எஞ்ஜினை ஓட்டுவதற்கும் மற்றொருவன் விமானத்தை சரியான வழியில்செலுத்த ஹேதுக்கும் இருப்பான். அவ்விடங்கள் குதிரை மேல் சவாரி செய்வதற்குப் போடப்படும் சேணம்போ லிருக்கின்றன. 5 விமானத்தை ஓட்டுகிற எஞ்ஜின். 6 எஞ்ஜினுடைய விசையால் சுழலும் தூம்புகள்.

டிருக்கின்றன. அந்த விசிறிகளைத் திருப்புவதால் விமானத்தைப் பலதிசைகளில் திருப்பலாம். பின்புறத்திலுள்ள விசிறிகள் முன் புறத்திலுள்ள எஞ்ஜினோடு கம்பிகளால் கட்டப்பட் டிருக்கின்றன. ஆகையால், விமானத்தை ஓட்டுகிறவன் எஞ்ஜினுக்குப் பக்கத்தில்

உட்கார்ந்துகொண்டு அங்குள்ள சில கருவிகளை அசைப்பதால், அந்தக்கருவிகளோடு கம்பியால் கட்டப்பட்டிருக்கிற வால்புறத்து விசிறிகள் திருப்பப்படுகின்றன.

மானோபிளேன் அல்லது ஒற்றைத்தளங்கொண்ட விமானத்தின் படத்தைப்பார்த்தால் அதுவும் மூன் சொன்ன விமானத்தைப்போலவே செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவரும். மானோபிளேன் விமானத்தின் சித்திரப்படத்தில், முன் புறத்தில் துடுப்புகள் கறுப்பாய்த் தெரிவதைப் பார்க்கலாம்; இந்த விமானத்தில் ஒற்றைத்தளத்தின் ஒரு பாதி இறக்கையைப்போல் தெரிவதைக் காணலாம்; மற்றொரு பாதி எதிர் பக்கத்திலிருக்கிறது. மானோபிளேன் விமானத்தின் விவரங்களை கீழேயுள்ள படத்திலும் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.




மானோபிளேன் என்ற ஆகாய விமானம் காமிருக்கிற திசையில் பறந்து செல்வதை இப் படத்தில் தெளிவாய்க் காணலாம். அதில் இரண்டு ஆள்கள் உட்கார்ந் திருப்பதும், இரண்டு பக்கங்களிலும் இறக்கைகள் போன்ற தளம் மீண் டிருப்பதும் தெரியி வருகின்றன. விமானத்தின் அடிப்பாகத்தில் சக்கரங்களிருக்கின்றன. விமானத்தின் முன்புறத்திலுள்ள துடுப்புகள் மிகவும் விரைவாய்ச் சுற்றிக்கொண் டிருப்பதால் கண்ணுக்குத் தெரியவில்லை. விமானத்தின் வால்புறம் மறைந்திருக்கிறது.

இந்த மானுபிளேன், பக்ஷியைப் போலவே செய்யப்பட்டிருக்கிறது. பக்ஷியின் உடலைப்போல அந்த விமானத்தின் கூடு நீண்டிருக்கிறது. முன் புறத்தில் தெரிகிற துவாரங்களுக்குப் பக்கத்தில் எஞ்ஜின் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த எஞ்ஜின் முற்றிலும் கூட்டுக்குள்ளே வைக்கப்பட்டிருக்கிறது. எஞ்ஜினுக்குப் பக்கத்தில் கூட்டுக்குள்ளே விமானத்தை ஓட்டுகிறவன் உட்கார்ந்திருப்பான். ஆகையால் மானுபிளேன் விமானத்தில், அதன் நீண்ட கூடு எஞ்ஜினையும் ஆளையும் தாங்குகிறது. பை-பிளேன் விமானத்தில் அடிப்பாகத்திலுள்ள தளம் அவைகளைத் தாங்குகிறது. மானுபிளேன் விமானத்தில் ஒரே ஒரு தளம் இருப்பதால் ஆகாயத்தில் செல்லும்போது அதிக ஆட்டங்கொடுக்கிறது; ஏதாவது சிறு பிசகு ஏற்பட்டாலும் விமானம் தலைகீழாய் புரண்டு விடுகிறது. பை-பிளேன் விமானத்தில் இரண்டு தளங்களிருப்பதால் அது ஆகாயத்தில் சற்று உறுதியாய் மிதக்கிறது.


விமானத்தை ஆகாயத்தில் செலுத்தும் விதம்.

ஆகாய விமானங்களின் வால்புறத்தில் சில விசிறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விசிறிகளைக்கொண்டு விமானம் எவ்வாறு திருப்பப்படுகிறதென்பதைச் சொல்வோம். வால்புறத்தில் இரண்டு விசிறிகள் இருக்கின்றன. வால் புறத்துக்கு மேலே செங்குத்தாய் ஒரு விசிறி நிறுத்தப்பட்டிருக்கிறது. வால்புறத்தின் முனையில் பல கையைப்போல மற்றொரு விசிறி அமைக்கப்பட்டிருக்கிறது. செங்குத்தாய் நிறுத்தப்பட்டிருக்கிறவிசிறியை வலது பக்கமாய்த் திருப்பினால், விமானம் வலதுபக்கமாய்த் திரும்பும்; அந்த விசிறியை இடது பக்கமாய்த் திருப்பினால், விமானமும் அதே பக்கத்தில் திரும்பும். இதன் காரணத்தை எளிதாய்த் தெரிந்துகொள்ளலாம். ரயில்வண்டி ஓடும்போது,நமது கையைவெளியில் நீட்டினால் காற்றுமிகுந்த வீசையுடன் கையைத்தள்ளுகிறதல்லவா ? அதைப் போலவே, விமானம் வீசைவாய்ச்செல்லும் போது,அதன் இரண்டு பக்கங்களிலும் காற்று மிகுந்த விசையுடன் வீசிக்கொண்டிருக்கும். அந்த நிலைமையில் விசிறியை ஏதாவதொரு பக்கத்தில் திருப்பினால், விசிறியின் மேல் காற்று மிகுந்த விசையுடன் மோதியடிக்கும். ஆனால் விசிறி உறுதியாய் அமைக்கப்பட்டிருப்பதால், காற்றானது விசிறியைத் தள்ளும்போது விமானத்தையும் சேர்த்துத்தள்ளுகிறது. அதனால்

விமானமும் திருப்புகிறது. மற்றொரு விசிறி விமானத்தை மேலுங் கீழுமாய்த் திரும்பும்படிச் செய்கிறது. இந்த விசிறி பலகையைப் போல மட்டமாய் அமைக்கப்பட் டிருக்கிறது. இந்த விசிறி யை மேலே தூக்கினால், வேகமாய் வீசிக்கொண்டிருக்கிற காற்று விசிறியின்மேல் மோதி கீழாகத் தள்ளுகிறது. ஆனால் அந்த விசிறி உறுதியாய் அமைக்கப்பட் டிருப்பதால், விசிறியோடுகூட வால்புறம் முழுவதும் கீழாகத் தள்ளப்படுகிறது. வால் புறம் கீழாகத் தள் ளப்படுவதால், தலைப்புறம் மேல்நோக்கித் திரும்புகிறது. ஒரு பேனு வை மத்தியில் இரண்டு விரல்களால் பிடித்துக்கொண்டு ஒரு முனை யைக் கீழாக அமுக்கினால் மற்றொரு முனை மேல் நோக்கி எழும்புகிற தைக் கவனிக்கலாம். ஆகையால் ஆகாய விமானத்தில் இரண்டு விசிறிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஒரு விசிறி விமானத்தை இரண்டு பக்கங்களில் திருப்புவதற்காகவும், மற்றொரு விசிறி விமா னத்தை மேலுங் கீழுமாய் எறியிறங்கச் செய்வதற்காகவும் இருக் கின்றன. இதே மாதிரியான விசிறிகள் ஆகாயக் கப்பல்களிலும் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஜெப்பலின் கப்பல்களைக் காண்பிக்கிற சித்திரப் படங்களில் அந்த விசிறிகளிருப்பதைப் பார்க்கலாம். ஆகா யக் கப்பல்களிலும், எஞ்சினிலுள்ள தூடுப்புகள் விரைவாய்ச் சுழ ன்று எதிரிலிருக்கும் காற்றைத் தள்ளிக்கொண்டு முன் செல்கின்றன.



இது பை—பிளேன் விமானம். இது வலதுபக்கத்திலிருந்து இடது பக்கமாய் நோக்கிப் பறந்து செல் கிறது. விமானத்தில் இரண்டுதளங் கள் ஒன்றின்மேலொன்று யிருப்ப தும், வால்புறத்தில் • விசிறிகள் அமைக்கப்பட் டிருப்பதும் தெரி கின்றன.



இது மானோபிளேன் விமானம். காமிரு க்கிற திசையை நோக்கிப் பறந்து செல் கிறது. இந்த விமானத்தில், ஒரே தளம், இறக்கைகளைப்போல இருப்பதைக்காண லாம். முன்புறத்தில் தூடுப்புகள் விரை வாய்ச் சுற்றுவது சக்கரம்போலுள்ள உருவத்தில் தெரியவருகிறது. வால்புற த்திலுள்ள விசிறிகளும் தெரிகின்றன.

கடல் விமானம்.

சாதாரண ஆகாயவிமானம் கடலில் மிதக்கும்படி செய்யப்பட்டிருப்பதற்கு ஸீபிளேன் அல்லது கடல் விமானம் என்று பெயர். ஆகாய விமானத்துக்கு அடிப் பாகத்தில், சக்கரங்கள் அமைக்கப்படுவதற்குப் பதிலாக, ஜலத்தில் மிதக்கக்கூடிய கட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடல் விமானத்தில் அதைத் தவிர வேறு விசேஷ மில்லை. ஆகையால் கடல் விமானம் கடலின் மேல் வந்து இறங்கினால் அங்கு மிதந்து நிற்கும். கடல் விமானம் யுத்த கப்பல்களின் உபயோகத்துக்காக இருக்கிறது. அது யுத்த கப்பலில் வைத்துக் கொண்டுபோகப் படுகிறது. தேவையான போது அந்த விமானம் கப்பலிலிருந்து சமுத்திர ஜலத்தில் இறக்கி விடப்படுகிறது. பிறகு அந்த விமானத்தில் ஆள் ஏறி உட்கார்ந்து கொண்டு சமுத்திர ஜலத்திலிருந்து எழும்பி உயரப்பறந்து, சத்துருவின் யுத்த கப்பல்களைப்பற்றிய விஷயங்களை அறிந்துகொண்டு, திரும்பத் தன்சொந்தக் கப்பலுக்கருகில் கடலின்மேல் வந்து இறங்குவான். பிறகு கப்பலிலுள்ளவர்கள் அந்த விமானத்தைத் தூக்கி எடுத்து கப்பலுக்குள்ளே வைத்துக் கொள்வார்கள். சாதாரண விமானங்கள் தரையின்மேல் சிறிது தூரம் ஓடிப்பிறகு உயரக்கிளம்புவதுபோலவே, கடல் விமானக்களும் ஜலத்திலிருந்து எழும்புகின்றன. அவைகள் கடலிலிருந்து உயரக்கிளம்பி, ஆகாயத்திலிருந்த வண்ணமாய் சுற்றிலும் சோதனைசெய்த பிறகு, கடலில் வந்து இறங்குகின்றன. கடல் விமானம் என்றால் சமுத்திர ஜலத்தில்ஓடுகிற விமான மென்று நினைக்கக்கூடாது.

கவுன்ட் ஜெப்பலின் - பிரஸித்திபெற்ற ஆகாய ஸஞ்சாரி.

கவுன்ட் ஜெப்பலின் என்பவரால்ஜர்மனியிலுள்ள ஆகாயக்கப்பல் விருத்திசெய்யப்பட்டதால் அந்த ஆகாயக்கப்பலுக்கு ஜெப்பலின் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அவர் இப்போது அழியாப் புகழைப் பெற்றிருக்கிறரென்றாலும், சமீபகாலத்தில்தான் அவருக்கு அந்த நல்லகீர்த்தி வாய்த்தது. பதினைறு வருஷங்களாக அவர் தமது சொத்துக்களையெல்லாம் செலவுசெய்து ஆகாயக் கப்பல் விஷயமாய் அநேக பரிக்ஷைகளைச் செய்து வந்தார். அவர் ஏராளமான திரவியத்தைச் செலவிட்டுக் கட்டிய ஆகாயக் கப்பல்கள் அழிந்து போய் தம்முடைய முயற்சிகள் வீணனதைக்கண்டு வருந்திக்கொண்

டிருக்கும்போது, புண்பட்ட மனதைக் குத்துவதுபோல நாலா பக்கங்களில் ஜனங்கள் பரிகாசஞ்செய்தார்கள். எழுபது ஆண்டு கள் நிரம்பிய கிழவர் தாம் கட்டிமுடித்த ஆகாயக் கப்பலில் ஏறிக் கொண்டு கம்பீரமாய் ஆகாயத்தில் பறந்து ஜெர்மன் சக்கரவர்த்தி யின் முன்பாக இறங்கி நின்றபோது, ஸான், சக்கரவர்த்தி அள வற்ற வியப்பைக் காட்டினர். "இருபதாம் நூற்றாண்டிலுள்ள ஜெர்மானியருக்குள் இவரே மிகப் பெரியவர்" என்று சக்கர வர்த்தி புகழ்ந்து பேசினர். தள்ளாத காலத்தில் மிகவும் தாம ஸப்பட்டு வந்த பாக்கியம் அவருக்குத் தாராளமாய்க் கிடைத்த தென்பதில் ஐயமில்லை. ஐரோப்பிய ஜாதியாரெல்லோரும் ஆகாய சஞ்சாரத்தில் அரிய பரிக்ஷைகளைச் செய்து வந்த காலத்தில் ஜெர் மானியருடைய கௌரவத்தை அவர் உயரத் தூக்கியவரென்று அவருடைய ஜாதியாரனைவரும் கொண்டாடுகிறார்கள். மற்ற ஜாதி யாரும் அவருடைய விடாமுயற்சியையும் புத்தி கூர்மையையுங் கண்டு மெச்சுகிறார்கள்.

கவுன்ட் ஜெப்பலினுடைய தீரச்செயல்.

அவருடைய மனைவிடனும் துணிச்சலும் பால்யத்திலிருந்தே வெளிப்பட்டன. அமெரிக்காவிலுள்ள யூனிடெட் ஸ்டேட்ஸ் தேசத் தில் யுத்தம் நடந்தபோது, அவர் அங்கு சென்றிருந்தார். அங்கே போர்க்களத்தில் உயரப் பறந்த ஒரு ஆகாயக்கூண்டில் அவரும் ஏறிச்சென்றார். அவர் அவ்வாறு சென்றதற்குக் காரணம், அவருக்கு இயற்கையாயுள்ள துணிகர உணர்ச்சியைத் தவிர வேறொன்று மில்லை. அவர் ஆகாயக்கூண்டில் ஏறிச்சென்ற சம்பவம் அவர் மனதில் வலுவாய்ப் பதிந்துவிட்டது. 1866-ம் வருஷத்தில் ஜெர்மனி ஆஸ் டிரியாவின்மீது யுத்தந் தொடர்ந்தபோது, கவுன்ட் ஜெப்பலின் குதி ரைப்படைத் தலைவராய் யுத்த ஆரம்ப முதல் கடைசி வரையில் சண்டை செய்தார். 1870-ம்வருஷத்தில் நடந்த பிரஞ்சுஜெர்மானிய யுத்தத்தில், அவருடைய வீரச் செயல்களைக்கண்டு, ஜெர்மன் சேனை முழுவதும் ஆச்சரியமடைந்தது. அவ்வருஷம் பிரஞ்சு கவர்ன் மெண்டு யுத்தந் தொடங்குவதாக அறிவித்து இரண்டு மணி நேரம் செல்வதற்குள்ளாக, கவுன்ட் ஜெப்பலின் 11-குதிரையாட்களை தம் முடன் அழைத்துக்கொண்டு பிரஞ்சு பிரதேசத்துக்குள் புகுந்து விட்டார். பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் யுத்தத்துக்கு சேனை

இன்னும் திரட்டப்பட்டு முடியவில்லை. அதற்குள்ளாக 11-ஜெர்மன் குதிரைகள் பிரஞ்சு சேனையைத் தாண்டிச் சென்று அட்டகாசம் செய்வதாக பிரான்ஸ் தேச முழுவதும் சமாசாரம் பரவிவிட்டது. 11-ஜெர்மன் குதிரையாட்களைக் கொன்றோ கொல்லாமலோ தக்ஷணமே பிடித்துவிட வேண்டுமென்று பிரஞ்சு படைகளுக்கெல்லாம் உத்தரவு செய்யப்பட்டது. உடனே பிரஞ்சு ஜனங்களும் தருப்புகளும் எல்லாப் பாதைகளிலும் புகுந்து தேட ஆரம்பித்தார்கள். கவுன்ட் ஜெப்பலினும் மற்றவர்களும் எதிர்க்கக்கூடியின் ராணுவ இரகஸ்யங்களை சீக்கிரத்தில் அறிந்துகொண்டு வயல்களிலும் காடுகளிலும் புகுந்து அதிவிரைவாய்த் திரும்பி விட்டார்கள். அவர்கள் பிரஞ்சு எல்லைப்புறத்துக்கு வந்ததும், பயித்தியம் பிடித்தவர்கள் போலத் தலைகால் தெரியாமல் தங்கள் குதிரைகளை பிரஞ்சு தருப்புகளுக்கு இடையே செலுத்தினார்கள். பிரஞ்சு தருப்புகள் தங்கள் துப்பாக்கிகளைக் கொண்டு ஜெர்மன் குதிரைகளை யெல்லாம் கொன்று விட்டார்கள். ஜெப்பலின் ஏறிக்கொண்டிருந்த குதிரையும் சுடப்பட்டு விழுந்தது. பிரஞ்சு குதிரைத்தருப்பு கவுன்ட் ஜெப்பலினைப் பிடிக்க வந்தபோது, அவர் அந்த பிரஞ்சுக்காரனைச் சுட்டுக் கொன்று அவனுடைய குதிரை மேல் ஏறி ஜெர்மன் பிரதேசத்துக்குத் திரும்பி வந்தார். அவர் ஒருவர்தான் தப்பி வந்தவர்; மற்ற 10-பேரும் கொல்லப்பட்டும் பிடிக்கப்பட்டும் போயினர். பிரஞ்சு தருப்புகள் காலா பக்கங்களிலும் கவுன்ட் ஜெப்பலினைப் பிடிக்கத் தேடிக்கொண்டிருந்தார்கள். பிரஞ்சு தருப்புகள் தங்களைப் பற்றிய இரகஸ்யங்களெல்லாம் வெளியாகிவிட்டதென்று தெரிந்துகொண்ட பிறகே ஜெப்பலின் தப்பியோடியவிஷயத்தை நம்பினார்கள். இப்படிப்பட்ட அதிசயமான துணிகரச் செயலால் பிரபலம் பெற்ற கவுன்ட் ஜெப்பலின் 1891-ம் வருஷத்தில் குதிரைப் படைகளுக்குத் தலைமையிருந்து ராணுவத் தொழிலினின்றும் நீங்கிக் கொண்டார். சில மாதங்களுக்குப் பிறகு ஒரு ஆஸ்டிரிய சாஸ்திர நிபுணர் கட்டிக்கொண்டிருந்த ஆகாயக் கப்பல் கவுன்ட் ஜெப்பலினுடைய கவனத்தைக் கவர்ந்தது. உடனே அவர் அந்த ஆகாயக் கப்பலை விலைக்கு வாங்கி பல வழிகளில் விருத்தி செய்யத் தொடங்கினார். 1892-ம் வருஷ முதல் 1908-ம் வருஷம் வரையில் 16-வருஷ காலமாக அவர் ஆகாயக் கப்பலில் பற்பல பரிக்ஷைகளைச்

செய்து பார்த்தார். அவர் 60-ம் வயதில் முதன் முதலாகக் கட்டி முடித்த பெரிய ஆகாயக் கப்பலில் ஏறி அதை உயரச்செலுத்தினர். ஆனல், அந்த ஆகாயக் கப்பல் தரையில் கட்டிவைக்கப்பட் டிருந்த போது, பெரும் புசற்காற்று அடிக்கவே, அது தரையிலிருந்து பிடுங்கிக்கொண்டு மாங்களில்மோதி நொறுங்கிப்போயிற்று. கவுண்ட் ஜெப்பலின் தம்முடைய ஆரம்ப முயற்சி வீணனதைக் கண்டு மனமொடுங்காமல், மறுமுறை ஏராளமான திரவியத்தைச் செலவு செய்து வேறொரு கப்பல் கட்டினர். பிறகு அகேக நூதன முறை களை விருத்திசெய்ய வேண்டுமென்று அவருக்கு யோசனைகள் தோன்றியதால், வேறுவித ஆகாயக்கப்பல்களைச் செய்யும்படி நேரிட் டது.

உண்மையான தேசாபிமானம் வெளிப்பட்டது.

அவர்தம் சொத்துகளை இழந்தபிறகு, கடன் வாங்கியும் யாசகம் கேட்டும் சேகரித்த பணத்தைக்கொண்டு ஆகாயக்கப்பல்களைக் கட்டி னர். அவைகளைக் கட்டும்போதும் உயரச் செலுத்தும்போதும் ஒவ் வொன்றுக்கும் ஏதாவதொரு ஆபத்து நேரிட்டுக்கொண்டே யிருந் தது. அவர் தம்முடைய முயற்சிகளெல்லாம் இன்னும்முடிவான பல னைத் தாவில்லையென்றும், சேர்ந்த ஜனங்களாலும் கவர்ன்மெண்டா லும் கவனிக்கப் படவில்லை யென்றும் வருத்தமடைந்து பணமில்லா மல் தவித்துக்கொண்டிருந்தபோதிலும், அவருடைய பரிசுத்தமான தேசாபிமானம் சற்றும் களங்க மடைபவில்லை. அங்கிய தேச கவர்ன்மெண்டுகள் அவருக்குத் தாராளமான பணஉதவி செய்து ஜெர்மானியரைவிட அதிக கௌரவமாய் நடத்துவதாக அவருக்கு அறிவித்தார்கள். கவுண்ட் ஜெப்பலினுடைய கஷ்டங்களும் மன நிலைமையும் அங்கிய கவர்ன்மெண்டுகளுக்கு அவ்விதயோசனையைத் தூண்டும் படியாக அவ்வளவு பரிதாபமா யிருந்தன. ஆனல், துன்பங்கள் மேன்மேலும் வந்து அவருடைய மனதை வதைத்த போதிலும், பொருளும் புகழும் வேண்டுமென்று அவருக்கு ஆசை பொங்கிய போதிலும் தம்முடைய ஆகாயக் கப்பலைப் பற்றிய இர கஸ்யங்களை அன்னியருக்கு விற்றுவிடும் யோசனைமட்டும் அவருக்கு எள்ளளவும் கிடையாது. அவருடைய மனம் அவ்வாறு கடுமை யாய்ச் சோதிக்கப்பட்டபோது, உண்மையான தேசாபிமானத்தின் மகிமை எப்படிப்பட்ட தென்பது அவரிடத்தில் விளங்கிற்று. கவு

ன்ட் ஜெப்பலின் ஜெர்மன் தேசத்தவர்; அவருடைய சாமர்த்திய மும் புத்திவிசேஷங்களும் சொந்த தேசமாகிய ஜெர்மனிக்குப் பயன்படாமற் போகுமானால் அந்த விசேஷ குணங்கள் கடைசியில் தம்முடன் கூட நாசமாவதே நலமென்று உறுதி கொண்டார். அவ் வாறே அவர் அந்திய கவர்ன்மெண்டுகளுக்குப் பதில் சொன்னர்.

கடைசியாக அவர் நான்காம்முறை கட்டிய ஆகாயக் கப்பலில் ஏறிச்சென்று யாவரும் அதிசயிக்கும்படியாய் ஆகாயத்தில் பிர யாணஞ் செய்தபோதுதான், ஜெர்மன் சக்கரவர்த்தியும் கவர்ன் மெண்டும் பொது ஜனங்களும் அடங்காத சந்தோஷத்துடன் அவ ரைக் கொண்டாடினர்கள். ஸ்விட் ஜர்லாந்து தேசத்தின் எல்லைக்கரு கிலுள்ள ஒரு ஜெர்மன் கிராமத்தில் கவுன்ட் ஜெப்பலின் தம்முடைய ஆகாயக்கப்பல்களைச் செய்வதற்காகக் கட்டிய இரண்டொருகொட்ட கைகள் இப்போது கவர்ன்மெண்டின் அதிகாரத்துக்குட்பட்ட பிறகு பிரமாண்டமான யந்திர சாலைகளாக மாறியிருக்கின்றன. கவுன்ட ஜெப்பலினுடைய ஏக புத்திரியும் அவருடைய சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கு உதவியாயிருந்து, ஆகாயக் கப்பலைச் செய்வதிலும் செலுத்துவதிலும் மிகுந்த சமர்த்தியம் காண்பித்துவந்தார். கவுன்ட் ஜெப்பலின் பால்யத்தில் சத்துருவின் குதிரைமேல் ஏறித்தப்பித்துக் கொண்டபோது அவர் மனதைத் தூண்டிவிட்ட அதே துணிகர உணர்ச்சிகள், இந்த மகாயுத்தத்தைக் கண்டவுடன் மறுபடியும் துள்ளி எழும்பவே, அவர் எழுபத்தியாறு ஆண்டுகளின் சுமையை லக்ஷியஞ் செய்யாமல் தாமும் ஆகாயக் கப்பலே யுத்தகளத் தில் செலுத்துவதாக முன்வந்தார். நீரமும் தேசாபிமானமும் அவரி டம் இயற்கையாய்ப் பிறந்துள்ளன. இப்படிப்பட்ட சரித்திரத்தை யுடையவரின்போல் இப்போதுவழங்கப்படுகிற ஆகாயக்கப்பல்கள், ஜோர்க் கிரகங்களைத்தவிர ஆகாயத்தில் சஞ்சரிக்கும்படியான மற்ற வஸ்துக்களிலெல்லாம் மிகப் பெரியவையென்றே சொல்லலாம்.

ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பல்களைப் பறக்கவிட்டு பரிக்ஷை செய்தபோது யாதொரு உயிர்ச்சேதமும் முண்டாகவில்லை என்பது ஒரு விசேஷமாகக் குறிப்பிடப்படுகிறது. எனெனில் மற்ற இனு சான ஆகாய விமானங்களில் அநேக உயிர்ச்சேதங்கள் உண்டா யிருக்கின்றன. ஆனல் 1913-ம் வருஷத்தில் இரண்டு ஜெப்பலின்கள் சேதமாயின. ஜெர்மன் கடற்படையோடு ஒரு ஜெப்பலினும் கூடச்

சென்று யுத்த பயிற்சிகளை நடத்தியபோது, பெரும் புசற் காற்று டித்து அதை 5000 அடிஉயரத்தில் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அச்சமயம் அந்த ஜெப்பலினிலிருந்த வாயுக் கூண்டுகள் சேதமான படியால் ஆகாயக்கப்பல் சரியானபடி மிதக்கவில்லை. அதில் பழுது பார்த்துக்கொண் டிருந்தபோது மறுபடியும் புசற் காற்றும் மழை யும் அடித்து அக்கப்பலைக் கடலின்மேல் வீழ்த்திவிட்டன. அந்த ஜெப்பலினி லிருந்தவர்களில் 14 பேர் இறந்துபோனார்கள். அதே வருஷத்தில் (1913), மற்றொரு ஜெப்பலின் கப்பல் ஆகாயத்தில் பறந்து சென்றபோது, அதிலிருந்த கூண்டுகளிலிருந்து ஹைட்ரஜன் வாயு வெளியே ஒழுகத் தொடங்கியது. இதனால் அபத்தண்டாகா தென்றும், ஜெப்பலினுக்கு அடிப்பாகத்தில் அமைக்கப்பட்ட எஞ் ஜினிலிருந்து சிறுகெருப்புப் பொறி கிளம்பி ஹைட்ரஜன் வாயுக்கு நீவைக்கவே, ஆகாயக் கப்பல் முழுவதும் வெடித்து சாம்பலாய்ப் போயிற்று. அதிலிருந்த 28பேர்களும் மாண்டு போனார்கள். இந்த இரண்டு விபத்துகளைத் தவிர்த்தால், ஜெப்பலின் கப்பல்களில் அதிக உயிர்ச்சேதம் நேரிடவில்லை என்று சொல்லலாம்.


ஜெப்பலின் கப்பலைப்பற்றிய விசேஷங்கள்.


ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பல் சுமார்500அடி நீளமுள் ளது. தஞ்சாவூரிலுள்ள பெரியகோபுரம் 200அடிஉயரமுள்ள தென் பதை ஞாபகப் படுத்திக் கொண்டால் ஜெப்பலின் என்றஆகாயக் கப் பலின் நீளம் செவ்வையாய் கவனத்துக்கு வரும். 'ஜீன்டியுக்' என்ற மிகப்பெரிய பிரிட்டிஷ் சண்டைக்கப்பல் 575அடிநீளமும் 89அடிஅக லமும் இருக்கின்றது. ஆகையால், ஜெப்பலினை ஆகாயக்கப்பலென்று, எவ்விதத்திலும் சொல்லத்தகும். ஜெப்பலினுடைய அகலம் அதா வது குறுக்களவு 50அடியாகிறது. அதனுடைய பருமன் 157அடி. இவ்வளவு பெரிய கூடு மிகவும் உறுதியாய்ச்செய்யப்படுகிற தென்று சொல்லத் தேவையில்லை. புசற்காற்றை எதிர்த்துக் கொண்டு மணிக்கு 50மைல் வீதம் பாய்ந்து செல்ல வேண்டுமானால் அந்தக் கப் பல் எவ்வளவு உறுதியாய்க் கட்டப்படவேண்டும். உறுதியாய்ச் செய்வதில் யாதொரு கஷ்டமுமில்லை யென்றும் அதுமிகவும் இலேசா யிருக்கவேண்டியது அவசிய மதையால் ஜாக்கிரதையாய்ச் செய்யப் படவேண்டும். அலுமினியம் என்ற இலேசான உலோகத் தோடு வேறுவித உலோகங்களைக் கலந்து இலேசாயும், உறுதியாயு

சுவரில் ஜெப்பலின்—இரண்டு ஆகாயக் கப்பலைக் காட்டுவர்.




ஆகாய மிமான்திற்கல் மெஷின் பீரங்கி எற்படுத்தப்பட்டிருக்கிறது படத்தில் கப்பல் வலதுபுறத்திலிருந்து கொண்டுசெல்லாக ஒரு குழாய்போல் படத்தில் தெரிவதன் பீரங்கி.





ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பல்:—1,2 வது நெம்பர்கள் ஆகாயக்கப்பலைத் திருப்பும் விசிறிகள் 3-வது நெ, ஜெர்மன் கொடி பறக்கிறது. 4—வது 6 வது தொட்டில்கள். 5-வது ஆகாயக் கப்பலில் கட்டப்பட்டுள்ள அறைகள். 7-வது, மெஷின் பீரங்கி. ஆகாயக்கப்பலின் மத்தியபாகத்தில் வாயுக்கூண்டுகளும் சட்டங்களும் திறந்து காண்பிக்கப்பட்டிருக்கின்றன.



ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பலின் அடிப்பாகம்:—படத்தின் அடிப்பாகத்தின் மேலது புறத்தில் தொட்டிலின் ஒரு பாகம் தெரிகிறது. அதற்கப்பால் ஆகாயக் கப்பலில் கட்டப்பட்டுள்ள அறைகள் வரிசையாயிருப்பதைக் காணலாம். அங்கு ஆள்கள் படமாடுவதும் மின்சாரவிளக்கு எரிவதும் கிறந்து காட்டப்பட்டிருக்கின்றன. அறைகளுக்கு மேலே குழாய்க்குள் ஏணி அமைக்கப்பட்டு கப்பலின் உச்சிக்குச் செல்கிறது. அதில் ஒரு ஆள் ஏறிச்செல்கிறான்.



ஆகாய ரதங்களில்
உபயோகிக்கப்படும் வெடிகுண்டு.

மூள்ள சட்டங்கள் செய்யப்படுகின்றன. அந்தக் கூடு கட்டப்படுவ தற்கு, சுமார் 15,000 பவுண்ட் பளுவுள்ள அலுமினியம் தேவையா யிருக்கிறதென்றால்அதன்உருவத்தைஒருவாறு அறிந்துகொள்ளலாம். (25 பவுண்ட் கொண்டது ஒரு மணங்கு.) இந்தசட்டங்கள் பருத்தியும் ரப்பரும் கலந்த ஓர்வகைத் துணியால் மூடப்படுகின்றன. இந்தக் கூடு அநேக அறைகளாகத் தடுக்கப்பட் டிருக்கிறது. அவைகளுக்குள் 17 சிறுபைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அந்தபைகளுக்குள்ஹைட் ரஜன் என்றவாயு அடைக்கப்படுகின்றது. அவ்வாறுவாயு அடைக்கப் பட்ட பைகள் வடிவத்தில் முட்டைகளைப் போலிருக்கும். (இந்த விவரங்களோடு மதது சித்திரப் படங்களில் காணலாம்.) சத்துருக்கள் தங்கள் பிரங்கிகளைக் கொண்டு ஜெப்பலீன் நோக்கிச் சுட்டால், அதி லுள்ள சில பைகள் சேதமானலும் பாதகமில்லை என்பதைக் கவனிக் கவும். ஏனெனில் சேதமாகாத மற்றப்பைகளில் வாயுநிரம்பி யிருப் பதால் ஜெப்பலின் எவ்வித ஆபத்துக்கும் உள்ளாகாமலிருக்கும். மற்றத் தினுசான ஆகாயக் கப்பலில் ஒரே பையில் வாயு அடைக்கப் படுவதால், அந்தப் பையில் ஒரு சிறு துவாரம் உண்டானால், கப்பல் மூழுவதும் பயன்படாமற் போகும். ஜெப்பலினிலுள்ள அந்தப்பை களில் துவாரங்கள் உண்டானால் அவைகளைப் பழுதுபார்க்கலாம். அந்த ஆகாயக்கப்பலின் வெளிப்புறத்தில் உறுதியான சட்டங்களால் கூடுசெய்யப் பட்டிருக்கிற தென்று சொல்லி யிருக்கிறோம். அந்த சட்டங்களில் ஏணிபோல் படிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஆகையால் அந்த சட்டங்களின் வழியாய் மேலே ஏறிச்சென்று எந்த பாகத்தையும் பழுது பார்க்கலாம்.

ஜெப்பலின் கப்பலில் ஆச்சரியமான யந்திரங்களும் எஞ்ஜின்களும்.

இந்த பிரமாண்டமானகூட்டுக்கு அடிப்பாகத்தில்இரண்டுதொட் டில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில்சுமார் 500குதிரை யோட்டங் கொண்ட எஞ்ஜின்கள் வைக்கப்பட் டிருக்கின்றன. ஒரு தொட்டில் முன்புறத்திலும் மற்றொரு தொட்டில் பின்புறத்திலும் அமைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளிலுள்ள வலுவான எஞ்ஜின் கள், மோட்டார்வண்டியில் உபயோகிக்கப்படுகிற பெட்ரோல் என்ற ஓர்வகையான மண்ணெண்ணெயால் வேலைசெய்யப் பட்டு, ஆகாயக் கப்பலை விரைவாய் ஓடச்செய்கின்றன. அதுசுமார் மணிக்கு 50மைல் வீதம் பிரயாணஞ் செய்யும். தென்னிந்தியா ரெயில் வண்டித் தொடர் 23மைல் வீதம் ஓடுகின்றதென்பதைக் கவனிக்கவும்.

ஒவ்வொரு எஞ்ஜினையும் ஓட்டுவதற்கு அநேகம் பேர் தேவையாயிருக்கிறார்கள். ஒருஜெப்பலின் கப்பலில் மொத்தம் 30 பேர் இருக்கிறார்கள். ஆகாயக் கப்பலேச்சரியான திசையில் செலுத்துவதற்காக, முன்புறத்திலுள்ள தொட்டிலில் ஒரு உத்தியோகஸ்த நிருக்கிறார். மூன்புறத்துத்தொட்டிலில் அநேகநுட்பமான கருவிகளிருக்கின்றன. திசைகளேக் காட்டுவதற்கும், உயரத்தைக் குறிப்பிடுவதற்கும், கால நிலேயை யறிவதற்கும், இன்னும் பலகாரியங்களுக்கும் கருவிகள் தேவையாயிருக்கின்றன; கண்ணுடியைப்போன்ற ஓர்வகை வஸ்த்துவால் ஜென்னல்கள் தொட்டிலேச் சுற்றி அமைக்கப்பட் டிருக்கின்றன. தொட்டிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஜென்னல் வழியாய் வெளியே நாலா பக்கங்களில் கவனித்து வருவார்கள். ஜெப்பலின் நடுச்சமூத்திரத்தில் இறங்கி நிற்கக் கூடியது. அத்தத்தொட்டில்கள் ஜலத்தின் மேல் மிதந்து நிற்கக் கூடியதாய் செய்யப்பட் டிருக்கின்றன.

பின்புறத்தில் அமைக்கப்பட்ட தொட்டிலிலும் ஒரு எஞ்ஜின் வைக்கப்பட் டிருக்கிறது. அது ஆகாயக் கப்பலேச்செலுத்துவதோடு மின்சார சக்தியையும் உற்பத்திசெய்கிறது. ஆகாயக் கப்பலில் மின்சாரசக்தி பலவிதங்களில் உபயோகிக்கப்படுகிறது. ஆகாயக் கப்பலில் விளக்குகள் மின்சாரத்தால் எரிக்கப்படவேண்டும். எண்ணெயை உபயோகிப்பதற்கு முக்கிய ஆக்ஷேபம் தீவிபத்துகள் நேரிடக்கூடு மென்பதே. ஆகாயக் கப்பலில் நிரப்பப்பட்டுள்ள ஹைட்ரஜன் என்றவாயு மிகவும் எளிதாய்த் தீப்பிடித்துக் கொள்ளக்கூடியது. எஞ்ஜின்கள் வேலேசெய்வதற்கு பெட்ரோல் எண்ணெயை உபயோகிப்பது தீராத அவசியமாயிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன், இந்த எஞ்ஜினிலிருந்து சிறு தீப்பொறி கிளம்பி ஹைட்ரஜன் என்ற வாயுவைத் தீண்டினவுடன், ஜெப்பலின் முழுவதும் நாசமாகிவிட்டது. ஆகையால் கூடுமானவரையில் எண்ணெய்க்குப் பதிலாய் மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது.

படுக்கை அறைகளும் சமையல் அறைகளும்.

இரண்டு தொட்டில்களுக்கு மிடையே யுள்ள பாகத்தில் பெரிய அறைகள் கட்டப்பட் டிருக்கின்றன. ஜெப்பலின் கப்பலில், அந்த நேர்த்தியான அறைகள்தான் மிகவும் அதிசயமான்வையென்று கருதப்படுகிறது. ஜெப்பலினேப்பார்ப்பவர்களேயே வரும் அந்த அறைகளேக்கண்டு ஆச்சரியப்படாம லிருப்பதில்லே.

அந்த அறைகள் வலுவான சட்டங்களால் மிகவும் அழகாயும் அடக்கமாயும் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில், ஆகாயக் கப்பலின் தலைவரும் மற்றப் பெரிய உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். அந்த அறைகளில் தான், கம்பியில்லாத் தந்தியந்திரமும், சோதனை விளக்கும், வெடி குண்டுகளும், உத்தியோகஸ்தருக்கும் சிப்பந்திகளுக்கும் தேவையான படுக்கை அறைகளும், பெட்ரோல் எண்ணெயும், பலவித இரும்பாயுதங்களும், சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறைகளில் தான் உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் வேலையில்லாத நேரங்களில் படுத்து உறங்குவார்கள். அந்த அறைகளில்தான், மின்சார சக்தியால் அடுப்பு எரிக்கப்பட்டு சமையல் செய்யப்படுகிறது. அந்த அறைகள் வாயுக் கூண்டுக்குக் கீழ்பாகத்திலிருக்கின்றன. அந்த அறைகளுக்கு மேலேயுள்ள கூரையைத் தளைத்து ஒரு பெரிய குழாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழாய் வாயுக்கூண்டின் மேலே ஏறிச் செல்வதற்கு வழியாக உபயோகிக்கப்படுகிறது. அந்தக் குழாய்க்குள்ளே ஏணி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஜெப்பலின் விமானத்தின் அடிப்பாகத்திலுள்ள உத்தியோகஸ்தர் தாமிருக்கிற அறையிலிருந்து அந்தக் குழாய் வழியாய் 50 அடி உயரம் ஏறிச்சென்று ஆகாயக் கப்பலின் உச்சிக்குப் போகலாம். அந்தக்கூண்டின்மேலே நின்று கொண்டு ஆகாயத்துக்கு மேலே கவனமாய்ப்பார்த்து சத்துருவின் விமானங்கள் அருகிலிருக்கின்றனவா என்று சோதனை செய்யலாம். ஆகாயக்கப்பலுக்கு மேலே ஏறி நின்றுகொண்டு ஆகாயமெல்லாம் கண்களால் பார்த்துச் சோதனை செய்வது ஜெப்பலின் விமானத்தில் தான் சாத்தியப்படுகிறது. ஏனெனில், ஜெப்பலின் விமானமுழுவதும் பிரமாண்டமான கூடு கட்டப்பட்டிருக்கிறது. அந்தக்கூடு மிகவும் உறுதியா யிருப்பதால் அதிகப் பளுவைத் தாங்குகிறது. அந்தக் கூண்டின்மேலே ஒரு மெஷின் பீரங்கி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மெஷின் பீரங்கியைக்கொண்டு, ஆகாயத்துக்கு மேலே நடமாடுகிற சத்துருவின் விமானங்களை நோக்கிச் சுடலாம்.

தந்திக் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன.

ஜெப்பலினுக்கு இரண்டு மூலைகளில் இரண்டு தொட்டில்களும் அவைகளுக்கு இடையில் அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்று சொன்னேனும். அவைகளெல்லாம் விமானத்தின் அடிப்பாகத்

திலிருக்கின்றன. அந்த அடிப்பாக மூழுவதிலும் நடமாடுவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. கப்பல் விமானத்தின் தலைவர், தாமிருக்கிற அறையிலிருந்து இரண்டு மூணியிலுமுள்ள தொட்டில்களுக்கு நடந்து செல்லலாம். தலைவரிருக்கிற அறையிலிருந்து இரண்டு பக்கங்களிலும் 200-அடி நீளத்துக்கப்பால் அந்தத் தொட்டில்களிருக்கின்றன. அதாவது சுமார் நான்கு வீடுகளுக்குள் நுழைந்து செல்கிற தூரமாகிறது. தலைவர், தாமிருக்கிற அறையிலிருந்தே 'டெலிபோன்' என்ற பேசுங் தந்தி மூலமாய் விமானத்திலுள்ள எந்த பாகத்துக்கும் உத்தரவு செய்யலாம்.

ஒரு ஜெப்பலின்விமானம் சுமார் ஐந்து டன் நிறையைச்சுமந்து செல்லக்கூடியது. அதாவது சுமார் 100 ஆள் பளுவு ஆகிறது. சாமான்கள் ஆள்கள் இவைகளின் பளுவுபோக, வெடி குண்டுகள் மட்டும் ஒன்றரை டன் நிறை ஏற்றலாம். கம்பி யில்லாத் தந்தி யந்திரம் 150 பவுண்ட் பளுவுள்ளது. அதன் மூலமாய் சமாச்சாரம் அறிவிக்கும்போது, 750 அடி நீளமுள்ள கம்பி ஆகாயக் கப்பலிலிருந்து, தொங்கவிடப்படுகிறது. மின்சாரம் அந்தக் கம்பி மூலமாய் செலுத்தப்பட்டு அந்தரத்தில் தாவிச் செல்கிறது. யந்திரத்தை உபயோகிக்காதபோது, அந்தக் கம்பி ஒரு சக்கரத்தில் சுருட்டி வைக்கப்படுகிறது.

ஜெப்பலின் கப்பலிலுள்ள விசேஷ மெண்ணவென்ஜல் அது ஏராளமான பளுவைச் சுமந்து பிரயாணஞ் செய்வதாகும். ஆகையால் எஞ்ஜின்களைக்கொண்டு வெகு தூரம் பிரயாணஞ் செய்வதற்குத் தேவையான எண்ணெயும் 30 ஆள்களுக்குத் தேவையான ஆகாரமும் ஜெப்பலினில் ஏற்றிக்கொண்டுபோகலாம். அதனால் ஜெப்பலின் 1200 மைல் தூரம் இடைவிடாமல் பிரயாணஞ் செய்யக்கூடிய தாயிருக்கிறது. அதாவது ஜெர்மனியி லுள்ள கீல் வாய்க்காலிலிருந்து அயர்லாந்திலுள்ள டப்ளின் நகரம் வரையில்சென்று, பிறகு புறப்பட்ட இடத்துக்குத் திரும்பி வந்து விடவுங்கூடும். மற்ற தினுசான ஆகாயக் கப்பல்கள் இவ்வளவு தூரம் பிரயாணஞ் செய்ய முடியாது.

நூதனகாலத்து அதிசயங்களுள் ஒன்று.

ஜெப்பலின் கப்பலில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தைக்கொண்டு அதிலுள்ள சோதனை விளக்கும் கம்பியில்லாத் தந்தி

யந்திரமும் வேலை செய்யப்படுகின்றன. கம்பியில்லாத்தந்தி யந்திரத்தால் வெகுதூரத்திலுள்ள நகரங்களுடன் சமாசாரப் போக்குவரத்து நடத்தலாம். பாரிஸ் நகரத்தின்மேல் 10,000 அடி உயரத்தில் மேகங்களின் மறைவில்யோசனை செய்யும் 30 பேர்கள், தங்கள்எண்ணங்களை பொலின் நகரத்து அதிகாரிகளுக்கு அறிவித்துக்கொண்டிருக்கலாம். நடு இரவில் நித்திரையில் ஆழ்ந்த நிசப்தமான நகரத்தின் மேல் மேகத்தையும் இருளையும் திடீரென்று சூரியன் பிளந்துவிட்டாற் போல, கப்பலிலுள்ள சோதனை விளக்கு அதிகப் பிரகாசமான வெளிச்சத்தை வீசி, நகரம் முழுவதையும் மூராட்டுத்தனமாய் எழுப்பிவிட்டுப் போகலாம். மேகங்களில் தீக்கிச்செல்லும் இந்த திமிங்கலம் போன்ற ஜெப்பலின் உயரத்தில் மிதந்து நின்று, கீழே சமுத்திர அலைகளோடு அலக்ஷியமாய் அசைந்துகொண்டிருக்கும் பெரிய யுத்த கப்பலின்மீது வெடிகுண்டுகளை எறிந்துவிட்டு, தக்ஷணமே இருட்டில் முழுகிச் செல்லலாம். யுத்தகளத்தில் ஜெப்பலின் பறந்து சென்று சத்துருக்களின் இருப்பிடங்களையும் நடமாட்டங்களையும் அறிந்துகொண்டிருக்கையில், பூமியிலுள்ள பீரங்கிகள் ஆகாயத்தைப்பார்த்து கர்ஜிக்கத்தொடங்குனல், அது உயரத்திலிருக்கும் மேகங்களைக் கிழித்துப் போர்த்துக்கொண்டு மறைந்துவிடலாம்.

ஆகாயக்கப்பல்களுக்குள் ஜெப்பலின் தினுசுகள் மிகச்சிறந்த வையானாலும், ஆகாயக்கப்பல்களுக்குப் பொதுவாயுள்ள சில குறைகள் ஜெப்பலினிலும் காணப்படுகின்றன. ஆயினும், ஜெப்பலின் விஸ்தாரமான அமைப்பையும்ஞாளமான வன்மையையும் பெற்றிருப்பதோடு அதில இலேசாயு மிருப்பதைக் கருதினால், நூதன காலத்து அதிசயங்களுள் ஒன்றாக அதைச் சொல்லவேண்டும். ஆகாயத்தில் மிதந்த வண்ணமாய் ஒரே நிலைமையில் அசையாமல் நிற்கக்கூடிய சக்தி ஆகாயக் கப்பல்களுக்கு இருக்கிறதே யொழிய மற்ற விதமான விமானங்களுக்கில்லை. இலேசான வாயு அடைக்கப்பட்ட மிகப்பெரிய கூடு இருப்பதால்ஆகாயக் கப்பல் அவ்வாறு மிதந்திருக்கச் சாத்தியப்படுகிறது. பைபிரீளன் முதலிய ஆகாய விமானங்கள் ஓடிய வண்ணமாயிருந்தால்தான் ஆகாயத்தில் நிலைத்திருக்க முடியும். அந்த விமானங்களிலுள்ள எஞ்ஜின்கள் வேலைசெய்யாமல் நின்று விட்டால், விமானம் கீழே விழுந்துவிடும். ஏனெனில் ஆகாயவிமானம் காற்றைவிடப் பளுவானது ; அதிலுள்ள எஞ்ஜின் விசையாய் ஓட்டிக்

கொண்டிருப்பதால்தான் விமானம் கீழே விழாமல் மிதந்திருக்கிறது. காற்றடியை ஒப்பிட்டுப்பார்த்தால் அவ்விஷயம் விளங்கும். காற்றடியைப் பறக்கவிடுகிற சமயம் அமுக்குபோனல் காற்றடிப்படம் கீழே விழுந்து விடுகிறது; சயிற்றல் படத்தை இழுத்துப்பிடிக்கும் வரையில் அது ஆகாயத்தில் நிலைத்திருக்கிறது. ஆகாயவிமானங்களும் அம்மாதிரிதான்.

ஆகாயக் கப்பலும் ஆகாயவிமானமும்.

ஆனல், அந்த பிரமாண்டமான கூடு அதற்கு பெரிய ஆபத்தையும் விளைவிக்கிறது. மிகப்பெரிய உருவங்கொண்ட ஆகாயக் கப்பல் உயரப் பறந்தாலும் தரையிலுள்ளவர்களின் கண்களுக்குத் தெளிவாய்த் தென்படுகிறது. ஆகையால் சத்துருக்கள் ஆகாயக்கப்பலை எளிதாய் கண்டுகொண்டு தங்கள் பீரங்கிகளைச் சுடுவார்கள். உயரப் பார்த்துச் சுடக்கூடிய பீரங்கிகள் சுமார் 8000 அடி தூரம் ஆகாயத்தைநோக்கி குண்டுகளை எறிகின்றன. ஜெப்பலின்சாதாரணமாய் 8000 அடி உயரத்தில் பறந்துசெல்லுகிறது; சில சமயங்களில் 10,000 அடி உயரத்துக்கும் எழும்பலாம். திடீரென்று இடம் விட்டு இடம்மாறும் சக்தி ஜெப்பலினுக்கு அவ்வளவாக இல்லை. அது மிகவும் பருமனுயிருப்பதே அதற்குக் காரணமாகும். ஆயினும் மற்ற ஆகாயக் கப்பல்களைப்போல ஜெப்பலின் தானுகவே எளிதில் சேதமாவதில்லை. ஏனெனில், ஜெப்பலினில் அநேக சிறுபைகளில் வாயு அடைக்கப்படுவதால், இரண்டொன்றை சத்துருவின் குண்டுகள் பழுதாக்கினுல் பாதகமில்லை. ஆனல் ஆகாயவிமானங்கள் மிகவும் சிறியவையா யிருப்பதால் அதிவிரைவாய் நிணைத்த திசைகளில் திரும்பிச் சென்று மறைந்து விடுகின்றன. அவைகளைப் பார்த்து சத்துருக்கள் எளிதாய்ச் சுடமுடியாது. ஆகாயவிமானங்கள் 26,000 அடி உயரம் இலம்பக்கூடும். அவ்வளவு உயரத்தில் ஆகாயவிமானத்தின் உருவத்தைக்காணவே முடியாது. ஆகையால் ஆகாயவிமானங்கள் அநேகமாய் பகற்காலங்களில் நடமாடுவது வழக்கமாயிருக்க, ஜெப்பலின் இராப்பொழுதில் சஞ்சரிப்பது சகஜமாயிருக்கிறது. இதனல் சோதனை விளச்சுஜெப்பலினில் இருப்பது மிகவும் அவசியமென்பு விளங்கும்.

பகற் காலங்களில் சண்டைகள் நடந்து கொண்டிருக்கும்போது ஆகாய விமானத்தைப்போல, ஆகாயக் கப்பல் பயன்படாது.

மேலும், ஆகாய விமானம் ஆகாயக் கப்பலிலிவிட இரண்டு மடங்கு விரைவாகச் செல்கிறது. ஆகாயக் கப்பல்களுக்குள் மிகச் சிறந்த தாகிய ஜெப்பலின்கள் மணிக்கு 50 மைல்தான் செல்கின்றன. ஆகாய விமானங்கள் மணிக்கு 120மைல் வீதம் செல்வதோடு அவ்வளவு விரைவாக ஒருமணிநேரம் ஓயாமல் சென்றுகொண்டிருக்கும். எவ் விதமான எஞ்ஜின்களானாலும், அவைகள் முழுவேகத்துடன் வேலை செய்யப் பட்டால் அதே வேகத்துடன் ஒருமணி நேரத்துக்கு மேல் வேலை செய்ய முடிவதில்லை. யந்திரங்கள் அதிகநேரம் முழுவேகத் துடன் வேலைசெய்யப் பட்டால் உஷ்ணமடைந்து கடைசியில் வேலை செய்யாமலே நின்றுவிடும்.


ஜெப்பலின் கப்பல் மிகப் பெரிய உருவங் கொண் டிருப் பதால் அதை ஓரிடத்தில் பந்தோபஸ்தாய் வைத்திருப்பதற்கு பிரமாண்டமான கொட்டகைகள் கட்டப்பட வேண்டும். வேறு சில தினுசான ஆகாயக் கப்பல்களைப் போல, ஜெப்பலினை சுருக்கமாய் மடக்கிவைக்க முடிவதில்லை; எனெனில் ஜெப்பலி னைச் சுற்றிலும் உறுதியான கூடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகை யால் ஜெப்பலின் சத்துருவின் பிரதேசங்களில் சஞ்சரிக்கும்போது நிரந்தர இடத்தில் தங்கியிருப்பது சாத்தியமல்ல; ஓர் குறிப்பான ஸ்தலத்தில் முன்னதாகவே கொட்டகைகளைக் கட்டி வைத்திருக்க வேண்டும்; அம்மாதிரியாய் தயார் செய்யப்பட்ட சில ஆதார ஸ்த லங்களுக்கு ஜெப்பலின்கள் தங்கள் பிரயாண முடிவில் திரும்பிவர வேண்டியிருக்கின்றன. ஆயினும் அவ்வாறு வெகு தூரம் பிரயா ணஞ் சென்று திரும்பி வருவதற்குத் தேவையான வசதிகளை ஜெப் பலில் செய்து கொள்ளலாமாகையால், அவ்விஷயத்தைப் பெருங் குறையாகக் கூறுவதற்கில்லை. டைபிளேன், மானோபிளேன் போன்ற ஆகாய விமானங்கள் சத்துருக்களின் பிரதேசத்தில் சஞ்சாரஞ் செய்தபின் தங்கள் சொந்தப்பிரதேசத்தை அடைந்தவுடனே நிரந் தர இடத்தில் இறங்கித் தங்கிவிடலாம். ஆனால் ஆகாயவிமானங்கள் அதிகப் பளுவைச் சுமக்காவாகையால், அவைகள் ஜெப்பலின்கள் பிரயாணஞ் செய்யக்கூடிய 1200-மைல் தூரத்தில் பாதி தூரந்தான் சஞ்சாரஞ் செய்யக்கூடியவை.

ஜெப்பலின் உருவத்தில் மிகப் பெரிதா யிருப்பதால் அதற்குப் பெரிய கொட்டகை தேவையாயிருப்பதோடு, அதைத் தரையிலிருந்து

பறக்க விடுவதற்கு நூற்றுக்கணக்கான ஆள்களும் தேவையாயிருக்கிறார்கள். ஜெப்பலினில் அமைக்கப்பட்டுள்ள பைகளில் வாயுநிரப்பப்படும்போது அது ஆகாயத்தில் எழும்ப முயற்சி செய்யும். பிரயாணத்துக்கு வேண்டியவை களெல்லாம் முற்றிலும் தயாராவதற்குள்ளாக அது ஆகாயத்தில் உயரக் கிளம்பி விடாமல் பிடித்துவைக்கப்படவேண்டும். ஜெப்பலினைக் கயிறுகளால் கட்டி அநேகம் பேர் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். மேலும், அது பிரயாணத்திலிருந்து திரும்பி வந்த பிறகு கொட்டகைக்குள் அடைக்கப் படுவதற்கு அநேகம் பேர் தேவையாயிருக்கிறார்கள். ஒருசமயம் ஜெப்பலின் கப்பல் தரையில் கட்டிவைக்கப் பட்டபோது புசற்காற்றால் அறுத்துக்கொண்டு போய்விட்டதைப் பற்றி சொல்லியிருக்கிறோம். ஆகையால் ஜெப்பலின் கப்பலில் வாயுவை அடைத்த பிறகு அதை வெகு ஜாக்கிரதையாய்ப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். சில வருஷங்களுக்கு முன், ஆஸ்டிரியசேனை யுத்தப் பயிற்சி செய்து கொண்டிருந்த போது, ஆகாயக் கப்பலொன்று உயரப் பறப்பதற்காகத் தயார் செய்யப் பட்டு வந்தது; அக்கப்பலை அநேகம் பேர் பிடித்துக்கொண் டிருந்தார்கள். அச்சமயம் திடீரென்று புசற்காற்று அடிக்கவே, அந்த ஆகாயக் கப்பல், அதைப்பிடித்துக்கொண்டிருந்த எல்லா ஆள்களையும் சேர்த்து இழுத்துக்கொண்டு உயரக் கிளம்பி காற்றோட்டத்தோடு விரைவாய்ப் பாய்ந்துவிட்டது. அந்த ஆகாயக் கப்பலிலுள்ள கயிறுகளைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த ஆட்களெல்லாம் மாண்டுபோயினர். ஆகையால், பெரிய பூதங்களைப்போன்ற ஆகாயக்கப்பல்களைத்தரையிலிருந்துபறக்கவிடும் போதும், தரையில் இறக்கி பத்திரபடுத்து செய்யும்போதும், அநேக ஆட்கள் உதவி செய்யவேண்டியிருக்கிறது.

வல்லரசுகளின் ஆகாய பலம்.

ஜெர்மனியிலும் ஆஸ்டிரியாவிலும் ஆகாயக்கப்பல்கள் அதிகமாயிருக்கின்றன. ஜெப்பலின் தினுசுகள் அவ்விரண்டு தேசங்களில் தான் செய்யப்படுகின்றன. பைபிளேன், மானோபிளேன் என்ற ஆகாயவிமானங்களும் இருக்கின்றன. மற்ற வல்லரசுகள் ஆகாய விமானங்களை ஏராளமாய் வைத்துக்கொண் டிருக்கிறார்கள்; சில ஆகாயக் கப்பல்களையும் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஆகாயக்கப்பல்கள் ஜெப்பலினைப் போன்றவை யல்ல. ஆகாயக் கப்பல்




யார்மத் என்ற பிரிட்டிஷ் துறைமுகத்தின்மேல்
ஜெப்பலின், நடு இரவில் சோதனை விளக்கை வீசுகிறது.



ஜெப்பலின் என்ற ஜெர்மன் ஆகாயக்கப்பல்
ஆண்ட்வர்ப் நகரத்தில் வெடி குண்டை நிதல்.



இவர்கள் ஆப்பிரிக்காவிலுள்ள பிரஞ்சு குடியேற்ற நாட்டுத் துருப்புகள். இவர்களுக்கு ஸர்வீஸ் என்று பெயர்.



ஜெர்மனியிலுள்ள பிரஷ்யன் கார்ட்ஸ் என்ற பேர்பெற்ற துருப்புகள்.

களுக்குள் ஜெப்பலின்களே மிகச் சிறந்தவை; ஆயினும் அவைகள் ஆகாய விமானங்களுக்குள்ள சில விசேஷங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆகாயக்கப்பல்களுக்கும் ஆகாயவிமானங்களுக்குமுள்ள சாதக பாதகங்களைப் பற்றி சொல்லியிருக்கிறோம். ஆகாய விமானங்கள் ஜெப்பலின்களை விட, அதிக உயரம் பறக்கக்கூடியவை; அதிக வேகமாய் ஓடக்கூடியவை; சத்துருவின் கண்களுக்குத் தெரியாமல் பகற்காலங்களிலும் மறைந்திருக்கக் கூடியவை; ஜெப்பலின்கள், ஆகாய விமானங்களைவிட, அதிகப்பளுவைச் சுமக்கக்கூடியவை; அத்தகைத்தில் மிதந்தவண்ணமாய் நிலைபெற்றிருக்கக் கூடியவை; இரவில்மட்டும் சாவதானமாய்ப் பிரயாணஞ் செய்யக்கூடியவை. கம்பியில்லாத் தந்தியந்திரம் ஆகாய விமானங்களில் அமைக்கப்பட்டாலும் அவ்வளவு திருப்திகரமாய் வேலைசெய்வதில்லை. சோதனை விளக்கு ஜெப்பலின்களில் மட்டும் கொண்டு போகப்படுகின்றன. ஒரு ஜெப்பலினைச் செய்வதற்கு மிகுந்தசெலவு பிடிக்கும். அந்தச் செலவில் 35 ஆகாய விமானங்களைச் செய்துவிடக்கூடும். ஆகாய விமானத்தைச் செலுத்துவதற்கு ஒன்று அல்லது இரண்டு பேர் போதுமானது; ஒரு ஜெப்பலினுக்கு 30 பேர் தேவை. ஆகையால் ஒரு ஜெப்பலின் சேதமானால் பொருள் நஷ்டமும் உயிர் நஷ்டமும் ஏராளமாய் உண்டாகின்றன. இந்த மகாயுத்தத்தில் ஜெப்பலின்களைவிட ஆகாய விமானங்கள் யுத்த நடவடிக்கைகளுக்கு அதிக பயனுள்ளவை யென்று தெரியவந்திருக்கிறது.

தேசம்.	ஆகாய விமானம்.	ஆகாயக் கப்பல்	
		1-ந்தரம்	2-ந் தரம்
கிரேட்பிரிட்டன் ...	200	3	2
பிரான்ஸ் ...	750	7	14
ருஷ்யா ...	380	3	5
ஜெர்மனி ...	350	13	8
ஆஸ்டிரியா ...	150	3	3

மேலேயுள்ள விவரங்களில் ஆகாய விமானத்தில் கடல் விமானமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரான்ஸ் தேசத்தில் ஆகாயவிமான

பலம் அதிகமா யிருப்பதைக் கவனிக்கவும். ஜெர்மனியில், 350 விமானங்களைத்தவிர, பொதுக்கூட்டங்களும் கம்பெனிகளும் வைத்துக் கொண்டிருக்கிற 400 விமானங்களின் உதவியும் யுத்த காலத்தில் கிடைக்கும். பிரிட்டிஷ் பிரஞ்சு விமானங்கள், ஜெர்மன் விமானங்களைவிட உறுதியாயும் அதிக வேகமுள்ளவையாயும் செய்யப் பட்டவை.

யுத்தந் தொடங்கியபோது ஜெர்மனியில் 15-புகிய ஜெப்பலின்கள் மிகப் பெரியதாய்க் கட்டப்பட்டு வந்தன.

27-வது அத்தியாயம்.


யுத்த மண்டலத்தில் படைகள் எவ்வாறு செலுத்தப்படுகின்றன.

துருப்புகள் எவ்வாறு பிரயாணஞ்செய்கிறார்கள்.

காலாள் துருப்புகள் சோட்டுகள் வழியாய் பிரயாணஞ்செய்யும் போது, வரிசைக்கிரமமாய்ச் செல்வார்கள். ஒவ்வொருவரிசையிலும் நான்குபேர்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவராய்ச் செல்வார்கள். வண்டிகள் அநேகமாய் ஒன்றின்பின் ஒன்றுய்ச்செல்லும். குதிரைகள் ஒரு வரிசைக்கு இரண்டு அல்லது மூன்று வீதம் பிரயாணஞ் செய்யும். காலாட்படை ஒரு மணிக்கு 2½ மைல் வீதம் நடக்கக்கூடியது. துருப்புகள் வரிசைக் கிரமமாய்ச் செல்லும்போது, சோட்டுகளில் வெகுதூரம் பரவியிருப்பார்கள். ஆயிரம் பேர் கொண்ட ஒரு படை சுமார் ஒரு மைல் நீளம் சோட்டில் பரவிச்செல்லும். ஐயாயிரம் பேர்கொண்ட ஒரு படை 5 மைல் நீளத்துக்கு வரிசையாய்ச் சென்று கொண் டிருப்பார்கள். மாலைப்பொழுதில் அத்தப்படை ஓர் இராமத்தில் தங்கியிருக்கும்படி நேர்ந்தால், என்ன ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன? அந்த படையிலுள்ள 5000 பேரும் அந்த இராமத்தில் ஒன்றுய்க்கூடி அங்குள்ள வீடுகளிலும் அவைகளைச் சுற்றி கூடாரங்களிலும் தங்கலாம்; அல்லது அவர்கள் பிரயாணஞ் செய்யும் போதிருந்த நிலைமையிலேயே வரிசையாக ஐந்து மைல் நீளத்துக்கு அங்கங்கே கூடாரங்களை அடித்து பாதைக்கு


இரண்டு பக்கங்களிலும் தங்கியிருக்கலாம். இந்த இரண்டு முறைகளும் சமபத்துக்குத் தக்கபடி அனுசரிக்கப் படுகின்றன. அந்த இரண்டு முறைகளுக்கு முள்ள வித்தியாசமென்ன ?

துருப்புகளெல்லோரும் கிராமத்தில் ஒன்றுகூடி தங்குவதைப் பற்றிய விவரங்கள் கீழேயுள்ள படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.



அந்தப் படையின் முதல் வரிசையிலுள்ள நான்கு பேர்கள் அந்த கிராமத்துக்கு மாலை 3 மணிக்கு வருகிறார்களென்று வைத்துக் கொள்வோம். அந்தப் படையின் பின்புறத்து மூணியிலுள்ள கடைசி வரிசை அந்த கிராமத்துக்கிப்பால் 5 மைல் தூரத்திலிருந்து வரும். ஏனெனில், 5000 பேர் கொண்ட படை 5 மைல் நீளம் பரவியிருக்கும். ஆகையால் கடைசி வரிசையிலுள்ள நான்குபேர்கள் அந்த கிராமத்துக்கு வருவதற்கு (மணிக்கு $2\frac{1}{2}$ மைல் வீதம் நடந்துவருவதால்) மாலை 5 மணி ஆகிவிடும். அதன்பிறகு அவர்கள் சமைடல் செய்து சாப்பிடவேண்டி மாகையால், மாலை 5 மணிக்குமேல் பிரயாணத்தை நிறுத்திவிட வேண்டும். மறுநாட் காலை சாப்பாட்டுக்குப் பிறகு காலை 9 மணிக்குப் பிரயாணந் தொடங்கவேண்டி மானால், முதல் வரிசையிலுள்ள நான்கு துருப்புகள் 5 மைல் தூரம் சென்றபிறகு கடைசிவரிசையைச் சேர்ந்தவர்கள் கிராமத்தை விட்டு விலக ஆரம்பிப்பார்கள். ஆகையால் அதுவரையில் வீணான கால தாமதம் நேரிடுகிறது. கிராமத்துக்குள் துருப்புகள் வந்து ஒன்று கூடுவதற்கு காலதாமதமாவதோடு, கிராமத்தைவிட்டு வரிசையாக ஒழுங்குபடுத்தி அவர்கள் பிரயாணந்தொடங்குவதற்கும் நேரமாகிறது. அவ்வாறின்றி, துருப்புகள் பிரயாணஞ் செய்கிற நிலைமையிலேயே ரோட்டுப் பக்கத்தில் இருந்துவிட்டால், கிராமத்தில் ஒன்றுகூடித் தங்குவதற்கும் மறுபடியும் பிரயாணந் தொடர்வதற்கும் தாமதமாகாது. இந்த முறைப்படி, துருப்புகள் பிரயாணஞ் செய்த நிலைமையிலேயே ரோட்டில் 5 மைல் நீளத்துக்குத்

தங்குவதைப் பற்றிய விவரங்கள் கீழ் உள்ள படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.



இந்த முறைப்படி காலாட்படை பிரயாணஞ் செய்தால் மாலை 3-மணிக்கு பிரயாணத்தை நிறுத்தவேண்டியதில்லை. 5-மணி வரையில் பிரயாணஞ் செய்து பிறகு சோட்டுப் பக்கங்களில் பிரயாணஞ் செய்த நிலைமையிலேயே 5 மணிக்குத் தங்கி விடலாம். ஆகையால் இந்த முறைப்படி பிரயாணஞ் செய்கிற படை ஒவ்வொரு தினமும் அதிக தூரம் வழி நடக்கக் கூடும்.

முதல் படை ஒரு தினத்துக்கு 15 மைல் பிரயாணஞ் செய்தால், இரண்டாவது படை 20 மைல் பிரயாணஞ் செய்கிறது. அவ்வாறு 5 தினம் பிரயாணஞ் செய்தால், முதல் படை 75 மைல் செல்ல, இரண்டாவது படை 100 மைல் செல்லும். ஆகையால் படைகள் இரண்டாவது முறைப்படி பிரயாணஞ் செய்தால் அதிக தூரம் செல்லக்கூடும். ஆனால் அதில் ஒரு குறையிருப்பதைக் கவனிக்கவேண்டும். அந்தப் படையிலுள்ள தருப்புகளுக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கும்? வெகு தூரத்துக்குப் பின்னால் ராணுவ ஆதார ஸ்தலத்திலிருந்து உணவுப் பொருள்கள் ரயில் மூலமாய் அனுப்பப்பட்டு ரயில் முனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. ரயில் முனையிலிருந்து மோட்டார் வண்டிகள் அவைகளை ஏற்றிக் கொண்டு சேனைத் தலைவரிருக்கிற இடத்துக்குச் சேர்ப்பிக்கின்றன. இந்த இடத்திலிருந்து படையைச்சேர்ந்த குதிரை வண்டிகள் ஆகாரத்தைக் கொண்டு வருகின்றன. (இதைப்பற்றி 3-ம் பாகத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.) நமது படை பிரயாணத்தைத் தொடங்கிய இடத்தில் மோட்டார்வண்டிகள் வந்து சேர்கின்றன என்று வைத்துக்கொள்வோம். முதலில் மேலே காட்டிய படத்திலுள்ளபடி, முதல் படை அன்று தினம் மாலை 5 மணிக்கு

15 மைல் தூரத்திலிலுள்ள கிராமத்தில் தங்கியிருக்கிறது. அந்தப் படையிலுள்ள குதிரை வண்டிகள், பின் புறமாய்ச்சென்று பிரயாணம் தொடங்கிய இடத்தில் உணவுப்பொருள்களை ஏற்றிக் கொண்டு மறுபடியும் 15 மைல் தூரம் வந்து மாலை 5 மணிக்குள் ளாக நமது படையிலுள்ள தருப்புகளுக்கு அவைகளைக் கொடுக்க வேண்டும். இரண்டாவது படையைச்சேர்ந்த குதிரைவண்டிகள் அவ் வாறு 20 மைல் தூரம் போய் வரவேண்டியிருக்கின்றன. ஆகையால் நமது படை விரைவாய்ப் பிரயாணஞ்செய்தால் உணவுப்பொருள் களைக்கொண்டு வருவது அதிககஷ்டமாகி விடுகிறது. இந்த காரணத் தால் முற்காலத்தில் படைகள் விரைவாய்ப் பிரயாணஞ்செய்ய முடி யாமலிருந்தது. ஆனால் இப்போது மோட்டார் வண்டிகள் உபயோ கத்துக்கு வந்திருப்பதால், படைகள் விரைவாய்ப்பிரயாணஞ் செய் கின்றன. தவிர, நமது படைக்கு உணவுப்பொருள்கள் பின்புறத்துப் போக்கு வரத்து வழிகளிலிருந்து வராமல், சத்துருவின் பிரதேசத் தில் கிடைக்கக்கூடியவையா யிருக்தால் நமது படை விஸ்தா மாய் 5 மைல் தூரத்தில் பரவி நிற்பதே சாதகமாயிருக்கும். ஏனெ னில், நமது படை தங்கியிருக்கிற 5 மைல் விஸ்தீரணத்தில் பல கிரா மங்களிருக்கும். மோட்டுப் பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து உணவுப்பொருள்களைத் தாமஸமின்றிக்கொண்டு வரலாம். அதனால் இந்த காலத்தில் படைகள் அநேகமாய்ப் பிரயாணஞ்செய்கிற நிலை மையிலேயே விஸ்தாரமாய் மோட்டுகளில் பரவியபடி தங்கிவிடுதல் சாத்தியமாகிறது. இந்த சாதகத்தால் படைகள் இக்காலத்தில் விரை வாய்ப் பிரயாணஞ் செய்கின்றன. விரைவாய்ச் செல்வதென்றால், விரைவான நடையில் செல்வதென்று அர்த்தங்கொள்ளக் கூடாது. திடகாத்திரமுள்ளவன் எந்த தேசத்தவனு யிருந்தாலும் நடந்து செல்லக்கூடிய சக்தி சற்றேறக் குறைய ஒரே அளவாய்ப் பெற் றிருக்கிறான். எல்லா தேசத்துத் தருப்புகளும் அநேகமாய் ஒரே திடகாத்திர முள்ளவர்களென்று சொல்லலாம். ஆனால் ஜெர்மன் தேசமே மற்ற தேசத்துச் சேனைகளைவிட விரைவாய்ச் செல்லக் கூடியதென்று சொன்னால், அந்தச் சேனையில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் மிகவும் ஒழுங்காயிருந்து குறித்த காலத்தில் அது அதிக தூரம் பிரயாணஞ் செய்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டும். மேலே காட்டப்பட்டிருக்கிற படங்களில், இரண்

டாவது படை விரைவாய் பிரயாணஞ் செய்யக்கூடியதென்று சொல்லவேண்டும். மேலும், இரண்டாவது படை ரோட்டில் 5 மைல் தூரம் விஸ்தாரமாய் நின்றுவிட்டால், ரோட்டின் பக்கங்களிலேயே கூடாரங்களை வரிசையாய் அடித்து ஒவ்வொன்றிலும் நாலு நாலு பேர்களாகத் தங்கியிருக்கலாம். படை முதலாவது கிராமத்துக்குள் சென்றால், 5000 துருப்புகளும் தங்களுக்குத் தேவையான வீடுகள் கிடைக்காவிட்டால் கிராமத்திலுள்ள பாதையிலிருந்து சிறிது தூரம் விலகிச்சென்று அங்கே கூடாரங்களை அடிக்க வேண்டும். இதனாலும் கால தாமமாகிறது.

துருப்புகள் எவ்வாறு பாளையத்தில் தங்குகிறார்கள்.

ஒரு படை எந்த விதமாய்த் தங்கியிருந்தாலும், அதிலுள்ள எல்லாத் துருப்புகளும் கூடாரங்களிலும் வீடுகளிலும் சிரமபரிகாரம் செய்துகொள்ள முடியாது. ஏனெனில் அந்தப் படையின் ஒரு பாகம் இரவில் காவல் செய்யவேண்டும். தங்கியிருக்கிற இடத்துக்கு இரண்டு பக்கங்களிலும் முன்புறத்திலும் துருப்புகள் காவல்செய்யவேண்டும். டிவிஷன் என்ற சேனை வகுப்பில் ஒரு குதிரைப்படை யிருக்கிறதென்று சொல்லியிருக்கிறோம். அந்த குதிரைப்படை அந்த டிவிஷனில் இருக்கிற மற்ற படைகளுக்குக் காவல் செய்வதற்காகவே சேர்க்கப்பட்டிருக்கிறது. அது சத்துருக்களோடு சண்டைசெய்யாது. சண்டை செய்வதற்குப் பிரத்தியேகமான குதிரைப் படைகள் அனுப்பப் படுகின்றன. ஆகையால் டிவிஷன் என்ற சேனை வகுப்பிலுள்ள சில குதிரையாட்கள் நமது படையின் இருப்பிடத்துக்கு முன்னால் வெகுதூரம் சென்று காவல் செய்துகொண்டிருப்பார்கள். அந்த குதிரை யாட்கள் தூரத்திலுள்ள ரோட்டுகளையும் வேறு இடப் பாதைகளையும், குன்றுகளையும் பள்ளத் தாக்குகளையும் சோதனை செய்துகொண்டிருப்பார்கள்.

காலாள் துருப்புகள் அதிகதூரம் நடந்துசென்று காவல்செய்துகொண்டிருக்க முடியாதாகையால், தூரத்திலுள்ள இடங்களைக் குதிரையாட்கள் சோதனை செய்கிறார்கள். காலாள் துருப்புகள் கண்ணுக்குத் தெரிகிற தூரம் வரையில் காவல் செய்வார்கள். காவல் செய்கிற துருப்புகள் சிறு கூட்டங்களாகப் பிரிக்கப்படுகிறார்கள். காவல் செய்யவேண்டிய இடத்தைப் பலபாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு பாகத்தில் பாராகொடுத்துக்கொண்டிருக்கும்.

இவர்களைத் தவிர அநேகம் பேர் பின் புறத்தில் இருந்து வருவார்கள். காவல் செய்கிற இடத்தில் ஏதாவது அபாயக்குறிகள் தோன்றினால் பின் புறத்திலுள்ள துருப்புகள் அந்த இடத்துக்குச் சென்று உதவிசெய்வார்கள். அவ்வாறு காவல் செய்கிற இடத்துக்கு முன் புறத்தில் சில துருப்புகள் நடந்துசென்று சோதனைசெய்துகொண்டிருப்பார்கள். காவல்செய்கிற துருப்புகளில் சிலர் நின்றஇடத்தை விட்டு அசையாமல் நாலபக்கங்களிலும் பார்த்துக்கொண்டு காவல் செய்வார்கள். வேறு சில துருப்புகள் அங்கு மிங்கும் உலாவிக் கொண்டே பாரா கொடுப்பார்கள். இராக்காலத்தில், மேலே சொல்லிய காவல் துருப்புக ளெல்லாரும் சற்று நெருக்கமாயிருந்து காவல் செய்வார்கள். இரவில் குதிரையாட்கள் தூரத்தில் சென்று சோதனை செய்வதில்லை. சத்துருக்கள் அருகில் நிலைபெற்றிருந்தால், காவல் செய்கிற துருப்புகள் பீரங்கிகளை யுபயோகிப்பது முண்டு.

போர்க்களத்தில் சேனை எவ்வாறு செல்கின்றது?

படைகள் நடமாடிக்கொண்டிருக்கும்போது அவைகள் திடீரென்று சத்துருக்களால் தாக்கப்பட்டு அழிந்துபோகாம லிருக்க வேண்டும். சத்துருக்கள் வழிகளில் மறைந்துகொண்டிருந்தால், அதை அறியாமல் படைகள் சென்றுகொண்டிருப்பது ஆபத்தல்லவா? படைகள் அவ்வித ஆபத்துகளுக்கு உட்படாமல் செல்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன? படைகள் போர்க்களத்தை நோக்கி எவ்வாறு செல்கின்றனவென்று சொல்வோம்.

முதன் முதலில் குதிரைப் படைகள் போர்க்களத்தை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கும். குதிரைப் படைகள் விரைவாய் நடமாடக் கூடியதாகையால் அவைகள் முன்புறத்தில் சென்று பாதைகள் பந்தோபஸ்தா யிருக்கின்றனவா என்று அறிந்துகொள்ளுகின்றன. சேனைக்கு முன்புறத்தில் சுமார் 25 அல்லது 30 மைல் தூரத்தில் குதிரைப் படைகள் செல்கின்றன. அவைகள் "குதிரையாள் டிவிஷன்" என்ற சிறு சேனை யாகும். அந்த டிவிஷன் என்ற சேனை வகுப்பில் சுமார் 9000 குதிரையாட்க ளிருப்பார்கள். அவர்கள் சத்துருக்கள் எந்தெந்த இடங்களில் எவ்வளவு பலங்கொண்டு இருக்கிறார்க ளென்றும், சத்துருக்களின் இருப்பிடங்கள் எவ்வளவு தூரம் விஸ்தாரித்திருக்கின்றன வென்றும் கண்டறிவார்கள். சத்துருக்கள் விஸ்தாரமாய் நிலை பெற்றிருந்தால் அவர்களின் வலது பக்க

மும் இடதுபக்கமும் எவ்விடத்தில் லிருக்கின்றன வென்றும் அறிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், நமது சேனை சத்துருக்களின் மத்திய ஸ்தானத்தை நோக்கிச் சென்றுகொண் டிருந்தால், நமக்கு இடதுபக்கத்திலும் வலதுபக்கத்திலும் நமக்குத் தெரியாமல் வெகு தூரத்தி லிருக்கிற சத்துருக்கள் நம்மை வளைத்துக்கொண்டு பின் புறத்தில் வந்து தாக்குவார்கள். அவ்வித ஆபத்தைத் தடுக்கும் பொருட்டு, சத்துருக்களின் இடது பக்கக் கோடியும் வலது பக்கக் கோடியும் எங்கிருக்கிற தென்று எப்போதும் தெரிந்து கொள்ள வேண்டும்; ஆனால் சத்துருக்கள் தங்களுடைய குதிரைப் படைகளை முன்புறத்தில் அனுப்பி அவைகளுக்குப் பின்னால் தங்கள் இருப்பிடங்களை இரகஸ்யமாய் வைத்திருப்பார்கள். ஆகையால் நமது குதிரைப் படைகள் சத்துருவின் குதிரைப் படைகளை முதலில் எதிர்த்த பிறகே சத்துருக்களின் முக்கிய சேனையைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளக் கூடும். ஆகையால் நமது குதிரைப்படைகள் முதலில் சத்துருவின்குதிரைப்படைகளைத்தாக்க வேண்டும். அதற்காக நமதுகுதிரைப்படைகள் எல்லாப்பாதைகளின் வழியாய்ச் சென்றுகொண்டேயிருக்கும். அவ்வாறு சென்றுகொண் டிருக்கும் போது, முன்னதாக பாராக்குதிரைகள்மட்டும் அனுப் பப்படும். அந்த பாராக்குதிரைகள் சிறு கூட்டங்களாகப் பிரிந்து பற்பல வழிகளில் சென்றுகொண் டிருக்கும். அந்த குதிரை யாட்கள் முன்னதாகச் சென்று சத்துருக்களின் குதிரையாட்களைச் சந்திப்பார்கள். உடனே கம்பியில்லாத் தந்தி மூலமாய் பின்புறத் தில் வந்துகொண்டிருக்கிற குதிரைப்படைகளுக்கு அந்த சமாசாரம் அறிவிக்கப்படும். அவ்வித சமாசாரம் எந்தெந்த இடங்களிலிருந்து அனுப்பப்படுகிறதோ அந்தந்த இடங்களுக்கு நமது குதிரைப்படை கள் பல பாகங்களாகப் பிரிந்து சென்று சத்துருக்களின் குதிரைப் படைகளோடு சண்டை செய்யும். நமது குதிரைப்படைகள் வெற்றி யடைந்தால், இன்னும் முன் புறத்தில் சென்று ஒரு வலுவான ஸ்தலத்தில் அகழ்களை வெட்டி அங்கு நிலைபெற்றிருக்கும். அந்த வலுவான ஸ்தலத்திலிருந்து மறுபடியும் பாராக்குதிரைகள் நாலா திசைகளிலும் அனுப்பப்படும். அந்த பாராக்குதிரைகள் சத்துருக் களால் துரத்தப்பட்டால் அந்த வலுவான ஸ்தலத்துக்குத் திரும்ப வந்துவிடும். அந்த குதிரைகள் எல்லாவழிகளிலும் முன் சென்று சத் துருக்களிருக்கிற இடங்களை இரகஸ்யமாய் அறிந்துகொள்ளும்;

ஆனல் அவைகள் சத்துருக்களோடு சண்டைசெய்யா. ஏனெனில், பாராக் குதிரைகள் ஒரு கூட்டத்தில் 20 அல்லது 30 க்கு மேலிரா. சண்டைசெய்யாமல் சத்துருக்களைப்பற்றி அறியக்கூடிய விஷயங்களை மட்டும் தெரிந்துகொண்டு வந்துவிடும். அவ்வாறு நமது குதிரைப் படைகள் எல்லாப்பாதைகளிலும் விசைவாய் முன்சென்று சத்துருக்களைத் தம் பார்வையில் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கும். சத்துருக்களின் குதிரைகள், பீரங்கிகள், ஆட்கள் முதலியன யாவும் எங்கெங்கு நடமாடுகின்றன என்பதை அதிக மைல்களுக்குப் பின்னுலுள்ள நமது சேனுபதிக்கு அறிவித்துக்கொண்டிருக்கும். "குதிரையாள் டிவிஷன்" என்று தனியாய் சேர்க்கப்படுகிற சிறு குதிரைச் சேனை மேற் சொன்ன காரியங்களைச் செய்கின்றது.

காவல் செய்யும் குதிரைப்படை.

அந்த டிவிஷன் என்ற சேனைவகுப்பில், சுமார் 9000 குதிரையாட்கள் இருப்பார்கள். அம்மாதிரியான அதிக சேனைவகுப்புகள் யுத்தமண்டலத்தின் முன்புறத்தில் எல்லாத்திசைகளிலும் சஞ்சாரஞ் செய்யும். ஆனல் அந்தக் குதிரைப் படைகள் யுத்தம் நடக்கக்கூடிய பிரதேசமெங்கும் விஸ்தாரமாய்ப் பாவிச்செல்லவேண்டியிருக்கிறபடியால், அவைகள் ஒரு குறித்த ஸ்தலத்தில் அதிக பலம் பெற்றிருக்கா. ஆகையால் அவைகளுக்குத்தெரியாமல் சத்துருவின் குதிரைப் படைகள் வந்துவிடுவது சாத்தியமாகும். ஜெர்மன் சேனையிலுள்ள உலான் என்ற குதிரைப் படைகளும், ருஷிய சேனையிலுள்ள கோஸாக் என்ற குதிரைப்படைகளும் அவ்வாறான திரிகளுக்குத் தெரியாமல் புகுந்துசென்று வெகு தூரம் சஞ்சாரஞ் செய்வதில் பேர் பெற்றிருக்கின்றன. ஆகையால் நமது சேனை போர்முனையை நோக்கிப் பிரயாணஞ்செல்லும்போது சத்துருவின் குதிரைப் படைகளால் திடீரென்று தாக்கப்படாமல் காத்துக்கொள்ளவேண்டும். அதற்காக நமது சேனைக்குமுன்னல் காவற்படையொன்று சென்றுகொண்டிருக்கும். அது குதிரைப் படையாகவே யிருக்கும். அந்த குதிரைப் படையொன்றில் சுமார் 1500 குதிரையாட்கள் இருப்பார்கள். காவல் செய்வதற்கென்றே அம்மாதிரியான குதிரைப்படைகள் பிரத்தியேகமாய் சேர்க்கப் படுகின்றன. முதலில் சொல்லப்பட்ட 'குதிரையாள் டிவிஷன்' என்றசேனை வகுப்பு சத்துருக்களின் இருப்பிடத்தை அறிவதற்காக அனுப்பப்படுகிறது. நமது சேனைக்கு முன்னிலிருந்து

கொண்டு அதைக்காத்து வருவதற்காக பிரத்தியேகமாய் வேறு குதிரைப்படைகள் உபயோகிக்கப் படுகின்றன. அவைகளுக்குக் காவல் செய்யும் குதிரைப்படைகளென்று பெயர். நமது சேனைக்கு முன் புறத்தில் காவல் செய்யும் குதிரைப்படையொன்று சுமார் 4 அல்லது 5 மைல் தூரத்தில் சென்றுகொண்டிருக்கும். நமது காலாட்படைகள் மெதுவாய்ச் சென்றுகொண் டிருக்குமாகையால் காவல்செய்யும் குதிரைப்படை முன்னதாகவே சென்று முன்புறத்திலுள்ள முக்கிய மான ஸ்தலங்களை வசப்படுத்திக் கொள்ளும். அந்த ஸ்தலங்களில் நமது காலாட் படைகள் வந்து சேரும்வரையில் அந்த குதிரைப் படைகள் அந்த ஸ்தலங்களைக் காத்துவரும். அவ்வாறு நமதுகாலாட் படைகள் ஓரிடத்தி லிருந்து மற்றொருவிடத்துக்குச்செல்லும்போது காவல்செய்யும் குதிரைப்படைகள் முன் புறத்திலுள்ள முக்கிய ஸ்தலங்களைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கும். அப்படி செய்யாவிட்டால், சத்துருக்கள் அந்த முக்கியமான ஸ்தலங்களில் சேர்ந்து பெற்று, பிரயாணஞ் செய்துகொண் டிருக்கிற நமது சேனையை எளிதாய்த் தாக்கி சேதப்படுத்தி விடுவார்கள். ஆகையால் காவல் செய்யும் குதிரைப்படை முன்னதாகச் சென்று முன்புறத்திலுள்ள முக்கிய ஸ்தலங்களை வசப்படுத்திக் கொள்வதோடு, பக்க வாட்டில் சத்துருவின் குதிரைகள் நடமாடிக்கொண் டிருக்கின்றனவா என்றும் கவனித்துக் காவல் செய்யும்.

காவல் செய்யும் குதிரைப்படைக்குப் பின்னால் நமது சேனை வந்துகொண் டிருக்குமென்று சொன்னேம். ஆனால் சாதாரணமாய், சேனையின் முன்படைகள் மட்டும் போர்க்களத்துக்கு வருமே யொழிய சேனைமுழுவதும் வராது. அவ்வாறு முன் படைகள் செல்வதற்குப் பதிலாக நமது சேனைமுழுவதும் ஏன் செல்லக்கூடாது? ஏனெனில், போர்முனையில் அநேக முக்கியமான ஸ்தலங்களிருக்கும்; அவைகளில் எந்த ஸ்தலத்தில் சத்துருக்கள் அதிகமாய்க்குவிந்து பலமான சண்டைக்குத் தயார் செய்திருக்கிறார்களென்பது சிக்கிரத்தில் தெரியவராது. சத்துருக்கள் அதிகமாய்க் குவிந்திருக்கிறஸ்தலத்தை நோக்கித்தான் நமது சேனை செல்லவேண்டும். ஆகையால், நமது முன் படைகள் மட்டும் போர்முனையை நோக்கிப் பிரயாணஞ் செய்து எல்லா முக்கியமான ஸ்தலங்களையும் வசப்படுத்திக் கொண்டால், பிறகு எந்த இடத்தில் சத்துருக்கள் அதிகமாய்த்

நிரண்டிருக்கிறார்களென்பதை அறிந்துகொண்டு அந்த குறிப்பான இடத்தைநோக்கி நமது சேனை முழுவதும் செல்ல ஆரம்பிக்கும். அந்த முன் படைகளில் காலாட்படை பீரங்கிப்படை இஞ்ஜினியர் படை இவைகள் சேர்க்கப்பட்டிருக்கும். அந்த முன் படைகள் முக்கிய ஸ்தலங்களில் அகழ்களை வெட்டி அங்கு நிலை பெற்று, தேவையானால் சத்துருக்களோடு சண்டையும் செய்யும்.

முன்படைகள் செய்யும் வேலை.

நமது முன்படைகள் எவ்வாறு சண்டைசெய்கின்றன வென்பதைச் சொல்வோம். முன்படைகள் இரண்டு பாகங்களாகப் பிரித்து செல்லும். முதலில் செல்கிற பாகத்தை முதல் பாக மென்றும் பின்னால் செல்கிற பாகத்தை இரண்டாம் பாகமென்றும் சொல்லி வருவோம். முதல் பாகத்திலுள்ள துருப்புகள் 4 பேர் கொண்ட அநேக சிறு கூட்டங்களாகப் பிரித்து செல்வார்கள். 4 பேர் கொண்ட ஒரு கூட்டம் முதலில் சென்றுகொண்டிருக்கும். அதன் பின்னால் 50 கெஜ தூரத்தில் 4 பேர் கொண்ட வேறொரு கூட்டம் செல்லும். இவ்வாறு 50 கெஜ தூரம் இடைவெளி விட்டு ஒன்றின்பின் ஒன்றாய் அந்த கூட்டங்களெல்லாம் சென்றுகொண்டிருக்கும். இந்த கூட்டங்கள் எல்லாப் பாதைகளின் வழியாய்ச் சென்று பாதைகளின் பக்கங்களிலுள்ள செடி மரம் வீடு கிராமம் இவைகளைச் செவ்வையாய்ச் சோதித்துக்கொண்டே சென்றுகொண்டிருக்கும். இந்த சோதனைகளால் தெரிகிற சமாசாரங்களை சமிக்ஞைக் காரர்கள் மூலமாய் அறிந்துகொண்டு பின்புறத்தில் இரண்டாம்பாகம் வந்துகொண்டிருக்கும். பிறகு இந்த இரண்டாம்பாகத்திலுள்ள துருப்புகள் முக்கிய ஸ்தலங்களை வசப்படுத்திக் கொள்கிறார்கள். முக்கிய ஸ்தலங்களென்றால் என்ன? நமது சேனை பின்புறத்தில் வந்துகொண்டிருக்கிறபடியால், முன் புறத்தில் சத்துருக்கள் எந்த ஸ்தலங்களில் நிலைபெற்றுத் தாக்கினால் நமது சேனைக்கு சேத முண்டாகுமோ, அந்த ஸ்தலங்கள் தான் முக்கியமானவை யென்று கருதப் படுகின்றன. அப்படிப்பட்ட ஸ்தலங்கள் சத்துருக்களின் கையில் விழக்கூடா. அங்கு சத்துருக்கள் இருந்தால் நமது படைகள் முன் செல்வதை நிறுத்திவிட வேண்டும். ஆகையால் அந்த முக்கிய ஸ்தலங்களை நமது முன்படைகள் முன்னதாகச் சென்று வசப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்

வாறு வசப்படுத்திக்கொண்டால் தான், நமது சேனை நிர்ப்பயமாய் சென்றுகொண் டிருக்க முடியும். ஆகையால் நமது முன்படைகள் முன்னதாகச் சென்று முக்கிய ஸ்தலங்களில் அகழ்களை வெட்டி, பந்தோபஸ்து செய்துகொண்டு நமது சேனை அங்கு வருகிறவரையில் நிலைபெற்றிருக்கும். நமது சேனை வருகிறவரையில் முன்படைகள் என்ன செய்துகொண்டிருக்கும்? முன் படைகள் அப்போது தொடங்குகிற நடவடிக்கைகள், ஜெர்மன் சேனையிலும் பிரஞ்சு சேனையிலும் வித்தியாசப்படுகின்றன. அதைப்பற்றிச் சொல்வோம்.

ஜெர்மன் சேனையிலுள்ள முன்படைகள் பலமான சண்டைகளைச் செய்வதற்காக அனுப்பப்படுவதில்லை. முன்படைகளுக்குப் பின்னால் மிகவும் அருகில் ஜெர்மன் சேனை முழுவதும் வந்துகொண்டிருக்கும். ஆகையால், முன்படைகள் இரண்டொருதினத்துக்குமேல் சத்துருக்களை எதிர்க்கும்படி நேரிடாது. இரண்டொரு தினத்துக்குள்ளாகச் சேனை முழுவதும் முக்கிய ஸ்தலங்களுக்கு வந்து விடுவதால் அந்த சேனையே சத்துருக்களோடு சண்டை செய்யத் தொடங்கிவிடும். முன் படைகள் முக்கிய ஸ்தலங்களைப் பிடித்துக்கொண்டவுடன், அவைகளுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் வந்துகொண்டிருக்கிற சேனை உடனே போர் செய்வதற்கு அணிவகுக்கத் தொடங்குகிறது. அவ்வாறு அணிவகுப்பதற்கு சிறிது காலம் பிடிக்கும். அந்த நேரம் வரையில் தான், முன் படைகள் முக்கிய ஸ்தலங்களைக்காத்து வர வேண்டும். ஆகையால், ஜெர்மன் சேனையின் முன் படைகள் பலமான சண்டைகளை நடாத்திக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆகையால் அந்த முன் படைகள் அதிக பலங் கொண்டிருப்பதில்லை.

பிரஞ்சு சேனையில் முன் படைகள் மிகுந்த பலங்கொண்டிருக் கின்றன. பிரஞ்சு முன் படைகள் முக்கிய ஸ்தலங்களைப் பிடித்த வுடன் அங்கு நிரந்தரமாய் நிலைபெற்று சத்துருக்களோடு சண்டை செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்கின்றன. முன் படைகள் சத்துருக்களோடு சண்டை செய்யத் தொடங்கியவுடன், தேவையா னால் போர்க்களத்துக்கு துணைப்படைகள் அனுப்பப்படுமே யொழிய சேனை முழுவதும் செல்வதில்லை. பிரஞ்சு சேனை எப்பொழுதும் வெகு தூரத்துக்குப் பின்னால் இருந்தவரும்; போர்முனை யெங்கும் முன் படைகளை சண்டைசெய்து கொண்டிருக்கும். சேனையிலிருந்து

சிறுபடைகளைப் பிரித்து எந்தெந்த இடங்களில் முன்படைகளுக்கு உதவி தேவையா யிருக்கிறதோ அங்குமட்டும் அனுப்புகிறார்கள். சேனையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் படைகள் அனுப்பப்படுகிற தேயொழிய சேனைமுழுவதும் போர்முனைக்குச் செல்வ தில்லை. பிறகு சேனபதி சண்டையின் நடவடிக்கைகளைச் செவ்வையாய் அறிந்து கொண்டு, சத்துருவின் சேனையை முறியடிப்பதற்கு எந்த இடத்தில் பெரிய சண்டையைச் செய்யவேண்டுமோ, அந்த இடத்துக்குத் தான் சேனைமுழுவதையும் அனுப்புவார்.

இவ்வாறு பிரஞ்சுசேனையிலும் ஜெர்மன் சேனையிலும் வித்தியாசமிருப்பதற்குக் காரணம் அவைகள் வெவ்வேறு யுத்த தந்திரங்களை அனுசரித்து நடவடிக்கைகளைத் தொடங்குவதாகும். அந்த யுத்த தந்திரங்களைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால், அவைகளைச் செவ்வையாய் விளக்குவதற்காக, இரண்டு சங்கதிகளும் செய்த யுத்தத்தின் சாராம்சத்தைச் சொல்வோம்.

28-வது அத்தியாயம்.

மேற்கரங்கத்தின் யுத்த நடவடிக்கைகள்.

1914-ம்வரு ஆகஸ்டுமீ 1-ந் தேதி ஜெர்மன் கவர்ன்மெண்டு யுத்தந் தொடங்குவதாக பிரான்ஸுக்கும் ருஷியாவுக்கும் அறிவித்தார்கள். உடனே ஜெர்மன் சேனை எல்லைப்புறங்களில் ஏராளமாய்க் குவிந்து யுத்த நடவடிக்கைகளைத் தொடங்கிற்று; ஜெர்மன் சேனையின் யுத்த நடவடிக்கைகள் எவ்வாறிருக்குமென்று அனைவரும் அறிய ஆவலாயிருந்தார்கள். சாமான்ய ஜனங்கள் அந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்ததோடு, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரிகளும் மிகுந்த கவலையுடன் கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஜெர்மன் சேனை எந்த எல்லைப்புறத்தில் எவ்விதமான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்? யுத்தமென்பது சில முடிவான நோக்கங்களைக்கொண்டு நடத்தப்படுகின்றது. யுத்தத்தின் முக்கியமான நோக்கம், சத்துருவின் ராணுவ பலத்தை அழிப்பதாகும். சத்துருவின் சேனை அழிந்துபோனால் சத்துருவின் தேச முழுவதும் வேறெவ்வித மாயும் எதிர்க்கமுடியாமல் பணிந்துவிடும். சத்துருவின்

ராணுவபலத்தை எவ்வாறு அழிப்பது? சத்துருவின் சேனையை போர்க்களத்தில் முறியடித்து அதன்துருப்புகளையும்ஆயுதங்களையும் தளவாடங்களையும் சேதப்படுத்துவதால் அதன் வன்மை அழிந்து போகும்படிச் செய்பலாம். வெறொரு வழியு மிருப்பதைக்கவனிக்க வேண்டும். பீரங்கி, வெடி மருந்து, முதலியவைகள் செய்யப்படுகிற முக்கிய ஸ்தலங்களையும், ஆகாரம் முதலிய வசதிகளைக் கொடுக்கக் கூடிய முக்கிய பிரதேசங்களையும் பிடித்துக்கொள்வதால்,சத்துருவின் ராணுவபலம் அழிந்துபோகக்கூடும். அல்லது, சத்துருவின் சேனை மன உறுதியையும் உற்சாகத்தையும் இழந்துபோனால் அதுதன் பாதி பலத்தையும் இழந்துவிட்டதென்றே சொல்லலாம். சத்துருவின் தலை நகரம் பிடிக்கப்படுவது, சத்துருவின் சேனைபதி சரணமடைவது முதலிய சம்பவங்கள் எவ்வளவு திடங்கொண்ட மனதையும் ஒடுங்கும்படி செய்யக்கூடியவை. இந்த பலவாறான நோக்கங்களில் ஜெர்மானியர் யுத்தந் தொடங்கியவுடன் மனதிற் கொண்ட தென்ன?

ஜெர்மானியர் ஏன் பிரஞ்சு எல்லையில் படையெடுத்தார்கள்.

பிரான்ஸ் ருஷியா இவ்விரண்டு தேசங்களின் எல்லைகளில் எந்த எல்லையை நோக்கி ஜெர்மன்,சேனை முக்கிய பிரயத்தனஞ் செய்யும்? ஆரம்பத்தில் பிரஞ்சு எல்லையில்தான் ஜெர்மன் சேனை படையெடுத்துச் செல்லுமென்று யாவரும் உறுதியாய் நம்பினர்கள். அதற்குக் காரணமென்ன? யுத்தந் தொடங்கியவுடன் ருஷிய சேனை தன் எல்லைப் புறத்தில் வந்துகூடிவிடமுடியாது. ருஷியா தேசம் மிகவும் விஸ்தாரமாயிருப்பதால் அதில் ஜனங்கள் விஸ்தாரமாய்ச் சிதறிக் கிடக்கிறார்கள். தூரப் பிரதேசங்களில் விலகி யிருக்கிற படைகளும், ஜனங்களிலிருந்து பொறுக்கி யெடுக்கப்படுகிற துருப்புகளும், எல்லைப்புறத்தில் கொண்டுவரப் படுவதற்குப் போதுமான ரயில் பாதைகளும் ரோட்டுகளுமில்லை. ஆகையால் ருஷிய சேனை யுத்த மண்டலத்தில் வந்து கூடுவதற்கு காலதாமஸமாகும். அதால் ஜெர்மன் சேனை ருஷிய எல்லைக்குச் சென்றால் அங்கு யுத்தஞ்செய்து எதிர்ப்பதற்கு ருஷியப் படைகள் வந்து சேர்ந்திருக்க முடியாது. ஆனால் ருஷியப் படைகள் எல்லைப்புறத்தில் காவல் செய்யாத சமயமன்றோ ஜெர்மன் சேனையின் நடவடிக்கைகளுக்கு மிகுந்த சௌகரியமான தென்று சிலர் நினைக்கலாம். அதப்படியல்ல; ஜெர்மானியர் ருஷிய எல்லைக்குச் சென்றுஅங்குள்ள ருஷிய மாகாணங்களை வசப்

படித்திக்கொள்வதில் யாதொரு பயனுமுண்டாகாது. யுத்தத்தின் முக்கியநோக்கங்கள் இன்னவையென்றுமுன்புசொல்லியிருக்கிறோம். எல்லைப்புறத்திலுள்ள ருஷிய மாகாணத்தில் யாதொரு முக்கிய ஸ்தலங்களும் இல்லை; அதாவது அங்குள்ள ஸ்தலங்களைப் பிடிப்பதால் ருஷிய சேனை எவ்விதத்திலும் பாதகப்படாது. ருஷியசேனைக்குத் தேவையான வசதிகள் அந்தப் பிரதேசத்திலிருந்து ருஷியருக்குக் கிடைப்பதில்லை. ருஷியா தேசம் மிகவும் விஸ்தாரமாயிருப்பதால், ஜெர்மானியர் இரண்டொரு ருஷிய மாகாணங்களைப் பிடிப்பதால் ருஷியருக்கு எவ்வித இடைஞ்சலையும் உண்டுபண்ணமுடியாது. லக்ஷக்கணக்கான சதுரமைல்களிலிருந்து திரட்டப்படுகிற ருஷியரின் சைன்ய பலம் எள்ளளவும் பாதகப்படாது. ருஷியத் தலைநகரான பீட்ரோகிராட் ஜெர்மன் எல்லையிலிருந்து 500மைலுக் கப்பாலுள்ளது. ஒருக்கால் ருஷிய சேனை எல்லைப்புறத்தில் கூடியிருப்பதாக வைத்துக் கொள்வோம். ஜெர்மன் சேனை ருஷிய எல்லையில் முன்சென்ற போதிலும் என்ன பயன்? ருஷிய சேனை பின்னடைந்து செல்லுமானால், ஜெர்மன் சேனை எவ்வளவு மைல்கள்தான் முன்சென்றுகொண்டிருக்க சாத்தியப்படும். ருஷியா தேசம் விசாலமாயிருப்பதை ஞாபகத்தில் வைத்தால், ருஷிய சேனை பலத்தில் குறைவுபடாதவரையில் ஜெர்மானியர் முன்சென்று கொண்டிருப்பதில் யாதொரு பயனுமுண்டாகாதென்பது நன்றாய்த் தெரியவரும். தவிர, ருஷிய மாகாணத்தில் போதுமான ரயில் பாதைகளும் ரோட்டுகளு மில்லாததால் ஜெர்மன் படைகள் ஏராளமாய்க்கூடி நடவடிக்கைகளை நடத்தவும் விரைவாய் முன் செல்லவும் முடியாது. மேலும், ருஷிய மாகாணங்களில் ஜனசஞ்சார மற்ற பிரதேசங்கள் விசாலமாயிருப்பதால் அங்கு ஆகார வசதிகளும் கிடைக்கா. அதனால் கால தாமதம் உண்டானால் ருஷிய சேனை நாளுக்கு நாள் வன்மையில் அதிகப்படுமே யொழிய குறைவுபடாது. ஆகையால் ஜெர்மன் சேனை ருஷிய எல்லையில் யுத்தத்தைத் தொடங்கி ருஷியா மேல் படையெடுப்பதால் எவ்வித நோக்கத்தையும் நிறைவேற்றமுடியாது. இந்த காரணங்களால் ஜெர்மன் சேனை பிரஞ்சு எல்லையில்தான் யுத்தத்தை ஆரம்பித்தது.

பிரான்ஸ் தேசமுழுவதும் நெருக்கமான ஜனசஞ்சாரத்தையுடையது; செல்வம் படைத்தநகரங்களையும் செழிப்பானபூமிகளையு

முடையது ; விஸ்தாரமான ரயில்பாதைகளையும் முதல் தரமான ரோட்டுகளையுமுடையது. பிரஞ்சு தலை நகரமாகிய பாரிஸ், உலகப் பிரஸித்திபெற்ற மகாநகரங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. பாரிஸ் நகரம் ஜெர்மன் எல்லையிலிருந்து 150 மைல் தூரத்தில் தானிருக் கிறது. ஆகையால் ஜெர்மன் சேனை 150 மைல் தூரம் முன்சென்றால், பாரிஸ் நகரத்தை வசப்படுத்தி பிரஞ்சு தருப்புகளையும் ஜனங்களையும் கலங்கச்செய்து பிரான்ஸ் தேசத்தின் பாதிபாகத்தையும் ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளலாம். பாதி தேசத்தையிழந்த பிரஞ்சு சேனை பாதி பலத்தையு மிழந்து அதற்குள்ளாக முறியடிக்கப்படலாம்; இல்லாவிடில் தெற்குபாகத்தில் எங்காவது அடைபட்டுப் போகலாம். இவ்விதசாதகங்கள் உண்டாகக் கூடுமென்று எண்ணி ஜெர்மானியர் பிரஞ்சு எல்லையில் நடவடிக்கைகளைத் தொடங்கினர்கள். ஜெர்மானியர் மற்ற தேசத்தாரைவிட அதிக சீக்கிரமாய் தங்கள் சேனையைத் திரட்டி மிகவும் விரைவாய் முன் செலுத்தக் கூடிய திறமையை விசேஷ மாகப் பெற்றிருக்கிறார்கள். அந்த விசேஷ சக்தி பிரஞ்சு எல்லையில் பயன்படலாமே யொழிய ருஷியா எல்லையில் முடியாது. மேலும், சென்ற நூற்றாண்டில் ஜெர்மானியர் அடைந்த அநேக வெற்றிகள் பிரான்ஸ் தேசத்தில் பெற்றவை. பூர்வீகப் பெருமைகளை ஞாபக மூட்டும் போர்க்களங்களைக் கடந்து, அங்கு முன்னோர்கள் ஜயமுழக் கத்துடன் நாட்டிய துவஜங்களை மறுபடியும் ஏந்திச் செல்லும் போது ஜெர்மன் படைகளின் மனதில் எழும்பக் கூடிய தென்பும் தினவும் மதிப்பிடக் கூடியவையல்ல. அதுமட்டுமல்ல; 44 வருஷங் களுக்கு முன்னால் ஜெர்மன் படைகள் பாரிஸ் நகரத்துக் கோட்டை களைத் தாக்கி மதிற் சுவரின்மேல் ஏறிநின்றபோது, அங்கு பணிந்து கிடந்த பிரான்ஸ் தேசத்தை கம்பீரமாய்ப் பார்த்த கண்கள் இன் றைக்கும் அதே போர்க்களங்களை நாடிச் செல்லும். அந்த காலத் தில் சண்டை செய்த வீரர்களிற் சிலர் இப்போது சேனைத் தலைவர் களாக அதே பிரதேசத்தின்மீது படை யெடுப்பார்கள். ஆகையால் பிரான்ஸ் தேசத்தின்மீது சிறிதும் தாமஸமின்றிப் படை யெடுப்ப தாக ஜெர்மானியர் நிச்சயஞ் செய்தார்கள்.

பிரான்ஸின்மீது எவ்வழியாய்ப் படை யெடுப்பார்கள்.

" பிரான்ஸ் தேசத்தின்மீது ஜெர்மானியர் எவ்வழியாய்ப் படை யெடுத்துச் செல்வார்கள் ? பிரஞ்சு சேனைத் தலைவர்களும் அதையே

யோசனை செய்துகொண் டிருந்தார்கள். பிரஞ்சு எல்லையின் தெற்கு பாகத்தில் வலுவான கோட்டைகள் பெல்போர்ட், எபினல், டில், வர்டுன் ஆகிய இந்த ஸ்தலங்களில் தெற்கு வடக்காய் வரிசையாகக் கட்டப்பட் டிருக்கின்றன. (453-ம் பக்கத்துப் படத்தைப் பார்க்க.) அவ்வழியாய் ஜெர்மானியர் முன்செல்ல தென்றல், ஏராளமான உயிர்களை இழந்து கோட்டைகளைப் பிடிக்கவேண்டி வரும். கோட்டைகளைப் பீரங்கியால் தகர்த்துப் பிடிப்பதற்குக் கால தாமஸமாகும். ஜெர்மானியர் ஒருக்கால் தருப்புகளை இழப்பதற்குத் தயாராயிருந்தபோதிலும் காலதாமஸஞ் செய்வதற்குத்தயாராயில்லை. மேலும் பிரஞ்சு எல்லையின் தெற்கு பாகம் மலைப்பிரதேச மாகையால் கல்ல ரோட்டுகளும் ரயில் பாதைகளு மில்லை. பிரஞ்சு சேனை தன் முழுபலத்தையும் திரட்டுவதற் குள்ளாக அதை முறியடிக்க வேண்டுமென்று ஜெர்மானியர் எண்ணங்கொண்டபடியால் அவர் கள் வேறு சுருக்கு வழிபைத் தேடினார்கள். பிரஞ்சு எல்லை யின் வடபாகத்தில் தழைந்து செல்லவேண்டுமென்று ஜெர்மானியர் தீர்மானித்தார்கள். அந்த பாகத்தில், பெல்ஜியம், லக்ஸம்பர்க் என்ற தேசங்களிருக்கின்றன. ஆகையால் ஜெர்மானியர் அந்த தேசங் களின் வழியாய் படைகளைச் செலுத்துவது அவசியமாயிற்று. சுயேச்சை பெற்ற அந்த தேசங்களின் வழியாய் ஜெர்மன் படைகள் செல்வதானது, மற்றவிதங்களில் எவ்வளவு குற்றமுள்ளதாயினும் ரா ணுவ நடவடிக்கைகளுக்குத் தீராத அவசியமென்றே சொல்லவேண் டும். மேலும் லக்ஷக்கணக்கான ஜெர்மன் தருப்புகள் அணிவகுத்துச் செல்வதற்கு விஸ்தாரமான பிரதேசம் தேவையாயிருக்கிறது. பெல் ஜியம் மிகவும் வளப்பங்கொண்ட பூமிகளையும் விஸ்தாரமான ரயில் பாதைகளையும் உடையதாகையால், ஜெர்மன் படைகளின் நடமாட்டத்துக்கு மிகவும் சௌகரியமானது.

யுத்தந்தொடங்கி 24 மணி நேரத்துக்குள்ளாக ஜெர்மன் சேனை பிரஞ்சு எல்லையில் குவிந்துவிட்டது. இந்த காலத்து யுத்த முறைப் படி, யுத்தந் தொடங்கியவுடன் தருப்புகள் யுத்த லன்னத்தராய்க் கிளம்பி சிறிதும் தாமஸமின்றி சத்துருவை எதிர்த்து நிற்பது அவ சியமென்று கருதப்படுகிறது. அவ்வாறு எல்லைப் புறத்தில் கல்ல பலங்கொண்ட படைகள் சத்துருவை வழிமறித்து நின்றுகொண் டிருக்க, அதற்குப் பின்புறத்தில் சைன்ய பலமுழுவதும் தயார் செய்

யப்பட்டு இரகஸ்யமாய் யுத்த மண்டல முழுவதிலும் நிலைபெற் றிருக்கவேண்டு மென்பது இக்காலத்துக் கொள்கை. 1870 ம் வரு ஷத்தில் நடந்த பிரஞ்சு யுத்தத்தில் ஜெர்மன் சேனைகள் போர்க்கோ லம் பூண்டு புறப்படுதற்கு 10 தினங்களாயின. இந்த மகா யுத்தந் தொடங்குவதற்கு முன்னதாக பிரான்ஸும் ஜெர்மனியும் தங்கள் எல்லைப்புறத்திலுள்ள படைகளை எப்போதும் யுத்தத்துக்குத் தயா ராய் வைத்திருந்தன. இக்காலத்து ரயில் பாதைகளின் உதவியாலும் பல நூதனஏற்பாடுகளாலும் அதிசீக்கிரத்தில் யுத்தந்தொடங்க சாத் தியமாகிறது.

யுத்தம் ஆரம்பித்தவுடன் ஜெர்மானியர் பெல்ஜியம், லக்ஸம் பர்க் இந்ததேசங்களின் வழியாய் பிரான்லின்மீது படையெடுத்து பாரிஸ் நகரத்தைப் பிடித்து பிரஞ்சு சேனையை முறியடிக்க வேண்டு மென்று எண்ணங் கொண்டார்கள். பிரஞ்சுக்காரர் தங்கள் எல் லைப்புறத்தைக் காத்து, ஜெர்மன் படைகளின் நோக்கமும் நடவடிக் கைகளும் செவ்வையாய் வெளிப்பட்ட பிறகு அவைகளை முறியடிக்க முயற்சிசெய்வதாகத்தீர்மானித்தார்கள். இவ்விதயோசனையை1870ம் வருஷத்துக்குப் பிறகு அவர்கள் செய்தார்கள். அந்த யுத்தத்துக்குப் பிறகு பிரஞ்சுகவர்ன்மெண்டு தங்கள் எல்லைப்புற முழுவதையும்கோ ட்டைகளால் காப்பதாகத் தீர்மானித்தார்கள். 150 கோடி ரூபாய் செலவுசெய்து கோட்டைகளைக் கட்ட ஆரம்பித்தார்கள். முதலில், எல்லையின் தெற்கு பாகத்தில் பெல்போர்ட் முதலான இடங்களில் கோட்டைகளைக்கட்டினார்கள். ஏராளமான திரவியம் செலவானதைக் கண்டு பெல்ஜிய எல்லையில் கோட்டைகள் கட்டுவதை தாமஸஞ்செய் தார்கள். பிறகு பெல்ஜிய எல்லையில் கோட்டைகளைக் கட்டுவதற் காக திரவியம் சேர்க்கப்பட்டபோது, அதுவரையில் கட்டப்பட்டி ருந்த பெல்போர்ட் முதலியன கோட்டைகள் பயனில்லை என்று தெரியவந்தது. ஏனெனில் புதுமாதிரியான பீரங்கிகள் மிகுந்த வன்மைகொண்டவையாய்ச் செய்யப்பட்டுவந்தன. ஆகையால் அந்த பீரங்கிகளைத் தாங்கும்படியாக பெல்போர்ட் முதலிய கோட்டைகளை மறுபடியும் ஏராளமாய்ச் செலவு செய்து சீர்ப்படுத்தும்படி நேரிட் டது. பிரஞ்சு எல்லைப்புறத்தின் நிலைமை இந்த மகா யுத்தந் தொடங் கியபோது அவ்வாறிருந்தது. ஜெர்மானியர் பிரான்லின்மீது யுத்தந் தொடர்ந்தபோது, பிரஞ்சுக்காரர் தங்கள் யுத்த தந்திரத்தின்படி

சத்துருவை எதிர்ப்பதற்கு அவசியமாயுள்ள படைகளைமட்டும் எல்லைப்புறத்துக்கு அனுப்பி, மற்றப்படைகளைப் பின்பலமாக இருப்பில் வைத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு ஜெர்மன் பிரஞ்சு கக்ஷிகள் வெவ்வேறு நோக்கங்களைக்கொண்டு யுத்தத்தைத் தொடங்கின. அந்த யுத்த நடவடிக்கைகள் எவ்வாறு முடிந்தனவென்று சுருக்கமாய்ச் சொல்வோம்.

பிரஞ்சுக்காரர் அல்ஸேஸ் மாகாணத்தின்மீது படை யெடுத்தல்.

ஜெர்மன் படைகள் அதிசிக்கிரமாய் பிரஞ்சு எல்லைக்குப்போவதற்காக, இலேசானபிரங்கிகளையும் தளவாடங்களையும் எடுத்துக்கொண்டு லக்ஸம்பர்க் நாட்டின்மீது படையெடுத்து பெல்ஜியத்துக்குள் புகுந்தன. ஆனால் ஜெர்மன் சக்கரவர்த்தி நினைத்திருந்தபடி பெல்ஜியசேனைபயந்துபோய் பணிந்துவிடாமல், ஜெர்மன்படைகளை தூணிவாய் எதிர்க்கத் தொடங்கியது. ஆகையால் பெல்ஜியத்துக்குள் புகுத 1,20,000 ஜெர்மன் துருப்புகளும், லீஜ்கோட்டைகளைத் தாக்குவதற்குத் தங்களிடம் பெரிய முற்றுகை பீரங்கிகளில்லாததால் அக்கோட்டைகளுக்கு முன்னால் நின்று விடும்படி கோர்ந்தது. பிறகு ஜெர்மானியர் பிரஞ்சு எல்லைப்புற முழுவதிலும் தங்கள் படைகளைக் குவித்து வந்தார்கள். அதனால் ஜெர்மானியருடைய உள் நோக்கம் தெளிவாய் விளங்காமலிருந்தது. வர்டன் முதல் பெல்போர்ட் வரையில் கட்டப்பட்டுள்ள பிரஞ்சு கோட்டைகளுக்கு முன்னால் ஜெர்மன் துருப்புகள் திரண்டுகொண்டிருந்தன. ஜெர்மானியர் பெல்ஜியத்தின் வழியாய்ச் செல்வதால் சிக்கிரமாய் பிரஞ்சு எல்லைக்குப் போகலாமென்று நினைத்ததற்கு மாறுக, லீஜ் கோட்டைகளின் முன்னால் கால தாமஸம் செய்யும்படி கோர்ந்தது. லீஜ் கோட்டைகளைப்போல நாமூர், ஆண்ட்வர்ப் இவ்விரண்டிடங்களில் வலுவான பெல்ஜியக் கோட்டைகளிருக்கின்றன. அந்த கோட்டைகளும் பெல்ஜிய சேனையுஞ்சேர்ந்துஜெர்மானியரை எதிர்த்து இன்னும் அதிககாலம் தாமஸம் செய்யக்கூடும். இதை உத்தேசித்து ஜெர்மானியர் தங்கள் முதல்யோசனையை மாற்றி அல்ஸேஸ் பாகாணத்தின் வழியாய்ப்பிரான்ஸுக்குள் புகுந்து விடக்கூடுமென்று பிரஞ்சு ராணுவ தந்திரிகள் நினைத்தார்கள். இவ்விஷயத்தை முக்கியமாய்க்கவனிக்கவேண்டும். ஜெர்மானியர் ஆகஸ்டு 3-ந்தேதி பெல்ஜியத்தின்மேல் படையெடுத்தார்கள். அதன் வழியாய்,


சிரமமின்றி விரைவாய் முன்செல்லலா மென்று நினைத்ததற்கு நேர் மாறுக, லீஜ் கோட்டைகளுக்கு முன்னுல் 1,20,000 ஜெர்மன்துருப் புகள் 5 தினங்களாகத் தயங்கி நிற்கும்படி நேர்ந்தது. இதைக் கண்டு ஜெர்மானியர் பிரஞ்சு எல்லையின் தெற்குக் கோடியில் படையெடுக்க உத்தேசிக்கலா மென்று பிரஞ்சு அதிகாரிகள் நினைத்தார்கள். அவர் கள் நினைத்தது போலவே அல்ஸேஸ் மாகாணத்துக்கு அருகிலுள்ள சில பிரஞ்சு கோட்டைகளைத்தாக்க ஜெர்மானியர் முயற்சி செய்தார் கள். ஆகையால் பிரஞ்சு ராணுவ தந்திரிகள் ஆகஸ்டு 8-ந்தேதி ஏரா ளமான பிரஞ்சுத் துருப்புகளை அல்ஸேஸ் என்ற ஜெர்மன் மாகாணத் தில் செலுத்தி அதன்மீதுபடையெடுத்தனர். அவ்வாறுபிரஞ்சுசேனை யின் ஒரு பாகம் அல்ஸேஸ் மாகாணத்தில் யுத்தஞ் செய்யப் பிரிந்து போனபடியால், பிரஞ்சு சேனை பெல்ஜியருக்குப் போதுமானபடி உதவிசெய்ய முடியவில்லை. பெல்ஜியத்திலிருந்து புறப்பட்ட ஜெர் மன் வெள்ளத்தைத் தடுப்பதற்கு பிரஞ்சு சேனை போதுமான பலத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆகையால் யுத்தந்தொடங்கிய வுடன் பிரஞ்சு படைகள் அல்ஸேஸ் மாகாணத்தின் மீது படை யெடுக்கச் சென்றதை முக்கியமானதாகக் கருதவேண்டும். பிரஞ்சு ராணுவ தந்திரிகள் அல்ஸேஸில் நடவடிக்கைகளைத் தொடங்கிய தற்கு வேறு சில காரணங்களு மிருக்கின்றன. அல்ஸேஸ் மாகா ணத்துக்கெதிரில் வலுவான பிரஞ்சு கோட்டைக ளிருந்தபோதிலும் ஜெர்மானியரின் வலுவான பீரங்கிகளை அவைகள் தாங்க முடியுமா என்பது சந்தேகமாயிருந்தது. ஜெர்மானியர் தங்கள் நோக்கத்தை சீக்கிரத்தில் நிறைவேற்றுவதற்காக எவ்வளவு பயங்கரமான உயிர்ச் சேதத்துக்கும் அஞ்சாமல் கோட்டைகளைத் தாக்கி பிடித்துவிடக் கூடும். தவிர, யுத்தந்தொடங்கியவுடன் பிரான்ஸ் தேச முழுவதி லும் ஜெர்மன் துப்பாளிகள், இரவில் கொசுக்கள்புறப்படுவதுபோல, கிளம்பிவிட்டார்கள். ஜெர்மன் துப்பாளிகளைக் கண்டு பிடித்துக் கொல்வதே பெருங்கவலையா யிருந்தது. ஆகையால் பிரஞ்சுகோட் டைகளின் இரகஸ்யங்களை அநேக துப்பாளிகள் மூலமாய் ஜெர்மானி யர் அறிந்துகொண் டிருக்கலாமென்றும் பிரஞ்சு அதிகாரிகள் நினைத் தார்கள். ஜெர்மன் பீரங்கிகளால் ஆகாத காரியத்தை ஜெர்மன் துப் பாளிகளும் தேசத்துரோகிகளும் செய்து முடிக்கலாம். பிரஞ்சு படைகள் அல்ஸேஸ் மாகாணத்தின் மேல் படையெடுத்ததற்கு மற்

ரொரு முக்கிய காரணத்தையும் கவனிக்கவேண்டும். பிரஞ்சு சேனை களைகியாகச் செய்த ஐரோப்பிய யுத்தம் 1870-ம் வருஷத்தில் நடந்தது. ஆகையால் அந்த வருஷத்தில் நடந்த யுத்தத்தில் பிரஞ்சுக் காரர் அடைந்த தோல்விக்கே இப்போது பிரஞ்சு துருப்புகள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதையிங் கொண்டிருப்பது இயல்பே. ஜெர்மானியர் தங்கள் பேச்சு வன்மையாலும் எழுத்து வன்மையாலும் தங்களுக்கு ஈடான வீரர்கள் உலகத்திலில்லே என்று அறிவித்து வந்தார்கள். உலகமும் அவ்வாறே நம்பி யிருந்தது. உதாரணமாக, ஜப்பானியர் தங்கள் ராணுவத்தை நூதன முறையில் சீர்ப்படுத்த உத்தேசித்தபோது ஜெர்மன் ராணுவ போதகர்களே வரவழைத்து ஜெர்மன் முறைகளைக் கற்றுக்கொண் டார்கள். பிறகு துருக்கியரும் தங்கள் ராணுவத்தை ஜெர்மன் முறைகளின் படி சீர்ப்படுத்தி ஜெர்மன் பீரங்கிகளில் அளவற்ற நம்பிக்கை வைத்தார்கள். மற்ற தேசத்தாரும் ஜெர்மன் ராணுவ முறைகளையும் தந்திரக்களையும் மதித்து வந்தார்கள். ஆகையால் பிரஞ்சு துருப்புகள் தங்கள் சத்துருக்களைவிட இளப்ப மானவர்களென்ற எண்ணத்தை வேருங்களையுமாப்ப் பிடுங்கி எறிவது அவசியமாகும். போர்க்களத்தில் துருப்புகள் தங்கள் சக்தியில் பூரண நம்பிக்கையும் தென்புங்கொண்டு, தளர்ச்சி அடையாத மன உறுதியுடன் சண்டை செய்தாலன்றி வெற்றி அடைவது அரிது. ஆகையால், பிரஞ்சுக்காரர் சத்துருவால் செவ்வையாய்க் காக்கப் படாத அல்ஸேஸ் மாகாணத்தில் புகுந்து ஜெர்மானியரை போர்க் களத்தில் புரட்டி யடித்து தங்கள் சக்தியை முற்றிலும் உணருவதற்கு நல்ல சமயம் வாய்த்தது. மேலும் அல்ஸேஸ் மாகாணம் 244-வருஷங்களுக்கு முன்னுல் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்தது. ஆகையால் முன்பு இழந்து விட்ட பிரதேசத்தை மறுபடியும் பிடிப்பதால் பிரஞ்சு துருப்புகளின் மனநிலைமை விருத்தியாகுமென்று பிரஞ்சு ராணுவ அதிகாரிகள் கருதினர்கள். அவ்விஷயத்தில் பிரஞ்சு ராணுவ அதிகாரிகள் எண்ணியபடி நேர்ந்தது. பிரஞ்சு படைகள் அல்ஸேஸ் மாகாணத்தில் புகுந்து வெற்றி மேல் வெற்றி பெற்றபோது பிரஞ்சு துருப்புகளும் ஜனங்களும் அளவற்ற உற்சாகங் கொண்டனர். ஜெர்மானியர் ஒப்பற்ற போர்த்திறமை கொண்டவர்களென்பது வெறும் பிரமையேதவிர வேறல்ல

வென்று தெரியவந்தது. 1870-ம் வருஷத்து யுத்தத்தில் சண்டைசெய்து வலது கையை இழந்த ஜெனரல் பாரென்பவர் பிரஞ்சுப்படைகளை அல்ஸேஸ் மாகாணத்தில் மிகவும் சாமர்த்தியமாய்ச் செலுத்தினர்.

ஜெர்மானியர் பிரஞ்சு எல்லை முழுவதையும் தாக்கல்

ஆயினும் பிரஞ்சுக்காரர் அடைந்த உற்சாகம் நீடித்திருக்கவில்லை; எனெனில், பிரஞ்சு துருப்புகளின் படையெடுப்பைக் கண்டு, ஜெர்மானியர் ஏராளமான துருப்புகளை திடீரென்று அல்ஸேஸ் மாகாணத்தில் குவித்து ஆகஸ்ட் 20-ந் தேதி பிரஞ்சு படைகளைப் பின் வாங்கும்படிச் செய்தனர். அதே தினத்தில் (ஆகஸ்ட் 20) ஜெர்மன் படைகள் பெல்ஜியத் தலைநகரமாகிய ப்ருஸல்ஸில் பிரவேசித்தன. ஆகஸ்டு 23-ந்தேதி அல்ஸேஸ் மாகாணத்தின் மேல் படையெடுத்த பிரஞ்சு துருப்புகளெல்லாம் தங்கள் கோட்டைகளுக்குப் பின்வாங்கி விட்டனர். அதே தினத்தில் ஜெர்மானியர் காமூர் கோட்டைகளைப் பிடித்து முன்சென்று, பெல்ஜிய எல்லையிலிருந்த பிரஞ்சுசேனையைப் பின் தள்ளி, மான்ஸ் என்ற ஸ்தலத்திலிருந்த பிரிட்டிஷ் சேனையையும் தாக்க ஆரம்பித்தனர். ஆகையால் ஜெர்மானியர் பிரஞ்சு எல்லைப் புற முழுவதையும் ஏக காலத்தில் தாக்கி வந்தார்கள். ஜெர்மன் படைகளெல்லாம் எல்லைப் புறத்தில் முழு பலத்துடன் அணிவகுத்து பிரான்வின் மீது படையெடுக்கத் தொடங்கின. அடுத்த பக்கத்திலுள்ள படத்தில் பின்வரும் விவரங்கள் விளங்கும். ஜெர்மன் படைகள் வடக்கில் பெல்ஜிய எல்லையிலிருந்து தெற்கில் அல்ஸேஸ் வரையிலும் மிகவும் உக்கிரமாய்த் தாக்கின. ஜெனரல்வான கிளக் பெல்ஜியத்திலிருந்த ஜெர்மன் படைகளுக்குத் தலைமை வகித்து பிரஞ்சு பிரிட்டிஷ் படைகளை உக்கிரமாய்த் தாக்கிக்கொண்டே முன்சென்றார். ஜெர்மன் சேனையின் மத்தியபாகத்துக்கு ஜெர்மன் இளவரசர் தலைமை வகித்தார். அவர் தெற்கு பெல்ஜியம், லக்ஸம்பர்க் லொரேன் மாகாணத்தின் வடபாகம், ஆகிய இந்த பிரதேசங்களிலிருந்து புறப்பட்டு மியூஸ் நதியை நோக்கச் சென்று, வார்டன் கோட்டையைச் சுற்றிலுமிருந்த பிரஞ்சுபடைகளைத் தாக்கிப் பிளந்துசெல்ல முயற்சி செய்தார். இதற்கும் தெற்கே, அல்ஸேஸ் மாகாணத்திலிருந்த ஜெர்மன் படைகள் பிரஞ்சு கோட்டைகளையும் அங்கிருந்த ஏராளமான பிரஞ்சு படைகளையும் தாக்க முயன்றன. இவற்றைக் கண்ட பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே தமது யுத்த நடவடிக்கையை உடனே யோசனைசெய்து நிச்சயித்துக்கொள்ளும்படி நேர்ந்தது.



இப்படத்தில், பிரான்வின் எல்லைப்புறத்தைக் காணலாம். பிரான்ஸுக்கு வடக்கில் இங்கிலீஷ்கடலும், வடகிழக்கில் பெல்ஜிய தேசமும், கிழக்கில் லக்ஸம்பர்க் நாடும், லொரேன், அல்ஸேஸ் என்ற ஜெர்மன் மாகாணங்களும் இருக்கின்றன. அவ்விரண்டு ஜெர்மன் மாகாணங்களுக்கு மேற்கில் பிரஞ்சுக் கோட்டைகள், வர்டூன், டேல், எபினல், பெல்போர்ட், ஆகியஇவ்விடங்களில் வரிசையாய்க் கட்டப் பட்டிருக்கின்றன. ஜெர்மானியர் பிரஞ்சு எல்லைப்புற முழுவதையும் தாக்குவதை இப்படம் காட்டுகின்றது. வெளுப்புக் கட்டங்கள் ஜெர்மன் படைகளையும், கறுப்புக் கட்டங்கள் நேசப் படைகளையும் குறிப்பிடுகின்றன. பெல்ஜியத்திலுள்ள மான்ஸ் என்னும் ஸ்தலத்திலிருந்து தெற்குக் கோடியிலுள்ள அல்ஸேஸ் மாகாணம் வரையில் இரண்டு சுகிப் படைகளும் நிலைபெற்று யுத்தத்தை ஆரம்பித்தன.


இரண்டு சுகிகளின் உள்நோக்கம்.

ஜெர்மானியரின் உள்நோக்கம் தெளிவாய் வெளிப்படும் வரையில் ஜெனரல் ஜாப்ரே தமது பிரஞ்சுபடைகளை அழியாமல் காப்

பதே பிரதானமாகக் கொண்டார். அல்ஸேஸ் மாகாணத்தின் எல்லையிலுள்ள வலுவான பிரஞ்சு கோட்டைகளை ஜெனரல் ஜாப்ரே முக்கிய ஆதாரமாகக்கொண்டு, அங்கு தமது சைன்ய பலத்தை ஊன்றி, அங்கிருந்து மற்றபாகங்களில் பிரஞ்சு துருப்புகளை செலுத்துவதாக நிச்சயித்தார். மத்தியபாகத்தில் மியூஸ்நதிக்கரையில் பிரஞ்சுப் படைகளை வலுவாய் நிறுத்தி, ஜெர்மன் இளவரசரைமுன்செல்ல விடாமல் தடுக்க முயற்சி செய்தார். ஜெர்மன் இளவரசர் மியூஸ் நதியைத் தாண்டிச் செல்லாதபடி, அந்நதிக்கரையின் இயற்கை அமைப்பும் வர்டன் கோட்டைகளின் வன்மையும் பிரஞ்சு படைகளுக்கு உதவி செய்தன. ஜெர்மன் இளவரசர் பாரிஸுக்குப் போகும் நேர் பாதைகளில் முன்செல்ல முயற்சி செய்தா ரென்பதைக் கவனிக்க வேண்டும். பெல்ஜியத்திலிருந்து புறப்பட்ட ஜெர்மன் படைகளைத் தடுப்பதற்கு, பிரான்ஸின் வடபாகத்தில் வலுவான கோட்டைகளில்லை. ஆகையால் அந்த பிரதேசத்தில் ஏராளமான பிரஞ்சுபடைகளைக் குவிப்பது அபாயமென்று ஜெனரல் ஜாப்ரே நினைத்தார். ஆகையால் பிரஞ்சுசைனிய பலம் மியூஸ்நதியிலும் அல்ஸேஸ்மாகாண எல்லையிலும் குவிக்கப்பட்டதென்பதை அறியவேண்டும். பெல்ஜிய எல்லையில் பிரஞ்சு சேனையில் பலம் குறைவாகவேயிருந்தது. யுத்தந்தொடங்கியபோது பிரஞ்சுஜெர்மன் சேனைகளின்பலம் சமமாக இருந்தது. ஒவ்வொரு கணியிலும் சுமார் 8½ லக்ஷம் முதல்தர துருப்புகளிருந்தன. ஆனால் ஜெர்மானியர் மூலபலங்களையும் சிக்கிரமாய்த் திரட்டி அனுப்பினர்க ளென்றும், அவைகள் பெல்ஜியத்தை அடக்கி வைப்பதற்குத் தேவையாயிருந்தன. ஜெர்மானியரின் மூலபலங்கள் பெல்ஜியசேனையை அடக்குவதற்கு பெல்ஜியத்தில் வைக்கப்பட்டனவே யொழிய, பிரஞ்சு சேனையைத் தாக்கச்செல்லவில்லை. ஆகையால் பிரஞ்சு சேனைபை எதிர்த்த சத்துருக்களின் தொகை சமமாகவே இருந்தது. இன்னுஞ் சில ஜெர்மன் மூலபலங்கள் அல்ஸேஸ் மாகாணத்திலிருந்துகொண்டு பிரஞ்சு படைகளைத்தாக்கின. ஜெர்மானியர் அல்ஸேஸ் மாகாணத்தில் மூலபலத்தைத் திரட்டித் தாக்கியதின் நோக்க மென்னவென்றால், அங்குள்ள பிரஞ்சு கோட்டைகளில் குவிக்கப்பட்ட பிரஞ்சு படைகள் பெல்ஜிய எல்லைக்கு வந்துவிடாதபடி தடுக்கப்பட வேண்டு மென்பதே. பிரஞ்சு எல்லைப் புற முழுவதையும் தாக்கி சுல்லாத்திசைகளிலும் பிரஞ்சு படை

THIAGARAJA MUDALIAR, MAY 1919

கனைப் பிரித்து நிற்கும்படிச் செய்து, பெல்ஜியத்திலுள்ள ஜெர்மன் படைகள் மட்டும் பாரிஸை நோக்கிச் செல்லவேண்டு மென்று ஜெர் மானியர் யோசனை செய்தார்கள். ஜெர்மானியரின் உண்மையான நோக்கம் என்னவென்றால், பெல்ஜியத்தின் வழியாய் ஏராளமான ஜெர்மன் படைகளைச்செலுத்தி பிரஞ்சுபடைகளை வளைத்து கொண்டு பாரிஸை நோக்கிச் செல்லவேண்டு மென்பதாகும்.



ஜெர்மானியரும் நேசக்கக்ஷியாரும் 453-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட பட த்திலுள்ளபடி நிலைபெற்று யுத்தஞ்செய்த பிறகு, செப்டம்பர் 6-ந்தேதி இப்பட த்திலுள்ளபடி நிலைபெற்றார்கள். பெல்ஜியத்திலிருந்தும், லக்ஸம்பர்க்கி லிருந் தும்லொரேன் மாகாணத்தின் வடபாகத்திலிருந்தும், ஜெர்மன் படைகள் முன் சென்றன. லொரேன் மாகாணத்தின் தெற்கு பாகத்திலிருந்தும் அல்ஸேஸ் மாகாணத்திலிருந்தும் ஜெர்மன் படைகள் முன் செல்லாமல், பிரஞ்சுக்காரரின் முயற்சிகளைத் தடுத்து நின்றன. இவைகளைப் பற்றிய விவரங்கள் கீழே சொல்லப்பட் டிருக்கின்றன.

ஜெர்மானியர் பாரிஸை நோக்கிப்படையெடுத்தல்.


பெல்ஜியத்திலிருந்து ஆகஸ்டு 23-ந் தேதி புறப்பட்ட ஜென ரல் வான் கிளக் தமது படைகளை அதி விரைவாய்ச் செலுத் தி தம்மை எதிர்த்த பிரிட்டிஷ் பிரஞ்சு படைக ளெல்லாவற்

றையும் வளைத்துத் தாக்கி கொண்டே பத்து தினங்களில் 150 மைல் தூரம் விரைவாய்க் கடந்து பாரிஸ் நகரத்துக் கருகில் வந்து விட்டார். ஜெனரல்வான் கிளக் யாவரும் எதிர் பாராத விசையுடன் மூன் சென்று செப்டம்பர் 4-ந்தேதி பாரிஸ் நகரத்துக் கருகில் வந்து விட்டதால், அவருக்குப் பக்கத்தில் ஆதரவா யிருக்கவேண் டிய ஜெர்மன் இளவரசர் அந்த சொற்ப காலத்துக்குள் மியூஸ் நதி யைக் கடந்துவிட முடியாமல் எல்லைப் புறத்தில் தவித்துக்கொண் டிருந்தார். அவர் முன்செல்ல முடியாம லிருந்ததற்கு வேறொரு காரணமு மிருந்தது. பிரஞ்சு படைகள் ஏராளமான வன்மை கொண்டு மியூஸ் நதிக்கரையிலிருந்து இளவரசரை அவர்ப் எதிர்த்து வந்தன. மியூஸ் நதிக்கரையிலும் அல்ஸேஸ் மாகாணத்திலுந்தான் பிரஞ்சு சேனைபதி தமது சைன்ய பலத்தைக் குவித்து வைத்தா ரென்று முன்பே சொல்லி யிருக்கிறோம். ஆகையால், ஜெனரல் வான் கிளக் பாரிஸுக்கு அருகில் வந்ததும், அவருக்கு இரண்டு பக்கங்களி லுள்ள பிரதேசங்களும் காலியாயிருந்தன. அவர் அவ்வாறு எவ் வித ஆதரவுமின்றி தமது படைகளைத் தனிமையாய் வைத்திருப்பது அபாயமென்பதை உடனே அறிந்து, மியூஸ் நதியை நோக்கித் தமது படைகளைத் திருப்பினார். அவர் பாரிஸுக்கு அருகில் வந்தபின் அதைத் தாண்டி தெற்கே முன் செல்லாமல், கிழக்குதிசையில் ஜெர் மன் இளவரசருடன் சேர்ந்துகொள்ளச் சென்றார். மியூஸ் நதிக்கரையி லிருந்த பிரஞ்சுப்படைகள் கிழக்கு மேற்கு இரண்டு பக்கங்களிலும் அவ்வாறு ஜெர்மானியரால்தாக்கப்படவே, பின்வாங்கும்படி நேர்ந்தது. பிறகு ஜெனரல்வான்கிளக், ஜெர்மன் இளவரசர் இருவரும் தங்கள் படைகளை ஒன்றுசேர்த்து, பாரிஸ் நகரத்தைத் தாண்டி முன்செல்ல ஆரம்பித்தார்கள். லொரேன் மாகாணத்தின் தெற்கு பாகத்திலும் அல்ஸேஸ்மாகாணத்திலும் இருந்த ஜெர்மன் படைகள் முன் செல்ல வில்லை. இதற்குச் சில காரணங்க ளிருக்கின்றன. ஜெர்மானியர் பாரிஸை நோக்கிச் சென்று அவ்வாறு செல்லும்போ தே நேசப்படை களை வளைத்துச் சூழ்ந்துகொள்ள வேண்டு மென்று மூக்கிய நோக் கங்கொண் டிருந்தார்கள். ஆகையால் ஜெர்மானியர் பாரிஸ் நகர மிருக்கிற திசையில் தங்கள் சைன்ய பலத்தைக் குவித்து அல்ஸேஸ் மாகாணத்தில் சொற்ப படைகளையே வைத்தார்கள். அதனால் அல் ஸேஸி லிருந்த ஜெர்மன் படைகள் முன் செல்லவில்லை. மேலும்

அல்ஸேஸின் எல்லையில் பிரஞ்சுக்காரர் ஏராளமான படைகளைத் திரட்டிவைத்தார்கள்.

ஜெனரல் ஜாப்ரே தமது மத்திய பாகத்துப்படைகள் மியூஸ் நதியைக் காத்துவர முடியாமல் பின் வாங்கியதைக் கண்டு தமது யோசனையை உடனே மாற்றி தமது சேனை முழுவதையும் வேறுவிதமாய் அணிவகுத்தார். பாரிஸுக்கருகிலிருந்த ஜெனரல் வான்கிளைக் தமக்குப் பின்னுல் பெல்ஜியம் வரையில் 150 மைல் நீளத்துக்குப் போக்குவரத்து வழிகளை வைத்துக்கொண்டு ஆபத்தான நிலைமையிலிருந்து வந்ததை ஜெனரல் ஜாப்ரே அறிந்து கொண்டார்கள். ஆகையால் ஜெனரல் ஜாப்ரே, பெல்ஜியத்துக்குச் செல்லும் வழிகளைத் தாக்குவதாக நிச்சயஞ்செய்தார். ஆனுல் அந்த வழிகளைத் தாக்கச்செல்கிற பிரஞ்சு படைகள் வலுவான ஸ்தலத்தை ஆதாரவாகக் கொண்டிருப்பது அவசியமாகும். பாரிஸ்நகரத்திலுள்ள கோட்டைகளை ஆதரவாகக்கொண்டு பிரஞ்சுபடைகள் அங்கிருந்து முன்சென்று ஜெர்மன்படைகளுக்குப்பின்புறத்தில்தாக்கலாமென்று ஜெனரல் ஜாப்ரே யோசனைசெய்தார். ஆகையால், அவர் அல்ஸேஸ் மாகாணத்தில் சண்டைசெய்து கொண்டிருந்த பிரஞ்சு படைகளின் பெரும்பாகத்தையும் பாரிஸுக்கு வரும்படி உத்தரவுசெய்தார். அல்ஸேஸ் மாகாணத்தில் சண்டைசெய்து கொண்டிருந்த பிரஞ்சு சேனைத்தலைவராகிய ஜெனரல் பா பாரிஸ் நகரத்துக்கு வந்தார். வேறு அநேக மூலபலங்களும் பாரிஸ் நகரத்தில் சேர்த்துவைக்கப் பட்டன. பாரிஸ் நகரத்தைச் சுற்றி வலுவான கோட்டைகளிருந்த படியால்தான் அவ்வித ஏற்பாடுகளை யெல்லாம் இடைஞ்சலில்லாமல் செய்ய சாத்தியப் பட்டது. ஜெனரல் வான்கிளைக் பாரிஸை முற்றுகை போட முயற்சி செய்தார். ஆனுல் ஜெனரல் பா தமது பிரஞ்சு படைகளை நகரத்துக்கு வெளியேசெலுத்தி போர்தொடங்க ஆயத்தமாயிருந்தார். ஆகையால் ஜெனரல்வான்கிளைக் பாரிஸுக்குவெளியே வந்த பிரஞ்சு படைகளை முறியடித்தாலன்றி, பாரிஸை முற்றுகை போடுவது சாத்தியமல்ல என்று அறிந்தார். பாரிஸுக்கு முன்னு லிருந்த பிரஞ்சு படைகளைத் தாக்குவதற்காக ஜெனரல் வான்கிளைக் தமக்குத் துணைப்படைகளைத் தருவித்தார். அவருக்குத் துணைப்படைகள் வருவதற்குமுன், ஜெனரல் பா பெல்ஜியத்துக்குச் செல்லும் வழிகளைத் தாக்கினர்.

பாரிலிலிருந்த பிரஞ்சு படைகள் ஏராளமான பீரங்கிகளையும் யுத்ததளவாடங்களையும் எடுத்துக்கொண்டு, ஜெர்மன் படைகளின் பின்புறத்தைக் கடுமையாய்த் தாக்கின. அவ்வாறு பாரிஸ் நகரத்திலிருந்து கிளம்பிய பிரஞ்சுபடைகளின் ஏராளமான வன்மையை ஜெனரல் வான்கிளக் அறிந்துகொண்டு ஒரு கூஷணப்போதும் தாமதமின்றி பின் வாங்கினர். பின்வாங்கிச் சென்றுகொண்டிருந்த ஜெர்மன் படைகளை பிரிட்டிஷ் படைகளும் பிரஞ்சு படைகளும் சேர்ந்து வெகு உக்கிரமாய்த் தாக்கின. ஜெனரல் வான்கிளக் மிகுந்த சேதமடைந்து பின் வாங்கியதால் அவர் தமது படைகளை யெல்லாம் இழந்துவிடுவார்போல் தோன்றிற்று. அந்த ஆபத்திலிருந்து அவர் சாமர்த்தியமாய்த் தப்பிச் சென்று எய்ஸன் நதிக்கரையில் நிலை பெற்றார்.



ஜெனரல்வான் கிளக் எய்ஸன் நதிக்குப் பின்வாங்கிய பிறகு, நேசப்படைகள் அவரை வளைத்துகொண்டு தாக்கின. அதன் விவரங்களை இப்படம் காட்டுகின்றது. அந்த விவரங்களைப்பற்றி அடுத்த பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நேசக் கக்ஷியார் ஜெர்மானியரை வளைந்துகொண்டு தாக்கல்.

ஜெனரல் பா, ஜெனரல் காஸல்ஸ்ஸு இவ்விரு பிரஞ்சு சேனுபதி களும் தங்கள் படைகளைக் கொண்டு, எய்ஸன் நதிக்கு வடக்கில் சென்று பெல்ஜியத்துக்குப் போகும் வழி நெடுகத் தாக்கினர்கள். ஜெனரல்வான் கிளக் எய்ஸன் நதியிலிருந்து பின் வாங்காமல் அங் கிருந்துகொண்டே பின்புறத்திலுள்ள பாதைகளைக் காத்துவந்தார்; தமக்குக் கிடைத்த புதிய துணைப்படைகளைக் கொண்டு பின்புறத்து வழிகளைக் காத்து, அங்கு வந்து தாக்கிய பிரஞ்சு படைகளை எதிர் த்து நின்றார். செப்டம்பர் 26-ந் தேதியிலிருந்து பிரஞ்சு படைகள் பெல்ஜிய எல்லைவரையில் தாக்கிக்கொண்டே சென்றன. எய்ஸன் நதிக் கரையிலிருந்த பிரிட்டிஷ் படைகளும் பெல்ஜிய எல்லைக்கு பிர யாணஞ்செய்து அங்கு ஜெர்மானியரைத் தாக்கின. பெல்ஜிய எல் லைக்கப்பாலுள்ள பெல்ஜியப் பாதைகளைக்காப்பதற்கு ஜெனரல்வான் கிளக் போதுமான துருப்புகளைப் பெற்றிருக்கவில்லை. பெல்ஜியத்தி லுள்ள போக்குவரத்து வழிகளை ஜெர்மானியர் இழந்துவிடுவார்கள் போலிருந்தது; பாதைகளை இழந்துவிட்டால் தப்பித்துக்கொண்டு போக வழியில்லாமல் அவர்கள் சாணமடையும்படி நேரிட்டிருக்கும். ஆனால் அச்சமயந்தான் பெல்ஜியத்திலுள்ள ஆண்ட்வர்ப் கோட்டை கள் ஜெர்மனியரால் பிடிக்கப்பட்டன. ஆண்ட்வர்ப் கோட்டைகளை முற்றுகைபோட்டுத் தாக்கிக்கொண்டிருந்த ஜெர்மன் படைகளெல் லாம், அக்டோபர் 9-ந்தேதியோடி அங்கு வேலை முடிந்துபோனபடி யால், பெல்ஜிய எல்லைக்கு விரைவாய் வந்து நேசப்படைகளை எதிர்த் தன. நேசத்துருப்புகள் இப்ரிஸ் என்ற பெல்ஜிய நகரம் வரையில் இப் போது முன் சென்றிருக்கிறார்கள். அவ்விடத்தில் ஜெர்மானியர் அவர் களைத்தாக்கி வருகிறார்கள். இப்போது நடந்துகொண்டிருக்கிற புத்த மானது, இங்கிலீஷ் கடலிலிருந்து எய்ஸன் நதிவரையிலும், எய்ஸனி லிருந்து வர்டன் வரையிலும், வர்டனிலிருந்து பெல்போர்ட் வரையி லும் விஸ்தாரமாய் நடைபெற்று வருகிறது.

29-வது அத்தியாயம்

ஜெர்மன் ராணுவத்தின் யுத்த தந்திரம்.

யுத்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம்.

சத்துருவின் சைன்ய பலத்தை அழிப்பதே யுத்த நடவடிக்கைகளின் பிரதான நோக்கமாகும். ஆனல் யுத்தத்தின் பலனை வேறுவித சம்பவங்கள் சேர்ந்து ஒரு தேசம் தன்பலத்தை இழந்து விடுகிறது முண்டு. முற்றுகையிடப்படும் கோட்டைகளிலுள்ள துருப்புகள் எதிரிகளோடு சண்டைசெய்து தங்கள் பலத்தை யிழந்துவிடுவதைவிட,பசியாலும் பிணியாலும் வருந்தி தங்கள் பலத்தை யிழந்து விடுவதே வழக்கமா யிருக்கிறது. ஒரு தேசத்துச் சேனை முழுவதும் அவ்வாறு வருந்தி தன் பலத்தை இழந்துவிடுகிறது. துருக்கி பால்கன் யுத்தத்தில் இரு கட்சிச் சேனைகளும் பிணியால் வருந்தியதாலும் திரவியமும் தளவாடங்களும் இல்லாததாலும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்தன. இந்த மகாயுத்தத்தில் கிரேட்பிரிட்டன் தன் கடற்படை வன்மைபால் ஜெர்மனிக்கு ஆகாரமும் தளவாடங்களும் போகாதபடி தடுக்க முயலுகின்றது. ஜெர்மனி தன் சப்மரின் கப்பல்களால் பிரிட்டிஷ் துறைமுகங்களுடன் வியாபாரக் கப்பல்கள் போக்கு வரத்து செய்யாதபடி தடுக்க முயலுகின்றது. ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில், ருஷிய சேனை பலஹீன மடையாமலிருந்த போதிலும் அது பலமுறை போர்க்களத்தில் தோல்வி அடைந்ததாலும், ருஷியக் கடற்படை முற்றிலும் அழித்துபோனதாலும், ருஷிய ஜனங்கள் யுத்தத்தில் வெறுப்புக்கொண்டு தங்கள் சுதந்தரத்துக்காக ருஷியாவில் கலகஞ்செய்தார்கள். ருஷிய கவர்ன்மெண்ட் அந்த யுத்தத்தை முடித்து சமாதானஞ் செய்துகொண்டதற்கு ஜனங்களின் கலகமும் ஒரு காரணமாகும். இந்த மகாயுத்தம் தொடங்கியபோது, ஜெர்மானியர் பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய தென்னப்பிரிக்காவில் போவர்களைக் கலகஞ்செய்யும்படித் தூண்டிவிட முயற்சி செய்தார்களென்று தெரியவருகிறது. ருஷிய

ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பான் சக்கரவர்த்தி பௌத்தமதஸ்தராகையால் ஜீவகாருண்யம் மேலிட்டு யுத்தத்தை நீடித்துநடத்த மனம் வராமல் சமாதானஞ்செய்துகொள்ளச் சம்மதித்தார். இந்த மகாயுத்தந் தொடங்கிய பின், ரோமன் காதலிக் கிறிஸ்தவர்களின் மதாசாரியாராகிய போப், சமாதானம் நிலைக்கு மாறுமுயற்சி செய்தார்; ஆனல் கிறிஸ்தவ மதத்தின் மெல்லிய குரல் யுத்த முழக்கத்தில் அமிழ்ந்தே போயிற்று. 1870 ம் வருஷம் நடந்த பிரஞ்சு ஜெர்மானிய யுத்தத்தில், பிரஞ்சுக்காரர் தங்கள் சக்கரவர்த்தியையும் சேனையையும் தலைநகரத்தையும் இழந்த பிறகு மனமொடுங்கிப் போனர்களாகையால், அவர்களால் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட படைகளெல்லாம் போர்க்களத்தில் எதிரிகளுக்கு முகங்கொடுக்க முடியவில்லை. ஆகையால் மேலே சொல்லிய பற்பல காரணங்களால் யுத்தஞ்செய்கிற தேசம் பலஹீனமடையக்கூடும். ஆனல் இந்த அத்தியாயத்தில், சத்துருவின் சைன்ய பலம் போர்க்களத்தில் எவ்வாறு அழிக்கப்படுகிறதென்று சொல்லப்படும். துருப்புகளும் ஆயுதங்களும் மற்ற தளவாடங்களு மில்லாமல் சத்துருவின் சேனை பலஹீனமடைந்து போர்க்களத்தில் எதிர்த்து நிற்க முடியாத நிலைமைக்கு வந்துவிடவேண்டுமென்பதே யுத்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமாகும்.

சத்துருவின் சைன்ய பலத்தை இரண்டு முக்கியமான வழிகளில் அழிக்கலாம். ஒன்று, சத்துருவின் சேனையைச் சூழ்ந்து கொண்டு முற்றிலும் அழித்துவிடுவது; இரண்டாவது, சத்துருவின் சேனையைப் பல துண்டுகளாகப் பிரித்து தனித்தனியாய் அழித்துவிடுவது. முதல் முறை ஜெர்மன் ராணுவத்திலும், இரண்டாவது முறை பிரஞ்சு ராணுவத்திலும் அனுசரிக்கப்படுகின்றன. முதல் முறை அதாவது ஜெர்மன் முறையைப்பற்றிச் சொல்வோம்.

ஜெர்மனிக்குக் கிழக்கில் ருஷியாவும், மேற்கில் பிரான்ஸும் இருப்பதால், ஜெர்மன் சேனை இரண்டு திக்கிலும் ஒரேகாலத்தில் சண்டை செய்யும்படி நேரிடும். அதை உத்தேசித்து ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தங்கள் சேனையின் தொகையை அதிகரித்து திறமையையும் விருத்தி செய்தார்கள். ருஷிய சேனை மிகப் பெரிதாயிருந்தாலும், அதை யுத்தத்துக்கு தயார் செய்து போர்முனைக்

குக் கொண்டு வருவதற்கு ஒரு மாத காலமாவது தாமஸமாகும். ஆகையால் அந்த ஒரு மாத காலத்துக்குள் பிரஞ்சு சேனையை முறியடித்துப் பிறகு ருஷிய சேனையை எதிர்க்கவேண்டு மென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தீர்மானித்தார்கள். அல்லாவிடில் மேற்குக் கோடியிலும் கிழக்குக் கோடியிலும் ஏக காலத்தில் சத்து ருக்களோடு சண்டை செய்து முடிவான வெற்றியை எவ்வாறு அடையமுடியும்? ஆகையால் ஏதாவதொரு எல்லையில் ஜெர்மன் சேனையின் பெரும் பாகத்தையும் குவித்து சத்துருவின் சேனையை அதி வீரைவாய் எதிர்த்துத் தாக்கி அடியோடு அழித்துவிடவேண்டு மென்பது ஜெர்மனியின் முக்கிய கொள்கை. அந்த் கொள்கையை நிறைவேற்றுவதற்குத் தக்கபடி ஜெர்மன் சேனையின் தொகை ஏரா ளமாய் அதிகரிக்கப்பட்டு யுத்தக் தொடங்கியதினமே 24 மணி நேரத்துக்குள் திருப்புகள் அணைத்தையும் ஓர் எல்லையில் குவித்து விடுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் முன்னதாகவே செய்யப்பட்டிருக் கின்றன. யுத்தகாலத்தில் ஜனங்களைச் சேனையில் சேர்த்து போர் மூண்டக்ு அனுப்புவதற்கு மிகவும ஒழுங்கான ஏற்பாடுகள் செய்யப் பட் டிருக்கின்றன வென்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். அவ்வாறு தாமஸ மின்றி சேர்க்கப்படுகிற சேனையை எல்லைப் புறத் துக்குக் கொண்டுபோய் சேர்ப்பதற்கு அநேக ரயில் பாதைகள் தேச மெங்கும் பின்னல்போலப் போடப்பட் டிருக்கின்றன; ஆகையால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தங்கள் சேனையில் மற்ற தேசத்துச் சேனையி லில்லாத இரண்டு விசேஷ சாதகங்களைப் பெற்றிருக்கும் படிச் செய்திருக்கிறார்கள். யுத்தக் தொடங்கியவுடன் ஜெர்மன் சேனை சற்றுந் தாமஸமின்றி எல்லைப்புறத்துக்கு வந்துவிடும். அந்த சேனை சத்துருவின் சேனையை விட தொகையில் அதிகமா யிருக் கும். அவ்வித விசேஷ சாதகங்களைக் கொண்டு சத்துருவின் சேனை தாமஸப்படாமல் அடியோடு அழிக்கவேண்டு மென்ற நோக்கத் தை நிறைவேற்றுவதற்குத் தக்கபடி, ஜெர்மன் ராணுவ தந்திரமும் நிச்சயிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சொல்லப்பட்ட இரண்டு முக்கிய மான தந்திரங்களில் ஜெர்மானியர் தங்களுக்குச் சாதகமான முறை யைத் தெரிந்தெடுத்தார்கள்; ஜெர்மன் ராணுவ தந்திரம் என்ன வென்றால், யுத்த நடவடிக்கைகளை ஆரம்பித்தவுடனே சத்துருவின் சேனையைச் சூழ்ந்துகொண்டு அடியோடு அழித்துவிட வேண்டு

மென்பது. அந்தயுத்த தந்திரம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறதென் பதைச் சொல்வோம்.

சத்துருவுக்குப் பின் புறத்தில் போர் விளைக்கும் தந்திரம்.

சத்துருவின் சேனையைச் சூழ்ந்து கொண்டு அழிப்ப தென்ற தந்திரம் வெகுகாலமா யிருந்து வருகிறது. ஜெர்மானியர் தங் கள் நிலைமையைக் கருதி அந்த தந்திரம் தங்களுக்குச் சாதகமா யிருக்கிறதென்று அதை அனுசரிக்கத் தீர்மானித்தார்கள். பேர் பெற்ற போர்வீரராகிய நெப்போலியன் அநேக போர்க்களங் களில் சத்துருவின் சேனையை அடியோடு அழித்திருக்கிறார். அவர் தமது சேனையை திடீரென்று சத்துருவுக்குப் பின்புறத்தில் செலு த்தி, சத்துரு இருந்தஇடத்தில் தாம் நிலைபெற்று தாமிருந்த இடத்தில் சத்துருவைத்தள்ளி சண்டையை நடத்தினர். அப் போது சத்துரு தன்னுடைய இருப்பிடத்தையும் தளவாடங் களையும் இழந்து அலங்கோலமாய்ச் சிதறிப்போவது வழக்கம். நெப்போலியன் வெகு திறமையாய் நிறைவேற்றிய அந்த தந் திரத்தை ஜெர்மன் சேனைத் தலைவராகிய மோட்கியும் அனுசரிக்கத் தொடங்கினர். 1870–ம் வருஷத்தில் ஜெர்மனியும் பிரான்ஸும் யுத்தஞ்செய்தபோது, மோட்கி அந்த தந்திரத்தை அனுசரித்து, கிராவிலாட்டி, லிடான் ஆகிய இவ்விரண்டு போர்க்களங்களில் ஜெர் மன் படைகளை பிரஞ்சு படைகளுக்குப் பின் புறத்தில் செலுத்தி னர். ஜெர்மன் சேனை பிரஞ்சு சேனைக்குப் பின்புறத்தில் சென்று தாக்கி, அங்குள்ள வண்டிகளையும் யுத்த தளவாடங்களையும் பிடித்துக்கொண்டு பிரஞ்சு சேனையை முறியடித்தது. அப் போது பிரஞ்சு சேனைக்கு எவ்வித ஆகாரமும் வெடிமருந்தும் தூணைப் படைகளும் வர முடியவில்லை. பிரஞ்சு சேனைக்குப் பின்புறத்திலுள்ள எல்லாப்பாதைகளும் ஜெர்மானியரின் வச மாகிவிட்டதால் பிரஞ்சு சேனை தன் சொந்தப் பிரதேசத்துடன் போக்குவரத்து செய்ய முடியவில்லை. பிரஞ்சு சேனை பின் வாங் கிச்சென்று தப்பித்துக் கொள்ளலாமென்றால், பின்புறத்து வழி கள் ஜெர்மானியரின் வசமிருந்தன; முன்புறமாய்ச் செல்லலாமென் றால், முன்புறத்து வழிகள் ஜெர்மன்பிரதேசத்துக்கு கொண்டுபோய் விடுகின்றன. ஆகையால் பிரஞ்சுசேனை சரணமடைந்தது. அந்த ரா ணுவ தந்திரத்தை நெப்போலியன் அநேக போர்க்களங்களில் நிறை

வேற்றி சத்துருவின்சேனையை அடியோடு அழித்து அந்த தந்திரத் தைப் பிரபலப்படுத்தினர். ஆனல் அந்த யுத்ததந்திரம் மிகவும் அபா யகரமானது. பிரஞ்சு சேனைக்குப் பின்புறத்தில் செல்கிற ஜெர்மன் சேனை சத்துருவின் பிரதேசத்தில்தானே யிருக்கும். அந்த ஜெர்மன் சேனை தோல்வியடைந்தால் அதன் கதி என்னுகும் ? அந்த ஜெர் மன் சேனை பிரஞ்சு பிரதேசத்துக்குள் கள்ளப்பட்டு அழிந்துபோகு மல்லவா ? மேலும், இந்த காலத்துச் சேனை 100 அல்லது 200 மைல் விஸ்தீரணத்தில் வியாபித்துச் சண்டைசெய்து, பின்புறத்தில் அநேக ரயில் பாதைகளை ஆதாரமாக வைத்துக்கொள்கிறபடியால் அவ்வளவு விஸ்தீரணத்தையும் சுற்றிக்கொண்டு பின்புறத்தில் செல் வது சாத்தியமல்ல. சிறுபடைகளை அவ்வாறு அழிக்கலாமேயொழிய சேனைமுழுவதையும் பின் புறத்திலிருந்துகொண்டு தாக்கமுடியாது. ஆகையால் அந்த தந்திரத்தை இக்காலத்தில் நிறைவேற்றுவது அசாத்தியமென்று ஜெர்மானியர் அறிந்துகொண்டு அதைச் சற்று மாற்றிக்கொண்டார்கள். சத்துருவின் சேனைக்குப் பின்புறத்தில் சென்று அங்கிருந்துகொண்டு தாக்குவதற்குப் பதிலாக, சத்துருவை நாலாபக்கங்களிலும் சூழ்ந்துகொள்ளவேண்டும். அதெப்படி யென் றல் ஜெர்மன் சேனையின் மத்திய பாகம் சத்துருவுக்கெதிரில் நிலை பெற்றிருக்க, இடதுபாகமும் வல பாகமும் வளைந்து சென்று சத் துருவைச் சூழ்ந்துகொள்ள வேண்டும். நமக்கு எதிரிலுள்ள ஒரு வனை நம்முடைய இரண்டு கைகளாலும் கட்டி அணைப்பதுபோல சத்துருவின் சேனையைச் சூழ்ந்துகொள்ள வேண்டும். ஒரு சேனை சத்துருவின் சேனையைச் சூழ்ந்துகொள்ள வேண்டு மானல் அது சத்துருக்களைவிட தொகையில் அதிகமாயிருக்க வேண்டும். ஆகையால் இந்த காலத்தில் நடக்கிற அநேகமாய் எல்லா யுத்தங்களிலும், அதிக பலங்கொண்ட சேனை மேலே சொல் லியபடி பக்கவாட்டில் வளைந்துசென்று சத்துருவின் சேனையைச் சூழ்ந்துகொள்ள முயற்சிசெய்வது வழக்கமாயிருக்கிறது. ஆகை யால் அந்த யுத்த தந்திரத்தின் நடவடிக்கையைச் சற்றுத்தெளிவாய் விளக்கவேண்டும்.


போர் முனையில் படைகள் நிலைபெற்றிருக்கும் விதம்.

போர்முனைக்குச் செல்கிற சேனையானது சத்துருக்களை முன் செல்லவிடாமல் தடுப்பதற்காக முன் புறத்தில் எவ்வளவு விஸ்தார

மாய்ப்பரவியிருக்க முடியுமோ அவ்வளவு விஸ்தாரமாய் நின்று அங் குள்ள வழிகளை எல்லாம் காத்துவரும். ஆகையால் யுத்தஞ்செய்கிற திருப்புகள் அனைவரும் முன்புறத்தில் வழிமறித்து நிற்பார்கள். அவ் வாறு முன்புறத்தில்நிலைபெறுகிற திருப்புகள் தங்களுக்குப்பக்கவாட் டினும் பின்புறத்தினும் காவல்செய்வதற்கு அவசியமாயுள்ள திருப் புகளைமட்டும் அங்கு அனுப்புவார்கள். ஆகையால், போர்க்களத்தில் சாதாரணமாய் படைகளெல்லாம் முன் புறத்தில்தான் வழிமறித்து நின்று சண்டைசெய்யும். யுத்த களத்தினுள்ள சேனை பலபாகங் களாகப்பிரிந்து பற்பல பிரதேசங்களில்நிலைபெற்று 100, 100 மைல் விஸ்தீரணத்தில் போர்வீரத்தோடினும், அவ்வாறு பிரிந்து சண் டைசெய்கிற படைகளெல்லாம் முன்புறத்தில் இடைவெளிவிடாமல் ஒரே வரிசையாய் நின்று சண்டைசெய்யும். உதாரணமாக, நேசப் படைகள் பல பாகங்களாகப் பிரிந்து, பெல்ஜியத்தினுள்ள இப்ரிஸ் நகரத்தினும், எய்ஸன் நதிக்கரையினுள்ள சாய்ஸன்ஸ் நகரத்தினும், மியூஸ் நதிக்கரையினுள்ள வர்டன் நகரத்தினும் லொரேன்மாகாணத் துக் கருகினுள்ள நான்ஸி நகரத்தினும் சண்டைசெய்கின்றன. அந்த நகரங்களெல்லாம் வெவ்வேறிடங்களில் அநேக மைல்களுக்கப்பால் இருக்கின்றன. ஆயினும் நேசப்படைகளின் முன்புறம், வடக்குக் கோடியிலிருந்து தெற்குக்கோடி வரையினும் கொஞ்சமும் இடை வெளியில்லாமல் ஒரே வரிசையாக நின்று ஜெர்மானியரை எவ்விடத் தினும் தழையவிடாமல் தடுக்கின்றன. வரிசையாய் இடைவெளி யில்லாமல் நிற்பதென்றால், திருப்புகள் வரிசையாய் ஒருவர் பக்கத் தில் ஒருவராய் இடைவெளி யில்லாமல் நிற்பார்களென்று கருதக் கூடாது; படைகள் தங்கள் நெருப்பாயுதங்களால் முன் புறத்தி லுள்ள பிரதேசமெங்கும் எள்ளளவு இடம் விடாமல் சேதமுண்டு பண்ணுமென்று கருதவேண்டும். ஒரு ஸ்தலத்தில் ஆறு பிரங்கிகள் அமைக்கப்பட்டால் முன்புறத்தில் சுமார் 8 மைல் விஸ்தீரணத்தில் நெருப்பைப் பொழிந்து சத்துருக்களை நெருங்கவிடாமல் தடுக்கும். ஆகையால் அந்த 8 மைல் விஸ்தீரணம் இடைவெளி விடாமல் காக் கப்படுகிறதென்று சொல்லலாம். இரண்டு பட்டாளங்கள் தங்களுக் கிடையே இரண்டு மைல் தூரம் விலகி நிலைபெற்றாலும், அவைகள் தங்கள் தூப்பாக்கிகளால் இடையேயுள்ள இரண்டு மைல் விஸ் தீரணத்தையும் காக்குமாகையால் அந்த பிரதேசம் இடைவெளி

விடாமல் காக்கப்படுகிறதென்று சொல்லலாம். யுத்த பிரதேசத்தி லுள்ள சேணை முன்புறத்தில் மேற் சொல்லியவாறு இடைவெளி விடாமல் நிலைபெற்றிருக்கும். ஆனால் அந்த சேணை தன் பக்கவாட் டிலும் பின்புறத்திலும் அவ்வாறு இடைவெளி விடாமல் நிலைபெற்றி ருக்காது. சேணையின் பெரும்பாகமும் முன்புறத்துக்கே அனுப்பப் படும்; சிறுபாகம் மட்டும், பக்கவாட்டிலும் போக்குவரத்து வழி களிலும் காவல் செய்வதற்கு உபயோகிக்கப்படும்.

சத்துருவைப் பக்கவாட்டில் தாக்கிச் சூழ்ந்துகொள்ளும் தந்திரம்.



மத்தியபாகம்.

மேலே காட்டப்பட் டிருக்கிற படத்தில் வெளுப்புப் படைகள் கறுப்புப் படைகளைப் பக்கவாட்டில் சூழ்ந்துகொள்ள முயற்சிசெய் கின்றன. கறுப்புத் துருப்புகளுக்குப்பின்புறத்தில் அநேக போக்கு வரத்து வழிகளிருக்கின்றன. வெளுப்புத் துருப்புகள் பக்கவாட் டில் சென்று அந்தப் பாதைகளை வசப்படுத்திக் கொண்டால், கறுப் புப் படைகளுக்கு ஆகாரமும் வெடி மருந்தும் பீரங்கிகளும் துணைப் படைகளும் புதிதாய் வந்துகொண்டிருக்க முடியாது. அப்படிப் பட்ட படைகளின் வன்மை 2 அல்லது 3 தினங்களில் குறைந்து விடும். மேலும் அந்தப் பாதைகளின் வழியாய் கறுப்புப்படைகளின் பின்புறத்தில் தாக்கி அங்குள்ள வண்டிகளையும் சாமான்களையும் தளவாடங்களையும் வெளுப்புப் படைகள் பிடித்துக்கொள்ளலாம். ஒரு சேணையைச் சேர்ந்த தளவாடங்கள் சத்துருவால் சேதமாகாம லிருப்பதற்கு அவைகள் பின் புறத்தில்தான் பந்தோபஸ்தாய் வைக் கப்படும். கறுப்புப் படைகள் வலது பாகம் மத்திய பாகம் இடது

பாகம் என்று மூன்றுபிரிவுகளாக இருக்கின்றன. ஒவ்வொரு பாகத்திலும் 2 படைகளிருக்கின்றன. ஒவ்வொருபடைக்கும் ஒவ்வொரு இளைப்பாதை பின்புறத்திலிருக்கின்றது. வலது பக்கத்தில் வளைந்து செல்கிற வெளுப்புப்படை தனக்கு கேரில் இரண்டு பாதைகள் சந்திக்கிற இடத்தை வசப்படுத்திக்கொண்டால், அவைகளுக் கப்பாலுள்ள இரண்டு கறுப்புப்படைகளும் தங்கள் ஸ்வாதீனத்தை யிழந்து விடுகின்றன வென்றுசொல்லலாம். அவ்விரண்டு கறுப்புப் படைகளும் தங்கள் இருப்பிடத்திலிருந்து விலகி, மத்திய பாகத்திலுள்ள கறுப்புப் படைகளோடு சேர்ந்து கொள்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். வலது பக்கத்திலுள்ள இரண்டு இளைப்பாதைகள் வெளிப்புப் படைக்குச் சுவாதீனமாகி விட்டால் கறுப்புப் படைகள் ஆகாரம் வெடிமருந்து முதலியவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பிருந்த அத்தனை பாதைகள் இப்போது இரா; ஆகையால் மத்திய பாகத்திலுள்ள நான்கு கறுப்புப் படைகளும் அதிக கஷ்டத்துக்கு உள்ளாகும். மேலும், மத்திய பாகத்தில் ஏற்கெனவே இருந்துவந்த கறுப்புப் படைகள் வலுவான ஸ்தலங்களைத் தெரிந்தெடுத்து அங்கு அரண்களைக்கட்டி நிலைபெற்று வந்தன. ஆகையால் மத்திய பாகத்துக்குப் புதிதாய்ச்சென்ற இரண்டு கறுப்புப் படைகளுக்கும் பந்தோபஸ்தான இருப்பிடங்கள் கிடைக்கா. ஆகையால், வலது புறத்திலிருந்த இரண்டு கறுப்புப் படைகளும் மத்திய பாகத்துக்குச் சென்றால் அங்கு எவ்வித பந்தோபஸ்தும் மில்லாமல் சத்துருவின் பீரங்கிகளால் நாசமாகக் கூடும். அல்லது, வலது பாகத்திலிருந்த இரண்டு கறுப்புப் படைகள் மத்தியபாகத்துடன் சேர்ந்து கொள்வதற்குப்பதிலாக, தங்கள் பின்புறத்தில் ஆபத்து நேரவதற்கு முன்னால் பின்புறத்திலுள்ள பாதைகளின் வழியாய் பின்வாங்கிச் செல்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். அப்போது மற்ற கறுப்புப் படைகளும் சேர்ந்தாற்போல் பின் வாங்க வேண்டும். இல்லாவிடில் அந்த இரண்டு கறுப்புப் படைகளும் மற்ற கறுப்புப்படைகளினின்றும் விலகி பிரிந்து போகும். அவ்வாறு கறுப்புப்படைகள் பிரிந்துபோனால் அவைகளைச் சத்துருக்கள் தனித்தனியாய்த்தாக்கி எளிதாய் அழித்துவிடுவார்கள். நமக்குஇடதுபுறத்தில் வளைந்துசெல்கிற வெளுப்புப்படை, எல்லாப் பாதைகளும் சந்திக்கிற இடத்தைநோக்கிச் செல்கிறது; அதைவலுப் படுத்திக்கொண்டால்,

கறுப்புப்படைகளெல்லாம் பின்புறத்தில் எல்லாப்பாதைகளையும் இழந்து சரணமடைய வேண்டும். சராசரணமாய் அப்படிப்பட்ட ஆபத்துகள் போக்கு வரத்து வழிகளுக்கு நேரிடுவதா யிருந்தால், அவ்வாறு நேரிடுவதற்கு முன்னதாகவே பின்வாங்கி விடுவது வழக்கம். அவ்வாறு ஒரு சேனை முற்றிலும் சூழ்ந்துகொள்ளப்படும் வரையில் ஏமாந்து நிற்பது மிகவும் அபூர்வமான சம்பவம். தாராளமான போக்குவரத்து வழிகளில்லாமல், மலைகளும் காடுகளும் பெரிய நதிகளுமிருக்கிற பிரதேசங்களில் பெரிய சேனை நிலைபெற்று சண்டை செய்வது அபாயகரமாகும்; ஏனெனில் அப்படிப்பட்ட பிரதேசங்களில் சத்துருக்கள் மறைவாய் வந்து திடீரென்று முக்கியமான பாதையிலுள்ள நதிப்பாலங்கள் மலைக் கணவாய்கள் இவைகளைப் பிடித்துக்கொள்வது சாத்தியமாகும். ஆகையால் ஒரு சேனை சத்துருவோடு சண்டைசெய்யத் தொடங்கும் போது, அதன் பின்புறத்திலுள்ள போக்குவரத்து வழிகள் லிஸ்தாரமாயும் பர்தோபஸ்தாயு மிருக்கின்றனவா என்பதை முக்கிய மாய்க் கவனிக்கவேண்டும். நெப்போலியன் போர்முனைக்குச் செல்லும் போது முன்புறத்தில் ஒரு முறை பார்த்தால் பின்புறத்தில் இரண்டுமுறை பார்ப்பது வழக்கமாம். மேலே காட்டப்பட்டிருக்கிற படத்தில் கறுப்புப் படைகளெல்லாம் வழிகளை இழந்துவிடுவதற்கு முன் பின்வாங்கி விட்டனவென்று வைத்துக் கொள்வோம். அதனால் உண்டாகிற பலன்கள் என்ன? முதலாவது, கறுப்புப் படைகள் அந்த வலுவான பிரதேசத்தைச் சத்துருவிடம் விட்டு விடுகின்றன. இரண்டாவது, அவைகள் பின்வாங்கிச் சென்றால் மறுமுறை சத்துருக்களை எதிர்ப்பதற்கு வேறொரு வலுவான பிர தேசத்தைத் தெரிந்தெடுக்க வேண்டும். பின் வாங்கிச் செல்லும் வழியில் வலுவான பிரதேசமிருந்தால் மறுமுறை பலமான சண்டை நடக்கும். அப்படிப்பட்ட வலுவான பிரதேசத்தை நோக்கிச் செல்ல விடாமல் வெளுப்புப் படைகள் தாக்கிக் கொண்டு தூரத்திச் செல்லும். வலுவான பிரதேசம் அருகில் இல்லாவிட்டால் கறுப்புப் படைகள் அருகிலுள்ள ஒரு கோட்டைக்குள் புகுந்துகொள்ளும். அப்போது வெளுப்புப் படைகள் அந்தக் கோட்டையை முற்றுகை போடும். அவ்வாறு அந்தக் கறுப்புப் படைகள் கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டால் அந்த தேசம் அவை

களை யிழந்துவிட்டதாகவே நினைக்கவேண்டும். ஏனெனில், கோட்டையில் அந்தப் படைகள் அடைபட்ட பிறகு, சத்துருவின் சேனை மற்ற பிரதேசங்களில் எவ்வித தடைகளுமின்றி தாராளமாய் சஞ்சாரஞ்செய்து வரலாம். ஒரு தேசத்தின் மீது சத்துருக்கள் படையெடுத்து அதைசுவாதீனஞ்செய்து கொள்ளமுயற்சிசெய்யும்போது, அந்த தேசத்துச்சேனைதான் அந்த முயற்சிக்குத் தடைசெய்து வருகிறது. அந்த தேசத்துச்சேனை, சத்துருக்கள் செல்கிறஇடங்களுக்கெல்லாம் சென்று எதிர்த்து வருவதால்தான், அந்த தேசத்தை சத்துருக்கள் சுவாதீனஞ்செய்து கொள்ளமுடியாமலிருக்கிறார்கள். அந்த தேசத்துச்சேனை ஒரு கோட்டையில் அடைப்பட்டுப்போனால் தேசத்தை சத்துருக்கள் சுவாதீனஞ் செய்வதை எவ்வாறு தடுக்க முடியும்? ஆகையால், ஒரு சேனை பின்வாங்கிச்செல்லும்படி நேர்ந்தால், கோட்டைக்குள் புகுத்துகொள்ளாமலிருக்கவேண்டும். 1870ம் வருஷம் நடந்த பிரஞ்சு ஜெர்மானிய யுத்தத்தில், பிரஞ்சு சேனையின் ஒரு பாகம் மெட்ஸ் என்ற கோட்டைக்குள் தானாகவே புகுந்து கொண்டது. பிரஞ்சு சக்கரவர்த்தியால் செலுத்தப்பட்ட மற்றொரு பாகம் லிடான் என்ற ஸ்தலத்திலிருந்த கோட்டைக்குள் புகுந்து கொள்ளும்படி ஜெர்மன் சேனை பலவந்தஞ்செய்தது. அதாவது ஜெர்மன்சேனை எல்லாப் பாதைகளையும் வசப்படித்துக் கொள்ளவே பிரஞ்சு சேனை நிலைபெற்றிருப்பதற்கு வேறுஇட மில்லாமல் கோட்டைக்குள் புகுத்துகொள்ளும்படி நேர்ந்தது. ஜெர்மன் பீரங்கிகள் அந்த கோட்டைபைச் சேதப்படுத்தியவுடன், பிரஞ்சு சேனை சரணமடைந்தது.

சத்துருவுக்கும் நேசருக்கும் கோட்டைகளால் நேரிடும் ஆபத்து.

இந்த மகாயுத்தத்தில் ஜெர்மன் படைகள் பெல்ஜியத்திலிருந்து புறப்பட்டு அங்கிருந்த நேசத்துருப்புகளை வளைத்துகொள்ள முயற்சி செய்தன. பெல்ஜியத்திலிருந்து புறப்பட்ட ஜெர்மன் படைகள் நேசத்துருப்புகளைத்தாக்கி அதிக வீரைவாய் வளைத்தவண்ணமாகவே பாரிஸ் வரையிலும் முன் சென்றபோது, அவைகளைவிட அதிக வீரைவாக நேசத்துருப்புகள் பின் வாங்கிச்சென்று தப்பித்துக் கொண்டன. ஜெர்மன் படைகள் பாரிஸ் நகரத்தக்கருகில் வந்தும் பக்கவாட்டில் வளைத்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் பக்கவாட்டில் பாரிஸ் நகரத்தக் கோட்டைக ளிருந்தன. ஜெர்மன்

படைகள் அந்தக்கோட்டைகளிலிருந்த பீரங்கிகளாலும் துருப்புகளாலும் தாக்கப்படாம லிருப்பதற்கு பாரிஸை முற்றுகை போட வேண்டும். பாரிஸில் விஸ்தாரமான கோட்டைகளிருப்பதால் அவைகளை முற்றுகை போடுவதற்குத் தேவையான துருப்புகள் ஜெர்மானியரிடம் அச்சமயம் இல்லை. ஆகையால் பாரிஸை விட்டுவிட்டு, ஜெர்மன் படைகள் முன்சென்றன. அவைகளின் நோக்கமென்னவென்றால், நேசத்துருப்புகளை இன்னும் வெகு தூரம் பின்வாங்கும்படிச் செய்து கடைசியில் அவர்களை ஏதாவதொரு பிரதேசத்தில் ஒன்றுக் குவித்துவிட வேண்டுமென்பது. ஆனால் நேசப்படைகளின் சேனாபதி பாரிஸ் கோட்டைகளுக்குள் ஏராளமான மூலபலங்களைத் திரட்டி ஜெர்மானியரைத் தாக்கியதால், ஜெர்மானியரின் நோக்கம் நிறைவேறாமல் விருந்ததோடு ஜெர்மன் படைகள் பின் வாங்கும்படியும் நேர்ந்தது.

இந்த மகாயுத்தம் தொடங்கியவுடன் பிரிட்டிஷ் சேனை மான்ஸ் என்ற ஸ்தலத்திலிருந்து பின்வாங்கிச் சென்றபோது, ஜெர்மன் படைகள் பற்பல பாதைகளில் வந்து தாக்கி வழியிலுள்ள எந்த கோட்டையிலாவது புகுந்துகொள்ளும்படி பிரிட்டிஷ் சேனையை பலமுறை பலவந்தஞ் செய்தன. ஆனால் பிரிட்டிஷ் சேனை அதற்கு இடங் கொடுக்காமல், ஜெர்மன் படைகளைத் துணிவாய் எதிர்த்து பின்புறத்தில் ஒரு பாதையை அபாயமின்றி வைத்துக்கொண்டிருந்தது. பிரிட்டிஷ் சேனை அவ்வாறு ஜெர்மன் படைகளை எதிர்ப்பதற்கு யோசனை செய்து கோட்டையில் புகுந்துகொண்டிருந்தால் பெரிய ஆபத்து நேரிட்டிருக்கும். அவ்வாறே பிரஞ்சுசேனை பாரிஸ் நகரத்தை நோக்கிப் பின்னடையும்படி நேரிட்டபோது, பாரிஸிலுள்ள பெரிய கோட்டைகளில் புகுந்துகொள்ளாமல் அவைகளைக் கைவிட்டு விலகிச் சென்றது. பாரிஸ் நகரத்தையும் கோட்டைகளையும் ஒருக்கால் இழந்துவிடும்படி நேரிட்டாலும சேனையை ஒருக்காலும் இழந்துவிடக்கூடாது.

ஒரு சேனை தன் சத்துருக்களைப் பக்க வாட்டில் தாக்கி வீழ்ந்து சென்று பின்புறத்தி லுள்ள பாதைகளை வசப்படுத்திக் கொண்டால், சத்துருக்கள் தப்பித்துக்கொண்டு செல்ல முடியாது. சத்துருக்கள் அவ்வாறு முற்றிலும் சூழப்பட்டு அழிந்துபோவார்கள். அந்த ஆபத்து நேரிடுவதற்கு முன்னால் சத்துருக்கள் தப்பித்

தூக்கொண்டு சென்றால் சத்துருக்களைத் தூரத்திச் சென்று கடைசியில் அவர்களுக்கு மிகவும் அசௌகரியமான பிரதேசத்தில் அவர்களைத் தள்ளவேண்டும்.

ஜர்மன் யுத்த தந்திரத்தின் விசேஷங்கள்.

சத்துருக்களைப் பக்கவாட்டில் வளைத்து தாக்கும் முறையை விளக்கி யிருக்கிறோம். அந்த முறையிலுள்ள விசேஷமென்னவென்றால், பக்கவாட்டில் வளைத்து சென்று சத்துருவுக்குப் பின்புறத்திலுள்ள பாதைகளை வசப்படுத்திக்கொண்டால், பிறகு சத்துருக்கள் தப்பிப் பிழைப்பதென்பது சாத்தியமல்ல. அந்த தந்திரப்படி யுத்த நடவடிக்கைகளை நிறைவேற்றினால் அந்த சண்டை முடிவான பலனைத் தருகிறது. அதனால்தான ஜெர்மானியர் அந்த தந்திரப்படி யுத்த நடவடிக்கைகளைத் தொடங்கவேண்டுமென்று நிச்சயித்தார். ஜெர்மானியர் இரண்டு எல்லைப் புறத்திலும் தாக்கப்படுவார்களாகையால், ஒரு எல்லைப்புறத்தில் சத்துருவின் சேனையை சிக்கிரத்தில் முற்றிலும் அழிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். மேலும், சத்துருக்களைச் சூழ்ந்துகொள்ள வேண்டுமானால், அவர்களைவிட ஜெர்மன் சேனை தொகையில் அதிகமாயிருக்கவேண்டும். அவ்வாறே ஜெர்மன் சேனை மற்ற தேசத்துச் சேனைகளைவிட பெரிதாயிருக்கிறது. ஆனால் ருஷியாவின் சைன்ய பலம் அதிகமாயிருந்தாலும், யுத்தந் தொடங்கியதக்ஷணமே ஜெர்மனியைப்போல அவ்வளவு துருப்புகளை ருஷியாவினால் போர்க்களத்தில் குவிக்கமுடியாது. யுத்தந் தொடங்கியவுடன் ஜெர்மன் சேனை ரயில் பாதைகளின் வழியாய் எல்லைப் புறத்தில் ஏராளமாய்க் குவிந்து சத்துருக்களைவிட அதிக வன்மையைப் பெற்றுவிடுகிறது. ஜெர்மன் சேனை சத்துருக்களுக்கு எதிரில் நின்று சண்டையை நடத்திக்கொண்டிருக்கையில், தன் பக்கவாட்டிலுள்ள படைகளை வரவர அதிகரித்து சிறிது சிறிதாய் வளைத்து சென்று கடைசியில் சத்துருக்களுக்குப் பின்புறத்தில் சூழ்ந்து கொள்ளலாம். அவ்வாறு பக்கவாட்டிலுள்ள படைகளைச் சிறிது சிறிதாய் அதிகரிப்பதென்றால், காலதாமஸமாகும். ஆகையால் சண்டையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே, அதாவது ஜெர்மன் சேனை போர்க்களத்தில் அணிவகுக்கும்போதே, தன் பக்கவாட்டில் ஏராளமான படைகளை குவித்துக்கொள்கிறது. அதனால் சண்டையைத்

தொடங்கும்போதே தாமஸமின்றி பக்கவாட்டில் வளைந்து செல்ல சாத்தியப்படுகிறது.


சத்துருவைப் பக்கவாட்டில் முற்றிலும் வளைந்து கொள்ளாமலிருந்தாலும், அவ்வாறு பாதி தூரம் பின்புறத்தில் வளைந்து கொள்ளத் தொடங்கிவிட்டால் சத்துருக்கள் பிறகு தங்கள் இருப்பிடத்தைவிட்டுப் பின் வாங்கிவிடுவது நிச்சயம். சத்துருக்கள் முற்றிலும் சூழ்ந்து கொள்ளப்படுவதற்கு முன்னால், தப்பித்துக்கொள்ளமுயற்சி செய்வார்கள். ஆகையால் சத்துருவைச் சூழ்ந்துகொள்ள முயற்சி செய்யும் யுத்த தந்திரமானது, அநேக சமயங்களில் முற்றிலும் பலிக்காமற்போனாலும், சத்துருவைப் பின்வாங்கும்படிச் செய்வது மட்டும் நிச்சயம். ருஷிய ஜப்பானிய யுத்தத்தில், லயோயங், முக்டன் இவ்விரு ஸ்தலங்களில் நடந்த சண்டைகளில், ருஷிய சேனை மேற்சொல்லிய காரணத்தாலே பின் வாங்கிச் சென்றது. லயோயங் சண்டையில், ஜப்பானியப் படைகள் மத்திய பாகத்திலிருந்து திடீரென்று பக்கவாட்டில் ஒன்றுக்குவிந்துகொண்டு வளைந்து வந்த போது, அந்தப் படைகள் வந்த வேகத்தைக்கண்ட ருஷிய சேனை, அவைகள் அருகில் வருவதற்கு முன்னதாகவே, பின் வாங்கி விட்டது. முக்டன் சண்டையில், சண்டையின் ஆரம்பித்திலேயே ஜப்பானியப் படைகள் பக்கவாட்டில் வளைந்துவந்தபோது அந்தப்படைகளை வலுவாய் எதிர்க்கவேண்டுமென்று தயார்செய்துகொண்டிருந்த ருஷியப் படைகள் கடிமையாய் முறியடிக்கப் பட்டதால், ருஷிய சேனை முழுவதும் அலங்கோலமாய்த் தப்பியோடும்படி நேர்ந்தது.

ஜெர்மன் யுத்த தந்திரத்தை நிறைவேற்றும் விதம்.

இந்த யுத்த தந்திரத்தை ஜெர்மானியர் எவ்வாறு நிறைவேற்ற உத்தேசித்தார்களென்பதை இனி விளக்குவோம்.

யுத்தந் தொடங்கியவுடன் ஜெர்மன் படைகள் ரயில் மூலைக்கு அனுப்பப்படும். யுத்தந் தொடங்கியவுடன், யுத்தத்தை இன்ன பிரதேசத்தில் தொடங்க வேண்டுமென்று நிச்சயிக்கப்படுகிறது. பிறகு அந்தபிரதேசத்தில் படைகளைப் பத்தோபஸ்தாய் இறக்கவும், அவைகள் இறங்கியவுடன் சத்துருவை எதிர்க்கவும் சௌகரியமாயுள்ள இடங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. அந்த இடங்களுக்குச்செல்லிற


ரயில் பாதைகளில் பந்தோபஸ்தாயுள்ள ஸ்தலங்கள் இன்னவை யென்றறிந்தெடுக்கப்படுகின்றன. அந்த ஸ்தலங்கள்வரையில்தான் ரயில் வண்டிகள்பிரயாணஞ் செய்யும். அவைகளுக்கு ரயில் மூணு களென்று பெயர். அவைகளுக்கப்பால் படைகள் நடந்துசென்று சத் துருக்களை எதிர்க்கத் தொடங்கும். அந்த ரயில் மூணுகளுக்கு அரு கிலுள்ள ஜில்லாக்களில் சேர்க்கப்படுகிற படைகள் முன்னதாகப்புறப் பட்டு ரயில் மூணுகளைப்போய்ச்சேர்ந்துவிடும். சற்று தூரத்திலுள்ள பிரதேசங்களில் சேர்க்கப்படுகிற படைகள் ரயில்மூணுகளைப் போய்ச் சேர்வதற்கு சற்று தாமஸமாகுமல்லவா? ஆனால் போர்க்களத்தை நோக்கிச்செல்கிற படைகள் ஒன்றுசேர்ந்து, கூடுமான வரையில் ஏக காலத்தில் யுத்தத்தைத் தொடங்கவேண்டியது அவசியமாகும். ஆகையால் படைகளெல்லாஞ் சேர்ந்து ஏக காலத்தில் முன் செல்வ தற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



முதலில் சேர்க்கப்படுகிற படைகள், மத்திய பாகத்துக்கு (4, 5, 6, 7-வது நெம்பருள்ள ரயில்மூணுகளுக்கு) அனுப் பப்படும். அதன் பிறகு சேர்க்கப்படுகிற படைகள் இடது பாகத் துக்கும் வலது பாகத்துக்கும் அனுப்பப்படும். இடது பக்கத் திலும் வலது பகுதியிலுள்ள ரயில் மூணுகள் சற்று அருகில் இருக்கும்படிச் செய்யப்படுகின்றன; அவ்வாறிருந்தால், முதலில் சென்ற படைகள் மத்திய பாகத்தைப் போய்ச்சேருகிற நேரத் தில், பின்னால் சென்ற படைகள் பக்கவாட்டிலுள்ள ரயில் மூணு களைப் போய்ச் சேர்ந்து விடும். ஏனெனில் பக்கங்களிலுள்ள


ரயில் முனைகள் மத்தியபாகத்திலுள்ள ரயில்முனைகளைவிட அருகி லிருக்கின்றன. ஆகையால் போர் முனையை நோக்கி ஒன்றின்பின் ஒன்றுப்பு புறப்படுகிற படைகள், மூன்று பாகங்களுக்கும் அதிக மாய் ஏக காலத்தில் போய்ச் சேரும். அவ்வாறு ஏக காலத்தில் போய்ச் சேரமுடியுமென்றே பக்கவாட்டிலுள்ள ரயில் முனைகள் மத்திய பாகத்திலுள்ளவைகளைவிட அருகில் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்படுகின்றன.

வலதுபக்கத்திலும் இடது பக்கத்திலுமுள்ள ரயில் முனைகளை அவ்வாறு குறுக்கி வைப்பதில் வேறொரு சாதகமுமிருக்கிறது. ரயில் வண்டிகளில் பிரயாணஞ் செய்கிற படைகள் தங்கள் முழு பலத்தை யும் திரட்டி அணிவகுப்பதற்கு காலதாமமாகும். ஏனெனில், எல்லாத் துருப்புகளையும் ஏக காலத்தில் ரயிலில் ஏற்றி அனுப் பினாலும், ரயில் வண்டித்தொடர்கள் ஒன்றின்பின் ஒன்றுகத்தானே செல்ல வேண்டும். 1000 வண்டித் தொடர்கள் ஒன்றின்பின் ஒன் றுய்ச்சென்றால், அவைகள் சுமார் 50 மைல் தூரத்துக்கு நீண் டிருக்கும். ஆகையால் ஒவ்வொரு வண்டியிலிருக்கும் துருப்புகளை யும் சாமான்களையும் இறக்குவதற்கும், கடைசி வண்டித் தொட ரைக் காலி செய்கிற துருப்புகள் முன்புறம் வருவதற்கும் குறைந் தது 4 தினங்களாவது ஆகும். ஆகையால் யுத்தம் தொடங் கியவுடன் ரயில் முனைக்குச் செல்கிற படைகள் தங்கள் முழு பலத் தையும் பெறுவதற்குச் சில தினங்களாகும். அதற் குள்ளாகச் சத்துருக்கள் தங்கள் முழு பலத்தையும் தயாராய்த் திரட்டி வைத்துக்கொண்டு, ரயில் முனைகளைப் பக்க வாட்டில் வந்து தாக் கினால் என்ன செய்வது? பக்கவாட்டிலுள்ள ரயில் முனைகளைச் சற்று குறுக்கி வைத்தால் அங்கு வருவதற்குச் சத்துருக்கள் அதிக தூரம் வழி நடக்கவேண்டும். மத்திய பாகத்திலுள்ள ரயில் முனை கள் முன்புறமாய் நீண்டிருப்பதால் சத்துருக்கள் அவைகளைத்தாண் டிக்கொண்டு சென்றபிறகே, டக்கவாட்டி லுள்ள ரயில் முனைகளை அடையமுடியும். (அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பார்த்தால் விளங்கும்.) அங்கு வருவதற்குச் சற்று தாமஸம் ஆகுமாகையால், சத்துருக்கள் திடீரென்று வந்து பக்கவாட்டு முனைகளைத் தாக்க முடியாது. ஒருக்கால் சத்துருக்கள் அவ்வளவு தூரத்தையும் விரை வாய்க் கடந்து வந்தாலுங்கூட, அவர்கள் வேறொரு ஆபத்துக்கு உள்ளாகிறார்கள்.




மேலே காட்டப்பட்டுள்ள படத்திலுள்ளபடி, சத்துருக்கள் (கறுப்பாயுள்ளபடைகள்) வலது பாகத்து ரயில் முனைகளைத் தாக்குகின்றன. அப்போது மத்திய பாகத்திலுள்ள ஜெர்மன் படைகள் வலது புறமாய்த் திரும்பி, சத்துருவுக்குப்பின்புறத்திலுள்ள பாதைகளைத் தாக்கச் செல்கின்றன, ஆகையால் அவ்வாறு எதிர்க்க வருகிற சத்துருக்களை ஜெர்மன் சேனையின் மத்தியபாகம் பக்கவாட்டில் சென்று தாக்கும். அதனால், ஜெர்மன் படைகள் முழு பலத்தையும் பெறுவதற்குள்ளாக அவைகளின் பக்கவாட்டுப் படைகளைச் சத்துருக்கள் வந்து தாக்கமாட்டார்கள். ஆகையால் ரயில் முனைகளைத் தெரிந்தெடுக்கும்போது பக்கவாட்டிலுள்ள முனைகள் சற்று அருகில் இருக்கும்படிச் செய்யப்படும்.

பிறகு ஜெர்மன் படைகள் சத்துருவை எதிர்ப்பதற்கு முனைக்குப் புறப்படுகின்றன, ஜெர்மன் படைகள் ரயில் முனைகளிலிருந்து இறங்கியவுடன் எந்த நிலைமையில் இருப்பார்களென்று கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.




அந்த படத்தில் பக்கவாட்டுப் படைகள்மத்திய பாகத்திலுள்ள வைகளைவிட சற்று பின்னல் வருவதை கவனிக்கவும். பக்கவாட்டி லுள்ள ரயில் முனைகள் குறுக்கி வைக்கப்படுவதால் அங்கிருந்து புறப் படுகிற படைகளும் சற்று பின்னல் வருகின்றன.

ஆனல் ஜெர்மன் படைகளின் நோக்கம் சத்துருவைப் பக்க வாட்டில் வளைந்துகொள்வதாகும். ஆகையால் பக்கவாட்டுப்படை கள், மத்தியபாகத்திலுள்ள படைகளைவிட, முன்னதாகச் செல்ல வேண்டுமே யொழிய பின்னல் தங்கி வரக்கூடாது. ஆகையால் பக்க வாட்டுப் படைகள் விரைந்து சென்று மத்திய பாகத்துப்படைகளு டன் கோர் ஒழுங்காக நிலைபெறுகின்றன. அவ்வாறு கோர் ஒழுங்கில் நிலைபெறுவதை கீழே யுள்ள படத்தில் காணலாம்.




அதன் பிறகு பக்கவாட்டிலுள்ள படைகள் இன்னும் விரைந்து சென்று மத்தியபாகத்தைவிட அதிகமாய் முன் புறத்தில் செல்கின் றன. அது கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.



பக்கவாட்டிலுள்ள படைகள் அதிக விரைவாய்ச் செல்வது அவசியமாகும். அவ்வாறு சென்றுதான் சத்துருவை வளைந்து கொள்ளமுடியும். பக்கவாட்டிலுள்ள படைகள் அதிக விரைவாய்ச் செல்வதற்கு அநேக உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ரயில் பாதை சோட்டுகள் முதலிய சௌகரியங்கள் அதிகமாய் அமைந்த பிரதேசத்தில் பக்கவாட்டிலுள்ள படைகள் செல்லுப்படி ஏற் பாடு செய்யப்படுகிறது. மத்திய பாகத்திலுள்ள படைகள்,

சத்துருவின் சைன்ய பலமுழுவதும் திரட்டப் பட்டுள்ள பிரதேசத்தில் செலுத்தப் படுகின்றன ; ஆகையால் மத்திய பாகத்துப் படைகள் தங்களுக்கு முன்புறத்தி லுள்ள சத்துருக்களின் முழு வன்மையையும் எதிர்த்துக்கொண் டிருக்கும் ; அதனால் மத்தியபாகத்தி லுள்ள படைகள் இயல்பாகவே மெதுவாய்த்தான் முன்செல்ல முடியும். ஆனால் பக்கவாட்டி லுள்ள படைகள் சத்துருவின் முழுபலத்தையும் எதிர்க்கும்படி நேரிடுவதில்லையாகையால் சற்றுவிரைவாய்ச் செல்லக்கூடியவை.


போர்க்களத்தில் சண்டை செய்கிற படைகள் தங்கள் முழு பலத்தையும் மூன் புறத்தில் தான் திரட்டிவைக்கின்றன. மூன் புறத்தில் எவ்வளவு துருப்புகள் நின்று சண்டைசெய்யக்கூடுமோ அவ்வளவு துருப்புகளும் முன்புறத்துக்கு அனுப்பப்படுகின்றன; பக்கவாட்டில் எவ்வளவு அவசியமா யிருக்கிறதோ அவ்வளவு துருப்புகள் தான் அனுப்பப்படுகின்றன. இது சாதாரணமாய் எல்லா சேனைகளிலும் அனுசரிக்கப்படுகிற ஒழுங்காகும். ஆனால், ஜெர்மன் சேனை அதிக பலங்கொண் டிருப்பதால், சத்துருவின் முழு பலத்தையும் எதிர்ப்பதற்குத் தேவையாயுள்ள படைகள் மத்தியபாகத்தில் நிலை பெற்று சத்துருவோடு சண்டை செய்துகொண் டிருக்கையில், அதிகப்படியாயுள்ள ஜெர்மன் படைகள் பக்கவாட்டில் விரைந்து செல்கின்றன. அவ்வாறு ஜெர்மன் படைகள் பக்கவாட்டில் சென்று சத்துருவை வளைந்துகொள்ளும் விதம் கீழே காட்டப்பட் டிருக்கிறது.




அந்த படத்தில் இடதுபாகத்துப் படைகள் இன்னும் வளைந்து கொள்ளவில்லை ; அவைகள் எவ்வாறு வளைந்து செல்லக்கூடுமென் பதை வலதுபாகத்துப் படைகளைப்பார்த்து அறிந்து கொள்ளலாம்.

மத்திய பாகத்தை எதிர்த்துக்கொண்டு சத்துருக்கள் நிலைபெற்றிருப் பார்கள். சத்துருவின் படைகள் படத்தில் காட்டப்படவில்லை. படத் திலுள்ள ஜெர்மன் படைகள் சத்துருவின் இருப்பிடங்களைத்தாண்டி அவ்வாறு வளைந்து கொள்கின்றன. இரண்டு கக்ஷிகளும் எதிர்க்கும் போது ஒன்றை மற்றொன்று வளைந்து கொள்ளும் நிலைமை 466-ம் பக் கத்திலுள்ள படத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

பக்கவாட்டில் செல்கிற படைகள் ஏக காலத்தில சத்துருவை வளைந்துகொள்வதற்காக எவ்வாறு விரைந்து செல்கின்றன வென் பதைக் கவனிக்கவும்.



படைகள் ஒன்றின்பக்கத்தில் ஒன்றாய் வளைந்து சென்றால் அவைகள் செல்லவேண்டிய தூரம் வெவ்வேறாயிருக்கிறதை இப்படத்தில் காணலாம்.



படைகள் ஒன்றின்பின் ஒன்றாய் வளைந்து செல்கின்றன. 1-வது படை முன் புறஞ் சென்ற வுடன், அது சென்ற வழிக்குத் தூறுக்காக 2-வது படை வளைந்து செல்கிறது. அவ் வாறே 3-வதுபடையும் திரும்புகிறது.

பக்கவாட்டி லுள்ள மூன்று படைகளும் ஒன்றுக்குப் பக்கத் தில் ஒன்றாய் சென்று அந்த ஒழுங்கிலேயே சதத்துருவை வளைந்து கொள்ள முயற்சி செய்தால், அந்த படைகள் சத்துருவை ஏககாலத் தில் நெருங்கமுடியாது. ஒவ்வொரு படையும் செல்லவேண்டியிருக் கிறதூரம் வெவ்வேறாயிருக்கிறது. ஆகையால் ஏககாலத்தில் சத்துரு வின் இருப்பிடத்தைத் தாக்கமுடியாது. ஆகையால் முதலில் செல் கிற படையின் வழிக்குத் தூறுக்காக மற்றப்படைகள் செல்கின்றன. அவ்வாறு சென்றால் அந்த மூன்று படைகளும் செல்லவேண்டிய தூரம் சற்றேறக்குறைய ஒரே அளவாயிருக்கும் இவ்வாறு ஜெர்மன் சேனை சத்துருக்களின் பக்கவாட்டில் வளைந்துசென்று அவர்களைச் சூழ்ந்துகொள்ள வேண்டுமென்று ஜெர்மன்ராணுவ அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்கள்.

ரயில் பாதைகளையும் மற்ற வசதிகளையும் மிகுதியாயுள்ள பிரதேசத்தில் பக்கவாட்டி லுள்ள படைகள் முன் செல்வதால் அவைகள் அதிக விரைவாய்ச் செல்கின்றன வென்று சொன்னேம். அந்த படைகள் பக்க வாட்டில் விஸ்தாரமாய்ப் பரவிச் சென்று வழியிலுள்ள சத்துருக்களையெல்லாம் ஒன்றுய்த்திரட்டிக்கொண்டே போக வேண்டும்; அவ்வாறு கூட்டப்படுகிற சத்துருக்களை யெல்லாம் மத்தியபாகத்தை நோக்கித்தள்ளிக்கொண்டே போகவேண்டும்; கடைசியாக அவர்களைச் சூழ்ந்துகொண்டு அழிக்க வேண்டும். அவ்வாறு ஜெர்மன் படைகள் விஸ்தாரமாய்ப் பரவி செல்லவேண்டியிருப்பதால், அவைகள் ஒன்றின்பின் ஒன்றுய் நெருக்கமாக அணிவகுத்துச் செல்வதில்லை. அவைகள் ஒன்றின் பக்கத்தில் ஒன்றுய் விசாலமாய் நிலை பெற்று முன் செல்கின்றன. ஜெர்மானியரின் யுத்த நடவடிக்கைகளுக்கு அவ்வாறு விசாலமாய் அணிவகுத்துச் செல்வது அவசியமாகிறது. பிரஞ்சுப் படைகள் அவ்வாறு செய்யாமல் ஒன்றின்பின் ஒன்றுய் நெருக்கமாக அணிவகுத்துச் செல்கின்றன. ஜெர்மானியர் சத்துருக்களைச் சூழ்ந்துகொள்ள வேண்டுமென்று நோக்கங்கொண்டிருப்பதால், விசாலமாய் அணிவகுக்கும் முறையை அனுசரிக்கிறார்கள். அந்த முறையிலுள்ள சாதகபாதகங்களைச்சொல்வோம்.

ஜெர்மன் யுத்த தந்திரத்தில் சாதக பாதகங்கள்.

விசாலமாய் அணிவகுக்கிற படை அதிவிரைவாய்ச் செல்லக் கூடியது. ஏனெனில், விஸ்தாரமானபிரதேசத்தில் கடமாடினுல் அதிக ரயில் பாதைகளையும் சோட்டுகளையும் அங்கு உபயோகிக்கலாம். ஜெர்மன் காலாட்படைகள் குறுக்குப் பாதைகளிலும் வயல்களிலுங் கூட பிரயாணஞ் செல்கின்றன. 40,000 பேர்கொண்ட ஒரு படை, சோட்டில் பிரயாணஞ் செய்தால், 40 மைல் தூரத்துக்கு நீண்டு செல்கிறது. கடைசியிலுள்ள துருப்புகள் முன்புறத்துக்கு வர வேண்டுமானுல் 40 மைல்களைக் கடந்து வரவேண்டும்; 40 மைல் நீளத்துக்கு ஆகாரம் வெடிமருந்து முதலிய சாமான்களைச்சப்ளை செய்வதும் கஷ்டமாகும். இரண்டு பாதைகளிருந்தால், அந்த 40,000 துருப்புகளும் இரண்டு பாகங்களாகப் பிரிந்து சென்று ஒவ்வொரு பாதையிலும் 20 மைல் தூரத்துக்கே நீண்டிருக்கும். ஆகையால் விசாலமாய் அணிவகுத்துச் சென்றுல், பாதைகளில் அதிக தூரம்

வழி நடத்து விரைவாய்ச் செல்லலாம். மேலும், படைகள் நெருக்க மாய் அணிவகுத்தால் ஒன்றின்பின் ஒன்றுப் அநேக வரிசைகளாக நிலைபெற்றிருக்கும்படி நேரிடும். அப்போது கடைசி வரிசையி லுள்ள துருப்புகள் முன் வரிசையில் வந்து சண்டை செய்வ தற்குத் தாமதமாகும். அவ்வாறின்றிப் படைகள் ஒன்றின் பக்கத் தில் ஒன்றுப் நின்றால், பின்புறத்தில் அத்தனை வரிசைகள் நிலைபெற் றிருக்க வேண்டியதில்லை. ஆகையால், படைகள் விசாலமாய் அணிவகுத்தால் அவைகளிலுள்ள துருப்புகள் எல்லாரும் முன் புறத்துக்குச் சீக்கிரமாய் வந்து சண்டையில் கலந்துகொள்ளலாம். ஆகையால் துருப்புகள் விசாலமாய் அணிவகுத்தால் விரைவாய் நடமாடலாம்; விரைவாய்ப் போர்க்களத்தில் வந்து குவிந்துவிட லாம். அவ்வாறு விசாலமாய் அணிவகுத்தால்தான் சத்துருவை எளிதாய்ச் சூழ்ந்துகொள்ள முடியும். விசாலமாய் அணிவகுத்து சத்துருவின் பக்கவாட்டில் நெடுகச்சென்று சத்துருவின் இருப் பிடங்களைத் தாண்டி, பின்புறத்தில் சூழ்ந்துகொள்ள வேண்டும். சத் துருவுக்குப் பக்கவாட்டில் சென்று சூழ்ந்துகொள்ளும் தந்திரத்தில் என்ன விசேஷமென்றால், அதில் அகப்பட்டுக்கொள்கிற சத்துருக் கள் பிறகு தப்பித்துக்கொள்வது சாத்தியமல்ல; அதன்படி நடக்கிற சண்டை முடிவான பலனைத்தருகிறது; அதாவது அந்த தந்திரத்தில் அகப்பட்டுக் கொள்கிற சத்துருக்கள் அடியோடு அழிந்து போவார் கள். அந்த தந்திரம் முற்றிலும் பலிக்காமற்போனாலும், அது நிறைவேறும்போலிருந்தால் அதைக் கண்டசத்துருக்கள் நிச்சயமாய் பின் வாங்கிவிடுவார்கள்.

ஆனல் இந்த யுத்த தந்திரத்தை அனுசரிக்கிற கட்சி அதை நிறைவேற்றுவதில் தவறுதல்களைச் செய்தால் பெரிய ஆபத்துக்குள் ளாவார்கள். ஏனெனில், பக்கவாட்டில் வளைந்து கொள்வதற்காகச் செல்கிற படைகள் விசாலமாய் அணிவகுத்து வெகு தூரம் முன் செல்லும்போது, அவைகளின் போக்குவரத்து வழிகள் பலஹீன மடையும். உதாரணமாக, ஜெர்மன் படைகள் பெல்ஜியத்திலிருந்து புறப்பட்டு பாரிஸுக் கருகில் சென்றபோது, அவைகளுக் குப் பின்னல் 150 மைல் தூரத்துக்குப் பாதைகளைக் காக் கும்படி நேர்ந்தது. 50,000 துருப்புகள் 50 மைல் தூரத்தைக் காவல் செய்வதற்குப் பதிலாக 100 மைல் தூரத்தைக் காவல்

செய்யும்படி நேர்ந்தால், அங்குள்ள ஸ்தலங்கள் பலஹீன மடையு மல்லவா? அவ்வாறு பலஹீன மடைகிற ஏதாவ தொரு ஸ்தலத் தில் சத்துருக்கள் ஏராளமான பலத்தைத் திரட்டி ஜெர்மன் படை களைப் பிளந்துகொண்டு சென்றால், அந்தப் படைகள் தனியாய்த் துண்டித்துப்போகும். ஆகையால் அந்த யுத்த தந்திரத்தை செவ் வையாய் நிறைவேற்றினால் தான், அந்த ஆபத்தை நேரிடாமல் காக்கலாம்.

ஜெர்மானியர் தாங்கள் விரைவாய் மூன் செல்வதாலும் எல்லா ஸ்தலங்களையும் உக்கிரமாய்த் தாக்குவதாலும் அந்த ஆபத்தைத் தவிர்க்கலாமென்று நினைக்கிறார்கள். சத்துருக்கள் யுத்த மண்டல முழுவதிலும் உக்கிரமாய்த் தாக்கப்படும்போது அவர்கள் தங்கள் சைன்ய பல முழுவதையும் போர்ச்களங்களில் உபயோகித்து விடுவார் களே யன்றி கையிருப்பில் பின் பலத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ள முடியாதென்று ஜெர்மானியர் கருதுகிறார்கள். பக்கவாட் டில் வளைந்து கொள்வதற்காகச் செல்கிற ஜெர்மன் படைகள் விசாலமாய் வட்டமிட்டுச் சென்று, அதிவிரைவாய் எல்லாப் பாகைகளிலும் நுழைந்து, சத்துருக்களையெல்லாம் ஒரு பக்கமாய்த் தள்ளிக்கொண்டு, சத்துருக்களின் இருப்பிடங்களை யெல்லாம் ஏக காலத்தில் தாக்கி, முன்னும் பின்னும் பக்கங்களிலும் விழுந்து போர் வினைக்கும்போது, சத்துருக்கள் தங்களைக் காத்துக் கொள்வ தற்கு முயற்சி செய்வார்களே யொழிய வேறெவ்வித யோசனையை யும் செய்ய நினைக்கமாட்டார்கள். அவ்வாறே இந்த யுத்த ஆரம்பத் தில் ஜெர்மானியர் பிரஞ்சு எல்லைப்புற முழுவதையும் தாக்கிய போது, பிரஞ்சு சேனை அல்ஸேஸிலும் மியூஸ் நதியிலும் வலுவாய் நிலை பெறும்படி நேரிட்டதால், பெல்ஜிய எல்லையைக் காப்பதற்கு அது போதுமான பலத்தையும் சாவகாசத்தையும் பெறவில்லை; அந்நிலைமையில் பிரஞ்சேனை பின்பலத்தை சேர்ப்பதென்பது சாத் தியமல்ல. ஆகையால் பக்கவாட்டில் செல்கிற ஜெர்மன் படைகள் வன்மையிலும் வேகத்திலும் ஒரு கூஷ்ணப்போதும் குறைவுபடக் கூடாது. அத்தப்படைகள் எங்காவது தடைபட்டுத் தயங்கினால், உட னே சத்துருக்கள் யோசனை செய்வதற்கு சாவகாசம்பெற்று தங்கள் பலத்தைத் திரட்டி குறிப்பாய்ஓரிடத்தில்தாக்கி ஆபத்தை உண்டுபண் ணுவார்கள். ஜெர்மன்படைகள் பாரிஸ் நகரம்வரையில் விரைவாய்வந்

தவுடன் அங்கிருந்து நேசப்படைகள் விலகிச் சென்று விட்டதைக் கண்டு ஜெர்மானியர் தயங்கி நின்றனர். அச்சமயம் பிரஞ்சு சேனுதிபதி பாரிலில் ஏராளமான மூலபலத்தைத் திரட்டி ஜெர்மன் படைகளைப் பின்புறத்தில் தாக்கினர். (455-ம் பக்கம் பார்க்க.) பாரிஸுக்கருகிலிருந்த ஜெர்மன் படைகள் தங்களுக்குப் பின்புறத்தில் 150 மைல் தூரத்துக்குப் பாதுகாப்புக் காக்கப் போதுமான பலத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆகையால், ஜெர்மன்சேனுபதி மிகுந்த ஆபத்தான நிலைமையிலிருந்தார் பிறகு அவர் தமது சாமர்த்தியத்தாலும் முன்யோசனையினுலும் தப்பித்துக்கொண்டார். ஜெர்மன் படைகள், விரைவாய்ப் பின்வாங்கி, எய்ஸன் நதிக்கரையில் முன்னதாகத் தயார் செய்யப்பட்ட அரண்களில் நிலைபெற்றன. ஆகையால் சத்துருக்களை வளைத்துகொள்ளும் தந்திரம் சிறிது பிசகிவிட்டால் ஆபத்தை விளைவிக்குமென்பதை அறியவேண்டும்.

இந்த ராணுவ தந்திரத்தில் மற்றொரு குறையையும் கவனிக்க வேண்டும். யுத்தம் தொடங்கியவுடனே, பக்கவாட்டிலுள்ள படைகள் சத்துருக்களை வளைத்துகொள்வதற்காக விசாலமாய் அணிவகுத்துச்செல்கின்றன. சத்துருக்கள் இன்னவிடத்திலிருக்கிறார்களென்று எவ்வாறு நிச்சயமாய்த் தெரிந்துகொள்வது? சத்துருவின் முக்கிய சேனை எவ்விடத்திலிருக்கிறதென்று யுத்தம் ஆரம்பித்தவுடனே அறிந்துகொள்வது கஷ்டமாகும். சத்துருக்கள் தங்கள் முன்படைகளையும் குதிரைப்படைகளையும் போர் முனைக்கு அனுப்பி அவைகளுக்குப் பின்னல் மறைவாயிருந்துகொண்டு தங்கள் சேனையின் முக்கிய பாகத்தை இரகஸ்யமான இடங்களில் நிலைபெறச்செய்வார்கள். ஆகையால் சத்துருவின் முக்கிய சேனை எவ்விடத்திலிருக்கிறதென்று தவறில்லாமல் அறிந்துகொள்வது சில சமயங்களில் சாத்தியப் படாமற் போகும். அப்படிப்பட்ட சமயத்தில் பக்கவாட்டிலுள்ள ஜெர்மன் படைகள் விசாலமாய் அணிவகுத்து சத்துருவின் பிரதேசத்துக்குள் வெகுதூரம் நுழைந்தபிறகு அவ்வழியில் சத்துருவின் முக்கியசேனையில்லாமல் வேறெங்காவது நிலைபெற் றிருப்பதாகத் தெரியவந்தால், அது வரையில் செய்த பிரயத்தனங்களெல்லாம் வீணாகிவிடும். தவிர, வெகு தூரம் முன் சென்ற ஜெர்மன் படைகள் வேறு வழியில் திரும்பிச் செல்லவேண்டியிருந்தால், அவ்வாறு விசாலமாய் அணிவகுத்த படைகளெல்லாம் புதிய பாதைகளில் திரும்பிச் செல்வதற்கு

மிகுந்த காலதாமஸமாவதோடு அந்த நடவடிக்கைகளும் ஒழுங்கின மடைந்து குழம்பிவிடும். அந்த நெருக்கடியான சமயத்தில் சத் துருக்கள் வலுவாய்த் தாக்கினால், ஆபத்து விளையக்கூடும். ஆனால், பக்கவாட்டிலுள்ள படைகள் முன் செல்லவேண்டிய பிரதேசத்தை ஜாக்கிரதையாய்த் தெரிந்தெடுப்பதால் அந்த ஆபத்தை நீக்கலாம். சத்துருக்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அதனால் பாதகமுண்டா காத பிரதேசத்தைத் தெரிந்தெடுக்க வேண்டும். உதாரணமாக, பெல்ஜியதேசம் பிரான்ஸுக்கு வடகிழக்குமூலையி லிருக்கிறது. ஆகையால், ஜெர்மானியர் தங்கள் பக்கவாட்டுப் படைகளை பெல் ஜியத்தின் வழியாய் பிரான்ஸுக்குள் அனுப்பியபோது, வடபுறத் தில் நேசத்துருப்புகள் மறைத்துகொண்டிருக்கலா மென்றபயமில்லை. ஆகையால் பக்கவாட்டில் சென்ற ஜெர்மன் படைகள் முன் புறத் திலேயே நேசத்துருப்புகளைத் தாக்கி வந்தன.

30-வது அத்தியாயம்.

பிரஞ்சு ராணுவத்தின் யுத்த தந்திரம்.

இப்போது பிரஞ்சு யுத்த தந்திரத்தைப்பற்றிச் சொல்வோம். சத்துருவின் சேனையை இரண்டுவிதமாய் அழிக்கலாமென்று சொல் லியிருக்கிறோம். சத்துருவின் சேனைக்குப் பின் புறத்திலுள்ள பாதைகளை வசப்படுத்திக்கொண்டு சத்துருவை அழிக்கலாம். இந் முறைப்படி, சத்துருவுக்குப் பக்கவாட்டில் சென்று அவர்களுக்குப் பின்புறத்திலுள்ள பாதைகளை வசப்படுத்தி அவ்வாறு அவர்களை சூழ்ந்துகொண்டு அழிக்கப்படுகிறது. இது ஜெர்மன் முறை. மற் றொருவிதமாயும் சத்துருக்களை அழிக்கலாம். சத்துருவின் சேனை எந்த இடத்தில் பலஹீனமாயிருக்கிறதோ அந்த இடத்தில் அதைப் பிளந்து ஏதாவதொரு பாகத்தை அழிக்கலாம். இது பிரஞ்சுமுறை.

பிரஞ்சு யுத்த தந்திரத்தின் விவரம்.

பிரஞ்சு துருப்புகள் ஜெர்மானியரைவிட தொகையில் குறைவா யிருப்பதாலும், பிரஞ்சுஎல்லைப்புறம் குறுகலாயிருப்பதாலும், பிரஞ்சு படைகள் நெருக்கமாய் அணிவகுக்கின்றன. ஆனால் ஜெர்மானியர் தங்

கள் சத்துருக்களை வளைத்துகொள்ளும் நோக்கத்துடன் யுத்தஞ் செய்வதால் தங்கள் படைகளை விசாலமாய் அணிவகுக்கிறார்கள். பிரஞ்சுப்படைகள் தங்கள் சத்துருக்களைப் பிளந்துகொண்டு பலதுண்டுகளாகப்பிரித்து அழிக்கவேண்டுமென்று நோக்கங்கொண்டிருக்கின்றன. இந்த நோக்கம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது? பிரஞ்சு சேனை இரண்டு சரிபாகமாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பாகம் முன் படைகளாக அனுப்பப்பட்டு மற்றொரு பாகம் பின் பலமாக இருப்பில் வைத்துக்கொள்ளப் படுகிறது. அந்த முன் படைகள் போர்முனை எங்கும் அனுப்பப்பட்டு சத்துருக்களை எதிர்த்துச் சண்டை செய்துகொண்டிருக்கும். அந்த முன்படைகள் அவ்வாறு சத்துருவின் சேனை முழுவதையும் சண்டைக்கு இழுத்து சத்துருவின் சைன்ய பலத்தையும் இருப்பிடங்களையும் செவ்வையாய் அறிந்து கொள்ளும். சத்துருக்கள் எந்த இடத்தில் பலஹீனமாயிருக்கிறார்களென்றும், சத்துருக்களைத் தாக்கி அழிப்பதற்கு எந்த இடம் சௌகரியமானதென்றும், அறிந்து கொள்ளப்படுகிறது. அதன் பிறகு பிரஞ்சு சேனைத்தலைவர்கள் தங்கள் இருப்பில் வைத்துக் கொண்டிருக்கிற படைகளை அதாவது பின்பலத்தை, குறிப்பான ஓர் இடத்தில் ஒன்றுப்க் குவித்து சத்துருவின் சேனையைத் தாக்கிப் பல பாகங்களாகப் பிரித்து அந்த பாகங்களைப்பின் தொடர்ந்துசென்று அழிக்க உத்தேசிக்கிறார்கள். இந்த யுத்த தந்திரத்தின் விவரங்களைக் கவனிக்கவும். முதலாவது, பிரஞ்சு சேனையின் முன் படைகள் சத்துருவின் சைன்ய பலமுழுவதையும் எதிர்த்து சண்டைசெய்ய வேண்டும். இரண்டாவது, அவ்வாறு யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் பின்பலத்தை ஒரு குறிப்பான பிரதேசத்தில் திடீரென்று செலுத்தி சத்துருவின் சேனையைப் பிரித்துவிடவேண்டும். மூன்றாவது, பிரிக்குபோன சத்துருக்களைப் பின் தொடர்ந்து சென்று அழிக்கவேண்டும். இந்த மூன்று விஷயங்களைப்பற்றிச் சொல்வோம்.

பிரஞ்சு யுத்த தந்திரத்தை நிறைவேற்றும் விதம்.

முதலாவது, பிரஞ்சுசேனையின் முன் படைகள் சத்துருவின் சைன்ய பல முழுவதையும் எதிர்த்துச் சண்டைசெய்ய வேண்டும், ஆகையால் பிரஞ்சு சேனையின் முன் படைகள் மிகுந்த வன்மை கொண்டவைகளாய் அனுப்பப்படுகின்றன. அந்த படைகள் முன் படைகள் என்று சொல்லப்பட்டாலும்

அவைகள் உண்மையில் சேனையின் ஒரு பாதியாகும். ஜெர்மன் சேனையின் முன் படைகள் அவ்வளவு பலங் கொண்டதல்ல. ஏனெனில் அவைகள் சத்துருவின் இருப்பிடங்களை அறிந்துகொள்ளவும், முன்புறத்திலுள்ள முக்கிய ஸ்தலங்களை வசப்படுத்திக் கொள்ளவுந்தான் நடமாடுகின்றன. அந்த முன் படைகளுக்குப் பின்னல் மிகவும் அருகில் ஜெர்மன் சேனை முழுவதும் விசாலமாய் அணிவகுத்து வந்துகொண் டிருக்கும். ஆகையால் முன் படைகள் செல்கிற இடங்களி லெல்லாம் தாமலமின்றி ஜெர்மன் சேனை வந்து கிலே பெற்றுவிடும். ஜெர்மன் சேனை சண்டை நடக்கிற பிரதேச முழுவதையும் வளைத்து, அங்குள்ள எல்லா ஸ்தலங்களையும் ஏககாலத்தில் தாக்கிமுன்செல்வதால் அதன்முன்படைகள்சண்டைசெய்யவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. ஆனல் பிரஞ்சு சேனையினுள்ளமுன்படைகள் சத்துருக்களை எதிர்த்து நிற்கும் வேலையை ஏற்றுக் கொள்கின்றன.

சத்துருக்களைத் தாக்குவதற்கும், சத்துருக்கள் தாக்குவதைத் தடுத்து நிற்பதற்கும் வித்தியாச மிருப்பதைக் கவனிக்கவேண்டும். சத்துருவின் இருப்பிடங்களைத் தாக்கிப் பிடிக்கவேண்டுமானல், சத்துருக்களைவிட மூன்று மடங்கு பலங்கொண்ட படைகள் தேவையாயிருக்கும். சத்துருக்களை முன் செல்ல விடாமல் தடுத்து நிற்பதற்கு மூன்றில் ஒரு பங்குள்ள படைகள் போதுமானவை. ஆகையால் பிரஞ்சு சேனையின் முன் படைகள் சத்துருக்களைத் தடுத்து நிற்கும்போது, அவைகள் தங்களைவிட மூன்று மடங்கு அதிக பலங் கொண்ட சத்துருக்களை எதிர்த்துச் சண்டை செய்யச் சாத்தியப்படும். இந்த காரணத்தினுல் பிரஞ்சு சேனையின் முன் படைகள் சத்துருவின் சைனிய பல முழுவதையும் எதிர்த்து நிற்கும் வேலையை ஏற்றுக்கொள்கின்றன. ஆயினும் பிரஞ்சு யுத்த தந்திரத்தில் அவ்விஷயமே முக்கிய குறையாகக் கருதப்படுகிறது. சத்துருக்கள் மிகுந்த பலங்கொண்டு எல்லா ஸ்தலங்களையும் ஏக காலத்தில் தாக்கி முன் படைகளைத்திடீரென்று பின்னடையச் செய்தால், அந்த முன்படைகளுக்கு உதவியாக பிரஞ்சுசத்தலிவர்கள் தங்கள் பின்பலத்தைச் சிறுகச் சிறுக அனுப்பிக்கொண் டிருக்கும்படி நேரிடும். அப்போது பிரஞ்சுச் தலிவர்கள் தங்கள் இருப்பில் போதுமான படைகளில்லாமல், சத்துருவின் சேனையைப் பிளந்துவிட முயற்சி


செய்யமுடியாது. அவ்வாறு சேனையின் பின்பலம் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்துபோகக் கூடுமென்பதே பிரஞ்சு முறையில் பெரிய குறையெனக் கருதப்படுகிறது. இக்குறையை நீக்குவதற்கு பிரஞ்சு முன் படைகள் வலுவான ஸ்தலங்களைத் தெரிந்தெடுத்து அங்கு கிலே பெற் றிருக்கவேண்டும்.

இரண்டாவது, யுத்தம் நடந்துகொண் டிருக்கும்போது பின் பலத்தை உபயோகிக்க வேண்டும். பிரஞ்சு சேனைத் தலைவர்கள் தங்கள் இருப்பில் ஏராளமான படைகளை அதாவது ஏராளமான பின்பலத்தை வைத்துக்கொண் டிருக்கவேண்டும். சாதாரணமாய் சேனையின் ஒரு பாதி முன்படைகளாகவும் மற்றொரு பாதி பின் பலமாகவும், வைத்துக்கொள்வது வழக்கம். யுத்தம் தொடங்கிய போது பிரஞ்சு சேனையின் முன் படைகள் பெல்ஜிய எல்லையில் ஜெர்மன் சேனையை எதிர்த்துச் சண்டை செய்தன. ஜெர்மன் சேனை மிகுந்த வன்மை கொண் டிருந்ததால், பிரஞ்சு முன் படைகள் பின் வாங்கும்படி நேர்ந்தது. மேலும் பின் பல மெல்லாம் அந்த முன் படைகளுக்கு உதவியாக அனுப்பும்படியும் நேர்ந்தது. ஆகையால் பின் பலத்தைத் திரட்டி குறிப்பாய் ஓரிடத்தில் சத்துருக்களைத் தாக்கவேண்டுமென்ற யோசனையை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால், ஜெர்மன் துருப்புகள் பாரிஸ் நகரத்துக் கருகில் வருவதற்குள்ளாக புதிய பிரஞ்சுப் படைகளைக் கொண்டு பின்பலம் சேர்க்கப் பட்டது. இந்த பின் பலமனைத்தும் பாரிஸ் நகரத்துக் கருகில் ஒன்றாய்த்திரட்டி வைக்கப்பட்டது. ஜெர்மன் படைகள் பாரிஸைத் தாண்டி முன் சென்றவுடன், பாரிலில் குவிக்கப்பட் டிருந்த பிரஞ்சு படைகள் ஜெர்மன் படைகளுக்குப் பின் புறத்தில் சென்று கமிமையாய்த் தாக்கி வந்தன. உடனே ஜெர்மன்படைகளெல்லாம் விரைவாய்ப்பின் வாங்கும்படிநேர்ந்தது. (455-ம் பக்கம் பார்க்க.) ஆகையால், பிரஞ்சு யுத்த தந்திரத்தின்படி, வலுவானபடைகளைப் பின்பலமாகவைத்துக் கொண்டுசமயம் வாய்த்தவுடன் போர் முனையில் முக்கியமானஸ்தலத்தில் உபயோகித்ததால் நேசக் கக்ஷிக்கு வெற்றி கிடைத்தது.

பிரஞ்சு முறைப்படி, சத்துருவின் சைன்ய பலமும் இருப்பிடங்களும் அனுபவத்தில் செவ்வையாய் அறிந்து கொள்ளப்படுகின்றன. பிரஞ்சு சேனையின் முன் படைகள் சத்துருக்களோடு சண்டைசெய்து, பிறகு சத்துருவின் பலஹீனத்தை அறிந்துகொள்

கின்றன. அதன்பிறகு தான், பிரஞ்சு சேனையின் பின்பல முழுவ தும் குறிப்பானதோர் ஸ்தலத்தில் திரண்டு கடுமையாய்த்தாக்கி சண் டையை முடிவுக்குக் கொண்டு வருகிறது. ஜெர்மன் முறைப்படி சத் துருவின் இருப்பிடமும் ராணுவ பலமும் குதிரைப் படைகளால் அறிந்துகொள்ளப் படுகின்றன. இந்த காலத்துச் சேனை தன் முன் படைகளைக் கொண்டு திரைபோட்டு அதன் மறைவில் இரகஸ்யமாய் நிலை பெறுகின்றது. ஆகையால் குதிரைப்படைகளால் சத்துரு வைப்பற்றிய விவரங்களை அறிந்துகொள்வது கஷ்டமாகிவிட்டது.

பின் பலத்தை உபயோகிக்கும் முறையில் வேறொரு விசேஷத் தையும் கவனிக்க வேண்டும். பிரஞ்சு சேனையின் முன் படைகள் போர் முனையில் சண்டை செய்துகொண் டிருக்கும்போது, சத்து ருக்களை அழிப்பதற்கு ஏற்றதாயுள்ள எந்த ஸ்தலத்துக்கும் பிரஞ்சு சேனையின் பின்பலத்தை சீக்கரமாய் அனுப்பலாம். இவவிஷயத்தை கீழேயுள்ள படத்தில் தெரிந்து கொள்ளலாம்.



கறுப்புக் கட்டங்கள் பிரஞ்சு படைகளையும் வெளுப்புக்கட்டங்கள் ஜெர் மன் படைகளையும் குறிக்கின்றன. ஜெர்மன் படைகள் எதிரிகளைச் சூழ்ந்து கொள்ள முயற்சிசெய்வதால், பெரிய வட்டத்தில் நடமாடுகின்றன. பிரஞ்சு படைகள் குறுகிய வட்டத்திலிருக்கின்றன. பிரஞ்சு சேனையின் பின் பலம் போர்முனையிலுள்ள எல்லா ஸ்தலங்களுக்கும் அருகிலிருக்கின்றது. ஜெர் மன் சேனையின் பின் பலம் இரண்டு பக்கங்களுக்குச் செல்லவேண்டியதால் அதிக தூரம் செல்லவேண்டும்.


பிரஞ்சு சேனையின் முன் படைகள் குறுகிய வட்டத்தில் நிலை பெற்றுச் சண்டை செய்கின்றன. ஆகையால் மத்தியில் சேர்த்து வைக்கப்படுகிற பின் பலம், போர் முனையிலுள்ள எந்த ஸ்தலத்துக்குச் செல்லவேண்டுமானாலும் சீக்கிரத்தில் போய்ச் சேரக்கூடும். ஆனால் ஜெர்மன் சேனை சத்துருக்களை வளைத்துகொண்டு செல்வதால், அதன் பின்பலம் அந்த வட்டத்துக்கு வெளிப் புறத்திலிருக்கும்படி நேரிடுகிறது. பிரஞ்சு சேனையின் பின்பலம், வட்டத்துக்கு உள்புறத்திலிருக்கிறது. ஆகையால், ஜெர்மன் சேனையின் பின் பலம் போர்முனையின் ஓரங்களிலுள்ள ஸ்தலங்களுக்குச் செல்ல வேண்டுமானால் அதிக தூரமாகும். 455-ம் பக்கத்திலுள்ள படத்தில் ஜெர்மன் படைகள் பெரிய வட்டத்திலும், பிரஞ்சு படைகள் சிறிய வட்டத்திலும் நிலைபெற்றிருப்பதைக்காணலாம். அந்த காரணத்தால், பாரிஸுக்கப்பால் நடந்த சண்டையில், பிரஞ்சுசேனையின் பின்பலம் விரைவாய்ச் சென்று ஜெர்மானியரைத் தாக்க, ஜெர்மானியர் தங்களுக்குத் துணைப்படைகளைச் சீக்கிரமாய்ப் பெறமுடியாததால் பின்னடையும்படி நேர்ந்தது. 458-ம் பக்கத்திலுள்ள படத்தில் இப்ரிலிலிருந்து வர்டன் வரையில் ஜெர்மன் படைகள் குறுகிய வட்டத்திலும் நேசப்படைகள் பெரிய வட்டத்திலும் நிலைபெற்றிருப்பதைக் கவனிக்கவும். இதற்குக் காரணம் அந்த பிரதேசத்தில் நேசப் படைகள் ஜெர்மானியரைப் பக்கவாட்டில் வளைத்துகொண்டிருப்பதாகும். அந்த பிரதேசத்திலிருந்த ஜெர்மன் படைகளில் அநேகம் ருஷிய எல்லைக்குச் சென்றிருக்கின்றன; ஆகையால் அந்த பிரதேசத்திலுள்ள ஜெர்மன் தாருப்புகள் தொகையில் குறைவாயிருந்தும் போர்முனையைக் காத்து வருகின்றன. போர்முனையிலுள்ள எந்த ஸ்தலமாவது தாக்கப்பட்டால் அங்கு ஜெர்மானியரின் பின்பலம் சீக்கிரமாய்ச் சென்று உதவி செய்கின்றது. ஆனால் எய்ஸன் நதியிலிருந்து அல்ஸேஸ் வரையிலும் ஜெர்மன் படைகள் பெரியவட்டத்திலும் பிரஞ்சு படைகள் குறுகிய வட்டத்திலும் நிலைபெற்றிருக்கின்றன.

கடைசியாக, பிரஞ்சு யுத்த தந்திரத்தின்படி, பின் செல்கிற சத்துருக்களைத் தரத்தி அழிக்கவேண்டும். ஜெர்மன் முறைப்படி சத்துருக்களைச் சூழ்ந்துகொண்டி ஓடவிடாமல் அழிக்க வேண்டும். பிரஞ்சு முறைப்படி சத்துருக்களைப் பிரித்துத் தரத்திச்சென்று தனித்தனியாய் அழிக்கவேண்டும். படைகள் சத்துருக்களோடு பல

தினங்களாகக்கடிமையாய் சண்டைசெய்த பிறகு, பின்வாங்கிச்செல்கிற சத்துருக்களைத் தூரத்திக்கொண்டு போவதற்கு அந்தப் படைகள் போதுமான சக்தியைப். பெற்றிருப்பதில்லை. மேலும் இந்த காலத்துசேனை மிகவும் ஒழுங்காய் பயிற்றுவிக்கப்படுவதால், சத்துருவின் சேனை தோல்வியடைந்துபின் வாங்கினலும் அலங்கோலமாய் ஓடுவதுஅபூர்வமான சம்பவமென்று சொல்லவேண்டும். ஆகையால், பின்வாங்கிச் செல்கிற சத்துருக்களை அழிப்பதென்பது சாதாரணமாய் நடக்கக் கூடியதல்ல.

மேலே சொல்லப்பட்டு வந்த யுத்த தந்திரம் பிரஞ்சு சேனையில் அனுசரிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் சேனையிலும் அந்தத் தந்திரந் தான் அனுசரிக்கப்படுகிறது. அந்த தந்திரத்தின்படி, போர்க்களத்தில் படைகள் அணிவகுக்கிற விவரங்களை விளக்குவோம். கீழேயுள்ள படத்தில் பின்பலம் எவ்வாறு உபயோகிக்கப்படுகிறதென்று விளக்கப்பட்டிருக்கிறது.

போர்க்களம்



முன் படைகள் சத்துருக்களோடு சண்டை செய்வதின் நோக்கமென்ன வென்றால், சத்துருவின் படைகளை யெல்லாம் போர்க்களத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்பதே. மேலேயுள்ள படத்தில், முன் படைகள் சண்டை செய்துகொண்டிருக்கும்போது, பின்பலத்திலிருந்து கொஞ்

சங் கொஞ்சமாய்த் துணைப்படைகளை அனுப்பி கடைசியில் இடது புறத்தில் ஏராளமான பின்பலத்தைக் குவிப்பதால் சத்துருக்கள் முறியடிக்கப்படுகிறார்கள். வலது புறத்திலுள்ள மூன்படைகள் சத்துருக்களைத் தடுத்துக்கொண் டிருப்பதைத்தவிர வேறெவ்வித காரியத்தையும் செய்வதில்லை. சேனுபதிகளுக்கு மட்டும் முக்கியமான பிரயத்தனம் இன்ன இடத்தில் செய்யவேண்டுமென்று தெரியுமே யொழிய மூன் படைகளுக்கு அவ்விஷயமாய் எதுவும் தெரியாது. சேனையிலுள்ள துருப்புகளுக்கு இன்ன ஸ்தலம் முக்கியமான தென்றும் இன்ன ஸ்தலம் முக்கியமானதல்ல வென்றும் தெரியக் கூடாது. ஏனெனில் அவ்வாறு தெரிந்தால் அவர்கள் செவ்வையாய் சண்டை செய்ய மாட்டார்கள்.

மேலே காட்டியுள்ள படத்தில் 489-ம் பக்கம், முதல் வரிசை, காவல் செய்யும் குதிரைப்படைகளையும் முன் படைகளின் ஒரு பாகத்தையும் குறிப்பிடுகின்றன. இரண்டாவது வரிசையில் முன் படைகளின் மற்ற பாகமும், பிரங்கிப்படைகளின் பெரும்பாகமும் சேர்க்கப்படுகின்றன. மூன்றுவது வரிசையில் காலாட்படையின் பெரும்பாகம் சேர்க்கப்படுகிறது. நான்காவது வரிசையில் கையிருப்பிலுள்ள பீரங்கிகளை யெல்லாம் அனுப்பி முடிவான சண்டை நடத்தப்படுகிறது. கடைசி வரிசையில் பாக்கியுள்ள எல்லாத் துருப்புகளும் அனுப்பப்பட்டு சண்டை முடிக்கப்படுகிறது. அவ்வாறு பின்பலத்தை மேன்மேலும் அனுப்பி சத்துருவை முறியடிப்பதற்கு முடிவான பிரயத்தனம் செய்யப்படுகிறது.

இரண்டு யுத்த தந்திரங்களும் ஓரேவிதக்கோள்கைகளை ஆதாரமாகக் கொண்டவை.

பிரஞ்சு யுத்த தந்திரத்தைப் பற்றியும் ஜெர்மன் யுத்த தந்திரத்தைப்பற்றியும் சொல்லி வந்தோம். அவையிரண்டும் பார்ப்பதற்கு நேர்மாறுன தந்திரங்களாகத் தோன்றினலும், ஒரேவிதமான ராணுவக் கொள்கைகளைப் பின்பற்றி யோசனை செய்யப்பட்டவை. அவையிரண்டும் பிரலித்திபெற்ற போர் வீராகிய நெப்போலியன் அனுசரித்த முறைகளிலிருந்து விருத்திசெய்யப்பட்டவை. பிரஞ்சு ஜெர்மன் ராணுவ தந்திரிகள், நெப்போலியனுடைய கொள்கைகளை மேற்கொண்டு தங்கள் சௌகரியத்துக் குற்றபடி யுத்த முறைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

நெப்போலியனுடைய கொள்கையின்படி, யுத்த களத்தி லுள்ள சேனை எந்த இடத்திலும் தோல்வியடையும் படியான நிலை மையிலிருக்கக்கூடாது. அந்தக் கொள்கையை பிரஞ்சுக்காரரும்ஜெர் மானியரும் எவ்வாறு அனுசரிக்கிறார்கள் ? ஜெர்மானியர் தங்கள் சேனைமுழுவதையும் போர்க்களத்தில்அனுப்பிஎல்லா ஸ்தலங்களையும் ஏககாலத்தில் தாக்குகிறார்க ளாகையால் யுத்த ஆரம்பத்தி லிருந்தே போர்முனை யெங்கும் ஜெர்மன் சேனை பலங்கொண் டிருக்கிறது. பிரஞ்சுசேனை முன்படைகளை மட்டும் போர்க்களத்துக்கு அனுப்பி சத்துருக்களை எதிர்த்து வருகிறது. அதனால் முன்படைகள் போது மான பலமில்லாமல் எங்காவது தோல்வியடையக்கூடு மென்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த காலத்தில் வலுவான அரண்கள் கட்டப்படுவதாலும், விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகள் உபயோ கிக்கப் படுவதாலும், அவைகளின் உதவியைக்கொண்டு சொற்ப தொகை கொண்ட படைகள் தங்களைவிட மூன்றுமடங்கு வலுவுள்ள சத்துருக்களை எதிர்க்கச் சாத்தியப்படுகிறது. ஆகையால போர்முனை யெங்கும் பிரஞ்சு முன்படைகள் போதுமான வன்மைகொண்டிருக் கும்படி செய்யப்படுகிறது.

நெப்போலியனுடைய மற்றொரு கொள்கை என்னவென்றால், சத்துருக்களை எல்லா விடங்களிலும் எதிர்த்த பிறகே குறிப்பான ஓர் இடத்தில் ஏராளமான பலத்தைக் குவிக்கவேண்டும். பிரஞ்சு முறையில் இந்த கொள்கையே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பிரஞ்சு சேனையின் முன் படைகள் சத்துருக்களை எல்லா இடங் களிலும் எதிர்த்து நின்று, சத்துருக்களின் நிலைமையை அனுப வத்தில் செவ்வையாய் அறிந்துகொள்கின்றன. அதன்பிறகுதான் பிரஞ்சு சேனையின் பின்பலத்தை ஏவி சத்துருக்களை வெல்வ தற்கு எந்த இடத்தில் எவ்விதமாய்த் தாக்குவதென்று நிச்சயிக் கப் படுகிறது. ஜெர்மன் முறைப்படி, ஜெர்மன்சேனையின் ஒரு பகுதி சத்துருக்களை எதிர்க்க, மற்றொருபகுதி அதிகவன்மைகொண்டதாய் சத்துருவின் பக்கவாட்டில் வளைத்துகொள்ள அனுப்பப்படுகிறது. ஜெர்மன்சேனை சத்துருவின் இருப்பிடங்களையெல்லாம் ஏககாலத் தில் தாக்கி சத்துருக்கள் தங்கள் பின்பலத்தையெல்லாம் நாலாபக்கங் களிலும் பிரித்து அனுப்பிவிடும்படிச் செய்கிறது. அவ்வாறு சத்து ருக்கள் தாங்கள் தோல்வியடையாமல் காத்துக்கொள்வதைத் தவிர

வேறெவ்விதமான யோசனையும் செய்யமுடிவதில்லை. சத்துருக்கள் அவ்வாறு கலங்கியிருக்கும்போது ஜெர்மானியர் குறிப்பான இடத்தில் சத்துருவை வென்றுவிட முயற்சி செய்கிறார்கள். இந்த இரண்டு முறைகளிலுள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். பிரஞ்சு சேனாத்தலைவர்கள் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கையில் சத்துருவை வெல்வதற்குத் தகுதியான வழியை யோசனை செய்து பிறகு அதை நிறைவேற்றுகிறார்கள். ஜெர்மன் சேனாத்தலைவர்கள் சத்துருவை எவ்வாறு வெல்வதென்பதை யுத்தந் தொடங்குவதற்கு முன்னதாகவே யோஜனைசெய்து, யுத்தத்தை ஆரம்பித்தவுடனே சத்துருக்களைக் கலங்க அடித்து அந்த முன்யோசனையை நிறைவேற்றுகிறார்கள். சத்துருக்கள் அனைவரையும் ஏககாலத்தில் தாக்கிக் கலங்கச்செய்துவிட்டால், பிறகு ஜெர்மானியர் தங்கள் இஷ்டப்படி யுத்தத்தை நடத்தி முடிவுக்குக் கொண்டு வரலாமென்று நினைக்கிறார்கள்.

ஜெர்மானியர் அவ்வாறு யுத்த நடவடிக்கைகளை சமாதான காலத்திலேயே நிச்சயப்படுத்திக் கொள்வதற்குக் காரணமிருக்கிறது. இந்த காலத்தில் வல்லரசுகள் உடன்படிக்கைகளால் கட்டுப்பாடுசெய்து கொள்வதால், ஜெர்மானியர் யுத்த காலத்தில் இரண்டு எல்லைகளிலும் தாக்கப்படுவார்களென்று எண்ணினார்கள். ஆகையால் அவர்கள் சத்துருக்களைத் தனித்தனியாய்த் தாக்கி முறியடிக்க வேண்டும். ஏதாவதொரு எல்லையிலுள்ள சத்துருக்களை முதலில் தாக்கி சீக்கிரமாய் முறியடித்து உடனே தாமலமின்றி மற்றொரு எல்லைக்கு வந்து அங்கும் யுத்தஞ் செய்து வெற்றிபெற வேண்டும். ஜெர்மானியர் சத்துருக்களைத் தங்கள் இஷ்டப்படித் தாக்கி யுத்தஞ் செய்தால் தான் இரண்டு எல்லையிலும் வெற்றி அடைய முடியும். அதனால் ஜெர்மானியர் யுத்தந் தொடங்கினால் அவர்கள் சத்துருக்களின்மேல் படையெடுத்துச் செல்வார்களே யொழிய, தங்கள் தேசத்தின்மீது படையெடுக்கும்படி சத்துருக்களை விடவேமாட்டார்கள். எந்த காலத்தில் யுத்தந் தொடங்கினாலும் சத்துருக்களின்மீது படையெடுத்துச் செல்ல ஜெர்மானியர் நிச்சயித்துவிட்டதால், அந்த படையெடுப்பு இன்னவிதமாய்ச் செய்யப்படவேண்டுமென்பதையும் முன்னதாகவே நிச்சயித்துவிட்டார்கள். சத்துருக்களை ஜெர்மானியர் தங்கள் இஷ்டப்படி தாக்குவதால் தான் சீக்கிரத்தில் வெற்றி அடையமுடியும். ஆகையால் ஜெர்மானியர்

தங்களுடைய யுத்த நடவடிக்கைகளை முன்னதாகவே தீர்மானித்து தங்கள் யுத்த தந்திரத்தை நிறை வேற்றுவதற்குச் சாதகமான ஏற் பாடுகளையும் செய்து வைத்திருக்கிறார்கள்.

இந்த வித்தியாச மிருந்தபோதிலும், அந்த இரண்டு முறை களும், நெப்போலியனுடைய கொள்கையின்படி, சத்துருவை எல்லா இடங்களிலும் எதிர்த்துப் பிறகு குறிப்பான ஓர் பாகத்தில் ஏராளமான பலத்தைக்குவித்து வெற்றிபெற முயல்கின்றன.

நெப்போலியனுடைய மற்றொரு கொள்கை யென்னவென்றால், சத்துருவை வெல்வதற்காக போர்க்களத்தில் குறித்த பாகத்தில் முடிவான பிரயத்தனத்தைச் செய்யும்போது, அங்கு கூடுமான பலத் தை யெல்லாம் ஒன்றுக்குவிக்கவேண்டும்.

ஜெர்மன் முறைப்படி, யுத்தத்தை ஆரம்பிக்கும்போதே முடி வான பிரயத்தனத்தை இன்ன இடத்தில் செய்யவேண்டுமென்று தீர்மானித்து, அத்திசையில் எவ்வளவு அதிகமாய் துருப்புகளை சேர்த்து அணுப்ப முடியுமோ அவ்வளவும் அனுப்பப்படுகிறது. பிரஞ்சு சேனையில், முதலில் முன் படைகளைப் போர்க்களத்துக்கு அனுப்பி யுத்தத்தை நடத்திப் பார்த்துப் பிறகு முடிவான பிரயத் தனத்தை இன்ன இடத்தில் செய்வதென்று நிச்சயிக்கப்படுகிறது. யுத்தம் ஆரம்பித்தபிறகு முடிவான பிரயத்தனத்தைச் செய்ய வேண்டுமென்று எண்ணி யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே பின் பலம் சேர்த்துவைக்கப்படுகிறது. ஆகையால், பிரஞ்சு முறைப் படி, போர்க்களத்துக்கு எவ்வளவு குறைவாக துருப்புகளை அனுப்ப முடியுமோ அவ்வளவு குறைவாக அனுப்பப்படுகிறது; பின் பலத் தை எவ்வளவு அதிகமாக இருப்பில் வைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவும் வைத்துக்கொள்ளப் படுகிறது; ஏனெனில் பின் பலத் தைக் கொண்டே முடிவான பிரயத்தனஞ் செய்யப்படுகிறது. சேனை யில் சரிபாகம் அல்லது மூன்றிலொரு பாகம் பின்பலமாக வைத்துக் கொள்வது வழக்கம். இந்த இரண்டு முறைகளிலும், முடிவான பிரயத்தனத்தை ஏராளமான பலங்கொண்டு செய்யவேண்டுமென்ப தே முக்கிய நோக்கம்.

பிரஞ்சு சேனையின் முன் படைகள் சத்துருவின் சேனையைவிட தொகையில் குறைவா யிருக்குமாகையால், அவைகள் சத்துருவின் மேல் விழுந்து தாக்குவதில்லை; சத்துருக்கள் முன்னேறுவதைத்

தடுத்துக்கொண்டிருக்கும். அவைகள் சிற்சில சமயங்களில் காமா கவே பின்வாங்கிச் சென்று சத்துருக்களை அபாயமான நிலைமையில் கொண்டுவர முயற்சி செய்வதுமுண்டு. அவ்வாறு முன்படைகள் சத்துருக்களைத் தடுத்துச் சண்டை செய்துகொண்டிருக்கையில், பின்பலம் முழுவதும் தகுந்த இடத்துக்குச்சென்று சத்துருக்களின் மேல் விழுந்து அவர்களைக் கடுமையாய்த் தாக்கி வெற்றி அடைகின்றது; பிரஞ்சு சேனையின் பின் பலம் சத்துருவின் பக்கவாட்டில் சென்று தாக்கலாம். ஜெர்மானியரின் யுத்த தந்திரத்தில் செய்யப்படுவதுபோல, பிரஞ்சு சேனையின் பின்பலம் சத்துருவின் பக்கவாட்டில் வளைந்துசென்று தாக்கலாம். ஆனால் முக்கிய வித்தியாசமென்ன வென்றால் ஜெர்மன் சேனை யுத்தம் தொடங்கும்போதே பக்கவாட்டில் சத்துருவை வளைந்துகொள்ள முயல்கிறது. பிரஞ்சு சேனையில் யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் சத்துருவைப் பக்கவாட்டில் தாக்குவதற்கு சௌகரிய மிருக்கிறதென்று தோன்றினால் பின்பலத்தை பக்கவாட்டில் அனுப்பி வெற்றி பெறுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. உதாரணமாக யுத்தம் தொடங்கியவுடன் ஜெர்மன் சேனையின் வலதுபாகம் ஏராளமான படைகளைச் சேர்த்துக்கொண்டு பெல்ஜியத்தின் வழியாய்ச் சென்று பிரஞ்சு சேனையைப் பக்கவாட்டில் தாக்கின வண்ணமாய் முன்சென்றது. பிரஞ்சு சேனை சத்துருக்களைத் தடுத்து சண்டை செய்துகொண்டே பின் வாங்கிச் சென்றது. பிரஞ்சு சேனைப் பாரிஸ் நகரத்தை விட்டு விலகிச்சென்றவுடன், ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்குவதற்கு ஏற்ற சமயம் வாய்த்தது. அப்போது, பிரஞ்சு சேனையின் பின்பலம் முழுவதும் பாரிஸ் நகரத்திலிருந்து புறப்பட்டு ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்கிற்று. அந்த பின்பலந்தான் கெடுக வடகிழக்காய் வளைந்துசென்று பெல்ஜியத்திலுள்ள இப்ரில்ஸ் நகரம் வரையில் பரவியிருக்கிறது. ஜெர்மன் சேனை தொகையில் அதிகமாயிருப்பதால் எதிரியை வெல்வதற்குத் தகுந்த இடத்தில் ஏராளமான பலத்தைத் திரட்டுவது சாத்தியமாகும். ஆனால் பிரஞ்சு சேனை தொகையில் குறைவாயிருப்பதால், எதிரியை முறியடிக்கவேண்டிய இடத்தில் ஏராளமான துருப்புகளை எவ்வாறு குவிக்க முடியும்? அதற்காகத்தான், பிரஞ்சு சேனை முழுவதும் போர்க்களத்தில் சண்டை செய்வதில்லை; பிரஞ்சு சேனை

யின் முன் படைகள் மட்டும் சண்டை செய்கின்றன. முன் படைகள் தங்களிடம் பல மடங்கு வன்மைகொண்ட சத்துருவின் சேனை முழுவதையும் எவ்வாறு எதிர்க்க முடியும்? அந்த முன் படைகள் சத்துருக்களின்மேல் விழுந்து தாக்குவதில்லை; சத்துருக்கள் தாக்குவதை தாங்கிக்கொண்டு நிற்கின்றன. இந்த காலத்தில் கட்டப்படும் வலுவான அரண்களில் நிலை பெற்று விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகளை உபயோகிப்பதால் அவ்வாறு தாங்கிக்கொண்டிருக்க சாத்தியப்படுகிறது.

அவ்வாறு ஐப்போலியனுடைய ராணுவக்கொள்கைகளை ஆதாரமாகக்கொண்டு அவ்விரண்டு யுத்த தந்திரங்களும் நிறைவேற்றப்படுகின்றன. ஒருசேனை மற்றொரு சேனையின் யுத்த முறையை அனுசரிப்பதுமுண்டு. பிரஞ்சு சேனை பக்கவாட்டில் வளைத்துகொள்ளும் முறையை அனுசரித்து பாரிஸ் நகரத்துக் கருகில் அதன் பின் பலம் சத்துருவின் பக்கவாட்டில் தாக்கிற்றென்று சொல்லியிருக்கிறோம். அவ்வாறே ஜெர்மன் சேனை அல்ஸேஸ் மாகாணத்திலுள்ள தன் இடது பாகத்தைக்கொண்டு எதிரியைத் தடுத்துநின்று, வலது பாகத்தில் மட்டும் ஏராளமான படைகளைக் குவித்து எதிரியைத் தாக்கியது.

போர்க்கள தந்திரத்தின் விவரங்கள்.

யுத்த தந்திரங்களைப்பற்றி இது வரையில் பிரஸ்தாபித்தோம். யுத்தத்தின் நோக்கம் சத்துருவின் சைன்யபலத்தை அழிப்பதாகும். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முக்கியமான வழிகளை யுத்த தந்திரங்கள் போதிக்கின்றன. யுத்த தந்திரம் என்பது, பொதுவாய் யுத்தமண்டலத்தில் தொடரப்படும் ராணுவ நடவடிக்கைகளின் சம்பந்தமானவை. போர்க்கள தந்திரமென்று மற்றொருவகை யிருக்கின்றன. போர்க்களத்தில் சத்துருக்களோடு சண்டை செய்யும் போது சில முறைகள் அனுசரிக்கப்படுகின்றன. உதாரணமாக, பிரஞ்சு சேனையிலுள்ள பீரங்கிகள் இடையிடையே நிறுத்தி குண்டுகளைச் சுடுகின்றன. அவைகள் திடீரென்று ஏராளமாக குண்டுகளை விரைவாய்ச் சுட்டுப் பிறகு நிறுத்திவிடுகிறது. சற்று நேரஞ் சென்ற பின், மறுபடியும் திடீரென்று குண்டுகளை வாரியிறைக்கின்றன. ஜெர்மன் பீரங்கிகள் நிதானமாய்க் குறி பார்த்து வரவர குண்டுகளை அதிகமாகச் சுட்டு கடைசியில் உக்கிரமான நெருப்பைக் கொட்

டிய வண்ணமா யிருக்கின்றன. மற்றொரு விஷயத்திலும் வித்தியாசமிருக்கிறது. பிரஞ்சு துருப்புகள் சத்துருக்களின் அரண்களைத் தாக்கிப் பிடிக்கச் சென்றால் ஒருவர்பின் ஒருவராய்ச் சென்று, சத்துருவுக் கருகில் சென்றவுடன் ஒருவர் பக்கத்தில் ஒருவராய் நிலைபெற்று, திடீரென்று துப்பாக்கிகளை வீசைவாய்ச் சுட்டு நிறுத்தி, முன்புறமாய்த் தாவிச் செல்கிறார்கள். ஜெர்மன் துருப்புகள் தூரத்திலிருக்கும்போதே ஒருவர் பக்கத்திலொருவராய் நின்று துப்பாக்கிகளைச் சுட்டுக்கொண்டே சென்று சத்துருவுக் கருகில் செல்லச்செல்ல துருப்புகள் அதிகமாய் வந்து கூடி, வரவர உக்கிரமாய்ச் சுடுகிறார்கள். மற்றொரு விஷயத்திலும் வித்தியாசமிருப்பதைக் கவனிக்கலாம். பிரஞ்சு படை போர்க்களத்தில் சண்டையைத் தொடங்கினால், படையிலுள்ள சில பட்டாளங்கள் பின் பலமாக இருப்பில் வைத்துக்கொள்ளப் படுகின்றன; மற்ற பட்டாளங்களெல்லாம் சண்டை செய்து கொண்டிருக்கும். ஆனால் ஜெர்மன் படை சண்டைசெய்யத் தொடங்கினால் அந்தப் படையிலுள்ள எல்லாப் பட்டாளங்களும் சண்டை செய்யும்படி அனுப்பப்பட்டு, அந்த பட்டாளங்களிலுள்ள மெஷின் பீரங்கிகள் மட்டும் பின் பலமாக இருப்பில் வைத்துக்கொள்ளப் படுகின்றன. ஒவ்வொரு பட்டாளத்திலும் இரண்டு மெஷின் பீரங்கிகளிருக்கின்றன வென்று சொல்லியிருக்கிறோம். ஒரு மெஷின்பீரங்கி சுமார் 60 துப்பாக்கிகளுக்குச் சமானமாக எல்லாச் சேனைகளிலும் கருதப்படுகிறது. துருப்புகள் சண்டை செய்துகொண்டிருக்கும்போது அவர்களுக்குப் பின்பலம் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். ஏனெனில் போர்க்களத்தில் சண்டை செய்கிற துருப்புகள் எங்காவது கடுமையாய் நெருக்கப்பட்டால் அவ்விடத்தை வலுப்படுத்துவதற்காகப் பின்பலத்திலிருந்து உதவி யனுப்ப நேரிடும். பின்பலத்தை வைத்துக் கொள்வதில் பிரஞ்சு முறையும் ஜெர்மன் முறையும் வித்தியாசப் படுகின்றன. ஜெர்மானியர் தங்களால் கூடுமான துருப்புகளையெல்லாம் சண்டைக்கு அனுப்பவேண்டு மென்று கோக்கங் கொண்டிருக்கிறார்கள்; ஆகையால் ஜெர்மானியர் தங்கள் துருப்புகளையெல்லாம் சண்டைக்கு அனுப்பி விடுவதற்காக மெஷின் பீரங்கிகளை பின்பலமாகக் கருதி வைத்துக்கொள்கிறார்கள். பிரஞ்சுக்காரர் தாங்கள் போர்க்களத்துக்கு எவ்வளவு குறைவாய் துருப்புகளை

அனுப்ப முடியுமோ அவ்வளவு குறைவாய் அனுப்பவேண்டுமென்று நோக்கங்கொண்டிருக்கிறார்கள்; ஏனெனில் அவர்கள் தங்கள் பின் பலத்தைக்கொண்டே சண்டையை முடிவுக்குக்கொண்டு வருவதால், பின் பலத்தின் வன்மையைக் கூடுமான வரையில் அதிகப்படுத்து கிறார்கள். ஆகையால், போர்க்களத்துக்கு துருப்புகளைக் குறைவாய் அனுப்பி பின்பலத்தை ஏராளமாய் இருப்பில் வைத்துக்கொள்கிறார் கள். பிரஞ்சுக்காரர் சண்டை செய்யும்போது, துருப்புகளை இருப் பில் வைத்துக்கொள்வதற்காக மெஷின்பீரங்கிகளைப் போர்க்களத்தில் அனுப்புகிறார்கள். ஜெர்மானியர் தங்கள் துருப்புகளை யெல்லாம் போர்க்களத்துக்கு அனுப்புவதற்காக, மெஷின் பீரங்கிகளைப் பின் பலமாக வைத்துக் கொள்கிறார்கள்.

யுத்த தந்திரத்துக்கும் போர்க்கள தந்திரத்துக்குமுள்ள வித்தியாசம்.

மேலே சொல்லப்பட்ட முறைகளெல்லாம் போர்க்களத்தோடு சம்பந்தப்பட்டவை. ஆகையால் இந்த தந்திரங்களை போர்க்கள தந்திர மென்று சொல்லலாம். யுத்தத்தின் முடிவான நோக்கத்தை நிறை வேற்றுவதற்காக, யுத்த மண்டலத்தில் தொடங்கவேண்டிய பொது வான ராணுவ நடவடிக்கைகளைப் பற்றின தந்திரங்களுக்கு யுத்த தந்திரமென்று பெயர். சேனையைப் பல பாகங்களாகச் செலுத்தி பற்பல பிரதேசங்களில் வெவ்வேறு நடவடிக்கைகளைத் தொடங்கி, முடிவாய் சத்துருவின் சைன்ய பலத்தை அழிப்பதற்குச் செய் யப்படுகிற சூழ்ச்சிகளெல்லாம் யுத்த தந்திரமாகும். உதாரணமாக ஜெர்மன் சேனையின் வலது பாகம் பெல்ஜியத்தின் வழியாய் நுழைந்து பாரிஸ் நகரத்தை நோக்கிச் செல்லவேண்டுமென்றும் பாரிஸ் நகரத்துக்கருகில் அந்த வலது பாகத்தோடு மத்திய பாகம் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும் செய்யப்பட்ட போசனைகள் யுத்த தந்திரமாகும். போர்க்களத்தில், துருப்புகள் எவ்வாறு அணி வகுத்து சத்துருக்களைத் தாக்குவது, எந்தெந்த இடங்களில் அரண் களைக் கட்டுவது, எவ்வாறு பிரங்கிகளை உபயோகிப்பது, முதலிய போசனைகள் போர்கள தந்திரமாகும். ஜெர்மன் சேனையிலும் பிரஞ்சு சேனையிலும் தங்கள் யுத்த தந்திரத்துக்கு ஏற்றவாறு தங் கள் போர்கள தந்திரத்தை அனுசரிக்கிறார்களென்பதைக் கவ னிக்கவேண்டும்.

அணிவகுப்பதில் வித்தியாசங்கள்.

பிரஞ்சு படைகளும் ஜெர்மன் படைகளும் போர்க்களத்தில் ஒருவிதமாயும் யுத்த மண்டலத்தில் வேறுவிதமாயும் அணிவகுக்கின்றன. ஜெர்மானியர் யுத்தமண்டலத்தில் விசாலமாயும் போர்க்களத்தில் நெருக்கமாயும் அணிவகுக்கிறார்கள். பிரஞ்சுக்காரர் யுத்த மண்டலத்தில் நெருக்கமாயும் போர்க்களத்தில் விசாலமாயும் அணிவகுக்கிறார்கள். அவைகளின் காரணங்களைச் சொல்வோம். ஜெர்மன்படைகள் யுத்த மண்டலத்தில் நடமாடும் போது விரைவாய்ப் பிரயாணஞ் செய்வதற்காக விசாலமாய் அணிவகுத்து விஸ்தாரமான பிரதேசத்திலுள்ள எல்லாப் பாதைகளையும் உபயோகிக்கின்றன. ஆனல் அந்தப்படைகள் போர்க்களத்தில் சண்டையை ஆரம்பித்துவிட்டால் அந்த படைகளிலுள்ள துருப்புகள் நெருக்கமாய் வரிசை பின் வரிசையாக அணிவகுத்து சத்துருக்களின் மேல் விழுந்து தாக்குகிறார்கள். ஏனெனில் போர்க்களத்தில் அதிக சீக்கிரமாய் வெற்றிபெறவேண்டுமென்பது அவர்களின் நோக்கம். ஆனல் துருப்புகள் அவ்வாறு நெருக்கமாய் நின்று சத்துருக்களைத் தாக்கினல், சத்துருவின் நெருப்பாயுதங்களால் ஏராளமாய் சேதமடைவார்கள்; ஜெர்மன் துருப்புகள் அவ்வாறு அதிகமாய்ச் சேதமடைந்தாலும் சீக்கிரத்தில் வெற்றி பெறவேண்டுமென்று நோக்கங்கொண் டிருக்கிறார்கள்; ஜெர்மன் துருப்புகள் அதிவிரைவாய் நடமாடுவதாலும் உக்கிரமாய்த் தாக்குவதாலும் தங்கள் யுத்த தந்திரத்தை நிறைவேற்ற உத்தேசிக்கிறார்கள்.

இவைகளுக்கு நேர்மாறன முறைகள் பிரஞ்சுசேனையில் அனுசரிக்கப் படுகின்றன. பிரஞ்சு படைகள் யுத்த மண்டலத்தில் நடமாடும் போதும் நிலேபெற்றிருக்கும்போதும் நெருக்கமாய் வரிசை பின் வரிசையாய் அணிவகுக்கின்றன. நெருக்கமாய் அணிவகுத்தால்தான் சத்துருக்களின் தாக்குதலே வலுவாய்த் தாங்கி நிற்கமுடியும். சத்துருக்களே முன் செல்ல விடாமல் காலதாமஸம் செய்யவேண்டுமென்பது அவர்களின் நோக்கமாகும். ஏனெனில் பிரஞ்சு சேனையின் பின் பலம் நிதானமாய் சேர்ந்து தகுந்த சமயத்தில் சத்துருக்களைத் தாக்குவதற்கு சவகாசம் பெறவேண்டும். ஆனல் போர்க்களத்தில் சத்துருக்களைத் தாக்க ஆரம்பித்துவிட்டால் பிரஞ்சு படைகளிலுள்ள துருப்புகள் விசால

மாய் விலகிக்கொண்டு சத்துருக்களின் இருப்பிடத்துக்கு நெருங்குகிறார்கள். ஏனெனில் போர்க்களத்தில் சண்டை செய்கிற படைகள் எவ்வளவு குறைவாய் அனுப்பப்படலாமோ அவ்வளவு குறைவாய் அனுப்பப்படுகின்றன. ஆகையால், பிரஞ்சு துருப்புகள் அசாவசியமாய் சேத மடையாமல் காக்கப்படவேண்டும். அதற்காகத்தான் பிரஞ்சு துருப்புகள் சண்டை செய்யும்போது விசாலமாக விலகிச் செல்கிறார்கள். போர்க்களத்துக்கு அனுப்பப்படுகிற துருப்புகளைக் குறைத்து, இருபபில் வைத்துக்கொள்ளப்படுகிற பின் பலத்தை அதிகப்படுத்தி அந்த பின் பலத்தைக் கொண்டு யுத்த தந்திரத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது பிரஞ்சு சேனையின் நோக்கமாகும்.



31-வது அத்தியாயம்.

வல்லரசுகளின் சேனைகள்.

பிரிட்டிஷ் சேனை.

கிரேட்பிரிட்டன் நான்கு பக்கங்களிலும் கடல்களால் சூழப்பட்ட தேசமாகும். ஆதையால், பிரிட்டிஷார் தங்கள் சத்துருக்களினின்றும் காப்பதற்கு வன்மைகொண்ட கடற்படை அவசியமென்று உணர்ந்தார்கள். சரித்திர பூர்வமாய் நேர்ந்த சம்பவங்கள் அந்த அவசியத்தை வற்புறுத்தியிருக்கின்றன. கடற்படையைச் சிறந்த நிலைமையில் வைத்திருக்கவேண்டுமென்பது அவர்களுக்கு வெகு காலமாக பிரதான நோக்கமாயிருந்து வருகிறது. கடற்படையின் வன்மையால், சத்துருக்களின் படையெடுப்பைத் தடுத்து தங்கள் வியாபாரத்தை காத்துவர சாத்தியப்படுகிறது. ஜெர்மானியர் கடற்படை விஷயமாகப் போட்டி செய்யத் தொடங்கியபோது, பிரிட்டிஷார் பிரமாத முயற்சிகளைச் செய்யவேண்டி நேர்ந்தது. அவ்வாறே முயற்சி செய்து பிரிட்டிஷ் கடற்படை ஒப்பற்ற நிலைமையில் வைக்கப்பட்டது. கடற்படையின் மூக்கியத்தை பிரிட்டிஷார் அனைவரும் தெளிவாய் அறிந்து கொண்டிருக்கிறார்கள்; அதை மிகுந்த வன்மை கொண்டதாய் ஸ்தாபிப்பதால் ஐரோப்பாவில் எவ்வளவு பெரிய யுத்தம் நேரிட்டாலும் அதனால் தங்கள் நிலைமை உடனே பாதகப்படாதென்று பலர் நம்பியிருக்கிறார்கள். அவ்விஷயம் ஒருவாறு உண்மையென்றாலும், ஐரோப்பிய தேசங்களில் நடக்கும் யுத்தத்தைப்பற்றி பிரிட்டிஷார் முற்றிலும் அலக்ஷியமாய் இருந்துவிடுவதற்கில்லை. நெப்போலியன் காலத்தில் நடந்த ஐரோப்பிய யுத்தங்கள் பிரிட்டிஷாருக்குக்கவலையை உண்டுபண்ணி, ஐரோப்பிய விவகாரத்தில் பிரிட்டிஷார் அவ்வளவு அலக்ஷியம் பாராட்டக்கூடாதென்பதை விளக்கின. நெப்போலியனுடைய ஆட்சியிலிருந்த பிரான்ஸ் தேசம், எல்லா ஐரோப்பிய ராஜ்யங்களையும் ஒப்பற்றராணுவபலத்தால்அடக்கிவைத்து,பிரிட்டிஷாரின்வியாபாரத்தை அழிப்பதற்கு ஐரோப்பிய ராஜ்யங்களுக்குள் நூதனகட்டுப்பாட்டை உண்டுபண்ணி, அந்த ராஜ்யங்களிலிருந்த எல்லாக் கப்பற் படைகளையும் ஒன்றுப்திரட்டி பிரிட்டிஷாரின்மேல்

படையெடுக்க முயற்சி செய்தது. அப்போது பிரிட்டிஷார் தங்களைக் காத்துக்கொள்வதற்காகப் பெரிய சேனையைத் திரட்டி அனுப்பினதோடு, தங்கள் கோசகவர்ன்மெண்டுகள் புதியசேனைகளைச்சேர்ப்பதற்காகப் பண உதவியும் செய்யும்படி கேர்ந்தது. ஐரோப்பிய வல்லரசுமிதமிஞ்ஜிய ராணுவ பலத்தைப் பெற்றுவிட்டால், அவ்விஷயமாய் அலக்ஷியம் பாராட்டுவது சரியல்லவென்பது அந்தகாலத்தில் பிரிட்டிஷாருக்கு தெளிவாய்ப் புலப்பட்டது. ஆயினும் இந்த மகாயுத்தம் ஆரம்பிக்கும் வரையிலும், பிரிட்டிஷார் தங்கள் கடற்படையில் முழுகவனத்தையும் செலுத்தியதுபோல சேனையில் செலுத்தாமலே யிருந்துவிட்டார்கள்.

ஆகையால் கிரேட்பிரிட்டனில் பெரிய ராணுவம் ஸ்தாபிக்கப்படாமலிருந்ததற்கு ஒரு முக்கியகாரணம் அங்கியரால் படையெடுக்கப்படுமென்ற பயமில்லாமையாகும். வன்மை கொண்ட கடற்படையிருக்கும் வரையில் தேசத்துக்கு ஆபத்துநேரிடாது. இதனால், பிரிட்டிஷ் ஜனங்கள் ராணுவத்தில் சேரும்படி கட்டாயஞ் செய்யப்பட்டால் அது ஜன சுதந்தரத்துக்கு விரோதமென்று நினைத்தார்கள். நிரந்தரமான சேனையை ஸ்தாபிப்பதற்குக்கூட பிரிட்டிஷார் எப்போதும் ஆக்ஷேபித்து வந்தார்கள். பெரிய சேனையை ஸ்தாபிப்பதால் அரசர்களின் அதிகாரம் மிதமிஞ்சிப் போய் ஜனங்களுக்கு இம்சை உண்டாகுமென்று எண்ணி, நிரந்தரமான சேனையை எப்போதும் குறைவாகவே ஸ்தாபித்து வந்தார்கள். ஒவ்வொரு வருஷமும் இவ்வளவு பலங்கொண்ட சேனையை நிர்வகிக்க வேண்டுமென்றும், அதன் செலவுக்காக இவ்வளவு தொகை கொடுக்கப்படவேண்டுமென்று பிரிட்டிஷார், தங்கள் பார்லிமெண்டில், சட்டம் செய்கிறார்கள். ஜனப்பிரதிநிதிகள் பார்லிமெண்டில் ஏந்தவருஷமாவது அந்த சட்டத்துக்குச் சம்மதங்கொடுக்காவிட்டால், அவ்வருஷம் பிரிட்டிஷ் சேனையென்பதே யில்லாமற்போகும். மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களிலுள்ள ஜனங்கள் தங்கள் அரசர்களின் பேராசைக்கும் அதிகாரப் பிரியத்துக்கும் உட்பட்டு, ராணுவத்தில் சேரும் கொடுமையைச் சகித்து வருவதாக பிரிட்டிஷார் கருதுகிறார்கள். ஆனால் பிரிட்டிஷார் அங்கிய படையெடுப்புகளுக்கு அஞ்சவேண்டியிராததால் ராணுவத்தைப் பற்றி அவ்வித அபிப்பிராயங் கொள்ளச் சாத்தியப்படுகிறது. ஏனெனில் பிரஞ்சுக்காரர் ஜனசுதந்தரத்தில் மிகுந்த பற்றுடையவர்கள்

தான் ; தங்கள் ராஜ்ய பாலனத்துக்கு அரசர்களே நியமிக்காமல் ஜன நாயகத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள் ; ஆயினும் அவர்கள் ராணுவத் தில் ஊழியஞ்செய்யுங் கடமையை ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அந்நியரின் படையெடுப்புகளால் ஆபத் துண்டா ககூடுமென்பதே. பிரஞ்சு சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், இடாலி, ஸ்விட் ஜர்லாந்து, ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய இவ்வைந்து அந்நிய ராஜ்யங்க ளிருக்கின்றன. மேலும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், கிரேட் பிரிட்டனைப்போ லல்லாமல், ராணுவத்தில் ஊழியஞ் செய்யவேண்டி யது கடமையென்று சட்டம் விதித்திருக்கின்றன. ஏனெனில் அந்த குடியேற்ற நாடுகளின் நிலைமை அவ்வாறு யிருக்கிறது.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளாகிய ஆஸ்டிரேலியாவும், நியூஜீலண்டும், ஐரோப்பிய ராஜ்யங்களுடன் சம்பந்தப்படாமல் வெகு தூரம் விலகி பஸிபிக் மகா சமுத்திரத்தின் ஓர் மூலையி லிருக்கின்றன. ஆஸ்டிரேலியாவுக்குப் பக்கத்திலுள்ள அநேக சிறு தீவுகள் ஜெர்மனிக்குச் சொந்தமானவை. அவ்விரு நாடு களும் அநேக ஆசிய ராஜ்யங்களுக்கு இடையிலிருக்கின்றன. சில ஆசிய ஜனங்கள் தங்கள் நிலைமையை விருத்திசெய்து வல்லமையை அதிகரித்துக்கொண்டு வருகிறார்கள். சீனரும் ஜப்பானியரும் குடியேறுவதற்கு அந்த பிரிட்டிஷ் நாடுகள் ஆக்ஷேபித்து அவர் களின் மனஸ்தாபத்தை சம்பாதித்திருக்கின்றன. ஜப்பான் தேசம் ஐரோப்பிய வல்லரசுகளுள் ஒன்றாகிய ருஷ்யாவை முறி யடித்தபோது, அத்தேசத்தின் சோஷமும் துணிவும் வன்மை யும் வெளிப்பட்டன. ஆசிய ராஜ்யங்கள் தங்கள்மீது படை யெடுக்குமென்ற பயம் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கு அவ் வளவு இல்லையென்றாலும், ஆசிய ஜனங்கள் சமாதான காலத் தில் கூலியாட்களாக வந்து அந்நாடுகளின் ஐஸ்வர்யத்தை அனுப விப்பதற்காக அங்கு நுழைந்து விடுகிறார்களென்ற பயம் மிகுதியா யிருக்கிறது. அவ்வாறு பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் நினைப்பதால், தங்கள் தாய் நாட்டின் கடற்படையை மட்டும் நம்பியிருக்க முடியா மல் தங்கள் ராணுவ பலத்தை விருத்திசெய்யத் தொடங்கின. தென் ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாடு, ஆசியா தேசத் துக் கூலியாட்களின் விஷயமாய் எவ்வளவு தூரம்போராடியதென்று சொல்லத் தேவையில்லை. தென்னாப்பிரிக்காவுக்கு வடக்கில் மற்ற



ஜார்ஜ் சக்கவர்த்தி—போர்க்களத்து ராணுவ உடையைத் தரித்தல்.



ஜார்ஜ் சக்கவர்த்தி—கடற்படை உடையை தரித்தல்.



பிரஞ்சு யுத்த மண்டலத்தில் ஜார்ஜ் சக்கரவர்த்தியும்
பிரஸிடென்ட் பாய்ன்கேரும் திருப்புகோப் பார்வையிடல்.



ஜார்ஜ் சக்கரவர்த்தி—இந்தியச் சுதிரைப்
படையைச் சேர்ந்த உடை.



பிரிட்டிஷ் இளவரசர்

ஐரோப்பியராஜ்யங்களின் குடியேற்றநாடுகளிருக்கின்றனவாகையால் அந்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடு ராணுவத்தை விருத்திசெய்தது. அதோடு தென்னப்பிரிக்காவில் தேச வாசிகளின் தொகை ஐரோப்பியர்களைவிட ஐந்து மடங்கு அதிகமா யிருப்பதால் அங்குள்ள ஐரோப்பியர்கள் ராணுவப் பதிவு சட்டத்தை அனுசரிப்பது ஆச்சரியமல்ல. மற்றொரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய கானடாவில்மட்டும் ராணுவப்பதிவுசட்டம் விதிக்கப்படவில்லை. ஏனெனில் அந்தநாடு அமெரிக்கா கண்டத்திலிருப்பதால், அதற்கருகில் யூனெடெட் ஸ்டேட்ஸ் தேசத்தைத்தவிர வேறு பலங்கொண்ட ராஜ்யங்களில்லை; யூனெடெட் ஸ்டேட்ஸ் தேசத்தார், பிரிட்டிஷாரைப் போலவே ராணுவத்தில் பிரியமில்லாதவர்கள். ஆகையால் கானடாவுக்கு அந்நிய ராஜ்யங்களால் ஆபத்து நேரிடுவதற்கில்லை. ஜப்பானியர் அருகிலிருக்கிறார்களென்றாலும் அவர்கள் பிரிட்டிஷாருடன் உடன்படிக்கை செய்துகொண்டநேசர்களாவார்கள். மேலும், அமெரிக்கா கண்டத்தில் அந்நிய ராஜ்யங்கள் பிரவேசிக்கக்கூடாதென்ற கொள்கையை யூனெடெட் ஸ்டேட்ஸ் தேசத்தார் ஸ்தாபித் திருக்கிறார்களாகையால் அதற்கு விரோதமாய் ஜப்பானைப் போன்ற அந்நிய ராஜ்யங்கள் பிரவேசிப்பது அரிதாகும்.

மேற்சொல்லிய விஷயங்களை யோசிக்கும்போது, பிரிட்டிஷார் தங்கள் சாவதான நிலைமையைக் கருதி, ராணுவத்தில் பற்று கொள்ளாமலிருக்கிறார்களென்பது விளங்கும். இவ் விஷயம் மிகவும் முக்கியமானது; ஏனெனில், பிரிட்டிஷார்வராளமானராணுவ பலத்தை பெருமலிருந்தால், ஐரோப்பிய விவகாரங்களில் அகாவசியமாய்த் தலையிடாமலிருந்தார்கள்; ஆனால் ஐரோப்பிய வல்லரசுகளில் ஏதேனும் மிதமிஞ்சிய அதிகாரத்தைப் பெற்றபோது மட்டும் பிரிட்டிஷார் பிரவேசிக்கும்படி நேர்ந்தது; பிரிட்டிஷார் அவ்வாறு பிரவேசித்து வல்லரசுகளின் நிலைமையில் அதிக ஏற்றத்தாழ்வில்லாமல் அடக்கியவுடன், தாங்களும் மிதமிஞ்சிய அதிகாரம் பெருமலிருந்தார்கள். பிரிட்டிஷார் போர்க்களத்தில் வெற்றிகளை அடைந்தபோது, அந்த வெற்றிகளால் அவர்களுக்கு ராணுவப் பிரியம் உண்டாகாமலிருந்தது. அந்த காரணத்தால்தான், பிரிட்டிஷாரின் நிலைமையில் எதிர்பாராத மாறுதல்கள் உண்டாகாமலிருந்தது. இவ் விஷயம் ஜெர்மனியின் சரித்திரத்தைப் பார்த்தால் நன்கு விளங்

கும். நெப்போலியன் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் வன்மையை அதிகரித்து ஜனசுதந்தரத்துக்கு ஆபத்தை விளைத்தபோது, ஜெர்மனியும் கிரேட்பிரிட்டனும் ஒன்று சேர்ந்து, பிரஞ்சு ராணுவத்தின் கொழுப்பை அடக்கிவிட்டன. அதன் பிறகு ஜெர்மனிக்கு ராணுவப்பிரியம் உண்டாயிற்று. ஆனால் கிரேட்பிரிட்டனுக்கு அவ்வித உணர்ச்சி உண்டாகவில்லை. 1860–ம் வருஷத்திலிருந்து ஜெர்மனியின்நிலைமையில்ஆச்சரியமானமாறுதல்உண்டாயிற்று. ஜெர்மனி தன் ராணுவ பலத்தை விசைவாய் அதிகரித்து, ஆஸ்டிரியாவையும் பிரான்ஸையும் யுத்தத்தில்முறியடித்து, மற்றவல்லரசுகளையும் பயமுறுத்திவந்தது. நெப்போலியன்காலத்தில்பிரஞ்சுஏகாதிபத்தியத்தால் உண்டான ஆபத்து இப்போது ஜெர்மன் ஏகாதிபத்தியத்தால் மறுபடியும் தோன்றி யிருக்கிறது. ஆகையால் இப்போது ஜெர்மனியின் ராணுவத் திமிரை அடக்குவதற்காக இந்த மாகாயுத்தம் கிளம்பியிருக்கிறது. பிரிட்டிஷார் ராணுவப்பிரியங் கொள்ளாததால்அவர்கள் ஐரோப்பிய ராஜ்யங்களுக்கு எவ்வித ஆபத்தையும்விளைக்காமலிருந்து வந்தார்கள். பிரிட்டிஷார் ராணுவப் பிரியங்கொள்ளா விட்டாலும் போர்வன்மையில் குறைந்தவர்கள் என்று நினைக்கக்கூடாது. பிரிட்டிஷார் தங்களைப்போன்ற நாகரீகத்தையுடைய ஐரோப்பிய ராஜ்யங்களுடன் யுத்தஞ்செய்திருப்பதோடு, வெவ்வேறான நாகரீகங்களையுடைய அந்திய பிரதேசங்களிலும் அநேக யுத்தங்களைச்செய்து உலகெங்கும் பற்பல குடியேற்ற நாடுகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். போர் வன்மையிலும் யுத்த அநுபோகத்திலும் பிரிட்டிஷார் மற்றெவருக்கும் தாழ்ந்தவர்களல்ல.

சென்ற 50 வருஷங்களாக, ஜெர்மனியின் நடவடிக்கைகளால் ஐரோப்பாவின் நிலைமையில் மாறுதல்கள் தோன்றியபோது பிரிட்டிஷார் தங்கள் நிலைமையை வலுப்படுத்திக் கொள்ள கோர்ந்தது. அப்போது அவர்கள் ஐரோப்பிய விவகாரங்களில் பிரவேசித்து மற்ற வல்லரசுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார்கள். ஐரோப்பிய விவகாரங்களில் செல்வாக்கு பெறவேண்டுமானால் அவர்கள் ராணுவ பலத்தை விருத்தி செய்வது அவசியமாகு மென்று அநேக பிரிட்டிஷ் ராணுவ நிபுணர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். மற்ற ராஜ்யங்களைப்போல கிரேட்பிரிட்டனிலும் ராணுவப் பதிவு சட்டம் விதிக்கவேண்டு மென்று அநேகர் வற்புறுத்தினர்கள். பிரிட்

டிஷ் ராணுவத்தில் மிகுந்த அனுபோகம் பெற்ற லார்ட் ராபர்ட்ஸ் அந்த கக்ஷியை ஒபாமல் எடுத்துச் சொல்லி வந்தார். ஜெர்மனி யால் எவ்வித தீங்கும் உண்டாகாம லிருக்கவேண்டுமானால், பிரிட்டி ஷார் சில வல்லசுகளுடன் உடன்படிக்கைகள் மட்டும் செய்து கொள்வது பயனில்லை யென்றும் அந்த உடன் படிக்கைகளின் நோக்கம் நிறைவேறுவதற்கு தாங்கள் ராணுவத்தில் ஊழியஞ் செய்யும் கடமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் சொல்லிவந்தார். அந்த வாதங்கள் பயன்படாமல், இந்த மகா யுத் தம் நேர்ந்துவிட்டதையும் அவர் கண்ணால் பார்த்துவிட்டு 1914 ம் வருஷம் நவம்பர் 14-ந் தேதி காலஞ்சென்றார். கிரேட்பிரிட்டனில் ஜனங்கள் தாங்களாக இஷ்டப்பட்டு ராணுவத்தில் சேரும் முறை தான் அனுசரிக்கப்பட்டு வருகிறது. 1912-ம் வருஷத்தில் இந்த முறை பலவழிகளில் திருத்தப்பட்டிருக்கிறது. அதன்படியுள்ள பிரிட்டிஷாரின் ராணுவ பலத்தைப்பற்றிச் சொல்வோம்.

பிரிட்டிஷாரின் சைன்ய பலம் மூன்று வகைப்படும். முதலாவது நிரந்தரமான சேனையும் அதைச் சேர்ந்த ரிஸர்வ் படைகளுமிருக் கின்றன. அவைகள் யுத்தம் ஆரம்பித்தவுடன் போர்க்களத்துக்கு அனுப்பப்படும். இரண்டாவது, ஸ்பெஷல் ரிஸர்வ் என்ற படைகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. போர்க்களத்தில் சேனையில் நேரிடக் கூடிய சேதத்தை ஈடு செய்வதற்கு அந்த ஸ்பெஷல் ரிஸர்வ் என்ற படைகள் உபயோகிக்கப் படுகின்றன. மூன்றாவது டெரிடோரியல் படைகள் இருக்கின்றன. இவைகள் சமாதான காலத்தில் சிறிது ராணுவப்பயிற்சிபெற்று யுத்த காலத்தில் அந்தராணுவப்பயிற்சியைப் பூர்த்திசெய்து சொந்த தேசத்தைக் காத்துவருகின்றன. இந்த மூன்றுவகையான படைகளைப்பற்றி சில விவரங்கள் சொல்வோம்.

பிரிட்டிஷாரின் நிரந்தரமான சேனை இரண்டு சரி பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பாதி கிரேட்பிரிட்டனிலும், மற்றொருபாதி குடி யேற்றநாடுகளிலும் வைக்கப்படுகின்றன. கிரேட்பிரிட்டனிலுள்ள சேனையின் மொத்தத் தொகை 125,209. இந்த சேனை ஆறு டிவி ஷன்களாகவும், ஒரு குதிரையாள டிவிஷனுகவும், சில பிரத்தியேக மான குதிரைப் படைகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. சற்றுக் குறைய அந்த தொகை கொண்ட மற்றொரு பாதி குடியேற்ற நாடு

களில் வைக்கப்பட் டிருக்கிறது. இந்தியாவில், 77,000 பேரும், மற்ற வெளிநாடுகளில் 45,000 பேரும் இருந்துவருகிறார்கள். இவர்க ளெல்லாரும் நிரந்தரமான சேனையைச் சேர்த்தவர்களாகும். அந்த சேனையில் சேர்கிறவன் மொத்தம் 12 வருஷம் ராணுவத்தில் வேலை பார்ப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டு சம்பளம் பெற்றுக் கொள்கிறான். அவன் 7 வருஷம் சேனையில் வேலை பார்த்த பிறகு, சேனையிலிருந்து நீக்கப்பட்டு மிகுதியாயுள்ள 5 வரு ஷங்களும் ரிஸர்வ் படையைச் சேர்ந்தவனாகக் கருதப்படு கிறான். அதாவது சேனையிலுள்ள தருப்புகள் 7 வருஷமான பிறகு தங்கள் வீடுகளுக்குப் போய் விடும்படி அனுமதி கொடுக்கப் படுகிறார்கள். அவர்களின் பெயரும் விலாசமும் சேனையிலுள்ள ஜாப் தாவில் குறித்து வைக்கப்படுகின்றன. யுத்தந் தொடங்கினால் அவர் கள் சேனையில் சேரும்படி உத்தரவு செய்யப் படுவார்கள். இந்த மகா யுத்தம் ஆரம்பித்தபோது இவ்வாறு ரிஸர்வ் தருப்புகளா யிருப் பவர்களின் மொத்தத் தொகை 145,000. ஆகையால், நிரந்தரமான சேனை யுத்தகளத்துக்குப் புறப்படும்போது, 145,000 பேர்கொண்ட ரிஸர்வ் தருப்புகளையும் சேர்த்துக்கொண்டு செல்லும். இந்த ரிஸர்வ் தருப்புகள் சமாதானகாலத்தில் படைகளாகச் சேர்க்கப்படுவதில்லை. யுத்த காலத்தில்தான் அவர்கள் சேனையில் சேர்த்துக்கொள்ளப் படுகி றார்கள். அவர்கள் சமாதானகாலத்தில் வருஷத்துக்கு 12 தினங்கள் ராணுவப்பயிற்சி பெறுகிறார்கள். அந்த ரிஸர்வ் வகுப்பைச் சேர்ந்தவர் கள் அவ்வாறு 5 வருஷ காலங்கழித்த பிறகு எவ்வித நிர்ப்பந்தத்துக் கும் உட்படுவதில்லை. ஆனால்அவர்களில் சிலர் பின்னும் தான்கு வரு ஷம் ரிஸர்வ் தருப்புகளாக இருக்க சம்மதப்பட்டால் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

இவைகளைத் தவிர, ஸ்பெஷல் ரிஸர்வ் என்றபடைகள் சேர்க்கப் படுகின்றன. இவைகள் நிரந்தரமானசேனையைப் போலவே சேர்க் கப்படுகின்றன. ஆனால் ஸ்பெஷல் ரிஸர்வ் என்ற படையில் சேர்கிற வர்கள் ஆறு வருஷகாலம் வேலைபார்த்தால் போதுமானது; மேலும், அந்த ஆறு வருஷ காலத்தில், முதல் ஆறுமாசம் இடைவிடாமல் ராணுவப் பயிற்சி பெற்ற பிறகு, ஒவ்வொரு வருஷமும் ஒரு மாசந் தான் படையில் சேரும்படி உத்தரவு செய்யப்படுகிறார்கள். இந்த நிபந்தனைகள் நிரந்தர சேனையைப்போல் அவ்வளவு கடுமையா

யில்லாததால், அந்த படைகளில் அநேகம்பேர் சேர்கிறார்கள். அந்த படையில் சேர்கிறவர்களில் அநேகம் பேர்களுக்கு ராணுவத்தொழிலில் பிரியம் உண்டாகி நிரந்தரமான சேனையில் சேர்ந்துகொள்கிறார்கள். இந்த ஸ்பெஷல் ரிஸர்வ் என்ற படைகளை ஸ்தாபிப்பதின் நோக்கம் என்னவென்றால் நிரந்தரமான சேனைக்குத்தேவையாயுள்ள துருப்புகள் அதிக சிரமமின்றி தயார் செய்யப்படுவதாகும். போர்க்களத்தில் சண்டை செய்கிற பட்டாளங்கள் சேதமடைந்து தொகையில் குறைவு பட்டால், ஸ்பெஷல் ரிஸர்வ் என்ற படைகளிலிருந்து துருப்புகளை அனுப்பி அந்த தொகையை பூர்த்தி செய்கிறார்கள்.

1913-ம் வருஷத்தில். இந்த ஸ்பெஷல் ரிஸர்வ் படைகளிலுள்ள துருப்புகளின் மொத்தத் தொகை 61,000. ஸ்பெஷல் ரிஸர்விலுள்ள வைகளெல்லாம் காலாட்படைகளேயாகும்.

முற்காலத்தில் ராஜ்யத்தில் சொத்துக்களை அனுபவிக்கும் ஜனங்கள் இவ்வளவு ஆட்களையும் குதிரைகளையும் ராணுவத்துக்கு உதவ வேண்டுமென்ற கடமை ஏற்பட்டிருந்தது. இதைப்பற்றி3-ம்பாகத்தில் 284-ம்பக்கத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. 1757-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் அந்த முறைவிட்டுவிடப்பட்டு, ஒவ்வொரு தாலுக்காவும் மொத்தம் இவ்வளவு படைகளைச் சேர்க்கவேண்டுமென்ற விதி ஏற்படுத்தப்பட்டது. தேசத்துக்குச் சத்துருக்களால் ஆபத்து நேரிடும்போது, அவ்வாறு ஒவ்வொரு தாலுக்காவிலும் சில படைகள் சேர்க்கப்பட வேண்டுமென்று சட்டம் விதிக்கப்பட்டது. ஒவ்வொரு தாலுக்காவிலும், அங்குள்ள ஜனங்களிலிருந்து, தேவையான துருப்புகளும் தளவாடங்களும் சேர்க்கப்பட்டன. தேசத்துக்கு ஆபத்து நேரிடும்போதுதான், அவ்வாறு ஜனங்களிலிருந்து சிலர் போறுக்கியெடுக்கப் பட்டார்கள். அவர்கள் ராணுவத்தில் உடனே யிற்சி பெற்று யுத்த களத்துக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் தேசத்துச் சட்டப்படி, யுத்த காலத்தில் ராணுவத்தில் ஊழியஞ்செய்யக் கடமைப்பட் டிருந்தார்கள். ஆனல் அவர்கள் தங்கள் தேசத்துக்குள்ளே யிருந்து காவல் செய்யத்தான் கடமைப்பட் டிருந்தார்கள். பிறகு யுத்தங்கள் அநேகமாய் வெளிநாடுகளில் நடைபெற்றபடியால் ஜனங்கள் வெளிநாடுகளுக்கும் சென்று சண்டைசெய்யும் வழக்கம் உண்டாயிற்று. இந்த சட்டத்தின் உதவியினல் பிரிட்டிஷார் தென்னப்பிரிக்காவில் நடந்த போர் யுத்தம் வரையில் தங்கள் சத்துருக்

களை எதிர்த்து வந்தார்கள். அதன் பிறகு அந்த சட்டம் நீக்கப் பட்டு, மேலே சொல்லப்பட்டபடி ஸ்பெஷல் ரிஸர்வ் என்றபடைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த படைகளில் சேர்கிறவன் சட்டத்தின் படி எவ்வித நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாவதில்லை, ஜனங்கள் நிரந்தர மான சேணியில் சேர்வதைப்போல, ஸ்பெஷல் ரிஸர்வ் என்ற படை யில் சேர்ந்துகொள்கிறார்கள். இந்த ஸ்பெஷல் ரிஸர்வ் படைகள், நிரந் தர சேணிபைப்போல, அந்திய காடுகளில்சென்று யுத்தஞ் செய்யக் கடமைப்பட் டிருக்கின்றன.

ஆனல் இவைகளைவிட முக்கியமானது டெரிடோரியல் படைக ளாகும். அவைகள் சேணிக்கு வேண்டிய சகல அமிசங்களிலும் பூர்த்தி பெற்றிருக்கின்றன. இந்தப் படைகளைச்சேர்ந்தவர்களெல் லாரும் தாங்களாக இஷ்டப்பட்டு ராணுவப் பயிற்சி பெறுவதற்கு முன் வந்தவர்களாகும். யுத்த காலத்தில் வாலண்டியர்களைச் சேர்க் கும் வழக்கம் இங்கிலாந்தில் வெகு காலமாயிருந்து வரு கிறது. தேசத்துக்குப் பெரிய ஆபத்து நேர்ந்த காலங்களில் ஜனங்கள் தாங்களாகவே சேணியில் சேர்ந்து யுத்த களத்துக் குப் போக முன் வந்தார்கள். நெப்போலியன் காலத்தில், நான்கு லக்ஷம் ஜனங்கள் அவ்வாறு வாலண்டியர்களாக முன் வந்தார்கள். இங்கிலாந்து பெரிய யுத்தங்களில் இறங்கினபோதெல்லாம், வாலண் டியராக முன் வந்த ஜனங்களை படைகளாகச் சேர்க்கும்படி கவர்ன் மெண்டு ஒவ்வொரு ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகாரங் கொடுத்தார்கள். ஆனல் ஜில்லா அதிகாரிகள் எவ்வித ஒழுங்கு மில்லாமல் தங்கள் இஷ்டப்படி படைகளைச் சேர்த்து வந்தார்கள். இங்கிலாந்தின் கடற்கரையிலுள்ள ஜில்லாக்களில் காலாட்படை கள் சேர்க்கப்பட்டன; ஆனல் கடற்கரையில் தான் கோட் டைகள் கட்டப்பட் டிருப்பதால், அந்த கோட்டைகளைக் காப் பதற்கு பீரங்கிப் படைகளே அவசியமானவை. மத்தியப் பிர தேசத்திலுள்ள ஜில்லாக்களில் கோட்டைகளில்லை யாயினும் அங்குதான் பீரங்கிப் படைகள் சேர்க்கப்பட்டன. இவ்வாறு ஒழுங்கினமா யிருந்த வாலண்டியர் படைகள் 1912-ம் வருஷத்தில் ஒழுங்கு செய்யப்பட்டன. ஒவ்வொரு ஜில்லாவிலும் சமாதான காலத்திலும் கூட, வாலண்டியர்களைச் சேர்த்து ராணுவத்தில் பழக் கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. சேணியிலிருக்கும்படியான

படை ...ப்போலவே, சகல படைகளும் வாலண்டியர்களைக்கொண்டு சேர்க்கப்பட்டன. இத்தவாலண்டியர் படைகள் இப்போதுடெரிடோரியல் படைகளென்று சொல்லப்படுகின்றன. டெரிடோரியல் படையைச் சேர்ந்தவர்கள் நான்குவருஷங்கள் ராணுவப் பயிற்சி பெறுவதாக ஒப்பந்தஞ்செய்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் ஒருமுறை அவர்களெல்லாரும் படை ளாகச்சேர்க்கப்பட்டு 15 தினங்கள் ராணுவப் பயிற்சி பெறுகிறார்கள். அந்தந்த தாலுக்காவிலுள்ள வாலண்டியர்கள் சாதாரண காலங்களில் தங்களுக்குள்ளே பற்பலசங்கங்களை ஸ்தாபித்து அவைகளில் ஒருவரோடொருவர் பழகிவருவதால், அவர்களுக்குள் ராணுவ உணர்ச்சியும் கட்டுப்பாடும் வளர்ந்துவருகின்றன. மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களில், ஜனங்கள் ராணுவப் பயிற்சிபெற்றுபிறகு பழையவாழ்க்கைக்குத்திரும்பும்போது, ஒருவரோடொருவர் அவ்வளவு நெருக்கமாய்ப் பழகி கூட்டுறவை விருத்தி செய்வதில்லை. ஆகையால் பிரிட்டிஷ் டெரிடோரியல் படையைச் சேர்ந்தவர்கள் சொற்ப ராணுவப் பயிற்சி பெற்றபோதிலும், மற்ற காலங்களில் ராணுவ உணர்ச்சியை மறந்து விடாமலிருக்கிறார்கள், அவர்கள் நான்கு வருஷகாலமான பிறகு மறுமுறை அந்தபடைகளில் சேர்ந்துகொள்ளலாம். அல்லது முற்றிலும் விலகிக்கொள்ளலாம். இந்த டெரிடோரியல் படைகளைச்சேர்ந்தவர்கள் தங்கள் தேசத்துக்குள்ளே யிருந்து காவல் செய்வதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஆனல் அவர்களில் சிலர் வெளி நாடுகளில் ஊழியஞ்செய்ய சம்மதங்கொடுத்திருக்கிறார்கள். 1913-ம் வருஷத்தில், டெரிடோரியல் படையைச் சேர்ந்தவர்களின் மொத்த தொகை 2,46,000. அவர்களில் 19,000 பேர் வெளி நாடுகளுக்குச் செல்லச் சம்மதித்திருந்தார்கள்.

நிரந்தரமான சேனையைத் தவிர மற்ற இரண்டு ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களின் தொகை ஒவ்வொரு வருஷமும் அதிகப்பட்டும் குறைவுபட்டும் மாறிக்கொண்டு வருகிறது. ஏனெனில், அந்த ராணுவ வகுப்புகளில் சேர்ந்துகொள்வதும் கொள்ளாததும் ஜனங்களின்விருப்பத்தையும் மனநிலைமையும் பற்றியதாயிருக்கிறது. நிரந்தரமான சேனைமட்டும் இவ்வளவு தொகை கொண்டதாயிருக்க வேண்டுமென்று திட்டஞ் செய்யப்படுகிறது. இந்த 3 வகைப் படைகளைத்தவிர, வேறொருவகையான ராணுவ வகுப்பாரிருக்கிறார்

கள். ராணுவத்தில் ஊழியஞ் செய்தபிறகு பற்பல [illegible] ங்க ளால் நீங்கிவிட்டவர்க ளெல்லாரும் ஜாப்தாவில் குறித்து வை[illegible]க்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களின் மொத்த தொகை 215,000. இவர் களில் சிலர் யுத்த காலத்தில் வெளிகாடுகளுக்குச் செல்வதாகவும், சிலர் தங்கள் தேசத்துக்குள்ளேயே ஊழியஞ் செய்வதாகவும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்.

இப்போது நடக்கும் மகா யுத்தத்தை சாதகமான முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அந்த படைகள் போதுமானவையல்ல வென் பதில் சந்தேகமில்லை. ஆகையால், இந்த மகா யுத்தம் தொடங்கிய வுடன் பிரிட்டிஷ் ஜனங்கள் ராணுவத்தில் சேர முன் வந்தார்கள். அவர்களிலெல்லாரும் ராணுவத்தில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறார்கள். லக்ஷக்கணக்கான ஜனங்கள் போர்க்களத்துக்குப் போகத் தயாராயி ருக்கிறார்கள் இப்போதுள்ள பிரிட்டிஷ் ஜனங்கள் தங்கள்முன்னோர் கள் பலவித ஆபத்தினின்றும் காத்துவைத்த தேசத்தை யல்லவோ இப்போது அனுபவிக்கிறார்கள். ஆகையால் இப்போதுள்ள பிரிட் டிஷார் தங்களுக்குப் பின்னுமுள்ள சந்ததிகளுக்கு, தாய் நாட்டின் பூரணமும் கௌரவமும் குறைவுபடாமல் காத்து அதை ஒப்புவிக்க வேண்டிய கடமையை உற்சாகமாய் ஏற்றுக்கொள்கிறார்கள். தங்கள் தாய் நாட்டின் கௌரவத்தையும் சுதந்தரத்தையும் காக்க முன் வராமல் தயங்கும் ஜாதியருமுண்டோ ?

பிரிட்டிஷ் துருப்புகளின் குணாதிசயங்களைப்பற்றி அதிக மாச்சொல்லத் தேவையில்லை. பிரஞ்சு சேனை நெப்போலியன் காலத்திலும் ஜெர்மன் சேனை பிஸ்மார்க் காலத்திலும் சிறந்த வெற் றிகளை அடைந்ததுபோல பிரிட்டிஷ் சேனை யதாதிபெறவில்லை யாயினும், அவ்வங்கிய தேசத்துச்சேனைகள் சிலகாலங்களில் பயங் கரமான தோல்விகளை அடைந்ததுபோல பிரிட்டிஷ் சேனை அடைய வில்லை யென்றும் சொல்லவேண்டும். பெரிய வெற்றிகளும் தோல்வி களும் பிரிட்டிஷார் அடையாததற்குக் காரணம் அவர்கள் பெரிய ஐரோப்பிய யுத்தங்களில் அடிக்கடி இழுக்கப்படாததேயாகும். அவர் கள் நூதனகாலத்து ராணுவ முறைகளின்படி வல்லாசகளுடன் பெரிய யுத்தஞ்செய்பவில்லையாயினும், அவர்கள் இதுவரையில் செய்ய நேர்ந்த சண்டைகளிலெல்லாம் தங்கள் வன்மையைக்காட்டி யிருக் கிறார்கள். பிரிட்டிஷ் துருப்புகளின் தேக வன்மைக்கும் மனோதிட

னுக்கும் அத்தாக்ஷியாக அவர்களால் அடக்கியாளப்படுகிற குடியேற்ற நாடுகளைச் சொல்லலாம். அவர்கள் உலகத்தில் நாலா பக்கங்களிலும் சமயம்வாய்த்தபோது சண்டை செய்துதங்கள் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பிரிட்டிஷார் அதிக யுக்தியோசனைகளைச் செய்யக்கூடியவர்களல்லவாயினும் மிகுந்த மனோதிடனும் விடாமுயற்சியுங் கொண்டவர்கள். தங்களுக்கிடப்பட்ட வேலையை துணிவாய்ச் செய்து முடிக்கும் உறுதியைக் கொண்டவர்கள். சில ஐரோப்பிய ஜாதியரைப்போல், அவர்கள் தங்கள் சத்துருக்களைக் கண்டவுடன் வீராவேசங் கொள்கிறதில்லையாயினும், எப்படிப்பட்ட ஆபத்துக்கும் அஞ்சாமல நிற்கும் குணமுடையவர்கள். போர்க்களத்தின் உக்கிரமான நெருப்பையும் எதிர்பாராத ஆபத்துகளையும் தோல்விகளையுங் கண்டு சற்றுங் கலக்கமடையாமல் நிதான புத்தியுடன் யோசனை செய்து சண்டையை நடத்துவதே அவர்களின் குணவிசேஷமாகச் சொல்லவேண்டும். இவ்விஷயத்தில் அவர்களை ருஷியருக்கு ஒப்பிடலாம்.

இந்த மகா யுத்தம் தொடங்கும் வரையில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்குவித், யுத்த மந்திரி ஸ்தானத்தையும் வகித்திருந்தார். யுத்தம்தொடங்கிய பிறகு அந்த ஸ்தானத்துக்குத் தகுந்தவரை நியமிக்கவேண்டி வந்தது. ஈஜிப்ட்டில் பிரிட்டிஷ் தலைமை அதிகாரியாயிருந்த லார்ட் கிட்சனர் இங்கிலாந்துக்கு வந்திருந்து, யுத்தம் தொடங்கும் சமயத்தில் ஈஜிப்ட்டுக்குத் திரும்பிப் போகப் புறப்பட்டார். அப்போது யுத்தம் ஆரம்பித்துவிடவே கல்லவேளையாய் அவர் பிரயாணம் நிறுத்தப்பட்டு பிரிட்டிஷ் யுத்த மந்திரியாக அவர் நியமிக்கப்பட்டார். இப்போதுள்ள பிரிட்டிஷ் தளகர்த்தர்களுக்குள் மிகச்சிறந்தவரென்று அவரை பிரிட்டிஷ் ஜனங்களனைவரும் மதிக்கிறார்கள். 1870 ம் வருஷத்தில் நடந்த பிரஞ்சு ஜெர்மானிய யுத்தத்தில் லார்ட் கிட்சனர்பிரஞ்சு சேனையில் வாலண்டியராகச் சேர்ந்து சண்டை செய்தார். பிறகு அவர் ஈஜிப்ட்டில் அதிக சண்டைகளைச் செய்து பிரிட்டிஷ் ராஜ்யத்தின் மதிப்பை உயர்த்தினார். அந்நாட்டில் மதாவேசங்கொண்டு கலகஞ்செய்ததேசவாசிகளை கடுமையாய் அடக்கி அவர் தப்பிரதத்தையும் சாமர்த்தியத்தையுங் காட்டினார். தென்னப்பிரிக்காவில் நடந்த போவர் யுத்தத்தை அவர் திருப்திகரமான முடிவுக்குக் கொண்டு வந்தபோது மிகவும்

புகழப்பட்டார். அவர் இந்தியாவில் சேனாதிபதியாயிருந்து இந்திய ராணுவத்தை அநேக வழிகளில் சீர்ப்படுத்தினர். ராணுவத்துக்குச் சாதகமான ரயில் பாதைகளை இந்தியாவில் போடச் செய்தார். பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளாகிய ஆஸ்டிரேலியாவுக்கும் நியூஜீலண்டுக்கும் அவர் சில வருஷங்களுக்கு முன் சென்ற போது அங்கு புதிய ராணுவத்தை நிர்மாணிக்க யோசனை சொன்னர். 1911-ம் வருஷத்திலிருந்து அவர் ஈஜிப்ட்டில் தலைமை அதிகாரியாயிருந்து அந்நாட்டு நிர்வாகத்தில் அநேக திருத்தங்களைச் செய்தார். அவருக்கிருக்கிற ராணுவ அனுபோகமும் திறமையும் வேறெந்த பிரிட்டிஷ் தளகர்த்தருக்கு மில்லையென்று சொல்லலாம். யுத்தந் தொடங்கியவுடன் அவர் போர்க்களத்தில் சேனையை செலுத்தவில்லை யாயினும், அதனினும் முக்கியமானதாகிய புதுசேனையைத் திரட்டும் வேலையை அவர் ஏற்றுக்கொண்டார். பிரான்ஸில் சண்டை செய்யும் பிரிட்டிஷ் சேனையை ஆதரிக்க வேண்டிய வர்கள் பிரிட்டிஷ் ஜனங்களேயாகும். பிரிட்டிஷ் சேனைக்குத் தேவையான யுத்த தளவாடங்களையும் புதிய படைகளையும் தாமஸ மின்றி சேகரித்து அனுப்பி, பிரிட்டிஷ் சேனையின் வன்மையும் திறமையும் நாளுக்கு நாள் அதிகரிக்கும்படிச் செய்யும் பொறுப்பை லார்ட் கிட்சனரைப்போன்ற சாமர்த்தியசாலிகளே நிறைவேற்ற முடியும். பிரிட்டிஷ் ஜாதியாரனைவரும் இந்த மகா யுத்தத்தில் பிரவேசித்த பின், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அபாரமான வன்மையையெல்லாம் ராணுவத்தில் ஒன்றுபட்டு திரட்டி போர்க்களத்துக்கு அனுப்பிக்கொண் டிருக்கிறவர் லார்ட்கிட்சனர் என்பதை நாம் அறியவேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு நேரிட்டிருக்கிற இந்த நெருக்கடியான சமயத்தில் ராணுவத் திறமையும் அனுபோகமும்வாய்ந்த அப்படிப்பட்டவர் கிடைத்திருப் பது பிரிட்டிஷாரின் அதிர்ஷ்டவசமென்றே நினைக்கவேண்டும். மகா யுத்தம் தொடங்கியபோது லார்ட் கிட்சனருக்கு 64 வயதாயிற்று. 1870-ம் வருஷம் நடந்த பிரஞ்சு-ஜெர்மானிய யுத்தத்தில் கவுண்ட் வான்மோட்கி 70-ம் வயதில் ஜெர்மன் சேனையை செலுத்தினர்.

பிரஞ்சு சேனை.

பிரஞ்சு சேனையின் திறமையைப் பற்றி அதிகமாய் எழுதுவதைவிட, அது பிரஸித்திபெற்ற நெப்போலியன் காலத்தில் அழி

யாப் புகழ்பெற்று ஐரோப்பிய ராஜ்யங்களுக்கெல்லாம் அச்சத்தை உண்டுபண்ணிய தென்பதை இங்கு ஞாபகப்படுத்துவதே போதுமானது. ஆனல் நெப்போலியன் காலத்துக்குப் பிறகு பிரான்ஸ் தேசம் உள்காட்டு விவகாரங்களில் கலக்கமுற்று அந்நிய ராஜ்யங்களின் பகைமையைச் சம்பாதித்து பலவித துன்பங்களுக்கு உள்ளாகியபடியால், பொதுவாய் ராணுவத்தொழிலில் அலக்ஷியமும் அருவருப்பும் அத்தேசத்தில் உண்டாயின. பிரான்ஸ் தேசத்தின் நிலைமை வரவர கெடுதலடைந்து, ஜனங்கள் சுய சுகத்திலும் சுக வாழ்க்கையிலும் பற்றுகொண்டு தேச விருத்தியில் கவலேயற் றிருந்தார்கள். அரசர்களின் பேராசைக்கிணங்கி ஜனங்கள் ராணுவத்தில் உயிர் துறக்கக்கூடாதென்றும், ஜனங்களனைவரும் பொருள் சேர்ப்பதிலேயே கவனமா யிருக்கவேண்டு மென்றும், பலவாருன அபிப்பிராயங்கள் பொது ஜனங்களைக் கலக்கிவந்தன. ஆகையால் ஜனங்கள் தேசத்தின் க்ஷேமத்தைவிட சொந்த நன்மையையே பெரிதாகக்கருதி ராணுவத்தை அலக்ஷியஞ்செய்து வந்தார்கள். நெப்போலியனுடைய காலத்துக்குப் பிறகு ஜனங்கள் ராணுவத்தில் தங்களாக இஷ்டப்பட்டுச் சேரவேண்டுமே பொழிய எவ்வித நிர்ப்பந்தத்துக்கும் உட்படக்கூடாதென்று சட்டம் விதித்தார்கள். ராணுவத்தில் ஜனங்கள் போதுமானபடி சேராததைக் கண்டு பிரஞ்சு கவர்ன்மெண்டு ஜனங்களைக் கட்டாயப்படுத்தினபோதிலும் ராணுவத்தில் ஊழியஞ் செய்வதற்குப் பதிலாக அபராதப் பணம் செலுத்தலா மென்ற முறையும் அனுசரிக்கப்பட்டது. செல்வவான்கள் பணத்தைக் கொடுத்து தங்கள் கடமையி னின்றும் தப்பித்துக் கொண்டார்கள். அவ்வாறு பிரான்ஸிலுள்ள உயர்வகுப்பார் ராணுவத்தினின்றும் விலகிக்கொண்டதால் ராணுவத்தைப்பற்றி மிகவும் இளப்பமான அபிப்பிராயம் பரவத் தொடங்கியது. ஜனங்கள் தங்கள் தேசத்துக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தவிர்க்க முயன்றபோது, ஜாதிய கௌரவமும் தாழ்ந்துபோயிற்று. ராஜாங்க வாழ்க்கைக்கு ஜீவாதாரமாயுள்ள ஜாதிய உணர்ச்சியும் தேசாபிமானமும் குறைந்துவிடவே, தேசத்தின் வன்மையும் பெருமையும் நாளுக்கு நாள் குறைந்துவந்தன. 1870-ம் வருஷம் வரையில் பிரான்ஸினுடைய நிலைமை அவ்வாறிருந்தது. அவ்வருஷம் கடந்த பிரஞ்சு ஜெர்மானிய யுத்தத்தில் பிரஞ்சு சேனை அதி சீக்கிரத்தில் முறியடிக்கப்பட்டதைக் கண்டு சிலர் ஆச்ச

ரியப்பட்டார்கள். உண்மையில் பிரஞ்சுசேனை அவ்வளவு காலமாவது யுத்தஞ் செய்ததே யென்று ஆச்சரியப்படல் தகும்.

அந்த யுத்தத்தில் கோர்ந்த தோல்விகள் பிரஞ்சு ஜனங்களின் மனதைச் சுடவே அவர்களுடைய நுட்பமான உணர்ச்சிகளெல்லாம் அதிக ரோஷத்துடன் எழுந்தன. அவ்வாறு விழித்துக்கொண்ட ஜனங்கள் யுத்தம் முடிந்த மறுவருஷமே ராணுவப்பதிவு சட்டத்தை விதித்தார்கள். பூர்வீகப் பெருமையும் பிரதாபமும் பிரஞ்சுக்காரரின் மனதில் உதித்து ஜெர்மானியரால் கோர்ந்த அபவாதத்தை எவ்வாறுயினும் நீக்குவதென்றே தீர்மானங் கொண்டார்கள். பிரான்ஸ் தேசம் ஐரோப்பாவில் கௌரவம் பொருந்திய ராஜ்யமாக நிலைத்திருக்க வேண்டுமானால், அயல் நாடாகிய ஜெர்மனியின் அளவற்ற ராணுவ பலத்தை எதிர்க்கக்கூடிய சக்தி பெற்றிருத்தல் அவசியமென்று விளங்கிற்று.

1893-ம் வருஷம் வரையில் பிரஞ்சு சேனை ஜெர்மன் சேனையை விடதொகையில் அதிகமாகவே இருந்து வந்தது. ஆனால் 1899-ம் வருஷத்திலிருந்து பிரஞ்சு சேனையின் பலம் குறைந்துபோய் ஜெர்மன் சேனை அதிவிரைவாய் விருத்தியடைந்தது. அதற்கு முக்கியகாரணம், பிரான்ஸில் ஜனத்தொகை குறைந்துவிடத் தொடங்கியதாகும். அதனால், பிரஞ்சு கவர்ன்மெண்டு, ருஷியா கிரேட்பிரிட்டன் இத்தேச சங்கங்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு தங்கள் நிலைமையை வலுப்படுத்த உத்தேசித்தார்கள். ஜெர்மனியின் ஜனத்தொகை 650 லக்ஷம் இருக்க, பிரான்ஸின் ஜனத் தொகை 375 லக்ஷந்தானுகிறது. ஆகையால் ஜெர்மானியருடன் திடீரென்று யுத்தம் செய்ய நேர்ந்தால் பிரஞ்சு சேனை தகுந்த பலம் பெற்றிருப்பதற்கு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ராணுவப் பதிவு சட்டப்படி, ஜனங்கள் நிரந்தரமான சேனையில் பயிற்சி பெறவேண்டிய காலம் 2 வருஷத்திலிருந்து 3 வருஷங்களாக உயர்த்தப் பட்டது. அதனால், நிரந்தரமான பிரஞ்சு சேனை தொகையில் அதிகரிக்கப்பட்டது. ஜனங்கள் ராணுவத்தில் 3 வருஷம் பயிற்சிபெற்ற பிறகு, 25 வருஷகாலம் ராணுவத்தில் ஊழியஞ்செய்யுங் கடமைக்கு உட்பட்டிருந்தார்கள். மற்றொரு வழியில் பிரஞ்சு ராணுவம் விருத்தி செய்யப்பட்டதைக் கவனிக்கவேண்டும். பிரஞ்சுஜெர்மானிய யுத்தத்துக்குப் பிறகு, பிரஞ்சு அதிகாரிகள் ஜெர்மன் ராணுவத்தை

மாதிரியாகக்கொண்டு அதன்படி தங்கள் ராணுவத்தை ஒழுங்கு படுத்தினர்கள். அதனல் பிரஞ்சுசேனையில் ஜாதியகௌரவமும் தன்னம்பிக்கையும் மனேதிடனும் போதுமானபடி விருத்தியாக மலிருந்தன. சில வருஷங்களுக்கு முன்னல், பிரஞ்சு ராணுவ அதிகாரிகள் தங்கள் சொந்த ராணுவ சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்து, பேர் போன போர் வீரராகிய நெப்போலியனுடைய ராணுவ முறைகளை சோதித்தறிந்தார்கள். நெப்போலியன் தம்முடைய அபூர்வ சக்தியைக்கொண்டு யோசனை செய்த மிகச்சிறந்த ராணுவ தந்திரங்களை பிரஞ்சு ராணுவ அதிகாரிகள் கற்று தங்கள் முறைகளை ஒழுங்கு படுத்தினர்கள். ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும் அவ்வாறே நெப்போலியனுடைய முறைகளைச் சோதித்து தங்களுக்குச் சௌகரியமான முறைகளை அனுசரித்தார்கள். சென்ற 15 வருஷங்களாக ஜெர்மானியர் வெளிப்படையாய்க் காட்டி வந்த விரோத உணர்ச்சியால், பிரஞ்சுக்காரரின் மனவுறுதியும் தேசாபிமானமும் இன்னும் பல மடங்கு அதிகமாய் தூண்டிவிடப்பட்டன. அவ்வாறு பிரஞ்சு ராணுவம் இந்த மகா யுத்தம் தொடங்கியபோது சிறந்த நிலைமையில் விருத்தியடைந்திருந்தது. மகா யுத்தம் தொடங்கியபோது, பிரான்ஸில் ராணுவப் பயிற்சி பெற்ற ஜனங்கள் மொத்தம் 40 லக்ஷம்பேரிருந்தார்கள். அவர்களைத் தவிர, ஐரோப்பிய ரல்லாத தருப்புகள் 70,000 பேரிருந்தார்கள். இவர்கள் ஆபிரிக்காவிலுள்ள பிரஞ்சு குடியேற்ற நாட்டு வாசிகளாவார்கள்.

இக்காலத்து ராணுவத்தின் வன்மை பொது ஜனங்களின் மனநிலைமையைப் பொருத்தியதா யிருப்பதால், பிரஞ்சு தருப்புகள் மிகுந்த ஜாதிய உணர்ச்சியும் மனேதிடனும் பெற்றிருப்பது அவர்களுக்கு அளவற்ற பலத்தை உண்டு பண்ணி யிருக்கிறது. இவைகளைவிட முக்கியமானதொரு விசேஷத்தைக் கவனிக்கவேண்டும். பிரஞ்சுக்காரர் புத்தி கூர்மையும் யோசனை சக்தியும் மிகுதியாய்ப் பெற்ற ஜாதியரென்று பிரபலம் வாய்ந்தவர்கள். பரம்பரையாய்ப் பெற்றுள்ள அந்த விசேஷ குணங்கள் அவர்களிடத்தில் இன்றைக்கும் பிரகாசிக்கின்றன. விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகளை அவர்களே முதன்முதலில் செய்யத் தொடங்கினர்கள். ஆகாய விமானங்களை விருத்திசெய்த பெருமை அவர்களையே சேர்ந்த தாகும்.

பொதுவாய் சால்திர ஆராய்ச்சிகளில் அநேக நூதனங்களை பிரஞ்சுக் காரர் பிடித்திருக்கிறார்கள்.

பிரஞ்சு சேனையிலுள்ள இலேசான பீரங்கிகள் மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணி இருக்கின்றன. அந்த இலேசான பீரங்கி 15 பவுண்ட் நிறையுள்ள ஷார்ப்பனல் குண்டுகளைச் சுடக்கூடியது. அது ஒரு நிமிஷத்துக்கு 25 குண்டுகள் வீதம் அதிவிரைவாய்ச் சுடக்கூடியது. புசற்காற்றடிப்பது போல குண்டுகளைத் தூ ரென்று பொழியும்படி அந்த பீரங்கிகள் சுடப்படுகின்றன. இது பிரஞ்சு சேனையில் அனுசரிக்கப்படும் நூதன முறையாகும். ஒரு மைல் சதுர அளவுகொண்ட பூமியில் அவ்வாறு குண்டுகளைப் பொழிந்து, ஒன்றரை நிமிஷத்துக்குள்ளாக அங்குள்ள சகல ஜீவன்களையும் அடியோடு நாசஞ்செய்துவிடலாம். அவ்வாறு விரைவாய்ச் சுடக்கூடிய பீரங்கிகள்தான் காலாட் படைகளுக்கு உதவிசெய்யத் தகுந்தவை. இந்த பிரஞ்சு பீரங்கியின் நூதனவன்மை ஜெர்மானியருக்குத் தெரிய வந்தது. அதற்கு சில மாதங்களுக்குமுன்னதாக ஜெர்மன் சேனையில் எல்லா பீரங்கிகளும் புத்த புதிதாய்ச் செய்துவைக்கப்பட்டன. அவ்வாறு ஏராளமான திரவியத்தைச் செலவுசெய்து ஜெர்மன் சேனையிலுள்ள சகல பீரங்கிகளும் புதுப்பிக்கப்பட்டவுடன், அவைகளைவிட பிரஞ்சு பீரங்கிகள் சிறந்தவை என்று ஜெர்மன் கவர்ன்மெண்டு அறிந்துகொண்டார்கள். அதன்பிறகு புதியே ஜெர்மன் பீரங்கிகளை யெல்லாம் விலக்கிவிட்டு, மறுமுறை ஏராளமான திரவியத்தைச்செலவிட சாத்தியப்படாமற் போகவே ஜெர்மன் கவர்ன்மெண்டு அந்த ஜெர்மன் பீரங்கிகளில் சில மாறுதல்களைச் செய்துதிருப்தி அடைய வேண்டி நேர்ந்தது.

பிரஞ்சு தருப்புகளின் குணதிசயங்கள் நெப்போலியன் காலத்தில் தெளிவாய்ப் புலப்பட்டன. அவர்கள் யுத்தத்தில் மிகுந்த பிரியங்கொண்டவர்களென்று நன்றூய்த் தெரிய வந்தது. ஆனால் யுத்தமென்றூல் வெற்றிமேல் வெற்றிபெறுவதென்றும் பூமியும் செல்வமும் சேர்ப்பதென்றும் கருதினார்கள். அவர்களுடைய நாட்பமான மன உணர்ச்சிகள் எளிதில்கொதிப்படைந்து, சத்துருக்களின் மேல் விழுந்து தாக்கும்போது மிகுந்த ஆத்திரமும் ஆவேசமும் காட்டினார்கள். ஆனால் அவர்களுடைய மனோவேகமும் திடனும் நீடித்திருக்க வில்லை. அவர்கள் தங்களுக்கு நேர்ந்த தோல்விகளை

யும் துரதிஷ்டங்களையும் கண்டு எளிதில் மனச்சோர்வடைந்தார்கள். போர்க்களத்தில் அவர்கள் காட்டும் சாமர்த்தியமும் யுக்தியோசனைகளும் வெகுவாய்ப் புகழப்பட்டிருக்கின்றன. 1870ம் வருஷத்து யுத்தத்தில் பிரஞ்சுக்காரர் தோல்வியடைந்த பிறகு அவர்களுடைய சுபாவமே சற்று மாறிபிருக்கிற தென்று தோன்றுகிறது. இந்த மகா யுத்தக் தொடங்கியபோது அவர்கள் வழக்கமாய்ச் செய்கிற ஆரவாரங்கள் காணப்படவில்லை. அவர்கள் போர்க்களத்தில் அவசரபுத்தியும் படபடப்பும் கொள்ளாமல் வியக்கத்தக்க பொறுமையும் நிதானபுத்தியும் காட்டி வருகிறார்கள். முன்பு நேர்ந்த கஷ்ட காலத்தில் அவர்கள் கற்றுக்கொண்ட பாடம் அதுவே யாகும். பிரஞ்சு ஜனங்கள் தங்கள் உற்றார் உறவினர் போர்க்களத்தில் சேதமாவதை அறியவேண்டுமென்று மிகுந்த கவலை கொண்டபோதிலும், சேத ஜாப்தா பிரசுரிக்கப் படாததைக்கண்டு கோபங் கொள்ளாமல் சகித்துவருகிறார்கள். இந்த மகா யுத்தத்தின் ஆரம்பத்தில் தங்கள் தலைநகராகிய பாரிஸை இழந்துவிட நேரிடும்போலிருந்தாலும் அவர்கள் அதைரியப் படாமல் பொறுமையாய் இருந்தார்கள். யுத்தத்தில் ஜயம் அபஜயம்இரண்டும் நேரிடக்கூடுமென்றும் நிதான புத்தியாலும் மன உறுதியாலுமே சாதகமான முடிவை எதிர் பார்க்கலா மென்றும் இப்போது பிரஞ்சுக்காரர் செவ்வையாய் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த உக்கிரத்துடன் சத்துருவின்மேல் விழுந்து தாக்கி போர்க்களத்தில் நேரக்கூடிய எதிர்பாராத ஆபத்துகளினின்றும் தங்கள் சாமர்த்தியத்தாலும் சமயோசிதமான யோசனைகளாலும் தப்பித்துக்கொண்டு வெற்றி அடையும் வழக்கம் இன்றைக்கும் அவர்களிடம் காணப்படுகிறது.

ஜர்மன் சேனை.

1870-ம் வருஷத்தில் ஜெர்மன் சேனை பிரான்வின்மீது படையெடுத்து பிரஞ்சு சேனையை அதிக சிக்கிரத்தில் முறியடித்தபோது, ஜெர்மானியரின் ராணுவ வன்மை பயங்கரமாய் விளங்கிற்று. ஜெர்மானியர் 1864, 1866, 1870, இவ்வருஷங்களில் மூன்று பெரிய யுத்தங்களை நடத்தி அவைகளில் அடைந்த சிறந்த வெற்றிகளால் அவர்கள் ராணுவ வன்மையில் பூரண நம்பிக்கை கொண்டு போர்க்குணத்தை மிகுதியும் வளர்த்துவந்தார்கள். ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஜனத்தொகையிலும் செல்வத்திலும் விரைவாய் விருத்தியடைந்

தற்கு ஏற்றபடி ராணுவ பலத்தையும் அதிகரித்து வந்தது. ஜெர்மானியர் பெரிய யுத்தஞ்செய்து 45 வருஷங்கள் சென்றபோதிலும் அந்த காலத்து வெற்றிகளை பக்தியுடன் ஞாபகத்தில் வைத்து, தங்கள் ஏகாதிபத்தியம் புகழ் பெற்று நிலைத்திருக்கவேண்டுமானால், ஒப்பற்ற ராணுவபலத்தைப் பெற்றிருக்கவேண்டுமென்று உறுதியாய் நம்பினர்கள். 1870-ம் வருஷத்திலிருந்து தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளுக்கும் தாய் தகப்பனர் போர்க்குணங்களை ஊட்டினர்கள். பிணியால் வருந்தும் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகள் தங்களுடைய மக்கள் யுத்த காலத்தில் ராணுவ ஊழியஞ் செய்யும் பாக்கியத்தைப் பெறவில்லையென்று வருந்தினர்கள். கல்விச் சாலைகளில் பால்ய மாணவர்கள் ராணுவத்தின் பெருமைகளைப்பற்றி போதிக்கப்பட்டார்கள். யௌவன பருவத்தில் ராணுவப் பதிவு சட்டப்படி ஜனங்கள் சேனையில் சேர்ந்து தாங்கள் தேசத்துக்குச் செய்யவேண்டிய கடமையை அனுபவத்தில் அறிந்து, தேசக் காப்புக்குத் தாங்கள் ஏற்றுக்கொள்கிற பொறுப்பை பெருமையாய்ப் பாராட்டினர்கள். ராஜாங்க விவகாரங்களிலும், ராணுவத்தின்வன்மையும் அவசியமும் வற்புறுத்திச் சொல்லப்பட்டன. தேசத்தின் தொழில்களும் தொழிற்சாலைகளும் ராணுவ முறைகளைப்பின்பற்றி மிகுந்தகட்டுப்பாடும் ஒழுங்கும் பெற்று விஸ்தாரமான ஏற்பாடுகளின்படி நடத்தப்பட்டன. ஆகையால், ஒவ்வொரு ஜெர்மானியனும் வாலிபத்திலிருந்து வார்த்திபம் வரையில் ராணுவ உணர்ச்சிகளுக்கு உட்பட்டு, தேசத்தின் சக்திமுழுவதையும் ஒன்றுப்த்திரட்டிவெளிப்படுத்துகிறராணுவமென்னும் கூட்டத்தில் தானும் ஓர் அங்கமென்று தெளிவாய் கற்பிக்கப்பட்டான். ஜனங்கள் தங்கள் கீழுள்ளவர்களை அதிகாரத்துடன் ஆளவும் தங்கள் மேலுள்ளவர்களின் அதிகாரத்துக்கு அடங்கியிருக்கவும், தங்களுக்குள் கற்றுக்கொண்டார்கள். கூட்டுறவுணர்ச்சிகளை உண்டுபண்ணுவதிலும் தாங்கள்ஏற்படுத்தியகட்டுப்பாடுகளுக்குத் தாங்களும் கட்டுப்பட்டு நடப்பதிலும் பழக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும், தாய்நாடென்பதோர் பெரிய யந்திரத்தை ஓட்டுவதற்காக ஏற்பட்டுள்ளதென்று நினைத்து காலங் கழித்தார்கள்.

ஜன சமூகமுழுவதும் அவ்வாறிருக்க, செல்வம் படைத்தவர்களும் உயர் வகுப்பினரும், தேசத்துத் தொழில்களிலெல்லாம் ராணுவ உத்தியோகமே மிகச் சிறந்ததென்று கருதினர்கள்,




ஜெர்மன் சக்ரவர்த்தி:—
பிரஷ்யன் கார்டஸ் படையைச்
சேர்ந்த ராணுவ உடை.



ஜெர்மன் சக்ரவர்த்தி:—ஹுஸார் என்ற
படையைச்சேர்ந்த உடை. இந்த உடை சக்ர
வர்த்திக்கு மிகப்பிரியமானது.



ஜெர்மன் சக்ரவர்த்தி:—மரணப்
படையைச்சேர்ந்த உடை. தலைப்
பாகையில் மண்டையோட்டின்
உருவமிருப்பதைக் கவனிக்கவும்.



ஜேர்மன் சக்ரவர்த்தி—உலான் படையைச்சேர்ந்த உடை. முன்னடியில் குதிரைமேலிருப்பவர்தான் சக்ரவர்த்தி.



ஜேர்மன் சக்ரவர்த்தி—போர்க்களத்து ராணுவ உடை. இப்படம் யுத்தம் ஆரம்பித்த பிறகு எடுக்கப்பட்டது. தேசாதிபதிக்குள்ள கவலை முகத்தில் தொனிக்கிறது.

ராணுவ உத்தியோகங்களுக்குள்ள அதிகாரமும்செல்வாக்கும் விசேஷமாய் மதிக்கப்பட்டன. அரசகுடும்பங்கள்பாரம்பரியமாய் சேனையில் அதிகாரஞ் செலுத்தி ராணுவ ஐதிகங்களுடன் விளங்குகின. "பிரஷ்யன் கார்ட்ஸ்" என்ற படைகளைப் போன்ற பிரஸித்தி பெற்ற படைகளிலுள்ள உத்தியோகங்கள் பூலோகத்துள்ள பிரபுக்களுக்கு உரியவை யென்று விசேஷமாகப் பாராட்டப்பட்டன. ஜன சமூகத்திலுள்ள உயர் வகுப்பினர் அதிகாரப்பிரியத்தால ராணுவ உத்தியோகங்களைநாடினர்களென்றால் கீழ்வகுப்பினர் அந்தஸ்துக்கு ஆசைப்பட்டு ராணுவத்தில் பிரியங்கொண்டார்கள். ராணுவத்தில் தலைமை வகித்து யுத்தநடவடிக்கைகளை யோசனைசெய்து நிறைவேற்றுவதில் ஜெர்மானியர் 45 வருஷங்களுக்கு முன் பிரபலம் பெற்றார்கள். நூதனகாலத்து சாஸ்திர விருத்திக்கும் ஞாகரீகத்துக்கும் ஏற்கும்படியாக ஜெர்மன் ராணுவநிபுணர்கள் புதியயுத்த தந்திரங்களை யோசனைசெய்துபிரபலப்படுத்தினர்கள். பிரஸித்திபெற்ற ராணுவ தந்திரியாக கவுண்ட்வான் மோட்கி, ஆஸ்டிரியா, பிரான்ஸ், ஆகிய இத்தேசத்துப் போர்க்களங்களில் யுத்த தந்திரங்களை நிறைவேற்றி வியக்கத்தக்க வெற்றிகளை அடைந்தார். போர் பெற்ற போர் வீரராகிய நெப்போலியனுடைய யுத்த தந்திரங்களை அவர் ஆராய்ந்தறிந்து, இக்காலத்து ரயில்பாதைகள் தந்திக்கம்பிகள் நெருப்பாயுதங்கள் முதலிய நூதனங்களின் முழுப்பலன்களையும் அடையும்படி யுத்ததந்திரங்களை அவர் புதியபழிகளில் திருத்தி அனுசரித்தார். நூதன தந்திரங்களை அவர் அனுசரித்ததோடு, தம்முடைய சேனாபதிகளுக்கும் அவைகளைச் செவ்வையாய் கற்பித்தார். நெப்போலியன் போர்க்களத்தில் தோல்வியடைந்த ஒரு சமயத்தில், தம்முடைய ராணுவ யோசனைகளை தம்முடைய சேனாபதிகள் தெளிவாய் அறிந்துகொள்ளாதது அதற்குக் காரணமென்றுசொன்னர். விஸ்தாரமான யுத்த மண்டல முழுவதிலும் நிறைவேற்றவேண்டிய யுத்த தந்திரத்தில் பற்பல அம்சங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. அவைகளின் நுட்பங்களை, பற்பல திசைகளில் செல்கிற சேனைத் தலைவர்கள் தெளிவாய் அறிந்துகொள்வது அவசியமாகும். 1870ம் வருஷத்தில் ஜெர்மன் சேனைத்தலைவர்கள் மிகுந்த தேர்ச்சிபெற்றவர்களாயிருந்தார்கள். ஒரு ராணுவ அதிகாரி ஒருராணுவ உத்தரவை எழுதிக்கொண்டிருக்கும்போது பாதியில் நிறுத்திவிட்டுப்போகும்

படி கேர்க்தால், மற்றொரு அதிகாரி அங்கு வந்து அந்த உத்தரவின் கருத்து சற்றும் பிசகாமல் அதைப் பூர்த்தியாய் எழுதி முடித்து விடுவாரென்று சொல்லப்பட்டது. கவுண்ட்வான் மோட்கி பழக்கி வைத்த சேணைத்தலைவர்கள் அவ்வளவு தேர்ச்சிபெற்றவர்களாயிருந் தார்கள். அவர் ஏற்படுத்திய ராணுவ சாஸ்திரமும் முறைகளுமே இன்றைக்கும் ஜெர்மனியில் சுற்பிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், அவருடைய காலத்துக்குப் பிறகு 20 வருஷங்களுக்குமேல் சென்று விட்டபடியால், ஜெர்மன் ராணுவ தந்திரிகளின் திறமையைப்பற்றி எதுவும் உறுதியாய்ச் சொல்வதற்கில்லை. இந்த மகா யுத்தத்தின் முடிவில்தான், அது வெளிப்படவேண்டும்.

ஜெர்மன் ராணுவ தந்திரிகள் எந்த நோக்கங்களுடன் தங்கள் சேணையை ஒழுங்கு படுத்தி இருக்கிறார்க ளென்று சொல்வோம். ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஐரோப்பிய யுத்தத்தில் இறங்கினால் இரண்டு கோடியிலுள்ள எல்லைகளில் ஏககாலத்தில் யுத்தம்நடத்தும் படி நேரிடுமென்று ராணுவதந்திரிகள் அறிந்தார்கள். கிழக்குக்கோடி யிலும் மேற்குக்கோடியிலும் யுத்தத்தை நடத்தி வெற்றி பெறுவ தற்கு ஜெர்மன் சேணை இரண்டு விசேஷங்களைப்பெற்றிருக்கவேண்டு மென்று அவர்கள் தீர்மானித்தார்கள். ஜெர்மன் சேணை ஏதாவதொரு சத்துருவைவிட தொகையில் அதிகமா யிருப்பதோடு திறமையிலும் மேம்பட்டதா யிருக்கவேண்டும். ஜெர்மன் சேணையின் பெரும்பாகத் தையும் ஒரு எல்லைப்புறத்தில் குவித்து ஆள்பலத்தால் அங்குள்ள சத் துருவை வென்று கிறபாகம் மற்றொரு எல்லைப் புறத்துக்குச்சென்று அங்குள்ளசத்துருவை முன்னேறவிடாமல் தன் திறமையால் தடுத்து நிற்கவேண்டும்; இதனால், ஜெர்மன் சேணை ஆள்பலத்தில் அதிகமா யிருக்கவேண்டுமென்றுநிச்சயிக்கப்பட்டது. சத்துருவைப்பக்கவாட் டில் வளைந்து தாக்கியுத்தத்தை தீர்மானமான முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்பதே ஜெர்மன் யுத்ததந்திரமென்று மூன்பு விளக்கி யிருக்கிறோம். ஜெர்மன் சேணை தன் ஆள்பலத்தால் ஒரு எல்லைப்புறத் தில் வெற்றிபெற்று தாமலமில்லாமல் மற்றொரு எல்லைப்புறத்துக்கு விரைந்துசென்று அங்குள்ள சத்துருவையும் முடிவில் வெல்லவேண் டும். ஆகையால் ஜெர்மன் சேணை அதிவிரைவாய் நடமாடக்கூடிய சக்தியை விசேஷமாய்ப் பெற்றிருக்கவேண்டுமென்று ராணுவ தந் திரிகள் நிச்சயித்தார்கள். படைகள் விரைவாய் நடமாடுவதென்

ரூல், விரைவாய் வழி நடந்துசெல்வதென்று அர்த்தமல்ல. லக்ஷக் கணக்கான துருப்புகள் பிரயாணஞ்செல்வதற்குத் தேவையான வசதிகளைத் தாமஸமின்றி ஒழுங்காய்ப் பெற்றுவருவதால் ஒருக்ஷணமும் வீண் செய்யாமல் அத் துருப்புகள் தங்கள் காரியத்தை நிறைவேற்றுவார்கள். ஆகாரம், வெடிமருந்து, ஆயுதங்கள் உடைகள் முதலிய சாமான்களெல்லாம் குறித்த காலத்திலும் இடத்திலும் போய்ச் சேரும்படியான ஏற்பாடுகளை முன்னதாகவே தக்கபடி யோசனை செய்து நிறைவேற்ற வேண்டும். ரயில் பாதைகள், ரோட்டுகள், வண்டிகள், முதலிய வசதிகள் பிரயாணத்துக்குத் தடையில்லாமல் முன்னதாகவே செய்து வைக்கப்பட வேண்டும். அவ்வித ஒழுங்கான ஏற்பாடுகளையுடைய சேனை அவைகளைப் பெறுத சேனையைவிட விரைவாய் நடமாடக்கூடியதென்பது நன்கு விளங்கும். தவிர, சேனைத் தலைவர்கள் தங்கள் சேனைக்குக் கொடுக்கவேண்டிய உத்தரவுகளைத் தாமஸமின்றி நிச்சயிப்பதற்கு போர்க்களத்தின் விவரங்கள் உடனுக்குடன் கிடைக்கவேண்டும். 1870-ம் வருஷத்தில் போர்க்களமொன்றில் சண்டை நடந்து முடிந்த மறுதினம் காலையிலேயே, அங்குசேதமான துருப்புகளின் தொகையும் செலவழிந்த வெடிமருந்தின் அளவும் சேனைத்தலைவருக்குக் கிடைத்துவிட்டதென்றால், சேனைத் தலைவர்கள் எவ்வளவு விரைவாயும் ஒழுங்காயும் சேனையைச்செலுத்த முடியுமென்று அறிந்துகொள்ளலாம். சண்டை நடந்து முடிந்தவுடன், அங்கு சேதமான துருப்புகள் குதிரைகள் இவைகளைப் பற்றியும் செலவான வெடிமருந்து, ஆயுதங்கள், வண்டிகள், கட்டிட சாமான்கள், முதலிய தளவாடங்கள் ஆகிய இவைகளைப்பற்றியும், விவரங்கள் கிடைக்க வேண்டியது அவசியமாகும். அதன் பிறகே, அந்த சேதங்கள் ஈடு செய்யப்பட்டு, போர்க்களத்திலுள்ள படைகள் முழு பலத்தையும் பெற்று மறுமுறை யுத்த நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குத் தகுதியாயிருக்கும். ஜெர்மன் சேனை சில வருஷங்களுக்கு முன் யுத்த பயிற்சிகளை நடத்தியபோது, ரயில் மார்க்கமாய் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த சில படைகள் குறித்த நிமிஷத்தில் எவ்விடத்தில் சென்றுகொண்டிருந்தனவென்று சேனைத்தலைவர் தம்முடைய சிப்பந்திகளைத் திடீரென்று கேட்க, அவர்கள் உடனே காகிதத்தில் கணக்குபோட்டு இன்ன இடத்தில் பிரயாணஞ்சென்று

கொண்டிருந்ததாகச் சொல்லி அந்த சமாசாரத்தின் உண்மையை தந்தி மூலமாய் அறிந்து உறுதிப்படுத்தினர்கள். சேனைத் தலைவர் தம்முடைய படைகளை ஓரிடத்திற்கு அனுப்புவதற்கு முன்னால் அங்கு அந்த படைகள் தங்கியிருப்பதற்கு இன்னின்ன வசதிகளிருக்கின்றன வென்பதை முன்னதாகத் தாமஸமின்றி அறிந்துகொள்வதும் அவசியமாகும். அவ்விதச் சமாசாரங்களை அறிவிப்பதற்கென்றே தபாற்பறியும் திறமையுள்ள படைகளிருக்கின்றன. அந்தப் படையைச் சேர்ந்தவன் தான் ஒருபோதும் பார்த்திராத ஓர் அந்நிய ஊரைப்பற்றி சகல விவரங்களையுந் தெரிந்து வைத்துக் கொண்டு அருப்பான். அவ்வாறு சேனைத்தலைவர்களின் கீழுள்ள உத்தியோகஸ்தர்களின் திறமையால், சேனை அதிவிரைவாய் நடமாடக் கூடிய சக்தியைப் பெறுகிறது. படைகளும் அவைகளுக்குவேண்டிய சாமான்களும் தாமஸமின்றி, போர்முனைக்குச்செல்வதற்காக, சமாதான காலத்திலேயே ஜெர்மானியர் தேவையான ரயில் பாதைகளைப் போட்டு தயார் செய்து வைத்திருக்கிறார்கள். ரயில் மார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்கிற படைகளுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் ரயில் பாதைகளில் முன்னதாகவே செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. தந்தி, தபால், ரயில்வே இந்த இலாக்கா சம்பந்தமான வேலைகளை ராணுவ அதிகாரிகள் யுத்த காலத்தில் ஏற்றுச் செய்ய வேண்டி வருமாகையால், அவர்கள் சமாதான காலத்திலே அந்த வேலைகளில் பழக்கி வைக்கப்படுகிறார்கள். இந்த மகா யுத்தந் தொடங்கியவுடன் இரண்டொரு மணிநேரத்துக்குள் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தினுள்ள ரயில்பாதைகளும் தந்தி ஆபீஸ்களும் ராணுவ அதிகாரிகளால் தாமஸமின்றி நிர்வகிக்கப் பட்டுவந்தன.

ஜெர்மன்படைகள் பாரிஸை நோக்கி பெல்ஜிய எல்லையிலிருந்து புறப்பட்டபோது அதிவிரைவாய்ப் போர்க்களத்தில் குவிந்து சென்றதை ஜெர்மன் ராணுவத்திறமைக்குத் திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். கிழக்குப் பிரஷ்யா மாகாணத்தில் ஜெர்மன் படைகள் லக்ஷக்கணக்காய் திடீரென்று தோன்றி ருஷியரை எதிர்த்ததையும் கவனிக்கலாம். தவிர, ஜெர்மன் தேச முழுவதையும் 48-மணி நேரத்தில் கடந்து, பிரஞ்சுஎல்லைக்கும் ருஷிய எல்லைக்கும் நிகழ்த்தபோதெல்லாம் ஜெர்மன்படைகள் மாறிமாறிச் செல்வதையும் இங்கு குறிப்பிடலாம்.

அவ்வாறு ஜெர்மன் சேனையைப் பற்றிய ஒவ்வொரு அற்பவிவரமும் மிகவும் கவனமாய் யே சனைசெய்யப்பட்டு கண்டிப்பான ஏற்பாடுகள் முன்னதாகச் செய்யப்பட்டிருப்பதால், ஜெர்மன்சேனையுத்த மண்டலத்தில் அதி வீரைவாய் நடமாடும் சக்தியை விசேஷமாய்ப் பெற்றிருக்கிறது. ஜெர்மன்துருப்புகள் அதிக பளுவைச் சுமந்து மற்றதேசத்தைத் துருப்புகளைவிட மெதுவாக வழிநடந்து சென்றாலும், அவர்கள் குறித்தகாலத்தில் பிரயாணஞ் செய்துமுடிக்கக்கூடியதூரம் வியக்கத் தக்கதாயிருக்கிறது. இதற்குக்காரணம் ஜெர்மன் சேனையிலுள்ள ஒழுங்கான ஏற்பாடுகளாகும். ஜெர்மன்சேனை பெற்றிருக்கிற ஏராளமான வன்மை துருப்புகளின் போர்த்திறமையால் உண்டானதல்ல; யுத்தகளத்தில் படைகளை சிரமமின்றி பொம்மைகள் போலக் கையாடுந் திறமையாலுண்டானதாகும்.

ஜெர்மன் ராணுவ யந்திரம் பிரமாண்ட மாயிருந்த போதிலும் மிகவும் உறுதியாயும் எளிதாகச் செலுத்தக் கூடியதாயும் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் சற்றும் சிக்கலின்றி லன்னமாயும் ஒழுங்காயும்வேலை செய்யும்படி வெகு ஜாக்கிரதையாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அநேக வருஷங்களாய் மேன்மேலும் யோசனை செய்து நிர்மாணிக்கப்பட்ட ராணுவத்தின் உறுதியும் கட்டுப்பாடும் சாமான்யமானதல்ல. திடீரென்று பெரிய யுத்தத்தை ஆரம்பித்து, மூழு பலத்தையும் போர்க் களத்தில் குவித்து, தேவையா யுள்ள சகல சௌகரியங்களையும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் பெற்று, போர் வீரர்க்கக் கூடியதாய் ஜெர்மன் சேனை தயார் செய்யப்பட்டிருப்பதுபோல வேறெந்த சேனையுமில்லை. இப்படிப்பட்ட ராணுவ யந்திரம் முறிந்துவிழ வேண்டுமானால், சிதறியடிக்கும்படியான தோல்விகளை அது அடைவதோடு தோல்விமேல் தோல்வியையும் அடைந்து வரவேண்டும். அநேக வருஷங்களாய் வலுப்படுத்தப்பட்ட ராணுவக் கட்டு குலைந்துபோக வேண்டுமானால், ராணுவத்தின் மனோபலமும் திரவியபலமும் இடைவிடாமல் நாளுக்குநாள் சோர்வடைந்து வண்ணமாயிருக்கவேண்டும்.

ஆயினும் ஜெர்மானியர் தங்கள் ராணுவ பல முழுவதும் பெரிய யந்திரம்போல ஒழுங்காய் நிறைந்த இடத்திலும் நேரத்திலும் வேலை செய்யவேண்டுமென்று அளவற்ற ஆசை கொண்டபோது வேறு சில முக்கியமான அமிசங்களைக் கவனிக்க வில்லை.

ஜெர்மானியர் தங்கள் ராணுவ பலத்தை முற்றிலும் யந்திரம் போலவே எண்ணிவிட்ட படியால் அதில் ஒரு முக்கிய குறை காணப்படுகிறது. ஜெர்மன் ராணுவத்திலுள்ள துருப்புகளும், உத்தியோகஸ்தர்களும் உயிரற்ற பொம்மைகள் போல நடக்கும்படி கற்பிக்கப்படுவதால், அவர்களின் புத்திகூர்மையும் யோசனை சக்தியும் விருத்தியடையாமலிருக்கின்றன. இந்த காலத்து யுத்தங்களில் எதிர்பாராத சம்பவங்களும் சங்கடங்களும் தோன்றுவதால் துருப்புகள் தங்கள் சுய புத்தியை உபயோகித்து யுக்தியால் வெற்றிபெற வேண்டுமென்று எல்லா நிபுணர்களும் ஜெர்மானியர்உள்பட ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் ஜெர்மன் ராணுவத்தில் சுய புத்தியின் உபயோகத்தை கற்பிக்காததோடு கண்டிப்பதும் வழக்கமாயிருக்கிறது. ஜெர்மன் ராணுவ உத்தியோகஸ்தர்கள் சிறந்த ராணுவப் பயிற்சி பெற்றபோதிலும் கல்விப்பயிற்சி பெற்றிருக்கவில்லை; தங்கள் வன்மையில் உறுதியான நம்பிக்கைபெற்றபோதிலும் அதை உபயோகிக்கும் புத்திகூர்மையைப்பெற்றிருக்கவில்லை. இந்த குறைகள் ஜெர்மன் ராணுவத்தை எவ்வளவுதூரம் பாதித்திருக்கின்றனவென்பது இந்த மகா யுத்தத்தில் தான் தெரியவேண்டும்.

நெப்போலியன் காலத்தில், லிக்னி என்ற ஸ்தலத்தில் பிரஞ்சுக்காரர் பிரஷ்யசேனையை முறியடித்துத் தரத்தியபோது அந்த பிரஷ்ய சேனை சகல கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு மனச் சோர்வடையாமல், வாடர்லூ என்ற ஸ்தலத்தை நோக்கி வழிநடந்து சென்று அங்கு சண்டை செய்துகொண்டிருந்த பிரிட்டிஷ் சேனைக்கு உதவி செய்த அது ஜெர்மன் துருப்புகளின் மன உறுதியைக் குறிப்பிடுகிறது. அவர்கள் தேக வன்மையிலும் புத்தி கூர்மையிலும் மற்ற வல்லரசுகளின் துருப்புகளைவிட சிறந்தவர்களல்ல வாயினும், தாங்கள் பெற்றுள்ள குணவிசேஷங்கள் முற்றிலும் உபயோகப்படுமாறு ராணுவ பயிற்சியில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஜெர்மானியர் ராணுவ ஒழுங்குகளுக்கு உற்சாகமாய்க் கீழ்ப்படிந்து நடப்பதும் ராணுவத்தைவிடச் சிறந்த தொழிலெதுவுமில்லையென்று எண்ணியிருப்பதும், தங்களைவிடச் சிறந்த வீரர்கள் ஒருவருமில்லையென்றுஉறுதியாய் நம்பியிருப்பதும் அவர்களுடைய மனோதிடனைப் பலமடங்கு வலுப்படுத்தியிருக்கின்றன. ஜெர்மானியரின் குணவிசேஷங்களைப் பற்றி என்ன சொன்னபோதிலும், ஜெர்மன் துருப்பு

களின் ராணுவத் திறமைக்கு அவைகளைக் காரணமாகக் கொள்ளக் கூடாது. ஜெர்மன் ராணுவத்திலுள்ள ஒவ்வொருவனும் தன்கடமையையும்மேலிலைகளையும் செவ்வையாய் உணர்ந்து அவைகளைச் செய்து முடிப்பதில் நன்றாய்ப் பழக்கப்பட்டிருப்பதும், ராணுவத்துக்குத் தேவையான விஷயங்களை முன்னதாகவே தீர்யோசனைசெய்து சகல ஏற்பாடுகளையும் மிகவும் ஒழுங்காய் நடத்துவதுமே ஜெர்மன் சேனையின் ஒப்பற்ற வன்மைக்குக் காரணங்களாகும்.

இந்த மகா யுத்தம் தொடங்கிபோது ஜெர்மானியில் ராணுவப் பயிற்சி பெற்றவர்களின் மொத்தத்தொகை 55-லக்ஷம். அதைத் தவிர 15-லக்ஷம் பேர் ராணுவப் பயிற்சி பெறுமல் திடகாத்திர மூள்ளவர்களா யிருந்தார்கள்.


ஜெர்மன் பீரங்கிகள்.

ஜெர்மன் பீரங்கிகளைப் பற்றிச் சில விவரங்களைச் சொல்லவேண்டும். பீரங்கிப்படைகளே இந்த காலத்து யுத்தங்களை தீர்மானமான முடிவுக்குக் கொண்டுவரக் கூடியவை யென்று ராணுவ நிபுணர்கள் சில வருஷங்களாய் அபிப்பிராயப்பட்டு வந்தார்கள். அதன்படியே இந்த மகா யுத்தத்தில் பீரங்கியின் வன்மையைப்பற்றி அடிக்கடி கேள்விப்பட்டு வருகிறோம்.


ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் பீரங்கியின் பிரதானம் முதன் முதலாகத் தெரியவந்தது. போர்ட் ஆர்தர் என்ற ஸ்தலத்திலுள்ள ருஷியக்கோட்டைகளை ஜப்பானியர் தங்கள் 11 அங்குல பீரங்கிகளால்-கடலிலிருந்தும் தரையிலிருந்தும் தகர்த்தார்கள். அந்தபீரங்கிகளைத்தாங்க முடியாமல் போர்ட் ஆர்தர் சரணமடைந்தது. அதன் பிறகு நடந்த முக்கி-பால்கன் யுத்தத்தில், பால்கன் நாடுகள் பிரஞ்சு பீரங்கிகளையும், துருக்கி ஜெர்மன் பீரங்கிகளையும் உபயோகித்தன. பிரஞ்சு பீரங்கிகளை சிறந்தவை யென்று தெரிய வந்தது. போர்க்களத்தில் உபயோகிக்கப் படுகிற இலேசான பீரங்கிகள் பிரான்ஸில் அநேக நூதன முறைகளில் விருத்தி செய்யப்பட்டன வென்று சொல்லி யிருக்கிறோம். ஜெர்மானியருடைய இலேசான பீரங்கிகள் மட்டமானவை யென்றும் சொல்லியிருக்கிறோம். ஆயினும் இந்த மகா யுத்தத்தில் ஜெர்மன் பீரங்கிகளின் வன்மையைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டு வருவானேன்? ஜெர்மன் பீரங்கிகளைப்பற்றிச் சொல்லப்படும்

கதைகள் அநேகமாய் ஜெர்மானியரின் மனோபாவத்தால் உண்டானவை. ஜெர்மானியர் தாங்கள் இன்னும் பெரிய பீரங்கிகளைச்செய்து வருகிறதாகவும் அவைகளை தகுந்த சமயங்களில் தான் உபயோகிக்கப்போவதாகவும் சொல்லி, அவைகளைப்பற்றி சில பயங்கரமான விவரங்களை அரைகுறையாய் வெளியிட்டு சத்துருக்களின் மனதில் பீதியை உண்டு பண்ணுவதற்காகவே அக்கதைகளை விஸ்தாரமாய்ப் பரவச்செய்கிறார்கள். ஆயினும் ஜெர்மன் பீரங்கிகளைப்பற்றி உயர்ந்த அபிப்பிராயம் பாவிப்பதற்குக் காரணமென்ன? இலேசான பீரங்கிகளில் ஜெர்மானியர் மட்டமான தினுசுகளை வைத்துக்கொண்டிருந்தபோதிலும், ஜெர்மனியிலுள்ள குரூப் என்னும் பேர்பெற்ற இரும்புச்சாலையில் பீரங்கிகள் உறுதியாயும் சிக்கிரமாயும் செய்யப்படுவதாலும், அவைகள் போர்க்களத்தில் ஏராளமாய்க் கொண்டுவரப்பட்டதாலும், அவைகளெல்லாவற்றிற்கும் தேவையான வெடிமருந்து தினேத்த இடத்திலும் நேரத்திலும் சிறிதும் தாமதமின்றி கொண்டு வரப்பட்டதாலும் ஜெர்மன் பீரங்கிகளின் வன்மை போர்க்களமெங்கும் வெளிப்பட்டது. யுத்தந்தொடங்கிய சிலமாதங்கள் அவ்வாறிருந்தாலும், அதன் பிறகு நேசப்படைகள் தங்களுக்குத் தேவையான பீரங்கிகளையும் குண்டுகளையும் செய்து முடித்தபடியால், ஜெர்மன் பீரங்கிகள் இப்போது அடக்கப்பட்டு வருகின்றன. பிரஞ்சு பீரங்கிகளின்திறமை இப்போது செவ்வையாய்ப் புலப்பட்டு வருகிறது. தவிர, ஜெர்மானியர் பெரிய முற்றுகைப்பீரங்கிகளில் உயர்ந்த தினுசுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.


அந்த தினுசுகளில் 11 அங்குல பீரங்கியும் 17 அங்குல பீரங்கியும் பேர் பெற்றவை. அந்த பீரங்கிகளைப் போர்க்களத்தில் இழுத்துச்செல்வதற்கு ஜெர்மானியர் செய்துள்ள உபாயங்களை விசேஷமானவை. ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தில், ஜப்பானியர் 11 அங்குல பீரங்கியை உபயோகித்தபோது, அவைகளைச் சிரமப்பட்டு ரயில் மார்க்கமாய்ப் போர்க்களத்துக்குக் கொண்டு வந்து, அங்கு வலுவாய்ப் போடப்பட்ட அஸ்திவாரத்தின்மேல் ஏற்றும்படி நேரிட்டது. அந்த முற்றுகைப் பீரங்கி பூமியில் அஸ்திவாரத்தின்மேல் பதிய வைத்துத்தான் சுடமுடியுமென்று கருதப்பட்டது. ஆனால் இந்த மகா யுத்தத்தில் ஜெர்மானியர் அந்த 11 அங்குல பீரங்கியை சாதாரண வண்டியில் ஏற்றி மோட்டார் வண்டியைக்கொண்டு




பே ர் மூனையில் ஜெர்மன் சக்ரவர்த்தியும் அவருடையசேனபதிகளும்.
(கையை நீட்டிக்கொண் டிருப்பவர்தான் சக்ரவர்த்தி)



பிரான்வில், ஜார்ஜ் சக்ரவர்த்தியும் அவருக்குப் பக்கத்தில் பெல்ஜிய அரசரும்
அவர்களுக்குப் பின்னல் பிரிட்டிஷ் இளவரசரும் இந்திய மன்னர்களும்,
தூரப்புகளைப் பார்வையிடுகிறார்கள்.



"ஜெப்பலின் என்ற ஆகாயக்கப்பல் 500 அடி நீளமுள்ளது; தஞ்சாவூர் பெரிய கோபுரம் 200 அடி உயரமுள்ளதென்பதை ஞாபகப்படுத்திக் கொண்டால் ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பலின் நீளம் செவ்வையாய் கவனத்துக்கு வரும்." (422-ம் பக்கம்.)



போர்க்களத்துக்கு இழுத்துச்சென்று, அதை ஆஸ்திவாரத்தின்மேல் ஏற்றுமல் வண்டியிலிருந்தபடியே சுடுகிறார்கள். அந்த வண்டியின் சக்கரங்களில் அகல பலகைகள் பாதங்களைப்போல அமைக்கப்பட்டிருப்பதால், அந்த சக்கரங்கள் ஏராளமான பளுவைச் சுமந்து மூரட்டுப் பாதைகளில் எளிதாய் உருண்டு சென்று, பீரங்கியைச் சுடும்போது உண்டாகிற அதிர்ச்சியைத் தாங்கி பூமியில் புதைந்து விடாமல் நிற்கின்றன. மேலும் குரூப் சாலையில் உருக்கப் படுகிற இரும்பு முதல்தரமானவை யென்று பேர் பெற்றிருக்கிறது. இந்த 11 அங்குல பீரங்கிகள்தான் லீஜ், நாமூர், ஆன்ட்வெர்ப் முதலிய கோட்டைகளைப்பொடிசெய்துவிட்டன. ஆனல் அவைகள் வெர்டன், மீல் முதலிய பிரஞ்சுக் கோட்டைகளைச் சேதஞ் செய்ய முடியவில்லை.

இந்த 11 அங்குல பீரங்கியின் படத்தை மூன்றும் பாகத்தில் 342-ம் பக்கத்தில் காணலாம். அதில் புதுமாதிரியான சக்கரங்களின் அமைப்பைப் பார்த்துக்கொள்ளலாம். இந்த 11 அங்குல பீரங்கியின் பளுவு 15 டன். அவ்வளவு பளுவை ரோட்டுகளில் இழுத்துச் சென்றால், சாதாரண பாலங்கள் அந்த பளுவைத் தாங்காமல் இடிந்துவிழும். ஆகையால் அந்த பீரங்கியை இரண்டு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் வெவ்வேறு வண்டிகளில் ஏற்றி வனுவான மோட்டார் வண்டியால் இழுத்துக்கொண்டு போகிறார்கள். பீரங்கி மட்டும் தனியாகப் பிரிக்கப் படுகிறது; பீரங்கியின் அதிர்ச்சியையும் அது பின் புறத்தில் உதைந்து செல்வதையும் தாங்குவதற்காக வுள்ளகருவிகளும் குறிபார்க்கும் கருவிகளும் தனியாகப் பிரிக்கப் படுகின்றன. மற்ற பீரங்கிகளை அவ்வாறு தனித் தனியாகப் பிரிக்க முடியாது. ஜெர்மன் பீரங்கி தனித்தனியாய் பிரிக்கப்பட்டு வெவ்வேறு வண்டிகளில் ஏற்றப் படுகின்றன. அதனல் ஒரு வண்டியின் சுமை மொத்தம் 9 டன்னுக்கு அதிகப் படிவதில்லை. அந்த பளுவைசாதாரண ரோட்டுகளிலுள்ள பாலங்கள் தாங்கக் கூடியவை. அந்த பீரங்கியும் மற்ற உபகரணங்களும் போர்க்களத்துக்குக் கொண்டு வரப்பட்டவுடன் அந்த இரண்டு வண்டிகளும் ஒன்றுய்ச் சேர்க்கப்பட்டு, உபகரணங்களையுடைய வண்டியின் மேல் பீரங்கியானது இழுத்து வைக்கப்படுகிறது. அந்த நிலைமையில் பீரங்கி சுடப்படுவதற்குத் தயாராயிருக்கும். இந்த பீரங்கியிலிருந்து சுடக்கூடிய ஒரு குண்டின் நிறை 750 பவுண்டாகிறது; அந்த

குண்டை அது 7 மைல் தூரத்துக்கு எறியக்கூடியது. இந்த பெரிய பீரங்கிகளெல்லாம் ஹவிட்ஸர் தினுசைச் சேர்ந்தவை. ஆகையால் அந்த 11-அங்குல பீரங்கியிலிருந்து சுடப்படுகிற குண்டு ஆகாயத்தில் உயரப் பாய்ந்து பிறகு தரையை நோக்கி விழுகிறது. அந்த குண்டு 2½-மைல் உயரப் பாய்ந்து பிறகு கீழே விழுகிறது. அந்த குண்டு பீரங்கியிலிருந்து பாய்கிற விசையால் சேதமுண்டுபண்ணுவதில்லை; குண்டுக்குள் வைக்கப்படுகிற வெடிமருந்தின் வேகத்தால்தான் பயங்கரமான சேதத்தை விளைவிக்கிறது. ஆகையால் அந்த குண்டு ஆகாயத்தில் மெதுவாகத்தான் பாய்ந்து செல்கிறது; 4½-மைல் தூரத்தில் சென்று விழுவதற்கு ஒரு நிமிஷம் பிடிக்கிறது. அது பாய்ந்து செல்வதை தெளிவாய்க் கண்களால் பார்க்கலாம். அந்த பெரிய ஹவிட்ஸர் பீரங்கிகள் மிகவும் குறிப்பாய்ச் சுடக்கூடியவையாகையால், ஏராளமான சேதத்தை விளைவிக்கின்றன. அது விழுகிற இடத்தில் பூமியை விஸ்தாரமாய்ப் பிளந்து பெரிய பாறைகளாகப் பேர்த்து எறிகின்றது; அவ்விடத்துக் கருகிலுள்ள ஆள்கள் குண்டிலிருந்து கிளம்புகிற இரும்புத்துண்டுகளாலும் பூமியிலிருந்து கிளம்புகிற கற்பாறைகளாலும் அடிபடுவதோடு, வெடிமருந்தின் அதிர்ச்சியையும் பொருப்பையும் தாங்க முடியாமலும் இறந்து போகிறார்கள். இந்த 11 அங்குல பீரங்கியை ஜெர்மானியர் அதிகமாய் உபயோகித்து வருகிறார்கள்.

அதைவிடப்பெரியவை 17 அங்குல பீரங்கிகளாகும். இந்த பயங்கரமான பூதங்களை ஜெர்மானியர் போர்க்களத்தில் ரோட்டுகளின் வழியாய் இழுத்துச்செல்வது ஆச்சரியமாயிருக்கிறது. மற்ற வல்லரசுகளும் அப்படிப்பட்ட பீரங்கியை வைத்திருக்கின்றார்களென்றாலும் அதை ரயில் வண்டிகளில் ஏற்றி ரயில் எஞ்ஜினால் இழுத்து தண்டவாளத்தின்மேல் சிரமமில்லாமல் கொண்டுபோவதுதான் வழக்கம். ஆனால் அதை ஜெர்மானியர் சாதாரணரோட்டுகளிலும் பாலங்களின்மேலும் இழுப்பதுதான் கவனிக்கத்தக்கது. இந்த 17 அங்குல பீரங்கி 50 டன் நிறையுள்ளது. அந்த பீரங்கிமுன் சொல்லப்பட்டதுபோல, இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனி வண்டிகளில் ஏற்றப்படுகிறது. பீரங்கிக்கு ஒரு வண்டியும் அதன் உபகரணங்களுக்கு ஒரு வண்டியும் பீரங்கிக்காரர்களுக்கு ஒரு வண்டியும் வெடி மருந்துக்கு ஒரு வண்டியும் ஆக நான்குவண்டி

கள் அந்த பீரங்கியை உபயோகிப்பதற்குத் தேவையாயிருக்கின்றன. ஒவ்வொரு வண்டியும் இரண்டு அல்லது மூன்று எஞ்ஜின்களால் இழுக்கப் படுகிறது. மோட்டார் எஞ்ஜின்கள் அல்லது ரயில் எஞ்ஜீனப் போன்ற நீராவி எஞ்ஜின்கள் பீரங்கியை இழுக்கின்றன. அந்த நீராவி எஞ்ஜின்கள் தண்டவாள மில்லாமல் சாதாரண ரோட்டுகளில் செல்லக்கூடிய சக்கரங்களை யுடையவை. (புதிய ரோட்டுகளில் கப்பி களைப் பரப்பிய பிறகு அதை சமனிடுவதற்காக நீராவி எஞ்ஜின்கள் உபயோகிக்கப் படுவதைப் பார்த்திருக்கலாம். அம்மாதிரியான எஞ் ஜின்கள்தான் அந்த பீரங்கியை சாதாரண ரோட்டில் இழுக்கின்றன.)

இந்த 17 அங்குல பீரங்கியில் சுடப்படுகிற ஒரு குண்டு 2500 பவுண்ட் நிறையுள்ளது. அவ்வளவு பளுவுள்ள குண்டை அந்தபீரங்கி 10 மைல்தூரத்துக்கு எறியக்கூடும். அந்த குண்டு பீரங்கியிலிருந்து புறப்பட்டு ஆகாயத்தில் வட்டமிடும்போது 3½-மைல் உயரம் கிளம்பு கிறது. இந்த 17-அங்குலபீரங்கியை, 11 அங்குல பீரங்கியைப்போல, வண்டியில் ஏற்றியபடியே சுடமுடியாதென்பதைக் கவனிக்கவேண் டும். ஜெர்மானியர் அந்தபீரங்கியை எளிதாய்ரோட்டுகளில் கொண்டு வந்த போதிலும், அதை வலுவான அஸ்திவாரத்தின் மேல் பதிய வைத்தே சுடமுடியும். தரையில் வலுவான அஸ்திவாரம் போட்டு பீரங்கியை நிறுத்துவதற்கு 10 அல்லது 15 தினங்களாகு மென்று சொல்லப்படுகிறது. அந்த பீரங்கியிலுள்ள யந்திரங்களும் கருவிகளும் மிகவும் சிக்கலானவை ; எள்ளளவு தவறுதல் ஏற்பட் டால் அளவற்ற ஆபத்துண்டாகும். ஆகையால் அந்த பீரங்கியை சாதாரண ஜெர்மன் பீரங்கிக்காரர்கள் சுடமுடியாது ; குரூப் யந் திரசாலையிலுள்ள பீரங்கி நிபுணர்களே அதை உபயோகிக்கிறார்கள். அந்த பீரங்கியிலுள்ள கருவிகளெல்லாம் மின்சாரத்தால் வெகு தூரத்திலிருந்து வேலை செய்யப்படுகின்றன. அந்த பீரங்கியைச் சுடும்போது ஆள்கள் கால் மைல் தூரத்தில் விலகியிருக்கவேண்டும். அருகிலிருந்தால், பீரங்கியிலிருந்து குண்டு வெளியே பாயும்போது பூமியினும் காற்றினும் உண்டாகிற பயங்கரமான அதிர்ச்சியை மனி தன் தாங்கி நிற்க முடியாது. சாதாரண பீரங்கியைச் சுடும்போதே, பீரங்கிக்காரர்கள் தங்கள் காதுகள் செவிடுபடாதபடி ஒருவித கருவியை மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஸீஜ், நாமூர், ஆண்ட்வர்ப் முதலிய கோட்டைகளின் மீது ஜெர்

மானியர் பிரயோகித்தது 11-அங்குல பீரங்கிகளே யன்றி, 17-அங்குல பீரங்கிகளல்ல. இந்த பூதங்களை இதுவரையில் உபயோகித்ததாகத் தெரியவில்லை. எய்ஸன் நதிக்கரையில் மட்டும் ஒரு 17 அங்குலபீரங்கி உபயோகிக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டது. அந்த பீரங்கிகள் பாரிஸ் நகரத்துக் கோட்டைகளைத் தகர்ப்பதற்கு கையிருப்பில் வைத்துக்கொண் டிருப்பதாகஜெர்மானியர் சொன்னார்கள். அதற்கு இரண்டு நல்ல காரணங்கள் சொல்லலாம். முதலாவது, பாரிஸ்கோட்டைகள் நூதன முறைகளில் விருத்தி செய்யப்பட்டிருப்பதால் அவைகள் சாமான்ய முற்றுகைப் பீரங்கிகளால் சேதமாக்கூடியவையல்ல. இரண்டாவது, பெரிய முற்றுகைப் பீரங்கிகள் சிக்கிரத்தில் பழுதாகி விடுகின்றன வாகையால், அவைகளை அத்யாவசியமான சமயங்களில் மட்டும் உபயோகிக்க வேண்டுமே யொழிய நினைத்தபோ தெல்லாம் பிரயோகிக்கக்கூடாது. அந்த பீரங்கியைப் பத்து முறை சுட்டால், அதன் திறமை பாதி குறைந்து போகிறது. 2500 பவுண்ட் நிறையுள்ள குண்டு மிகுந்த வேகத்துடன் பீரங்கியின் குழாயிலிருந்து உராய்ந்து செல்வதால், அந்தக் குழாய் சிக்கிரத்தில் தேய்ந்து போவதோடு, மற்ற நுட்பமான கருவிகளும் பழுதாகி விடுகின்றன. பீரங்கி ஏராளமான விசையுடன் பின் புறத்தில் உதைவதாலும் அதிர்வதாலும், அவைகளைத் தாங்குவதற்காகவுள்ள கருவிகள் சிக்கிரத்தில்பழுதாகி பிறகு சரியானபடி வேலை செய்வதில்லை. அந்த பீரங்கியிலிருந்து 25 குண்டுகளைச் சுட்டபிறகு, அது அவ்வளவு குறிப்பாய்ச் சுடத்தவறிவிடுகிறது. மொத்தம் 30 குண்டுகளைச் சுட்டுவிட்டால், பீரங்கியானது முற்றிலும் பயனற்றதாய்ப் போய்விடுகிறது. அதன்பிறகு அந்த பீரங்கியிலுள்ள கருவிகளையெல்லாம் எடுத்துவிட்டு புதியவைகளைப் பூட்ட வேண்டும். அந்த பீரங்கி ஒருமணிநேரத்தில் 6 குண்டுகளைச் சுடுமாகையால், ஒருபீரங்கியின் வாழ்வு 5மணி நேரந்தான். 2500பவுண்டு நிறையுள்ள ஒரு குண்டைச் செய்வதற்கு 18, 000 ரூபாய் செலவாகிறது. ஆகையால் அந்த பயங்கரமான பூதங்கள் செத்து போவதற்குள்ளாக சுமார் 5½லக்ஷம் ரூபாய் பெறும்படியான நெருப்பைக்கக்கிவிடுகின்றன. அவைகள் ஆஸ்டிரியாவில் அதிகமாயிருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. ஆஸ்டிரிய பீரங்கிகளில் அநேகம் ஜெர்மானியரால் உபயோகிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

32-வது அத்தியாயம்.

துப்பறியும் ராணுவத்தொழில்.

ஒவ்வொரு தேசமும் இதர தேசங்களின் இரகஸ்யங்களை அறிந்துகொள்வதற்காகப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்திருக்கிறது. அந்நிய தேச விவகாரங்களைச் செவ்வையாய் நடத்துவதற்கு அத்தேசங்களைப்பற்றிய சகல விவரங்களையும் தெரிந்துகொள்வது அவசியமாகும். அந்நிய தேச விவகாரங்களும் மனஸ்தாபத்தை விளைவிக்கும் நிலைமைக்கு வந்துவிட்டால், அவைகள் ராணுவபலத்தால் தீர்மானமான முடிவுக்குக் கொண்டுவரவேண்டியிருக்குமாகையால், ஒரு தேசத்து ராணுவம் எந்த நிமிஷத்திலும் யுத்தஞ்செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். ராணுவ நடவடிக்கைகளை எவ்வளவுதிறமையாய் யோசனைசெய்துவைத்தாலும், சத்துருவின் நிலைமையைப் பற்றிய விவரங்களைத்தெரிந்து கொள்ளாவிட்டால், ராணுவத்திறமையெல்லாம் யுத்தகளத்தில் சிறிது பயன்படாமற் போகும். ஆகையால் ஒவ்வொரு தேசத்திலும் அந்நிய தேசங்களைப்பற்றிய எல்லாவிவரங்களையும் அறிந்துகொள்ளப்பலவித ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகள் சமாதானகாலத்திலேயே ஒழுங்காய் நடத்தப்படுகின்றன. அந்நிய தேசங்களிலுள்ள கோட்டைகள், யுத்த ஆயுதங்கள் இவைகளைப்பற்றி, சொந்த தேசத்தைப்பற்றிய விவரங்களைப்போல, தெளிவாய்த்தெரிந்துகொள்ளமுயற்சிசெய்யப்படுகிறது. யுத்தகாலத்தில் சத்துருவின் பிரதேசத்துக்குள் நுழைந்தபிறகு எதிர்பாராத சந்தர்ப்பங்களைக் கண்டு கலக்க மடைகிற சேனை எவ்வளவு வன்மை கொண்டதாயினும் அதிசிக்கிரத்தில் அழிந்துபோகும். சத்துருவின் பலஹீனங்களையும் குற்றங் குறைகளையும் சமாதான காலத்திலேயே அறிந்துகொண்டால் தான், யுத்த காலத்தில் சத்துருவின் நிலைமைக்குத் தக்கபடி ராணுவ நடவடிக்கைகளை யோசனை செய்து எளிதாய் நிறை வேற்றலாம். சத்துருக்கள் சில இரகஸ்ய ஏற்பாடுகளைச்செய்து யுத்த காலத்தில் திடீரென்று சேர்க்கக்கூடிய சைன்ய பலமும் யுத்த ஆயுதங்களும் முன்னதாகவே யறிந்துகொள்ளப்படவேண்டும். சத்துருவின் பிரதேசத்திலுள்ள உணவுப் பொருள்கள், ரயில்பாதை

கள், சாதாரணபாதைகள் இவைகளைப்பற்றி முன்னதாகவே அறிந்து கொண்டால் ராணுவ நடவடிக்கைகளைத் தாமஸமின்றி விரைவாய் நிறைவேற்றலாம். கால நிலைமையைப் பற்றியும் பூமி அமைப்பைப் பற்றியும் அறிந்துகொள்வது அவசியமாகும். ஜெர்மன் மாகாண மாகிய கிழக்குப் பிரஷ்யாவில், அநேக ஏரிகளும், சேறும் சகுதியுமாயுள்ள பூமிகளு மிருப்பதால், அவைகளின் உதவியைக்கொண்டு ஜெர்மானியர் அந்தப்பிரதேசத்தில் எளிதாய்யுத்தத்தை நடத்திவருகிறார்கள். ருஷிய மாகாணமாகிய போலண்டிலும் சதுப்பு நிலமிருப்பதால், ருஷியப்படைகள் அங்கு எளிதாய்க் காத்து வருகின்றன. ஆகையால் ராணுவத்திலுள்ள சில உத்தியோகஸ்தர்கள் தாங்கள் என்றைக்கும் பார்த்திராத ஓர் அந்நிய நகரத்தைப்பற்றி சகல விவரங்களையும் அறிந்திருப்பார்கள்.

ஒவ்வொரு தேசத்து கவர்ன்மெண்டும் தங்களைப்பற்றிய இரகஸ்யங்களை அந்நியர் அறிந்துகொள்ளாதபடி காப்பதும் அவசியமாகும். ஆகையால் ஒவ்வொரு தேசத்திலும், ராணுவ இரகஸ்யங்களை அறிய முயற்சி செய்பவர்களுக்கு கடுந்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் துப்பாளிகள்.

ஐரோப்பாக்கண்டத்திலுள்ள பல இராஜாங்கங்களில் அநேக துப்பாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கவர்ன்மெண்டு ஏராளமான சம்பளம் கொடுக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால், பிரபல பிரமுகரோ, வியாபாரியோ, அல்லது இராஜாங்க நிர்வாகத்தை வகிக்கும் மந்திரியோ என்று ஊகிக்கும்படி அவ்வளவு ஆடம்பரத்துடன் காணப்படுவார்கள். ஆனாலும் அவர்கள் துப்பாளிகள் என்று ஒருவருக்கும் தெரியாது. அந்தந்த கவர்ன்மெண்டின் மந்திரிகளுக்குக்கூட அந்தந்த தேசத்துத் துப்பாளிகளைத் தெரியாது. மந்திரிகளும்தங்கள் துப்பாளிகளையறிந்துகொள்ள முடியாதாயின், துப்பாளிகள் எவ்வளவு இரகசியமாய் வேலை செய்கிறார்களென்பதுவிளங்கும்.

ஒரு ராஜாங்கத்தின் வியாபார விஷயம், புதிய துறைமுகங்கள், ஸைன்னிய ஏற்பாட்டின் விவரம், இராஜாங்க நிர்வாக தந்திரம், இரகஸ்ய உடன்படிக்கைகள், புதிதாக கண்டுபிடிக்கப்படும் யந்திரங்கள், ஆயுதங்கள், கப்பல்கள், ஆகாயவிமானங்கள் முதலிய எல்லா விஷ

யங்களைப்பற்றி, தப்பாளிகள் பிறருக்குத் தெரியாமல் அறிந்து, தங்கள் ராஜாங்கத்திற்கு மிகவும் இரகஸ்யமாய்த் தெரிவிக்கவேண்டும்.

தப்பாளிகள் மிகவும் பிரபல கனவான்களைப்போல் உடைதரித்துக்கொண்டு, அந்தந்த ராஜாங்கத் தலைவர்கள், அதிகாரிகள், முதலானவர்கள் வசிக்கும் மாளிகைகளுக்கும், அவர்கள் பொழுதுபோக்குக்காகக் கூடும் ஸ்தலங்களுக்கும் சென்று, அவர்களுடன் கூடிக்கலந்து பேசுவார்கள். மேலும் அந்த அதிகாரிகளுக்கும், தலைவர்களுக்கும் பெரிய விருந்து நடத்தி, அவர்களின் நேசத்தைச் சம்பாதித்துக் கொள்வார்கள். இவ்வாறு அவர்கள் நேசங் கிடைத்ததும், தப்பாளிகள் அவர்களோடு கலந்து பேசுகையில், ராஜாங்க இரகஸ்யங்களில் தங்களுக்குளவித ஆவலும் மில்லாததுபோல்நடித்து, பேச்சு வாக்கிலேயே இரகஸ்யங்களை வெகு சாதுரியமாய் ஊகித்தணர்ந்து கொள்வார்கள். மேலும், பணத்தின்மேல் ஆசையாயுள்ளவர்களாகக் காணப்படும் அதிகாரிகளுக்கும் கடன்பட்டு ஜீவிக்கும்உத்தியோகஸ்தர்களுக்கும் தப்பாளிகள் ஏராளமான பணத்தைக்கொடுத்து, ராஜாங்க மர்மங்களை தன்கு தெரிந்து கொள்வார்கள். இனி பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் சமாதான காலத்தில் செய்யப்படுகிற ஏற்பாடுகளைப் பற்றிச் சொல்வோம்.

பிரான்ஸ் தேசத்தில் தப்பறியும் தொழில்.

பிரான்ஸ்தேசத்தத் தப்பாளிகளின் தலைவர் பாரிஸ் நகரத்திலுள்ள பிரபல கடைத் தெருவில் தமது ஆபீஸ் நடத்திவருகிறார்கள். தங்கள்தங்களுக்குத் தெரிந்த தப்புக்களை வெளிப்படுத்தி அதற்குத் தகுந்த பணத்தைப் பெற்றுப் போக, தினந்தோறும் அநேக உத்தியோகஸ்தர்களும், குமாஸ்தாக்களும், கவர்ன்மெண்ட் அதிகாரிகளின் மனைவிகளும், இன்னும்பலரும், ஒவ்வொருவராய்அந்தத் தப்பாளியின் ஆபீஸுக்குப் போய்க்கொண் டிருப்பார்கள். தப்பறியும் இரகஸ்யத்திற்கு ஏற்றவாறு அவர்களுக்கு வெகுமானம் கொடுக்கப்படும். தவிர, உலகத்தில் எல்லாத் தலைநகரங்களிலும் கை தேர்ந்தபிரஞ்சுதப்பாளிகள் அதியந்தரங்கமாய் மர்மங்களை யறிந்து தலைமை ஆபீஸுக்கு அச்சங்கதிகளைப் பரி பாஷையில் அறிவித்துக்கொண்டே யிருப்பார்கள். ஒவ்வொரு தேசத்திலும் மற்றத் தேசங்களின் பிரதிநிதி, தூதர், முதலியவர்கள் இருக்கிறார்க ளல்லவா? வெளிதேசங்களி

லிருக்கும் பிரஞ்சு துப்பாளிகள் அங்கிருக்கும் பிரெஞ்சு தூதர்களுக்குக் கூட தாங்கள் அறிந்த இரகஸ்யங்களை வெளிப்படுத்துவதில்லை. இனி அந்தந்த தேசங்களிலிருக்கும் பிரெஞ்சு தூதர் வியாபார விஷயமாயோ வேறு விஷயமாயோ தானிருக்கும் நகரத்தில் ஏதேனும் புதிய இரகஸ்ய ஏற்பாடுகள் உண்டாயின், அவைகளை யுடனே அந்தராங்கமாய் அறிந்து, பாரிஸ் நகரிலிருக்கும் தலைமைத் துப்பாளிக்குத் தெரியப்படுத்தவேண்டும். அந்நியதேசங்களில் அனுசரிக்கப்படும் இராஜீய தந்திரம், புதிதாய்ச் செய்யப்படும் சண்டைக் கப்பலின் அமைப்பு முதலியன யோசனையிலிருக்கும் பொழுதே அந்தத் தலைமைத் துப்பாளிக்கு சமாச்சாரம் போய்ச் சேர்ந்துவிடும்.

கொஞ்ச காலத்திற்குமுன் துருக்கி-பால்கன் யுத்தம் நடந்ததல்லவா? அப்பொழுது, பல்கேரியாவுக்கும் ஆஸ்டிரியாவுக்கும் அந்தராங்க உடன்படிக்கை யொன்று ஏற்பட்டிருந்தது. அதென்னவென்றால், பால்கன் நாடுகள் புதிய பூமிகளை வசப்படுத்திக் கொண்ட பிறகு, பல்கேரியா ஸெர்வியாவின் நேசத்தைக் கைவிட்டு ஸெர்வியாவின் வன்மையைக்குறைக்கவேண்டுமென்பதே. அவ்வாறுபல்கேரியா, ஆஸ்டிரியா இவ்விரண்டும் யோசனை செய்திருந்தன. சிறிதுகாலம் அந்த யோசனையை ஒருவரும் அறியவில்லை. ஆனலும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு பிரிட்டிஷ் துப்பாளியொருவன் அந்த இரகஸ்யத்தை யறிந்து கொண்டான். இரகஸ்யம் வெளியான தென்பதை ஆஸ்டிரியா தன்னுடைய துப்பாளியால் அறிந்துகொண்டது. உடனே, பல்கேரியாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி நடவாமல் ஆஸ்டிரியா சும்மா இருந்துவிட்டது.

துப்பறிவதில் திறமை.

ஆகாயவிமானங்களை அழித்துவிடக்கூடிய ஒரு புதுமாதிரியான பீரங்கியை மிகவும் இரகஸ்யமாய்ச் செய்யும்படி ஜெர்மன் கவர்ன்மெண்டு அத்தேசத்திலுள்ள ஒரு கம்பெனிக்கு உத்தரவளித்தார்கள். அம்மாதிரியே வெகு அந்தரங்கமாய் அப்பீரங்கியும் செய்து முடிந்தது. அதை அப்பீரங்கியின் வன்மையை அந்தராங்கமாய்ப் பரிட்சித்துப் பார்த்ததில், அது திருப்திகரமாயிருந்தது. இம்மாதிரி பரிட்சை நடந்ததின் விவரங்களை ஒருவரும் பிரசுரப்படுத்தக் கூடாதென்று கவர்ன்மெண்டு உத்தரவு செய்தார்கள்.



ருஷியக் குதிரைப் படையும் ஜெர்மன் குதிரைப் படையும் சண்டை செய்தல். படத்திலுள்ள ருஷியர் சோஸாக் துருப்புகளா வார்கள். ஜெர்மானியர், "மரணத்தலை" என்ற படையைச் சேர்ந்தவர்கள். ‡ சற்று உயரமான தலைத்தொப்பியை உடையவர் கள் ஜெர்மானியர்.



பிரஞ்சு குடியேற்றநாட்டைச் சேர்ந்த டர்க்கோஸ் துருப்புகள் ஜெர்மன் துருப்புகளோடு தெருக்களில் சண்டை செய்தல்.
(டர்க்கோஸ் துருப்புகள் முகம்மதியர்கள்.)

புது மந்திரியான் பிரங்கி யொன்று செய்யப்பட் டிருக்கிறதென் பதைமற்ற ஐரோப்பியர்கள் அறியாதிருக்கும்படி, அப் பிரங்கி பரிட்சை செய்யப்பட்டதில் பயனற்றதாய்ப் போய் விட்டதென்று ஜெர்மன் கவர்ன்மெண்டு உத்தியோக முறையில் ஒரு விளம்ப முஞ் செய்தார்கள். இப்பிரங்கிப் பரிட்சை முடிந்த ஒரு வாரத்திற் கெல்லாம், ஒரு ஜெர்மானிய அதிகாரியின் மனைவி அப்பிரங்கியின் அமைப்பை ஒரு சேனுபதியிடமிருந்து அறிந்து, அதன் உருவப் படமொன்றை பெடுத்துக்கொண்டு, பிரான்ஸ் தேசஞ்சென்று அங் கிருக்கும் தலைமைத் துப்பாளியிடம் அதைக்கொடுத்தால் அதிகப் பணம் கிடைக்குமென்று எண்ணி அவனைக் காணச்சென்றாள்.

பிரஞ்சு துப்பாளி அந்த ஜெர்மானிய ஸ்திரீயை அன்புடன் வரவேற்றதும், அவள் பிரங்கியின் உருவப்படத்தை அவனிடம் கொடுத்து அதற்கு ஐரண்டு லக்ஷம் ரூபாய் வேண்டுமென்று கேட் டாள். உடனே துப்பாளியும் அதை மிகவும் ஆவலாய்ப் பார்ப்பது போல நடித்த பின்னர், அவளிடம் சிறிது நேரம் விடைபெற்று, தன் அந்தரங்க அறைக்குட்சென்று திரும்பிவந்து, முன்னதாகவே தனக்குக் கிடைத்திருக்கும் அப்பிரங்கியின் உருவப்படத்தைக் கொண்டுவந்து அந்த ஸ்திரீயினிடம் காட்டினான். அதைப் பார்த்தவுடனே அவள் "ஈதேது ? எவ்வளவோ இரகஸ்யமாய் நான் அப்பிரங்கியின் உருவப்படத்தை வெகு பாடுபட்டுக்கொண்டு வருவதற்கு முன்பே, வேறொரு படம் வந்து சேர்ந்திருக்கிறது" என்று நினைத்துத் திகைத்து நின்றாள். பின்பு அவன் அவளுக்கு ஓளவு பண முதவி "யுத்த மந்திரியின் ஆபிசிலிருந்து ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அப்பிரங்கியின் உருவப்படமொன்று எனக்கு வந்து சேர்ந்து விட்டது. இந்த விஷயம் அவர்களுக் குத் தெரியவே தெரியாதென்று நான் நினைக்கிறேன்" என்று சொல்லி, இனி முக்கியமான விஷயங்கள் ஏதேனும் அவளுக்குப்புதி தாய் தெரியவந்தால், அவைகளை யுடனே தனக்கறிவிப்பின், அதற் கேற்றவாறு பணம் கொடுக்கத் தயார் என்றும் சொல்லியனுப்பினான்.

ஒரு துப்பாளியின் தேசாபிமானம்.

மேலேகண்ட பிரெஞ்சுத் துப்பாளிக்கு உதவியாயிருக்கும் ஒரு வன், சமீபத்தில் இங்கிலாந்து சென்று ஒரு மாணவனைப்போல் நடித்து அங்குள்ள ஒரு இளப்பில் இரண்டு வருஷகாலமாய் வசித்து

வந்தான். அவன் தகப்பன் பிரான்ஸில் பிரபல வியாபாரி. அப் பையனுடன் நேசமாயிருந்த ஒருவன் அவனது அந்தரங்கத்தைப் போலீஸாரிடம் அறிவித்து விட்டான். இதனை மறு நிமிஷத்தி லேயே அறிந்துகொண்ட அத்துப்பாளி "ஐயோ நாம் துப்பாளி யென்பது பிரிட்டிஷ் போலீஸாருக்குத் தெரிந்து விட்டதே! நாம் அவர்கள் கையிலகப்படின், நம்மை வருத்தி இரகஸ்யங்களை அறிந்து கொண்டு விடுவரே! ஆதலின் இறந்து விடுவதே மேல்" என நினைத்து உடனே தற்கொலை செய்து கொண்டான்.

தேசத் துரோகிகளாகிய ஆண்பெண் இருதரத்தாரும் பணத் துக்காசைப்பட்டு தங்கள் தேச இரகஸ்யங்களை வெளியிட் டிருக்கிறார் கள். சில துப்பாளிகள் வெகு சிரமப்பட்டு இரகஸ்யத்தை வெளி யிடுஞ்சமயத்தில், அறிவு தலைப்பட்டு தேசாபிமானம் மேலிட்டு இரக ஸ்யங்களைச் சொல்லாமலு மிருந்திருக்கிறார்கள். இப்பொழுது நேச மாயிருக்கும் ராஜ்யங்கள் பிறகு விரோதிகளாகக் கூடுமாதலால், சிலே கிதர், பகைவர் ஆகிய இருவரையும் துப்பாளிகள் ஒரேமாதிரியாகப் பாவிக்கிறார்கள்.

ஒவ்வொரு இராஜாங்கத்தாரும் இம்மாதிரி, பல துப்பாளி களை யேற்படுத்தி, அந்நிய தேச மர்மங்களை வெகு இரகஸ்ய மாய் அறிந்துவருகிறார்கள். இவர்களுக்கு 2000-பவுன் வரை அபரி மிதமான சம்பளங்கள் இரகஸிய பண்டிலிருந்து கிடைக்கின்றன. ஆண்மக்களன்றிப் பெண்பிள்ளைகளும் துப்பாளிகளா யிருக்கிறார்க ளென்று தெரியவருகிறது.

ஜர்மனியில் துப்பறியுந் தொழில்.

இந்த மகாயுத்தம் தொடங்கிய பிறகு, ஜெர்மானியர் அந்நிய ராஜ்யங்களைப்பற்றிய இரகஸ்யங்களை அறிந்துகொள்வதற்காகச் செய் திருந்த ஏற்பாடுகளில் அநேகம் வெளியாகி யிருக்கின்றன. ஆகை யால் ஜெர்மானியர் சமாதான காலத்தில் எவ்வித ஏற்பாடுகள் செய் திருந்தார்களென்று சற்று விவரமாய்ச் சொல்லுவோம். ஜெர்மானி யர் தாங்கள் பகைத்துக்கொண்ட எல்லா ஐரோப்பிய ராஜ்யங் களோடும் யுத்தஞ்செய்ய நேரிடக்கூடுமென்று எண்ணியிருந்த படியால், அவர்கள் செய்த ஏற்பாடுகள் மிகவும் விஸ்தார மாயும் அதிசயமாயு மிருக்கின்றன. அந்நிய தேச இரகஸ்யங் களைத் துப்பறிகிறவர்கள் எல்லா அந்தஸ்திலும் காணப்படுகிறார்கள்.

பிரபுவானலும் பிச்சைக்காரனலும் அத்தொழிலைச் செய்யக் கூடியவனு யிருக்கிறான். அது மிகவும் ஈனமானதொழிலென்று கருதப்பட்டாலும், சொந்த தேசத்தின் நன்மைக்கும் சாஸ்வதத் தின் வன்மைக்கும் அவ்வித தொழில் அத்தியாவசியமா யிருக்கிறது. சத்துருவைப் பற்றிய இரகஸ்யங்களை முன்னதாக அறிந்துகொள்வ தால் உண்டாகக்கூடிய சாதகங்கள் மதிப்பிடக் கூடியவை யல்ல. மேலும், அவ்வித தொழிலைச் செய்கிறவர்கள் தங்கள் உயிருக்கே நேரக்கூடிய ஆபத்துக்குந் துணிந்து அதை ஏற்றுக் கொள்கிறார்கள். மிகுந்த சாமர்த்தியமும் தைரியமும் அத்தொழிலுக்கு அவசியமாகை யால், அதைச் செய்யக் கூடியவர்கள் அபூர்வமாகக் கிடைக்கிறார் கள். மனிதன் இரண்டு நேர் விரோதமான உணர்ச்சிகளால் முற்றி லும் வெல்லப் படுகிறான். தன்னலம் பேணலும் தன்னலம் மறுப் பதும் அளவற்ற வேகங்கொண்டு மனதை வசப்படுத்திக் கொண் டால் அவன் எந்த காரியத்தையும் துணிந்து செய்யக் கூடியவ னாகிறான். துப்பறிகிறவர்கள் அதிகமாய் சுயநலங்கருதி பொருளுக் கும் அந்தஸ்துக்கும் ஆசைப்பட்டு அத்தொழிலைச் செய்கிறார்கள். முற்றிலும் தேசாபிமான வுணர்ச்சியால் தூண்டப்பட்டு அத்தொழி லைச் செய்கிறவர்கள் அபூர்வமாகத்தான் காணப்படுகிறார்கள்.

வருஷமொன்றுக்கு லக்ஷக்கணக்கான பவுன்.

துப்பாளிகளுக்குச் சம்பளம் கொடுக்கும் வகையில் வருஷந் தோறும் ஜெர்மானியர் 10 லக்ஷம் பவுன் அதாவது ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறார்கள். அந்த துப் பாளிகள் அந்தஸ்துக்குத் தக்கபடி மாதமொன்றுக்கு 10 பவுன் முதல் இரண்டாயிரம் பவுன் வரையில் சம்பளம் பெறுகின்றனர். இவ்வளவு அபரிமிதமான தொகையை வருஷந்தோறும் ஜெர் மானியர் செலவு செய்து வருவதால் அத்தொகைக்கு ஏற்றபடி பயன் கிடைக்கிறதா என்பதைப் பற்றி நிச்சயமாய்ச் சொல்ல முடியாதாயினும், அத்துப்பாளிகள் அந்நிய கவர்ன்மெண்டுகளின் அந்தரங்கங்களை வெகு சாமர்த்தியமாய் அறிவது ஆச்சரியமாகவே யிருக்கிறதென்பதற்குத் தடையில்லை.

தங்கள் தேசத்திலும் அந்நியாட்டுத் துப்பாளிகள் இருந்து துப்பறிவார்களென்பதை ஜெர்மனி நன்கு அறிந்திருப்பதனல்,

அத்தகையோரைக் கண்டு பிடித்து விடுவதில் ஜெர்மானியர் கண்ணும் கருத்துமா யிருக்கிறார்கள். தங்களுடைய ராணுவ, கடற்படைகளின் அதிகாரிகள் அம்மாதிரியான அந்நிய நாட்டுவேவு காரர்களின் வலியிற் சிக்கி விடுவரோவென்று ஜெர்மன் கவர்ன் மெண்டு தங்களுடைய அதிகாரிகளின் நடவடிக்கை, பாவனை முதலிய யாவற்றையும் தங்களுடைய துப்பாளிகளின் மூலமாய்க் கவனித்து வருகின்றனர். உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் அந்நிய நாடு களில் தங்கள் துப்பாளிகளை நியமித்து, அந்தரங்கங்களை அறிய முயற்சிசெய்து வருகின்றனவென்பது வெளிப்படை. ஆனல் துப் பாளிகளை வைத்து நடத்துவதிலும், அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதிலும், ஜெர்மனி அதிகப் பணம் செலவுசெய்வதுமன்றி, மிகுந்த ஊக்கமுங்கொண் டிருக்கிறதென்று தோன்றுகிறது. ஒவ் வொரு கவர்ன்மெண்டும் துப்பாளிகளாகத் தங்களுடைய பிர ஜைகளை மட்டும் நியமிப்பதில்லை. அந்தந்த நாட்டு மனிதர்களையும் அந்தந்த நாட்டில் துப்பறியும்படி நியமிக்கிறார்கள். மேலும் துப் பாளிகளாக ஒருவனை நியமிக்கும் முன்னரே அவனிடமிருந்து "உண்மையை வெளியிடுவதில்லை துரோகம் செய்வதில்லை" எனப் பிரமாண வாக்குமூலம் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அவனுக்கு அவ் வேலையில் உற்சாகமும் சிரத்தையும் உண்டாகும்படி எவ்விதத்தி லும் உதவி புரிகிறார்கள். ஒரு துப்பாளி துப்பறியும்பொழுது அவன் அகப்பட்டுக்கொண்டு சிட்சை யடைந்துவிடின் அவனுடைய குடும் பத்திற்குப் போதுமான பணவுதவியும் இன்னும் மற்ற உதவிகளும் செய்கிறார்கள்.

ஜெர்மன் கவர்ன்மெண்டு தாங்கள் நியமிக்கிற துப்பாளிகளுக்கு இன்னும் அநேக விதங்களில் சாதகங்கள் செய்கிறார்கள். அந்நிய நாடுகளிலுள்ள ஜெர்மன் ஜனங்கள் யுத்தகாலத்தில் சொந்த தேசத் துக்குத் திரும்பிவந்து ராணுவத்தில் ஊழியஞ்செய்யக் கடமைப்பட் டிருக்கிறார்கள். அந்நிய நாடுகளிலுள்ள ஒரு ஜெர்மானியன் துப்பறி யும் தொழிலை ஏற்றுக்கொண்டால் அதற்குப்பிரதி பலனக ராணுவத் தில் சேராமலிருக்க அனுமதிகொடுக்கப்படலாம். மற்றொருவனுக்குப் பணம் வேண்டியிருக்கலாம்; மற்றொருவனுக்கு உத்தியோகத்தில் ஆசை யிருக்கலாம்; மற்றொருவன் வியாபாரியா யிருந்தால் பெரிய கண்டிராக்டுகள் எடுத்து திரவியஞ் சம்பாதிக்க விருப்பங் கொண்

டிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் அவரவர் விருப்பத்தின்படி திருப்தி செய்யப்படுகிறார்கள்.

துப்பறிவதற்கு சாதனங்கள்.

அந்நிய தேசங்களிலுள்ள பெரிய பட்டணங்களில் அநேக ஹோட்டல்கள் (சாப்பாட்டு விடுதிகள்) ஜெர்மானியரால் நடத்தப்படுகின்றன. அங்கு ஜெர்மன் சமையற்காரர்களும் வேலைக்காரர்களும் வேலை செய்கிறார்கள். சாப்பாட்டு சமயங்களில் பெரிய அதிகாரிகள் ஒருவருக் கொருவர் முக்கிய விஷயங்களைப்பற்றி இரகஸ்யமாய்ப் பேசிக்கொண் டிருக்கும்போது, அங்குமிங்கும் சாதாரணமாய் நடமாடிக்கொண் டிருக்கும் வேலைக்காரர்கள் அந்தப் பேச்சுகளைக் கவனித்து அறிந்துகொள்ளலாம். ஹோட்டல் சொந்தக்காரன், தன்னிடம் வந்து செல்கிற பெரிய அதிகாரிகளை இரகஸ்யமாய்ப் பின் தொடர்ந்து செல்லும்படி தன் வேலைக்காரர்களை ஏவலாம்.

அநேக ஜெர்மானியர் பெரிய மனிதர்கள் வீட்டில் வேலைக்காரனாகவும், தோட்டக்காரனாகவும், வண்டி யோட்டுகிறவனாகவும் இன்னும் பலவிதமாயும் அமர்ந்து கொள்ளலாம். பெரிய மனிதர்கள் தங்கள் வீடுகளில் ராஜாங்க விஷயங்களையும் ராணுவ விஷயங்களையும் பற்றிப் பேசிக்கொண் டிருந்தால் அச்சமயம் வேலைக்காரர்கள் அந்த பேச்சுகளை இரகஸ்யமாய் அறிந்துகொள்ளலாம். இந்த மகா யுத்தம் தொடங்கிய பிறகு இங்கிலாந்தில் மேற் சொல்லியவாறு சந்தேகப்படக்கூடிய அநேக ஜெர்மானியர் ஆயிரக் கணக்காய் பிடித்து வைக்கப்பட்டார்கள்.

மற்றொரு விதமாயும் அந்நிய தேசத்து இரகஸ்யங்கள் அறிந்து கொள்ளப்படுகின்றன. அந்நியதேசங்களில், கவர்ன்மெண்டின் கண்டிராக்டுகளை ஏடுத்து சாமான்களைக் கொடுத்துவரும் பெரிய வியாபாரிகளும் பங்குக்காரர்களும் (உண்டியல் வியாபாரிகள்) ஜெர்மன் ஜாதியாரிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரிய வியாபாரிகளை அந்நிய கவர்ன்மெண்டுகள் நம்பி அவர்களிடம் அநேக இரகஸ்யங்களை வெளியிட நேரிடுகிறது. ராஜாங்க நிர்வாகத்திலும் ராணுவ நிர்வாகத்திலுமுள்ள குற்றங்குறைகளை பெரிய ஜெர்மன் வியாபாரிகள் அறிந்துகொள்கிறார்கள்.

அந்நியதேசத்தில் உயர் பதவியிலுள்ள அதிகாரிகளை ஜெர்மன் கவர்ன்மெண்டு தங்கள் செல்வாக்குக்கு உட்படுத்துவதுமுண்டு.

அந்நிய தேசத்தில் புதிய மந்திரிகளும், ராஜதந்திரிகளும், ராஜாங்க கக்ஷித் தலைவர்களும், ராணுவ அதிகாரிகளும் ஜெர்மானியரிடம் அனுதாபங் கொண்டவர்களாகத் தெரியவந்தால், அவர்களை முற்றிலும் வசப்படுத்திக் கொள்வதற்கு, ஜெர்மன் துப்பாளிகள் மிகுந்த சுறுசுறுப்புடன் வேலை செய்கிறார்கள். அந்த வேலை மிகவும் சாமர்த்தியமாய் நடத்தப்படுவதால், அந்நிய தேசத்து அதிகாரிகள் தாங்கள் அறியாமலே அநேக காரியங்களை ஜெர்மானியருக்குச் சாதகமாய்ச் செய்துவிடுகிறார்கள். துருக்கியில் ஜெர்மானியர் அவ்விதமாகவும் தங்கள் செல்வாக்கை ஸ்தாபித்தார்கள்.

அந்நிய தேசங்களிலுள்ள ராணுவத்திலும் கோட்டைகளிலும், ஜெர்மன் பீரங்கிகளை உபயோகிக்கும்படி ஜெர்மானியர் தூண்டுவது முண்டு. ஜெர்மன் இஞ்ஜினியர்கள் அந்நிய தேசத்திலுள்ள கோட்டைகளையும் கட்டிக்கொடுப்பதுண்டு. அப்படிப்பட்ட தேசங்களோடு ஜெர்மானியர் யுத்தஞ்செய்ய நேரிட்டால், அங்குள்ள கோட்டைகளைத் தாக்கிப்பிடிப்பது அவ்வளவு கஷ்டமாயிராது.

அந்நிய தேசத்தில் ஜெர்மானியர் அநேக பூமிகளை வாங்கி அங்கு தொழிற்சாலைகளைக் கட்டியிருக்கிறார்கள். அந்த தொழிற் சாலைகள் யுத்தகாலத்தில் பெரிய முற்றுகைப் பீரங்கிகளை ஏற்றிவைப்பதற்கு மிகவும் சௌகரியமா யுள்ளவை. முற்றுகைப் பீரங்கிகளை வலுவான அஸ்திவாரம் போட்ட பூமியின்மேல் ஏற்றவேண்டும். தொழிற்சாலையைக் கட்டும்போது யந்திரங்களை ஏற்றுவதற்காக வலுவான அஸ்திவாரம்போட்ட இடத்தில் பீரங்கியையும் ஏற்றலாம். யுத்தகாலத்தில் உபயோகப் படும்படியான முக்கியமான ஸ்தலங்களில் அந்த தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. ஆனால் சமாதான காலத்தில் அந்தச் சாலைகளைக் கட்டும்போது, எவ்வித சந்தேகத்தையும் கிளப்பிவிடாமல் ஜாக்கிரதையாய்ச் செய்யப்படுகிறது. அவ்வாறு பெல்ஜியம், பிரான்ஸ், இங்கிலாந்து இத்தேசங்களில் அநேக ஜெர்மன் தொழிற்சாலைகள் கட்டப்பட் டிருப்பதாக இந்த மகா யுத்தந் தொடங்கிய பிறகு தெரியவந்திருக் கிறது. பெல்ஜியத்திலுள்ள லீஜ், நாமூர், ஆண்ட்வர்ப் முதலியகோட்டைகள் அதிசீக்கிரத்தில் பிடிபட்டதற்கு அது ஒரு முக்கிய காரணமாகும். அந்த கோட்டைகளுக்கருகில் சமாதானகாலத்தில் தயார்

செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் சிறிதும் தாமஸமின்றி ஜெர்மானியர் பெரிய முற்றுகைப் பீரங்கிகளை ஏற்றி உபயோகித்தார்கள்.

நேச தேசங்களிலுள்ள சில இரகஸ்யமான இடங்களில் மண்ணெண்ணெயும் வெடி மருந்தும் ஆகாரமும் ஜெர்மானியர் சமாதான காலங்களில் ஒளித்து வைத்து, இப்போது யுத்தந்தொடங்கிய பிறகு ஜெர்மன் ஆகாய விமானங்கள் அவ்விடங்களுக்கு இரகஸ்யமாய்ச் சென்று தேவையான சாமான்களை அங்கங்கே எடுத்துக்கொண்டு சஞ்சாரஞ் செய்கின்றனவென்று சந்தேகமுண்டாயிருக்கிறது.

துப்பறியும் ஸ்திரீகள்.

யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் துப்பாளிகளையே பெரும்பாலும் ஜெர்மனி நம்பியிருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. மிக்க வனப்பும் பகட்டும் இளம்பருவமும் வாய்ந்த ஸ்திரீகள் பலரை துப்பாளிகளாக ஜெர்மானியர் தெரிந்தெடுக்கின்றனர். அவர்களுடைய அழகில் அந்நிய நாட்டு அதிகாரிகள் பலரும் ஈடுபட்டு, தங்கள் தங்கள் கவர்ன்மெண்டின் ரஹஸ்ய அந்தரங்கங்களை வெளியிட்டு விடுவரென்பதே ஜெர்மானியரின் நம்பிக்கை.

அம்மாதிரி நியமனம் பெற்ற ஸ்திரீ வேவுகாரர்களிற் சிலர் அந்நிய நாட்டு அதிகாரிகளின் வீட்டில் வேலைக்காரிகளாகவும், தாதிகளாகவும், தோழியராகவும், உபாத்தினிகளாகவும் வேலை பார்த்து வருகின்றனர். இன்னுஞ் சிலர் பெரிய கம்பெனிகளில் குமாஸ்தாக்களாகவும் சாமான் விற்போராகவும் வேலை பார்க்கின்றனர். வேறு சிலர் பாடகர்களாகவும் நாடகதாரிகளாகவும் இருக்கிறார்கள். ரஹஸ்ய உத்தியோகஸ்தர்களை வலையிற் சிக்கும்படி செய்வதற்காக, அழகு வாய்ந்த ஸ்திரீகளிற் சிலர் ஒவ்வொரு தேசத்தின் தலை நகரங்களில் அரண்மனை போன்ற வீடுகளில் தங்கியிருந்து, வெகு ஆடம்பரத்துடன் வசித்து வருவதுமன்றி, உயர்தர உத்தியோகஸ்தர்கள் கர்த்தனமாடும் சபைக்குத் தாங்களும் சென்று அவர்களுடன் கர்த்தனமாடி அவர்களை வசப்படுத்தி விடுகிறார்கள்.

சில வருஷங்களுக்குமுன் பிரிட்டிஷ் கடற் படையின் அதிகாரியொருவர் நாடக சாலைக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த ஓரு ஜெர்மன் வேவுகார ஸ்திரீயின் அழகில் அவர் ஈடுபட்டு அவளுடன்

அன்னியோன்னிய நேசபாவம் பாராட்டத் தலைப்பட்டுவிட்டார். ஆகவே இருவருக்கும் நேசம் முதிர்ந்துவிட்டது. ஆதலின் அவளிடம் மயங்கிப்போன அந்த அதிகாரி தான் வகிக்கும் உத்தியோகத்தின் பொறுப்பைக் கவனியாது, கடற்படையின் சில முக்கிய மான ரகசியங்களை அவளுக்கு அறிவித்துவிட்டார். அவ்விஷயம் பின்பு வெளியாய்விட்டது. ஆகவே அவர்மீது அதன்பொருட்டு ஒரு கேஸ் ஏற்பட்டது. விசாரணையில் அக்குற்றம் ருஜுவாயிற்று. ஆதலினால் அந்த அதிகாரிக்கு 4 வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

மத்திய தரைக் கடலின் மேற்குக் கோடியில் வாசற்படி போலிருக்கும் ஜிப்ரால்டர் என்னும் ஸ்தலத்தில் பிரிட்டிஷ் கடற்படை நிரந்தரமாய் இருந்து வருகிறது. அங்குள்ள கடற்படை ஸ்தலத்தின் அமைப்பு, யுத்த கப்பல்களின் விவரங்கள் ஆகிய யாவும் சில வருஷங்களுக்கு முன் ஜெர்மனிக்குத் தெரிந்துவிட்டதாக பிரிட்டிஷார் அறிந்துகொண்டார்கள், உடனே அவ்விஷயத்தைப் பற்றி அந்தரங்கமாய் விசாரணை நடந்தது. விசாரணை முடிவில் ஜிப்ரால்டர் என்னும் ஸ்தலத்தில் அழகுள்ள ஒரு கிறுமி மிக்க ஆடம்பரத்துடன் வசித்து வருவதாக வெளியாயிற்று. அந்த ஸ்தலத்திலுள்ள அதிகாரிகளுடன் அவள் நெருங்கிப் பழகி, அவர்களுடன் கேளிக்கைகளிலும் கர்த்தனங்களிலும் சம்பந்தப்பட்டிருந்தது மன்றி, அவ்வதிகாரிகள் பலரிடமும் நேசமுள்ளவளாயிருந்தாளென்பதும் நன்கு விளங்கியது. அவள் மூலமாய்த் தான் ரகசியங்களை ஜெர்மானியர் அறிந்துகொண்டார்கள். ஆதலினால் அந்த ஸ்திரீயை உடனே அங்கிருந்து அப்புறப்படுத்தி ஜெர்மனிக்கு அனுப்பிவிட்டார்கள்,

ஆனால் இந்த இரகஸ்யமான ஏற்பாடுகளையெல்லாம் இப்போது நேச கவர்ன்மெண்டுகள் கண்டுபிடித்து தகுந்த பந்தோபஸ்து செய்திருக்கிறார்கள். மேலும், ஜெர்மானியர் அந்திய கவர்ன்மெண்டுகளைப்பற்றிய இரகஸ்யங்களை அறிவதற்கு எவ்வளவோ விஸ்தாரமான ஏற்பாடுகளைச் செய்திருந்தும், பெல்ஜியம், கிரேட்பிரிட்டன் இவ்விரு கவர்ன்மெண்டுகளின் மனநிலைமையைச் சரியாய் அறிந்துகொள்ளத் தவறிவிட்டதை இங்கு குறிப்பிடவேண்டும். பெல்ஜிய அரசரும் ஜனங்களும் ஜெர்மானியரை எதிர்த்து யுத்தஞ்செய்யத் தீர்மானித்

தது ஜெர்மானியருக்கு ஆச்சரியமாகவே யிருந்தது. பிரிட்டிஷார் நடுநிலைமையை வகித்து இந்த யுத்தத்தில் கலக்காமலிருப்பார்க ளென்று ஜெர்மானியர் நம்பிச்செய்த முயற்சிகளெல்லாம் ஏமாற்ற மாய் முடிந்தன. ஆகையால் ஜெர்மானியர் அங்கிய கவர்ன்மெண்டு களின் மனநிலைமையையும் உள் நோக்கங்களையும் செவ்வையாய் அறிந்து கொள்ளவேண்டுமென்று செய்துவந்த முயற்சிகள் அதிக சமயங்களில் பயன்படாமற் போய்விட்டன.

ஸ்டீன்ஹோர்—துப்பறியும் ஜெர்மன் நிபுணர்.

இந்த மகாயுத்தம் தொடங்கிய பிறகு, இங்கிலாந்தில் 1,20,000 அந்நியர்கள் சந்தேகத்தின் பேரில் அரெஸ்டுசெய்யப்பட்டு, அவர் களில் 342 பேர் சிறையிலடைக்கப் பட்டார்கள். 200 பேர் துப்பறி யும் ஜெர்மானியராக நிரூபிக்கப்பட்டனர். இங்கிலாந்தைப்பற்றி துப்பறிவதற்காகச் செய்யப்பட்ட அவ்வளவு விஸ்தாரமான ஏற்பாடு களை நடத்துகிறவர் யார்? பிரிட்டிஷார் தங்கள் தேசத்தைப் பற்றிய விவரங்களை எவ்வளவு அறிந்திருக்கிறார்களோ அதைவிட அதிகமாக அறிந்துள்ள ஒரு ஜெர்மானியன் இருக்கிறானென்று சொன்னால் அது ஆச்சரியமல்லவா? ஸ்டீன்ஹோர் என்ற துப்பறியும் நிபுணரைப் பற் றிக் கேள்விப்பட் டிருப்பவருக்கு அது ஒரு ஆச்சரியமாகத் தோன் றாது. பிரிட்டிஷ் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் அவரை நன் றாய் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள்; அதற்குக்காரணம் அவர் அதி சயமான துப்பறியும் முறைகளை இங்கிலாந்தில் விஸ்தாரமாய் ஏற்படுத் தினரென்பதல்ல; அந்த ஜெர்மன் துப்பாளி நான்கு வருஷங்களுக்கு முன்பு இங்கிலாந்துக்குச்சென்று தமது சக்கரவர்த்தியின் அரண்மனை யில் ஒரு களிரவு படுத்திருந்ததாகும். துப்பறியும் ஜெர்மானியன் ஒருவன் முதன்முதலாக அந்த அரண்மனையில் இடம் பெற்றது அந்த சமயத்தான்; அது மட்டுமல்ல; துப்பறியும் ஜெர்மானிய னொருவன் தமது சக்கரவர்த்தியின் கைகளைக் குலுக்கும் மரியாதையைப் பெற்ற தும் அது தான் முதல் தடவை. இன்றைக்கும் இங்கிலாந்துக்கு மிகுந்த தீங்கிழைக்கக்கூடிய சத்துரு யாரென்றால், ஸ்டீன்ஹோர் என்ற பேரைச் சொல்லவேண்டும். ஜெர்மனியின் கப்பற் படையும் ஆகாயப்படையும் பிரிட்டிஷ் தீவுகளை நோக்கிப் பிரயத்தனஞ்செய்யு மானால் அவருடைய யோசனையைக்கேளாமலும் சகாயமில்லாமலும்

அது கடை பெறுவதென்றே சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவரை ஜெர்மன் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் பத்தெட்டுபேரைத் தவிர மற்றெவரும் பார்த்திருக்க மாட்டார்கள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் ஜாப்தாவிலும் அவருடைய பேர் காணப்படுவதில்லை. ஆயினும் சென்ற ஐந்து வருஷங்களாக துப்பறியும் விஷயங்களனைத்தும் அவருடைய கைப்பட நடத்தப்பட்டு வருகின்றன. அவர் பெர்லின் நகரத்திலுள்ள அரண்மனையில் ஒரு சிறு அறையிலிருந்த வண்ணமாய் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு துப்பறியும் கூண்டை வெகு நுட்பமாய்ப் பின்னிவைத்தார்.

ஸ்டென்ஹோர் ஆரம்பத்தில் ஜெர்மன் போலீஸ் இலாகாவில் சேர்ந்து அங்கு துப்பறிவதில் மிகுந்த சாமர்த்தியங் காட்டியதால் அவர் உயர்தர உத்தியோகஸ்தர்களின் கவனத்தைப் பெற்றார். ஜெர்மன் கவர்ன்மெண்டு பிரிட்டிஷாரிடம் கொண்டிருந்தபகையை அவர் உணர்ந்து, அவ்வழிகளில் மூழுக்கவனத்தையும் செலுத்தத்தொடங்கினர். பிரிட்டிஷ் தீவுகளில் செய்யப்பட்ட துப்பறியும் ஏற்பாடுகளுக்கு அவர் தலைமை வகித்தார். அவர் நான்கு வருஷங்களுக்கு முன்னுல் ஜெர்மன் சக்கரவர்த்தியோடு இங்கிலாந்துக்குச் சென்ற போது அதிசயமான சாமர்த்தியத்தைக் காட்டியவுடன் அந்த உயர் பதவியை அடைந்தார். 1911-ம் வருஷம் மே மாதம், காலஞ் சென்ற விக்டோரியா மகாராணியின் ஞாபகச்சின்னத்தைத் திறந்து வைத்த சமயத்தில், ஜெர்மன் சக்கரவர்த்தி இங்கிலாந்துக்குச் சென்றார். சக்கரவர்த்தியோடு ஸ்டென்ஹோரும் சென்றார். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஜெர்மன் சக்கரவர்த்திக்காக நடத்திய அநேக ராஜாங்க வைபவங்களில், ஸ்டென்ஹோரர் மிகவும் சாப்தீக மானவர்போல அதிகமாய்த் தென்படாமலே இருந்தார். இங்கிலாந்திலுள்ள அநேக அதிசயங்களைப் பார்வை யிடுவதில் அளவற்ற ஆசை மேலிட்டவர்போல, அநேக ஸ்தலங்களுக்கு அவர் பிரயாணஞ் செய்வதிலேயே காலங் கழித்ததால் அவரைப் பற்றி எவரும் அதிகமாய் கவனிக்காம லிருந்தார்கள். சிற்சில சமயங்களில் அவர் தம் தலைவரைப் பார்ப்பதற்காக லண்டன் நகரத்து அரண்மனைக்கு வந்துகொண்டிருந்தார். அச்சமயம ஜெர்மன் சக்கரவர்த்தி தம்மூடைய பரிவாரங்களுள் ஒருவராக அவரை பிரிட்டிஷ் அரசருக்கு அறிமுகஞ் செய்து வித்தார்.

ஸ்டீன்ஹோர் இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்ததும் துப்பறியும் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்தார். "பெர்லினி லுள்ள ஸ்டீன்ஹோர்" என்ற விலாசத்துக் கடிதங்கள் அடிக்கடி அனுப்பப்பட்டதைத் தவிர மற்றெவ்வித விசேஷத்தையும் எவரும் உணரவில்லை. இந்த மகாயுத்தம் தொடங்கிய பிறகு இங்கிலாந்தில் 200 துப்பறியும் ஜெர்மானியர் விசாரணை செய்யப்பட்ட போது, ஸ்டீன்ஹோரு டைய பேர் பலமுறை வெளிவந்தது. அப்போதுதான், அந்த பேருடையவர் நான்கு வருஷங்களுக்கு முன்னுல் பிரிட்டிஷ் அரசருடன் கைகுலுக்கியவரென்று தெரியவந்தது. அவருடைய ஏற்பாட்டின் கீழிருந்த துப்பறியும் ஜெர்மானியரெல்லாம் இப்போது பிடிப்பட் டிருக்கின்றனர். பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள அதிசயங்களைப்பார்க்க மற்றொரு முறை ஸ்டீன்ஹோர் பிரயாணஞ் செய்வாரானுல், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் விருந்தாக வேறுவிதமான மரியாதைகள் அவருக்கு நடக்குமென்பதில் ஐயமில்லை. இப்போது அவர் அவ்வித உத்தேசங் கொள்ளாமல் பெர்லின் நகரத்திலேயே இருந்து வருகிறார்.

கம்பியில்லாத் தந்தியந்திரத்தை இரகஸ்யமாய் ஒளித்துவைப்பதும், ஆகாய விமானங்களின் உபயோகத்துக்குத் தேவையான சாமான்களை மலைப்பிரதேசங்களில் ஒளித்துவைப்பதும், கடற்கரையிலிருந்து பைலிகிள் விளக்குகளால் ஜெர்மன் சப்மரின் கப்பல்களுக்கு சமிக்ஞைசெய்வதும், அந்ததுப்பறியும் நிபுணரால் யோசனை செய்யப்பட்டவை. பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள ஜெர்மன் துப்பாளிகள் சகலவிதமான சமாசாரப் போக்குவரத்துகளை அவருடன் நடத்தினுலுங்கூட, இந்த மகா யுத்தம் தொடங்கிய பிறகு அந்த நிபுணரின் கைப்பட எழுதப்பட்ட கடிதமொன்றுதான் பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் அகப்பட்டிருக்கிறது. அந்த கடிதத்தில் அவர் சிலயோசனைகளைச் சொல்லியிருக்கிறார்:—

"ஒருவனைப்பற்றி சமாசாரம் அறிந்துகொள்ள வேண்டுமானுல் மிகவும் ஜாக்கிரதையாய் ஜனங்களை விசாரிக்கவேண்டும். எவனைப் பற்றி சமாசாரம் அறிந்துகொள்ளவேண்டுமோ அவனுடையபேரைச் சற்று மாற்றிச் சொல்லி ஜனங்களை விசாரிக்க வேண்டும். அப்போது ஜனங்கள் அவனுடையபேரைச்சரியாகத் திருத்திச்சொல்லி அவனைப் பற்றிய விவரங்களைச் சொல்வார்கள். அந்த மனிதனுடன் வியாபார

சம்பந்த மிருப்பதாகச் சொல்லி விசாரிக்கத் தொடங்கினால் ஜனங்களின் மனதில் எவ்வித சந்தேகமுமுண்டாகாது. ஜனங்கள் அந்தமனிதனீப்பற்றிய விவரங்களே யெல்லாம் சொன்ன பிறகு, அந்தமனிதன் எவ்வளவு வயதுள்ளவனென்றும், எட்படியிருப்பானென்றும் ஜனங்களைக்கேட்கவேண்டும். ஜனங்கள் அந்த விவரங்களைத்தெரிவித்தவுடன், அந்த மனிதனுடைய உருவம் அவ்வாறல்லவென்றும்; அவன் வேஷவிதமாயிருப்பானென்றும், அதுவரையில் கேட்டுக்கொண்டிருந்த விவரங்களெல்லாம் சிறிதும் பயன்படாமற் போயிற்றென்றும் சொல்லிவிட்டு, ஏமாற்றமடைந்தவன்போலப் போய்விட வேண்டும். அப்போது ஜனங்கள் எவ்வித சந்தேகமும் கொள்ளாமலிருப்பார்கள்.”

அவ்வாறு, மனஸ்தத்துவத்தைக் கற்றுக்கொள்வதவசியமென்று துப்பறியும் நிபுணராகிய ஸ்டீன்ஹோர் தம் சிஷ்யரொருவருக்குப் போதனை செய்தார்.

யுத்த காலத்தில் துப்பறியும் முறைகள்.

இதுவரையில் சொல்லப்பட்ட முறைகளெல்லாம் சமாதான காலத்தில் துப்பறிவதற்காக அனுசரித்த ஏற்பாடுகளைக் குறிப்பிடுகின்றன. இனி யுத்தகாலத்தில் துப்பறிவதற்குச் செய்யப்படும் ஏற்பாடுகளைப்பற்றிச் சொல்வோம். யுத்தகாலத்தில் இரண்டுவிதமாய் துப்பறியப்படுகிறது. ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய ராணுவ உடைகளுடன் சத்துருவின் இருப்பிடத்துக்குச் சென்று அங்கு கிடைக்கக்கூடிய சமாசாரங்களை அறிந்துவருகிறார்கள். இவர்கள் சத்துருவின் கையில் பிடிபட்டால், சாதாரண ராணுவக்கைதிகள் போல, சிறையில் அடைக்கப் படுகிறார்கள். இவர்கள் சமாசாரம் அறியும் உடையைச் சேர்ந்தவர்களாவார்கள். ஆனால் துப்பாளிகள் பொய்யான உடை யுடை பாவனைகளால் சத்துருவின் இருப்பிடத்துக்குச் சென்று சமாசாரங்களை அறிந்துகொள்வது வழக்கம். இவர்கள் சத்துருவின் கையில் பிடிபட்டால் உடனே சுட்டுக் கொல்லப் படுவார்கள். ஆனால் சமாசாரம் அறிகிறவர்கள் அவ்வாறு சத்துருக்களால் கொல்லப்படுவதில்லை; அவர்கள் போர்க்களத்தில் பிடிக்கப்படும் மற்றத் துருப்புகளைப் போலவே கைதிகளாக நடத்தப்படுகிறார்கள். ஆகாயவிமானிகளும் குதிரையாட்களும் காலாள்துருப்புகளும் சத்துருவின் இருப்பிடத்துக்

குச் சென்று மறைவாயிருந்து இரகஸ்யமான விதங்களில் சமாசாரங்களை அறிந்தாலும், துப்பாளிகளாகக் கருதப்படுவதில்லை. துப்பாளிகளின் முக்கிய லக்ஷண மென்ன வென்றால், அவர்கள் மாறுவேடம் பூண்டு பொய்யான பாவனைகளாலும் காரணங்களாலும் சமாசாரத்தை அறிய முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு துப்பறிகிறவர்கள்—ஸ்திரீ, குழந்தை, கிழவரானாலும்—மரண தண்டனையை அடைகிறார்கள். அவ்வளவு கடுமையான தண்டனைக்கும் அஞ்சாமல் துப்பாளிகள் தூற்றுக் கணக்காய் இருந்து வருகிறார்கள். துப்பறிகிறவர்கள் பயங்கரமான தண்டனைக் குள்ளாவதால், அவர்கள் அத்தொழிலைத் தாங்களாகவே ஏற்றுக் கொள்ள மூன்வருகிறார்களே யொழிய ராணுவ அதிகாரிகளால் பலவந்தஞ்செய்யப்படுவதில்லை. சத்துருவின் நடவடிக்கைகளையும் யோசனைகளையும் ஏற்பாடுகளையும் விவரமாய் அறிந்து கொண்டு வரவேண்டு மென்று சேனாதிபதி தெரிவித்தவுடன் தம் சேனையிலுள்ள அநேகம் பேர் அந்தபயங்கரமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறார்கள். துப்பாளிகள் மாறுவேடந் தரித்து தங்கள் நடவடிக்கைகளில் பிறருடைய சந்தேகத்தைக் கிளப்பாமல் கிடைக்கக்கூடிய எல்லா சமாசாரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆகையால் அவர்கள் அநேகமாய் சமாதான காலத்தில் நிரந்தரமாய் நியமிக்கப் பட்டவர்களாயிருக்கிறார்கள். ஸ்திரீகளும், ஸ்திரீகளைப்போல வேடந் தரித்தவர்களும், ராணுவத்தில் பலவித ஊழியங்களைச் செய்வதற்காக அமர்ந்துள்ள வர்களும், அவ்வாறு இரகஸ்யமாயிருந்து சமாசாரங்களை அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் சத்துருக்களுக்கு மத்தியிலிருந்து கொண்டு இரகஸ்யமாய் அறிந்து கொள்கிற சமாசாரத்தை தங்கள் கக்ஷியாருக்கு எவ்வாறு தெரிவிக்க முடியும்? கம்பியில்லாத் தந்தியந்திரங்களை இரகஸ்யமாய் வைத்திருந்து அவைகளின் மூலமாக சமாசாரத்தை இரகஸ்ய பாஷையில் அறிவிக்கலாம். அல்லது பலவித சமிக்ஞைகளால் அறிவிக்கலாம். ஆயினும் மற்றொரு ஆக்சியமான முறையுமிருக்கிறது. கம்பித் தந்திகளையும் கம்பியில்லாத் தந்திகளையும் ராணுவ அதிகாரிகள் வசப்படுத்திக் கொண்ட போதிலும், நபால் அதிகாரிகள் ஒவ்வொரு கடிதத்தையும் சோதனை செய்த போதிலும், தூரப்புகள் முனபுறத்தில் விஸ்தாரமாய்ப் போர் செய்து கொண்டிருந்த போதிலும், ஒவ்வொரு நகரமும்

கிராமமும் காவல் செய்யப்பட்டிருந்தபோதிலும், துப்பாளிகள் எவ்வித மாகவோ நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள தங்கள் கக்ஷியாருக்கு சமாசாரத்தை அறிவித்து விடுகிறார்கள். துப்பறிகிறவர்கள் சத்துருக்களுக்கு மத்தியிலிருந்துகொண்டே அவர்களுக்குத் தெரியாமல் தங்கள்கக்ஷியாருக்கு எவ்வாறு அறிவித்துவிடுகிறார்கள்? புறுக்கள் மூலமாய் அவ்வாறு அறிவிக்க சாத்தியப்படுகிறது.

ஆச்சரியமான துப்பறியும் பக்ஷி.

இந்த மகாயுத்தத்தை நடத்துகிற வல்லரசுகள் ஒவ்வொருவரும் புறுக்கள் வளர்த்து வருவதாகத் தெரிகிறது. அந்த புறுக்கள் முற்றுகையிடப்பட்ட பட்டணங்களிலிருந்தும் கோட்டைகளிலிருந்தும், துயரத்திலாழ்ந்த தலைமைஸ்தலங்களிலிருந்தும், பீதியடைந்த கிராமங்களிலிருந்தும் புறப்பட்டு இரகஸ்யத்தைச் சுமந்துகொண்டு, ராணுவ அதிகாரிகளையும் தபால் சோதகர்களையும் மீறிச்சென்று, ஆகாயத்தில் காவல் செய்யும் விமானங்களினின்றும் தப்பித்துக் கொண்டு, போர்க்களத்தில் பொழியும் தெருப்பைத் தாண்டி, எவ்வித மனித சகாயமுமின்றி ஒரு நிமிஷத்துக்கு ஒரு மைல் வீதம் சொந்த தேசத்துக்கு விரைந்து சமாசாரத்தைச் சேர்ப்பிக்கின்றன. இந்த மகாயுத்தத்தின் உக்கிரத்தை ஆரம்பத்தில் தாங்கி நின்ற பெல்ஜிய தேசத்தில் அந்த ஆச்சரியமான புறுக்கள் தோன்றியவை. பெல்ஜியம் அந்த பக்ஷிகளுக்குப் பேர்போனது. அங்கு அவைகள் பயிற்றுவிக்கப் படுகின்றன. சமாதான காலத்தில் பெல்ஜியத்தில் அந்த பக்ஷிகளின் பந்தயம் ஒவ்வொரு வருஷமும் நடத்தப் படுவது வழக்கம். ஒரு பந்தயத்தில் பரிசு பெற்ற பக்ஷி 3½–மணி நேரத்தில் 270 மைல் பிரயாணஞ் செய்திருக்கிறதென்றால், அந்த பக்ஷிகளின் வேகமும் தேகவன்மையும் விளங்கும். அந்த பக்ஷி, தான் வளர்க்கப்பட்ட கூட்டுக்குத் திரும்பச் செல்லும் சுபாவமுள்ளது. அது அந்நிய பிரதேசத்தில் எவ்வளவுகாலம் வைக்கப் பட்டிருந்தாலும் ஆரம்பத்தில் வளர்க்கப்பட்ட இடத்தை மறந்து விடுவதில்லை. அதன்கழுத்திலாவது இறக்கையிலாவது சமாசார மெழுதிய காகிதத்தைக் கட்டிவிடுகிறார்கள். அது அதிக பளுவைத் தாங்கா தாகையால், பெரிய காகிதங்களைக் கட்ட முடியாது. விஸ்தாரமான சமாசாரங்களை எழுதவேண்டியிருந்தால் என்ன செய்வது? சங்கதிகளைப்பெரிய காகிதங்களில் விஸ்தார

மாய் எழுதிய பிறகு, அந்த எழுத்துக்கள் போட்டோகிராப் படத்தில் மிகச் சிறியதாய் பிடிக்கப்படுகின்றன. அவ்வாறு போட்டோகிராப் பிடித்த சிறிய காகிதத்தைச் சுருட்டி புறுவின் இறக்கையில் கட்டி அனுப்பப்படுகிறது. அது சேர்கிற இடத்தில், அந்த போட்டோகிராப்படத்தை பூதக் கண்ணாடிகளில் பார்த்து எழுத்துக்கள் அறிந்து கொள்ளப்படுகின்றன. "மினிமொடிகிராப்" என்று சொல்லப்படுகிற படங்கள் பூதக்கண்ணாடிகள் மூலமாய் விளக்குவெளிச்சத்தைக்கொண்டு காட்டப்படுவதை சென்னை நகரத்தில் அநேகர் பார்த்திருக்கலாம். அம்மாதிரியான கருவிகளைக்கொண்டு கண்ணுக்குத் தெரியாத எழுத்துகளை செவ்வையாய் அறிந்துகொள்ளலாம். பெரிய எழுத்துகள் கண்ணுக்குத் தெரியாத அளவு மிகச் சிறியதாய் படம் பிடிக்கப்பட்டு, பிறகு பூதக்கண்ணாடிகள் மூலமாய் பெரிதாகச் செய்யப்படுகின்றன. சமாசாரப் பத்திரிகையைப் போன்ற பதினாறு பக்கங்களில் அச்சடித்த விவரங்களை மேற் சொல்லியவாறு போட்டோகிராப் பிடித்தால், சாதாரண பேனாவின் முனையில் அந்த படத்தைச் சுருட்டி விடலாம். அவ்வளவு விஸ்தாரமான சங்கதிகளை அவ்வளவு சிறிதாய்ச் சுருக்கிவிடலாம். இவ்வித புறுக்களை உபயோகிக்கும் வழக்கம் வெகு காலமாயிருந்து வருகின்றது. ஆயினும் 1870-ம் வருஷத்தில் பிரஞ்சு—ஜெர்மானிய யுத்தத்தில், பாரிஸ் நகரம் முற்றுகையிடப் பட்டபோது அந்த புறுக்கள் அதிகமாய் உபயோகிக்கப்பட்டன. அவ்விஷயத்தை அறிந்துகொண்ட ஜெர்மானியர் அதுமுதல் புறுக்களை ஆயிரக்கணக்காய் வளர்க்க ஆரம்பித்தார்கள். பெல்ஜியத்தில் வளர்க்கப் படும் புறுக்கள் அந்த வேலைகளைச் செய்வதில் மிகுந்த திறமை யுடையவை. பிறகு மற்ற வல்லரசுகளும் புறுக்களை வளர்க்கத் தொடங்கினர்கள். அந்தபுறுக்கள் யுத்தகளத்தில் மற்றொரு விதமாயும் உபயோகிக்கப் படுகின்றன. அவைகளின்மார்பில் போட்டோகிராப் கருவி கட்டப்படுகிறது. அந்த கருவி ஒரு நிமிஷத்துக் கொருமுறை படம் பிடித்துக் கொண்டேயிருக்கும். அந்த பக்ஷிகள் சத்துருவின் இருப்பிடத்துக்குமேல் உயரப்பறந்து சென்றால், அவைகளின் மார்பிலுள்ள கருவி வழியெல்லாம் அநேக படங்களைப் பிடித்து விடுகிறது. அந்த பக்ஷிகள் திரும்பி வந்தவுடன் அந்த படங்கள் சோதனை செய்யப்படுகின்றன. சத்துருவின் இருப்பிடத்தைப் பற்றிய விவரங்கள் படங்களில் தெளிவாய் காணப்படுகின்றன.

துப்பாளிகளின் அதிசயமான உபாயங்கள்.

துப்பாளிகள் அநுசரிக்கும் பலவித உபாயங்களைப் பற்றிச் சொல்வோம்.

கடற்கரையோரத்திலுள்ள ஒரு நகரத்தில் துப்பறியும் ஜெர்மானியன் ஒருவன் தன் வீட்டில் ஜென்னல் வழியாய் பிரகாசமான ஒரு விளக்கைக் கொண்டு கடலில் மிதந்து வந்த ஒரு சிறு படகுக்கு சமிக்ஞை செய்தான். அத்தப் படகிலுள்ளவன் அந்த சமிக்ஞைகளுக்கு என்ன அர்த்தமென்று அறிந்து கொண்டு, தன் படகில் மறைத்து வைத்திருந்த ஒரு புறாவின் இறக்கையில் சங்கதிகளை எழுதி அனுப்பினான். அந்த புறு ஆகாயத்தில் பறந்து சென்று மறைந்து விட்டது. ஜெர்மன் ராணுவத்திலுள்ள துப்பறியும் இலாகாவுக்கு இரண்டொரு மணிநேரத்துக்குள் அந்த சங்கதிகளின் விவரங்கள் தெளிவாய் தெரிந்து விட்டன.

வம்புகள் பேசப்படுகிற இடங்களில் துப்பாளிகள் சஞ்சாரஞ் செய்வது வழக்கம். சாப்பாட்டு விடுதிகளிலும், மார்க்கட்டுகளிலும் கள்கடைகளிலும் அவர்கள் உலாவுவார்கள். ஒரு கள் கடையில் பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த ஒருமாலுமி அநேக பிரிட்டிஷ் யுத்த கப்பல்கள் ஜெர்மன் கப்பற்படையைத் தாக்குவதற்காக புறப்பட்டிருக்கின்றன வென்று குடிவெறியில் சொல்லிக் கொண்டிருந்தான். அங்கிருந்த ஒரு துப்பாளி அச் செய்தியைக் கேட்டவுடன், தன்பைலிகள் வண்டியில் ஏறிக்கொண்டு கடற்கரைக் கருகில் சென்று, தன்வண்டியின் முன்புறத்து சக்கிரத்தைப் பழுது பார்ப்பதுபோல நின்றுகொண்டு, வண்டியின் விளக்கை அசைத்தும் அணைத்தும் பலவிதமாய் சமிக்ஞை செய்துவிட்டான். அந்த சமிக்ஞைகள், கடலின்கீழ் மறைந்திருந்த ஒருஜெர்மன் சப்மரின் கப்பலிலுள்ள கண்ணாடிக் குழாய் வழியாக அறியப்பட்டு ஜெர்மன் கடற்படைக்குத் தெரிவிக்கப்பட்டன.

ஜெர்மன ஆகாய விமானம் இரவில் பிரயாணஞ்செய்து இரகஸ்யமான இடத்தில் இறங்கி துப்பாளிகளிடமிருந்து சமாசாரங்களை அறிந்துகொண்டது. அங்கு ஒளித்து வைக்கப்பட்ட எண்ணெய், வெடிகுண்டு, ஆகாரம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு திரும்ப ஜெர்மன் கடற்கரைக்குச் சென்றுவிட்டது.

துப்பறியும் ஜெர்மானியர் மற்றொரு உபாயத்தால் சமாசாரங்களை அறிவிக்கிறார்கள். சித்திரப்படங்களை எழுதி அவைகளை கடுதலிலைமையி லுள்ள தேசங்கள் மூலமாய் ஜெர்மனிக்கு அனுப்புகிறார்கள். ஆனல் அவர்கள் எந்த தேசத்திலிருக்கிறார்களோ அந்த தேசத்துத் தபால் அதிகாரிகள் அந்த கடிதங்களைச் சோதனை செய்வார்க ளாகையால் அந்த சோதனையால் சந்தேகமேற்படாமலிருப்பதற்கு துப்பாளிகள் அநேக உபாயங்களைச் செய்கிறார்கள். இயற்கைத் தோற்றங்களை சித் திரப்படத்தில் காண்பிப்பதுபோல் எழுதுகிறார்கள். விசித்திரமான தோட்டங்களும் வேலிகளும் குடிசைகளும் படத்தில் காண்பிக்கப் படுகின்றன. அந்த சித்திரப்படம் ஜெர்மனியிலுள்ள துப்பறியும் இலாகாவுக்குக் கிடைத்தவுடன் பெரிய அரண்களைக்கொண்ட கோட் டையாக அர்த்தம் செய்யப்படுகிறது. குடிசை, கோட்டையைக் குறிப்பிடுகிறது; மரங்கள் பீரங்கிகளைக் குறிப்பிடுகின்றன; சிறு செடிகளும் புதருகளும் பீரங்கிகளை ஏற்றியுள்ள இரும்புக் கட் டடத்தைக் குறிப்பிடுகின்றன; தோட்டத்துக்கு முன்புறத்திலுள்ள வேலி, இரும்புக் கம்பி வலையைக் குறிப்பிடுகிறது; அவ்வாறு சித் திரத்தில் பயித்தியங் கொண்டவ னென்று கருதப்படுகிறவன் உண்மையில் கைதேர்ந்த துப்பாளியாக மாறிவிடுகிறன். கடற் கரையி லுள்ள துறைமுகப் பட்டணம் விசித்திரமாக எழுதி யனுப்பப்படுகிறது. ஜலமுள்ள பாகங்களை யெல்லாம் பூமிபோல வும், பூமியைக் கடல்போலவும் சித்திரத்தில் எழுதினால் அதில் எவ் வித விபரீதத் தோற்றத்தையும் காணமுடியாது. சில சமயங்களில் வர்ணமில்லாத வெறுஞ் ஜலத்தைபோன்ற நிராவகத்தால் கடிதம் எழுதப்படுகிறது. பிறகு ஓர் உபாயத்தால் அந்த கடிதத்திலுள்ள எழுத்துக்களெல்லாம் நன்றாய்த் தெரியும்படி செய்யப்படுகிறது.

பெல்ஜியத்திலும் பிரஞ்சு எல்லையிலு முள்ள கிராமங் களில் மேலே சொல்லிய உபாயத்தைச் சற்று மாற்றி தபபறி யும் ஜெர்மானியர் அனுசரித்தார்களென்று தெரியவருகிறது. கிராமங்களிலுள்ள வீட்டுக் கதவுகளிலும் சுவர்களிலும் வேலிகளி லும் விசித்திரமான சித்திரங்கள் எழுதப்பட் டிருந்தன. அவைகள் குழந்தைகளால் கிறுக்கப்பட்டவை யென்று ஆரம்பத்தில் கருதப்பட் டன. மாடுகளின் உருவங்கள்பலவிதமாய் எழுதப்பட்டிருந்தன. மாட் டின் கொம்பு, வால், காது, கால், முதலிய அங்கங்கள் அஷ்டகோண

லாக எழுதப்பட்டிருந்தன. துப்பாளிகள் தங்களுக்குள்ள ஒரு இரகஸ்ய பாஷையில்அவ்வாறு பலவித கருத்துகளை அறிவித்தார்கள். சித்திரத்திலுள்ள மாடுகள் ஒவ்வொரு நிலைமையில் ஒவ்வொரு அர்த்தத்தைக் கொடித்தன. நேசத்துருப்புகள் சரியானபடி ரஸ்தாவைப் பாதுகாக்கவில்லை யென்பது சிறிய பசுவிலிருந்து அறிய வேண்டிய குறிப்பு. ரஸ்தாவுக்கிப்பால் பிரெஞ்சு துருப்புகள் பல இருக்கின்றன வென்பதை "மிகப் பெரிய பசுவின்" உருவம் குறிக்கும். அந்த ரஸ்தாவில் முன்னேக்கிச் செல்வதா யிருந்தால் சுற்றியுள்ள இடங்களை நன்கு ஆராய்ந்து கொண்டு அங்கு நேசத்துருப்புகளை அப்புறப்படுத்திய பின்னரே, முன் செல்லவேண்டு மென்பதை "ஆகாயத்தை நோக்கியுள்ள பசுவின் உருவம்" குறிப்பிடும்.

போர்க்களத்தில் மற்றொரு விதமாயும் ஜெர்மன் துப்பாளிகள் சமிக்ஞைகளைச் செய்கிறார்கள். கிராமங்களிலுள்ள வீட்டுக்காரர்கள் சமாதான காலத்தைப்போலவே யுத்த காலத்திலும் துணிகளைத்.தோய்த்து உலர்த்தவேண்டி யிருக்கிறது. அதைச் செய்கிறவன் துப்பறிபவனு யிருந்தால், துணிகளை உலர்த்தும்போது அவைகளை பலவித வரிசைகளாக அடுக்கி சமிக்ஞை செய்யலாம். இடுப்புத் துணி, மேல் துணி, சொக்காய், முதலிய பலவிதமான உடைகளை இனிது வாரியாய் அடுக்குவதாலும் சிறிதும் பெரிதுமாய் ஒழுங்கு படுத்துவதாலும் வர்ணங்களின்படி பிரிப்பதாலும் பலவித கருத்துகளை அறிவிக்கலாம். பளபளப்பான இரும்பாயுதங்களை சூரிய வெளிச்சத்தில் காட்டி சமிக்ஞை செய்யலாம். கைக் கெடிகாரத்திலுள்ள பளபளப்பான மூடியும், செம்மட்டியும் அரமும் அவ்வாறு உபயோகிக்கப் படலாம். அவ்வித சமிக்ஞைகள் முக்கியமாய் பீரங்கிகளைக் குறிபார்த்துச் சுடுவதற்கு மிகவும் உபயோகமானவை. பீரங்கிகளிலிருந்து பாய்கிற குண்டுகள் குறிப்பான இடத்தில் விழுகிறதா வென்று அறிந்து சொல்வதற்கு அந்த இடத்துக்கருகிலுள்ள கிராம வாசி எளிதாய் சமிக்ஞை செய்யலாம்.

துப்பாளிகள் தங்கள் வீட்டுக்கூரையிலுள்ள புகைப்போக்கிகளில் புகையை அதிகமாகவும் குறைவாகவும் விடுவதால் சமிக்ஞைகளைச் செய்கிறார்கள். இரவில் பலவித வர்ணங்கொண்ட கண்ணாடிகளை விளக்கில் அமைத்து அதன் வெளிச்சத்தால் சமாசாரம் அறிவிக்கிறார்கள். ஒரு பிரஞ்சு நகரத்தில் பெரிய கோபுரத்தின் மேல்

கெடிகாரம் அமைக்கப்பட் டிருந்தது. ஒரு ஜெர்மன் துப்பாளி அந்த கோபுரத்தின் மேலேறி அந்த கெடிகாரத்தில் நேரத்தைக் குறிப்பிடும் முள்களைப் பலவிதமாய்த் திருப்பிவைத்து சமிக்ஞை செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. பிரான்ஸுக்கும்பெல்ஜியத்துக் கும் இடையே யுள்ள பிரதேசத்தில், காற்று விசையால் வேலைசெய் யும் யந்திரசாலைகள் அநேகம் இருக்கின்றன. அந்த யந்திரங்களுக்கு மேல் பெரிய சக்கரங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அவை களைப் பலவாறு திருப்பி சமிக்ஞை செய்வது சுலபமாயிருக்கிறது.

மகா யுத்தம் தொடங்கிய சில தினங்களுக்குப்பிறகு பிரிட்டிஷ் சேனை பிரான்ஸில் வந்திறங்கப் போவதாக வதந்தியாயிருந்தது. பிறகு குறித்த தினத்தில் பிரிட்டிஷ்சேனை பிரஞ்சு துறைமுகமொன் றில் இறங்கப்போவதாக பிரஞ்சு அதிகாரிகள் அறிவித்தார்கள். அன்றதினம் காலை திரளான ஜனங்கள் துறைமுகத்தில் கூடினார் கள். குறித்த நேரமானபிறகு துறைமுகத்திலிருந்து செல்கிற பாதைகளை யெல்லாம் பிரஞ்சு அதிகாரிகள் அடைத்துவிட்டு, துறை முகத்தில் கூடியிருந்த ஜனங்களனைவரையும் சோதனைசெய்தபோது பிரிட்டிஷ் சேனையின் வரவை ஆவலாய் எதிர்பார்த்திருந்த அநேக ஜெர்மன் துப்பாளிகள் அகப்பட்டுக் கொண்டனர்.

போர் முனையில் பல ஸ்திரீ துப்பாளிகள் அகப்பட் டிருக்கி றார்கள். ரெயில்வே ஸ்டேஷன்களிலும் அவர்கள் காத்திருந்து துரு ப்புகள் போவதையும் வருவதையும் தெரிந்துகொள்கிறார்கள். எயி ஸன் நதிக்கரையில் சண்டை நடந்த பொழுது மின்சார விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு ஜெர்மானியர்களுக்கு துப்பு அறிவித்த ஒரு ஸ்திரீ கைது செய்யப்பட்டாள்.

மேலும் மற்றொரு அழகான ஸ்திரீ ஒரு மோட்டார் வண்டி யில் ஏறிச்சென்று, நேசத் துருப்புகளின் ஸ்தானத்தை அறிந்து கொண்டு ஜெர்மன் போர் முனைக்குச் செல்லும் வழியில், கைது செய்யப்பட்டாள். லார்ட் கிச்சனர், ஜெனரல் ஜாப்ரே இவர்களிட மிருந்து அனுமதி சீட்டுப் பெற்றிருந்ததாக ஒரு பொய்ப் பத்திர மும் அவளிட மிருந்தது.

ஜெர்மன் குதிரைப்படை முன்செல்லும் போ தெல்லாம் சாதா ரண உடைதரித்த மனிதர்கள் வெகு தூரம் முன்னே துப்புறியச் செல்கின்றனர். அதுமன்றி, ஜெர்மன் படைகள் பின் வாங்கும்

போது, அவர்கள் காலிசெய்துவிட்டுப்போன கிராமங்களிலும் நகரங்களிலும் பல ஜெர்மன் அதிகாரிகள் பிரஞ்சு பிரிட்டிஷ் ராணுவ உடைகளைத் தரித்துத்தங்கியிருந்து நேசத்துருப்புகளின் நடமாட்டங்களை அறிந்துகொள்கின்றனர்.

பிரஞ்சு எல்லைப்புறத்தில் பிரிட்டிஷார் சண்டை செய்துகொண்டிருந்தபோது, போர்க்களத்தை நோக்கி பிரிட்டிஷ் வெடி மருந்துப்படை சென்றுகொண்டிருந்தது. வெகு தூரத்திலிருந்து ஒரு பிரிட்டிஷ் மோட்டார் வண்டி விரைந்து வந்தது. அதிலிருந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர், அந்த பாதையில் உலான் என்ற ஜெர்மன் குதிரைப்படை யொன்று இரகஸ்யமாய் வருவதாகத் தெரிகிறதென்றும் வெடிமருந்துப்படை வேறு பாதையில் திரும்பிச் செல்ல வேண்டுமென்றும் அறிவித்து அந்த உத்தியோகஸ்தர் புதிய பாதையில் தம் வண்டியைத் திருப்பி விரைவாய்ப் போய்விட்டார். அந்த எச்சரிக்கையைக் கேட்டதும் வெடி மருந்துப்படையிலிருந்த எல்லா பிரிட்டிஷ் துருப்புகளும் உலான் படையை எதிர்ப்பதற்காகச் சென்றார்கள். அந்த துருப்புகள் வெகு தூரம் வழிநடந்தும் உலான்களை சந்திக்கவில்லை. அதற்குக்காரணம், எச்சரிக்கை செய்துவிட்டுப்புதியபாதையில் சென்ற நமது பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் சிறிது நேரத்துக் கெல்லாம் சுட்டுக்கொல்லப் பட்டதிலிருந்து தெரியவந்தது. மோட்டார் வண்டியில் சென்ற அந்த உத்தியோகஸ்தர் வழியில் சில பிரிட்டிஷ் குதிரைப் படைகளை சந்தித்தவே, அந்த பிரிட்டிஷ் குதிரையாட்கள் மோட்டார்வண்டியிலிருந்த வரைக்கவனித்தார்கள். அந்த மோட்டார் வண்டி இங்கிலாந்தில் செய்யப் பட்டதுதான்; அதிலிருந்த உத்தியோகஸ்தரின் பேச்சுக் தொனியும் பிரிட்டிஷாரைப் போலவேயிருந்தன; ஆனால் அவர்தம் கால்களில்குதிரையாட்களின் உடையும், மற்ற அங்கங்களில் காலாள் துருப்புகளின் உடையும் தரித்திருந்தார். அதைக்கவனித்த பிரிட்டிஷ் குதிரையாட்கள் தக்ஷணமே துப்பறிபவர்களுக்கு விதிக்கப்படும் மரணதண்டனையை நிறைவேற்றினர்கள்.

அம்மாதிரியான துப்பறியும் ஏற்பாடுகளை எல்லாவல்லரசுகளும் அனுசரித்து வருகின்றன. ஆஸ்டிரியா மாகாணங்களிலுள்ளஸ்லாவ் ஜனங்களின் மனதை ருஷியத்துப்பாளிகள் வசப்படுத்திக்கொண்டதாகத் தெரிகிறது. ஆஸ்டிரிய மாகாணமாகிய காலீஷியாவின் மீது

ருஷியத்தருப்புகள் படையெடுத்த போது, அத்தருப்புகளின் நடவடிக்கைகளை ஊர் ஜனங்கள் வெளிவிடாமல் இரகஸ்யமாய் வைத்திருந்தார்கள். பிறகு காலிஷியாவில் சண்டைசெய்த ஆஸ்டிரியப் படைகளில் அநேக ஸ்லாவ் தருப்புகளிருந்தபடியால், அவர்கள் ருஷியரிடம் சரணமடைந்தார்க ளென்று அடிக்கடி கேள்விப்பட்டோம்.

இந்த மகாயுத்தம் ஆரம்பித்த பிறகு சில மாதங்களுக்குள்ளாக பிரான்ஸிலும் பெல்ஜியத்திலுமிருந்த ஜெர்மன் துப்பாளிகள் பெரும் பான்மையோரும் நேசத்தருப்புகளால் கண்டு பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டதால், அதன்பிறகு ஜெர்மானியர் நேசப்படைகளைப் பற்றிய விவரங்களைச் செவ்வையாய் அறிந்துகொள்ள முடியாமல் அநேக தவறுகள் செய்துவந்தார்கள். ஜெர்மன்தருப்புகள் படையெடுத்துச் சென்ற இடங்களில் அவர்கள் நேசக்கக்ஷியாரின் துப்பாளிகளைப் பிடித்தாடு, குற்றமற்ற ஜனங்களையும் துப்பாளிகளென்று சாக்குசொல்லிப் பிடித்து வைத்தார்கள்.

இந்த மகா யுத்தந்தொடங்கிய பிறகு, யுத்த மண்டலத்தில்நூற்றுக்கணக்கான துப்பாளிகள் இரண்டு கக்ஷியாலும் கண்டு கொள்ளப்பட்டு, பிடிக்கப்பட்ட இடத்திலேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள். பயங்கரமானதொழிலேற்றுஉயிரை அலக்ஷியமாய்த் துறக்கும் இவர்கள் இறந்துபோகுந்தருணத்தில்சிறிதும் கலங்காமலிருப்பதைக்காணவியப்புண்டாகிறது. அவர்கள் சுட்டுக்கொல்லப்படும்போது இரண்டு சாதகங்களை வேண்டுவது வழக்கம். அநேகர் தங்கள் கண்களைக் கட்டி விடும்படி வேண்டுகிறார்கள்; சிலர் மதுபானம் அருந்த விரும்புகிறார்கள். இரண்டாவது விருப்பம் சாத்தியமானபோதே திருப்தி செய்யப்படுகிறது. முதல் வேண்டுகோளின்படி அவர்கள் கண்கள் கட்டப்பட்டு மரத்தின் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு சுடப்படுகிறார்கள். அப்படிப்பட்ட துப்பாளிகளில் அநேகர் தங்கள் தேசநன்மைக்காக உயிர் துறப்பதைத்தவிர மனிதப்பிறப்பின் பயன் வேறெதுவுமில்லையென்று நம்பி, உலகவாழ்க்கையினின்றும்மறைந்து போக கூசுவதேயில்லை. அளவற்ற உலகப் பற்றுள்ள மேனுட்டார் தத்துவஞானத்தின் வைராக்கியத்தை சற்றும் உணராத வராயினும், தேகத்தைத் தரும்பினும் கேவலமாக நினைத்து நினைத்தவாறே உடலை லக்ஷியமின்றி கழற்றி எறிந்து விடுகிறார்கள்.

33-வது அத்தியாயம்.

பெல்ஜியத்தின் மேல் ஜெர்மானியரின் படையெடுப்பு.

ஜெர்மன் சேனை எந்த காலத்திலும் யுத்தத்தைத் தொடங்குவதற்கு ஆயத்தமாக வைக்கப்படுவது வழக்கம். ஆகையால் 1914-ம் வருஷம் ஜூலை மாதமுதற்கொண்டே யுத்த மேகங்கள் ஐரோப்பாவை மூடிக்கொண்டு வந்தபோது, ஜெர்மன் சேனையில் செய்யப்பட்டு வந்த மும்முரமான ஏற்பாடுகளைப்பற்றிச் சொல்லத்தேவையில்லை. ஜூலை 26-ந்தேதி ஜெர்மன்சேனாதிபதியாகிய ஜெனரல்வான் மோட்கி தேகசௌக்கியத்துக்காகச் சென்றிருந்த ஸ்தலத்திலிருந்து பெர்லினுக்குத் திரும்பிவந்தார். சேனாதிபத்தியஉத்தியோகஸ்தர்கள் யுத்த சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் சோதித்தார்கள். ஜூலை 30-ந்தேதி அல்ஸேஸ் மாகாணத்தில் வழக்கமாய் நடத்தப்படுகிற யுத்த பயிற்சையைத் தொடங்கவேண்டுமென்று சேனாதிபதி அறிவிக்க, அன்று தினம் ஜெர்மானியரின் நிரந்தரமான சேனைமுழுவதும் அங்கு ஒன்று கூடிற்று. மறுதினம் அவ்வாறு எந்த நிமிஷத்திலாயினும் பிரஞ்சு எல்லையில் யுத்தந்தொடங்க ஜெர்மன் சேனை தயாராய் வைக்கப்பட்டிருந்தது. யுத்த நடவடிக்கைகளை எவ்வாறு ஆரம்பிப்பதென்பதும், சத்துருவின் பிரதேசத்தின் மேல் எவ்விதமாய்ப் படையெடுத்துச் செல்வதென்பதும் முன்னதாக யோசனை செய்யப்பட்டிருந்ததோடு, அந்த யோசனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான ரயில்பாதைகள் ரோட்டுகள் முதலிய சகலவிதமான வசதிகளும்முன்னதாகவே செய்துவைக்கப்பட்டன என்று சொல்லியிருக்கிறோம். யுத்தந் தொடங்கவேண்டுமென்ற ஒரு உத்தரவு வருவதுதான் தாமஸமாயிருந்தது. ஆகஸ்ட் 1-ந்தேதி ஜெர்மனி யுத்தந்தொடங்கப் போவதாக பிரான்ஸுக்கும் ருஷியாவுக்கும் அறிவித்தது. தக்ஷணமே, ஜெர்மன் ராணுவ யந்திரமுழுவதும் பிரமாண்டமான கெடியாரத்தைப்போல, ஒழுங்காய் வேலை செய்ய ஆரம்பித்தது. ஜெர்மன் சேனை எவ்விதமாய்ப் படையெடுக்குமென்பதைப்பற்றிய விவரங்கள் பிரஞ்சுக் காரருக்குங்கூட தெரியாமல் இரகஸ்யமாயிருந்தபோதிலும், ஜெர்மன் யுத்த நடவடிக்கைகளைப்

பற்றி ஒரு பொதுவான விஷயம்மட்டும் யாவருக்கும் தெளிவாய் விளங்கிற்று. ஜெர்மன் சேனை யுத்த கடவடிக்கைகளை தாமஸிலின்றித் தொடங்கி மிகவும் விரைவாய் நிறைவேற்றுமென்று ஊரவரும் உறுதியாய் நம்பினார்கள். அதற்குக்காரணம், ரஷியசேனையை ஒரு மாதத்துக்குள்ளாக எதிர்க்கும்படி நேரிடுமென்பதுமட்டு மல்ல; சென்ற சில வருஷங்களாகத் தன் வன்மையை விருத்திசெய்துகொண்ட பிரஞ்சு சேனையை எளிதாய் முறியடிக்க வேண்டுமானால் ஜெர்மன் சேனை மிகுந்த விரைவும் வேகமுங்கொண்டு படையெடுத்தால் தான் அது சாத்தியமாகுமென்று ஜெர்மானியர் நினைத்திருந்ததுமாகும்.

லக்ஸம்பர்க் நாட்டை வசப்படுத்திக்கொண்டது.

ஆகஸ்ட் 2-ந்தேதி யன்று லக்ஸம்பர்க் நாட்டார் விடியற்காலையில் சுண்விழித்து எழுந்தவும் தாங்கள் ஸ்வாதீனத்தை இழந்து விட்ட ஜனங்களாக மாறியதை உணர்ந்தார்கள். ஏனெனில் அந்நாட்டிலுள்ள எல்லா ரயில் பாதைகளிலும் ரோட்டுகளிலும் ஜெர்மன் ராணுவ உடை தரித்திருந்தவர்கள் ஆயுதபாணிகளாய் காவல் செய்துகொண்டிருந்ததை அந்காட்டார் கண்டு திகைத்துப்போனார்கள். ஜெர்மன் படைகள் ஒன்றின்பின் ஒன்றாய் எல்லாப் பாதைகளிலும் சென்றுகொண்டிருந்ததையும் கண்டார்கள். லக்ஸம்பர்க்கிலும், பிரஞ்சு, பெல்ஜிய எல்லைகளிலுமுள்ள முக்கிய ஸ்தலங்களை தாமஸிலின்றி வசப்படுத்திக் கொள்வதற்காக ஜெர்மன் படைகள் விரைவாய்ப் பிரயாணஞ் செய்வது அவசியமாயிருந்தது. ஆகையால் ஜெர்மன் படைகள் இலேசான பீரங்கிகளையும், கூடுமான வரையில் குறைவான ஆகாரத்தையும் வெடிமருந்தையும் கொண்டு போயின. லக்ஸம்பர்க் முழுவதிலும், ஏராளமான ஜெர்மன் தப்பாளிகள் நிரம்பியிருந்தார்கள். இரண்டொரு தினங்களுக்கு முன்பாக பெரிய உத்தியோகங்களிலும் உயர்ந்த அந்தஸ்திலும் காணப்பட்டவர்கள், அன்று தினம் ஜெர்மன் ராணுவ உடைகளைத் தரித்துக்கொண்டிருந்ததை அந்நாட்டு வாசிகள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். லக்ஸம்பர்க் நாட்டிலுள்ள எல்லா முக்கிய ஸ்தலங்களையும் ஜெர்மானியர் வசப்படுத்திக் கொண்டார்கள். அந்நாட்டில் ஆகாரம், வெடிமருந்து வண்டிகள் முதலிய சாமான்கள் இன்னின்ன இடங்களில் கிடைக்குமென்பதை ஜெர்மன் துருப்புகள் எளிதாய் அறிந்துகொண்டதற்கு தப்பாளிகளே காரணமாகும்.

லக்ஸம்பர்க் நாட்டார் ஜெர்மானியருக்கு எவ்வித இடைஞ்சலும் செய்யாம லிருப்பதற்காக அந்நாட்டி லுள்ள முக்கியஸ்தர்களே ஜெர்மானியர் பிடித்துவைத்தார்கள். அவ்வாறு லக்ஸம்பர்க் நாட்டார் திடீரென்று ஜெர்மானியரின் அதிகாரத்துக்கு உட்பட்டு விடவே, அவர்கள் ஜெர்மானியரை எதிர்ப்ப தென்ற யோசனை கூட செய்ய மூடியாதவர்களாய் அடங்கி யிருந்தார்கள். அந் நாட்டுத் தலைமை ஸ்தலமாகிய லக்ஸம்பர்க் என்ற நகரத்தி லுள்ள முக்கியமான நகரப்பாலத்தை ஜெர்மன் படைத்தலைவர் வசப்படுத்திக் கொண்டிருந்ததைக் கண்டு அந்நாட்டு மந்திரிகளுள் ஒருவர் அங்கு வந்து அந்த ஜெர்மன் படைத்தலைவரிடம் ஆக்ஷேபித்தார். லக்ஸம்பர்க் நாடு நடுநிலைமையிலுள்ள தேசமென்று ஜெர்மன் சக்கரவர்த்தி கையெழுத்து செய்திருந்ததை அந்தமந்திரி ஜெர்மன் உத்தியோகஸ்தருக்குச் சொன்னர். அதன் விவரங்களெல்லாம் நன்றாய் அறிந்திருப்பதாகவும் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி நடப்பதாகவும் ஜெர்மன் உத்தியோகஸ்தர் பதில் சொன்னர். கொஞ்ச நேரஞ் சென்றபின், லக்ஸம்பர்க் நாட்டு அரசியும் அந்நாட்டு சேனைத்தலை வரும் அந்தஜெர்மன் உத்தியோகஸ்தரிடம் சென்று ஆக்ஷேபித்தார்கள். அந்த உத்தியோகஸ்தர், லக்ஸம்பர்க் அரசியை அரண்மனைக்கு உடனே திரும்பிப் போகச்சொல்லி, தன் கைத் துப்பாக்கியை அந்த சேனைத்தலைவருக்குமுன்னல் மின்னச் செய்தார். இந்த சம்பவங்களை அறிந்துகொண்ட ஜெர்மன்மந்திரி லக்ஸம்பர்க் கவர்ன்மெண்டின் ஆத்திரத்தை அடக்க முயன்றார். அவர் லக்ஸம்பர்க் நாட்டின்படையெடுப்புக்கு சமாதானஞ் சொல்லி, சத்துருக்கள் அந்நாட்டை வசப்படுத்திக்கொள்ளாமலிருப்பதற்குஜெர்மன் படைகள் அங்குகாவல் செய்து கொண்டிருப்பதாக அறிவித்தார். லக்ஸம்பர்க் நாட்டார் ஜெர்மன் சக்கரவர்த்தியின விருப்பத்தை ராஜாக்ஞையாக உணர்ந்து அதை மீறி நடப்பதாக உத்தேசிக்கவில்லை.

லீஜ்கோட்டைகளை நோக்கி ஜெர்மன் துருப்புகள் குவிந்தன.

லக்ஸம்பர்க் நாட்டின் வழியாகச் சென்ற ஜெர்மன் படைகள் தெற்கு பெல்ஜியமுழுவதும்பாவி, பிரான்ஸுக்கும் பெல்ஜியத்துக்கு மிடையே எல்லைப் புறத்திலுள்ள முக்கிய ஸ்தலங்களை வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நோக்கங் கொண்டன. அவ்வாறு சென்ற ஜெர்மன் படைகள் ஆகஸ்ட் 3-ந் தேதி

லீஜ் கோட்டைகளுக் கருகில் வந்து சேர்ந்தன. அதற்குள்ளாக லீஜுக்குக்கிழக்கிலும் வடக்கிலும் ஜெர்மன்எல்லையிலிருந்து அநேக ஜெர்மன் படைகள் லீஜ் கோட்டைகளை நோக்கிப் புறப்பட்டு வந்தன. எல்லாப் பாதைகளிலும்புகுந்து பெல்ஜியத்தை வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே ஜெர்மன் படைகளின் ஆரம்ப நோக்க மாகும். லீஜ் நகரத்துக்கு நேர்கிழக்கிலுள்ள ஜெர்மன் எல்லையிலிருந்து சில ஜெர்மன் படைகள் புறப்பட்டு, லிம்பர்க் என்ற பெல்ஜியப் பட்டணத்தை வசப்படுத்திக் கொண்டன. யுத்தத்தில் சம்பந்தப்படாமல் நடு நிலைமையிலுள்ள பெல்ஜிய தேசத்தின் மேல் ஜெர்மானியர் படையெடுப்பார்களென்றுவது, அவ்வாறு படையெடுத்தாலும் அவ்வளவு சீக்கிரமாய் நுழைந்து விடுவார்களென்றுவது பெல்ஜிய கவர்ன்மெண்டு நினைக்கவில்லை. ஆகையால் லிம்பர்க் நகரத்தில் ரயில்வே ஸ்டேஷனும், ரயில் பாதையும் ரயில் வண்டிகளும் சமாதான காலத்தில் ஒழுங்காய் இருப்பதுபோலவே அவற்றைஜெர்மானியர் வசப்படுத்திய போதும் கண்டார்கள். அங்கிருந்த ஏராளமானரயில்வண்டிகளும் ரயில் எஞ்ஜின்களும் ஜெர்மன் துருப்புகளை லீஜ்நகரத்துக்கு ஏற்றிக்கொண்டு செல்வதற்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தன.

லீஜுக்கு வடக்கிலிருந்து புறப்பட்ட ஜெர்மன்படைகள் அவ்வளவு எளிதாய் முன் செல்ல முடியவில்லை. லீஜுக்கு வடக்கில் பெல்ஜிய எல்லையிலுள்ள வைஸ் என்ற சிறு பெல்ஜியப்பட்டணம் மியூஸ் நதிக்கரையிலிருக்கிறது. அந்தப்பட்டணத்தைவசப்படுத்திக்கொள்ள ஜெர்மன் படைகள் அங்கு விரைவாய்ச் சென்றன. ஆனால் அவ்விடத்தில் மட்டும் பெல்ஜியத் துருப்புகள் ஏமாந்துபோக வில்லை. அங்கிருந்த மியூஸ் நதிப் பாலத்தை பெல்ஜியர் உடைத்துவிட்டு ஜெர்மானியரை வரவேற்பதற்குத் தயாராயிருந்தார்கள். அந்த நதிக்குக் குறுக்கே ஜெர்மன் இஞ்ஜினியர் படைகள் பாலங் கட்டத் தொடங்கின. ஆனல் அந்த ஸ்தலத்திலிருந்து 3 மைலுக் கப்பால் லீஜ் நகரத்தைச் சேர்ந்த ஒரு கோட்டையிருக்கிறது. அந்த கோட்டையிலிருந்த பீரங்கிகள், ஜெர்மானியர் கட்டின பாலங்களை இடித்துவிட்டன. அவ்வாறு வைஸ் நகரத்தில் ஜெர்மானியர் 20 முறை பாலங்களைக் கட்டி முடிக்க பெல்ஜிய பீரங்கிகளால் 20 முறையும் இடிக்கப்பட்டன. கடைசியாக பாலங் கட்டிமுடிந்தபிறகு ஜெர்மன் படைகள்

பெல்ஜிய தேசத்தின் படம்
மேலும்
ஆண்ட்வர்ப்
ஆல்ஸ்ட்
ஆர்ட்டன்
ஆர்லன்
ஆர்லன்
ஆர்ல

அதன் வழியாய் நதியைக்கடந்துசென்றன. அதுவரையில் சும்மா இருந்த பெல்ஜியத் துருப்புகள்பிறகுதங்கள் மறைவிடங்களிலிருந்து ஜெர்மானியர்மேல் சுட்டு அவர்களைக் கொன்றார்கள். அந்த நதிக்கு இரண்டு கரைகளினுமுள்ள வீடுகளிலிருந்து பெல்ஜியர் தங்கள் சத்துருக்களின் மேல் சுட்டுக்கொண் டிருந்தார்கள். அவ்வாறு கிடீரென்று தாக்கப்பட்ட ஜெர்மன் படைகளுக்குத்துணையாக புதிய ஜெர்மன் படைகள் விரைந்து வந்து, நதிக்கரையி லிருந்த வீடுகளை அழித்து அங்கிருந்த ஜனங்களையும் கொலைசெய்தார்கள்.

ஜேர்மானியரின் கொடுமைகள்.

பலதேசசட்டப்படி, ராணுவத்தைச்சேராத ஜனங்கள் சத்துருக்களைக்கொல்லக்கூடாது. அந்தகுற்றத்தைச்செய்தால் அவர்கள்கொல்லப்படலாமென்று சட்டம் விதிக்கிறது. அந்த சட்டப்படி, ஜெர்மன் துருப்புகள் பெல்ஜிய ஜனங்களிற் சிலரைக்கொன்றார்கள். ஆயினும் குற்ற மற்றவர்களையும் சேர்த்துக்கொல்வது நியாயமல்ல வென்பது விளங்கும். யுத்தகாலத்தில் நீதி விசாரணைகளை சாவகாசமாய் நடத்துவது சாத்தியமல்லவாயினும், ஜனங்களிடத்தில் கூடுமான வரையில் ஈரஇரக்கங்காட்டுவதே நாகரீகம் பெற்றதற்கு லக்ஷணமாகும். ஜெர்மன் படைத்தலைவர் வைஸ் நகரத்திலிருந்த பெல்ஜிய ஜனங்களைப்பார்த்துப்பேசினார். ஜெர்மானியர் பிரான்ஸுடன் யுத்தம் நடத்துகிறார்களே யன்றி பெல்ஜியரிடம் விரோதங் கொள்ளவில்லை யென்றும், பெல்ஜிய ஜனங்கள் யுத்த காலத்துச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டுமென்றும் சாதாரண ஜனங்கள் சத்துருக்களைத் தாக்கினால் மரணதண்டனை அடைவார்களென்றும் சிற பிரசங்கம்செய்து முடித்தார். அந்த படைத்தலைவர் பிரசங்கத்தை முடித்த தருணமே ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு வெடி சப்தம் கேட்டது; படைத்தலைவரும் இறந்து விழுந்தார். எந்த பக்கமாய் வெடி சப்தம் கேட்டதோ அந்த பக்கத்திலிருந்த 8-பேர்களைப் பிடித்து ஜெர்மானியர் உடனே மரண தண்டனையை நிறைவேற்றினார்கள். ஜெர்மானியர் பெல்ஜியத்தில் அவ்வாறு கொடுமைகளைச் செய்துவந்தார்கள். அந்த ராணுவக் கொடுமைகளுக்கு மேற் சொல்லப்பட்ட சம்பவந்தான் ஆரம்பமாகும். இன்னுமொரு விஷயம் இங்கு குறிப்பிடவேண்டும். ஜெர்மானியர் திடீ


சென்று படையெடுத்து விட்டதால், யுத்த காலத்துச் சட்டங்களை அறியாத ஜனங்களுக்கு பெல்ஜிய கவர்ன்மெண்டு புத்தி சொல்லப்போதுமான சாவகாசம் கிடைக்கவில்லை. சில தினங்களுக்குப் பிறகு ஒவ்வொரு பெல்ஜிய கிராமத்திலும் ஜனங்கள் அவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டார்கள்.


வேறு சில இடங்களில் ஜனங்களிற் சிலர் அக்கிரமஞ்செய்தார்களென்ற காரணத்தைக்கொண்டு, கிராமங்களையும் நகரங்களையும் ஜெர்மானியர் தீக்கு இரையாக்கினார்கள். அவ்வாறு ஜெர்மானியர் கொடுமைகள் செய்தால், பெல்ஜிய ஜனங்கள் பீதியால் அடங்கிக் கிடப்பார்களென்றும், யுத்தத்தில் சம்பந்தப்படாத ஹாலண்டு முதலிய தேசத்து ஜனங்களும் பயந்துபோய் ஜெர்மானியருக்கு விரோதமாய் யுத்தஞ் செய்ய நினைக்கமாட்டார்களென்றும் ஜெர்மானியர் நோக்கங் கொண்டிருந்தார்கள்.

வைஸ் நகரத்தில் புதிதாய் வந்த ஜெர்மன் படைகள் சற்று தூரத்திலுள்ள ஓரிடத்தில் பாலத்தைக்கட்டி மியூஸ் நதியைத் தாண்டி, பெல்ஜியத் துருப்புகளை முறியடித்து முன் சென்றார்கள். ஆனால் அவர்கள் வைஸ் நகரத்தை அவ்வாறு முற்றிலும் வசப்படுத்திக் கொள்வதற்கு முன்பாக, மற்றவழிகளில்முன் சென்ற ஜெர்மன் படைகள் லீஜ் கோட்டைகளைத் தாக்கிக்கொண்டிருந்தன.

லீஜ் கோட்டைகள்.

பெல்ஜியத்துக்குக் குறுக்கே செல்கிற மியூஸ் நதிக்கரையில் லீஜ், நாமூர் இவ்விரு நகரங்களும் இருக்கின்றன. அந்த நதியை சத்துருக்கள் தாண்டிச் செல்லாமல் விருப்பதற்காக அவ்விரு நகரங்களைச் சுற்றிலும் அநேக கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. லீஜ் நகரத்திலிருந்து நான்கு மைல்களுக் கப்பால் சுற்றிலும் 12 கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருகோட்டைக்கு மிடையே 2 அல்லது 3 மைல் தூரம் இடைவெளிவிடப்பட்டிருக்கிறது. அந்த 12 கோட்டைகளையும் சுற்றி 33 மைல் தூரமாகிறது. அவ்வளவு விஸ்தாரமாய்க் கட்டப்பட்ட கோட்டைகளையெல்லாம் காப்பதற்கு ஏராளமான துருப்புகள் தேவையாயிருக்கும். ஆனால் லீஜின்காவலுக்கு 40,000 பெல்ஜியத்துருப்புகளைமட்டும் அனுப்பச் சாத்தியப்பட்டது. ஒவ்வொரு கோட்டையையும் காப்பதோடு, அந்த





லீஜ் நகரத்தில் கட்டப்பட்ட முக்கோணவடிவமான கோட்டை.

கோட்டைகளுக்கு இடையேயுள்ள இடைவெளிகளையும் காக்கவேண்டும். அந்த கோட்டைகளெல்லாம் முக்கோணவடிவமாய்க் கட்டப்பட்டன. அதாவது அந்த கோட்டைக்கு 3 மதிற்சுவர்கள் கட்டப்பட்டன. அதன் மூன்று மூலைகளிலும் ஒவ்வொரு பிரங்கி மறைவாய் அமைக்கப்பட்டிருந்தது. அந்த முக்கோணத்துக்கு மத்தியில் 5 பெரிய பிரங்கிகள் வலுவான அஸ்திவாரத்தின் மேல் அமைக்கப்பட்டன; அந்த 5 பிரங்கிகளில் ஒன்று 6 அங்குல பிரங்கி; மற்றவை 5 அங்குல பிரங்கிகள்.

லீஜ் நகரம் முக்கியமான ஸ்தானத்தில் அமைந்திருப்பதைக்கவனிக்கவேண்டும். அதன் வழியாகத்தான் பெல்ஜியக் கடற்கரைக்கு எல்லாப் பாதைகளும் செல்கின்றன. தெற்கு பெல்ஜியத்துக்குச் செல்கிற ரயில் பாதைகளெல்லாம் அந்த நகரத்தில் சந்திக்கின்றன. லீஜ் நகரத்தைச் சுற்றிலும் விஸ்தாரமாய்க் கட்டப்பட்ட கோட்டைகள் முக்கியமான சோட்டுகளையும் ரயில் பாதைகளையும் காவல் செய்கின்றன. லீஜ் நகரத்துக்கு வடக்கில் கட்டப்பட்டுள்ள ஒரு கோட்டையிலிருந்து பீரங்கிகள் சுடப்பட்டதால் வைஸ் நகரத்தில் ஜெர்மானியர் கட்டிய பாலங்கள் இடிக்கப்பட்டன வென்று சொல்லியிருக்கிறோம். அவ்வாறு மியூஸ் நதியைத் தாண்டிச் செல்கிற எல்லாப்பாதைகளும் பாலங்களும் கோட்டைகளால் காக்கப்பட்டிருந்தன. ஆகையால் ஜெர்மானியர் பெல்ஜியத்துக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள சோட்டுகளையும் ரயில் பாதைகளையும் உபயோகிக்கவேண்டுமானால் லீஜ் கோட்டைகளை வசப்படுத்திக்கொள்வது அவசியமென்று விளங்கும். பெல்ஜியத்துக்கும் ஜெர்மனிக்கும் இடையேயுள்ள எல்லையில் அநேக ஜெர்மன் ரயில் பாதைகள் யுத்த நடவடிக்கைகளையுத்தேசித்தே போடப்பட்டிருக்கின்றன. அந்த பாதைகளின் வழியாய் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் பெல்ஜியத்துக்குள்புகுந்தனர். பெல்ஜிய தேசம் தன் எல்லைப் புறத்தைக் காப்பதற்குப்போதுமான சைன்ய பலத்தைப் பெற்றிருக்கவில்லை. ஐரோப்பிய ராஜ்யங்களிலெல்லாம் மிகவும் நெருக்கமான ஜனவாசத்தையுடையது பெல்ஜிய தேசமாகும். அந்த ஜனங்கள் பற்பலதொழிற்சாலைகளைத்தாபித்து பொருள்சம்பாதித்து தங்கள் நிலைமையை விருத்திசெய்து கொள்வதிலேயே காலங்கழித்தார்கள். சென்றசில வருஷங்களாகத்தான், ஆல்பர்ட் அரசர் ராணுவவிஷயத்தில் கவனஞ்செலுத்தத் தொடங்கி

னர். ஐரோப்பிய வல்லரசுகள் செய்து வந்த யுத்தப் பிரயத்தனங்களைக் கருதி, பெல்ஜிய சேனையின் வன்மையை அதிகரிக்க ஆல்பர்ட் அரசர் அதிகாராதன ஏற்பாடுகளைச் செய்தார். ஆனல் அந்த ஏற்பாடுகள் நிறைவேறுவதற்கு முன்னல் இந்த மகாயுத்தம் ஆரம்பித்து விட்டது. ஆகையால் இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் பெல்ஜிய சேனையில் 2-லக்ஷம் துருப்புகள் தானிருந்தார்கள். லீஜ், நாமூர் ஆண்டவர்ப் இவ்விடங்களில் உள்ள கோட்டைகளைக் காப்பதற்கே அந்தசேனை போதாதென்றல், அதைக்கொண்டு ஜெர்மானியரைப் போர்க்களத்திலும் எதிர்ப்பது எவ்வாறு சாத்தியமாகும்? லீஜ் கோட்டைகளுக்கு 40,000 துருப்புகளை அனுப்பப்பட்டன. நாமூர் கோட்டைகளுக்கும் சில துருப்புகளை அனுப்பியதுபோக, பாக்கி ஒரு லக்ஷம் துருப்புகளை வைத்துக்கொண்டு பெல்ஜிய அரசர் ஜெர்மன் வெள்ளத்தைத் தடுத்து நிற்பதற்காகத் துணிந்து விட்டார். பெல்ஜிய ஜனங்கள் பெரிய சேனையைப் பெற்றிருக்கவில்லையாயினும், அளவற்ற தேசாபிமானமும் ஒற்றுணர்ச்சியும் பெற்றிருந்தார்கள். அவர்கள் சுயேச்சை பெற்ற தேசத்தாரென்று ஜெர்மானியர் சற்றும் மதிக்காமல் அவர்களை அலட்சியமாய் மிதித்துக்கொண்டு பிரான்ஸுக்குள் நுழையலாமென்று நினைத்ததே பெல்ஜியரின் ரோஷத்தையும் மானத்தையும் கிளப்பிவிட்டது. பெல்ஜியர் தங்கள் சத்துருக்களின் பயங்கரமான கொடுமைகளுக்கும் அஞ்சாமல் அவர்களை நினைத்தபோதெல்லாம் தாக்கியதே அந்த உணர்ச்சிக்கு அத்தாக்ஷியாகும். ஜெர்மானியர் ராக்ஷஸ பலத்தைப் பெற்று பல்ஜிய தேச முழுவதும் நடுங்கும்படி லக்ஷக் கணக்கான துருப்புகளை ஏவியபோதிலும், செருப்புக்குள் புகுந்த சிறு கற்களைப்போல பெல்ஜியர் கூடுமான வரையில் தங்கள் சத்துருக்களின் நடமாட்டத்துக்கு ஓயாமல் இடைஞ்சல் செய்துகொண்டே வந்தார்கள்.

கோட்டைகளை ஜெர்மன் துருப்புகள் தாக்கினர்கள்.

ஆகஸ்ட் 4-ந் தேதி இரவு லீஜ் நகரத்தை நோக்கிச்சென்ற ஜெர்மன் சேனைதியாகிய ஜெனரல் எம்மிச் தமது ஜெர்மன்படைகளைக்கொண்டு லீஜுக்குக் கிழக்கிலுள்ள கோட்டைகளைத்தாக்கினர். கோட்டைகளைக் காப்பதற்குமட்டுமே பெல்ஜியத் துருப்புகளிருக்கின்றன வென்றும், கோட்டைகளின் இடைவெளிகளைக் காக்கப் போதுமான பெல்ஜியத் துருப்புகளில்லை யென்றும், ஆகையால்

இடைவெளி வழியாகப் புகுந்து லீஜ் நகரத்தைப் பிடித்துக்கொள்ள லாமென்றும் ஜெர்மன் சேனாபதி எண்ணினார். அவர் ஆகஸ்ட் 2-ந் தேதியிலிருந்து 4-ந் தேதிக்குள்ளாக அதிக விரைவாய் வந்து லீஜ் கோட்டைகளைத் தாக்கியதால், புதிய பெல்ஜியத் துருப்புகள் அங்கு இருந்திரா என்று நினைத்தார். பெல்ஜியர்தானே என்ற அலக்ஷியத்தால் அவர் அவ்வாறு எண்ணினர். ஆனால் லீஜ் கோட்டைகளைக் காக்குங் கடமையை ஏற்றவராகிய ஜெனரல் லீமான் உண்மையான பெல்ஜிய தேசாபிமானிகளுள் ஒருவர், திறமை வாய்ந்த ராணுவ உத்தியோகஸ்தர். ஆகையால் ஜெனரல் லீமான் இரண்டு தினங்களுக்குள்ளாக 80 மைல் தூரம் விசேஷ வேகத்துடன் வழி நடந்து புதிய துருப்புகளைக் கொண்டுவந்து லீஜ்கோட்டைகளில் நிறுத்திவைத்தார். அவ் விஷயத்தை ஜெர்மன் சேனாபதி அறியாமல் 4-ந்தேதி இரவில் 88,000 துருப்புகளை லீஜ்கோட்டைகளின்மேல் விழுந்து தாக்கும்படி ஏவினர். ஜெர்மன் துருப்புகள் நெருக்கமாய் அணிவகுத்து கூட்டங் கூட்டமாகச் சென்று தாக்கினர்கள். கோட்டைகளி லிருந்தும் அரண்களிலும் பொழிந்த நெருப்பு பயங்கரமான சேதத்தை உண்டு பண்ணின. கோட்டையிலிருந்த பெரிய பீரங்கிகள், அரண்களிலிருந்த மெஷின் பீரங்கிகள், துப்பாக்கிகள், இவைகளெல்லாஞ்சேர்ந்து ஜெர்மானிய ரைக்கூட்டங் கூட்டமாய் வீழ்த்தி வைக்கற் போருபோல் குவித்தன. இரண்டு கக்ஷி சேனாபதிகளும் ஆச்சரியமடைந்தார்கள். ஜெர்மன் துருப்புகள் கூட்டங்கூட்டமாய் நெருப்பாயுதங்களுக்கு முன்னால் வந்து வீழ்வதைக்கண்டு ஜெனரல் லீமான் வியப்படைந்தார். வலுவான கோட்டைகளை முதலில் பீரங்கிகளால் தகர்க்காமலே துருப்புகளைக்கொண்டு தாக்குவது யுக்திக்கும் ராணுவ தந்திரத்துக்கும் ஒவ்வாத காரியமாகும். ஜெனரல் எம்மிச்கோட்டைகளின் இடைவெளியில் பெல்ஜியர் அவ்வளவு வலுவாய் நீலிபெற் றிருப்பார்களென்று நினைக்காததால் அவரும்ஆச்சரியப்பட்டார். உடனே ஜெர்மன் பீரங்கிகள் கோட்டைகளைத் தகர்க்க ஆரம்பித்தன. ஆனால் அந்த பீரங்கிகள் இலேசான தினுசைச்சேர்ந்தவை. யுத்த ஆரம்பத்தில் சென்ற அந்த ஜெர்மன் படைகளெல்லாம் இலேசான பீரங்கிகளையும் சொற்ப வெடிமருந்தையும்கொண்டு போயினவென்று சொல்லியிருக்கிறோம்.லக்ஷக்கணக்கான ஜெர்மன் துருப்புகள் பெல்ஜியத்துக்குள்



ருஷிய சக்ரவர்த்தியும் இளவரசரும்—
சேனுதிபதி உடை.



ருஷிய சக்ரவர்த்தி—
சாதாரண திருப்பின் உடை.



ருஷிய சக்ரவர்த்தி—ஹுஸார் படையைச் சேர்ந்த உடை.



ருஷிய சக்ரவர்த்தி—
கோஸாக் திருப்பின் உடை.



ருஷிய சக்ரவர்த்தி—
போர்க்களத்தில் குறிபார்க்கும்
கருவியை உபயோகித்தல்.



ருஷிய சக்ரவர்த்தியும் ருஷ்ய சேனதி
பதியாகிய கிராண்ட் டியுக்
நிகலஸும் சந்தித்தல்.



ஜெர்மன் சக்கரவர்த்தியும் ஆஸ்டிரிய சக்ரவர்த்தியும்.



ருஷிய சக்ரவர்த்திபம் இளவரசரும்—
சேனதிபதி உடை.



ருஷிய சக்ரவர்த்தி—
சாதாரண திருப்பின் உடை.



ருஷிய சக்ரவர்த்தி—ஹிஸ்ஸார் படையைச் சேர்ந்த உடை.



ருஷிய சக்ரவர்த்தி—
கோஸாக் திருப்பின் உடை.

புகுந்ததும் பெல்ஜிபர் அவர்களை எதிர்க்கத் துணிபமாட்டார்களென்றும், ஆகையால் ஜெர்மானியர் பிரஞ்சு எல்லைக்குச் சென்ற பிறகு தேவையான வெடி மருந்தும் ஆகாரமும் பீரங்கிகளும் அனுப்பினால் போதுமென்று ஜெர்மன் அதிகாரிகள் நினைத்தார்கள். பாரிஸ் கோட்டைகளை தகர்ப்பதற்கு மட்டும் பெரியபீரங்கிகள் தேவையாயிருக்குமென்று ஜெர்மானியர் நினைத்தார்கள் போலும்! லீஜ்கோட்டைகளைத் தகர்க்க ஆரம்பித்த ஜெர்மன் பீரங்கிகள் இலேசானவை யாகையால், பெல்ஜியக் கோட்டைகளிலிருந்த 6 அங்குல பீரங்கிகள் ஜெர்மானியரை எளிதாய் அடக்கிவிட்டன. அதைக் கண்டு ஜெனரல் எம்மிச் பெரிய மூற்றுகைப் பீரங்கிகளைத் தருவிக்க நிச்சயித்தார். ஆயினும் அந்த பீரங்கிகள் வருவதற்கு 2 அல்லது 3 தினங்களாகும். படைத்தலைவர்கள் தாங்களெடுத்த காரியத்தை நிறை வேற்றமுடியா தென்பதற்குக் காரணஞ் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. ஜெனரல் எம்மிச் தமக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவுப்படி லீஜ்கோட்டைகளை எவ்வாறுயினும் தாமத மின்றிப் பிடித்து விட்டு முன் செல்லக் கடமைப் பட்டிருந்தார்.

அநேக கோட்டைகள் ஏககாலத்தில் தாக்கப்பட்டன.

ஆகையால் அவர் 5-ந்தேதியன்று இரவில் 88000 ஜெர்மன் துருப்புகளைக் கொண்டு மறுபடியும் தாக்கினர். லீஜ்கோட்டைகளையும் அவைகளிலிருந்த 40, 000 பெல்ஜியத்துருப்புகளையும் ஜெர்மானியர் தாக்கினர்கள். முன்னாளிரவு போலவே, ஜெர்மானியர் மிகுந்த சேதத்துடன் திரும்பிவந்தார்கள்.

துணைப்படைகளைத் தருவித்து மொத்தம் 1,20,000 துருப்புகளைச் சேர்த்து கோட்டைகளை மறுபடியும் தாக்குவதாக ஜெனரல் எம்மிச் நிச்சயித்தார். அன்றிரவு ஜெர்மன் துருப்புகள் இரண்டு முறை தாக்கியும் மிகுந்தசேதத்துடன் திரும்பி வந்தார்கள். ஜெனரல் லீமான் தம்மிடமுள்ள 40, 000 பெல்ஜியத்துருப்புகளை மிகவும் சாமர்த்தியமாய் உபயோகித்தார். லீஜுக்குக் கிழக்கிலுள்ள இரண்டு கோட்டைகளையும் ஜெர்மானியர் தாக்கினபோது, அந்த கோட்டைகளிலும் அவைகளின் இடைவெளியிலும் 40, 000 பெல்ஜியத்துருப்புகளனைவரையும் குவித்து ஜெனரல் லீமன் சண்டையை நடத்தினர்; அப்போது ஜெர்மன் துருப்புகள் வெற்றியடைய முடியாமலிருந்தார்கள். ஆனால் ஜெனரல் எம்மிச் தம்மிடம் ஏராளமான துருப்புகளி

ருப்பதைக் கண்டு வேறொரு யோசனை செய்தார். லீஜுக்குக்கிழக்கி லுள்ள கோட்டைகளோடு தெற்கிலுள்ள 3 கோட்டைகளை யும் சேர்த்துத்தாக்குவதாக நிச்சயித்தார். இந்த முறை ஜெனரல்எம் மிச் தாமே நேராகப் படைகளைச் செலுத்தினரென்றுசொல்லப்படுகி றது; லீஜுக்குக் கிழக்கிலும் தெற்கிலுமுள்ள 5 கோட்டைகளை யும் ஜெர்மானியர் ஏககாலத்தில் தாக்கியபோது, ஜெனரல் லீமான் தம்மிடமுள்ள பெல்ஜியத் துருப்புகள் போதுமானவையல்லவென்று அறிந்தார். 33 மைல் சுற்றளவுள்ள கோட்டைகளை சொற்ப தொகை கொண்டதுருப்புகளால் காக்கமுடியாதென்றுஅவர் அறிந்தார். அவர் மிகவும் கடுமையாய்ச் சண்டை செய்து கோட்டைகள் சத்துருவின் கையில் பிடிபடாமல் காத்து சத்துருவுக்கு ஏராளமான சேதத்தை உண்டுபண்ணினர். ஜெர்மானியர் எவ்வளவு உயிர்ச்சேதமானலும் கோட்டைகளைப் பிடித்தே தீருவதென்ற உறுதி கொண்டார்கள். ஜெர்மானியர் மிகுந்த உக்கிரத்துடன்தாக்கி கோட்டைகளின் இடை வெளிகளை கடைசியாக வசப்படுத்திக் கொண்டார்கள். அதன்பிறகு லீஜ்.கோட்டைகளைக் காக்க முடியா தென்பதை ஜெனரல் லீமான் அறிந்துகொண்டு தம்மிடமிருந்த துருப்புகளில் ஒரு பாகியை பின் புறமாய்ச்செலுத்தி, வடக்குப் பிரதேசத்திலிருந்த பெல்ஜிய சேனை யுடன் சேர்ந்துகொள்ளும்படி அனுப்பிவிட்டார். ஜெனரல் லீமான் தம்மிடமுள்ள 20,000 துருப்புகளைக்கொண்டு லீஜ்கோட்டைகளைக் காவல்செய்து கோட்டைகளோடு தாமும் அழிந்து போவதாக நிச் சயித்தார். அவர் தமக்கு வெற்றி கிடைக்கவேண்டுமென்ற ஆசை கொள்ளாமல், தேசத்தின் க்ஷேமத்தையே கோரி தம்மிடமிருந்த துருப்புகளில் ஒரு பாகியை அனுப்பிவிட்டு தம்மாலியன்ற மட்டும் கோட்டைகளைக் காப்பதாக உறுதிகொண்டதானது அவருடைய ரா ஜுவத்திறமையையும் தேசாபிமானத்தையும் குறிப்பிடுகிறது. ஜெர் மன் படைகள் எவ்வளவு பயங்கரமான வன்மையைப்பெற்றுத் தாக் கிய போதிலும் அவைகளை எதிர்த்து நின்று, கூடுமான வழிகளி லெல்லாம் கால தாமஸம் செய்யவேண்டுமென்று அவர் கோக்கங் கொண் டிருந்தார். லீஜுக்குக் கிழக்கிலுள்ள கோட்டைகளின் இடைவெளிகளை ஜெர்மன் துருப்புகள் வசப்படுத்திக்கொண்டு அங்கு வலுவான அகழ்களைத் தோண்டி நிலைபெற்றுக் கொண் டிருந்தார்கள்.

லீஜ்நகரத்தில் வழக்கம்போல அநேக ஜெர்மன் துப்பாளிகள் இருந்தார்கள். இரண்டு ஜெர்மன் துப்பாளிகள் பிரஞ்சு ராணுவ உத்தியோகஸ்தர்களைப் போல உடைதரித்து லீஜ் பட்டணத்தில் புகுந்து பெல்ஜிய சேனைத் தலைவரைப் பார்க்கவேண்டுமென்று அறிவித்தார்கள். ஆனால் நல்ல வேளையாய் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். மற்றொரு தரம் சில ஜெர்மன் துருப்புகள் மாறுவேடம்பூண்டு பட்டணத்துக்குள் நுழைந்து, ஜெனரல் லீமான் தமது உத்தியோகஸ்தர்களுடன் கலந்து பேசிக்கொண்டிருந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள். பெல்ஜிய உத்தியோகஸ்தர்களில் ஒருவர் ஜெனரல் லீமானைத் தூக்கிக்கொண்டு சுவரேறிக்குதித்து பேர்பெற்ற அச்சேனுபதிக்கு ஆபத்து நேரிடாமல் காத்தார். மற்ற பெல்ஜிய உத்தியோகஸ்தர்கள் சண்டைசெய்து மாண்டார்கள். லீஜ் நகரத்தின் நிலைமை அவ்வாறு கலக்க முற்றிருந்தது.

ஜெர்மன் மூற்றுகைப் பீரங்கிகள் தகர்த்தன.

6-ந்தேதியன்று காலை ஜெர்மானியரின் முற்றுகைப் பீரங்கிகள் வந்து சேர்ந்தன. அந்த பயங்கரமான 11 அங்குல வாயை யுடைய பீரங்கிகள்சாதாரண சோட்டுகளின் வழியாய் அலக்ஷியமாயும் விரைவாயும் இழுத்துக்கொண்டு வரப்பட்டது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. அந்த பீரங்கியைப்பற்றிய விவரங்களை ஜெர்மானியர் இரகஸ்யமாய்வைத்திருந்தார்கள். அதைப்பற்றி அவ்வித இரகஸ்யம் பாராட்டுவது தகுமென்றே சொல்லலாம். ஏனெனில், அந்த பீரங்கி 750 பவுண்ட் பளுவுள்ள குண்டைச் சுடக்கூடியதென்றால், அதன் வன்மையை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். அந்த குண்டு விழுகிற இடத்தில் மனிதர்கள் சாதாரணமாய்க் காயமடைந்து மாண்டுபோவதுமட்டுமல்ல. சுற்றிலுமுள்ள மனிதர்களும் வஸ்துக்களும் கருகிப் பொசுங்கிப்போய் துண்டு துண்டாகச் சிதறிவிடுகின்றன. அப்படிப்பட்டபயங்கரமான பூதங்கள் லீஜ்கோட்டைகளோடு பேசத்தொடங்கியவுடன், அக்கோட்டைகளின் நிலைமையே மாறிப்போய்விட்டது; அவைகளின் கதி இன்னவாகுமென்றும் நிச்சயப்பட்டு விட்டது. லீஜுக்குக் கிழக்கிலும் தெற்கிலும் இருந்த கோட்டைகள் இரண்டு மணி நேரத்தில் அடங்கிப்போயின. அந்த கோட்டைகளில்ஒன்று நான்கு குண்டுகளுக்கு மேல் தாங்கமாட்டாமல் கொலுங்கிப்

போயிற்று. அந்த குண்டுகளிற்சில லீஜ்நகரத்தின்மேல் விழுந்ததும் அங்கிருந்த ஜனங்களனைவரும் பீதியடைந்தார்கள். அதேகம் பேர் மாண்டுபோன தோடு அதேக கட்டடங்களும் சேதமாயின. லீஜ் கோட்டைகளின் இடைவெளியிலிருந்த ஜெர்மன் துருப்புகள் லீஜ் நகரத்துக்குள் நுழைந்துவிட்டார்கள். ஜெனரல் லீமான் தமது பெல்ஜியப் படைகளில் ஒரு பாகத்தை நகரத்துக்கு அனுப்பி, பின் வாங்கிச்சென்று தப்பித்துக்கொண்டுபெல்ஜிய சேனையுடன் சேர்ந்து கொள்ளும்படி உத்தரவுசெய்தார். பெல்ஜியப் படைகள் லீஜ் நகரத்துத் தெருக்களில் கடுமையாய்ச் சண்டைசெய்து தப்பிச்சென்றன.

லீஜ் நகரம் பிடிபட்டது.

அவ்வாறு லீஜ் நகரமும், மியூஸ் நதிக்குத் தெற்கிலிருந்த கோட்டைகளும் ஜெர்மானியரின் வசமாகின. அதனால் ஜெர்மானியர் மியூஸ் நதியை எளிதாய்க் கடந்து சென்று பெல்ஜிய தேச முழுவதிலும் பரவிவிட்டார்கள். லீஜுக்கு வடக்கிலுள்ள கோட்டைகள் இன்னும் ஜெர்மானியரால் பிடிக்கப்படவில்லை என்பதை மறக்கக்கூடாது. அந்த கோட்டைகளும் ஜெர்மானியரின் முற்றுகைப் பீரங்கிகளால் பொடியாகிவிடுமென்று ஜெனரல் லீமான் நன்றாய் அறிந்திருந்தார்; அவர் தமக்குத் துணைப் படைகள் வருமென்று எதிர்பார்க்கவில்லை; அவைகள் வந்தும் பயனில்லையென்றும் அறிந்து கொண்டார்; தம்மிட மிருந்த அதேக துருப்புகளைத் தப்பிச் செல்லும்படியும் அனுப்பிவிட்டார். மற்ற கோட்டைகளும் ஜெர்மன் பீரங்கியைத்தாங்காமல் அழிந்துபோவதுநிச்சயமாகையால், அந்தகோட்டைகள் அவ்வாறு அழிந்துபோகுமா அல்லது சரண மடையுமா என்று ஜெர்மானியர் யோசனை செய்தார்கள். ஆனால் கோட்டையிலுள்ள இருட்டையும் கல்லையும் விட மனித தேகத்தில் உள்ள எலும்பும் சதையும் உறுதியாய் நின்றன என்பதை பெல்ஜியரின் அழியாப் புகழுக்கு அத்தாக்ஷியாக இங்கு குறிப்பிடவேண்டும். ஜெனரல் லீமான் ஜெர்மன் பீரங்கிகளுக்குச் சற்றும் அஞ்சாமல் பாக்கியாயுள்ள கோட்டைகளையெல்லாம் கடைசிவரையில் காத்தே தீருவதென்று நிச்சயித்தார். ஆனால் ராணுவநோக்கத்தின்படி அவ்வாறு லீஜ்கோட்டைகளை இனிமேல் காத்தும் பயனில்லை ; ஏனெனில் ஜெர்மானியர் தெற்குக்

கோட்டைகளைப் பிடித்து மியூஸ் நதியைக் கடந்து செல்ல ஆரம்பித்து விட்டார்கள். ஆயினும் பெல்ஜியத் துருப்புகள் லீஜ்கோட்டைகளை அவ்வாறு உறுதியாய்க் காத்ததால் பொது ஜனங்களின் மனதில் உற்சாகமும் திடனும் உண்டாயின. 40,000 பெல்ஜியத் துருப்புகள் 1,20,000 ஜெர்மானியரைத் தனிகரமாய் எதிர்த்து நின்றதைக்கண்டு பெல்ஜிய ஜனங்களும் பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரரும் அளவற்ற உற்சாகங்கொண்டார்கள். ஜெர்மன் படைகளின் வன்மை மிகவும் பயங்கரமானதென்று பொதுவாய் நினைக்கப்பட்ட அபிப்பிராயம் பிசகென்று தெரியவந்தது. பொது ஜனங்கள் பீதியடையாமல் தங்கள் தேசாபிமான உணர்ச்சியால் தூண்டிவிடப்பட்டு ஜெர்மானியருக்கு அடங்காமலிருப்பதாக உறுதிகொண்டார்கள். பிரஞ்சு பெல்ஜிய ராணுவ அதிகாரிகளுங்கூட லீஜ் கோட்டைகள் வெகு காலம் எதிர்த்து நின்று ஜெர்மானியரை முன்செல்லவிடாமல் தடுக்குமென்று நினைத்தார்கள். ஜெர்மானியரின் படையெடுப்பு பெல்ஜியத்திலேயே நாசமாகி விடுமென்று பிரிட்டிஷாரும் பெல்ஜியரும், நம்பினார்கள். 40,000 பெல்ஜியர் 1,20,000 ஜெர்மானியரை எதிர்த்து நிற்கக் கூடுமானால், மற்ற பெல்ஜியரும் பிரஞ்சுக்காரரும் பிரிட்டிஷாரும் சேர்ந்து ஜெர்மன் ராணுவத்தை பெல்ஜியத்திலேயே புதைத்துவிடலாமென்று ஜனங்கள் நினைத்தார்கள். அவ்வித அபிப்பிராயங்கள் சரியல்லவாயினும், பொது ஜனங்களின் மனநிலைமை திடமாயிருந்ததானது முக்கியமாய் கவனிக்கத் தக்கது. அந்த மனோதிடனால் தான், பெல்ஜிய சேனை வடக்கு பெல்ஜியத்திலும் ஆண்ட்வர்ப் கோட்டைகளிலும் லக்ஷக் கணக்கான ஜெர்மானியரைத் தூணிவாய் எதிர்த்து நின்றது. பெல்ஜிய சேனை ஜெர்மானியரை முன்செல்லவிடாமல் தடுக்க முடியவில்லையென்றாலும், ஜெர்மானியரின் நடவடிக்கைகளுக்கு ஓயாமல் இடைஞ்சல்களைச் செய்துவந்ததால் தான், ஜெர்மன்படைகள் பிரஞ்சு எல்லையைத்தாண்டிவதற்கு ஆகஸ்டு 20-ந் தேதி வரையில் தாமஸப்பட்டது. ஜெர்மன் படைகள் பிரஞ்சு எல்லையை அடைந்த காலமும் பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு வந்து சேர்ந்த காலமும் ஒன்றாயிருந்தன. பெல்ஜியத் துருப்புகள் அவ்வளவு காலம் தாமஸஞ் செய்யாமலிருந்தால், பிரிட்டிஷ் படைகள் பிரான்ஸுக்கு வந்தும் பயன்படாமற் போயிருக்கும். அவ்வளவு கால தாமஸம் நேர்ந்ததால்தான், பிரஞ்சு சேனாதிபதி தமது

பின் பலத்தையும் மூலபலத்தையும் திரட்டிவைக்க சாத்தியப் பட்டது.

ஆகஸ்ட் 7-ந்தேதியன்று, லீஜ் நகரமும் அதற்குத் தெற்கிலுள்ள கோட்டைகளும் ஜெர்மானியரால் பிடிக்கப்பட்டன. பெர்லின் நகரத்து ஜனங்களனைவரும் லீஜ் கோட்டைகள் பிடிபட்டு விட்டன வென்று தங்கள் வெற்றியை அளவில்லாமல் கொண்டாடினர்கள். நேசக் கக்ஷியார் லீஜ் கோட்டைகளிற் சில இன்னும் பிடிபடவில்லை யாகையால் ஜெர்மானியர் வெற்றி யடையவில்லையென்று சந்தோஷப் பட்டனர். ஜெர்மானியர் சொல்லியதில் ஒருபாகம் நிஜமல்லவென்றும் சில தினங்களில் அது உண்மைபோல் தோன்றிற்று. எனெனில் ஜெர்மன் படையெடுப்பு மும்மூரமாய் நடைபெற்று வந்ததை ஜனங்கள் கண்டார்கள். ஜெர்மானியர் தங்கள் வெற்றியை அடையாத போதிலும் வெற்றிபின் பலன்களைக் கண்ணாரக்கண்டு சந்தோஷிக்க, நேசக் கக்ஷிகள் தங்கள் உண்மை யெல்லாம் பொய்யானது போன்ற பலன்களைக் கண்டார்கள். அதற்குக் காரணத்தை அறியவேண்டும். ஜெர்மானியர் ஏராளமான ராணுவ பலத்தைக் கொண்டு எல்லாத் திசைகளிலும் தாக்கி முன் செல்வதால் அவர்கள் இரண்டொரு ஸ்தலங்களில் அடையும் தோல்விகள் அவர்களுடைய யுத்த நடவடிக்கைகளை பாதிப்பதில்லை. ஆற்று வெள்ளம் புரண்டோடும்போது, வேரூன்றிய மரங்களே வழிமறித்து நின்றும். அவ்விடங்களில் வெள்ள நீர் நுரைத் தெழும்புவதன்றி தடைப்பட்டு நின்று போகுமோ ?

ஜெனரல் லீமான் பிடிக்கப்பட்டார்.

ஆகஸ்ட் 13-ந்தேதி, ஜெர்மானியர் தங்கள் பெரிய முற்றுகைப் பீரங்கிகளை மியூஸ் நதிப்பாலத்தின் மேல் வெகு ஜாக்கிரதையாய் இழுத்துச்சென்று லீஜ் நகரத்துக்கு வடக்கில் நிலை நிறுத்தி, வட புறத்துக் கோட்டைகளைத் தகர்த்தார்கள். ஜெனரல் லீமான் அந்த கோட்டைகளைக் காப்பதற்கு போதுமான துருப்புகளைப் பெற்றிருக்கவில்லை ; ஜெர்மன் பீரங்கிகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய எவ்வித ஆயுதங்களையும் பெற்றிருக்கவில்லை ; ஆயினும் அவர் தம்மிடமிருந்த சில துருப்புகளை உற்சாகப்படுத்தி ஜெர்மன் துருப்புகளின் நடமாட்டத்துக்கு இடைஞ்சல் செய்து வர உத்தேசித்

தார், லீஜ் கோட்டைகள் இன்னமும் ஜெர்மானியரை எதிர்த்து நிற்கின்றனவென்று ஜனங்களனைவரும் சொல்லிக்கொண்டு தைரியங்கொள்ளட்டுமென்று அவர் நினைத்தார். லீஜ் கோட்டைகளுள் ஒன்று இடிந்து விழுந்தபோது ஜெனரல் லீமான் உடைய கால்களிரண்டும் முறித்து போயின. அவர் அதை லக்ஷியஞ் செய்யாமல் மோட்டார் வண்டியில் ஏறிக் கொண்டு வழக்கம் போல ஒவ்வொரு அகழையும் கோட்டையையும் பார்வையிட்டு வந்தார். லீஜுக்கு வடமேற்கிலுள்ள லான்லின் என்றகோட்டையில் அவர் 100 துருப்புகளை வைத்துக்கொண்டு ஜெர்மானியரை எதிர்க்க முயற்சி செய்தார். ஜெர்மன் பீரங்கிகள் அக்கோட்டையின்மீது குண்டுகளை எறியத்தொடங்கின. அந்தகோட்டை இனிகிலித்திருக்க முடியாதென்று ஜெனரல் லீமான் அறிந்து அக்கிருந்த வெடி மருந்து ஆகாரம் யுத்ததளவாடங்கள் யாவும் சத்துருவுக்குக் கிடைக்காம லிருப்பதற்காக அவற்றை அழித்துவிட்டார். அவர் வேறொரு கோட்டைக்குத்தப்பிச் செல்ல முயன்றபோது தம்மை ஜெர்மானியர் சூழ்ந்து கொண்டார்களென்று தெரியவந்தது. ஜெர்மன் பிரங்கியிலிருந்து புறப்பட்ட ஒரு குண்டு கோட்டையின்மேல் குறிப்பாய் விழுந்தது; உடனே கோட்டையிலுள்ள மதிற்சுவர்களும் இரும்புக் கட்டங்களும் பூமியோடு பெயர்த்துக் கொண்டு ஆகாயத்தில் சிதறியடித்தன. அந்த சமயத்தில் ஜெர்மன்துருப்புகள் கோட்டையிலிருந்த பெல்ஜியரைத்தாக்க வந்தபோது அங்கு பெல்ஜியரெல்லாரும் குண்டுகளால் கொல்லப்பட்டும் காயம்பட்டும் ஸ்மசாணபற்றங் கிடந்ததை ஜெர்மானியர் கண்டார்கள். கோட்டையிலிருந்து இடிந்துவிழுந்த ஒரு இரும்பு உத்திரத்தின் கீழ் ஜெனரல் லீமான் நசுங்கி பிரக்ஞைபற்றுக் கிடந்தார். ஜெர்மானியர் அவரிடம் வைத்த மதிப்புக்கு அடையாளமாக அவர்கள்மிகுந்த கவலையாயும் பக்திரமாயும் அவரை பெடித்துத் தங்கள் பாளயத்துக்குக் கொண்டுபோய் சிகிச்சைசெய்தார்கள். ஜெனரல் லீமான் அவ்வாறு சிறை பிடிக்கப்பட்டார். அவர் செய்த அரும்பெரும் முயற்சிகளெல்லாம் முடிவான பிரதி கூலத்தை அடையுஞ் சமயத்தில் அதை அவர் கண்ணுற் காணுதபடி ஞாபகமற்றுக் கிடக்க நேர்ந்த பாக்கியம் எல்லா தீரருக்கும் கிடைப்பதில்லையே.

சிறிதுநேரத்துக் கெல்லாம் அவருக்குப் பிரக்ஞை வந்தது,

அவர் சொன்னமுதல் வார்த்தைகளாவன—"பெல்ஜியத் துருப்புகள் தீரத்துடன் சண்டைசெய்த பிறகே கோட்டையைக் கைவிட்டார்கள்; அச்சமயம் நான் ஸ்மரணையற்றுக் கிடந்தேனென்பதை உங்கள் அறிக்கையில் எழுத மறந்துவிடாதேயுங்கள்."

அவர் ஜெர்மன் சேனுபதியாகியஜெனரல் எம்மிச்கிடம்கொண்டு போகப்பட்டார். "நீர் மிகுந்த பராக்கிரமத்துடன் கோட்டைகளைக் காத்ததைக் கண்டு வியப்படைகிறேன்" என்று ஜெனரல் எம்மிச் சொன்னர். அதற்கு ஜெனரல் லீமான், "எங்களுடைய மூன்னூர்களின் கீர்த்திக் கேற்றவாறு நாங்கள் சண்டை செய்தோம்" என்று பதில் சொல்லி, தமது வாளைக் கழற்றி ஜெனரல் எம்மச்சிக்குக் கொடுக்கப் போனர். அப்போது ஜெர்மன் சேனுபதி "தேவையில்லை; உம்முடைய வாளை வைத்துக்கொள்ளும். உம்மைப்போன்ற தீரர்களுடன் வாள் வீசுவதே பெரிய கௌரவமாகும்" என்று சொன்னர். அதைக் கேட்டதும் பெல்ஜிய தீரரின் கண்களில் நீர்த் துளிகள் ஜ்வலித்தன. அவர் பட்ட வேதனைகளெல்லாம் அவ்வாறு உருகி நீங்கிப்போயின; ஆண்டாண்டு தோறும் உயிர் வளர்ப்பதின் பயனை, ஒரு முறையேனும் தம் கடமையைச் செவ்வையாய்ச் செய்து முடித்த திருப்தி எல்லோருக்கும் வாய்க்குமோ?

பெல்ஜியரின் யுத்தப் பிரயத்தனங்கள்.

லீஜ் கோட்டைகள் பிடிபடும் வரையில் ஜெர்மானியர் சும்மா இருந்தார்களென்று நினைக்கக் கூடாது; அவர்களின் நடவடிக்கைகள் தாமஸப்பட்டனவே யொழிய முற்றிலும் நின்றுவிடவில்லை. லீஜ் கோட்டைகள் 1,20,000 ஜெர்மன் துருப்புகளை எதிர்த்துக் கொண்டிருந்தபோது, பெல்ஜிய ஜனங்கள் அளவற்ற உற்சாகங் கொண்டு யுத்தப் பிரயத்தனங்களை மும்முரமாய்ச் செய்யத் தொடங்கி ஜெர்மானியரை எதிர்க்க முயன்றார்கள். பெல்ஜிய சேனை யுத்தத்துக்கு ஆயத்தமாய்ப் புறப்பட்டு ப்ருஸல்ஸுக்குக் கிழக்கில் வலுவான ஸ்தலங்களில் நிலை பெற்றிருந்தது. நகரங்களிலுள்ள போலீஸ்காரர்களும் திடகாத்திரமுள்ள ஜனங்களும் ஆயுத பாணிகளாய்க் கிளம்பி சாணுவப்பயிற்சி பெற்று வந்தார்கள். கிராமங்களிலுள்ள குடியானவர்கள் தங்களிடமிருந்த பழய காலத்து துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டார்கள்; வீடுகளில் மூலை இடுக்குகளில் போட்டு வைக்கப்பட்டிருந்த நாணித விசித்திர

ஆயுதங்களும் வெளியே இளம்பிவிட்டன. ஜெர்மானியர் சோட்டுகளை உபயோகிக்காம லிருப்பதற்காக சோட்டுகளிலுள்ள பாலங்கள் வெடிவைத்து உடைக்கப்பட்டன. ரயில் தண்டவாளங்கள் பிடுங்கி எறியப்பட்டன. ரயில் பாதைகளுக்காகக் குடையப் பட்டமலைக் குகைகளிலும் மலைக் கணவாய்களிலும் ஜெர்மானியர் வராமலிருப்பதற்கு, அவ்விடங்களில் பெல்ஜியர் ரயில்வண்டிகளை உடைத்து ஒன்றின்மேலொன்றாக அடுக்கி வழிகளையெல்லாம் மூடிவிட்டார்கள். ஜெர்மன் குதிரைப் படைகள் நடமாடாமலிருப்பதற்காக, பாதைகளில் இரகஸ்யமாய்ப் பள்ளங்களைத் தோண்டுவதிலும், இரும்புக் கம்பி வலைகளைக் கட்டுவதிலும் பல விதங்களில் பெல்ஜியர் சுறுசுறுப்பாயிருந்தார்கள். பரம ஏழைகளும் தங்களிட மிருந்த சாமான்களை யெல்லாம் ஒன்று சேர்த்து சோட்டுகளில் அவைகளை ஒன்றின் மேலொன்றாய் சுவர்போல் அடுக்கி ஜெர்மானியருக்கு வழியில்லாமல் செய்யவேண்டு மென்று ஆத்திரங் காட்டினார்கள். வீட்டிலிருந்த பசுக்கைகள், கட்டில்கள், பெட்டிகள், வண்டிகள் கூடைகள் முதலியன யாவும் சத்துருவை நாசமாக்கக்கூடியவை யென்று தெரிந்ததால் கொடுத்துவிடப்பட்டன. அவ்வாறு பெல்ஜியக்கிராமவாசிகள் சோட்டுகளை அடைத்துவிட்டு, அவைகளின் வழியாய்ச் செல்கிற ஒவ்வொருவனையும் தடுத்து, கேள்வி மேல் கேள்விகேட்டுசோதனை செய்த திருப்தியடைந்த பிறகே போகவிட்டார்கள். ஒரு பத்திரிகா நிருபர் அச்சமயம் பெல்ஜியத்தின் வழியாய்ப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது 40 மைல் தூரம் பிரயாணஞ் செல்வதற்குள்ளாக பெல்ஜியத் துருப்புகளும் காவற்காரர்களும் போலீஸ்காரர்களும் குடியானவர்களும் அவரை 52 தரம் நிறுத்தி சோதனை செய்ததாகச்சொல்லப்படுகிறது. சோட்டுகளிலும் கால்வாய்களிலும் மேடு பள்ளமாயுள்ள இடங்களிலும் செடி மரங்களடர்ந்த புதர்களிலும் துருப்புகளைப்போலவே குடியானவர்களும் ஒளிந்து கொண்டு ஜெர்மன் குதிரைப்படைகளைத் தாக்கினார்கள். இப்படிப்பட்ட யுத்தப் பிரயத்தனங்கள் சத்துருவின் படை நெடுப்பைச் சிறிதும் தடுக்க முடியாவாயினும், அவைகள் பெல்ஜியரின் துணிவையும் மன உறுதியையும் குறிப்பிடுகின்றன. லீஜ் கோட்டைகளிலிருந்த பெல்ஜியத் துருப்புகள் ஆயிரக் கணக்கான ஜெர்மன் துருப்புகளை அலக்ஷியமாய் எதிர்த்தடித்ததாக அண்டானை

பொது ஜன அபிப்பிராயம் அவ்வளவு வேகங்கொண் டிருந்தது. ஜெர்மன் குதிரைப்படைகள் சென்ற விடங்களிலெல்லாம் கிராம வாசிகளால் எதிர்க்கப்பட்டு சேதமாயின. அதைக் கண்டு ஜெர்மானியர் பெல்ஜியரை மிகவும் கடுமையாய் நடத்தி வந்தார் கள். ராணுவத்தைச் சேராதவர்கள் சத்துருக்களை எதிர்க்கக்கூடா தென்றசட்டத்தை பெல்ஜிய ஜனங்கள் அறியவில்லை. பெல்ஜியகவர்ன் மெண்டு தங்கள் ஜனங்களுக்குக் கண்டிப்பான எச்சரிக்கை செய்ய வேண்டி வந்தது. பெல்ஜிய ஜனங்கள் அடங்காத உற்சாகத்தால் அவ்வித பிரயத்தனங்களைச் செய்துகொண்டிருக்க, அவர்கள் மத்தி யில் துப்பாளிகள் தங்கள் இரகஸ்ய வேலைகளை வழக்கம்போல வெகு சுறுசுறுப்பாய்ச் செய்துகொண் டிருந்தார்கள். வருஷக் கணக்காய் நேசம் பாராட்டி வசித்துவந்த அயல் வீட்டுக்காரர்கள் திடீரென்று மறைந்துபோய், ஜெர்மன் படைகளோடுகூட வழிகாட்டிகளாகத் திரும்பி வந்தார்கள். கிராமங்கள் தோறும் துப்பாளிகளைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. சில துப்பாளிகள் புறாக்களை வைத்துக் கொண்டும், இரகஸ்யமான கம்பியில்லாத் தந்தி யந்திரங்களைக் கொண்டும் ஜெர்மானியருக்கு சமாசாரம் அறிவித்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டார்கள்; சிலர் சன்னியாசிகளாகவும் பாதிரிகளாகவும் பூண்ட வேஷத்துடன் கண்டு பிடிக்கப்பட்டார்கள். சிலர் ரயில் பாதைகளையும் தந்திக் கம்பிகளையும்சேதப்படுத்தினார்கள். அவ்வாறு பெல்ஜிய ஜனங்கள் தங்கள் தேசாபிமானத்தாலும், துப்பாளிகள் தங்கள் இரகஸ்ய நடவடிக்கைகளாலும் பெல்ஜிய தேசத்தின் ஒரு பாதியை நாசஞ் செய்தார்கள்—மற்றொரு பாதியை ஜெர்மன் படை யெடுப்பு நாசஞ் செய்துவிட்டது.

ஜெர்மன் குதிரைப் படைகளின் சண்டைகள்

ஜெர்மானியர் லீஜ் கோட்டைகளைத் தாக்கிக் கொண்டு பெரிய முற்றுகைப் பீரங்கிகளுக்காக காத்துக் கொண்டி ருந்தபோது, ஏராளமான ஜெர்மன் துருப்புகள் நேற்கு பெல் ஜியத்துக்குள் சென்றார்கள், சுமார் இரண்டுலக்ஷம் ஜெர்மன் துருப்பு கள் தெற்கு பெல்ஜியத்துக்குள் புகுந்து பிரஞ்சு எல்லையில் யுத்தஞ் செய்வதற்காகத் தயார் செய்துகொண் டிருந்தார்கள். இந்த நட வடிக்கைகளை ஜெர்மன் குதிரைப் படைகள் மறைத்துக்கொண்டு

முன்புறத்தில் சென்று பெல்ஜிய தேசமெங்கும் பரவிவிட்டன. ஜெர்மன் குதிரைப் படைகளின் மற்றொரு நோக்கம் நேசப் படைகளின் இருப்பிடங்களையும் நடமாட்டங்களையும் அறிவதாகும். உலான், ஹுஸார், இயுரானியர் முதலிய குதிரைப்படைகள் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து தேசமெங்கும் பரவி, நுழையக்கூடிய வழிகளிலெல்லாம் புகுந்தன. குதிரைப் படைகள் போதுமான ஆகாரம் கொண்டுபோகவில்லை. அவைகள் சில காரணங்களை உத்தேசித்தே அவ்வாறு ஆகாரமின்றிச் சென்றன. பெல்ஜிய கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள ஜனங்களை இம்சித்து ஆகாரத்தை வாங்கிக் கொள்ளவேண்டு மென்பது ஒரு காரணம். மற்றொரு நோக்கமென்ன வென்றால், அவ்வாறு குதிரைப்படைகள் ஆகாரமின்றிச் சென்றால்தான், பிரயாணஞ்செல்கிற பிரதேசங்களில் எங்கெங்கே ஆகாரவசதிகள் கிடைக்குமென்பதை அக்குதிரைப் படைகள்செவ்வையாய்ச் சோதனைசெய்து அறிந்துகொண்டு வரும். ஜெர்மன் சேனை பெல்ஜியத்தின் மேல் படையெடுப்பதற்கு முன்னால், அப்படிப்பட்ட சமாசாரம் கிடைக்கவேண்டியது அவசியமாகும். ஜெர்மன் குதிரைப்படைகள் சிறு கூட்டங்களாய்ப் பிரிந்துசென்று வழிகளிலுள்ள பெல்ஜியப் படைகளைத் தாக்கிக்கொண்டே முன் சென்றன. அதிக பலங்கொண்ட பெல்ஜியப்படைகளை எதிர்க்க நேரிட்டால் ஜெர்மன் கூட்டங்களிற் சிலவை ஒன்றுசேர்ந்து தாக்கி முன்சென்றன. அவ்வாறு சென்ற ஜெர்மன் குதிரைப்படைகள் தோல்வியும்வெற்றியும் பலவாறும் அடைந்து வந்தன. ஒரு குதிரைக் கூட்டம் தோல்வியடைந்தால் அது பின்சென்று வேறு சில கூட்டங்களைச்சேர்த்துக்கொண்டு மறுபடியும் பெல்ஜியரைதாக்கி முறியடித்து, வெற்றி அடைந்த மற்ற ஜெர்மன் படைகளோடு சேர்ந்துகொண்டன. அவ்வாறு ஜெர்மன்குதிரைப்படைகள் முன்சென்றுதங்களுக்கு முன்பாகவுள்ள பெல்ஜியப் படைகளை யெல்லாம் தங்களுக்கு முன்புறத்தில் தள்ளிக்கொண்டு சென்று, கடைசியில் பெல்ஜியரின் முக்கிய சேனைநிலைபெற்றிருந்த ஸ்தலங்களை அடைந்தவுடன் நின்றுவிட்டன. அவ்வாறு பெல்ஜியசேனை, பிரஞ்சுசேனை இவைகள் நிலைபெற்றிருந்த ஸ்தலங்களை ஜெர்மானியர் முதலில் அறிந்துகொள்வது அவசியமாயிற்று. அதின் பிறகே ஜெர்மன் சேனை முன்செல்ல ஆரம்பிப்பது சாத்தியமாகும்.

அவ்வாறு சென்ற ஜெர்மன் குதிரைப்படைகள் சில இடங்களில் தோல்வி அடைந்ததென்றாலும், சில இடங்களில் பீதியையும் உண்டு பண்ணின. உலான்படைகளைப்பற்றி பயங்கரமான விவரங்கள் அதி சீக்கிரத்தில் தேசமெங்கும் பரவிவிட்டன. உலான்கள் தங்கள் சத்துருக்களைப் பயங்கரமாய்க் கொன்றதோடு தங்கள் உயிரையும் அலக்ஷியமாய்க் கொடுத்தனர். உலான்கள் தங்கள் சத்துருக்களைக் கண்டவுடன் தலைகால் தெரியாமல் விழுந்தாக்கி படுகொலை புரிந்தனர்; தாங்களே தோல்வியடைந்து ஓடும்போது அலக்ஷியமாய் நகைத்து மாண்டனர். ஆண் பெண் குழந்தைகளென்ற வித்தியாசம் பாராமல் உலான்கள் சென்ற இடங்களிலெல்லாம் உயிர்ச்சேதத்தை உண்டு பண்ணி, பொருட்சேதத்தையும் விளைவித்துக்கொண்டே சென்றனர். உலான்களின் நடவடிக்கைகள் எவ்வளவுதூரம் குற்றமுள்ளவையென்று இப்போது விசாரிப்பது சாத்தியமில்லையென்றாலும், பெல்ஜிய ஜனங்கள் அவைவரும் பீதியால் நடுங்கும்படி உலான்கள் செய்தனரென்பதில் சந்தேகமில்லை.

பெல்ஜிய ஜனங்கள் கலக்கமடைந்தாலும், பெல்ஜியப் படைகள் மட்டும் சற்றும் அஞ்சவில்லை. பெல்ஜியக் குதிரைப்படைகள் மிகுந்த பராக்கிரமத்துடன் சண்டை செய்து உலான்களை பலமுறை சிதறவடித்தன. ஹேஸல்ட் என்ற ஸ்தலத்தை உலான்கள் மூன்றுமுறை பிடித்து மூன்றுமுறை இழந்து விட்டனர். டைர்லிமாண்ட் என்ற ஸ்தலத்தில், பெல்ஜிய ஈட்டிப் படைகள் குதிரைகளில் ஏறியபடி உலான்களை உக்கிரமாய்த் தாக்கி சிதறவடித்தன. உலான்கள் பின் வாங்கிச்சென்று துணைப்படைகளையும் மெஷின் பீரங்கிகளையும் பெற்று மறுபடியும் டைர்லிமாண்டுக்கு வந்து பெல்ஜிய ஈட்டிப் படைகளைத் துரத்திவிட்டன. பெல்ஜிய ஈட்டிப்படைகள் தங்கள் முக்கியசேனையின் இருப்பிடத்துக்குப் பின் வாங்கிச் சென்றன.

ஹாலண்ட் தேசத்து எல்லையோரமாய் 6000 ஜெர்மன்குதிரைகள் சென்றன; லீஜுக்கு வடக்கே 7000 குதிரைகள்சென்றன. ப்ரூஸல்ஸுக்கு கிழக்கே நிலைபெற்றிருந்த பெல்ஜிய சேனைக்கு முன்னால் உலான்கள் மிகவும் சிரமப்பட்டு முன்செல்லவேண்டியிருந்தபடியால் அவ்விடத்தில் சண்டைசெய்த உலான்களின் தொகை வர வர அதிகரித்துக் கடைசியில் அங்கு 10,000 குதிரைகள் ஒன்றுகூடின. பெல்ஜிய சேனை நிலைபெற்றிருந்த இடமாகிய ஹேலன் என்ற நகரத்தில்,

பெல்ஜியத் துருப்புகள் உலான்களின் வருகையை அறிந்துகொண்டு வனுவான அகழ்களை வெட்டி அங்கு பீரங்கிகளை இரகஸ்யமாய்வைத் திருந்தனர். உலான்கள் ஆகஸ்ட் 12-ந்தேதியன்றுகாலை 11-மணிக்கு ஹேலன் நகரத்துக்கு அருகில் வந்தார்கள். அதுவரையில் சும்மா இருந்த பெல்ஜியத் துருப்புகள் திடீரென்று தங்கள் பீரங்கிகளைச் சுட்டார்கள். ஜெர்மன் பீரங்கிகள், குதிரைப்படையோடு செல்கிற பீரங்கிகளைப்போல, கிறிய தினுசைச் சேர்ந்தவையாகையால் சீக்கிரத்தில் சேதமாயின. ஆயினும் உலான்கள் தங்கள் குதிரைகளின் மேல் ஏறியபடி பெல்ஜியரின் அகழ்களை நோக்கிப் பாய்ந்தனர். அகழ்களிலிருந்த மெஷின் பீரங்கிகள் உலான்களுக்குப் பயங்கரமான சேதத்தை உண்டுபண்ணின. உயிர்ச்சேதத்தை லக்ஷியஞ்செய்யாமல் உலான்கள் பெல்ஜிய அகழ்களைப் பிடித்து விடுவதற்காக உக்கிரமாய்ச் சண்டைசெய்து கொண் டிருக்கையில் பெல்ஜியக் குதிரைப்படைகள் வந்து உலான்களைத் துரத்திவிட்டன. அவ்வாறு 10,000 குதிரைகளையுடைய உலான்படைகள் தோல்வியடைந்தபோது அவ்விடத்தில் பெல்ஜியரின் சைன்ய பலம் இவ்வள வென்று ஜெர்மானியர் அறிந்து கொண்டனர்.

அவ்வாறு ஜெர்மன் குதிரைப் படைகள் அதிக இடங்களில் பின்வாங்கிச் சென்றபோது, ஜெர்மானியர் தோல்வியடைந்து விட்டனரென்று பெல்ஜிய ஜனங்கள் கினைத்துசந்தோஷங்கொண்டார் கள். உண்மையென்னவென்றால், ஜெர்மன் குதிரைப் படைகள் சத்துருவின் சைன்ய பலத்தையும் இருப்பிடங்களையும் அறியும் நோக்கத்துடன் சில்லரைச் சண்டைகளைச் செய்துவிட்டுத் திரும்பிப் போயின. ஜெர்மன் குதிரைப்படைகள் இரும்புக்கவசம் பூண்ட மோட்டார்களில் மெஷின் பீரங்கிகளை ஏற்றிக்கொண்டுசென்று பெல்ஜியத் துருப்புகளுக்கு அதிக சேதத்தை யுண்டுபண்ணின. அதன்பிறகு பெல்ஜியரும் அம்மாதிரியான வண்டிகளை உப யோகிக்கத் தொடங்கினார்கள். ஜெர்மானியர் சத்துருவைப்பற்றிய விவரங்களை அறிவதற்காக குதிரைப்படைகளை உபயோகித்ததோடு ஆகாயவிமானங்களையும் அனுப்பினார்கள். ஜெர்மன் ஆகாயவிமானங் கள் வெடிகுண்டுகளை எறிந்து கிராமங்களில் பீதியை யுண்டுபண்ணி நகரங்களில் சேதத்தை விளைத்தன. பெல்ஜியரும் யுத்த ஆரம்பத்தில் ஆகாய்விமானங்களை உபயோகித்தனர். ஜெர்மன் விமானங்களால்

நேர்ந்த தொந்தரவை நினைத்து பெல்ஜியக் குடியானவர்கள், தங்கள் கண்களுக்குப் புலப்பட்ட சகல விமானங்களையும் நோக்கிச் சுடவே, அநேக பெல்ஜிய விமானங்களையும் சேர்த்து வீழ்த்தினர்கள். அதன் பிறகு பெல்ஜிய விமானங்களின் நடமாட்டம் நின்று விட்டது.

இதுவரையில் நடைபெற்ற யுத்த சம்பவங்களெல்லாம் பெல்ஜிய ஜனங்களுக்கு தைரியத்தைக் கொடுக்கும் படியாகவே இருந்தன. ஜெர்மன்குதிரைப்படைகள் தோல்வியடைந்ததை அனேகருங்கண்டார்கள். ஜெர்மானியர் பின்வாங்கிச்செல்ல ஏற்பாடுகளைச் செய்துவந்தார்களென்று சிலர் சொன்னார்கள். பிரிட்டிஷ் படைகளையும் பிரஞ்சுபடைகளையும் பெல்ஜியர் பிரதிதினமும் எதிர் பார்த்த வண்ணமாயிருந்தார்கள். ஆகஸ்ட் 14-ந்தேதி பிரஞ்சுபடைகள் பெல்ஜியத்துக்கு வந்துவிட்டதைக் கண்டு பெல்ஜியர் சந்தோஷமடைந்தனர். பிரஞ்சுபடைகள் ஷார்லிரூப் என்றஸ்தலத்துக்கு வந்து அங்கிருந்து வடக்கில் வாவர் என்ற ஸ்தலம் வரையில் பரவி நிலை பெற்றன. வாவர் என்றஸ்தலத்தில் பிரஞ்சுக்காரர் பெல்ஜியசேனையோடு சேர்ந்து நின்றனர்.

ஜெர்மன் சேனை யுத்தத்துக்குப் புறப்பட்டது

ஜெர்மானியர் தங்கள் உலான் படைகளையும் ஆகாய விமானங்களையும் அனுப்பி சத்துருவின் சைன்ய பலத்தை அறிந்துகொண்டவுடன் தங்கள் லக்ஷக்கணக்கான துருப்புகளைச் செலுத்தத் தொடங்கினர்கள். ஜெர்மன் படைகள் புறப்பட்டு விட்டனவென்று கிராமங்கிராமமாய் சமாசாரம் பரவிவிட்டது. மோட்டார் வண்டியிலும் குதிரையின்மேலும் கால் நடையாகவும் லக்ஷக்கணக்கான ஜெர்மானியர் பிரயாணஞ் சென்றார்கள். மகா மகத்துக்குக் கூடும் ஜனத்திரளைப் போன்ற அநேக கூட்டங்கள் துப்பாக்கிகளும் கத்திகளும் ஈட்டிகளும்வகித, நல்ல யௌவன பருவமுடையவர்களாய், ஒழுங்கான வரிசைகளில் நிலைபெற்று, அடிமேல் அடிவைத்து நடந்து, ஒரே மங்கல் வர்ணமாய் உடைகளைத் தரித்து நகர்ந்து செல்ல ஆரம்பித்தால் எவ்வாறிருக்குமென்று ஊகிக்கலாம். பீரங்கிகளும், மெஷின்பீரங்கிகளும், மோட்டார் வண்டிகளும், நீராவி எஞ்ஜின்களும், சாமான் வண்டிகளும் ஒன்றின்பின் ஒன்றுப் மைல் கணக்காய் நீண்டு சென்றன. ஆகாய விமானங்களை ஏற்றிய மோட்டார் வண்டிகளும்,

சமையல் அடுப்புகளை ஏற்றிய மோட்டார் வண்டிகளும், பலவிதமான பீரங்கிகளை ஏற்றிய மோட்டார் வண்டிகளும், அகழ்வெட்டுவதற்கு இருப்புக்கலப்பைகளை ஏற்றியமோட்டார் வண்டிகளும், பாலங் கட்டுவதற்கு படகுகளையும் பிப்பாய்களையும் ஏற்றிய மோட்டார் வண்டிகளும், துருப்புகளையும் ராணுவ உத்தியோகஸ்தர்களையும் ஏற்றிய மோட்டார்களும் கண்ணுக்குத்தெரிகிற தூரம் வரையில் நிரம்பிச் செல்லும்போது சோட்டு மூழுவதுமே நகர்வதுபோல் தோன்றிற்று. ஜெர்மன்சேனைப்பற்றிஒரு பத்திரிகாநிருபர் பின்வருமாறுவர்ணிக்கிறார். "காலை 6 மணிக்கு துருப்புகள் பிரயாணத்துக்குத் தயாராயின. ராணுவ உத்தியோகஸ்தர்களின் உத்தரவுகள் துப்பாக்கியின் வெடியைப்போலசப்தித்தன; உடனே இரும்பாயுதங்கள் குலுங்கின; கால்களும்கைகளும் பொம்மைகள் போல அசையத் தொடங்கின; துருப்புகள் அவ்வாறு நடக்கத் தொடங்கிய பிறகு எவனுவ தொருவன் தன் வரிசையைவிட்டு எள்ளளவு தவறினுல் அவனுக்குவந்தது அனர்த்தம்; அவனிடம் ராணுவ உத்தியோகஸ்தர் விரைந்துசென்று, புலியைப்போல பற்களுக்கிடையே கீறி,கோபவார்த்தைகளை அவனுடைய முகத்தில் துப்புவார். துருப்புகளும் வண்டிகளும் ஓயாமற் செல்வதால் சோட்டுகளில் கணுக்காலாழம் புழுதி உண்டாகி படைகளுக்கு மேலே புகைபோல் சூழ்ந்துகொண்டது. படைகள் நள் முழுவதும் நடந்த வண்ணமாயிருந்தன. படைகள் நடந்துகொண்டிருக்கும்போதே, வழியில் சில பேர் தண்ணீர்த் தொட்டிகளை ஏந்திக்கொண்டு நின்றார்கள்; துருப்புகள் நடந்த வண்ணமாய் தங்கள் குவளைகளில் நீரெடுத்துக் கொண்டு சென்றனர். வழியில் வேறு சிலர் தகரப் பெட்டிகளில் பல காரங்களை ஏந்தி நின்றனர்; அவைகளை எடுத்துக்கொண்ட துருப்புகளெல்லாம் நடந்த வண்ணமாகவே யிருந்தனர். தபால் சிப்பந்திகள் வழியில் நின்று துருப்புகள் கொடுத்த கடிதங்களை வாங்கிக்கொண்டனர். வெடிமருந்து வண்டிகள், பீரங்கி வண்டிகள், உத்தியோகஸ்தர்களை ஏற்றிய மோட்டார் வண்டிகள் இவையெல்லாம் ஒரே நடையாய்ப் பிரயாணஞ் சென்றன. பாதையில் ஏதாவது தடையேற்பட்டாலும் வளைவுகளில் பாதை திரும்பினாலும், முதல் வரிசையிலுள்ளவன் கையைத் தூக்கி சமிக்ஞை செய்தவுடன், அந்த சமிக்ஞைக் கைக்குக்கை மாறி கடைசி வரிசைக்குவந்துசேர்ந்தது."

அவ்வாறு ஜெர்மன் படைகள் தடுத்தற்கரிய பலமும் வேகமுங் கொண்டு ஒய்வில்லாமல் சென்றன. இடையில் சண்டைகள் நடந்து போர்க்களத்தில் பிணங்களும் தளவாடங்களும் பின்னிக்கிடப்பதையும் கவனிக்காமல் அப்படைகளெல்லாம், எறும்புக் கூட்டங்களைப் போல, முடிவற்ற வரிசையாக மேடு பள்ளங்களையும் தட்டுதடைகளையும் பாராமற் சென்றன. அவைகளை பெல்ஜியக் குதிரைப் படைகள் வெகு உக்கிரமாய்த் தாக்கி பாறைகளில் மோதிச் செல்கிற அலைகளைப் போல் திரும்பிவிட்டனர். ஜெர்மன் படைகளின் வருகையைக் கண்டதும் ஊர் ஜனங்களிற் சிலர் பிதியடைந்து வீடு வாசலைவிட்டு ஓடினர்; சிலர் தெருவு ஓரங்களில் நின்று, ஓயாமற் செல்கிற ஜெர்மன் கூட்டங்களைக் கண்டு வாய்திறந்தவண்ணமாய் திகைத்து நின்றனர்.

பெல்ஜிய சேனை பின்வாங்கியது.

ஆகஸ்ட் 17-ந்தேதி காலை ஜெர்மன் சேனை முன் செல்ல ஆரம்பித்தது. அதன் ஒரு பாகம் வாவர் என்ற ஸ்தலத்தில் பிளந்து கொண்டு பிரஞ்சுப் படைகளையும் பெல்ஜிய சேனையையும் அவ்விடத்தில் இரண்டாகத் துண்டித்துவிட்டு முன்சென்றது. அவ்வாறு துண்டிக்கப்பட்ட பிரஞ்சுப் படைகளும் பெல்ஜிய சேனையும் ஜெர்மன் சேனையின் மற்ற பாகங்களால் உக்கிரமாய்த் தாக்கப்பட்டன. அன்று (17-ந்தேதி) முழுவதும் பெல்ஜிய சேனை உக்கிரமாய் சண்டைசெய்து ஜெர்மானியரைத் தடுக்க முயன்றது. ஜெர்மன்சேனையில் துருப்புகளும் பீரங்கிகளும் மெஷின் பீரங்கிகளும் பல மடங்கு அதிகமாயிருந்ததால் அந்த வெள்ளத்துக்கு முன் நிற்க முடியாமல் பெல்ஜிய சேனை முழுவதும் புரண்டு சென்றது. பெல்ஜியத்துருப்புகள் அநேக கிராமங்களில் அகழ்களை வெட்டி நிலைபெற்றும், வேறிடங்களில் கம்பிவலைகளைக் கட்டியும், சோட்டுகளை அடைத்தும் பாலங்களை உடைத்தும் பலவிதமாய் ஜெர்மானியரைத் தடுக்க முயற்சி செய்திருந்தார்கள். அவ்வித முயற்சிகள் குதிரைப்படைகளைத் தடைசெய்யுமே யொழிய நூதனகாலத்துச் சேனையின் நடமாட்டத்தை சிறிதும் தடுக்கமுடியா. பெல்ஜிய கிராமங்களை ஜெர்மன் பீரங்கிகள் பொசுக்கிவிட்டன. பெல்ஜியக் குதிரைப்படைகள், முன்பு உலான்களைத் தாக்கியது போல, ஜெர்மன் காலாட்படைகளைத் தாக்க வந்தபோது, ஜெர்மானியரின்

மெஷின் பீரங்கிகள் கெருப்பைக் கொட்டின. பெல்ஜிய காலாட் படைகள் சற்று கலக்கமடைந்தவுடன் ஜெர்மன் குதிரைப் படைகள் பாய்ந்துசென்று துரத்தியடித்தன. ஆகஸ்ட் 17-ந்தேதி காலை ஜெர்மன் சேனை புறப்பட்டு பெல்ஜியத்தின்மீது படையெடுத்துச் சென்று, பெல்ஜிய சேனை முழுவதையும் தாக்கிற்று ; தாக்கின ஸ்தலங்களிலெல்லாம் பிரகதிகொண்டு முன்சென்றது. அன்றிரவு பெல்ஜிய சேனை பின் வாங்கிச்செல்லும்படி நேர்ந்தது. ஜெர்மன் படைகள் விஸ்தாரமாய்ப் பரவி நாலாபக்கங்களில் முன்சென்று கொண்டிருந்ததால், கோட்டைகளால் காக்கப்படாத இறந்தவெளிகளில் பெல்ஜிய சேனை நிலைபெற்றிருப்பது சிறிதும் சாத்தியமல்ல ; பெல்ஜியத் தலைநகரமாகிய ப்ருஸல்ஸ், அத்தேசத்தின் மத்திய ஸ்தானத்தில் எவ்வித ஆதரவுமின்றி தனிமையாய் இருப்பதால், பெல்ஜியசேனை அந்நகரத்தைக் காக்க முடியாது ; அது அவ்வாறு முயன்றால் தனக்கு நாசத்தை வருந்தி அழைப்பதைத் தவிர வேறு பலனை அடையாது. நாமூர் கோட்டைகளுக்கு மேற்கிலிருந்த பிரஞ்சுப் படைகளினின்றும் துண்டிக்கப் பட்டதால், இனி பெல்ஜிய சேனை அங்கு போய் பிரஞ்சுக் காரருடன் சேர்ந்துகொள்வதும் சாத்தியமல்ல. ஆகையால் பெல்ஜிய சேனை ஆண்ட்வர்ப் கோட்டைகளுக்குப் பின்வாங்கிச் செல்வதாகத் தீர்மானித்தது.

பெல்ஜிய சேனை அந்த கஷ்டநிலைமையிலிருந்தபோது அச்சமயத்தில் பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரரும் ஏன் பெல்ஜியருக்கு உதவிசெய்யவில்லைஎன்று அடிக்கடிகேள்வி கேட்கப்படுகிறது. பிரிட்டிஷ் சேனை இங்கிலாந்தை விட்டுப்புறப்பட்டுவந்து சேர்வதற்கு, எவ்வளவு அவசரமான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், ஆகஸ்டு 23ந்தேதிவரையில் தாமசப்பட்டது. பிரஞ்சுபடைகள் நாமூருக் கருகிலிருந்து கொண்டு, வடபுறமாய் முன் செல்லாமலும், அங்கிருந்த பெல்ஜிய சேனைக்கு உதவிசெய்யாமலும் சும்மாயிருந்து விட்டதற்கு சில காரணங்களிருக்கின்றன. ஜெர்மானியர் யுத்தந் தொடங்கி 13–தினங்களுக்குள் முழு பலத்தையும் பெற்று பெல்ஜியரைத் தாக்கியதால், அதற்குள்ளாகப் பிரஞ்சுப் படைகளைப் போதுமானபடி அனுப்பக் கூடவில்லை. தவிர, பெல்ஜிய எல்லையில் பெரிய சண்டையைத் தொடங்குவது பிரஞ்சு சேனையின் நோக்கமல்ல. பிரஞ்சு சேனையின் முக்கிய பாகம் அல்ஸேஸ் மாகாணத்

திலும் மியூஸ் நதிக்கரையிலும் குவிக்கப்பட்டது. பிரஞ்சு ராணுவ தந்திரிகள் போசனை செய்த யுத்த கடவடிக்கைகளுக்கு அவ்வித ஏற்பாடுகளே ஒத்ததாபிருந்தன. பெல்ஜியத்தின்மீது ஜெர்மானியர் எடுத்த படையெடுப்பு சத்துருவை எமாற்றுவதற்காகவென்றும், அல்ஸேஸ் மாகாணத்தின் வழியாய் படையெடுப்பதே அவர்களின் உள் நோக்கமென்றும் பிரஞ்சுக்காரர் கருதினர்கள். யுத்த மண்டல முழு வதையும் பற்றிய நிலைமையைக் கருதி, யுத்தத்தை சாதகமான முடி வுக்குக் கொண்டு வருதையோசிக்க வேண்டுமாகையால், பெல்ஜி யரின் நிலைமையைமட்டும் தனியாகக்கருதுவது சரியாகாது. தவிர, பெல்ஜிய எல்லையில் நிலைபெற்று சண்டை செய்வதற்கு வலுவான ஸ்தலங்களில்லை.

ப்ருஸல்ஸ் பிடிபட்டது.

பெல்ஜிய சேனை ஆண்ட்வர்ப்புக்குப் பின்வாங்கிய பிறகு பெல் ஜிய ஜனங்கள் ஜெர்மானியருக்குப் பணிந்து விடுவதைத் தவிர வேறெதுவுஞ்செய்வதற்கில்லை. பிரஞ்சு, பிரிட்டிஷ்படைகள் உடனே உதவிக்கு வந்து தங்களை விடுவிப்பார்களென்ற நம்பிக்கை மட்டும் சில தினங்கள் உறுதியாயிருந்து வந்தது. பெல்ஜிய கவர்ன் மெண்ட் ஜனங்களை உற்சாகப்படுத்தி வந்தார்கள்; பத்திரிகைகளும் கவர்ன்மெண்டை பூர்த்தியாய் ஆதரித்து தைரியஞ் சொல்லிவந்தன. எங்கவதுபிரஞ்சுராணுவ உத்தியோகஸ்தர் தென்பட்டால் உடனே பிரஞ்சு படைகள் வரப்போகின்றனவென்று ஜனங்கள் பேசிக்கொண் டார்கள். 99 வருஷங்களுக்கு முன்னுல் ப்ருஸல்ஸுக்கு கருகிலுள்ள வாடர்லூ என்ற ஸ்தலத்தில் பிரிட்டிஷ் படைகள் வந்து பிரஞ்சு ராணுவத்தை முறியடித்ததுபோல, இப்போதும் சீக்கிரத்தில் வந்து ஜெர்மன் ராணுவத்தை வேரறுப்பார்களென்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். ஆனுல் சில தினங்களுக்குள் ஜனங்களின் மனம் தளர்ச்சி அடைந்தது. நேசப்படைகளின் வருகையைப்பற்றிய வதந்தி களெல்லாம் எமாற்றமாய் முடிந்தன. பெல்ஜியத் தலைநகராகிய ப்ரு ஸல்ஸிலிருந்த ஜனங்கள் கவலையுற்றனர். காயம்பட்ட பெல்ஜியத் தூருப்புகள் மோட்டார் வண்டிகளிலும் ரயில்வண்டிகளிலும் வரிசை யாய் வந்துகொண்டிருந்தனர். ப்ருஸல்ஸ்நகரத்திலிருந்த அரண்மனை யும் பொது ஸ்தாபனக் கட்டடங்களும் கலாசாலைகளும் மற்ற வித மான எல்லா பெரிய கட்டடங்களும் காயம்பட்டவர்களுக்காகத்

தயார்செய்யப்பட்டன. சிகிச்சைப்படைகளும் அவைகளின் பரிவாரங்களும் ஒருபுறம் வந்தவண்ணமா யிருக்க மற்றொரு புறம் அநாதை ஜனங்கள் வரிசை வரிசையாக வரத்தொடங்கினர்கள். ஜெர்மன் படைகள் முன்சென்ற வழிகளில் நாசமாக்கப்பட்ட கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் வீடுவாசலை இழந்த ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் ப்ருஸல்ஸில் இரண்டனர். கிழவர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளும் தாய்மார்களும் தங்களால் சுமக்கக்கூடிய மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொண்டு பிழைக்க வழிதெரியாமல் பெல்ஜியத்தலைநகருக்கு வந்து சேர்ந்தனர். அவ்வாறு வந்தவர்கள் தாங்கள் பட்டகஷ்டங்களைச் சொல்லி ப்ருஸல்ஸ் நகரத்துவாசிகளின் மனதை அதிகமாய்க் கலங்கச்செய்தார்கள். ஜெர்மானியர் செய்த அட்டகாசங்களைப் பற்றிய வர்ணனைகள் நகர முழுவதும் பரவத் தொடங்கின. நகரத்து அதிகாரிகள் அந்த வதந்திகளை அடக்க முயன்றபோது அவைகள் இன்னும் விரைவாயும் இரகஸ்யமாயும் பிரபலமாயினவென்று அறிந்துகொண்டார்கள். ப்ருஸல்ஸ் நகரத்தில் ராணுவ ஏற்பாடுகள் மும்முரமாய் செய்யப்பட்டுவந்தன. நகரக் காவலர்களும் போலீஸ்காரர்களும் ராணுவ பயிற்சிகளைப் பெற்றுவந்தார்கள். நகரத்தைச் சுற்றிலும் அகழ்கள் வெட்டப்பட்டு இருப்புக் கம்பி வலைகளும் கட்டப்பட்டன.

இப்படிப்பட்ட ராணுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டதற்கு ஜனங்கள் சீக்கிரத்தில் சமாதானஞ் சொல்லிக்கொண்டார்கள். பெல்ஜியத் அரும்புகள் உலான்களை கடுமையாய்ச் சிதறவடித்துத் துரத்துவதால், உலான்கள் நாலாபக்கங்களில் ஓடிப்போகையில் ப்ருஸல்ஸ் நகரத்தின்மேலும் வந்து விழலாமென்பதை உத்தேசித்தே அந்த ராணுவ ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன வென்று ஜனங்கள் சொன்னார்கள். ஜெர்மானியர் பெல்ஜிய சேனையைத் தாக்கியதில் மிகுந்த சேதத்தை அடைந்து வடக்கு பிரதேசத்தில் முன்செல்லும் யோசனையைக் கைவிட்டபடியால், ப்ருஸல்ஸ் நகரத்துக்கு ஆபத்தில்லையென்று பலபேர் வாதித்தார்கள். நேசப்படைகள் ப்ருஸல்ஸ் நகரத்தைத் தூண்டியாகப் போட்டு ஜெர்மானியரைப் பிடித்து இழுத்து, தப்பிப் பிழைப்பதென்பது சாத்தியமல்லாதபோர் சூழ்ச்சியில் அவர்களை சிக்கவைக்கப் பார்க்கிறார்களென்று சிலர் யோசனை சொன்னார்கள்.

ஆகஸ்ட் 17-ந்தேதி ப்ருஸல்ஸ் நகரத்தின் நிலைமை அவ்வாறிருந்தது. அன்று தினம் பெல்ஜிய சேனை பின் வாங்கிச்செல்ல, பெல்ஜிய கவர்ன்மெண்டும் ஆண்ட்வர்ப்புக்கு மாற்றப்பட்டது. அந்த செய்தி ஜனங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஜெர்மானியர் ப்ருஸல்ஸுக்கு வந்தால், ராணுவத்தைச் சேராத ஜனங்கள் அவர்களை எதிர்க்கக் கூடாதென்றும் ஜனங்களனைவரும் தங்கள் வீடுகளில்கதவுகளை மூடிக்கொண்டு எவ்வித தொந்தரவுஞ் செய்யாமலிருக்கவேண்டுமென்றும் பத்திரிகைகள் அறிவித்தன. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் ராணுவ அதிகாரிகளும் மோட்டார் வண்டிகளில் நகரத்தினின்றும் புறப்பட்டு ஆண்ட்வர்ப்புக்குச் சென்றார்கள். கவர்ன்மெண்டு தஸ்தாவேஜுகளும் பொக்கிஷமும் அங்கு சென்றுகொண்டிருந்தன. 19-ந்தேதி இரவு நகரத்தலைமை அதிகாரி மாக்ஸ் என்பவர் ஜனங்களுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டார்:—

"நமது பெல்ஜியத் துருப்புகள் நேசப்படைகளின் உதவியைப் பெற்று பராக்கிரமத்துடன் சத்துருவை எதிர்த்தபோதிலும், ப்ருஸல்ஸ் நகரத்தை சத்துரு வசப்படுத்திக் கொள்ளலாமென்று அஞ்சப்படுகிறது. அப்படிப்பட்ட சம்பவம் நேரிடுமானால், ஜனங்கள் சாந்தமாயிருப்பார்களென்று நான் நம்புகிறேன். பீதியடையாமலிருங்கள். ராணுவக்காப்பு விஷயமாயுள்ள ஏற்பாடுகளைப்பற்றி சத்துருக்கள் பலவந்தமாய் சமாசாரத்தை அறிந்துகொள்ளக் கூடாதென்று யுத்த சட்டங்கள் விதிக்கின்றன. ப்ருஸல்ஸ் நகரத்துவாசிகள் அப்படிப்பட்ட சமாசாரங்களைச் சொல்ல மறுத்துவிடுவதற்கு சுதந்தரம் பெற்றிருக்கிறார்கள்.'

"நான் உயிருடன் இருக்கும் வரையிலும் அல்லது ஸ்வாதீனம் பெற்றிருக்கும் வரையிலும் என்னுடைய ஜனங்களின் சுதந்தரத்தையும் கௌரவத்தையும் காக்க முயற்சி செய்வேன். விரோதமான காரியங்களைச் செய்யாமலிருந்தால் என்னுடைய வேலை இலகுவாய் நடக்கும். ஜனங்களே, என்னவந்தபோதிலும் உங்களுடைய நகரத்து அதிகாரி சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்கு அவர் துரோகஞ் செய்யமாட்டார். சுயேச்சையும் சுதந்தரமும் பெற்ற பெல்ஜிய தேசம் நீடூழி வாழ்க; ப்ருஸல்ஸ் நகரம் நீடூழிவாழ்க!"

20-ந் தேதி காலை நகரத்து அதிகாரியாகிய மாக்ஸும் வேறு சில உத்தியோகஸ்தர்களும் மோட்டார் வண்டியில் ஏறிச் சென்று

ஜெர்மன் சேனைத் தலைவரைப் பார்க்கச் சென்றார்கள். ஜெர்மன் சேனைத் தலைவர் அவர்களை மிகவும் மூறுக்காய் வரவேற்றார். ப்ருஸல்ஸ் நகரம் எவ்வித நிபந்தனையு மின்றி சரண மடையத் தயாரா யிருக்கிறதாவென்றும் இல்லாவிடில் அது பீரங்கிகளால் தகர்க்கப்படு மென்றும் ஜெர்மன்சேனைத்தலைவர் அறிவித்தார். அதற்குச் சம்மதிப்பதைத் தவிர வேறெதுவும் செய்வதற் கில்லையென்று மாக்ஸ் பதில் சொன்னார். ஜெர்மன் சேனைத் தலைவர் விடுத்த பின் வரும் அறிக்கை ப்ருஸல்ஸ் நகரத்துத் தெருக்களில் வெளியிடப்பட்டது:—.

"ப்ருஸல்ஸ் நகரத்துக்குள் இன்றைக்கும் அதற்கடுத்த சிலதினங்களும்ஜெர்மன் துருப்புகள் பிரவேசிக்கும். அவர்களுக்குத் தேவையான இருப்பிடங்களும் ஆகாரமும் மற்ற சாமான்களும் நகரத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படி கேரிட் டிருக்கிறது; முனிசிபல் அதிகாரிகளுடன அவ்விஷயங்க ளெல்லாம் ஏற்பாடு செய்துகொள்ளப் படும்.

"யுத்த காலத்தில் கேரக்கூடியஅவ்விதஅவசியங்களுக்கு ஜனங்கள் தடை செய்யாமல் சம்மதிப்பார்க ளென்று நான் எதிர்பார்க்கிறேன். ஜனங்கள் ஜெர்மன் துருப்புகளுக்கு விரோதமான காரியங்களைச் செய்யாமலிருப்பார்க ளென்றும், கேட்ட சாமான்களை உடனுக்குடன் கொடுத்துவருவார்களென்றும் நான் முக்கியமாய் எதிர்பார்க்கிறேன்.

"அவ்வாறு ஜனங்கள் செய்தால், நகரத்தையும் ஜனங்களையும் காப்பதாக நான் உறுதி கொடுப்பேன்.

"அவ்வாறின்றி, வேறு சில இடங்களில் சப்பவித்ததுபோல், வீடுகளுக்குத் தீ வைப்பது, வெடி சப்தங்கள் உண்டாக்குவது, முதலிய விரோதமான காரியங்களைச் செய்தால், மிகவும் கடுமையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டிவரும்."


அன்று தினம் காலை தெருக்களிலெல்லாம் கூட்டங்கூட ஆரம்பித்தது. இன்னது நடக்கப்போகிறதென்று ஜனங்களுக்குத் தெரியவில்லை. ஆயினும் ஜயசீலர்களின் வருகையைப் பார்க்கவேண்டுமென்ற ஒரு ஆவலால் ஜனங்கள் திரள் திரளாகக்கூட ஆரம்பித்தனர். ஜெர்மானியரைப்பற்றிப் பலவித வதந்திகள் விரைவாய்ப் பரவின என்று சொல்லத்தேவையில்லை.

ஜெர்மானியரின் நகரப் பிரவேசம்.

ஜெர்மானியரின் நகரப்பிரவேசம் வெகு சிறப்பா யிருக்கவேண்டு மென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஏற்பாடு செய்தசாகத் தோன்றுகிறது. போர்க்களங்களில் அலைந்து திரிந்து சோர்வடைந்த துருப்புகளுக்குப் பதிலாக புத்த புதிய துருப்புகள் ப்ருஸல்ஸுக்கு அனுப்பப்பட்டன. போர்க்களத்தில் மழுங்கிய ஆயுதங்களையும், கிழிந்துபோன ராணுவ உடைகளையும், சுட்டுகட்டிய ரணங்களையும், அடிபட்ட வடுக்களையும், வாடிய முகங்களையும், ப்ருஸல்ஸ் ஜனங்கள் எதிர்பார்த்திருந்தால் ஏமாந்துபோயிருப்பார்கள்.

பகல் இரண்டு மணியானதும், தூரத்தில் பிரங்கிகள் அதிரவே ஜெர்மன் துருப்புகள் புறப்பட்டு விட்டதாகத் தெரியவந்தது. பாண்ட் வாத்தியங்களின் முழக்கம் வாவரத்தெளிவாய்க்கேட்க, ஜெயசிலர்களின் வருகையும் தென்பட்டது. முதன் முதலில் ஒரு பிரஷ்ய சேணத்தலைவர் சவாரிசெய்து வந்தார். தடித்த உருவமும் கறுத்த மீசையும்கொண்டு கோரமான மிருகத்தைப் போலிருந்தா ரென்று அவரைப்பற்றி ஜனங்கள் பிற்பாடுசொல்லிக்கொண்டார்கள். அவர் மன்மதனுகவே யிருந்தாலும் அச்சமயம் ஜனங்களுக்கிருந்த ஆத்திரத்தால் வேறுவித அபிப்பிராய முண்டாயிருக்காது. ஒவ்வொரு குதிரைப்படையும் காலாட்படையும் பாண்ட் வாத்தியங்களின் முழக்கத்துடன் செல்ல, மொத்தம் 40,000 துருப்புகளும் மேதசமீதங்களை ஏககாலத்தில் பாட, நூற்றுக்கணக்கான வரிசைகள் ஒன்றின் முன் ஒன்றாய் அடிமேல் அடி வைத்துச் சென்றன. புத்த புதிதான உடைகளைத் தரித்த துருப்புகளும் பளபளப்பான மேனியை யுடைய குதிரைகளும் மின்மினும் ஆயுதங்கள் பலவும் பாதை நெடுக நிரப்பிச் செல்ல, முன்னும்பின்னும் எங்குமே ஒப்பாத சப்தமா யிருந்தது. மெஷின் பீரங்கிகளை ஏற்றிக்கொண்டு நூறு மோட்டார் வண்டிகள் மென்மேலும் விரைந்து சென்றன. நான்கு நீராவி எஞ் ஜின்களைப் பூட்டிய பெரிய பூதம்போன்றதோர் முற்றுகைப் பீரங்கியும் நகர்ந்து சென்றது. ஏராளமான வண்டிகளும், பல தினுசான பீரங்கிகளும், நானாவித யந்திரங்களும், பாலங் கட்டப் படகுகளும், மற்றக்கருவிகளும், ஆயுதங்களும், துருப்புகளும், சகலமும் ஜெர்மன் ராணுவத்தைக் குறிக்கும்படி ஒரே சாம்பல் வர்ணம் பூசப் பட்டு பலவாறு பிரகாசித்துக்கொண்டு, பெரிய மலைப்பாம்புபோல,

மெல்லநகரத்துக்குள் நுழைந்தன. ஜெர்மன் துருப்புகள்நகரத்தின்பிர தானபாகத்துக்கு வந்ததும் படைத்தலைவரின் உத்தரவு திடீரென்று கிளம்பிற்று. உடனே ஆயிரக்கணக்கான ஜெர்மன் துருப்புகள் கடன கோலத்தில் அலங்காரமாய் அணிவகுத்து ராணுவ கீதம்பாடி பேர் பெற்றதோர் ராணுவ நர்த்தனம் புரியத் தொடங்கினர்கள். அந்த அதிசயமான தோற்றம் பெல்ஜிய ஜனங்களின்மனதில் திகிலடிம்படி யாய்ப் பாய்ந்தது போர்த்திறமைக்கும், நூதன காலத்துப்பெருமை களுக்கும், ஒப்புயர் வில்லாத ராணுவ வன்மைக்கும் தனி இருப்பிட மாகக் கருதிய அந்தத் துருப்புகளின் அகந்தை முகத்தில்ஆட, நாடி நரம்புகளில் தெறித்தெழும்பிய ராணுவத் திமிருக் கேற்ப அவர்கள் ராகங்களைப் பாட, பெல்ஜிய ஜனங்களனைவரும் பார்த்தனர்; பார்த்த நகரவாசிகள் யாவரும் பயந்தனர்; பாமர ஜனங்கள் பிரமித்து நின் றனர்.



நாமூர் கோட்டைகள் பிடிபட்டன.

ஆகஸ்ட் 20-ந் தேதி ப்ருஸல்ஸ் நகரத்தை ஜெர்மானியர் வசப் படுத்தியவுடன் அன்று தினமே அவர்கள் நாமூர் கோட்டைகளையும் தகர்த்தார்கள். லீஜ் கோட்டைகளைப்போல நாமூர்நகரத்துக் கோட் டைகளும் வலுவாய்க் கட்டப்பட்டிருந்தன; ஆனல் லீஜைப்போல நா மூர் கோட்டைகள் திடீரென்று தாக்கப்படவில்லை. ஆகையால் நாமூர் கோட்டைகளின் இடைவெளிகளை வலுப்படுத்தி அரண்கள் கட்டுவ

தற்கு சாவகாசமிருந்தது. அந்தக் கோட்டைகளின் இடைவெளிகளில் அகழ்கள் தோண்டப்பட்டு அவைகளுக்கு முன்னுல் இரும்புக் கம்பி வலைகளும் கட்டப்பட்டன. பூமியில் சுரங்கம் தோண்டி அங்கு வெடி மருந்து புதைக்கப்பட்டன. ஆனல் இந்த ஏற்பாடுக ளெல்லாம் ஜெர் மானியரின் நூதன யுத்த முறைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. லீஜ் கோட்டைகளின் முன்பாக வந்த ஜெர்மன் துருப்புகள் பீரங்கிகளைக் கொண்டுவராமல் அவசரப்பட்டு கோட்டைகளைத் தாக்கிச் சேத மடைந்து அணுபோகம் பெற்றதால், அந்த பிசகை ஜெர்மானியர் மறுபடியும் செய்யவில்லை. ஜெர்மானியரின் பெரிய முற்றுகை பீரங் கிகள் ஆகஸ்ட் 20-ந் தேதியே நாமூர் கோட்டைகளின் முன்பாக நிலைபெற்றன. அந்த பீரங்கிகள் லீஜ் கோட்டைகளைத் தகர்த்த தினுசைப்போல 11 அங்குலம் குறுக்களவுள்ள வாயை யுடையவை. அம்மாதிரியான 32 பீரங்கிகள் வனுவான இடங்களில் மறைவாய் வைக்கப்பட்டு 21-ந் தேதியன்று குறிபார்த்துச் சுட ஆரம்பித்தன. நாமூர் கோட்டைகளில் ஒன்று, பத்து குண்டுகளையே ஜெர்மானிய ரின்மேல் சுட சாத்தியப்பட்டன. அதற்குப் பதில் 1200 ஜெர்மன் குண்டுகள் அந்த கோட்டையின்மேல் வந்து விழுந்தன. மற்றொரு கோட்டையில் 75 பீரங்கிக் காரர்கள் தங்கள் பீரங்கிகளுக்குப் பக் கத்தில் மாண்டுபோயினர். நாமூர் கோட்டைகளில் மிகுந்த வன்மை கொண்டதென்று பேர் பெற்ற ஸ்ரேலே என்ற கோட்டை மூன்று தினங்களாகத் தகர்க்கப்பட்டது. ஆகஸ்ட் 23-ந்தேதியன்று, ஜெர் மன் பீரங்கிகளிலிருந்து 600 குண்டுகள் அந்த கோட்டையின்மீது வந்து விழுந்தன. 24-ந் தேதி 1300 ஜெர்மன் குண்டுகள் தகர்த் தன. 25-ந்தேதி மாலே 5 மணிக்குள் 1400 ஜெர்மன் குண்டுகள் விழுந்து கோட்டையைப் பூர்த்திபாய்ப் பொடி செய்துவிட்டன. அந்த கோட்டையி லிருந்த பீரங்கிகளும் இரும்புக் கவசங்களும் வலுவான கற்கட்டடங்களும் மதிற் சுவர்களும் எல்லாம் கொறுங்கிப் போயின.

அந்த கோட்டைகள் தகர்க்கப்படுவதற்கு முன்னுல், கோட்டை களின் இடைவெளிகளைக் காத்த பெல்ஜியத் துருப்புகள் சத்துரு வால் உக்கிரமாய்த் தாக்கப்பட்டனர். இடை வெளிகளில் வெட்டப் பட்ட அகழ்களின்மீது ஜெர்மானியர் தங்களிட மிருந்த பலவிதமான பீரங்கிகளி லிருந்தும் ஓபாமல் குண்டுகளைப் பொழிபவே, அகழ்

களில் உண்டான சேதங்களைப் பழுது பார்க்க முடியவில்லை. ஜெர்மன் பீரங்கிகள் பொழிந்த குருப்பை பெல்ஜியத் துருப்புகள் பத்துமணி நேரம் தைரியமாய்த் தாங்கிக்கொண் டிருந்தனர். பெல் ஜியத் துருப்புகள் தங்கள் அகழ்களில் மறைவாயிருந்துகொண்டு தலைகளைக் காட்டாமல் சேதத்தைப் பொறுத்துக்கொண்டிருந்தனர். ராணுவ உத்தியோகஸ்தர்களில் பெரும்பான்மையோரும் மாண்டு போயினர். அதனல் பெல்ஜியத் துருப்புகளை அடக்கி ஆள்வதற் குத் தேர்ச்சி பெற்ற தலைவர்களில்லாமற் போயினர். கடைசியில் ஜெர்மன் பீரங்கிகளின் உக்கிரத்தைத் தாங்கமுடியாமல் பெல்ஜியத் துருப்புகள் கலக்கமடைந்து அகழ்களைக் கைவிட்டுச் சென்றனர். அவ்வாறு கோட்டைகளின் இடைவெளிகளில் ஜெர்மானியர் புகுந்து முன்செல்லத் தொடங்கினர்கள். நாமூர் கோட்டைகளைக் காத்த பெல்ஜியத்தலைவர் நான்கு தினங்களாகச் செய்த முயற்சிகளெல்லாம் பயன்படாமற் போக, தமது துருப்புகளோடு ஒழுங்காய்ப் பின்வாங் கிச் செல்லலாமென்று எண்ணி எல்லாக் கோட்டைகளிலுமிருந்த துருப்புகளை ஒன்றுசேர்க்க முயற்சி செய்தார். எல்லாக்கோட் டைகளுக்கும் தந்திக்கம்பி மூலமாய் அவர் உத்தரவு செய்தார். ஆனல் தந்தியந்திரம் வேலை செய்யவில்லை. தந்திக்கம்பி பூமிக்கடியில் போடப்பட்டிருந்தும் அவைகளை ஜெர்மன் துப்பாளிகள் அறுத்து விட்டார்கள். ஆகையால் அந்தந்த கோட்டைகளிலிருந்த பெல்ஜியத் துருப்புகள் தனித்தனிக்கூட்டமாய் தங்களுக்குச் சாத்தியமானபடி யெல்லாம் தப்பிச்செல்ல முயன்றபோது அவர்கள் ஜெர்மானியரால் அங்கங்கே தாக்கப்பட்டு மிகுந்த சேதமடைந்தனர்.

ஜெர்மன் பீரங்கிகள் நாமூரிலிருந்த பெல்ஜியக் கோட்டைகளை யும் அகழ்களையும் பீரங்கிகளையும் துருப்புகளையும் உண்மையாய்ப் பெருக்கித் தள்ளினவென்றே சொல்லலாம். நாமூரிலிருந்த பெல்ஜியத் தலைவர்சீக்கிரமாய்ப் பின்வாங்கினதாகக் கண்டிக்கப்பட்டார். ஆனல் அவரிடமிருந்தபெல்ஜியப்படைகள் இன்னும் 12-மணிநேரம் அதிக மாய்த்தாமதித்திருந்தால், ஒரு மனிதனவது பீரங்கியாவது குதி ரையாவது தப்பித்துக்கொண்டிருக்க முடியாது. நல்ல வேளையாய் தப்பிச்செல்ல முடிந்த சில படைகள் பெல்ஜீய சேனையோடு சேர்ந்து கொண்டு அதன் வன்மையை அதிகரித்தன.


34-வது அத்தியாயம்.

ஜெர்மானியர் பிரான்வின்மீது படையெடுத்தல்.

ஆகஸ்ட் 20-ந்தேதி ப்ருஸல்ஸ் நகரத்தை ஜெர்மானியர் வசப் படுத்திய பிறகே உண்மையான மகாயுத்தம் தொடங்கிய தென்று சொல்லலாம். எனெனில் அன்று தினத்தி லிருந்து ஜெர்மானியர் பிரஞ்சு எல்லைப்புற முழுவதையும் தாக்கினார்கள். ஆகஸ்டு 2-ந்தேதி முதல் 27-ந் தேதிக்குள்ளாக பெல்ஜியத்திலுள்ள மான்ஸ் நகரத்தி லிருந்து அல்ஸேஸ் மாகாணம் முடிய எல்லா இடங்களிலும் ஜெர்மன் சேனைபிரான்ஸுக்குள்புகுந்துவிட்டன. ஆகஸ்ட் 23-ந்தேதி ஜெனரல் வான் கிளக் மான்ஸ் நகரத்தி லிருந்த பிரிட்டிஷ் படைகளைத் தாக் கிப் பின் வாங்கச் செய்தார். ஆகஸ்ட் 20-ந் தேதிபி லிருந்து 25-ந் தேதிக்குள்ளாக ஜெர்மன் படைகள் நாமூர் கோட்டைகளைப் பிடி த்து அதற் கருகில் ஷார்லிறுய் என்ற ஸ்தலத்தி லிருந்த பிரஞ்சு படைகளைப் பின் வாங்கச் செய்தன. இதற்குத் தெற்கில் மஜீயர்ஸ் என்ற பிரஞ்சு நகரம் வரையில் சண்டை செய்த பிரஞ்சு படைகள் ஆகஸ்டு 25-ந் தேதி பின் வாங்கின. இதற்கும் தெற்கிலுள்ள வர் டின் கோட்டைகளை நோக்கி ஆகஸ்ட் 27-ந் தேதி ஜெர்மன் இளவர சர் முன் சென்றார். இதற்கும் தெற்கில் லொரேன் அல்ஸேஸ் மாகா ணங்களின்மேல் படையெடுத்துச் சென்ற பிரஞ்சு படைகள் ஆகஸ்ட் 23-ந்தேதி பின்வாங்கின. ஆகையால் ஆகஸ்டு 20-ந்தேதியிலிருந்து 27-ந்தேதிக்குள் ஜெர்மன் படைகள், அல்ஸேஸ் பாகாணத்தின் எல்லையைத் தவிர, மற்ற இடங்களி லெல்லாம் மூன் றென்று பிரான் ஸின் மீது படை யெடுத்துவிட்டன. எல்லைப் புறத்தில் நடந்த இந்த யுத்த நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லுவோம். யுத்த விவரங் களைத் தெளிவாய் விளக்குவதற்கென்றே இப் புத்தகத்தில் பிரசுரிக் கப்பட் டிருக்கிற பூகோளப் படத்தைப் பார்ப்பது அவசிய மென்று சொல்லத் தேவையில்லை.

ஜெர்மன் சேனை அணிவகுத்து நின்ற விவரம்.

ஜெர்மன் பிரங்கிகள் நாமூர் கோட்டைகளைத் தகர்த்துக்கொண் டிருந்தபோது, ஜெர்மன் சேனைமுழுவதும் நேசத்துருப்புகளையெல் லாம் ஏககாலத்தில் தாக்கத்தயாராய் அணிவகுத்து நின்றது.



பிரான்வின்மீது படை யெடுத்தபோது ஜெர்மன் சேனை அணிவகுத்து நின்ற விவரங்களே இப்படம் காண்பிக்கிறது. வெளுப்புக் கட்டங்கள் ஜெர்மன் படைகளையும் கறுப்புக் கட்டங்கள் பிரஞ்சு படைகளையும் குறிப்பிடுகின்றன. ஜெர்மன் சேனுபதிகளின் பெயரும் குறிக்கப்பட்டிருக்கிறது. (படத்தின் நீலப் புறம் வடக்கு, வலதுபுறம் கிழக்கு, அடிப்புறம் தெற்கு, இடதுபுறம் மேற்கு.)

பெல்ஜியத்தின் வடபாகத்தில், ப்ரூஸல்ஸ் நகரத்துக்குத் தென் மேற்கே ஜெனரல் வான்கிளக்* ஜெர்மன் படைகளைத் திரட்டிக்கொண் டிருந்தார். இவர் டோர்னே என்ற ஸ்தலத்திலிருந்து பிஞ்சே வரையி லுள்ள பிரதேசத்தை நோக்கிச்சென்றார். இவர் தமக்குத் தெற்கி லுள்ள மற்ற ஜெர்மன் படைகளோடு ஒட்டினாற்போல் நிலைபெற்று, வடபுறத்திலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளையெல்லாம் தாக்க எண்ணங் கொண்டார். இவர் ஜெர்மன் சேனையின் வடக்குக்கோடியிலுள்ள வர்; ஆகையால் நேசத்துருப்புகள் நிலைபெற்ற வரிசையை வடக்கு மூலையில் வளைத்துக்கொண்டு தாக்கி ஜெர்மானியருக்கு மிகப்பிரிய மான யுத்த தந்திரத்தை இவர் நிறைவேற்றவேண்டும். வடக்குப் பிரான்ஸில் இங்கிலீஷ்கடல் வரையிலுள்ள நேசத் துருப்புகளையெல் லாம் இவர் தம் முன்புறத்தில் திரட்டி, பாரிஸ் நகரை நோக்கிப் பின் தள்ள உத்தேசங்கொண்டார். இவருக்கு கிழக்கே ஸாம்பர் நதியை வசப்படுத்திக்கொள்ள ஜெனரல்வான் பியுலோ சில ஜெர்மன் படை களைச்செலுத்தினர். இவர் ஷார்லிரூய் என்ற ஸ்தலத்தில் 5-வது பிரஞ்சு சேனையைத்தாக்கினர். இவருக்குத் தென் கிழக்கே, ஜெனரல் வான் ஹாஸன், காமூருக்குத் தெற்கில் பிரஞ்சு எல்லைவரையிலுள்ள மியூஸ்நதியை வசப்படுத்திக்கொள்ள முயற்சி செய்தார். இவர் டினன்ட் என்ற ஸ்தலத்தில் மியூஸ் நதியைத்தாண்டுவதற்கு 5-வது பிர ஞ்சு சேனையோடு சண்டைசெய்தார். இதற்குத் தெற்கே டியூக் ஆப் வர்ட்டம்பர்க்,† பெல்ஜிய தேசத்தின் தென்பாகத்தை வசப்படுத்திக் கொண்டு மியூஸ் நதியைத்தாண்டி பிரான்ஸுக்குள் புகுந்துவிட எண்ணினர். இவர் நியுஷாடோ என்ற ஸ்தலத்தில் 4-வது பிரஞ்சு சேனையோடு சண்டைசெய்தார். இவருக்குத் தெற்கே லக்ஸம்பர்க் நாட்டில் திரட்டப்பட்ட ஜெர்மன் படைகளுக்கு ஜெர்மன் இளவரசர் தலைமை வகித்தார். வலுவானகோட்டைகளையுடைய வர்டுன் என்ற பிரஞ்சு நகரத்துக்கு வடக்கே இவர் மியூஸ் நதியைத்தாண்டி முன் செல்ல எத்தனித்தார். 3-வது பிரஞ்சுசேனை இவரை எதிர்த்து நின்

* "ஜெனரல்" என்பது தளகர்த்தன் என்று பொருள்படும். "வான்" என் பது ஜெர்மனியில் வழங்கும் ஒரு பட்டப் பெயர்.

† ஜெர்மன் ஏகாதிபத்தியத்தில் அடங்கியுள்ள அநேக நாடுகளில் வர்ட்டம் பர்க் என்பது ஒன்று. டியூக் ஆப் வர்ட்டம்பர்க் என்பது அந் நாட்டுத் தலைவ ரைக் குறிப்பிடும்.

றது. இவருக்குத் தெற்கே பவேரியா நாட்டு இளவரசர்,* வர்டனுக்குத் தென் கிழக்கே நான்ஸி என்ற ஸ்தலம் வரையில் 2-வது பிரஞ்சு சேனையைத்தாக்கினர். மற்றொரு ஜெர்மன் சேனாபதியாகிய ஜெனரல் வான் ஹீரிஞ்சன், அல்ஸேஸ் என்ற ஜெர்மன் மாகாணத்தைக் காத்து வந்தார். அந்த மாகாணத்தின் மேல் 1-வது பிரஞ்சுசேனை படையெடுத்துச் சென்றது. ஜெர்மானியரின் படையெடுப்பைத் தடுப்பதற்காக, 1-முதல் 5-வரையில் வரிசையாய் இலக்கமிடப்பட்ட பிரஞ்சு சேனைகள் தெற்கு வடக்காய் பரவியிருந்தன. 5-வது பிரஞ்சு சேனைக்கு வடக்கே பிரிட்டிஷ் சேனை நிலைபெற்றிருந்தது.

எல்லைப்புறத்தில் நடந்த சண்டைகள்.

ஜெர்மானியர் 20-ந் தேதி மன்று நாமூர் கோட்டைகளைத் தகர்க்க ஆரம்பித்தபோதே அவர்கள் அதற்கு 18-மைல் மேற்கிலுள்ள ஷார்லிரூப் என்ற ஸ்தலத்தையும் தாக்கினர்கள். அங்கு ஜெனரல் வான் பியுலோ ஜெர்மன் படைகளைச் செலுத்தினர். அந்த நகரத்தின் வழியாக ஸாம்பர் நதி கிழக்காய் சென்று நாமூருக் கருகில் மியூஸ் நதியோடு சேர்ந்துகொள்கிறது. ஸாம்பர் நதிக்குக் குறுக்கே செல்கிற எல்லா முக்கியமான ரோட்டுகளும் ரயில் பாதைகளும் ஷார்லிரூப் நகரத்தில் வந்து கூடுகின்றன. ஆகையால் ஜெர்மானியர் ஸாம்பர் நதியைக்கடந்து வடக்கிலும் தெற்கிலும் செல்வதற்கு ஷார்லிரூப் நகரத்தைப் பிடித்துக் கொள்வது ஆவசியமாகும். ஆகஸ்ட் 21-ந்தேதி காலை, 20-ஜெர்மன் குதிரை யாட்கள், தாங்கள் பிரிட்டிஷாரென்று சொல்லிக்கொண்டு ஷார்லிரூப் என்ற நகரத்துக்குள் புகுந்து கொண்டார்கள். அவர்கள் செய்த பாசாங்கை ஒரு பிரஞ்சு ராணுவ உத்தியோகஸ்தர் அறிந்த வுடன் அவர் தம்மிடமிருந்த பிரஞ்சுபடைகளைக்கொண்டு ஜெர்மானியரைத் தாக்கினர். 20-ஜெர்மானியரில் 5-பேர் போக மற்றவர்கள் தப்பியோடிவிட்டார்கள். பிரஞ்சு ராணுவ உத்தியோகஸ்தர் நகரத்தில் வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்தார். ஜனங்களை வீட்டுக்குள் போகச்சொல்லி, மெஷின் பீரங்கிகளை நகரத்தின் முக்கிய

---

* ஜெர்மன் ஏகாதிபத்தியத்தில் உள்ள நாடுகளி லெல்லாம் மிகப் பெரியது பிரஷ்ஷியா நாடு. அதனரசரே ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தியாய் அங்கீகரிக்கப்பட்டு வருகிறார். விஸ்தீரணத்தில் பிரஷ்ஷியாவுக்கு அடுத்தபடியான நாடு பவேரியா. அந் நாட்டு சேனையை பவேரியா இளவரசர் செலுத்துகிறார்.

பாகங்களில் அமைத்து அகழ்களைத்தோண்டி பிரஞ்சு துருப்புகளைக் காவல் வைத்தார். ஆகஸ்ட் 22-ந்தேதி, ஜெர்மானியர் ஷார்லிரு யைச் சுற்றிலும் 10-மைல் தூரத்துக்குத் தாக்கிக்கொண்டு நகரத்தை நோக்கி முன் சென்றுகொண் டிருந்தார்கள். அன்று தினமும் மறுதினமும் அந்நகரத்தின் தெருக்களில் கடுமையான கைச்சண் டைகள் நடைபெற்றன. பிரஞ்சு குடியேற்ற நாட்டுத் துருப்புக ளாகிய டர்க்கோஸ் என்றமுகம்மதியர்கள் ஜெர்மன் துருப்புகளோடு கைச் சண்டை செய்து மிகுந்த சேதத்தை விளைவித்தனர். ஆனால் ஜெர்மானியர் தங்கள் மெஷின் பீரங்கிகளின் உதவியைக்கொண்டு பிரஞ்சு படைகளைச் சிதறவடித்தார்கள். ஷார்லிரூய் நகரத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள பாதைகளையும் ஜெர்மானியர் பிடித்துக் கொண்டார்கள். ஸாம்பர் நதி ஜெர்மானியரின் வசமாகிவிட்டது. லீஜ், நாமூர், ஷார்லிரூய், ஆகிய இந்த வரிசையை ஆதாரமாகக்கொண்டு ஏராளமான ஜெர்மன் படைகள் வடக்கிலும் தெற்கிலும் பரவி முன் செல்ல சாத்தியமாயிற்று.

நாமூருக்குத் தெற்கி லிருந்த ஜெர்மன் படைகளை ஜெனரல் வான் ஹாஸன் செலுத்தினர். நாமூரிலிருந்து தெற்கே பிரஞ்சு எல்லை வரையிலுள்ள மியூஸ் நதிப் பிரதேசத்தை வசப்படுத்திக் கொள்ளவேண்டு மென்று அவர் நோக்கங் கொண்டார். மியூஸ்நதிக் குக் கிழக்கிலிருந்த ஜெனரல்வான் ஹாஸன் டினூன்ட் என்ற ஸ்தலத் தைத் தாக்கி அந்நதியைக் கடந்துவிட முயற்சி செய்தார். ஆனால் டினூன்டி லிருந்த பிரஞ்சு படைகள் ஜெர்மானியரை பின்வாங் கச்செய்து தெற்கு பெல்ஜியத்துக்குள் முன் செல்லத் தொடங் கின. ஆனால், ஷார்லிரூயில் வெற்றி யடைந்த ஜெனரல் வான் பியுலோ தமது துருப்புகளை தெற்கிலும் தென் கிழக்கிலும் செலுத்தி மியூஸ் நதியின் மேற்குக் கரையைத் தாக்கினார்கள். ஆகை யால் மியூஸ்நதிக்கரைகளிலிருந்த பிரஞ்சுபடைகள் கிழக்கிலும் மேற் கிலும்ஏககாலத்தில் தாக்கப்பட்டன. கிழக்கில் ஜெனரல் ஹாஸனும், மேற்கில் ஜெனரல் பியுலோவும் அங்குதாக்கினார்கள். அதனால் பிரஞ்சு படைகள் பின் வாங்கும்படி நேர்ந்தது. உடனே ஜெனரல்வான் ஹாஸன் டினூன்ட் நகரத்தை வசப்படுத்தி மியூஸ் நதியைத்தாண்டி முன்சென்றார். ஷார்லிரூயில் ஜெர்மானியர் அடைந்த வெற்றி எவ் வளவு முக்கியமானதென்று இப்போது விளங்கும். ஷார்லிரூயைப்

பிடித்ததால், அவர்கள் ஸாம்பர் நதியை வசப்படுத்திக் கொண்ட தோடு மியூஸ் நதியைக் கடக்கவும் சாத்தியமாயிற்று.

பிறகு, ஸாம்பர்நதிக்கும் மியூஸ்நதிக்கும் இடையில் முன்சென்ற ஜெனரல் ஹாஸன் தமது படைகளை மியூஸ் நதியோரமாய் தெற்கில் செலுத்தி ஷார்லிவில்லி என்ற ஸ்தலத்தைத் தாக்கினர். அங்கிருந்த பிரஞ்சு துருப்புகள் வலுவாய் நின்று சண்டைசெய்தன. பிரஞ்சு துருப்புகள் அந் நகரத்தி லிருந்த ஜனங்களை வெளியே போகச் சொல்லி, வீடுகளிலும் தெருக்களிலும் மெஷின் பீரங்கிகளை ஒளித்து வைத்து ஜெர்மானியருடன் சண்டை செய்யத் தயாரானார்கள். சாதாரண பீரங்கிகளும் மறைவான இடங்களில் அமைக்கப்பட்டன. 25-ந்தேதி ஜெர்மானியர் அந்நகரத்தை நோக்கி வந்தார்கள். அங் கிருந்த மூன்று பாலங்களையும் ஜெர்மானியர் கடந்து வரும்வரையில் சும்மா இருந்துவிட்டு பிறகு பிரஞ்சுக்காரர் அந்த பாலங்களை வெடி வைத்து உடைத்தார்கள். நகரத்தில் புகுந்த ஜெர்மானியர் திரும் பிப்போக வழியில்லாமல் பிரஞ்சுபீரங்கிகளால் சேதமாயினர். ஆனல் ஜெர்மன் இஞ்ஜினியர் படைகள் படகுகளால் புதிய பாலங்களை உட னே கட்டிமுடிக்கவே, புதிய ஜெர்மன்துருப்புகள் நகரத்தில்சென்று கடுமையாய் சண்டைசெய்து நகரத்தை வசப்படுத்திக் கொண்ட னர். இவ்விடத்தில் ஜெர்மானியர் அடைந்த வெற்றி முக்கியமானது. ஏனெனில், ஆரம்பத்தில் அவ்விடத்தி லிருந்து புறப்பட்ட 4-வது பிரஞ்சுசேனை தெற்கு பெல்ஜியத்திலிருந்த ஜெர்மன் படைகளை முன்செல்லவிடாமல் தடுத்துக்கொண் டிருந்தது. தெற்கு பெல்ஜி யத்திலுள்ள நியூஷாடோ என்ற ஸ்தலத்தில் டியூக்ஆப்வர்ட்டம்பர்க் ஜெர்மன் படைகளைச் செலுத்தினர். அவருடைய ஜெர்மன் படைகள் பிரஞ்சு படைகளோடு உக்கிரமாய் சண்டைசெய்து கொண்டிருந் தன. 4-வது பிரஞ்சு சேனை தெற்கு பெல்ஜியத்தின்மீது படை யெடுத்து நியூஷாடோ நகரத்தில் ஜெர்மானியரைத் தாக்கியும் பயன் படவில்லை. அந்தசமயத்தில் ஷார்லிவில்நகரத்தை ஜெனரல் ஹாஸன் பிடித்துக்கொண்டதால், அங்கிருந்து நியூஷாடோவரையில் சண்டை செய்துகொண்டிருந்த பிரஞ்சு படைகளெல்லாம் பின்வாங்கிச்செல் லும்படி கேர்ந்தது. ஆகையால் தெற்கு பெல்ஜியத்திலிருந்த டியூக் ஆப் வர்ட்டம்பர்க் மியூஸ்நதிக்கு வந்து மஜீயர்ஸ் என்ற ஸ்தலத்தை வசப்படுத்திக்கொண்டு பிரான்ஸின் மீது படையெடுத்தார்.

ஜெர்மன் இளவரசரின் சேனை லக்ஸம்பர்க்கிலிருந்து புறப்பட்டு வர்டன் கோட்டைகளை நோக்கிச்சென்று மியூஸ் நதியைக்கடக்க முயற்சிசெய்தது. மியூஸ் நதிக்கரையி லுள்ள வர்டன் கோட்டைகளை ஆதாரமாகக்கொண்டு 3-வது பிரஞ்சு சேனை ஜெர்மன் இளவரசரை முன்செல்லவிடாமல் தடுத்து நின்றது. ஜெர்மன் இளவரசர் ஆகஸ்ட் 10–ந்தேதியே லாங்வி என்ற பிரஞ்சு நகரத்திலுள்ள கோட்டையைத் தாக்கினபோதிலும் மியூஸ் நதியைக் கடந்து செல்ல முடியவில்லை. ஆயினும் மஜீயர்ஸ் என்ற ஸ்தலத்தை வசப்படுத்திக்கொண்டு மியூஸ் நதியைத் தாண்டிச் சென்ற டியூக் ஆப் வர்ட்டம்பர்க் மியூஸ் நதியின் மேற்குக் கரையை வசப்படுத்திக்கொண்டே முன்சென்றார். அதனால் 3-வது பிரஞ்சு சேனை மியூஸ் நதிக்குப் பின்வாங்கியது; அது இருபக்கங்களிலும் தாக்கப்பட்டு மியூஸ் நதியில் நிலைத்திருக்க முடியாமல் பின்வாங்கிச் செல்லும்படி நேர்ந்தது. மேலும், பெல்ஜியத்திலிருந்து புறப்பட்ட ஜெனரல் வான் கிளக், பியூலோ, ஹாஸன், டியூக் ஆப் வர்ட்டம்பர்க் இவர்களின் சேனைகள் பிரான்ஸில் புகுந்து முன்சென்று கொண்டிருந்தபடியால், பிரஞ்சு சேனை முழுவதும் பாரிஸுக்கருகில் பின்வாங்கி யுத்தம் நடத்த வேண்டுமென்று பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே தீர்மானித்தார். ஆகையால் ஜெர்மன் இளவரசரை எதிர்த்த 3-வது பிரஞ்சு சேனை பின்வாங்கிற்று; ஜெர்மன் இளவரசரும் மியூஸ் நதியைத் தாண்டி முன்சென்றார்.

வர்டன் கோட்டைக்குக் கிழக்கிலும் தென் கிழக்கிலும் இருந்த 2-வது பிரஞ்சுசேனை லொரேன் என்ற ஜெர்மன் மாகாணத்தின் மீது படையெடுத்துச் சென்றது. ஆனால், பவேரியர் இளவரசர் பிரஞ்சு சேனையைப் பின்தள்ளி நான்ஸி நகரம் வரையில் முன் சென்றார். வர்டனிலிருந்து வெகு தூரம் தெற்கே பெல்போர்ட் வரையில் பிரஞ்சு கோட்டைகள் வரிசையாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் நான்ஸிநகரத்துக்கருகில் மட்டும் கோட்டைகளில்லாமல் சற்று விசாலமாய் இடைவெளிவிடப்பட்டிருக்கிறது. அந்த இடைவெளிக்குள் நுழைந்துவிட வேண்டுமென்று பவேரியா இளவரசர் முயற்சி செய்தார். ஆனால் 2-வது பிரஞ்சுசேனை ஜெர்மன் மாகாணத்தின் மேல் படையெடுக்க முடியாமற்போனாலும், ஜெர்மானியரின் படையெடுப்பை நான்ஸி நகரத்தில் தடுத்துவிட்டது.

ஜெர்மன்

சேனைத் தலைவர்கள்.



இவர் யுத்தத்தின் ஆரம்பத்தில் மேற் கரங் த்தில
ஜெர்மன் சேனைகளுக்கு யாயிருந்தஜெனரால்
வான் மோட்கி; பிறகு, அந்த
ஸ்தானத்தில் ஜெனரல்
பாகன்ஹீன் நியமிக்கப்பட்டார்.



ஜெர்மன் இளவரசர்.



ஜெனரல் வான் கிளக்.



ஜெனரல பாகனஹ்ன.



லக்ஸம்பர்க் நாட்டு அரசி.




பிரஞ்சு சேனபதி மஜனால் டா



பிரஞ்சு சேனதிபதி—ஜெனரல் ஜாப்ரே.


அல்ஸேஸ் மாகாணத்தின் மீது 1-வது பிரஞ்சுசேனை, இத்தமகா யுத்தத் தொடங்கிய தக்ஷணமே, படையெடுத்துச் சென்றது. ஜெர்மானியர் பெல்ஜிய சேனையால் தடை செய்யப்பட்டு வந்த படியால், அவர்கள் அல்ஸேஸ் மாகாணத்தின் வழியாய் பிரான்ஸின் மேல் படையெடுக்கக் கூடுமென்று பிரஞ்சு சேனாதிபதி எண்ணினர். ஆகையால் அந்த மாகாணத்தில் பிரஞ்சு படைகள் முன்சென்று அநேக வெற்றிகளை அடைந்தன. ஆனல் ஆகஸ்டு 23-ந் தேதி ஜெனரல் வான் ஹீரிஞ்சன் 1-வது பிரஞ்சு சேனையை பிரஞ்சு எல்லைக் குள் பின்தள்ளினர்.



– ஜெர்மானியரின் யுத்ததந்திரத்தை விளக்குவதற்கு இப்படம் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. ஜெர்மன் சேனாபதிகள் சேசப்படைகளின் பக்கவாட்டில் தாக்கச் சென்றவழிகள் அம்புபோன்ற அடையாள மிட்டு குறிக்கப்பட்டிருக் கின்றன. 593-ம் பக்கத்திலுள்ள படத்தைப்பார்த்து, 5-வது 4-வது பிரஞ்சு சேனைகளை இப்படத்தில் கண்டு கொள்ளலாம். மற்ற விவரங்களை அடுத்த பக்கத்தில் காண்க.

ஜெர்மானியரின் யுத்த தந்திரத்தை இங்கு சற்று கவனிக்க வேண்டும். ஜெனரல் வான்கிளக், படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, டோர்னே நகரத்திலிருந்து தெற்கே வாலன்லீனுக்குச் சென்று பிரிட்டிஷாரின் பக்கவாட்டில் தாக்கினர். ஆனல் இது பின்னல் சொல்லப்படும் சம்பவத்துக்குப் பிறகு நடைபெற்றது. ஜெனரல் வான் பியுலோ, படத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஷார்லிரூயிலிருந்து தெற்கே சென்று அங்கிருந்த 5வது பிரஞ்சு சேனையை பக்கவாட்டில் தாக்கி, ராக்ரூய் நகரத்தை நோக்கிச் சென்றார். அவர் அவ்வாறு பக்கவாட்டில் சென்று கொண்டிருந்ததால் 5 வது பிரஞ்சு சேனை பின்வாங்கியது. அதனல் ஜெனரல் வான் ஹாஸன் எளிதாய் முன்சென்றார். அவர் டினன்ட் நகரத்துக்குத் தெற்கில் மியூஸ் நதியைத் தாண்டி, படத்தில் குறிப்பிட்டுள்ளபடி பிரஞ்சு எல்லேயோரமாய்ச் சென்று 4—வது பிரஞ்சு சேனையை பக்கவாட்டில் தாக்கி ஷார்லிவில்லி நகரத்தையும் பிடித்தார். அந்த நகரம் பிடிப்பட்ட பிறகு, 4-வது பிரஞ்சு சேனை பின்வாங்குவது அவசியமாயிற்று. அதனல் டியுக் ஆப் வர்ட்டம் பர்க் எளிதாய் முன் சென்றார். அவர் மியுஷாடோ நகரத்திலிருந்து படத்தில் குறிப்பிட்டுள்ளபடி மஜிபர்ஸ் நகரத்தை நோக்கிச் சென்று அதை வசப்படுத்திக்கொண்டார். அவர் அந்த நகரத்திலிருந்து மியூஸ் நதிக்கரையோரமாய் தெற்கே சென்று, 3-வது பிரஞ்சு சேனையை பக்கவாட்டில்தாக்கினர். அதனல் ஜெர்மன் இளவரசர் எளிதாய் முன் சென்று மியூஸ்நதியைத்தாண்டினர். ஆகையால், வடக்குதிக்கிலிருந்து ஜெர்மன் சேனைதிகள் ஒவ்வொருவரும் தெற்கிலுள்ள பிரஞ்சுபடைகளைப் பக்கவாட்டில் தாக்கியதால் எல்லா சேனைதிகளும் ஒருவருக்கொருவர் உதவிசெய்து எளிதாய் முன்சென்றார்கள். ஆனல் வர்டினுக்குத்தெற்கிலிருந்த ஜெர்மன் சேனைதிகள்மேலேசொல்லியவாறு ஏன் உருவிபெற்று எளிதாய் முன்செல்லவில்லை? அதற்குக்காரணம் வர்டினுக்குத் தெற்கே பிரஞ்சு கோட்டைகள் வரிசையாய்க் கட்டப்பட்டிருப்பதாகும். மியூஸ்நதிக்கரைக்குப்பின்வாங்கிய 3-வது பிரஞ்சு சேனைவர்டினிலுள்ள கோட்டைகளை ஆதரவாகக்கொண்டுஅங்கு வலுவாய் ஊன்றி, வடக்கில்பரவியிருந்தது. அந்த பிரஞ்சு சேனையை ஜெர்மன் இளவரசர் பின் தள்ளியபோது, அதன் வடக்குமுனை மட்டும் பின்னல் சுழன்று சென்று ஜெர்மானியருக்கு வழிவிட்டது. அதன் தெற்குமுனை வர்டின் கோட்டைகளில் வலுவாய் ஊன்றியபடியே

இருந்தது. அந்த பிரஞ்சு சேனையின் தெற்குமுனை வர்டுன்கோட்டையில் ஊன்றியிருந்து, மற்றொருமுனைமட்டும் யுத்தத்தின் ஆரம்பத்தில் வடக்கில் பரவியிருந்து, பிறகு வடமேற்கில்பின்வாங்கி, பிறகு மேற்கிலும், தென்மேற்கிலும் தெற்கிலும் பின்வாங்கி சுழன்று கொண்டிருந்தது. இவ்விஷயம் கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.



வர்டுனுக்கு வடகிழக்கிலிருந்த 3-வது பிரஞ்சு சேனை ஜெர்மானியரால் பின் தள்ளப்பட்டபோது, அது வர்டுன் கோட்டையில் ஊன்றியபடியே ஜெர்மானியருக்கு வழிவிட்டது. அது வடக்கிலிருந்து வடமேற்கில் பின்வாங்கி, மேற்கிலும் தெற்கிலும் சுழன்று சென்றது. அதன் நான்குவித நிலைமைகளும் படத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையால் அந்த பிரஞ்சு சேனை ஜெர்மானியரால் பக்கவாட்டில் தாக்கப்பட்டபோதெல்லாம் பின்புறமாய் சுழன்று கொண்டே சென்று, கடைசியில், வரிசையாய்க்கட்டப்பட்ட கோட்டைகளில் நிலைபெற்றது. அதாவது, வர்டுனுக்குத் தெற்கில் மியூஸ் நதியின் மேற்குக்கரையில் 3-வது பிரஞ்சு சேனை பரவியிருந்தது.

இதற்குள்ளாக பெல்ஜியத்திலிருந்து புறப்பட்ட ஜெனரல்வான்கிளக் விரைவாய் முன்சென்றுவிட்டதால், பாரிஸுக்கருகில் பிரஞ்சு படைகளை பின்னுக்கு இழுத்துக்கொள்வதாக ஜெனரல் ஜாப்ரே தீர்மானித்தாரென்று சொன்னேம். வடக்கு பெல்ஜியத்தில் ஜெனரல் வான்கிளக் பிரிட்டிஷ் படைகளோடு செய்த சண்டைகளைப்பற்றி இனிசொல்வோம்.

35-வது அத்தியாயம்

பிரிட்டிஷ் சேனையின் சண்டைகள்.

பிரிட்டிஷ்சேனை இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டுஇங்கிலீஷ்கடலைக்கடந்து பிரஞ்சுதுறைமுகங்களில் இறக்கப்பட்டவுடன் அதன் சேனாபதியாகிய ஸர்ஜான் பிரெஞ்சு ஆகஸ்ட் 15-ந்தேதி பாரிஸ் நகரத்துக்குவந்து பிரஞ்சு பிரஸிடென்டைப் பார்த்தார். பிரிட்டிஷ் தருப்பு

களுக்கு பிரஞ்சு பாஷை தெரியாததால் சில முக்கியமான பிரஞ்சு வார்த்தைகளை அச்சடித்ததுண்டுபுத்தகம் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. பிரான்ஸில் இறங்கிய பிரிட்டிஷ் சேனையில் நான்கு டிவிஷன் கள் இருந்தன. ஒரு டிவிஷனில் வழக்கம்போல சுமார் 12,000-ம் காலாள் துருப்புகளும் 76 பீரங்கிகளுமிருந்தன. சண்டை செய்யக் கூடாதமற்ற பாகங்களாகிய இஞ்ஜினியர் படைகள் சமிக்ஞைப்படை கள் முதலியவை சேர்க்கப்பட்டிருந்தன. ஒரு டிவிஷனில் மொத்தம் 18,000 மனிதர்களும், 5600 குதிரைகளுமிருக்கும். இரண்டுடிவிஷன் களுக்குஜெனரல் ஸர் ஸ்மித் டோரியன் தலைமைவகித்தார். இரண்டுடிவி ஷன்களைச்சேர்த்து ஒரு ஆர்மிகோர் என்று சொல்லப்படும். மற்ற இர ண்டு டிவிஷன்களுக்கும் ஜெனரல் ஸர் டக்லஸ் ஹேய்க் தலைமை வகித் தார். அவ்விரண்டு சேனைத் தலைவர்களும் மிகுந்த சாமர்த்தியமும் அனுபோகமும் பெற்றவர்கள். மேலே சொல்லிய நான்கு டிவிஷன் களைத் தவிர, 5-குதிரைப்படைகளும் (பிரிகேட் என்ற வகுப்புகள்) பிரான்ஸுக்குவந்தன. அவைகளில்நான்குபிரிகேட்டுகள்ஒருகுதிரை யாள் டிவிஷனுக ஒன்றுச் சேர்க்கப்பட்டு அதற்கு ஜெனரல் ஆலன்பி தலைமை வகித்தார். மற்றொரு குதிரைப் பிரிகேட் ஜெனரல் செட்வுட் என்பவரால் செலுத்தப்பட்டு தனியாக வைக்கப்பட்டது. ஒரு பிரிகேட்டில் சுமார் 2000 குதிரைகளிருக்கும். ஒரு குதிரையாள் டிவிஷனில் சுமார் 9,800 குதிரைகளும், 24 பீரங்கிகளுமிருக்கும். ஆகையால் பிரான்ஸில் வந்திறங்கின பிரிட்டிஷ் சேனையில் நான்கு காலாள் டிவிஷன்களும், 5 குதிரைப் பிரிகேட்டுகளும் இருந்தன. அவைகளுக்கு ஸர்ஜான் பிரெஞ்சு* சேனுபதியாயிருந்தார். அவருக்கு 62 வயதாயிற்று. அவர் முதலில் பிரிட்டிஷ் கடற்படையில் சேர் ந்து 4 வருஷம் அமர்ந்திருந்து பிறகு சேனையில் குதிரைப்படையில் சேர்ந்தார். கடற்படையிலுள்ள மாலுமிகள் அநேக வருஷங் களுக்குப் பயிற்சி பெறுவதைக் கண்டு, அவ்வாறே ராணுவத்தில் சேர்கிறவர்களும் பால்யத்திலிருந்தே அநேக வருஷம் பயிற்சியும் அனுபோகமும் பெறவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டார்.


---

* பிரிட்டிஷ் சேனுபதியின் பெயர் ஸர் ஜான் பிரெஞ்சு. அந்தப் பெயருக் கும் பிரஞ்சுக்காரர் என்ற வார்த்தைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஸர் ஜான் பிரெஞ்சு, பிரஞ்சுக்காரரென்று தவறாய் எண்ணிவிட வேண்டாம். பிரஞ்சு சேனுபதியின் பெயர் ஜெனரல் ஜாப்ரே.

அவர் ஈஜிப்டில் நடந்த யுத்தங்களில் அனுபோகம் பெற்றார். பிறகு தென்னப்பிரிக்காவில் போவர் யுத்தம் நடந்தபோது, குதிரைப்படைகளைச்செலுத்தினர். அந்த யுத்தம்முழுவதிலும் அவருடைய சாமர்த்தியம்வெளிப்பட்டு எட்டுமுறை அவர் மேலதிகாரிகளால் புகழப்பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் சேனை போர்க்களத்தில் அணிவகுத்தல்.

பிரிட்டிஷ் சேனை, பிரஞ்சு சேனையுடன் சேர்ந்து யுத்தத்தை சாதகமான முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்பது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நோக்கமாகும். ஆகையால் பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரேயின் யோசனைப்படி பிரிட்டிஷ் சேனை ஆகஸ்ட் 22-ந்தேதி பெல்ஜிய எல்லைக்குட் சென்றது.



காண்டி என்ற பிரஞ்சு ஸ்தலத்திலிருந்து மான்ஸ் நகரம் வரையில் ஸ்மித் டோரியன் தமது படைகளை மேலே காட்டியபடி நிலைபெறச் செய்தார். மான்ஸிலிருந்து பிஞ்சே என்ற ஸ்தலம் வரையில் டக்லஸ் ஹேய்க் தமது படைகளை நிலைபெறச் செய்தார். பிஞ்சே என்ற ஸ்தலத்துக்குப் பக்கத்தில் செட்வுட் தமது சூதிரைப் பிரிகேட்டை வைத்திருந்தார். அவர் பக்கவாட்டிலும் முன்புறத்திலும் சோதனை செய்து காத்துவந்தார். ஜெனரல் ஆலன்பியால் செலுத்தப்பட்ட குதிரையாள் டிவிஷன் கையிருப்பில் பின்பலமாக வைத்துக்கொள்ளப்பட்டது. சண்டை செய்யும்போது எப்போதும் கையிருப்பில் சில படைகள் வைத்துக் கொள்வது வழக்கம். சத்துருக்கள் திடீரென்று பக்கவாட்டிலாவது பின்புறத்திலாவது தாக்கினால் அதைத் தடுப்பதற்கும், போர்க்களத்

தில் சண்டைசெய்யும் படைகள் எங்காவது பலஹீன மடைந்தால் அங்கு உதவிசெய்வதற்கும், சேனுபதி தம்மிடம்பின்பலம் வைத்திருப்பது அவசியமாகும். பின்பலமாக வைத்துக்கொள்வதற்குபிரிட்டிஷ் சேனுபதியிடம் போதுமான காலாட்படைகள் இருப்பில் இல்லை. மற்றொரு பிரிட்டிஷ் காலாள் டிவிஷன் மான்ஸை நோக்கி வந்துகொண்டிருந்த தாயினும், அது அச்சமயம் (ஆகஸ்ட் 22-ந்தேதி) வந்து சேரவில்லை யாகையால், ஜெனரல் ஆலன்பி செலுத்திய குதிரையாள் டிவிஷனை பின்பலமாக வைத்துக்கொள்ள நேரிட்டது. பிரிட்டிஷ் சேனுபதியாகிய ஸர் ஜான் பிரெஞ்சு பிரிட்டிஷ் சேனையை மான்ஸ் பிரதேசத்தில் மேற் சொல்லிபவாறு அணிவகுத்து, ஜெர்மானியரைத் தடுத்து நிற்கத் தயாராயிருந்தார். அவர் மான்ஸுக்கு 15 மைல் தென் கிழக்கில் இருந்துகொண்டு போர் நடத்தினர். 560-வது பக்கத்திலுள்ள படத்தில் இந்த ஸ்தலங்களைக் காணலாம்.

ஆகஸ்ட் 23-தேதி காலை 6-மணிக்கு ஸர் ஜான் பிரெஞ்சு போர்க்களத்துக் கருகில் வந்து தமது சேனைத்தலைவர்களாகிய ஸ்மித்டோரியன், டக்லஸ் ஹேய்க், ஆலன்பி இவர்களுடன் கலந்து பேசி போர்க்களத்தின் விவரங்களைப்பற்றி யோசனை சொன்னர். தவிர, நேசப்படைகளெல்லாம் பிரஞ்சு எல்லைப்புற முழுவதும்பரவியுத்தஞ் செய்யும் விவரங்களைப்பற்றியும், யுத்த மண்டல முழுவதும்ஜெனரல் ஜாப்ரே தொடங்கி யிருக்கும் நடவடிக்கைகளின் பொது நோக்கத்தைப்பற்றியும், ஸர்ஜான் பிரெஞ்சு தமது சேனைத்தலைவர்களுக்கு சுருக்கமாய் விளக்கிச்சொன்னர்.

சத்துருவின் நிலைமையைப் பற்றிய அபிப்பிராயம்.

ஜெனரல் பிரெஞ்சு, மான்ஸ் நகரத்துக்குச் சென்றபோது, அவ்விடத்துக்கருகில் 2 அல்லது 4 டிவிஷன் கொண்ட ஜெர்மானியர் தாக்கக்கூடுமென்று பிரஞ்சு சேனுதிபதியால் அறிவிக்கப்பட்டார். ஜெர்மானியர் பக்கவாட்டில் வளைந்து போர் புரிய எவ்வித பிரயத்தனங்களையும் செய்யக்கூடுமென்று அவர் அறிவிக்கப் படவில்லை. பிரிட்டிஷ் குதிரைப்படைகளும் ஆகாயவிமானங்களும் முன்புறம் சென்று சத்துருவின் பிரதேசத்தில் சோதனை செய்தபோது, மேற்சொல்லிய அபிப்பிராயமே உறுதிப்பட்டது. பிரஞ்சு சேனுதிபதியும் அவ்வாறே எண்ணியதற்குக் காரணங் களிருக்கின்றன. ஜெனரல்

பிரெஞ்சு ஆகஸ்ட் 22-ந்தேதியன்று போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தார். அன்றினம் வரையில், ஜெர்மானியர் பெல்ஜியத்தில் லீஜ், ப்ருஸல்ஸ் இவ்விரு முக்கிய ஸ்தலங்களைப் பிடித்து நாமூர் கோட்டைகளைத் தகர்த்துக்கொண்டிருந்ததைத் தவிர வேறுவிசேஷம் ஏதுவும் கடைபெறவில்லை. ஜெனரல் பிரெஞ்சு மான்ஸ் பிரதேசத்தில் பிரிட்டிஷ் சேனையை அணிவகுத்த தினமாகிய 32ந்தேதியன்று, ஜெர்மானியர் ஷார்லிரூப் நகரத்தைத் தாக்கி ஸாம்பர் நதியை வசப்படுத்த முயற்சிசெய்து கொண்டிருந்தார்கள். அங்கு பிரஞ்சுப் படைகள் வலுவாய் நிலைபெற்று ஜெர்மானியரை முன்செல்லவிடாமல் தடுத்து சண்டைசெய்துகொண்டிருந்தன. பெல்ஜியத்தில் ஜெர்மானியரின் ராணுவ நடவடிக்கைகள் அவ்வாறிருக்க, பிரஞ்சு சேனாதிபதி ஜெர்மானியரின் உத்தேசங்களையும் ராணுவநடவடிக்கைகளையும்பற்றி அதிகப்படியாய் அறிந்துகொள்ளசாத்தியப்படவில்லை. தவிர ஜெர்மானியர் பெல்ஜியத்தில் முக்கிய பிரயத்தனம் செய்வதுபோல் காட்டி, அல்ஸேஸ் மகாணத்தின் வழியாகப் படையெடுக்கக்கூடுமென்றே பிரஞ்சு சேனாதிபதி நினைத்திருந்தார்.

மான்ஸ் நகரத்தில் நடந்த சண்டை.

ஆகஸ்டு 23-தேதி மாலை 3 மணிக்கு ஜெர்மானியர் மான்ஸை நோக்கி வந்துகொண்டிருந்ததாகத் தெரியவந்தது. முன்புறத்தில் காவல் செய்துகொண்டிருந்த பிரிட்டிஷ் குதிரைகள் பின்புறமாய் விலகிவந்து, ஜெர்மன் துருப்புகள் தாக்குவதற்கு வந்துகொண்டிருப்பதாக அறிவித்தன. உடனே பிரிட்டிஷ் துருப்புகளெல்லாரும் தங்கள் அதர்களில் பந்தோபஸ்தாய் நிலைபெற்று ஜெர்மானியரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷ் பீரங்கிகள் ஜெர்மன் துருப்புகளை நோக்கிச் சுடத் தொடங்கின. ஜெர்மன் பீரங்கிகளும் பதிலுக்குச் சுட ஆரம்பித்தன. பிரிட்டிஷார் தங்கள் பீரங்கிகளை கல்ல இடங்களில் மறைத்துவைக்கும் தந்திரத்தை போவர் யுத்தத்தில் போவரிட மிருந்து கற்றுக்கொண்டார்கள். ஜெர்மன் பீரங்கிகள் ஆரம்பத்தில் அவ்வளவு குறிப்பாய்ச் சுடவில்லை. அவ்வாறு அரைமணி நேரம் பீரங்கிச் சண்டை நடந்ததும் ஜெர்மன் துருப்புகள் தாக்குவதற்குப் புறப்பட்டனர். ஜெர்மன் துருப்புகள் கூட்டங் கூட்டமாய்ப் புறப்பட்டு வந்தார்கள். அவர்கள் சற்று அருகில் வந்ததும் பிரிட்டிஷ் துருப்புகள் திடீரென்று

தங்கள் துப்பாக்கிகளே யெல்லாம் ஏக காலத்தில் சுட்டார்கள். ஜெர்மன் கூட்டங்களில் பெரிய பிளவுகள் உண்டு பண்ணினார்கள். அந்த கூட்டங்களுக்குப் பின்புறத்திலிருந்தவர்கள் அந்த பிளவுகளே நிரப்பிக்கொண்டு மறுபடியும் சதராமான கூட்டங்களாக வந்தார்கள். மறுமுறை பிரிட்டிஷ் துருப்புகள் சுட, பிரிட்டிஷ் பீரங்கிகளும் சேர்ந்து கெருப்பைப் பொழிந்தன. அந்த ஜெர்மன் கூட்டங்களே நடத்திய உத்தியோகஸ்தர்கள் ஒரு உத்தரவு செய்யவே, ஜெர்மன் துருப்புகள் விசாலமாய் விலகி, முன்புறம் தாவினார்கள். பிரிட்டிஷ் துருப்புகள் ஏககாலத்தில் தங்கள் துப்பாக்கிகளே யெல்லாம் சுடாமல் தனித்தனியாய்குறிபார்த்துச்சுட்டார்கள். ஜெர்மன் துருப்புகள் உடனே தரையில் படுத்துக்கொண்டு மறைவான இடங்களில் இருக்க முயற்சி செய்தார்கள். பிரிட்டிஷ் துருப்புகள் குறிபார்த்துச் சுட்டு சத்துருவுக்கு அதிக சேதத்தை உண்டுபண்ணவே, ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கின. பிறகு திடீரென்று மழைபோல ஆகாசத்திலிருந்து குண்டுகளும் சவைகளும் நாலாபக்கங்களிலும் கொட்டின. ஜெர்மன் குண்டுகள் வரவரக் குறிப்பாய் அகழ்களின்மேல் விழுந்தன. ஜெர்மன் பீரங்கிகள் பொழிந்த கெருப்பை பிரிட்டிஷ்துருப்புகள் தாங்கிக்கொண்டு சற்றும் கலக்கமடையாமல் சத்துருவின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். சிறிது கேரஞ் சென்றபின் ஜெர்மன் பீரங்கிகள் சுடுவதை நிறுத்திவிட்டு ஜெர்மன் துருப்புகள் தாக்குவதற்கு வந்தன. முன்போலவே பிரிட்டிஷ் துருப்புகள் உக்கிரமான கெருப்பைப் பொழிந்து ஜெர்மன் கூட்டங்களில் ஏராளமான சேதத்தை உண்டுபண்ணினார்கள். ஆனல் ஜெர்மானியர் உயிர்ச் சேதத்துக்கு சற்றும் அஞ்சாமல் மேன்மேலும் சமுத்திர அலைகள்போல ஓயாமல் வந்து தாக்கியவண்ணமா யிருந்தார்கள்.

வலது பக்கத்திலிருந்த பிரிட்டிஷ் படைகள் பிஞ்சே என்ற ஸ்தலத்தில் வலுவாய் நிலைபெற முடியாததைக் கண்டு சற்று தூரம் பின்னல் சென்று உயரமான பூமியிலிருந்துகொண்டு சண்டைசெய்தார்கள். வலது பக்கத்திலிருந்த படைகள் அவ்வாறு பின் வாங்கினதால் மான்ஸிலிருந்த படைகள் முன்புறத்தில் தனியாய் நீண்டுகொண்டிருந்தன. அந்த அபாய நிலைமையைக் கண்டறிந்த ஜெனரல் பிரெஞ்சு மான்ஸிலிருந்த படைகளுக்குத் தலைவராகிய ஸ்மித் டோரியனுக்கு 'அந்த நிலைமையைக்குறிப்பிட்டார். ஸ்மித் டோரியன்

மான்லி லிருந்த படைகளைப் பின்னல் சென்று நிலைபெறும்படிச் செய்தார். உடனே ஜெர்மானியர், மான்ஸ் பிஞ்சே இவ்விரண்டலங்களையும் வசப்படுத்திக் கொண்டார்கள்.

போர்முனையில் எதிர்பாராத சம்பவங்கள்.

மாலை 5மணிக்கு பிரஞ்சு சேனாதிபதியிட மிருந்து ஒரு முக்கிய மான தந்திசமாசாரம் ஜெனரல் பிரெஞ்சுக்கு வந்தது. பிரிட்டிஷ் சேனையைத் தாக்கு வதற்கு ஆறு டிவிஷன்கள் கொண்ட ஜெர்மன் படைகள் வந்து கொண்டிருக்கின்றன வென்றும், இரண்டு ஜெர்மன் டிவிஷன்கள் வடக்கு திசையிலுள்ள டோர்னே என்றலதம் வழியாய் பக்கவாட்டில் முன்செல்ல முயற்சி செய்கின்றன வென்றும் அந்தத் தந்தியில் அறிவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் சேனைக்குத் தெற்கில் ஷார்லிரூப் நகரத்தை ஜெர்மானியர் பிடித்துக் கொண்டு அங்கிருந்த 5-வது பிரஞ்சு சேனையைப் பின்தள்ளி, ஸாம்பர் நதி முழுவதையும் வசப்படுத்திக் கொண்டு வருவதாகவும் பிரஞ்சு சேனாதிபதி அந்த தந்தியில் அறிவித்தார். 5-வது பிரஞ்சு சேனை பின்வாங்கிய பிறகு, பிரிட்டிஷ் சேனைமட்டும் முன்புறத்தில் தனிமையாய் இருந்து விடக்கூடாது. ஏனெனில், ஸாம்பர்நதிக் கரைபோலாமாய் ஜெர்மானியர் மேற்கு நோக்கி சென்று பிரிட்டிஷ் சேனைக்குப் பின்புறத்திலுள்ள பாதைகளை வசப் படுத்திக்கொள்ள முயற்சி செய்வார்க ளாகையால் பிரிட்டிஷ் சேனை அந்த ஆபத்தி னின்றும் தப்பித்துக்கொள்வது அவசியமாகும். ஆகையால் பிரிட்டிஷ் சேனை உடனே பின்வாங்கி விடவேண்டுமென்று ஜெனரல் பிரெஞ்சு நிர்மானித்தார். தவிர, மான்ஸுக்கு முன்புறத்திலும் ஜெர்மன் படைகள் மேன்மேலும் வந்து தாக்கிக்கொண் டிருந்தன. ஜெர்மன் எல்லையிலிருந்து அனுப்பப்பட்ட படைகள் லீஜ் வழியாய் மியூஸ் நதியைக் கடந்தும், ஷார்லிரூப் வழியாய் ஸாம்பர் நதியைக் கடந்தும் வடக்கு பெல்ஜிய முழுவதும் குவிய ஆரம்பித்தன. பிரிட்டிஷ் சேனாபதி தமக்கு முன்புறத்தில் இரண்டு அல்லது நான்கு டிவிஷன்கள் கொண்டசத்துருக்களே இருந்தார்களென்று நினைத்தது தவறாய் முடிந்தது. ஏனெனில் ஜெர்மன் துருப்புகள் அதைவிட இருபங்கு அதிகமாய்த் திரண்டு பிரிட்டிஷாரை நோக்கி வந்துகொண் டிருந்தார்கள். ஜெர்மானியர் மோட்டார் வண்டிகளை ஏராளமாய் உபயோகித்து சாதாரணரோட்டுகளையும் ரயில் பாதைகளைப்போல மாற்றிவிட்டார்கள். பிரிட்டிஷ்

குதிரைப் படைகளும் ஆகாயப்படைகளும் 40 மைல்தூரம் முன்புறத்தில் சோதனை செய்தபோதும் அங்கு 4 டிவிஷன்கள் கொண்ட ஜெர்மன் துருப்புகளுக்கு மேலில்லையென்று முன்பு அறிவித்தன. இந்த காலத்து யுத்தத்தில், அவ்வாறு குதிரைப்படைகளும் ஆகாயப்படைகளும் சத்துருவின் சைன்ய பலத்தை அறிந்துகொள்ள முயற்சிசெய்வதில் பயனில்லை என்று தெரியவந்தது. ஏனெனில் மோட்டார் வண்டிகளின் உபயோகத்தால், 50 மைல்களுக்கப்பாலுள்ள துருப்புகள் 5 மணி நேரத்துக்குள்ளாகப் போர்க்களத்துக்கு வந்து சண்டையில் கலந்துகொள்வது இந்த காலத்தில் சாத்தியமாகிறது.

பிரிட்டிஷ் சேனை பின்வாங்கியது.

பிரிட்டிஷ் படைகளெல்லாம் மறுநாட்காலை பின்வாங்க வேண்டுமென்று ஜெனரல் பிரெஞ்சு தமது சேனைத் தலைவர்களுக்கு உத்தரவு செய்தார். ஆயினும் மறுநாட் காலை விடிவதற்குள்ளாக அன்றிரவு முழுவதும் ஜெர்மானியர் சோதனை விளக்குகளை உபயோகித்து பிரிட்டிஷாரைத் தாக்கினர்கள். அன்றிரவு (ஆகஸ்ட் 23-ந் தேதி) பிரிட்டிஷ் சேனையின் இடது பாகத்திலிருந்த ஸ்மித் டோரியன் தமது படைகளுடன் பின்வாங்கிச் செல்ல ஆரம்பித்தார். அவருக்கு உதவியாக ஜெனரல் ஆலன்பி தமது குதிரைப் படைகளுடன் முன்புறஞ் சென்று ஜெர்மானியரைத் தாக்கிக்கொண்டிருந்தார். பிரிட்டிஷ் குதிரைகள் ஜெர்மானியரைக் கடுமையாய்த் தாக்கிக் கொண்டிருக்கையில், ஸ்மித் டோரியன் தமது காலாட்படைகளையும் பீரங்கிகளையும் பின்புறமாய்ச் செலுத்தினர். அப்போது அவருக்கு முன்புறத்தில் நான்கு ஜெர்மன் டிவிஷன்களும் அவருக்குப் பக்கவாட்டில் இரண்டு ஜெர்மன் டிவிஷன்களும் கடுமையாய்த் தாக்கின. மான்ஸிலிருந்த ஜெர்மன் படைகள் தங்களுக்கு முன்னால் பின்வாங்கிச் சென்ற பிரிட்டிஷ் படைகளைக் கடுமையாய்த் தாக்கி பிரிட்டிஷாருக்கு அதிக சேதத்தை உண்டுபண்ணின.

காண்டி என்ற ஸ்தலத்திலிருந்து பின்வாங்கிக் கொண்டிருந்த பிரிட்டிஷ்படைகள் 24-ந்தேதி காலை 7-30 மணிக்கு சத்துருக்களால் மிகவும் கடுமையாய் நெருக்கப்படுவதாக அறிவித்தன. முன்புறத்தில் சத்துருவைத் தாக்கிக்கொண்டிருந்த ஜெனரல் ஆலன்பி தமது குதிரைப்படைகளைப் பின்னுக்கு இழுத்து காண்டியிலிருந்து பின்

வாங்கிக் கொண்டிருந்த பிரிட்டிஷ் காலாட் படைகளுக்கு உதவி செய்ய வந்தார். உக்கிரமாய் சண்டை செய்து கொண்டிருந்த ஜெர்மன் காலாட் படைகளைப் பக்கவாட்டில் தாக்கலா மென்று பிரிட்டிஷ் குதிரைப் படைத்தலைவருள் ஒருவராகிய ஜெனரல் டிலிஸ்லி நினைத்தார். ஜெர்மன் துருப்புகளைப் பக்கவாட்டில் தாக்கினால் அவர்கள் முன்செல்வதைத் தடைப்படுத்தலா மென்று ஜெனரல் டிலிஸ்லி எண்ணினார். ஆகையால் அவர் தமது குதிரைப்படைகளை விரைவாய்ச் செலுத்தி ஜெர்மன் துருப்புகளின் பக்கவாட்டை நோக்கிப் பாய்ந்தார். 500 கஜதூரத்துக்கு அருகில் சென்றதும் அங்கு ஜெர்மானியர் இரகஸ்யமாய்க் கட்டிவைத்திருந்த இரும்புக் கம்பி வலைகள் பிரிட்டிஷ் குதிரைகளின் நடமாட்டத்தைத் திடீரென்று தடுத்து விட்டன. அச்சமயம் ஜெர்மானியர் பிரிட்டிஷ் குதிரைகளின் மீது உக்கிரமான கெருப்பைப் பொழிந்தார்கள். ஜெனரல் டிலிஸ்லி தமது குதிரைப்படைகளை ஒழுங்குபடுத்தி மூன்றிருந்த இடத்துக்கு வீலகிச் செல்வதற்குள்ளாக அதிக சேதம் உண்டாகிவிட்டது. பிரிட்டிஷ் சேனையின் இடதுபாகத்துப்படைகள் அவ்வாறுபின்வாங்கிச்சென்றுகொண்டிருந்தபோது, புதிதாய் ஒருபிரிட்டிஷ் காலாட்படை (19வது காலாட் பிரிகேட்) துணைசெய்ய வந்து சேர்ந்தது. புதிதாய் வந்த அந்த காலாட் படையின் உதவியாலும் குதிரைப்படைகளின் உதவியாலும், ஸ்மித் டோரியன் தமது படைகளையெல்லாம் பந்தோபஸ்தாய் பின்புறத்தில் சேர்ப்பித்தார். 24ந்தேதி இரவு 7மணிக்கு வாலன்லீன் என்ற ஸ்தலத்துக்குக் கிழக்கில் அவருடைய படைகள் நிலைபெற்றன. 560-வது பக்கத்திலுள்ள படத்தில் இந்த ஸ்தலங்களைக் காணலாம். அவரோடுகூட, வலதுபாகத்துப் பிரிட்டிஷ்படைகளை டக்லஸ்ஹெய்க் பின்புறமாய்ச் செலுத்தி மாபூஜ் என்ற ஸ்தலத்துக்கருகில் நிலைபெற்றார். ஆகையால் பிரிட்டிஷ்சேனை 24ந் தேதிபிரவு வாலன்லீனிலிருந்து மாபூஜ் வரையிலுள்ள வரிசையில் நிலைபெற்றது. மாபூஜ் என்ற ஸ்தலத்திலிருந்த பிரஞ்சுகோட்டைகள்வலது பக்கவாட்டில் காவலாயிருந்தன. இடதுபக்கவாட்டில் பிரிட்டிஷ் குதிரைப்படைகளும் புதிதாய்வந்த பிரிட்டிஷ் காலாட்படையும் காவலாயிருந்தன.

சென்ற இரண்டு தினங்களாக பிரிட்டிஷ்சேனை மிகுந்த சிரமத்துடன் சண்டை செய்துகொண்டே பின்வாங்கியபோது, பிரிட்டிஷ்

சேனுபதிதம்முடைய சேனைக்குக்கிழக்கே இருந்த பிரஞ்சு குதிரைப் படைகளின் உதவியைப் பெறலாமென்று எண்ணினர். ஆகையால் அவர் பிரஞ்சு குதிரைப் படைத்தலைவரிடம் சென்று அப்படைத் தலைவரை தமக்கு உதவிசெய்யும்படி நிரப்பவும் கேட்டுக் கொண் டார். அப்படைத்தலைவர் தம்முடைய மேலதிகாரியிட மிருந்து உத்தரவு கேட்பதாகவும் அச்சமயம் தம்முடைய குதிரைகள் மிக வும் களைத்துப் போயிருந்ததால் எவ்வித உதவியுஞ் செய்வதற் கில்லை யென்றும் சொன்னர். அந்த பிரஞ்சு குதிரைப் படைகள் ஸாம்பர் நதியிலிருந்து பின்வாங்கிச் சென்று கொண்டிருந்த 5-வது பிரஞ்சு சேனைக்கு உதவிசெய்ய வேண்டியிருந்த தென் பதைக் கவனிக்கவேண்டும். ஆகையால் பிரிட்டிஷ் சேனைக்கு வலது பக்கத்தில் ஸாம்பர் நதிக்கரையிலிருந்த பிரஞ்சுபடைகள் பின்வாங் கிச் சென்றவண்ணமா யிருந்தபடியால், ஸர்ஜான் பிரெஞ்சு தமது சேனையும் பின் வாங்கிச் செல்ல வேண்டு மென்று நிர்மானித்தார். மேலும், ஜெர்மானியர் பிரிட்டிஷ் சேனையின் இடது பாகத்தை அதாவது ஸ்மித் டோரியனுடைய படைகளை முன்புறத்திலும் பக்கவாட்டிலும் கடுமையாய்த் தாக்கிக்கொண் டிருந்தார்கள். ஜெர் மானியர் அவ்வாறு பிரிட்டிஷாரின் இடதுபக்கத்தில் வளைந்து கொண்டு தாக்கி, பிரிட்டிஷ் சேனையை மாபூஜ் கோட்டைக்குள் நெருக்கித் தள்ளவேண்டுமென்று எண்ணினர்கள். தவிர பிரிட்டிஷ் துருப்புகள் பெல்ஜிய எல்லைக்கு வந்ததுமுதல் ஓயாமல் சண்டை செய்து மிகவும் களைத்துப் போயிருந்தார்கள். அந்த காரணங் களால் ஸர்ஜான் பிரெஞ்சு பிரிட்டிஷ் சேனையை பின் புறத்தில் சென்று ஆய்ஸ் நதியைப்போன்ற வலுவான இடத்தில் நிலைபெற வேண்டுமென்று நிச்சயித்தார். அப்படிப்பட்ட வலுவான பிர தேசத்தை அடையும் வரையில் பிரிட்டிஷ் சேனை பின்வாங்கிக் கொண்டே யிருக்கவேண்டுமென்று அவர் தமது சேனைத்தலைவர் களுக்கு அறிவித்தார். பிரிட்டிஷ் சேனையைப் பின்வாங்காதபடி ஜெர்மானியர் தடுப்பார்களானாலும், ஜெர்மானியரும் களைத்துப் போய் அதிக சேதமடைந்திருப்பார்களாகையால், அவர்கள் அவ் வளவு உக்கிரமாய்த் தாக்கமாட்டார்களென்று பிரிட்டிஷ் சேனுபதி எண்ணினர். ஆயினும் பிரிட்டிஷ் சேனை பின்வாங்கிச் செல் லும்போது மிகுந்த ஆபத்தும் கஷ்டமும் விளையுமென்றே அவர் எதிர்பார்த்திருந்தார்.

பிரிட்டிஷ் சேனை மறுபடியும் பின் வாங்கிச்சென்றது.

25-ந்தேதி காலை 5-30 மணிக்கு பிரிட்டிஷ் சேனை மறுபடியும் பின்வாங்கத்தொடங்கியது. லாகாடோ என்ற ஸ்தலத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் பிரிட்டிஷ் சேனை நிலைபெறவேண்டுமென்று சேனாபதி உத்தரவு செய்தார். காட்டி என்ற ஸ்தலத்திலிருந்து லாகாடோ வரையிலும் பிரிட்டிஷ் சேனையின் இடதுபாகம் நிலைபெறவேண்டுமென்றும், லாகாடோவிலிருந்து லான்டிரிஸிஸ் வரையிலும் வலது பாகம் நிலைபெற வேண்டுமென்றும், யோசனை செய்யப்பட்டது. இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு டிவிஷன்கொண்ட பிரிட்டிஷ் படை அன்று காலை போர்மூனுக்கு வந்து சேர்ந்தது. அது பிரிட்டிஷ் சேனைக்கு இடது புறத்தில் உதவி செய்யும்படி அனுப்பப்பட்டது. 25-ந் தேதியன்று தினம் முழுவதும் பிரிட்டிஷ் சேனை பின் வாங்கிச்சென்றது. வலது பாகத்திலிருந்த டக்லஸ் ஹேய்க் இரவு 10 மணிக்கு லான்டிரிஸிஸ் என்ற ஸ்தலத்துக்கு 4 மைலுக்கிப்பால் தமது படைகளைக்கொண்டு வந்து சேர்த்தார். அவருடைய படைகள் லான்டிரிஸிஸ் நகரத்தைத்தாண்டி மேற்கு நோக்கி சிறிது தூரம் ஒதுங்கி நிலைபெற வேண்டியிருக்க, அந்த படைகள் வழி நடந்து மிகவும் களைத்துப் போயிருந்தபடியால் அவ்வாறு செய்யாமல் கொஞ்சநேரம் சிரம பரிகாரம் செய்துகொண்டு பிறகு சரியான நிலைமையில் ஒதுங்கிக் கொள்ளலாமென்று டக்லஸ்ஹேய்க் நினைத்தார்.

லான்டிரிஸிஸ் நகரத்தில் கடுமையான சண்டை.

ஆனால் ஜெர்மானியர் பிரிட்டிஷ் படைகளுக்கு ஓய்வு ஒழிச்சல் கொடுக்காமலே சண்டைசெய்துவந்தார்கள். லான்டிரிஸிஸுக்கு வடக்கில் சிறிது தூரத்தில் நிலைபெற்ற பிரிட்டிஷ் படைகளை ஜெர்மானியர் கடுமையாய்த் தாக்கிக்கொண்டிருந்தார்கள். தவிர, ஜெர்மானியர் லான்டிரிஸிஸ் நகரத்துக்குள் புகுந்து அங்கு காவலாக இருந்த ஒரு பிரிட்டிஷ் படையைக் கடுமையாய்த் தாக்கினார்கள். பிரிட்டிஷ் சேனையின் வலது பாகத்துப் படைகள் அந்நகரத்தில் நிலைபெறுவதற்குள்ளாக அதைப் பிடித்துவிடவேண்டுமென்று ஜெர்மானியர் முயற்சிசெய்தார்கள். ஜெர்மானியர் அந்நகரத்தின் முக்கிய தெருவுக்குள் கூட்டமாகச்சேர்ந்து புகுந்தபோது, அங்குபிரிட்டிஷ் துருப்புகள் அநேக மெஷின் பிரங்கிகளை வைத்திருந்து உக்

கிரமான தெருப்பைப் பொழிந்தார்கள். அந்தத் தெருவில் மட்டும் சுமார் 1000 ஜெர்மன் துருப்புகள் விழுந்து கிடந்தனர். அந்த நகரத்திலிருந்த பிரிட்டிஷ் படையை ஜெர்மானியர் தாக்கிக்கொண் டிருக்கையில், வேறு ஜெர்மன் படைகள் டக்லஸ் ஹேய்கினுடைய படைகளைத் தாக்கின. அவ்வாறு நாலா பக்கங்களிலும் நெருக்கப்பட்ட பிரிட்டிஷ் படைகளுக்கு ஸர் ஜான் பிரெஞ்சு எவ்விதத் தகவலும் அனுப்புவதற்கு கையிருப்பில் பின்பலமில்லை. ஆகையால் பிரிட்டிஷ் சேனுபதி தமக்குக் கிழக்குப் பிரதேசத்திலிருந்த பிரஞ்சுப்படைகளை உதவிக்கு வரும்படி அப் படைத்தலைவருக்கு அவசரமான சமாசாரம் சொல்லியனுப்பினர். அந்த பிரஞ்சு படைகள் உதவிசெய்ததாலும், டக்லஸ்ஹேய்க் மிகவும் சாமர்த்தியமாய் தமது படைகளைச் செலுத்தியதாலும் பிரிட்டிஷ் துருப்புகள் அன்று தினம் அந்த அபாய நிலைமையிலிருந்து நீங்கி பின்புறமாய்ச் சென்று நிலைபெற்றனர்.


அதற்குள்ளாக இடது பாகத்தில் ஸ்மித் டோரியன் ஜெர்மானியரால் நெருக்கப்பட்டு வந்தார். அவருடைய படைகள் காட்ரி என்ற ஸ்தலத்திலிருந்து லாகாடோ வரையில் 25-ந் தேதி மாலை 6-மணிக்கு நிலைபெற்றன. 8-ஜெர்மன்டிவிஷன்கள் அவருடைய பிரிட்டிஷ் படைகளை முன்புறத்திலும் பக்கவாட்டிலும் ஒபாமல் தாக்கிக் கொண் டிருந்தன. புதிதாய் வந்த பிரிட்டிஷ் பண்டகளெல்லாம் இடது பாகத்துக்கு அனுப்பப்பட்டுங்கூட, இடது பாகத்தின் நிலைமைமிகவும் அபாயகரமாயிருந்தது. ஜெர்மானியர் எட்டுடிவிஷன்களிலிருந்த பீரங்கிகளை யெல்லாம் சேர்த்து உக்கிரமாய் சுட்டார்கள். அந்நிலைமையில் பிரிட்டிஷ் படைகள் மறுதினம் காலை பின் வாங்கிச் செல்வது சாத்தியமில்லை யென்று ஸ்மித்டோரியன் ஸர் ஜான் பிரெஞ்சுக்கு அறிவித்தார். அச்சமயம் அங்கு வந்து கொண் டிருந்த பிரஞ்சு குதிரைப்படையின் தலைவருக்கு பிரிட்டிஷ் சேனுபதி அவசரமாய்ச் சமாசாரம் அனுப்பி இடது பாகத்துப் பிரிட்டிஷ் படைகள் ஆபத்தினின்றும் நீங்கிப் பின்செல்லும் வரையில் உதவிசெய்யும்படி பிரஞ்சுப்படைத் தலைவரைக்கேட்டுக் கொண்டார். ஆனல் பிரஞ்சு குதிரைகள் மிகவும் களைத்துப் போயிருந்தபடியால் அச்சமயம் எவ்வித உதவியுஞ்செய்வதற்கில்லை யென்று பிரஞ்சு படைத்தலைவர் பதில்அனுப்பினர். பிறகு, பிரிட்டிஷ்

சேனபதி தமது சேனையின் அபாய நிலைமையைக் கருதி, அது அடியோடு நாசமாகாம லிருக்கவேண்டுமானால் தாமஸமின்றிப் பின்வாங்கிச் செல்வது அத்தியாவசியமென்று அறிந்தார். இடது பாகத்துப் படைகள் எவ்வா றாயினும் பின் வாங்கிவிடவேண்டு மென்று ஸர்ஜான்பிரெஞ்சு ஸ்மித்டோரியனுக்கு உத்தரவு செய்தார். 26-ந் தேதி யன்று காலையில் ஸ்மித்டோரியன் செலுத்திய பிரிட்டிஷ் படைகளெல்லாம் உக்கிரமாய்த் தாக்கப்பட்டன. அவர்கள் நான்கு படங்குகளுக்கதிகமான பீரங்கிகளைக் கொண்டு பிரிட்டிஷாரின் அரண்களைத் தகர்த்துக்கொண்டிருந்தார்கள். ராணுவ விதிகளின்படி யோசித்தால் அன்று தினம் பிரிட்டிஷ் சேனையின் இடதுபாகம் அழிந்துபோ யிருக்கவேண்டும். ஆனால் தாங்கள் தோல்வி யடைந்து விட்டோ மென்ற எண்ணம் மட்டும் எந்த காலத்திலும் பிரிட்டிஷ் துருப்புகளின் மனதில் புகுவ தில்லை; அப்படிப்பட்ட ஆபத்தான சமயங்களில் தான் அவர்களின் விசேஷ குணங்கள் முழு வேகத்துடன் வெளிப்படுவது வழக்கம். அன்று 3.30 மணிக்கு ஸ்மித் டோரியன் தமது படைகளை எப்படி யாகிலும் பின் வாங்கிச் செலுத்திவிடுவதாக நிச்சயித்துவிட்டார். ஸ்மித் டோரியன் தாமே நேரிலிருந்து படைகள் பின்வாங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தார். பிரிட்டிஷ், பிரங்கிகளும் குதிரைகளும் ஜெர்மானிய ரணவரையும் தடுத்து நிற்கும்படி அவர் ஏற்பாடு செய்து மற்ற பிரிட்டிஷ் படைகளை யெல்லாம் பின்புறஞ் செலுத்தினார். பிரிட்டிஷ்பீரங்கிகள் மிகுந்த சேதமடைந்தபோதிலும் கடைசி வரையில் கடுமையாய்ச் சண்டை செய்து ஜெர்மானியரின் உக்கிரத்தைத் தாங்கிக்கொண்டன. பிறகு ஜெர்மானியர் பிரிட்டிஷ் பீரங்கிகளையும் குதிரைகளையும் வென்று முன்செல்வதற்குள்ளாக ஏராளமான சேத மடைந்து சோர்வுற்றார்கள். ஜெனரல் ஸர் ஸ்மித்டோரியன் அன்றுதினம் காட்டிய சாமர்த்தியத்தை ஸர்ஜான் பிரெஞ்சு தக்கபடிபுகழ்ந்திருக்கிறார். "நிதான புத்தியும் தைரியமும் மனவுறுதியும் அபூர்வமாய்ப் பெற்ற ஒரு சேனைத் தலைவர் நேரில் படைகளைச் செலுத்தி யிராமற்போனால் ஆகஸ்ட் 26-ந் தேதி யன்று காலையில் பிரிட்டிஷ் சேனையின் இடது பாகம் தப்பிப் பிழைத்திருக்காதென்று சொல்லத் தடையே யில்லை." என்று ஸர்ஜான் பிரெஞ்சு ஸ்மித்டோரியனைப் பற்றி புகழ்ந்து சொன்னார்.

26-ந் தேதி பகலும் இரவும் பிரிட்டிஷ் சேனை முழுவதும் பின் வாங்கிச் சென்றுகொண்டிருந்தது. அதன்பிறகு பிரஞ்சு குதிரைப் படைகள் உதவி செய்துகொண் டிருந்தன. பிரான்வின் வடபாகத் தில் புதிதாய் 6-வது பிரஞ்சு சேனை யொன்று சேர்க்கப்பட்டு பிரிட்டிஷ் சேனையோடு சேர்ந்துகொண்டது. ஜெர்மானியர் பிரிட் டிஷ் சேனைப்பின் தள்ளியபோது, தங்களுக்கு வடக்கிலுள்ள பிரஞ்சு பிரதேசத்தை வசப்படுத்திக்கொள்ளவில்லை. ஆகையால்ஜெர் மானியர் வடக்கிலிருந்த பிரஞ்சு படைகளையும் தாக்கிப் பின்வாங்கச் செய்யும்படி நேர்ந்தது. 26-ந் தேதிக்குப் பிறகு பிரிட்டிஷ் சேனை சத்துருவால் அவ்வளவு உக்கிரமாய்த் தாக்கப்படவில்லை.

28-ந் தேதியன்று பிரிட்டிஷ் சேனை ஆய்ஸ் நதிக்கரையில் நிலை பெற்றது. அவ்வாறு பிரிட்டிஷ்சேனை 23-ந்தேதி முதல் 28-ந் தேதி வரையில் 6 தினங்களாக இரவும் பகலும் ஓயாமல் சண்டை செய்து கொண்டே 75 மைல் தூரம் பின் வாங்கிச் சென்றது. பிரிட்டிஷ் சேனையை நாசமாக்குவதற்காக ஜெர்மானியர் செய்த பிரயத்தனங் கள் பலிக்கவில்லை. பிரிட்டிஷ் சேனை இரண்டு பங்கு அதிக பலங் கொண்ட சத்துருக்களைத் தடுத்து பந்தோபஸ்தான இடத்துக்குப் பின்வாங்கி விட்டதானது பிரிட்டிஷாரின் போர்த் திறமையைக் குறிப்பிடுகிறது.

1870 ஆம் வருஷத்து யுத்தத்தில் பேர்வாங்கிய ஜெனரல் வான் மோட்கியின் திறமையைப்பற்றி அவருடைய நண்பரொருவர் பிரஸ் தாபித்தபோது அவரை நெப்போலியனுக்கு ஒப்பிட்டுப் புகழ்ந் தார். ஜெனரல் வான் மோட்கி அந்த உபமானம் சரியல்லவென்று சொல்லி, லக்ஷக்கணக்கான பிரஞ்சுத் துருப்புகளை ருஷியாவிலிரு ந்து நெப்போலியன் தைரியமாய்ப் பின்வாங்கிச் செலுத்தியதுபோல தானெதுவும்செய்யவில்லை என்று பதிலளித்தார். சத்துருக்களை எதிர் க்கமுடியாமல் தணிவாய்ப் பின்வாங்கிச்செல்லும் சமயத்தான் சேனை பதியின் திறமையை உண்மையாய் பரிட்சைசெய்யக்கூடியது. இந்த மகாயுத்தத்தில் பிரிட்டிஷ் சேனைபதி திறமையுடன் பின்வாங்கியது போல வேறிரண்டு சம்பவங்கள்தான் இதுவரையில் நடைபெற்றிருக் கின்றன. மாரன் நதிச்சண்டையில் நேசப்படைகளை எதிர்க்க முடியா மல் ஜெனரல் வான் கிளக் பின் வாங்கியதும், போலண்டில் முறியடிக்



பெல்ஜிய அரசர்.



லார்ட் கிட்சனர்.




பிரஞ்சு பிரஸிடென்ட் பாய்ன்கேர்



பிரிட்டிஷ் சேனைத்தலைவர்—
ஸர் டக்ளஸ் ஹெய்க்.



பிரிட்டிஷ் சேனைத்தலைவர்—
ஸர் ஸமித் டோரியன்.



பிரிட்டிஷ் சேனாபதி—ஸர் ஜான் பிரெஞ்சு.

கப்பட்ட ஸான்குலக்ஷும் ஆஸ்டிரியத் தருப்புகளை ஜெனரல் டாங்கல் பின்புறஞ் செலுத்தியதும் இங்கு எடுத்துச் சொல்லத்தகும்.

அதன்பிறகு ஜெர்மானியர் ஏராளமான படைகளைக்கொண்டு, ஏகாலத்தில் எல்லாஸ்தலங்களையும் தாக்கஆரம்பித்தார்கள். இரண்டு வலுவான குதிரைப்படைகள் பிரிட்டிஷ்சேனையைப் பின்தொடர்ந்து வந்தன. பிரிட்டிஷ் சேனைக்கு வலதுபுறத்திலிருந்த 5-வது பிரஞ்சு சேனையைத் தாக்க 10 ஜெர்மன் டிவிஷன்கள் திரண்டுகொண்டிருந்தன. பிரிட்டிஷ் சேனைக்கு இடதுபக்கத்திலிருந்த 6-வது பிரஞ்சு சேனையைத் தாக்க 8 ஜெர்மன் டிவிஷன்கள் தயார் செய்துகொண்டிருந்தன. பிரிட்டிஷ்சேனைக்கு முன்புறத்தில் 4 ஜெர்மன் டிவிஷன்கள் வந்துகொண்டிருந்தன. 29-ந் தேதி யன்று பகல் 1 மணிக்கு பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே பிரிட்டிஷ்சேனாபதியாகிய ஸர்ஜான் பிரெஞ்சைப் பார்க்கவந்தார். ஸர்ஜான் பிரெஞ்சு பிரிட்டிஷ் சேனையின் அபாயகரமான நிலைமையைப்பற்றி பிரஞ்சு சேனாதிபதிக்கு பலமாய் எடுத்துச் சொன்னர். பிரஞ்சுசேனாதிபதி மிகவும் பக்ஷமாயும் அனுதாபத்துடனும் பேசினர். பிரிட்டிஷ் சேனைக்கு இரண்டு பக்கங்களிலும் வலுவான பிரஞ்சு படைகளைச் சேர்த்துவைப்பதாக ஜெனரல் ஜாப்ரே சொன்னர். பிரிட்டிஷ் சேனைக்கு வலதுபுறத்திலுள்ள 5-வது பிரஞ்சு சேனை இப்போது முன் சென்று ஜெர்மானியரை வலுவாய்த் தாக்கி அவர்கள் பின் தொடர்ந்து வருவதைத் தடுக்க முயற்சிசெய்யப்போவதாக பிரஞ்சு சேனாதிபதி சொன்னர். தவிர, பிரிட்டிஷ் சேனைக்கு இடதுபுறத்தில் 6வது பிரஞ்சு சேனை மிகுந்த பலங்கொண்டதாய்ப் புதிதாகச் சேர்க்கப்பட்டுவருகிறதென்றும் அவர் அறிவித்தார். அவ்வாறு பிரிட்டிஷ் சேனைக்கு இரண்டுபக்கங்களிலும் வலுவான பிரஞ்சு படைகள் நிறுத்தப்பட்டன.

பிரஞ்சு சேனாதிபதியின் புதிய நடவடிக்கைகள்.

பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே, யுத்த ஆரம்பத்தில் தெற்குக் கோடிபிலுள்ள அல்ஸேஸ் மாகாணத்திலிருந்து ஜெர்மானியர் படையெடுக்கக் கூடுமென்று எண்ணி, அங்குபிரஞ்சு சேனையின் பெரும் பாகத்தையும் குவித்தார் என்று சொன்னோம். ஆகஸ்ட் 28-ந்தேதிக்குப் பிறகு ஜெர்மானியர் பெல்ஜியத்தின் வழியாகப் படையெடுத்து வருவது நிச்சயப் பட்டுவிட்டதால், பிரஞ்சு சேனாதிபதி மிகவும் எளிதாய் தமது சேனை முழுவதையும் வேறுவித

மாய் அணி வகுத்து யுத்த நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றிவிட்டார். அது பிரஞ்சு சேனைகிபதியின் சாமர்த்தியத்தையும் தைரியத்தையும் குறிப்பிடுகிறது. யுத்த ஆரம்பத்திலிருந்தே பிரஞ்சு மூலபலங்கள் சேர்க்கப்பட்டு வந்தன. ஜெர்மானியரின் உண்மையான நோக்கம் தெளிவாய் வெளிப்படும் வரையில் அவர் தமது மூல பலங்களை உபயோகிக்காமல் வைத்திருந்தார். தவிர, அந்த பிரஞ்சு மூலபலங்களுக்குத் தேவையான துப்பாக்கிகள், பீரங்கிகள் குண்டுகள் முதலிய பதனிதமான தளவாடங்களும் சேர்க்கப்பட்டு வந்தன. அந்த மூலபலங்கள் இப்போது போர்க்களத்தில் உபயோகிக்கப்பட்டன. அல்ஸேஸ் மாகாணத்தில் படையெடுத்துச் சென்ற பிரஞ்சு படைகளும் பாரிஸுக்கு வடக்கில் கொண்டு போகப்பட்டன. அந்த படைகள் பிரிட்டிஷாருக்கு இரண்டு பக்கத்திலும் வைக்கப் பட்டன.

பிரிட்டிஷ் சேனைக்கு இடதுபுறத்திலிருந்த 6-வது பிரஞ்சு சேனையும், வலது புறத்திலிருந்த 5-வது பிரஞ்சு சேனையும் முன் சென்று ஜெர்மானியரைத் தாக்கின. திறமைவாய்ந்த பிரஞ்சு சேனாபதியாகிய ஜெனரல் பா அல்ஸேஸ் மாகாணத்திலிருந்து ஆய்ஸ் நதிக்கு வந்து 5-வது பிரஞ்சு சேனைக்குத்தலைமை வகித்தார். அவர் 1870-ம் வருஷத்தில் ஜெர்மானியருடன் சண்டைசெய்து போர்க் களத்தில் தமது வலதுகையை இழந்து விட்டார். அவர் பிரஞ்சு சேனாபத்திய ஸ்தானத்தை அபேக்ஷித்து ஜெனரல் ஜாப்ரேக்குப் போட்டியாக நின்றார். ஜெனரல் ஜாப்ரே சேனாதிபதியாக நியமிக்கப்பட்ட போதிலும், ஜெனரல் பா அந்தஸ்தானத்தைவகிக்கத் தகுந்த யோக்கியதை யுடையவர். ஆய்ஸ் நதிக்கரையில் கீஸ் என்ற ஸ்தலத்தைச் சுற்றிலும் ஜெனரல்பா 5-வதுபிரஞ்சு சேனையை செலுத்தி அங்கிருந்த ஜெர்மன் படைகளைப் பின் வாங்கச் செய்தார். ஜெனரல்பா ஜெர்மானியரைப் பின்தொடர்ந்து சென்றார். ஆனால், பிரிட்டிஷ் சேனைக்கு இடது புறத்திலிருந்த 6-வது பிரஞ்சு சேனை தோல்வியடைந்து பின்வாங்கிச் சென்றது. அந்த 6வது சேனை மேற்குக் கோடியிலிருப்பதால், ஜெர்மன் சேனாபதியாகிய ஜெனரல் வான் கிளக் அதைப் பின்வாங்கச் செய்து பிறகு மேற்குபக்கமாய் வளைந்து நேசப் படைகளைத்தாக்கினர்.

அவ்வாறு ஜெர்மானியர் பக்கவாட்டில் தாக்கியதால், நேசப் படைகளின் வரிசை முழுவதும் பின் வாங்கும்படி நேர்ந்தது,

கீஸ் என்ற ஸ்தலத்தில் ஜெனரல் பாகிறந்த வெற்றி அடைந்த போதிலும் அவ்வெற்றி பயன் படாமற் போயிற்று. அதற்குக் காரணம் ஜெர்மானியர் மேற்குக் கோடியிலிருந்த பிரஞ்சு சேனையை தோற்கடித்ததாகும். ஜெர்மானியர் மேற்குப் பக்கத்தில் வளைந்து கொண்டு தாக்குவதைத் தடுப்பதற்கு அத்திசையில் வலுவான பிரஞ்சு ஸ்தலங்களில்லை. ஆகையால் ஜெனரல் ஜாப்ரே, மேற்குக் கோடியில் பாரிஸ் நகரத்துக் கோட்டைகளை ஆதாரமாகக் கொண்டு அங்கிருந்து பிரஞ்சுபடைகளைச் செலுத்தி ஜெர்மானியரைத் தாக்கினால்தான் பயன்படுமென்று அறிந்தார்.


ஆகையால் நேசப் படைகளின் வரிசை முழுவதும், பாரிஸுக்குக் கிழக்கிலுள்ள மாரன் நதிக்கரையை நோக்கிப் பின்வாங்கும்படி பிரஞ்சு சேனாதிபதியால் உத்தரவு செய்யப்பட்டது.

36-வது அத்தியாயம்.

மாரன் நதிச்சண்டை.

செப்டம்பர் 2-ந்தேதி பிரஞ்சு பிரஸிடெண்டும் கவர்ன்மெண்டும் பாரிஸ்நகரத்தை விட்டு வில்கி, மேற்குக்கடற்கரையிலுள்ள போர்டோ என்ற துறைமுகப்பட்டணத்துக்குச் சென்றார்கள். செப்டம்பர் 3-ந்தேதி, நேசப்படைகள் மாரன்நதியைத்தாண்டிப் பின்சென்றன. நேசப்படைகள் இன்னும் பின்வாங்கி ஸேன் நதிக்கரையில் நிலைபெற வேண்டுமென்று ஜெனரல் ஜாப்ரே அறிவித்தார்.

செப்டம்பர்5-ந்தேதி பிரிட்டிஷ் படைகளும்பிரஞ்சுபடைகளும் மாரன் நதியிலுள்ளபாலங்களை உடைத்துவிட்டுப்பின்சென்று ஸேன் நதிக் கருகில் சென்றன. ஜெர்மானியர் மாரன் நதியில் புதிதாய்ப் பாலங் கட்டி ஸேன்நதியை நோக்கி முன்சென்றார்கள். (அடுத்தபக்கத்திலுள்ள படத்தைப்பார்க்க.) அன்று தினம் (5-ந்தேதி) ஜெனரல் ஜாப்ரே, ஸர்ஜான் பிரெஞ்சைவரவழைத்து தாம் தொடங்கப்போகிற யுத்த நடவடிக்கைகளை விளக்கிச் சொன்னார். பிரிட்டிஷ் சேனைக்கு இடதுபுறத்திலுள்ள 6-வது பிரஞ்சுசேனை பாரிஸுக் கருகில் மாரன் நதிக்கரையில் நிலைபெற்று, ஜெர்மன் படைகளின்பக்கவாட்டில் தாக்கப்போகிறதென்றும், மற்ற படைகளெல்லாம் ஜெர்மானியரை முன்



மகாயுத்தம் ஆரம்பித்தவுடன், மான்ஸ், ஷார்லிரூய், நியுஷாடோ, லாங்வி ஆகிய இந் நான்கு ஸ்தலங்களி லிருக்கும் புறப்பட்ட ஜெர்மன் சேனைகள் பாரி ஸைநோக்கி முன்சென்றன. அச்சேனைகளே முறையே ஜெனரல் வான் ஹ்ளக், பியுலோ, டியுக் ஆப் வர்ட்டம்பர்க், ஹெர்மன் இளவரசர் ஆகிய இவர்கள்செலுத் தினார்கள். அந்த நகரங்களி லிருந்து மெல்லிய கோடுகள் படத்தில் போ டப்பட்டிருக்கின்றன. ஜெர்மன் சேனைகள் சென்ற வழிகளே அந்த கோடு கள் குறிக்கின்றன. ஜெனரல் வான் ஹாஸனுடைய படைகள், மாரன் நதிக்கு வராமல் வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டன. பின்னல் சொல்லப்படும் விவ ரங்களே அறிவதற்கு இப்படத்தைப் பார்க்கவேண்டும். 2-வது பிரஞ்சுசேனைக் குத் தெற்கிலுள்ள 1-வது பிரஞ்சு சேனையை இப்படத்தில் குறிக்கவில்லை. ஏனெனில் அதன் நிலைமை எவ்வித்திலும் மாறுபடவில்லை.

புறத்தில் தாக்கி பின்னிடையச் செய்யவேண்டுமென்றும் சொன்னர். ஜெர்மானியர் மாரன் நதியைத் தாண்டிச்சென்ற இடத்தில் 6-வது பிரஞ்சு சேனை தாக்கி அங்கு வழிமறித்து நிற்கவேண்டு மென்று ஜெனரல் ஜாப்ரேயோசனைசெய்தார்.

ஜெர்மானியருக்கு நேர்ந்த கஷ்டங்கள்.

ஜெர்மானியரின் நடவடிக்கைகளைப் பற்றிச் சற்றுத்தெளிவாய் விளக்கிச் சொல்லவேண்டும். ஜெனரல் வான் கிளக் மான்ஸ் நகரத்திலிருந்து புறப்பட்டு ஆமீன்ஸ் நகரத்துக்குக் கிழக்கிலுள்ள பிரதேசத்தின் வழியாய்ச் சென்று, படத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆய்ஸ் நதியைத் தாண்டினர். விஸ்தாரமாய் பரவியிருந்த அவருடைய படைகள் எய்ஸன் நதியையும் சாய்ஸன்ஸ் நகரத்துக்கருகில் தாண்டின. ஜெனரல் வான் கிளக் ஆய்ஸ் நதியைத் தாண்டினபோது அதற்குத் தெற்கில் உள்ள பாரிஸ் நகரத்தை நோக்கிச் செல்லாமல், தென் கிழக்காய்த் திரும்பிவிட்டார். அதற்குச் சில காரணங்களிருக்கின்றன. பாரிஸ் நகரத்தைச் சுற்றிலும் சுமார் 90 மைல் சுற்றளவுக்கு மிகுந்த வன்மைகொண்ட கோட்டைகளிருக்கின்றன. பாரிஸ் நகரத்துக்கு 10 மைல் வடக்கில் கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த கோட்டைகளிலுள்ள பீரங்கிகள் குறைந்தது 5 மைல் தூரமாவது சுடக்கூடுமாகையால், பாரிஸ்நகரத்துக்கு 15மைல் தூரத்துக்கு இப்பால் ஜெர்மன் படைகள் நின்றுவிடவேண்டும்; நிற்காமல் முன்செல்ல வேண்டுமானால், பாரிஸ்கோட்டைகளை முற்றுகைபோட வேண்டும். முற்றுகைபோடுவதற்கு லக்ஷக்கணக்கான திருப்புகள் வேண்டும். ஆகையால் செப்டம்பர் 3-ந்தேதி நேசப்படைகள் பாரிஸுக்குக் கிழக்கில் மாரன் நதியைத் தாண்டிப் பின்சென்றபோது அந் நதியை ஜெர்மானியர் வசப்படுத்திக்கொள்வதா அல்லது எய்ஸன் நதிக் கரையிலேயே தங்கிவிடுவதா என்று ஜெர்மன் யுத்த தந்திரிகள் யோசனை செய்தார்கள். ஜெர்மானியர் மாரன் நதிக்குச் சென்றால், பாரிலிலிருந்து பிரஞ்சு படைகள் வந்து அவர்களைப் பக்கவாட்டில் தாக்கும். பாரிலிலிருந்து பிரஞ்சுபடைகள் முன்வந்து தாக்காமலிருக்க வேண்டுமானால், பாரிஸை முற்றுகை போடவேண்டும். ஆனால்அச்சமயம் ஜெர்மானியரிடம் போதுமானபடைகளில்லை. ஏனெனில்பிரான்ஸில் சண்டைசெய்துகொண்டிருந்தஅநேகஜெர்மன் திருப்புகள் ருஷியாவுக்குப் போகும்படி நேரிட்டது. செப்டம்பர்

2-ந்தேதி ருஷிய சேனை காலிஷியா என்ற ஆஸ்டிரியமாகாணத்தின் முக்கிய ஸ்தலமாகிய லெம்பர்க் நகரத்தைப் பிடித்துக் கொண்டு, அங்கிருந்த 1½லக்ஷம் ஆஸ்டிரியத் துருப்புகளை சேதமாக்கி விட்டது. செப்டம்பர் 4-ந்தேதி மற்ற ஆஸ்டிரியப்படைகள் தோல்வியடைந்து, மிகவும் ஆபத்தான நிலைமையில் பின் வாங்கிக்கொண்டிருந்தன. ஆகையால் ஜெர்மானியர் ஆஸ்டிரிய சேனைக்கு உதவி செய்யும்படி கோரிட்டது. பிரான்ஸில் சண்டைசெய்த சில ஜெர்மன் படைகள் ஆஸ்டிரியாவுக்குச் சென்றன. ஆகையால் ஜெர்மன் சேனை குறைவு பட்டபடியால், அது முன்போல அவ்வளவு வீஸ்தாரமாய்ப் பரவியிருக்க முடியவில்லை ; பாரிஸை நோக்கிவந்த ஜெனரல் வான்கிளக் முன்போல நேர் தெற்கே செல்லாமல் தென்கிழக்காய்த் திரும்பிச் சென்று மற்றஜெர்மன் படைகளோடு நெருங்கிக் கொண்டார். பிரான்மின்மேல் படையெடுத்த ஜெர்மன் சேனை செப்டம்பர் 4-ந்தேதி பாரிஸை நோக்கி முன்செல்லவேண்டிய சமயத்தில் பலஹீன மடைந்தது. அதனால் பாரிஸ் கோட்டைகளை முற்றுகைபோடும் எண்ணத்தை ஜெர்மானியர் கைவிட்டார்கள்.

ஆகையால் பாரிஸுக்கருகிலிருந்த ஜெர்மன் சேனை எங்காவது ஒரு வலுவான பிரதேசத்தில் நிலைபெற்றிருத்தல் அவசியமாயிற்று. செப்டம்பர்4-ந்தேதி ஜெர்மானியர் எய்ஸன்நதிக்கரையில் வலுவான அரண்களைக்கட்டி அங்கு ஜெர்மன் படைகள் நிலைபெற்றிருப்பதற்கு ஏற்பாடுசெய்யத் தொடங்கினர்கள். இனி ஜெர்மன்சேனை எவ்விடத்தில்நிலைபெற்றிருக்க உத்தேசிக்கிறதோ அவ்விடத்தில் அதுகாள்பட மாதக்கணக்காய் நிலைபெற்றிருக்கும்படி கோரிடுமென்பதைஜெர்மானியர் அறிந்துகொண்டார்கள். அதற்கு 3 காரணங்களிருந்தன. முதலாவது, ருஷிய எல்லையில் யுத்தநடவடிக்கைகள் ஜெர்மானியருக்குச் சாதகமாய் முடியும் வரையில் பிரான்சு எல்லைக்கு புதிய ஜெர்மன் படைகளை அனுப்பமுடியாது. ஆகையால் பிரான்லிலுள்ளஜெர்மன் சேனை, ருஷிய எல்லையிலிருந்து துணைப்படைகள் வரும்வரையில் பந்தோபஸ்தாய் தங்கியிருக்கவேண்டுமே யொழிய, பாரிஸை முற்றுகை போடுவதற்கும் பிரஞ்சு சேனையைத் தாக்கி முறியடிப்பதற்கும் முயற்சிசெய்யமுடியாது. இரண்டாவது, பிரஞ்சுசேனையும் பிரிட்டிஷ் சேனையும் நாளுக்கு நாள் தொகையிலும் வன்மையிலும் அதிகரித்து வந்தன. பிரஞ்சு மூலபலங்கள் திரட்டப்

பட்டு, ஆகஸ்ட் மாதக்கடைசியிலேயே ஜெர்மன் சேனையை ஆய்ஸ் நதிக்கரையில் வலுவில் தாக்கத்தொடங்கின. பிரிட்டிஷ் சேனை மான்ஸிலிருந்து பாரிஸ் வரையிலும் சண்டைசெய்து பின் வாங்கியதில் 15,000 துருப்புகளை இழந்தபோதிலும் 19,000 புதிய துருப்புகளைப் பெற்றுக்கொண்டது. பிரஞ்சு பூமியில் யுத்தம் நடப்பதால், பிரஞ்சு துருப்புகளை எளிதாய்ச் சேர்த்து யுத்த மண்டலத்தில் குவிக்கலாம். அதற்கு மாறுக, ஜெர்மன் சேனை பாரிஸை நோக்கி அருகே செல்லச்செல்ல, ஜெர்மன் பூமியிலிருந்து தூரவிலகிக் கொண்டே சென்றது. பெல்ஜியத்திலிருந்து பாரிஸ் வரையிலுள்ள 130 மைல் தூரம் ரயில் பாதைகளையும் ரோட்டுகளையும் காப்பதற்கு ஏராளமான ஜெர்மன் துருப்புகள் தேவைபடியிருந்தன. ஆகையால் பெல்ஜியத்திலிருந்து புறப்பட்ட ஜெர்மன் சேனை பாரிஸுக்கு அருகில் சென்றபோது தொகையில் குறைந்து போயிற்று. மேலும் 130 மைல் தூரத்திலிருந்து வெடி மருந்து ஆகாரம் தளவாடங்கள் முதலிய யாவும் வரவேண்டியிருந்தபடியால் அவைக ளெல்லாம் தாமஸமாய்க்கிடைத்து வந்தன. நேசப்படைகள் புதிய துருப்புகளையும் புதிய பீரங்கிகளையும் குண்டுகளையும் பெற்றுவன்மையில் அதிகரித்து வந்தபடியால், ஜெர்மன் சேனை பாரிஸை நோக்கி முன் செல்வது சாத்தியமல்ல. ஆகையால் ஜெர்மன் சேனைக்குப் புதிய படைகள் கிடைக்கும் வரையில் எங்காவது வலுவான பிரதேசத்தில் தங்கியிருக்கவேண்டுமே யொழிய பிரஞ்சு சேனையை முறியடிக்கவும் பாரிஸை முற்றுகை போடவும் முயல்வது சாத்தியமல்ல. மூன்றுவது, செப்டம்பர் மாதத்துக்குப் பிறகு மழைகாலம் வந்துவிட்டது. மழையும் பனியும் கோட்டி பூமியைச் சேறுக்கினால், ஜெர்மன் சேனை யுத்தநடவடிக்கைகளை விரைவாய் நடத்த முடியாது. ஜெர்மானியர் ஏராளமான மோட்டார் வண்டிகளை உபயோகித்து அவைகளில் தருப்புகளையும் பீரங்கிகளையும் தளவாடங்களையும் விரைவாய்க் கொண்டுபோய் யுத்தஞ் செய்தார்கள். மோட்டார் வண்டியின் உபயோகத்தால் சாதாரண ரோட்டுக ளெல்லாம் ரயில் பாதைகளுக்குச் சமானமாக மாற்றிவிடப்பட்டன. மழைகாலத்தில் மோட்டார் வண்டிகள் சிறிதும் பயன்படா. மேலும் ஜெர்மானியர் ஏராளமான பீரங்கிகளை போர்க்களத்தில் குவித்து அவைகளுக்குத் தேவையான ஏராளமான குண்டுகளையும் தாமஸமின்றி போர்க்களத்துக்கு அனு

ப்பி யுத்தத்தில் சாதகம்பெற்று வந்தார்கள். ஜெர்மன் பீரங்கிகள் பிரஞ்சு பீரங்கிகளைவிட மட்டமான தினுசாயிருந்தபோதிலும், ஜெர்மானியர் ஏற்கெனவே ஏராளமான பீரங்கிகளை இருப்பில் வைத்திருந்தபடியாலும், குரூப் இரும்புச்சாலையில் புதிய பீரங்கிகளை சீக்கிரமாய்ச் செய்துவிடும் சாதகத்தைப் பெற்றிருந்தபடியாலும் குண்டுகளை தேவையான அளவு செய்து ஒழுங்காய்ப் போர்க்களத்தில் சேர்ப்பித்ததாலும் ஜெர்மன் பீரங்கிகளின் வன்மை மேம்பட்டிருந்தது. ஆனல் யுத்தந் தொடங்கிய பிறகு, ஷ்ரான்ஸிலும் இங்கிலாந்திலும் புதிய பீரங்கிகளும் குண்டுகளும் செய்யப்பட்டுவந்தன. நேசப்படைகள் தங்கள் பீரங்கி வன்மையை அதிகரித்துக்கொண்டு வந்தார்கள். மழைகாலத்தில் பெரிய ஜெர்மன் பீரங்கிகளைபோர்க்களத்தில் இழுத்துக்கொண்டுபோகமுடியாது. மேலும், பூமி சேறும் சகுதியுமாயிருந்தால் பெரிய பீரங்கிகளிலிருந்து சுடப்படுகிற குண்டி தரையில் விழுந்து சரியாய் வெடிக்காதாகையால் அது பாதிவேகத்தையும் இழந்துவிடும்.

இப்போது, இரண்டு கக்ஷிகளின் ராணுவபலத்தை கவனிக்கவேண்டும். ஆகஸ்ட் 22-ந்தேதி 100 ஜெர்மன் டிவிஷன்களும்75 பிரஞ்சு டிவிஷன்களும் யுத்த மண்டலத்தில் சண்டை செய்தன. அதற்கடுத்த 15 தினங்களில் பிரிட்டிஷ் சேனை யுத்தத்தில் கலந்துகொண்டதாலும் பிரஞ்சு மூலபலங்கள் திரட்டப்பட்டதாலும், நேசச் சேனையில் 95 டிவிஷன்களிருந்தன. அந்த 15 தினங்களில் ஜெர்மன் சேனையில் 80 டிவிஷன்கள் தானிருந்தன. ஏனெனில் சில ஜெர்மன் படைகள் ருஷிய எல்லைக்குச்சென்றன ; வேறு சில ஜெர்மன் படைகள் பெல்ஜிய தேசத்தையும் பெல்ஜிய சேனையையும் ஆண்ட்வர்ப்கோட்டைகளையும் அடக்கிவைக்கத் தேவையாயிருந்தன ; வேறு சில ஜெர்மன்படைகள் பெல்ஜியத்திலிருந்து பாரிஸுக்குச் செல்கிற பாதைகளைக் காக்கத் தேவையாயிருந்தன. ஆகையால் மார்ன் நதிச் சண்டையில், ஜெர்மானியர் 80 டிவிஷன்களையும், நேசக் கக்ஷி 95 டிவிஷன்களையும் பெற்றிருந்தார்கள். ஆகையால் ஜெர்மன் சேனை பாரிஸுக்கருகில் சண்டைசெய்தபோது தொகையில் குறைவாயிருந்தது. அந்த சண்டையில் போர்முனையெங்கும் ஆயுதபாணிகளாய்ச் சண்டைசெய்தவர்களின் மொத்தத் தொகை 30 லக்ஷமிருக்கலாம்,

ஜேர்மானியரின் யுத்த நடவடிக்கையில் மாறுதல்.

இவ்வித காரணங்களால் ஜெர்மன்சேனை செப்டம்பர் 5-ந்தேதி யன்று பாரிஸுக்கருகில் வந்ததும் ஜெர்மானியரின் நோக்கம் மாறு பட்டது. ஜெர்மானியர் எய்ஸன் நதியிலிருந்து தெற்கே முன் சென்ற போது பாரிஸ்நகரத்தை முற்றுகைபோடும் எண்ணத்தைக் கைவிட் டார்கள். ஜெர்மானியர் எய்ஸன் நதிக்கரையில் தங்கிவிடலாமென்றும், அங்குவலுவான அரண்களைக்கட்டுவதற்கும் பெரியபீரங்கிகளை அமைப்பதற்கும் ஏழெட்டு தினங்களாவது ஆகும். அதுவரையில் அவர்கள் நேசத்துருப்புகளோடு சண்டை செய்து கொண்டிருக்க வேண்டும். ஆகையால் ஜெர்மன் சேனை மாரன் நதியை நோக்கிச் சென்று நேசப்படைகளுடன் சண்டை செய்வதாக நிச்சயித்தது. ஜெர்மன் சேனை தொகையில் குறைவாயிருந்த படியால் அதற்கேற்ற படி ஜெர்மானியரின் யுத்ததந்திரமும் மாற்றப்பட்டது. ஜெர்மன் சேனை எய்ஸன் நதிக்குத் தென் மேற்கிலுள்ள பாரிஸை நோக்கிமுன் செல்லவில்லை யென்பதை கவனிக்க வேண்டும். ஜெர்மன் சேனை பாரி ஸிலிருந்து தூரவிலகிக் கொண்டே தென் கிழக்காய் முன் சென்று மாரன் நதியைத் தாண்டிற்று. அப்போது ஜெர்மன் சேனையின் மத்தியபாகம் மிகுந்த பலங் கொண்டதாய் செய்யப்பட்டது. ஜெர்மானியரின் நோக்க மென்னவென்றால், ஜெர்மன் சேனையின் மத்திய பாகத்தை வலுப்படுத்தி, வர்டன் கோட்டைகளுக்குத் தெற் காய் மியூஸ் நதியோரமாய் முன்சென்று அங்கு பிரஞ்சுசேனையை இருதுண்டாகப் பிளக்து விடவேண்டு மென்பது. அவ்வாறு வர்டு னுக்குத் தெற்கே, பிரஞ்சுசேனை துண்டிக்கப் பட்டால் மியூஸ் நதிக் குக் கிழக்கே அல்ஸேஸ் மாகாணம் வரையில் ஒரு பாகமாகவும், மியூஸ் நதிக்கு மேற்கே பாரிஸ் வரையில் வேறொரு பாகமாகவும் பிரஞ்சு சேனை பிரிந்துபோகும். வர்டுனுக்கு அருகில் ஏராளமான ஜெர்மன் படைகள் குவிக்கப்பட்டதால் பாரிஸுக் கருகில், ஜெனரல் வான்கிளக் செலுத்திய ஜெர்மன் படைகள் தொகையில் குறைந்து போய் பலஹீன மடைந்தன. வர்டன் பிரதேசத்தில் பிரஞ்சு சேனையைப் பிளந்துவிடுவதற்குக்கூட ஜெர்மன் சேனை போது மான பலத்தைப் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாய் விளங் கும். ஆயினும் ஜெர்மானியர் மிகவும் தணிகரமாய் அம்முயற்சி யைச் செய்யத்தொடங்கினர்கள். ஜெர்மன் சேனை தொகையில்

குறைவாயிருந்தபோதிலும், அது எய்ஸன் நதியில் தங்கிவிடுவதற்கு முன்னால், ஒரு புது முயற்சி செய்து பார்க்கலாமென்று ஜெர்மன் யுத்த தந்திரிகள் நினைத்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. பாரிஸுக்கருகில் வலுவாய் நிலைபெற்றிருக்கக்கூடிய பிரதேசம் எய்ஸன் நதிக்கரையேயாகும். அந்நதி பாரிஸ் நகரத்திலிருந்து 40 மைல் தூரத்திலிருக்கிறது; பாரிஸ்கோட்டைகளிலிருந்து 30 மைல் தூரத்திலிருக்கிறது. பாரிஸுக்குக் கிழக்கிலுள்ள மாரன் நதிக்கரையில் ஜெர்மன் சேனை நிலைபெற்றிருக்கமுடியாது; பாரிஸ் கோட்டைகள் முற்றுகையிடப்படாத வரையில் மாரன்நதியில் நிலைபெறுவது சாத்தியமல்ல.

ஜெர்மன் சேனை பிரஞ்சு எல்லையிலிருந்து புறப்பட்டு 13 தினங்களுக்குள்ளாக பாரிஸ் வரையிலும் விரைவாய் முன்சென்ற பிறகு, பாரிஸைத்தாக்காமலும் பிரஞ்சு சேனையை முறியடிக்காமலும் எவ்வித கோக்கத்தையும் நிறைவேற்றாமல், பாரிஸிலிருந்து 40 மைலுக்கிப்பால் சும்மாதங்கிவிட ஜெர்மன் யுத்த தந்திரிகளுக்கு மனம்வரவில்லை. ஜெர்மன் யுத்த தந்திரிகள் தங்கள்சேனை தொகையில் குறைவுபட்டிருந்தாலும், நேசத்துருப்புகளும் கூடித்துப் போயிருப்பார்களென்று எண்ணினார்கள். பிரிட்டிஷ் சேனை 150 மைல் தூரம் சண்டைசெய்து பின்வாங்கியபடியால் கூடித்துப்போயிருக்குமென்றும், பிரஞ்சுசேனை எவ்விதவெற்றியுமடையாமல் மனச்சோர்வடைந்திருக்குமென்றும் ஜெர்மானியர் எண்ணினார்கள். ஆகையால் பிரஞ்சு சேனையை முறியடிப்பதற்கு கடைசியாய் ஒரு முயற்சி செய்து பார்க்கலாமென்று ஜெர்மானியர் நினைத்தார்கள். அவ்வாறு ஜெர்மானியர் அவசரமாய்ச்செய்த முயற்சி ஆபத்தாய் முடிந்ததென்பது பின்னால் தெரியவரும்.

ஜெர்மானியர் மாரன் நதியில் தங்கள் யுத்த தந்திரத்தைமாற்றிக்கொண்டதற்கேற்றபடி ஜெர்மன் சேனை செப்டம்பர் 3-ந்தேதி எய்ஸன் நதியைத்தாண்டி முன்சென்றது; அதன் மத்தியபாகம் வர்டுன் பிரதேசத்தில் முன்சென்று பிரஞ்சு சேனையைப் பிளந்துவிட வேண்டுமென்று நோக்கங்கொண்டது. பாரிஸுக்குக் கிழக்கிலிருந்த ஜெனரல் வான்கிளக் தமதுபடைகளைமத்தியபாகத்துப்படைகளோடு ஒழுங்கான வரிசையில் செலுத்தி, பாரிஸிலிருந்து இளம்பக்கூடிய பிரஞ்சு துருப்புகளால் தாம் அழிந்துபோகாமல் காத்துக்கொள்ளும்

நோக்கத்துடன் இருந்தார். ஜெனரல் வான்கிளக் பாரிஸுக்குக் கிழக்கில் மாரன் நதியைத்தாண்டியபோது அங்கு வலுவான பின்படைகளை வைத்துவிட்டு முன்சென்றார். பாரிஸ் நகரத்துக்கு 30 மைல் கிழக்கில் அவர்க் என்ற நதி மாரன் நதியோடு சேர்கிறது. அந்த அவர்க் நதியில் வலுவான பின் படைகளை வைத்துவிட்டு ஜெனரல் வான் கிளக் மாரன் நதியைத்தாண்டி விரைவாய் முன் சென்றார்.

பிரஞ்சு சேனாதிபதியின் யுத்த தந்திரம்.

பிரஞ்சு சேனாதிபதியின் நோக்கத்தை விளக்குவோம். யுத்த ஆரம்பத்திலிருந்தே வர்டென் பிரதேசத்தின் பிரதான்யம் தெளிவாய் விளங்கியிருக்கும். வர்டுனுக்குத்தெற்கில் வலுவானபிரஞ்சு கோட்டைகளையும் மியூஸ் நதியையும் ஆதாரமாகக் கொண்டு சண்டை செய்த 2-வது பிரஞ்சு சேனையும் 1-வது பிரஞ்சு சேனையும் ஜெர்மானியரை தடுத்து நின்று பின்வாங்காமலிருந்தன. ஆனால் வர்டுனுக்குவடக்கில் பெல்ஜிய எல்லைப்புற முழுவதிலும் விஸ்தாரமாய் நின்று சண்டைசெய்த பிரஞ்சு பிரிட்டிஷ் படைகள் யாவும் பல மான ஸ்தலங்களின் ஆதரவு இல்லாதபடியால் ஜெர்மானியரைத் தடுத்து நிற்க முடியாமல் பின் வாங்கின. அவ்வாறு பின் வாங்கிய அந்த பிரஞ்சு பிரிட்டிஷ் படைகள் பாரிஸுக்குக் கிழக்கில் வந்த பிறகு, பாரிஸ் கோட்டைகளின் ஆதரவைப் பெற்றுவிட்டன. நேசப் படைகளின் பக்கவாட்டில் அவ்வாறு கோட்டைகளி லிருந்தால், ஜெர்மானியர் அப்படைகளைப் பக்கவாட்டில் தாக்கமுயற்சிசெய்யும் போது அந்த கோட்டைகளைச் சுற்றிக் கொண்டு செல்லவேண்டும். கோட்டைகளைச் சுற்றிக்கொண்டு செல்வதற்கு ஏராளமான படைகள் தேவையாயிருக்கு மாகையால் அவ்வாறு செய்வது சாமான்ய காரிய மல்ல. ஆகையால் பாரிஸைக் கருகிலிருந்த நேசப்படைகளை ஜெர் மானியர் பக்கவாட்டில் சென்று தாக்க முடியாதென்பதை கவனிக்க வேண்டும். ஆகையால் நேசப்படைகள் மேற்குக் கோடியில் பாரிஸ் கோட்டைகளையும் கிழக்குக் கோடியில் வர்டென் கோட்டைகளையும் ஆதாரவாக வைத்துக் கொண்டு பக்தோபஸ்தாய் நிலைபெற்ற பிறகு, ஜெர்மானியரை முறியடிப்பதற்கு புதிய யோசனை செய்யப் பட்டது. ஜெனரல் வான்கிளக் மாரன் நதியைத்தாண்டிச்சென்றுதெற்கில் சண்டைசெய்து கொண்டிருக்கும்போது அவருக்குப்பின்னல் அவர்க்நதி

யில் காவல் செய்துவந்த ஜெர்மன் படைகளைத் தாக்குவதற்கு 6வது பிரஞ்சு சேனை தயாராயிருந்தது. ஜெனரல் வான்கிளக்கினுடைய பின்புறத்து வழிகளை வசப்படுத்தவேண்டு மென்று பிரஞ்சு சேனாதிபதி நோக்கங் கொண்டார். பிரஞ்சு சேனாதிபதியின் நோக்கம், பாரிஸுக்குக் கருகிலுள்ள ஜெர்மன் படைகளை மூறியடிக்க வேண்டு மென்பது; ஜெர்மன் சேனாதிபதியின் நோக்கம் வர்டுனுக்குத் தெற்கிலுள்ள பிரஞ்சு படைகளை மூறியடிக்க வேண்டுமென்பது. பாரிஸுக்குக் கருகிலிருந்த ஜெர்மன் படைகள் தோல்வியடையுமா அல்லது வர்டுனுக்குத்தெற்கிலிருந்த பிரஞ்சுபடைகள் தோல்வியடையுமா என்பதுதான் முக்கிய பிரச்னை. வர்டுனில் வலுவான கோட்டைகளிருப்பதால் அங்குள்ள பிரஞ்சு படைகள் தோல்வியடைவதற்குள்ளாக, பாரிஸுக்குக் கருகில் எவ்வித ஆதரவு மில்லாமலிருந்த ஜெர்மன் படைகள் தோல்வியடையு மென்பது நிச்சயம். அவ்வாறே அங்கு நடந்த சண்டைகள் முடிவுபெற்றன.

மாரன் நதிச் சண்டையின் விவரம்.

ஜெனரல் வான்கிளக் மாரன் நதியைத் தாண்டி முன் சென்ற போது, அவருக்குத் தென்மேற்கில் பிரிட்டிஷ் சேனையும் தென் கிழக்கில் 5-வது பிரஞ்சு சேனையு மிருந்தன. அவர் பிரிட்டிஷ் சேனைக்கு முன்னுல் இரண்டு குதிரைப்படைகளை காவலாக வைத்து விட்டு மற்ற ஜெர்மன் படைகளை யெல்லாம் தென் கிழக்காய் செலுத்தி 5-வது பிரஞ்சு சேனையின்மீது விழுந்து தாக்கினர். (618-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்க.)

அவர் பிரிட்டிஷ்சேனை முழுவதையும் எதிர்ப்பதற்கு இரண்டு குதிரைப்படைகளை அனுப்பிவிட்டு அலக்ஷியமாய் முன்சென்றதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. மூன்றுபக்கங்களிலும் மூன்று வலுவான சேனைகளால் சூழப்பட்டிருந்தபோது அவர் முன் செல்லத் தொடங்கியதின் காரணம் இன்றைக்கும் செவ்வையாய் விளங்கவில்லை. அவருக்குப் பின்புறத்தில் 6வது பிரஞ்சுசேனையும், பக்கவாட்டில் பிரிட்டிஷ் சேனையும், முன்புறத்தில் 5வது பிரஞ்சு சேனையும் போர்வீரக்கத் தயாராயிருந்த போது, எப்படிப்பட்ட சேனாதிபதியானும், பக்க வாட்டில் காத்துக் கொள்ளாமல் முன் செல்வது சாத்தியமல்ல. அவர் தமக்குப் பின் புறத்தில் காப்பதற்கு அவர்க்

நதிக் கரையில் காவற்படைகளை வைத்தாராயினும், மற்ற படைகளைக் கொண்டு முன் புறத்தில் தாக்கச் சென்றபோது அவருக்குப் பக்கவாட்டிலிருந்த பிரிட்டிஷ் சேனையைத் தடுப்பதற்கு மட்டும் அவர் எவ்வித பந்தோபஸ்தும் செய்யவில்லை.

செப்டம்பர் 6-ந்தேதி பிரிட்டிஷ் படைகள் முன் சென்று ஜெர்மன் படைகளின் பக்கவாட்டில் தாக்கின. அன்றினம் அவர்க் நதிக்கரையி லிருந்த ஜெர்மன் படைகளை 6-வது பிரஞ்சு சேனை தாக்கிற்று. அவ்வாறு பிரிட்டிஷ் படைகளும் பிரஞ்சு படைகளும் ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்கியபோது ஜெனரல் வான்கிளக் தம் மூடைய அபாய நிலைமையை அறிந்தார். அவர்க் நதிக்கரையில் நடந்த சண்டைதான் மிகவும் உக்கிரமா யிருந்தது. அங்கு தாக்கச் சென்ற 6-வது பிரஞ்சு சேனைக்கு ஜெனரல் பா தலைமை வகித்தார். அங்கு 6-வது பிரஞ்சு சேனை வெற்றியடைந்து அவர்க் நதியையும் மாரன் நதியையும் வசப்படுத்திக்கொண்டால் ஜெனரல் வான் கிளக்கினுடைய மற்ற படைகள் பின்வாங்கிச்செல்ல வழியில்லாமற் போய்விடும். அதனால் அவர்க் நதிக்கரையில் இருந்த ஜெர்மன் படைகள் மிகுந்த பிடிவாதத்துடன் சண்டைசெய்தன. அவைகளின் வன்மையை நம்பித்தான் ஜெனரல் வான்கிளக் முன்புறஞ்சென்று 5-வது பிரஞ்சு சேனையைத்தாக்கிக்கொண் டிருந்தார். அவர்க் நதிக்கரையில் மொத்தம் 5-ஜெர்மன் டிவிஷன்களிருந்தன ; அவைகளை 6-வது பிரஞ்சு சேனையிலிருந்த 7-டிவிஷன்கள் தாக்கின. அந்நதிக்கு மேற்குக் கரையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஜெர்மன் துருப்புகள் நிலைபெற்று சண்டைசெய்தார்கள். கிராமங் கிராமமாய்த் தாக்கி பிரஞ்சு படைகள் வசப்படுத்திக்கொண்டன. 6, 7, 8-ந்தேதி இம்மூன்று தினங்களாக அவர்க் நதிக் கரையில் இரண்டு கக்ஷிகளும் அளவற்ற சௌரியங் காட்டி போர் செய்து வெற்றியும் தோல்வியும் மாறிமாறி அடைந்ததால் எவ்வித முடிவான பலனும் உண்டாகவில்லை. 8-ந் தேதிக்குள்ளாக பிரிட்டிஷ் சேனையும் அதற்கு வலது பக்கத்திலிருந்த 5-வது பிரஞ்சுசேனையும் ஜெர்மன் படைகளைப் பின் தள்ளி மாரன் நதிக்குத் தெற்கில் நிலை பெற்றன. வர்டின் பிரதேசத்தில் நடந்து கொண்டிருந்த சண்டையின் பலனை அச்சமயம் ஜெனரல் வான் கிளக் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

வர்டுன் பிரதேசத்தில் ஜெர்மானியரின் முக்கிய பிரயத்தனம் என்னவாயிற்று? 8-ந் தேதி யன்று வர்டுன் பிரதேசத்தில் ஜெர்மன் படைகள் 3-வது பிரஞ்சு சேனையைப் பின் தள்ளிச் சென்றது. வர்டுனுக்குத் தெற்கிலுள்ள டிராயன் என்ற ஸ்தலத்துக் கோட்டையை ஜெர்மானியர் பெரிய பீரங்கிகளைக் கொண்டு தகர்த்தார்கள். ஜெர்மானியரின் முக்கிய நோக்கம் இந்த பிரதேசத்தில் வெற்றி பெற்று வர்டுனுக்குத் தெற்கிலுள்ள மியூஸ் நதிக் கரையை வசப்படுத்திக் கொள்ளவேண்டு மென்பது. மியூஸ் நதிக்கரையி லிருந்த 3-வது பிரஞ்சு சேனை உக்கிரமாய்ச் சண்டை செய்து கொஞ்சங் கொஞ்சமாய் பின் வாங்கிச் சென்றது. டிராயன் கோட்டையில் 44 பிரஞ்சு துருப்புகளே உயிருடன் இருந்தார்கள்; அங்கு 4 பீரங்கிகளே உபயோகமுள்ளவையாயிருந்தன; அவ்வாறிருந்தும் 44 துருப்புகள் மிகுந்த பிடிவாதத்துடன் கோட்டையைக்காத்து ஜெர்மன் பீரங்கிகளின் உக்கிரமான தெருப்பைத் தாங்கிக்கொண்டிருந்தார்கள். இவ்விஷயம் முக்கியமானது. ஏனெனில் 9-தேதி யன்று ஜெனரல் வான்கிளக் மாரன் நதிக்குப் பின்வாங்கி மிகுந்த அபாய நிலைமையி லிருந்தார். அதற்குள்ளாக வர்டுன் பிரதேசத்தில் ஜெர்மன் படைகள் வெற்றி அடைந்தால் அந்த படைகளிற் சிலவற்றை ஜெனரல் வான்கிளக் உதவியாகப்பெற்றிருப்பார்.

ஜெனரல் வான்கிளக் பின்வாங்கினார்.

அவர் துணைப்படைகளைப் பெற்றால் மாரன் நதிக்கரையில் நிலை பெற்று பெரும்போர் வினைக்கலாம். ஆனல், வர்டுன் பிரதேசத்தில் 9-ந்தேதிக்குள்ளாக ஜெர்மன் படைகள் வெற்றி அடையவில்லை. அதனல் ஜெனரல் வான்கிளக் தமக்குத் துணைப்படைகள் கிடைக்கா வென்று அறிந்து எய்ஸன் நதிக்குப் பின்வாங்கிச் செல்லத் தீர்மானித்துவிட்டார். ஜெனரல் வான்கிளக் தமது படைகளையும் பீரங்கிகளையும் தளவாடங்களையும் எய்ஸன் நதியில் பத்தேர்பஸ்தாய்ச் சேர்ப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளே யெல்லாம் 9,10-ந்தேதிகளில் செய்து முடித்தார். அவர் பின் வாங்கிச் செல்லும்போது, தம்மை நேசப்படைகள் தாக்காமலிருப்பதற்காக, சில புதிய படைகளை அவர்க் நதியிலும் மாரன் நதியிலும் காவலாக அனுப்பினர். 9, 10-ந்தேதிகளில், அவர்க் நதியிலும் மாரன் நதியிலும் உக்கிரமான சண்டை ஓயாமல் நடந்தது. இரண்டு கரைப் பிரங்கி

களின் அதிர்ச்சிக்கும் கெருப்புக்கு மிடையே காலாட்படைகள் விபக்கத்தக்க பிடிவாதத்துடன் சண்டை செய்தன. அந்நதிகளில் காவலாயி நந்த ஜெர்மன் பின்படைகள் சேதத்தை லக்ஷியஞ் செய்யாமல் கடும்போர் புரிந்து கேசப்படைகளை முன்செல்ல விடாமல் தடுத்தன. 11-ந்தேதி காலை கேசத்துருப்புகள் அவ்விரண்டு நதிகளிலும் மறுபடியும் தாக்கச் சென்றபோது, அந்த பிரதேச முழுவதும் காலியாயி நந்தது. ஏனெனில் அன்றினம் ஜெனரல் வான்கிளக் எய்ஸன் நதிக்கரையில் பந்தோபஸ்தாய் நிலைபெற்றிருந்தார்.

ஆவர் தமது படைகளை யெல்லாம் 9-ந்தேதியி லிருந்தே பின் புறஞ் செலுத்திக்கொண் டிருந்தார். பெரிய பீரங்கிகளெல்லாம் மோட்டார் வண்டியில் விரைவாய் கொண்டுபோகப்பட்டன. துருப்புகளும் தளவாடங்களும் மோட்டார் வண்டிகளில் ஏற்றி அனுப்பப் பட்டன. மறுதினம் 10-ந்தேதி மழை கடுமையாய்ப் பெய்தது. இரண்டு தினத்துக்குள் (10-ந்தேதிக்குள்) ஜெனரல் வான்கிளக் தமது படைகளை எய்ஸன் நதியில் தயார் செய்யப்பட் டிருந்த அணைகளில் நிலைபெறச் செய்தார். அவர் 10-ந்தேதி எய்ஸன் நதிக்குச் சென்றுவிட்டவுடன் அன்று தினமே அவர்க் நதிக் கரையில் சண்டை செய்துகொண் டிருந்த ஜெர்மன் படைகள் எய்ஸன் நதிக்குப் பின் வாங்கின. ஆனால் மாரன் நதிக்கரையி லிருந்த ஜெர்மன் பின்படைகள் மட்டும் பின்வாங்கினபோது, பிரிட்டிஷ் பிரஞ்சு குதிரைப் படைகளால் உக்கிரமாய் தாக்கப்பட்டு மிகுந்த சேத மடைந்தன. அவைகள் பீரங்கிகளையும் தளவாடங்களையும் கைவிட்டுப் பின்னடைந்தன. 13 ஜெர்மன் பீரங்கிகளும், 2000 ஜெர்மன் துருப்புகளும் ஏராளமான தளவாடங்களும் பிடிக்கப் பட்டன. கேசப்படைகள் எய்ஸன் நதிக்குச் சென்று அங்கு ஜெர்மானியரைத் தாக்க ஆரம்பித்த போது, ஜெர்மன் பீரங்கிகள் உக்கிரமாய் கெருப்பைப் பொழிந்தன. ஆகையால் எய்ஸன் நதியில் ஜெர்மானியர் வலுவாய் நிலைபெற்று விட்டார்களென்று தெரியவந்தது. 11-ந்தேதியோடு மாரன் நதிச்சண்டைமுடிந்தது. ஜெனரல் வான்கிளக் எய்ஸன் நதிக்குப் பின்னடைந்தபோது, மற்ற ஜெர்மன் சேனுபதிகளும் வரிசைக் கிரமமாய்ப் பின்னடைந் தார்கள்.

சண்டையின் பலன்கள்.

ஜெர்மன் சேனை ஒழுங்கான நிலைமையில் 40 மைல் தூரம் பின் வாங்கி நிலை பெற்ற போதிலும், அதனால் வியடைந்த தென்ற அபக்கியாதியைப் பெற்றுவிட்டது. ஜெர்மன் சேனை பாரிஸுக்கருகில் வராமல் செப்டம்பர் 3-ந்தேதியே எய்ஸன் நதியில் நிலை பெற் றிருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அங்கு வலுவான அரண்களைக் கட்டி முடிப்பதற்குள்ளாக அசாத்தியமான காரியத்தைச் செய்து பார்க்கலாமென்று ஜெர்மன் யுத்ததந்திரிகள் பரிக்ஷை செய்தார்கள். மாரன் நதிச் சண்டையில் அந்த பரிக்ஷை பலிக்காமல் ஜெர்மன் சேனை தோல்வி யடைந்து, தானிருக்கவேண்டிய இடத்தில் நிலை பெற்ற போது, ராணுவ நோக்கத்தின்படி ஜெர்மானியருக்கு எவ்விதபாதக மும் உண்டாகவில்லை யாயினும், தோல்வி யடைந்த அபக்கியாதியால் ஜெர்மன் துருப்புகளும் ஜனங்களும் மன உறுதியையும் உற்சாகத்தையும் இழந்துபோனார்கள். நேசப் படைகள் தாங்கள் ஜெர்மன் வெள்ளத்தைத் தடுத்துப் பின் தள்ளிவிட்டதால் தங்கள் வன்மையிலும் திறமையிலும் முழு நம்பிக்கை அடைந்தன. யுத்தந் தொடங்கியபோது, அல்ஸேஸ் மாகாணத்தில் ஜெனரல் பாதமது பிரஞ்சு படைகளைச் செலுத்தி வெற்றியடைந்தபோது ஜெர்மன் படைகள் எளிதாய் வெல்லப்படக் கூடியவை யென்று காட்டினர். மறுபடியும் ஜெனரல் பா, கீஸ் நகரத்தில் ஜெர்மன் படைகளை முறியடித்து பிரஞ்சு துருப்புகளின் போர்த்திறமையைக் காட்டினர். பிரிட்டிஷ் சேனை மான்ஸ் நகரத்தி லிருந்து பின் வாங்கிய போது, அதை நசுக்கிவிடவேண்டு மென்று ஜெர்மானியர் செய்த பிரமாதமான முயற்சிகளெல்லாம் சற்றும் பயன்படாமற் போயின. அப்போது பிரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மன் துருப்புகளைவிட அதிக வன்மையும் திறமையும் பெற்றிருந்தார்க ளென்று தெரியவந்தது. அவ்வாறு மான்ஸ் நகரத்திலிருந்து துரத்தப்பட்ட பிரிட்டிஷ் துருப்புகள் மாரன் நதியில் ஜெர்மன் துருப்புகளைத் துரத்திப் பழிவாங்கினர்கள்.


8-வது அத்தியாயம்.

எய்ஸ்ன் நதிச் சண்டைகளும் நேசக்கக்ஷியின் நடவடிக்கைகளும்.

ஜெர்மன்வெள்ளம் எய்ஸன் நதிக்கரையில் தடுக்கப்பட்டபோதி லும், அது இன்னும் வடிந்துவிடவில்லை. எய்ஸன் நதிக்கரையிலிருந்த ஜெர்மானியர் மறுபடியும் நேசப்படைகளின்மேல் விழுந்து தாக்கி னர்கள்.

ஜெர்மானியர் செப்டம்பர் மாதம் 6-ந்தேதியிலிருந்து நேசப் படைகளால் தாக்கித்துரத்தப்பட்டாலும், 10 தினங்களுக்குள்நேசப் படைகளை எய்ஸன் நதிக்கரையில் தடுத்து நிறுத்திவைத்தார்கள், நேசப்படைகளின் மேல் விழுந்து தாக்கவும் ஆரம்பித்தார்கள். ஜெர்மானியர் எய்ஸன் நதிக்குச்சென்றவுடன் ஏராளமான பெரிய பீரங்கிகளை நல்ல மறை விடங்களிலிருந்து உபயோகித்ததைப் பார்த் தால், அவர்கள் அந்த ஸ்தலங்களை முன்னதாகவே தயார்செய்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. யுத்தம் தொடங்கி 40 தினங் களுக்குள்ளாக ஜெர்மன் மூல பலங்கள் சகல ஆயுதங்களையும் தள வாடங்களையும் பெற்று படைகளாகச் சேர்க்கப்பட்டு எய்ஸன் நதிக் கரைக்கு வந்து சேர்ந்தன. ஆகையால் ஜெர்மானியர் செப்டம்பர் 15-ந்தேதிக்குப்பிறகு நேசக்கக்ஷியாரை வலுவில்தாக்க ஆரம்பித்தார் கள்.

செப்டம்பர் 12-ந்தேதிக்குப் பிறகு ஜெர்மன் சேனையின்வலது பாகத்துப் படைகள் (ஜெனரல் வான் கிளக் செலுத்திய படைகள்) எய்ஸன் நதிக்கரை போசமாய்ப் ரீம்ஸ் நகரத்துக்கு வடக்கிலுள்ள பிரதேசம் வரையில் வலுவாய் நிலைபெற்றன. ஜெர்மன் சேனையின் மத்தியபாகம் ரீம்ஸிலிருந்து வர்டுனுக்கு வடக்கிலும் கிழக்கிலு முள்ள பிரதேசம் வரையில் பரவியிருந்தது. இந்தமத்திய பாகத்தின் ஒரு முனை, வர்டுனுக்குத் தெற்கிலுள்ள ஸெண்ட்மிஹில் என்ற ஸ்தலத்தை மட்டும் வசத்தில் வைத்துக் கொண்டிருந்தது. ஜெர்மன் சேனையின் இடதுபாகம் லொரேன், அல்ஸேஸ் இவ்விரண்டு ஜெர் மன் மாகாணங்களில் மூன் போலவே நிலைபெற்றது.


இங்கிலீஷ்கடல்
ஆம்டன்வட்
ஹேக்
ஆம்ஸ்டர்டாம்
ரோட்டர்டாம்
ஆண்ட்வர்ப்
ப்ரூஸல்ஸ்
ஸோலைட்
ஸென்ட்ரூண்ட்
டோனே
ஸாம்ப்ரே
மியூஸ்
ஸாம்பிரே
ஸாம்பிரே
மியூஸ்
நாமூர்
ஸாம்பிரே
மியூஸ்
ஸாம்பிரே
மியூஸ்
நாமூர்
ஸாம்பிரே
மியூஸ்
நாமூர்
ஸாம்பிரே
மியூஸ்
நாமூர

எய்ஸன் நதிக்கரையில்தான் கடுமையான சண்டைகள் நடந்தன. நேசப்படைகள் எய்ஸன் நதியின் பாலங்களையும் வடக்குக் கரையையும் வசப்படுத்திக் கொண்டார்கள். பிரிட்டிஷ் சேனை எய்ஸன் நதிக்கரையில் காம்பேனி லிருந்து சாய்ஸன்ஸ் வரையில் நிலை பெற்றிருந்தது. வடக்குக் கரைக்கப்பால், ஜெர்மானியர் மிகுந்த பலங் கொண்ட ஸ்தலங்களில் நிலைபெற்றிருந்தார்கள். அந்தப் பிரதேசத்தில் சிறுகுன்றுகளும் பள்ளத்தாக்குகளும் நிரம்பியிருக்கின்றன. அங்கு, சமரதான காலத்தில் அநேக ஜெர்மானியர் பூமிகளை வாங்கிக் கொண்டு, குன்றுகளிலிருந்து கல் வெட்டி யெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஜெர்மன் பிரங்கிகளும் துருப்புகளும் மறைவாயும் பந்தோபஸ்தாயும் நிலைபெற்று சண்டை செய்வதற்கு குன்றுகளில் குடையப்பட்ட சிறு குகைகள் மிகவும் சௌகரிய மாயிருந்தன. குன்றுகளும் குகைகளும் பள்ளத்தாக்குகளும் காடுகளும் படிப்படியாய் உயர்ந்து ஒன்றின்மேலொன்றுப் அமைந்திருப்பதால் அந்த அமைப்புக்கு இயற்கையாயுள்ள வன்மை சாமான்யமல்ல. அங்கு ஜெர்மானியர் பெரிய முற்றுகை பிரங்கிகளையும், மற்ற கிணு சானபிரங்கிகளையும் வைத்து, மேட்டுப் பூமிகளிலும் பள்ளங்களிலும் அகழ்களைவெட்டி, முன்புறத்தில் இரும்புக்கம்பி வலையுங்கட்டி வலுப்படுத்திக்கொண்டார்கள். அவ்விதஸ்தலங்களே நேசப்படைகள் தாக்க முயன்றால் பெரிய முற்றுகைப் பிரங்கிகளும் குண்டுகளும் தேவையாயிருப்பதோடு, ஏராளமான உயிர்களையும் இழக்கும்படி நேரிடும். அவ்வாறுசெய்யாமல், நேசத்துருப்புகள், ஜெர்மானியரைப்பலவே, எய்ஸன் நதிக்குத் தென்கரையில் அகழ்களை வெட்டி அங்குலிலேபெற்றார்கள். ஜெர்மானியர் எய்ஸன் நதிக்குவடக்கில் மேட்டுப்பூமியிலிருந்துகொண்டு தங்கள் பெரிய முற்றுகைப் பிரங்கிகளை உபயோகித்து நேசப்படைகளின் இருப்பிடத்தைச் சேதப்படுத்தினார்கள். ஆகையால் நேசத்துருப்புகள் நாட்பட நிலைக்கும்படியாயும் ஜெர்மன் பிரங்கிகளால் சேதப்படாம லிருக்கும்படியாயும் மிகுந்த பலங்கொண்ட அரண்களைக் கட்டி அவைகளுக்குள் பந்தோபஸ்தாயும் மறைவாயும் இருந்து வந்தார்கள். பூமிக்கடியில் பெரிய சுரங்கம் போல குகைகள் தோண்டப்பட்டு அங்கு துருப்புகளும் குதிரைகளும் சதா காலமும் வாசஞ் செய்வதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டன. நேசத்துருப்புகள் அரண்களிலிருந்தபடியே முன்செல்ல

முயற்சிசெய்தார்கள். கோட்டையைப் பிடிக்கும்போதுதான் அவ்வித நடவடிக்கைகளை அனுசரிப்பது வழக்கம். ஆனல் ஜெர்மானிய ரின் இருப்பிடங்கள் சிறு கோட்டைகளைப்போலவே இயற்கையாய் அமைந்து பெரிய பீரங்கிகளால் காக்கப்பட்டிருந்தபடியால், நேசத்துருப்புகள் முற்றுகை காலத்து நடவடிக்கைகளை அனுசரிக்க வேண்டியிருந்தது. நேசத்துருப்புகள் தாங்களிருக்கும் அரணுக்கு முன்னுல் பள்ளந்தோண்டிக்கொண்டே சிறிது தூரம்சென்று அங்கு மற்றொரு அரணைக்கட்டினர்கள். இந்த அரணிலிருந்து மறுபடியும் முன்புறத்தில் பள்ளந் தோண்டிக்கொண்டு சென்று மற்றொரு அரணைக்கட்டி அங்கு துருப்புகள் நிலைபெற்றார்கள். (நான்காம் பாகத்தில் 390 பக்கத்திலுள்ள சித்திரப்படத்தை பார்க்கலாம்.) அவ் வாறே ஜெர்மன் துருப்புகளும் முன் செல்லத் தொடங்கியபடியால் இரண்டு கக்ஷியின் அரண்களும் 100 அல்லது 200 கெஜ தூரத்துக் கருகில் நெருங்கிவிட்டன. அதன்பிறகு எந்த கக்ஷித் துருப்பு களும் முன்செல்ல முடியாமல், ஒருவரை யொருவர் சுட்டுக் கொண்டு எவ்வித பலனு மடையாமல் கடுமையாய் சண்டை செய் வதே வழக்கமாகிவிட்டது. அந்த 100 அல்லது 200 கெஜ தூர முள்ள இடைவெளியில் ஓயாமல் துருப்புகள் கைகலந்து சண்டை செய்துமாண்டார்கள். அங்கு இறந்தும் காயம்பட்டும் விழுந்த இடத் தவர்களை அப்புறப்படுத்தாமல் இரண்டுகக்ஷியாரும் தங்கள் சத்துரு வின் நெருப்புக்கு அஞ்சி சும்மா இருந்துவிட்ட படியால் போர்க்கள மெங்கும் துர்நாற்றம் வீசும் பிணக்காடாய் மாறிப்போய் விட்டது.

இரவும் பகலும் பீரங்கிச் சண்டை.

அவ்வாறு இரண்டுகக்ஷித்துருப்புகளும் வலுவான அரண்களில் நிலைபெற்றபிறகு, பீரங்கியின் வன்மையால் அவைகளைச் சேதப்படுத் துவதைத் தவிர வேறெதுவுஞ்செய்வதற்கில்லை. ஜெர்மானியர் பகலும் இரவும் ஓயாமல் பெரிய முற்றுகை பீரங்கிகளைச் சுட்டு நேசப்படை களின் அரண்களைச் சேதப்படுத்த முயன்றார்கள். அந்த பீரங்கிச் சண்டைகள் நடந்தபோது உண்டான இடி சப்தமும் அதிர்ச்சியும் நெருப்பும் புகையும் எப்படிப்பட்ட தென்று சொல்லமுடியாது. அவ்வாறு நேசப்படைகளின் போர்மூண யெங்கும் பீரங்கிக ளால் தகர்க்கப்பட்டதால், நேசப்படைகள் இராக்காலத்தில் தான் நடமாடுவது சாத்தியமா யிருந்தது. ஆகாசம், வெடிமருந்து முதலி

யவைகளைக் கொண்டுபோவதும், அரண்களி லுள்ள துருப்புகளை இளைப்பாறும்படி விலகச் செய்வதும், புதிய துருப்புகளை அவ்விடங் களுக்கு அனுப்புவதும் இரவில்தான் நடத்தப்பட்டன. ஜெர்மானி யர் இரவினுங்கூட பிரங்கிகளை உபயோகித்தார்கள். ஜெர்மன் அரண் களிலிருந்து சோதனை விளக்குகள் வால் நக்ஷத்திரம்போல காலாபக் கங்களி லும் சுழன்றுகொண் டிருக்க, ஜெர்மன் பிரங்கிகளும் ஆகாய விமானங்களும் நெருப்புப்பந்தங்களை போர்க்களத்தின் மீது எறிந்து கொண் டிருக்க, அவைகளின் வெளிச்சத்தைக் கொண்டு குறிப் பாய்ப் பாய்ந்த ஜெர்மன் குண்டுகள் அரண்களைப் பெயர்த்து இருட் டையும் பிளந்தபோது, யுத்தத்தின் கோரமெல்லாம் சகிக்க முடி யாதபடி விளங்கிற்று.

பொழுது விடிந்ததும் திடீரென்று பிரங்கிகளின் சப்தம் மும் முரமாய் உண்டாகி, ஆகாயத்தில் பெரிய குண்டுகள் உரக்கக் கூவிக் கொண்டு வரவர அருகில் வந்து இடிவிழுந்தாற்போல அரண்களுக்கு முன்னால் சிதறியடித்தன. பெரிதாயும் பளுவாயுமுள்ள அந்த குண்டு ஆகாயத்தில் பெரிய வட்டமிட்டு வரவர அருகில் வந்தபோது அது பாய்ந்துவந்த வேகத்திலேயே அருகி லிருப்பவரை அறைந்து வீழ்த் திற்று. அந்த குண்டு ஆகாயத்தில் சீறிக்கொண்டு வந்தபோதே அரண்களிலுள்ள துருப்புகளும் காவல் செய்பவர்களும் பந்தோபஸ் தான இடங்களில் மறைந்துகொண்டார்கள். அக்குண்டு அரணுக்கு முன்னால் விழுந்து பயங்கரமான சப்தத்துடன் வெடித்து, கல்லையும் மண்ணையும் கனத்த புகையையும் சேர்த்துச் சுழற்றி ஆகாயத்தில் எறிந்தபோது, பெரிய பூகம்பம்போல பூமியும் காற்றும் அதிர்ந்து கொண் டிருந்தன. ஒரு நிமிஷங் கழித்து மற்றொரு குண்டும் அடுத்த நிமிஷத்தில் வேறொன்றுமாய் குண்டின் மேல் குண்டு நாள் முழுவதும் அரண்களில் விழுந்து, ஒவ்வொன்றும் ஒரு யானையைப் புதைக்கக் கூடிய அளவு பூமியைப் பிளந்து, துருப்புகளைக் கொன் றும் கொல்லாமலும் புதைத்துவிட்டது. அவ்வாறு ஜெர்மன் பிரங்கி கள் நேசப் படைகளின் அரண்களை அநேக மணிநேரம் கடுமை யாய் தாக்கதபிறகு, ஜெர்மன் துருப்புகள் முன்வந்து தாக்கின. ஜெர்மன் துருப்புகள் கூட்டங் கூட்டமாய் அணிவகுத்து கூக்குர லிட்டுக்கொண்டு நேசத்துருப்புகளின் அரண்களுக்கு கருகில் வந்த வுடன், நேசத்துருப்புகள் தங்கள் துப்பாக்கிகளை ஏக காலத்தில்

சுட்டு நெருப்புமயமாய் திசைபோட்டுத் தடுத்தார்கள்; அரண்களின் மூலையிலிருந்து மெஷின் பீரங்கிகள் ரவைகளை விசைவாய்ச்சுட்டு ஜெர்மன் கூட்டங்களைக் குடைந்து கொண்டிருந்தன. உயிர்ச்சேதத்தை லக்ஷியஞ்செய்யாமல் ஜெர்மன் துருப்புகள் மேன்மேலும் வந்து குவியவே, பிரிட்டிஷ் பீரங்கிகள் ரவைகளை வீசி முன்புற முழுவதையும் பெருக்கி பிணங்களாகக் குவித்தன. உடனே ஜெர்மன் துருப்புகள் விசாலமாய் விலகி அரண்களுக் கருகில் வந்ததும், முதல் வரிசையிலுள்ள நேசத்துருப்புகள் துப்பாக்கி முனையிட்டியால் சுவரெடுத்தாற்போல நின்று ஜெர்மானியரைத்தாக்க, பின் வரிசைகள் ரவைகளைப் பொழிந்துகொண் டிருந்தன. அவ்வாறு அரண்களில் உக்கிரமானசண்டைநடக்கத்தொடங்கியதும், நேசத் துருப்புகளுக்குத் துணைப்படைகள் வந்து உதவிசெய்து ஜெர்மானியரைப் பின் தள்ளின. ஜெர்மானியர் மிகுந்த சேதத்துடன் பின்வாங்கிச் சென்றார்கள். ஜெர்மானியர் தங்கள் முற்றுகைப் பீரங்கிகளால் நேசத் துருப்புகளின் அரண்களை, முக்கியமாய் பிரிட்டிஷ் துருப்புகளின் இருப்பிடங்களை எவ்வளவு கடுமையாய்த் தகர்த்தபோதிலும் நேசத் துருப்புகள் சற்றுங்கலக்கமடையாமல் தங்கள் அரண்களிலிருந்து கொண்டு தங்களைத் தாக்க வந்த ஜெர்மானியரை ஒழுங்காய்க் குறிபார்த்து நிதானமாய்ச் சுட்டு வீழ்த்தியதைக்கண்டு ஜெர்மானியரே ஆச்சரியமடைந்தார்கள். பிரங்கிகளால் அரண்களைத் தகர்ப்பதின் நோக்கமென்னவென்றால், அவ்வரண்களிலுள்ள துருப்புகள் குண்டுகளின் நெருப்பைத் தாங்கமுடியாமல் தேகமும் மனமும் அதிர்ச்சியடைந்து தங்களைத்தாக்க வருகிற சத்துருக்களோடு செவ்வையாய் சண்டை செய்யமாட்டார்களென்பதே. அவ்வாறில்லாமல் நேசத்துருப்புகள் எவ்வளவு சேதமடைந்தபோதிலும் மிகுந்த பிடிவாதத்துடன் ஜெர்மானியரை எதிர்த்து பின்தள்ளிவந்தார்கள். பிறகு இங்கிலாந்திலிருந்து பெரியமுற்றுகை பீரங்கிகள் (6 அங்குல ஹவிட்ஸர் பீரங்கிகள்) தருவிக்கப்பட்டு, பிரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மானியரின் அரண்களைத் தகர்த்தார்கள். ஜெர்மன் துருப்புகள் நேசப் படைகளின் அரண்களைப் பிடிப்பதற்காக அடிக்கடி முன்வந்து தாக்கியதால் அதிகஉயிர்ச்சேதமடைந்தார்கள். நேசப்படைகள் அவ்வாறு அனுவசியமாய் உயிர்ச்சேதமடையாமலிருந்தார்கள். மேலும் நேசத்துருப்புகள் விஸ்தாரமாய் அரண்களைக் கட்டி, அவைகளில்


விஸ்தாரமாய் நிலைபெற்றிருந்ததால், அங்கு ஜெர்மன்குண்டுகள் வந்து விழுந்தபோது அவர்கள் அதிகமாய்ச் சேத மடையவில்லை.

பிரஞ்சு சேனாதிபதியின் புதிய நடவடிக்கைகள்.

நேசப்படைகள் மாரன் நதியில் செப்டம்பர் 6-ந் தேதி ஜெர்மானியரைத்தாக்க ஆரம்பித்து, எய்ஸன் நதிவரையில் பின்வாங்கச் செய்த பிறகு அவைகளின் முன்னேற்றம் மேற் சொல்லியவாறு தடைப்பட்டு விட்டது. ஆகையால் பிரஞ்சு சேனாதிபதி யாகிய ஜெனரல் ஜாப்ரே புதியநடவடிக்கைகளைத் தொடங்கினர். ஜெனரல் ஜாப்ரே மாரன் நதிக்கரையில் ஜெர்மானியரோடு சண்டை செய்து அவர்களை பின்வாங்கச்செய்தபோது, ஜெர்மானியர் தங்களிடம் போதுமான துருப்புகளில்லாததால் பின்வாங்கினர்க ளென்பதை அவர் அறிந்துகொண்டார். செப்டம்பர் 15-ந்தேதிக்குப் பிறகு புதியஜெர்மன் துருப்புகள் சேர்க்கப் பட்டவுடன், அத் துருப்புகள் எய்ஸன் நதிக்கரைக்கு அனுப்பப்பட்டன. ஜெர்மானியர் புதிய துருப்புகளின் உதவியைக் கொண்டு ஆண்ட்வர்ப் கோட்டைகளைத் தாக்கி பெல்ஜிய சேனையை முறியடித்து வடக்கு பிரான்ஸை வசப்படுத்திக்கொண்டு பிறகு பாரிஸை நோக்கி மற்றொரு பிரயத்தனம் செய்யக்கூடுமென்று பிரஞ்சு சேனாதிபதி நினைத்தார். பிரஞ்சு சேனாதிபதி தம்மிடம் மூலபலங்களைத் தயாராய் வைத்துக்கொண்டிருந்ததால், ஜெர்மானியரின் மூலபலங்கள் முழுவதும் திரட்டப்படுவதற்கு முன்னதாக, அவர் ஜெர்மானியரை வலுவில் தாக்கத் தீர்மானித்தார். ஆனல் எய்ஸன் நதிக்கரையிலுள்ள ஜெர்மன் படைகளைப் பின்தள்ள முயற்சி செய்வதில் பயனில்லையென்று அவர் அறிந்தார். ஆகையால் பிரஞ்சு சேனாதிபதி, எய்ஸன் நதிக்கரையிலிருந்த ஜெர்மன் படைகளுக்குப் பக்கவாட்டிலிருந்து ஓடுகிற ஆய்ஸ்நதிக்கரையைத் தாக்க ஏற்பாடுசெய்தார். எய்ஸன் நதிக்கு மேற்கில் ஆய்ஸ்நதி ஓடுகிறது. எய்ஸன் நதிக்கரையிலிருந்த ஜெர்மன் படைகள் தங்களுடைய மேற்குக் கோடியில் ஆய்ஸ் நதியைக் காவலாக வைத்து நிலைபெற்றிருந்தன. அந்த ஜெர்மன் படைகள் லீஜ் நாமூர் இப்பட்டணங்களின் வழியாக எய்ஸன் பிரதேசத்துக்கு செல்கிற ரயில்பாதைகளையும் ரோட்டுகளையும் ஆதாரமாகக் கொண்டிருந்தன. அவ்வழியாகத்தான் எய்ஸன் நதிக்கரையிலிருந்த ஜெர்மன் படைகள் ஆகாரம் வெடிமருந்து முதலிய சாமான்களைப் பெற்றுக்கொண்டன. பிரஞ்சு சேனாதிபதியின் புதிய

யோசனை யென்னவென்றால், ஆய்ஸ் நதிக்கரையி லிருந்த ஜெர்மன் படைகளை வடகிழக்காய்த் தாக்கிக்கொண்டே சென்று லீஜ் நகரத்தி லிருந்து பிரான்ஸுக்கு வருகிற பாதைகளை வசப்படுத்திக்கொள் ளலாமென்பதாகும். நேசப்படைகள் அவ்வாறு வசப்படுத்திக் கொண்டால், எய்ஸன் நதிக்கரையிலுள்ள ஜெர்மன் படைகள் பின்வாங்கிச் செல்லும்படி நேரிடும். நேசப்படைகள் அவ்வாறு வடக்கு பெல்ஜியத்தை நோக்கி முன் சென்றால், ஆண்ட்வர்பி லுள்ள பெல்ஜிய சேனையோடு சேர்ந்துகொண்டு, பெல்ஜியத்தை மீட்டுக்கொள்ளலாம். இது சாத்தியமாகாமற் போனாலும் கூட, நேசப்படைகள் பெல்ஜியத்தை நோக்கி முன் சென்றால், அவைகளை எதிர்ப்பதற்கு புதிய ஜெர்மன் துருப்புகள் பிரான்ஸுக்கு அனுப்பப் படும்; அதனால் ருஷிய எல்லையில் சண்டை செய்கிற ஜெர்மன் சேனை அதிகரிக்காம லிருக்கும். ஜெர்மானியரின் ராணுவபலம் அழிந்து போக வேண்டுமானால் அது ருஷியரால்தான் ஆகவேண்டும். பிரான் லில் ஜெர்மன் சேனை வலுவான அரண்களில் நிலை பெற்ற படியால் அதை முறியடிப்பது சாமான்ய காரியமல்ல. ஆகையால் ருஷியரின் நடவடிக்கைகள் எளிதாய் நிறைவேறும்படி, பிரஞ்சு சேனை உதவி செய்ய வேண்டும். பிரஞ்சு மூலபலங்களும் பிரிட்டிஷ் மூலபலங்க ளும் சேர்க்கப்பட்டு யுத்தஞ்செய்யத்தயாராயிருந்தன. நேசத் துருப் புகள் எய்ஸன் நதியிலுள்ள ஜெர்மன் அரண்களைத் தாக்கிச் சண்டை செய்தால், வீணை உயிர்ச்சேதமடைந்து எவ்வித பலனையும் அடை யாமற் போகலாம். ஆகையால் அவர்கள் ஜெர்மானியரை முன்பு அவர்க் நதியில் தாக்கினதுபோல மறுபடியும் ஆய்ஸ் நதியில் தாக்கலாமென்று எண்ணினர். தவிர, நேசப் படைகள் பிரான்ஸின் வடபாகத்தை தாமலமின்றி வசப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமென்றுதெரியவந்தது. ஏனெனில் ஜெர்மானியர் தங்கள்மூல பலங்களை விரைவாய்த்திரட்ட ஆரம்பித்தபடியால், அவர்கள் பிரான் ஸின் வடபாகத்தை வசப்படுத்த முயல்வார்கள். ஜெர்மானியர் அவ் வாறு முயற்சி செய்வதற்கு முன்னதாக, நேசப்படைகள் அந்த பிர தேசத்தை வசப்படுத்திக் கொள்ளவேண்டும். வடக்கு பிரான்ஸில் பெரிய தொழிற் சாலைகளையுடைய நகரங்கள் அநேகமிருக்கின்றன. லில்லியென்ற நகரத்தில் ரயில் எஞ்ஜின்களும் மோட்டார் வண்டிகளும் செய்வதற்கு அநேக யந்திரசாலைகளிருக்கின்றன. அந்த நகரத்தை ஜெர்மானியர் வசப்படுத்திக் கொண்டால் அவர்கள் அநேக சாதகங்

களை அடைவார்கள். மேலும், வடக்கு பிரான்ஸின் கட்டற்கரையில் முக்கிய துறைமுகங்களிருக்கின்றன. கலே, பெலோன் முதலிய துறைமுகப்பட்டணங் களோடு பிரிட்டிஷார் கப்பல்போக்கு வரத்து செய்து வருகிறார்கள். அவைகளை ஜெர்மானியர் வசப்படுத்திக் கொள்ளாமல் தடுக்கப்படவேண்டும். ஆகையால் அவர் மேற் சொல்லிய சாதகங்களை உத்தேசித்து ஆய்ஸ் நதிக்கு மேற்கில் ஜெர்மானியரைத் தாக்குவதாக நிச்சயித்தார்.


இங்கிலீஷ்கடல்
ஆஸ்டவ்ட்
பூலோன்
டியுபோட்
டன்கர்க்
கலே
கேலே
ஆர்டர்
காம்பிரே
ஆல்பர்
ரூவன்
சோயன்
கம்பேன்
சாயலைஸ்
ரீம்ஸ்
பாரிஸ்
மான்
மார்ன்நதி
சேன்நதி
ஆய்ஸ்நதி
ஸ்கால்டிநதி
மியூஸ்நதி
எய்ஸன்நதி
ஆண்ட்வர்ப்
ஹேக்
ரோட்டர்டாம்
ஆம்ஸ்டர்டாம்
ஜூடர்ஸீ
ஹாலண்ட்
ஜெர்மனி
பெல்ஜியம்
ஹாலந்து
ஹாலண்ட்
ஜெர்மனி
பெல்ஜியம்
பிரான்ஸ்
ஜெர்மனி
பிரான்ஸ்
ஜெர்மனி
பிரான்ஸ்
ஜெர்மனி

குறிக்கப் பட்டிருக்கிறது. கிழக்கே நான்விஸ்கரத்துக் கருகிலிருந்து மேற்கே ஆய்ஸ் நதிவரையில் படத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஜெர்மன் சேனைநிலைபெற்றிருந்தது. செப்டம்பர் 20-ந் தேதிக்குப் பிறகு நேசக்கக்ஷியார் புதிய தடவடிக்கைகளைத் தொடங்கிய போது அவர்கள் ஜெர்மன் சேனையைப் பக்கவாட்டில் தாக்கிய விதம் படத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆய்ஸ் நதிக் கரையிலுள்ள கம்பேன் நகரத்திலிருந்து வடக்கே கடற்கரை வரையில் நேசப்படைகள் படத்தில் கருப்புக்கோட்டால் குறித் துள்ளபடி நிலைபெற்று ஜெர்மானியரின் போக்குவரத்து வழிகளைத் தாக்கின. அத் திசையில் ஜெர்மன் படைகள் சென்று படத்தில் இரட்டைக் கோட்டால் குறித்துள்ளபடி, நேசப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்தன. இதன் விவரம் இனி சொல்லப்படும்.

புதிய பிரஞ்சு படைகள் ஆய்ஸ் நதிக்கரையைத் தாக்கின.

எய்ஸன் நதியும் ஆய்ஸ் நதியும் காம்பேன் என்ற நகரத்தில் சந்திக்கின்றன. அந்நகரத்துக்கு வடக்கில் லோம்நதி ஓடுகிறது. செப்டம்பர் 20-ந்தேதி காம்பேன் நகரத்துக்கு மேற்கில் புதிய பிரஞ்சுபடைகள் சேர்க்கப்பட்டன. ஜெனரல் ஜாப்ரே தமது சேனாபதிகளுள் ஒருவராகிய ஜெனரல் காஸல்னு என்பவரை அந்த படைகளுக்குத் தலைவராக நியமித்தார். அவர் லொரேன் மாகாணத்திலிருந்து படையெடுத்துவந்த ஜெர்மன் படைகளைத் தடுத்து சான்ஸி நகரத்தில் நிறைமையாய் சண்டை செய்து புகழ்பெற்றவர்.

ஜெனரல் காஸல்னு செப்டம்பர் 20-ந்தேதி ஆய்ஸ் நதிக்கு மேற்கில் புதிய பிரஞ்சுபடைகளைச் செலுத்தினர். ஜெனரல் வான்கிளக் தமது ஜெர்மன்படைகளின் பெரும்பாகத்தையும் எய்ஸன் நதிக்கு வடகரையில் நிலைபெறச் செய்து, தமக்குப் பக்கவாட்டிலுள்ள நோயன், ஸெண்ட் குவன்டின் முதலிய ஸ்தலங்களில் சில துருப்புகளை மட்டும் காவலாக வைத்திருந்தார். (“ஸெண்ட் குவன்டின்” என்ற பெயர் படத்தில் குவன்டின் என்று மட்டும் எழுதப்பட்டிருக்கிறது.) அந்தப் பக்கவாட்டு ஸ்தலங்களைத் தாக்கிப் பிடிக்கவேண்டு மென்று ஜெனரல் காஸல்னு முன் சென்றார். காம்பேன் நகரத்திலிருந்து வடக்கே லோம் நதிக்கப்பால் உள்ளஅல்பர்ட் நகரம் வரையில், அந்த புதிய பிரஞ்சு படைகள் பரவிச்சண்டை செய்தன. அவைகள் திடீரென்று முன் சென்று ஆய்ஸ்நதிக்கரை யோரமாய்த்தாக்கி, காம்பேனிலிருந்து சென்ட் குவன்டின் வரையில் முன் சென்றன. இந்த புதிய ஆபத்தைக் கண்டஜெனரல் வான் கிளக் சற்றும் தாமஸமின்றி ஏராளமான ஜெர்மன் துருப்புகளை ஆய்ஸ் நதிக்கரையில் குவித்தார். அவர் எய்ஸன்

நதிக்கரையி லிருந்த சில ஜெர்மன் படைகளையும் ஆய்ஸ் நதிக்கு அனுப்பினர். தவிர போர் முனையின் மற்ற பாகத்தி லிருந்து சில ஜெர்மன் படைகள் அவருக்குத் துணை செய்ய வந்தன. லொரேன் அல்ஸேஸ் இம் மாகாணங்களில் சண்டை செய்து கொண் டிருந்த ஜெர்மன் படைகளிற் சிலவை ஆய்ஸ் நதிக்கு அனுப் பப்பட்டன. ஜெனரல் வான் கிளக் தமக்குக் கிடைத்த அந்த துணைப் படைகளை காம்ராய் என்ற ஸ்தலத்தில் பின்பலமாகச் சேர்த்துவை த்து, தமக்குப் பக்கவாட்டில் சண்டைநடக்கிற இடங்களுக்கெல்லாம் அனுப்பிக்கொண்டு வந்தார். ஆய்ஸ் நதியைத் தாக்கிய பிரஞ்சு படைகளை செப்டம்பர் 25-ந் தேதி ஜெனரல் வான் கிளக் பின்தள் ளினர். ஜெனரல் காஸல்னு தம்மிட மிருந்த எல்லா பிரஞ்சு படைக ளையும் செலுத்தி, காம்பேன் நகரத்திலிருந்து லெண்ட்ருவண்டின் வரையில் போர்செய்தார். செப்டம்பர் 23-ந் தேதியிலிருந்து 5 தினங் களாக கடுமையான சண்டை நடந்தது. அதன் முடிவாக ஜெனரல் காஸல்னு ஆய்ஸ் நதிக் கரையி லிருந்து மேற்கில் பின்வாங்கி, காம் பேனிலிருந்து ஆல்பர்ட் வரையிலுள்ள வரிசையில் முன்பிருந்தது போல நிலைபெற்றார்.

நேசப்படைகள் புதிய மூலபலங்களைத் திரட்டி திடீரென்று பக்கவாட்டில் தாக்கியதைக் கண்டு ஜெர்மானியர் கவலை யுற்றார்கள். ஜெர்மானியரின் முக்கிய நாணுவக் கொள்கை என்ன வென்றால், சத்துருக்களை எப்போதும் தாக்கிக்கொண்டிருக்கவேண்டு மென்பது. அவ்வாறு சத்துருக்களை வலுவில் தாக்கிக்கொண் டிருந்தால்தான் ஜெர்மானியர் தங்கள் நிலைமையில் எவ்வித எதிர்பாராத ஆபத்துகளு மூண்டாகாமல் காக்கலா மென்றும் தங்கள் இஷ்டப்படி யுத்தத்தின் போக்கைத் திருப்பலா மென்றும் நினைக்கிறார்கள். அந்த காரணத் தால்தான் ஜெர்மானியர் பாரிலி லிருந்து பின்வாங்கி எய்ஸன் நதிக் கரையில் நிலை பெற்றபோது, உடனே நேசப் படைகளின்மேல் விழு ந்து தாக்க ஆரம்பித்தார்கள். ஆனால் செப்டம்பர் 20-ந் தேதி நேசக் கக்ஷியார் மூலபலங்களைத் திரட்டி ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்க ஆரம்பித்தனர். ஜெர்மானியர் பிரஞ்சுப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கமுடியாதபோது, அவை களின் மேல் விழுந்து தாக்கவும் ஆரம்பித்தார்கள். ஜெனரல் காஸல்னு தமது புதிய பிரஞ்சுபடைகளைப் பின்வாங்கச் செய்து

வுடன் அவரைத் தாக்குவதற்காக ஜெனரல் வான் கிளக் தமது ஜெர்மன் படைகளை அனுப்பினர். அங்கு அதிக கடுமையான சண்டைகள் நடைபெற்றன. முடிவாக, ஜெனரல் காஸனல் தமது படைகளை வலுவான அரண்களில் நிலைபெறச்செய்து ஜெர்மானியரின் தாக்குதலைத் தடுத்துக்கொண்டு நின்றார். காம்பாய் நகரத்தில் திரட்டப்பட்ட ஜெர்மன் படைகள் லோம் நதியை நோக்கி முன்சென்று அந்நதிக் கரையிலிருந்த ஜெனரல் காஸல் னுவின் பிரஞ்சு படைகளை வடமேற்கில் சூழ்ந்துகொள்ள முயற்சிசெய்தன. லோம் நதிவரையில்தான் ஜெனரல் காஸல்னு தமது பிரஞ்சு படைகளை நிறுத்தினர். அந்நதிக்கு வடக்கிலுள்ள பிரதேசத்தை எந்த கஷ்டியும் வசப்படுத்திக் கொள்ளாம லிருந்ததால் அந்தப் பிரதேசம் காலியாயிருந்தது. அவ்விடத்தில் ஜெர்மன் படைகள் முன்செல்ல முயற்சிசெய்தன.

வேறு பல பிரஞ்சு படைகளும் தாக்கின.

ஜெர்மானியரின் முன் னேற்றத்தைத் தடுப்பதற்கு பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே வேறு பல புதிய பிரஞ்சு படைகளைச் சேர்த்து லோம் நதிக்கு வடக்கில் சென்று நிலை பெறும்படி அப்படைகளை அனுப்பினர். அந்த படைகள், லோம் நதிக்கு வடக்கிலுள்ள ஆல்பர்ட் என்ற ஸ்தலத்திலிருந்து பெரூன் நகரம் வரையில் நிலைபெற்று சண்டை செய்தன. ஜெனரல் மாட்ஹை என்பவர் அந்த பிரஞ்சு படைகளுக்குத் தலைமைவகித் தார். அவர், காம்பாய் நகரத்திலிருந்து வாலன்னின் நகரம் வரையிலுள்ள பாதைகளைத் தாக்கிப்பிடிக்கவேண்டுமென்று முயற்சி செய்தார். ஜெர்மானியர் அந்த பாதைகளில் ஏராளமான துருப்பு களைக்குவித்தபோதிலும், ஜெனரல் மாட்ஹை செலுத்திய புதிய பிரஞ்சு படைகளை வடக்குதிக்கில் சூழ்ந்து கொள்ள முயற்சி செய்தார்கள். அக்டோபர் 1-ந்தேதியிலிருந்து 7-ந்தேதி வரையில் அத்திசையில் கடுமையான சண்டைகள் நடந்தன. அவைகளின் முடிவாக, பிரஞ்சு படைகள் பின்வாங்கிச் சென்று முதலில் நிலைபெற்ற பிரதேசத்துக் குச் சென்றன; அதாவது ஆல்பர்ட் நகரத்திலிருந்து பெரூன் நக ரத்துக்குக் கிழக்கிலுள்ள பிரதேசம் வரையில் நிலைபெற்றன. ஜெர் மானியர் அதோடு நிற்காமல் லில்லி நகரத்தை வசப்படுத்தவும் அந்த பிரஞ்சு படைகளை சூழ்ந்து கொள்ளவும் முயற்சிசெய்தார்கள்.

பிரிட்டிஷ் படைகளும் வடக்கில் சென்று தாக்கின.

அந்த ஆபத்தைத் தடுப்பதற்காக, பிரஞ்சு சேனாதிபதி வேறொரு ஏற்பாடு செய்தார். எய்ஸன் நதிக் கரையி லிருந்த பிரிட்டிஷ் சேனையை பெதூன் நகரத்துக்கு வடக்கில் நிலைபெறும் படி அனுப்பினர். பிரிட்டிஷ் சேனை பெதூன் நகரத்திலிருந்து கடற் கரையிலுள்ள டன்கர்க் என்ற பிரஞ்சு துறைமுகம் வரையில் நிலை பெற்றிருக்கும்படி ஜெனரல் ஜாப்பே உத்தரவு செய்தார். பிரிட் டிஷ் சேனாபதி அவ்வாறே கடற் கரையோரத் திலிருக்க வேண்டு மென்று விருப்பங் கொண் டிருந்தார். ஏனெனில் இங்கிலாந்தி லிருந்து அனுப்பப்படும் புதியதருப்புகளும் தளவாடங்களும் பிரிட் டிஷ் சேனைக்குச் சீக்கிரத்தில் கிடைக்கும். தவிர பிரிட்டிஷ் சேனை கடற்கரைவரையில் பரவியிருந்தால், ஜெர்மானியர் நேசப் படைகளை பக்க வாட்டில் சூழ்ந்து கொண்டு தாக்குவதற்கு காலிப் பிரதேசம் எதுவுமிராது. அக்டோபர் 3-ந்தேதியிலிருந்து பிரிட்டிஷ் துருப்பு கள் பிரான்ஸின் வடபாகத்துக்கு கொஞ்சங் கொஞ்சமாய் கொண்டு போகப்பட்டனர். எய்ஸன் நதிக்கரையில் பிரிட்டிஷ் துருப்புகள் நிலைபெற்றிருந்த அரண்களுக்கு பிரஞ்சு துருப்புகள் அனுப்பப்பட் டனர். இராக்காலத்தில் அந்த மாறுதல்கள் மிகவும் இரகஸ்யமாய்ச் செய்யப்பட்டு, பிரிட்டிஷ் துருப்புகள் ரயில்வண்டிகளிலும் மோட் டார் வண்டிகளிலும் குதிரை வண்டிகளிலும் பிரான்ஸின் வடபாகத் துக்குக் கொண்டு போகப்பட்டனர். அக்டோபர் 11-ந்தேதி பிரிட் டிஷ் சேனையின் பெரும்பாகமும் வடக்குப்பிரான்ஸுக்கு வந்து விட்டன. பிரிட்டிஷ் சேனை பெதூன் நகரத்திலிருந்து ஹேஸ்புரூக் என்ற ஸ்தலம் வரையில் நிலைபெற்றது. பிரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மானியரைத் தாக்கி முன்சென்று அக்டோபர் 17-ந்தேதியன்று, லாபாஸி நகரத்திலிருந்து இப்ரில் நகரம் வரையிலுள்ள வரி சைக்கு முன்சென்றார்கள். லாபாஸி நகரம் ஜெர்மானியர் வசமிருந் தது. பிரிட்டிஷ் பிரஞ்சு படைகள் அந்த நகரத்தைப் பலமுறை தாக் கியும் பயன்பெறவில்லை. ஆகையால் பிரிட்டிஷ் துருப்புகள் அந்நகரத் துக்கு மேற்கில் நிலைபெற்றார்கள். அங்கிருந்து இப்ரில் நகரத்துக்குத் தெற்கிலுள்ள பிரதேசம் வரையில் பரவியிருந்தார்கள். ஆண்டவர்ப் கோட்டைகளை ஜெர்மானியர் அக்டோபர் 8-ந்தேதி பிடித்தார்கள். அந்த கோட்டைகளிலிருந்த பெல்ஜியசேனையும் பிரிட்டிஷ் படை

களும் பின்வாங்கிச் சென்று அக்டோபர் 18-ந்தேதியன்று இப்ரிஸ் நகரத்துக்கு கிழக்கில் நிலைபெற்றன. பெல்ஜிய சேனை, வடக்கில் நியூ போர்ட் என்ற பெல்ஜியத் துறைமுகம் வரையில் பரவியிருந்தது. இப்ரிஸிக்கு முன்னுல் ஜெர்மானியர் கடுமையாய்த் தாக்க ஆரம் பித்தார்கள். ஆகையால் இப்ரிஸ் பிரதேசத்தை வலுப்படுத்துவதற் காக அக்டோபர் 20-ந் தேதிக்குள்ளாக சில புதிய பிரஞ்சுபடைகள் அங்கு அனுப்பப்பட்டன. இப்ரிஸ் நகரத்துக்கு வடக்கில் கடற் கரை வரையிலும், சில பிரஞ்சு படைகளும் பெல்ஜிய சேனையும்நிலை பெற்றிருந்தன.

மேற்கரங்கத்தின் போர்முனை எவ்வளவு விஸ்தாரமாயிருந்த தென்பதைக் கவனிக்க வேண்டும். இங்கிலீஷ் கடலிலுள்ள நியூபோர்ட் என்ற துறைமுகப் பட்டணத்திலிருந்து தெற்கே எய்ஸன் நதியிலுள்ள காம்பேன் நகரம் வரையிலும், காம்பேன் நக ரத்திலிருந்து கிழக்காய்வர்டுன் வரையிலும், வர்டுனிலிருந்து தென் கிழக்காய் பெல்போர்ட் என்ற பிரஞ்சு கோட்டை வரையிலும் விஸ் தாரமாய் யுத்தம் நடைபெற்றது. போர்முனையின் நீளம் சுமார் 590 மைலிருக்கும்.

நேசக்கூடி தொடங்கிய புதுமுயற்சிகளின் பலன்கள்.

பிரஞ்சு சேனுதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே, எய்ஸன் நதிக் கரையில் சண்டை செய்வதில் பயனில்லையென்று எண்ணி ஜெர்மா னியரைப் பக்கவாட்டில் தாக்க முயற்சி செய்ததைப் பற்றிச் சொல்லி வந்தோம். ஜெனரல் காஸல்னு, ஜெனரல் மாட்ஹை என்ற பிரஞ்சு சேனுபதிகளும், பிரிட்டிஷ் சேனுபதியாகிய ஸர்ஜான் பிரெஞ்சும் ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்கினர்களென்றும் சொன் னேம். இந்த புதிய நடவடிக்கைகளின் பலன்களென்ன? செப்டம்பர் மாதம் 20-ந்தேதி ஜெனரல் காஸல்னு புதிய பிரஞ்சு படைகளைச் செலுத்தி ஜெர்மானியருக்குப் பக்கவாட்டிலுள்ள ஆய்ஸ் நதிக்கரையைத் தாக்கினர். ஆனுல் புதிய ஜெர்மன் படைகள் ஆய்ஸ் நதிக்கரைக்குவந்து, அங்கு சண்டைசெய்து கொண்டிருந்த பிரஞ்சுபடைகளைப் பின் தள்ளின. ஜெர்மானி யர் அதோடு நிற்காமல் புதிய பிரஞ்சுபடைகளை வலுவில் தாக் கிச் சூழ்ந்துகொள்ள முயற்சி செய்தார்கள். அதே மாதிரியாக ஜெனரல் மாட்ஹை செலுத்திய வேறு புதிய பிரஞ்சு படைகள்

ஜெர்மானியரால் பின் தள்ளப்பட்டுப் பிறகு கடுமையாய்த் தாக்கப் பட்டன. அவ்வாறே பிரிட்டிஷ் சேனை இப்ரில் நகரம்வரையில் முன் சென்றபிறகு அதன் முன்னேற்றத்தை ஜெர்மானியர்தடுத்துவிட்டார் கள். ஜெர்மானியர் போர்முனையெங்கும் தெற்குக்கோடியிலிருந்து இங்கிலீஷ் கடல் வரையில் வலுவான அரண்களைக்கட்டி, சேசப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நின்றார்கள். தவிர, இங்கி லீஷ் கடலிலிருந்து வர்டன் வரையில் அவர்கள் குறுகிய வட்டத்தில் நிலைபெற்றிருந்ததால் போர்முனைபைக் காப்பது சௌகரியமாயிற்று. ஆகையால் பிரஞ்சு சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரே ஜெர்மானிய ரைப் பக்கவாட்டில் வளைத்து தாக்குவதற்குச் செய்த முயற்சிகள் பயன்படவில்லையென்று சொல்லலாம். அவர்தமது படைகளைச்சிறிது சிறிதாப் அனுப்பியதே அதற்குக் காரணமென்றும் சொல்லப்படுகி றது. ஆயினும் ஜெர்மானியர் ஆரிலி லிருந்து 40 மைல் தூரத்தி லிருந்தார்களென்பதை ஞாபகத்தில் வைத்தால், ஜெனரல் ஜாப்ரே வெகு ஜாக்கிரதையா யிருந்த அவசியம் தெரியவரும்.

" அவருடைய புதிய ராணுவ நடவடிக்கைகள் முற்றிலும் பலிக்க வில்லை யென்றாலும்அவர் ஜெர்மன் சேனையின் உண்மையான நிலை மையை அறிந்து ஜெர்மானியர் புதுமுயற்சி செய்வதற்கு முன்னதாக தாம்செய்துவிட்டதானது அவருடைய சாமர்த்தியத்தைக் குறிப்பிடு கிறது. அச்சமயம் ஜெர்மானியர் தங்கள் மூலபலங்களைச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு வேண்டிய சாவகாசத்தை அவர் கள் பெறுதபடி பிரஞ்சு சேனாதிபதி செய்துவிட்டார். ஜெர்மானி யர் ஆண்ட்வர்ப் கோட்டைகளையும் பெல்ஜியக் கடற் கரையையும் வசப்படுத்திக் கொள்வதற்கு தங்கள் மூலபலங்களை உபயோகிக்கலா மென்று எண்ணியிருந்தார்கள். ஆனல் பிரஞ்சு சேனாதிபதி ஆய்ஸ் நதிக் கரையில் போர் தொடங்கி விட்டதால், ஜெர்மானியர் தங்கள் முதல் நோக்கத்தைக் கைவிட்டு, தாங்கள் மூலபலங்களை ஆய்ஸ் நதிக்கு அனுப்பும்படி கேரிட்டது. பிறகு செப்டம்பர் 28-ந்தேதி ஆண்ட்வர்ப் கோட்டைகளை அரைகுறையாய் முற்றுகை போட்டுப் பிடிப்பதற்கு ஜெர்மானியர் முயற்சி செய்தார்கள். அதனல், ஆண்ட் வர்ப் கோட்டைகளை அவர்கள் பிடித்த போது, அங்கிருந்த பெல் ஜிய சேனை கடற்கரை யோரமாய்த் தப்பித்துக்கொண்டு சென்று பிரஞ்சு சேனையோடு சேர்ந்துகொண்டது. அவ்வாறு ஜெர்மானியரின்

முயற்சிகள் சரியாய் நிறைவேறுததற்குக் காரணம், பிரஞ்சு சேனுதி பதியின் புதிய யுத்த நடவடிக்கைகளாகும்.

புதிய பிரஞ்சு படைகள் ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்கியதால் ஜெர்மானியர் அவைகளைக் கவனித்தார்களே யொழிய வேறு திசைகளில் சரியானபடி முயற்சிகளைச் செய்ய முடியவில்லை. பிரஞ்சுக்காரர் அச்சமயம் ஏராளமான மூலபலத்தைத் திரட்டியிருந்தார்க ளென்று ஜெர்மானியர் தவறுய் நினைத்துவிட்டார்கள். அவ் வாறு அவர்கள் தவறுன அபிப்பிராயங் கொண்டதற்குக் காரணம், ஜெர்மன் ஒப்பாளிகள் குறைந்துபோனதாகும். யுத்தத்தின் ஆரம் பத்தில் ஜெர்மன் துப்பாளிகளின் உதவியைக் கொண்டு ஜெர்மானி யர் சத்துருக்களைப் பற்றிய இரகஸ்யங்களைச் செவ்வையாய்த் தெரிந்து கொண்டார்கள். அது இப்போது சாத்தியப்படவில்லை. ஜெர்மன் குதிரைப் படைகள்தான் நேசப்படைகளின் நடமாட்டத்தை அறிய வேண்டியிருந்தது. இந்த காலத்து யுத்தத்தில் குதிரைப்படைகள் அவ்வேலையைச் செவ்வையாய்ச் செய்யமுடியாதென்று ஏற்கெனவே சொல்லிபிருக்கிறோம்.


ஆகையால் ஜெர்மானியர் முன்பு அவர்க்நதிக்கரையில் தோல்வி யடைந்தாற்போல மறுமுறை பிரஞ்சு சேனுபதியின் புது முயற்சி யால் ஆய்ஸ் நதிக்கரையில் தோல்வியடைந்து பின்வாங்கும்படி நேரி டக்கூடா தென்று மிகுந்த கவலை கொண்டார்கள். ஏராளமான ஜெர்மன் படைகள் ருஷ்ய எல்லைக்குச் செல்லவேண்டியிருந்தபடி யால், பிரஞ்சு எல்லையில் புதிய ஜெர்மன் படைகளை மிதமாகவே உபயோகிக்கவேண்டியிருந்தது. எய்ஸன் நதியிலிருந்த ஜெர்மன் படைகள் லீஜ் நகரத்திலிருந்து வருகிற ரயில் பாதைகளையே ஆதாவாகக் கொண்டிருந்தன. பிரஞ்சு சேனுதிபதிசெய்த புது முயற்சி பலித்துவிடுமானல் ஜெர்மன் சேனைக்குப் பெரிய ஆபத்து நேரிட்டுவிடும். அதைக் கண்டு அஞ்சி ஜெர்மானியர் தங்கள் பக்க வாட்டில் மிகுந்த வன்மையுடன் காத்துவர நிச்சயித்தார்கள். ஆகையால் காலியாயிருந்த பெல்ஜியக் கடற்கரையையும் பிரஞ்சு கடற்கரையையும் ஜெர்மானியர் வசப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆண்ட்வர்ப்பிலிருந்த பெல்ஜியசேனையைப் பின் வாங்காமல் தடுக்க வும் ஜெர்மானியர்முயற்சிசெய்ய முடியவில்லை,

ஆகையால் ஜெர்மானியர் ஒருபுறம் ஆண்ட்வர்ப் கோட்டைகளைப் பிடிக்கவும் மற்றொருபுறம் நேசப்படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் ஏககாலத்தில் முயற்சி செய்தபோது, அவ்விருமுயற்சிகளையும் அரைகுறையாய் நிறைவேற்றினர்கள். ஆண்ட்வர்ப் கோட்டைகளை அவர்கள் சொற்பதருப்புகளைக் கொண்டு அவசரமாய்ப் பிடிக்க முயன்று, அங்கிருந்த பெல்ஜியசேனையையும் பிரிட்டிஷ்படைகளையும் தப்பியோட விட்டுவிட்டார்கள்; புதிய பிரஞ்சு படைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதிலேயே கவனங்கொண்டு, பெல்ஜியக் கடற்கரையையும் பிரஞ்சுகடற்கரையையும் வசப்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டார்கள். ஆண்ட்வர்ப்கோட்டைகளைப் பிடித்து 20 தினங்களான பிறகே, ஜெர்மானியர் இப்ரிஸ் பிரதேசத்தில் நேசப் படைகளைத் தடுத்துநிற்க சாத்தியப்பட்டது. பெல்ஜியசேனை ஆண்ட்வர்ப்பில் சண்டை செய்து கொண்டிருந்ததின் பலனாக, நேசப்படைகள் இப்ரிஸ் வரையில் முன்சென்றன. ஜெர்மானியர் செப்டம்பர் 6-ந்தேதி மாரன் நதிச்சண்டையில் தோல்வியுற்றதற்குக் காரணம், ஜெர்மன் படைகள் ருஷ்ய எல்லைக்குச் செல்லவேண்டியிருந்ததென்று முன்பு சொல்லியிருக்கிறோம். ஜெர்மானியர் செப்டம்பர் 6-ந் தேதிக்கு முன்னதாகவே மாரன் நதிக்குவந்திருந்தால் தங்கள் முழுபலத்தையும் உபயோகித்திருப்பார்கள். ஆகையால் யுத்தர் தொடங்கியவுடன் பெல்ஜிய சேனை ஜெர்மானியரைத் தடுத்து சண்டைசெய்ததின் மற்றொரு பலன் நேசப்படைகள் மாரன் நதிச்சண்டையில் வெற்றி பெற்றதாகும். பெல்ஜிய சேனையால் நேசக்கக்ஷிக்கு உண்டான முக்கிய சாதகங்கள் அனேகமாகும் இனி, ஆண்ட்வர்ப் கோட்டைகள் பிடிபட்டதைப் பற்றி சில விவரங்கள் சொல்வோம்.

33-வது அத்தியாயம்

ஆண்ட்வர்ப் பிடிபட்டது.

ஜெர்மானியர் பெல்ஜிய சேனையை முறியடித்து பெல்ஜியத்தில் நகரமாகிய ப்ருஸல்ஸைப் பிடித்தபிறகு பெல்ஜிய கவர்ன்மெண்டும் சேனையும் ஆகஸ்ட் 18-ந்தேதி ஆண்ட்வர்ப் நகரத்துக்குச் சென்றன வென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.



ஆண்ட்வர்ப் நகரம் ஹாலண்ட் தேசத்து எல்லைக்கருகில், ஷெல்ட் என்ற நதிக்கரையில் இருக்கின்றது. ஷெல்ட் நதி ஆண்ட்வர்புக்கு வடக்கில் விசாலமாய் அகண்டு சென்று சமுத்திரத்தில் விழுகிறது. அதி பெரிய வியாபாரஸ்தலமாயிருப்பதோடு மிகுந்த வன்மை கொண்ட ராணுவ ஸ்தலமாயு மிருக்கிறது. அந்நகரம் வடபுறத்தில் கடற்கரையில் காக்கப்பட்டு, மற்றமூன்று திக்குகளும் நதிகளால் சூழப்பட்டிருக்கிறது. அந்த நகரம் பெல்ஜிய சேனைக்குமுக்கிய ஆதாரஸ்தலமென்று வெகுகாலமாகக் கருதப்பட்டு அதைச்சுற்றிலும் 1869-ம்வருஷத்தில் கட்டப்பட்ட கோட்டைகள் இன்னமுமிருக்கின்றன. அந்த பழய கோட்டைகளுக்கு அப்பால் வேறொரு வரிசைக் கோட்டைகள் சுற்

நிலும் 1879–ம் வருஷம் கட்டப்பட்டன. இந்த வெளிக் கோட்டைகள் அந்த காலத்திலிருந்த பிரங்கிகளுக்கு அசையாத வன்மையைப் பெற்றிருந்தன. இந்த வெளிக் கோட்டைகளுக்கு இடையே கற்கட்டடங்களால் அரண்கள் 1913-ம் வருஷத்தில் தான் கட்டப்பட்டன. ஆனல் இது வரையில் ரோட்டுகளில் கொண்டுவர முடியா தென்று நினைக்கப்பட்ட பெரிய முற்றுகைப் பிரங்கிகளை இந்த மகா யுத்தத்தில் ஜெர்மானியர் வண்டிகளில் ஏற்றிச் சென்றதால், ஆண்ட்வர்ப் கோட்டைகளின் வன்மை சிறிதும் பயனில்லையென்று தெரியவந்தது. ஆண்ட்வர்ப் நகரத்துக் கப்பால் உள்வரிசைக் கோட்டைகளிருக்கின்றன. அவைகளுக்கப்பால் தென்மேற்கிலிருந்து தென்கிழக்கு வரையில் ரூபல், நெேத என்ற நதிகளிருக்கின்றன. அந்நதிகளுக்கப்பால் வெளிவரிசைக் கோட்டைகளிருக்கின்றன. அவ்விரண்டு நதிகளும் ஆண்ட்வர்ப் நகரத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்தில் ஒடுகின்றன. ஜெர்மானியரின் 11 அங்குல பிரங்கி 7½ மைல் தூரம் சுடக் கூடுமாகையால், அந்த நதிகளுக்கு அருகில் (அவைகளைத் தாண்டா மலே) பிரங்கிகளை வைத்துச் சுட்டால் ஆண்ட்வர்ப் நகரத்தை நாசஞ் செய்துவிடலாம். ஆகையால் வெளிவரிசைக் கோட்டைகளைப் பிடித்து அந் நதிகளின் தெற்குக்கரையில் பிரங்கிகளை நிறுத்தினல் ஆண்ட்வர்ப்நகரம் சரணமடைந்துவிடவேண்டும். ஆகையால் உள்வரிசைக்கோட்டைகளால் அந்நகரத்துக்கு எவ்விதபயனுங்கிடைக்காது.

ஜெர்மானியர் ஆண்ட்வர்ப் கோட்டைகளை முற்றுகை போடவில்லை என்பதை கவனிக்கவேண்டும். அக் கோட்டைகளை நாலா பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு போக்குவரத்து நடைபெறுமல் தடுப்பதுதான் முற்றுகையாகும். ஆண்ட்வர்ப் கோட்டைகளை ஜெர்மானியர் இதற்கு முன்னதாகவே தாக்க ஆரம்பிக்காததும், பிறகு தாக்கத்தொடங்கியபோது முற்றிலும் சூழ்ந்துகொள்ளாததும் ஆச்சரியமாயிருக்கலாம். அதற்குக் காரணம், பிரான்லின்மீது படை யெடுத்துச் சென்ற ஜெர்மன் சேனை விரைவாய் முன் செல்வதற்கு ஏராளமான பலத்தைப் பெற்றிருக்கும்படி நேர்ந்தது; லீஜ் நகரத்திலிருந்துபாரிஸ் வரையிலுள்ளபாதைகளை ஜெர்மானியர் காவல் செய்யும்படி நேர்ந்தது; பிரஞ்சுசேனைதிபதி ஆப்ஸ் நதியிலிருந்து இங்கிலீஷ் கடல் வரையில் தர்க்கிக்கொண்டிருந்ததைத் தடுப்பதே அவர்களுக்கு சிரமமாயிருந்தது; பெல்ஜியப் படைகள் லீஜ்நகரமுள்ளபிரதேசத்தில் தாக்கி

எவ்வித ஆபத்தையும் உண்டுபண்ணுமல் காப்பதே ஜெர்மானியருக்குப் பெருங் கவலையாயிருந்தது. செப்டம்பர் மாதம் ஆரம்பத்தில் சில ஜெர்மன் படைகள் பிரான்ஸி லிருந்து ருஷிய எல்லைக்குச் செல்ல வேண்டியிருந்ததும், மாரன்நதிச்சண்டையில் ஜெர்மானியர் தோல்வியடைந்தபிறகு அவர்களுக்குத் துணைப் படைகள் தேவையாயிருந்தும் சொல்லப்பட் டிருக்கின்றன. ஆகையால் பெல்ஜியத்தில் காவல் செய்வதற்கு அத்தியாவசியமாயுள்ள ஜெர்மன் துருப்புகள் மட்டும் வைக்கப்பட்டன. அந் நிலைமையில் ஜெர்மானியர் ஆண்ட்வர்ப் கோட்டைகளை முற்றுகை போடுவதற்கும் தாக்கிப் பிடிப்பதற்கும் போதுமான படைகளைப் பெற்றிருக்க வில்லை. பெல்ஜியத்தின் கடற்கரைப் பிரதேசத்தை ஜெர்மானியர் வசப்படுத்திக்கொள்ள வில்லை. அதை வசப்படுத்தாத வரையில் பெல்ஜிய சேனை வெளிப்பிரதேசங்களோடு போக்குவரத்து நடத்த சாத்தியப்படும். செப்டம்பர் 6-ந்தேதி சில புதிய ஜெர்மன் படைகள் பெல்ஜியத்தின் வழியாய்க் கொண்டுபோகப்பட்டபோது, ஆண்ட்வர்பிலிருந்த பெல்ஜிய சேனை வெளியேவந்து ஜெர்மானியரைத் தாக்கிப் ப்ரூஸல்ஸ் நகரத்துக்கு அருகிலுங் கூட வந்துவிட்டது. ஆகையால் பெல்ஜிய சேனையின் சுறுசுறுப்பை அடக்க வேண்டியது அவசியமாகி விட்டது. மேலும் இங்கிலாந்திலிருந்து புதிய பிரிட்டிஷ் படைகள் பெல்ஜியக் கடற்கரைக்கு வரப்போவதாக ஜெர்மானியர் கேள்விப்பட்டதும் அவர்கள் அதிகமாய் கவலைப்பட்டார்கள். செப்டம்பர் மாதக் கடைசியில் ஜெர்மானியர் ஆண்ட்வர்ப் கோட்டைகளைப் பிடிப்பதாக நிச்சயித்தார்கள். பெல்ஜியத்தின் கடற்கரையோரத்திலுள்ள பிரதேசத்தை வசப்படுத்திக் காப்பதற்கு அதிக துருப்புகள் தேவையாயிருக்குமாகையால், ஜெர்மானியர் அவ்வித மாய் ஆண்ட்வர்ப்கோட்டைகளைச் சூழ்ந்து கொள்ளாமலே தங்கள் பிரங்கிபின் வன்மையைக் கொண்டு அக்கோட்டைகளைத் தாக்கிப் பிடிப்பதாக நிச்சயித்தார்கள். கோட்டைகளைச் சூழ்ந்துகொள்ளாமல் தாக்கிப் பிடிப்பது வழக்கமில்லை. ஏனெனில் அந்த கோட்டைகளிலுள்ள சத்துருக்கள் வெளிப் பிரதேசங்களோடு போக்குவரத்து நடத்தி புதிய படைகளையும் தளவாடங்களையும் பெற்றுக்கொள்ளு மாகையால் அவ்வித சாதகங்களைப் பெற்ற கோட்டையைத்தாக்கிப் பிடிப்பதுகஷ்டம். ஆண்ட்வர்ப்கோட்டைகளிலிருந்த பெல்ஜிய சேனை, கென்ட் நகரம் வழியாய் கடற்

கரையிலுள்ள துறை முகங்களோடு போக்குவரத்து நடத்திக்கொண் டிருந்தபடியால், அங்கு பிரிட்டிஷ் துருப்புகளும் பிரிட்டிஷ் பீரங்கி களும் வந்து பெல்ஜியருக்கு உதவிசெய்தன. (560-ம் பக்கத்தி லுள்ள படத்தைப் பார்க்கவும்)

வெளிவரிசைக் கோட்டைகள் தகர்க்கப்பட்டன.

ஜெனரல் பெஸிலர் ஒரு லக்ஷம் ஜெர்மன் துருப்புகளைச் செ லுத்தி 11 அங்குல முற்றுகைப்பீரங்கிகளின் உதவியால் ஆண்ட்வர்ப் கோட்டைகளைப் பிடிக்கப் பிரயத்தனம் செய்தார். ஆண்ட்வர்ப்கோட் டைகளை யெல்லாம் சூழ்ந்துகொண்டு தாக்குவதற்கு அந்தத் துருப்பு கள் போதா. ஆனல் ஆள்பல மில்லாக் குறைபை பீரங்கிகள் ஈடு செய்துவிட்டன.

செப்டம்பர் 28-ந்தேதி, ஆண்ட்வர்ப்புக்குத் தெற்கி லுள்ள வேலாம், காதரின் என்ற இரண்டு கோட்டைகளை ஜெர்மன் பீரங்கி கள் தகர்க்க ஆரம்பித்தன. ஜெர்மானியர் 17 அங்குல பீரங்கிகளை உபயோகித்ததாக அச்சமயம் கிணக்கப்பட்டது. ஜெர்மன் பீரங்கி களி லிருந்து பாய்ந்த குண்டுகள் மிகவும் பயங்கரமான சேதத்தை உண்டுபண்ணியபோது அவைகள் மிகப் பெரிய பீரங்கியி லிருந்து சுடப்பட் டிருக்கவேண்டு மென்று பெல்ஜியர் கிணைத் தார்கள். 17 அங்குல பீரங்கியை உபயோகிப்பது அதிக கஷ்டமான தேசடு, அதாவசியமாயு மிருந்தது. ஏனனில் 11 அங்குல பீரங்கி கள் 7½ மைல் தூரம் சுடக்கூடுமாகையால் அவைகளைவிடப் பெரிய பீரங்கிகள் ஆவசியமாகும். வெளிவரிசைக் கோட்டைகள் ஆண்ட் வர்ப் நகரத்திலிருந்து 7 மைலுக்குமேல் இல்லை. ஜெர்மன்பீரங்கிகள் செப்டம்பர் 28-ந்தேதி சுட ஆரம்பித்து, 29-ந் தேதியன்று காத ரின் கோட்டையைப் பொடி செய்துவிட்டன. அந்த கோட்டையி லிருந்த வெடிமருந்து அறையும் நீப்பற்றி வெடித்தபடியால், அதி லிருந்த துருப்புகளும் தளவாடங்களும் முற்றிலும் சேதமாகிவிட் டன. வேலாம் என்ற கோட்டைமட்டும் அதிகமாய் சேதமாகிவிட் டாலுங்கூட அதிலிருந்த பெல்ஜியத் துருப்புகளும் பெல்ஜிய பீரங் கிகளும் பிடிவாதமாய்ச் சண்டை செய்தன. மறுதினம் (30-ந்தேதி) தென் திழக்கிலுள்ள லீயர் என்ற கோட்டையும் தகர்க்கப்பட்டது அக்டோபர் 1-ந்தேதிக்குள் அவ்விரண்டு கோட்டைகளும் அழிந்து போயின. அங்கிருந்த கம் கட்டடங்களும் இருப்பு சாமான்களும்

பிரங்கிகளும் கொறுங்கிப்போய் மண்ணோடுகலந்து ஒரே குவியலாகி விட்டன. வேலாம் கோட்டைக்குப் பின்னால் ஆண்ட்வர்ப் நகரத்துக்குக் குடி தண்ணீர் சப்ளை செய்வதற்கு பெரிய நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டிருந்தன. அந்த குளத்தில் ஒரு ஜெர்மன் குண்டு விழுந்து தண்ணீரைத் திரளாய் வாரித் தூக்கி எறிந்தவுடன், குளக்கரைகள் உடைந்துபோயின. அதனால் நகரவாசிகளுக்குத் தண்ணீர்க்கஷ்டம் உண்டானதோடு, வேலாம் கோட்டையைச் சுற்றிலும் வெள்ள நீர் மூடிக்கொண்டது.

பிரிட்டிஷ் துருப்புகள் துணைசெய்ய வந்தனர்.

மேற் சொல்லியவாறு வெளிவரிசைக் கோட்டைகளிற் சிலவை பிடிபட்டபிறகு, ஜெர்மன் பிரங்கிகள் ஆண்ட்வர்ப்நகரத்தைத் தகர்ப்பதற்குத் தாமஸ்மாகாது. ஆகையால் அக்டோபர் 2-ந்தேதி, வெளிவரிசைக் கோட்டைகளிலிருந்த பெல்ஜியத் துருப்புகள் பின் வாங்கிச் சென்றனர். நேதே நதிக்கு வடக்குக் கரையில் சில பெல்ஜியத் துருப்புகள் நிலைபெற்று ஜெர்மானியரைத் தடுத்து நிற்க, மற்றபெல்ஜியத் துருப்புகளும் பெல்ஜியக் கவர்ன்மெண்டும் ஆண்ட்வர்ப் நகரத்தையும் கோட்டைகளையும் கைவிட்டு, ஆஸ்டன்ட் துறைமுகத்துக்குப் போய்விட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அன்று இனம் பிரிட்டிஷ் படைகள் துணை செய்ய வரப்போவதாகக் கேள்விப்பட்டு பெல்ஜிய சேனையும், கவர்ன்மெண்டும் தங்கள் பிரயாணத்தை நிறுத்தி, ஆண்ட்வர்ப்பை கடைசிவரையில் காப்பதாக நிச்சயித்தன. சில தினங்களுக்கு முன் பெல்ஜிய கவர்ன்மெண்டு பிரிட்டிஷ் துருப்புகளையும், பெரிய மூற்றுகைப்பிரங்கிகளையும் ஆண்ட்வர்ப்புக்கு அவசரமாய் அனுப்பும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டார்கள். பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த 8000 துருப்புகளும் சில, 6 அங்குல பிரங்கிகளும் அனுப்பப்பட்டன. பிரிட்டிஷ் கடற்படை இலாகாவுக்கு செக்ரிடேரியாகிய மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டிஷ் படைகளோடுகூட தாமும் ஆண்ட்வர்ப்புக்குச்சென்று அங்கு கடைசிவரையில் இருந்து, சண்டை நடந்துகொண்டிருக்கும்போது அரண்களுக்குச்சென்று அங்கிருந்த துருப்புகளை அடிக்கடி பார்வையிட்டார். அவர் சொந்தத்தில் யுத்தத்தை நடத்தி கீர்த்திபெற வேண்டுமென்ற ஆசைமேலிட்டபடியால் அவர் அவ்வாறுகடற்படை


யைச் சேர்ந்த துருப்புகளை அனுப்பி கேரிலும் சென்னூர் என்ற இங்கிலாந்தில் ஒரு தப்பான அபிப்பிராயம் சில தினங்களுக்குப்பிறகு உண்டாயிற்று. ஆண்ட்வர்ப்புக்குச்சென்ற பிரிட்டிஷ் துருப்புகளில் அநேகம்பேர் சமீபகாலத்தில்தான் படையில்சேர்ந்து யுத்தப்பயிற்சி பெற ஆரம்பித்தவர்கள்; துப்பாக்கிகளைச் செவ்வையாய் சுடக் கூடஅதெரியாமல் சிலரிருந்தார்கள். அவ்வாறு அரைகுறையாய்ப் பயிற்சிபெற்ற துருப்புகளை அனுப்பியதற்கு மிஸ்டர் சர்ச்சில் சமாதானம் சொன்னர். பெல்ஜிய கவர்ன்மெண்டு பிரிட்டிஷ் துருப்புகளை அவசரமாய் அனுப்பும்படி மிகவும் கேட்டுக்கொண்டபடியால் அந்த உதவி தாமதமின்றி ஆண்ட்வர்ப்புக்குப் போய்ச் சேருவதற்கு அந்த படைகள்தான் அருகில் இருந்தன. அந்த பிரிட்டிஷ் துருப்புகள் சிக்கிரமாய்ப் புறப்பட்டு, சிக்கிரமாய்ப்போய்ச் சேரக்கூடிய நிலைமையிலிருந்தார்கள். அவர்களுடைய ராணுவப் பயிற்சி அரைகுறையாயிருந்தபோதிலும், ஆண்ட்வர்ப்பில் சண்டை செய்த பெல்ஜிய ஜெர்மானியத் துருப்புகளில் அநேகம் பேர் அவ்வளவு பயிற்சிதான் பெற்றிருந்தார்க ளென்றும் மிஸ்டர் சர்ச்சில் சமாதானம் சொன்னர்.

அக்டோபர் 3-ந்தேதிமாலை பிரிட்டிஷ் துருப்புகள் ஆண்ட்வர்ப் நகரத்துக்குச்சென்றன. ஆயினும் பிரிட்டிஷ் துருப்புகளின் உதவி தாமஸப்பட்டு வந்தது. ஏனெனில் அக்டோபர் 2-ந்தேதியே, வெளிவரிசைக் கோட்டைகள் ஜெர்மானியரால் பிடிக்கப்பட்டன. ஆகைபால் ஜெர்மானியர் தங்கள் முற்றுகைப் பீரங்கிகளைக்கொண்டு ஆண்ட்வர்ப் நகரம் வரைபில் தகர்க்கலாம். ஜெர்மன் பீரங்கிகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய உயர்ந்தரஇனுப் பிரிட்டிஷ் பீரங்கிகள்கொண்டு வரப்படவில்லை; ஐந்து மடங்கு அதிகமான பிரிட்டிஷ் துருப்புகளும் பத்து மடங்கு அதிகமான பிரிட்டிஷ் பீரங்கிகளும் பதினைந்து தினங்களுக்கு முன்னதாகவே ஆண்டவர்ப்புக்கு வந்திருந்தால், அந்நகரம் நீடித்துக்காக்கப்படலாம்.


ஜெர்மானியர் உள்வரிசைக்கோட்டைகளை அணுகுதல்.

அக்டோபர் 2-ந்தேதி வெளிவரிசைக் கோட்டைகள் பிடிபட்ட பிறகு, பெல்ஜியத் துருப்புகள் நெதெ என்ற நதிக்குப் பின்னால் சென்று ஜெர்மானியரை முன்செல்லவிடாமல் தடுத்

துச் சண்டைசெய்தார்கள். வேலாம் என்ற கோட்டைக்கருகில் கெதே நதியைத்தாண்ட ஜெர்மானியர் முயற்சிசெய்தார்கள். அக்டோபர் 3-ந்தேதி இரவு அங்கு மிகமையான சண்டை நடந்தது. அந்நதிக்கரைக்குப் பின்னால் பெல்ஜியர் தங்கள் பீரங்கிகளை சாமர்த்தியமாய் மறைத்துவைத்த ஜெர்மானியரால் கட்டப்பட்ட பாலங்களை இடித்துவிட்டார்கள். ஜெர்மானியர் அதிக முறை பாலங்கட்டி நதியைத்தாண்ட முயற்சிசெய்தும் ஏராளமானஉயிர்ச் சேதமடைந்தார்கள். அக்டோபர் 4-ந்தேதி இரவு தென்கிழக்கிலுள்ள லீயர் என்ற கோட்டைக்கு அருகில் வேறு சில ஜெர்மன் துருப்புகள் கெதே நதியைத்தாண்ட முயற்சிசெய்தார்கள். அன்று இரவுமுழுவதும் 5-ந்தேதிபகலும்இரவும், ஜெர்மானியர்மிகுந்தஉக்கிரத்துடன் சண்டை செய்தார்கள். அங்கு பிரிட்டிஷ் துருப்புகளும் அரண்களிலிருந்துகொண்டு சண்டைசெய்தார்கள். ஜெர்மானியர் தங்கள் இலேசான பீரங்கிகளை அக்கரைக்கருகில் கொண்டு வந்து நேசப் படைகளின்மீண்கணிமிகவும் சேதப்படுத்திவிட்டார்கள். ஜெர்மானியர் தங்கள் பீரங்கிகளின் உக்கிரமான தெருப்பின் உதவியைக் கொண்டு பலமுறை நதியைத்தாண்டிச்சென்றும் நேசப்படைகளால் பின் தள்ளப்பட்டார்கள். கடைசியாக அக்டோபர் 6-ந்தேதி காலை 4 மணிக்கு மிகுந்த பலங்கொண்ட ஜெர்மன்படைகள் நதிபைத்தாண்டி புதிய அரண்களில் நிலைபெற்றன. அக்டோபர் 3-ந் தேதியி லிருந்து 6-ந்தேதிவரையில் நடந்த சண்டைக்கு முன்பும் பின்பும் பீரங்கிச் சண்டைகள் நடந்தனவேயொழிய ஜெர்மன் துருப்புகள் வேறு சண்டைகளைச் செய்யவிக்கில. ஜெர்மன்துருப்புகள்ஆண்ட்வர்ப்கோட்டைகளைப்பிடிப்பதற்காகச்செய்த முயற்சியில்அதுதான் முதற் சண்டையும் முடிவான சண்டையுமாகும். அக்டோபர் 6-ந்தேதிக்குப்பிறகு பெல்ஜியத்துருப்புகளும்பிரிட்டிஷ் துருப்புகளும் உள்வரிசைக்கோட்டைகளுக்குப் பின் வாங்கிச்சென்றார்கள். இந்த உள்வரிசைக் கோட்டைகள் பழய காலத்தில் கட்டப்பட்டவை யாகையால் அவைகள் அதிக நாள் சண்டையைத் தாங்காதென்று பெல்ஜிய சேனை எண்ணி ஆண்ட்வர்ப்பை விட்டு விலகிவிடுவதாக நிச்சயித்தது. பெல்ஜியக்காலாட் படைகளும் பிரிட்டிஷ்துருப்புகளும் வலுவான அரண்களைக்கட்டி அவைகளில் நிலைபெற்று சண்டை செய்தால் ஜெர்மானியரை சில தினங்கள் தடுத்து நிற்கலாம். சில தினங்கள் ஜெர்



மானஸ் சண்டையில் பிரிட்டிஷ் பீரங்கிக்காரர்கள் கடைசி வரையில் சண்டை செய்தல்.



ஆண்ட்வர்ப் கோட்டையில் பெல்ஜிய பீரங்கிகள்.



இந்தியக் குதிரைப்படை.



பிகானீர் மகாராஜா.



ஜோட்பூர் சமஸ்தானத்தை
ரீஜண்டாகிய ஸர் பிரதாபஸிங்.

மானியரைத் தடுத்துவிடலா மென்றுமுடிவில் ஆண்ட்வர்ப்பை நிச்சயமாய் இழந்துவிடவேண்டி வருமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் வீணான சண்டைகளில் உயிர்ச்சேதம் அடைவதையும் ஆண்ட்வர்ப் நகரம் ஜெர்மன் பிரங்கிகளால் நாசமாக்கப்படுவதையும் தவிர்க்கும் பொருட்டு, பெல்ஜியசேனையும் பிரிட்டிஷ் படைகளும் 6-ந்தேதி அந்நகரத்தினின்றும் விலகிச்செல்ல ஆரம்பித்தன.

ஆண்ட்வர்ப் நகரம் காலிசெய்யப்பட்டது.

பெல்ஜிய கவர்ன்மெண்டும் அந்நிய தேசப்பிரதிநிதிகளும் பெல்ஜிய ஜனங்களும் நகரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். பின்வாங்கிச் சென்ற நேசப்படைகளை ஜெர்மானியர் துரத்தாமலிருப்பதற்காக, உள்வரிசைக் கோட்டைகளில் சில நேசப்படைகள் நிலைபெற்று ஜெர்மானியரோடு சண்டைசெய்துகொண்டிருந்தன. பெல்ஜியக்குதிரைப் படைகள் ஆண்ட்வர்ப்பிலிருந்து மேற்கே கென்ட் நகரத்துக்குச் செல்கிற ரயில் பாதையைக் காத்துக்கொண்டிருந்தன. ஆஸ்டன்ட் என்ற பெல்ஜியத் துறைமுகத்திலிருந்து கென்ட் நகரம் வரையிலுள்ள பாதைகளைக் காப்பதற்கு புதிய பிரிட்டிஷ் படைகள் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டன. ஆகையால் ஆண்ட்வர்ப்பிலிருந்து பின்வாங்கிச்சென்ற பெல்ஜிய சேனையும் பிரிட்டிஷ் கடற்படைத் துருப்புகளும் மேற்கே கென்ட் வழியாய் பிரஞ்சு எல்லைமை நோக்கிச்சென்றன. அந்த வழியெல்லாம் நேசப்படைகளால் செவ்வையாய்க் காக்கப்பட்டுவந்தன. ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறபடி, ஜெர்மானியர் ஆண்ட்வர்ப்புக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தை வசப்படுத்திக்கொள்ள முயற்சிசெய்யா மலிருந்தார்கள். அதனால், பிரிட்டிஷ் கடற்படைத்துருப்புகளும் பிரிட்டிஷ் பிரங்கிகளும் ஆண்ட்வர்ப் கோட்டைகளுக்கு அனுப்பப்பட்டன; வேறு சில பிரிட்டிஷ் படைகள் ஆஸ்டன்ட் துறைமுகத்தைச்சுற்றியுள்ள பிரதேசத்தைக் காத்துவந்தன; ஆண்ட்வர்ப்பிலிருந்த பெல்ஜிய சேனையும் பிரிட்டிஷ் கடற்படைத் துருப்புகளும் பங்தோபஸ்தாப்பின்வாங்கிச் சென்று பிரஞ்சு எல்லைபை அடைந்தன. தவிர, பெல்ஜியசேனை 6-ந்தேதிபிலிருந்து ஆண்ட்வர்ப்புக்கு மேற்கே பின்வாங்கிச் செல்ல ஆரம்பித்த போது,ஜெர்மானியர் உள்வரிசைக்கோட்டைகளைத் தாக்கி பிடித்து ஆண்ட்வர்ப் நகரத்துக்குள் நுழைந்திருந்தால், பெல்ஜிய சேனையில் ஒரு பகுதியாவது பிடிபட்டிருக்கலாம். ஆனால் ஜெர்மன் சேனைபதி

யாகிய ஜெனரல் பிலிலர் தமது சாதாரண பிரங்கிகளை உபயோகித்து உள்வரிசைக் கோட்டைகளையும் அரண்களையும் தகர்த்துக்கொண்டிருந்தார். அங்கிருந்த பெல்ஜியத் துருப்புகளும் பிரிட்டிஷ் துருப்புகளும் மிகுந்த பிடிவாதத்துடன் சண்டைசெய்தன; ஜெர்மன் பிரங்கிகளால் ஏராளமான சேத முண்டானதைப் பொருட்படுத்தாமல் சேசப்படைகள் தங்கள் துப்பாக்கிகளையும் பிரங்கிகளையும் வெகு திறமையாய் உபயோகித்தன. ஜெர்மானியர் தங்கள் பிரங்கிகளால் உள்வரிசைக் கோட்டைகளையும் அரண்களையும் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேதப்படுத்தி வந்தார்கள். பெல்ஜிய சேனை ஆண்ட்வர்ப் நகரத்தை விட்டு மிகவும் சிறிது தூரம் செல்லும் வரையில், உள்வரிசைக்கோட்டைகளிலும் அரண்களிலும் மிருந்த சேசப்படைகள் ஜெர்மானியரை முன் செல்லவிடாமல் தடுத்து நிற்கவேண்டும். அவ்வாறே சேசப் படைகள் ஜெர்மானியரைத் தடுத்து நின்றன. ஜெர்மன் சேனைபதி உயிர்ச் சேதத்தைக் கருதாமல் தமது துருப்புகளைக்கொண்டு தாக்கியிருந்தால் உள்வரிசைக்கோட்டைகள் பிடிபட்டிருக்கும்; அப்போது பின்வாங்கிச் சென்று கொண்டிருந்த பெல்ஜிய சேனையின் ஒரு பாகமும் அநேக பெல்ஜிய பிரங்கிகளும் தளவாடங்களும் பிடிபட்டிருக்கும். ஆனல் ஜெர்மன் சேனைபதி தமக்கு நேர்கூடிய உயிர்ச் சேதத்தையே பிரதானமாகக் கருதினரென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவர் ஜெர்மன் துருப்புகளுக்கு நேரக்கூடிய உயிர்ச் சேதத்தைக் கூடுமான வரையில் குறைத்து எல்லா நடவடிக்கைகளையும் பிரங்கிகளாலேயே நடத்துவதாக நிச்சயித்தாரென்று தோன்றுகிறது. அச்சமயம் பிரஞ்சு எல்லைக்கும் ருஷ்ய எல்லைக்கும் ஏராளமான ஜெர்மன் துருப்புகளை அனுப்பிக்கொண்டிருந்தபடியால், ஆண்ட்வர்ப் ஸ்தலத்தை பிரங்கிகளாலேயே பிடிக்கவேண்டுமென்று ஜெர்மானியர் முயற்சிசெய்தார்கள்.

பெல்ஜிய சேனையை அழிக்கவேண்டுமென்று ஜெர்மானியர் முயற்சிசெய்ததாகத்தெரியவில்லை. பெல்ஜியம் பிரான்ஸ் இவ்விரண்டு பிரதேசங்களிலும் யுத்தஞ் செய்ய ஜெர்மானியருக்குப் போதுமான ஆள்பலமில்லை. ஆகையால் பெல்ஜிய சேனையை ஆண்ட்வர்ப்பிலிருந்து எவ்வாறுயினும் அப்புறப்படுத்தி பிரஞ்சு போர்க்களத்தக்குப்போய் விடும்படிச்செய்தால், அங்கு ஜெர்மானியர் தங்கள் முழுசைன்ய பலத்தையும் குவித்து யுத்தஞ் செய்யலாமென்று நினைத்தார்கள். ஜெர்மா

னியருக்கு மிகுந்த ஆபத்தை விளைக்கக்கூடிய ஸ்தானத்தில் ஆண்ட்வர்ப் கோட்டைகள் இருக்கின்றன. ஜெர்மன் எல்லையிலிருந்து ப்ரூஸல்ஸ் நகரத்தின்வழியாய் பிரஞ்சுபோர்க்களத்துக்குச்செல்கிற ரயில் பாதைகளுக்கு ஆண்ட்வர்ப்பிலிருந்த பெல்ஜியசேனை ஆபத்தைவிளைத்துக்கொண்டிருந்தது. ஆகையால் ஜெர்மானியர் தங்கள் பக்கவாட்டில் பெல்ஜிய சேனையை வைத்துக்கொண்டிருப்பதைவிட, பிரஞ்சு எல்லையில் மற்ற சத்துருக்களோடு அதைச் சேரும்படிச் செய்வது நலமென்று கருதினார்கள்.

ஜெர்மன் சேனாபதியாகிய ஜெனரல் வான் பெலிலர் உள்வரிசைக் கோட்டைகளைத் தாக்கிப்பிடிக்காமல் பிரங்கிகளால்மட்டும் தகர்த்துக்கொண்டிருந்தபோது, பெல்ஜியசேனை ஆண்ட்வர்ப் நகரத்தை விட்டுச்சென்றுகொண்டிருந்தது. ஆண்ட்வர்ப் நகரம் உடனே சரணமடையாவிட்டால் பிரங்கிகளால் தகர்க்கப்படுமென்று ஜெர்மன் சேனாபதி 6-ந்தேதியன்று அந்நகரத்தின் அதிகாரிக்கு அறிவித்தார். அன்றுதினம் பெல்ஜியசேனை நகரத்தை விட்டுப் புறப்பட்டுப் பின்வாங்கிச்சென்று கொண்டிருந்தபடியால் நகரத்துக்குள் ஜெர்மானியரை விடுவது சாத்தியமல்ல. ஆகையால் நகரத்து அதிகாரி, ஜெர்மன் பீரங்கிகளால் நேர்கூடிய சேதத்தைச் சகித்துக்கொள்ளச் சித்தமாயிருந்தார். பிறகு ஜெர்மன் சேனாபதி அந்நகரத்தைத் தாக்க நிச்சயித்து விட்டபடியால், அந்நகரத்தின் விவரங்களைக் காட்டும் படத்தைக் கொடுக்கும்படியும் அப்படத்தில் மதிப்புள்ள கட்டிடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலியவைகளைக் குறிப்பிடும்படியும் ஜெர்மன் சேனாபதி கேட்டார். நகரத்தைப் பீரங்கிகளால் தகர்க்கும்போது, முக்கிய கட்டிடங்களைச் சேதப்படுத்தாமலிருக்க வேண்டுமென்பது ஜெர்மன் சேனாபதியின் நோக்கமாகும். நகரத்தின் விவரங்களைக் காட்டும் படம் ஒவ்வொரு ஜெர்மன் பீரங்கிக் காருக்கும் கொடுக்கப்பட்டது. இதற்குள்ளாக பெல்ஜியத் துருப்புகளும் பிரிட்டிஷ் துருப்புகளும் நகரத்தை விட்டு சிக்கிரமாய் விலகிச் சென்றார்கள். ஆண்ட்வர்ப் துறையிலிருந்த 30 வியாபாரக் கப்பல்களை ஜெர்மானியர் பிடித்துக் கொள்ளாமலிருப்பதற்காக, பெல்ஜியத் துருப்புகள் அக்கப்பல்களைச் சேதப்படுத்தி விட்டார்கள். ஜெர்மானியருக்கு உபயோகமாயிருக்கக்கூடிய சகலசாமான்களையும் பெல்ஜியத்துருப்புகள் நாசஞ்செய்தார்கள். நகரத்தில் மூன்று பெரிய எண்ணெய்த்

தொட்டிகளிருந்தன. எண்ணெயை வெளியே கொட்டிவிடும்படியாக அத்தொட்டிகளில் துவாரங்கள் செய்யப்பட்டன. அத் தொட்டிகளே சீக்கிரத்தில் அவ்வாறு காலிசெய்யமுடியாதென்று கண்டு பெல்ஜியத் துருப்புகள் எண்ணெய்க்குத் தீவைத்தார்கள். பெல்ஜியத்துருப்புகள் ஆண்ட்வர்ப் கோட்டைகளைக் காத்தபோது, அத்துருப்புகளும் பிரங்கிகளும் சத்துருக்களைச் செவ்வையாய்ப் பார்த்துச் சுடுவதற்காக அநேக கட்டடங்கள் இடிக்கப்பட்டன. ஆண்ட்வர்ப்பைச் சுற்றிலும் 10,000 கட்டடங்கள் அவ்வாறு பெல்ஜியத் துருப்புகளால் இடிக்கப்பட்டன. ஆண்ட்வர்ப் நகரத்தில் பலவகையான காட்டுமிருகங்கள் காக்ஷிச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஜெர்மன் பிரங்கிகளால் காட்டுமிருகங்களின் கூடுகள் உடைந்து போய் மிருகங்கள் தப்பியோடி விட்டால் ஆபத்து நேரிடுமென்று நினைத்து பெல்ஜியர் அம்மிருகங்களைச் சுட்டுக் கொன்றார்கள். அவ்வாறு நான்கு பெரிய சிங்கங்கள் உயிர்துறந்தன. அக்டோபர் 7-ந்தேதி இரவு ஜெர்மானியர் நகரத்தின் மீது குண்டுகளை எறிந்தார்கள். அப்போது ஜெர்மானியர் பெரிய பிரங்கிகளை உபயோகிக்கவில்லை. சாதாரண பிரங்கிகளிலிருந்து ஷார்ப்னல் குண்டுகளைமட்டும் சுட்டார்கள். அந்த குண்டுகள் நகரத்தின் மேல் ராவைகளை வாரியெறிந்தவே யொழிய கட்டடங்களை அதிகமாய்ச் சேதப்படுத்தவில்லை. நகரவாசிகள் பீதி அடையவேண்டுமென்றும் நேசத்துருப்புகள் நகரத்திலிருந்து வெளியே செல்லும்போது சேதமடைய வேண்டுமென்றும் ஜெர்மானியர் ஷார்ப்னல் குண்டுகளை மட்டும் உபயோகித்தார்கள். ஆனல் 7-ந்தேதிக்கு முன்னதாகவே பெல்ஜியசேனை நகரத்தினின்றும் விலகிப்போயிற்று. ஆயினும், எல்லாத் துருப்புகளும் அவ்வாறு பத்தோபஸ்தாய்ப் போய்விடவில்லை. உள்வரிசைக் கோட்டைகளில் சண்டைசெய்து கொண்டிருந்த சில பெல்ஜியத் துருப்புகளும் பிரிட்டிஷ் கடற்படைத் துருப்புகளும் பின்வாங்கிச் செல்ல முயன்றபோது பெரிய ஆபத்துக்கு உள்ளாயினர்.

நேசப் படைகள் பின்வாங்கியது.

அதன் விவரத்தைச் சொல்வோம். அக்டோபர் 6-ந் தேதியன்று ஆண்ட்வர்ப் நகரம் சரணமடைந்தால் பெரிய பிரங்கிகளால் நகர்க்கப்படுமென்று ஜெர்மன் சேனபதி அறிவித்தபோது, அதற்கு அந்நகரத்து அதிகாரி, நகரத்தை ஜெர்மானியரிடம் ஒப்புவிக்கமறுத்து

விட்டாரென்று சொல்லியிருக்கிறோம். நகரத்து அதிகாரி அவ்வாறு மறுத்துவிட்டதற்குக்காரணம், அச்சமயம் பெல்ஜியசேனை பின்வாங்கிச் சென்றுகொண்டிருந்ததாகும். அதை அறிந்துகொண்ட ஜெர்மன் சேனபதி ஆண்ட்வர்ப்புக்குமேற்கிலுள்ள ரயில்பாதையைப் பிடித்து பெல்ஜியசேனையைப் பின்வாங்காமல் தடுக்கலாமென்று முயற்சிசெய்தார். சில ஜெர்மன் படைகள் ஆண்ட்வர்ப்புக்கு மேற்கிலுள்ள ரயில் பாதைகளைத் தாக்கி அங்குகாவல் செய்துகொண்டிருந்த பெல்ஜியத் துருப்புகளோடு சண்டைசெய்தன. அக்டோபர் 9-ந்தேதி மாலை லாகரன் என்ற ரயில்வேஸ்டேஷன் ஜெர்மன் துருப்புகளால்பிடிக்கப் பட்டது. அதற்குள்ளாக பெல்ஜிய சேனையின்பெரும் பாகமும்பின் வாங்கிச் சென்றுவிட்டன. ஜெர்மன்சேனபதி அதிக பலங்கொண்ட படைகளை அனுப்பி அந்த ரயில்பாதையை ஒருதினம் முன்னதாகப் பிடித்திருந்தால் பெல்ஜியசேனை முழுவதையும் பிரிட்டிஷ்படைகளை யும் வழியில்பிடித்திருப்பார்; அல்லதுஅவைகளை கிழக்குத் திசையி லுள்ள ஹாலண்ட்தேசத்தில் ஓடிப்போகும்படிச் செய்திருப்பார். ஆனல் பெல்ஜிய சேனையும் பிரிட்டிஷ்படைகளும் அவ்வளவு சீக்கிர மாக ஆண்ட்வர்ப்பைக் கைவிட்டுச் செல்லாமல் நாட்பட நின்று சண் டை செய்வார்களென்று ஜெர்மன் சேனபதி தவறாய் நினைத்தார். ஜெர்மன் சேனபதி அநேக தவறுதல்களைச் செய்து சுறுசுறுப்புக் காட்டாமலிருந்த போதிலும், அவர் முற்றிலும் தோல்விஷ்ட சாலி யல்ல. அக்டோபர் 9-ந்தேதி பெல்ஜிய சேனபதியின் உத்தரவுப் படி ஆண்ட்வர்ப் பிலிருந்த நேசத் துருப்புகள் நகரத்தை விட்டு மேற்காய்ச்சென்றபோது, கடையாகச்சென்ற துருப்புகள் ஷெல்ட் நதியைத் தாண்டிச் சென்றவுடன் அந்நதியின் மேலிருந்த பாலத்தை வழக்கம் போல் உடைத்து விட்டனர். அன்று தினம் காலை 8-மணிக்கு அந்நகரத்து அதிகாரி ஜெர்மன்சேனபதியிடஞ் சென்று நகரத்தை ஒப்புவித்தார். ஜெர்மன்படைகள் நகரத்தில் பிரவேசிப்ப தற்காகத் தயார்செய்து கொண்டிருந்தனர். அதற்குள்ளாக, ஆண்ட் வர்ப்புக் குத்தெற்கில் உள்வரிசைக் கோட்டைகளில் சண்டைசெய்து கொண்டிருந்த பிரிட்டிஷ் கடற்படைத் துருப்புகள் எந்தக் காரணத் தினலோ பின்வாங்கிச் செல்லும்படி உத்தரவைப் பெறத்தவறி விட் டனர். தென்கிழக்கிலிருந்த பிரிட்டிஷ் துருப்புகளுக்கு உத்தரவு கிடைத்து காலக்கிரமத்தில் பின் வாங்கிவிட்டார்கள். ஆனல் தெற்கி லிருந்த 2000பிரிட்டிஷ் துருப்புகள் பின்வாங்கிச் செல்லும்படி உத்

தாவைப்பிரும்ததால் அங்கேயே இருந்து கொண்டு சண்டைசெய்தனர். பிறகு மற்றகோட்டைகளும் அரண்களும் நகரமும் முற்றிலும் காலிசெய்யப்பட்ட விஷயம் தெரிந்தவுடன், அந்த 2000பிரிட்டிஷ் துருப்புகளும்எவ்வித உத்தரவில்லாமல் தாங்களாகவே பின்வாங்கிச் செல்ல ஆரம்பித்தனர். அவர்கள் நகரத்துக்கு மேற்கில் சென்ற தும் ஷெல்ட் நதியின் பாலம் உடைக்கப்பட் டிருந்ததால் அதைத் தாண்ட முடியவில்லை. பிறகு அவர்கள் சில படகுகளைக் கண்டெடுத்து அவைகளின் உதவியைக்கொண்டு அந்நதியைத் தாண்டி ஒரு ரயில் வண்டித்தொடரில் ஏறிக்கொண்டு லாகரன் ரயில்வேஸ்டேஷனுக்கருகில் சென்றுகொண்டிருந்தார்கள். அங்கு ஜெர்மன் துருப்புகள் ரயில் பாதையை வசப்படுத்திக் கொண்டார்களென்று தெரியவந்ததால், அந்த 2000 பிரிட்டிஷ்துருப்புகளும் வடக்கே ஹாலண்ட்தேசத்துக்குச் சென்று, பலதேச சட்டப்படி, அத்தேசத்து அதிகாரிகளிடம் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு சரணமடைந்தார்கள். அதன் பிறகு 600 பிரிட்டிஷ் துருப்புகள் கொண்ட மற்றொரு பட்டாளம், முன் சொல்லப்பட்டபடியே உத்தரவில்லாமல் தப்பித்துக்கொள்ள முயன்றது: அந்த பிரிட்டிஷ் துருப்புகள் ஷெல்ட் நதியைத் தாண்டினர்கள். அங்கு ஒரு ரயில் வண்டித்தொடரில் அநேக நகரவாசிகள் ஏறிக் கொண்டு பிரயாணஞ் செல்லத் தயாராயிருந்ததைக் கண்டு, 600 துருப்புகளும் அந்த ரயிலில் ஏறிக்கொண்டு சிறிதுதூரம் சென்றார்கள். ஆனால் அதற்குள்ளாக ஜெர்மன் துருப்புகள் லாகரன் என்ற ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு ஆண்ட்வர்ப்புக் கருகில் வந்து கொண்டிருந்தார்கள். ஜெர்மன் துருப்புகள் ரயில் வண்டிகளின் மீது சுடவே அவைகளிலிருந்த சாமான்ய ஜனங்கள் சேதமாவார்களென்று எண்ணி, 600 பிரிட்டிஷ் துருப்புகளும் ஜெர்மானியரிடம் சரணமடைந்தனர். ஆண்ட்வர்ப் சண்டையில் பிரிட்டிஷ் கடற்படைத் துருப்புகளில் சுமார் 3000 பேர் சேதமானார்கள். அதன் விவரம்:— 2000 பேர் ஹாலண்ட் தேசத்தில் சரணமடைந்தார்கள்; 967 துருப்புகளைப்பற்றி யாதொரு தகவலும் தெரியவில்லை; சண்டையில் 32 பேர் கொல்லப்பட்டும் 189 பேர் காயம்பட்டும் போனார்கள்.

ஜெர்மானியர் ஆண்ட்வர்ப் நகரத்துக்குள் அக்டோபர் 9-ந்தேதி நடுப்பகலில் பிரவேசித்தார்கள். 12-ந்தேதி யன்றுதான் மேற்கிலுள்ள கெண்ட் நகரத்தை வசப்படுத்திக்கொண்டார்கள். 15-ந்

தேதி யன்றுதான் வடமேற்கிலுள்ள ப்ருஜஸ் நகரத்தை வசப் படுத்திக் கொண்டார்கள். ஆகையால், ஆண்ட்வர்ப் நகரம் 9-ந் தேதி பிடிபட்ட போதிலும், 16-ந் தேதி யன்றுதான் பெல்ஜியத்தின் கடற்கரையோரத்திலுள்ள பிரதேசம் ஜெர்மானி யரால் வசப்படுத்தப்பட்டது. அவ்வாறு சேர்ந்த காலதாமதத்தால் பெல்ஜிய சேனையும் பிரிட்டிஷ் படைகளும் இப்ரிஸ் நகரத்தை நோக் கிச்சென்று, அங்கு சண்டை செய்துகொண்டிருந்த பிரஞ்சு பிரிட் டிஷ் சேனைகளுடன் சேர்ந்து கொண்டன. ஜெர்மானியர் ஆண்ட் வர்ப்பைப் பிடித்ததால் பெல்ஜிய சேனையின் வன்மையை எவ்விதத் திலும் குறைக்கமுடியவில்லை; பெல்ஜியத்தின் வடக்குப் பிரதேசத் திலிருந்து ஜெர்மானியர் தங்கள் சத்துருக்களை அப்புறப்படுத்தி, தங்களுடைய போக்குவரத்து வழிகளை பத்திரப்படுத்தி கொண்டதைத் தவிர வேறெவ்விதப் பலனையும் அடையவில்லை. ஆண்ட் வர்ப்பிலும், லீபர்க் என்ற பெல்ஜிய துறைமுகத்திலும் ஜெர்மானியர் புதிய சப்மரின் கப்பல்களைக் கட்டி இங்கிலீஷ் கடலில் வியாபாரக் கப்பல்களுக்கு இடைஞ்சல் செய்து வந்தார்கள். அந்த ஸ்தலங்க ளில் ஜெப்பலின் என்ற ஆகாயக் கப்பல்களையும் பத்திரப்படுத்தி வைத்து உபயோகித்தார்கள்.

39-வது அத்தியாயம்.

இந்தியாவும் குடியேற்ற நாடுகளும் நேசக்கக்ஷிக்குச் செய்த உதவிகள்.

குடியேற்ற நாடுகள்.

ஐரோப்பிய மகா யுத்தத்தில் பிரிட்டிஷார் கலந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டவுடன் உலகமெங்கும் சிதறி யிருக்கிற பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் அளவற்ற தேசாபிமானமும் ராஜவிசுவாச மும் தோன்றின. ஜனங்களனைவரும் தங்கள் உள்நாட்டு விவகாரங் களையும் மனஸ்தாபங்களையும் உடனேயிலக்கிவைத்து, தாய்நாடாகிய கிரேட்பிரிட்டனை முற்றிலும் ஆதரிக்க நிச்சயித்தார்கள். ஜனங்கள் சேனையில்சேர்ந்து போர்முனைக்குச்செல்லத் தாங்களாக முன்வந்தார் கள்; திரவிய சகாயமும் செய்வதாக அறிவித்தார்கள். கானடாவி

உள்ள ஓர் நகரத்தில் குடியேறிய 12,000 ஜெர்மானியருங்கூட நிரவிய சகாயஞ் செய்வதாக அறிவித்தார்கள். ஜெர்மானியர் இன்னு மதிக சிறப்பு வாய்ந்த ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்குமாறு ராணுவ பயித்தியத்தினின்றும் அவர்களை விடுவிக்கவேண்டுமென்று கோருவதாக கானடாவி லுள்ள ஜெர்மானியர் அறிவித்தார்கள். தென்னப்பிரிக்காவிலுள்ள போவர்களும் ஆங்கிலேயர்களும் தாங்கள் நாட்டைத் தாங்களே காத்துக்கொள்ள ஏற்பாடு செய்து அங்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு வைத்திருந்த படைகளை போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டார்கள். இந்தியாவி லிருந்து ஹிந்து முகம மிய துருப்புகளும் போர்க்களத்துக்குச் செல்ல ஆயத்தமாயின. பிரிட்டிஷ் குடியேற்றநாடாகிய, நியூ ஜீலண்டி லுள்ள மேயோரி என்ற தேசவாசிகளும், ஆப்பிரிக்காவி லுள்ள அநேக காட்டு ஜாதியாரும் போர்க்களத்துக்குச் செல்லத் தயாரா யிருப்பதாக அறிவித்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அதுவரையில் கலக்கிவந்த அநேக சிக்கலானவிவாதங்க ளெல்லாம் உடனே மறைந்துபோயின.

பிரிட்டிஷ் குடியேற்ற நாகளின் உதவி.

யுத்தந் தொடங்கியவுடன் கானடாவில் 33,000 துருப்புகள் தயார் செய்யப்பட்டன. ஜனங்கள் ஆயிரக் கணக்காய் சேனையில் சேர்வதாக முன்வந்தபோதிலும், அவர்களுக்குத் தேவையான யுத்த தளவாடங்களைச் சேகரிப்பது கஷ்டமா யிருந்தது. ஆகையால் ஆரம்பத்தில் 33,000 பேர்களே சேர்க்கப்பட்டார்கள். அந்த படைக்கு வேண்டிய பீரங்கிகளும் மோட்டார்வண்டிகளும், வெடிமருந்து வண்டிகளும், வைத்திய சாமான்களும் தயார் செய்யப்பட்டன. மொத்தம் 31,250 பேர்களும், 7,500 குதிரைகளும் சேர்க்கப்பட்டு 32 கப்பல்களில் புறப்பட்டன. இந்தப் புதிய சேனைப்பற்றிய விவரங்களெல்லாம் மிகவும் இரகஸ்யமாய் வைக்கப்பட்டன. கானடா தேசத்துப் பத்திரிகைகளில் எந்த விவரமும் வெளி வராதபடி காக்கப்பட்டது. இங்கிலாந்திலுள்ள பத்திரிகைகள் கானடா துருப்புகளின் புறப்பாட்டைப் பற்றி எதுவும் சொல்லக்கூடா தென்று உத்தரவிடப்பட்டன. கானடாதேசத்துப்பத்திரிகைகள் இங்கிலாந்துக்கு வராமல் தடுக்கப்பட்டன. ஜெர்மன் யுத்த கப்பல்கள் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் சஞ்சாரஞ் செய்துக்கொண் டிருந்தபடியால் அவ்வளவு இரகஸ்யம் பாராட்ட வேண்டியது அவசியமாயிற்று.

கானடாத் துருப்புகளை ஏற்றிச்சென்ற 32 கப்பல்கள் மூன்று வரிசையாக நிலைபெற்று, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் 19 தினங்கள் பிரயாணஞ் சென்று பிரிட்டிஷ் யுத்த கப்பல்களால் காக்கப்பட்டு இங்கிலாந்தி லுள்ள பிளிமத் என்ற துறைமுகத்துக்கு 1914-ம்ஹு அக்டோபர் 15-ந்தேதி வந்துசேர்ந்தன. இங்கிலாந்திலுள்ள சாலிஸ்டரி பிளேயின் என்ற பெரிய மைதானத்துக்கு கானடாத் துருப்புகள் கொண்டுபோகப்பட்டனர். அவர்கள் உடனே யுத்த களத்துக்குப் போவதைவிட, சிறிதுகாலம் ராணுவப் பயிற்சி பெற்றுக்கொள்வது நலமென்று தீர்மானிக்கப்பட்டபடியால், அந்த பெரிய மைதானத்தில் அவர்கள் தங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கானடாத் துருப்புகளில் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து இம்மூன்று நாடுகளிலிருந்து குடியேறிய ஜனங்கள் கலந்திருந்தார்கள். பற்பல அந்தஸ்தி லுள்ளவர்களும் அதிற் சேர்ந்திருந்தார்கள். மாணுக்கர்களும், வர்த்தகர்களும், பத்திராகிரியர்களும், சுரங்கத்தில் வேலை செய்பவர்களும், ரயில்வேக்களில் வேலை செய்பவர்களும், வேட்டையாடுந் தொழிலில் தேர்ச்சிபெற்றவர்களும், மாடு மேய்ப்பவர்களும் கலந்திருந்தார்கள். கானடாதேசம், திருக்த மான மனித சஞ்சாரமற்ற காட்டுப் பிரதேசங்களையும் செழிப்பான பூமிகளையும் பெற்றிருக்கிறது. அங்கு வேட்டைத் தொழிலும், கால் நடைகளை மிருத்தி செய்யும் தொழிலும், மிகுதியாய்க் காணப்படுகின்றன. அத்தேசத்தார் பரந்த வெளிகளில் காலங் கழிப்பதால் சுயபுத்தியும், தன் னம்பிக்கையும், சுதாகரிக்கும் சக்தியும், தேகவன்மையும் பெற்றவர்கள். ஆனல் அவர்கள் ராணுவத்தின் கண்டிப்பான ஒழுங்குகளை அனுபவத்தில் அறியாதவர்களாகையால், இங்கிலாந்துக்கு வந்த அநேக வாலிபர்கள் ராணுவ ஒழுங்குகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்ற விஷயத்தைப் புத்தாய்க் கற்றுக் கொள்ளும்படி நேர்ந்தது. கானடா தேசத்துத் துருப்புகளை உடனே போர்க்களத்துக்கு அனுப்பவேண்டுமென்று பொது அபிப்பிராயம் பலமாயிருந்தபோதிலும், அவர்களைச் சிறிதுகாலம் பயிற்றுவித்தபிறகே போர்க்களத்துக்கு அனுப்பவேண்டு மென்று லார்ட் கிச்னர் செய்த தீர்மானம் அவருடைய மதியூகத்தையும் ராணுவ அனுபோகத்தையும் காட்டுகிறது. இரண்டாம் முறை 17,000 துருப்புகளைச் சேர்த்து கானடா கவர்ன்மெண்டு இங்கிலாந்துக்கு அனுப்

பினர்கள். அவ்வாறு மொத்தம் ஒரு லக்ஷம் துருப்புகளை யுத்த களத்துக்கு அனுப்புவதாக கானடா கவர்ன்மெண்டு நிச்சயஞ்செய்து, ஜனங்களை ராணுவத்தில் பயிற்சி செய்து அவர்களுக்குத் தேவையான யுத்த தளவாடங்களையும் சேகரிக்கத் தொடங்கினர்கள்.

மற்றொரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய ஆஸ்டிரேலியாவிலும், ஜனங்கள் மிகுந்த ஒற்றுமைகொண்டு பிரிட்டிஷாரை ஆதரிக்க முன்வந்தார்கள். இந்த மகா யுத்தந் தொடங்குவதற்குச் சில வருஷங்களுக்குமுன்னால் ராணுவப் பதிவு சட்டம் ஆஸ்டிரேலியாவிலும் அதற் கருகிலுள்ள மற்றொரு குடியேற்ற நாடாகிய நியூ ஜீலண்டிலும் விதிக்கப்பட்டது. அதன் அவசியமும் கன்மைகளும் கிரேட் பிரிட்டன் உராம விருந்துவிடக் கூடிய நிலைமையி லிருந்தபோதிலும், ஆஸ்டிரேலியா தானிருந்த நிலைமையைக் கருதி அவ்வாறிருந்துவிடுவதற்கில்லை. பலிபிக் மகாசமுத்திரத்தில் ஜப்பான்தேசம் மிகுந்த கடற்படை வன்மை பெற்று அதன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பரவச்செய்துவிட்டபடியால், ஆஸ்டிரேலியா தன் நிலைமையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. அப்போதுதான் ஆஸ்டிரேலிய கவர்ன்மெண்டு தங்கள் ஜனங்களை ராணுவத்தில்பயிற்றுவித்து தங்கள்நிலைமையை வலுப்படுத்திக்கொள்ளத்தீர்மானித்தார்கள். ஆஸ்டிரேலியா, நியூஜீலண்ட் ஆகிய இவ்விரண்டு நாடுகளுக்குச் சென்று குடியேறிய பிரிட்டிஷார், ஜனசுதந்தரத்தை அஸ்திவாரமாகக் கொண்ட ராஜாங்க ஸ்தாபனங்களில் அளவற்ற பிரியங்கொண்டவர்கள். அப்படிப்பட்ட ராஜாங்க ஸ்தாபனங்களில் முதன்முதலாக பரிக்ஷை செய்யத் தொடங்கிபவர்கள் அந் நாட்டார்தான். அவ்வாறிருந்தும் ஜனசுதந்தரத்துக்கு மாறுக வுள்ளதென்று கருதப்படும் ராணுவப் பதிவு சட்டத்தை பிரிட்டிஷ் ஜாதியாருக்குள் அவர்கள்தான் முதன்முதலாக விதித்தவர்களாவார்கள். அவ்விரண்டு நாடுகளிலும் ஒரேமாதிரியான ராணுவ முறை அனுசரிக்கப்படுகிறது ஆயினும் அந்த ராணுவசட்டம் அமுலுக்கு வந்து சில வருஷங்களே ஆகிறபடியால் அதன் முழுப் பலனும் உண்டாவதற்குள்ளாக இந்த மகாயுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

இந்த மகா யுத்தத்தில் கிரேட்பிரிட்டனுக்கு உதவிசெய்ய ஆஸ்டிரேலிய கவர்ன்மெண்டு 20,000 துருப்புகளைச் சேர்த்தனுப்பினர்கள். அந்த துருப்புகள் ஆஸ்டிரேலியாவை விட்டுப் புறப்

பட்டபோது மிகுந்த இரகஸ்யம் பாராட்டப்பட்டது. ஏனெனில் அச்சமயம் ஜெர்மன் கப்பற்படை பலியிக் மகா சமுத்திரத்தில் இருந்து வந்தது; இந்திய சமுத்திரத்தில் போபோன எம்டன் கப்பல் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தது. ஆஸ்டிரேலியத் துருப்புகள் கப்பல்களில் ஏறி கடல்களைக் கடந்து வந்தபோது ஆஸ்டிரேலிய யுத்த கப்பலாகிய மிட்னி காவல் செய்துகொண்டு வந்தது. இந்திய சமுத்திரத்திலுள்ள கொகோஸ் தீவுக்கருகில் வந்ததும், ஜெர்மன் யுத்த கப்பல்கள் அருகிலிருக்கின்றன வென்றும் வழியில் கடற்சண்டைகளைச் செய்துகொண்டு வைத்திருக்கிறார்கள் என்றும் ஜப்பானியர் எச்சரிக்கை செய்தார்கள். கொகோஸ் தீவுக்கருகில் போய்க்கொண்டிருந்த தினம் இரவு 8 மணிக்கு கப்பல்தலைவர்கள் திடீரென்று அபாய சமிக்ஞை கொடுத்தார்கள். கப்பலிலிருந்த துருப்புகள் மிதக்கும் கருவியை மாட்டிக்கொண்டு கடலில் குதித்துவிடத் தயாராயிருக்கவேண்டு மென்று உத்தரவு செய்யப்பட்டது. கப்பலிலிருந்த விளக்குகளெல்லாம் அணைத்து விடப்பட்டன. அன்றிரவு மேகம் மூடிக்கொண்டு மிகவும் இருட்டாயிருந்ததால் பக்கத்திலுள்ள வஸ்துக்களும் கண்ணுக்குத் தெரியவில்லை. அவ்வாறு துருப்புகள் நிசப்தமாய் கவலையுடன் கப்பல்மேடையில் நின்றுகொண்டு எவ்விதஆபத்துக்கும் தயாராயிருந்தபோது வெகு தூரத்தில் பீரங்கி சப்தம்கேட்கத் தொடங்கியது. உடனே இருட்டைவிடக்கறுப்பான யுத்தகப்பல்கள் கடலில் அங்குமிங்கும்சென்றுகொண்டிருந்தன பிறகு அன்றிரவு ஆஸ்டிரேலிய துருப்புகளுக்கு எவ்வித ஆபத்தும் சம்பவிக்கவில்லை. மறுநாட் காலை முழு விவரங்களும் துருப்புகளுக்குத் தெரியவந்தன. ஆஸ்டிரேலிய குருஸர் மிட்னி, போர்போன எம்டன் அன்றிரவு சங்கித்து கடலில் அமிழ்த்திவிட்டதாக வெளியாயிற்று,

ஆஸ்டிரேலியத் துருப்புகள் இந்திய சமுத்திரத்தைக் கடந்து ஈஜிப்டில் வந்திறங்கினார்கள். அச்சமயம் துருக்கி இந்த மகா யுத்தத்தில் சேர்ந்துகொண்டதால், ஆஸ்டிரேலியத் துருப்புகள் ஐரோப்பாவுக்கு அனுப்பப்படாமல் ஈஜிப்டிலேயே வைக்கப்பட்டனர்.

இந்த மகா யுத்தத்தில் இந்தியர் செய்த பேருதவி.

யுத்தத்தின் பொருட்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு உதவி செய்கிறதாக இந்திய மன்னர்களும் பொது ஜனங்களும் செய்த வாக்குறுதிகளைத்தொகுத்துக்கூறி ராஜப்பிரதிநிதி பிரிட்டிஷ்கவர்ன்

மெண்டுக்கு அறிவித்தார். இந்தியா உதவி மந்திரி மிஸ்டர் சார்லஸ் ராபர்ட்ஸ் 1914 ஸெப்டம்பர் 9-ந்தேதி அந்த ஸ்டேட்மெண்டை காமன்ஸ்சபை முன் காண்பித்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு:—

"இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் பொருட்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குப் பலவாறு உதவி செய்கிறதாக இந்திய மன்னர்களும் பொது ஜனங்களும் வாக்குறுதி செய்திருக்கிறார்கள். இந்தியாவில் பெரியோர்களும் சிறியோர்களுமாக தேச மன்னர்கள் 700 பெயர்கள் இருக்கிறார்கள். யுத்தத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு உதவி செய்கிறதற்காகத் தங்களுடைய சமஸ்தானங்களின் ஐசுவரியங்களையெல்லாம் கொடுத்து, தாங்களும் சரீரத்தால் செய்யக்கூடிய ஊழியங்களைச் செய்ய அவர்கள் எல்லோரும் முன் வந்திருக்கிறார்கள். போருக்குப் போகத் தயாராயிருப்பதாக அறிவித்துக் கொண்ட மன்னர்களிலிருந்து, ஜோட்பூர், பிகானீர், பிருஷ்னைர், ரட்லம், ஸாகின், பாடியாலா, ஆகிய சமஸ்தான மன்னர்களையும், ஜோட்பூர் ரீஜெண்டாகிய ஸர் பிரதாப ஸிங்கையும், போபால் சமஸ்தானத்து இளவரசரையும் கூச்பிஹார் சமஸ்தானத்து மன்னரின் ஸகோதரரையும், பெரிய குடும்பங்களைச் சேர்ந்த வேறு அநேக இளையவர்களையும் யுத்தத்துக் கனுப்ப ராஜப் பிரதிநிதி பொறுக்கி எடுத்திருக்கிறார். நீர புருஷனுகிய ஸர் பிரதாபஸிங்குக்கு இப்பொழுது 70 வயதாகிறது. ஆயினும் ராஜ சக்கரவர்த்தியின் சேவகத்தை மேற்பூண்டு உழைப்பேன் என்று அவர் சொல்லுகையில், எப்படி அதை மறுக்கக்கூடும்! அவருடைய சகோதரர்மகனுகிய ஜோட்பூர் மகாராஜவும் அவருடன் கூடப் போகிறார். (ஜோட்பூர் மகாராஜா மைனராகையால் அவருக்குப் பதிலாக ஸர் பிரதாப ஸிங் அந்த சமஸ்தானத்தை ஆண்டு வருகிறார்.)

இவர்கள் எல்லோரும் சேனுதிபதியின் அங்கீகாரத்தின்மேல் போருக்குச் செல்லும் சேனையைச் சேர்ந்துவிட்டார்கள். குவாலியர் சமஸ்தானத்து ஸிந்தியா மகாராஜாவும், ஜோரா, தோல்பூர் என்ற சமஸ்தானுதிபதிகளும் பலன்பூர் சமஸ்தானத்து இளவரசரும் தங்கள் தங்களுடைய சமஸ்தானங்களை விட்டுப்போக முடியாமல் தடையேற்பட்டு விட்டதாக மிகவும் வருத்தப்படுகிறார்கள். இந்தியாவிலுள்ள தேசசமஸ்தானங்களில் பெரியவையாகிய இருபத்தேழு

சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு யுத்த சமயத்தில் உதவவேண்டி அதற்கென்று ஸைன்யங்கள் வைத்திருக்கின்றன. ஒவ்வொரு விதமான தருப்புகளுமுள்ள அந்த ஸைன்யங்களை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு உபயோகித்துக் கொள்ளலாமென்று யுத்தம் ஆரம்பமானவுடன் அவர்களெல்லோரும் அறிவித்துவிட்டார்கள். அந்த 27 சமஸ்தானங்களில் 12சமஸ்தானங்களுடையகுதிரைப் படைகள், காலாட் படைகள், அரண்கட்டும் படைகள், சாமான் கொண்டுபோகும்படைகள் ஆகிய இவைகளையும் பிக்கானீர் சமஸ்தானம் உதவின ஒட்டகப்படையையும்ராஜப்பிரதிநிதி ஏற்றுக்கொண்டுவிட்டார். அப்படைகள் எல்லாம் கப்பலேறிப் போய்விட்டன. தேச மன்னர்களின் உதார குணத்தையும் ராஜ பக்தியையும் காட்டும் பொருட்டு இரண்டொரு விஷயங்களை உதாரணமாக எடுத்துச் சொல்லலாம்:— அநேக சமஸ்தானாதிபதிகள் சேர்ந்து போருக்குச் செல்லும் சேனையின் உபயோகத்துக்கு ஹாஸ்பிடல் கப்பல் ஒன்று சேகரஞ் செய்து தருவதாக மூன் வந்திருக்கிறார்கள். அந்தக் கப்பலுக்கு "லாயல்டி" (ராஜபக்தி) என்று பெயர். போருக்குப் போகும் சேனையின் உபயோகத்துக்காக பைசூர் மகாராஜா 50 லட்சம் ரூபாய் உதவியிருக்கிறார்.

பஞ்சாப் மாகாணத்தி லுள்ள ஹொஹாரு சமஸ்தானமும், பலுச்சிஸ்தானத்திலுள்ள லாஸ்பேலா, கிலட்என்ற பட்டணங்களும் ஒட்டகங்களையும் அவைகளை ஓட்ட ஆட்களையும் அனுப்பிவைப்பதுடன், அவைகளின் செலவுகளையும் தாங்களே பொறுத்துக் கொள்கிறதாக ஒப்புக் கொண்டிருக்கின்றன. அவசியமிருந்தால் இன்னும் தருப்புகள் சேர்த்துக் கொடுப்பதாக அநேக சமஸ்தானாதிபதிகள் சொல்லியிருக்கின்றனர். கஷ்டநிவர்த்தி பண்டுக்கு எல்லா சமஸ்தானங்களிலிருந்தும் தொகைகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

ரீவா மகாராஜா தம்முடைய தருப்புகளையும் தம்முடைய பொக்கிஷத்தையும் தம்முடைய சொந்த நகைகளையுங்கூட ராஜ சக்கரவர்த்தியின் ஊழியத்தின் பொருட்டுக் கொடுத்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். இந்தியக் கஷ்ட நிவர்த்தி பண்டுக்குப் பணஉதவி செய்திருப்பதல்லாமல், காஷ்மீரம், புண்டி, ஓர்ச்சா, குவாலியர், இந்தூர் முதலிய சமஸ்தானாதிபதிகள் வேல்ஸ்

இளவர்சர் சேர்க்கும் பிரிட்டிஷ் கஷ்ட நிவர்த்தி பண்டுக்கும் பெருந் தொகைகளைக் கொடுத்திருக்கின்றனர். காஸ்மீர் மகாராஜா தாம் தொகை கொடுத்ததல்லாமல் 20 ஆயிரம் ஜனங்கள் சேர்ந்த ஒரு மீட்டிங்கின் அக்கிராசனத்தை வகித்து மிகக்கிளர்ச்சி யுண்டாகும் படி ஒரு பிரஸங்கம் செய்தார். அதன் பலனுகப் பெரும்தொகை கள் வசூலாயின.

கவர்ன்மெண்டு வேலைக்கு உபயோகப் படக் கூடியவை யாகத் தம்மிடத்திலிருக்கிற எல்லாக் குதிரைகளையும் இந்தூர் சமஸ் தானத்து ஹோல்கார் மகாராஜா இனுமாகக் கொடுத்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். நிஜாம் அரசரும் ஜாம்நகர் சமஸ்தானுதிபதி யும் மற்றும் பம்பாயிலுள்ள எல்லாசமஸ்தானுதி பதிகளும் குதிரை கள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பம்பாய் மாகாணத்தி லுள்ள ஒவ்வொரு சமஸ்தானுதிபதியும் தம்முடைய சமஸ்தானத் தின் ஜீவஜிகளை யெல்லாம் கவர்ன்மெண்டார் உபயோகப்படுத்திக் கொள்ளலா மென்று சொல்லியிருப்பதுடன், கஷ்ட நிவர்த்தி பண் டுக்கு எல்லோரும் பொருளுதவி புரிந்திருக்கிறார்கள். சித்தால்நாடும் கைபர் கணவாய்ப் பக்கத்திலுள்ள ஜாதிகளும் தங்களால் கூடிய உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அப்பாற்பட்டதாகிய நேபாள நாடும் உதவி செய்வதாக வெகு உதாரகுணத்துடன் சொல்லி யிருக்கிறது அந்த நாட்டின் ராணுவபலத்தையெல்லாம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு உபயோகப்படுத்திக் கொள்ளலா மென்று அதன் முதல் மந்திரி சொல்லிவிட்டார். அதன்னியில் போருக்குப் போகும் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் கூர்க்கா ஜாதித் துருப்புகளுக்கும் உபயோகமா கும்படி போர்க்கள பீரங்கிகள் வாங்கிக்கொள்ள அவர் 3 லட்சம் ரூபாய் உதவியிருக்கிறார். அதல்லாமல் அவருடைய சொந்த ஜீவ ஜியிலிருந்தும் வேல்ஸ் இளவரசரின் பண்டுக்கும் இந்திய கஷ்ட நிவர்த்திபண்டுக்கும் ஏராளமாகப் பணம் கொடுத்திருக்கிறார்.

போரில் சேவகஞ் செய்வதற்காக 1000 திபேத்து நுப்புகள் கொடுத்து உதவுகிறதாக பௌத்த மதத்தினரின் பரமாசாரியராகிய யிருக்கிறார். திபேத்தில் நெடுக விருக்கும் கணக்கற்ற பௌத்தடலாய் லாமா சொல்லி மடாதிபதிகளாகிய லாமாக்கள் பிரிட்டிஷ் சேனை வெற்றியடையும்பொருட்டும், போரில் இறந்துபோகிறவர்களுடைய

ஆத்மாக்கள் நற்கதியடையும் பொருட்டும் அல்லும் பகலும் ஜெபம் செய்துகொண் டிருப்பதாகவும் டலாய் லாமா அறிவிக்கிறார் !

அதீத ஊக்கம் ப்ரிட்டிஷ் இந்தியா முழுமையிலும் தோன்றி யிருக்கிறது. யுத்த களத்துக்குச் சென்றோ அல்லது வேறுவித மாகவோ ஊழியம் செய்ய இஷ்டப்படுகிறதாக நூற்றுக் கணக்கான கடிதங்கள் ராஜப்பிரதிநிதிக்கும் மாகாண கவர்னர்களுக்கும் வந் திருக்கின்றன. மத விஷயமாகவும், ராஜீய விஷயமாகவும், ஜனச் சார விஷயமாகவும், ஏற்பட்டிருக்கிற சங்கங்கள் தங்களுடைய ஸேவைகளையெல்லாம் கொடுத்துவிடத் தயாராக விருப்பதாகவும் தங்களுடைய ராஜபக்தியைக் காட்டக்கூடிய சமயத்தைத் தரும் படியாகவும் கேட்கின்றன. எல்லா இந்திய முஸ்லிம் சங்கமும், வங் காளமுஸ்லிம் சங்கமும், ரங்கூன் முஸ்லிம் சபையும், அலிகர்காலேஜ் டிரஸ்டிகளும், பேகார் மாகாண முஸ்லிம் சங்கமும், கல்கத்தா நாஷ னல் முகம்மதிய சங்கமும், கோஜா முகம்மதியர்களும், ஆகாகானு டைய மற்ற சிஷ்யர்களும், பஞ்சாப் முஸ்லிம் சங்கமும், கீழ் வங் காள முகம்மதியர்களும், கல்கத்தா, சென்னை, ரங்கூன் முதலிய அநேக நகரவாசிகளும், பேஹார் நிலச்சுவான்தார்களுடைய சங்க மும், சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டியும், ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டியும், பஞ்சாப் மாகாணத்து ஹிந்துக்களும், சீக்கி யர்களும், பம்பாய்மாகாணத்து போராக்களும் பார்ஸிகளும், உதவி செய்ய முன் வந்திருக்கிறவர்களில் சிலரேயாவர்கள்.

பால்கன் யுத்தத்தின் பொழுது துருக்கிக்கு அனுப்பப்பட்ட சிகிச்சைப்படையை உதவுவதாக டெல்லி வைத்திய சங்கம் சொல்லி யிருக்கிறது. அம்புலன்ஸ் படையில் (சிகிச்சைப் படை) சேர்ந்து போர்க்களத்துக்கு போகிறதாக வங்காளமாணவர்கள்சொல்லுகிறார் கள். வேறுவிதமாகவும் வைத்திய உதவி செய்கிறதாக அநேகர் சொல்லியிருக்கிறார்கள்.

சென்னை மாகாண ஜமீன்தார்கள் 500 குதிரைகள் கொடுப்ப தாகச் சொல்லியிருக்கிறார்கள். பரோடா மகாராஜாவும், பரத்பூர் மகாராஜாவும் தங்களுடைய நாடுகளின் ஸேவையிழ முழுமையையும் கவர்ன்மெண்டு உபயோகப் படுத்திக்கொள்ளலாமென்று சொல்லி யிருக்கிறார்கள்.

இங்கிலாந்திலுள்ள இந்தியர்களும் இந்திய மாணவர்களும் தங்களால் கூடிய எந்தவழியமும் செய்வதாக முன்வந்திருக்கிறார்கள்."

மேற்கண்டபடி சுருக்கமாகச்சொல்லப்பட்டிருக்கிற ராஜப்பிரதிநிதி அனுப்பிய அறிக்கையை இந்தியா உதவிமந்திரியாகிய மிஸ்டர் ராபர்ட்ஸ் பிரிட்டிஷ் பார்லமெண்ட் சபையின் முன் படித்த பிறகு "இந்திய மன்னர்களும் பொது ஜனங்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு உதவி செய்யும் பொருட்டு இவ்வாறு வெளிவந்திருப்பதை நீங்களும் இந்த தேசமும் தக்கவாறு கொண்டாடுவீர்களென்று நான் நம்புகிறேன்" என்று சொல்லிமுடிக்க, சபையோர்கள் கை தட்டி ஆரவாரம் செய்து சந்தோஷப்பட்டதைச் சொல்லிமுடியாது.

40-வது அத்தியாயம்.

ஆஸ்டிரிய ருஷ்ய சேனைகளின் பலம்

ஆஸ்டிரிய சேனை.

தோல்வி அடைவதே ஆஸ்டிரிய ராணுவத்தின் ஜீதிகமாயிருக்கிறதென்று நெப்போலியன் சொல்லியது உண்மை என்பதில் ஐயமில்லை. ஆயினும் அதற்குக் காரணம் ஆஸ்டிரியத் துருப்புகளுக்குப் போர்த்திறமை யில்லாததாகு மென்று நிர்ணயிப்பது பிசகு. ஆஸ்டிரியத் துருப்புகள் மிகவும் கடுமையாய்த் தோல்வியடைந்த சமயத்திலுர், அத்துருப்புகள் மிகுந்த சவுரியங்காட்டி சண்டைசெய்ததைக் கண்டு சத்துருக்களே வியந்து பேசியிருக்கிறார்கள். ஜெர்மனியைப் போல, ஆஸ்டிரியாவிலும் ராணுவத்தொழிலே மிகவும் கவுரவம் பொருந்திய தென்று மதிக்கப்படுகிறது. ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஜாதிமத வித்தியாசமின்றி தெரிந்தெடுக்கப் படுகிறார்கள். ஆகையால் ராஜாங்க விவகாரங்களும் ஜாதிமத வித்தியா சங்களும் ராணுவத்தில் பிரவேசிப்பதில்லை என்பதை முக்கியமாய் கவனிக்க வேண்டும். ஆஸ்டிரியா—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தைக் காப்பதே தங்கள் கடமையென்று ராணுவ உத்தியோகஸ்தர்கள் செவ்வையாய் அறிந்து அந்த உணர்ச்சிபால் தங்களுக்குள் கட்டுப் பிரட்டையும் தேசாபிமானத்தையும் விருத்தி செய்திருக்கிறார்கள். மேலும், ராணுவம் முழுவதிலும், ஆஸ்டிரியா சக்கரவர்த்தியே கோரில் மேலதி



ஜோட்பூர் மஹாராஜா (மைனர்.)



பாட்டியாலா மஹாராஜா.




லாச்சலீ நவாப்.



குதிரைப்படை உத்தியோகஸ்தர்.



கூர்க்கா துருப்புகள்.



இந்தியத் துருப்பு.

காரஞ் செலுத்துவதால், தருப்புகளும் உத்தியோகஸ்தர்களும் ராஜபக்தி கொண்டு நல்ல மனோதிடனையும் பெற்றார்கள். ஆகையால் ஆஸ்டிரியா–ஹங்கேரி ஏகாதிபத்தியத்தில் பற்பல ஜாதியார் இருந்து வந்தபோதிலும், அதன் ராணுவத்திறமை ஜாதி வித்தியாசத்தால் குறைவுபடவில்லை. ஆனால் யுத்த காலத்தில் சாதாரண ஜனங்களிலிருந்து மூல பலத்தைத் திரட்டும்போது, அவர்களுக்குள்ள ஜாதி வித்தியாசங்கள் சில சமயங்களில் வெளிப்படுகின்றன. தவிர, ராணுவ நிர்வாகம் அவ்வளவு திறமை கொண்டதாயில்லை என்று ஆஸ்டிரிய சேனையில் ஒரு குறை சொல்லப்படுகிறது.

ஆஸ்டிரியா—ஹங்கேரி ஏகாதிபத்தியச் சேனையில் பற்பல ஜாதியாரிருக்கிறார்கள். அதில் 100-க்கு 29 பேர் ஆஸ்டிரியரும், 47 பேர் ஸ்லாவ் ஜாதியாரும், 18 பேர் ஹங்கேரியரும், 6 பேர் இதர ஜாதியாருமாயிருக்கிறார்கள். சேனை முழுவதுக்கும் உத்தரவுகள் செய்யும்போது ஜெர்மன் பாஷை உபயோகிக்கப் படுகிறது. ஆனால் ஒவ்வொரு பட்டாளத்திலும் அதில் அதிகப்படியாயுள்ள ஜாதியாரின் பாஷையே உபயோகிக்கப் படுகிறது. நிரந்தரமான சேனையில் எல்லா ஜாதியரிலிருந்தும் தருப்புகள் தெரிந்தெடுக்கப் படுகின்றனர். அந்த சேனை ஆஸ்டிரிய ராஜாங்கத்துக்கும் ஹங்கேரிய ராஜாங்கத்துக்கும் பொதுவானது. ஆஸ்டிரியா-ஹங்கேரி ஏகாதிபத்தியத்தின்மீது படையெடுக்கும் எந்த சத்துருவையும் எதிர்த்து ஏகாதிபத்திய முழுவதையும் காப்பதற்காக அந்த நிரந்தரமான சேனை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் செலவை இரண்டு ராஜாங்கங்களும் சேர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. அந்த சேனையைத் தவிர, ஆஸ்டிரியாவிலும், ஹங்கேரியிலும், தனித்தனியாய் மூலபலங்கள் சேர்க்கப்படுகின்றன. அதன் செலவும் நிர்வாகமும் அந்தந்த ராஜாங்கத்தால் செய்யப்படுகின்றன. மற்ற ஐரோப்பிய ராஜ்யங்களிலுள்ள ராணுவப்பதிவு சட்டம் ஆஸ்டிரியாவிலும் ஹங்கேரியிலும் அனுஷ்டிக்கப் படுகிறது. யுத்த ஆரம்பத்தில் ஏகாதிபத்தியத்துக்குப் பொதுவாயுள்ள சேனையில் 13½-லக்ஷம் பேரிருந்தார்கள். இரண்டாந்தர மூலபலங்கள் (லான்ட்வர் என்ற ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்கள்) ஹங்கேரியில் 5-லக்ஷம் பேரையும் ஆஸ்டிரியாவில் 5 லக்ஷம் பேரையும் கொண்டிருந்தன. மூன்றாந்தர மூலபலங்களின் தொகை (லான்ஸ்டிரம் என்ற ராணுவவகுப்பைச் சேர்ந்தவர்கள்) ஒவ்வொரு

ராஜாங்கத்திலும் 10 லக்ஷமாகும். ஏகாதிபத்தியத்தின் மொத்த ராணுவபலம் 43½-லக்ஷமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆஸ்டிரியாவில் பெரிய முற்றுகைப் பீரங்கிகள் செய்யப்படுவதைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். ஜெர்மானியர் பிரான்ஸின்மீது படையெடுத்த போது ஆஸ்டிரிய பீரங்கிகளே உபயோகித்தார்களென்று சொல்லப்படுகிறது. ஹங்கேரியில் சேர்த்தியான குதிரைகள் இருக்கின்றன. ஹங்கேரியக் குதிரைப்படைகள் எல்லா யுத்தங்களிலும் புகழ்பெற்றிருக்கின்றன.

ருஷிய சேனை.


ருஷியாவின் நிரந்தரமான சேனை மற்ற தேசத்துச் சேனைகளை விடப் பெரியது. சமாதான காலத்தில் ருஷிய சேனை 12-லக்ஷம் துருப்புகளைப் பெற்றிருந்தது. ருஷிய ஏகாதிபத்தியம் மிகவும் விஸ்தாரமாயிருப்பதால் அதைக் காப்பதற்கு ருஷியாவின் நிரந்தரமான சேனை அவ்வளவு பெரிதாயிருக்கும்படி நேரிடுகிறது. இந்த மகா யுத்தம் தொடங்கியவுடன், மொத்தம் 41-லக்ஷம் துருப்புகளைத் திரட்டும்படி ருஷிய சக்கரவர்த்தி உத்தரவு செய்தார். இந்த மகாயுத்தம் தொடங்கிய போது ராணுவப் பயிற்சிபெற்றஜனங்கள் ருஷியாவில் சுமார் 55 லக்ஷம் பேரிருந்தார்கள்; பயிற்சி பெறாத ஜனங்கள் லக்ஷக் கணக்காயிருந்தார்கள்.

ருஷியாவின் ஜனத்தொகை 17-கோடியே 30 லக்ஷமாகும். அதன் சத்துருக்களாகிய ஜெர்மனி, ஆஸ்டிரியா, துருக்கி, இம்மூன்று தேசத்தாரையுஞ் சேர்த்துக் கணக்கிட்டாலுங்கூட ருஷிய ஜனத்தொகையே சற்று அதிகமாயிருக்கிறது. ஆனால் அம்மூன்று தேசங்களைவிட ருஷியா தேசத்தின் விஸ்தீரணம் ஏழுமடங்கு அதிகமாயிருக்கிறதை கவனிக்கவும். ஆகையால் ருஷியஜனங்கள் தொகையில் அதிகமாயிருந்த போதிலும் விஸ்தாரமான பிரதேசத்தில் சிதறிக் கிடக்கிறார்கள். அதனால் போக்குவரத்து சாதனங்கள்குறைவாய் ஏற்பட்டிருக்கின்றன. நெருக்கமான ஜனவாசமும், வியாபாரமும், தொழில்களுமில்லாத பிரதேசத்தில் சோட்டுகளையும் ரயில் பாதைகளையும் போடுவதில் பயனில்லை. இவ்விஷயத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில் இந்தமகாயுத்தம் ஆரம்பித்தபோது, ருஷிய சக்கரவர்த்தி பிரதினமும் லக்ஷக் கணக்கான துருப்புகளை போர்முனைக்கு அனுப்பிக் கொண்

டிருப்பா ரென்றும், பேர்பெற்ற கோலாக் துருப்புகள் ஜெர்மன் தேசமுழுவதிலும் பரவிவிடுவார்க ளென்றும், ருஷியத்துருப்பு கள் தங்கள் எல்லையில் சண்டை செய்வதற்கு இடமில்லாமல் பிரஞ் சுப் போர்க்களத்திலும் குவிந்து விடுவார்களென்றும், சாமான்ய ஜனங்கள் நினைத்து ஏமாற்றமடைந்தனர். ருஷிய ஏகாதிபத் தியத்தின் நாலாபக்கங்களிலும் ஜனங்கள் ராணுவத்தில் சேர ஆவ லாய் முன்வந்தார்களென்பது உண்மையே. ஆயினும், நாலாபக்கங் களிலுள்ள ஜனங்களை ஒன்றுசேர்ப்பதும் அவர்களுக்கு யுத்த ஆயு தங்களைச் சேகரித்து அவர்களை ராணுவத்தில் பழக்குவதும் சிரம மான காரியமாகும். நூதனகாலத்து ராணுவமுறைகளை, முக்கிய மாய் நூதன பீரங்கிகளை உபயோகிக்கும் முறைகளை, மிகுந்த புத்தி கூர்மையுள்ள ஜனங்களும் கற்றுக்கொள்வதற்கு மாதக் கணக் காய் தாமஸமாகிறது. ஆகையால், ருஷியாவில் ஜனங்களை ராணு வத்தில் பழக்குவதற்கும், போக்குவரத்து வசதிகளில்லாத பிரதே சத்தில் அவர்களை ஒன்று சேர்த்துப் போர்முனைக்கு அனுப்புவதற் கும், தாமஸமாகும். தவிர லக்ஷக்கணக்கான ஜனங்களை படைகளில் சேர்த்து விடுவது எளிதாயினும் அவர்களுக்குத் தேவையான வசதி களைச் செய்துகொடுப்பது மற்றொரு சிரமமான காரியமாகும். கால் செருப்புமுதல் பெரிய முற்றுகை பீரங்கிகள் வரையில் பலவித ஆயு தங்களும் தளவாடங்களும் சாமான்களும் ஒவ்வொரு படையிலும் தேவையா யிருக்கின்றன. அவைகளை யெல்லாம் முன்னதாகவே சேகரித்து வைக்கவேண்டுமே யொழிய திடீரென்று இரண் டொரு தினங்களில் செய்துவிட முடியாது. ருஷியர் இந்த மகா யுத்தத்தை வலுவில் தேடவில்லை என்பதைக் குறிப்பிடுவதற்கு, அவர்கள் தளவாடங்களை ஏராளமாய் சேகரித்து வைக்காம லிருந்ததே அத்தாக்ஷியாகும். துப்பாக்கிகள், ரவைகள், பீரங்கிகள், குண்டுகள், குதிரைவண்டிகள், மோட்டார் வண்டி கள், ரயில்வண்டிகள், இஞ்சினியர் படைக்கும் சிக்ஷைப் படைக்கும் சமிக்ஞைப் படைக்கும் வேண்டிய சாமான்கள், உடை கள், ஆகாராதிகள் முதலிய யாவும் தேவையான அளவு இருந்தால் தான், சேனியில் சேரும் ஜனங்கள் போர் செய்யக் கூடிய துருப்பு களாகக் கருதப்படுவார்கள். இந்த மகாயுத்தம் தொடங்கியவுடன் ருஷியாவிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் இரவும் பகலும் வேலை

செய்தன. மற்ற நேசராஜ்யங்களும் தங்களாலான வரையில் அந்த குறைகளை நீக்க உதவிசெய்தன. ஐப்பானிலிருந்து யுத்த தளவாடங்கள் தருவிக்கப்பட்டன. அமெரிக்கா முதலிய நடுநிலைமைத் தேசங்களிலிருந்தும் யுத்த தளவாடங்கள் வாங்கப்பட்டன. ஆனல், அந்நிய தேசங்களிலிருந்து தருவிக்கப்படும் சாமான்களை ருஷியாவில் கொண்டுவந்து சேர்ப்பதும் கஷ்டமாயிருந்தது. ருஷியாதேசம் அந்நிய நாடுகளுடன் போக்குவரத்து செய்வதற்கு சாதாரண காலங்களிலேயே போதுமான வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. ருஷியாவின் கப்பல் வியாபாரமெல்லாம் பால்டிக் கடல் கருங்கடல் இவைகளின் வழியாய் நடைபெற்றன. யுத்தம் தொடங்கிய பிறகு ஜெர்மானியரும் துருக்கியரும் அவ்வழிகளை முற்றிலும் அடைத்துவிட்டார்கள். ருஷியாவுக்கு வடக்கிலுள்ள வெண் கடல் வருஷத்தில் நான்கு மாதங்களைத் தவிர மற்ற காலங்களில் பனியால் உறைத்து விடுகிறபடியால், அங்குள்ள ஆர்க்கேஞ்சல் என்ற துறைமுகப் பட்டணம் அவ்வளவு பயனுள்ள தல்ல. ருஷியாவுக்குக் கிழக்கில் ஜப்பான் கடலிலுள்ள விளாடிவாஸ்டாக் என்ற ருஷியத் துறைமுகமிருக்கிறது. அதன்வழியாய் ருஷியத் தலைநகரத்துக்கு சாமான்களைத் தருவிக்கலா மென்றால் அதுவும் சில மாதங்கள் பனியால் உறைந்துவிடுகிறது. அந்த துறைமுகத்திலிருந்து போடப்பட்டரயில் பாதை சுமார் 6000 மைல் தூரம் ருஷிய ஏகாதிபத்தியத்துக்குக் குறுக்கே செல்வதால், தரவிய நஷ்டமும் காலதாமஸமுமாகும்.

இந்த காரணங்களால் ருஷியத்தருப்புகளை ஏராளமாய்ச் சேர்த்து, போர்க்களத்துக்கு அனுப்புவது சாமான்ய காரியமல்ல. அவ்வளவு கஷ்டங்களையும் சமாளித்து இப்போது ருஷிய எல்லையில் 30 லக்ஷம் தருப்புகளை ருஷிய ராணுவ அதிகாரிகள் சாமர்த்தியமாய் நிர்வகித்து வருவதே பெரிய ஆச்சரிய மென்று சொல்லலாம். தவிர, ருஷிய எல்லைப்புறத்தின் அமைப்பிலுள்ள சில விசேஷங்களைக் கவனியாத ஜனங்கள் ருஷியரின் ராணுவமுயற்சிகள் மிகவும் எளிதாய் நிறைவேறி விடுமென்று தவறுப் நினைத்தார்கள்.



எல்லைப்புறம் * * * இம்மாதிரியாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. நதிகள் வளைந்த கோடுகளால் குறிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற கோடுகள் ரயில்பாதைகளைக் குறிக்கின்றன. எல்லா ராணுவ நடவடிக்கைகளும் ரயில் பாதைகளின் ஆதரவைக் கொண்டே நடத்தப்படுகின்றன. போர் முனையில் ஆகாய ஸ்தல

ங்க ளிருக்க; சில ஸ்தலங்கள் மட்டும் முக்கிய மென்று கருதப்பட்டு அங்கு கடுமையான சண்டை நடந்துவருவதைக் காண்கிறோம். அதற்கு ஒரு முக்கிய காரணம், அந்த ஸ்தலங்கள் ரயில் பாதையின்மேலிருப்பதாகும். யுத்த நடவடிக்கைகளை செவ்வையாய் அறிந்துகொள்ள வேண்டுமானால், ரயில் பாதைகளை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

ருஷிய எல்லைப்புறத்திலுள்ள விசேஷங்கள்.

ருஷிய எல்லையின் விவரங்களைக் காட்டுகிற படத்தைப் பார்த்தால் அதில் சில விசேஷங்கள் காணப்படுகின்றன. போலண்ட்என்ற ருஷிய மாகாணம் மேற்குத் திசையில் வெகுதூரம் நீண்டிருக்கிறது. போலண்டின் வடபுற முழுவதிலும் ஜெர்மன் மாகாணமும் தென்புற முழுவதிலும் ஆஸ்டிரிய மாகாணமும் பரவியிருக்கின்றன. போலண்டுக்கு வடக்கில் கிழக்குப் பிரஷ்யா என்ற ஜெர்மன் மாகாணமும், தெற்கில் காலிஷியா என்றஆஸ்டிரியமாகாணமு மிருக்கின்றன. அதனால் போலண்டின் முக்கியஸ்தலமாகிய வார்ஸா நகரத்தில் ருஷிய சேனைகளை பெற்றிருந்தால், அச்சேனைக்கு இரண்டு பக்கவாட்டிலும் சத்துருக்களின் பிரதேசமிருக்குமல்லவா?



மேலே யுள்ள படத்தில் ருஷிய சேனை வார்ஸாவிலிருந்து புறப்பட்டு மேற்கு நோக்கி முன்செல்வதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அது அவ்வாறு முன் சென்றால் சத்துருக்கள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் புறப்பட்டு வார்ஸாவுக்குக் கிழக்கில் வந்து எல்லாப்

பாதைகளையும் வசப்படுத்திக்கொள்ள முயற்சி செய்வார்கள், அது அம்புபோன்ற அடையாளங்களால் படத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ருஷிய சேனைக்குப் பின்புறத்தில் ஆதரவாயுள்ள ஆபத்துக் குள்ளாகும்.

ஆகையால் போல்ண்ட் மாகாணத்தின் வழியாய் ருஷியசேனை முன்சென்று ஜெர்மனியின்மீது படை பெடுக்க வேண்டுமானால், முதலில் அது தன் பக்கவாட்டில் மிகுந்த வன்மையுடன் காத்துக் பாதைகள் கொள்ளவேண்டும்.

போலண்டின் மேற் கெல்லியிலிருந்து ஜெர்மன் தலைநகரமாகிய பெர்லின் 180 மைல் தூரத்தில் தானிருக்கிறது. பிரஞ்சு தலைநகரமாகிய பாரிஸுக்கும் மான்ஸ் நகரத்துக்கும் 120 மைல் தூரமிருக்கிறது. ஜெர்மன் சேனை மான்ஸ் நகரத்திலிருந்து புறப்பட்டு 120 மைல் தூரங்கடந்து 13 தினங்களில் பாரிஸுக்கருகில் சென்றது போல, பெர்லின் நகரத்துக்கருகில் ருஷிய பீரங்கிகள் அதிசீக்கிரத்தில் அதிர்ந்துகொண்டிருக்குமென்று பலர் எதிர் பார்த்திருந்தார்கள். ஆந்த தவறுன எண்ணத்துக்குக் காரணம், ருஷிய எல்லைப்புறத்தின் அமைப்பிலுள்ள விசேஷங்களே அறிந்து கொள்ளாமையாகும். ருஷிய சேனை யுத்தத்தைத் தொடங்கும்போதே போலண்டின் வழியாய் முன்செல்ல முடியாதென்பதை இங்கு சுவனிக்கவேண்டும். போலண்டுக்கு வடக்கிலும் தெற்கிலும் சதுப்புநிலத்தின் பிரதேசம் விஸ்தாரமாய்ப் பரவியிருப்பதே அதற்குக் காரணமாகும்.

ஆகையால் யுத்தம் தொடங்கியவுடன் ருஷியர் தங்கள் சேனையை வார்ஸாவுக்கு அனுப்பிவிட முடியவில்லை. கிழக்குப் பிரஷ்யாவுக்கும் காலிஷியாவுக்கும் முதலில் ருஷியப்படைகளை அனுப்பி அவைகளின் ஆதரவைக் கொண்டுதான், பிறகு வார்ஸாவுக்கு மற்ற ருஷியப்படைகள் செல்லமுடிந்தது. அதனால், யுத்தம் தொடங்கியவுடன் கிழக்குப்பிரஷ்யா என்ற ஜெர்மன்மாகாணத்துக்குக் கிழக்கிலும் காலிஷியாவுக்குக் கிழக்கிலுமிருந்தான் ருஷியதருப்புகளெல்லாம், நிலைபெற்றன. அதாவது போலண்டுக்கு மேற்கிலுள்ள ஜெர்மன் பூமியிலிருந்து 200 மைலுக்கப்பால் ருஷியப் படைகள் நிலைபெற்றன. அதன்பிறகு தான், அந்தப்படைகளை ஒட்டினாற்போல் மற்ற ருஷியப் படைகள் வார்ஸா வரையில் நிலைபெறத் தொடங்கின. ருஷிய சேனைக்குப் பக்கவாட்டில் காத்துக்கொள்ள அதிகபலம் கொண்ட படைகள்


அவசியமாயிருப்பதால், அத்திசையில் இன்னும் அதிகமாய்ப் படைகளைக் குவித்து அத்திசையில்சத்துருவின்மீது படையெடுத்தலே சாத்தியமானகாரியமென்று ருஷிய் ராணுவதந்திரிகள் தீர்மானித்தார்கள். ஆகையால் ருஷிய சேனுதிபதியின் நோக்கமென்னவென்றால்'ருஷிய சேனையின் பெரும்பாகத்தையும் காலிஷியா, கிழக்குப் பிரஷ்யா இம்மாகாணங்களின் எல்லையில் திரட்டி, அந்தமாகாணங்களின் வழியாய் மேற்கு நோக்கி முன் செல்லவேண்டுமென்பது. அவ்வாறு முன் சென்றால், பிறகு போலண்டிலுள்ள மற்ற ருஷியப் படைகள் எவ்வித ஆபத்து மில்லாமல் முன் செல்லலாம்.

ஆஸ்ட்ரியா, கிழக்குப் பிரஷ்யாவின் மீதும் காலிஷியாவின் மீதும் படையெடுத்துச் செல்வதற்கு சில பெருந்தடைகள் இருக்கின்றன. கிழக்குப் பிரஷ்யாவில் அநேக ஏரிகளும் காடுகளும் சதுப்பு நிலங்களும் இருப்பதால் அவ்வழியாய் துருப்புகளும் தளவாடங்களும் செல்வது மிகவும் சிரமமாகும். அவ்விடத்தில் போடப்பட்டுள்ள விஸ்தாரமான ரயில் பாதைகள் ஜெர்மானியருக்கு அதிக பலத்தைக் கொடுக்கும். ருஷியப் படைகள் சிரமப்பட்டு வெகு தூரம் முன் சென்றாலுங்கூட, பிறகு விஸ்டுலா நதி பெருந்தடையாக நிற்கும். காலிஷியா மாகாணத்தில் அந்நியரின் படையெடுப்பைத் தடுப்பதற்கு இயற்கையிலேயே கார்ப்பேத்தியன் மலைகள் அமைந்திருக்கின்றன. அம்மலைத்தொடர்கள் காலிஷியாமாகாணத்தின் தெற்குபக்கம் முழுவதையும் வளைத்துகொண்டிருக்கின்றன. அம்மலைகளிலுள்ள கணவாய்களின் வழியாகவே அவைகளைக் கடந்து செல்லமுடியும். ருஷிய சேனை, இயற்கைஅமைப்பிலேயே அவ்வாறு ஏற்பட்டுள்ள தடைகளை வெல்வதோடு சத்துருவின் சைன்ய பலத்தையும் எதிர்க்கவேண்டும். ஆகையால் ருஷிய சேனை நிறைவேற்றத் தொடங்கிய காரியம் சாமான்யமல்ல. ஆனால் ருஷியர் கார்ப்பேத்தியன் மலைகளை எப்படியாவது சிரமப்பட்டு வசப்படுத்திக்கொண்டால் அநேக சாதகங்களைப் பெற்று விடுவார்கள்.

காலிஷியா மாகாணத்தின் மேற்குக் கோடியிலுள்ள கிராகோ நகரம் மிகவும் முக்கியமான ஸ்தானத்திலிருக்கிறது. கார்ப்பேத்தியன் மலைகளைப் பிடித்துக்கொண்டால், முக்கிய ஸ்தானத்திலுள்ள கிராகோ நகரத்தைப் பிடித்துக்கொள்ள சாத்தியப்படும். ருஷியப் படைகள் அந்த மலைகளை ஸ்வாதீனஞ் செய்து கொள்ளாமல் கிரா

கோ நகரத்துக்குச் சென்றால், ஆஸ்டிரியப் படைகள் அம்மலைகளி லிருந்துகொண்டு கிராகோநகரத்துக்குக் கிழக்கிலுள்ள பாதைகளைத் தாக்குவார்கள். இவ்விஷயம் கீழேயுள்ள படத்தில் விளக்கப் பட்டிருக்கிறது.

போலண்ட்.



இப்படத்தில், ருஷியசேனை லெம்பர்க் நகரத்திலிருந்து புறப்பட்டு கிராகோ நகரத்தை வசப்படுத்திக் கொள்வதாக குறிக்கப்பட்டிருக்கிறது. கார்ப் பேத்தியன் மலைகளை வசப்படுத்திக் கொள்ளாமல் ருஷிய சேனை அவ்வாறு முன் சென்றால், ஆஸ்டிரியப் படைகள் அம்மலைகளி லிருந்து கொண்டு கிராகோ நகரத்துக்குக்கிழக்கிலுள்ள பாதைகளைத்தாக்குவார்கள். ஆகையால் ருஷிய சேனை முதலில் கார்ப் பேத்தியன் மலைக்கணவாய்களை வசப் படுத்திக் கொண்டால், பிறகு கிராகோ நகரத்தைப் பிடிக்கவும் அங்கிருந்து முன்செல்லவும் எளிதாயிருக்கும்.

ருஷியப் படைகள் அந்நகரத்தை வசப்படுத்திக் கொண்டால் போலண்ட் மாகாணத்துக்கு மேற்கில் வளைந்துவந்து அங்குள்ள ஜெர்மன் சேனையைப் பின்வாங்கச் செய்யலாம். பிறகு போலண்ட் மாகாணத்திலிருந்து ருஷியர் தங்கள் ராணுவ நடவடிக்கைகளை நடத்தச் சாத்தியப்படும்.



இப் படம் கிராகோ நகரத்தின் முக்கியத்தை விளக்குகிறது. அந்நகரத்தை ருஷியர் வசப்படுத்திக்கொண்டால், அவர்கள் போலண்டுக்குமேற்கில் வளைந்து

செல்லலாம்; ஜெர்மனியின்மீது படை யெடுக்கலாம்; ஆஸ்டிரியத் தலை நகராகிய வியன்னுவை நோக்கிச் செல்லலாம்: ஹங்கேரிய நாட்டின் தலைமை ஸ்தலமாகிய புதபெஸ்த் நகரத்தை நோக்கிச் செல்லலாம். இந்த நடவடிக்கைக ளெல்லாம் படச்தில் அம்புபோன்ற அடையாளங்களால் காண்பிக்கப்பட்டிருக் கின்றன.

கிழக்குப் பிரஷ்பா வழியாய் முன் சென்றால், போலண்டுக்கு மேற்கில், விஸ்துசெல்வதை விஸ்டுலாநதி தடைசெய்யும். (விஸ்டுலா நதியை 675-ம் பக்கத்திலுள்ள படத்தில் காணலாம்.) தவிர, ருஷிய சேனை சிராகோ நகரத்திலிருந்து வடக்கே சென்று ஜெர்மனியின் மீது படை யெடுப்பது சற்று எளிதாயிருக்கும். ஜெர்மனியி லுள்ள நதிகளெல்லாம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்கின்றன. (யுத்தசரித்திரத்தின் முதல்பாகத்தில் 17-ம்பக்கத்தில் ஜெர்மன் ஏகாதி பத்தியத்தைக் காட்டுகிற பூகோளப் படத்தைப் பார்க்கவும்.) ருஷி யப் படைகள் சிராகோ நகரத்திலிருந்து வடமேற்குதிசையில் ஜெர் மனியின்மீது படையெடுத்தால், அந்நதிகளைத் தாண்ட வேண்டிய தில்லை. நதிகளின் கரையோரமாய் முன்செல்லலாம். ஆனால் ருஷியப் படைகள் போலண்டிலிருந்தாவது, கிழக்குப்பிரஷ்யாவிலிருந்தாவது முன் செல்ல முயன்றால் அந்நதிகளை யெல்லாம் குறுக்கே தாண்டிச் செல்லவேண்டும். சத்துருக்களை எதிர்த்துக் கொண்டு நதிகளைத் தாண்டுவது சிரமமான காரியமென்று சொல்லத் தேவையில்லை.

தவிர, சிராகோ நகரத்தை ருஷியர் வசப்படுத்திக் கொண் டால், அந்நகரத்திலிருந்து அவர்கள் தெற்கே சென்று ஆஸ்டிரியத் தலைநகராகிய வியன்னுவைப் பிடித்துக்கொள்ள வழி ஏற்படுகிறது. கார்ப்பேத்தியன் மலைக்கணவாய்களை வசப்படுத்திக்கொண்டால், ஹங்கேரி நாட்டின் மீது படையெடுத்து அதன் தலைமை ஸ்தல மாகிய புதபெஸ்த் நகரத்தை நோக்கிச் செல்லலாம்.

ருஷியரின் ராணுவ நோக்கங்கள்.

யுத்த ஆரம்பத்தில் கிழக்குப் பிரஷ்பாவின்மீது ருஷியர் படை யெடுத்ததற்குச்சில காரணங்களிருக்கின்றன. ஜெர்மன் சக்கரவர்த்தி களின் பூர்வீக இருப்பிடமும் பிரபுக்களின் பிறப்பிடமும் அந்த மாகாணந்தான். ஆகையால் ருஷியர் அம்மாகாணத்தை வசப்படுத் திக்கொண்டால், ஜெர்மானியரின் கவுரவத்துக்கே குறைவு ஏற்படும். தவிர, அந்த மாகாணத்திலுள்ள செழிப்பான பூமிகளிலிருந்து

ருஷியத் துருப்புகளுக்கு ஆகார வசதிகள் கிடைக்கும். மேலும், ஜெர்மன் படைகளெல்லாம் பிரஞ்சு எல்லைக்குச் சென்றுவிட்டபடியால், கிழக்குப் பிரஷ்யா போதுமானபடி காவல் செய்யப்படவில்லை. அந்த மாகாணத்தின் மீது படையெடுப்பவர்களைத் தடுப்பதற்கு இயற்கையிலேயே பெருந்தடைகளிருக்கின்றனவென்று சொல்லியிருக்கிறோம். அங்குள்ள ஏரிகளும் சதுப்பு நிலங்களும் ருஷியப்படைகளின் நடமாட்டத்துக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவை. ஆகையால், அந்த மாகாணத்தில் ஜெர்மன் படைகளில்லாத சமயம்பார்த்து ருஷியர் அதன்மீது படையெடுத்து அங்கு இயற்கையரண்களமைந்துள்ள ஆபத்துகளை எளிதாய்த் தவிர்த்து விடலாம். அந்த ஆபத்துகள் நிரம்பியுள்ள பிரதேசத்தை முதலில் வசப்படுத்திக்கொண்டால், பிறகு ஜெர்மன் படைகள் தாக்கவந்தாலும் அவைகளை ருஷியர் எளிதாய்த் தடுத்துவிடலாம்.

ருஷிய சேனை போர்முனையில் கூடுவதற்கு மிகவும் காலதாமஸமாகுமென்று ஆஸ்டிரியரும் ஜெர்மானியரைப் போலவே நினைத்திருந்தார்கள். ஆனால் சென்ற சில வருஷங்களாக ருஷியர் தங்கள் எல்லைப்புறத்தில் ஏராளமான துருப்புகளை யுத்தத்துக்குத்தயாராய் வைத்திருக்க அதிக நூதனஏற்பாடுகளைச் செய்துவந்தார்கள். ஆகையால் ஏராளமான ருஷியத்துருப்புகளை காலிஷியா மாகாணத்துக் கப்பால் இரகஸ்யமாய்க் குவித்து ஆஸ்டிரிய சேனையை எளிதாய் முறியடிக்கலாமென்று ருஷியர் எண்ணினார்கள். யுத்தந் தொடங்கியவுடன், ஆஸ்டிரியரும் ஜெர்மானியரும் எதிர்பார்த் திருந்ததற்கு நேர்மாறுக, ருஷியர் ஏராளமான துருப்புகளைத் திரட்டி, கிழக்குப் பிரஷ்யா, காலிஷியா இவ்விரு மாகாணங்களின் மீதும் ஏக காலத்தில் படையெடுக்கத் தீர்மானித்தார்கள். கிழக்குப் பிரஷ்யாவில் போதுமான ஜெர்மன் படைகளில்லாமையால், அதை எளிதாய் வசப்படுத்திக் கொள்ளலாமென்றும், காலிஷியாவில்ஏராளமான ருஷியதுருப்புகளைக்குவித்து, அங்கு ஜெர்மன்படைகள் தாக்குவதற்குள்ளாக ஆஸ்டிரிய சேனையைத் தனியாய் முறியடிக்கலாமென்றும் ருஷியர் எண்ணியிருந்தார்கள். அவைகளைத் தவிர, மற்றொரு முக்கியநோக்கமும் ருஷியருக்குஇருந்தது. யுத்தந்தொடங்கியவுடன் திடீரென்று ருஷிய சேனை ஏராளமான பலத்தைப்பெற்று அந்த இரண்டு மாகாணங்களின் மீதும் விசையாய்ப் படையெடுத்

தால், பிரஞ்சு எல்லையில் ஜெர்மானியர் செய்து வரும் மும்முரமான முயற்சிகளெல்லாம் உடனே தளர்ந்து விடும்.

ஆஸ்டிரியரின் ராணுவநோக்கங்கள்.

ஆஸ்டிரியர்களவ்வாறு யுத்தத்தைத் தொடங்கத் தீர்மானித்தார்களென்று சொல்வோம். ஆஸ்டிரிய சேனை போலண்டின் மீது படையெடுத்து, அதன் முக்கியஸ்தலமாகிய வார்ஸாவை நோக்கிச் சென்று அந்நகரத்துக்குத் தெற்கிலும் தென்கிழக்கிலுமுள்ள ரயில் பாதைகளை வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நோக்கங் கொண்டது. ருஷியாவிலிருந்து மூன்றுமுக்கியமான ரயில் பாதைகள் வார்ஸாவுக்கு வருகின்றன. ஆஸ்டிரியர் தெற்கு ரயில் பாதையை வசப்படுத்திக் கொண்டால், ஜெர்மானியர் வடகிழக்கிலுள்ள ரயில் பாதையை வசப்படுத்திக் கொள்வார்களென்றும், பாக்கியுள்ள ஒரு ரயில் பாதையின் ஆதரவைக் கொண்டு அதிகப் படியான ருஷியத் துருப்புகள் போர்க்களத்தில் நிலைபெற்றிருக்க முடியாதென்றும் ஆஸ்டிரிய ராணுவ தந்திரிகள் யோசனை செய்தார்கள். இந்த யுத்த நடவடிக்கைகளை ஆஸ்டிரியரும் ஜெர்மானியரும் சேர்ந்து யோசனை செய்தார்களென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆஸ்டிரியர் முடிவில் ஜெர்மனியின் சைன்ய பலத்தையே நம்பியிருந்தார்கள். ருஷியாவுக்கு ஏராளமான துருப்புகளிருப்பதால் அதன் சைன்ய பலத்தை ஆஸ்டிரியர்மட்டும் முறியடிப்பது சாத்தியமல்ல. ஆஸ்டிரியரின் முக்கிய நோக்கமென்னவென்றால், போர்முனையில் ருஷியத் துருப்புகள் அதிகமாய்த் திரட்டப்படுவதற்குள்ளாக ருஷியப்பாதைகளையெல்லாம் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது. ருஷியத் துருப்புகளைப் போர் முனையில் திரட்டுவதற்குக் காலதாமஸமாகுமென்று ஆஸ்டிரியரும் ஜெர்மானியரும் நினைத்திருந்தார்கள். ஆகையால் காலதாமஸமின்றி ஆஸ்டிரிய சேனை போலண்டின்மீது படையெடுத்தால், அங்குள்ள ருஷியப்பாதைகளை எளிதாய் வசப்படுத்திக் கொள்ளலாமென்று எண்ணினார்கள். ஆஸ்டிரியர் தங்களுக்கு ஜெர்மன் படைகளின் உதவி கிடைக்கும் வரையில் ருஷியரின் ராணுவ பலத்தைக் கூடுமானவரையில் குறைத்துவர முயற்சி செய்தார்கள்.

இந்த நோக்கங்களுடன் கிழக்குரங்கத்து யுத்தம் ஆரம்பித்தது.

யுத்தத்தின் விவரங்களைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் இரண்டு கக்ஷிகளின் நோக்கங்களும் சிறிது மாறுதலடைந்ததைப் பற்றி குறிப்பிடுவோம். யுத்தந் தொடங்கியவுடன் ருஷியப் படைகள் கிழக்குப் பிரஷ்யாவின் மீதும் காலிஷியாவின் மீதும் படையெடுத்தன. கிழக்குப் பிரஷ்யாவில் ஏரிசளும் சேற்றுப் பூமியும் நிரம்பிய அபாய கரமான பிரதேசத்தின்மீது ருஷியப் படைகள் படையெடுத்தபோது, அங்கே ஆகஸ்ட் மாதக் கடைசியில் சொற்பதொகை கொண்ட ஜெர்மன் படைகள் ருஷியரை முறியடித்தன. அதுமுதல், அந்த மாகாணத்தின் மீது படை யெடுத்துச் செல்லும் நோக்கத்தை ருஷிய ராணுவ தந்திரிகள் முற்றிலும் கைவிட்டார்கள். அதனால், ருஷியரின் முக்கியப் பிரயத்தனங்களெல்லாம் காலிஷியாவிலே செய்யப்பட்டு வந்தன. மற்றொரு முக்கிய மான சம்பவமும் ஸெப்டம்பர் மாத ஆரம்பத்தில் நடை பெற்றது. போலண்டினும் காலிஷியாவினுமிருந்த ஆஸ்டிரியப் படைகளை ருஷியர் முறியடித்தார்கள். அதனால் ஆஸ்டிரிய சேனை பலஹீன மடையவே, பிரஞ்சு எல்லையில் சண்டை செய்துகொண்டிருந்த பல ஜெர்மன் படைகள் ருஷிய எல்லைக்கு வரும்படி நேர்ந்தது. அது முதல் ஜெர்மானியர் மேற்கரங்கத்தில் தங்கள் தாருப்புகளைக் குறைத்து அங்கு நடத்திய ராணுவ நடவடிக்கைகளை மாற்றி, கிழக்கரங்கத்திலேயே பெரும் போர் நடத்திவந்தார்கள்.

41-வது அத்தியாயம்


கிழக்குப் பிரஷ்யாவில் யுத்த நடவடிக்கைகள்

கிழக்கரங்கத்துப் போர்முனை மூன்று மாகாணங்களில் பரவியிருந்ததென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஜெர்மன் மாகாணமாகிய கிழக்குப் பிரஷ்யா, ருஷ்ய மாகாணமாகிய போலண்ட், ஆஸ்டிரிய மாகாணமாகிய காலிஷியா ஆக இம்மூன்று பிரதேசங்களில் யுத்தம் முக்கியமாய் நடத்தப்பட்டது.

மகா யுத்தம் தொடங்கியவுடன், கிழக்குப் பிரஷ்யா, காலிஷியா இவ்விரண்டு மாகாணங்களின் மீது படை யெடுப்பதற்காக ஏராளமான ருஷியத் தாருப்புகள் அம் மாகாணங்களின் எல்லைகளில் சேர்க்கப்பட்டன. கிழக்குப் பிரஷ்யாவில் போதுமான ஜெர்மன்

துருப்புகள் காவல் செய்யவில்லை யாகையால் அந்த மாகாணத்தின் மீது விரைவாய்ப் படையெடுப்பதாக ருஷியர் தீர்மானித்தார்க ளென்று சொல்லி பிருக்கிறோம். அந்த மாகாணத்துக்குக் கிழக் கிலிருந்தும் தெற்கிலிருந்தும் இரண்டு ருஷிய சேனாபதிகள் முதல்சரமான ருஷியத் துருப்புகளில் மொத்தம் 5½ லக்ஷம் பேரை செலுத்தினர்கள்.

கிழச்குப் பிரஷ்யாவில் போர்க்களங்கள்.



ரயில் பாதைகள் ———— அவ்வாறு குறிக்கப்பட் டிருக்கின்றன. எல்லைப்புறம் * * * * இம்மாதிரியாகவும், நதிகள் வளைந்த கோடுகளாலும் குறிக்கப்பட் டிருக்கின்றன. படத்திலுள்ள எல்லைப்புறம், கிழக்குப்பிரஷ்யாவுக்கும் போலண்டுக்கும் இடையே யுள்ளதாகும். நகரங்கள் அவைகளின் பெயருக்குப் பக்கத்தில் o இம்மாதிரியான குறிப்பால் காட்டப்பட் டிருக்கின்றன. கோட்டைகளை யுடைய நகரங்கள் வேறு விதமாய் குறிக்கப்பட் டிருக்கின்றன. ஸ்டாலுபின் என்ற நகரத்தின் பெயரில் 'பி' என்ற எழுத்துக்குக் கீழேயுள்ள வட்டமான புள்ளி அந்நகரத்தின் இருப்பிடத்தைக்குறிக்கும். கும்பினன் என்ற பதத்தில் 'பி' என்ற எழுத்துக்கு மேலும், கோல்டாப் என்ற பதத்தில் 'ட' என்ற எழுத்துக்கு மேலும், ஆங்கர்பர்க் என்ற பதத்தில் 'க்' என்ற எழுத்துக்கு மேலும், வட்டமாயுள்ள புள்ளிகள் அந்தந்த நகரங்களைக் குறிப்பிடுகின்றன.

ஜெனரல் ரன்னன்காம்ப், நீமன் நதிக்கரையில் மூன்று லக்ஷம் ருஷியத் துருப்புகளைத் திரட்டிக் கொண்டிருந்தார். அவர் அந் நதிக்கரையிலுள்ள கோவ்னே நகரத்துக்கோட்டைகளை ஆதார மாகக்கொண்டு, கிழக்குப் பிரஷ்யாவின்மீது படை யெடுத்தார். மற்றொரு ருஷியசேனுபதியாகிய ஜெனரல் ஸாம்ஸனுப், நேரு நதிக் கரையிலும் பாபர் நதிக்கரையிலும் 2½ லக்ஷம் துருப்புகளைத் திரட்டி அந்த ஜெர்மன் மாகாணத்தின்மீது படை யெடுத்தார். (இரண்டு ருஷிய சேனுபதிகள் புறப்பட்ட பிரதேசங்களைக் காண்பிப்பதற் காக, மேலேயுள்ள படத்தில் அவர்களின் பெயர் குறிக்கப்பட் டிருக்கிறது.)

ருஷிய சேனுபதிகளின் படையெடுப்பு.

ஆகஸ்ட்மாதம் 6-ந்தேதியே, அதாவது மகாயுத்தம் தொடங்கி இரண்டு தினங்களுக்குள்ளாக, ருஷிய குதிரைப்படைகள் ஜெர்மன் எல்லையைத் தாண்டிவிட்டன. அந்த குதிரைப்படைகள் நீமன் நதி யிலிருந்து புறப்பட்ட ருஷிய சேனையைச் சேர்ந்தவை. அங்கு ஜென ரல் ரன்னன்காம்ப், கோவ்னே நகரத்திலிருந்து மேற்கே செல்கிற ரயில் பாதைவழியாய் முன்சென்று, ஸ்டாலபின் என்ற ஜெர்மன் நக ரத்தில் சத்துருக்களைச் சந்தித்தார். (இங்கு சொல்லப்படுகிற எல்லா ஸ்தலங்களும் ரயில் பாதைகளும் மேலேயுள்ள படத்தில் தெளி வாய் குறிக்கப்பட் டிருக்கின்றன.) அவரிடமிருந்த முதல்தரமான ருஷியத் துருப்புகளில் பேர்பெற்ற லைபீரியப் படைகளும் சேர்ந் திருந்தன. அவர் ருஷிய–ஜப்பானிய யுத்தத்தில் குதிரைப் படைகளை சாமர்த்தியமாய்ச் செலுத்தி புகழ்பெற்றார். யுத்த ஆரம்பத்தில் ஜெர் மன் படைகளெல்லாம் பிரஞ்சு எல்லையில் சண்டை செய்து கொண் டிருந்த படியால், கிழக்குப் பிரஷ்யா முழுவதிலும் இருந்த ஜெர்மன் துருப்புகள் 1½ லக்ஷத்துக்கு மேலிரா. அவர்களெல்லாரும் ஜெர் மன் கோட்டைகளைக் காவல்செய்வதற்காக வைக்கப்பட்டிருந்தனர். ஆகையால் கிழக்குப் பிரஷ்யாவிலிருந்த வபது சென்ற ஜெர்மன் ஜனங்கள் படைஞராகச் சேர்க்கப்பட்டு ருஷியரின்படையெடுப்பைத் தடுக்க முயற்சி செய்தார்கள். கானிக்ஸ்பர்க் கோட்டையிலிருந்த ஜெர்மன் படைகள் சுற்றுப் பிரதேசங்களில் கிடைக்கக் கூடிய இரண்டாந்தர மூன்றாந்தரத் துருப்புகளையும் சேர்த்துக்கொண்டு, ஜெனரல் ரன்னன்காம்ப் செலுத்திய ருஷியப் படைகளைத் தடுக்க முயன்றன.

ஆகஸ்ட் 17-ந்தேதி ஸ்டாலபின் நகரத்தில் சொற்ப தொகை கொண்ட ஜெர்மன் துருப்புகளை ஜெனரல் ரன்னன்காம்ப் தோற் கடித்து முன் சென்றார்.

ஸ்டாலபின் நகரத்திலிருந்து ஜெனரல் ரன்னன்காம்ப் தமது படைகளை 3-பாகமாகப் பிரித்து வெவ்வேறு திசையில் செலுத்தினார். ஸ்டாலபின் நகரத்திலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட ருஷியப் படைகள் டில்ஸிட் நகரத்தை நோக்கிச் சென்றன. அங்கிருந்து கானிக்ஸ்பர்க் நகரத்துக்குங்கில் சென்று பிறகு கர்டன்ந நகரத்துக்கு மேற்கில் வந்து கிலேபெற்றன. (மேலேயுள்ள படத்தில் கர்டன் நகரத்துக்கு மேற்கில் ஒரு கான்கு கோடுகள்கொண்ட உருவத்தால் குறிக்கப்பட் டிருக்கிறது.) கானிக்ஸ்பர்க் கோட்டையிலுள்ள ஜெர் மன் துருப்புகள் வெளியே வராதபடி அதற்குக் கிழக்கில் சில ருஷி யத் துருப்புகள் காவல் செய்தன.

ஸ்டாலபின் நகரத்திலிருந்து மேற்கே புறப்பட்ட வேறு சில ருஷியப் படைகள் கும்பினன் நகரத்தில் ஆகஸ்ட்20-ந்தேதி ஜெர் மன் படைகளைத் தோற்கடித்தன. அந்த ருஷியப் படைகள் இன்ஸ் டர்பர்க் நகரத்தை வசப்படுத்திக்கொண்டு கர்டன் நகரத்தைக் சுற்றி லும் கிலேபெற்றன.

ஸ்டாலபின் நகரத்திலிருந்து தெற்கே சென்ற மற்ற ருஷியப் படைகள் கோல்டாப் நகரத்தை வசப்படுத்திக்கொண்டு ஆங்கர்பர்க் நகரத்துக் கருகில் கிலேபெற்றன. ஆகையால் ஆகஸ்ட் மாதக் கடை சியில் ஜெனரல் ரன்னன்காம்ப் செலுத்திய ருஷியப் படைக ளெல் லாம் கானிக்ஸ்பர்க், கர்டன், ஆங்கப்பர்க் இம்மூன்று நகரங்களுள்ள வரிசையில் கிலேபெற்று அந்த வரிசைக்கு வடக்கிலுள்ள ஜெர்மன் பிரதேச முழுவதையும் வசப்படுத்திக்கொண்டன. கானிக்ஸ்பர்க் நகரத்திலுள்ள ஜெர்மன் கோட்டைகளை ருஷியத் துருப்புகள் தாக் கவுமில்லை, முற்றுகை போடவுமில்லை; அக்கோட்டைகளுக்கு முன் னால் திரை போட்டாற்போல சில ருஷியத் துருப்புகள் கிலேபெற் றிருந்தன.

ஜெனரல் ஸாம்ஸனுப் செலுத்திய 2½ லக்ஷம் துருப்புகள் அந்த ஜெர்மன் மாகாணத்தின் தெற்கு பாகத்தை வசப்படுத்திக் கொண்ட னர். அவருடைய படைகள் ஒஸாவிஸ், ம்லாவா இவ்விரண்டு ருஷிய

நகரங்களிலிருந்து புறப்பட்டன. மூன்றாவது நகரத்திலிருந்து புறப்பட்ட ருஷியப் படைகள் ரயில் பாதை வழியாய் முன் சென்று வார்சோ, நீடன்பர்க் இவ்விரு ஜெர்மன் நகரங்களை வசப்படுத்திக் கொண்டன. ஓஸாவிஸ் நகரத்திலிருந்து புறப்பட்ட ருஷியப்படைகள் மூன்றாம் நகரத்துக்குச் சென்று அங்குள்ள ஜெர்மன் ரயில் பாதைகளை உபயோகித்தன. அந்த ருஷியப்படைகளின் ஒரு பாகம் மூன்றாம் நகரத்திலிருந்து மேற்கே புறப்பட்டு பிரஸ்லௌ நகரத்தை வசப்படுத்திக் கொண்டது. மற்றொரு பாகம் மூன்றாம் நகரத்திலிருந்து தென் மேற்காய் புறப்பட்டு ஆர்டல்ஸ்பர்க் நகரத்தின் வழியாய்ச் சென்று ஆலன்ஸ்டின் நகரத்தை வசப்படுத்திக் கொண்டது. ஜெனரல் ஸாம்ஸனுடைய ருஷியப் படைகள் ஆகஸ்ட் 23-ந் தேதிக்குள், நீடன்பர்க், ஆலன்ஸ்டின், பிரஸ்லௌ இம்மூன்று நகரங்களுக்குள்ள வரிசையில், படத்தில் காண்பித்துள்ளபடி நிலைபெற்றன. இவ்விரண்டு சேனாபதிகளின் படைகள் ஒன்றை யொன்று நெருங்கிக்கொண்டிருந்தன. ஆனால் இன்னும் சந்திக்கவில்லை. பிரஸ்லௌ, ஆங்கர்பர்க், இவ்விரண்டு நகரங்களுக்குமிடையே, இரண்டு சேனாபதிகளின் குதிரைப் படைகள் விஸ்தாரமாய்ப் பரவிக்கொண்டிருந்தன. அவ்விரண்டுசேனாபதிகளும் சேர்ந்துவிடக்கூடாதென்று பிரஸ்லௌநகரத்தில் ஜெர்மன் துருப்புகள் கடிமையாய்ச் சண்டைசெய்தனர். ஆயினும் அவர்கள் அதிக பலங்கொண்ட ருஷியப்படைகளை எதிர்த்துநிற்கமுடியாமல் பின்வாங்கினர். இரண்டு ருஷியசேனாபதிகளும் 5½ லக்ஷம் துருப்புகளை ஒன்றுசேர்த்துவிடுவார்கள்போலிருந்தது; இழக்குப்பிரஷ்யாமாகாணத்தின் ஒருபாதியை ஏற்கெனவே அவர்கள் வசப்படுத்திக்கொண்டிருக்க மற்ற பாதியையும் சீக்கிரத்தில் வென்று விடுவார்கள்போலிருந்தது; ஜெர்மன் சக்கரவர்த்தியின் ராஜவம்சமும் ஜெர்மன் பிரபுக்களின் முன்னோர்களும் பிறந்த இடமாகிய அந்த பேர்பெற்ற மாகாணம் சத்துருவுக்கு வசமாகிவிட்டால், ஜெர்மானியரின் கவுரவத்துக்குக் கேடுண்டாகுமென்பாலிருந்தது. ஆகையால் அந்த மாகாணத்தினின்றும் ருஷியரை அப்புறப்படுத்துவதற்கு ஆகஸ்ட் மாதக் கடைசியில் ஜெர்மன் ராணுவ தந்திரிகள் யோசனை செய்தார்கள்.

ஜெர்மன சேனாபதி—ஜெனரல் வான் ஹின்டன்பர்க்.

1911-ம் வருஷத்தில் ஜெர்மன் ராணுவத்தினின்றும் நீங்கி பென்ஷன் பெற்று வந்த ஒரு ஜெர்மன் சேனாபதி ஹனுவர்

நகரத்தில் தமது வார்த்தைபத்தை கழித்து வந்தார் என்பதை இந்த மகா யுத்தம் தொடங்கியபோது எவரும் விசேஷமாய்க் கவனிக்கவில்லை. அவருடைய பெயர் ஜெனரல் வான் ஹிண்டன்பர்க். அவர் 1870-ம் வருஷத்து யுத்தத்தில் சண்டை செய்து அனுபோகம் பெற்றவர். அவருடைய வம்சத்தினர் இரண்டு நூற்றாண்டுகளாக கவர்ன்மெண்டுக்கு ஊழியஞ்செய்துவந்த பெருமையைக்கொண்டாடக்கூடியவர்கள். அவருடைய பாட்டனார் நெப்போலியனோடு சண்டைசெய்து ஜெயித்திருக்கிறார். ஹனவர்நகரத்தில் 67-ம் ஆண்டை சுகமாய்ப் போக்கிக்கொண்டிருந்த ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் ஆகஸ்டு 22-ந் தேதியன்று ஜெர்மன் சக்கரவர்த்தியிடமிருந்து ஒரு தந்தி வரப்பெற்றார். கிழக்குப் பிரஷ்யாவில் யுத்தம் நடத்தும்படி அந்த தந்தியில் உத்தரவு கிடைத்தவுடன், அன்றினமே அவர் புறப்பட்டு விஸ்டுலா நதிக்கரையிலுள்ள மாரியன்பர்க் நகரத்துக்கு மறுதினம் போய்ச் சேர்ந்தார். 5 லக்ஷம் ருஷியக் துருப்புகளின்மீது போர்வினைத்து அவர்களை ஜெர்மன் பூமியிலிருந்து அப்புறப் படுத்தும்படி சுருக்கமான உத்தரவு அவருக்குக் கிடைத்ததே யொழிய அவ்வாறு போர் செய்வதற்குத் தேவையான புதிய ஜெர்மன் படைகள் எவையும் அவருக்கு அனுப்பப்படவில்லை. கிழக்குப் பிரஷ்யாவிலிருந்த 1½ லக்ஷம் முதல்தர ஜெர்மன் துருப்புகள் ருஷியரால் பலமுறை தோல்வியும் சேதமும் அடைந்து கானிக்ஸ்பர்க் நகரத்திலிருந்த கோட்டைகளின் ஆதரவை நாடிச் செல்லவேண்டியிருந்தது. அப்படிப்பட்ட ஜெர்மன் துருப்புகளைத் தவிர அந்த மாகாணத்தில் கிடைக்கக்கூடிய வேறு துருப்புகள் அங்குள்ள வயது சென்ற ஜனங்களேயாவார்கள். அந்த இரண்டாந்தர துருப்புகளுக்குத் தலைமைவகித்து யுத்தத்தின் பொறுப்பையும் அவர் துணிகரமாய் ஏற்றுக்கொண்டார். அவருடைய தைரியத்தால்தான், யுத்தத்தின் ஆரம்பத்தில், ஜெர்மன் சேனையின் பெரும்பாகமும் பிரஞ்சு எல்லைக்கு அனுப்பிவிடப்பட்டன. ஜெர்மன் சக்கரவர்த்தி அவரிடம் அவ்வளவு நம்பிக்கை வைத்ததற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. அவர் பால்யத்தில் சேனபதியாயிருந்தபோது கிழக்குப் பிரஷ்யாவில் வைக்கப்பட்டிருந்த படைகளுக்குத் தலைமை வகித்திருந்தார். அப்போது அவர்கிழக்குப்பிரஷ்யாவின் பூமி அமைப்பை சோதனைசெய்து, அதன் இயற்கை அமைப்பிலுள்ள விசேஷங்களை ராணுவ நடவடிக்கை

களில் எவ்வாறு பயன்படுத்தலாமென்று அறிந்தார். சமாதானகாலத்தில் ஒவ்வொரு தேசத்துச் சேனையும் யுத்த பயிற்சிகளை நடத்துவது வழக்கம். அப்போது அந்த சேனை இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் மற்றொரு பாகத்தோடு யுத்தஞ் செய்யும்; பீரங்கிகளிலும் துப்பாக்கிகளிலும் வெறும் வேட்டுகள் உபயோகிக்கப்படும். அவ்வாறு ஜெர்மன் சேனை கிழக்குப் பிரஷ்யாவில் சில வருஷங்களுக்குமுன் யுத்தப் பயிற்சியை நடத்தியபோது, அது இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகத்துக்கு ஜெர்மன் சக்கரவர்த்தியும் மற்றொரு பாகத்துக்கு ஜெனரல் வான் ஹிண்டன்பர்க்கும் தலைமை வகித்தார்கள். ஜெர்மன் சக்கரவர்த்தி ருஷ்ய எல்லையிலிருந்து கிழக்குப் பிரஷ்யாவின்மீது படையெடுத்து வருவதாகவும் ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் அந்த படையெடுப்பைத் தடுப்பதாகவும் யுத்தம்நடத்தினார்கள். அப்போது ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் ஜெர்மன்சக்கரவர்த்தியின் படைகளைச் சிறுமை எரிகளும் நிரம்பிய பிரதேசங்களில் இழுத்து, பீரங்கிகளை சேற்றில் புதையும்படிச் செய்து, சிறுப்புகளை நீர்த்தேக்கங்களில் இடுப்பு மட்டும் முழுகச் செய்து, தமது படைகளை மட்டும் பர்தோபஸ்தான சிறு வழிகளில் அலக்ஷியமாய்ச் செலுத்தி வெற்றி பெற்றிருக்கிறார். ஜெர்மன் சேனாபதிக்குள் ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் ஒருவர்தான் ஜெர்மன் சக்கரவர்த்தியின் தாக்ஷிண்ணியத்துக்கு உட்படாமல் தமது இச்சைப்படி நிறைவேற்றும் பிடிவாதத்தை உடையவ ரென்று கருதப்படுகிறார். அவர் ராணுவத்தினின்றும் நீங்கிப் பென்ஷன் பெற்ற பிறகுங்கூட கிழக்குப் பிரஷ்யாவில் அநேக பரிகைகளைச் செய்துவந்தார். அவர் மோட்டார் வண்டியில் ஏறிச் சென்றபோது ஒரு பீரங்கியையும் வண்டியில் ஏற்றி அதில் குதிரைகளைக் கட்டி தம்முடன் கூடக் கொண்டுபோவது வழக்கம். எரிகளில் அந்த பீரங்கியை இழுத்துச்சென்று எந்தெந்த இடங்களில் அதிக ஆழமில்லையென்றும் எந்தெந்த இடங்களில் ஜலத்துக்கடியிலுள்ள தரை உறுதியாயிருக்கிறதென்றும் அறிந்துகொண்டார். சில வருஷங்களுக்குமுன் கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள எரிகளின் ஜலத்தை வடித்து அங்கு சாகுபடி செய்யலாமென்று ஜெர்மன் கவர்ன்மெண்டு யோசனை செய்தபோது அவ்வாறு செய்யக்கூடாதென்று அவர் சக்கரவர்த்திக்கு அறிவித்து அந்த யோசனையைக் கைவிடும்படி செய்தார். அந்த மாகாணத்திலுள்ள இயற்கை விசேஷங்களை உள்ளபடி விட்டுவைத்திருப்பதின் பலன்

இந்த மகா யுத்தத்தில் தெரியவந்தது. சாதாரண காலங்களில் நடத்தப்படுகிற போலிச் சண்டையைப் போலவே அதே இடத்தில் அதே மாதிரி உண்மையான சண்டையை நடத்துவது அபூர்வ சம்பவமாகும். அதை ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் 1914-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 31-க்தேதி நடத்திக் காண்பித்தார்.

ஜெர்மன் படைகள் சேர்க்கப்பட்டன.

ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் செய்த யோசனை என்னவென்றால், இரண்டு ருஷிய சேனைகளும் தங்கள் படைகளைச் சேர்த்து விடுவதற்குள்ளாக அவர்களைத் தனித்தனியாய் முறியடிக்கவேண்டுமென்பது. அதற்கு அவர் யுத்த நடவடிக்கைகளை விரைவாய்த் தொடர்வது அவசியமென்று உணர்ந்தார். அவர், முதலில் ஜெனரல் ஸாம்ஸனுப் செனுத்திய ருஷியப் படைகளோடு சண்டை செய்யத் தொடங்கினர். காலா பக்கங்களிலும் தோல்வியுற்றுச் சிதறிக் கிடந்த ஜெர்மன் படைகளை அவர் திரட்டினர். கானிக்ஸ்பர்க் கோட்


பால்டிக் கடல்
மேன்ஸ்டீன்
டில்ஸிட்
கோவ்னே
ஸ்டாலுபினன்
கிபாலபினன்
காதித்புர்க்
இன்ஸ்டர்பர்க்
கும்பினன்
ஒல்டாஷ்
டான்ஜிக்
கார்ன்
தோர்ன்
ஸ்டெல்பிங்க
ஆகுகரபாத்
ராத்பீல்ஸ்
ஆலன்ஸ்டின்
மோரியன்பர்க்
ஆலன்ஸ்டின்
டான்னன்பர்க்
ஜாஸன்
ஸீவில்பர்க்
ஸ்டால்லோப்
ஸ்டால்லுபோனன்
ஸ்டால்லுபோனன்
ஸ்டாலுபினன்
கிரட்ஸனெ
ஸ்டாலுபினன்
ஸ்டாலுபினன்
ஸ்டாலுபினன்

டைக்குள்ளிருந்த சில ஜெர்மன் படைகளை ஆலன்ஸ்டின் நகரத்துக் கருகில் சேர்த்தார். விஸ்டுலா நதிக்கரையிலுள்ள தாரன், கிராடன்ஸ் இவ்விரு நகரங்களில் கோட்டைகளைக் காப்பதற்காக இருந்த 2-ந்தர ஜெர்மன் துருப்புகளும் அந்த போர்முனைக்கு அனுப்பப் பட்டன. அந்த கோட்டைகளிலிருந்த பலதுப்பாக்கிகளும் கொண்டு போகப்பட்டன. கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள விஸ்தாரமான ரயில் பாதைகளின் உதவியால் அந்த துருப்புகளும் பீரங்கிகளும் விரைவாய்த் திரட்டப்பட்டன. இரவும் பகலுமாய் ரயில் பாதைகளெல்லாம் வேலைசெய்து ஜெர்மன் படைகளைச் சேர்த்துக்கொண்டிருந்தன. அவ்வாறு கிடைக்கக் கூடிய ஜெர்மன் துருப்புகளையெல்லாம் முற்றிலும் சேர்க்கும் வரையில் கூட ஜெர்மன் சேனுபதி காத்திருக்கவில்லை. அவர் தம்முடைய படவடிக்கைகளுக்கு அத்தியாவசியமாயுள்ள 1½-லக்ஷம் துருப்புகள் சேர்க்கப்பட்டவுடன் யுத்தத்தை ஆரம்பித்து விட்டார். ஆகஸ்ட் 26-ந்தேதியன்று, அதாவது அவருக்கு உத்தரவு கிடைத்து 9 தினங்களுக்குள்ளாக, ஸோல்டா நகரத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டார். ருஷிய சேனுபதி அந்த ஸ்தலத்தின் முக்கியத்தை அறியாமல், இதற்கு முன் ஜெர்மன் படைகள் சில்லரைச் சண்டைகளைச் செய்துவந்தது போல இப் போதும் அந்த சம்பவம்தேரிட்டதென்று நினைத்துவிட்டார். அதேக ஜெர்மன் நகரங்களிலிருந்து வருகிற ரயில் பாதைகள் ஸோல்டா நகரத்தில் வந்து கூடுகின்றன. தவிர, ருஷிய மாகாணமாகிய போலண்டிலிருந்து செல்கிற ரயில்பாதை ஸோல்டா நகரத்தில் வந்து சேர்கிறது. ஜெனரல் ஸாம்ஸனுப் கிழக்குப் பிரஷ்யாமீது படையெடுக்க போலண்டிலிருந்து புறப்பட்டபோது அவருடைய உபயோகத்துக்கு இரண்டு ருஷிய ரயில் பாதைகள்தானிருந்தன. ம்லாவா, ஸுவாலிஸ் இவ்விரு ருஷிய நகரங்களிலிருந்து கிழக்குப் பிரஷ்யாவுக்குச் செல்கிற ரயில் பாதைகளைத்தான் அவர் உபயோகித்தார். ஸோல்டா நகரத்தை ஜெர்மானியர் வசப்படுத்திக்கொண்ட பிறகு, ருஷியப் படைகள் தங்கள் சொந்தப் பிரதேசத்துடன் அந்த ரயில் பாதை வழியாய் போக்குவரத்து செய்யச் சாத்தியப்படவில்லை. ஜெர்மன் துருப்புகள் ஸோல்டா நகரத்தைப் பிடித்தபோது அச் சம்பவம் ஆழ்ந்த யோசனையின் பலனாக நடைபெற்றிருக்கிறதென் பதை ஜெனரல் ஸாம்ஸனுப் அறியக் கூடவில்லை.

டானன்பர்க் சண்டை.

ஜெர்மன் துருப்புகள் லோல்டா நகரத்திலிருந்து டானன் பர்க் வரையில் நிலைபெற்றிருந்தன. ஜெர்மன் துருப்புகள் நிலைபெற் றிருந்த பிரதேசத்தில் யாதொரு விசேஷமுமிருப்பதாக ருஷிய சேனாபதிக்குத் தெரியவில்லை. அதற்காகில் ஒரு பில்லை ஜங்க்ஷ னிருந்ததால் அந்த சாதகத்தை உத்தேசித்து ஜெர்மானியர் அங்கு நிலைபெற்றிருக்கலா மென்று ருஷிய சேனாபதி நினைத்தார். ஆனால் ஜெனரல் வான் ஹின்டன்பர்க் அந்த பிரதேசத்தில் சில விசேஷங் களிருந்த காரணத்தால் தான் அங்கு நிலைபெற்றிருந்தார். அவ ருக்கு வலது புறத்தில் அநேக ஆழமான ஏரிகளும் சேறும் சகதி யுமா யுள்ள பூமிகளு மிருந்தபடியால் அவ்விடத்தைக் காக்க சொற்ப துருப்புகளே போதுமானவை யென்று ஜெர்மன் சேனா பதி தெரிந்துகொண்டிருந்தார். அவருடைய துருப்புகள் நிலைபெற் றிருந்த வரிசைக்குப் பின்புறம் எவ்வித இடைஞ்சலுமின்றி தாராள மாய் நடமாடத்தக்கதா யிருந்தது. ஆகையால் தமது துருப்பு களை நினைத்த இடங்களுக்கு விரைவாய் மாற்றலாம். அவருக்கு முன்புறத்தில் அதாவது ருஷியத் துருப்புகள் நிலைபெற்றிருந்த பிரதேசத்தில் அபாயகரமான ஏரிகளும் களர் நிலங்களும் இருந்தன. அவ்விடத்தில் ருஷியத் துருப்புகள் சாவகாசமாய் முன்சென்று நிலைபெற்று விட்டபோதிலும், யுத்தம் நடக்கும்போது துருப்பு கள் அணிவகுத்தபடியே அவசரமாய்ச் செல்லவும் நினைத்த வழிக ளில் நடமாடவும் சாத்தியமில்லை. ராளமான பீரங்கிகளையும் வண்டிகளையும் ஏககாலத்தில் குறித்த இடங்களுக்கு விரைவாய்க் கொண்டுபோவது சாத்தியமல்ல. ஜெர்மானியர் ராளமான பீரங்கி களை வைத்திருந்தார்கள். அவர்கள் துப்பாக்கிகளைப்போல பீரங்கி களை வரிசையாய் அடுக்கி வைத்தார்க ளென்று ஒரு ருஷியப் படைத் தலைவர் பிறகு சொன்னார். ருஷியத் துருப்புகள் ஜெர் மானியரின் இருப்பிடங்களைப் பிடிப்பதற்காக லோல்டா நகரத் திலிருந்து டானன்பர்க் நகரம் வரையிலுள்ள பிரதேசத்தை தாக்கினார்கள். முன்புறத்தில் அபாயகரமான பள்ளங்களும் நீர்த் தேக்கங்களு மிருந்தபடியால், ருஷியத் துருப்புகள் பக்தோபஸ்தா யுள்ள சில பாதைகளின் வழியாகவே முன்சென்று தாக்க சாத்தியப் பட்டது. ஜெர்மன் பீரங்கிகள் அந்த பந்தோபஸ்தான வழிக

ளின்மீது ஷார்பனல் குண்டுகளைப் பொழிந்த வண்ணமாயிருந்தன. ருஷியத் துருப்புகள் ஏராளமாய் சேதமடைந்ததைக் கண்டு ருஷிய சேனுபதி லோல்டா நகரத்துக்குத் தெற்கில் வளைந்துகொண்டு ஜெர்மானியரைப் பக்கவாட்டில் தாக்க முயற்சிசெய்தார். ஆனல் லோல்டா நகரமுள்ள பிரதேசத்தில் அபாயகரமான ன் தலங்களிருந்ததை அறிந்த ஜெர்மன் சேனுபதி அங்கு பக்தோபஸ்தாயுள்ள பாதைகளை மட்டும் காக்கத் தேவை ான சொற்ப ஜெர்மன் துருப்புகளையே அனுப்பினர். ஜெனரல் ரம்ஸனுப் தமது படைகளையெல்லாம் லோல்டா நகரத்துக் கருகில்திரட்டி அந்நகரத்தைப்பிடிக்க முயற்சிசெய்தார். ஆனல் அவருடைய படைகள் விஸ்தாரமான பிரதேசத்தில் பரவியிருந்தபடியாலும், ஏரிகளாலும் சதுப்பு நிலங்களாலும் தனித்தனியாய் பிரிக்கப்பட்டிருந்தபடியாலும், அவைகளை அதிகமாய்த் திரட்ட முடியவில்லை. ருஷியத் துருப்புகள் 28-ந் தேதி வரையில் 3 தினங்களாகச் சண்டை செய்து கஷ்டப்பட்டபோனவுடன் ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் ருஷியரைத் தாக்க ஆரம்பித்துவிட்டார். அவர் அதிக ஜெர்மன் படைகளையும் பீரங்கிகளையும் பற்பல ரயில் பாதைகளின் வழியாய் திடீரென்று லோல்டா நகரத்தில் குவித்து ருஷியரை முறியடித்து, நீடன்பர்க் நகரத்தையும் வசப்படுத்திக்கொண்டார். அதே தினத்தில், டானன்பர்க்நகரத்துக்குக் கிழக்கிலுள்ள ரயில்பாதையில் அவர் பெரியமுற்றுகை பீரங்கிகளை வரிசையாய் அடுக்கி வைத்து, அங்கு வலுவாய் நிலை பெற்றிருந்த ஏராளமான ருஷியப் படைகளை தோற்கடித்தார். அவ்வாறு ஆகஸ்ட் 28-ந்தேதிக்குள் ஜெனரல் வான் ஹிண்டன்பர்க், லோல்டா நகரத்திலிருந்து ஆலன்ஸ்டின் நகரம் வரையிலுள்ள ரயில் பாதை முழுவதையும் வசப்படுத்திக்கொண்டு, அந்தபாதைக்குக் கிழக்கிலுள்ள சேற்றுப் பூமியிலும் ஏரிகளிலும் ருஷியப் படைகளை யெல்லாம் பின் தள்ளிவிட்டார். பிறகு ஜெனரல் ரம்ஸனுப் தமது படைகளை யெல்லாம் ஒரு பக்கமாய்த் திரட்ட முற்சி செய்தார். பிறங்கினு நகரத்திலிருந்த ருஷியப் படைகளை பாலனீம் நகரம் வரையில் நெருங்கிக் கொள்ளும்படி உத்தரவு செய்தார். ஆலன்ஸ்டின்நகரத்திலிருந்த ருஷியப்படைகள் அந்நகரத்தைக்காலிசெய்து தெற்கு திசையில் பின் வாங்கின. அந்த முக்கியமான நகரத்தை ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் ஒரு கூஷணமும் தாமதிக்காமல் வசப்படுத்திக்கொண்டார்.

ரூஷியப் படைகள் சூழ்ந்து கொள்ளப் படடன.

ரூஷியப் படைகளைச் சுற்றிலுஞ் செல்கிற பாதைகளை யெல்லாம் வசப்படுத்திக்கொண்டு அப்படைகளை அழித்துவிடவேண்டுமென்பது ஜெர்மன் சேனாபதியின் நோக்கமாகும். ஸோல்டாநகரத்திலிருந்து ஆலன்ஸ்டின் வரையில் ரூஷியரின் பக்கவாட்டை வளைத்துகொண்டதுபோல், வடகிழக்கில் ரூஷியரின் மற்றொரு பக்கவாட்டையும் வளைத்துகொள்ள ஜெர்மன் சேனாபதி இப்போது முயற்சி செய்தார். அவர் இரண்டு தினங்களில் வெகுதீவிரமாய்ச் செய்து முடித்த ஏற்பாடுகள் ஆச்சரியமாயிருந்தன. 28, 29ந் தேதிகளில் அவர் ஆலன்ஸ்டின் நகரத்துக்கு வடகிழக்கில் தமது படைகளை வெகுதூரம் நீளும்படிச் செய்தார். ஆலன்ஸ்டன் நகரத்திலிருந்து ராத்பிலீஸ் நகரம்வரையில் ரயில் பாதையின் ஏழியாய் ஏராளமான துருப்புகளையும் பீரங்கிகளையும் அனுப்பினர். ராத்பிலீஸ் நகரத்திலிருந்து தென் கிழக்கே செல்கிற ரயில் பாதையை அவர் வசப்படுத்திக் கொண்டார். அதன்பிறகு, ரூஷியரின் வசத்தில் ஒரே ஒரு ரயில் பாதைதானிருந்தது. ஆலன்ஸ்டின் நகரத்திலிருந்து ஹர்டல்ஸ்பர்க் நகரத்தை நோக்கிச் செல்கிற அந்த ஒரு ரயில் பாதையையும் ஜெர்மன் சேனாபதி பிடித்துக்கொள்ளத் தீர்மானித்தார். அந்த ரயில்பாதையிலுள்ள பாஸனிம்நகரத்தில் ஏராளமான ரூஷியத் துருப்புகள் குவிந்திருந்தன. அவ்விடத்தில் ஜெர்மன் சேனாபதி தம்மிடமிருந்த துருப்புகளை யெல்லாம் திரட்டினர். அவரிடம் ஏராளமான துருப்புகள் எது? அவரிடம் ஏராளமான துருப்புகளிருந்ததாக ரூஷியர் தவறாய் நினைத்தார்கள். ஜெர்மன் சேனாபதி ரயில் பாதைகளின் உபயோகத்தையும் அந்த சேற்றுப்பிரதேசத்திலிருந்த இரண்டொரு சோட்டுகளின் முக்கியத்தையும் செவ்வையாய் அறிந்திருந்தார். ஜெர்மன் துருப்புகளையும் பீரங்கிகளையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அதிவிரைவாய்க் கொண்டு போய் குவித்து சண்டை செய்ததால் அவரிடம் ஏராளமானது துருப்புகளிருந்தது போலத் தோன்றிற்று. ஜெர்மன் சேனாபதி பாதைகளின் உபயோகத்தை முற்றிலும் அறிந்ததோடு, மோட்டார் வண்டிகளையும் ஏராளமாய் உபயோகித்தார். கிராமங்களிலும் நகரங்களிலுமிருந்த மோட்டார் வண்டிகளையும் கோச்சுவண்டிகளையும் இன்னும் கிடைக்கக் கூடிய மற்ற விதமான குதிரைவண்டிகளையும் அங்கங்கே தயாராய்க்

சேர்த்துவைத்து அவ்வண்டிகளில் ஏற்றக்கூடிய முழுபளவுக்கும் துருப்புகளையும் பீரங்கிகளையும்சுமத்தி, பத்தாயிரக்கணக்கான துருப்புகளை இரண்டு தினங்களுக்குள்ளாக பாஸனிம் நகரத்துக் கருகில் நிலைபெறச்செய்தார். தவிர, ஜெர்மன் சேனபதி பூ மியின் அமைப்பை நன்றாய் அறிந்திருந்த படியால், போர் முனையிலுள்ள அபாயகரமான பிரதேசங்களைக் காவல் செய்யத் துருப்புகளே தேவையில்லை யென்று தீர்மானித்து அந்தத் துருப்புகளை யெல்லாம் பாஸனிம் நகரத்தை நோக்கி அனுப்பினார். ஆகையால் ஜெர்மன் சேனபதியிட மிருந்த துருப்புகள் சத்துருக்களை விட அதிக மாயில்லாத போதிலும், முக்கிய ஸ்தலங்கள் இன்னவை என்று ஜெர்மன் சேனபதி அறிந்து அங்கு மட்டும் துருப்புகளை வைத்து மற்ற துருப்புகளையெல்லாம் பாஸனிம் நகரத்துக் கருகில் குவித்துவிட்டார்.

பாஸனிம் நகரத்தில் 30-ந்தேதி முழுவதும் மிகவும் உக்கிரமான சண்டை நடந்தது. ஜெர்மானியர் ரயில் பாதைகளின் வழியாய் பெரிய முற்றுகை பீரங்கிகளைக் கொண்டுவந்து அந்நகரத்திலிருந்த அரண்களை யெல்லாம் பொடிசெய்து ருஷியத் துருப்புகளுக்குத் தங்க இடமில்லாமற் செய்து விட்டனர். அந்த நகரமும் அதன் வழிபாய்ச் சென்ற ரயில் பாதையும் ஜெர்மானியருக்கு வசமாயின. அந்த நகரத்துக்குத் தெற்கிலுள்ள ஆர்டல்ஸ்பர்க் நகரத்தைப் பிடிப்பதற்குள்ளாக சில ருஷியப் படைகள் அந்நகரத்துக்குத் தெற்கே செல்கிற ரயில் பாதை வழியாய்த் தப்பிச் சென்றன. மற்ற ருஷியப்படைகளெல்லாம், பாஸனிம் நகரத்துக்கும் நீடன்பர்க் நகரத்துக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் சிக்கிக்கொண்டன. அந்த பிரதேசத்துக்கு இரண்டு பக்கங்களிலும் அந்த நகரங்களின் வழியாய்ச் செல்கிற ரயில் பாதைகளை ஜெர்மானியர் வசப்படுத்திக் கொண்டார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். அந்தபிரதேசத்தில் வேறு ரயில்பாதைகளும் சோட்டுகளுங்கூட இல்லாதபடியால், ருஷியத்துருப்புகள் நடமாட முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தன. பிறகு ஆரம்பித்த படுதோல்வி உண்மையில் பயங்கரமாயிருந்தது. ருஷிய படைகளெல்லாம் காலாபக்கங்களிலும் நெருக்கப்பட்டு குழம்பிக் கிடக்கையில், ஜெர்மன் பீரங்கிகள் நிர்தாக்ஷண்யமாய் ருஷியக் கூட்டங்களின்மேல் நெருப்பைப் பொழிந்தவண்ணமாயிருந்தன. அபாயகரமான பிரதேசத்தில் தள்ளப்பட்ட அநேகருஷியத் துருப்புகளும்

பிரங்கிகளும் எரிகளில் மூழ்கிப் போயும், சேற்றுப்பூமியில் புதைந்து போயும் வெளியே வரமுடியாமல் தவிக்க, வழிதெரியாமல் நினைத்த பாதைகளில் சென்ற வேறு பல ருஷியப் படைகள் அங்கங்கே சாண மடைவதற்குள்ளாக கூட்டங்கூட்டமாய்ச் சேதமடைய, பக்தேரபஸ் தான வழிகளே நாடிச்சென்ற வேறுபல துருப்புகளும் பிரங்கிகளும் தளவாடங்களும் ஜெர்மன் குண்டுகளுக்கு இரையாக, போர்க்கள மெங்கும் கொலைக்களமாய் மாறிவிட்டது. ருஷியப்படைகளை மீட்டு விடுவதற்காக கேரில்சென்று முயற்சிசெய்த ருஷிய சேனைத் தலைவர் களில் பலர்மாண்டுபோயினர். ருஷிய சேனாபதியாகிய ஜெனரல் ஸாம் ஸனுப் தாமே கேரில் போர்க் களத்துக்குச்சென்று ருஷியத்துருப்பு களை ஒழுங்குபடுத்த முயற்சிசெய்தார். போர்க்களத்துக்குருகில் செல் லக் கூடாதென்று சில உத்தியோகஸ்தர்கள் அவருக்கு எச்சரிக்கை செய்தபோது, "என்னுடையதுருப்புகளுக்கு இடையில்தான் என்னு டைய இருப்பிடம்" என்றுஅவர் பதிலளித்து, ஜெர்மன்பிரங்கிகளின் உக்கிரத்தால் தகித்துக்கொண்டிருந்த திசையை நோக்கிச் சென்றார். அவர் மற்ற உத்தியோகஸ்தர்களுடன் பூகோளப் படத்தைக் கவனித் துக்கொண்டிருந்த போது, அங்கு ஒரு குண்டுவிழுந்து அவரை யும் அருகிலிருந்த மற்றவர்களையும் தாக்ஷணமே கொன்று விட்டது. மொத்தம் 30,000 ருஷியத் துருப்புகள் போர்க்களத்தை மூடிக்கிடக் தனர். 90,000ருஷியத் துருப்புகள் சரணமடைந்தனர். 60,000 பேர் தப்பியோடினர். மிகுதியாயுள்ள 10,000 பேர் இத்தசண்டை யில் கலக்காமலே வேறொரு பிரதேசத்தில் தங்கியிருந்தனர்.

ஜெனரல் ஸாம்ஸனுப் செலுத்திய படைகளை அவ்வாறு அழி த்த பிறகு, ஜெனரல்வான் ஹிண்டன்பர்க் ஒரு நிமிஷமும் இளைப் பாறுவதாக உத்தேசிக்காமல், மற்றொரு ருஷிய சேனாபதி இருக்கு திசையில் தமது படைகளைக் திருப்பினர். அத்திசையில் ஜெனரல் ரன்னன்காம்ப் அதிஷ்டவாயும் சாமர்த்தியமாயும் பின் வாங்கிக் கொண்டிருந்தார். ஜெர்மன் சேனாபதி காமெடுத்த காரியத்தின் மற்றொரு பாதியை நிறைவேற்ற விரைந்து சென்றார். யுத்தப்பிர தேசத்தில் சேதமடைந்திருந்த ரயில் பாதைகளும் சாட்டுகளும் ஜெர்மன் படைகளை எவ்வளவு வேகமாய்க் கொண்டு போகக்கூடுமோ அவ்வளவு வேகமாய் அவர் யுத்த நடவடிக்கைகளை நடத்திவந்தார். ருஷியப்படைகள் விரைவாய்ப் பின்வாங்கிச்சென்றதால், அவை:னைச்

சூழ்ந்துகொள்ள ஜெர்மன் சேனபதி செய்த முயற்சி பலிக்கவில்லை. ஸெப்டம்பர் 11-ந்தேதி வரையில் ருஷியப் படைகள் பின்வாங்கிய வண்ணமாகவும் ஜெர்மன் படைகள் தாக்கிப் வண்ணமாகவும் கடும் போர் நடந்துவந்தது. அந்த 10 தினங்களில் 30,000 ருஷியத் துருப்புகள் சரணமடைந்ததோடு, 150 பீரங்கிகளும் ஏராளமான யுத்த தளவாடங்களும் பாதையெங்கும் கைவிட்டப் பட்டுக்கிடந்தன. கிழக்குப் பிரஷ்பாவிலிருந்து சத்துருக்களை முற்றிலும் அப்புறப்படுத்தியதாக ஸெப்டம்பர் 12-ந்தேதி ஜெனரல் வான் ஹின்டன்பர்க் ஜெர்மன் சக்கரவர்த்திக்கு அறிவித்தார். அதன்பிறகு ஜெனரல்வான் ஹின்டன்பர்க் அந்த யுத்தநடவடிக்கைகளை வேறொரு சேனைத்தலைவரிடம் ஒப்புவித்தார்.

சண்டையின் பலன்கள்.

மகாயுத்தந்தொடங்கியபோது சாணுவத்தினின்றும் வீலகிய சாலும் கவனிக்கப்டாமலிருந்த ஒரு போர்வீரன் அற்புதத்திறமை படைத்தவனென்று 3 வாரங்களுக்குள்ளாகக் கருதப்பட்டு ஜெர்மானியரால் கொண்டாடப்பட்டார். அந்த ஜன அபிப்பிராயத்துக்கிணங்க, கிழக்கரங்கத்திலுள்ள ஜெர்மன் படைகளுக்கெல்லாம் அவர் தலைமை வகிக்கும்படி ஜெர்மன் சக்கரவர்த்தி உத்தரவு செய்தார்.

ஆனல் டானன்பர்க் சண்டையில் ருஷியருக்கு நேர்ந்த தோல்வி அவர்களுடைய யுத்த நடவடிக்கைகளை பாதிக்க வில்லை. ருஷியர் கிழக்குப் பிரஷ்பாவின்மீது படையெடுத்ததனல் 1½ இலக்ஷம் துருப்புகளை இழந்து விட்டபோதிலும், ஆள்பலங் குறைந்து விட்டதென்ற கவலை அவர்களுக்கில்லை. செப்டம்பர் 15-ந்தேதிக்குள்ளாக காலிஷியா மாகாணத்தின் மீது ருஷியர் படையெடுத்து ஜயசீலர்களாய் முன் சென்று கொண்டிருந்தனர். லெம்பர்க் நகரத்தில் வெற்றிபெற்ற ருஷிய சேனபதியாகிய ஜெனரல் ரஸ்கி நீமன் நதிக்கரைக்கு வந்தார். கிழக்குப் பிரஷ்பாவிலிருந்து ஜெனரல் ரன்னன்காம்ப் பின்வாங்கி நீமன்நதிக்கரைக்கு தம்படைகளைக்கொண்டுவந்து சேர்த்தபிறகு, அந்த ருஷிப்படைகளுக்கு ஜெனரல் ரஸ்கி தலைமைவகித்து வெற்றி அடைந்தார். நீமன்நதிக்கரையிலிருந்த ருஷியரைத்தாக்கவந்த ஜெர்மானியர் தோல்வி யடைந்து தங்கள் எல்லைப் புறத்திலேயே தங்கி யிருந்தனர்.

ஆயினும் கிழக்குப் பிரஷ்யாவின் மீது படையெடுத்த 5½ லக்ஷம் முதல் தரமான ருஷியத் துருப்புகள், 1½ லக்ஷம் 2-ந்தரமான ஜெர்மன் துருப்புகளால் தோல்வி யடைந்ததால், அந்த ஜெர்மன் மகாணத்தின் இயற்கை அமைப்பிலுள்ள விசேஷங்கள் ஜெர்மானியருக்கு எவ்வளவு சாதகமா யிருக்கின்றன வென்று ருஷியராணுவ தந்திரிகள் சரியாய் உணர்ந்தார்கள்; அதன்பிறகு கிழக்குப்பிரஷ்யாவின்மீது வெகுதூரம் படையெடுத்து அதை வசப்படுத்திக் கொள்ளலாமென்ற நோக்கம் ருஷியரால் முற்றிலும் கைவிடப்பட்டது. காலிஷிபா மாகாணத்தை வசப்படுத்திக் கொள்வதிலேயே ருஷியர் முழுகவனத்தையும் செலுத்தி வந்தார்கள்.


42-வது அத்தியாயம்.

காலிஷியா மாகாணத்தில் யுத்த நடவடிக்கைகள்.

இனி ஆஸ்டிரிய சேனையின் நடவடிக்கைகளைப்பற்றிச் சொல்வோம்.

ஆஸ்டிரிய சேனாதிபதியாகிய ஆர்ச்டியூக் பிரடரிக் ஆஸ்டிரிய சேனையை இரண்டு பாகமாகப் பிரித்து அவைகளுக்கு இரண்டு சேனாபதிகளை நியமித்து போலண்டின்மீது படையெடுக்கும் நோக்கத்தை நிறைவேற்றத் தீர்மானித்தார். இரண்டு ஆஸ்டிரிய சேனாபதிகள் இரண்டு திசைகளில் யுத்தத்தைத் தொடங்கினர்கள். ரிஸமில் நகரத்துக் கோட்டைகளை ஆதாரமாகக் கொண்டு ஜெனரல் டாங்கல் வடக்கு நோக்கிச்சென்று போலண்டின்மீது படையெடுக்க நோக்கங் கொண்டார். ஜெனரல் டாங்கல் சுமார் 4 லக்ஷம் ஆஸ்டிரியத் துருப்புகளைச் செலுத்தி, ரிஸமில் நகரத்திலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டு லான் நதிக்கரையோரமாய்ச் சென்று பிறகு வீஸ்டுலா நதிக்கும் பக் நதிக்கு மிடையே முன் சென்றார். (அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்க.) அவருடைய நோக்கமென்னவென்றால், லுப்லின், கோம், இவ்விரு ருஷிய நகரங்களுக்கு மிடையேயுள்ள ரயில் பாதையை வசப்படுத்திக் கொள்ளவேண்டுமென்பது. அந்த ரயில் பாதை உள்நாட்டு ருஷிய மாகாணங்களிலிருந்து வார்ஸா நகரத்துக்கு வருகிறது. வார்ஸாவுக்குக் கிழக்கில் மூன்று முக்கிய ரயில் பாதைகளிருக்கின்றன. அப்

லின் நகரத்து வழியாய்ச் செல்கிற ரயில் பாதையை ஆஸ்டிரியர் வசப்படுத்திக்கொண்டால், வார்ஸா நகரம் அந்த ரயில் பாதையின் உபயோகத்தை இழந்துவிடுகிறது. அதாவது ருஷியரின் ராணுவ பலம் மூன்றிலொரு பங்கு குறைந்துபோகும். ருஷிய எல்லைக்கு வருகிற மூன்று முக்கிய ரயில் பாதைகளும் வார்ஸா நகரத்தில் வந்து கூடுவதால், ருஷியரின் ராணுவ நடவடிக்கைகளுக்கு அந்த நகரமே ஆதாரமாகக் கருதப்படவேண்டும். தண்ணீர்ப் படைகளையும் தளவாடங்களையும் வார்ஸா நகரத்திலிருந்து போர்முனைபில் உள்ள எந்த ஸ்தலத்துக்கும் அனுப்புவது சௌகரியமாயிருக்கும்.



எல்லைப்புறம் கருத்த புள்ளிகளால் குறிக்கப்பட்டிருக்கிறது. நதிகள் வரைந்த கோடுகளாலும் ரயில்பாதைகள் இம்மாதிரியாகவும் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. கருப்புக் கட்டங்கள் ஆஸ்டிரியப் படைகளையும் வெளுப்புக் கட்டங்கள் ருஷியப் படைகளையும் குறிப்பிடுகின்றன. ஆஸ்டிரிய சேனுபதியாகிய ஜெனரல் டாங்கல், ரிஸமீல் நகரத்திலிருந்து புறப்பட்டு, வடக்கு நோக்கி ஸான் நதிக்கரையோரமாய்ச் சென்று, படத்தில் காட்டப்பட்டுள்ளபடி விஸ்டுலா நதிக்கும் பக்நதிக்கும் இடையில் ஆஸ்டிரியப் படைகளைச் செலுத்தினார். மற்றொரு ஆஸ்டிரிய சேனுபதியாகிய ஜெனரல் ஆபன்பர்க் லெம்பர்க் நகரத்துக்குக் கிழக்கில் லுள்ள எல்லைப்புறத்தில், படத்தில் உள்ளபடி தமது படைகளை நிலைபெறச் செய்தார். இப்படத்தைப் பார்த்துவந்தால், பின்னால் சொல்லப்படும் விவரங்களெல்லாம் தெவ்வையாய் விளங்கும்.

மற்றொரு ஆஸ்டிரிய சேனாபதியாகிய ஜெனரல் வான் ஆபன் பர்க் மூன்று லக்ஷம் ஆஸ்டிரியத் துருப்புகளைக் கொண்டு, லெய்பர்க் நகரத்துக்குக் கிழக்கிலுள்ள எல்லைப்புறத்தைக் காத்து வந்தார். ருஷியப் பிரதேசத்தின் மீது படையெடுத்துச் செல்லும் நோக்கம் அவருக் கில்லை யென்பதைக் கவனிக்க வேண்டும். அவருடைய முக்கிய நோக்க மெல்லாம் என்னவென்றால், போலண்டுக் குள்ளே சென்றுகொண்டிருந்த ஆஸ்டிரியப் படைகளுக்குக் கிழக்கில் ருஷியர் வந்து தாக்காமல், காத்துக்கொள்வதாகும். ஜெனரல் டாங்கல், ஸான் நதிக்கரையோரமாய் வடக்கு திசையில் சென்றுகொண்டிருந்தார் என்பு சொல்லி யிருக்கிறோம். அவருக்குக் கிழக்குத் திசையிலிருந்து ருஷியப் படைகள் புறப்பட்டு ஸான் நதியை வசப்படுத்திக் கொண்டால், ஜெனரல் டாங்கல் தம்முடைய சொந்த பிரதேசத்துடன் சம்பந்த மற்றுப் போய்விடுவார். அவ்விதம் ஆபத்தைத் தவிர்ப்பதற்காக, ஜெனரல் வான் ஆபன்பர்ச், பக் நதியிலிருந்து வீஸ்டுலா நதிவரையில் தமது படைகளை அணிவகுத்து நின்றார். ஜெனரல் ஆபன்பர்க் 3 லக்ஷம் ஆஸ்டிரியத் துருப்புகளைக் கொண்டு அவ்வளவு விஸ்தாரமான பிரதேசத்தைக் காவல் செய்வது சாத்தியமல்ல. ஆயினும் அவர் அவ்வாறு செய்தபடியால் தம்மைத் தாக்குவதற்கு சத்துருக்கள் அதிகமாய் வரமாட்டார்க ளென்று நினைத்திருந்ததாகத் தோன்றுகிறது. ஏற்கெனவே 5 லக்ஷம் ருஷியத் துருப்புகள் கிழக்குப் பிரஷ்யாவில் சண்டை செய்து கொண்டிருந்தபடியால், யுத்தத்துக்குத் தயாராயுள்ள மற்ற ருஷியத்துருப்புகள் தொகையில் அதிகமாயிரவென்று அவர் நினைத்திருக்கவேண்டும். ஆஸ்டிரிய ராணுவ தந்திரிகள் அவ்வாறு எண்ணியது தவறாய் முடிந்தது. ஏனெனில், இந்த மகா யுத்தந் தொடங்கி 17 தினங்களுக் குள்ளாக மொத்தம் 16 லக்ஷம் ருஷியத் துருப்புகள் போர் முனையில் குவிந்திருந்தனர். யுத்த ஆரம்பத்தில் ஆஸ்டிரியத் துருப்புகளின் மொத்தத் தொகையோ 10 லக்ஷத்துக்குமேலில்லை.

ருஷியரின் யுத்த நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லுவோம். ருஷிய சேனாபதியாகிய கிராண்ட் டியூக் நிகலஸ் ருஷிய சக்கரவர்த்தியின் வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் ருஷியசேனையின் ஆபீஸரித்தியில் வெகுகாலமாய் அக்கரைகொண்டு உழைத்துவந்தவர். தேர்ச்சி பெற்ற ராணுவ தந்திரிகளின் உதவியைக் கொண்டு அவர் கடத்திய

யுத்த நடவடிக்கைகள் ஆச்சரியத்தை உண்டுபண்ணும் ஸ்டா. ருஷிய சரித்திரத்தில் இதுவரையில் காணப்படாத அதிக தூரதங்களை இந்த மகா யுத்தத்தில் ருஷிய சேனைகள் காட்டி யிருக்கிறார்கள்: ருஷியத் துருப்புகளை சீக்கிரமாய்த் திரட்டி போர் முனைக்கு அனுப்பியதும், யுத்த நடவடிக்கைகளை விரைவாய் நடத்தியதும், நுட்பமான விவரங்களை முன்னதாக போதித்து வைத்ததும், முன் போசனைக்கு ஏற்றபடி யுத்த நடவடிக்கைகளை ஒழுங்காய் நிறைவேற்றியதும், நூதன விசேஷங்களென்றே மதிக்கத் தக்கவை. மகா யுத்தம் தொடங்கியபோது ருஷிய சேனாதிபதியின் நோக்கமென்னவென்றால், சத்துருக்கள் எதிர் பார்த்தபடி லெம்பர்க் நகரத்தை நோக்கி ஏராளமான ருஷியத் துருப்புகளை இரகஸ்யமாய்க் குவித்து ஆஸ்திரியப் படைகளை வெல்லவேண்டுமென்பது. அந்த யோசனை நிறைந்த யுத்த தந்திரங்களுள் ஒன்றைக் கருதப்படவேண்டும். அந்த யோசனை நிறைவேறுமானால், மூன்று முக்கிய சாதகங்கள் ஏககாலத்தில் உண்டாகின்றன. ருஷியப்படைகள் தங்கள் ஆள்பலத்தால் லெம்பர்க் நகரத்திலிருந்த ஆஸ்திரியப் படைகளின் வன்மையை முற்றிலும் அழித்துவிடலாம். அவ்வாறு தோல்வியடைந்த ஆஸ்திரியப்படைகளை ருஷியர் பின் தொடர்ந்து சென்றால், காலிஷியா மாகாணத்தை வசப்படுத்திக்கொண்டே முன்செல்லலாம். அவ்வாறு ருஷியர் காலிஷியா மாகாணத்தை வசப்படுத்திக்கொண்டு ஸான் நதிவரையில் முன் சென்றால், போலண்டின் மீது படையெடுத்த ஆஸ்திரியப்படைகளெல்லாம் அடியோடு அழிந்து போகும். அந்த மூன்று நோக்கங்களும் ஒருவாறு நிறைவேறின வென்றே சொல்லவேண்டும்.

ஆஸ்திரியப் படைகள் போலண்டின் மீது படையெடுத்தல்.

ஜெனரல் டாங்கல் ஆகஸ்ட் 10-ந்தேதியே போலண்ட் மாகாணத்துக்குள் நுழைந்துவிட்டார். அவர் நிலமில் நகரத்துக்குவடக்கே ஆஸ்திரிய எல்லைப்புறத்தைத் தாண்டி, போலண்டிலுள்ள டூன் நிரூட்நகரத்துக்கு மேற்கில் தமதுபடைகளை அணிவகுத்து வடக்கு நோக்கிச்சென்றார். ஆகஸ்ட் 17-ந்தேதிக்குள் அவர் லுப்லின் நகரத்துக்கு 15-மைல் தெற்கில் படத்தில் காண்பித்துள்ளபடி, நெருங்கிவிட்டார். அந்தப் பிரதேசத்தில் ருஷியத்துருப்புகள் அதிகமா

யில்லாதபடியால், ஜெனரல் டாங்கல் எவ்வித சிரமமுமின்றி விரைவாய் முன்சென்றார். அங்கு ருஷியத் துருப்புகள் அதிகமாயில்லாததற்குக்காரணம், ருஷிய சேனையின் பெரும் பாகமும் கிழக்குப் பிரஷ்யா காலிஷியா இவ்விரு மாகாணங்களுக்கு அருகில் திரண்டுகொண் டிருந்தது. ஆனால் பிரதிதினமும் புதிய ருஷியத் துருப்புகளும் தளவாடங்களும் போர் முனைக்கு வந்த வண்ணமாயிருந்தன. போலண்டிலுள்ள மூன்று முக்கிய ரயில் பாதைகளின் வழியாய் லுப்லின், கோம், இவ்விரு நகரங்களுக் கருகில் ருஷியப்படைகள் வரவர அதிகரித்து வந்தன. அந்த ருஷியப்படைகள் போதுமான வன்மையைப்பெறும் வரையிலும், ஆஸ்டிரியப்படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கமுடியவில்லை. ஆகஸ்ட் 17-ந்தேதிக்குப் பிறகு, லுப்லின் பிரதேசத்தில் நான்கு லக்ஷம் ருஷியத் துருப்புகள் தயாராகிவிட்டன. ஆகையால் ஜெனரல் டாங்கல் லுப்லின் நகரத்துக்கு 15-மைல் தெற்கே வந்தவுடன் அதற்கப்பால் முன் செல்லமுடியவில்லை. அங்கு வலுவான அரண்களில் நான்கு லக்ஷம் ருஷியத் துருப்புகள் நிலைபெற்றிருந்தார்கள். அவர்களைத் தாக்கிப் பின்தள்ளுவதற்காக ஜெனரல் டாங்கல் பிரயத்தனஞ் செய்து கொண் டிருந்தார். ஆந்த ருஷியத் துருப்புகள் தங்கள் அரண்களைக் காத்து வந்தார்களே யொழிய ஆஸ்டிரியரைத் தாக்கிப் பின் தள்ள முயற்சிசெய்யவில்லை. ஏனெனில் அந்த ருஷியப் படைகள் ஒவ்வொரு தினமும் புதிய துருப்புகளைப் பெற்றுவந்தபடியால் அவைகள் இன்னும் அதிக பலம்பெறும் வரையில் ருஷிய சேனாதிபதி பொறுத்திருக்க நிச்சயித்தார். தவிர, ருஷ்ய சேனையின் பெரும் பாகமும் லெம்பர்க் நகரமுள்ள பிரதேசத்தில் முக்கியப் பிரயத்தனம் செய்து வந்தபடியால், அதன் முக்கியமான முடிவை ருஷிய சேனாதிபதி எதிர்பார்த்திருந்தார். ஆகையால் ஆகஸ்ட் 17-ந்தேதி, ஜெனரல் டாங்கல் லுப்லின் நகரத்துக்கு 15 மைல் தெற்கில் தடைப்பட்டு நிற்க, லெம்பர்க் பிரதேசத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றிச் சொல்வோம்.

ருஷியப்படைகள் காலிஷியா மீது படையெடுத்தல்.

இரண்டு ருஷியசேனாபதிகள் லெம்பர்க் நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஜெனரல் ரஸ்கி நான்கு லக்ஷம் துருப்புகளைச் செலுத்தி லெம்பர்க் நகரத்துக்கு வடகிழக்கிலிருந்து புறப்பட்டு வந்

ருஷிய சேனைத் தலைவர்கள்.



ஜெனரல் ரஸ்கி.



ஜெனரல் ஸாம்ஸனுப்.



ருஷிய சேனாதிபதி
கிராண்ட் டியுக் நிகலஸ்.



ஜெனரல் ரன்னன்காம்ப்.



ஜெனரல் ப்ருஸிலாப்.



படத்தின் இடது பக்கத்திலுள்ளவர் ஆஸ்டிரிய சேனாதிபதியாகிய ஆர்ச் டியுக் பிரடரிக்; வலப்பக்கத்திலுள்ளவர் அவருக்குஉதவி செய்யும் ராணுவ தந்திரி.



கிழக்கரங்கத்திலுள்ள ஜெர்மன் சேனாதிபதி—ஜெனரல் வான் ஹிண்டன்பர்க்.



ஆஸ்டிரியச் சேனாபதி—ஜெனரல் ஆஸ்டன்பர்க்.



ஆஸ்டிரிய சேனாதி—ஜெனரல் டாங்கல்.

தார். லெம்பர்க் நகரத்துக்கு வடமேற்கிலுள்ள சாலில் போதையில் சோவ்னே, டப்னே என்ற இரண்டு முக்கிய ருஷிய நகரங்களிருக்கின்றன. அங்கு வலுவான கோட்டைகளு மிருக்கின்றன. அந்த கோட்டைகளை ஆதாரமாகக்கொண்டு ஜெனரல் ரஸ்கி தமது 4 லக்ஷம் துருப்புகளை மேற்கே செலுத்தினர். அவர் லோகல், பிறகு இவ் விரண்டு ஆஸ்டிரிய நகரங்களுக்கு அருகில் சென்றுகொண்டிருந் தார். அவர் ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில் அனுபோகம் பெற் றிருந்ததோடு, நூதன ராணுவ முறைகளில் தேர்ச்சியும் அடைந் திருந்தார். மற்றொரு ருஷிய சேனாபதியாகிய ஜெனரல் ப்ருஸிலாப் லெம்பர்க் நகரத்துக்குத் தென்கிழக்கிலிருந்து வந்துகொண்டிருந் தார். லெம்பர்க் நகரத்துக்குத் தென்கிழக்கில் டர்ன்போல் என்ற ஆஸ்டிரிய நகரமிருக்கிறது. அதற் கருகிலும் அதற் குத் தெற்கிலுமுள்ள நீஸ்டர் நதி வரையிலும் 3 லக்ஷம் ருஷி யத் துருப்புகளைச் செலுத்தினர். ஜெனரல் ப்ருஸிலாப் 1877-ம் வருஷத்தில் நடந்த ருஷிய—துருக்கி யுத்தத்தில் அனுபோகம் பெற்றவர்.


லெம்பர்க் நகரத்தை நோக்கிச்சென்ற இரண்டு ருஷிய சேனா பதிகளும் மொத்தம் 7-லக்ஷம் துருப்புகளைச் செலுத்தினர்கள். அவர்களை எதிர்ப்பதற்கு ஜெனரல் ஆபன்பர்க் 3 லக்ஷம் ஆஸ்டிரியத் துருப்புகளையே பெற்றிருந்தார். ஜெனரல் ஆபன்பர்க் ஏராளமான குதிரைப் படைகளை வைத்திருந்தார்; அவரிடமிருந்த முதல்தரமான ஹங்கேரியக் குதிரைப்படைகள் ருஷியப் பிரதேசத்துக்குள் நுழை ந்து செல்லரைச் சண்டைகளைச் செய்தன. ருஷிய சேனாபதிகளிடம் பேர்பெற்ற கோஸாக் குதிரைப்படைகளிருந்தன. அவ்வாறு இரண்டு கக்ஷியினும் மிக்கதிறமை வாய்ந்த குதிரைப்படைகளிருந்தபடியால், அவைகள் தோல்வியும் வெற்றியும் அடைந்து மீண்ணை செல்லரைச்சண் டைகளைச் செய்தபோதுங்கூட, மிகுந்த உக்கிரத்தையும் பிடிவாதத் தையும் காட்டி வந்தன. ஆகஸ்ட் 11-ந்தேதி அதிக பலங்கொண்டு ருஷியக் குதிரைப் படைகள் அதிக மெஷின் பீரங்கிகளுடன் பிறகு நகரத்துக்கருகில் வந்து தோல்வி யடைந்தன. ஆகஸ்ட் 13-ந்தேதி, லோகல் நகரத்தை ருஷியக் குதிரைப் படைகள் வசப் படுத்திக்கொண்டன. அந்த குதிரைச் சண்டைகள் முக்கிய மானவை யல்லவென்று சாதாரணமாய்க் கருதப்படுவது வழக்கம்.

ஆனல் அந்த குதிரைச் சண்டைகள் ருஷியரின் ராணுவ தந்திரங்களுள் முக்கிய அம்சமாயிருந்தன வென்று பிற்பாடு தெரிய வந்தது.

கோஸாக் படைகளின் சாமர்த்தியம்.

இரண்டு ருஷிய சேனுபதிகளின் நடமாட்டங்களும் ஆகஸ்ட் 6-ந் தேதியிலிருந்து 23-ந் தேதி வரையில் மிகவும் இரகஸ்யமாயிருந்துவந்தன. அவைகளைப் பற்றி ஆஸ்டிரியர் அறிந்துகொள்ளாததற்கு 3 காரணங்களைச் சொல்லலாம். முதலாவது, ஆஸ்டிரியப் படைகள் போலண்டில் படையெடுத்துச் சென்றதால் ருஷியப் படைகள் அத்திசையில் சென்று குவியுமே யொழிய லெம்பர்க்குக் கருகில் அதிகமாய் வராமென்று ஆஸ்டிரியர் நினைத்திருந்தார்கள்; தவிர, ருஷியசேனையின் பெரும் பாகமும் கிழக்குப் பிரஷ்யாவுக்குப் போய்விட்டபடியால், சிறுபாகமே காலிஷியா மாகாணத்துக்கு வரக்கூடுமென்று நினைத்தார்கள்; புதிய ருஷியப் படைகளைச் சேர்ப்பதற்கு வழக்கம்போல வெகுகால மாகுமென்றும் தவருய் நம்பியிருந்தார்கள். இரண்டாவது, காலிஷிபா என்ற ஆஸ்டிரிய மாகாணத்திலுள்ள ஜனங்கள் அநேக மாய் ஸ்லாவ் ஜாதியரேயாவார்கள். அந்த ஜாதியினராகிய ருஷியத் துருப்புகள் அந்த மாகாணத்திலுள்ள ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தார்களாகையால், ருஷியத் துருப்புகளின் நடமாட்டம் இரகஸ்யமாகவே இருந்தன. மூன்றுவது காரணம், கோஸாக்ஸ் என்ற ருஷியக் குதிரைப் படைகள் காலிஷியா மாகாணத்தின் எல்லைப் புறத்தில் திரைபோட்டாற்போல நின்று சண்டைசெய்துகொண்டு, பின்புறத்தில் ஏராளமான ருஷியப் படைகள் திரண்டு வருவதை மறைத்துக்கொண்டிருந்தார்கள். கோஸாக் படைகளின் சாமர்த்தியத்தால், ருஷிய சேனையின் நடமாட்டம் இரகஸ்யமாயிருந்தது. கோஸாக் படைகள் காலிஷியா மாகாணத்தில் புகுந்து, தாங்களாகக் கொள்ளையடிக்கப் பிரியங்கொண்டு தாக்குவதுபோல, பற்பல பாதைகளில் முன்சென்று முக்கியமான ஸ்தலங்களைப் பிடித்துக்கொண்டார்கள். அநேக சமயங்களில் தோல்வி யடைந்ததுபோல அவர்கள் பின்வாங்கிச் சென்றும், அவசியமான சமயம் நேர்ந்தவுடன் அந்த ஸ்தலங்களை வலுவாய்த் தாக்கி வசப்படுத்திக் கொண்டும், இன்னும் பலவிதமாய் தங்களுடைய பிரதான நோக்கம் வெளிப்படாமல்

சாமர்த்தியமாய்ச் சண்டை செய்தார்கள். கோஸாக் படைகளின் பிரதான நோக்கமென்ன வென்றால், தங்களுக்குப் பின்னால் பெரிய ருஷிய சேனை வந்துகொண்டிருப்பதை வெளிப்படுத்தாமல் அந்த சேனை செல்லவேண்டிய பாதைகளில் முக்கிய ஸ்தலங்களைப் பிடித்துக்கொண்டு முன்செல்ல வேண்டுமென்பது. ஒரு சமயம் ஜெனரல் ப்ருலிலாப் செலுத்திய ருஷிய சேனை காலிஷியா மாகாணத்துக் கருகில் நெருங்கியபோது முன்புறத்தில் 1000 கோஸாக் குதிரைகள் காவல் செய்துகொண்டிருந்தன. அப்போது திடீரென்று 2000 ஆஸ்டிரியத் துருப்புகள் கோஸாக் துருப்புகளைத் தாக்கினர். கோஸாக் துருப்புகள் பின்வாங்கிச் சென்று துணைப் படைகளைப் பெற்று ஆஸ்டிரியரை தாக்கலாமாயினும், அவ்வாறு செய்தால் ஆஸ்டிரிய ருக்குச்சந்தேகம் உண்டாகிவிடும். கோஸாக் துருப்புகளுக்குப் பின் புறத்தில் ருஷியப்படைகளிருப்பதாக எவ்விதசந்தேகமும் ஆஸ்டிரிய ருக்குத் தோன்றக்கூடாது. ஆகையால் ரோட்டுக்கு இரண்டு பக்கங் களிலுமிருந்தகாடுகளில் கோஸாக்துருப்புகளின்பெரும்பாகமும்மறை ந்துகொண்டது. சுமார் 100 கோஸாக்துருப்புகள் மட்டும் முன்புறம் சென்று ஆஸ்டிரியத் துருப்புகளைத் தாக்கிப் பின்வாங்கிச் சென்றனர். ஆஸ்டிரியத் துருப்புகள் ருஷியரைத் துரத்திக் கொண்டு ரோட்டின் வழியாய்ச் சென்றபோது, காடுகளில் மறைந்திருந்த 900 கோஸாக் துருப்புகளும் ஆஸ்டிரியரின் மீது விழுந்து சிதறஅடித்தார்கள். கோஸாக் துருப்புகள் அவ்விதவேலையை ஏற்றுக் கொண்டபோது, சத்ருவின் காலாட் படைகள் குதிரைப் படைகள் பீரங்கிப் படை கள் இவைகளோடு பல விதமான சண்டைகளைச் செய்ய வேண்டி யிருந்தது. கோஸாக் துருப்புகள் தங்கள் குதிரை மேலிருந்த படியே ஈட்டியால் குத்தித் தாக்கியும், வேறு சமயங்களில் குதிரை களிலிருந்து கீழே இறங்கி அகழ்களில் கிடைபெற்று துப்பாக்கிகளை உபயோகித்தும், சத்ருவின் அகழ்களை துப்பாக்கியின் முனையி லுள்ள ஈட்டியால் தாக்கியும் பலமாதிரியாய் சண்டை செய்தார்கள்.



(699-ம் பக்கத்திலுள்ள படம் இங்குமறுபடியும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

ருஷிய சேனுபதிகளின் நடவடிக்கைகள்.

ஜெனரல் ரஸ்கி, ஆகஸ்ட் 13-ந்தேதி லோகல் நகரத்தைப் பிடித்துக் கொண்டார். ஆகஸ்டு 23-ந்தேதி லெம்பர்க் நகரத்துக்கு வடக்கிலும் கிழக்கிலுமுள்ள எல்லேப்புற முழுவதையும் அவர்தாக்க ஆரம்பித்தார். ஆகஸ்ட் 23-ந் தேதி அவர் பிருடி நகரத்தைப் பிடித்துக்கொண்டார். லோகல், பிருடி, இவ்விரண்டு நகரங்களி லிருந்தும் ரயில்பாதைகள் காலிஷியா மாகாணத்துக்குள் செல்கின் றன. அந்த ரயில் பாதைகளை ருஷியர் உபயோகித்தார்கள். இரண்டு ஆஸ்டிரிய சேனுபதிகளுக்கு மிடையே புகுந்து அவ்விருவரை யும் பிரித்துவிட வேண்டு மென்று ஜெனரல் ரஸ்கிமுயற்சி செய்தார்.

ஜெனரல் ரஸ்கி லோகல்நகரத்தை வசப்படுத்திக்கொண்டபிறகு அங்கிருந்த ஆஸ்டிரியப் படைகளைக் கடுமையாய்த் தாக்கி டமசோ நகரத்தை நோக்கிப் பின்தள்ளிக்கொண்டிருந்தார். அந்த ஆஸ்டிரியப் படைகளைத் தெற்கு திசையில் தள்ளிவிட அவர் முயற்சி செய்தார். அவர் டமசோ நகரத்தை வசப்படுத்திக் கொண்டு மூன் செல்லும்,

ஆஸ்டிரியசேனுபதிகளாகிய ஜெனரல் டாங்கல், ஜெனரல் ஆபன்பர்க் இருவரும் தனித்தனியாய்ப் பிரிந்து போவார்கள். ஜெனரல் ரஸ்கியினுடைய வலதுபாகத்துப் படைகள் அவ்வாறு சண்டை செய்து கொண்டிருக்க, அவருடைய மத்தியபாகத்துப் படைகள் பிரூடி நகரத்தை வசப்படுத்திக் கொண்டு கிரஸ்னே நகரத்தை நோக்கி முன்சென்றுகொண்டிருந்தன. கிரஸ்னே நகரம் லெம்பர்க் நகரத்துக் கருகிலிருப்ப தோடு, இரண்டு ரயில்பாதைகள் சந்திக்கிற இடத்திலு மிருப்பதைக் கவனிக்கவும். ஜெனரல் ரஸ்கியினுடைய மத்தியபாகத்துப் படைகள் அவ்வாறு சண்டை செய்து கொண்டிருக்க, அவருடைய இடது பாகத்துப் படைகள் ஸ்லாக்சோ நகரத்தைத் தாக்கிக் கொண்டிருந்தன. ஆகஸ்ட் 26-ந் தேதி வரையில் ஜெனரல் ரஸ்கி அவ்வாறு சண்டை செய்துகொண்டிருந்தார்.

அந்த தேதிக்குள்ளாக ஜெனரல் ப்ருஸிலாப் தமது காரியத்தை ஓழுங்காய் நிறைவேற்றிக் கொண்டிருந்தார். டர்னபோல் நகரத்தை அவர் வசப்படுத்திக்கொண்டு, அங்கிருந்த ஆஸ்டிரியப் படைகளை லெபாநதியை நோக்கப் பின்தள்ளினார். அந்தி ஆஸ்டிரியப் போர்முனைக்குத் தெற்குக்கோடியிலுள்ள தென்பதைக்கவனிக்கவும். அந்த தெற்குக் கோடியில் ஆஸ்டிரியப் படைகளை வளைத்துகொள்ள வேண்டுமென்று ருஷிய சேனுபதி முயற்சி செய்தார். ஜெனரல் ப்ருஸிலாப் டர்னபோல் நகரத்திலிருந்து மேற்கே சென்று ஏராளமான துருப்புகளையும் பீரங்கிகளையும் அந்நதிக் கரையில் குவித்தார். 26-ந்தேதி அந்நதிக்கரையிலுள்ள பிரிஸானி நகரத்தில் அவர் ஆஸ்டிரியரைத் தோற்கடித்து, அவர்களை வடபுறமாய்த் தள்ளினார். அங்கிருந்து அவர் சடரே நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவர் அந்த நகரத்தை வசப்படுத்திக் கொண்டால், லெம்பர்க் நகரத்தைத் தெற்கு திக்கிலிருந்து தாக்கலாமென்பதை அறியவும். ஜெனரல் ப்ருஸிலாப் மற்றொரு ருஷிய சேனுபதியுடன் சேர்ந்து கொள்வதற்காகச் சில படைகளை வடக்கு திசையில் செலுத்தினார். அந்த ருஷியப் படைகள் டர்னபோல் நகரத்திலிருந்து புறப்பட்டு வடகிழக்கேயுள்ள ஸ்லாக்சோ நகரத்தை நோக்கிச் சென்றன. அவ்விடத்தில், ஜெனரல் ப்ருஸிலாப் ஜெனரல் ரஸ்கி இவ்விரு ருஷிய சேனுபதிகளின் படைகளும் சேர்ந்து கொண்டன. அவ்விரண்டு சேனுபதிகளின் படைகள், ஸ்லாக்சோ நகரத்தி

லிருந்து புறப்பட்டு கிருஸ்னே நகரத்தை தெற்கு பக்கமாய்த் தாக்கிக் கொண்டிருந்தன. அந்த நகரம் ஏற்கெனவே வேறு சில ருஷியப் படைகளால் தாக்கப்பட்டு வந்தது. அந்தப் படைகள் பிரூடி நகரத்திலிருந்து புறப்பட்ட ருஷியப்படைகளாகும்.

ருஷிய சேனுபதிகளின் வெற்றி.

ஆகஸ்ட்27-ந் தேதியிலிருந்து 29-ந் தேதி வரையில், இரண்டு ருஷிய சேனுபதிகளும் போர்முனை பெங்கும் ஏககாலத்தில் தாக்கத் தொடங்கினர்கள். டமசோ, கமியன்கா, கிருஸ்னே, இம்மூன்று நகரங்களிலும் ஆஸ்டிரியரும் ருஷியரும் கடுமையாய் சண்டை செய்தார்கள். ஆஸ்டிரிய சேனுபதியாகிய ஜெனரல் ஆபன்பர்க் மூன்று பக்கங்களிலும் அவ்வாறு கடுமையாய்த் தாக்கப்பட்டு, தம்மைவிட அதிக பலங்கொண்ட சத்துருக்களால் எல்லாத் திசைகளிலும் நெருக்கப்பட்டார். அவருடைய அபாய நிலைமையைக் கருதி அவருக்கு அதிக துணைப்படைகளை ஆஸ்டிரிய சேனுதிபதி அனுப்பினர். போர்முனையின் தெற்குக் கோடியில் ருஷியரை வளைந்து தாக்கலாமென்று ஆஸ்டிரிய சேனுதிபதி புது முயற்சி யொன்று செய்தார். ரீஸ்டர் நதிக்கரையிலுள்ள ஹலிக்ஸ் நகரத்துக்கு அதிக புதிய ஆஸ்டிரியப் படைகளை அனுப்பினர். ருஷிய சேனுபதியாகிய ஜெனரல் ப்ருஸிலாப் செனுத்திய ருஷியப் படைகள் ஹலிக்ஸ் நகரத்துக் கருகில் கடுமையாய் தாக்கப்பட்டு, அதிக சேத மடைந்தன. அந்த ஆபத்தை அறிந்த ருஷிய சேனுபதி ஏராளமான பீரங்கிகளையும் துருப்புகளையும் ஹலிக்ஸ் நகரத்துக் கருகில் ஷிரை வாய்க் கொண்டுபோய் ஆஸ்டிரியரை முறியடித்தார். ஆகஸ்ட் 31-ந் தேதி ஹலிக்ஸ் நகரத்தில் ருஷியர் அடைந்த வெற்றி முடிவான பலனைக் கொடுத்தது. ஏனெனில் லெம்பர்க் நகரத்துக்குத் தெற்கில் செல்கிற ரயில் பாதை முழுவதும் ருஷியருக்கு வசப்பட்டு விட்டது. வடபுறத்திலிருந்த ருஷிய சேனுபதியாகிய ஜெனரல் ரஸ்கி, டமசோ நகரத்துக் கருகில் ஆஸ்டிரியப் படைகளைச் சின்னபின்னமாக்கி, ஆஸ்டிரிய சேனுபதிக ளிருவரையும் தனியாகப் பிரித்து நின்றார். ஆகையால் ஆஸ்டிரிய சேனுபதியாகிய ஜெனரல் ஆபன்பர்க் தெற்குக் கோடியிலும் வடக்குக் கோடியிலும் ருஷியரால் முறியடிக்கப்படவே, போர் முனை யெங்கும் பின் வாங்கிச் செல்லத் தீர்மானித்தார்.

ஆஸ்டிரியப் படைகள் அலங்கோலமாய்ப் பின் வாங்கல்.

லெம்பர்க் நகரத்துக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள ஆஸ்டிரியப் படைகளெல்லாம் பின் வாங்க வேண்டு மென்று ஜெனரல் ஆபன்பர்க் உத்தரவு செய்தார். அச்சமயத்தில் போர்முனை பெரும்பாலும் ருஷியத் தருப்புகள் வெற்றி அடைந்து வந்தபடியால், அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஆஸ்டிரியப் படைகளை யெல்லாம் பின் தொடர்ந்து தாக்கினார்கள். முக்கியமாய் கோலாக் குதிரைப் படைகள் முழுவேகத்துடன் சத்துருக்களைத் தொடர்ந்து சென்று எல்லாத் திசைகளிலும் உக்கிரமாய்த் தாக்கின. ஆஸ்டிரியப் படைகளெல்லாம் ருஷியப் பீரங்கிகளால் பிளக்கப்பட்டு நாலாபக்கங்களிலும் சிதறிப்போயின. அச்சமயம் மழை கடுமையாய்ப் பெய்து பாதைகளை நாசஞ்செய்துவிட, ஆஸ்டிரியத் தருப்புகள் ஒழுங்கான மடைத்து தங்கள் பீரங்கிகளையும் தளவாடங்களையும் போட்டுவிட்டு கலங்கிப் போனார்கள். பீதியடைந்த தருப்புகளும் கைவிடப்பட்ட தளவாடங்களும் பாதைகளி லெல்லாம் அலங்கோலமாய்க் கிடந்தபடியால், போக்கு வரத்துக்கு வழியில்லாமற் போயிற்று; புதிய துணைப் படைகளை அனுப்ப முடியவில்லை; தளவாடங்களையும் ஆயுதங்களையும் போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. மிதந்த பராக்கிரமத்துடன் சண்டை செய்து கொண்டிருந்த பல ஆஸ்டிரியப் படைகள் தாராளமாய் நடமாட முடியாமல் ஒழுங்கான மடைத்தன. பீரங்கிகளும் ஆயுதங்களும் குண்டுகளுமில்லாமல் சில படைகள் சரணமடைந்தன; ருஷியக் குதிரைகளால் சூழப்பட்டு சில படைகள் சரணமடைந்தன; ஆஸ்டிரிய சேனையிலிருந்த அநேக ஸ்லாவ் ஜாதித் தருப்புகள் தேசத் துரோகிகளாகமாறி ஆயுதபாணிகளாய் சரண மடைந்தனர். ஆஸ்டிரியப் படைத் தலைவர்கள் ஸ்லாவ் தருப்புகளை ருஷிய பீரங்கிகளுக்கு முன்னால் நிறுத்தியபோது, ருஷியர் அத் தருப்புகளின்மேல் விழாமல் குண்டுகளை உயரச்சுட்டார்கள். செப்டம்பர் 2-ந்தேதி ஜெனரல் ஆபன்பர்க் செலுத்திய படைகள் அவ்வாறு சின்னபின்னமாகி, லெம்பர்க் நகரமும் பிடிபட்டு, காலிஷியா மாகாணத்தின் கிழக்குப் பாகமும் ஜயலீலருக்கு வசமாகியது. போலண்டில் லுப்லின் பிரதேசத்திலிருந்த மற்றொரு ஆஸ்டிரிய சேனாபதியாகிய ஜெனரல் டாங்கல் 4-லக்ஷம் தருப்புகளுடன் அந்தரத்தில் கைவிடப்பட்டார். அவருடைய சேனை முழுவதும்


சரணமடைவதற்கு எத்தனை தினங்களாகு மென்று ருஷியர் கணக்கிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆஸ்டிரியப் படைகள் மறுபடியும் போர் செய்தன.

அவ்விதக் ஆபத்தான சமயத்தில் ஆஸ்டிரிய சேனாதிபதியாகிய ஆர்ச் டியூக் பிரடரிக் காட்டிய மனோதைரியமும் சாமர்த்தியமும் வியக்கத் தக்கதாயிருந்தன. அவர் பத்தாயிரகணக்கான புதிய ஆஸ்டிரியப் படைகளை போர்முனையெங்கும் அதிவிரைவாய் அனுப்பி ருஷியரின் முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றார். ஜெனரல் டாங்கல் 4 லக்ஷம் ஆஸ்டிரியத் துருப்புகளுடன் பர்தோபஸ்தாய் ஸான் நதிக் கரைக்குப் பின்வாங்கவேண்டுமென்ற கவலைமேலிட்டு அவர் ருஷியரை ஸான்நதிக்கருகில் வரவொட்டாமல் எவ்வாறாயினும் தடுத்தே தீருவதென்று உறுதி கொண்டார். ஆஸ்டிரிய சேனாதிபதி களிருவரையும் பிரித்துவிடுவதற்காக பல ருஷியப்படைகள் டமசோ நகரத்தில் வெற்றியடைந்து முன்சென்றுகொண்டிருந்தன என்று சொல்லியிருக்கிறோம். அந்த நகரத்தை நோக்கி அதிக புதிய ஆஸ்டிரியத் படைகள் விரைவாய்ச் சென்று ருஷியரின் முன் னேற்றத்தைத் தடுத்துவிட்டன. லெம்பர்க் பிரதேசத்துச் சண்டையில் முறியடிக்கப்பட்ட ஆஸ்டிரியப் படைகளெல்லாம் அதிசீக்கிரத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு மறுமுறை போர் விளைக்கத் தயாராய் நின்றன. லெம்பர்க் பிரதேசத்தில் சண்டை செய்த ஆஸ்டிரியப்படைகளில் 65,000 துருப்புகள் சரணமடைய, 70,000 துருப்புகள் போர்களத்தில் சேதமாக, பாக்கித்துருப்புகளெல்லாம் அலங்கோலமாய்ப் பின்வாங்கிச் செல்ல, அவ்வாறு சிதறுண்ட படைகள் உடனே ஒருவாக்கப்பட்டு தென்பும் தைரியமுங்கொண்டு மறுபடியும் போர் விளைக்கத் தயாராய்நின்றதை விசேஷமென மதிக்கவேண்டும். லெம்பர்க் நகரத்துக்கு மேற்கில் மற்றொரு போர்முனையில் ஆஸ்டிரியப் படைகள் நிலைபெற்றுவிட்டன. டமசோநகரத்திலிருந்து ரவருஸ்கா நகரத்தின்வழியாய் கிருடக்நகரம்வரையில் புதிய அரண்கள் கட்டப்பட்டன. லெம்பர்க் சண்டையில் தோல்வியடைந்த துருப்புகளும் பல புதிய துருப்புகளும் சேர்ந்து அந்த அரண்களில் வலுவாய்நிலை பெற்றன. (712-ம் பக்கத்திலுள்ள படத்தில் அதைக் காணலாம்.) அவ்வாறு ருஷியப்படைகளைஸான்நதிக்கு வரவொட்டாமல்தடுத்தவுடன், போலண்டிலிருந்த ஜெனரல் டாங்கல் பின்வாங்கத் தொடங்கினர்.

ஜெனரல் டாங்கல் பின்வாங்கிச்சென்ற விவரம்.

செப்டம்பர் 2-ந்தேதி லெம்பர்க் நகரத்தில் ஆஸ்டிரியப் படைகள் தோல்வி அடையும்போது எதிரிருந்ததைக்கண்டு, போலண்டிலிருந்த ஜெனரல் டாங்கல் தமக்கும் பெரிய ஆபத்து நேரிடுமென்று அறிந்தார். ஆகையால் அவர் முடிவான பிரயத்தனமொன்று செய்து தம்முடைய போர்முனையிலிருந்த ருஷியப்படைகளைத் தோற்கடித்த பிறகு பர்தோபஸ்தாய்ப் பின்வாங்கிவிடுவதாக உத்தேசித்தார். ஆப்வின், கோம், இவ்விரண்டு ருஷிய நகரங்களுக்கு 15 மைல் தெற்கில் ஜெனரல் டாங்கல் அச்சமயம் சண்டைசெய்து கொண்டிருந்தார். விஸ்டுலா நதியிலிருந்து பக் நதி வரையில் 80 மைல் நீளத்துக்கு எல்லா ஸ்தலங்களிலும் அவர் சத்துருக்களைத்தாக்கினார். செப்டம்பர் 2-ந்தேதி ஆப்வின் நகரத்துக்குத் தெற்கில் சண்டை அதிகமாய் வளுத்தது; அந்தப் போர்க்களத்தில் ஆஸ்டிரியத் துருப்புகள் காட்டிய ஆத்திரமும் பிடிவாதமும் ருஷியரை 5 மைல்தூரம்பின்தள்ளின. ஆனல் ருஷியப்படைகள் சத்துருவின் உக்கிரத்தைத் தாங்கிவளைந்து கொடுத்தனவே யொழிய பிளந்துபோகவில்லை. புதிய ருஷியத் துருப்புகள் பிரதிதினமும் வந்து கொண்டிருந்ததால், கிழக்ஸனஸ்லா நகரத்துக் கருகில் செப்டம்பர் 4-ந்தேதி ஏராளமான ருஷியத் துருப்புகள் திரண்டு அங்கிருந்த ஆஸ்டிரியப் படைகளை முறியடித்தன. உடனே ஜெனரல் டாங்கல் தமது படைகளையெல்லாம் பின் புறஞ் செலுத்தத் தொடங்கினர். அங்கிருந்த ருஷியத் துருப்புகள் ஆஸ்டிரியரைவிட அதிக பலங்கொண்டிருந்தன. பின்வாங்கிச் சென்ற ஆஸ்டிரியத் துருப்புகளை ருஷியர் ஓயாமல் தாக்கிக்கொண்டிருந்தார்கள். விஸ்டுலா நதியிலிருந்து பக் நதிவரையில் போர்முனை எங்கும் ஜெனரல் டாங்கல் பலமாய்த் தாக்கப்பட்டார். அவருக்கு இட்டது பக்கத்தில் விஸ்டுலா நதிக்கரையில் அநேக புதிய ருஷியப் படைகள்வந்து அவரைத் தாக்கிக்கொண்டிருந்தன; முன்புறமுழுவதிலும் மற்ற ருஷியப்படைகள் தாக்கிய வண்ணமாருந்தன; அவருக்கு வலது பக்கத்தில் டர்னகிறட் நகரத்துக் கருகில் ஜெனரல் ரஸ்கி செலுத்திய ருஷியப் படைகள் கடுமையாய் தாக்கிக்கொண்டிருந்தன. அந்நிலைமையில் ஜெனரல் டாங்கல் சுமார் 4 லக்ஷம் துருப்புகளைப் பின்புறஞ்செலுத்த உத்தேசித்தது எளிதாய் நிறைவேறக்கூடிய தல்ல.



(ஜெனரல் டாங்கல் பின் வாங்கிச் சென்ற விவரத்தை இப்படம் காட்டுகிறது.)

விஸ்டுலா நதியிலிருந்து பக் நதிவரையில் 80 மைல் நீளமுள்ள பிரதேசத்தில் சண்டைசெய்த ஆஸ்டிரியப் படைகளெல்லாம் பின் வாங்கிச்சென்றபோது, வரவரக்குறுகலான பிரதேசத்தில் நெருங்கிக் கொள்ளும்படி நேர்ந்தது. எனினில், டமசோ நகரத்துக்கருகில் ஜெனரல் ரஸ்கி செலுத்திய ருஷியப்படைகள் சண்டைசெய்துகொண் டிருந்தபடியால், அந்த நகரத்துக்கு மேற்கில்தான் ஜெனரல் டாங் கல் தமது படைகளைச் செலுத்த முடிந்தது. டமசோ நகரத்தி லிருந்து விஸ்டுலா நதிவரையில் 40 மைல் நீளந்தானிருக்கிறபடியால் அந்த குறுகிய பிரதேசத்தில் 4 லக்ஷம் ஆஸ்டிரியப்படைகள் ஒன்றோ டொன்று நெருங்கிப் பின்வாங்குவது அதிக கஷ்டமாயிருந்தது. அந்தப் படைகளைப் பின்வாங்க வொட்டாமல் தடுக்க ருஷியப் படை கள் உக்கிரமாய் சண்டைசெய்தன. விஸ்டுலா நதிக்கரையிலுள்ள ஒபிலி நகரத்தில் ஏராளமான ருஷியத் துருப்புகள் சேர்க்கப்பட்டு அங்கிருந்த ஆஸ்டிரியப் படைகளை முறியடித்தன. எல்லா முக்கிய மான பாதைகளிலும் ஜெனரல் டாங்கல் ஆஸ்டிரியப் படைகளை வலுவாய் நிறுத்தி ருஷியரை முன்செல்லவிடாமல் உக்கிரமாய் எதிர்த்து வந்தார். அச்சமயத்தில் பிரஞ்சு எல்கையிலிருந்து சில ஜெர்மன் படைகள் ஆஸ்டிரியருக்குத் துணையாக வந்தன. ஜெர்மன் துருப்புகளும் ஆஸ்டிரியத் துருப்புகளும் சேர்ந்து டோரூபின், பில் கரூஜ் இவ்விரு நகரங்களில் வலுவாய் நிலைபெற்று ருஷியரை முன்

செல்லவிடாமல் தடுத்தன. ஆனல் கிருஸ்னிக் நகரத்தில் மிகுந்த பலங்கொண்ட ருஷியப் படைகள் வந்து ஆஸ்டிரியரைத் தோற்கடித்தன. அவ்வாறு ஜெனரல் டாங்கல் எட்டு தினங்களாக ஓபமல் சண்டைசெய்துகொண்டு செப்டம்பர் 12-ந்தேதி, தமது படைகளின் பெரும்பாகத்தையும் ஸான் நதிக்கரைக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டார். டீரூபின், பில்கரூஜ், இவ்விரு நகரங்களிலும் அவர் வைத்துவிட்டுப்போன பின்படைகளும் சண்டைசெய்தவண்ணமாய் ஸான்நதிக் கரைக்கு வந்தன. ஆனல் அவ்வாறு அவைகள் பின்னிடைந்தபோது, கோஸாக் துருப்புகள் விரைவாய்ப் பின் தொடர்ந்து தாக்கி ஸான் நதியிலிருந்த பாலத்தை வசப்படுத்திக் கொண்டனர். ஜெனரல் டாங்கல் அந்நதியிலுள்ள மற்ற பாலங்களையெல்லாம்உடைத்துவிட்டு விரைவாய்ப் பின்வாங்கினர். ஆனல் ருஷியரின் வசமிருந்த அந்த பாலத்தின் வழியாய் ஏராளமான கோஸாக் துருப்புகள் ஸான் நதிக்கு மேற்குக் கரையில் வந்து ஏராளமான சேதத்தை உண்டு பண்ணினர். ஜெனரல் டாங்கல் அந்நதிக்கு வருவதற்கு முன்னல், 40,000 ஆஸ்டிரியத் துருப்புகளை இழந்து விட்டார். ஸான் நதியைத் தாண்டிச் சென்ற போது அவருக்கு நேர்ந்த சேதம் இன்னும் அதிகமாயிருக்க வேண்டும். அவ்வாறு ஜெனரல் டாங்கல் ஏராளமாய்ச் சேதமடைந்த போதிலும் முற்றிலும் நாசமாகாமல் தப்பித்துக் கொண்டு வந்தது மெச்சத்தக்க தாகும். 4 லக்ஷம் துருப்புகளை மிகவீம் சிக்கலான பிரதேசத்தில் செலுத்தி அதிகபலங் கொண்ட சத்துருக்களைத் துணிகரமாய் எதிர்த்து, பல விடங்களில் தோல்வியடைந்த தமது படைகளை ஒழுங்கினமடையாமல் செலுத்தி, கடைசியில் டார்னோநகரத்தில் பந்தோபஸ்தாய்ச் சேர்த்தார். மான்ஸ் நகரத்திலிருந்து பிரிட்டிஷ் சேனபதி பின் வாங்கியதற்கு அவருடைய நடவடிக்கைகளை ஒப்பிடலாம். பிரிட்டிஷ் சேனை தன்னைவிட இரு மடங்கு அதிகமான பலங்கொண்ட சத்துருக்களால் தாக்கப்பட்டது போல, அவர் அவ்வளவு அதிகமான சத்துருக்களால் தாக்கப்படாவிட்டாலும், ருஷியரின் பலம் அதிகப்படியாகவே இருந்தது. மான்ஸ் நகரத்திலிருந்து பின் வாங்கிய பிரிட்டிஷ் துருப்புகளைப் போல மூன்று மடங்கு அதிகமான ஆஸ்டிரியத் துருப்புகளை அவர் ஒழுங்காய்ப் பின்புறஞ் செலுத்தும்படி நேரிட்டது. பிரஞ்ச பிரதேசத்தைப் போல, போலண்டில் ரயில்பாதைகள், ரோட்டுகள் முத

லிய போக்கு வரத்து சாதனங்கள் அமைந்திருக்க வில்லை. அது மட்டுமல்ல ; அங்கிருந்த சில சோட்டுகள் சேறும் சகதியும் நிரம்பிய அபாயகரமான பூமியில் அமைந்திருந்தன. விஸ்டுலா நதிக்கும் பக் நதிக்கு மிடையே ஜெனரல் டாங்கல் சண்டைசெய்த பிரதேசத்தில் ஒரு ரயில்பாதைகூட கிடையாது. அப்படிப்பட்ட பிரதேசத்தில் அவர் யுத்த தளவாடங்களை யெல்லாம் முன்னதாகவே ஸான் நதிக்கப்பால் அனுப்பிவிட்டார். ஸான்நதியிலிருந்த ஓர் பாலத்தை ருஷியத் துருப்புகள் திடீரென்று தாக்கிப் பிடித்துக்கொண்டதால் அவருடைய துருப்புகள் ஏராளமாய் சேதமடைந்தன.

ரவருஸ்கா சண்டை

ஜெனரல் டாங்கல் செலுத்திய படைகள் அடியோடு அழிந்து போகாமல் தப்பிவந்ததற்கு மற்றொருகாரணத்தையும்சொல்லவேண்டும். டமசோ, ரவருஸ்கா, கிராடக் ஆகிய இம்மூன்று நகரங்களுக் கிடையிலுள்ள பிரதேசத்தில் ஆஸ்டிரியத் துருப்புகள் உக்கிரமாய் சண்டை செய்து ஜெனரல் டாங்கலுடைய வலது பக்க வாட்டைக் காத்துக்கொண் டிருந்தார்கள். ஜெனரல் ரஸ்கி, ரவருஸ்கா நகரத்தைத் தாக்க, ஜெனரல் ப்ருஸிலாப் கிராடக் நகரத்தைத் தாக்கிக் கொண்டிருந்தார். ரவருஸ்கா நகரத்தில் எட்டுதினங்கள் ஓய்வில்லாமல் இரவும் பகலும் நடைபெற்ற சண்டை இந்த மகாயுத்தத்தில் அதுவரையில் நடந்த சண்டைகளிலெல்லாம் மிகவும் உக்கிரமான தென்று சொல்ல வேண்டும். ஜெனரல் டாங்கல் செலுத்தியபடைகளைக் காக்கவேண்டுமென்ற பொறுப்பையும் கவலையையும் உணர்ந்த அந்தஆஸ்டிரியத் துருப்புகள் ரவருஸ்காநகரத்தில்சண்டை செய்தபோது காட்டிய பிடிவாதமும் பராக்கிரமமும் அதிசயமாயிருந்தன. அந்த நகரத்துக்சருகில் எட்டு தினங்களாக நடந்த சண்டைக ளெல்லாம் எட்டு மைல் நீளமுள்ள பூமியிலேயே நடைபெற்றன ; அதிலும், ஓரிடத்தில் பத்து ஏகர் பூமியைக் குறிப்பிட்டு அங்கு அளவற்ற உதிரஞ் சிந்தியதென்று இருகக்ஷியாரும் எங்காலும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். அங்கு கட்டப்பட்டிருந்த அரண்களின் வன்மையைக் கண்டும், அங்கு சண்டை செய்த சத்துருக்களின் துணிவைக் கண்டும் ஜெனரல் ரஸ்கி சிறிதும்தளர்ச்சியடைய வில்லை. ஜெனரல் ரஸ்கியைப் போன்ற சேனபதி அவ்விதத் தடைகளுக்கு அஞ்சித்சயங்கக் கூடியவ ரல்லர். வெற்றி யடைந்த

வெறியால் உயிர்ச்சேதத்தை லக்ஷியஞ் செய்யாமல் ருஷியத் துருப்புகள் சத்துருக்களைத்தாக்கினர். ஆஸ்டிரியத்துருப்புகளோ, தங்கள் அரண்களில் இருப்பதும் இறப்பதும் தவிர வேறெண்ணமில்லாதவர்களாய், சத்துருவின் பீரங்கிகளுக்கு அசையாமல் சத்துருவின் ஈட்டிமுனைகளை எதிர்த்து நின்று, தங்கள் அரண்களும் ஆயுதங்களும் உருத்தெரியாமல் அழிந்த பிறகே பின் வாங்கினர்; பின் வாங்கியதும் மறுமுறை அரண்களில் நிலைபெற்று போர் வினைத்தனர். அவ்வாறு ஆஸ்டிரியத் துருப்புகள் ஒருமைல் தூரத்தில் எட்டுமுறை பின் வாங்கி, எட்டு முறை அரண்களில் சண்டை செய்தாரென்றால், அந்த போராட்டத்தின் பயங்கரத்தை ஒருவாறு சிந்திக்கலாம். அவ்வாறு செப்டம்பர் 14-ந்தேதி வரையில் ரவருல்கா நகரத்தில் சண்டை நடந்தது. அதற்குள்ளாக ஜெனரல் டாங்கல் ஸான் நதிக்கரையைச் சேர்ந்தார்; டமசோ நகரத்தில் வெற்றி அடைந்த ருஷியப் படைகள் டர்னகிருட் நகரத்தைப்பிடித்து, ஸான் நதியைத் தாண்டி விட்டன. அதன் பிறகு ரவருல்கா நகரத்தில் ஆஸ்டிரியப் படைகள் தங்கியிருப்பதுஅபாயகரமாகையால், அந்தப்படைகள் ரிஸமில் நகரத்துக்குப் பின்வாங்கின. ஜெனரல் ப்ருஸிலாப் கிருடக்நகரத்தில் பத்து தினங்கள் விடாமல் சண்டை செய்து, அங்கிருந்த ஆஸ்டிரியப் படைகளை ரிஸமில் நகரத்துக்குள் பின் வாங்கச் செய்தார். அவ்விரண்டு ருஷியசேனைபதிகளும் செப்டம்பர் 23-ந் தேதி ஸான்நதிக்கரையை அடைந்தார்கள்; ரிஸமில் நகரத்துக் கோட்டைகளையும் அவைகளுக்குள்சென்ற ஆஸ்டிரியப் படைகளையும் சூழ்ந்து கொண்டார்கள்.

மகாயுத்தம் தொடங்கிய உடன் போர்த் திறமையற்ற ஆஸ்டிரியப் படைகள் ஓடின வண்ணமாகவே இருந்தார்களென்றும், அவைகளுக்குப் பின்னால் ருஷியப் படைகள் சென்று காலிஷியா மாகாணத்தை எளிதாக வசப்படுத்திக் கொண்டார்களென்றும் சிலர் தவறுபிரஸ்தாபித்திருந்தார்கள். ருஷியத் துருப்புகள் தங்கள் சத்துருக்களின் வீரத்தை இளப்பமாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில், போலண்டில் பின் வாங்கிச் சென்ற ஆஸ்டிரியப் படைகள் 10-தினங்கள் சளைக்காமல் ருஷியரை எதிர்த்து சண்டை செய்தன. லெம்பர்க் நகரத்துக்கு அருகில் 10-தினங்கள் ஓயாமல் சண்டை நடந்தது; ரவருல்கா, கிருடக் இந்நகரங்களில் எட்டு தினங்களாக இருகக்ஷித் துருப்புகளும் சண்டைசெய்து மாண்டனர். ஆகையால் ருஷியத்

துருப்புகள் காலிஷியா மாகாணத்தின் மீது படையெடுத்தபோது அவர்கள் நத்தவனத்தில் நடமாடுவது போல் செல்லவில்லை; உயிர்ச் சேதத்தை லக்ஷியம் செய்யாமல் ஒரு மாதகாலம் சாமர்த்தியமாய் சண்டை செய்த பிறகே, லான்நதிக்கரையில் நிலை பெற்றார்கள்.

வெற்றியின் பலன்கள்.

இந்த மகாயுத்தம் தொடங்கி 40-தினங்களுக்குள்ளாக ஆஸ்டிரியரின் நிலைமை அவ்வாறுயிற்று. ஆஸ்டிரிய சேனை முற்றிலும் அழிந்து போகாமல் தப்பித்துக்கொண்ட போதிலும், காலிஷியா மாகாணத்தை சத்துருவுக்கு வசப்படாதபடி தப்புவிக்க முடியவில்லை. ஜெர்மானியர் செப்டம்பர் மாதக்கடைசியில் பிரஞ்சு பிரதேசத்தை எய்ஸன் நதிவரையில் வசப்படுத்திக் கொண்டது போல ருஷியரும் காலிஷியா மாகாணத்தை லான் நதிவரையில் வசப்படுத்திக் கொண்டார். பழைய வழக்கப்படி ருஷியசேனை போர் தொடங்குவதற்கு மாதக் கணக்காய்த் தாமஸமாகு மென்று ஜெர்மன் கக்ஷியார் நினைத்திருந்தால் முற்றிலும் ஏமாந்து போயிருக்க வேண்டும். மேற்கரங்கத்தில் நேசப்படைகள் ஸெப்டம்பர் 12-ந்தேதி ஜெர்மன் சேனையை எய்ஸன் நதிக்குப் பின்வாங்கும்படிச் செய்தன; கிழக்கரங்கத்தில் ருஷியப்படைகள் அதேதினத்தில் ஆஸ்டிரிய சேனையை லான்நதிக்குப் பின்வாங்கும்படிச்செய்தன. ருஷிய சேனை இந்த மகாயுத்தத்தில் நூதனகாலத்து முறைகளை ஏற்றுவியக்கத்தக்க வன்மையும் வேகமும் பெற்றிருந்ததைக் கண்டு சத்துருக்களும் ஆச்சரியப்படாமலில்லை. ராணுவ வன்மையை வேருடன் விழுங்கியதாகக் கருதும் ஜெர்மானியருங்கூட ருஷிய சேனையின் நூதன வளர்ச்சியைக் கண்டு அச்சமுற்று அதை அழிப்பதற்கு இந்த மகாயுத்தத்தை அவசரமாய்க் கிளப்பி விட்டார்கள். ருஷிய சேனை காலிஷியா மாகாணத்தில் அடைந்த வெற்றி மேற்கரங்கத்து நடவடிக்கைகளைப் பாதிக்கும்படியாக அவ்வளவு சிறப்புற்றிருந்தது. ஜெர்மானியரின் கைகளுக்கு எட்டிய பிரஞ்சு தலை நகரம் வாய்க்கெட்டாதபடி போனதற்கு ருஷியரின் வெற்றியும் ஒரு காரணமாகும். லெம்பர்க் நகரம் பிடிபட்ட தினமாகிய செப்டம்பர் 2-ந்தேதியிலிருந்தே மேற்கரங்கத்திலிருந்த ஜெர்மன் படைகளில் அநேகம் ருஷிய எல்லைக்கு வரத் தொடங்கின. அந்த வருஷ

முழுவதும், 1915-ம் வருஷம் ஆரம்பித்தபிறகும் ஜெர்மானியரின் பிரதான முயற்சிகளெல்லாம் கிழக்கரங்கத்திலேயே செய்யப்பட்டு வந்தன.

கிழக்கரங்கத்தின் பிரதானம்.

செப்டம்பர் 12-ந் தேதிக்குப் பிறகு மேற் கரங்கத்தைவிட கிழக்கரங்கத்து நடவடிக்கைகளே பிரதானமாகக் கருதவேண்டும். ஏனெனில் இங்குதான் ஜெர்மன் சேனையின் முழுபலமும் நிரட்டி யுத்தம் நடத்தப்பட்டது. ஜெர்மானியரின் பிரதான நோக்கத்தை இப்போது விளக்க வேண்டும். ஜெர்மானியர் பிரஞ்சு எல்லையில்தான் முடிவான வெற்றிகளைப் பெற்று யுத்தத்தைத் தங்களுக்குச் சாதகமாய் முடித்துக் கொள்ளலாம். ராணுவ நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் தேசத்தில் அநேக சௌகரியங்கள் அமைத்திருப்பதாலும் அத்தேசம் ஜனநெருக்கமான சிறிய பிரதேசமாயிருப்பதாலும் ஜெர்மானியர் அந்த எல்லையில் தான் முடிவான வெற்றிகளை அடைய முடியும். ஆனல் ஜெர்மானியருக்கு ருஷிய எல்லையில்தான் பயங்கரமான ஆபத்து நேரிடும். ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின்மேல் படையெடுத்து அதன் தலைநகரமாகிய பெர்லினை பயமுறுத்தக்கூடிய ராணுவபலம் ருஷியருக்கு இருக்கிறதேயன்றி வேறெவருக்குமில்லை. தவிர ருஷியர் ஜெர்மனியின்மேல் படையெடுக்காவிட்டாலும், ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தின் மீது படையெடுத்து அந்த ஏகாதிபத்தியத்தைக் கவிழ்த்து விடக்கூடும். ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தில் ஆஸ்ரியர், ஹங்கேரியர், ஸ்லாவ் ஆகிய இம்மூன்று முக்கிய ஜாதியாரும் ஒற்றுமையின்றி யிருப்பதால், அந்த ஜாதியாருக்குள் வேறுபாடுகள் உண்டாகி, தனித்தனியாய் பிரிந்துபோகக்கூடும். ஆகையால் ருஷியர் ஹங்கேரியின்மீது படையெடுத்து, ஆஸ்டிரிய ஹங்கேரியப் படைகளின் ராணுவக் கட்டையும் வன்மையையும் அழித்து, மகா யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வர ஆரம்பத்திலிருந்தே முயற்சி செய்துவந்தார்கள். அவ்வாறு செய்வது ஜெர்மனியின் மீது படையெடுப்பதைவிட எளிதாகுமென்பதைக் கவனிக்க வேண்டும். ஆகையால் ருஷிய சேனையின் வன்மை அடக்கப்பட்டாலொழிய ஜெர்மானியருக்கு நேரிடக்கூடிய ஆபத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருமென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் உணர்ந்

தார்கள். கிழக்கரங்கத்துக்கும் மேற்கரங்கத்துக்கு முள்ள அந்த முக்கிய வித்தியாசத்தை கவனிக்கவும். ஜெர்மன் சேனை முடிவான வெற்றியை அடையவேண்டுமானால், பிரஞ்சு எல்லையில் முயற்சி செய்யவேண்டும்; முடிவாய் அழிந்து போகாம லிருக்கவேண்டு மானால், ருஷிய எல்லையில் முயற்சி செய்யவேண்டும்.

ஆனல் ஜெர்மானியர் ருஷிய சேனையின் வன்மையை எவ்வாறு அழிப்பது? ருஷியத் தருப்புகள் ஏராளமாய் இருப்பதால், ருஷியரை ஆயிரக்கணக்காய் அழிப்பதினும் பிரயோஜனமில்லை. ருஷிய ஏகாதிபத்தியம் 10,000 மைல் நீளமிருப்பதால், ருஷிய சேனையைப் பிரதிதினமும் பின்வாங்கும்படிச் செய்வதினும் பயனில்லை. தவிர, ருஷிய ஜனங்கள் தருப்புளாகப் பழக்கப்படும்போது, நூதன ஞாகிகத்தின் அனுபோகத்தையும் யுக்தியோசனைகளையும் எளிதாய்ப் பெறக் கூடாதவர்களாயினும், மிகுந்த பிடிவாதத்துடன் சண்டை செய்யக் கூடியவர்க ளென்று பேர் பெற்றிருக்கிறார்கள். ருஷியசரித்திரத்தில் இதுவரையில் காணப்படாத நூதன சாமர்த்தியத்தை ருஷியசேனைதிகள் காண்பித்து வருகிறார்கள். ருஷியத்தருப்புகள், பிரிட்டிஷ் தருப்புகளைப்போல, தோல்வி அடையும் சமயத்திலுங்கூட தங்களுக்கு நேரிடுகிற சேதத்தை ஜயசீலர்களுக்கும் உண்டு பண்ணுவார்கள். ஆகையால் ருஷியரின் சைன்ய பலத்தை அடக்கி வீடுவதற்கு, ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் நூதன உபாயத்தைப் பின்பற்றி முயற்சி செய்தார். ருஷியத் தருப்புகள் உபயோகிக்கக் கூடிய ரோட்டுகளையும் ரயில் பாதைகளையும் குறைத்துக் கொண்டே வந்தால், போர்முனையில் சண்டை செய்யக் கூடிய ருஷியத் தருப்புகள் தொகையில் குறைந்து கொண்டே வருவார்கள். போர்முனையைக் குறுக்கிக் கொண்டே வந்தால், அங்கு நிலை பெறக்கூடிய ருஷியத் தருப்புகளும் ருஷியபீரங்கிகளும் தொகையில் குறைவுபடும். போர்முனையில் ருஷிய சேனையின் வன்மையை அவ்வாறு மட்டுப்படுத்தி அதன் முன்னேற்றத்தை அரண்களால் தடை செய்து, பிறகு பிரஞ்சு எல்லையில் முடிவான பிரயத்தனம் செய்ய வேண்டுமென்பது ஜெர்மானியரின் நோக்கமாகும். இந்த நோக்கத்துடன் ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் போலண்டில் யுத்தகடவடிக்கைகளைத் தொடங்கினர். ஆனல் ருஷிய சேனாதிபதி ஹங்கேரிய நாட்டில் ருஷியசேனையின் பலத்தை அதிகமாய்க் குறித்து அத்திசை



லீஜ்கோட்டைக்கு முன்னுல் கட்டப்பட்ட இரும்புக் கம்பியால் ஜெர்மன் குதிரைப்படை தடைப்பட்டு நிற்றல். (படத்திலுள்ள ஜெர்மானியர் உலான் படையைச் சேர்ந்தவர்கள்)




ருஷியக் காலாள் துருப்புகள் ஜெர்மன் பீரங்கியைப் பிடித்தல்.



ஆஸ்டிரியத் துருப்புகள் போர்முனைக்குச் செல்லல்.

யில் எப்போதும் பயமுறுத்தி வந்தார். இந்த கோக்கஸ்களை அவ் விரண்டு கஷ்டங்களும் அவ்வாறு நிறைவேற்ற முயன்றார்க ளென்பதை யுத்த நடவடிக்கைகளில் சுருக்கமாய் எடுத்துக் காட்டுவோம்.

ஜோர்மானியர் போர்விரோத்தல்.




இப்படம், 1914-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் ருஷியப் படைகள் கிழக்குப் பிரஷ்யாவின்மீதும் காலிஷியாவின்மீது படையெடுத்ததைக் குறிப்பிடுகிறது. ருஷியப் படைகள் வெளுப்புக் கட்டங்களால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. பிறகு, செப்டம்பர் மாத ஆரம்பத்தில் கிழக்குப் பிரஷ்யாவிலிருந்த ருஷியப் படைகள் பின் வாங்கி விட்டன வென்றும், காலிஷியாவுக்குள் தஞ்சைத்த ருஷியப் படைகள் லெம்பர்க் நகரத்தைப் பிடித்து, முன் சென்று, ரிஸ்மில் நகரத்திலுள்ள ஆஸ்டிரியக் கோட்டைகளை முற்றுகை போட்டன வென்றும் சொல்லியிருக்கிறோம். கார்ப்பேத்தியன் மலைக்கணவாய்கள்)(இம்மாதிரி படத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு யுத்தம்தொடங்கி40 தினங்களுக்குள் ஆஸ்டிரியசேனை தோல்வி அடைந்து ஏராளமாய் சேதமாகிவிட்டபடியால், அச்சேனை இனி ருஷியரை எதிர்த்துநிற்க முடியாதென்று தெரியவந்தது. தவிர, ருஷியசேனை காலுக்குநாள் ஆள் பலத்தில் அதிகரித்து காலிஷியா வின்பெரும்பாகத்தையும் வசப்படுத்திக்கொண்டு,கிராகோ நகரத்துக் கும் கார்ப்பேத்தியன் கணவாய்களுக்கும் ஆபத்தை விளைவித்தது. ஆகையால் ஆஸ்டிரிய கவர்ன்மெண்டு ஜெர்மானியரின் உதவியை நாடி னார்கள். பிரான்ஸின்மீது படையெடுத்த ஜெர்மன் சேனை எய்ஸன்

நதிக்கரையில் வலுவான அரண்களில் நிலைபெற்று, மறுபடியும் பாரிஸ் நகரத்தை நோக்கிச் செல்லும் யோசனையை நிறுத்திக் கொண்டது. ஆகையால், பிரான்ஸி லிருந்த அநேக ஜெர்மன் படைகளும் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட ஜெர்மன் மூலபலங்களும் ருஷிய எல்லையில் குவிக்கப்பட்டன. ஜெனரல் வான் ஹின்டன்பர்க் ஜெர்மன் துருப்புகளுக்கும் ஆஸ்டிரியத் துருப்புகளுக்கும் தலைமை வகித்து ருஷிய எல்லைமுழுவதிலும் பெரும்போர் கொடங்கிவிட்டார். கிழக்குப் பிரஷ்யா, போலண்ட், காலிஷியா இம்மூன்று மாகாணங்களிலும் சுமார் 1000-மைல் நீளத்துக்கு இரண்டு கக்ஷித் துருப்புகளும் நிலை பெற்று சண்டை செய்தன.


செப்டம்பர் மாதக் கடைசியில் ஏராளமான ஜெர்மன் படைகள் போலண்டில் குவிக்கப் பட்டன. அக்டோபர் மாதத்தில் நடந்த யுத்தத்தின் பலனாக போர்முனையில் ருஷியப் படைகள் எவ்வாறு நிலைபெற் றிருந்தன வென்று கீழேயுள்ள படம் குறிப்பிடுகிறது. அதன் விவரங்கள் படத்துக்குக் கீழே சொல்லப்பட் டிருக்கின்றன.



அக்டோபர் 10-க்தேதி யிலிருந்து 25-க் தேதி வரையில், ஜெர்மன் சேனை போலண்டின் மீது படையெடுத்தது; ஆஸ்டிரிய சேனை காலிஷியா மீது படையெடுத்துச் சென்றது; படத்தில் காட்டப்பட்டுள்ளபடி, ஜெர்மானியர் வார்ஸா நகரத்துக் கருகில் சென்றார்கள்; வார்ஸாவுக்குத் தெற்கேயுள்ள இவான் கிராட் என்ற முக்கியமான ருஷியப் பட்டணத்தைத் தாக்கினார்கள்; ஆஸ்டிரிய சேனை காலிஷியாவில் முன் சென்று ஸான்நதி வரையில் ருஷியப் படைகளைப் பின்

வாங்கச் செய்தது; ரிஸமில் கோட்டையை முற்றுகைப் போட்ட ருஷியப் படைகள் முற்றுகையைக் கைவிட்டுப் பின் வாங்கின. கிழக்குப் பிரஷ்யாவி லிருந்து ஆகஸ்ட்மாதக் கடைசியில் பின்வாங்கிவிட்ட ருஷியப்படைகள் தங்கள் சொந்த பிரதேசத்தி லுள்ள நீமன் நதிக் கரையிலேயே இருந்து வந்தன.

இதற்குள்ளாக ருஷியர் புதிய திருப்புகளைப் பெற்றார்கள். அக்டோபர் 26-ந் தேதி ருஷிய சேனை முன் சென்று ஜெர்மானியரையும் ஆஸ்டிரியரையும் பின்வாங்கச் செய்தனர். அதன் விவரம் மேலே யுள்ள படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.



அக்டோபர் 26-ந் தேதிக்குப் பிறகு ருஷியர் ரிஸமில் கோட்டையை மற்றபடியும் முற்றுகை போட்டு அதற் கப்பால் முன் சென்றனர். கார்ப்பேத்தியன் மலையி லுள்ள கனவாய்களைத் தாக்கினர். அந்த மலைத்தொடர் காலிஷியா பாகாணத்துக்கும் ஹங்கேரி காட்டுக்கும் இடையி லுள்ளது. ருஷியர் காலிஷியா பாகாணத்திலிருந்து அந்த மலைகளைத்தாண்டி ஹங்கேரி நாட்டுக்குள் நுழைய முயற்சி செய்தார்கள். ருஷியர் டார்னே நகரத்தை வசப்படுத்திக் கொண்டு கிராகோ என்ற ஸ்தலத்தைக் கருதில் சென்றார்கள். கிராகோ என்ற ஸ்தலத்தில் வலுவான ஆஸ்டிரியக்கோட்டைகளிருக்கின்றன. அந்த ஸ்தலத்தின் முக்கியத்தைக் கவனிக்கவேண்டும். அந்த நகரத்திலுள்ள கோட்டைகள் மூன்று எல்லைப்புறங்களும் சந்திக்கிற மூலையில் அமைந்திருக்கிறது. போலண்ட், காலிஷியா, ஜெர்மனி ஆகிய இம்மூன்று

பிரதேசங்களும் சேர்கிற முலையிலிருக்கிறது. அந்த நகரத்தை ருஷியர் வசப்படுத்திக்கொண்டால், அந்த மூன்று பிரதேசங்களும் ஏககாலத்தில் போர் வீரனுக்கு சாத்தியமாகும்.

ருஷியப்படைகள் போலண்டின் மேற் கெல்லை வரையில் முன் சென்றன; சில ருஷியப் படைகள் கிழக்குப் பிரஷ்யாவுக்குள் சிறிது தூரம் முன் சென்றன. இவைகளை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

ஜெனரல் வான் ஹின்டன்பர்க் வார்ஸாவுக் கருகில் மறுபடியும் செல்வதற்காக வேமெரு முயற்சி செய்தார். நவம்பர் 11-ந்தேதி அவர் புதிய ஜர்மன் படைகளைத் தருவித்து அவைகளை தாரன் நகரத்திலுள்ள ஜர்மன் கோட்டைகளுக்கு அருகில் இரகஸ்யமாய்த் திரட்டினர். அந்த ஜர்மன் படைகள் வீரைவாய் முன் சென்று தங்களுக்கு முன்னுள்ள ருஷியப் படைகளைத் தாக்குவதுபோல காட்டி, திடீரென்றுவேறு திசையில் மாறிச் சென்று, லோட்ஸ் என்ற ருஷிய நகரத்தில் ருஷியப் படைகளைத் தாக்கிப் பிளந்துவிட்டன. அவ்வாறு பிளந்துகொண்டு முன் சென்ற ஜர்மன் படைகள் ருஷியரைச் சூழ்ந்துகொள்ள, புதிய ருஷியப்படைகள் வார்ஸாவிலிருந்து வந்து இந்த ஜர்மன் படைகளைச் சூழ்ந்து கொண்டன. லோட்ஸ் நகரத்தைக் கருகில் இரண்டு கூஷிப்படைகளும் ஒன்றை யொன்று சூழ்ந்து உக்கிரமான சண்டை செய்து கொண்டிருந்தன. அந்நகரத்திலிருந்த ஜர்மன் படைகள் மிகுந்த சேதமடைந்து முன் செல்லவும் பின் செல்லவும் முடியாமல் தவித்தன. அப்போது ஜெனரல் வான் ஹின்டன்பர்க் வேறிடங்களிலிருந்து ஜர்மன் படைகளைக் கொண்டுவந்து லோட்ஸ் நகரத்துக்கு வடக்கிலுள்ள ருஷியப்படைகளைத் தாக்கிப் பின்வாங்கச் செய்தார். லோட்ஸ் நகரத்திலிருந்த ஜர்மன் படைகள் மிகுந்த சேதத்துடன் தப்பித்துக் கொண்டு மற்ற ஜர்மன் படைகளோடு சேர்ந்து கொண்டன. ஜர்மன் படைகள் போலண்டிலிருந்த ருஷியப்படைகளை யெல்லாம் உக்கிரமாய்த் தாக்கி நவம்பர் மாதக் கடைசிவரையில் சண்டை செய்தன. பிறகு ருஷியப் படைகள் பின் வாங்கி, வார்ஸாவுக்கு மேற்கில் 40-மைல் தூரத்திலுள்ள லவிக்ஸ் என்ற ஸ்தலத்தில் நிலைபெற்றன. ஜெனரல் வான் ஹின்டன்பர்க் டிசம்பர் மாதம் 7-ந்தேதியன்று வார்ஸாவுக்கு முன்னும் மறுபடியும் படைகளைக் குவித்துத் தாக்கினர். அத்திசையில் ஜெர்மானியர் 10-மைல் தூரம் முன் சென்றார்கள். அதாவது வார்ஸாவுக்கு மேற்கே 30-மைல் தூரத்தில் ஓடுகிற ஜீரா நதிக்கரையில் ஜெர்மானியர் வலுவான அரண்களைக்கட்டி நிலைபெற்றார்கள். 125-ம் பக்கத்திலுள்ள படத்தில் வார்ஸாவுக்கு மேற்கிலும் தெற்கிலும் கோட்டப்பட்டிருக்கிற வரிசையின்படி நிலை பெற்றார்கள்.) வார்ஸா நகரத்

திலிருந்து மேற்கே இரண்டு ரயில் பாதைகள் பிரிந்து செல்கின்றன. அந்த இரண்டு ரயில் பாதைகளையும் ஜெர்மானியர் வசப்படுத்திக் கொண்டார்கள். வார்ஸாவுக்கு இன்னும் அருகில்செல்ல ஜெர்மானியர் டிசம்பர் 12-ந்தேதி வரையில் முயற்சி செய்தும் பயன்பட வில்லை.

ஜெர்மானியர் வார்ஸாவுக்கு மேற்கிலுள்ள ரயில் பாதைகளை வசப்படுத்திக் கொண்டு ருஷியப் படைகளின் போக்கு வரத்து சாதனங்களைச் சிறிது குறைத்தார்கள். ஜெர்மானியர் வேறொரு விதமான சாதகத்தையும் பெற்றார்கள். இது வரையில் ஜெர்மானியர் தங்கள் படைகளை வினைவாய்க் குவித்து தீடிரென்று தாக்கிய போதெல்லாம், ருஷியரும் அதற்கேற்றவாறு விரைவாய் நடவடிக்கைகளை நடத்தினார்கள். அதற்கு ஒரு முக்கிய காரணம், ருஷிய சேனை குறுகிய வட்டத்தில் நிலைபெற்று சண்டை செய்ததாகும். ருஷிய சேனைகள் பதி வார்ஸா நகரத்திலிருந்து போர்முனையிலுள்ள எந்த ஸ்தலத்துக்கும் தருப்புகளை சீக்கிரமாய் அனுப்பக்கூடும். ஏனெனில் போர் முனையிலுள்ள எல்லா ஸ்தலங்களும் வார்ஸாவிலிருந்து அதிகமாய் ஒரே தூரத்திலிருக்கின்றன. ஜெர்மானியர் பெரிய வட்டத்தில் சண்டை செய்தார்கள். போலண்டின் மேற் கெல்லையிலிருந்து நீமன் நதியின் முகத்துவாரமும் காலிஷியாவில் உள்ள ரிஸமில் கோட்டையும் எவ்வளவு தூரத்திலிருக்கின்றன வென்பதைக் கவனிக்கலாம். போலண்ட் மாகாணம் மேற்கு திக்கில் மிகவும் நீண்டிருப்பதால் அந்த வித்தியாசம் ஏற்படுகிறது. ஆகையால் ஜெர்மன் சேனைபதி போலண்டிலிருந்த ருஷியப் படைகளை வார்ஸாவுக் கருகில் செல்லும்படி பின்தள்ளினார். அதனால் ருஷியப்படைகளின் வரிசை முன்னைப்போல வட்டமாயிராமல் கோணியிருக்கும்படி அமுக்கி விடப்பட்டது. 721-ம் பக்கத்திலுள்ள படத்தையும், 725-ம் பக்கத்திலுள்ள படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், வார்ஸா நகரத்துக்கு மேற்கில் படைகளின் வரிசை வட்டமாயிருந்ததும் பிறகு கோணமுங்காய் மாறியதும் தெரியவரும். ஆகையால் வார்ஸாவுக்கருகில் இரண்டு கூறுகளும் நேர்வரிசையில் நிலைபெற்றதால் ஜெர்மானியர் முன்னைப் போல பெரிய வட்டத்தைச் சுற்றிச் செல்ல வேண்டியதில்லை.


டிசம்பர் 15-ந்தேதியிலிருந்து 22-ந்தேதி வரையில் கிழக்குப் பிரஷ்யாவுக்குத்தெற்கிலுள்ள மலாவா என்ற ருஷிய நகரத்திலிருந்து ஜெர்மானியர் ருஷியப் படைகளைத் தாக்கி பின்னடையச் செய்தார்கள். அதே சமயத்தில் ஆஸ்டிரியர் கார்ப்பேத்தியன் பிரதேசத்தில் ருஷியரைத் தாக்கிப் பின்வாங்கச் செய்தார்கள். ஆனால் கோகோ என்ற முக்கிய ஸ்தலத்துக்குக் கிழக்கிலுள்ளதார்மேனு நகரத்தில் ருஷியர் வலுவாய் நிலைபெற்று பின்வாங்காம லிருந்தார்கள்.

டிசம்பர் 25-ந்தேதியிலிருந்து 31-வரையில் ருஷியர் புதிய படை

கனைப் பெற்று ஜெர்மானியரை ம்ளாவா என்ற ஸ்தலத்தை நோக்கிப் பின் தள்ளினார்கள். ருஷியர் கார்ப்பேத்தியன் மலைத்தொடரில் ஆஸ்டிரியரைப் பின்னடையச் செய்து அங்குள்ள கணவாய்களை வசப்படுத்திக் கொண்டார்கள். வார்ஸாவுக்கு மேற்கில் இரண்டு சக்தி களின் நிலைமையில் மாறுதலில்லை.

1915-ம் வருஷம் ஜனவரி 15-ந்தேதியி லிருந்து 30-வரையில் ஜெர்மானியர் ம்ளாவா என்ற ஸ்தலத்திலிருந்து சிறிது தூரம் முன் சென்றார்கள். கார்ப்பேத்தியன் மலைகளில் ஆஸ்டிரியரின் முயற்சிகள் பயன்படவில்லை. ஜெர்மன் சேனாதிபதியின் நோக்கம் என்னவென் றால், ருஷியப்படைகளை நாலாபக்கங்களிலும் நெருக்கி குறுகிய பிர தேசத்தில் தள்ள வேண்டுமென்பது. ருஷியரின் போர் முனையை கூடுமான வரையில் குறுக்கிக் கொண்டுவந்தால், ருஷியர் தங்களிட மிருக்கிற ஏராளமான துருப்புகளை போர்க்களத்துக்கு அனுப்ப முடி யாமற் போகும். அந்த நோக்கத்துடன், ஜெர்மானியர் போலண் டுக்கு வடபுறத்தில் ருஷியரை நெருக்கினார்கள்.


பெப்ரவரிமாதம் 1-ந்தேதி, ருஷியப்படைகள் போர்முனையில் நிலைபெற்றிருந்த வரிசை கீழேயுள்ள படத்தில் காண்பிக்கப்பட் டிருக்கிறது.



ருஷியப் படைகள் மேற்குப் ப்ரிஸ்பாவுக்குள் சிறிது தூரம் முன்சென்றார்களென்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது; இப்

போது காலிஷியாவுக்குத் தெற்கிலுள்ள புகோவினுளன்ற ஆஸ்டிரிய மாகாணத்தின் மீதும் ருஷியத்துருப்புகள் படை யெடுத்துச் சென்றன. படத்தின் அடிப்பாகத்தில் வலது பக்கத்தமுலியுள்ள பிரதேசம் புகோவினு என்று சொல்லப்படும். கலோமியா ஸர்னவிச் இவ்விரு நகரங்களும் அங்குள்ளவை.

பேப்ரவரி 12-20. ருஷியப் படைகளின் நிலைமையில் உண்டான மாறுதல்களை கீழேயுள்ள படத்தில் காணலாம்.



கிழக்குப் பிரஷ்யாவில் ஜெர்மன் படைகள் ஏராளமாய்க் குவிக்கப்பட்டு ருஷியரைப் பின் தள்ளினர். ஆஸ்டிரியப் படைகள் புகோவினு மாகாணத்திலும் கார்ப் பேத்தியன் மலைகளிலும் ருஷியரை காக்கினர்கள். ருஷியர் புகோவினுவிலிருந்து பின்வாங்கினர்கள்; கார்ப் பேத்தியன் மலைக் கணவாய்களில் சில வற்றையும் கைவிட்டார்கள். வார்ஸாவுக்கு மேற்கில் 30-மைல் தூரத்திலுள்ள ஜெர்மன் படைகளின் நிலைமையில் மாறுதலில்லை. ருஷிய எல்லையின் வடக்குக் கோடியிலும் 800-மைலுக் கப்பாலுள்ள தெற்குக் கோடியிலுந்தான் ஜெர்மன் சேனபதி பெருமுயற்சி செய்து வந்தார். ருஷிய எல்லையின் இரண்டு முனைகளும் வெகு தூரத்தில் விலகியிருப்பதால் ருஷியர் இரண்டு முனைகளுக்கும் ஏககாலத்தில் துணைப்படைகளும் தளவாடங்களும் அனுப்பி சண்டை செய்ய கஷ்டப்படுவரர்களென்று ஜெர்மன் சேனபதி நினைத்தார். ருஷியத் துருப்பு கள் சுமார் 30-லக்ஷம் பேரிருப்பார்கள், அவர்களை எதிர்த்து நிற்கிற

ஆஸ்டிரியத் துருப்புகளும் ஜெர்மன் துருப்புகளும் சேர்ந்து சுமார் 22-லக்ஷம் பேரிருப்பார்கள். ஆனல் ஜெர்மன் படைகள் கிழக்காங் கத்துக்கும் மேற் காங்கத்துக்கும் மாறிக் கொண்டிருப்பதால், குறித்த காலத்தில் இவ்வளவு ஜெர்மன் துருப்புகள் ருஷியரைத் தாக்கு கிறார்களென்று திட்டமாய்ச் சொல்வதற்கில்லை.

1914-ம் வருஷத்தில் இரண்டு அரங்கத்திலும் நடைபெற்ற யுத்த சம்பவங்களைப் பற்றிச் சற்று விஸ்தாரமாய்ச் சொல்லி, பிறகு 1915-ம் வருஷத்தில் யுத்தத்தின் போக்கு எவ்வாறாயிருந்த தென்று சுருக்கமாய்க் குறிப் பிட்டிருக்கிறோம். ஸொர்பிய சேனையும் ஜப்பான் சேனையும் தொடங்கிய நடவடிக்கைகளும், ஆப்பிரிக்காவிலுள்ள குடி யேற்ற நாடுகளில் நடந்த சண்டைகளும், கடலில் நடந்த சில்லரைச் சல்லடைகளும் இரண்டு முக்கிய அரங்கத்தின் நடவடிக்கைகளை அவ்வளவாக பாதிக்கவில்லை; அத்தனை விஷயங்களும் இப்புத் தகத்தில் அடங்கவில்லை; அதனல், அவைகளைப் பற்றி இங்கு சொல்லாமல் விட்டோம். யுத்தம் எவ்வாறு நடத்தப்படுகிற தென் றும் யுத்த நடவடிக்கைகளை எவ்வாறு தெரிந்து கொள்வ தென்றும் இப்புத்தகத்தில் சொல்லியிருக்கிறோம்.

சென்ற வருஷத்து நடவடிக்கைகள் எந்த கக்ஷிக்கும் முடிவான பலனைக் கொடுக்கவில்லை, ஜெர்மானியர் யுத்தந் தொடங்கியபோது தங் கள் சத்துருக்களை எளிதாய் வெல்லலாமென்று நினைத்திருந்தால் இப் போது மிகுந்த ஏமாற்ற மடைந்திருப் பார்களென்பதில் ஐயமில்லை. ஜெர்மானியர் காலா பக்கங்களிலும் பகையைக் கிளப்பி விட்டதற் குக் காரணம் அவர்களுடைய ராணுவத் திமிரேயன்றி அவர்கள் பெற்றுள்ள நாகரிகப் பெருமைக ளல்ல. நேசக் கக்ஷியின் பகை ஜெர்மனிக்கு நன்மையையே பயக்கும். இந்த யுத்தத்தில் ஜெர் மனி தோல்வி யடைந்த போதிலும், சிறந்த அறிவைப் படைத்த ஜெர்மானியர் ராணுவப் பயிற்சியத்தினின்றும் நீங்கி உலகத்து நாக ரிகத்தை முன்னிலும் பல மடங்கு விருத்தி செய்வதிலேயே முழு கவனமும் செலுத்துவார்களென்று நம்புகிறோம். ஐரோப்பாவில் நேசக்கக்ஷி வெற்றி அடைவதோடு, "சுதந்தரம், சமத்வம், சகோ தரத்வம்" என்ற முக்கொள்கைகளும் உலகெங்கும் வெற்றி பெற வேண்டு மென்பது நமது கோரிக்கை.

சென்னை சுதேசமித்திரன் பவர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.